இந்திய வரலாற்றுச் சுருக்கம்

ஆங்கிலத்தில் எழுதியவர் :

W. H. மோர்லண்டு, A. C. சாட்டர்ஜி.

தமிழாக்கியவர் :

M. R. பெருமாள் முதலியார், M.A., L.T., M.E.S.

சரிபார்த்த நிபுணர் :

பேராசிரியர்

வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர்,

சென்னைப் பல்கலைக் கழகம்.

பிரசுரிப்பவர் :

சென்னைப் பல்கலைக் கழகத்தார்.

1951

ரத்னம் பிரஸ், 11, பத்ரையன் தெரு, மதராஸ், - 1

முன்னுரை.

W. H. மோர்லண்டு, A. C. சாட்டர்ஜி ஆகிய இரண்டு ஆசிரியர்களும் சேர்ந்து ஆங்கிலத்தில் எழுதிய "இந்திய வரலாற்றுச் சுருக்கம்" என்ற நூலைத் தழுவி இந்நூல் எழுதப் பட்டுள்ளது. முதல் நூலின் கருத்துக்கள் எவ்வகையிலும் பிறழாமல் இந்நூலில் காணக்கிடக்கின்றன. மிக நுண்ணிய கருத்துக்களையும் யாவர்க்கும் விளங்கக்கூடிய எளிய நடையில் எழுத முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அம்முயற்சியில் மொழி பெயர்ப்பாளர் போதிய அளவு வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை இந்நூலைப் படிக்கும் தமிழ் மக்கள் அறிந்துகொள்வார்கள்.

மண்டல மொழிகளின் மூலமாக வரலாற்றுத் துறையில் பயிற்சி பெற விரும்பும் கல்லூரி மாணவர்களுக்குப் பாடபுத்தகமாக வைப்பதற்கும், ஆங்கில மொழிப் பயிற்சி இல்லாத பொதுமக்கள் நம் நாட்டு வரலாற்றின் உயரிய கருத்துக்களை அறிந்து கொள்ளுவதற்குரிய வாய்ப்பை அளிப்பதற்கும் ஆங்கில மொழியில் உள்ள "இந்திய வரலாற்றுச் சுருக்கம்" என்ற நூலைத் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடுவதெனச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் முடிவு செய்தனர். அதற்காக ஏற்பட்ட மொழி பெயர்ப்புப் போட்டியில் — தமிழ்ப் பிரிவில் — திரு. M. R. பெருமாள் முதலியார் முதலிடம் பெற்றார். ஆகவே இந்நூலைத் தமிழில் எழுதும் பணி அவருக்கு அளிக்கப்பட்டது. அவ்வாறு அவர் எழுதியனுப்பிய கையெழுத்துப் பிரதி திரு. V. R. இராமச்சந்திர தீட்சிதரால் பரிசீலனை செய்யப் பட்டது. இப்போது இந்நூல் அச்சிடப்பட்டு வெளிவருகிறது. தமிழ் மக்கள் இந்நூலைப் படித்துப் பயனடைவார்கள் என்று நம்புகின்றோம்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார்.

பொருளடக்கம்

அதிகாரம்.	பொருள்.	பக்கம்.
1.	நாடும் மக்களும்	1
2.	இந்திய வரலாற்றின் தொடக்கம் ...	9
3.	இந்துக்களின் வாழ்க்கைமுறை ...	28
4.	இந்து ஆதிக்கத்தின் முற்பகுதி ...	39
5.	ஜைன பௌத்த மதங்களின் தோற்றம் ...	51
6.	சிந்து சமவெளியின் முன்னைய வரலாறு ...	55
7.	மௌரிய சாம்ராஜ்யம் — சந்திர குப்தர் ...	61
8.	மௌரிய சாம்ராஜ்யம் — அசோகர் ...	68
9.	கி. மு. இரண்டாம் நூற்றூண்டு ...	74
10.	பஞ்சாபில் கிரேக்க ஆதிக்கம் ...	81
11.	சகர்களும் பஹ்லவர்களும்.... ...	87
12.	கடல் கடந்த வியாபாரம்	90
13.	குஷாணர்களின் ஆதிக்கம்.... ...	96
14.	குப்த சாம்ராஜ்யம்	112
15.	வெள்ளை ஹூணர்கள்	127
16.	ஹர்ஷர்	137
17.	ஹர்ஷர் காலம் முதல் மகமூது காலம் வரை.	147
18.	பத்தாம் நூற்றூண்டு	155
19.	வெளிநாட்டுத் தொடர்பு	172
20.	துருக்கியர் வருகை	183
21.	டில்லியில் துருக்கியர் ஆட்சி ...	195
22.	துருக்கிய அரசர்கள்	206
23.	தென்னிந்தியாவில் முகமதிய ஆதிக்கம் ...	224
24.	பதினைந்தாம் நூற்றூண்டு ...	233
25.	துருக்கியர் ஆட்சியின் பயன்கள் ...	242
26.	போர்ச்சுகீசியர் வருகை	258
27.	மொகலாயர் ஆட்சியின் தொடக்கம் ...	268
28.	அக்பர் ஆட்சி	276
29.	அக்பரது ஆட்சிமுறை	293

அதிகாரம்.	பொருள்.	பக்கம்.
30.	ஜஹாங்கீர்	305
31.	ஷாஜஹான்	319
32.	அவுரங்கஜீப்	331
33.	மொகலாய சாம்ராஜ்யத்தின் சிதைவு	352
34.	கிளைவின் சேவை	363
35.	பதினெட்டாம் நூற்றுண்டில் இந்தியாவின் நிலை	372
36.	வாரன் ஹேஸ்டிங்ஸ் — அரசியலில் நிர்வாகி	389
37.	வாரன் ஹேஸ்டிங்ஸ் — இராஜ தந்திரி	402
38.	காரன்வாலிஸ் முதல் வெல்லெஸ்லி வரை	412
39.	வெல்லெஸ்லி முதல் பெண்டிங்கு வரை	428
40.	அரசியல் நிர்வாகத்தில் மாறுதல்கள் 1793-1835	436
41.	வடமேற்கு எல்லையும் பஞ்சாபும் 1836-1856	452
42.	டல்ஹௌஸியின் ஆட்சி 1848-1856	458
43.	சிப்பாய்க் கலகமும் அதன் விளைவுகளும்	478
44.	பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாறுதல்கள் 1860-1880	491
45.	கலாசார முன்னேற்றம் 1860–1880	510
46.	எல்லைப்புற விஷயங்களும் அரசாங்கப் பொருளாதார நிலைமையும் 1860–1880	526
47.	பொது வரலாறு 1880-1905 ...	540
48.	அரசியல் உணர்ச்சியின் தொடக்கம்	556
49.	கிளர்ச்சியும் சீர்திருத்தமும் 1906-1914 ...	577
50.	முதல் உலக யுத்தத்தின் விளைவுகள் ...	591
51.	யுத்தத்திற்குப் பின் இந்தியா, 1919-1943, வெளி நாட்டுத் தொடர்புகள் ...	605
52.	அரசியலமைப்புப் பிரச்சினைகள் - முதற் பகுதி	617
53.	அரசியலமைப்புப் பிரச்சினைகள் – இரண்டாம் பகுதி	635
54.	பாதுகாப்பும் அரசாங்க வரவு செலவும்	654
55.	பொருளாதார முன்னேற்றம் ...	667
56.	சமூக முன்னேற்றம்	679



Names in parentheses are inserted only as guides to the reader's eye.
R. Oxus
TURKISTAN
Hindu Kush
AFGHANISTAN
BALUCHISTAN
R. Indus
[Lahore]
Indus Plain
TIBET
Himalayas
R. Brahmaputra
[Delhi]
R. Jumna
R. Ganges
Gangetic plain
[Benares]
Aravallis
Tropic of Cancer
Vindhyas
R. Narbada
R. Tapti
Santal purganas
BENGAL
[Calcutta]
R. Mahanadi
[Bombay]
R. Godavari
[Hyderabad]
R. Kistna
Western Ghats
ARABIAN SEA
BAY OF BENGAL
[Madras]
CEYLON
INDIA
Main Physical Features
Scale of Miles
0 50 100 200 300 400 500
Land above 6,000 feet
" " 1,000 "
Sea level to 1,000 "
70°
80°
90°
30°
20°
10°
Emery Walker Ltd. sc

அதிகாரம்—1

நாடும் மக்களும்

நாடு

இந்திய சரித்திரத்தை எழுதப் புகுமுன் இந்தியா எனும் பெயரால் குறிக்கப்படும் நிலப்பகுதி எது என்பதைத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் சென்ற காலத்தில் இப்பெயர் சில சமயங்களில் ஒரு குறுகிய கடற்கரைப் பிரதேசத்தையும், வேறு சில சமயங்களில் தென்னாசியாவின் பெரும் பகுதியையும் குறித்து வந்திருக்கிறது. இந்நூலில் இப்பெயரை இந்தியப் பெருங் கடலுக்கும் இமய மலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தையே குறிக்க உபயோகிக்கிறோம். ஆனால் பர்மாவை இப்பிரதேசத்தின் ஒரு பகுதியாக நாம் கருதுவதில்லை. ஏனெனில் சென்ற நூற்றாண்டில் பர்மாவானது படிப்படியாக இந்தியப் பேரரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் பூகோள சாஸ்திர ரீதியாக அது இந்தியாவின் ஒரு பகுதியாகாது.

இந்தியாவை வட இந்தியா, தென்னிந்தியா என இரு இயற்கைப் பிரதேசங்களாகப் பிரிக்கலாம். விந்திய மலைத்தொடர் இவ்விரு பிரிவுகளுக்கும் இடையே எல்லைக்கோடாக அமைந்துள்ளது. இத்தொடர் எல்லா இடங்களிலும் ஒரே விதமான உயரமும், அகலமும் உடையதன்று. பெரும்பாலும் கடக ரேகையை ஒட்டிய கிழக்கு மேற்காக அமைந்துள்ள கரடு முரடான இம்மலைப் பிரதேசம் போக்கு வரவிற்குப் பெருந்தடையாக இருந்து வருகிறது. எனினும் தற்காலத்தில் சாலைகளும் இருப்புப் பாதைகளும் இத்தடையை ஓரளவு நீக்கிவிட்டன.

தென்னிந்தியா உயர்ந்த முக்கோண வடிவமான ஒரு பீடபூமி. இப்பீட பூமியின் மேற்கு விளிம்புதான் மேற்கு மலைத்தொடரென வழங்கி வருகிறது. செங்குத்தாகவும் உயர்ந்துமிருக்கும் இத்தொடர் வடக்கே தபதிநதி முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் ஏறக்குறைய இடையீடின்றி வியாபித்திருக்கிறது. கடக்கக் கடினமான மிகச் சில கணவாய்களே இத்தொடரில் உள. இத்தொடருக்கும் அரபிக்கடலுக்கும் மிடையில் குறுகிய கடற்கரைப் பிரதேசமொன்றிருக்கின்றது. இப்பிரதேசத்து மக்கள் வாழ்க்கை சமீபகாலம் வரை ஒரு தனிப்பட்ட பண்பாட்டை யுடையதாக இருந்தது.

இப்பீட பூமியின் முக்கிய நதிகள் கிழக்குநோக்கிப் பாய்கின்றன. இதன் கிழக்கு விளிம்பு இந்நதிப் பள்ளத்தாக்குகளால்

அறுபட்டிருத்தலின் போக்கு வரவிற்கு அவ்வளவு பெருந்தடையாயில்லை. ஆகையால் தென்னாட்டிற்குப் பண்டைக்காலத்தில் மேல் நாடுகளை விட ஜாவா, சுமத்ரா, பர்மா, சயாம், இந்து சீனா முதலிய கீழ் நாடுகளுடன்தான் நெருங்கிய தொடர்பிருந்தது. இத்தொடர்பேற்படுத்துவதற்கு முக்கிய காரணமாயிருந்தவை கிழக்கு கடற்கரைத் துறைமுகங்களே. இத்தகைய முக்கியம் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குக் கிடையாது. அவைகள் கிழக்காசியாவிற்கும், செங்கடல் பாரசீக வளைகுடா முதலியவற்றிற்கு மிடையே ஓடிக்கொண்டிருந்த வியாபாரக் கப்பல்கள் தங்குவதற்கான வசதிகளை யளிப்பதற்கே பெரும்பாலும் உபயோகப்பட்டு வந்தன. ஆயினும் மேற்குக் கடற்கரையிலும் பண்டைக் காலத்தில் முக்கிய துறைமுகங்களில்லை யெனச் சொல்லமுடியாது ஏனெனில் இப்பீட பூமியின் வடமேற்கு மூலையில் மேற்கு விளிம்பை அறுத்துக்கொண்டு பாயும் நருமதை, தபதி எனுமிரு நதிகளின் முகத்துவாரங்களில் விளங்கும் துறைமுகங்கள் பம்பாய் வளர்ச்சி யடையும்வரை இந்தியாவின் முக்கிய மேற்கு வாயில்களாக இருந்து வந்தன.

இமயத்திற்கும் விந்தியத்திற்குமிடைப்பட்ட பிரதேசம் வட இந்தியாவாகும். இமயத்தின் முக்கிய தொடர் 15000-அடிக்கு மேல் உயர்ந்துள்ளதால் இது போக்குவரத்துக்கு உலகில் வேறெங்கும் காணமுடியாத அவ்வளவு பெருந்தடையாக இருக்கிறது. ஆயினும் இது முற்றிலும் கடத்தற்கரியதன்று. இந்தியாவைத் திபேத்துடனிணைக்கும் கணவாய்களின் மூலமாக ஓரளவு வியாபாரப் போக்கு வரவு நடைபெற்றுவருகிறது. ஆனால் பெருவாரியான மக்களோ பண்டங்களோ இவற்றின் வழியாகச் செல்லுவது அனுபவ சாத்யமாகாது. வடஇந்தியாவின் கிழக்கெல்லையும் மலைப்பாங்கானதுவே. அதுவும் போக்குவரத்திற்குக் கஷ்டமானதே. ஆனால் அங்கும் இரண்டு இடைவெளிகள் இருக்கின்றன. ஒன்று கடற்கரையையடுத்த குறுகிய சமவெளி. அதன்மூலம் அரக்கானுக்குச் செல்லலாம். மற்றொன்று இன்னும் வடக்கேயுள்ள பிரம்மபுத்திரா நதியின் பள்ளத்தாக்கு. இதன் வழியாக மேற்குச் சீனத்திற்குச் செல்வது எளிதன்றெனினும் சாத்தியமானதே. மேற்கிலுங்கூட ஹிந்துகுஷ் முதல் அரபிக்கடல்வரை வியாபித்துள்ள மலைப்பிரதேசமே வட இந்தியாவின் இயற்கை எல்லையாக அமைந்துள்ளது. ஆனால் ஒருசில கணவாய்கள் ஆப்கானிஸ்தானத்தின் வழியே துருக்கிஸ்தானத்திற்கும், பலூசிஸ்தானத்தின் வழியே பாரசீகத்திற்கும் செல்வதற்கு வசதியளிக்கின்றன. இவற்றின்

மூலம் படைகளும் செல்லக்கூடுமாகையால் சரித்திர காலம் முதல் கிரேக்கர், சித்தியர், ஹூணர், ஆப்கானியர், மங்கோலியர், பாரசீகர் ஆகியவர்கள் பலசமயங்களில் இந்தியாவின்மீது படையெடுத்தனர்.

இவ்வெல்லைக்குள்ளமைந்திருக்கும் வடஇந்தியாவில் சிந்துநதிப்பிரதேசமும் கங்கைநதிப்பிரதேசமும் இருக்கின்றன. இந்நதிதீரங்களில் பரந்த மலைப்பிரதேசங்களும் விசாலமான வண்டல்மண் சமவெளிகளும் இருக்கின்றன. மலைப்பிரதேசங்களில் ஜனத்தொகை குறைவாக இருப்பது இயல்பே. வடஇந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் சமவெளிகளிலேயே வசிக்கின்றனர். இச்சமவெளிகள் மூன்றுபிரிவுகளாக இருக்கின்றன. கரடு முரடான மத்தியப்பிரதேசத்திலிருந்து வடக்கு நோக்கிச்செல்லும் மேட்டு நிலங்களே இப்பிரிவுகளுக்குக் காரணமாயிருக்கின்றன. மேற்கே சிந்துநதிப்பிரதேசத்தையும் கங்கைநதிப்பிரதேசத்தையும் பிரிப்பது இராஜபுதனம் எனும் மேட்டு நிலமாகும். இது தொடர்ந்து வடக்கே சென்று இமயமலையடிவாரத்திலுள்ள காடுகளைத் தொடுகிறது, இதற்கருகில்தான் தற்காலத் தலைநகரமாகிய டில்லி இருக்கிறது. இந்த மேட்டு நிலத்திற்கும் இமயமலையடி வாரத்திற்கும் இருக்கும் தூரம் 200 மைலுக்குக் குறைவானது. இந்த இடை வெளியின் மூலமாகத்தான் வடமேற்கிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் கங்கைச் சமவெளியை யடைய வேண்டி யிருந்தது. இங்கேதான் பல முக்கியமான சண்டைகள் நடைபெற்றன. இவ்வாறு இவ்விரு பிரதேசங்களும் பிரிக்கப்பட்டிருப்பதால் சிந்து சமவெளி மக்களும் கங்கைச் சமவெளி மக்களும் ஒருவருக்கொருவர் அதிகத் தொடர்பில்லாமல் வாழ்ந்து வந்த காலமும் உண்டு. மத்தியப் பிரதேசத்திலிருந்து வடக்காகச் செல்லும் சாந்தல் பர்காணுக்கள் எனும் மேட்டு நிலம் கங்கைச் சமவெளியை இரண்டாகப் பிரிக்கிறது. இம்மேட்டு நிலத்திற்குக் கிழக்கே இருக்கும் பகுதி வங்காள மெனப்படுகிறது. இங்கேதான் பிரம்மபுத்திரா நதி கங்கையொடு கலக்கின்றது. பழங்காலத்தில் கங்கை நதியின் வடக்கிலுள்ள பிரதேசம் போக்கு வரவிற்கு அவ்வளவாக வசதியளிக்காததால் வங்காள மக்கள் கங்கைச் சமவெளி மக்களோடு அதிகத் தொடர்பற்றவர்களாகவே இருந்தனர். ஆகையால் வங்காளம் ஒரு தனிப்பட்ட சரித்திரத்தைப் பெற்றிருந்தது.

வட இந்தியாவில் உறைபனி உருகிப் பெருகும் நதிகள் இருக்கின்றன. ஆனால் தென்னிந்தியாவில் இத்தகைய நதிகள் இல்லை,

இதுவே இரு பகுதிகளுக்குமுள்ள வேறுபாடு. தெற்கிலுள்ள நதிகள் கார்காலத்தில் கரைபுரண்டோடியும் மற்ற காலத்தில் வற்றியும் கிடக்கும். ஆகவே தென்னிந்தியாவில் போக்கு வரவிற்கு இந்நதிகள் அவ்வளவாகப் பயன்படவில்லை. சிந்துவும் கங்கையும் அவற்றின் உபநதிகளும் பனிபடிந்த இமயமலையிலிருந்து வருவதால் அவற்றில் நீர் என்றும் வற்றுவதில்லை. ஆதலால் சில பருவங்களில் வங்காள விரிகுடாவிலிருந்து ஆக்ரா வரையிலும், அரபிக்கடலிலிருந்து லாகூர் வரையிலும் இந்நதிகளின் வழியே பிரயாணம் செய்வது சாத்தியமாகிறது. பண்டைக் காலத்தில் இவ்விரு நதிகளும் வியாபாரத்திற்கும் பிரயாணத்திற்கும் சிறந்த மார்க்கங்களாக இருந்தன. இப்போது இவற்றின் ஸ்தானத்தை இருப்புப் பாதைகள் வகிக்கின்றன. வங்காளத்தில் கழிமுகப் பிரதேசத்தில் மட்டும் முன்போலவே இன்றும் படகுகளே முக்கிய போக்கு வரவுச் சாதனங்களாயிருந்து வருகின்றன.

சரித்திர காலந்தொட்டுப் பயிர்த்தொழில் இந்திய மக்களின் ஜீவனோபாயமாக இருந்து வருகிறது. ஆகையால் இவர்கள் என்றைக்கும் பருவ மழைகளை நம்பியே வாழ்பவர்களாயிருக்கின்றனர். ஆண்டின் பெரும்பகுதியில் வறண்ட காற்று வடமேற்கிலிருந்து வீசுகிறது. வடமேற்கிலிருந்து வீசும் இக்காற்று வரவரத் தெற்கு நோக்கித் திரும்புகிறது. இக்காற்றினால் ஓரளவு மழை பெய்கிறது. ஆனால் இம்மழை சில சமயம் அதிகமாகவும் சில சமயம் மிகக்குறைந்தும் இருக்கிறது. இதை நம்பி விவசாயம் செய்ய முடியாது. மே மாதத்தில் தென்மேற்குப் பருவக் காற்று ஆரம்பமாகி அரபிக் கடலிலும் வங்காள விரிகுடாவிலும் பிரவேசிக்கிறது. அரபிக்கடல் வழியே வீசும் காற்று நாட்டின் பெரும் பகுதிக்குப் போதிய மழையைத் தருகிறது. வங்காள விரிகுடாவில் பிரவேசித்த காற்று மேற்கே திரும்பிக் கங்கைச் சமவெளியில் வீசி மழையைத் தருகிறது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவக்காற்றால் இந்திய தீபகற்பத்தின் தென் கிழக்குப் பகுதியில் மழை பெய்கிறது. பருவக் காற்றுகளால் நமது நாட்டிற்குக் கிடைக்கும் மழையின் அளவு ஆண்டுக்காண்டு வேறுபடுகிறது. இதற்குக் காரணம் இன்னும் சரியாக விளங்கவில்லை. ஆகவே ஆண்டு தோறும் ஜூன் முதல் செப்டம்பர்வரை சரியான மழை பெய்யுமோ பெய்யாதோவென மக்கள் கவலைப்பட வேண்டியதாயிருக்கிறது. சரியானபடி மழை பெய்து விடின் போதிய அளவு உணவுப் பொருள் உற்பத்தியாகிறது. வியாபாரமும் பெருகுகிறது. மழை தவறிவிடிலோ நாட்டின் பல பாகங்

களிலும் பஞ்சமேற்பட்டு மக்கள் பட்டினியால் மடிவதோடு உணவு தேடி ஊரூராக அலையவும் நேருகிறது. சமீப காலத்தில் அரசாங்கத்தாரின் நன்முயற்சியால் இக்கஷ்டங்கள் ஓரளவு தீர்ந்து விட்டன. ஆனால் இந்தியாவின் சென்ற கால சரித்திரத் தைப் படிப்போர் யாரும் மக்களுக் கேற்பட்ட இத்தகைய கஷ் டங்களை மறக்க முடியாது.

மக்கள்

இந்தியாவில் மக்கள் எப்பொழுது தோன்றினார்கள்? வெளியி லிருந்து வந்திருந்தால், எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார் கள்? இக்கேள்விகள் மிகச் சிக்கலானவை. இவைகளுக்கு எல்லோ ரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விடைகள் இன்னும் கிடைக்கவில்லை. பிற்காலங்களில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்து குடியேறிக் கலந்துபோனமக்கள் இனங்கள் பல இருக்கின்றன. அறிஞர்கள் இத்தகைய மக்களினங்களை நீக்கிவிட்டுப் பழங்காலந் தொட்டு இந்தியாவில் வாழ்ந்து வந்தமக்கள் எந்தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப்பற்றி மொழிநூல் வாயிலாகவும் இன நூல் வாயிலாகவும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். இவ்வாராய்ச் சியின்பயனாக ஏற்பட்டுள்ள முடிவுகளையெல்லாம் இன்னும் எல்லோரும் ஒத்துக்கொள்ளவில்லை. எனவே பொதுவாக எல்லோ ராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட முடிவுகளைப்பற்றியே நாம் இங்கே எழுதப்புகுகின்றோம்.

மலைவாசிகள், திராவிடர்கள், ஆரியர்கள் என்று பொதுவாக வழங்கும் மூன்று இனத்தினர் ஆதியில் இந்தியாவிலிருந்தன ரென்று திட்டமாகக் கூறமுடியும். இவர்களுள் முதலில் இருந் தவர்கள் மலைவாசிகள் என்றும், இரண்டாவதாகத் திராவிடர்கள் இந்நாட்டிற்கு வந்து குடியேறினரென்றும், மூன்றாவதாக ஆரியர் கள் வந்தார்கள் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். மலைவாசிகள் ஆதியில் இந்தியாவின் பெரும்பகுதியில் வாழ்ந்து வந்தார்கள். பின்னர் வந்த திராவிடர்கள் அவர்களைச் சண்டையில் தோல்வியுறச்செய்திருக்கவேண்டும். தோற்றுப்போன மலைவாசி கள் கொஞ்சங் கொஞ்சமாகப்பின்னடைந்து மத்திய இந்தியாவின் காடுகளுக்கும் மலைகளுக்கும் ஓடிப்போயிருக்க வேண்டும். இன்றைக்கும் அவர்கள் மற்ற பிரதேசங்களில் காணப் படாத தனிப்பட்ட மொழிகளைப் பேசுகிறார்கள். மலைவாசிகளை இவ்வாறு தோல்வியுறச்செய்த திராவிட மக்கள் மேற்கிலிருந்து

தான் இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டுமென்று தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டு ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மூன்றாவதாக இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் வடமேற்கிலிருந்துதான் வந்தார்களென்று அநேகமாகச் சரித்திர பூர்வமாகவே கூறலாம்.

வடமேற்குக் கணவாய்களின் வழியாகப் படையெடுத்து வந்த சித்தியர்களும், ஹூணர்களும் இந்தியாவிலேயே தங்கி இங்கு வசித்துவந்த மக்களுடன் கலந்து விட்டார்கள். பின்னர் ஆப்கானிஸ்தானம், பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்தும் அவற்றிற் கப்பாலிருந்தும் நாடு பிடிக்கவும், குடியேறவும் வந்த முஸ்லிம் களும் இந்நாட்டிலேயே தங்கியதால் நாட்டின் ஜனத்தொகை அதிகரித்தது. இப்படி வந்த முஸ்லிம்கள் வட இந்தியாவில் மட்டுமன்றி மத்திய இந்தியாவிலும் புகுந்து நிலைத்துவிட்டார்கள். ஆனால் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களனைவரும் வெளி நாடுகளிலிருந்து வந்த மக்களினத்தைச் சேர்ந்தவர்களென்று கூற முடியாது. ஏனெனில் இந்தியாவில் ஏற்கனவே வாழ்ந்து வந்த பெருவாரியான மக்கள் இஸ்லாமிய மதத்திற்கு மாற்றப்பட்டார் கள் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. இத்தகைய மத மாறுதல் சிந்து சமவெளியிலும் வங்காளத்திலும் மிக அதிகமாக நடைபெற்றது. ஆகவே இன்றைய இந்தியமக்களின் மூதாதை கள் முக்கியமாக மேலே கூறப்பட்ட பல்வேறு இனத்தினர்கள் என்று அறியக்கிடக்கிறது. இந்த முக்கியமான இனங்களைத் தவிர வேறுசில இனத்தினரும் இந்தியாவிற்கு வந்து குடியேறி னார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பது உண்மைதான். எனினும் அவர்களுடைய சந்ததியார்களும் சேர்ந்துதான் இன்றைய இந்தியமக்களாகக் காட்சி அளிக்கிறார் கள். யூதர்களும், அராபியர்களும், ஆப்கானியர்களும் வியாபார நிமித்தமாக இந்தியாவில் வந்து குடியேறினர். இஸ்லாமிய ஆதிக் கம் மேலோங்க ஆரம்பித்ததும் மதச் சுதந்தரத்தை விரும்பிய பாரசீகர்கள் பலர் தங்கள் நாட்டை விட்டு இந்தியாவிற்கு வந்து குடியேறினர். ஆப்ரிக்கர்கள் அடிமைகளாக இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டனர். பதினாறும் நூற்றாண்டின் தொடக்கத் திலிருந்து போர்ச்சுகீசியரும் மற்றைய ஐரோப்பிய நாட்டின ரும் இந்தியாவிற்கு வர ஆரம்பித்தனர். இவ்வாறு வந்த மக்களிற் சிலர் தனிப்பட்ட பண்பாட்டுடனேயே இன்றளவும் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் மேற்குக் கடற்கரையில் குடியேறிய அராபிய வியாபாரிகள் அங்கு வாழ்ந்து வந்த

ஜனங்களோடு கலந்துவிட்டனர். அவர்களுடைய சந்ததியார்களே இன்று மாப்பிள்ளைகள் என்றழைக்கப்படுகின்றனர். முன்னர் யூரேஷியர்கள் என்றும் இப்போது ஆங்கிலோ இந்தியரென்றும் அழைக்கப்படும் கலப்பு இனத்திற்கு ஐரோப்பியர் வருகை காரணமாயிற்று.

இவ்வாறு பல இனங்களைச்சேர்ந்த மக்கள் நம்நாட்டில் வாழ்ந்து வருவதால் பல்வேறு மொழிகள் வழக்கிலிருந்து வருவது நமக்கு வியப்பைத் தருவதில்லை. ஆதிக்குடிகளான மலைவாசிகள் வேறெங்கும் காணாத தனிப்பட்ட மொழிகளையே இன்றும் பேசி வருகின்றார்களென்றாலும் அவை இப்போது முக்கியமான மொழிகளாக இல்லை. இந்நாட்டு மக்கள் பேசும் மொழிகளையெல்லாம் ஆரியம் திராவிடமென இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தென்னிந்தியாவில் வாழும் மக்களில் பெரும்பான்மையோர் பேசும் மொழி திராவிடம். ஆனால் இந்த மூலத்திலிருந்து பல்வேறு தனிப்பட்ட மொழிகள் தோன்றி வளர்ந்திருக்கின்றன. இம்மொழிகளுள் ஒருமொழி பேசுவோர் மற்றொரு மொழியை அறிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர். இதனால் தென்னிந்தியாவில் ஆங்கிலமே ஏறக்குறையப் பொது மொழியென்ற ஸ்தானத்தை வகித்து வருகிறது. வட இந்தியாவிலும் தீபகற்பத்தின் மேற்குப் பாகத்திலும் பல்வேறு மொழிகள் வழக்கிலிருக்கின்றன. இவையெல்லாம் அடிப்படையில் ஆரியத்தைச் சேர்ந்தவை. எனினும் திராவிடம் முதலிய வேறு பல மொழிகளின் தொடர்பால் இவை ஓரளவு மாறுபட்டிருப்பது இயல்பே. இம்மொழிகளில் மிக முக்கியமானது ஹிந்தி. இது கங்கைச் சமவெளியில் பேசப்படுகிறது. இம்மொழிகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையவையாக இருப்பதால் இவற்றுள் ஒருமொழி பேசுவோர் மற்றையவற்றை ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது. மேலும் ஹிந்துஸ்தானி என்ற ஒரு பொதுமொழியும் வடஇந்தியாவில் வழங்கிவருகிறது. நாடு பிடிக்கவும் குடியேறவும் ஹிந்துஸ்தானத்திற்கு வந்த பாரசீகமொழி பேசும் மக்களுக்கும் ஹிந்தி பேசும் கங்கைச் சமவெளி மக்களுக்கும் ஏற்பட்ட தொடர்பால் தோன்றிய புதிய மொழிதான் இந்துஸ்தானி எனப்படுகிறது. இந்துஸ்தானி என்ற ஒரே மொழியின் உதவியால் ஒருவர் வட இந்தியாவின் பெரும் பகுதியிலும் சுற்றி வரமுடியும். ஆனால் அந்த ஒரே மொழி தெரிந்த ஒருவர் தென்னிந்தியா மக்களுடன் உரையாடவோ பழகவோ முற்றிலும் முடியாத நிலையில்தான் இருப்பார். திராவிட மொழிகள்

மாத்திரம் தெரிந்த ஒருவர் வட இந்திய மக்களோடு உரையாட வேண்டுமானல் ஆங்கிலத்தின் உதவி இன்றியமையாதது. சம்ஸ் கிருதம் சிறந்த பழமையான ஒருமொழி என்பது மறுக்கமுடியாத உண்மையெனினும் அதைப்படிப்பவர் மிகச்சிலரே. தற்கால ஐரோப்பிய மக்களின் அன்ருட வாழ்க்கையில்லத்தின் மொழியின் உபயோகம் எவ்வளவு குறைந்ததோ அதைவிடக் குறைந்துதான் தற்கால இந்தியமக்களின் அன்ருட வாழ்க்கையில் சம்ஸ் கிருதத்தின் உபயோகமும்.

ஆகவே, இந்தியாவில் பல்வேறு இனத்தைச்சேர்ந்த மக்கள் வாழ்கிருர்கள் ; பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. மேலும் பூகோள சாஸ்திர ரீதியாக இந்தியா ஒரே தேசமென்று ஒத்துக் கொள்ளக் கூடியதுதான் எனினும், இதன் பெரும் பரப்பும், இயற்கைப் பிரிவுகளும், இது பல்வேறு தனிப்பட்ட இராஜ்யங் களாகப் பிரிந்திலங்குவதற்கு ஏற்ற முறையில் அமைந்திருக்கின் றன. இத்தகைய இயற்கைப் பகுதிகள் உலகின் மற்ற பாகங் களில் தனிப்பட்ட இராஜ்யங்களாகவே வளர்ந்திருக்கின்றன. சென்ற காலத்தில் இந்தியாவில் பல்வேறு இராஜ்யங்கள் தோன் றவும் செய்தன. ஆனல் அதே சமயத்தில் இந்தியா முழுதும் ஒரே இராஜ்யந்தான் என்ற அடிப்படையான உணர்ச்சியும் இருந்துவந்தது. இந்த உணர்ச்சி சென்ற நூற்ருண்டில்தான் பூரணமான உருப்பெறுவதற்கு வசதி ஏற்பட்டது. ஆகவே இந்திய சரித்திரத்தை எழுத முயல்வது ஏதோ ஒரு தனிப்பட்ட நாட்டின் வரலாற்றை எழுதுவதுதான் என்று சொல்லமுடியாது. சரித்திர பூர்வமாக இந்தியர் என்ற சொல்லை போர்ச்சுகீசியர் என்ற சொல்லையோ பிரஞ்சுக்காரர் என்ற சொல்லையோ உபயோ கிப்பதுபோல உபயோகிக்கமுடியாது. அதே சமயத்தில் ஐரோப் பியர் என்ற சொல்லை உபயோகிப்பதுபோல் இந்தியர் என்ற சொல்லை உபயோகிக்கவும் முடியாது. ஏனெனில் ஐரோப்பியர் என்று சொல்லும்பொழுது பிரஞ்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர் கள்போன்ற தனிப்பட்ட இராஜ்யங்களைச் சேர்ந்த தனிப்பட்ட மக்களாகவே நினைக்கிருேம். ஆனல் இந்தியர் என்று சொல்லும் போது அவ்வாறு பூரணமான தனிப்பட்ட இராஜ்யங்களையோ மக்களையோ சரித்திரபூர்வமாக நினைப்பதில்லை. சுருங்கக் கூறின் இந்திய சரித்திரத்தில் ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒரு மையும் பண்டைக்காலந் தொட்டே இருந்துவருகிறது.



Emery Walker Ltd. sc.

அதிகாரம் 2

இந்திய வரலாற்றின் தொடக்கம்

சிந்து சமவெளி நாகரிகம்

ஒவ்வொரு நாட்டின் வரலாற்றிலும் சரித்திர காலமும் சரித்திரத்திற்கு முற்பட்ட காலமும் உண்டு. சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திற்குரிய சின்னங்கள் இந்தியாவிலும் மற்ற சில நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அச்சின்னங்களின் மூலம் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் ஒரு கற்காலமோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கற்காலங்களோ இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆனால் அச்சின்னங்களின் மூலம் சாதாரண மக்கள் இந்திய சரித்திரத்தைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. சுமார் 5,000 ஆண்டுகட்கு முன்னர், அதாவது கி.மு.2500க்கு முன்னர், சிந்து சமவெளியில் பழமையும் ஒழுங்கும் வாய்ந்த நாகரிகம் ஒன்று இருந்தது என்று திட்டமாகத் தெரிகிறது. இதுவே இந்திய வரலாற்றில் நாம் முதல் முதலாக அறிந்து கொள்ளும் பெரிய விஷயமாகும். இந்த நாகரிகம் மெசபடோமியாவிலும் எகிப்திலும் அந்தக் காலத்தில் ஓங்கியிருந்த நாகரிகத்தைப் பெரிதும்ஒத்ததாகவும், சில விஷயங்களில் அதைவிடச் சிறந்ததாகவும் இருந்தது. இவ்வரிய விஷயம் நமக்கு மிக அண்மையில்தான் தெரியவந்தது. நம் நாட்டில் இத்தகைய ஒரு நாகரிகம் இருந்திருக்கலாம் என்று அறிஞர்கள் ஊகித்தது உண்மைதான். ஆனால் சமீபத்தில் நடந்த புதைபொருள் ஆராய்ச்சிகளால்தான் அவர்களுடைய யூகம் சரியானது என்று உறுதியாக்கப்பட்டுள்ளது. சிந்து நதியின் முகத்துவாரத்திற்கு வடக்கில் இருநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள மொஹெஞ்சோ தாரோ என்ற இடத்திலும், லாகூரின் தென் மேற்கில் சுமார் நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஹரப்பா என்ற இடத்திலும் 1921ஆம் ஆண்டிலிருந்து புதைபொருளாராய்ச்சிகள் நடந்து வருகின்றன. இவ்வாராய்ச்சிகள் இன்னும் முடிவடையவில்லை. இன்னும் பல இடங்களில் ஆராய்ச்சி செய்வது அவசியம். ஆதலால் இந்த நாகரிகம் எவ்வாறு தோன்றிற்று என்பதைப்பற்றியும், எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதைப்பற்றியும் இயற்கையாக எழும் கேள்விகளுக்குத் திட்டமான விடை கூறமுடியாது.

மொஹெஞ்சோ தாரோவில் நடந்துள்ள ஆராய்ச்சியின் பயனாக நாம் பல விஷயங்களை அறிந்து கொள்ளுகிறோம். திட்டமிட்டுக் கட்டப்பட்ட உயரமான பெரிய வீடுகளும், பரந்த பொது ஸ்நானக் கட்டிடமும், பாலங்களும் வடிகால்களும் அமைந்த தெருக்களும் உள்ள ஒரு நகரம் அங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் மட்பாண்டங்கள், கற்சட்டிகள், சமையற் பாத்திரங்கள், ஆயுதங்கள், சிறிய சிற்பங்கள், அணிகலன்கள், விளையாட்டுக்கருவிகள் முதலிய பலவகைப்பட்ட சிறு பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொன், வெள்ளி, தாமிரம், ஈயம், தகரம், ஆகிய உலோகங்கள் உபயோகத்திலிருந்தன. கோதுமையும், பார்லியும் பயிராக்கப்பட்டன. பஞ்சும், ரோமமும் ஆடை நெய்வதற்கு உபயோகப்பட்டன. கல் தச்சர்களின் தொழில் மிக முன்னேற்றம் அடைந்திருந்தது. தாயத்துக்களிலும், இலச்சினைகளிலும் காணப்படும் எழுத்துக்கள் அங்கிருந்த மக்களுடைய மொழி வரிவடிவம் பெற்றிருந்தது என்பதை ஐயத்திற்கிடமின்றிக் காட்டுகின்றன.

இவ்வாறு வாழ்க்கை வசதிகளையும், சுகபோகங்களையும் பெற்றிருந்த இந்த மக்கட் கூட்டத்தினர் யார்? இந்த மக்களின் நாகரிகத்திற்கும் ஆரிய நாகரிகத்திற்கும் சம்பந்தமில்லையென்று பெரும்பாலான அறிஞர்கள் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆகவே இது திராவிட நாகரிகமாக இருக்க வேண்டும்; இன்றேல் இன்னும் நமக்குத் தெரியாத வேறே ஏதாவது இனத்தைச் சேர்ந்த மக்கள் இங்கு வசித்திருக்க வேண்டும். இங்குக் காணப்படும் எழுத்துக்களின் பொருள் இன்னும் விளங்கவில்லை. ஆதலால் அந்த ஆராய்ச்சி முடிந்து அவற்றின் பொருள் தெரியும்வரையில், நாம் அறிய விரும்பும் பல விஷயங்கள் இருண்ட திரையால் மறைக்கப்பட்டுத்தான் கிடக்கும். மெசபடேமியாவில் விளங்கிய சுமேரிய நாகரிகத்திற்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் ஓரளவு தொடர்பிருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அதைப்பற்றியும் பலவகையான கருத்துக்களை ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இந்த நாகரிகம் திராவிடநாகரிகம் என்றும், இது ஆரியர் வருகைக்கு முற்பட்டது என்றும் சாதாரணமக்கள் நம்புவது இயற்கையே. இந்த நம்பிக்கை முடிவாக ஊர்ச்சிதம் அடையலாம் என்பதற்குரிய சில அறிகுறிகளும் இருக்கின்றன. எனினும், இந்தியாவிற்கு மேற்கே தோன்றி, இந்தியாவில் சிந்து வெளிக்கு அப்பால் பரவாமற்போன ஏதாவதோர் அந்நிய நாகரிகமாகவும் இருக்கலாமென்று சொன்னால் அதைத் தற்போது மறுக்க முடி

யாது. இவ்விஷயத்தைப்பற்றித் திட்டமாகக் கூறுவதற்கு இன்னும் அதிகமான ஆராய்ச்சி அவசியம். இந்த நாகரிகத்திற்கும் பிற்காலத்திய இந்திய நாகரிகத்திற்கும் தொடர்புண்டு என்று கூறுவதற்கேற்ற அறிகுறி எதுவும் இப்போது இல்லை என்று மாத்திரம் உறுதியாகக் கூறலாம்.

ஆரியர் வருகை

சாஸ்திர ரீதியாக 'திராவிடர்' என்ற சொல்லைப் போலவே 'ஆரியர்' என்ற சொல்லும் மொழியை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரிவைக் குறிக்குமே யன்றி, இனத்தை அடிப் படையாகக் கொண்ட பிரிவைக் குறிக்காது. ஆனால் சாதாரண மாக ஆரிய மொழியைப்பேசிய மக்களினம் ஒன்றைக் குறிப்ப தற்கே 'ஆரியர்' என்ற சொல் வழங்கப்படுகிறது. இந்தியா விற்கு வந்த ஆரியர் வரலாற்றை அறிந்து கொள்ளுவதற்கு நாம் மேலே விவரித்த புதை பொருள்களைப் போன்ற எத்தகைய வரலாற்றுச் சின்னமும் கிடையாது. ஆரியர்களுடைய வாழ்க்கை முறையே இத்தகைய சின்னங்கள் நமக்கு அகப்படாமைக்குக் காரணமாகும். ஏனெனில், ஆரம்பத்தில் ஆரியர்கள் நகரங்களில் வசிக்கவில்லை, அவர்களுடைய வீடுகள் மரம் முதலிய அழியும் பொருள்களாற் கட்டப்பட்டவை. ஆரியர்களைப் பற்றிய விஷயங் களை அறிந்து கொள்வதற்கு **ரிக்வேதம்** என்ற மிகப் பழமையான சம்ஸ்கிருத நூல் நமக்கு அடிப்படையான ஆதாரமாயிருக்கிறது. சம்ஸ்கிருதத்திலும், அதனோடு தொடர்புடைய மொழிகளிலும் செய்யப்பட்டுள்ள ஒப்பியல் மொழியாராய்ச்சியின் வாயிலாகவும் நாம் ஆரியர்களைப்பற்றிய ஒருசில விஷயங்களை அறிந்து கொள்ளு கிறோம். இவ்வாறு நாம் அறிந்துள்ள விஷயங்கள் மிகச் சிலவே; ஆனால் நாம் அறிய விரும்பும் விஷயங்களோ மிகப் பல. இத் துறையில் ஏற்பட்டுள்ள ஆர்வம் மேல் நாட்டிலும் கீழ் நாட்டி லும் பல அறிஞர்களின் சிந்தனையையும் கற்பனையையும் கிளறி விட்டிருப்பதால் நமக்குத் திட்டமாகத் தெரிந்திருக்கும் சிறிதளவு உண்மை மிகுதியான கற்பனையோடு கலந்திருக்கிறது. வெறும் யூகம் எது, திட்டமான உண்மை எது என்று பிரித்துக் கூறுவது எளிதன்று.

அடிப்படையாகப் பார்த்தால் ரிக்வேதம் வழிபாட்டுப் பாடல்கள் அடங்கியதொரு மிகப் பெரிய நூல். இலியாட்,

ஓடிஸி என்ற இரண்டு நூல்களையும் சேர்த்தால் எவ்வளவு நீள மாக இருக்குமோ ஏறக்குறைய அவ்வளவு நீளமாக இருக்கிறது ரிக்வேதம். இது பலவேறு காலங்களில் எழுதப்பட்ட வழிபாட்டுப்பாடல்களின் திரட்டு. இந்தப்பாடல்கள் எந்தெந்தக்காலங்களில் எழுதப்பட்டவை என்றோ, இவைகள் எப்போது ஒன்றாகத் திரட்டப்பட்டன என்றோ திட்டமாகக்கூற முடியாது. ஆனால், முதலில் எழுதப்பட்ட பாடல்கள் கி.மு. 1000க்கு முற்பட்டவை என்று கூறமுடியும். ஆகவே, இந்நூலின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பலதிறப்பட்டவையாக இருப்பது இயல்பே. இதன் மூலம் ஆரியர்களுடைய மதக் கோட்பாடு களைப் பற்றி நாம் மிகுதியாகத் தெரிந்து கொள்ள முடிகிறதே யொழிய வாழ்க்கையின் மற்ற துறைகளைப்பற்றி அதிகமாக ஒன்றும் அறிந்து கொள்ள முடியாது. இதன்மூலம் நமக்குக் கிடைக்கும் வரலாற்று உண்மைகள் மிகமிகக் குறைவு. மதத்துறையிலுங்கூட அரசர்களும் பிரபுக்களும் செய்த யாகங்களின் பல வகைப்பட்ட சடங்குகளைப் பற்றியே அதிகமாகக் கூறப்பட்டிருக் கிறதேயன்றி, சாதாரணமக்களுடைய கொள்கைகளையும், நம்பிக் கைகளையும் பற்றி நேரடியாக நாம் அதிகமாக எதையும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே ஆரியர் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு ரிக்வேதம் திருப்திகரமான ஆதாரமாகாது. ஆனால் அதைத்தவிர வேறே என்ன ஆதாரமிருக்கிறது?

சம்ஸ்கிருதம் சாதாரண மக்களுக்குத் தெரியாத ஏதோ ஒரு பழைய மொழி என்றும், அம்மொழிக்கும் தங்களுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தமற்ற மொழிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை யென்றும், இந்தியாவுக்கு வந்த ஐரோப்பியர் முதலில் எண்ணினார்கள். ஆனால், அதற்கும் லத்தீன், கிரீக் ஆகிய மொழிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை அவர்கள் சீக்கிரமே உணர்ந்தார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் கல்கத்தா உயர் நீதி மன்றத்தில் நீதிபதியாக இருந்த ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்ற ஆங்கில அறிஞர் சம்ஸ்கிருதத்திற்கும் லத்தீன், கிரீக், கோதிக், கெல்டிக், பழைய பாரசீகம் ஆகிய மொழிகளுக்கும் இடையில் உள்ள தொடர்பை விளக்கி, அம்மொழிகளெல்லாம் ஆதியில் ஒரே மூலத்திலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு அறிஞர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அதன்பயனாக "இந்திய ஐரோப்பிய மொழி" ஒன்று ஆதியில் இருந்தது என்றும், அதைப்பேசிய மக்கள் தங்களுடைய பூர்விக

வாசஸ்தலத்திலிருந்து ஐரோப்பா, ஆசியா ஆகிய கண்டங்களின் பல்வேறு பாகங்களில் பரவினார்கள் என்றும், பின்னர் அவர்கள் புதிதாகக் குடியேறிய இடங்களின் சூழ்நிலைக் கேற்றவாறு அவர்களுடைய வாழ்க்கை முறையும் மொழியும் பல்வேறு வகைகளில் மாறுதலடைந்தன வென்றும் அந்த அறிஞர்கள் முடிவுக்கு வந்தனர்.

மேற் சொன்ன இந்த முடிவு அடிப்படையில் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் அதன் ஒவ்வொரு அம்சமும் சரியானதுதான் என்று உறுதியாகக் கூறுவதற்கு முடியாது "இந்திய ஐரோப்பியமொழி"யினைப் பேசிய மக்கள் ஆதியில் எந்த இடத்தில் வசித்து வந்தார்கள் என்றும், எப்பொழுது எந்த வழியாக அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறினார்கள் என்றும் நமக்குத் தெரியாது. அவர்கள் ஆசியாவில் இருந்தவர்கள் என்று சில அறிஞர்களும், ஐரோப்பாவில் இருந்தவர்கள் என்று சில அறிஞர்களும் கூறுகிறார்கள். சில ஆராய்ச்சியாளர்கள் அவர்கள் ஹங்கேரி தேசத்தில் ஆதியில் வசித்துவந்தார்கள் என்று கூறுகிறார்கள். வேறு சிலர் அவர்கள் ஆர்ட்டிக் பிரதேசத்தில் இருந்தவர்கள் என்று கூறுகிறார்கள். மேலும் அவர்கள் எப்போது தங்களுடைய பூர்விக வாசஸ்தலத்தை விட்டு வேற்றிடங்களுக்குச் சென்றார்கள் என்பதைப் பற்றியும் பலவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அவர்கள் தங்கள் இடத்தைவிட்டு வேறு நாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தார்கள் என்று சில அறிஞர்கள் கருதுகிறார்கள். அவர்கள் எங்கிருந்து வந்தவர்களாயிருந்தாலும், இந்தியாவுக்கு அவர்கள் ஆப்கானிஸ்தானத்தின் வழியாகத்தான் வந்திருக்கவேண்டு மென்பதும், கி-மு. 2000 ஆண்டிற்கு முன்னர் அவர்கள் இந்தியாவிற் குடியேறி யிருக்கமுடியா தென்பதும் நிச்சயம். ஆகவே, சிந்துசமவெளி நாகரிக காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்த்தான் அவர்கள் இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும். அவர்கள் இந்தியாவின் மேல்படையெடுத்து வரவில்லை என்றும், குடியேறுவதற்கு வசதியான இடந்தேடி வந்தவர்கள் தாம் என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது, ஏனெனில், அவர்கள் வரும் போது தங்களுடன் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் கால் நடைகளையுங் கொண்டு வந்தார்கள். அவர்கள் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். ஒரு கூட்டத்தின் வருகைக்கும் அடுத்த கூட்டத்தின் வருகைக்கும் இடையில் பல ஆண்டுகள் கடந்திருக்கக்கூடும்.

மேலும் அந்தக்கூட்டங்கள் வேறுவேறு இனங்களைச்சேர்ந்தவை களாகவும் இருந்திருக்கக்கூடும்.

இன ஆராய்ச்சியாலும், மொழி ஆராய்ச்சியாலும் கிடைத் துள்ள முடிவுகளைக் கொண்டு ஆரியர்கள் முதலில் சிந்து நதிப் பிரதேசத்திற்கு வந்து, அங்கு ஏற்கனவே இருந்த மக்களைவென்று குடியேறினார்கள் என்றும், அதன் பின்னர்த்தான் அவர்கள் இன்னும் கிழக்கே பரவினார்கள் என்றும் கூறலாம். ரிக் வேதத் தின் சில பகுதிகளில் சில இடங்களின் பெயர்களும் தன்மைகளும் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாக, ஆரியர்கள் முதலில் சிந்து நதிக்கும் கங்கை நதிக்கும் இடையிலுள்ள பிரதேசத்தில் டில்லிக்கு வடமேற்கே சிறிது தூரத்தில் வாழ்ந்து வந்தார்கள் என்றும், அவர்கள் கங்கை நதிப்பிரதேசத்தை விட அதற்கு மேற்கிலுள்ள பிரதேசத்தைப்பற்றித்தான் அதிகமாக அறிந்திருந் தார்கள் என்றும் தெரிகிறது. ஆரியர்கள் கூட்டங்கூட்டமாக வாழ்ந்து வந்தார்கள். சில சமயங்களில் ஒரு கூட்டத்திற்கும் மற்றொரு கூட்டத்திற்கும் சண்டை ஏற்படுவது உண்டு. ஆனால் அவர்கள் அனைவரும் எப்போதும் " தஸ்யு "க்களுடன் சண்டை யிட்டு வந்தார்கள். தஸ்யுக்கள் கருப்பாயிருந்தார்கள். தஸ்யுக் கள் திராவிட மொழிகளைப் பேசிவந்த பூர்விக மக்களாகத்தான் இருக்கவேண்டும் என்பது ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயம்.

ஆரியர்களுக்குள் ஒவ்வொரு கூட்டத்திலும் பல குடும்பங் களிருந்தன. குடும்பத்திற்குத்தலைவன் தந்தை. தாய் அவனுக்குக் கீழ்ப்பட்ட, ஆனால் கௌரவம் பொருந்திய, பதவியை வகித்தாள். ஒருத்தி ஒருவனோடு தான் வாழ்ந்தாள். ஒருத்தி பல ஆண்களை மணந்து கொள்ளும் வழக்கம் ஆரியப்பெண்களிடை கிடையாது. ஆண்களும் சாதாரணமாகப் பல பெண்களை மணந்துகொள்ளும் வழக்கமில்லை. ஆரம்பத்தில் ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியாகத்தான் வாழ்ந்து வந்தது. பின்னர்க் குடும்பம் பெருகப்பெருக ஒன்றுக்கருகில் ஒன்றாகப்பல வீடுகள் தோன்றி முடிவில் கிராமம் தோன்றிற்று. நகர வாழ்க்கை அப்போது தோன்றவில்லை. ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஓர் அரசனிருந்தான். சாதாரணமாக அரசபதவி பரம்பரையாக வந்தது. ஆனால் எப்போதும் அப்படித்தான் இருந்தது என்று சொல்லமுடியாது. அரசனுக்கு உதவி செய்ய ஒரு சபை இருந்தது. ஆனால், அந்தச்சபைக்கும் அரசனுக்கும் இருந்த தொடர்பு எத்தகையது என்று நிச்சயமாகக் கூறமுடியாது. குடும்பத் தலைவன்தான் நாளடைவில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தைஆளும்

அரசனாக மாறினான். மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வந்த அந்தக் காலத்தில் அரசனுக்கும் அவனுக்கு உதவிசெய்ய ஏற்பட்ட சபைக்கும் உள்ள தொடர்பு நாளுக்கு நாள் மாறுபட்டுக்கொண்டு தான் வந்திருக்கும். கூட்டத்தைச் சேர்ந்த ஆரியர்களைத்தவிர, சண்டையில் பிடிபட்ட அடிமைகளும் கிராமத்திலிருந்தார்கள். மேலும் ஆரியர்களுக்குள்ளேயே வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்கள் தங்களுக்குக் கடன் கொடுத்தவர் களிடம் அடிமைகளாக இருந்தார்கள்.

விவசாயமும் கால் நடைகளை வளர்த்தலும் ஆரியர்களுடைய முக்கியத்தொழில்கள். பயிர்த்தொழிலைவிடக் கால் நடைகளை வளர்ப்பதிலேயே அவர்கள் அதிகக்கவனம் செலுத்தினார்கள் என்று தோன்றுகிறது .ஒருவனுடைய சொத்தின் மதிப்புஅவனிட முள்ள பசுக்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததாகும். இந்துக் கள் பசுக்களைத் தனிப்பட்ட அன்புடனும் மரியாதையுடனும் போற்றுகிறார்கள். பசுவுக்கு ஏற்பட்டுள்ள இந்த உயர்வு அந்தக் கால ஆரிய சமூகத்திலேயே தொடங்கியது. பசுவுக்குத் தனிப்பட்ட மதிப்பைக்கொடுத்த ஆரியர்கள் எருதுகளின் இறைச்சியைத் தங்களுடைய சாதாரண உணவாக உபயோகித்தார்கள். ஆரியர் களுடைய வாழ்க்கையில் குதிரைகள் மாடுகளுக்கு அடுத்த ஸ்தானத்தை வகித்தன. பெரிய மனிதர்கள் சண்டையில் உபயோகித்த தேர்களை இழுப்பதற்குக் குதிரைகள் பயன்பட்டன. ஆடு, கழுதை, நாய் முதலியவற்றையும் அவர்கள் வளர்த்தார்கள். ஆரியர்கள் கம்பளியையும், பதனிடப்பட்ட தோலையும் ஆடை களாக உபயோகித்தனர். பருத்தியைப்பற்றி அக்காலத்திய ஆரியர்களுக்கு தெரியாது. ஆடை நெய்தல் பெண்களின் வேலை. தோல் பதனிடுதல், தச்சுவேலை கருமான்வேலை ஆகிய தொழில் களும் இருந்தன. ஆனால் அக்காலத்திய கொல்லர்கள் எந்த உலோ கத்தை உபயோகித்தார்கள் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. வேட்டை ஆடுதல் சாதாரணம். ஆனால் மீன்பிடித்தல் அவ்வளவு சாதாரணமாக இருந்திருக்கமுடியாது. தேர்ப்பந்தயம் மிக முக்கியமான பொழுது போக்கு. சூதாட்டம் பழக்கத்திலிருந்தது. அதனால் சில சமயம் கடன்பட்ட மக்கள் அதைக்கட்ட முடியாது அடிமைகளானார்கள்.

ரிக் வேதத்தில் பல தெய்வங்களைப்பற்றிய வழிபாட்டுப் பாடல்கள் இருக்கின்றன. வானம், சூரியன், இடி, மின்னல்,

நெருப்பு முதலிய இயற்கைச் சக்திகளையே * ஆரியர்கள் தெய்வங்களாக வணங்கினார்கள். இந்தச்சக்திகளை உயிருள்ளவைகளாகவும், மனிதர்களைப் போன்ற உருவமுள்ளவைகளாகவும் அவர்கள் கருதினார்கள். இந்தத் தெய்வங்கள் சாதாரணமாகக் கருணையுள்ளவைகள் என்றும், யாகங்களின் மூலமாக அவைகளின் பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்பினார்கள். யாகங்களுக்கேற்ற சடங்குகள் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருகிக்கொண்டே வந்தன. நாளடைவில் சடங்குகளைப்போலவே, கடவுட்கொள்கையிலும் வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டுக்கொண்டே வந்தன. எனவே ஆரியர்களுடைய மதம் மாறுதலடையாமல் ஒரே தன்மையாக இருந்தது என்று எண்ணுவது சரியன்று. ரிக் வேதத்தின் பத்தாம் புத்தகத்தில் தத்துவ விசாரணையைப்பற்றிய அறிகுறிகள் தென்படுகின்றன. இப்புத்தகம் ரிக்வேதத்திலுள்ள மற்ற பகுதிகளைக்காட்டிலும் காலத்தாற்பிற்பட்டது. ஏறக்குறைய சமமான அந்தஸ்தைக் கொண்ட பல கடவுள்கள் உண்டு என்ற நம்பிக்கையிலிருந்து, "அண்ட சராசரங்களெல்லாம் ஒரே அடிப்படையில் தோன்றியவை, அவற்றையெல்லாம் ஆக்கிய ஒப்பற்ற சக்தி ஒன்று இருக்க வேண்டும், அந்தச் சக்தியே கடவுள்" என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது. அதாவது கடவுட்கொள்கையைப் பொறுத்தமட்டில் பன்மையுணர்ச்சியிலிருந்துகொஞ்சங் கொஞ்சமாக ஒருமையுணர்ச்சி தோன்றி வளரலாயிற்று. இந்த உண்மை ரிக்வேதத்தின் பத்தாம் புத்தகத்தின் மூலம் நமக்குத் தெரிகிறது.

மரணத்திற்குப்பின் மனிதனுக்கு வாழ்வுண்டா என்பதைப் பற்றி ரிக்வேத காலத்திய ஆரியர்களுடைய கருத்து என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. அப்போது அவர்களது சிந்தனை இத்துறையில் ஈடுபடாமலே இருந்திருக்கலாம். மனிதர்களுக்குப் பிறப்பும் இறப்பும் மாறிமாறித் தொடர்ச்சியாக வந்து கொண்டேயிருக்கும் என்ற கொள்கை பிற்காலத்திய ஆரிய நூல்களில் நிலையாக இடம் பெற்றிருக்கிறது. ஆனால் ரிக் வேதத்தில் அத்தகைய கொள்கையின் மிகமிக நுண்ணிய சாயலே காணப்

* இவற்றைத் தவிர வேறு சில தெய்வங்களையும் ஆரியர்கள் வணங்கினார்கள். செயற்கரிய செய்த வீரர்களை ஆரியர்கள் தெய்வங்களாகப் போற்றினார்கள். புரோகிதர்களும் அவர்களைத் தெய்வங்களாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் ரிக் வேத காலத்தில் இத்தகைய தெய்வங்கள் வானம், நெருப்பு முதலிய தெய்வங்களோடு சமமான அந்தஸ்தைப் பெறவில்லை,

படுகிறது. ஒரு மனிதனுடைய மறுமை வாழ்க்கை அவனுடைய நடத்தையைப் பொறுத்தது என்ற கொள்கையை ஆரியர்கள் நம்பினார்கள் என்று கூறுவதற்குரிய சில அறிகுறிகள் ரிக்வேதத்தில் இருக்கின்றன.

மனிதனுக்குச் சமூகத்திலும், பொருளாதாரத்துறையிலும் கிடைக்கக்கூடிய அந்தஸ்து பிறப்பை யொட்டியது என்ற தத்துவந்தான் சாதி வேறுபாட்டிற்கு அடிப்படை. இத்தகைய சாதி வேறுபாடுகள் ரிக்வேத காலத்து ஆரிய சமூகத்திலிருந்தனவா என்று கேட்பது இயல்பே. சாதி வேறுபாடுகள் சிறிது சிறிதாகத் தோன்றி வளர்ந்தவை. ரிக்வேதத்தின் பிற்பகுதியிலுள்ள ஒரு பாட்டில் நான்கு வருணங்களின் பெயர்களைக் காண்கிறோம். ஆனால் அக்காலத்திய ஆரிய சமூகத்தில் சாதி வேறுபாடுகள் இருந்தன என்பதற்கு ரிக் வேதத்தில் தெளிவான ஆதாரமில்லை. சாதாரணமாக அரசுரிமையும், புரோகிதத்தொழிலும் பரம்பரையாக வந்தன. ஆனால், போர் செய்தல் கூட்டத்தைச் சேர்ந்த எல்லா மக்களுக்கும் பொதுவான உரிமை. அது பிற்காலத்திலிருந்ததைப்போல் ஒரு தனிப்பட்ட சாதியினருடைய தொழிலாக இல்லை. மேலும் நெசவு முதலிய தொழில்களைச் செய்தவர்களும் தனிப்பட்ட சாதியினராகப் பிரிந்து வாழ்ந்தார்கள் என்று கூற எந்தவித ஆதாரமும் கிடையாது. ஆனால் நிறத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு சாதிகள் இருந்தன என்பது நிச்சயம். வெள்ளை நிறத்தையுடைய ஆரியர்கள் தாங்கள் உயர்ந்தவர்களென்று கருதியதோடு, கருப்பாயிருந்த திராவிடர்களை வெறுத்தார்கள். சண்டையிற் பிடிபட்ட திராவிட அடிமைகளைத் தனிப்பட்ட சாதியினராகவே ஆரியர்கள் நடத்தினார்கள். இதைத்தவிர வேறுசாதி வேறுபாடுகள் இருந்தனவா என்பதும், அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்களும், புரோகிதர்களும் தனித்தனிச் சாதியினராகப் பிரிந்து வாழ்ந்தனரா என்பதும் சந்தேகத்திற்கிடமான விஷயங்கள்.

இவ்வாறு ஆரியர் வாழ்க்கையைப்பற்றி ஓரளவு அறிந்து கொள்வதற்கு உதவியாயிருக்கும் ரிக்வேதத்தின் மூலம் அவர்களுடைய பகைவர்களான திராவிடர்களைப்பற்றி நாம் ஒன்றுமே அறிந்துகொள்ள முடியவில்லை. திராவிடர்கள் ஏராளமான கால்நடைகளை வைத்திருந்தார்கள். ஆரியர்கள் படையெடுத்து வரும்போது தங்களைக் காத்துக் கொள்வதற்கேற்ற சில இடங்களை அவர்கள் அமைத்திருந்தார்கள். இத்தகைய புகலிடங்களைக்

குறிப்பிடுவதற்கு ரிக்வேதத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கும் சொல் பிற்காலத்தில் 'நகரம்' என்ற பொருளில் வழங்கியது. ஆனால் இந்தச்சொல் நகரம் என்ற பொருளில் ரிக்வேதகாலத்தில் வழங்கியிருக்கமுடியாது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். திராவிடர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அரண் செய்திருந்த புகலிடங்கள் எத்தன்மையானவை என்று அறிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் போரில் வல்லவர்கள் என்பது மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது. அவர்களுடைய போர்த்திறமையைப்பற்றிய நடுநிலையான வருணனையை அவர்களுடைய பகைவர்களாகிய ஆரியர்கள் எழுதிய ரிக் வேதப் பாடல்களில் காணமுடியுமா? ரிக்வேதப்பாடல்களில் திராவிடர்களைப்பற்றிக் குறிப்பிடுமிடங்களிலெல்லாம் அவர்கள்மீது ஆரியர்களுக்கிருந்த வெறுப்பும் பகைமையுமே காணப்படுகின்றன, இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு சில அறிஞர்கள் திராவிடர்களெல்லாம் காட்டு மிராண்டிகளாக இருந்தார்கள் என்று எண்ணுகின்றனர். சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகந்தானென்று நிறுவப்படுமானால் இந்தக்கொள்கை மெல்ல மறைந்தொழியும்.

ஆரியர்களும் திராவிடர்களும் ஒருவர்க்கொருவர் பகைவர்களாகவே இருந்தார்களென்று ரிக் வேதத்தில் கூறப்பட்டிருந்த போதிலும், ஓரளவு அவர்களிடையே வேறுவிதமான தொடர்பும் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி. ஆரியர்களிடம் சண்டையிற் பிடிபட்ட திராவிட அடிமைகள் அதிகமாக இருந்தனர். அதனால் இவ்விரு இனத்தினர்க்கும் பிறந்த சந்ததிகள் இருந்திருப்பார்களென்று கூற இடமிருக்கிறது. மேலும், தங்களுக்குள்ளேயே ஏற்பட்ட போர்களில் திராவிடர்களுடைய துணையை ஆரியர்கள் நாடினார்கள் என்பதற்குச் சிறிது ஆதாரமிருக்கிறது. ரிக் வேதத்தில் காணப்படும் பல சொற்களும், சில சொல்லமைப்புகளும் திராவிட மொழியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டவைதாம் என்று நிச்சயமாகக் கூறலாம். தினசரி வாழ்க்கையில் இச்சொற்கள் அதிகமாக வழங்கியிருக்க வேண்டும். அதனால் சாதாரண ஆரிய மக்களுடைய பேச்சு மொழிக்கும் அறிஞர்கள் எழுதிய நூல் மொழிக்கும் வேறுபாடு அப்பொழுதே தோன்ற ஆரம்பித்துவிட்டது என்று மொழியாராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஆகவே திராவிடப்பண்பாடும் ஆரியப்பண்பாடும் ஒன்றோடொன்று ரிக் வேதகாலத்திலேயே கலக்க ஆரம்பித்துவிட்டன என்று கூறலாம்,

இந்து மதத்தின் தோற்றம்

ரிக்வேத காலத்திற்குப் பின்னரும் ஆரியர் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மதநூல்களைத்தவிர வேறு ஆதாரம் எதுவும் இல்லை. இம்மத நூல்களுள் வழிபாட்டுப் பாடல்களின் திரட்டுக்களும், மதச்சடங்குகளைப்பற்றிய பாடல்களும், அவ்விரண்டையும் பற்றிய விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. இவையெல்லாம் எந்தக் காலத்தில் எழுதப்பட்டவை என்று உறுதியாகக்கூற முடியாது. ஆனால் இவற்றில் முற்பட்டவை ரிக்வேதத்தின் பிற்பகுதிகள் எழுதப்பட்ட காலத்தில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும். மற்றவைகளெல்லாம் நிச்சயமாய் கி.மு. 550க்கு முன்னர் எழுதப்பட்டிருக்க வேண்டும். இவற்றின் மூலம் ரிக்வேத காலத்திற்குப்பின் நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டுக் காலத்தில், அதாவது கி.மு. 1000க்கும் கி.மு. 550க்கும் இடைப்பட்ட காலத்தில், ஆரியர் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றி ஓரளவு நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. அவை பின் வருமாறு :—

இந்து மதம் இந்தக் காலத்தில்தான் தோன்றியது. ரிக்வேதம ஆரியர்களுடைய தனிப் பண்பாட்டைக் காட்டும் ஒரு நூல். ஆனால் பிற்காலத்திய மதநூல்கள் ஒரு கலப்புப் பண்பாட்டைக் காட்டுகின்றன. ரிக்வேதகாலத்தில் இந்தக் கலப்பு ஆரம்பநிலையில்தான் இருந்திருக்கவேண்டும். "இந்துமதம்" என்ற பெயர் ஒருமதத்தைக் குறிக்கிறது என்று சில சமயங்களில் கூறப்படுகிறது. ஆனால் ஆதியில் இந்தப்பெயர் மதத்தைமாத்திரம் குறிக்கவில்லை. தற்காலத்தில் மதம் என்ற சொல் கடவுட் கொள்கையையும் வழிபாட்டு முறையையும் மாத்திரம் குறிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. ஆனால் "இந்துமதம்" என்ற பெயர் யூதமதம் என்ற பெயரைப்போல, கடவுட் கொள்கையையும் வழிபாட்டு முறையையும் மாத்திரம் குறிக்காமல், மக்கள் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அனுசரிக்கவேண்டிய விதிவிலக்குகளைத்தையும், பிரபஞ்சத்தைக் குறித்த தனி நோக்கத்தையும் குறிக்கிறது. தனி மனிதனுக்காக ஏற்பட்ட கட்டுப்பாடுகள், சமூகத்திற்காக ஏற்பட்ட சட்டங்கள், பொருளாதார அமைப்புக்கான விதிகள் முதலிய எல்லாம் இப்பெயரால் குறிக்கப்படுகின்றன. ஆகவே இந்து மதம் என்றால் ஒரு தனித்தன்மை வாய்ந்த வாழ்க்கை முறை என்பது தெரியவேண்டும். சௌகரியத்தையொட்டி இந்த வாழ்க்கை முறை இந்து மதம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

ஆரியப் பண்பாடும் திராவிடப் பண்பாடும் சேர்ந்த கலப்பே இந்துமதமாகும். ஆனால் இதில் ஆரியப்பண்பாட்டைக் காட்டும் அம்சங்கள் யாவை? திராவிடப் பண்பாட்டைக் காட்டும் அம்சங்கள் யாவை? என்று பிரித்துக்கூற முடியாது. ஏனெனில், ஆரியர்களைப்பற்றி நமக்குத் தெரிந்துள்ள விஷயங்கள் மிகச் சிலவே; திராவிடர்களைப்பற்றியோ நமக்கு ஏறக்குறைய ஒன்றுமே தெரியாதென்று சொல்லலாம். இங்ஙனியில் இந்துமதம் என்று அழைக்கப்படும் வாழ்க்கைமுறையில் புதிதாக ஏதாவதோர் அம்சம் தோன்றும்போது அது திராவிடப் பண்பாட்டின் அம்சமாகவோ, அல்லது ஆரியப் பண்பாட்டின் அம்சமாகவோ இருக்கலாம். இன்றேல் இவ்விரண்டின் கலப்பினால் ஏற்பட்ட புதியதொரு வளர்ச்சியாகவும் இருக்கலாம். ஆரியர் வருகைக்கு முன்னர்த் திராவிட நாகரிகம் எத்தன்மையாக இருந்தது என்ற விஷயத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் திட்டமான முடிவு கூறும்வரையில் நாம் இவ் விஷயத்தைப்பற்றிய உண்மையை அறிந்துகொள்ள முடியாது.

ரிக்வேத காலத்தில் ஆரியர்கள் சிந்து நதிக்கும் கங்கை நதிக்கும் மத்தியிலுள்ள நீர்பிரிமேட்டில் வாழ்ந்துவந்தார்கள். ஆனால் அதற்கடுத்த காலத்தில் அவர்கள் கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் பரவிவிட்டார்கள். இப்பகுதியைத்தான் ரிக்வேதத்திற்குப் பிற்பட்ட மத நூல்கள் "மத்ய தேசம்" என்று கூறுகின்றன. இப்பகுதியே இந்துக்களின் புண்ணியதேசம். இந்தியாவில் பல நதிகளை இந்துக்கள் புண்ணிய நதிகளாகக் கருதுகிறார்கள். ஆனால் மற்றெந்த நதியும் கங்கையைப்போல அவ்வளவு புனிதத்தன்மை வாய்ந்ததாக இந்துக்களால் கருதப்படவில்லை. அதுபோலவே இந்துக்களின் பக்திக்குரிய பல புண்ணிய க்ஷேத்திரங்கள் இந்தியாவில் இருந்தபோதிலும் காசி, பிரயாகை, ஹரித்துவாரம் ஆகிய மூன்று க்ஷேத்திரங்களுக்கு இணையாக வேறெந்த க்ஷேத்திரத்தையும் இந்துக்கள் கருதுவதில்லை. தற்காலத்தில் பல யாத்திரிகர்கள் கங்கைநதியின் உற்பத்தி ஸ்தானத்தைத்தேடி இமயமலையில் வெகு தூரம் மிகச் சிரமப்பட்டுச் சென்று வருகிறார்கள் என்பது உண்மைதான். எனினும், ஹரித்துவாரம், பிரயாகை, காசி ஆகிய மூன்று ஸ்தலங்களுக்கும் செல்லும் யாத்திரிகர்களையும் கேதாரிநாத், பத்ரிநாத் ஆகிய ஸ்தலங்களுக்குச் செல்லும் யாத்திரிகர்களையும் கணக்கிட்டுப்பார்த்தால் முற்கூறியவர்களின் தொகையைவிடப் பிற்கூறியவர்களின் தொகை எவ்வளவு மிகச்சிறிது என்று எளிதில் விளங்கும். கங்கைநதி மலையைக் கடந்து சமவெளியில் நுழையும் இடத்தில் ஹரித்துவாரம் இருக்கிறது. அலகாபாத் என்று தற்

போது அழைக்கப்படும் பிரயாகை கங்கையும் யமுனையும் கலக்குமிடத்தில் இருக்கிறது. இன்னும் சிறிது கிழக்கிலிருக்கும் காசி இந்தியாவிலேயே தலைசிறந்த புண்ணிய க்ஷேத்திரம். ஆனால் கி. மு. 1000-க்கும் கி. மு. 500-க்கும் இடைப்பட்ட காலத்தில் காசி மிக முக்கியமான நகரமாக இல்லை. காம்பீலா என்ற நகரந்தான் அந்தக் காலத்தில் மத்யதேசத்தில் மிக முக்கியமான நகரமாக இருந்தது. இந்நகரம் இப்போது ஒருசாதாரணக் கிராமமாக இருக்கிறது. இது கங்கைநதிக்குப் பக்கத்தில் ஆக்ராவுக்கும் லக்னோவுக்கும் இடையில் இருக்கிறது. நாம் இப்போது பேசும் காலத்திற்கு ஆதாரமாகவுள்ள மதநூல்களில் கிழக்கே வங்காளத்தின் எல்லைவரையிலுள்ள பிரதேசங்களும் மேற்கே சிந்துசமவெளி வரையிலுள்ள பிரதேசங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றன. தென்னிந்தியாவைப் பற்றிய குறிப்பு ஒன்றும் இல்லை. விந்தியப்பிரதேசத்திலோ, அதற்கடுத்த பிரதேசத்திலோ ஆரியர்களோடு எவ்விதத் தொடர்புமில்லாத சில கூட்டத்தினர் வாழ்ந்துவந்தனர் என்ற குறிப்புக் காணப்படுகிறது.

ரிக்வேத காலத்து ஆரியர்களுடைய வாழ்க்கைமுறைக்கும் மத்யதேசத்து ஆரியர்களுடைய வாழ்க்கைமுறைக்கும் பல வேறுபாடுகளிருந்தன. மத்யதேச ஆரியர்களுடைய வாழ்க்கை முன்னிருந்ததைவிட ஒழுங்கும் நிரந்தரமும் பெற்றிருந்தது. ரிக்வேத காலத்தில் ஆரியர்களுடைய கூட்டங்கள் இருந்தன. இப்போது ஆரியராஜ்யங்கள் இருந்தன. கூட்டத்தலைவர்களது அதிகாரத்துக்குட்பட்ட சிறிய நிலப்பகுதிகளுக்குப் பதிலாக இப்போது அரசர்கள் ஆட்சிக்குட்பட்ட பெரிய பிரதேசங்களைப்பற்றிப் படிக்கிறோம். நகரங்கள் தோன்றி வளர்ந்துவிட்டன. குடிகள்மீது அரசனுக்கிருந்த அதிகாரம் அதிகரித்துக்கொண்டு வந்தது. ஆட்சி விஷயங்களில் அரசனுக்கு உதவியாக இருந்த சபைகளைப் பற்றிய விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை. இதிலிருந்து அந்தச் சபைகளின் அதிகாரம் குறைந்துகொண்டு வந்தது என்று தோன்றுகிறது. பிற்காலத்தில் மிக முக்கியத்துவம் பெற்ற கிராமப் பஞ்சாயத்துக்களின் ஆரம்பத்தை இந்தக்காலத்தில் காண்கிறோம். அரசனிடமிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ தங்கள் உத்தரவுகளைப்பெற்ற கிராமத்தலைவர்கள் கிராமங்களின் ஆட்சியை நடத்தினார்கள். குடும்பத்தில் பெண்களுக்கிருந்த மதிப்புக்குறைய ஆரம்பித்துவிட்டது. பெண்குழந்தைகளைவிட ஆண்குழந்தைகள் அதிகமாக விரும்பப்பட்டார்கள்.

மிகப் பெரும்பான்மையான மக்கள் நிலத்தை நம்பி வாழ்ந்தார்கள்; பயிர்த்தொழிலே அவர்களது முக்கிய வேலை. கோதுமை, பார்லி, நெல், மற்ற தானியங்கள், பருப்பு வகைகள், கரும்பு, எண்ணெய் வித்துக்கள் முதலியவை பயிராக்கப்பட்டன. ஆனால் பருத்தியைப் பற்றிய குறிப்பே இல்லை. ஏற்கனவே உபயோகத்திலிருந்த உலோகங்களோடு இரும்பும் வெள்ளியும் சேர்ந்தன. பல கைத்தொழில்கள் கூறப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவினர் ஒவ்வொரு தொழிலைத் தேர்ந்தெடுத்து அதிலேயே பரம்பரையாக உழைத்து வந்ததனால் அத்தொழில்களில் ரிக்வேத காலத்திலிருந்ததைவிட மிக அதிமான முன்னேற்றம் ஏற்பட்டது என்று தெரிகிறது. மத்தியதேச ஆரியர்கள் வாழ்க்கையை ரிக்வேத காலத்து ஆரியர்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது பின்னையது ஒழுக்கமும், திருத்தமும், அமைதியும், நிரந்தரமும் பெற்றிருந்தது என்று கூசாமற்கூறலாம். எனினும் அவ்வப்போது ஆரிய அரசர்கள் தங்களுக்குள்ளேயே செய்துவந்த போர்களும், தங்களுடன் சேராத எல்லையிலிருந்த ஜனங்களுடன் செய்த சண்டைகளும் இந்த அமைதியை ஓரளவு குறைத்துத்தானிருக்கும்.

ரிக்வேத காலத்திலிருந்ததை விடச் சாதிப்பிரிவுகள் இந்தக் காலத்தில் அதிகமாயிருந்தன. சாதி என்பது சமூகத்தின் ஒரு பிரிவு. இது பிறப்பைப் பொறுத்தது. ஒரு சாதியிற் பிறந்தவன் மற்றொரு சாதியிற் சேர்ந்து கொள்ள முடியாது. முழுவளர்ச்சியும் அடைந்த ஒவ்வொரு சாதிக்கும் நான்கு தனித்தன்மைகள் உண்டு. முதலாவதாக, ஒரு சாதியிற் பிறந்த பெண்ணோ ஆணோ அதே சாதியிற்றான் மணஞ்செய்துகொள்ள முடியுமே யொழிய, வேறொரு சாதியிலே மணந்து கொள்ள முடியாது. அது போலவே ஒவ்வொரு சாதியிலும் பலஉட்பிரிவுகள் உண்டு. இத்தகைய ஓர் உபசாதியைச்சேர்ந்தவர்கள் அதே உபசாதியிற்றான் மணஞ்செய்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக, ஒவ்வொரு சாதிக்கும் உரிய ஒரு தொழில் இருக்கும். அதனால் தந்தையின் தொழிலையே மகனும் செய்வது வழக்கம். உதாரணமாக, நெசவுக்காரனின் மகன் நெசவுத்தொழிலிலும், தச்சன் மகன் தச்சுத்தொழிலிலும் ஈடுபடவேண்டும். ஆனால், இம்முறை மிகக்கண்டிப்பாக அனுசரிக்கப்பட்டது என்று கூற முடியாது. உதாரணமாக, பயிர்த்தொழிலில் எந்தச்சாதியாரும் ஈடுபடலாம். மூன்றாவதாக, அன்றாட வாழ்க்கை முறையில் ஒவ்வொரு சாதிக்கும் உரிய பல விதிவிலக்குகள் உண்டு. ஒரு சாதியிற் பிறந்தோர் எத்தகைய உணவை உண்ணவேண்டும்,

எத்தகைய பானத்தை அருந்தலாம், புகை பிடிக்கலாமா கூடாதா என்ற இம்மாதிரி எல்லா விஷயங்களுக்கும் விதிவிலக்குகள் உண்டு. இதன் விளைவாக ஒரு சாதியைச்சேர்ந்தவர் மற்றொரு சாதியைச் சேர்ந்தவர்களோடு நெருங்கிப்பழக முடியாமற் போகிறது. நான்காவதாக, ஒரு சாதியைச்சேர்ந்தவர்கள் தங்களுக்குள் ஏறக் குறையச் சகோதர உணர்ச்சியுடன் இருக்கிறார்கள். தொழில் முறையில் ஒருவர்க்கொருவர் உதவி செய்தலும், ஒருவருடைய சுக துக்கங்களில் மற்றவர்கள் பங்கெடுத்துக் கொள்ளுதலும், வறுமையாலோ மற்ற காரணத்தாலோ துன்பமடைந்தவர்களுக்கு உதவி செய்தலும், ஒவ்வொரு சாதியிலும் காணக்கிடக்கும் விஷயங்கள். ஆனால் சாதிக்கட்டுப்பாட்டை மீறியவர்கள் சாதிப்பிரஷ்டம் செய்யப்படுவார்கள். அத்தகையோர் எந்தச் சாதியிலும் சேரமுடியாமல் தனித்தே வாழவேண்டி நேரிடும். அவர்களுக்கு நண்பர்களோ உறவினர்களோ இருக்கமுடியாது. மற்றவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள் அவர்களுக்குக் கிடைக்க மாட்டா. ஆனால் இத்தகைய சாதி முறையில் கொஞ்சமும் மாறுதல் ஏற்படுவதில்லை என்று கூறமுடியாது. புதிய சாதிகள் அவ்வப்போது தோன்றுகின்றன. சாதிச்சட்டங்கள் அடிக்கடி மாறுகின்றன. இன்னசாதிக்கு இன்னதொழில் என்று வகுக்கப் பட்ட கட்டுப்பாடுகளும் தளர்ந்து வருகின்றன. ஆனால் திருமண விஷயத்தில் ஏற்பட்ட கட்டுப்பாடு மாத்திரம் தளராமல் இருந்து வருவதோடு அதுவே சாதிமுறைக்கு அடிப்படையாகவும் இருந்து வருகிறது.

மேலே விவரித்த சாதிமுறை தற்காலத்தில் காணப்படும் முறையே. சாதி முறை அந்தக்காலத்தில் முழுவளர்ச்சியடைய வில்லை. அக்காலச் சமூகத்தில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பெரும் பிரிவுகளிருந்தன. புரோகிதத் தொழிலில் ஈடுபட்டவர் பிராமணர்; போர்த்தொழில் செய்தோர் க்ஷத்திரியர்; அரசகுடும்பத்தினர் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர். இந்த இருபிரிவினரையும் தவிர மீதியுள்ள சாதாரண மக்கள் வைசியர்கள். அடிமைகளெல்லாம் சூத்திரர்களென்று அழைக்கப் பட்டனர். ஒரு பிரிவினர் மற்றொருபிரிவில் மணஞ்செய்து கொள்ளக்கூடாது என்ற தடை அப்போது பூரணமாக அமுலில் இல்லை. கலப்பு மணத்தால் ஏற்பட்ட சந்ததிகள் தனித்தனிச் சாதிகளாக வாழ ஆரம்பித்தார்கள். வைசியர்களாகிய சாதாரண மக்களுக்குள்ளும் பிரிவுகள் ஏற்பட ஆரம்பித்தன. அவர்களுள் பயிர்த்தொழில் செய்தவர்கள் உயர்ந்தவர்களென்றும், மற்ற

தொழில்களில் ஈடுபட்டவர்கள் தாழ்ந்தவர்களென்றும் எண்ணப் பட்டனர். அதே சமயத்தில் சூத்திரர்களுள்ளும் சிலர் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்ள ஆரம்பித்தார்கள். அவர்களும், வைசியர்களிடமிருந்து பிரிந்த தொழிலாளிகளும் ஒன்றாகக் கலந்து ஒரு புதிய சாதியாக மாறினார்கள். இவ்வாறு சாதிகள் அதிகரித்துக்கொண்டே வர ஆரம்பித்தன. இதற்குக் காரணம் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. ஆரியர்க்கும் திராவிடர்க்கும் இருந்த நிறவேறு பாட்டில் ஆரம்பித்த இந்தப்பிரிவு தொடர்ச்சியாக வளர்ந்து கொண்டே வந்து, பல சாதிகளும் உப சாதிகளும் தோன்றுவதற்கும், சாதிக்கட்டுப்பாடுகள் அதிகரிப்பதற்கும் காரணமாக இருந்தது என்று தெரிகிறது. சில ஆராய்ச்சியாளர்கள் ஆரியர் வருவதற்கு முன்னரே திராவிடர்களுக்குள் சாதிப்பிரிவுகள் இருந்தனவென்று கூறுகிறார்கள். இது உண்மையா? இல்லையா? என்று தீர்மானிப்பதற்குத் தற்போது எத்தகைய சான்றும் கிடையாது. இஃது உண்மையாக இருக்குமானால் தற்காலத்திய சாதிமுறை வெகுகாலத்திற்கு முன்னரே தோன்றியிருக்கவேண்டும். *

இந்தக் காலத்திலும் பல தெய்வங்கள் வணங்கப்பட்டன. ரிக் வேதத்திற் கூறப்பட்டுள்ள தெய்வங்கள் பின்னைய மதநூல்களிலும் கூறப்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் இப்போது சில மாறுதல்களைப் பார்க்கிறோம். இவற்றில் முக்கியமானது சிவ, விஷ்ணு வழிபாடு. தற்கால இந்து மதத்தில் சிவனும் விஷ்ணுவும் முக்கிய தெய்வங்கள். ரிக் வேதத்தில் விஷ்ணு சூரியனுடைய ஓர் அம்சம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அப்போது விஷ்ணுவுக்குத் தனிப்பட்ட மதிப்புக் கிடையாது. ரிக் வேதத்திற்

---

* பழைய புத்த நூல்களில் "சிரேணி" என்ற ஓர் அமைப்பைப் பற்றிச் சில குறிப்புக்கள் இருக்கின்றன. "சிரேணி" என்ற சொல்லுக்குத் "தொழிற்சங்கம்" என்று பொருள் கூறப்படுகிறது. ஆனால் "சிரேணி" என்ற அமைப்பு தொழிற்சங்கத்தை முழுதும் ஒத்திருந்தது என்று கூறமுடியாது. ஒரே தொழிலைச்செய்யும் பல குடும்பங்களில் ஒருவர்க்கொருவர் உதவியாக இருப்பதற்காக இந்த அமைப்பை ஏற்படுத்திக்கொண்டார்கள். அதற்கு ஒரு தலைவன் உண்டு. அது ஒரு தொழிலில் ஈடுபட்டு வளரும் சாதிமாதிரி தோன்றுகிறது. அதைத்தவிர வேறு ஒன்றும் அதை குறித்துச் சொல்ல முடியாது. தொழிலை அடிப்படையாகக்கொண்ட சாதிகள் பின்னால் தோன்றக்கூடும் என்பதற்கு "சிரேணி" ஓர் அறிகுறியாக இருக்கலாம். இதைத் தவிர "சிரேணி"தான் பின்னர்ச்சாதி என்று பெயர் பெற்றது என்று கூற முடியாது.

குப் பிற்பட்ட வேதங்களில் விஷ்ணு பெரும்பான்மையான மக்களின் பக்திக்குப் பாத்திரமான தெய்வமாகக் காட்சியளிக்கிறார். ஆனால் ருத்திரன் தான் விஷ்ணுவையும் விடப் பெரிய தெய்வம். அவர் "சிவன்" என்று அழைக்கப்பட்டார். "சிவன்" ஆரியரல்லாதாருடைய தெய்வமாக இருக்கக்கூடும் என்று நம்புவதற்கு ஓரளவு ஆதாரம் இருக்கிறது. மொஹெஞ்சோ தாரோவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கடவுள் வடிவங்களில் ஒன்று, தற்போது வழங்கும் சிவன் வடிவத்தை ஒத்திருக்கிறது என்று ஸர்ஜான் மார்ஷல் கூறுகிறார். ஆகவே சிந்து சமவெளித் தெய்வமாகிய சிவனே பின்னர் ஆரியர்களுடைய தெய்வமாகிய ருத்திரனாக மாறி, இந்து மதத்தின் தலை சிறந்த கடவுளாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்.

மதச்சடங்குகள் அதிகமானதாலும், யாகங்களுக்கேற்ற மந்திரங்கள் அதிகமானதாலும், புரோகிதர்களுடைய மதிப்பு உயர்ந்தது. வேள்வியின் மூலம் தெய்வத்தின் பிரியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்தது. வேள்விச் சடங்குகளையெல்லாம் சிறிதும் தவறாமல் சரியான முறையில் செய்தால், தெய்வம் யாகத்தலைவன் வேண்டிய வரத்தைக் கொடுக்காமலிருக்க முடியாது என்ற நம்பிக்கை தோன்றியது. ஆனால் இத்துறையில் கைதேர்ந்த புரோகிதன்தான் சடங்குகளைச் சரியாகச் செய்ய முடியும். வேள்விச் சடங்குகளில் தெரிந்தோ தெரியாமலோ ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டாலும், அந்த வேள்வி பலனளிக்காது என்று சாதாரண மக்கள் நம்பியதால் சமூகத்தில் பிராமணருடைய மதிப்பு மிக மிக உயர்ந்துவிட்டது. கடவுள் கருணையை விரும்பிய யாருக்கும் பிராமணருடைய துணை இன்றியமையாதது என்ற எண்ணம் வேரூன்றியது. ஆகவே பிராமணரிடத்தில் சாதாரண மக்களுக்குப் பக்தி ஏற்பட்டது. அவருடைய மனங்கோணாமல் பார்த்துக்கொள்வது மற்ற மக்களுடைய கடமையாயிற்று.

புரோகிதர்கள் தங்கள் அதிகாரத்தை உயர்த்திக் கொள்வதில் முனைந்திருந்த அதே சமயத்தில் சிந்தனையாளர்கள் தத்துவ விசாரணையிலீடுபட்டிருந்தார்கள். ரிக்வேத காலத்திலேயே இந்த விசாரணை ஆரம்பமாயிற்று என்று முன் கூறினோம். இவ்விசாரணையின் பயனாக ஏற்படும் தர்க்க ரீதியான முடிவுகளை மக்கள் உண்மையிலேயே கடைப்பிடிக்க ஆரம்பித்தால் மதச்சடங்குகளுக்கும் அவற்றைச்செய்யும் புரோகிதர்களுக்கும் அவசியமில்லாமற்போகும். உபநிஷத்துக்கள் என்று அழைக்கப்படும் நூல்கள் அண்ட சராசரங்கள் அனைத்தும் அடிப்படையில் ஓரே சக்தியால்

இயக்கப்படுகின்றனவென்றும், உலகத்தையும் மற்றபொருள் களையும் படைத்த அந்த ஒப்பற்ற சக்திக்கும் மக்களுக்கும் நேரடியான தொடர்பு இருக்கமுடியாது என்றும் கூறுகின்றன. இக்கருத்துக்களின் விளைவுகள் அப்போது முழுதும் வளராவிட்டாலும், பிற்காலத்தில் தோன்றிய தத்துவ ஆராய்ச்சிகளுக்கும் விவாதங்களுக்கும் இந்தக்கருத்துக்கள் தாம் வித்துக்களாயிருந்தன. மேலும், சிறந்த அறிவாளிகளின் சிந்தனையில் தோன்றிய கடவுட் கொள்கைக்கும், சாதாரணமக்களால் நம்பப்பட்ட பல தெய்வங் களைக்கொண்ட மதக்கொள்கைக்கும் இடையிலிருந்த வேறுபாடு அதிகரித்துக் கொண்டே வந்தது என்பதையும் இதன் மூலம் நாம் உணர்கிறோம்.

ஒவ்வோர் உயிருக்கும் பல பிறவிகள் உண்டு என்ற கொள்கை இந்தக் காலத்தில் முழு உருப்பெறுகிறது. பிறவி கர்மத் தால் ஏற்படுவது. இந்த ஜன்மத்தில் ஒரு மனிதனுடைய இன்ப மும் துன்பமும் போன ஜன்மத்தில் அவன் செய்த புண்ணிய பாவங்களைப் பொறுத்தவை. அதுபோல அடுத்த ஜன்மத்தில் அவனுக்கு ஏற்படவிருக்கும் சுக துக்கங்கள் இந்த ஜன்மத்தில் அவன் செய்யும் நல்ல காரியங்களையோ தீய காரியங்களையோ பொறுத்தவை. இந்த ஜன்மத்தில் ஒருவனுக்குத் துன்பம் மிகுதி யாக ஏற்படுமானால் அது போன ஜன்மத்தில் அவன் செய்த தீய செயல்களின் தவிர்க்கமுடியாத விளைவுதான் என்று மனத்தைத் தேற்றிக்கொள்ள வேண்டும். ஆனால் இந்த ஜன்மத்தில் அவன் செய்யும் செயல்களுக்கு அவனே பொறுப்பு. அவன் விருப்பப்படி நன்மையேனும் செய்யலாம், தீமையேனும் செய்யலாம். இறக் கும்போது அவனுடைய புண்ணியமும் பாவமும் அவன் கூடவே தொடர்ந்து செல்கின்றன. புண்ணிய பாவங்களில் எது மிகுதி யாக இருக்கிறதோ அதற்கேற்றவாறு அடுத்த ஜன்மத்தில் ஒரு வன் மனிதனாகவோ அல்லது விலங்காகவோ அல்லது மனிதனை விட உயர்ந்த பிறவியாகவோ பிறக்கிறான். இறந்தவுடனேயோ அல்லது சிறிது காலம் பொறுத்தோ ஒருவன் மறு ஜன்மம் பெற லாம். இறப்பிற்கும் மறு பிறப்பிற்கும் இடையிலுள்ள காலத் தில் ஒருவன் தான் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்பச் சொர்க் கத்தில் இன்பத்தையும் நரகத்தில் துன்பத்தையும் அனுபவிப் பான். இறப்பும் பிறப்பும் மாறி மாறித் தொடர்ச்சியாக நீண்ட காலம் வந்துகொண்டேயிருந்தாலும், இதற்கும் ஒரு முடிவு உண்டு. பிறவிக்கடலைத்தாண்டி ஜீவாத்மாவானது " பிரஹ்மம் " என்று கூறப்படும் பரமாத்மாவோடு ஐக்கியப்படுதலே வாழ்க்கை

யின் ஒப்பற்ற குறிக்கோளாக இருக்க வேண்டும். உயிர் இறைவனோடு ஒன்றுபடுவதை அமரத்துவம் அல்லது 'சாவின்மை' என்று கூறுகிறார்கள். இறைவனும் உயிரும் ஒன்று படுவதைப் பற்றி இரு கொள்கைகள் உண்டு. ஒன்றின்படி உயிர் வேறு, இறைவன் வேறு என்ற பாகுபாடில்லாமல், உயிர் தனித்தன்மையை இழந்துவிடுகிறது. மற்றொன்றின்படி ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியப்பட்டாலும், ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வேறு வேருகவே நிரந்தர இன்ப நிலையிலிருக்கும். அதாவது ஜீவாத்மா ஒரு தனிப்பொருள், பரமாத்மா ஒரு தனிப்பொருள் என்ற நிலை என்றும் மாறுவதில்லை. இவ்வாறு பிறப்பிறப்பற்ற நிலையில் உயிர் இறைவனோடு ஒன்றி வாழ்தலே நல்லது என்ற கொள்கை நிலைபெற்றதால், உலகவாழ்க்கை பாவம் நிறைந்தது, அதை எவ்வளவு சீக்கிரம் மக்கள் உதறித் தள்ளுகிறார்களோ அவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு நன்மை ஏற்படும் என்ற எண்ணம் தோன்றியது இயல்பே. நாம் ஐந்தாம் அதிகாரத்தில் சொல்லப்போகும் இந்த எண்ணந்தான் கி. மு. ஆறும் நூற்றாண்டில் தோன்றிய மதச்சீர்திருத்த இயக்கத்திற்குக் காரணமாகவும், அந்தச் சீர்திருத்தக்காரர்கள் போதித்த கொள்கைகளுக்கு அடிப்படையாகவும் இருந்தது.

ஆகவே ரிக்வேதகாலத்திற்கு அடுத்த காலத்தில், அதாவது பின்னைய வேத காலத்தில் அல்லது கி. மு. 1000-க்கும் கி. மு. 500-க்கும் இடைப்பட்ட காலத்தில், இந்துமதத்தின் முக்கிய கோட்பாடுகளெல்லாம் உருப்பெற்று விட்டன என்று கூறலாம். இந்தக்காலத்தில் ஆரியர்கள் கங்கைச் சமவெளியின் மேற்பகுதியில் பரவியிருந்தார்கள். இந்தக் கொள்கைகள் இந்தியாவின் பிற பாகங்களுக்கு எப்படிப்பரவின என்று கூறுவதற்குத்தக்க ஆதாரம் ஒன்றும் இல்லை. நூற்றுக்கணக்கான பிராமண மத போதகர்கள் நாடு முழுதும் இந்துமதக் கோட்பாடுகளைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டார்கள் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்தக்கூற்றுக்கு எந்தவிதமான ஆதாரமும் அவர்கள் காட்டவில்லை. இந்துமதக் கொள்கைகள் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவ ஆரம்பித்தன என்றும், அதன் பயனாக " இந்துமதம் " என்ற வாழ்க்கை முறையை வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் இருந்த எல்லாமக்களும் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள் என்றும் கூறலாம்.

அதிகாரம்—3

இந்துக்களின் வாழ்க்கை முறை

சில இடங்களில் தற்காலிகமாக மறைந்திருந்த காலங்களைத் தவிர, இந்து மதத்தின் ஆதிக்கம் இந்தியாவின் அரசியல் துறையில் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டு வரையில் ஓங்கியிருந்தது. பின்னால் அரசியலதிகாரத்தை முகமதியர்கள் கைப்பற்றிக் கொண்ட போதிலும் இந்துமத வாழ்க்கைமுறை அதிகமாக மாறாமலே பெரும்பாலான ஜனங்களுள் இருந்து வந்தது. இன்றைக்கும் இந்தியமக்களிற் பெரும்பான்மையோர் அந்த வாழ்க்கை முறையையே பின்பற்றி வருகிறார்கள். ஆதலால் இந்த வாழ்க்கை முறையைப் பற்றி நாம் தெளிவாக அறிந்து கொள்ளுவது அவசியம். இந்த வாழ்க்கை முறை ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வாறு இருந்தது என்று பார்க்காமல் அரசியல் துறையில் இந்துக்கள் மேலோங்கி நின்ற காலத்தில் அதன் பொதுத்தன்மைகளைப்பற்றியே அறிந்து கொள்ளுவது நலம்.

வாழ்க்கை, தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். தர்மம் என்ற சொல்லால் மனிதனுக்கேற்பட்ட எல்லாக் கடமைகளும் குறிக்கப்படும். தர்மத்தை தெய்விகச்சட்டம் என்றும் சொல்லலாம். தர்மத்தைப்பற்றிக் கூறும் நூல்கள் பல. கி. மு. 800-ஆண்டுக்குச் சமீபத்தில் எழுதப்பட்ட வேதபாஷ்யங்கள் முதலாகக் குறைந்தது இருபது நூற்றாண்டுகளில் தோன்றிய நூல்களில் இந்து தர்மத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. தர்மம் என்ன என்பதைப்பற்றிய விளக்கம் இன்னும் முடிவடையவில்லை என்று கூறலாம. ஏனெனில், இன்றைக்கும் நியாயஸ்தலங்களில் நீதிபதிகள் மனிதனைக்குறிக்கும் சட்டத்திற்கு விளக்கந் தந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இந்து தர்மத்தை விளக்கும் நூல்களில் மிகமுக்கியமானவை தர்மசாஸ்திரங்கள். இவற்றில் சில சாஸ்திரங்களுக்குப் பிற்காலத்தில் தோன்றிய விளக்கங்கள் மூலசாஸ்திரங்களை ஆக்கிரமித்துக் கொண்டன. இந்தச் சாஸ்திரங்கள் எவ்வெப்போது எழுதப்பட்டவை என்று உறுதியாகச் சொல்ல முடியாது. சில சாஸ்திரங்கள் பலதரம் திருப்பியும், திருத்தியும் எழுதியதால் மாறுதலடைந்திருக்கின்றன என்று கூறுவதற்கேற்ற அறிகுறிகள் இருக்கின்றன. தர்மசாஸ்திரங்களுள் மிகவும் பிரசித்தி பெற்றது மானவ தர்மசாஸ்திரம். இதன்காலத்தைக்கூடச் சரியானபடி நிர்ணயிக்கமுடியவில்லை. கி மு. 200-ஆம் ஆண்டையும் கி. பி. 200-ஆம் ஆண்டையும் எல்லைகளாகக்கொண்ட நான்கு

நூற்றுண்டுகளில் ஏதாவதொரு காலத்தில் இந்தநூல் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று தற்கால ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள்.

மேற்கூறிய சாஸ்திரங்களில் வகுக்கப்பட்டுள்ள தர்மத்தை அரசன்முதல்சாதாரணமக்கள்வரையில்அனைவரும் கடைப்பிடித்து நடக்கவேண்டும். இந்தச்சட்டத்தை மாற்றுவதற்கோ திருத்துவதற்கோ யாருக்கும் அதிகாரமில்லை. எனினும் அது சிறிதும் மாறுதலடையவில்லை என்று கூறமுடியாது. இந்தச் சட்டத்திற்குப் பலர் பலகாலங்களில் விளக்கம் எழுதியிருக்கிருர்கள். விளக்க ஆசிரியர்களுடைய அறிவுக்கும், திறமைக்கும், கொள்கைக்கும், அவரவர்கள் காலத்திலிருந்த சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தர்மசாஸ்திரங்களுக்கு அவர்கள் விளக்கவுரை எழுதிஞர்கள். அதனுற் சிற்சில விஷயங்களில் தர்மசாஸ்திரங்கள் கொஞ்சங்கொஞ்சமாக நாளடைவில் மாறுதலடைந்தன. எனினும் இந்து தர்மத்தின் முக்கியமான அம்சங்களில் மாறுதல் ஏதுவும் ஏற்படவில்லை. இந்த அம்சங்களைப் பற்றித்தான் இங்குக் கூறப்படும்.

ஒருதேசத்தில் பல ராஜ்யங்கள் இருப்பதும், அவைகளுக்குள் அடிக்கடி சண்டை ஏற்படுவதும், இந்து தர்ம சாஸ்திரங்களின்படி இயற்கையான விஷயங்கள். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஓர் அரசன் உண்டு. அரசன் மனித உருவில் உள்ள ஒரு பெரிய தெய்வம். துஷ்டர்களைத் தண்டித்துத் தன்குடிகளைக் காப்பாற்றுவது அரசனுடைய தலைசிறந்த கடமை. அதற்காக அவனுக்கு வரிசெலுத்துவது குடிகளின் கடமை. கற்றறிந்த புரோகிதன் ஒருவனைத் தன் மந்திரியாக வைத்துக்கொள்வதோடு ஆலோசனையாளர்கள் சபை ஒன்று அமைத்து அரசாங்க அலுவல்களில் நாள்தோறும் அச்சபையின் ஆலோசனையை நாடவேண்டும். குடிமக்களிற் பெரும்பான்மையோர் கிராமவாசிகள். கிராம பரிபாலனத்தில் அரசனுக்கு அடங்கிய பல உத்தியோகஸ்தர்கள் இருக்கவேண்டும். பத்துக்கிராமம்முதல் ஆயிரம் கிராமம் வரையில் ஒரு தலைவனுடைய ஆட்சியில் இருக்கும். மேற்சொல்லிய பத்து, ஆயிரம் என்ற நாட்டுப் பிரிவுகள் சொல்லப்பட்டபோதிலும், அவைகள் எக்காலத்தில் இருந்தனவோ தெரியவில்லை.

அரசன் எந்தக் கட்டுப்பாடுமின்றித் தன் விருப்பம்போல் ஆட்சிசெய்பவனுகவே தோன்றுகிருன். தன்னுடைய ஆலோசனையாளர்களின் புத்திமதியை அரசன் தட்டிநடக்க முடியாதென்

றும், அதனுல் சட்டத்திற்குட்பட்டு ஆட்சிபுரியும் தற்கால அர சர்களைப்போலவே இந்து அரசர்களும் இருந்தார்கள் என்றும் ஆராய்ச்சியாளர்களிற் சிலர் கருதுகின்ருர்கள். இக்கருத்து சரியா னதா தவருனதா என்று ஆராய்ச்சி செய்ய இப்போது முடியாது. அரசர்கள் தங்களிஷ்டம்போல் ஆட்சிசெய்யாமல் ஆலோசனையா ளர்களின் சொற்படிதான் அரசாளவேண்டும் என்று தர்ம சாஸ் திரங்களை எழுதியவர்கள் எதிர்பார்த்தாலுங்கூட, நாளடைவில் இந்நிலை மாறிவிட்டது என்று உறுதியாகக் கூறலாம். ஏனெனில் பிற்காலத்தில் இந்தியாவுக்கு வந்த வெளிநாட்டினர் அனைவரும், இந்து அரசர்கள் தங்களிஷ்டப்படி அரசாள்பவர்களாகவே இருப்பதைக் கண்டார்கள். அதே சமயத்தில் அரசனுடைய சுயேச்சாதிகாரத்திற்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்தன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒவ்வோர் அரச னும் தர்ம சாஸ்திரங்களைப் படித்தவன் என்றும், அவற்றின் சூழ் நிலையில் வளர்ந்தவன் என்றும் நாம் எதிர்ப்பார்க்கலாம். மேலும் தர்ம சாஸ்திரங்களைக் கற்றறிந்த ஆலோசனையாளர்கள் அவனுக்கு ஆலோசனை கூற எப்போதும் தயாராக இருந்தார்கள். இருந்த போதிலும் அரசன் தர்மசாஸ்திரப்படி குடிகளின் நன்மைக்காகவே செங்கோல் ஆட்சி புரிந்தாஞ அல்லது தன்னிஷ்டம்போல் எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல் கொடுங்கோல் ஆட்சி புரிந்தாஞ என்ற கேள்விக்குச் சரியான விடை கூறவே முடியாது. செங்கோ லரசர்களும் இருந்திருப்பார்கள், கொடுங்கோலரசர்களும் இருந் திருப்பார்கள். முன்னையவர்கள் அதிகமாக இருந்தார்களா, பின்னை யவர்கள் அதிகமாக இருந்தார்களா என்று கூற முடியாது.

பேரரசுகள் சிற்சில காலங்களில் தோன்றி மறைந்தன என்று கூற ஆதாரமிருக்கிறது. "உலகத்தை வென்ற பேரரசன் அல்லது சக்கரவர்த்தி" செய்வதற்கேற்ற யாகமும், அதற்குரிய சடங்கு களும் வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றன. சரித்திர காலத்திலும் சில பேரரசுகளிருந்தன. வலிமை மிக்க அரசன் ஒருவன் மற்ற அரசர்களைப்போரில் தோல்வியுறச்செய்து அவர்களைத் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்வது உண்டு. அதுவுமன்றி அத்தகைய அரசனுடன் சண்டை செய்யாமலே அவனுக்கு அடங்கிப் போகும் அரசர்களும் உண்டு. இவ்விருவகையாலும் அடங்கிப்போகும் அரசர்கள் பேரரசனுக்குக் கப்பம் கட்டிவிட்டுத் தங்களுடைய ராஜ்யங்களைத் தாங்களே ஆளலாம். வலிமையற்ற சாம்ராஜ்யங் கள் அழிந்து போனல் அவைகளுக்கடங்கியிருந்த ராஜ்யங்கள் மறுபடியும் சுயேச்சைபெற்றுவிடும். ஆகவே அரசன் யாருக்கும்

அடங்கி நடக்கவில்லை என்று கூறமுடியாது. பழங்காலத்தில் இந்து அரசர்கள் சக்கரவர்த்திகளுக்கு அடங்கியிருந்தார்கள்; இடைக்காலத்தில் முகமதியப் பேரரசர்களுக்கடங்கிய இந்து அரசர்களிருந்தார்கள்; பிரிட்டிஷார் ஆட்சியில் ஆங்கிலச் சக்கரவர்த்திக்கடங்கிய சுதேச அரசர்களிருந்தார்கள்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் குடிமக்களுடைய நிலைமை அவரவர்களுடைய சாதியைப் பொறுத்தது. இப்போதிருப்பதைப் போல் சாதிக்கட்டுப்பாடுகள் முன் காலத்தில் அவ்வளவு அதிகமாக இருந்திருக்க முடியாது. சாதிகளின் எண்ணிக்கையும் சற்றுக் குறைவாகத்தான் இருந்திருக்கும். கலப்பு மணங்கள் அந்தக் காலத்தில் மிகுதியாக நடந்தன என்று எண்ணுவதற்கும் ஆதாரமிருக்கிறது. ஆனல் ஒவ்வொரு சாதிக்கும் உரியதொழில் இன்னதென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அந்தச்சாதியிற் பிறந்த ஒவ்வாருவரும் அதே தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்று சாதாரணமாக எதிர்பார்க்கப்பட்டது. மக்களின் முக்கியத்தொழில் விவசாயம். விவசாயிகள் கிராமங்களில் வாழ்ந்தார்கள். ராஜ்ய பரிபாலனத்தில் ஒவ்வொரு கிராமமும் ஒரு தனி அம்சமாக இருந்தது.

இந்தியக் கிராமங்களைப் பற்றிப்பலர் பல விஷயங்களைக் கூறியிருக்கிறார்கள். அவற்றில் கற்பனையே மிகுதியாக இருக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களின் வாயிலாக நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளக்கூடிய விஷயங்களை மாத்திரம் நாம் இங்குக் கூறுவோம். ஒவ்வொரு கிராமத்திலும் பல மக்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்களெல்லாம் ஒரே மூதாதையின் சந்ததியார்களாக இருப்பார்கள். கிராமத்தின் ஆட்சிக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் அரசாங்க உத்தரவுகளுக்கடங்கி அவர்களே கவனித்துக் கொள்வார்கள். கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனி நிலமுண்டு. அதை அந்தக் குடும்பத்தினரே பயிர் செய்தார்கள். அந்த நிலம் குடும்பத்தலைவனுக்குப் பிறகு அவனுடைய சந்ததியாருக்குச் சேரும். ஒருவனுக்குச் சொந்தமான நிலத்தை விற்கவும், அடைமானம் வைக்கவும் அதிகாரமுண்டு. இந்த அதிகாரம் எல்லாக்காலத்திலும் எல்லாக் குடியானவர்களுக்கும் இருந்தது என்று கூறமுடியாது. அரசன் குடிகளுக்களித்த காப்புக்காகக் குடிகள் தங்கள் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை அரசனுக்குக் கொடுத்தார்கள். பெரும்பாலும் இந்தவரியை வசூலிப்பதற்காகத்தான் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்களென்று கூறலாம்.

மேலே குறிப்பிட்ட குடியானவர்களைத் தவிர ஒவ்வொரு கிராமத்திலும் நிலங்களில் வேலை செய்வதற்கு அடிமைகள் இருந்தார்கள். அவர்களுக்குக் கூலியாகத் தானியம் கொடுக்கப்பட்டது. சில சமயங்களில் அப்படிக் கொடுக்கவேண்டிய தானியத்திற்குப் பதிலாகவோ அல்லது தானியத்துடனே சிறிதளவு நிலம் அவர்களுக்குப் பயிர்செய்யக் கொடுக்கப்பட்டது. அந்நிலத்தை அவர்கள் பயிர்செய்து அதன்மூலம் தங்கள் வாழ்க்கையை நடத்தவேண்டும். கிராமத்திலிருந்த இந்த இருவகைப்பட்ட மக்களையும் தவிர வேறொரு வகுப்பினரும் இருந்திருக்கலாம். அவர்கள் சொந்த நிலமில்லாதவர்கள். ஆனால் அடிமைகள் அல்லர். அவர்கள் மற்றவர்களுடைய நிலங்களைக் குத்தகைக்குப் பயிர் செய்வார்கள். ஆனால் இத்தகைய குடியானவர்கள் எந்தக்காலத்தில் தோன்றினார்களென்று கூறுவதற்கேற்ற சான்று ஒன்றும் இல்லை. இதுவரை விவரிக்கப்பட்ட கிராமங்களைத்தவிர அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் தனிப்பட்டமுறையில் சொந்தமான கிராமங்களும் இருந்தன என்று கூறுவதற்குச்சில அறிகுறிகளிருக்கின்றன. இத்தகைய கிராமங்களிலிருந்த நிலங்களை அடிமைகளோ, அல்லது சொந்த நிலமில்லாத குடியானவர்களோ, அல்லது இந்த இருவகையினரும் சேர்ந்தோ பயிர் செய்திருக்கவேண்டும்.

நமக்குக் கிடைத்துள்ள சிறிதளவு ஆதாரத்தைக் கொண்டு நிலவரி முறையைப்பற்றி மூன்று விதமான அபிப்பிராயங்களை அறியலாம். எல்லா நிலமும் அரசனுக்குச் சொந்தமானது என்றும் அதைப் பயிர் செய்யும் உரிமைக்காகக் குடியானவர்கள் விளைவில் ஒருபாகத்தை அரசனுக்குக் கொடுத்தார்களென்றும் சிலர் கூறுகிறார்கள். நிலம் குடியானவர்களுக்கே சொந்தமானதென்றும், வரியென்ற முறையில்தான் விளைவில் ஒருபாகத்தை அவர்கள் அரசனுக்குக் கொடுத்தார்கள் என்றும் வேறு சிலர் கூறுகிறார்கள். இன்னும் சிலர் இந்த விஷயத்தில் இன்னொரு வகையான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கிறார்கள். தர்ம சாஸ்திரங்கள் எழுதப்பட்ட அந்தக்காலத்தில் நிலம் சட்டப்படி குடியானவனுக்குத்தான் சொந்தம் என்ற நிலை ஏற்படவில்லை. ஓர் அரசனுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள நிலத்தை ஒரு குடியானவன் பயிர் செய்ய வேண்டுமானால், அதற்குப் பதிலாக அவன் அரசனுக்கு விளைவில் ஒரு பகுதியைக் கொடுப்பதோடு அரசனிடத்தில் விசுவாசமாக இருப்பதற்கும் கடமைப்பட்டவன். அரசனுக்குச் செலுத்தவேண்டிய பகுதியைச் செலுத்தத் தவறினால், குடியானவன் அரசனுக்குச் செய்யவேண்டிய கடமையில் தவறிவிட்ட

தோடு இராஜத்துரோகக் குற்றத்திற்கும் ஆளாவான். இது மூன்ருவது அபிப்பிராயம். எந்தக்கருத்துச் சரியானது என்று ஆராய இது இடமன்று

இதைவிட முக்கியமான கேள்வி குடியானவர்கள் தங்கள் விளைவில் எத்தனையில் ஒரு பங்கை அரசனுக்குச் செலுத்தினுர்கள் என்பதாகும். இவ்விஷயத்தைப்பற்றித் தர்ம சாஸ்திரங்களிற் காணப்படும் குறிப்புக்களைக் கொண்டு சட்டம் எவ்வாறு நாளடைவில் மாறுதலடைகிறது என்பதை நாம் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். சாதாரணமாக விளைவில் ஆறில் ஒரு பாகத்தையோ அல்லது அதைவிடக் குறைவாகவோ அரசனுக்குக் கொடுக்க வேண்டுமென்று அறநூல்கள் கூறுகின்றன. அவசியம் ஏற்பட்ட போது "நான்கில் ஒரு பங்கை" அரசன் எடுத்துக் கொள்ளலாம் என்று மனுதர்ம சாஸ்திரம் கூறுகிறது. பிற்காலத்திய நூல் ஒன்றில் "ஆறிலொரு பாகம் என்று கூறப்படும் வரியை" அரசனுக்குக் குடிகள் செலுத்த வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதிலிருந்து "ஆறிலொரு பாகம்" என்பது நிலவரியின் பெயராக மாறிவிட்டதென்றும், அது உண்மையில் ஆறிலொரு பாகமாகவோ அதற்கு அதிகமாகவோ இருக்கலாம் என்றும் அந்நூலாசிரியர் சொல்லுகிருர் என்பது விளங்குகிறது. மனுதர்ம சாஸ்திரத்திற்கு விளக்கம் எழுதிய ஓராசிரியர் அவசிய மேற்பட்டபோது அரசன் விளைவில் நான்கிலொரு பாகத்தையோ "அல்லது மூன்றிலொரு பாகத்தையோ" எடுத்துக்கொள்ளலாம் என்று எழுதியிருக்கிருர். இன்னும் பிற்காலத்தில் எழுதப்பட்ட மற்ருெரு விளக்க நூலில் ஆறில் ஒருபங்கு என்பது விளைவில் நான்கில் ஒருபங்கையோ அல்லது மூன்றில் ஒருபங்கையோ குறிக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து இந்த விளக்க ஆசிரியர்கள் காலத்தில் நிலவரி ஆறில் ஒருபங்காக வசூலிக்கப்படாமல் முதலில் நான்கில் ஒருபங்காகவும், பின்னர் மூன்றில் ஒருபங்காகவும் வசூலிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. அதாவது அவசிய மேற்பட்ட காலத்தில் வசூலிக்கவேண்டிய உயர்ந்த வரியை அரசர்கள் சாதாரண காலங்களிலும் வசூலித்து வந்தார்கள் என்று தெரிகிறது. இதனுல் நிலவரி ஆரம்பத்திலிருந்ததைவிட நாளடைவில் இரண்டு பங்காக உயர்ந்துவிட்டது. தென்னிந்தியாவில் கிடைத்த சில ஆதாரங்களிலிருந்து அரசர்கள் வழக்கமாக வாங்க வேண்டிய ஆறில் ஒரு பங்கு வரியைவிட மிக அதிகமான வரியை வசூலித்தார்களென்பது தெரிகிறது.

அரசனுக்குச் சேரவேண்டிய நிலவரி முழுவதும் அரசனுடைய கஜானுவுக்குப்போய்ச் சேர்ந்தது என்று சொல்லமுடியாது. சில சமயங்களில் அரசாங்க உத்தியோகஸ்தன் ஒருவனுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளத்துக்குப் பதிலாகச் சில கிராமங்களின் வரியை அவனே வசூல் செய்து உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் அரசன் ஏற்பாடு செய்வது உண்டு. இது சாதாரணமாகத் தாற்காலிக ஏற்பாடாக இருக்கும். சில கிராமங்களில் வசூலாக வேண்டிய வரியைக் கோவிலுக்காகவோ, வேறு தர்ம காரியங்களுக்காகவோ, சேரவேண்டுமென்று அரசன் ஒதுக்கி வைத்து விடலாம். இது சாதாரணமாக நிரந்தரமான ஏற்பாடாக இருக்கும். அப்படி ஒதுக்கப்பட்டவை தாற்காலிக ஏற்பாடாகவோ நிரந்தர ஏற்பாடாகவோ இருக்கும். இவ்வழக்கம் ஆங்கில அரசாட்சிக் காலம்வரை இருந்தது. இம்மாதிரி ஏற்பாடுகளால் அரசனுக்குச் சில சமயங்களில் கஷ்டம் ஏற்படுவது உண்டு. அதிகமான பணம் தேவையாக இருக்கும் சமயத்தில், கோவிலுக்கோ வேறு தர்ம காரியங்களுக்கோ எழுதி வைத்துவிட்ட வரித்தொகை அரசனுக்குக் கிடைக்காமற்போகும். இந்த முறைக்குப் பதிலாக வசூலான வரியில் ஒரு குறிப்பிட்ட பகுதியைக் கோயில் முதலிய தர்ம ஸ்தாபனங்களுக்குச் செலவிடுவதென்று வைத்துக்கொண்டால் பணக்கஷ்டம் ஏற்பட்ட சமயத்தில் இத்தகைய செலவுகளைக் குறைத்துக் கொள்ளலாம்; அல்லது செய்யாமலே விட்டுவிடலாம். இதனுல் ஏற்பட்ட பணக்கஷ்டம் பல ராஜ்யங்களின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக இருந்தது என்றும் நமக்குத்தெரிகிறது.

இவ்வாறு பல காரியங்களுக்காக நிலவரி ஒதுக்கி வைக்கப்பட்டபோதிலும், இந்து அரசர்களுடைய வருமானத்தில் பெரும் பகுதி நிலவரி மூலமாகத்தான் கிடைத்தது என்று கூறலாம். ஆனுல் ராஜ்யத்திலிருந்த எல்லாமக்களும் அரசன் அவர்களுக்களித்த காப்புக்குப் பதிலாக, அவனுக்கு வரிசெலுத்தவேண்டியிருந்தது. இதனுல் வியாபாரத்தின் மீதும், கைத்தொழில்களின் மீதும் பல வரிகள் விதிக்கப்பட்டன. தற்காலப் பொருளாதார அறிவைக் கொண்டு பார்க்கும்போது இந்த வரிகளிற் பெரும்பாலானவை வியாபாரத்திற்கும் கைத்தொழில்களுக்கும் தீமை விளைவிக்கக் கூடியவை என்பது விளங்கும். இந்த முறையும் இந்துக்காலத்தில் மாத்திரமின்றி இஸ்லாமியர் ஆட்சிக்காலத்திலும் வழக்கிலிருந்தது. வரிவசூல் முறையைச் சீர்திருத்தவேண்டுமென்று சில சமயங்களில் அறிஞர்கள் முயற்சிசெய்தார்களெனினும் அம்முயற்சி பயனளிக்கவில்லை. இந்த வரிவசூல் முறையின் சின்னங்கள் இந்தக் காலத்திலும் காணப்படுகின்றன.

இராஜ்ய பரிபாலனத்திற்காகப் பலதரப்பட்ட உத்தியோகஸ்-தர்கள் இருந்தார்கள். வரி வசூலிலும் மற்ற அரசாங்க வேலைகளிலும் இவர்கள் அரசனுக்கு உதவி செய்தார்கள். அரசாட்சி தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட விதிகளின்படி நடக்க வேண்டும். அரசியல் முறை மிக முக்கியமான விஷயமாதலால் இந்த முறையை விளக்குவதற்காகவே சில நூல்கள் எழுதப்பட்டன. இத்தகைய நூல்களில் தலை சிறந்தது கௌடில்யன் என்ற ஓர் அறிஞன் எழுதிய "அர்த்த சாஸ்த்ரம்" என்ற நூல் கி.மு. 300-ஆம் ஆண்டில் தற்காலப் பாட்னுவில் ஆட்சி செய்துவந்த சந்திர குப்த மௌரியன் என்னும் அரசனுக்கு மந்திரியாக இருந்த சாணக்கியன் என்பவன்தான் கௌடில்யன் என்று பொதுவாகக் கூறப்படுகிறது. இதைச் சில ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் சில ஆராய்ச்சியாளர்கள் இந்த நூல் சந்திரகுப்தமௌரியன் காலத்துக்குக் குறைந்தது ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்னர்தான் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். வேறு சிலர் இந்நூல் ஒருவரால் எழுதப்பட்டது அன்று என்றும் பல வேறுகாலங்களில் பலவேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்த நூல் என்றும் கருதுகிறார்கள். அதனால், அர்த்த சாஸ்திரத்தின் காலத்தை நிர்ணயிக்க முடியாது என்று அவர்கள் வாதிக்கிறார்கள். இந்நூல் எழுதப்பட்ட காலத்தில் வழக்கிலிருந்த ஆட்சிமுறையே இதில் விளக்கப்பட்டிருக்கிறது என்று சிலர் உறுதியாக நம்புகிறார்கள். வேறு சிலர் இது அரசியல் முறையைப்பற்றி யாரோ ஒருவர் தம் கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக எழுதிய நூல் என்றும், நாளடைவில் இந்த நூலில் காணப்படும் கோட்பாடுகளை அரசர்களும் அவர்களுக்கு உதவி செய்த உத்தியோகஸ்தர்களும் பின்பற்ற ஆரம்பித்தார்களென்றும் கருதுகிறார்கள். முன்னைய அபிப்பிராயம் சரியானதாக இருக்குமானுல் அந்தக்காலத்து ஆட்சிமுறை விரும்பத்தகாததாக இருந்தது என்று கூசாமற் கூறலாம். ஏனெனில் ஆள்வோன் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்கு எந்த முறையையும் கையாளலாம் என்பது அர்த்த சாஸ்திரத்தின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது. ஆனுல், இந்நூலின் காலத்தையும் ஆசிரியரையும் நிர்ணயிக்க முடியாமலிருக்கும் இந்தச் சமயத்தில் இந்த நூலிற் கூறப்பட்டிருக்கும் விதிகளின்படியே ஒருநாடு ஆளப்பட்டு வந்தது என்று துணிவது நியாயமாகாது. இந்த நூல் எழுதப்பட்ட காலத்திலும் சூழ்நிலையிலும் உண்மையும் நேர்மையும் அவ்வளவாகப் போற்றப்படவில்லை என்று கூறுவதோடு

அமைவது நலம். அர்த்த சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் சில விதிகளைப் பார்த்தால் அரசனும் அவனுடைய உத்தியோகஸ்தர்களும் குடிகளை எவ்வளவுதூரம் துன்புறுத்த முடியும் என்பது விளங்கும். இத்தகைய கொடுமையான முறைகளைக் கையாள்வது அவசியம், நியாயமுந்தான், என்று அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் இந்து அரசர்களெல்லாம் இவ்வாறுதான் ஆட்சி செய்தார்களென்று நம்மால் நம்ப முடியவில்லை. எனினும் ஆட்சிமுறை எவ்வளவு சிக்கலான விஷயம் என்பதையும், வரி எவ்வாறு வசூலிக்கப்பட்டது என்பதையும் விளக்கிக் காட்டுவதற்கு இந்த நூல் உதவியாக இருக்கும்.

இதுவரை பொது வாழ்க்கையைப்பற்றிப் பார்த்தோம். இப்போது தனி மனிதனுடைய வாழ்க்கை எத்தகையது என்பதைப் பற்றிப் பார்ப்போம். ஒருவன் ஒருத்தியைத்தான் மணம்செய்து கொள்ள வேண்டுமென்று அறநூல்கள் கூறுகின்றன. ஆனால் ஒருவன் இறந்தபிறகு இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு ஆண் சந்ததி அவசியம் என்று அறநூல்களே கூறுவதால், ஆண்சந்ததி இல்லாதவர்கள் புத்திரப்பேற்றுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொள்ளலாம். இவ்விஷயத்தில் சாதாரண மக்களைவிட அரசர்களுக்கு அதிகச் சலுகை காண்பிக்கப்பட்டது. இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கு ஆண்குழந்தை அவசியம் என்ற கொள்கைதான் ஸ்வீகாரத்திற்கும் காரணமாயிற்று. ஆண் குழந்தையில்லாதவர்கள் வேறு ஒருவருடைய குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். இந்த முறை சிறிது சிறிதாக வளர்ந்து, ஒரு குடும்பத்தில் சொந்தமகனுக்கு என்னென்ன உரிமைகளும் தகுதிகளும் உண்டோ, அதே உரிமைகளும் தகுதிகளும் ஸ்வீகார புத்திரனுக்கும் உண்டு என்ற நிலை ஏற்பட்டது. ஆண்சந்ததி அவசியம் என்ற கொள்கைதான் குழந்தை மணத்திற்கும் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்திலிருந்ததைப்போலக் குழந்தைப் பருவத்திலேயே மணஞ்செய்துவிடும் பழக்கம, முற்காலத்தில் அவ்வளவு அதிகமாக நடைமுறையில் இருந்திருக்க முடியாது என்று கூற ஆதாரமிருக்கிறது.

சொத்துரிமையைப் பொறுத்த சட்டங்களும், கொஞ்சங் கொஞ்சமாகத்தான் வளர்ச்சியடைந்தன. குடும்பத் தலைவனுக்குக் குடும்பச் சொத்திலிருந்த உரிமை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்தது. பிறந்த உடனே குடும்பச் சொத்தில் ஆண்குழந்தைக்கு உரிமை வந்துவிடுகிறது. ஆகவே தந்தை குடும்பச் சொத்தைத் தன் மக்களுக்காகக் காப்பாற்றிவைக்கும் ஒரு பொறுப்பாளியாகி

விடுகிறான். சொத்து அவனுக்குத்தான் சொந்தம் என்ற நிலை மாறி விடுகிறது. அவன் இறந்தபிறகு அவனுடைய குமாரர்கள் குடும்பச் சொத்தைப் பங்கு போட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால் தந்தை இறந்தவுடனே ஆண்மக்கள் சொத்தைப் பங்குபோட்டுக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. பல தலைமுறைகள் வரையில் அவர்கள் கூட்டுக்குடும்பமாகவே இருக்கலாம். அதன்பின் ஆண் சந்ததிகள் தங்கள் உரிமைப்படி அவரவர்களுக்குச் சேரவேண்டிய பாகத்தை எடுத்துக்கொள்ளலாம். சட்டப்படி பெண்குழந்தைகளுக்குக் குடும்பத்தில் எந்த உரிமையும் கிடையாது. ஆனால் யாராவது ஒரு பெண் ஏதோ ஒருவழியில் பொருள் சேர்த்து வைத்து விட்டு இறந்துபோனால், அந்தச் சொத்து யாருக்குச் சேரவேண்டும் என்பதைப்பற்றிப் பல சிக்கலான விதிகள் இருக்கின்றன. சட்டப்படி சமூகத்தில் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலை ஆண்கள் நிலையைவிடத் தாழ்ந்ததாகவே இருந்துவந்திருக்கிறது. ஆண் குழந்தைகளுக்குத் தாயாகக் கூடியவள் என்ற முறையிலும், மதச் சடங்குகளைச் செய்யும்போது குடும்பத்தலைவனுக்கு இன்றியமையாத துணைவி என்ற முறையிலுந்தான் அற நூல்கள் பெண்களுக்கு மதிப்புத் தருகின்றன.

இவ்விடத்தில் " சதி ", "பர்தா" என்ற இரண்டு பழக்கங்களைப்பற்றிக் கூறுவது பொருத்தமாக இருக்கும். கணவன் இறந்ததும் அவனுடைய மனைவி அவனோடு உடன் கட்டை ஏறுவதுதான் " சதி " என்பது. இந்தப் பழக்கம் பல நாடுகளில் ஆதிகாலத்தில் இருந்தது என்பதற்கு ஆதாரமிருக்கிறது. ஆனால் இந்து சமுதாயத்தில்தான் இது நவீன காலம்வரையில் இருந்தது. இந்தப் பழக்கம் எவ்வாறு இந்து சமுதாயத்தில் நுழைந்தது என்பது தெரியாது. ஆனால் சில தர்ம சாஸ்திரங்களில் இது இடம் பெற்றிருக்கிறது. மேலும், கி. மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த கிரேக்கர்கள் இந்தப் பழக்கம் இந்துக்களிடம் இருப்பதைப்பார்த்து ஆச்சரியப் பட்டார்கள். சில முகமதிய அரசர்கள் இந்தப் பழக்கத்தை நிறுத்துவதற்கு முயன்றார்கள் என்றாலும், முகமதியர் ஆட்சிக்காலம் முழுவதும் இந்தப் பழக்கம் இருந்தே வந்தது. கி. பி. 1830-ஆம் ஆண்டிலிருந்துதான் இந்தப் பழக்கம் சட்டப்படி குற்றமாக்கப்பட்டுக் கைவிடப்பட்டது. குடும்ப கௌரவத்துக்காகவோ, அல்லது புரோகிதர்கள் அபிப்பிராயப்படியோ ஒரு பெண் தன் கணவனுடன் உடன் கட்டை ஏற்றப்பட்டால் அது மன்னிக்க முடியாத, இரக்கமற்ற, கொலையாகும். ஆனால், தன் விருப்பப்படியே ஒரு

பெண் உடன்கட்டை ஏறினல், அது கணவனுடைய வாழ்விலும், சாவிலும் உண்மையான துணைவியாக இருக்கவேண்டுமென்று விரும்பும் ஒரு லட்சியப் பெண்மணியின் ஒப்பற்றக் காதலைக்காட்டும். பதினேழாம் நூற்றுண்டில் இந்தியாவுக்கு வந்த வில்லியம் "மெத் வோல்ட்" என்ற ஆங்கில வியாபாரி, ஒருபெண் உடன்-கட்டை ஏறினதைப் பார்த்துவிட்டு, "இத்தகைய பெண்கள் தங்கள் கணவன்மார்கள்மீது வைத்திருக்கும் காதலைப் பார்த்துப் போற்றுவதா? அல்லது இரக்கப்படுவதா? என்று தீர்மானிக்க முடியவில்லை" என்று கூறினர். இதேமாதிரிதான் மற்றைய ஐரோப்பியர்களும் நினைத்திருக்கவேண்டும்.

உயர் குடும்பப் பெண்கள் மற்ற ஆடவர்கள் தங்களைப் பார்க்காமலிருப்பதற்காகத் தங்களை மறைத்துக்கொள்ளும் பழக்கந்தான் "பர்தா" என்பது. இந்துக் காலத்தில் இந்தப் பழக்கம் இருந்தது என்று கூறுவதற்கு எந்த விதமான நூலாதாரமும் கிடையாது. முகமதியர்கள் காலத்தில்தான் இந்துப் பழக்கம் இந்தியாவுக்குள் நுழைந்தது என்றும், போரில் வென்ற முகமதியர்களிடமிருந்து இந்தப் பழக்கத்தைத் தோற்றுப்போன இந்துக்கள் கற்றுக் கொண்டார்களென்றும் பொதுவாகக் கூறப்படுகிறது. எனினும் இந்துக் காலத்தில் கூட அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் தங்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட தனிக் கட்டிடங்களில்—அதாவது அரசனது அந்தப்புரத்தில்–வாழ்ந்து வந்தார்கள் என்றும், அந்தக் கட்டிடங்களுக்குள் வேற்று மனிதர் யாரும் நுழைய முடியாது என்றும் நம்புவதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன. ஆகவே பர்தா முறை முகமதியர் காலத்தில்தான் இந்தியாவுக்கு வந்தது என்று கூறுவதை விட முகமதியர்கள் வருகை பிற்காலத்தில் வட இந்தியாவில் இப்பழக்கம் அதிகமாகப் பரவுவதற்குக் காரணமாயிற்று என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

சட்டப்படி இந்து சமூகத்தில் அடிமைகள் இருக்கலாம். சண்டையிற் பிடிபட்டவர்களும், அவர்களுடைய சந்ததியார்களும் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். குற்றத்திற்குத் தண்டனையாகவும் சிலருடைய உரிமை பறிக்கப்பட்டு அவர்கள் அடிமைகளாக மாறினர்கள். வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாதவர்கள் கடன் கொடுத்தவர்களுக்கு அடிமைகளானர்கள். மேலும் பஞ்ச காலத்தில் சோறு கிடைக்காதவர்கள் தங்களைக் காப்பாற்றக்கூடிய மற்றவர்களுக்கு அடிமைகளாகி வாழலாம் என்று அறநூல்கள் கூறுகின்றன. இந்துக்காலத்து நூல்கள்

பலவற்றிலிருந்து அக்காலத்தில் ஏராளமான அடிமைகள் வீட்டு வேலைக்காரர்களாக இருந்தார்களென்று தெரிகிறது. ஆனால் மற்ற நாடுகளில் கைத்தொழில் நிலையங்களில் வேலை செய்வதற்கு அடிமைகளை உபயோகிக்கும் பழக்கமிருந்தது. அந்தப்பழக்கம் இந்து சமுதாயத்தில் இருந்தது என்று கூற முடியாது. கிராமங்களில் குடியானவர்களுக்கு உதவி செய்வதற்காக அடிமைகள் இருந்தார்களென்று காட்டுவதற்குச் சில அறிகுறிகள் இருக்கின்றன. ஆனால் இந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அந்த மக்கள் உண்மையிலேயே அடிமைகள் தாம் என்று உறுதியாகக் கூற முடியாது.

இந்து மதக் கோட்பாடுகள் இன்னின்னவை என்று வரையறுத்துக் கூறப்படவில்லை. ஒருவன் பிராமணனுக்கும் பசுவுக்கும்* உரிய மரியாதையைக் கொடுப்பவனாகவும், மற்ற மக்களுக்குத் துன்பம் செய்யாமலிருப்பவனாகவும் இருந்தால் அவன் இந்து தான். மற்றப்படி அவன் எத்தகைய நம்பிக்கைகளையும் கொள்கைகளையும் உடையவனாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை. சாதாரணமாக மக்கள் பல தெய்வங்களை வணங்கி வந்தார்கள். இத்தகைய பல தெய்வங்களுள் ஒவ்வொருவனும் தனக்கிஷ்டமான தெய்வம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதனிடத்தில் தனது தனிப்பட்ட பக்தியைச் செலுத்தலாம். எல்லாத் தெய்வங்களும் நல்ல தெய்வங்கள் என்று சொல்ல முடியாது. சில துஷ்ட தேவதைகள் கோபம் வந்தால் தீமை செய்துவிடும். ஆகவே லாபத்தைக் கருதித் தெய்வங்களுக்கு வேள்விகள் செய்வதோடு, சில தெய்வங்களின் கோபத்தைத் தணிப்பதற்கும் வேள்விகள் செய்யவேண்டியது அவசியமாயிற்று. சிவனும், விஷ்ணுவும் மிகப் பெரிய தெய்வங்கள். மற்ற தெய்வங்களெல்லாம் இவ்விரு தெய்வங்

---

* பசுவுக்கு இந்துக்கள் கொடுக்கும் மதிப்பு நாளடைவில் சிறிது சிறிதாக வளர்ந்ததுதான். ஏனெனில் இந்துமதத்தின் ஆரம்ப காலத்தில் இந்துக்கள் பசுவின் இறைச்சியை உண்டு வந்தார்கள். அதன்பிறகு கொஞ்சகாலம் கழித்துப் பசுவின் இறைச்சி முக்கியமான விருந்தினர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டது. அவர்களும் அதைச் சாப்பிட மறுக்கவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் பசுவுக்குத் துன்பம் கொடுப்பதும் அதைக் கொல்வதும் கொடிய பாவம் என்ற கொள்கை கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில்தான் நிலைபெற்றிருக்கவேண்டும். நாளடைவில் எருதைக் கொல்வதும் அதே மாதிரி பெரும்பாவம் என்ற கொள்கையும் ஏற்பட்டது.

களுக்குக் கீழ்பட்டவைதாம். படைப்புக் கடவுளான பிரமன், சிவன், விஷ்ணு ஆகிய தெய்வங்களுக்குச் சமானமானவன், என்று நூல்களில் கூறப்பட்டிருந்தாலும், பிரமனை வணங்குபவர் கள் மிகக் குறைவு. விஷ்ணுவின் அவதாரங்களில் இராமனும், கிருஷ்ணனுந்தான் மக்கள் மனத்தை அதிகமாகக் கவர்ந்தவர்கள்.

மதச் சடங்குகளைச் செய்வதற்கு பிராமணனுடைய உதவி இன்றியமையாதது. வேள்விகளுக்கும் மற்ற வழிபாடுகளுக்கும் உரிய சடங்குகளைச் சரியானபடி செய்யாவிட்டால், கடவுள் அநுக்கிரகம் கிடைக்காது. பிராமணர்கள்தாம் இந்தச் சடங்கு களைச் சரியானபடி செய்யக் கூடியவர்கள். மேலும், பிராமணர் கள் தங்கள் மந்திர பலத்தால் எந்தக் கடவுளையும் தங்களிஷ்டப் படி நடக்கச் செய்யும் வல்லமை வாய்ந்தவர்கள் என்று பொது மக்கள் நம்பினார்கள்.

பிராமணன் ஒவ்வொருவனும் ஒரு குறிப்பிட்ட காலம் தன்-னடக்கத்துடன் வாழவேண்டுமென்று தர்ம சாஸ்திரங்கள் கூறு கின்றன. இத்தன்னடக்க வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் நடைமுறையில் உலக சுகங்களை வெறுத்து, உடலை வருத்தி, சந்நி யாசிகளாக வாழ ஆரம்பித்தார்கள். அலெக்ஸாண்டருடன் வந்த கிரேக்கர்கள் இத்தகைய சந்நியாசிகளைப் பார்த்ததாகக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. உடலை வருத்தித் தவம் செய் வதில் ஈடுபட்ட ஒருவன் தன்னுடைய மந்திர பலத்தால் தெய்வங் களை விட உயர்ந்த ஆற்றல் பெற்றவனாக ஆகமுடியும் என்ற நம் பிக்கை வளர்ந்தது. சிவனும் விஷ்ணுவும் கூடச் சில ரிஷிகளின் தபோ பலத்திற்கு அஞ்சி அவர்கள் சொன்னபடி ஆடியதாகக் கதைகள் வழங்குகின்றன. அப்படி நடக்காவிட்டால் தங்களையே அந்த ரிஷிகள் அழித்து விடுவார்கள் என்று அத்தெய்வங்கள் அஞ்சினதாகத் தெரிகிறது.

கர்மத்தால் மறுபிறவி ஏற்படுகிறது என்ற கொள்கையைப் பொதுவாக அனைவரும் நம்பினார்கள். மனிதனுடைய கர்மத்திற் கேற்பப் பிறவி ஏற்படுகிறது. அவனுடைய புண்ணிய பாவங் களுக்கேற்ப அவன் சுக துக்கங்களை அநுபவிக்கிறான்; இதைத் தடுக்க யாராலும் முடியாது. இவ்விஷயத்தில் கடவுளுக்கென்ன சம்பந்தம் இருக்கமுடியும்? இவ்வாறு நினைத்த மக்கள் மனத்தில் கடவுள் சக்தியில் அவர்களுக்கிருந்த நம்பிக்கை ஓரளவு குறைந் தால் அதில் ஆச்சரிய மொன்றுமில்லை.

பொதுவாகப் பேசுமிடத்து இந்துமதம் பல கடவுட் கொள்கையையுடைய மதந்தான் என்று ஒரேயடியாய்க் கூறிவிட முடியாது. இந்துமதம் இதுதான் என்றும் தர்க்க ரீதியாக வரையறுத்துக் கூறமுடியாது. அதைப்பற்றிப் பொதுமக்களுக்குக் கவலையுமில்லை. ஆனால் பல கடவுட் கொள்கையால் மதவேட்கையைத் தணிக்க முடியவில்லை என்றும், அதனால் அதைத் தாண்டிச் சென்று திருப்திகரமான ஒரு முடிவைக் காண்பதற்காகப் பலர் பாடுபட்டார்கள் என்றும் கூறலாம். எனினும் இத் தெய்வங்களிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கையே கிடையாது என்றும் கூற முடியாது. தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் இத்தெய்வங்களுக்குப் பதிலாக அவற்றிற்கு மேற்பட்ட வேறு தெய்வத்தையோ சக்தியையோ தேடிச் சென்று கொண்டிருந்தார்கள் என்று கூறலாம்.

இதுவரையில் பொதுமக்களால் அனுசரிக்கப்பட்ட இந்து மதத்தைப்பற்றிக் கூறினோம். இனி, அறிஞர்கள் இவ்விஷயத்தில் என்ன கொள்கைகளையுடையவர்களா யிருந்தார்களென்று பார்ப்போம். இவர்கட்குப் பல கடவுட்கொள்கை திருப்தியளிக்கவில்லை. இக்கொள்கையைத் தாண்டிச்சென்று இவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாகக் கடவுளைப் பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் தோன்றின. இத்துறையில் சிந்தனையாளர்கள் செய்த முயற்சி பல தத்துவ நூல்களாகப் பரிணமித்தது. இப்போது மேனாட்டுத் தத்துவ சாஸ்திரிகள் கண்டு பிடித்துள்ள கருத்துக்களெல்லாம் அப்போது தோன்றிய தத்துவ நூல்களிலேயே காணக் கிடக்கின்றன. இதைப் பார்க்கும் நமக்கு அவர்கள் அசாதாரணமான அறிவு படைத்தவர்கள் என்று விளங்குகிறது.

இந்த உயர்ந்த தத்துவங்களால் பொது மக்களுடைய கொள்கைகள் மாற்றப்பட்டன என்று கருதுவது தப்பு. மத விஷயத்தில் திருப்தியை நாடிய அறிஞர்கள் தத்துவ விசாரணையால் அதையடைய முயன்றார்கள். சாதாரணமக்கள் தங்களுக்கிஷ்டமான கடவுளுக்குத் தங்களுக்கிஷ்டமான முறையில் வழிபாடு செய்து அந்தத் திருப்தியை யடைய முயன்றார்கள். இந்து மதத்தில் எந்த விதமான வழிபாட்டிற்கும் இடமிருக்கிறது. உள்ளத் தூய்மையையும் பக்தியையுமே அடிப்படையாகக் கொண்ட வழிபாடும், உயிர்ப் பலியிட்டுப் பூசைபோடும் வெறுக்கத்தக்க வழி

பாடும் இந்து மதத்தில் இடம் பெற்றிருக்கின்றன. மிகப்பெரும் பான்மையான மக்கள் இவ்விரண்டு வகையிலும் சேராமல் பரம் பரையாக வந்த வழக்கமான வழிபாட்டில் ஈடுபடுபவர்கள். சாஸ்திரங்களிற் சொல்லியுள்ள மதச் சடங்குகளில் அவர்களுக்கு முழு நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவற்றை யெல்லாம் அவர்கள் கொஞ்சமும் தவறாமல் செய்வார்கள்.

இவ்வாறு இந்து மதத்தில் எத்தகைய வழிபாட்டிற்கும் இடமிருக்கிறது. இந்தியாவின் பூர்விகக் குடிகளுடைய மதக் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் இந்து மதத்தில் சேர்த்துக்கொண்டதுதான் இதற்குக் காரணம் என்று அறிஞர் கள் கூறுகின்றார்கள். இந்து மதம் என்ற ஒரே அமைப்பில் இந்தியாவில் தோன்றிய எல்லா மதக்கொள்கைகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்ற கருத்துத் தப்பாக இருக்கமுடியாது என்று பிற்கால நிகழ்ச்சிகளைக் கொண்டு சொல்லலாம். இந்த இருபதாம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்குப்படி காடுகளில் பல லட்சக்கணக்கான மக்கள் வாழ் கிறார்கள். அவர்கள் மரம், கல் முதலிய இயற்கைப்பொருள் களில் தெய்வங்கள் வசிக்கின்றன என்று நம்புபவர்கள். ஆனால் அவர்களையும் இந்து மதத்தில் சேர்த்துக்கொள்வது மிக எளிது. அவர்கள் காட்டைக்கடந்து நாட்டுக்கு வந்து மற்ற மக்களோடு பழக ஆரம்பித்ததும் ஒரு பிராமணன் அவர்களிடம் சென்று, அவர்கள் கல்லிலும் மரத்திலும் கண்டு வணங்கும் தெய்வம் சிவபெருமானின் ஓர் அம்சம், அல்லது மகாவிஷ்ணுவின் ஒரு தோற்றம் என்று சொன்னால் போதும். உடனே அவர்கள் இந்துக்களாக மாறி விடுவார்கள். அவர்களுடைய வழிபாட்டைச் சரியானபடி நடத்துவதற்குப் பிராமணன் அவர்களுடைய புரோகிதனாக ஏற்றுக்கொள்ளப்படுவான். முன் காலத்திலும் ஏன் இவ்வாறு நடந்திருக்கக்கூடாது? ஆனால் இந்து மதத்தில் காணப்படும் எல்லாவித வழிபாடுகளும் இவ்வாறு தான் அதில் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்று கூறுவதற்குப் போதுமான சான்று இன்னும் கிடைக்கவில்லை.

அதிகாரம் 4

இந்து ஆதிக்கத்தின் முற்பகுதி

பொது விஷயங்கள்

அரசியல் துறையில் இந்து ஆதிக்கம் ஓங்கியிருந்த நீண்ட காலத்தில் இந்தியாவில் பெரியவையும் சிறியவையுமான பல ராஜ்யங்களிருந்தன. இவற்றுள் சில மிக முக்கியமானவை; சில அவ்வளவு முக்கியமானவை அல்ல. இந்த ராஜ்யங்களுள் நாட்டின் செழிப்பான பகுதிகளெல்லாம் அடங்கியிருந்தன. காடுகளிலும், மலைகளிலும், பாலைவனங்களிலும் பிற்போக்கான மக்கள் வசித்து வந்தார்கள். இந்த ராஜ்யங்கள் ஒன்ருேடொன்றும், அவற்றின் எல்லைகளிலிருந்த பிற்போக்கான மக்களோடும் அடிக்கடி போர் செய்து கொண்டே இருந்தன. ஏதாவதொரு பேரரசு தோன்றிய காலத்தில் மட்டும் நாட்டில் அமைதி நிலவும். அந்தப் பேரரசு அழிந்ததும் மறுபடியும் சண்டைகள் ஏற்படும். இந்துக் காலத்தின் அரசியல் சரித்திரம் முழுவதையும் சரியானபடி எழுதுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை. இந்தக் காலத்தில் ஏராளமான நூல்கள் எழுதப்பட்டன என்பது உண்மைதான். இந்த நூல்கள் பலவகைப்பட்டவை. சட்டம், மதம், தத்துவம் முதலிய விஷயங்களைப்பற்றிப் பல நூல்கள் இருந்தன என்று நாம் முன்னரே சொன்ஞேம். பல செய்யுள் நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன. அவற்றுள் நாடக நூல்களும், இதிகாசங்களும், இசைப்பாட்டுக்களும் இருக்கின்றன. கலை, விஞ்ஞானம், இலக்கணம், கணிதம், சிற்றின்பம் முதலிய பலவகைப்பட்ட விஷயங்களைப்பற்றிப் பல நூல்கள் இந்தக்காலத்தில் தோன்றின. இந்துக்காலத்தின் பிற்பகுதியில் காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்ட சில கதைகளும் எழுதப்பட்டன. இக்கதைகளில் சில சரித்திரச் செய்திகளும் இருக்கின்றன. எனினும் சரித்திரம் என்று கூறத்தக்க நூல் ஒன்று கூட இந்தக்காலத்தில் எழுதப்படவில்லை. * மேற்கூறிய நூல்களில் சரித்திர சம்பந்தமான ஒரு சில செய்திகள் இருக்கின்றன. எனினும் ஆழ்ந்த அறிவையும், கற்பனு சக்தியையும், சிந்தனைத்திறனையும் காட்டும்

---

* கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டில் எழுதப்பட்ட ராஜதரங்கிணி என்ற ஒரே ஒரு நூல் மாத்திரம் சரித்திரம் என்று சொல்லக்கூடிய தகுதியுடையது. ஆனுல் இந்துக்காலத்தின் முற்பகுதியைப்பற்றி அதிற் காணப்படும்செய்திகள் சிறிதும் நம்பத்தகாதவை.

ஏராளமான நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டிருந்தும், யூதர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள் ஆகியவர்கள் எழுதியுள்ள சரித்திர நூல்களைப்போல் ஒரு நூல் கூட இந்து சரித்திரத்திற்குக் கிடைக்காமலிருப்பது மிக ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு **லிவியோ** ஒரு **ஹெரடோட்டஸோ** இந்தியாவில் அந்தக்காலத்தில் இருந்திருக்கக்கூடாதா! இந்துக் காலத்தைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள சரித்திரச் செய்திகளிற் பெரும்பான்மையானவை வெளி நாட்டு ஆசிரியர்களால் குறித்துவைக்கப்பட்டவைதாம். இவற்றுள் சில செய்திகள் கிரேக்க நூல்களின் வாயிலாகவும், சில சீன அல்லது திபெத்திய நூல்களின் வாயிலாகவும் நமக்குக் கிடைத்துள்ளன. இத்துடன் சமீப காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களும், சாசனங்களும், இந்துக்காலச் சரித்திரத்தை எழுதுவதற்கு நமக்கு உதவி செய்கின்றன. ஆனால் இந்த நாணயங்களும் சாசனங்களும் பெருவாரியாகக் கிடைத்துள்ளபோதிலும் இந்துக்காலச் சரித்திரத்தைத் தொடர்ச்சியாக எழுதுவதற்கு உதவுவதில்லை. சில ராஜ்யங்களையும் குறிப்பிட்ட சில காலங்களையும் பற்றிய சரித்திரச் செய்திகளை அறிந்து கொள்வதற்கு ஏற்ற நாணயங்களோ அல்லது சாசனங்களோ நமக்குக் கிடைக்கவில்லை.

இந்துக்கால வரலாற்று நிகழ்ச்சிகளின் காலத்தை நிர்ணயிப்பது மிகக் கஷ்டம். இந்தக் கஷ்டம் இந்துக் காலத்தின் ஆரம்ப சரித்திரத்தை எழுதும்போது மிக அதிகமாக இருக்கிறது. பின்னர் நாணயங்களாலும் சாசனங்களாலும் நமக்குக் கிடைக்கும் உதவியால் இந்தக் கஷ்டம் ஓரளவு குறைகிறது. இந்த நாணயங்களிலும் சாசனங்களிலும் அவை செய்யப்பட்ட காலம் குறிக்கப்பட்டிருக்கிறது. எனினும் இவற்றின் காலத்தைச் சரியானபடி நிர்ணயிப்பது எளிதன்று. ஏனெனில் இவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் ஆண்டுகளெல்லாம் ஒரே சகாப்தத்தைச் சேர்ந்தவையல்ல. இவற்றில் காணப்படும் பல்வேறு சகாப்தங்கள் மேனாட்டு ஆசிரியர்கள் இத்துறையில் ஆராய்ச்சியை ஆரம்பிக்கு முன்னரே வழக்கொழிந்து போய்விட்டன. ஆயினும் கிரேக்க நூல்களின் உதவியால் முதல் முதலில் சந்திரகுப்த மௌரியனுடைய ஆட்சிக் காலத்தை நிர்ணயிக்க முடிந்தது. சுமார் கி. மு. 300-ஆம் ஆண்டில் இந்தியாவில் **சாண்டிரக் கோட்டாஸ்** என்ற அரசன் ஆண்டு வந்தான் என்று கிரேக்க ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த அரசன்தான் சந்திரகுப்த மௌரியனாக இருக்கவேண்டும் என்று **சர்வில்லியம்ஜோன்ஸ்** என்ற ஆங்கில அறிஞர் அபிப்பிராயப்பட்டார். அதிலிருந்து இந்திய சரித்திர நிகழ்ச்சிகளின் காலத்தை

நிர்ணயிப்பது எளிதாயிற்று. இருந்த போதிலும் சில நிகழ்ச்சிகளின் காலத்தைப்பற்றி இன்னும் கருத்து வேறுபாடு இருக்கத் தான் செய்கிறது.

இந்துக் காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் எவ்வெப்போது எழுதப்பட்டவை என்று கூறமுடியாமலிருப்பது மிக வருந்தத் தக்க விஷயம். சில முக்கியமான நூல்கள் எந்த நூற்றுண்டில் எழுதப்பட்டவை என்று கூட நிச்சயமாகத் தெரியவில்லை. அதனுல் அவற்றின் வாயிலாக நமக்குக் கிடைத்திருக்கும் சமூகப் பொருளாதாரச் செய்திகள் எந்தெந்த நூற்றுண்டில் வாழ்ந்த மக்களைப் பற்றியவை என்று சொல்ல முடியாது. உதாரணமாக இதிகாசங்களிற் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டு அந்தக்காலத்து மக்கள் வாழ்க்கை எத்தகையது என்று பொதுவாகக் கூறமுடியும். ஆனுல் அச்செய்திகளெல்லாம் ஒரே காலத்தைப் பற்றியவைதாமா என்று சொல்ல முடியாது. அவற்றில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் பலவேறு காலத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம். அவற்றை எழுதிய ஆசிரியர்களும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள்தாம் என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆகவே, அந்நூல்களின் மூலம் நாம் சில கர்ண பரம்பரைச் செய்திகளைத்தான் அறிந்து கொள்ள முடியும். இதிகாசங்களில் ஒன்றுகிய வால்மீகி ராமாயணத்தால் வரலாற்று ஆசிரியனுக்கு எந்த வித உதவியுமில்லை. கோசலநாட்டு மன்னனுன இராமன் எந்தக் காலத்தில் இருந்தான் என்று கூறமுடியாது. இராமன் கதை தெரியாதவர் இந்தியாவில் எவரும் இல்லை. மேனுட்டு அறிஞர்கள் இராமாயணத்தைப் பற்றிப் பல கருத்துக்களைத் தெரிவித்துத் துள்ளார்கள். ஏதோ ஓர் உண்மை நிகழ்ச்சியை வைத்துக் கொண்டு, ஒரு சிறந்த புலவன் தன் கற்பனு சக்தியை வாரி இறைத்திருக்கிருன் என்பதைத் தவிர இந்நூலைப்பற்றி வேறென்றும் கூற முடியாது. இந்துக் காலத்தின் முற்பகுதியில் கோசல ராஜ்யம் ஒரு முக்கிய ராஜ்யமாக இருந்தது என்பது உண்மை தான். இராமாயணக்கதை சுமாராக கி. மு. ஏழாம் நூற்றுண்டில் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறுவதற்குச் சில அறிகுறிகளின் சாயல் இருக்கிறது. இது சரியான அபிப்பிராயமாக இருந்தாற் கூட அதன்பின் வெகு காலங் கழித்துத்தான் வான்மீகி இராமாயணம் எழுதப்பட்டிருக்க வேண்டும். இராமன் என்ற ஓரரசன் உண்மையாகவே இருந்திருக்கக்கூடும். அவனுடைய வீரச் செயல்கள் மக்கள் மனத்தைக் கவர்ந்திருக்கக்கூடும்; நாளடைவில் அவனை மக்கள் கடவுளாகப் போற்றியிருக்கக்கூடும்; அதன்

பின்னர் மக்கள் மனத்தில் வேரூன்றிவிட்ட இந்த நம்பிக்கையின் மூலம் லாபம் அடைய விரும்பிய பிராமணர்கள் இராமனை விஷ்ணுவின் அவதாரம் என்று கூறி, அதற்கேற்றவாறு இராமாயணக் கதையைத்திரித்து எழுதியிருக்கக்கூடும்.

வரலாற்று ஆசிரியனுக்கு இராமாயணத்தைவிட மகாபாரதத்தால் சிறிது அதிகமான உதவி கிடைக்கிறது. இந்த இதிகாசத்தில் அரசர் சம்பந்தமான கர்ண பரம்பரைச் செய்திகள் சில இருக்கின்றன. இந்தச் சிலசெய்திகளை அடிப்படையாக வைத்துக் கொண்டு, பின்னால் வந்த பிராமண ஆசிரியர்கள் நீதிகளைக் கற்பிக்கக் கூடிய ஏராளமான விஷயங்களை எழுதிவைத்திருக்கிறார்கள். ஆகவே மகாபாரதத்திற்கு அடிப்படையாக உள்ள சரித்திர நிகழ்ச்சி கற்பனையோடு கலந்து நமக்குக் கிடைக்கிறது. டில்லிக் கருகில் வாழ்ந்து வந்த பாண்டவர்களும் கௌரவர்களும்தான் இந்தக் கதைக்கு முக்கிய பாத்திரங்கள். கௌரவ அரசனான துரியோதனன், பாண்டவ அரசனான யுதிஷ்டிரனை ஒரு சூதாட்டப் பந்தயத்திற்கு அழைத்து வஞ்சித்து விடுகிறான். இதன் பயனாக யுதிஷ்டிரன் முதலில் தன்னுடைய ராஜ்யத்தையும், பின்னர்த் தன் உடன் பிறந்தார், மனைவி ஆகியவர்களையும் இழந்து, பன்னீராண்டு காட்டுக்குச் சென்று வாழ நேரிடுகிறது. பதின்மூன்றாம் ஆண்டில் தனக்கு உதவியாகச் சில அரசர்களைச் சேர்த்துக் கொண்டு வந்து, கௌரவர்களைப் போரில்வென்று அழித்து விடுகிறான். இதுவே மகாபாரதத்தில் முக்கியகதை. வேதகால நூல்களின் வாயிலாகக் குரு வம்சம் ஒரு முக்கிய வம்சம் என்று நாம் அறிகிறோம். மகாபாரதத்தின் அடிப்படைக்கதை சுமார், கி.மு. பத்தாம் நூற்றாண்டில் நடந்த சில உண்மைநிகழ்ச்சிகளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். ஆனால் நாளடைவில் இந்தக் கதை கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்து கொண்டேவந்தது. அதனால் பிற்காலத்தில் தோன்றிய ராஜ்யங்களுக்கும் அரசர்களுக்கும் இக்கதையில் இடம் கிடைத்து விடுகிறது. கௌரவ பாண்டவ யுத்தம் நடந்து வெகு காலத்திற்குப் பின் இருந்த அரசர்கள் கௌரவர்களுடைய துணைவர்களாகவோ, பாண்டவர்களுடைய துணைவர்களாகவோ குருக்ஷேத்திர யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். இது கதையை எழுதியவர்களுடைய கற்பனையில் நடந்த நிகழ்ச்சிகளே தவிர உண்மையில் நடந்திருக்கமுடியாது. ஆகவே, இரு பெரிய பண்பாடுகளோ தத்துவங்களோ ஒன்றோடொன்று மோதியதால் மகாபாரத யுத்தம் ஏற்பட்டதென்றும், இதன் விளைவாகப் பிற்கால இந்தியாவின் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டது என்றும் சிலர் கூறுவதை நாம் ஒத்

துக்கொள்ள முடியவில்லை. ஏதாவதோர் பெரிய கொள்கையை நிலை நாட்டுவதற்காகவும் இந்த யுத்தம் நடந்திருக்கலாம்; அல்லது இரு கூட்டத்தினரிடையே நடந்த ஒரு சாதாரணப் போராகவும் இருக்கலாம்.

மகாபாரதத்தில் காணப்படும் பல முக்கிய பகுதிகளில் பக-வத்கீதை தலை சிறந்தது. குருக்ஷேத்திர யுத்தம் தொடங்கிய சமயத்தில் போர்க்களத்திலேயே பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனுக்குக் கீதையைக் கிருஷ்ண பரமாத்மா உபதேசம் செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் அவன் ஆற்ற வேண்டிய கடமைகளுக்கும் அவனுடைய ஒப்பற்ற குறிக்கோளாகிய வீடுபேற்றிற்கும் உள்ள தொடர்பு கீதையில் விளக்கப்படுகிறது. சண்டையில் அர்ச்சுனனுடைய தேரைக் கிருஷ்ணன் ஓட்டுகிறான். கிருஷ்ணாவதாரம் மகாவிஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று என்று மகாபாரதத்தில் ஒப்புக்கொள்ளப் படுகிறது. இராமனைப்போலவே கிருஷ்ணனும் முதலில் மக்கள் மனத்தைக் கவர்ந்த ஒரு பெரிய வீரனாக இருந்திருக்கக்கூடும். பின்னர்க்காலஞ் செல்லச்செல்ல அவனையும் மக்கள் தெய்வமாகப் போற்ற ஆரம்பித்திருப்பார்கள்.

மகா பாரதத்திற்குப் பின் பல புராணங்கள் எழுதப்பட்டன. மகாபாரதத்திலிருப்பதைப் போலவே புராணங்களிலும் ஒரு சில சரித்திரச் செய்திகள் இருக்கின்றன. மகா பாரத யுத்தத்திற்குப்பின் கங்கைச் சமவெளியில் ஆட்சி புரிந்த பல அரச வம்சங்களைப்பற்றிப் புராணங்கள் கூறுகின்றன. ஆனால் இந்-தச் செய்திகளெல்லாம் கர்ண பரம்பரையாய் வந்தவை யாகையாலும், நாளடைவில் இவற்றுடன் பல கற்பனைச்செய்திகள் சேர்க்கப்பட்டமையாலும், இவற்றைக்கொண்டு வரலாற்று ஆசிரியன் நிச்சயமாக எதையும் எழுதிவிட முடியாது. எனினும் கி.மு. ஆறும் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்த ராஜ்யங்களின் பெயர்களை அறிந்து கொள்ளவும், அவற்றின் எல்லைகளை ஓரளவு நிர்ணயிக்கவும் புராணங்கள் உதவுகின்றன.

கி. மு. ஆறும் நூற்றாண்டில் **மகதம்** ஒரு முக்கியமான இராஜ்யமாக இருந்தது. இது கங்கையாற்றின் தெற்கே யிருந்தது. தற்காலத்துப் பீகார் மாகாணத்தின் தென்பகுதியே மகத ராஜ்யம். பீகாரின் வடபகுதி அக்காலத்தில் **விதேக** ராஜ்யமாக இருந்தது. இந்த ராஜ்யங்களுக்கு மேற்கே, காசி ராஜ்யமும், கோசல ராஜ்யமும் (தற்கால அவுத்) இருந்தன. இந்த நான்கு இராஜ்யங்களும் வியாபித்திருந்த நிலப் பகுதியில்தான். கி. மு.

ஆரும் நூற்றுண்டில் சில மிக முக்கியமான நிகழ்ச்சிகள் நடந்தன. அவற்றைப் பற்றிய குறிப்புக்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஜைன மதம், பௌத்த மதம் ஆகிய இரண்டு புதிய இயக்கங்கள் இங்கேதான் தோன்றின. மகத ராஜ்யம் நாளடைவில் வளர்ச்சியடைந்து சாம்ராஜ்யமாக மாறிற்று. இதுவே நமக்கு நிச்சயமாய்த் தெரிந்த முதல் இந்து சாம்ராஜ்யம்.

இந்தப் பகுதிக்குக் கிழக்கிலிருக்கும் வங்காளத்தைப் பற்றியும் ஒரிஸாவைப் பற்றியும் கி. மு. ஆரும் நூற்றுண்டு விஷயங்கள் நமக்கு ஒன்றும் தெரியவில்லை. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியிலிருந்த பூரு, பாஞ்சாலம் ஆகிய ராஜ்யங்களைப் பற்றியும் நாம் ஒன்றும் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த ராஜ்யங்களில் ஆட்சிசெய்த அரசர்களைப்பற்றி நம்பத்தகாத சில வம்சாவளிகள் மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இத்தகைய வம்சாவளிகளின் மூலமாகவே யமுனைக்குத் தெற்கிலும் மேற்கிலும் சில இந்து ராஜ்யங்கள் இருந்தன என்று நாம் அறிகிறோம். அவைகள் தற்காலத்துக் கிழக்கு ராஜபுதனத்திலும், மாளவத்தில் நர்மதை நதி வரையிலும் பரவியிருந்தன. நர்மதைக்குத் தெற்கிலுள்ள பரந்த நிலப்பகுதியாகிய தென்னிந்தியாவைப் பற்றி கி. மு. மூன்றும் நூற்றுண்டு வரையில் நாம் ஒன்றுமே அறிந்து கொள்ள முடியவில்லை. அதுபோலவேதான் சிந்து சமவெளியைப் பற்றிய விஷயமும். இந்துக் காலத்தின் முற்பகுதியில் சிந்து சமவெளியின் ஒரு பகுதி பாரசீகர்களுடைய ஆட்சியிலிருந்தது. அதைப்பற்றி நாம் பின்னர்க் கூறுவோம்.

சாதாரணமாக, பரம்பரையாக வந்த அரச வம்சங்களே இந்தக் காலத்தில் வட இந்தியாவில் ஆட்சி செய்தன. எனினும் இந்துக் காலத்தின் முற்பகுதியில் வட இந்தியாவிலிருந்த எல்லா நாடுகளிலும் இத்தகைய ஆட்சி முறைதான் வழக்கிலிருந்தது என்று கூறமுடியாது. ஏனெனில் பல நாடுகளில் **ஆலிகார்க்கி (Oligarchy)** என்று ஆங்கிலத்தில் கூறப்படும் "பிரபு அரசு" அல்லது "சிலர் அரசு" என்ற ஆட்சி முறை இருந்தது. அதாவது ஒரு நாட்டின் அல்லது ஒரு கூட்டத்தின் ஆட்சியை அந்த நாட்டில் அல்லது கூட்டத்திலுள்ள முக்கியஸ்தர்கள் சிலர் நடத்துவது. அரசன் என்று ஒருவன் ஆட்சிப் பீடத்தில் இருக்க மாட்டான். இத்தகைய ராஜ்யங்கள் பல அந்தக் காலத்தில் வட இந்தியாவில் இருந்தன. இவைகளிற் சில பூரண சுயேச்சையுடையவைகளாக இருந்தன. மற்றும் சில அண்மையிலுள்ள யாராவது ஓர் அரசனுடைய மேற்பார்வையிலிருந்தன.

இத்தகைய ராஜ்யங்களுக்கும், அவற்றை மேற்பார்வை செய்யும் அரசனுக்கும் உள்ள தொடர்பு சாதாரண அரசர்களுக்கும் சக்கர வர்த்திக்கும் உள்ள தொடர்பை ஒத்தது. கி. மு. ஆறும் நூற்றுண்டில் வடபீகாரில் இத்தகைய ராஜ்யங்கள் பத்து இருந்தன என்று புத்தமத நூல்கள் சிலவற்றுல் அறிகிறோம். இவற்றுள் விதேக ராஜ்யமும் ஒன்று. இவைகளெல்லாம் சிறிது காலத்திற்குள் மகத ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆனால் மேற்கே இமய மலைச்சாரலிலும், பஞ்சாப், இராஜபுதனம், சிந்து ஆகிய நாடுகளிலும் இத்தகைய ராஜ்யங்கள் வெகுகாலம் வரையில் இருந்தன. இவற்றின் சரித்திரம் நமக்குத் தெரியவில்லை. எனினும் பொதுவாகக் கூறுமிடத்து இந்த ராஜ்யங்களெல்லாம் நாளடைவில் அண்மையிலிருந்த அரசர்களால் ஜெயிக்கப்பட்டு, ஆங்கிருந்த முடியரசுகளிற் சேர்த்துக்கொள்ளப்பட்டன என்று சொல்லலாம்.

இந்தப் பழங்காலத்துச் சரித்திரத்தைப் படிக்கும் நாம் இந்தியாவில் எப்பொழுது எழுத்துமுறை தோன்றிற்று என்று அறிய அதிக ஆவலாய் இருப்பது இயற்கையே. மொஹெஞ்சோதாரோவில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துக்களின் பொருள் இன்னும் விளங்கவில்லை. அதைத்தவிர கரோஷ்டி, பிராஹ்மி என்ற இருவகைப்பட்ட எழுத்துமுறைகள் பழங்காலத்தில் இந்தியாவில் இருந்தன. கரோஷ்டி என்ற எழுத்துமுறை அராமைக் என்ற பாரசிக எழுத்துமுறையிலிருந்து வந்தது. ஆறும் நூற்றுண்டில் இந்த எழுத்துப் பாரசிகர்கள்மூலம் சிந்துசமவெளிக்குள் நுழைந்தது. ஆனால் இந்தியாவின் மற்றப்பகுதிகளுக்கு இந்த எழுத்துமுறை பரவவில்லை. பிராஹ்மி எழுத்துமுறைதான் இந்தியாவில் தற்போது வழங்கும் எல்லா எழுத்துமுறைகளுக்கும் மூலம் என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் அராபி எழுத்துமுறை இந்த இனத்தைச் சேர்ந்தது அன்று. அது வெகுநாள் கழிந்துத்தான் இந்தியாவுக்கு வந்தது. பிராஹ்மி எழுத்துமுறையின் வரலாறு இன்னும் சரியானபடி தெரியவில்லை. மெஸபடேமியா வியாபாரிகள் இந்த எழுத்துமுறையை இந்தியாவிற்குக் கொண்டுவந்தார்களென்றும், முதலில் இது வியாபார விஷயங்களில்தான் உபயோகிக்கப்பட்டதென்றும், சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். மொஹெஞ்சோதாரோவிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எழுத்துமுறையின் வளர்ச்சிதான் பிராஹ்மி எழுத்துமுறை என்று சமீப காலத்து ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகிறார்கள். கி. மு. நான்காம் நூற்றுண்டிலோ அல்லது அதற்குச் சற்று முன்னரோ சம்ஸ்கிருத பாஷையின் எல்லா ஒலிகளையும் வரிவடிவத்திற் காட்டுவதற்

கேற்ற முறையில் பிராஹ்மி எழுத்துக்கள் உபயோகப்பட ஆரம் பித்தன என்ற ஒருவிஷயத்தைத்தான் உறுதியாகக் கூறலாம். இந்தியாவில் கி. மு. 800-ஆம் ஆண்டுவரையில் எழுத்துமுறை ஒன் றும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும், வேதகாலத்து நூல்க ளெல்லாம் அதுவரையில் கர்ணபரம்பரையாகவே வந்தன என் றும் முன்னர்க் கருதப்பட்டது. எழுதாமலே ஒரு நூலை யாத்தல் எளிதன்று. ஆகவே வேதகால நூல்கள் இயற்றப்பட்ட காலத் தில் எழுத்துமுறை இருந்திருக்கவேண்டும். சிந்துசமவெளியில் மூவாயிரம் ஆண்டுகட்குமுன்னரே எழுத்துமுறை வழக்கிலிருந் தது. மேலும் அதேகாலத்தில் இந்தியாவில்மாத்திரமின்றிச் சீனுவிலும் மெஸபடேமியாவிலும், மத்தியதரைக்கடல் நாடுகளி லும் இருந்தவர்கள் எழுதுவதற்குத் தெரிந்திருந்தார்கள். எழுத்து முறைதெரிந்த பின்னர் அதை மக்கள் வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டு மறந்துவிடுவார்கள் என்று நம்பமுடியவில்லை. ஒரு வகை எழுத்துக்குப் பதிலாக வேறொருவகை எழுத்தை மக்கள் கையாளலாம் ; ஆனுல் அந்தமுறையே இல்லாமற்போய்விடாது. வடஇந்தியாவில் மரப்பட்டையையும், தென்னிந்தியாவில் பனை யோலையையும் எழுதுவதற்கு உபயோகித்தார்கள். அவை விரை வில் அழியுந்தன்மை யுள்ளவையாகையால் அக்காலத்துச் சுவடி கள் நமக்குக் கிடைக்காமற்போனதில் வியப்பில்லை. மேலும் கல் லிலோ உலோகத்திலோ எழுதும் வழக்கம் கி. மு. மூன்றும் நூற் ருண்டுவரையில் அனுசரிக்கப்படவில்லை. ஆகவே எழுத்துமுறை யின் வரலாற்றைப்பற்றி நிச்சயமாக எதையும் சொல்லிவிடமுடி யாது. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எழுத்துமுறை சிந்து சமவெளி மக்களுக்குத் தெரிந்திருந்தது என்பது நிச்சயம். ஆனுல் அந்தமுறை மேலும் வளர்ச்சியடைந்ததா, அந்தமுறையை மக் கள் மறந்துவிடாமற் காப்பாற்றிவைத்திருந்தார்களா, அல்லது இந்தியாவில் பழைய எழுத்துமுறை மறைந்துபோனபிறகு வெளி நாட்டிலிருந்து வேறே எழுத்துமுறை இந்தியாவிற்கு வந்ததா என்ற கேள்விகளுக்கு விடை சொல்ல இப்போது ஆதார மொன்றுமில்லை.

அதிகாரம் 5

ஜைன பௌத்த மதங்களின் தோற்றம்

கி. மு. ஆரும் நூற்ருண்டின் இறுதியில் ஜைனமதமும் புத்த மதமும் நிறுவப்பட்டன. இம்மதங்களின் தோற்றத்திற்குக் காரணமாயிருந்தவை இருபெரிய இயக்கங்கள். மதத்தையும், மக்களுடைய நடத்தையையும் சீர்திருத்தும் நோக்கத்துடன் இந்த இயக்கங்கள் ஆரம்பித்தன. இவற்றைச் சீர்திருத்த இயக்கங்கள் என்று சொல்லுவதைவிடப் புரட்சி இயக்கங்கள் என்று கூறுவதுதான் சரியாக இருக்கும், இந்த இயக்கங்களின் காலத்தை ஏறக்குறையச் சரியானபடி நிர்ணயித்துக் கூற முடியும். இவற்றிற்கு முற்பட்ட இந்திய வரலாற்று நிகழ்ச்சி களின் காலத்தை இவ்வளவு தூரம் நிச்சயமாகக் கூறமுடியாது. இவ்விரு இயக்கங்களும் பலவகையில் ஒன்றையொன்று ஒத் திருந்தன. இரண்டும் இந்து மதத்திற்கு எதிராகத் தோன்றிய புரட்சி இயக்கங்களே. அவை இந்து மதத்தின் பல கடவுட் கொள்கையையும், அம்மதத்தில் புரோகிதர்களுக்கிருந்த உயர்வை யும் எதிர்த்தன. கர்மத்தால் பிறவியும், மறுபிறவியும் ஏற்படு கின்றன என்ற கொள்கையே இவ்விரண்டு இயக்கங்களுக்கும் அடிப்படை. உலக வாழ்க்கையே தீமை தரக்கூடியது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டு இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை பெறும் வழியைக் காட்ட இவ்விரு இயக்கங்களும் முன் வந்தன. இவ்வியக்கங்களின் தலைவர் இருவரும் க்ஷத்திரிய வருணத்தைச் சேர்ந்தவர்கள். தொடக்கத்தில் இருவரும் அன்ருட வாழ்க்கை யில் பின்பற்றுவதற்கேற்ற கோட்பாடுகளைத்தான் சொன்னுர் களே ஒழியத் தத்துவவிசாரணையில் ஈடுபடவில்லை. இவ்விரு மதங்களும் நாளடைவில் ஏற்பட்ட மாறுதல்களால் இவற்றின் ஸ்தாபகர்கள் ஆதியிற் கொண்டிருந்த கருத்துக்களை விட்டு வெகுதூரம் விலகிப்போய்விட்டன. இவ்விரு மதங்களைப் பற்றி யும் நமக்குப் பல நூல்கள் கிடைத்திருக்கின்றன. இம்மதங் களைப்பற்றி முதலில் எழுதப்பட்ட நூல்கள் சம்ஸ்கிருத பாஷை யில் எழுதப்படாமல் சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலிருந்த பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விஷயம். இந்தப் பிராகிருத மொழியிலிருந்துதான் தற்கால இந்தியமொழிகள் தோன்றின.

ஜைன மதத்தை நிறுவியவர் மகாவீரர் என்று வழங்கும் வர்த்தமானர். இவர் சுமார் கி மு. 540-ம் ஆண்டிலிருந்து 468-ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தவர், விதேகம் அல்லது வடபீகா

ரில் இருந்த ஒரு பிரபுக் குடும்பத்தில் பிறந்தவர். தம்முடைய முப்பதாம் ஆண்டில் இவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டு ஊர் ஊராய்த்திரிய ஆரம்பித்தார். பன்னீராண்டு கழித்து இவருக்கு ஞானோதயம் உண்டாயிற்று. அதாவது தாம் தேடித் திரிந்த பொருளை அடைந்துவிட்டதாக இவர் எண்ணினார். உடனே இவர் தாம் கண்டறிந்த உண்மையை மக்களுக்கு எடுத்துரைக்க ஆரம்பித்தார். பிறப்பு இறப்பு என்னும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு உண்மை அறிவு இன்றியமையாதது என்றும், இந்த உண்மை அறிவைத் துறவு வாழ்க்கையால் தான் பெறமுடியும் என்றும் இவர் கூறினார். சீடர்கள் இவரைத் தேடிவர ஆரம்பித்தார்கள். மகத அரசனும், மற்றவர்களும் இவரை வரவேற்று இவருடைய போதனைகளைக் கேட்கத் தொடங்கினார்கள். எனினும் எந்தக்காலத்திலும் அரசியல் வரலாற்றில் ஜைனமதத்தின் செல்வாக்கு ஓங்கவில்லை. பீகாரில் தான் மக்கள் முதலில் ஜைனமதத்தைப் பின்பற்றினார்கள். நாளடைவில் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் இம்மதம் பரவியது. தற்போது இந்தியாவில் சுமார் 15 லட்சம் ஜைனர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலும் பம்பாயிலும், இராஜபுதனத்திலும் இருக்கிறார்கள். ஜைனமதத்தை நிறுவியவர் மகாவீரர் அல்லர் என்றும், அவர் அம்மதத்தில் தோன்றிய இருபத்து நான்காவது தீர்க்க தரிசியென்றும், அவருக்கு முன்னால் இருபத்து மூன்று தீர்க்கதரிசிகள் அவ்வப்போது தோன்றி அம்மதத்தைப் பரப்பினார்களென்றும், மகாவீரரைப்போலவே அவர்களனைவரும் க்ஷத்திரிய வருணத்தைச் சேர்ந்தவர்களென்றும் ஜைனர்கள் நம்புகிறார்கள். அந்தத் தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தைக் கோடிக் கணக்கான வருஷங்களில்தான் கணக்கிடவேண்டும். ஜைனர்களுக்குள் வழங்கிவரும் இந்தக் கர்ணபரம்பரைச் செய்தி வெறுங் கற்பனை என்று கூசாமல் கூறிவிடலாம். ஆனால் இருபத்துமூன்றுவது தீர்க்கதரிசி என்று அவர்களுக்குள் வழங்கப்படும் மனிதர் மகாவீரர் காலத்திற்கு முன் உண்மையிலேயே வாழ்ந்து வந்த ஒருவராக இருக்கலாம் என்று சில அறிஞர்கள் நினைக்கிறார்கள். ஜைனமதத்தைப் பொறுத்தவரையில் மகாவீரருக்கு முற்பட்ட காலத்தைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவில்லை.

புத்த மதத்தை நிறுவியவர் சித்தார்த்த கௌதமர். இவர் சாக்கியமுனி என்றும், புத்தர் என்றும் அழைக்கப்படுகிறார். இவர் சுமார் கி. மு. 560-ஆம் ஆண்டிலிருந்து 480-ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்தவர் என்று கூறலாம். ஆனால் இந்த விஷயத்

தைப்பற்றி இன்னும் சர்ச்சை நடந்துகொண்டுதான் இருக்கிறது. சித்தார்த்தர் சாக்கிய வம்சத்திற் பிறந்தவர். சாக்கியர்கள் என்ற ஒரு கூட்டத்தினர் இமயமலைச்சாரிவில், தற்காலத்தில் அயோத்தி என்றும், அக்காலத்தில் கோசலம் என்றும் பெயர்பெற்ற பிரதேசத்தின் கிழக்கெல்லையில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களிடையே நடந்துவந்த ஆட்சிமுறையைப் பிரபு அரசு என்று கூறலாம். சித்தார்த்தரைப்பற்றிப் பலகதைகள் கூறப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலானவை பிற்காலத்து மக்களின் கற்பனையில் தோன்றியவை. இவற்றிலிருந்து அவருடைய வாழ்க்கையின் உண்மையான வரலாற்றைப் பிரித்தெடுப்பது மிகக்கடினம். அவருடைய வாழ்க்கை வரலாறும் மகாவீரருடைய வாழ்க்கை வரலாற்றைப் போலவேதான் இருக்கிறது. சித்தார்த்தரும் க்ஷத்திரிய வம்சத்தில் தோன்றியவரே. இவரும் வாழ்க்கையில் அதிருப்தியடைந்து உண்மையை நாடி ஊரூராய்த்திரியும் துறவியானார். இவருக்கும் ஞானோதயம் ஏற்பட்டது. அதன்பிறகு இவரும் தம்முடைய கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச்சொல்வதிலேயே தம்முடைய மீதிக்காலத்தைக் கழித்தார். இவர் முதலில் போதித்த கொள்கைகள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடியவையாக இருந்தனவே தவிர, தத்துவ போதனையாக இருக்கவில்லை. ஆசையை வேரோடு அறுத்தால்தான் பிறப்பு இறப்பு என்னும் துன்பச்சுழலிலிருந்து மனிதன் விடுபட்டு நிர்வாண நிலையை எய்தலாம் என்பது அவர் கண்ட உண்மையின் அடிப்படை. ஆசையை அறுப்பதற்கு மனிதன் உடலை ஒறுப்பதைவிட மனத்தை அடக்குவதே சிறந்த வழி. உடலை ஒறுக்கும் சந்நியாச வாழ்க்கைக்கு மகாவீரர் கொடுத்த முக்கியத்துவத்தை கௌதமர் கொடுக்கவில்லை. உண்மையை அறிவதற்கு மனத்தை அடக்கி ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடவேண்டும் என்பதுதான் அவர் காட்டிய முக்கியமான மார்க்கம். ஆனால் அவர் பரந்த மனப்பான்மையுடையவர். இந்தக் கடினமான வழியை அவருடைய சீடர்களில் ஒருசிலர்தான் பின்பற்றமுடியும் என்றும், சாதாரணமக்களால் அவ்வாறு செய்ய இயலாது என்றும் அவருக்குத் தெரியும். ஆதலால் அவர் நேர்மையான நடத்தையே மனித வாழ்க்கையின் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று சதாரணமக்களுக்கு எடுத்துச் சொன்னார். புத்தர் சாதாரண மக்களுக்குக் காட்டிய வழியும், நன்னெறியை எடுத்துக் காட்ட உலகத்தில் தோன்றிய மற்றைய பெரியார்களின் கொள்கைகளும் அடிப்படையில் ஒரே தன்மையானவை என்று கூறலாம்.

இவருடைய கொள்கைகளைப் பலர் பின்பற்ற ஆரம்பித்தார்கள். பிற்காலத்தில் புத்தமதம் இந்திய அரசியல் வரலாற்றில் அதிகச் செல்வாக்குப்பெற்றது. ஆனால் ஆரம்பத்தில் அவ்வாறில்லை. இந்த இரண்டு இயக்கங்களும் கி. மு. ஆரும் நூற்ருண்டில் தோன்றிய புது இயக்கங்கள் என்று கூறினால் அது சரியாகாது. தமக்கு முன்னர் இருந்த பல தீர்க்கதரிசிகளின் கொள்கைகளைத் தாம் பரப்புவதாக மகாவீரர் கூறினர். புத்தர்தாம் உண்மையைக் கண்டுபிடித்தவர் என்ருலும் அவ்வுண்மையைத்தேடி உழைத்தவர்கள் அவருக்கு முன்னுல் பலர் இருந்தார்களென்று முதலில் தோன்றிய புத்தமத நூல்கள் கூறுகின்றன. ஏற்கெனவே பல சிந்தனையாளர்கள் பின்பற்றிய வழியைத்தான் புத்தரும், மகாவீரரும் பின்பற்றினார்களென்று ஒத்துக்கொள்ளலாம். அவர்களுடைய சூழ்நிலையும், மதக்கொள்கைகளும் அவர்களுக்குத் திருப்தி அளிக்கத்தவறியபோது அவர்கள் துறவிகளாகி உண்மையான மார்க்கம் எது என்று தேடி ஊரூராக அலைய ஆரம்பித்தார்கள். அவர்கள் போதித்த கொள்கைகள் வாழ்க்கையே தீமை தரக்கூடியது என்ற அடிப்படையான எண்ணத்திலிருந்து இயற்கையாகத் தோன்றியவை. இந்தக் கொள்கைகளுக்கும் அக்காலத்தில் இருந்த புரோகிதர்கள் சிலர் எழுதிய நூல்களிற் காணப்படும் கொள்கைகளுக்கும் அதிக வேறுபாடு கிடையாது. ஆகவே சாதாரண மக்களால் அனுசரிக்கப்பட்டு வந்த இந்து மதம் கி. மு. ஆரும் நூற்ருண்டில் அறிஞர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை, இந்த நிலை ஆரும் நூற்ருண்டுக்கு முற்பட்ட காலத்திலும் இருந்திருக்கக்கூடும். இத்தகைய அறிஞர்களுக்குள் மகா வீரரும் புத்தருந்தான் அதிகப் பிரசித்தியடைந்தார்கள். அவர்கள் நிறுவிய மதங்கள் இன்னும் இருக்கின்றன. மற்ற சிந்தனையாளர்கள் ஏன் இவ்வாறு பிரசித்தியடையவில்லை என்ற கேள்விக்கு நாம் சரியான விடை கூறமுடியாது. மகாவீரரும், புத்தரும் அவர்களுடைய ஒப்பற்ற குணங்களால் முதலில் மக்கள் மனத்தைக் கவர்ந்துவிட்டார்கள் என்றும், பின்னர் அவர்களுடைய சீடர்களுடைய உயர்குணங்கள் அவர்களுடைய மதங்களை நிலைநாட்டின என்றும் ஒருவாறு கூறமுடியும்.

இந்த இரண்டு பெரியார்களும் க்ஷத்திரிய வருணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தது கவனிக்கத்தக்கது. ரிக்வேத காலத்திற்குப் பின்னர்ப் புரோகிதர்களுடைய அதிகாரமும், முக்கியத்துவமும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்துகொண்டே வந்தன என்று நாம் முன்னர்ப் பார்த்தோம். இதை அரசர்கள் விரும்பவில்லை

என்று அக்கால நூல்களின் வாயிலாக ஒருவாறு அறிகிறோம். ஏனெனில் புரோகிதர்களுடைய அதிகாரம் அரசர்களுடைய அதிகாரத்தை நிச்சயமாய்ப் பாதித்திருக்கும். ஆனால் இவ்விஷயத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரமெல்லாம் புரோகிதர்களால் எழுதப்பட்ட நூல்களிலிருந்தே கிடைத்திருப்பதால் அவைகளை முழுதும் உண்மையென்று நம்பமுடியாது. ஆகவே தனிப்பட்ட அரசர்கள் புரோகிதர்களை எவ்வளவு தூரம் எதிர்த்தார்களென்றோ, அந்த எதிர்ப்பில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றார்களென்றோ நம்மால் கூறமுடியாது. புரோகிதர்களுடைய அதிகாரத்தைக் குறைத்துத் தங்களுடைய அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஆறும் நூற்றாண்டுக்கு நெடுங்காலத்துக்கு முன்னிருந்தே அரசர்கள் முயன்று வந்தார்களென்றும், அந்தப் போட்டிச் சூழ்நிலையில்தான் மகாவீரரும் புத்தரும் தோன்றினார்கள் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுவது உண்மையாக இருக்கலாம். அவ்விருவரும் பிராமணர்களுடைய உயர்வையும் அதிகாரத்தையும் மறுத்து உதறித்தள்ளியவர்கள் என்பது மாத்திரம் நமக்கு நிச்சயமாகத் தெரிந்த விஷயம்.

அதிகாரம் 6

சிந்து சமவெளியின் முன்னைய வரலாறு

சிந்து சமவெளியில் தற்போது பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்கள் இருக்கின்றன. சிந்து சமவெளிக்கு வந்த ஆரியர்கள் ஏற்கெனவே அங்கு வாழ்ந்துவந்த மக்களைத் துரத்தியடித்துவிட்டு அங்குக் குடியேறினார்கள். ஆகையால் கங்கைச் சமவெளியில் ஆரிய நாகரிகமும், திராவிட நாகரிகமும் ஒன்றோடொன்று கலந்து ஒரு கூட்டு நாகரிகம் ஏற்பட்டதுபோல சிந்து சமவெளியில் ஏற்படுவதற்கு வசதியில்லை. மேலும் பஞ்சாபிற் குடியேறிய ஆரியர்கள் பாரசீகத்திலிருந்த தங்களுடைய இனத்தாரோடு தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள் என்று சிலர் கருதுகிறார்கள். வேதகால நூல்களில் காலத்தாற் பிற்பட்ட சிலவற்றின் வாயிலாக கங்கைச் சமவெளியில் வாழ்ந்துவந்த ஆரியர் பஞ்சாபில் வாழ்ந்துவந்த ஆரியர்களைத் தாழ்வாகக் கருதினார்கள் என்று அறிகிறோம். தொடக்கத்தில் பஞ்சாபில் வாழ்ந்துவந்த ஆரியர்கள் கங்கைச் சமவெளியில் வாழ்ந்துவந்த தங்கள் இனத்தாருடன் தொடர்பு

வைத்துக்கொள்ளாமல் பாரசீகத்திலிருந்த தங்கள் இனத்தா-ருடன்தான் அதிகத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது. ஆனால் கி. மு. ஆறும் நூற்றாண்டுக்கப்புறந்தான இவ்விஷயத்தைப் பற்றி நமக்கு நிச்சயமான செய்திகள் கிடைக்கின்றன. ஏனெனில், கி. மு. ஆறும் நூற்றாண்டின் முடிவில் சிந்து சமவெளியின் ஒரு பகுதி பாரசீகருடைய ஆட்சியின்கீழ்ச் சென்றது.

பாரசீக நாட்டின் வரலாற்றில் உயர்வும், தாழ்வும் மாறி மாறி வந்துகொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். ஸைரஸ் என்ற அரசனுடைய ஆட்சிக் காலத்திலிருந்து பாரசீக ராஜ்யத்தின் வரலாற்றில் ஒரு சிறந்த பகுதி ஆரம்பமாயிற்று. அவ்வரசன் கி. மு. 558-முதல் 530-வரையில் ஆண்டுவந்தான். தன்னுடைய ராஜ்யத்தைப் பரப்பவேண்டும் என்ற நோக்கத்துடன் அவன் கிழக்கு நோக்கிப் படையெடுத்து வந்து ஆப்கானிஸ்தானத்தில் இந்துக்குஷ் மலைக்கு வடக்கிலுள்ள பகுதியை வென்றான். இப்பகுதி அக்காலத்தில் 'பாக்திரியா' என்று அழைக்கப்பட்டது. ஆனால் அவன் இந்தியாவிற்குள்ளும் நுழைந்தான் என்று கூறுவதற்குத் தக்க சான்று கிடையாது. அவனுக்கு அடுத்தாற்போல் வந்த அரசர்களின் கவனம் பாரசீகத்திற்கு மேற்கிலுள்ள நாடுகளின்மேற்சென்றதே தவிரக் கிழக்கிலுள்ள நாடுகளின் மீது திரும்பவில்லை. ஆனால் கி. மு. 522 முதல் 486 வரையில் பாரசீக அரசனாயிருந்த முதலாம் 'டேரியஸ்' என்ற அரசன் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து சுமார் 518-ஆம் ஆண்டில் சிந்து சமவெளியில் ஒரு பகுதியை வென்றான். அப்பகுதி சுமார் இருநூறு ஆண்டுகள் பாரசீகர் ஆட்சியில் இருந்தது என்று தெரிகிறது. டேரியஸின் மகனான ஜெர்க்ஸிஸ் என்ற அரசன் கி. மு. 480-ஆம் ஆண்டில் கிரேக்கர்களோடு செய்த சண்டையின் போது அவனுடைய சேனையில் பருத்தி உடையணிந்த இந்திய வீரர்களும் இருந்தார்களென்று அறிகிறோம். நூற்றைம்பது ஆண்டுகட்குப் பின்னர் அலெக்ஜாண்டர் பாரசீகத்தின்மீது படையெடுத்து வந்தபோது அவனை எதிர்த்துத் தோற்ற பாரசீகப் படையில் இந்திய வீரர்கள் மாத்திரமின்றிச் சிறிய யானைப் படையொன்றும் இருந்தது என்று அறிகிறோம். மேலும் முதலாம் டேரியஸின் கல்வெட்டு ஒன்றில் இந்திய மாகாணங்கள் செலுத்திய கப்பத்தைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. இந்தியப் படை பாரசீக அரசர்களுக்குச் சண்டையில் உதவி செய்தது என்பதும், இந்திய மாகாணங்கள் அவர்களுக்குக் கப்பம் கட்டின என்பதும்

பாரசீக ஆதிக்கம் இந்தியாவில் இருந்தது என்பதைக் காட்டும் சாதாரண அறிகுறிகள். இந்நிலை முதலாம் டேரியஸுக்குப் பின் இருநூறாண்டுகள் நீடித்திருந்தது என்பதும் உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்தியாவில் பாரசீகர்களுடைய ஆட்சி எத்தன்மையதாயிருந்தது என்றோ, இவ்வாட்சியால் சிந்து சமவெளி மக்களின் வாழ்க்கை எவ்வகையிலாவது மாறுதல் அடைந்ததா என்றோ நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. மேலும், இந்தியாவில் அவர்களுடைய அதிகாரம் எவ்வளவுதூரம் பரவியிருந்தது என்றும் நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. சிந்து நதியின் கரையோரமாக அரபிக்கடல் வரையில் உள்ள பிரதேசம் அவர்களுடைய ஆட்சியிலிருந்தது என்று தெரிகிறது. ஆனால் அவ்வாட்சி இன்னும் கிழக்கே பரவியிருந்ததா என்றும், பஞ்சாப் அவ்வாட்சியிலிருந்ததா என்றும், அப்படியிருந்திருந்தால் பஞ்சாபில் எவ்வளவுதூரம் அது பரவி இருந்தது என்றும் நமக்குத் தெரியவில்லை.

கி. மு. 330-ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் மங்கிக்கொண்டிருந்த பாரசீக ஆட்சியை அழித்து, அதன் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த கிழக்குப் பகுதிகளையெல்லாம் வென்று, அவற்றிற்கப்பாலும் தன்னுடைய படையை நடத்த ஆரம்பித்தான். தற்போது ஆப்கானிஸ்தானம் என்று அழைக்கப்படும் பகுதியை வென்ற பின் அலெக்சாண்டர் கி. மு. 326-ஆம் ஆண்டில் இந்தியாவிற்குள் நுழைந்து இமயமலையின் அடிவாரத்திலுள்ள பிரதேசங்களின் வழியாகப் பியாஸ் நதியை அடைந்தான். சிந்து நதிக்கு ஐந்து உபநதிகள் இருக்கின்றன. இவையனைத்தும் சிந்துநதியின் கிழக்கில்தான் இருக்கின்றன. இவ்வைந்து நதிகளிருப்பதாலேயே இவை பாயும் பிரதேசம் பஞ்சாப் என்ற பெயரைப் பெற்றது. பாரசீக மொழியில் "பஞ்சஆப்" என்ற சொல்லுக்கு ஐந்து நதிகள் என்று பொருள். பியாஸ் நதியை அடைந்த அலெக்சாண்டர் கிழக்கே சென்று கங்கைச் சமவெளியையும் ஜயிக்க விரும்பினன். ஆனால் அவனுடைய படைவீரர்கள் அதற்கிணங்கவில்லை. ஆகவே அலெக்சாண்டர் தான் ஜயித்த பிரதேசங்களுக்குச் சிந்து நதியை எல்லையாக ஏற்றுக்கொண்டு இந்தியாவிலிருந்து கி. மு. 325-ஆம் ஆண்டின் பிற்பகுதியில்—அவ்வாண்டின் இலையுதிர் காலத்தில்—திரும்பிச் சென்றுவிட்டான். அலெக்சாண்டர் இந்தியாவுக்கு வந்தான், திரும்பிச் சென்றான் என்பதைத் தவிர அவனுடைய படையெடுப்பினல் இந்திய அரசியல் வரலாற்றில் பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை.

ஆனால் இந்தியப் பண்பாட்டுக்கும், கிரேக்கப் பண்பாட்டுக்கும் சிறிதுகாலம் தொடர்பு ஏற்படுவதற்கு அவன் படையெடுப்பே காரணமாயிருந்தது.

கிரேக்க ஆட்சி இந்தியாவில் நீடித்திருக்க வேண்டும் என்று தான் அலெக்சாண்டர் விரும்பினான். அதற்காக அவன் சிந்து சமவெளியை மாகாணங்களாகப் பிரித்து, கேந்திரஸ்தானங்களில் கோட்டைகள் கட்டி அவற்றில் சில கிரேக்க வீரர்களையும் வைத்தான். நாளடைவில் இந்தக் கோட்டைகள் கிரேக்கர்களுடைய முக்கியக் குடியேற்ற நகரங்களாக வளரவேண்டும் என்று அலெக்சாண்டர் விரும்பினான். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேறவில்லை. கி. மு. 323-ஆம் ஆண்டில் அலெக்சாண்டர் இறந்தவுடனே அவனுடைய சேனாதிபதிகள் தங்களுக்குள்ளேயே சச்சரவு செய்துகொள்ள ஆரம்பித்தார்கள். இந்தியாவில் அலெக்சாண்டரால் நியமிக்கப்பட்ட கிரேக்க மாகாணத் தலைவர்கள் அவரவர்களிடமிருந்த கிரேக்க வீரர்களையும் கூட்டிக்கொண்டு போய் அந்தச் சச்சரவிற் கலந்து கொண்டார்கள். அந்தச் சச்சரவின் முடிவில் 'செல்யூக்கஸ்' என்பவன் அலெக்சாண்டருடைய சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதிகளுக்குத் தலைவனானான். இவன் மெஸபடோமியோவில் தன்னுடைய அதிகாரத்தை நிலைநிறுத்திய பின் இந்தியாவில் அலெக்சாண்டரால் ஜயிக்கப்பட்ட பகுதிகளைத் திரும்பவும் கைப்பற்றும் எண்ணத்துடன் இந்தியாவின்மேற் படையெடுத்தான். இதற்குள் இந்தியாவின் நிலை அடியோடு மாறிவிட்டது. சந்திரகுப்தன் என்னும் அரசன் வட இந்தியா முழுவதையும் வென்று மௌரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்து விட்டான், சுமார் கி. மு. 305-ஆம் ஆண்டில் செல்யூக்கஸ் இந்தியாவின்மீது படையெடுத்து, சிந்து நதி வரையில் வந்தான். சந்திரகுப்தன் அவனை எதிர்க்கவே அவனுடன் சமாதானம் செய்துகொண்டு இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்றுவிட்டான். அதன் பயனாகச் சந்திரகுப்தனுக்குச் சிந்து சமவெளி மாத்திரமின்றி ஆப்கானிஸ்தானத்தின் பெரும்பகுதியும் கிடைத்தது. ஆப்கானிஸ்தானத்தின் மற்றொருபகுதியான பாக்திரியா மாத்திரம் செல்யூக்கஸின் ஆட்சியில் இருந்தது. அடுத்த நூற்றாண்டின் இடையில் பாக்திரியா ஒரு சுயேச்சை பெற்ற கிரேக்க ராஜ்யமாக மாறியது. இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த இரண்டு ராஜவம்சங்கள் பிற்காலத்தில் பஞ்சாபில் ஆட்சி புரிந்தன. இதைப்பற்றி பின்னர்ப் படிப்போம்.

அலெக்சாண்டருடன் வந்த கிரேக்க வீரர்களிற் பலர் இந்தியாவில் தங்களுக்கேற்பட்ட அனுபவங்களைப்பற்றி எழுதி

லைத்தார்கள். அந்த நூல்கள் அழியாமல் நமக்குக் கிடைத்திருக்குமானால் அந்தக் காலத்து இந்திய மக்களின் வாழ்க்கையைப்பற்றி நாம் பல விஷயங்களை அறிந்துகொள்ள முடியும். ஆனால் அந்நூல்கள் அழிந்துபோயின. அவற்றில் குறிப்பிட்ட செய்திகளில் ஒருசில பிற்கால ஆரியர்கள் எழுதிய நூல்களின் வாயிலாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. இச்செய்திகளால் அக்காலத்து இந்தியாவைப்பற்றி நாம் அதிகமாய் ஒன்றும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. ஆனால் சிந்து சமவெளியிலிருந்த மக்கள் வாழ்க்கைமுறை கங்கைச் சமவெளியிலிருந்த இந்திய மக்களின் வாழ்க்கைமுறையைத்தான் ஒத்திருந்ததே தவிர, பாரசீக மக்களின் வாழ்க்கை முறையை ஒத்திருக்கவில்லை என்ற விஷயத்தை மாத்திரம் இந்த ஆதாரத்தின்மூலம நாம் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளுகிறோம். இந்த ஆதாரத்தின்மூலம் சிந்து சமவெளியிலும் பிராமணர்களும் சந்நியாசிகளும் இருந்தார்களென்றும், உடன்கட்டையேறும் பழக்கம் இருந்ததென்றும், சிவனை மக்கள் வழிபட்டார்களென்றும் அறிகிறோம். மேலும், அரசியல் நிலை, போர்முறைகள் முதலிய பல விஷயங்களைப்பற்றிய செய்திகளையும் நாம் தெரிந்துகொள்வதற்கு இவ்வாதாரம் நமக்குத் துணை செய்கிறது. இதிலிருந்து இந்துமதம் அல்லது இந்து வாழ்க்கை முறை கங்கைச் சமவெளியிலிருந்து நாளடைவில் சிறிது சிறிதாக மேற்கே சென்று, அலெக்சாண்டர் காலத்திற்குள் இந்தியாவின் வடமேற்கு எல்லைவரையிற் பரவிவிட்டது என்பது நமக்கு ஐயமின்றித் தெரிகிறது. ஆனால், இது எவ்வாறு எப்போது பரவிற்று என்பதைப்பற்றி நாம் ஒன்றுமே அறிந்துகொள்ள முடியவில்லை.

அலெக்சாண்டர் இந்தியாவிற்கு வந்தகாலத்தில் சிந்து சமவெளியில் பல ராஜ்யங்களிருந்தன. அவற்றைத் தவிர, ராஜ்யங்கள் என்று அழைக்கத் தகுந்த அமைப்பைப் பெற்றிராத பல பிரதேசங்களும் இருந்தன. அவற்றில் பல கூட்டத்தினர் வாழ்ந்துவந்தனர். அரசர்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்ததோடு, தங்கள் ராஜ்யங்களின் எல்லைப்புறங்களிலிருந்த கூட்டத்தினரோடும் சண்டையிட்டு, அக்கூட்டத்தினரைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவதற்கு முயன்று கொண்டிருந்தார்கள். பஞ்சாபிலிருந்த முக்கியமான இரண்டு அரசர்களை கிரேக்கர்கள் "டாக்ஸிலிஸ்" என்றும் 'போரஸ்' என்றும் அழைத்தார்கள். சிந்து நதிக்கும், ஜீலம் நதிக்கும் இடையிலுள்ள பிரதேசம் அந்தக் காலத்தில் 'டாக்ஸிலா'

(தட்சசீலம்) என்ற ராஜ்யமாக இருந்தது. இந்த ராஜ்யத்தின் அரசனைத்தான் கிரேக்கர்கள் 'டாக்ஸிலிஸ்' என்று அழைத்தார்கள். ஜீலம் நதிக்குக் கிழக்கிலுள்ள பிரதேசத்தில் அந்தக் காலத்தில் "பூரு" என்ற கூட்டத்தினரின் ஆதிக்கம் இருந்ததால், அந்தப் பிரதேசத்தின் அரசனைக் கிரேக்கர்கள் "போரஸ்" என்று அழைத்தார்கள். இந்த இரண்டு அரசர்களும் ஒருவரோடொருவர் பகைமை பூண்டிருந்தார்கள். 'டாக்ஸிலிஸ்' அரசனுடைய மகனுன அம்பி என்பவன் அலெக்சாண்டர் இந்தியாவிற்குள் நுழைவதற்கு முன்னரே, அதாவது அவன் இந்துக்குஷ் மலைக்கு வடக்கிலிருக்கும்போதே, அவனிடம் சென்று சமாதானப்பேச்சை ஆரம்பித்தான். அதன்பின் அலெக்சாண்டர் காபூல் பள்ளத்தாக்கை யடைந்த சமயத்தில் டாக்ஸிலிஸ் அவனைக் கண்டு பேசினுன். பின்னும் கொஞ்சநாட்களில் அலெக்சாண்டர் சிந்து நதியைக் கடந்து தட்சசீல ராஜ்யத்தை அடைந்தான். இதற்குள் டாக்ஸிலிஸ் இறந்துவிட்டான். அம்பி அலெக்சாண்டரைத் தன் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டு தட்சசீலத்தில் ஆட்சி செய்ய ஆரம்பித்தான்.

போரஸ் அலெக்சாண்டருக்குப் பணிந்து போக விரும்பவில்லை. அவனுடைய ராஜ்யத்தின் மேற்கு எல்லையான ஜீலம் நதியைத் தாண்டவிடாதபடி கிரேக்கர்களைத் தடுக்கும் நோக்கத்துடன் அவன் அலெக்சாண்டருடன் சண்டை செய்தான். ஆனுல் சண்டையில் அவனுக்குத் தோல்விதான் கிடைத்தது. அதனுல் அவன் அலெக்சாண்டருக்குக் கீழ்ப்படிந்தான். அலெக்சாண்டர் அவனுடைய ராஜ்யத்தை அவனுக்கே திருப்பிக்கொடுத்தான். அதோடு தான் ஜயித்த வேறு சில பகுதிகளையும் போரஸுக்குக் கொடுத்தான். போரஸும் அலெக்சாண்டரைத் தன் மேலதிகாரியாக ஏற்றுக்கொண்டான்.

தட்சசீலத்திற்குக் கிழக்கில் மலைப்பிரதேசத்தில் ஆட்சி செய்துவந்த ஓர் அரசன் அதுவரையில் அலெக்சாண்டருக்கு அடங்கிப் போனதாகப் பாசாங்கு செய்துகொண்டு அவனுக்கு உண்மையில் விரோதமாக இருந்துவந்தான். ஆனுல் போரஸ் தோற்றுவிட்டான் என்று அறிந்ததும் அவனும் அலெக்சாண்டருக்கு அடங்கிவிட்டான். இன்னும் கிழக்கிலிருந்த அரசர்களிற் சிலர் அலெக்சாண்டருக்குக் கீழ்ப்படிந்தார்கள். வேறுசிலர் தங்கள் ராஜ்யங்களை விட்டுவிட்டு ஓடிப்போனுர்கள். இந்திய அரசர்கள் ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த காரணத்தால் அவர்கள் ஒன்றுசேர்ந்து அலெக்சாண்டரை எதிர்க்கவில்லை. பிற்காலத்தி

லும் பல நூற்றுண்டுகள் வரையில் இந்திய அரசர்கள் இவ்வாறு தான் ஒற்றுமையில்லாமல் இருந்தார்கள் என்பது சரித்திரம் காட்டும் உண்மை.

தான் இந்தியாவில் வென்ற பிரதேசங்களை ஆள்வதற்கு அலெக்சாண்டர் கிரேக்க கவர்னர்களை நியமித்தான் என்று முன்னர்க் கூறினேம். ஆனல் பஞ்சாபின் பல பகுதிகள் அம்பி, போரஸ் ஆகிய இருவரின் ஆட்சியில் விடப்பட்டன. இவ்விருவருடைய ராஜ்யங்களுக்கும் இடையில் ஜீலம் நதி எல்லை யாக இருந்தது. அலெக்சாண்டர் இறந்ததும் இவர்கள் சுயேச்சை பெற்றுர்கள். ஆனல் இந்த ராஜ்யங்களின் சுயேச்சை நீடித்து நிற்கவில்லை. வளர்ந்துகொண்டே வந்த மௌரிய சாம்ராஜ்யம் வெகு விரைவில் இந்த ராஜ்யங்களையும் விழுங்கிவிட்டது.

அதிகாரம்—7

மௌரிய சாம்ராஜ்யம்

சந்திரகுப்தன்

கி. மு. 500—ஆம் ஆண்டுக்குச் சமீபத்தில் மகதம் அல்லது தற்காலத்திய தென்பீகார் ஒரு முக்கியமான இராஜ்யமாக இருந்தது என்று நாம் நான்காம் அதிகாரத்தில் பார்த்தோம். அடுத்த ஐம்பது ஆண்டுகளில் அதன் ஆதிக்கம் வடபீகார், காசி, அயோத்தி ஆகிய இராஜ்யங்களிலும் பரவிற்று. அந்தச் சமயத் தில்தான் மகத ராஜ்யத்தின் தலைநகரமான "பாடலிபுத்திரம்" நிறுவப்பட்டது. அந்நகரம் கங்கைக் கரையில் உள்ளது. இப் போது பாட்னு என்று அழைக்கப்படுகிறது. அந்தக் காலத்தில் கிரேக்கர்கள் அதை "பாலி போத்ரா" என்று அழைத்தார்கள். மகத ராஜ்யத்தின் அடுத்த நூற்றுண்டின் வரலாற்றைப்பற்றி நாம் நிச்சயமாக ஒன்றும் சொல்லமுடியாது. எனினும் மகத ராஜ்யத்தின் சிறப்பு மங்கவில்லை என்று தெரிகிறது. நந்த வம்சம் என்று பொதுவாக அழைக்கப்படும் ஒரு வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் பாடலிபுரத்தில் அக்காலத்தில் ஆண்டுவந்தார் கள். அவர்களுடைய ஆட்சியில் மகத ராஜ்யத்தின் ஆதிக்கம் கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியிலும் பரவியது. அதற் குத் தென்மேற்கிலுள்ள பகுதிகளும் மகத ராஜ்யத்தின் ஆட்சிக் குள் வந்திருக்கக்கூடும். ஆனல் அதைப்பற்றி நமக்கு நிச்சய மாகத் தெரியாது. மேலும் மகத ராஜ்யத்தின் சிறப்பைக் கேள் விப்பட்டுத்தான் பஞ்சாபை ஜெயித்த அலெக்சாண்டர் கங்கைச்

சமவெளியின்மீதும் படையெடுக்க விரும்பினான் என்று கூறப்படுகிறது. அலெக்சாண்டர் திரும்பிச் சென்றபின் சில ஆண்டுகளுக்கெல்லாம் சந்திரகுப்த மௌரியரின் நந்தவம்சத்தின் ஆட்சியை அழித்துத் தன்னுடைய ஆதிக்கத்தைப் பாடலிபுத்திரத்தில் நிறுவினான். அவன்காலத்தில் மகதராஜ்யத்தின்பரப்பும் சிறப்பும் மிகப் பெருகின. அதனால் அதை **மௌரிய சாம்ராஜ்யம்** என்று அழைக்கிறோம்.

சந்திரகுப்தனுடைய வீரச்செயல்களைப்பற்றிய வரலாறு சரியாகத் தெரியவில்லை. அதைப்பற்றி நம்பத்தகுந்த குறிப்புக்கள் ஒன்றுமில்லை. கர்ண பரம்பரையாக நமக்குக் கிடைத்துள்ள செய்திகளும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றன. 'மௌரியன்' என்ற பெயர் அவனுக்கு எவ்வாறு கிடைத்தது என்பதைப்பற்றிக்கூட நாம் நிச்சயமாகக் கூறமுடியாது. ஏனெனில் அது அவனுடைய குடும்பப் பெயரென்று சிலரும், அவனுடைய தாயின் பெயரான முரா என்ற சொல்லிலிருந்து வந்த பெயரென்று வேறு சிலரும் கருதுகிறார்கள். அந்தத் தாய் நந்த அரசனுடைய வைப்பாட்டியாக இருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அவனுடைய பிறப்பைப் பற்றிய வரலாறு எவ்வாறிருந்தாலும், அவன் நந்த அரசனிடம் உத்தியோகத்தில் இருந்தான் என்பதும், அதில் அவன் சேனாதிபதிப் பதவிக்கு உயர்த்தப்பட்டான் என்பதும், பின்னர்த் தன் எஜமானனாகிய நந்த அரசனுக்கு விரோதமாகச் சதிசெய்து அதில் வெற்றிபெறாததால் தனக்கு அந்தரங்கத் துணைவனாக இருந்த கௌடில்யன் என்பவனுடன் வடமேற்கு எல்லைப்புறத்திற்கு ஓடிவிட்டான் என்பதும் நமக்குத் தெரிகின்றன. இந்தக் கௌடில்யன்தான் நாம் முன் ஓர் அதிகாரத்தில் விவரித்த அர்த்த சாஸ்திரத்துக்கு ஆசிரியன் என்று கூறப்படுகிறான். வடமேற்கே சென்ற சந்திரகுப்தன் அப்போது பஞ்சாபிலிருந்த அலெக்சாண்டரைச் சந்தித்தான் என்று கிரேக்க சரித்திர ஆசிரியர் ஒருவர் கூறுகிறார். சந்திரகுப்தன் முடிவில் பஞ்சாபில் படைத்துணை பெற்று, மகத ராஜ்யத்திற்குத் திரும்பிச் சென்று, நந்த அரசனைப் போரில் தோற்கடித்துப் பாடலிபுத்திரத்தில் அரியாசனம் ஏறினான். இவனுக்கு உதவிசெய்த பஞ்சாப் அரசன் போரஸாக இருக்கக்கூடும். இவ்விஷயத்தைப்பற்றிய செய்திகள் நமக்கு நிச்சயமாய்த் தெரிந்த செய்திகள் என்று சொல்லமுடியாது. ஆனால், கி. மு. 305-ஆம் ஆண்டில் சந்திரகுப்தன் ஒரு பெரும்படையுடன் சென்று சிந்து நதிக்கரையில் செலியூக்கஸை எதிர்த்தான் என்ப

தும், அதன்பயனுக ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையால் சந்திரகுப்தனுடைய இராஜ்யம் ஆப்கானிஸ்தானம் வரையில் பரவியது என்பதும் நமக்கு நிச்சயமாய்த் தெரிந்த விஷயங்கள். அதன்பின் சிறிதுகாலத்தில்—சுமார் கி. மு. 297-ஆம் ஆண்டில்—சந்திரகுப்தன் இறந்துபோனுன். அவனுடைய இராஜ்யத்தின் பரப்பைப்பற்றி நமக்கு நிச்சயமாய்த் தெரியாது. ஆனுல் அவன் காலத்தில் மகதராஜ்யத்தின் ஆதிக்கம் வங்காளத்திலிருந்து இந்துகுஷ்மலை வரையில் பரவியிருந்தது என்பது உறுதி. மாளவமும் குஜராத்தும் அவனுடைய ஆதிக்கத்திற்குட்பட்டு இருந்தன என்று கூறுவதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன. அவைகள் நிச்சயமாக அவனுக்குப்பின் வந்த அரசர்கள் ஆதிக்கத்தில் இருந்தன. ஆனுல் அவை எப்போது எவ்வாறு ஜயிக்கப்பட்டு மௌரிய ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டன என்று அறிய முடியவில்லை,

சந்திரகுப்தனும் செலியூக்கஸூம் நண்பர்களாய் இருந்தார்கள். செலியூக்கஸ் அனுப்பிய தூதனுகிய மெகாஸ்தனிஸ் சிறிது காலம் பாடலிபுத்திரத்தில் தங்கியிருந்தான். அப்போது அவன் இந்தியாவைப் பற்றிய விஷயங்களை எழுதிவைத்தான். பிற்காலத்தில் இந்தியாவைப்பற்றி எழுதிய கிரேக்க ஆசிரியர்கள் மெகஸ்தனிஸ் எழுதிய நூலிலிருந்து பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள். மெகஸ்தனிஸ் எழுதிய நூல் முழுவதும் நமக்குக் கிடைத்திருந்தால் சந்திரகுப்தன் ஆட்சியைப்பற்றிய முழு வரலாற்றையும் நாம் அறிந்துகொள்ள முடியும். ஆனுல் அந்தப் பேறு நமக்குக் கிடைக்கவில்லை, பிற்காலத்திய ஆசிரியர்கள் அந்நூலிலிருந்து முக்கியமானவை என்று நினைத்து எடுத்துக் கையாண்ட சில பகுதிகள்தாம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவைகளும் மெகஸ்தனிசின் நேர்முக வாசகமல்ல; அவற்றை உபயோகித்த ஆசிரியர்களின் சொந்த வார்த்தைகளில் எழுதப்பட்டவை. இவ்வாறு நமக்குத் தெரிந்த செய்திகளையும், இந்திய நூல்களிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகளையும் ஒன்றுக இணைத்து, அதன் வாயிலாக மௌரிய சாம்ராஜ்யத்தின் வரலாற்றை எழுதுவதற்குச் சிலர் முயற்சி செய்திருக்கிறுர்கள், ஆனுல் இம்முயற்சி சரியானது என்று நாம் ஒத்துக்கொள்ள முடியாது. ஏனெனில் இவ்வாறு உபயோகிக்கப்படும் இந்திய நூல்கள் எப்போது எழுதப்பட்டவை என்ற விஷயமே நமக்கு இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லை. ஆகவே மெகாஸ்தனிஸ் எழுதிய விஷயங்களை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அவற்றின்

மூலமாக மௌரிய சாம்ராஜ்யத்தின் வரலாற்றை அறிய முயல்வதுதான் சரியான முறை. இம்முறையில் நாம் அறிந்துகொள்ளும் விஷயங்கள் மிகக் குறைவாக இருக்கலாம். ஆனால் இதைத் தவிர வேறு நல்ல முறை இல்லையல்லவா? மெகஸ்தனிஸே எழுதிய நூல் நமக்குக் கிடைக்கவில்லை யென்பதும், கலைகளைப் பற்றிக்கூறும்போது அவன் உபயோகித்த சொற்களின் உண்மையான பொருள் என்ன என்று நமக்குத் தெரியாதென்பதும் நம் நினைவில் இருக்கவேண்டும். அவன் இந்தியாவைப்பற்றி எழுதிய விஷயங்களை எவ்வாறு சேகரித்தான் என்றும் நாம் உறுதியாகக் கூறமுடியாது. மேலும் பிராகிருத மொழியைப் பேசிய மகத ராஜ்ய மக்களின் மூலமாக அறிந்த செய்திகளை அவற்றின் பொருள் பிறழாமல் கிரேக்க மொழியில் எழுதுவது எளிதன்று, தட்சசீலத்திலிருந்த சந்நியாசிகளிடமிருந்து அவர்களுடைய அநுபவத்தைப்பற்றி அறிந்துகொள்ள அலெக்சாண்டர் விரும்பிய போது, அத்துறவிகளிலொருவர் அது சாத்தியமான காரியமன்று என்று கூறியதாக ஒரு செய்தி வழங்குகிறது. பேசப்படும் விஷயத்தைப்பற்றிய அறிவு சிறிதுமில்லாத மூன்று மொழிப்பெயர்ப்பாளர்கள் மூலம் அவ்விஷயத்தைச் சொல்ல முயல்வது, சேற்றின் மூலம் சுத்தமான தண்ணீர் ஓடவேண்டும் என்று எதிர் பார்ப்பதை ஒக்கும் என்று அத்துறவி கூறினாராம்.

மெகஸ்தனிஸ் எழுதிவைத்த குறிப்புகளைக் கொண்டு சந்திரகுப்தனுடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி நாம் அதிகமாக ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. அவன் அரண்மனையில் அதிகக்காவலுடன் வாழ்ந்தானென்றும், நீதிமன்றத்தில் அமர்வதற்கும், சில சமயங்களில் யாகங்கள் செய்வதற்கும், வேட்டையாடுவதற்கும் வெளியே சென்றான் என்றும் அறிகிறோம். அரசன் உயிருக்கு ஆபத்து வராமல் காப்பதற்குப் பலமான காவல் இருந்தது என்று மெகாஸ்தனிஸ் கூறுகிறான். இவற்றை யெல்லாம் மெகாஸ்தனிஸ் நேரில் பார்த்திருக்கக்கூடும். ஆனால் சந்திரகுப்தன் தனக்கு முன் இருந்த அரசனைக்கொன்று சிம்மாசனத்தை ஆக்கிரமித்தவன் என்பதையும், அதனால் அவன் மிகுந்த ஜாக்கிரதையாக வாழ்ந்திருப்பான் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அரசியலின் பல துறைகளும் நல்ல அமைப்பைக் கொண்டிருந்தன என்பதும், நகரத்திற்கும் நாட்டுப்புறத்திற்கும் வேறுபாடு இருந்தது என்பதும் மெகாஸ்தனிஸ் மூலமாக நாம் அறியக்கிடக்கும் விஷயங்கள். ஆனால் மெகாஸ்தனிஸ் விளக்கியுள்ள முறைக்கும், இந்திய நூல்களின் வாயிலாக நாம் அறியக்கூடிய முறைக்கும் வேறுபாடு இருக்கிறது.

மௌரிய சாம்ராஜ்யத்தில் 'சுயேச்சைப்பெற்ற நகரங்கள்' இருந்தனவென்று மெகஸ்தனிஸ் கூறுகின்றான். அந்நகரங்களின் தலைவர்கள் வரிவசூல் செய்து அரசனுக்கனுப்பாமல் தாங்களே உபயோகித்துக் கொண்டார்களென்றும், அரசனுடைய ஆணையில்லாமல் தாங்களே சுயேச்சையாக ஆட்சி செய்தார்களென்றும் மெகஸ்தனிஸ் குறிப்புக்கள் கூறுகின்றன. செலியூக்கஸின் இராஜ்யத்தில் தனியுரிமை பெற்ற சில நகரங்கள் இருந்தன. சாதாரணமாக மற்ற நகரங்களில் வசூலிக்கப்பட்ட வரிகள் அந்நகரங்களில் வசூலிக்கப்படவில்லை. மேலும் அந்நகரங்கள் பல விஷயங்களில் சுயேச்சாதிகாரம் பெற்றிருந்தன. இத்தகைய ஆட்சி முறையைப்பற்றி இந்திய நூல்களில் எவ்விதமான குறிப்பும் கிடையாது. சந்திரகுப்தனைச் சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொண்ட சிற்றரசர்கள் பலர் இருந்தனர். அவர்கள் சக்கரவர்த்திக்குக் கப்பம் கட்டிவிட்டுத் தங்களுடைய ராஜ்யங்களில் தங்களிஷ்டம்போல் ஆண்டு வந்தார்கள். அத்தகைய ராஜ்யங்களையும் பற்றிப் புதிதாக வந்த மெகஸ்தனிஸுக்கு ஒன்றும் தெரிந்திருக்க முடியாது. ஆனால் செலியூக்கஸின் இராஜ்யத்திலிருந்த தனியுரிமை பெற்ற நகரங்களைப்பற்றி அவனுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆகவே அந்த நகரங்களின் ஆட்சிமுறையைக் குறிப்பிடும் சொற்களையே மௌரிய சாம்ராஜ்யத்திலிருந்த சிற்றரசுகளை விவரிப்பதற்கும் மெகஸ்தனிஸ் உபயோகத்திருக்கக்கூடும் என்று நாம் கருதலாம்.

மெகஸ்தனிஸ் விவரித்துள்ள நிலவரி முறையைப்பற்றிப் பலவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. இத்துறையிலும் மெகஸ்தனிஸ் உபயோகித்த சொற்கள் செலியூக்கஸின் இராஜ்யத்திலிருந்த முறைகளைக் குறிப்பதற்கு அக்காலத்தில் வழக்கிலிருந்த சொற்களாக இருக்கலாம். நிலவரி வசூலில் மெகஸ்தனிஸ் இருமுறைகளைப் பார்த்தான். ஒன்றின்படி விளைவில் நான்கில் ஒரு பங்கைக் குடியானவன் அரசனுக்கு வரியாகக் கொடுத்தான். இதுவே இந்திய நூல்களில் கூறப்பட்டிருக்கும் முறை. ஆனால் நூல்களிற் கூறப்பட்ட வழக்கமான ஆறில் ஒரு பங்குக்குப் பதிலாக நான்கில் ஒரு பங்கை அரசன் வரியாகத் தண்டினான் என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. மெகஸ்தனிஸ் குறிப்பிடும் இரண்டாவது முறையின்படி விளைவில் நான்கில் ஒரு பங்கைக் குடியானவன் தன் உபயோகத்திற்கு வைத்துக்கொண்டு மீதியை வரியாகச் செலுத்தினான் என்று தெரிகிறது. சக்கரவர்த்தியும் பிரபுக்களும் தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் சொந்தமான நிலங்

களைக் கூலியாட்களைக் கொண்டு சாகுபடி செய்தார்களென்றும் அந்த ஆட்களுக்கு விளைவில் நான்கில் ஒருபங்கு கூலியாகக் கொடுக்கப்பட்டது என்றும் இதன்மூலம் நாம் நினைக்க இடமிருக்கிறது. நீர்ப்பாசன வசதிகளின் துணையால் சாதாரணமாக நிலத்தில் இருபோகம் விளைந்தது என்றும், பஞ்சமே ஏற்படவில்லை என்றும் மெகஸ்தனிஸ் கூறுகின்றான். இருபோகம் விளைந்தது என்பதை மெகஸ்தனிஸ் நேரில் பார்த்திருக்கலாம். ஆனால் நாட்டில் பஞ்சமே இல்லை என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியாது. அவ்வப்போது பஞ்சம் வந்துகொண்டுதான் இருந்தது என்பது இந்துக்கால நூல்களின்மூலம் நாம் அறியும் உண்மை. மெகஸ்தனிஸ் மகதராஜ்யத்தில் இருந்தகாலத்தில் பஞ்சம் வராமையாலும், வளமுடைய நிலங்கள் ஏராளமாக நாட்டில் இருந்தன ஆதலாலும் பஞ்சமே வராது என்று அவன் தீர்மானித்திருக்கக்கூடும்.

சமூகத்தில் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவினரும் தங்களுக்குள்ளேயே மணம் செய்துகொண்டார்கள். இவ்வாறு மெகஸ்தனிஸ் கூறுவது அவன் வந்த காலத்தில் இந்தியாவில் சாதிவேறுபாடுகள் நன்றாக வேரூன்றிவிட்டன என்பதைக் காட்டுகிறது. ஆனால் பிராமணர்கள், விவசாயிகள், கால்நடை வளர்த்தலும் வேட்டையாடலும் தொழிலாகக்கொண்ட மக்கள், வியாபாரத்தையும் கைத்தொழிலையும் ஜீவனோபாயமாகக்கொண்ட மக்கள், போர் வீரர்கள், உளவாளிகள், உத்தியோகஸ்தர்கள் என்ற ஏழு பிரிவினர் சமூகத்தில் இருந்தனர். என்று மெகஸ்தனிஸ் கூறுவதை முற்றிலும் உண்மை என்று நம்பமுடியாது. ஏனெனில் இந்திய நூல்களில் விளக்கப்பட்டிருக்கும் சாதிமுறை வேறு மாதிரியாக இருக்கிறது. மேலும் உத்தியோகஸ்தர்களிற் பலர் பிராமணர்களாக இருந்தார்களென்பதும், வியாபாரிகள் வேறு, கைத்தொழிலில் ஈடுபட்ட மக்கள் வேறு என்பதும் மெகஸ்தனிஸுக்குத் தெரியாமல் இருந்திருக்கும். ஆகவே தான் நேரில் கண்ட தொழில்களைப்பற்றி மெகஸ்தனிஸ் ஒரு பட்டியல் தயாரித்து நமக்குத் தந்திருக்கிறான் என்பதைவிட நாம் வேறொன்றும் இந்த விஷயத்தில் கூறமுடியாது. அதுபோலவே அடிமைகளே இந்தியாவில் கிடையாது என்று மெகஸ்தனிஸ் கூறியிருப்பதும் உண்மையன்று; ஏனெனில் அடிமைகள் இருந்தார்கள் என்பதை நாம் வேறுபல ஆதாரங்களின் மூலம் நிச்சயமாய் அறிகிறோம். கிரீஸ் முதலிய நாடுகளில் கைத்தொழில் நிலையங்களில் வேலை

செய்வதற்கு அடிமைகள் இருந்தார்கள். அந்நாடுகளில் அடிமைகள் செய்த அதேதொழில்களை இந்தியாவில் சுயேச்சையுடைய மக்கள் செய்தார்கள். இதைப்பார்த்த மெகஸ்தனிஸ் இந்தியாவில் அடிமைகளே இல்லையென்று எண்ணிவிட்டான். வீட்டு வேலை செய்தவர்களெல்லாம் அடிமைகளாகத்தான் இருந்தார்கள் என்பதை மெகஸ்தனிஸ் அறியவில்லை.

மேலே கூறியவற்றிலிருந்து மெகஸ்தனிஸ் குறிப்புகளை நாம் ஜாக்கிரதையாகக் கையாளவேண்டும் என்பது விளங்கும். அவைகளைக்கொண்டு மௌரிய சாம்ராஜ்யத்தின் முழு விவரத்தை நாம் அறிந்துகொள்ள முடியாது. ஆனால் அக்காலத்து இந்தியாவைப்பற்றி நாம் ஒரு சில விஷயங்களை அறிந்துகொள்ளுவதற்கு இக்குறிப்புக்கள் உதவியாக இருக்கின்றன. அவை பின்வருமாறு: மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாக இருந்தார்கள். அரசன் தன் இஷ்டம்போல் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு உதவி செய்யப் பலதரப்பட்ட உத்தியோகஸ்தர்களும், ஏராளமான உளவாளிகளும் இருந்தார்கள். மேலும் நிரந்தரமான பெரிய சேனையும் இருந்தது. மக்கள் எளிய உணவை உண்டார்கள். ஆனால் ஆடை ஆபரணங்களுக்காக அதிகச்செலவு செய்தார்கள். அவர்கள் நேர்மையாக இருந்தார்கள். சாதி முறை வழக்கத்தில் இருந்தது. ஆனால் பிற்காலத்திலிருந்ததைப் போல அந்தக்காலத்தில் சாதிக்கட்டுப்பாடுகள் அவ்வளவு கடுமையாக இல்லை. பிராமணர்களுக்கு மதிப்பு அதிகம். அவர்கள் வேள்விகள் செய்வதில் மற்ற சாதியினருக்கு உதவி செய்தார்கள். மக்களில் ஒரு பகுதியினர் சிவனையும், இன்னொரு பகுதியினர் கிருஷ்ணனையும் வழிபட்டார்கள். சந்நியாசிகள் மிகுதியாக இருந்தார்கள். இவ்வாறு சாதாரணமாக இந்து சமுதாயத்திற் காணப்படும் விஷயங்களையே மேகாஸ்தனிஸ் குறிப்புகளின் மூலம் நாம் அறிகிறோம். இவைகளை எல்லாம் நாம் வேறு ஆதாரங்களின் மூலமாகவும் அறிய முடிகிறது. மெகஸ்தனிஸ் குறிப்புக்கள் புதிதாக நமக்கு ஒன்றையும் விளக்கிவிடவில்லை. ஆனால் இந்து சமுதாயத்தின் பல்வேறு அம்சங்கள் குறைந்தது கி. மு. 300-ஆம் ஆண்டிலேயே திட்டமான உருப்பெற்று விட்டன என்பதை அக்குறிப்புக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

அதிகாரம்—8

மௌரிய சாம்ராஜ்யம்

அசோகர்

சந்திர குப்தனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த பிந்துசாரன் 25-ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவனைப்பற்றிய வரலாறு நமக்கு ஒன்றுமே தெரியாது. அவனுடைய மகன் அசோகன்.

அசோகருக்கு முன் இந்தியாவில் பல அரசர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய குணாதிசயங்களைப்பற்றியோ, செயல்களைப் பற்றியோ நாம் தெளிவாகவும் நிச்சயமாகவும் ஒன்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. இந்திய வரலாற்றில் அசோகரைச் சந்திக்கும்போதுதான் நாம் முதல் முதலாக நமக்கு நன்றாகத்தெரிந்த ஒருவரைப் பார்க்கிறோம். பெரும்பாலும் புத்தமத நூல்களின் வாயிலாகவே நாம் அசோகருடைய பெருமையை அறிகிறோம். ஆனால், அவருடைய பெருமையை அதிகப்படுத்தி, அதன்மூலம் புத்தமதத்தின் உயர்வையும் அதிகப்படுத்த விரும்பிய அந்நூலாசிரியர்கள் அவருடைய வாழ்க்கை வாலாற்றை மிகைப்படுத்தியும் திரித்தும் எழுதியிருக்கிறார்கள். அவருடைய வாழ்க்கையைப் பற்றி நாம் சரியானபடி அறிந்து கொள்ளுவதற்கு அவருடைய "ஆணைகள்" தாம் நமக்கு முக்கியத் துணையாக இருக்கின்றன. அவ்வாணைகள் கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் செதுக்கப் பட்டன. ஆணைகளைக் கல்லில் எழுதிவைக்கும் முறை பாரசீக தேசத்திலிருந்த ஒரு மிகப் பழமையான வழக்கம் என்றும், அந்த முறையைத்தான் அசோகரும் பின்பற்றினார் என்றும் நாம் அறி அறிகிறோம். அசோகருடைய கல்வெட்டுக்களிற் பல இன்னும் இருக்கின்றன. அவற்றில் காணப்படும் ஆணைகள் எளிய, உருக்கமான சொற்களில் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் அவைகள் பலதரம் திருப்பித் திருப்பிக் கூறப்படுகின்றன. அந்த ஆணைகளையும் கொள்கைகளையும் மக்கள் எவ்வளவு தூரம் கடைப்பிடித்தார்கள் என்று நம்மால் கூறமுடியாது. ஆனால் அவற்றைப் படிக்கும் ஒவ்வொருவரும், அவற்றை எழுதிவைத்த அரசர் சன்மார்க்கத்தை உலகத்தாருக்கு உணர்த்தவந்த ஓர் ஒப்பற்ற பெரியார் என்பதை உடனே அறிந்துகொள்வர்.

சுமார் கி. மு. 274-ம் ஆண்டில் அசோகர் பட்டத்துக்கு வந்தார். ஏறக்குறைய முப்பத்தேழாண்டுகள் அரசு புரிந்தார்,

பட்டத்திற்கு வந்து சுமார் பத்தாண்டுகள் வரையில் அசோகரும் மற்ற இந்து அரசர்களைப்போலவேதான் இருந்தார். அரசுரிமைக்காக இவர் போர் செய்யவேண்டியிருந்தது என்று தெரிகிறது. ஆனால் அவர் தம்முடைய தொண்ணூற்றொன்பது சகோதரர்களைக் கொன்று பட்டத்திற்கு வந்தார் என்ற செய்தியை வெறும் கற்பனை என்று தள்ளிவிடலாம். மற்ற அரசர்களைப்போலவே அசோகரும் பிற நாடுகளை ஜெயிக்க விரும்பினார். அதனால் அவர் கலிங்கநாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதை வென்றார். கீழ்க்கடற்கரையில் மகா நதிக்கும் கோதாவரி நதிக்கும் இடையிலுள்ள பிரதேசந்தான் முன்காலத்தில் கலிங்கம் என்று அழைக்கப்பட்டது. அந்நாட்டில் தற்போதைய ஒரிஸாவும், சென்னை மாகாணத்தின் வடக்கிலுள்ள ஒரு சிறு பகுதியும் சேர்ந்திருந்தன. கலிங்கப்போர் அசோகருடைய வாழ்க்கையை அடியோடு மாற்றிவிட்டது. போரால் ஏற்பட்ட துன்பத்தைக்கண்ட அசோகர் மனமுருகினார். அதன்பின் இம்சையை அடிப்படையாகக் கொண்ட போரை வெறுத்து அன்பை அடிப்படையாகக் கொண்ட புத்தமதக்கொள்கைகளைக் கடைப்பிடித்தார், குடிகளுக்கு நன்மைதரும் ஆட்சியை நடத்துவதிலும், அவர்களுடைய நடத்தையைச் சீர்திருத்துவதிலும், புத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதிலும் அசோகர் தம்முடைய மீதி வாழ்நாளைக் கழித்தார்.

தம்முடைய பரந்த சாம்ராஜ்யத்தை ஆள்வதற்கு அசோகர் மூன்று இராஜப்பிரதிநிதிகளை நியமித்தார். தட்சசீலத்திலிருந்த இராஜப்பிரதிநிதி வடமேற்குப் பகுதியையும், உஜ்ஜயினியிலிருந்த பிரதிநிதி மேற்குப் பகுதியையும் தென்மேற்குப் பகுதியையும், கலிங்கத்திலிருந்த பிரதிநிதி தென்கிழக்குப் பகுதியையும் ஆண்டு வந்தனர். சாம்ராஜ்யத்தின் மத்தியப்பகுதி அசோகருடைய நேரடியான ஆட்சியில் இருந்தது என்று தோன்றுகிறது, அசோகருக் கடங்கிய சிற்றரசர்களால் ஆளப்பட்ட பகுதிகள் யாவை என்று நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. இந்தப்பரந்த சாம்ராஜ்யத்தில் அடங்கிய எல்லா ராஜ்யங்களும் சிற்றரசர்களாலேயே ஆளப்பட்டு வந்தன என்றும், அத்தகைய பலவேறு ராஜ்யங்கள் சேர்ந்த சமஷ்டிதான் அசோக சாம்ராஜ்யம் என்றும் கூறினால் அது பொருத்தமாக இருக்கக்கூடும். இந்த சாம்ராஜ்யத்தின் தெற்கு எல்லை எது என்று தெரியவில்லை. ஆனால் தற்போதைய மைசூர் ராஜ்யத்தின் வடக்குப் பகுதியில் அசோகருடைய கல்வெட்டுகள் காணப்படுவதால், அசோகருடைய ஆட்சியோ அல்லது செல்

வாக்கோ கிருஷ்ணு] நதிக்குத் தெற்கிலும் பரவியிருந்தது என்று நினைக்க இடமிருக்கிறது. அசோகர் ஆட்சிமுறைக்கு அடிப் படையான கொள்கைகள் இந்து தர்மசாஸ்திரங்களிற் கூறப் பட்டவைதாம். அவைகளை இந்துக்கள் மாத்திரமின்றி ஜைனர் களும், பௌத்தர்களும்கூட ஏற்றுக்கொண்டார்கள். அந்தக் கொள்கைகளுள் அஹிம்சை, அன்பு ஆகிய இரண்டு கொள்கை களைத்தான் அசோகர் மிக முக்கியமாகக் கருதினார். உயிருள்ள எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பாக இருக்கவேண்டுமென்று அசோகர் கூறினார். இந்தக் கொள்கைக்கு ஏற்ப அசோகர் பல காரியங்களைச் செய்தார். சாலையோரங்களில் கிணறுகளை வெட்டி நிழல்தரும் மரங்களைப் பயிராக்கினார். மக்களுக்கும் விலங்கு களுக்கும் வைத்தியசாலைகள் ஏற்படுத்தினார். உணவுக்காக விலங்குகளைக் கொல்வதைக் குறைத்தார். கைதிகளை மனிதர் களாக நடத்தவேண்டுமென்று உத்தரவிட்டார். அரசியலைக் கவனிப்பதற்கு ஏற்பட்ட உத்தியோகஸ்தர்களைத் தவிர, அறநிலை-யங்களைப் பரிபாலிப்பதற்கும், மக்களுக்கு நன்னெறியைப் போதிப் பதற்கும், அநீதிகளை ஒழிப்பதற்கும், தனிப்பட்ட உத்தியோகஸ் தர்களை நியமித்தார்.

இந்து அரசர்களெல்லாம் தங்களுடைய எல்லைப்புறங்களி லிருந்த மக்களுடன் சண்டையிட்டு அவர்களை வென்று, அவர் களுடைய நாடுகளைத் தங்கள் ராஜ்யங்களுடன் சேர்த்துக்கொள் வது வழக்கம். ஆனால் இந்தப்பழக்கத்தை அசோகர் அறவே கைவிட்டார். "என்னுடைய ராஜ்யத்தில் சேராத எல்லைப்புற வாசிகள் என்னைப் பார்த்து அஞ்சவேண்டியதில்லை. அவர்கள் என்னை நம்பவேண்டும். அவர்களுக்கு என்னால் நன்மை ஏற்-படுமேயொழியத் தீமை ஏற்படாது." என்று அசோகர் முதல் கலிங்கக் கல்வெட்டில் கூறுகிறார். அசோகர் தம்முடைய குடி களுக்குப் போதித்த சன்மார்க்கக் கொள்கைகளை எல்லைப்புற வாசிகளும் ஏற்றுக்கொள்வார் என்று நம்பினார். இந்த நம்பிக்கை எவ்வளவு தூரம் கைகூடிற்று என்று நமக்குத் தெரியாது. ஆனால் அவர் ஆட்சிக் காலத்தில் சாம்ராஜ்யத்தின் எல்லைப்புறங்களில் அமைதியே நிலவிற்று என்று கூறினால் அதை மறுக்க எவ்வித ஆதாரமும் இல்லை.

அசோகர் போதித்த கொள்கைகள் மக்கள் அன்றாட வாழ்க் கையில் கடைப்பிடிப்பதற்கு ஏற்றவை. தத்துவ விசாரணையில் அசோகருக்கு விருப்பம் இருந்ததோ இல்லையோ நமக்குத் தெரி யாது. அத்தகைய விஷயங்களைப்பற்றி அவருடைய கல்வெட்டுக்

களில் எந்தவிதமான குறிப்பும் இல்லை. சாதாரணமாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளையே அவர் வற்புறுத்தினார். அத்தகைய கடமைகளில் மக்கள் தவறிவிட்டார்கள் என்பது அவர் எண்ணம். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். பணியாட்களையும், விலங்குகளையும், அடிமைகளையும் அன்பாக நடத்தவேண்டும். புரோகிதர்களுக்கும் துறவிகளுக்கும் உதவி செய்வதோடு, அவர்களிடத்தில் விநயத்துடன் நடந்து கொள்ளவேண்டும், சகிப்புத்தன்மையும் சினேக மனப்பான்மையும், பிறர் துயர் துடைக்கும் குணமும், எளிய வாழ்க்கையில் விருப்பமும் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கவேண்டும். சுருங்கக்கூறினால் ஒவ்வொருவரும் சன்மார்க்க வாழ்க்கையைக் கடைப்பிடிக்கவேண்டும். இவைகள்தாம் அசோகர் தம் குடிகளுக்கு வற்புறுத்திக் கூறிய அறிவுரைகள். மதவிஷயத்தில் அசோகர் சமரச மனப்பான்மை கொண்டவர். சதாரணமாக மக்கள் செய்துவந்த சில சடங்குகளை அசோகர் ஆதரிக்கவில்லையென்பது உண்மைதான் எனினும் பிராமணர்களுக்கு மரியாதை காட்ட வேண்டுமென்று அவர் தம் குடிகளுக்குக் கூறினார். மேலும் காட்டில் வாழ்ந்த மக்களிடையில் இந்துமத தெய்வங்களைப் பற்றிய அறிவைப்பரப்பியது தாம் செய்த சிறந்த காரியங்களில் ஒன்று என்று அசோகர் எண்ணினார். புத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதற்கு அவர் செய்த முயற்சி இந்துமதத்திற்கு எதிராக இருந்தது என்று கருதுவதற்கு இடமில்லை. அவர் ஒரு மதத்திற்கு விரோதமாக இன்னொரு மதத்தை ஆதரித்தார் என்று கூறுவதற்கு அவருடைய கல்வெட்டுக்களைப் பொறுத்தவரையில் எந்த விதமான ஆதாரமும் கிடையாது. அவர் மக்களுக்கு வாழ்க்கை முறையை எடுத்துரைத்தாரே தவிர ஏதோ ஒரு மதத்தைப் பரப்பினார் என்று சொல்வது பொருந்தாது.

அசோகர் புத்தமதக் கோயில்கள் பலவற்றைக் கட்டினார். புத்தமத நூல்களை அப்படியே நம்புவதாய் இருந்தால் அசோகர் கட்டிய புத்த விகாரங்களுக்குக் கணக்கே கிடையாது. அவற்றை நாம் நம்பவேண்டியதில்லை. ஆனால் அவர் அத்தகைய திருப்பணியில் ஈடுபட்டார் என்பது மாத்திரம் உண்மை. பௌத்தர்களுக்குள்ளேயே பலபிரிவுகள் இருந்தன. அவற்றுள் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு, அசோகர் பெரிதும் முயன்றார். அதற்காகப் பாடலிபுரத்தில் ஒரு பெரிய மாநாடு கூட்டப்பட்டது. அதற்கு அசோகர் ஆதரவளித்தார். அம்மகாநாட்டில் புத்தமதக் கொள்கைகள் யாவை, அம்மதத்திற்குரிய சரியான நூல்கள்

யாவை என்ற விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன, பௌத்த மதத்தில் பிளவு ஏற்படுத்த முயல்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அசோகருடைய கல்வெட்டு ஒன்றில் கூறப்படுகிறது. புத்தமதத்தைப் பரப்புவதற்காக அசோகர் புத்தசாம்ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் புத்தசந்நியாசிகளை அனுப்பினார். இத்தகைய சந்நியாசிகள் பிட்சுக்கள் என்று கூறப்பட்டனர். பிட்சுக்கள் சிரியா, எகிப்து, கிரீஸ் ஆகிய நாடுகளுக்கும் சென்றனர். அவ்விடங்களில் அவர்கள் என்ன காரியங்களைச் சாதித்தார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால் வடமேற்கு இந்தியாவிலும், பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் அசோகருடைய முயற்சியால் புத்தமதம் விரைவாகப் பரவியது. முக்கியமாக இலங்கையில்தான் புத்தமதத்திற்குச் சிறந்த வெற்றி கிடைத்தது. புத்தமதத்திற்கு இரண்டு தாய் வீடுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொண்டால் இந்தியாவை முதல் தாய் வீடு என்றும், இலங்கையை இரண்டாம் தாய்வீடு என்றும் கூறலாம். பாடலிபுத்திர மாநாட்டில் ஏற்பட்ட முடிவுகள் இலங்கையில் நிலைபெற்றன. இந்த முடிவுகளின்படி வரையறுக்கப்பட்ட புத்தமதம் இந்தியாவில் மறைந்துபோயிற்று, ஆனால் இலங்கையில் அது இன்னமும் இருக்கிறது. பர்மாவிலும், சயாமிலும் இந்தமதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சாம்ராஜ்ய எல்லைக்குள் அசோகருடைய முயற்சிகள் எத்தகைய பலனை அளித்தன என்று நமக்குத் தெரியவில்லை. அவருக்குப் பின்னால் பட்டத்திற்கு வந்த அவருடைய சந்ததியார்கள் அவர் இத்துறையில் கையாண்ட தனிப்பட்ட முறைகளைக் கையாளவில்லை என்பது நிச்சயமாகத் தெரிகிறது. அவருடைய கல்வெட்டுக்களிலும் மக்கள் எவ்வாறு நடக்கவேண்டுமென்று எழுதப்பட்டு இருக்கிறதே தவிர, அவர்கள் எவ்வாறு நடந்தார்கள் என்று குறிக்கப்படவில்லை. இவ்விஷயத்தில் கல்வெட்டுகளைத் தவிர வேறு ஆதாரமும் இல்லை. உயர்ந்த வாழ்க்கை நெறியை அசோகர் மக்களுக்கு எடுத்துக் கூறினார். ஆனால் மக்கள் அதை அப்படியே கடைப்பிடித்தார்கள் என்று கூற முடியாது. எனினும் அவர் போதனை சிறிதும் பயனளிக்கவில்லை என்றும் கூறமுடியாது. பிற்கால மக்கள் அக்கல்வெட்டுக்களைப் படித்துப் பயன்பெறலாம். ஆனால் அவற்றில் உபயோகித்த எழுத்துக்கள் நாளடைவில் வழக்கொழிந்து போயின. ஆங்கிலேயர் காலத்தில் தான் மறுபடியும் அவற்றின் பொருள் விளக்கப்பட்டது. அசோகருடைய ஒப்பற்ற குணங்களின் காரணமாக

மக்கள் மனத்தில் அவர் நிரந்தர இடம் பெற்றுவிட்டார். ஆனால் அவருடைய காலத்திலேயே அவருடைய போதனை எவ்வளவு தூரம் வெற்றியடைந்தது என்று நம்மால் கூறமுடியாது.

கட்டிடக்கலையும் சிற்பக்கலையும் அசோகர் காலத்தில் நல்ல முன்னேற்றமடைந்தன. அவை அதுவரையில் இல்லாத புதியதோர் உயர்ந்த நிலையை அவர்காலத்தில் அடைந்தன என்று கூறலாம். மௌரிய காலத்திற்கு முன்னர் மக்கள் செதுக்கிய கற்களையும் சுட்ட செங்கல்லையும் கட்டிடத்திற்கு உபயோகிக்கவில்லை. வெள்ளத்தாற் சேதமாகக்கூடிய இடங்களில் வீடுகள் மரத்தாற் கட்டப்பட்டனவென்றும், மற்ற இடங்களில் மண்ணாலும் செங்கல்லாலும் கட்டப்பட்டன வென்றும் மெகஸ்தனிஸ் கூறுகிறான். செங்கற்கள் வெயிலில் காய்ந்தவை என்றும் தீயில் சுடப்பட்டவை அல்லவென்றும் நினைக்க இடம் இருக்கிறது. அசோகர் காலத்துக் கட்டிடங்களில் சுட்ட செங்கற்கள் உபயோகிக்கப்பட்டன. அவை பிற்காலத்துக் கற்களின் உயர்ந்த தன்மையைப் பெறவில்லை. இதிலிருந்து அசோகர் காலத்தில் செங்கல்லைச் சுடும்பழக்கம் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது என்றும் தெரிகிறது. ஆனால் அசோகருடைய கற்றூண்கள் மிக உயர்ந்த வேலைப்பாடு பெற்றவை. இவற்றில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பங்களில் பாரசீகச் சிற்பக்கலையின் தன்மைகளும் கிரேக்கச் சிற்பக்கலையின் தன்மைகளும் ஒன்றுசேர்ந்து காணப்படுகின்றன என்று கலைவல்லுநர் கூறுகின்றனர். இதனால் அசோகருடைய கற்றூண்களைச் செய்த வேலைக்காரர்களில் ஒரு சிலராவது வடமேற்கிலிருந்து வந்திருக்கவேண்டும் என்று யூகிக்கலாம். அப்படி வந்தவர்கள் பாக்திரியா நாட்டைச்சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்றும் யூகிக்கலாம். அந்தக்காலத்தில் பாக்திரியா கிரேக்கர்களுடைய ஆட்சியிலிருந்தது. அதற்குக் கொஞ்ச முன்னர் அது பாரசீகருடைய ஆட்சியில் இருந்தது என்பதை நாம் முன் ஓர் அதிகாரத்திற் படித்தோம். ஆகவே அந்த ராஜ்யத்தில் பாரசீகருடைய கலைகளும், கிரேக்கர்களுடைய கலைகளும் ஒன்றோடொன்று கலப்பதற்கு வசதியிருந்தது. அத்தகைய கலப்புப் பண்பாட்டுப் பரம்பரையில் வந்த கலைஞர்கள் அசோகருடைய கற்றூண்களைச் செய்ததாற்றான் அந்தத் தூண்களிலுள்ள சிற்பங்கள் பாரசீகக்கலையின் அம்சங்களையும், கிரேக்கக்கலையின் அம்சங்களையும் ஒருங்கே பெற்றன என்று யூகிப்பது தவறாகாது. சுட்ட செங்கல்லைக் கட்டிடத்திற்கு உபயோகிக்கும் பழக்கமும் வெளிநாட்டிலிருந்துதான் இந்தியாவிற்கு வந்தது என்று கூற

முடியாது. ஏனெனில் மொஹெஞ்சோதாரோவிற் கண்டுபிடிக்கப் பட்டுள்ள கட்டிடங்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை யென்று நாம் முன்னர்ப் படித்தோம். ஆகவே சிந்து சமவெளியில் மௌரிய காலத்திற்கு முன்னரே அப்பழக்கம் இருந்தது என்பது தெரிகிறது. கங்கைச் சமவெளியிலும் அந்த முறை மௌரியர் காலத்திற்கு முன் தெரிந்திருந்தது என்று கூறுவதற்கு ஆதார மில்லை. ஆனால் புதைபொருளாராய்ச்சியாளர்கள் அத்தகைய ஆதாரத்தை இனிமேற் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்று எவ்வாறு நிச்சயமாகக் கூறமுடியும்? இப்போது நமக்குத் தெரிந்த வரையில் கங்கைச்சமவெளியில் மௌரியர் காலத்திற்கு முன்னர் சுட்ட செங்கல்லை உபயோகிக்கும் பழக்கம் சாதாரணமாக இருந் திருக்க முடியாது என்று உறுதியாகக் கூறலாம். மௌரியர் காலத்திற்குப்பின் அம்முறை சாதாரணமாகிவிட்டது. அது போலவே மௌரியர் காலத்திலிருந்து சிற்பக்கலை மிக முன்னேற்ற மடைய ஆரம்பித்தது. அதுவே மக்களுடைய கலை உணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு முக்கிய கருவியாயிற்று. இத்துறையில் வெளிநாட்டுக்கலையின் ஆதிக்கம் நாளடைவில் குறைந்து மறைந்துபோயிற்று. தனிப்பட்ட தன்மைகளோடு கூடிய இந்தியச் சிற்பக்கலை ஓங்கிற்று.

அதிகாரம்—9

கி. மு. இரண்டாம் நூற்றாண்டு

அசோகர் இறந்தபின் மௌரிய சாம்ராஜ்யம் சிதைந்தது. பின்னர்ச் சில நூற்றாண்டுகள் வரையில் வட இந்தியாவில் குறிப் பிடத்தக்க பேரரசு ஒன்றும் தோன்றவில்லை. அவ்வப்போது யாரேனும் ஓர் அரசன் வட இந்தியாவின் சில பல பகுதிகளை வென்று, அவற்றிற்குத் தான் சக்கரவர்த்தி என்று கூறிக்கொண் டது உண்டு. எனினும் வட இந்தியா முழுவதையும் தன்னுள் அடக்கிய சாம்ராஜ்யம் ஒன்றும் அந் நூற்றாண்டுகளில் ஏற்பட வில்லை. அந்த நூற்றாண்டுகளின் வரலாறு நமக்குச் சரியாகத் தெரியவில்லை. எனினும், கர்ண பரம்பரையாக வந்த அரச வம்சா வளிகளையும், சாசனங்கள் நாணயங்கள் ஆகியவற்றின் உதவியால் நாம் அறியக் கிடக்கும் விஷயங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஆராய்ச்சி செய்ததின் பயனாக அக்காலத்தைப்பற்றிய வரலாற்றில்



INDIA

To illustrate Chapters IX to XVIII

Emery Walker Ltd. sc.

ஓரளவு நமக்குத் தெரிகிறது. அவ்வாராய்ச்சி மிகக் கடினமானது. கி. மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்து இந்திய வரலாற்றை எழுதுவதற்கு நாணயங்கள் ஒரு முக்கிய ஆதாரமாக இருக்கின்றன. ஆகவே இந்திய நாணயங்களின் வரலாற்றைப் பற்றி இங்குக் கூறுவது பொருத்தமாக இருக்கும்,

மொஹெஞ்சோதாரோ சிறந்து விளங்கிய காலத்தில் சிந்து சமவெளியில் நாணயங்கள் உபயோகத்தில் இருந்தன என்று கூறுவதற்கு இதுவரையில் எந்தவிதமான ஆதாரமும் கண்டுபிடிக்கப்படவில்லை. * ரிக்வேத காலத்திலும் நாணயங்கள் உபயோகத்தில் இருந்தன என்று கூறமுடியாது. அக்காலத்தில் பொருள்களின் மதிப்பைப் பசுவின் மதிப்பைக்கொண்டு கணக்கிட்டார்கள். தங்கத்தை எடைபோடுவதற்குக் குண்றிமணியை உபயோகித்தார்கள். நூறு குண்றிமணி எடை உள்ள தங்கத்தை நிறுத்தால் நூற்றெண்பது கிரெயின் (grain) இருக்கும். தங்கத்தை எடைபோடுவதற்குக் குண்றிமணியை உபயோகிக்கும் பழக்கம் இன்றைக்கும் இந்தியாவில் இருக்கிறது. நூறுநூறு குண்றிமணி எடையுள்ள தங்கத்துண்டுகள் பொருள்களின் மதிப்பைக் கணக்கிடுவதற்கு வேதகாலத்தின் பிற்பகுதியில் வாணிபத்துறையில் உபயோகிக்கப்பட்டன என்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆனுல் அவைகள் நாணயங்கள் என்ற முறையில் அச்சடிக்கப்பட்டோ அல்லது தனிப்பட்ட குறியீடுகளுடனே உபயோகப்படுத்தப்பட்டன என்று கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும்கிடையாது. புத்தமத நூல்களில் முற்பட்டவை எழுதப்பட்ட காலத்தில் உலோகத்தாற் செய்யப்பட்ட நாணயங்கள் உபயோகத்திலிருந்தன என்று நிச்சயமாகக் கூறலாம். ஆனுல் இந்த நூல்கள் எவ்வெப்போது எழுதப்பட்டவை என்று நிச்சயமாகக் கூற முடியாது, ஆகவே அசோகர் காலத்திற்கு முன்னரே உலோகத்தால் செய்யப்பட்ட நாணயங்கள் வழக்கிலிருந்தன என்று சொல்வதைத் தவிர இந்த ஆதாரத்தைக் கொண்டு வேறொன்றும் கூற முடியாது. ஆனுல் அசோகர் ஆட்சிக்கு எவ்வளவு காலத்திற்கு முன் இந்த நாணயங்கள் உபயோகத்திற்கு வந்தனவென்று சொல்வதும் கடினம்.

இது வரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப்பழைமையான நாணயங்கள் நீண்ட சதுர வடிவமாயிருக்கின்றன. இவை உலோ

---

*தாமிரத்தாலாகிய சில சிறு பொருள்கள் அங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியாளர்கள் அவைகள் நாணயங்களாக இருக்கலாம் என்று முதலில் நினைத்தார்கள். ஆனுல் அவைகள் தாயத்துக்கள் என்ற கருத்து இப்போது ஒப்புக்கொள்ளப்படுகிறது.

கத்தகட்டில் வெட்டப்பட்டவை. ஓரங்களெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றுள் சிலவற்றில் ஒரு துவாரமும் சிலவற்றில் இரண்டு துவாரங்களும் இருக்கின்றன. இந்தத் துவாரங்கள் இந்த நாணயங்களின் ஓரங்களில் இருக்கின்றன. தவிரவும் இவற்றில் பலவகைக் குறியீடுகள் காணப்படுகின்றன. இக்குறியீடுகளின் பொருள் என்னவென்று விளங்கவில்லை, ஆகவே இவற்ருல் தற்போது வரலாற்று மாணவர்களுக்கு எவ்வித உதவியுமில்லை. ஆனுல் எதிர்காலத்தில் அவற்றின் பொருள் விளக்கப்படலாமன்ருே? இரண்டு அச்சுகளைக் கொண்டு நாணயங்களை அடிக்கும் பழக்கம் வெளிநாட்டிலிருந்துதான் இந்தியாவுக்கு வந்திருக்க வேண்டும். இப்போது நமக்குத் தெரிந்தவரையில் இத்தகைய நாணயங்கள் முதல் முதலில் பஞ்சாபில் ஆட்சி செய்த ஓர் அரசனுல் சுமாராக அலெக்சாண்டர் இந்தியாவுக்கு வந்த காலத்தில் அச்சடித்து வழங்கப்பட்டன. அவை வெள்ளி நாணயங்கள். அக்காலத்தில் வழக்கிலிருந்த கிரேக்க நாணயங்களைப் பார்த்துத்தான் அவை செய்யப்பட்டன என்று தெரிகிறது. இந்த முறை சிறிது சிறிதாகத் தான் இந்தியாவில் பரவிற்று. முன்னைய மௌரியர் காலத்தில் இந்த முறை வழக்கில் இருந்தது என்று கூறுவதற்கு இதுவரையில் ஆதாரமில்லை. வாணிபத் துறையில் மெஸபடேமியர்களோடு தொடர்பு கொண்டிருந்த இந்தியர்கள் அக்காலத்தில் மெஸபடேமியாவில் உபயோகப்படுத்தப்பட்ட நாணயங்களைப் பார்த்துத்தான் "புராணு" என்றழைக்கப்படும் நீண்ட சதுரமான நாணயங்களைச் செய்வதற்குக் கற்றுக்கொண்டார்கள் என்று சிலர் கூறுகின்றனர். ஆனுல் இதைப்பற்றியும் நிச்சயமாகக் கூறுவதற்கு ஏற்ற ஆதாரம் ஒன்றுமில்லை. நமக்குத் தெரிந்தவரையில் முதலில் சில நூறுவருட காலம் நீண்ட சதுரவடிவமான நாணயங்கள் வழக்கிலிருந்தன வென்றும், அலெக்ஜாண்டர் படையெழுச்சிக்குப் பின் அவைகளுக்குப் பதிலாக இரட்டையச்சால் அச்சடிக்கப்பட்ட நாணயங்கள் வழக்கத்துக்கு வந்தன என்றும் உறுதியாகக் கூறலாம். பின்னைய நாணயங்களில் அவற்றை அடித்து வழங்கிய அரசரின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன.* ஆனுல் இவை எந்தெந்த ஆண்டுகளில் அச்சடிக்கப்பட்டனவென்று தெரியவில்லை. நாணயம் அச்சடிக்கப்பட்ட ஆண்டையும் நாணயத்தி

---

*அரசர்கள் பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்களிற் சில அசோகர் காலத்திற்கு முற்பட்டவையாக இருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். ஆனுல் அவற்றில் காணப்படும் பெயர் கொண்ட அரசர்கள் எந்தெந்த வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை.

லேயே பொறிக்கும் வழக்கம் இன்னும் பிற்காலத்தில்தான் தோன்றியது. ஆகவே கி. மு. இரண்டாம் நூற்ருண்டைச் சேர்ந்த நாணயங்களின் மூலமாக அவற்றையடித்து வழங்கிய அரசர்களின் பெயர்களையும் அந்த அரசர்களைப்பற்றிய வேறு சில விஷயங்களையும் மாத்திரம் தெரிந்துகொள்ள முடியுமே யொழிய, அவை எந்தெந்த யாண்டுகளில் அச்சடிக்கப்பட்டனவென்று கூறமுடியாது. கி. பி. 175-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நாணயங்களில் அவற்றை வெளியிட்ட அரசர்களின் பெயர்களோடு அவை வெளியிடப்பட்ட வருஷங்களும் குறிக்கப்பட்டிருப்பதால் அந்த நாணயங்கள் வரலாற்று மாணவர்களுக்கு ஒரு தலைசிறந்த துணையாக விருக்கின்றன. எனினும் வருஷம் குறிக்கப்படாத நாணயங்கள் கூடக் கர்ண பரம்பரையாக வந்த அரச வம்சாவளிகளைப்பற்றிய ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாக விருக்கின்றன.

நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு பின்வரும் விஷயங்களை யூகிக்கலாம், அசோகர் இறந்த சிறிது காலத்திற்குள் தட்சசீலமும் கலிங்கமும் சுயேச்சை பெற்றன. மௌரிய சாம்ராஜ்யத்தில் மீதி யிருந்த பிரதேசங்களாகிய கங்கைச் சமவெளியும், மத்திய இந்தியாவின் பெரும்பகுதியும் சுமார் ஐம்பது ஆண்டுகள் மௌரிய வம்சத்தினரின் ஆட்சியில் இருந்தன. அதன்பின் அவை சுங்கவம்சத்தின் ஆட்சிக்கு வந்தன, சுங்கவம்சத்தினர் சுமார் கி. மு. 184–ஆம் ஆண்டிலிருந்து கி. மு. 72–ஆம் ஆண்டு வரையில் ஆட்சிபுரிந்தனர், ஆனால், மகத சாம்ராஜ்யத்தின் ஆதிக்கம் குறைந்துகொண்டே வந்தது. சக்கரவர்த்தியின் அதிகாரம் குறையக்குறைய அவனுக்கடங்கியிருந்த சிற்றரசர்களின் அதிகாரம் பெருகவாரம்பித்தது. ஆகவே இந்தச் சிற்றரசர்களின் ஆட்சியிலிருந்த இராஜ்யங்களின் வரலாறுகளைத் தனித்தனியாகப் படிப்பது அவசியமாகிறது.

முதலில் கங்கைச் சமவெளியிலிருந்த இராஜ்யங்களை எடுத்துக்கொள்வோம். இவற்றுள் வங்காளத்தைப்பற்றிய வரலாறு சரியாகத் தெரியவில்லை. ஆனால் சமீபகாலத்தில் நமக்குக் கிடைத்துள்ள சில ஆதாரங்களின் மூலம் வங்காள முழுவது மில்லாவிட்டாலும் அதன் வட பகுதியேனும் மௌரிய சாம்ராஜ்யத்தில் சேர்ந்திருக்கக்கூடும் என்றும், அது சுங்கவம்சத்தினர் காலத்திலும் அதே நிலையில் இருந்திருக்கக்கூடும் என்னும் யூகிக்க இடமிருக்கிறது. வங்காளத்திற்கு மேற்கே கங்கைச் சமவெளியில் ஏழு ராஜ்யங்களிருந்தன. அவற்றில் நான்கு கங்கை நதிக்குத் தெற்கிலும், மூன்று வடக்கிலும் இருந்தன. தெற்கிலிருந்த

இராஜ்யங்கள் மகதம், காசி, கௌசாம்பி, மதுரை என்பவை. கௌசாம்பியின் தலைநகரம் எது என்பதைப்பற்றி ஆராய்ச்சியாளர்களிடையே பலவித அபிப்பிராயங்களிருக்கின்றன. ஆனால் சாசனங்களையும், இன்றளவுங் காணப்படும் சில கட்டிடங்களையும் வைத்துக்கொண்டு செய்த ஆராய்ச்சியின் பயனாக யமுனை நதிக்கரையில் அலகாபாத்துக்குச் சுமார் முப்பது மைல் மேற்கிலுள்ள கோசம் என்னும் கிராமந்தான் கௌசாம்பியின் தலைநகராக இருக்கலாம் என்று கூறுவது சரியான முடிவு என்று தெரிகிறது. மதுராவும் யமுனை நதிக்கரையில்தான் இருக்கிறது. இது ஆக்ராவிற்கு வடமேற்கிலிருக்கிறது. இது இன்றைக்கும் ஓரளவு முக்கிய நகரமாக இருப்பதோடு கிருஷ்ணனை வழிபடுபவர்களுக்கு ஒரு சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகவு மிருக்கிறது. மதுரா ராஜ்யம் வடக்கில் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்று கூறமுடியாது. கங்கை நதிக்கு வடக்கில் சமவெளியின் கிழக்குப் பகுதியில் விதேகமும் (வட பீகார்), கோசலமும் (அயோத்தி), பாஞ்சாலமும் இருந்தன. விதேகம், கோசலம் ஆகிய இரண்டு இராஜ்யங்களையும் பற்றி முன்னைய அதிகாரங்களில் படித்தோம். பாஞ்சாலத்தின் முக்கிய தலை நகரம் "அஹிச்சந்திரா என்பது. இது இப்போது அழிந்து கிடக்கிறது, ரோகில்கண்டில் பாரெயிலி என்னும் இடத்திற்கு அருகிலிருக்கிறது. இந்த ராஜ்யம் கங்கையின் தென்கரையிலும் பரவி யிருந்தது. அந்தப் பகுதியில் அதற்குக் காம்பிலம் என்ற இரண்டாம் தலை நகரம் ஒன்று இருந்தது. மௌரிய சாம்ராஜ்யத்தின் அழிவையடுத்த சில நூற்றாண்டுகளில் இந்த ராஜ்யங்கள் அவ்வளவு முக்கியமானவையாக இருக்கவில்லை.

மத்திய இந்தியாவிலிருந்த இராஜ்யங்களைப் பற்றிக் கூறப் புகுமுன் அந்தப் பிரதேசத்தின் இயற்கையமைப்பைப் பற்றிச் சிறிது சொல்வது அவசியம். நர்மதை நதியின் ஓரமாக அதன் வடக்குப் பக்கத்தில் பல குன்றுகள் தொடர்ச்சியாக இருக்கின்றன, இந்த மலைத்தொடரை அடுத்து வடக்குப் பக்கத்தில் கரடு முரடான பரந்த நிலப்பகுதி ஒன்று இருக்கிறது. இந்நிலப் பகுதி வடக்கே செல்லச் செல்லச் சரிந்துகொண்டே சென்று யமுனை நதியின் கரையை யடைகிறது. இந்நதியின் கரையில் ஆக்ராவிற்கும் அலகாபாத்திற்கும் இடையிலுள்ள பகுதி மேலே கூறிய கரடு முரடான நிலப்பகுதியின் வடக்கு எல்லையாக இருக்கிறது. இதனால் இந்தக் கரடுமுரடான நிலப்பகுதியில் உற்பத்தியாகும் நதிகளில் ஒன்று கூட நர்மதை நதியோடு சேர்வதில்லை. அவைகளெல்லாம் வடக்கே சென்று யமுனையில் விழுகின்றன. இவற்றில்

சில நதிகள் உற்பத்தியாகும் இடங்கள் நர்மதை நதிக்கு வெகு சமீபத்தில் இருக்கின்றன, இந்த நதிகளில் ஒன்றுகூடப் போக்கு வரவிற்கு ஏற்றதாக இல்லை. எனினும், அவற்றின் பள்ளத்தாக்கு வழியாகக் கங்கைச் சமவெளியிலிருந்து அதன் தெற்கிலுள்ள பிரதேசங்களுக்குச் செல்வது சாத்தியமான காரியம், ஆகவே பழங் காலத்தில் இந்த மத்தியப் பிரதேசத்திற்கும் தெற்கில் தீபகல்ப இந்தியாவிலிருந்த நாடுகளுக்கும் இடையிலிருந்த தொடர்பைவிட, வடக்கில் கங்கைச் சமவெளி நாடுகளுடன் தான் அதற்கு அதிகத் தொடர்பு இருந்தது,

பழங்காலத்தில் பாடலிபுத்திரத்திலிருந்து உஜ்ஜயினிக்குச் செல்லவேண்டுமானுல் முதலில் யமுனைநதிக்கரை யோரமாகவே கௌசாம்பி வரையில் வரவேண்டும். அதன் பின் தெற்கே திரும்பி டான்ஸ் நதிப்பள்ளத் தாக்கு வழியாகச் சுமார் எண்பது மைல் சென்ருல் பார்ஹட் என்ற நகரை அடையலாம். இந் நகரம் அந்தக்காலத்தில் ஒரு முக்கிய ராஜ்யத்தின் தலைநகரமா யிருந்தது. இன்ருேவெனில் அழிந்துபோன சில கட்டிடங்களின் சில பகுதிகளைத்தான் அங்கே காண்கிருேம். இந்நகரத்திற்குச் சுமார் நூற்றெண்பது மைல் தென்மேற்கில் 'விதிசா' என்ற நகரமும், அதற்கப்புறம் சுமார் நூற்றிருபது மைல் தூரத்தில் உஜ்ஜயினியும் இருக்கின்றன. உஜ்ஜயினி மேற்கு மாளவத்திற்கும், விதிசா கிழக்கு மாளவத்திற்கும் தலை நகரங்களா யிருந்தன. மாளவத்திற்கு வடக்கிலுள்ள பிரதேசம் மிகக் கரடு முரடானது. ஆனுல் மாளவம் மேடுபள்ளமதிகமில்லாத ஒரு பீட பூமி. அங்குப் பயிர்த் தொழிலுக்கேற்ற செழிப்பான நிலங்களும் அதிகமாக இருக்கின்றன. மாளவத்தின் வியாபாரத்திற்குத் தலை நகரமாக மாக இருப்பதால் உஜ்ஜயினி இன்றைக்கும் ஒரு முக்கிய நகரமாக இருக்கிறது. விதிசா இன்று பெஸ்நகர் என்று அழைக்கப்படுகிறது. இது தற்காலத்து பில்ஸா நகரத்திற்கு வெகு சமீபத்தில் இருக்கிறது. விதிசாநகரம் பார்ஹட் நகரத்தைப்போலவே அழிந்து கிடக்கிறது, அங்கிருக்கும் இடிந்த கட்டிடங்கள் சரித்திரச் சின்னங்களாக இருக்கின்றன. அதைத் தவிர வேறு வகையில் விதிசாநகரம் இன்று முக்கியத்துவம் பெறவில்லை. பின்னைய மௌரிய சாம்ராஜ்யத்தில் கங்கைச் சமவெளிக்கு வெளியிலிருந்த இராஜ்யங்களில் பார்ஹட் விதிசா, உஜ்ஜயினி ஆகிய மூன்றுந் தான் முக்கியமானவை. இவற்றைத்தவிர வேறு இராஜ்யங்களும் இருந்திருக்கலாம். ஆனுல் அவற்றைப்பற்றிய வரலாறு ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

சுங்க வம்சத்தினர் ஆரம்பத்தில் விதிசா இராஜ்யத்தை ஆண்டு வந்தார்களென்றும், அவர்கள் மௌரியர்களுக்கடங்கிய சிற்றரசர்களென்றும் நமக்குக் கிடைத்துள்ள சில ஆதாரங்களின் மூலம் அறிகிறோம். அந்த வம்சத்தைச் சேர்ந்த புஷ்யமித்திரன் என்னும் ஒருவன் மௌரிய சேனாதிபதியாக இருந்தான். அவன் சுமார் கி.மு. 184-ம்ஆண்டில் தன்னுடைய எஜமானனான மௌரிய அரசனை எதிர்த்துக் கலகஞ் செய்து அவனைக் கொன்றுவிட்டு மகத ராஜ்யத்தின் சிம்மாசன மேறினான். சுங்கர்கள் சுமார் நூறாண்டு ஆட்சி செய்தனர், அந்தக் காலத்தில் அவர்கள் பாடலிபுத்திரத்திலிருந்து தங்கள் தலைநகரை விதிசாவுக்கு மாற்றிக்கொண்டார்கள் என்று தெரிகிறது. ஆகவே அரசியலுலகில் பீகாரின் சிறப்புக் குன்றியது. அதற்குப் பதிலாகச் சில நூறு வருஷ காலம் மாளவத்தின் சிறப்பு ஓங்கியது. மௌரியர் ஆட்சிக்காலம் முழுவதும் புத்தமதத்தின் ஆதிக்கம் ஓங்கி யிருந்ததென்று நினைக்கலாம். ஆனால் சுங்கர்கள் காலத்தில் அந்நிலை மாறிவிட்டது. சுங்க அரசர்கள் பிராமணர்களையே மந்திரிகளாக வைத்துக்கொள்ளும் பழைய வழக்கத்தைக் கைக்கொண்டார்கள். அத்தகைய பிராமண மந்திரி ஒருவன்தான் சுமார் கி. மு. 72-ஆம் ஆண்டில் கடைசிச் சுங்க அரசனைக் கொன்று இராஜ்யத்தைக் கைப்பற்றிக் கொண்டான். கங்கைச் சமவெளியிலிருந்த கௌசாம்பி, மதுரை, பாஞ்சாலம் ஆகிய இராஜ்யங்களிலும், மத்திய இந்திய ராஜ்யங்களிலும் சுங்கர்களுடைய ஆதிக்கம் பரவி யிருந்தது என்று நினைப்பதற்குச் சில சான்றுகள் இருக்கின்றன. ஆனால் கிழக்கில் எவ்வளவு தூரம் அவர்கள் ஆட்சி பரவி யிருந்தது என்று கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை.

சுங்கர்களுடைய ஆட்சிக்காலத்தில் தான் தட்சிணத்திலிருந்த ஆந்திரர்களுடைய ஆதிக்கம் ஓங்கத்தொடங்கி வட இந்தியாவிலும் பரவ ஆரம்பித்தது. ஆந்திர ராஜ்யம் கீழ்க் கடற்கரையில் கலிங்கத்திற்குத் தெற்கிலிருந்தது. அசோகர் இறந்த சில வருஷங்களில் ஆந்திரர்களுடைய அதிகாரம் திடீரென்று குறிப்பிடத்தக்க முறையில் வளர்ந்தது. ஆந்திரர்கள் தங்கள் நாட்டிற்கு மேற்கிலிருந்த பகுதிகளை வென்று பம்பாய்வரையில் சென்றுவிட்டார்கள். பம்பாயில் உள்ள மலைகளிற் காணப்படும் ஆந்திரக் கல்வெட்டுக்கள் இந்த உண்மையை நமக்குக் காட்டுகின்றன, புஷ்யமித்திர சுங்கன் காலத்தில் ஆந்திரர்கள் தட்சிணத்தைக் கடந்து, வட இந்தியாவில் பிரவேசித்து, உஜ்ஜயினியைக் கைப்பற்றினார்கள். இவ்வாறு மேற்கு மாளவம் ஆந்திரர்கள் ஆதிக்கத்திலும், விதி

சையைத் தலைநகரமாகக்கொண்ட கிழக்கு மாளவம் சுங்கர்களுடைய ஆதிக்கத்திலும் சிலகாலம் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால், உஜ்ஜயினியை இழந்துவிட விரும்பாத சுங்கர்கள் அதற்காக ஆந்திரர்களுடன் அடிக்கடி சண்டையிட்டார்கள் என்று தெரிகிறது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் கலிங்கமும் சிறப்படையத் தொடங்கியது. கலிங்கர்கள் வடக்கில் சுங்கர்களுடனும் தெற்கில் ஆந்திரர்களுடனும் சில சமயங்களில் சண்டையிட்டு வந்தார்கள் என்று சில சாசனங்களின் வாயிலாக அறிகிறோம். ஆனால் இந்தச் சண்டைகளில் அவர்கள் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை.

மேலே கூறியவற்றிலிருந்து கி. மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய அரசியல் நிலை பின்வருமாறு இருந்ததென்று கூறலாம். கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியும் மத்திய இந்தியாவும் சுங்கர்களுடைய ஆட்சியிலிருந்தன. ஆந்திரர்களுடைய ஆதிக்கம் தீபகல்ப இந்தியாவின் வட பகுதியில் மாத்திரமின்றி மாளவம் வரையிலும் பரவியிருந்தது. கலிங்கர்களின் ஆட்சி கீழ்க்கடற்கரையில் நிலைபெற்றுவிட்டது. பீகாரும், வங்காளமும் எந்த நிலையிலிருந்தன வென்று சரியாகத் தெரியவில்லை. ஆந்திரர் ஆட்சிக்குட்பட்ட பகுதிக்குத் தெற்கில் தமிழகத்தில் மூன்று முக்கிய இராஜ்யங்கள் இருந்தன. இவை சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு என்பவை. சோழர்கள் கிழக்கிலும், சேரர்கள் தென்மேற்கிலும், பாண்டியர்கள் தென்கிழக்கிலும் ஆட்சி புரிந்து வந்தார்கள். ஆனால் இவைகள் கி. மு. முதல் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவ்வளவு முக்கியமான இராஜ்யங்களாக இருக்கவில்லை. சிந்து சமவெளி வரலாற்றைப் பற்றி அடுத்த அதிகாரத்தில் கூறுவோம்.

அதிகாரம்—10

பஞ்சாபில் கிரேக்க ஆதிக்கம்

மௌரிய சாம்ராஜ்யத்தின் வடமேற்குப் பகுதி தட்சசீலத்திலிருந்த இராஜப்பிரதிநிதியின் ஆட்சியிலிருந்தது என்று முன்னர்ப் படித்தோம். தட்சசீலம் எவ்வாறு மௌரிய சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்து சுயேச்சை பெற்றது என்பதைப் பற்றியும் அதன்பின் அந்தப் பிரதேசத்தில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களைப்பற்றியும் நமக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அந்தப்

பிரதேசத்தில் பலம் பொருந்திய இராஜ்யம் ஒன்றும் ஏற்படவில்லை என்பதை மாத்திரம் நாம் யூகிக்கலாம்; ஏனெனில் அசோகர் இறந்து அரை நூற்றுண்டு கழிந்தபின் பாக்திரியாவை ஆண்டு வந்த கிரேக்கர்கள் கொஞ்சங் கொஞ்சமாகப் பஞ்சாபை வென்று அதைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார்கள். பலம் பொருந்திய இராஜ்யம் அங்கு இருந்திருந்தால் கிரேக்கர்கள் இவ்வாறு செய்திருக்கமுடியாது. சந்திரகுப்தனுக்கும் செலியூக்ஸுக்கும் நடந்த உடன்படிக்கையின்படி ஆப்கானிஸ்தானத்தின் தென் பகுதி சந்திரகுப்தனுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், இந்துக் குஷ்மலைக்கு வடக்கிலிருந்த பகுதியை செலியூக்கஸே வைத்துக் கொண்டான் என்றும் முன்னர்ப் படித்தோம். செலியூக்கஸ் வைத்துக்கொண்ட பகுதிக்கு பாக்திரியா என்று பெயர். அரை நூற்றுண்டுக்குப் பின்னர் பாக்திரியா சுயேச்சை அடைந்தது. அதன் பரப்பு அதிகரித்தது. அதன் அதிகாரம் ஓங்கியது. கி. மு. 200–ஆம் ஆண்டுக்குச் சிறிது பின்னர் ஏறக்குறைய ஆப்கானிஸ்தானம் முழுமையும் பஞ்சாபில் பெரும் பகுதியும் பாக்திரியக் கிரேக்கர்களுடைய ஆட்சியிலிருந்தன. ஆனல் பாக்திரிய அரசனை டெமிட்ரியஸ் என்பவன் இந்தியாவிலிருந்த சமயத்தில், அதாவது கி. மு. 175–ம் ஆண்டில், யூக்ரட்டைடிஸ் என்பவன் பாக்திரியாவையே கைப்பற்றிக்கொண்டான். பின்னர் அவனும் பாக்திரியாவைவிட்டுத் தெற்கே வரவேண்டியதாயிற்று. முடிவில் பஞ்சாப் இரண்டு கிரேக்க ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. இவ்விரண்டிற்கும் இடையில் ஜீலம் நதி எல்லையாக அமைந்தது. கிழக்குப் பகுதியை டெமிட்ரியஸ் வம்சத்தினரும், மேற்குப் பகுதியை யூக்ரட்டைடிஸ் வம்சத்தினரும் வைத்துக்கொண்டார்கள். கிழக்குப் பகுதிக்குத் தற்காலத்தில் சயால்காட் என்று வழங்கும் சாக்கலா தலைநகராயிற்று. காபூல் பள்ளத்தாக்கும் காந்தாரமும் அடங்கிய மேற்குப் பகுதியில், அதாவது இந்துக்குஷ் மலையை எல்லையாகக் கொண்ட தெற்கு ஆப்கானிஸ்தானத்தில், யூக்ரட்டைடிஸ் வம்சத்தினரின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. இவ்விரண்டு இராஜ்யங்களும் சுமார் நூறு ஆண்டுகள் இருந்தன. ஆனல் அதன்பின் அவை நாடோடிக் கூட்டத்தினரால் ஜெயிக்கப்பட்டன. அத்துடன் இந்தியாவில் கிரேக்க ஆட்சி மறைந்தது. கிரேக்கர்களின் ஆதிக்கம் தெற்கில் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்று தெரியவில்லை. சிந்து கத்தியவார் பிரதேசங்கள்கூடக் கிரேக்கர்களால் ஜெயிக்கப்பட்டன என்று ஒரு கிரேக்கவரலாற்று ஆசிரியர் கூறுகிருர். ஆனல் அது உண்மையாக இருந்தாலுங்

கூட, அந்தப் பகுதிகள் நெடுநாள் கிரேக்கர்கள் ஆட்சியில் இருந்திருக்கமாட்டா என்றும், கிரேக்க ஆதிக்கம் பஞ்சாபைத் தவிர வேறு நாடுகளிற் பரவவில்லை என்றும் கூறலாம்.

ஆசியாவின் மேட்டுப் பகுதியிலிருந்த நாடோடிக் கூட்டத்தினர்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு மேற்கு நோக்கி நகர்ந்ததுதான் பாக்திரியாவில் இருந்த கிரேக்கர்கள் தெற்கு நோக்கி நகர்ந்ததற்கு முக்கிய காரணம். இந்த நாடோடிக் கூட்டத்தினரின் வெளியேற்றம் உலக சரித்திரத்தில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சி. இதனால் ஐரோப்பாவின் சரித்திரமே மாறியது. தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேறிய நாடோடிக் கூட்டத்தினர் மேற்கே செல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் சென்ற வழியின் தெற்கிலும் இந்துக்குஷ்மலையின் வடக்கிலும் பாக்திரியா இருந்தது. இந்த நாடோடிக் கூட்டத்தினருள் சகர்கள்* ஹூணர்கள், யூவச்சிகள் முதலிய வகுப்பினர் இருந்தனர். சீன தேசத்தில் காப்பாற்றி வைக்கப்பட்டிருக்கும் சில குறிப்புக்களைக் கொண்டு சுமார் கி. மு. 165-ஆம் ஆண்டில், கிழக்கிலிருந்த ஹூணர்கள் தங்களுக்குமேற்கிலிருந்த யூவச்சிகளைத் துரத்த, அவ்வாறு நெருக்கப்பட்ட யூவச்சிகள் தங்களுக்கு மேற்கிலிருந்த சகர்களை நெருக்க அதனால் சகர்கள் பாக்திரியாவை நோக்கித் தெற்கே திரும்பினார்கள் என்று அறிகிறோம். அதேசமயத்தில் பாக்திரியாவிற்கு மேற்கிலிருந்த கொராஸான் என்ற இராஜ்யத்தை ஆண்டுவந்த பார்த்தியர்கள் பாக்திரியாவின்மீது படை யெடுக்க ஆரம்பித்தார்கள். இவ்வாறு மேற்கில் பார்த்தியர்களாலும் வடக்கில் சகர்களாலும் ஒரே சமயத்தில் தாக்கப்பட்ட யூக்ரட்டைடிஸ் பாக்திரியாவை விட்டு இந்துக்குஷ்மலைக்குத் தெற்கே வந்துவிட்டான் என்பது நிச்சயமாகத் தெரிகிறது.

பஞ்சாபில் ஆட்சி செய்த கிரேக்க அரசர்களைப்பற்றிய வரலாற்றை அறிவதற்கு அவர்களுடைய நாணயங்களே முக்கிய ஆதாரமாக இருக்கின்றன. அவற்றில் சில நாணயங்கள் அற்புதமான வேலைப்பாடமைந்தவை. அவற்றின் காணப்படும் உருவங்கள் சிறந்த கலையம்சம் வாய்ந்தவையாக இருக்கின்றன. ஆனால் ஒரு கிரேக்க அரசனைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இந்திய வர

*சகர்கள் சிலசமயத்தில் சித்தியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் இந்தப் பெயர் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இருந்த நாடோடிக் கூட்டத்தினருக்குப் பொதுவாக வழங்கிய பெயராகையால், இதை நாம் உபயோகிக்காமல் இந்திய நூல்களிற் காணப்படும் பெயராகிய சகர்கள் என்பதையே உபயோகிப்பது நல்லது.

லாற்றில் குறிப்பிடத்தக்க இடம் பெறவில்லை. சண்டை சமாதானம் முதலியவற்றில் மற்ற இந்திய அரசர்கள் செய்த காரியங்களைத்தான் அவர்களும் செய்தார்கள். அவர்கள் தெற்கே சிந்து, கத்தியவார் முதலிய பிரதேசங்களின்மேற் படையெடுத்ததைப் பற்றி ஏற்கெனவே கூறினோம். அவர்களில் ஒருவன் கிழக்கே கங்கைச் சமவெளியின்மீது வெற்றிகரமாகப் படை யெடுத்துப் பாடலிபுத்திரம் வரையில் சென்றான் என்றும், பின்னர்த் தன்னுடைய சொந்த இராஜ்யத்திற்கே ஏற்பட்ட ஆபத்தின் காரணமாகத் திரும்பிவிட்டான் என்றும் கர்ணபரம்பரைச் செய்தி ஒன்றினால் அறிகிறோம். பெஸ்நகரிற் காணப்படும் கற்றூண் ஒன்றின் மூலமாக நிச்சயமான ஒரு செய்தி நமக்குத் தெரிகிறது. மஹாவிஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணனைப் போற்றுவதற்காக ஹெலியோடோரஸ் என்பவனால் அத்தூண் நிறுவப்பட்டது என்று அதிற் செதுக்கப்பட்டிருக்கும் வாசகத்தால் அறிகிறோம். சுமார் கி. மு. 100-ஆம் ஆண்டில் தட்சசீலத்தில் ஆண்டு வந்த ஆண்டியால்ஸிடாஸ் என்ற அரசனால் அனுப்பப்பட்ட தூதன் ஹெலியோடோரஸ் என்பதும் அதன் மூலம் நமக்குத் தெரிகிறது. இதிலிருந்து கிரேக்க அரசர்களுக்கும் சுங்க அரசர்களுக்கும் அரசியல் தொடர்பு இருந்தது என்று தெரிகிறது. மேலும் ஹெலியோடோரஸ் விஷ்ணுபக்தன் என்று தன்னைக் கூறிக் கொள்வதன் மூலம், பஞ்சாபில் ஆட்சி செய்த கிரேக்கர்கள் நாளடைவில் இந்துக்களாக மாறினார்கள் என்பதையும் நாம் யூகிக்கலாம். ஆனால் இதைப்பற்றிய நிச்சயமான தகவல் ஒன்றும் நமக்குத் தெரியாது.

கிரேக்க அரசர்களில் மினாண்டர் என்ற ஒருவன்தான் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடம்பெற்றிருக்கிறான், சயால்காட் இவனது இராஜ்யத்தின் தலைநகரம். புத்தமத நூல்களில் இவன் பெயர் "மிலிந்தா" என்று குறிக்கப்பெற்றிருக்கிறது. புத்தமதத்தைச் சேர்ந்த பெரியார் ஒருவருக்கும் மினாண்டருக்கும் புத்தமதக் கொள்கைகளைப்பற்றி ஒரு பெரிய தர்க்கம் நடந்தது என்றும், அந்த வாதத்தில் முதலில் மினாண்டர் புத்தமதக் கொள்கைகளைத் தாக்கிப் பேசினான் என்றும், பின்னர் அவற்றை ஒத்துக்கொண்டான் என்றும் "மிலிந்தாவின் கேள்விகள்" (மிலிந்த பன்ஹா) என்ற ஒரு பௌத்த நூலிற் கூறப்படுகிறது. அறிவிலும், ஆண்மையிலும், உடல்வன்மையிலும், உள்ளஉரத்திலும் மினாண்டருக்கிணையான எவரும் இந்தியாவிலேயே இல்லை. மேலும் மினாண்டர் " பெருஞ் செல்வமும் கணக்கற்ற சேனைவீரர்களும் உடை

யவன்'', என்று இந்நூல் மினண்டரை வெகுவாகப் புகழ்ந்து பேசுகிறது. உண்மையிலேயே மினண்டர் இவ்வளவு பெருமை வாய்ந்தவனு என்பது ஐயத்திற்கிடமானது. ஆனால் இத்தகைய குறிப்பிலிருந்து ஒன்று தெரிந்து கொள்ளலாம். பெஸ்நகரிற் கற்றூண் நாட்டிய ஹெலியோடோரஸைப்போலவே மினண்டரும் இந்திய மதங்களின் போதனைகளால் ஈர்க்கப்பட்டான் என்பதும், புத்தமதத்தைப் பொறுத்தமட்டில் அவன் அதைத் தழுவாவிட்டாலும் அந்த மதத்தைப் பின்பற்றியவர்களிடத்தில் பிரியமாகவும் ஆதரவாகவும் இருந்தான் என்பதும் நன்ருகத் தெரிகிறது.

மௌரியர் காலத்திலும் சுங்கர்கள் காலத்திலும் இந்தியாவிற்கும் கிரேக்க ராஜ்யங்களுக்கும் நேரடியான தொடர்பு இருந்தது. இந்தத் தொடர்பினுல் இந்தியாவிற்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதா என்று அறிய விரும்புவது இயல்பே. நாணயங்களை அச்சடிக்கும் விஷயத்திலும், சிற்பக்கலையிலும் கிரேக்க முறைகள் எவ்வாறு இந்தியரால் கையாளப்பட்டன என்பது முன்னர்க் கூறப்பட்டது. கிரேக்கக் கட்டிடக்கலையின் தன்மைகளும், பாரசீகக் கட்டிடக்கலையின் தன்மைகளும் ஒன்று சேர்ந்த ஒரு கலப்புப் பண்பாட்டின் அம்சங்கள் கி. மு. இரண்டாம் நூற்ருண்டிலும் முதல் நூற்ருண்டிலும் இந்தியக் கட்டிடக் கலையில் நுழைந்து இடம்பெற்று விட்டன என்று ஐயமின்றித் தெரிகிறது, இவ்வுண்மை பார்ஹுட், புத்தகயா, சாஞ்சி. என்ற இடங்களில் அழிந்ததுபோக மீதியிருக்கும் கட்டிடங்களின் மூலம் நமக்குத் தெரிகிறது. இத்துறையில் பல மாறுதல்கள் நாளடைவில் ஏற்பட்டன. மேல்நாட்டுக் கலைஞர்களின் தொழில் நுணுக்கத்தைக் கற்றுக்கொண்ட இந்தியக் கலைஞர்கள் உருவத்திலும் கட்டிட அமைப்பிலும் மேல்நாட்டு முறைகளை அப்படியே பின்பற்ருமல் தங்கள் இஷ்டம்போல் சொந்த முறைகளைக் கையாண்டார்கள். அதன் பயனுகப் புதியதொரு கட்டிடக்கலை உருவாயிற்று, இது மேல்நாட்டுக் கலைத்தன்மைகளும் இந்தியக் கலைத் தன்மைகளும் ஒன்ருகச் சேர்ந்ததனுற் பிறந்த ஒரு புதிய பண்பாடு. இதைப்பற்றி ஸர்ஜான் மார்ஷல் பின் வருமாறு கூறுகிருர்: "அடிப்படையில் இது தேசியக் கலைதான். இந்திய மக்களின் உணர்ச்சிகளும் எண்ணங்களுமே இப்புதிய கலைக்கு ஆதாரம். அவர்களுடைய கடவுட் கோட்பாடுகளையும் இயற்கையோடு அவர்களுக்கிருந்த நெருங்கிய தொடர்பையும் இந்தக்கலை சிறந்த முறையில் விளக்குகிறது."

விஞ்ஞானத் துறையில் கிரேக்கர்களிடமிருந்து இந்தியர்கள் சில விஷயங்களைக் கற்றுக்கொண்டிருக்கக் கூடும் என்று நினைப்பதற்குச் சில சான்றுகள் உள. ஆனால் இலக்கியம்*. அரசியற்கலை, மதம் ஆகிய துறைகளில் கிரேக்கர்களிடமிருந்து இந்தியர்கள் ஏதாவது கற்றிருக்கக்கூடும் என்று கூறுவதற்கு எந்தவிதமான சான்றும் கிடையாது. மருத்துவம், வானசாஸ்திரம், சோதிடம் ஆகிய துறைகளில் கிரேக்கர்களிடமிருந்து இந்தியர்கள் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டார்கள் என்பது இந்திய நூல்கள் பலவற்றின்மூலம் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஜாதகங் கணிக்கும் பழக்கம் பண்டைக் காலந் தொட்டு இன்றளவும் இந்தியாவிற் காணப்படும் விஷயம். இத்துறையில் கிரேக்க முறைகளையும் கிரேக்கக் கலைச்சொற்களையும் இந்தியர்கள் அப்படியே கையாண்டார்கள், ஆனால் இவ்விஷயங்களை எல்லாம் நாம் அறிந்துகொள்வதற்கு ஆதாரமாயுள்ள இந்திய நூல்கள் எக்காலத்தில் எழுதப்பட்டவை என்று நிச்சயமாகக் கூறமுடியாது. ஆதலால் மேலே கூறப்பட்ட கிரேக்க முறைகள் எப்போது இந்தியாவிற்குள் நுழைந்தன என்று நிர்ணயிக்க முடியாது. இவற்றில் சில விஷயங்களைப் பிற்காலத்தில் இந்தியாவிற்கும் அலெக்சாண்டிரியாவுக்கும் ஏற்பட்ட தொடர்பினால் இந்தியர்கள் கற்றுக் கொண்டிருக்கக்கூடும். ஆனால் ஒரு சில விஷயங்களையாவது கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலும் முதல் நூற்றாண்டிலும் ஏற்பட்ட நேரடியான தொடர்பினால் இந்தியர்கள் கற்றுக்கொண்டார்கள் என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

தத்துவ சாஸ்திரத்தில் இந்தியக் கோட்பாடுகளுக்கும், கிரேக்கக் கோட்பாடுகளுக்கும் தெளிவான ஒற்றுமை காணப்படுகிறது. இக்கருத்துக்களை இந்தியர்களிடமிருந்து கிரேக்கர்களோ, அல்லது கிரேக்கர்களிடமிருந்து இந்தியர்களோ நேரடியாக இரவல் வாங்கிக் கொண்டார்கள் என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஆனால் இதற்கு எந்தவிதமான சான்றும் இல்லை. தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்ட கிரேக்க அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் ஒருவர்க்கொருவர் தொடர்பில்லாமலே ஒரேவிதமான முடிவுக்கு வந்தார்கள் என்று நினைப்பதுதான் பொருத்தமாக இருக்கும். சிந்தனையில் ஈடுபடும் யாரும் சிலமுக்கியமான விஷயங்களைப்பற்றிச் சிந்திக்காமலிருக்க முடியாது. இந்த

---

* கிரேக்க நாடக நூல்களைப் பார்த்துத்தான் இந்தியர்கள் நாடகங்களை எழுதக் கற்றுக்கொண்டார்கள் என்று சில ஆராய்ச்சியாளர்கள் நினைக்கின்றனர். ஆனால் இந்தக் கருத்தைப் பலர் ஒத்துக்கொள்வதில்லை.

முக்கிய விஷயங்களின் ஆராய்ச்சியில்தான் கிரேக்க அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் ஈடுபட்டார்கள். ஒரே விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கும் இருவர் சில சமயங்களில் ஒரேவிதமான முடிவுக்கு வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எனினும் யாரேனும் ஒரு நாடோடிச் சாமியார் ஏதாவதொரு சமயத்தில் இந்தியாவிலிருந்து கிரேக்க ராஜ்யம் ஒன்றிற்குப் போயிருக்கக்கூடும் என்றும், அங்கே அவர் தமது கொள்கைகளைப்பற்றிப் பேசியிருக்கக் கூடும் என்றும், அதன் பயனாகக் கிரேக்கர்களுடைய தத்துவ சாஸ்திரம் இந்திய முறையைப் பின்பற்றி வளர்ந்தது என்றும் கூறினால் அதை மறுக்கமுடியாது. அதுபோலவே யாரேனும் ஒரு கிரேக்க அறிஞர் இந்தியாவிற்கு ஏதேனுமொரு சமயத்தில் வந்திருக்கக்கூடும் என்றும், அதன்பயனாக இந்தியத் தத்துவ சாஸ்திரம் கிரேக்க முறையைப் பின்பற்றி வளர்ந்தது என்றும் கூறினால் அதையும் யாரும் மறுக்கமுடியாது. ஆனால் கிரேக்க அறிஞர்களும் இந்திய அறிஞர்களும் ;தத்துவ சாஸ்திரத்தில் ஒருவரோடொருவர் நேரடியான தொடர்பு வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தார்கள் என்றும், அதன் பயனாக ஒருவருடைய கருத்துக்களை மற்றவர் இரவல் வாங்கிக் கொண்டனர் என்றும் நினைப்பதற்கு அவசியமில்லை. மேலும், மொழி வேறுபாடு இம் முறைக்குப் பெருந்தடையா யிருந்திருக்கும். பொதுவாகக் கூறுமிடத்து, சாதாரண விஷயங்களையும் சில கற்பனைக் கதைகளையும் தவிர வேறு எந்த விஷயத்தையும் கிரேக்கர்கள் இந்தியர்களிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்று கூறுவதற்கு எந்த விதமான சான்றும் இல்லை.

அதிகாரம்—11

சகர்களும் பஹ்லவர்களும்

பாக்திரியாவிலிருந்த கிரேக்கர்களைத் துரத்திவிட்டு அந்நாட்டை சகர்கள் கைப்பற்றிக் கொண்டார்களென்று முன்னைய அதிகாரத்திற் படித்தோம். ஆனால் அவர்கள் அதிக நாள் அங்கிருக்க முடியவில்லை. ஏனெனில் கிழக்கிலிருந்த யூவச்சிகள் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறி கி. மு. 125-ஆம் ஆண்டிற்கப்புறம் பாக்திரியாவைக் கைப்பற்றிக்கொண்டார்கள். பாக்திரியாவிலிருந்து துரத்தப்பட்ட சகர்கள் முதலில் மேற்கே செல்ல முயன்றார்கள். ஆனால் பார்த்திரியர்கள் ஆதிக்கம் சகர்களை அந்தத் திசையில் முன்னேற முடியாதபடி தடுத்தது. ஆகவே சகர்கள்

முடிவில் ஆப்கானிஸ்தானத்தின் வழியாகவும், பலூச்சிஸ்தானத்தின் வழியாகவும் இந்தியாவிற்குள் நுழைந்தார்கள், பார்த்தியர்களின் ஆதிக்கம் கொராஸான் அல்லது வடகிழக்குப் பாரசீகத்தில் கி. மு. மூன்றும் நூற்றுண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. கி. மு. 170-முதல் 138-வரையில் ஆட்சிசெய்த முதலாம் மித்திரடேட்டிஸ் என்ற அரசன் பாரசீகத்தின் பெரும்பான்மையான பகுதிகளை வென்று பார்த்திய ராஜ்யத்தை சாம்ராஜ்யமாக்கினுன். சகர்கள் எவ்வாறு தெற்கே சென்றுர்கள் என்பதைப்பற்றிச் சரியான குறிப்புக்கள் ஒன்றுமில்லை. ஆனுல் கி. மு. 123-முதல் 88-வரையில் ஆட்சி செய்த இரண்டாம் மித்திரடேட்டிஸ் என்ற பார்த்திய அரசனுல் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பின் மேற்கு ஆப்கானிஸ்தானத்தைத் தாண்டி, பலூச்சிஸ்தானத்திற்குள் நுழைந்து, அங்கிருந்த பார்த்தியர்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு, அதன்பின் இருதிறத்தாரும் சேர்ந்து கிழக்கே திரும்பிக் குவெட்டாவின் அண்மையிலுள்ள கணவாய்களின் வழியாக சிந்து நாட்டிற்குள் நுழைந்தார்கள் என்று ஒருவாறு கூறலாம். இந்தியாவிற்கு வந்தபின்னர் அவர்கள் தெற்கே கடற்கரை வரையிற் சென்று, அங்கிருந்து குஜராத்திற்குள்ளும் நுழைந்தார்கள். வடமேற்கில் அவர்கள் பஞ்சாபை வென்றுர்கள்.

இந்தச் சமயத்தில் பார்த்தியர்களின் அதிகாரம் மங்கிக் கொண்டு வந்தது என்று தோன்றுகிறது. கி. மு. முதல் நூற்றுண்டில் கிழக்குப் பாரசீகத்திலிருந்த ஒரு வம்சத்து அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் "மன்னர் மன்னன்" என்ற பட்டம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பட்டம் சுயேச்சை பெற்ற அரசுரிமையைக் காட்டுகிறது. அதுபோலவே பஞ்சாபிலிருந்த பார்த்திய அரசர்களும் தங்கள் நாணயங்களில் "மன்னர் மன்னன்" என்ற பட்டத்தைப் பொறித்து வழங்கினுர்கள். இந்தியாவிலிருந்த அரசர்களைப் பார்த்திய வம்சத்தினர் என்றே சக வம்சத்தினர் என்றே பிரித்துக்கூறமுடியாது, பொதுவாக அவர்களை பஹ்லவர்கள் என்று கூறுவதுதான் சௌகரியமானது. பஹ்லவர் என்ற சொல்லும் பார்த்தியர் என்ற சொல்லும் ஒரே மூலத்திலிருந்து வந்தவை. பாரசீகத்திலிருந்த அரசர்களைப் பார்த்தியர்களென்றும், இந்தியாவிலிருந்த அரசர்களை பஹ்லவர்களென்றும் பிரித்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

பஹ்லவர்கள் பஞ்சாப் முழுவதையும் ஒரேகாலத்தில் வென்றுவிடவில்லை. முதலில் சுமார் கி. மு. 75-ம் ஆண்டில் பஞ்சாபின் மேற்குப்பகுதியான காந்தாரத்தை மாவஸ் என்ற பஹ்லவ அரசன்

வென்றான். சக-பஹ்லவ அரசர்களுக்குள் இவனைப்பற்றித்தான் முதன் முதலாக வரலாற்றுக் குறிப்பு நமக்கு அகப்படுகிறது. சுமார் இருபதாண்டுகட்குப் பின்னர், மாவஸுக்குப்பின் பட்டத்திற்கு வந்த முதலாம் ஆவஸ் என்பவன் பஞ்சாபின் கிழக்குப் பகுதியான சயால்காட்டை வென்றான். பஹ்லவர்களுடைய ஆட்சி சுமார் கி பி. 50-ஆண்டுவரையில் இருந்தது. அதன் பின்னர் அவர்களைக் குஷாணர்கள் தோற்கடித்தார்கள், சக-பஹ்லவர்கள் மதுராவையும் ஆண்டுவந்தார்கள். ஆனால் அதைக் கடந்து அவர்கள் கங்கைச் சமவெளியில் இன்னும் கிழக்கே சென்றார்களா என்பதற்கு எவ்விதச் சான்றும் இல்லை. அவர்களுடைய ஆட்சியால் இந்தியப் பண்பாட்டில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை.

தெற்கில் அவர்களுடைய ஆதிக்கம் நிலையான பலனைத்தந்தது. குஜராத்தின் மேற்குப் பகுதியில் கத்தியவார் என்ற ராஜ்யத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சக ஆதிக்கம் சில நூற்றாண்டுகள் வரையில் நிலைத்து நின்றது. குஜராத் மாளவத்திற்கு அண்மையில் இருக்கிறது. கிழக்கு மாளவம் சுங்கர்கள் ஆட்சியிலும், மேற்கு மாளவம் ஆந்திரர்கள் ஆட்சியிலும் இருந்தனவென்று ஒன்பதாம் அதிகாரத்திற் கூறினோம். சுமார் கி. மு. எழுபத்திரண்டாம் ஆண்டில் சுங்க வம்சம் அழிந்ததும் ஆந்திரர்கள் மாளவம் முழுவதையும் கைப்பற்றிக்கொண்டார்கள். அதன் பின்னர் அவர்களுக்கும், குஜராத்திலிருந்த சகர்களுக்கும் போருண்டது. அந்தப் பகைமை நெடுங்காலம் நீடித்திருந்தது என்று தெரிகிறது. இந்த நெடுங்காலப் பகைமையைப் பற்றி நமக்குக் கிடைத்துள்ள செய்திகளில் கி. பி 100-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டவை தாம் நம்பத் தகுந்தவை. அதற்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய செய்திகளெல்லாம் கர்ண பரம்பரைச் செய்திகளே. இவ்வாறு பொதுமக்களிடையில் வழங்கி வந்த கர்ண பரம்பரைச் செய்திகளின் மூலம் நாம் கியாதிபெற்ற விக்ரமாதித்தன் என்ற அரசனைப் பற்றி அறிகிறோம். உஜ்ஜயினியில் ஆண்டு வந்த ஆந்திர அரசன் ஒருவனுடைய கொடுங்கோன்மையைத் தாங்க முடியாத சில குடிகள் குஜராத்தில் ஆட்சி செய்த சகர்களுடைய துணையை நாடினார்கள்; சகர்கள் உஜ்ஜயினியின் மீது படையெடுத்து, அந்தக் கொடுங்கோலரசனைக் கொன்று உஜ்ஜயினியைத் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டார்கள். அதன் பின் அந்தக் கொடுங்கோலரசனுடைய மகனை விக்ரமாதித்தன் ஒரு படையைத் திரட்டிச் சகர்களை முறியடித்து, அவர்களை உஜ்ஜயினி

லிருந்து துரத்திவிட்டான். பின்னர் விக்ரமாதித்தன் தன் வெற்றியைக் கொண்டாடுவதற்காக ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினன். அதற்கு விக்ரம சகாப்தம் என்று பெயர். அது கி. மு. 58-ஆம் ஆண்டில் தொடங்கியது. இந்தக் கர்ண பரம்பரைச் செய்தியை நாம் முற்றிலும் பொய் என்று தள்ளிவிட முடியாது, விக்ரமாதித்தன் என்ற பெயர் கொண்ட பல அரசர்கள் இந்தியாவில் இருந்தார்கள். அத்தகைய பல விக்கிரமாதித்தர்களுடைய அருஞ்செயல்களெல்லாம் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு ஒரு நல்லகதையாகக் கட்டப்பட்டிருக்கிறது என்று நினைக்க இடமிருக்கிறது. குப்தவம்சத்தைச் சேர்ந்த சந்திரகுப்தனுக்கும் விக்ரமாதித்தன் என்ற பெயர் உண்டு. அவன் மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு நான்கு நூற்ருண்டுகளுக்குப்பின்னர்ச் சகர்களை முடிவாகத் தோற்கடித்தான். சந்திரகுப்தனுடைய வெற்றியை அடிப்படையாக வைத்துக்கொண்டே மக்கள் விக்கிரமாதித்தன்கதையை ஜோடித்திருக்கலாம். இன்றேல் உண்மையிலேயே கி. மு. முதல் நூற்ருண்டின் இடையில் ஒரு விக்கிரமாதித்தன் சகர்களோடு சண்டை செய்திருக்கலாம். இது உண்மையாளுல் சகர்களுக்கும், ஆந்திரர்களுக்கும் கி. மு. முதல் நூற்ருண்டின் இடையிலிருந்தே பகை தொடங்கிவிட்டது என்று கூறலாம்.

அதிகாரம்—12

கடல்கடந்த வியாபாரம்

குஜராத்தில் சகர்களுடைய ஆட்சி நிறுவப்பட்ட விவரத்தை முன்னைய அதிகாரத்திற் கூறினேம். இந்தியாவின் கடற்கரை மிக நீளமானது. ஆனல் இதில் குஜராத்தைச் சேர்ந்த பகுதி தான் இந்தியாவிலிருந்து மேல் நாடுகளுக்குச் செல்வதற்கு ஏற்ற இயற்கை வாயிலாக இருக்கிறது; இந்தியாவிற்கும் மேல் நாடுகளுக்கும் பழங்காலத்தில் கடல் வழியாகப் போக்கு வரவு இருந்தது. ஆனல் அதைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. நமக்குத் தெரிந்த விஷயங்களை இங்குக் கூறுவது பொருத்தமாக இருக்கும். சிந்து சமவெளிக்கும் மெஸபடேமியாவுக்கும் கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே போக்கு வரவு இருந்தது என்று மொஹெஞ்சோதாரோவிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொருள்களின் மூலம் அறிகிறேம். இந்தப் போக்குவரவு தரை மார்க்கமாக இருந்ததா அல்லது கடல்

மார்க்கமாக இருந்ததா என்று இன்னும் உறுதியாகத் தெரிய வில்லை. கடல்வழிதான் சாத்தியமானது என்றும், அவ்வழி தான் உண்மையில் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்,

ரிக்வேதத்தில் "சமுத்திரம்" என்ற சொல் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. இதிலிருந்து ரிக்வேத காலத்து ஆரியர்கள் சிந்து சமவெளியிற் கடற்கரை வரையிற் பரவியிருந்தார்களென் றும், கப்பலோட்டுவதில் அவர்களுக்கு நல்ல பயிற்சி இருந்தது என்றும் சில ஆசிரியர்கள் யூகிக்கிறார்கள். ஆனால் "சமுத்திரம்" என்ற சொல் முதலில் சிந்து நதியைக் குறிப்பதற்குத்தான் உப யோகிக்கப்பட்டது. என்றும், பிறகாலத்தில்தான் அது இப் போது வழங்கும் பொருளில் உபயோகிக்கப்பட்டது என்றும் வேறு சிலர் சொல்லுகின்றனர். இந்த இரண்டாவது அபிப்பி ராயந்தான் சரியானதாக இருக்கும் என்று தோன்றுகிறது. இந்த அபிப்பிராயத்தை ஒத்துக்கொண்டால், இந்தியாவுக்கும் மேல் நாடுகளுக்கும் இருந்த கடல் போக்கு வரவைப்பற்றி முதல் முத லாகக் குறிப்பிடும் நூல் பழைய ஏற்பாடு (விவிலிய நூல்) தான் என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். கி.மு. பத்தாம் நூற்றாண் டில் ஆட்சி செய்த யூத அரசனான சாலமன் என்பவனைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் காணப்படும் சில குறிப்புக்களின் மூலம், அந்தக்காலத்தில் இந்தியாவிலிருந்து மயில், குரங்கு, தங்கம், யானைத்தந்தம், சந்தனம் முதலியவை செங்கடல் வழியாகப் பினீ-ஷியக் கப்பல்களிலும், யூதக்கப்பல்களிலும், இஸ்ரேல் நாட்டிற் குக் கொண்டு போகப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். இந்த முடிவு சரியான முடிவு என்பதற்கு அவர்கள் காட்டும் ஆதாரங்களைப்பற்றி ஆராய்வதற்கு இங்கு இடமில்லை. இந்த அபிப்பிராயம் சரியானதுதான் என்று நாம் ஒத்துக்கொண்டாலுங்கூட, மேலே குறிப்பிட்ட வியாபாரப் பொருள்களை எடுத்துக் கொண்டுபோன கப்பல்கள் இந்தியக் கப்பல்களா அல்லவா என்ற விஷயத்தை முடிவு செய்வது எளி-தன்று. இந்த விஷயத்தில் திட்டமான முடிவு கூறவேண்டு மானால், ஒபீர் என்ற துறைமுகம் எங்கிருந்தது என்பதை முத லில் தீர்மானிக்க வேண்டும். பினீஷியக் கப்பல்கள் தெற்கே ஒபீர் வரையில் வந்து பொருள்களை ஏற்றிக்கொண்டு திரும்பிச் சென்றன என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஒபீர் என்ற துறை முகம் சிந்துநதியின் கடல் வாயிலிருந்தது என்று சிலர் கூறுகின் றனர். இது உண்மையானால் பினீஷியக் கப்பல்கள் தாம் இந்தியா

வரையில் வந்து திரும்பிச் சென்றன என்பது உறுதியாகும். ஆனால் ஒபீர் என்ற துறைமுகம் அரேபியாவின் தென் கிழக்கில் இருந்தது, என்று சிலர் எண்ணுகின்றனர். இந்த அபிப்பிராயந் தான் சரியானதாக இருக்கும் என்று தோன்றுகிறது. அப்படியானால், இந்தியக்கப்பல்கள் இந்தியாவிலிருந்து சரக்குகளை ஏற்றிக் கொண்டு, கரையோரமாகவே சென்று அரேபியா தேசத்தை அடைந்தன என்றும், பின்னர் அங்கிருந்து இந்தியாவுக்குத் திரும்பின என்றும், இத்தகைய போக்கு வரவு கி. மு. பத்தாம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டுவிட்டது என்றும் நாம் நினைக்க இடமிருக்கிறது.

இந்தியாவிற்கும் பாரசீக வளைகுடாவிற்கும் கி. மு. ஏழாம் நூற்றாண்டிலும், ஆறும் நூற்றாண்டிலும் கடல் வழியாகப் போக்கு வரவு இருந்தது என்பதைக் காட்ட நல்ல சான்று இருக்கிறது. அசீரியாவில் சுமார் கி. மு. 700-ஆம் ஆண்டில் ஆட்சி செய்த 'சென்னுச்செரிப்' என்ற அரசன் கப்பல்கட்டும் பினீஷியத் தொழிலாளிகளை வரவழைத்து, ஒரு கப்பற் படையை உண்டாக்கி, அதைப் பாரசீக வளைகுடாவில் வைத்திருந்தான். பினனர்ச்சிறிது காலங்கழித்து யூப்ரட்டீஸ் நதியின் துறைமுகத்திலிருந்து சீனுவிற்குக் கப்பல்கள் சென்றன. யூப்ரட்டீஸ் நதிக்கும் சீனுவிற்கும் இடையில் நடமாடிய கப்பல்கள் இவ்வளவு நீண்ட பயணத்தின் போது இந்தியாவில் ஏதாவதொரு துறைமுகத்தில் தங்கிச்சென்றிருக்கவேண்டும் என்று யூகிப்பது பொருத்தமாக இருக்கிறது. அந்தக்காலத்தில் உலகத்தின் சிறந்த சந்தையாக விளங்கிய பாபிலோனியாவிற்கும், இந்தியாவின் மேற்குக்கடற்கரை நாடுகளுக்கும் இடையில் ஆறும் நூற்றாண்டில் கப்பல் போக்குவரவு இருந்தது என்று தெரிகிறது. ஆனால் இந்தப் போக்குவரவில் உபயோகப்படுத்தப்பட்ட கப்பல்கள் பாபிலோனியக் கப்பல்களே தவிர இந்தியக் கப்பல்கள் அல்ல என்று நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு கூறலாம்.

முதலாம் டேரியஸ் ஆட்சிக்காலத்திலிருந்து பாபிலோனியாவின் வீழ்ச்சி தொடங்கியது. அதன்பின் இந்தியாவுக்கும் பாரசீக வளைகுடாவுக்கும் இருந்த வியாபாரத் தொடர்பு அற்று விட்டதென்றும், அதற்குப் பதிலாக இந்தியா செங்கடல் வழியாக மேல்நாடுகளுடன் தொடர்பு கொண்டது என்றும் யூகிக்கலாம். ஆனால் வியாபாரச் சரக்குகளை இந்தியக் கப்பல்களில் ஏற்றிக் கொண்டு சென்றார்கள் என்று கூறுவதற்குத் தக்க சான்று ஒன்றும் இல்லை. இந்தியச் சரக்குகள் இறக்குமதியான முக்கியத்

துறைமுகங்களாகிய மோச்சா, ஏடன் ஆகிய நகரங்களிலிருந்த வியாபாரிகள் தங்கள் கப்பல்களை இந்தியாவுக்கு அனுப்பி அவற்றில் தங்களுக்கு வேண்டிய பொருள்களை ஏற்றிக் கொண்டு சென்றிருக்கக்கூடும். இந்த முறை பிற்காலத்திலும் சில சமயங்களில் கையாளப்பட்டது என்பது நமக்கு நன்ருகத் தெரிகிறது. சிந்துநதியை ஆராய்ச்சி செய்வதற்காக முதலாம் டேரியஸ் சுமார் கி. பி. 510-ஆம் ஆண்டில் அனுப்பிய கப்பல்கள்தாம் நமக்குத் தெரிந்தவரையில் இந்தியாவினின்று மேல்நாடுகளுக்குச் சென்ற முதல் கப்பல்கள். இந்த ஆராய்ச்சிப் பயணம் பெஷாவாருக்கருகில் தொடங்கி எகிப்து தேசத்தில் முடிந்தது. ஆனால் இந்தப்பிரயாணத்தைப் பற்றிய விஷயங்களை அறிந்துகொள்ளுவதற்கு நமக்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இந்தப் பிரயாணத்தில் உபயோகப்பட்ட கப்பல்கள் இந்தியாவில் இந்தியத் தொழிலாளர்களால் கட்டப்பட்டவைதாமா அல்லது பாரசீகத்திலிருந்தோ அதற்கும் மேற்கிலிருந்தோ வரவழைக்கப்பட்ட தொழிலாளிகளால் சிந்துநதியில் கட்டப்பட்டவையா என்று அறிந்து கொள்ளுவதற்கும் நமக்கு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே கப்பல் கட்டும் தொழில் மேற்கு இந்தியாவில் எப்போது ஆரம்பமாயிற்று என்று சொல்லமுடியாது. இந்தியாவில் கப்பல்கட்டும் தொழில் இருந்தது என்று காலத்தால் முற்பட்ட புத்தமத நூல்கள் சிலவற்றின் வாயிலாக அறிகிருேம். இந்நூல்கள் கி. மு .500-ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டவை. ஆனால் அவற்றில் பழைய கதைகள் சில இருக்கின்றன. ஆகவே இந்த ஆதாரத்தின் மூலமாகவும் இந்தத் தொழில் எப்போது இந்தியாவில் தொடங்கியது என்று அறிந்துகொள்ள முடியவில்லை. புத்தமதம் நிறுவப்பட்ட காலத்திற்கும் கிறிஸ்து சகாப்தத் தொடக்கத்திற்கும் இடையில் இந்தியர்கள் கடற்பிரயாணத்தில் தாராளமாக ஈடுபட்டார்கள் என்பதையும், அவர்கள் கரையோரமாகவே இலங்கைக்கும் அண்மையிலுள்ள வேறு நாடுகளுக்கும் சென்று வந்தார்கள் என்பதையும் தவிர வேருென்றும் நமக்கு நிச்சயமாகத் தெரியாது. இந்தியர்கள் அந்தக் காலத்தில் கரையினின்று அதிகதூரம் சென்ருர்கள் என்று நம்புவதற்கு ஆதாரமில்லை. ஆனால் அலெக்சாண்டர் வருவதற்குள் சிந்துநதியில் கப்பல்கட்டும் தொழில் நன்ருக நிலைபெற்றுவிட்டது. அவன் திரும்பிப் போகும்போது தன் படையில் ஒரு பகுதியை இந்தியக் கப்பல்களில் ஏற்றிச் சிந்து நதி வழியாக யூப்ரட்டிஸ் நதிக்கு அனுப்பினுன்,

கி. மு. மூன்றும் நூற்றாண்டிலிருந்து இந்தியாவுக்கும் மேல் நாடுகளுக்கும் நல்ல முறையில் வாணிபம் நடைபெறலாயிற்று. எகிப்து தேசத்தில் புதிய துறைமுகங்கள் நிறுவப்பட்டன. இந்தியச் சரக்குகள் செங்கடல் வழியாக மத்தியதரைக்கடல் துறைமுகங்களை அடைந்தன. ஆனால் இந்தியாவிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு புறப்பட்ட கப்பல்கள் நேராக எகிப்து தேசத் துறைமுகங்களுக்குச் செல்லவில்லை. மத்தியதரைக்கடல் துறைமுகங்களிலிருந்து வந்த வாணிகர்கள் இந்தியப் பொருள்களை மோச்சா என்ற துறைமுகத்திலோ அல்லது ஏடன் என்ற துறைமுகத்திலோ அல்லது பாபல்மாண்டப் ஜலசந்திக்கண்மையிலிருந்த வேறு நகரங்களிலோ வாங்கிக்கொண்டு சென்றார்கள். இந்தப் பொருள்கள் மேலேகூறிய இடங்களுக்கு எவ்வாறு சென்றன என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு அரபிக்கடலை தாண்டிச்செல்ல இந்தியக் கப்பல்களை உபயோகிக்கும் பழக்கம் கி. மு. மூன்றும் நூற்றாண்டுக்குள் நிலைபெற்றிருக்கக் கூடும். கிறிஸ்து சகாப்தத் தொடக்கத்திற்கு ஒரு சில ஆண்டுகட்கு முன்னர் இந்த முறை வழக்கத்திலிருந்தது. என்பதற்கு நிச்சயமான சான்று இருக்கிறது, அதற்கு முன்னரும் இம்முறை வழக்கத்திலிருந்ததா என்பதற்கு அவ்வளவு நம்பத் தகுந்த சான்று கிடையாது. முதல் ரோமானியச் சக்கரவர்த்தியான அகஸ்டஸ் செங்கடல் வாணிபத்தில் அதிகக் கவனம் செலுத்தினான். ரோமானியர்கள் இந்தியச் சரக்குகளை அதிகமாக விரும்ப ஆரம்பித்தார்கள். இதன் பயனாக அலெக்சாண்டிரியா வெகு விரைவில் முன்னேற்றமடைந்து, கீழ் நாடுகளுக்கும் மேல் நாடுகளுக்கும் இடையில் நடந்த வாணிபத்தின்மையமாக விளங்கத் தொடங்கியது. அக்காலத்தில் இந்தியக் கப்பல்கள் பாரசீக வளைகுடாவிற்கும் 'பாபல் மாண்டப்' ஜலசந்திக்கும் வழக்கமாகச் சென்று வந்தன. ஆனால் அவைகளைச் செங்கடலுக்குள் நுழையவிடாமல் அங்கிருந்த அராபியா வியாபாரிகள் தடுத்துத் தங்களுடைய கப்பல்களிலேயே பொருள்களை ஏற்றிக்கொண்டு போனார்கள். செங்கடலில் கப்பல் செலுத்துவது அவர்களுடைய தனி உரிமையாக இருந்தது. இந்தத் தனியுரிமை அகஸ்டஸ் காலத்தில் ஒழிக்கப்பட்டது. அவன் காலத்தில் எகிப்து தேசக்கப்பல்கள் கிரேக்க மாலுமிகளால் ஓட்டப்பட்டு, செங்கடலுள் நுழைந்து, அதைத் தாண்டி, கரையோரமாகவே வந்து இந்தியத் துறைமுகங்களை அடைந்தன. பின்னர், சுமாராக கி. பி. 50-ஆம் ஆண்டுக்குச் சமீபத்தில் கிரேக்க மாலுமிகள் பரு

வக்காற்றுகளின் தன்மைகளை நன்றாக உணர்ந்து கொண்டார்கள். அதன் பின் அவர்கள் பாபல்மாண்டப் ஜலசந்தியிலிருந்து சிந்துநதி முகத்துவாரத்திற்கும்,* நர்மதை நதித் துறைமுகமாகிய புரோச்சுக்கும் மிளகு ஏற்றுமதி செய்யும் கேரளத் துறைமுகங்களுக்கும் நேராக வர ஆரம்பித்தார்கள். அவர்கள் இந்தியாவின் கிழக்குக்கடற்கரைக்கும் வந்தார்கள் என்று தெரிகிறது.

இதன் விளைவாக இந்தியாவின் கடல்கடந்த வாணிபம் குறிப்பிடத்தக்க முறையில் பெருகியது. வியாபாரச் சரக்குகளை ஏற்றிக்கொண்டுபோக உபயோகிக்கப்பட்ட கப்பல்களில் ஏறக்குறைய எல்லாமே வெளிநாட்டுக் கப்பல்கள்தாம். இந்திய வியாபாரம் ஏறக்குறைய இதே நிலைமையைக் கி. பி. பதினேழாம் நூற்றாண்டிலும் அடைந்தது. முத்து, இரத்தினங்கள், மிளகு முதலிய வாசனைத் திரவியங்கள், மருந்துச் சரக்குகள், தந்தம், கருங்காலி மரம், மெல்லிய மஸ்லின் முதலிய பொருள்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏறக்குறைய எல்லாப் பொருள்களும் சுகபோகப் பொருள்களே. மட்டமான உலோகங்கள், பவழம், மேல் நாட்டுச் சுகபோகப் பொருள்கள் சில ஆகியவைதாம் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள். இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைவிட ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் மிக அதிகமாக இருந்ததால் இந்தியாவிற்கு நல்ல வருவாய் கிடைத்தது. அதனால் மேல்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு மிகுதியான தங்கமும் வெள்ளியும் வந்து குவிந்தன. இதைக் கண்ட ரோமானியப் பொருளாதார நிபுணர்கள் மிகவும் பயந்து போனார்கள். இவ்வாறு மேல் நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் சுமார் இருநூறாண்டுகள் நேரடியான வாணிபம் நடந்தது. அதன்பிறகு அலெக்சாண்டிரியாவின் சிறப்பும் முக்கியத்துவமும் குறைந்தன. மறுபடியும் பழையபடியே

---

*சிந்துநதியின் போக்கு மாறுதல்களினால் முகத்துவாரத்தில் பல துறைமுகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி மறைந்தன. அலெக்சாண்டர் காலத்தில் பட்டலா என்ற ஒரு துறைமுகம் இருந்தது. ரோமானியர்கள் காலத்திலிருந்த துறைமுகம் பார்பாரிக்கான் என்று அழைக்கப்பட்டது. முகமதியர்கள் ஒன்றன்பின் ஒன்றாக மூன்று துறைமுகங்களை அங்குக் கண்டார்கள். அவை டைபல் அல்லது டெயூல் லாஹரீ, பந்தர், ஷாபந்தர் என்பன. கராச்சி பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. அது முகத்துவாரத்திலேயே இல்லாமல் சிறிது தள்ளியிருக்கிறது. அதனால் தான் அதுவும் மேலே கூறிய நகரங்களைப்போல் அழிந்துபோகவில்லை.

இந்தியச் சரக்குகள் செங்கடலுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்த அராபியர்களுக்கு விற்கப்பட்டன. அவர்கள் அந்தப் பொருள்களை மேல்நாடுகளுக்குக் கொண்டுபோய் விற்ருர்கள்.

இந்தியாவின் கீழ்க்கடற்கரையில் கப்பல்தொழில் எந்த நிலையில் இருந்தது என்பதைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. எகிப்து தேசக்கப்பல்கள் கன்னியாகுமரியைச் சுற்றிக் கொண்டு வங்காள விரிகுடாவில் நுழைவதற்கு முன்னரே அந்தக் கடலில் இந்தியக் கப்பல் போக்குவரவு இருந்தது என்று ஐரோப்பிய ஆதாரங்களின் மூலம் அறிகிருேம். கங்கைநதி முகத்துவாரத்திலிருந்து இலங்கைக்குக் கரையோரமாகவே வியாபாரக் கப்பல்கள் சென்று வந்தன. மேலும் பெரிய இந்தியக்கப்பல்கள் வங்காளவிரிகுடாவைக் கடந்து சுமாத்திராவிற்கும் மலேயா தீபகற்பத்திற்கும் சென்று வந்தன. ஆனல் இந்தநிலை எவ்வளவு காலமாக இருந்து வந்தது என்பதைப்பற்றியும், எந்தெந்தப் பொருள்களில் வாணிபம் நடந்தது என்பதைப்பற்றியும் நிச்சயமாக அறிந்துகொள்வதற்குச் சரியான ஆதாரம் ஒன்றும் இல்லை. இந்திய வணிகர்களுக்குச் சொந்தமானவையும், இந்தியர்களால் கட்டப்பட்டவையும், இந்திய மாலுமிகளால் செலுத்தப்பட்டவையும் ஆன கப்பல்கள் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே வங்காளவிரிகுடாவில் பிரயாணம் செய்தன என்பதைத் தவிர வேறொன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது.

அதிகாரம்—13
குஷாணர்களின் ஆதிக்கம்

நமக்குத் தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களின் உதவியால் கிறிஸ்து சகாப்தத்தின் முதல் மூன்று நூற்றுண்டுகளில் இந்தியாவின் மேற்குப் பகுதியிலிருந்த இராஜ்யங்களின் வரலாறு தான் தெரிகிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதியிலிருந்த இராஜ்யங்களின் வரலாறு இனிமேல்தான் சரியான முறையில் எழுதப்படவேண்டும். அந்த முயற்சிக்கு உதவியாகத் தற்போது பல சான்றுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இம்முயற்சியில் வெற்றி கிடைக்கலாம். செப்புத் தகடுகளில்*

* நமக்குக் கிடைத்துள்ள செப்புச்சாசனங்களில் மூற்பட்டது கி. பி. 235—ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று R. சிவல் அவர்களால் இயற்றப்பட்டு Dr. S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட "தென் இந்தியா சரித்திரக் கல்வெட்டுகள்" மூலம் அறிகிருேம்.

முக்கிய நிகழ்ச்சிகளைக் குறித்துவைக்கும் பழக்கம் வளர்ந்து கொண்டே வந்ததால் தீபகல்ப இந்தியாவின் வரலாற்றில் ஒரு சிறிது நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய செப்புச் சாசனங்களில் பெரும்பாலானவை இன்றுவரையில் அழியாமல் இருக்கின்றன. இவற்றின் உதவியால் அந்தக்காலத்தில் ஆட்சி செய்த அரசவம்சங்களின் பெயர்களையும், அப்போதிருந்த பல இராஜ்யங்கள் ஒன்றோடொன்று வைத்துக்கொண்டிருந்த தொடர்புகளையும் நாம் ஒருவாறு அறிய முடிகிறது. தமிழகத்தி-லிருந்த சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்கள் அழியாமலிருந்தன. அவை ஒன்றோடொன்று அடிக்கடி சண்டையிட்டுக்கொண் டிருந்தன. அவற்றின் பரப்பு அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. ஆனால், அவை அழிந்துபோகாமல் மூன்று தனிப்பட்ட இராஜ்-யங்களாகவே இருந்தன. இவற்றிற்கு வடக்கில் ஆந்திரராஜ்யம் இருந்தது. ஆந்திரராஜ்யம் கீழ்க் கடற்கரையிலிருந்து, உஜ்ஜயினி வரையிற் பரவியிருந்தது, ஆந்திரர்கள் குஜராத்திலிருந்த சகர்க ளோடு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்றும் நாம் பதி னொன்றும் அதிகாரத்திற் படித்தோம். அதன்பின் அவர்க ளுடைய வரலாறு, குஷாணர்களுடைய வரலாற்றுடன் கலந்து விடுகிறது. இந்த அதிகாரத்தில் அதைப்பற்றித்தான் கூறப்போ கிறோம்.

கி. மு. நூறும் ஆண்டுக்குக் கொஞ்சம் முன்னதாகப் பாக்-திரியாவில் இருந்த சகர்கள் யூவச்சிகள் என்ற நாடோடிக் கூட் டத்தினரால் துரத்தப்பட்டனர் என்று முன்னர்ப் பார்த்தோம். இந்த யூவச்சிகளுள் ஐந்து பிரிவினர் இருந்தனர் என்பதும், அவர் களுள் குஷாணர்கள் என்ற பிரிவினர் மற்ற நான்குபிரிவினரை யும் தங்களுக்குக் கீழ்ப்படியச் செய்துவிட்டார்கள் என்பதும், அதன்பயனாகப் பாக்திரியா குஷாண ஆதிக்கத்தின் மையமாக மாறிற்று என்பதும் சாதாரணமாக ஒத்துக்கொள்ளப்பட்ட விஷ யங்கள். ஆனால் குஷாணர்கள் உண்மையில் சகர்கள்தாமென் றும், அவர்கள் தங்களை முதலில் துரத்தியடித்த யூவச்சிகளைத் தோற்கடித்து மறுபடியும் தங்கள் அதிகாரத்தைப் பாக்திரியா வில் நிறுவிக்கொண்டார்கள் என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். குஷாணர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் தங்க ளுக்குமுன் பாக்திரியாவில் இருந்தவர்கள் செய்ததைப்போலவே வெகு விரைவில் பாக்திரியாவிலிருந்து தெற்கு நோக்கி முன்னேற ஆரம்பித்தார்கள். அவர்களுடைய அரசர்களில் ஒருவன் கி. பி. 50—ஆம் ஆண்டுக்குள் காபூல் பள்ளத்தாக்கில் தன்னுடைய

ஆதிக்கத்தை நிறுவினான். இன்னும் சில ஆண்டுகளில் பஞ்சாப் குஷாணர்களுடைய ஆதிக்கத்தில் வந்துவிட்டது. அத்துடன் நிற்காமல் அவர்கள் தெற்கில் சிந்து, குஜராத் முதலிய இராஜ்யங்களிலும், கிழக்கில் கங்கைச்சமவெளியிலும் தங்களுடைய அதிகாரத்தைப் பரப்பத் தொடங்கினார்கள்.

குஷாண வம்சத்து அரசர்களில் தலைசிறந்தவர் கனிஷ்கர். அவருக்கு முன் இருந்த குஷாண அரசர்கள் பலசாலிகள்; பல நாடுகளை வென்றவர்கள். எனினும், கனிஷ்கர்தாம் மக்கள் மனத்தில் நிரந்தரமான இடம்பெற்றவர். அவர் குஷாண வம்சத்தில் மூன்றாவது அரசர் என்பது பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. அவர் அசோகருக்கு நிகரான புகழ்பெற்றவர். அப்புகழ் இந்தியாவில் மட்டுமின்றி, மத்திய ஆசியாவிலும், சீனாவிலும் பரவியது. எனினும் அவரைப்பற்றிய வரலாற்றை நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. கனிஷ்கர் புத்தமதத்திற்கும் சிறந்த ஆதரவு அளித்தார். அதனால் புத்தமத நூல்களில் அவருக்கு மிகப் பெருமையான இடம் கிடைத்திருக்கிறது. ஆனால் அவரைப்பற்றிப் புத்தமத நூல்களில் காணப்படும் கதைகளில் பல உண்மையாக இருக்ககமுடியாது, அசோகரைப்பற்றிய கதைகளைப்போலவே அவைகளும் வெறும் கற்பனைதாம். மேலும் அசோகரைப்பற்றிய கதைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டேதான் கனிஷ்கரைப்பற்றிய கதைகளும் எழுதப்பட்டிருக்கவேண்டும். அதனால் இந்தக்கதைகள் வரலாற்று மாணவர்க்கு அதிகப்பயன் தருவதில்லை, ஆகவே அவர் புத்தமதத்தைத் தழுவுவதற்கு முன்னர்த் தீமைகளின் அவதாரமாக இருந்தார் என்று புத்தமத நூல்களிற் காணப்படும் கதைகளை நாம் கற்பனை என்று தள்ளிவிடலாம். தங்கள் மதத்தின் பெருமையை அதிகப்படுத்தும் நோக்கத்துடன் இத்தகைய கதைகளை எழுதிவைப்பது மத நூலாசிரியர்களின் சாதாரண வழக்கம். நாணயங்களும் சாஸனங்களும்தான் கனிஷ்கர் வரலாற்றைஅறிந்துகொள்வதற்கு முக்கிய ஆதாரமாக இருக்கின்றன. அவற்றின் மூலமாக நாம் அறிந்துகொள்ளும் விஷயங்களைத்தவிரக் கனிஷ்கரைப்பற்றி வேறு நிச்சயமான செய்தி யொன்றும் நமக்குத் தெரியாது என்று கூறிவிடலாம்.

குஷாண அரசர்களின் ஆட்சிக்காலத்தைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் இன்னும் நிச்சயமான முடிவுக்கு வரவில்லை. கனிஷ்கர், கி. பி. 78-ஆம் ஆண்டில் பட்டத்திற்கு வந்தார் என்பது பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது, ஆனால் சில ஆராய்ச்சியாளர்கள்

அவர் இன்னும் அரை நூற்றுண்டுக்குப் பின்னர்த்தான் பட்டத்திற்கு வந்தார் என்று கூறுகிறுர்கள். அவருடைய ஆட்சி மிகச் சிறப்பு வாய்ந்தது என்று அனைவரும் ஒத்துக்கொள்ளுகிறுர்கள். ஆனுல் அவர் எவ்வளவு காலம் ஆட்சி செய்தார் என்பதைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கிறது. ஆப்கானிஸ்தானத்திலிருந்து சிந்து சமவெளிக்கு வரும் முக்கிய வழியில் இருக்கும் பெஷாவர் என்ற நகரம் அவருடைய ராஜ்யத்தின் தலைநகரா யிருந்தது. ஆகவே அவர் இந்திய அரசர் என்பது உறுதியாகத் தெரிகிறது. ஆரம்பத்தில் பாக்திரியாவிலிருந்த குஷாணர்கள் நாளடைவில் அந்த ராஜ்யத்திற்குத் தெற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் பரவி அங்கெல்லாம் தங்கள் அதிகாரத்தை நிறுவியிருந்தார்கள். ஆகவே கனிஷ்கர் இந்தியாவில் ஆட்சிசெய்த அரசராக இருந்தபோதிலும், இந்தியாவுக்கு வெளியிலிருந்த பாக்திரியாவும், பாக்திரியாவுக்கு வடக்கிலும் கிழக்கிலுமிருந்த பிரதேசங்களும் அவருடைய சாம்ராஜ்யத்திற் சேர்ந்திருந்தன. கனிஷ்கருடைய சாம்ராஜ்யம் இந்தியாவில் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனுல் பஞ்சாப், சிந்து, காஷ்மீரம் ஆகிய நாடுகளும், சக-பஹ்லவர்களுடைய ஆட்சியிலிருந்த மாளவம் குஜராத் ஆகிய நாடுகளின் சில பகுதிகளும், கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியிலிருந்த மதுரை ராஜ்யமும் கனிஷ்கர் சாம்ராஜ்யத்திற் சேர்ந்திருந்தன என்று நிச்சயமாகத் தெரிகிறது. கங்கைச் சமவெளியில் கனிஷ்கருடைய ஆட்சி பாட்ஞ வரையில் பரவியிருந்தது என்று கர்ணபரம்பரையாகக் கூறப்படுகிறது. பீகாரிலும், வங்காளத்திலும், ஒரிஸாவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள குஷாண நாணயங்கள் இந்தக் கூற்றை ஓரளவு வலியுறுத்துகின்றன. கனிஷ்கரோ, அவருக்குப் பின்வந்த குஷாண அரசர்களோ இந்தப் பிரதேங்களில் ஆட்சி செய்திருக்கக் கூடும். ஆனுல் கிழக்கே எவ்வளவு தூரம் அவர்களுடைய ஆட்சி பரவியிருந்தது என்று நிச்சயமாகக் கூறுவதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தின் ஆட்சிமுறையைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவில்லை. மதுரையிலும், உஜ்ஜயினியிலும் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள் என்று அறிகிறேம். அவர்களை இராஜப்பிரதிநிதிகள் என்று சொல்லலாம். ஆனுல் அவர்கள் தங்கள் ஆட்சியில் எத்தகைய முறைகளைக் கையாண்டார்கள் என்பதும், அவர்களுக்கும் அவர்களால் ஆளப்பட்ட குடிகளுக்கும் எத்தகைய தொடர்பு இருந்தது என்பதும் நமக்குத் தெரியாது.

கனிஷ்கர் வெற்றி வீரர்; புத்தமதப்புரவலர். இதைத்தவிர அவரைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. கனிஷ்கர் மத்திய ஆசியாவில் பல நாடுகளை வென்று தமது ராஜ்யத்தைப் பரப்பினார். அவருக்கு முன் இருந்த அரசர் சீனாவிற்குக் கப்பம்கட்டி வந்தார். ஆனால் கனிஷ்கர் அந்த வழக்கத்தை நிறுத்திவிட்டார். இவைகள் தாம் கனிஷ்கருடைய முக்கியமான வெற்றிகள். இந்தியாவில் அவருக்கு முன்னிருந்த அரசர்கள் வென்ற பகுதிகளைத் தவிர வேறுநாடுகளைக் கனிஷ்கர் வென்று தமது சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டாரா என்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. புத்தமதத்துடன் அவர் எவ்விதத் தொடர்பு கொண்டிருந்தார் என்பது நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. அவர் புத்த மதத்திற்குத் தமது ஆதரவை அளித்தார் என்பது அவருடைய கட்டிடங்களாலும், புத்தமத ஸ்தாபனங்களுக்கு அவர் அளித்த கொடைகளாலும் நிச்சயமாகத் தெரிகிறது. புத்தமதக் கோட்பாடுகளை வரையறுப்பதற்கு அவர் காலத்தில் ஒரு மாநாடு நடந்தது. அந்த மாநாட்டை அவர்தான் கூட்டினார் என்பதும் உண்மையாக இருக்கலாம். மேலும் சீனாவிலும், திபேத்திலும் வழங்கும் கதைகளின் மூலம் கனிஷ்கர் ஒரு தலை சிறந்த பௌத்தர் என்பது தெரிகிறது. எனினும் அவருடைய நாணயங்களைப் பார்த்தால் அவர் புத்த மதத்தைத் தழுவி, அதையே தான் ஆதரித்தார் என்று கூறுவதற்கு இடமில்லை. அவருடைய நாணயங்கள் சிலவற்றில் புத்தர் உருவம் இருப்பது உண்மைதான். ஆனால் பெரும்பான்மையான நாணயங்களில் இந்துத் தெய்வங்களின் உருவங்களும், பாரசிக தெய்வங்களின் உருவங்களும், கிரேக்க தெய்வங்களின் உருவங்களும் காணப்படுகின்றன. அவர் புத்த மதத்தைத் தழுவியது உண்மையாயிருந்தாலுங்கூட, அவர் மற்ற மதங்களுக்கும் ஆதரவளித்தார் என்பதும், புத்தமதத்தைப் பின்பற்றுமாறு தம்முடைய குடிகளை வற்புறுத்தாமல் அவரவர்களுக்கு இஷ்டமான மதங்களைப் பின்பற்றுவதற்கு அநுமதி அளித்தார் என்பதும், ஆகவே அவர் மதவிஷயத்தில் பரந்த மனப்பான்மையுடையவர் என்பதும் அவருடைய நாணயங்களின் மூலம் நமக்கு நன்றாகத் தெரிகிறது.

கனிஷ்கர் காலத்தில் கூட்டப்பட்ட புத்தமத மாநாட்டைப் பற்றி இங்குஞ் சில சொற்கள் கூறுவது பொருந்தும். இவ்வாறு கூட்டப்பட்ட மாநாடுகளில் இது நான்காவது. இதற்குப் பின்னர் இத்தகைய மாநாடுகள் நடந்தனவா என்று அறிவதற்கு நமக்கு ஆதாரமில்லை. இந்த நான்காவது மாநாட்டைப்பற்றியும்

புத்தமத நூல்களைத் தவிர நமக்கு வேறு ஆதாரமில்லை. இந்த ஆதாரத்தின் மூலம் நாம் பின்வரும் செய்திகளை அறிகிறோம். கனிஷ்கர் புத்தமதத்தைத் தழுவியபின், அதன் கோட்பாடுகளைப் பற்றி அந்த மதத்தைச் சேர்ந்தவர்களிடையிலேயே பலவித மாறு பட்ட அபிப்பிராயங்கள் இருப்பதை அறிந்து, சரியான கோட் பாடுகள் யாவை என்று வரையறுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தார். ஆகவே அவர் தமது தலைநகரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டிற்கு 500-பௌத்த அறிஞர்கள் வந் தார்கள். அந்த மாநாட்டின் பயனாகப் புத்தமதக் கோட்பாடு களை விளக்கும் பல நூல்கள் தொகுக்கப்பட்டன. ஆனால் அங்கு நிர்ணயிக்கப்பட்ட கோட்பாடுகள் யாவை என்றும், அவற்றை நிர்ணயித்த அறிஞர்கள் யார் என்றும் நிச்சயமாக ஒன்றும் கூற முடியாது,

இந்த மாநாட்டின் முடிவுகள் எப்படிப்பட்டவையானாலும் கனிஷ்கர் காலத்திய புத்தமதத்திற்கும், சித்தார்த்தர் போதித்த மதத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் இருந்தன. மாறி மாறி வரும் பிறப்பிறப்புக்களினின்று மனிதன் விடுபட்டு நிர்வாண நிலையடைவதற்கு "நல்ல வழியினை" புத்தர் போதித்தார். அந்தக் கொள்கை கனிஷ்கர் காலத்திலும் இருந்தது. ஆனால் அத்துடன் இன்னொரு புதிய கொள்கையும் கனிஷ்கர் காலத்தில் புத்தமதத் தில் இடம் பெற்றிருந்தது. கனிஷ்கர் காலத்தில் பௌத்தர்கள் புத்தரைக் கடவுளாக வழிபட்டார்கள். பிறவிப் பெருங்கடல் வீழ்ந்து கரையேற முடியாமல் தத்தளிக்கும் ஆன்ம கோடிகள் மீது புத்தர்பிரான் கருணைபூண்டு, பிறப்பிறப்பற்ற நிர்வாண நிலையை எய்துவதற்கு அவர்களுக்கு உதவி செய்கிறார் என்ற நம் பிக்கை கனிஷ்கர் காலத்துப் பௌத்தர்கள் மனத்தில் வேரூன்றி விட்டது. இந்த நம்பிக்கை கொஞ்சங் கொஞ்சமாகத்தான் வளர்ந் திருக்கவேண்டும். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புதிய புத்த மதத்திற்கு "மஹாயானம்" என்றும், இந்தக் கொள்கை இடம்பெறாத பழைய புத்தமதத்திற்கு "ஹீன யானம்" என்றும் பெயர். இவ்வாறு தனிப்பட்ட இரண்டு பிரிவு கள் கனிஷ்கர் காலத்திற்குப் பின்னர்த்தான் ஏற்பட்டன என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் மஹாயான மதம் முழு உருப்பெறுவ தற்குக் கனிஷ்கர் காலத்தில் கூடிய மாநாடு உதவியாக இருந்தது என்று நம்பலாம். கி. பி. 200-ஆம் ஆண்டிற்கப்புறம், புத்தமதம் மஹாயானம், ஹீனயானம் என்ற இரண்டு தனிப்பட்ட கிளை களாகப் பிரிந்துவிட்டது என்று நிச்சயமாகக் கூறலாம்,

புத்த மதத்தில் ஏற்பட்ட இந்த மாறுதல் நமக்கு வியப்பைத் தருவதாயிருக்கிறது. சித்தார்த்தர் கடவுளைப்பற்றி ஒருவார்த்தை கூடப்பேசவில்லை. அவர் நிறுவிய மதத்தில் கடவுளுக்கு இடமே யில்லை. ஆகவே அவருடைய மதம் நாஸ்திக மதம் என்று சொல்ல லாம். அப்படியிருக்க, அவரே இப்போது கடவுளாக மாறிவிட் டார்! அவர் இப்போது சொர்க்கத்தில் உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறார். அவருடைய உத்தரவுக்குக் காத்துக்கொண்டு அவரைச் சுற்றிப் பல தெய்வங்கள் நிற்கின்றன. அவருக்குப் பூலோகத்தில் பல கோயில்கள். அங்கே நடக்கும் வழிபாட்டில் ஏராளமான சடங்குகள். அவர் உலகத்தில் வாழ்ந்துவந்த காலத் தில் செய்த உபதேசங்கள் கடவுள் வாக்காகக் கருதப்படுகின்றன. அவருடைய அஸ்திகள் அழகு மிக்க கோவில்களில் வைத்துக் காக்கப்படுகின்றன. குறிப்பிட்ட காலங்களில் மக்கள் அவற்றை தரிசித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறார்கள். என்னே காலத்தின் மாறுதல்! மஹாயான மதத்தைப் பின்பற்றுபவர்கள் இந்தியாவில் இப்போது யாருமே இல்லையென்று கூறிவிடலாம். ஆனால் மத்திய ஆசியாவில் இஸ்லாம் மதம் பரவாத நாடுகளில் இந்த மதத்தைத் தான் மக்கள் இன்றும் பின்பற்றுகிறார்கள். மஹாயான மதத் தின் தோற்றத்தால் வடமேற்கு இந்தியாவில் தனித்தன்மை வாய்ந்த ஒரு சிற்பக்கலை வளர்ந்தது.

இந்தச் சிற்பக்கலையை "கிரேக்க பௌத்தக்கலை" என்றும், "இந்தியக் கிரேக்கக்கலை" என்றும் அழைக்கிறார்கள். ஆனால் இதை "காந்தாரக்கலை" என்று அழைப்பதுதான் சௌகரிய மானது. ஏனெனில் இந்தக்கலையின் சின்னங்கள் எல்லாம் பெஷா வரை மையமாகக்கொண்ட காந்தார ராஜ்யத்தில்தான் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. பெஷாவரைச் சுற்றியுள்ள பிரதேசத் தில் செய்த ஆராய்ச்சியின் பயனாக இந்தக் கலையின் சின்னங்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் நமக்குக் கிடைத்துள்ளன. இந்தச் சிற்பங்கள் மிக்க அழகு வாய்ந்தவை. இவற்றில் கிரேக்கக் கலைஞர் களுடைய வேலை நுட்பமும், உருவ அமைப்பில் அவர்கள் பின் பற்றிய முறைகளும் காணப்படுகின்றன. ஆனால், செதுக்கப்பட்ட உருவங்களெல்லாம் இந்திய உருவங்களே. மஹாயான புத்த மதக் கோட்பாடுகளும், நம்பிக்கைகளும் அழகொழுகும் கல்லுரு வங்களிற் காட்சியளிக்கின்றன. பார்ஹூத், சாஞ்சி முதலிய இடங்களிற் காணப்படும் பழைய புத்தமதச் சிற்பங்களுக்கும், காந்தாரச் சிற்பங்களுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருக்கிறது. பழைய சிற்பங்கள் புத்தமத சம்பிரதாயங்களை விளக்கின. அவை

களில் புத்தருடைய உருவமே கிடையாது. ஆனால் காந்தாரச் சிற்பங்களில் புத்தருடைய உருவந்தான் முக்கியமானது. அவருடைய பக்தி காந்தாரக்கலையின் உயிர்நாடி. தொடக்கத்தில் கலைஞர்கள் அவர்களுடைய கற்பனைக்கேற்றவாறு புத்தருடைய உருவத்தையும், வழிபாட்டு முறைகளையும் சித்திரித்தார்கள். ஆனால் நாளடைவில் சில குறிப்பிட்ட முறைகளையே எல்லாச் சிற்பிகளும் கையாள ஆரம்பித்ததால் புத்தர் உருவத்திலும், பௌத்த வழிபாட்டு முறைகளிலும் தனித்தன்மைகளைக் காட்டும் சிற்பங்கள் தோன்றின. இன்றைக்கும் புத்தமதம் பரவியுள்ள வெளிநாடுகளில் (இந்தியாவின் கிழக்கிலும், வடக்கிலுமுள்ள நாடுகளில்) காந்தாரச் சிற்பங்களில் காணப்படும் வழிபாட்டு முறைகள்தாம் கையாளப்படுகின்றன. ஆகவே, இந்தக்கலை உலகத்தின் ஒரு பெரிய பகுதியில் வாழும் மக்களுடைய மத நம்பிக்கைகளும், வழிபாட்டு முறைகளும் உருப்பெறுவதற்கு உதவி செய்தது. ஆனால் இந்தியாவில் இந்தக்கலையின் செல்வாக்குக் காந்தார நாட்டிற்கு வெளியிற் பரவவில்லை. அங்குமாத்திரம் இது சிலநாள் நிலைத்திருந்தது. நாளடைவில் வெளிநாட்டுத் தன்மைகள் மறைந்து இந்தக்கலை பூரண இந்தியக்கலையாகத் திகழ்ந்தது. ஆனால் சிறிதுகாலத்திற்குப் பின்னர்க் காந்தாரநாட்டிலும் அந்தக் கலை மறைந்துபோயிற்று. காந்தாரக் கலையைப் பார்த்து இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்த கலைஞர்கள் தங்கள் முறைகளை மாற்றியமைத்துக் கொண்டார்களா இல்லையா என்றவிஷயத்தில் கருத்து வேறுபாடு அதிகமாக இருக்கிறது. காந்தாரக் கலைஞர்களின் தன்மைகளை இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்த கலைஞர்கள் கற்றுக்கொண்டு அந்த முறையில் தங்கள் சிற்பங்களைச் செய்தார்கள் என்று ஒரு சாராரும், காந்தாரக் கலைமுறைகளைக் கையாண்டவர்கள் காந்தாரநாட்டைத் தவிர இந்தியாவின் மற்ற பகுதிகளில் ஒருவரும் இல்லை என்று ஒரு சாராரும் கூறுகின்றனர்.

வெளிநாட்டுத் தொடர்பில்லாத, தனித்தன்மை வாய்ந்த, இந்தியச் சிற்பக்கலையைப்பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டுமானால் காந்தாரநாட்டிற்குப் போவதைவிட, அமராவதிக்குச் செல்வதுதான் பொருந்தும். அமராவதி என்ற இடம் கிருஷ்ணா நதியின் கரையில், கீழ்க்கடற்கரையிலிருந்து சுமார் எண்பது கல் தொலைவில் இருக்கிறது. அந்தக் காலத்தில் அது ஆந்திர ராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. அங்கே ஒரு புத்தமதக்கோயில் இருந்தது. கி. பி. 150-ஆம் ஆண்டிற்கும் 250-ஆம் ஆண்டிற்கும் இடையில் அங்கு ஏற்கெனவே இருந்த கோயிலைச் சுற்றி ஒரு மதி

லும், வேறு சில பகுதிகளும் கட்டப்பட்டன. அவை வெள்ளைச் சலவைக்கல்லால் கட்டப்பட்டவை. அவை அதிக சித்திர வேலைப்பாடு பொருந்தியவை. ஆனால் நாளடைவில் அவை பல காரணங்களால் அழிந்துபோயின. அவைகளுள் சுண்ணும்புக் காளவாய்க்காகக் கட்டிடத்தின் பலபாகங்கள் பக்கத்து ஜனங்களால் எடுக்கப்பட்டன என்ற காரணம் ஒன்று. அழிந்தது போக மீதியிருக்கும் பகுதிகள் லண்டனிலும், சென்னையிலும் உள்ள பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. பார்ஹூத், சாஞ்சி ஆகிய இடங்களிலுள்ள பௌத்தச் சிற்பங்களின் தன்மைகளை அடிப்படையாக் கொண்டு வளர்ந்த ஓர் இந்தியக்கலையின் அம்சங்களை நாம் அமராவதிச் சிற்பங்களிற் காண்கிறோம். ஆகவே இது இந்தியாவில் தோன்றி வளர்ந்த ஒரு தனித்தன்மை வாய்ந்த கலை என்று தெரிகிறது. அமராவதிச் சிற்பிகளுக்கும் காந்தாரச் சிற்பிகளுக்கும் எவ்விதத்திலும் தொடர்பிருந்ததாகக் கூறமுடியாது. ஆனால் மதிப்பிற்கும் வழிபாட்டிற்கும் உரிய உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருப்பதாகச் செதுக்கப்பட்டிருக்கும் புத்த உருவத்தைப் பார்க்கும்போது, மஹாயான புத்த மதத்தின் புதிய கொள்கைகளும் நம்பிக்கைகளும் வடஇந்தியாவில் மாத்திரமின்றி இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பரவியிருந்தன என்பது தெரிகிறது.

கனிஷ்கர் எவ்வளவு காலம் ஆட்சி செய்தார் என்பது இன்னும் சரியாக முடிவு செய்யப்படவில்லை. அவருக்குப்பின் ஹூவிஷ்கன் என்ற அரசன் பட்டத்திற்கு வந்தான். அவன் கனிஷ்கருடைய புத்திரனாக இருக்கலாம்; அவன் சில நாடுகளை வென்று குஷாண சாம்ராஜ்யத்தின் பரப்பைப் பெருக்கியிருக்கக் கூடும். ஆனால் விரைவில் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கம் குறைய ஆரம்பித்தது. மூன்றும் நூற்றுண்டிற்குள், பஞ்சாப் ஆப்கானிஸ்தானம் ஆகிய நாடுகளின் சில பகுதிகளையும் ஆப்கானிஸ்தானத்திற்கு அப்பால் சில நாடுகளையும் தவிர மற்ற இடங்களிலெல்லாம் குஷாணர்களுடைய ஆட்சி அழிந்துபோயிற்று. இவ்வீழ்ச்சிக்குக் காரணம் சரியாகத் தெரியவில்லை. பாரசீகத்தை ஆண்டுவந்த சச்சேனிய அரசர்களில் ஒருவன் மூன்றும் நூற்றுண்டின் தொடக்கத்தில் பஞ்சாபின்மீது படையெடுத்து, அங்கிருந்த அரசர்களைத் தோற்கடித்து அவர்களிடம் கப்பம் வசூலித்தான் என்று பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட முஸ்லிம் நூல்கள் சிலவற்றின் மூலம் நாம் அறிகிறோம். குஷாண வம்சத்தைச் சேர்ந்த பிற்கால நாணயங்கள் சிலவற்றில் பாரசிக முறைகள்

கையாளப்பட்டிருப்பது இந்தக் கூற்றை ஓரளவு வலியுறுத்துகின்றது.

மேற்கு இந்திய ராஜ்யங்களின் நிலையும் சரியாகத் தெரியவில்லை. ஏறக்குறைய நான்காம் நூற்றுண்டின் இறுதிவரையிலும் இந்தப்பிரதேசம் சகர்களுடைய ஆட்சியிலிருந்தது. இந்தப் பகுதியில் ஆட்சி செய்த சக அரசர்கள் சத்ரபதிகள் (ராஜப்பிரதிநிதிகள்) என்று அழைக்கப்பட்டனர். சிலகாலம் அவர்கள் குஷாணர்களுடைய ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தார்கள். ஆகவே அவர்களைச் சத்ரபதிகள் என்று அழைத்தது பொருந்தும். ஆனுல் குஷாண சாம்ராஜ்யம் அழியத் தொடங்கியதும் அவர்கள் சுயேச்சையடைந்தார்கள். ஆந்திரர்களுக்கும் சகர்களுக்கும் ஏற்பட்ட பகைமை கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னரே தொடங்கியிருக்கக்கூடும் என்று நாம் பதினெனுன்ரும் அதிகாரத்திற் பார்த்தோம். கி. பி. முதல் நூற்றுண்டில் மகாராஷ்டிரத்தில்-நர்மதைக்குத் தெற்கிலுள்ள பிரதேசத்தில் - ஒரு சகச் சத்ரபதி ஆண்டுவந்தான். ஆனுல் சுமார் 120-ஆம் ஆண்டில் இந்தச் சத்ரபதத்தை ஆந்திரர்கள் அழித்துவிட்டார்கள். பின்னர் வெகு விரைவில், உஜ்ஜயினியில் ஆட்சி செய்த முதலாம் ருத்திரதாமன் என்ற சகச் சத்ரபதி ஆந்திரர்களைத் தோற்கடித்து, மஹாராஷ்டிரத்தில் மறுபடியும் சக ஆட்சியை நிறுவினுன். அதன்பிறகு மேற்கு இந்தியாவில் — சிந்து மாகாணத்திலிருந்து மகாராஷ்டிர எல்லை வரையிலும் — சகர்களுடைய ஆட்சி ஏறக்குறைய நான்காம் நூற்றுண்டின் இறுதிவரையில் இருந்தது. உஜ்ஜயினியே அவர்களுடைய தலைநகரமாயிருந்தது. கி. பி. 400-ஆம் ஆண்டுக்குச் சற்று முன்னர் சகர்களுடைய ராஜ்யத்தைக் குப்தர்கள் ஜெயித்துக் கொண்டார்கள்.

கத்தியவார் தீபகல்பத்தில் ஜுனகாத் என்ற இடத்தில் சென்ற நூற்றுண்டில் ஒரு சாசனம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சாசனம் அசோகர் காலத்தில் பிறப்பிக்கப்பெற்ற ஒரு கல்வெட்டு. இதை ஜுனகார்க் கல்வெட்டு என்று வரலாற்று ஆசிரியர்கள் அழைக்கிருர்கள். இந்தப் பகுதியில் நீர்ப்பாசன வசதிக்காக ஓர் ஏரியை அமைக்கும் வேலை சந்திரகுப்த மௌரியன் காலத்தில் தொடங்கி அசோகர் காலத்தில் முடிவுற்றது என்று இந்தக் கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கின்றது. கி. பி. 150-ஆம் ஆண்டில் இந்த ஏரியின் கரை உடைந்துபோகவே, ருத்திரதாமன் அதை மறுபடியும் கட்டினுன். அசோகர் கல்வெட்டுக்குக் கீழே ருத்திரதாமன் தான் செய்த காரித்தை எழுதிவைத்தான்.

உடைந்த ஏரிக்கரையை முன்னிருந்ததைவிட மூன்று பங்கு அதிக உறுதியாகக் கட்டினதாக இந்தக் கல்வெட்டின்மூலம் ருத்திரதாமன் பெருமை பேசுகிறான். அந்த ஏரிக்கரை மூன்று நூற்றாண்டுகள் இருந்தபின் அழிந்துவிட்டது என்றும், குப்தர்கள் மறுபடியும் அதைக் கட்டினார்களென்றும் பிற்காலத்திய ஆதாரங்களின்மூலம் அறிகிறோம். கடைசியில் அந்த ஏரியும், அதனால் பயன்பெற்ற விளைநிலங்களும் அழிந்து வெறுங் காடாக மாறிவிட்டன. இத்தகைய சாசனங்கள் அதிகமாக நமக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இதில் கூறப்பட்டிருக்கும் விஷயங்களின்மூலம் ஒரு முக்கியமான உண்மையை அறிகிறோம். மலைப்பாங்கான இடங்களில் வடிகால்களையும் ஓடைகளையும் தடுத்து, அணைகட்டி, அதன்மூலம் தண்ணீரைத் தேக்கி நீர்ப் பாசனத்திற்கு உபயோகிப்பதும், நாளடைவில் அந்த அணை உடைந்து போவதும், பின்னர் மறுபடியும் அணை கட்டுவதும், மறுபடியும் அணை உடைவதும், கடைசியில் இந்த விஷயத்தில் கவனம் செலுத்தத்தக்க ஆட்கள் இல்லாமற்போனால் அணை பழுது பார்க்காமலே அழிந்துபோவதும், சாதாரணமாக நமது தேசத்தில் தொன்றுதொட்டு நடந்துவரும் விஷயம். தக்க சமயத்தில் பழுது பார்க்காததுதான் பழங்காலத்தில் இத்தகைய அணைகளும், ஏரிகளும் அழிந்துபோவதற்கு முக்கிய காரணமாக இருந்திருக்கும். மிகச் சமீபகாலத்தில் தான் ஏறக்குறைய நிரந்தரமாக நிலைத்து நிற்கக்கூடிய அணைகளைக் கட்டுவதற்கு இஞ்சினியர்கள் பழகியிருக்கிறார்கள். பழங்கால அணைகள் நிரந்தரமாக இருக்கக்கூடிய வகையில் கட்டப்படவில்லையென்றும், அந்த அணைகளைக் கட்டுவதற்காகச் செய்த செலவும் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வீணாகப் போய்விட்டன என்றும் குறைகூறுவது எளிது. ஆனால் தற்கால விஞ்ஞான அறிவைப் பெற்றிராத அக்கால மக்கள் நானூறு ஆண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய அணைகளைக் கட்டினது சாதாரணமான காரியமன்று. மேலும் அவ்வளவு ஆண்டுகள் அந்த அணையால் மக்கள் அடைந்த பயன் அதைக் கட்டுவதற்காகச் செய்த செலவைவிட மிக அதிகமானதாகத்தானிருக்கும் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

சகர்கள் ஆட்சி மேற்கு இந்தியாவில் நான்காம் நூற்றாண்டின் இறுதிவரையில் இருந்தது என்று முன்னர்க் கூறினோம். ஆனால் ஆந்திரர்களுடைய அதிகாரம் அவ்வளவு நாள் நிலைத்து நிற்கவில்லை. ஆந்திர ஆதிக்கம் எவ்வாறு குறைந்தது என்பதைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் கி. பி. இரண்டாம்

நூற்றாண்டின் இறுதிக்குள் அவர்களுடைய இராஜ்யம் மிகச் சுருங்கிவிட்டது. அந்தச் சமயத்தில் அவர்களுடைய அதிகாரம் கீழ்க்கடற்கரைக்கு அருகில் தெலுங்கு நாட்டில் மாத்திரந்தான் இருந்தது. அதன்பின் ஆந்திரர்களுக்கு அடங்கிய ஒரு கவர்னர் கலகஞ்செய்து, ஆந்திர அரசவம்சத்தை அழித்துவிட்டுத் தன்னுடைய வம்சத்தின் ஆட்சியை அந்தப் பிரதேசத்தில் நிறுவினான். பல்லவ வம்சம்* என்ற அந்தப்புதிய அரசவம்சம் அறுநூறாண்டு ஆட்சி செய்தது. பல்லவ வம்சத்தினர் தென்னிந்திய வரலாற்றில் மிக முக்கியமான இடம்பெற்றிருக்கின்றனர்.

சகர்களுடைய ஆட்சியாலும், குஷாணர்களுடைய ஆட்சியாலும் இந்தியப் பண்பாட்டில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டது என்று கூறமுடியாது. மத்திய ஆசியாவிலிருந்து வந்த நாடோடிக் கூட்டத்தினர் தாங்கள் குடியேறிய இடங்களின் சூழ்நிலைக்கேற்ற வாறு தங்கள் வாழ்க்கை முறையை மாற்றி யமைத்துக்கொண்டார்கள் என்று பொதுவாகக் கூறலாம். அவர்கள் குடியேறிய இடங்களில் வாழ்ந்து வந்த மக்களோடு அவர்கள் நாளடைவில் கலந்துவிட்டார்கள். இவ்வாறு ஏற்பட்ட கலப்பைப் பற்றிய குறிப்புக்கள் அதிகமாக நமக்குக் கிடைக்கவில்லை எனினும் இந்தக் கலப்பு நாளடைவில் ஏற்பட்டுக்கொண்டு வந்தது என்பதை நாம் யூகிக்கலாம். அந்நிய அரசர்கள் நாளடைவில் இந்தியப் பெயர்களை வைத்துக் கொண்டார்கள். இதற்கு எடுத்துக் காட்டுகளாக சகச் சத்திரபதிகளான ருத்திர தாமனையும், சத்திய சிம்மனையும் கூறலாம். முன்னைய குஷாண அரசர்களின் பெயர்கள் வெளிநாட்டுப் பெயர்களாக இருந்தன. ஆனால் பின்னைய குஷாணர்கள் இந்தியப் பெயர்களை வைத்துக்கொண்டார்கள். இதற்கு எடுத்துக்காட்டாக வாசுதேவன் என்ற குஷாண அரசனைக் கூறலாம். கனிஷ்கரும், ஹுவிஷ்கனும் தங்கள் ராஜ்யத்தில் பரவியிருந்த புத்தமதத்தை

---

* பல்லவர்கள் யார் என்று சரியாகத் தெரியவில்லை. பஹ்லவர்கள் தான் வட இந்தியாவிலிருந்து தென்னிந்தியாவுக்கு வந்து பல்லவ ராஜ்யத்தை நிறுவினார்கள் என்று பி. டி. சீனிவாச ஐயங்கார், ஜெ—ஆல்லன் முதலியவர்கள் கூறுகிறார்கள். பல்லவர்கள் இலங்கையிலிருந்தோ, தமிழ்நாட்டிலிருந்தோ வடக்கே சென்று ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள் என்று வி. ஏ. ஸ்மித் முதலியவர்கள் கருதுகிறார்கள். பல்லவர்கள் விந்தியமலைப் பிரதேசத்தில் ஆட்சி செய்து வந்த ஓர் அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கெ. பி. ஜயஸ்வல் அபிப்பிராயப்படுகிறார். பல்லவர் என்ற பெயர் ஒரு வம்சத்தைக் குறிக்கிறதேயன்றி ஓர் இனத்தைக் குறிக்கவில்லை என்பது பொதுவாக எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

ஆதரித்தார்கள். ஆனால் அடுத்த அரசனாகிய வாசுதேவனுடைய நாணயங்களில் சிவபெருமானுடைய உருவம் பொறிக்கப்பட்டிருப்பதால் அவன் இந்துவாக மாறிவிட்டான் என்று தெரிகிறது.

வாசுதேவன் இந்துமதத்தைத் தழுவினான் என்றது ஒரு முக்கியமான செய்தி. இந்துமதம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவின் பல பாகங்களிலும் பரவிக்கொண்டே வந்தது என்பதை இதிலிருந்து நாம் அறியலாம். பௌத்த ஜைன மதங்களின் நிலைமையை அறிந்துகொள்ளுவதற்கு அந்தக் காலத்திய கட்டிடங்களும் சிற்பங்களும் தாம் நமக்குச் சிறந்த ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் இந்துமதத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய ஆதாரங்கள் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. விரைவில் அழிந்து போகாத பொருள்களைக்கொண்டு கட்டிடங்களைக் கட்டும் பழக்கம் அக்காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பரவவில்லையென்பதும், இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் அந்த முறையை அப்போது அநுசரிக்கவில்லை யென்பதும் இந்நிலைக்குக் காரணமாயிருக்கலாம். இந்துமத நூல்களின் காலத்தைச் சரியாக நிர்ணயிக்க முடியாததால் அக்காலத்து இந்துக்களின் எண்ணங்களும் செய்கைகளும எத்தன்மையனவா யிருந்தன என்பதை அந்த நூல்களின் வாயிலாகவும் நாம் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அறிவாளிகள் ஸம்ஸ்கிருத மொழியிலும் இந்துமத நூல்களிலும் ஆராய்ச்சி செய்துகொண்டே இருந்தார்களென்றும், அவ்வாராய்ச்சியே குப்தர்காலத்தில் ஸம்ஸ்கிருதத்திற்கும் இந்து மதத்திற்கும் ஏற்பட்ட உன்னதமான நிலைமைக்கு அடிகோலியது என்றும் கூறலாம்.

மேலும் இந்துமதம் தீபகல்ப இந்தியாவிலும் பரவிக்கொண்டிருந்தது என்று நினைப்பதற்குச் சில ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் அதன் பூரணமான ஆதிக்கம் தென்னிந்தியாவில் ஏற்படுவதற்கு இன்னும் சில நூற்றாண்டுகள் செல்லவேண்டியிருந்தது. தீபகல்ப இந்தியாவில் வாழ்ந்துவந்த திராவிடர்கள் முதலில் மரங்களிலும் மற்றும் சில பொருள்களிலும் தெய்வங்கள் வாழ்வதாக நினைத்து அவற்றை வணங்கி வந்தனர். அவற்றில் மக்களுக்குத் தீமை புரியக்கூடிய தெய்வங்களும் சில இருந்தன என்று அவர்கள் நினைத்தார்கள். கி. மு. மூன்றாம் நூற்றாண்டுக்குள் ஜைனமும், பௌத்தமும் ஓரளவு தென்னிந்தியாவில் பரவி இருந்தன. அதே சமயத்தில் இந்து மதமும் சிறிது சிறிதாகப் பரவிக்கொண்டு வந்தது. அதாவது, திராவிடமக்கள் மரத்திலும், மற்ற பொருள்களிலும் கண்டு வணங்கிய தெய்வங்கள் ஒவ்வொன்றாக ஆரிய

மதத்தில் இடம் பெற்றுவிட்டன. இவைகளைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளுவதற்கு ஏற்ற ஆதாரம் ஒன்றும் இல்லை எனினும், அந்தக் காலத்தில் தென்னிந்தியாவில் மதக் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்ததென்றும், அவரவர்களுடைய மதங்களைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்த ஜைன, பௌத்த, இந்துமத போதகர்களுக்குள் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது என்றும் கூறலாம்.

மேலே கூறிய மத போதகர்களைத் தவிர, கிறிஸ்தவ மத போதகர்களும் அந்தச் சமயத்தில் தென்னிந்தியாவில் இருந்தார்கள் என்று தெரிகிறது. ஏசுநாதரின் பிரதமசீடர்களில் ஒருவரான தாமஸ் என்பவர் கிறிஸ்தவ மதபோதனை செய்வதற்குத் தென்னிந்தியாவுக்கு வந்தார் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறும் கூற்றை வேறு சில ஆராய்ச்சியாளர்கள் மறுக்கிறார்கள். இது எப்படி இருப்பினும், கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் முடிவில் தென்மேற்கு இந்தியாவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய மக்கள் இருந்தார்களென்பதும், அவர்களுக்கும் அப்போது மெஸபடோமியாவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கும் தொடர்பு இருந்தது என்பதும் மறுக்க முடியாத உண்மைகள். இவ்வாறு தென்மேற்கு இந்தியாவில் நுழைந்த கிறிஸ்தவமதம் அங்கு நெடுநாள் நிலைத்து நின்றது. கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் கோவாவுக்கு வந்த போர்ச்சுகீஸியர்கள் அந்த மதத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களுடைய வைதிக மார்க்கமில்லாத வழிகளைக் கண்டு திகைத்தனர்.

யாரோ காட்டுமாக்கள் தென்னிந்தியாவிலிருந்தார்கள் என்றும், அவர்களுக்கு நாகரிகத்தைக் கற்றுக்கொடுக்க வட இந்தியாவிலிருந்து மதபோதகர்கள் சென்றார்கள் என்றும் நினைத்துவிடக் கூடாது. தீபகல்பத்தின் தென்பகுதியிலிருந்த தமிழ்மக்கள் சிறந்த நாகரீகம் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். தமிழில் சிறந்த பல நூல்கள் அந்தக்காலத்திலேயே இருந்தன. இவற்றைச் சங்கநூல்கள் எனக் கூறுகிறார்கள். இவற்றின் காலம் நாம் விவரிக்கும் காலம்தான் என்று பொதுவாக ஒத்துக்கொள்ளப்படுகிறது. சென்ற அதிகாரத்தில் தமிழர்களுடைய கடல்கடந்த வாணிகத்தைக் கூறினோம். மிளகு, முத்து, இரத்தினங்கள் ஆகியவை மிகுதியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. ஆகவே தமிழ்நாட்டில் செல்வம் கொழித்தது. அதனால் தமிழ்மக்கள் வெளிநாட்டுச் சுகபோகப் பொருள்களை வரவழைத்து உபயோகித்தார்கள். அரசர்கள் அலங்காரமான அரண்மனைகளில் பலவித சுக போகங்களோடு வாழ்ந்தார்கள், கல்வியையும், இசை, கூத்து

முதலிய கலைகளையும் அவர்கள் ஆதரித்தார்கள். அரசியல் துறையிலும் தமிழ்நாடு நல்ல முன்னேற்ற மடைந்திருந்தது. அந்தக் காலத்திலேயே அமைப்புக்குட்பட்ட முடியரசு தமிழ் நாட்டில் நடைமுறையில் இருந்தது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அரசன் எல்லா அதிகாரமும் பெற்றிருந்தாலும் தன்னிஷ்டம்போல் அரசாளவில்லை. ஐம்பெருங்குழுவின் ஆலோசனைப்படிதான் ஆட்சி செய்தான். ஆனால் ஐம்பெருங்குழுவின் ஆலோசனையை அரசன் உண்மையில் எவ்வளவு தூரம் ஏற்று நடந்தான் என்று கூறுவதற்குத் தக்க ஆதாரமில்லை. கிராம ஆட்சியில் கிராமச்சபைகளுக்கு அதிகச்செல்வாக்கு இருந்தது. என்றும் தெரிகிறது.

பழந் தமிழ்நூல்களை ஆராய்வதில் சிறிது ஜாக்கிரதையாய் இருப்பது அவசியம். அவற்றிற் கூறப்பட்டுள்ளவைகள் முற்றிலும் உண்மைதாமா இல்லையா என்று முடிவு செய்வதற்கு அவற்றை வேறு ஆதாரங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு வேறு ஆதாரம் ஒன்றும் இல்லை. மேலும் அவற்றிற் கூறப்படும் சில விஷயங்களை ஆராய்ந்தால், மக்கள் வாழ்க்கை எவ்வாறு இருக்கவேண்டும் என்று அவைகள் கூறுவதைப்போல் தோன்றுகின்றதேயன்றி, அது எவ்வாறு இருந்தது என்று கூறுவதைப்போல் தோன்றவில்லை. எனினும் இந்தச் சான்றுகளின்மூலம் சில தெளிவான உண்மைகள் புலப்படுகின்றன. தமிழ்நாட்டின் ஆட்சிமுறை நன்றாக இருந்தது. கிராமங்களில் வாழ்ந்த குடியானவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். அவர்கள் உழைப்பை அடிப்படையாகக்கொண்ட அமைதியான வாழ்க்கை நடத்தினார்கள். சில சமயங்களில் பஞ்சமும், பட்டினியும் இருந்தன. எனினும் ஏறக்குறைய எல்லா மக்களுக்கும் அவர்களுடைய எளிய வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேற்ற பொருள்கள் சாதாரணமாகக் கிடைத்தன. வடக்கிலிருந்து வந்த புதிய மதக்கொள்கைகளை இன்னும் அவர்கள் அதிகமாகப் பின்பற்றவில்லை. தங்களுடைய பழைய மதக் கோட்பாடுகளையே அவர்கள் பின்பற்றி வந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் உழவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய நாட்கள் நிலத்தை உழுது பண்படுத்துவதிலும், நீர் பாய்ச்சுவதிலும், அவறுடை செய்வதிலும் கழிந்தன. இந்த வேலைகளைத் தமிழ் நூல்களிற் சில மிக அழகாக வர்ணிக்கின்றன. குறிஞ்சி நிலத்திலிருந்த மக்கள் வேட்டையாடினார்கள். நெய்தல் நிலத்திலிருந்த மக்கள் மீன் பிடித்தார்கள்.

நகரங்களில் வாழ்ந்த மக்கள் பல சுகபோகங்களை அனுபவித்தார்கள். குடும்பவாழ்க்கை இனிமையும் இன்பமும் நிறைந்ததாக இருந்தது. எனினும் இசையிலும் கூத்திலும் வல்ல அழகிய பரத்தையர் பலர் இருந்ததால் சில சமயங்களில் குடும்பத்தலைவர்கள் தங்கள் குடும்பத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளை மறந்தார்கள். ஜனநெருக்கம் மிகுந்த தெருக்களும், அவற்றில் பல வகைப் பண்டங்கள் நிறைந்த கடைகளும் இருந்தன. வெளிநாட்டு வியாபாரிகள் தங்கள் சரக்குகளைக் கொண்டுவந்து விற்றார்கள். வடநாட்டிலிருந்து தங்கள் மதங்களைப் பரப்பவந்த சமணர்களும், பௌத்தர்களும், பிராமணர்களும் இருந்தார்கள். அரசனும், அவனுடைய படைவீரர்களும் நகரத்தில் வாழ்ந்தார்கள். அரச சபையில் புலவர்கள் இருந்தார்கள். இந்தப்புலவர்கள் சிறந்த நூல்களை இயற்றினார்கள். இந்த நூல்களின் வாயிலாகத்தான் நாம் அக்காலத் தமிழ்மக்களின் வாழ்க்கையைப்பற்றி அறிகிறோம். தமிழை வளர்த்த நகரங்கள் தமிழ்நாட்டில் பல இருந்தன. ஆனால் அவற்றில் தலைசிறந்தது மதுரை. இன்றும் இது தென்னிந்தியாவில் ஒரு சிறந்த நகரமாக விளங்குகிறது. மதுரை பாண்டிய ராஜ்யத்தின் தலைநகரம். அங்கே தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்ததென்றும், பெரும்புலவர்கள் பலர் அதன் அங்கத்தினராக இருந்தனர் என்றும் பொதுவாக நம்பப்படுகிறது. சங்க நூல்கள் சிலவற்றுள் சில வடமொழிச் சொற்கள் காணப்படுகின்றன. அதனால், அந்த நூல்கள் எழுதப்படுவதற்கு முன்னரே தமிழ் நாட்டிற்கும் வட நாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

தென்னிந்தியாவில் கல்விக்கும், கலைக்கும் உறைவிடமாக இருந்த மற்றொரு நகரம் காஞ்சீபுரம் என்பது. இது சென்னைக்குத் தென்மேற்கில் சிறிது தூரத்தில் இருக்கிறது. இது தமிழகத்தின் வடக்கெல்லைக்கு அண்மையில் இருக்கிறது. கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் காஞ்சீபுரம் பல்லவர்களுடைய தலைநகரமாயிற்று. பல்லவர்கள் தமிழகத்திற்கு வடக்கிலிருந்த ஆந்திர நாட்டை ஆண்டுவந்தார்கள் என்று முன்னர்ப் பார்த்தோம். காஞ்சீபுரத்தில் வடமொழிக் கல்வி ஓங்கியிருந்தது. ஆகவே, காஞ்சீபுரத்தின் பண்பாடு தமிழ்ப்பண்பாடு அன்று என்றும், வடமொழிப் பண்பாடு ஆகும் என்றும் கூறலாம். வடக்கிலிருந்து வந்த இந்து மதம் காஞ்சீபுரத்தில் நிலைபெற்று, அதன்பின்னர் அங்கிருந்து மெதுவாகத் தெற்கே பரவிற்று என்று கூறலாம்.

தமிழகத்தின் கிராமங்களில் வாழ்ந்த மக்களைவிட நகரங்களில் வாழ்ந்த மக்கள் அதிக முன்னேற்ற மடைந்திருந்தார்கள். அவர்களுடைய பழைய மதக்கொள்கைகள் அவர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. ஆகவே வேறு மதக்கொள்கைகளைப் பற்றி அறிந்துகொள்ளுவதற்கும், அவற்றை ஆராய்வதற்கும் அவர்கள் ஏற்ற மனோநிலை பெற்றிருந்தார்கள். அந்தச் சமயத்தில்தான் வடநாட்டிலிருந்து சமணர்களும், பௌத்தர்களும், பிராமணர்களும் தங்கள் மதங்களைப் பரப்பும் நோக்கத்துடன் தென்னாட்டிற்கு வந்தார்கள். ஆகவே அவர்கள் விதைத்த புதிய விதைகள் நல்ல மண்ணில்தான் விழுந்தன.

அதிகாரம் 14

குப்த சாம்ராஜ்யம்

குஷாண சாம்ராஜ்யத்தின் அழிவிற்கும் குப்த சாம்ராஜ்யத்தின் தோற்றத்திற்கும் இடையிலுள்ள காலத்தில் வட இந்தியாவிலிருந்த ராஜ்யங்களின் வரலாறு சரியாகத் தெரியவில்லை. அவ்வரலாற்றை ஒழுங்கான முறையில் எழுதும் வேலையில் ஆராய்ச்சியாளர்கள் இப்போது ஈடுபட்டு வருகின்றனர். கி. பி. நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பீகாரில் ஆரம்பித்த குப்த ஆதிக்கம் விரைவில் வட இந்தியா முழுதும் பரவியது. தக்காணத்திலிருந்த மக்களும் குப்தர்களுடைய பலத்தை நேரிற் கண்டு, அதற்குத் தாற்காலிகமாகக் கீழ்ப்படிந்தார்கள். குப்த வம்சத்தைச் சேர்ந்த அரசன் ஒவ்வொருவனும் தன்னுடைய பெயருடன் "குப்தன்" என்ற பட்டத்தை வைத்துக்கொண்டான். அதனால்தான் இந்த சாம்ராஜ்யத்திற்குக் குப்த சாம்ராஜ்யம் என்ற பெயர் வழங்குகிறது. இந்தச் சாம்ராஜ்யத்தை நிறுவிய அரசன் பெயர் சந்திரகுப்தன் என்பது. அது அவனுடைய சொந்தப் பெயராகவும் இருக்கலாம், அல்லது அவன் அதிகாரம் அடைந்தபோது சூட்டிக்கொண்ட பெயராகவுமிருக்கலாம். ஆறு நூற்றாண்டுகளுக்குமுன் மௌரிய சாம்ராஜ்யத்தை நிறுவிய அரசன் பெயரும் சந்திரகுப்தன் என்பது இங்கு நமது ஞாபகத்திற்கு வரும்.

முதலாம் சந்திரகுப்தன் ஆரம்பத்தில் பீகாரில் ஆண்டுவந்த ஒரு சிற்றரசன். அவன் மனைவியின் மூலமாக அவனுக்குப் பாடலிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்ட மகதராஜ்யம் கிடைத்தது.

அதன்பிறகு அவன் பீகாரின் மற்ற பகுதிகளையும், அயோத்தியின் கிழக்குப் பகுதியையும் வென்று தன் ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தான். வங்காளத்தின் ஒரு பகுதியையும் அவன் ஜயித்திருக்கக்கூடும். ஆனால் அதைப்பற்றி நமக்கு நிச்சயமாகத் தெரியாது. கி. பி. 320-ஆம் ஆண்டில் அவன் சக்ரவர்த்தி என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டதோடு அந்த ஆண்டிலிருந்து ஒரு புதிய சகாப்தத்தையும் நிறுவினான். அவனுக்குப்பின் சமுத்ர குப்தன் பட்டத்திற்கு வந்து, சுமாராகக் கி. பி. 330-ஆம் ஆண்டிலிருந்து 375-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்தான். அந்த நீண்ட ஆட்சியின் பெரும்பகுதியை அவன் வெற்றிகரமான போர் செய்வதிற் கழித்தான். அவனுடைய வெற்றிகளைப்பற்றி அவனே எழுதி வைக்கச் செய்தான். அசோகருடைய ஆணை பொறித்த கற்றூண் ஒன்று இப்போது அலகாபாத் கோட்டையிலிருக்கிறது. அந்தத் தூணில்தான் சமுத்திரகுப்தனுடைய வெற்றிகளைப் பற்றி எழுதிவைக்கப்பட்டிருக்கின்றது. அந்த வெற்றிகளைப் பற்றிக் கூறப்புகுமுன் நாம் ஒரு முக்கிய விஷயத்தைத் தெரிந்து கொள்வது நல்லது.

இந்தியப் போர் வரலாற்றில் நாம் இரண்டுவகையான படையெழுச்சிகளைப் பற்றிப் படிக்கிறோம். ஓர் அரசன் தனது ராஜ்யத்தின் அண்மையிலிருக்கும் வேறொரு ராஜ்யத்தின்மீது படையெடுத்து அந்த ராஜ்யத்தின் அரசனைத் தோற்கடித்து அவனைத் தனக்குக் கப்பம் கட்டுமாறு செய்கிறான், அல்லது அந்த ராஜ்யத்தைத் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளுகிறான். இத்தகைய படையெழுச்சியால் நீண்ட நாட்பயன் எதிர்பார்க்கப் படுகிறது. அவ்வாறின்றி ஓர் அரசன் பக்கத்திலுள்ள நாடுகளின்மீது படையெடுத்து, அங்குள்ள அரசர்களைத் தோற்கடித்து அகப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு திரும்பிவிடுகிறான். இத்தகைய படையெழுச்சியால் கீர்த்தியும், தற்காலிக லாபமுந் தான் எதிர்ப்பார்க்கப்படுகின்றன. இந்திய வரலாற்றில் இத்தகைய இருவகைப் படையெழுச்சிகளைப் பற்றியும் நாம் படிக்கிறோம். சமுத்திரகுப்தன் வட இந்தியாவில் செய்த போர்கள் முதல் வகையையும், தென்னிந்தியாவிற் செய்த போர்கள் இரண்டாம் வகையையும் சேர்ந்தவை.

சமுத்திர குப்தனுடைய சாம்ராஜ்யம் கிழக்கில் பிரமபுத்திரா நதிவரையில் பரவியிருந்தது. அதில் வங்காளத்தின் பெரும்பகுதி சேர்ந்திருந்தது. வங்காளத்தின் மீதிப்பகுதியிலும், அஸாமிலுமிருந்த ராஜ்யங்கள் அவனுக்குக் கப்பங்கட்டிய சிற்றரசர்களால்

9

ஆளப்பட்டன. அவனுடைய ஆட்சி மேற்கில் யமுனை நதி வரையிலும், தென்மேற்கில் நர்மதை நதி வரையிலும் பரவியிருந்தது. ஆனால் தென்மேற்கிலிருந்த சகச்சத்ரபதிகளுடைய ராஜ்யங்கள் சமுத்திரகுப்தனுடைய சாம்ராஜ்யத்திற் சேரவில்லை. ஆகவே, அவனது ராஜ்யத்தின் எல்லை மேற்குக் கடற்கரையை எட்டவில்லை. யமுனைக்கு மேற்கில் ராஜபுதனத்திலும், பஞ்சாபிலும் ஆண்ட சில அரசர்களிடம் சமுத்திரகுப்தன் கப்பம் வசூலித்தான். எனவே சமுத்திரகுப்தனை வட இந்தியாவின் சக்கரவர்த்தி என்று கூறுவது நியாயமானதே.

சமுத்ரகுப்தனுடைய தட்சிணப் படையெழுச்சியைப்பற்றி அவனுடைய கல்வெட்டில் காணப்படும் விஷயங்களை வரலாற்று மாணவர் சிலர் அப்படியே ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவனுடைய வெற்றிகளை அந்தக்கல்வெட்டு மிகைப்படுத்திக் கூறுகிறது என்பது அவர்கள் கருத்து. ஆனால், சமுத்திரகுப்தன் பாடலிபுரத்திலிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கிச் சென்று, வழியிலிருந்த காட்டுக் கூட்டத்தினரை வென்று தனக்குக் கீழ்ப் படியுமாறு செய்துவிட்டு, அசோகன் கடைசியில் யுத்தம் செய்த கலிங்க நாட்டையடைந்து அங்கேயிருந்த பல அரசர்களைத் தோற்கடித்தான் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. பின்னர் கிருஷ்ணா நதியின்கரையில் பல்லவர்களோடு சண்டை செய்தான். அதற்குத் தெற்கிலும் சமுத்திரகுப்தன் சென்றானா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அதன்பின் அவன் வடக்கே திரும்பிச்சென்று தன்னுடைய ராஜ்யத்தின் தெற்கெல்லையான நர்மதை நதியை அடைந்தான். இந்தப் படையெழுச்சியின் பயனாக அவனுக்கு அதிகமான பொருள் கிடைத்திருக்க வேண்டும். அவ்வாறு கிடைத்த தங்கத்தைக் கொண்டுதான் அவன் தங்க நாணயங்களை அச்சடித்து வழங்கினான் என்று நினைக்கலாம். தன்னுடைய தலைநகரிலிருந்து அவன் எண்ணூறு மைலுக்கு அதிகமாகவே படையெடுத்துச் சென்றான். அந்தக் காலத்தில் இந்தச் செயல் மிக அருமையானது, போற்றற்குரியது. சிறந்த நிர்வாகத் திறமையில்லாவிட்டால் இத்தகைய அரிய காரியத்தைச் சாதித்திருக்க முடியாது. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் வட இந்தியாவில் ஆட்சிசெய்த அலாவுதீன் காலத்தில்தான் இத்தகைய அருஞ்செயலை மறுபடியும் ஒரு வீரன் செய்தான்.

சமுத்திரகுப்தனுக்குப் பின் அவனுடைய மகனான இரண்டாம சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்து கி. பி. 413-ஆம் ஆண்டு வரையில் ஆட்சிசெய்தான், அவன் "விக்கிரமாதித்தன்" என்ற

ஒரு பட்டத்தையும் தன் பெயரோடு சேர்த்துக்கொண்டான். அவன் மேற்குச் சத்திரபதிகளை வென்று குப்தராஜ்யத்தை அரபிக் கடல் வரையில் பெருக்கினான். அத்துடன் சத்திரபதிகள் இந்திய வரலாற்றிலிருந்தே மறைந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு வேறு ராஜ்யங்கள் குப்த ராஜ்யத்தில் சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. இந்தப் பரந்த சாம்ராஜ்யம் வெள்ளை ஹூணர்களால் தாக்கப்படும் வரையில் குப்தர்களுடைய ஆட்சியில் இருந்தது. ஹூணப் படையெழுச்சியைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம். அந்தப் படையெழுச்சியால் குப்த சாம்ராஜ்யம் சிதைந்து அதன் பரப்புச் சுருங்கியது. கி. பி. 500-ஆம் ஆண்டிற்குப் பின்னர்ப் பீகாரின் ஒரு சிறு பகுதிதான் குப்த வம்சத்தினரின் ஆட்சியிலிருந்தது.*

சமீபகாலத்தில் வங்காளத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில சாசனங்களின் உதவியால் குப்த சாம்ராஜ்யத்தின் ஆட்சி முறையைப்பற்றி நாம் ஓரளவு தெரிந்துகொள்ளுகிறோம். ராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒரு கவர்னரின் ஆளுகையிலிருந்தது. மாகாணத்திற்கு "புக்தி" என்று பெயர். ஒவ்வொரு மாகாணமும் பலஜில்லாக்களாகவும், ஒவ்வொரு ஜில்லாவும் பல டிவிஷன்களாகவும், ஒவ்வொரு டிவிஷனும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த முறை ஏறக்குறையத் தற்கால முறையை ஒத்திருந்தது. ஜில்லா அதிகாரிக்கு உதவி செய்ய ஒரு சபை இருந்தது. இந்தச் சபையில் வர்த்தகர்கள், தொழிலாளிகள் முதலியவர்களுடைய பிரதிநிதிகள் இருந்தார்கள். ஆனால் இந்தச்சபை உண்மையில் ஏதாவது நிர்வாக வேலைகளை கவனித்ததா, அல்லது ஜில்லா அதிகாரிக்கு ஆலோசனை கூறுவதோடு நின்றுவிட்டதா என்பது தெரியவில்லை. அரசாங்க தஸ்தாவேஜுகளைக் காப்பாற்றிவைப்பதற்குத் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். விளை நிலங்களைப் பற்றிய குறிப்புகளைச் சரியாக வைத்திருப்பது இவர்களுடைய முக்கிய வேலை. இந்த உத்தியோகஸ்தர்கள் எவ்வாறு வேலை செய்தார்கள் என்பதை மேலே குறிப்பிட்ட சாசனங்களின் மூலம் நாம் ஒருவாறு யூகிக்கமுடியும். யாரோ ஒருவன் கோயிலுக்காக ஒரு தர்மம் செய்ய நினைக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். முதலில், தனக்குத் தேவையான நிலத்திற்காக ஜில்லா அதிகாரிக்கும் அவன் சபைக்கும் ஒரு விண்ணப்பம் அனுப்புகிறான். அந்த நிலம் எத்த

* குப்த சாம்ராஜ்யம் அழிந்துபோகாமல் கி. பி. ஆறும் நூற்றாண்டிலும் இருந்தது என்று டாக்டர் பயாக் என்ற அறிஞர் கருதுகின்றார்.

கையது, யாருக்குச் சொந்தம் என்ற விஷயங்களைப்பற்றி நிலக் குறிப்புகளை வைத்திருக்கும் உத்தியோகஸ்தர்கள் ஒரு தாக்கீது தயாரித்து ஜில்லா அதிகாரிக்கு அனுப்புகிறார்கள். அந்தத் தாக்கீதைப் பார்த்துவிட்டு ஜில்லா அதிகாரி அந்த நிலத்தின் விலையை நிர்ணயிக்கிறான். அதன்பின் அதைச் சரியாக அளந்து எல்லைகளை நிர்ணயித்து விலைக்கு வாங்குகிறவனுக்கு அமைதியான முறையில் ஸ்வாதீனம் கொடுக்கும்படி தன்னுடைய உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவு இடுகிறான். இந்த முறை தற்காலத்திலிருக்கும் அதிகார வர்க்கத்தினர் ஆட்சி முறையைப் போலவே இருப்பதை எளிதில் உணரலாம்.

இத்தகைய சாசனங்களின் மூலம் குடிமக்களின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதை நாம் அறிந்து கொள்ளமுடியாது. ஆனால் அந்தக்காலத்தில் இந்தியாவுக்கு வந்த பாஹியான் என்ற சீன யாத்திரிகருடைய குறிப்புக்களிலிருந்து மக்களுடைய வாழ்க்கை நிலையைப்பற்றி ஒரு சிறிது தெரிந்துகொள்ள முடிகிறது. அவர் கி. பி. 399-ஆம் ஆண்டிலிருந்து 414-ஆம் ஆண்டு வரையில்—அதாவது இரண்டாம் சந்திரகுப்தனுடைய ஆட்சிக் காலத்தில்—இந்தியாவிலிருந்தார். அவர் புத்தமத புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்கும், புத்தமத நூல்களைச் சேகரித்துக்கொண்டு போவதற்கும் சீனாவிலிருந்து தரை மார்க்கமாக இந்தியாவிற்கு வந்தார். பெஷாவருக்குச் சமீபத்தில் இந்தியாவிற்குள் நுழைந்த அவர், அதை யடுத்துள்ள மலைகளை யொட்டி வடக்கு முகமாகவும் மேற்கு முகமாகவும் சென்று 'பன்னு' என்ற இடத்திற்கு நேராக உள்ள வழியில் மறுபடியும் சிந்துசமவெளியில் புகுந்து பஞ்சாபைத் தாண்டி, வட மதுரையை அடைந்து, அங்கிருந்து கன்னோசி, அயோத்தி முதலியவற்றின் வழியாகப் பீகாருக்குச்சென்று, கடைசியில் பாடலிபுரத்தை யடைந்தார். பாடலிபுத்ரத்தில் அவர் தேடிவந்த சில நூல்கள் கிடைத்தன. அங்கே அவர் மூன்றாண்டுகள் இருந்து, பிராகிருத மொழியைக் கற்று, தமக்குக் கிடைத்த நூல்களைப் படித்துப் புதிய பிரதிகள் எழுதிக்கொண்டார். பின்னர் அவர் ஹூக்ளி நதியின் முகத்துவாரத்திலிருந்த தம்லுக் என்ற நகரத்தில் இரண்டாண்டுகள் இருந்தார். அதன்பின் கடல்மார்க்கமாக இலங்கைக்குச் சென்று அங்கிருந்து தமது சொந்த நாட்டிற்குத் திரும்பினார். ஆகவே வட இந்திய மக்களுடைய வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ளுவதற்கு அவருக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால், அவர் நாடிவந்த காரியத்தின்மீதே கண்ணாக இருந்தாராத

லால், புத்தமத விஷயங்களைத் தவிர மற்ற சாதாரண விஷயங்களைக்கவனிப்பதற்கோ, கவனித்தவற்றை எழுதி வைப்பதற்கோ அவருக்கு விருப்பமும் அவகாசமும் இல்லை. ஆதலால் நாம் அறிய விரும்பும் பல விஷயங்களைப்பற்றி அவர் மௌனமாக இருக்கிறார். இது நமது துரதிருஷ்டம். எனினும், அவர் எழுதி வைத்துள்ள சில குறிப்புக்களின் மூலம் இரண்டாம் சந்திரகுப்தனுடைய காலத்தில் ஆட்சிமுறை நன்றாக இருந்ததென்றும், நாடு செழிப்பாக இருந்ததென்றும் அறிகிறோம். இதனால் சந்திரகுப்தனுடைய ஆட்சியைப்பற்றிப் பொதுவாக வழங்கும் அபிப்ராயம் வலியுறுகின்றது.

வட இந்தியாவின் சில பகுதிகள் மக்கள் வாழ்க்கைக்குத் தகுதியற்றவையாக இருந்தன. வடபீகாரிலிருந்த சில பௌத்த புண்ணிய ஸ்தலங்கள் ஒரு காட்டிற்குள் இருந்தன. கோயில்களுக்கருகில் இருந்த சில பிட்சுக்களையும், ஒருசில குடும்பங்களையும் தவிர வேறு யாரும் அங்கு வசிக்கவில்லை. அதற்குத் தெற்கில் பாலை நிலங்கள் இருந்தன என்று பாஹியன் கேள்விப்பட்டார். ஆனால் கங்கைச் சமவெளியின் பெரும்பகுதி—மதுரையிலிருந்து கன்னோசி, காசி ஆகியவற்றின் வழியாகப் பாடலிபுத்திரம் செல்லும் வரையில்—மிகச் செழிப்பாக இருந்தது. அங்கு ஜனநெருக்கம் அதிகமாக இருந்தது. சீனாவிலிருந்த பல கட்டுப்பாடுகள் இந்தியாவில் இல்லை. மக்கள் நிலவரியை அரசாங்கத்திற்குச் செலுத்தினார்கள். ஆனால் அவர்கள் விருப்பம்போல் ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குப் போகலாம். அதை அதிகாரவர்க்கத்தினர் தடுக்கமாட்டார்கள். சீனாவில் குற்றவாளிகள் அதிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் இந்தியாவில் அவர்களுக்கு அவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்கப்படவில்லை. துர்நடத்தைக்கு அபராதமே சாதாரண தண்டனையாக இருந்தது. அரசாங்கத்திற்கு விரோதமாக இரண்டாந்தரம் கலகஞ் செய்பவனுடைய வலதுகை வெட்டப்படும். இது அவ்வளவாகக் கடுமையான தண்டனை அன்று என்பது பாஹியன் அபிப்பிராயம். மக்களிற் பெரும்பான்மையோர் மதுபானத்தை நீக்கியவர்களாகவும், புலாலை மறுத்தவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் பன்றிகளையும் கோழிகளையும் வளர்க்கவில்லை. அவர்கள் இறைச்சிக்காக மாடுகளை விற்கவும் வாங்கவும் இல்லை. கசாப்புக் கடைகளும், மதுபானக்கடைகளும் ஊருக்குள் இல்லை, ஆனால் சமூகத்திலிருந்து விலக்கப்பட்ட மக்கள் வேட்டையாடலும் மாமிசம் விற்றலும் தொழிலாகக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் மற்ற மக்களோடு சேராமல் ஊருக்கு வெளியில் வசித்தார்கள். அவர்கள் ஊருக்குள் வரநேர்ந்தால் தங்கள் கையிலுள்ள ஒரு பலகையைத் தட்டிச் சத்தம் செய்வார்கள். அதைக்கேட்டதும் மற்றவர்கள் வழியிலிருந்து விலகிக்கொள்வார்கள். அவர்களுடைய தீண்டலே தீமைதரும் என்று அவர்கள் நினைத்தார்கள். இந்தக் குறிப்புக்களின் மூலம் நாம் அதிகமாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், குப்தர்கள் காலத்தில் ஆட்சி முறையும் சமூகநிலையும் எவ்வாறிருந்தன என்பதைப்பற்றி ஒரு சிறிதாகிலும் அறிந்துகொள்ள முடிகிறதல்லவா?

குப்தர்கள் காலத்தில் இந்து பௌத்த மதங்களின் நிலைமையைப்பற்றி நாம் நிச்சயமாக ஒன்றும் கூற முடியாது. குப்த சாம்ராஜ்யம் சிறந்து விளங்கிய காலத்தில் குப்த அரசர்கள் இந்துக்களாகத்தான் இருந்தார்கள் என்பதில் எந்தவித ஐயமும் கிடையாது. ஆனால் அவர்கள் மதவிஷயங்களில் பரந்த மனப்பான்மையுடையவர்கள்; மதவெறியர்கள் அல்லர், அவர்கள் புத்தமதத்திற்குத் தீங்கிழைத்ததாகக் கூறுவதற்கு எந்தவிதச்சான்றும் கிடையாது. அதற்குப்பதிலாக, அவர்களிற் சிலர் சிலசமயங்களில் புத்தமதத்திற்கு ஆதரவு காட்டியதாகக் கூறுவதற்கு ஆதாரமிருக்கிறது. குப்தர்கள் காலத்தில் புத்தமதத்தின் வீழ்ச்சி தொடங்கிவிட்டதென்றும், பொதுமக்கள் இந்துமதத்திற் பற்றுக்கொண்டதால் அந்த மதம் மறுமலர்ச்சி யடைந்ததென்றும் சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஆனால் இத்தகைய அபிப்பிராயத்திற்குப் போதுமான ஆதாரம் இருப்பதாகக் கூறமுடியாது. அரசர்கள் புத்தமதத்தை ஆதரிக்காமல் இந்துமதத்தை ஆதரித்தார்கள் என்று கூறமுடியுமே தவிரப் பொதுமக்கள் புத்தமதத்தை வெறுத்து இந்துமதத்தில் தனிப்பட்ட பற்றுக் கொண்டார்கள் என்று கூற முடியாது. அரசர்கள் இந்துமதத்திற்களித்த ஆதரவைக் காட்டுவதற்குக் கலைச்சின்னங்கள் பல இன்னும் இருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு பொதுமக்களின் மதநம்பிக்கைகளைப் பற்றி நாம் எந்தவிதமான முடிவுக்கும் வரமுடியாது. இந்த விஷயத்தில் நமக்கு உதவி செய்வதற்கு வேறு ஆதாரம் எதுவுமில்லை.

புத்தமதம் எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பதைப் பற்றிப் பாஹியன் குறிப்புக்களின்மூலம் ஓரளவு நாம் தெரிந்துகொள்ளலாம். அவர் புத்தமத நூல்களைத் திரட்டிக்கொண்டு போகும் ஒரே நோக்கத்துடன் இந்தியாவுக்கு வந்தார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே, எங்கெந்த இடங்களில் தாம்

தேடிவந்த நூல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாரோ அந்த இடங்களுக்குத்தான் போயிருப்பார் என்றும், மற்ற இடங்களுக்குப் போயிருக்கமாட்டார் என்றும் நாம் நினைப்பது தவருகாது. எனவே, அவர் போகாத இடங்களில் புத்தமதம் பரவவில்லை என்று நாம் யூகித்தால் அதுவும் தவருகாது. அவருடைய குறிப்புக்களிலிருந்து பின்வரும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். பஞ்சாபிலும், வங்காளத்தில் ஹுக்ளி நதியின் முகத்துவாரத்துக் கருகிலுள்ள பிரதேசத்திலும் புத்தமதம் அதிகமாகப பரவிக் கொண்டிருந்தது. ஆனால் மதுரைக்கும் வங்காளத்துக்கும் இடையிலுள்ள பரந்த சமவெளிவெளியைப்பற்றிப் பாஹியன் இந்த மாதிரி ஒன்றும் சொல்லவில்லை. அந்தப்பகுதியில் புத்தமதக் கொள்கைகளை மக்கள் அறிந்திருந்தார்கள் என்பதைத்தவிர வேறொன்றும் நாம் யூகிக்கமுடியாது. வடமதுரையில் யமுனைநதிக் கரையில் இருபது பௌத்தமடங்களும் அண்மையிலிருந்த காடுகளில் சில மடங்களுமிருந்தன. ஆனால் இத்தகைய மடங்கள் மற்ற இடங்களில் அதிகமாக இருந்ததாகத் தெரியவில்லை. கன்ஞேசியில் இரண்டும், கௌசாம்பியில் ஒன்றும், காசியில் இரண்டும் இருந்தன ; அயோத்தியில் ஒன்றுமேயில்லை. இவற்றைத் தவிர மற்ற இடங்களில் பௌத்தமடங்கள் இருந்தனவா, இல்லையா என்பது தெரியாது. ஆனால் பாஹியான் அவற்றைப் பார்க்கவில்லை என்பது நிச்சயம். மேலும் பாஹியான் அந்தக்காலத்தில் வட இந்தியாவிலிருந்த மடங்களைப்பற்றி விவரமாகக் குறித்துவைத்தார் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆகவே அவர் குறிப்புக்களிற் காணப்படும் மடங்களைத் தவிர வேறு இடங்களில் பௌத்தமடங்கள் அந்தக்காலத்தில் இல்லை என்று நினைப்பது தவருகாது. அதுவுமன்றி மதுரையில் புத்தமதம் மரவிக்கொண்டிருந்தது என்று அவர் கூறுவதிலிருந்து அந்தப் பிரதேசத்தில் புத்தமதம் இந்துமதத்தைவிட உயர்ந்தநிலையில் இருந்தது என்று கூறமுடியாது. பௌத்தர்களும் இந்துக்களும் ஒருவரோடொருவர் எவ்விதத் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதைப்பற்றி பாஹியன் ஒன்றும் எழுதிவைக்கவில்லை; பாஹியன் குறித்துவைத்திருக்கும் சில கர்ணபரம்பரைச் செய்திகளின் மூலம், பழங்காலத்தில் அயோத்தியிலும் வேறுசில இடங்களிலும் பௌத்தர்களுக்கும் பிராமணர்களுக்கும் சில சமயங்களில் சச்சரவு ஏற்பட்டது என்பதை அறிகிறோம். ஆனால் இரண்டாம் சந்திரகுப்தன் காலத்தில் அரசனாலோ அல்லது இந்துக்குடிகளாலோ பௌத்தர்களுக்குத் துன்பம் ஏற்பட்டது என்று நினைக்க

இடமேயில்லை. பாடலிபுத்திரத்தில் ஒவ்வோர் ஆண்டும் நடைபெற்ற பௌத்த விழாவில் பிராமணர்களும் கலந்துகொண்டார்கள் என்று பாஹியன் கூறுவதிலிருந்து பௌத்தர்களும் இந்துக்களும் சமாதானமாகவே வாழ்ந்துவந்தார்கள் என்பது தெரிகிறது. மேலே கூறியவற்றிலிருந்து கங்கைச்சமவெளியின் பெரும்பகுதியில் இந்துமதம் ஓங்கியிருந்தது என்றும், அந்தச்சமவெளியின் கிழக்குப் பகுதியிலும் மேற்குப்பகுதியிலும் புத்தமதம் அதிகமாகப் பரவியிருந்தது என்றும் தீர்மானிக்கலாம். ஆனால் மதுரையிலும் வங்காளத்திலும்கூடப் புத்தமதம் இந்துமதத்தைவிட மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை.

பாஹியனுடைய குறிப்புக்களைத் தவிர நமக்குக் கிடைத்திருக்கும் வேறு சான்றுகள் மிகச் சில. இந்த இரண்டுவகை ஆதாரங்களையும் ஒன்றாகச் சேர்த்து ஆராய்ந்தால், குப்த சாம்ராஜ்யத்தில் இந்துமதம், பௌத்தமதம், ஜைனமதம் ஆகிய மூன்றும் இருந்தன என்றும், அவற்றுள் ஒன்றுக்கொன்று பகைமை கிடையாது என்றும் அறிகிறோம். இந்த மதங்களுக்கிடையில் மிகுந்த பகைமை இருந்தது என்று சிலர் கூறுவது ஆதாரமற்றது. குப்தர் காலத்தில் வடஇந்தியாவிலிருந்த நிலைமையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்திலிருந்த நிலைமைக்கு ஒப்பிடலாம். இங்கிலாந்தின் பெரும்பான்மையான மக்கள் ஆங்கிலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள். அதுவே அரசாங்க மதம். ஆனால் அந்த மதத்தை ஒத்துக்கொள்ளாதவர்கள் (இணங்காதவர்கள் என்று அவர்களுக்குப் பெயர்) சிலர் இருந்தார்கள். அவர்கள் தங்களிஷ்டம்போல் பிரசாரம் செய்து வந்தார்கள். அவர்களை ஆங்கிலிக்கத் திருச்சபை தொந்தரவு செய்யவில்லை. இருதிறத்தாருள்ளும் சில சமயங்களில் மதவெறியர்கள் தோன்றுவதுண்டு. ஆனால், சாதாரண மக்கள் அவர்கள் கையாண்ட முறைகளை வெறுத்தார்களெனினும், அவர்கள் பிரசாரத்தால் நன்மை ஏற்படுவதையும் கண்டார்கள். ஆகவே இந்த இருவகைக் கொள்கைகளும் இருப்பதால் நாட்டிற்கு எந்தவித நஷ்டமும் இல்லை என்பதை உணர்ந்து அவர்கள் பரந்த மனப்பான்மையுடனிருந்தார்கள். குப்தர் காலத்திலிருந்த இந்துக்களும் பௌத்தர்களிடத்திலும் சமணர்களிடத்திலும் இத்தகைய மனப்பான்மைதான் கொண்டிருந்தார்கள் என்று நமக்குக் கிடைத்துள்ள ஒரு சில ஆதாரங்களைக் கொண்டு கூறுவோமானால் அது தவறாகாது.

இந்துமதத்தின் வளர்ச்சியில் குப்தர் காலம் மிக முக்கிய மானது. ஏனெனில், இந்தக் காலத்தில்தான் புராணங்களெல்லாம் எழுதப்பட்டன. இந்நூல்கள் சிலவற்றிலுள்ள சரித்திர சம்பந்தமான விஷயங்களைப்பற்றி நான்காம் அதிகாரத்திற் கூறினோம். அவைகளுடன் மிகுதியான கற்பனையைக் கலந்து இந்தப் புராணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் சன்மார்க்கத்தையும், இந்துமதக் கோட்பாடுகளையும் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றன. மகாவிஷ்ணுவே தெய்வங்களுக்கெல்லாம் உயர்ந்த தெய்வம் என்று சில புராணங்கள் கூறுகின்றன. சிவபெருமானே ஒப்பற்ற கடவுள், மற்ற தெய்வங்களெல்லாம் அவனுக்குக் கீழ்ப் பட்டவை என்று வேறு சில புராணங்கள் கூறுகின்றன. இதுவே இந்தப் புராணங்களில் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். இந்துமதத்தின் பல கடவுட்கொள்கை பூர்ணமான திருப்தியளிக்காததால் மக்களுடைய நாட்டம் அந்தக் கொள்கையைத் தாண்டி அப்பாற் சென்று கொண்டிருந்தது என்று முன்னர் ஓர் அதிகாரத்திற் பார்த்தோம். அத்தகைய மக்கள் இந்தப் புராணங்களின் வாயிலாகத் தாங்கள் தேடியலைந்த பொருளைப் பெற்றார்கள். சைவர்கள் சிவபெருமானே ஒப்பற்ற கடவுள் என்றும், வைணவர்கள் விஷ்ணுவே ஒப்பற்ற கடவுள் என்றும் நம்புவதால் இதை ஏறக்குறைய ஒரு கடவுட் கொள்கை என்றும், பல கடவுட் கொள்கையைத் தாண்டி அப்பாற் செல்லுவதற்கு மக்கள் செய்த முயற்சியின் பயனாக இந்தக் கொள்கை தோன்றிற்று என்றும் கூறலாம். புராணங்களும், இதிகாசங்களும் இந்துக்களுடைய சிறந்த மதநூல்களாக இருக்கின்றன. இவற்றில் விளக்கப்பட்டிருக்கும் சன்மார்க்க போதனைகள் அவர்களுடைய வாழ்க்கை முறைக்கும் தனிப்பட்ட பண்புகளுக்கும் அடிப்படையாக இருக்கின்றன.

புராரணங்களைத் தவிர வேறு பல சிறந்த நூல்களும் குப்தர் காலத்தில் எழுதப்பட்டன. அக்காலத்தில் இருந்த கவிகளுள் காளிதாசன் தலை சிறந்தவன். இவன் இந்தியாவின் ஒப்பற்ற புலவனென்றும், உலகத்தின் தலை சிறந்த புலவர்களுள் ஒருவன் என்றும் கருதப்படுகிறான். இது மேல்நாட்டு அறிஞர்களும் கீழ்நாட்டு அறிஞர்களும் ஒத்துக்கொள்ளும் முடிவு. காளிதாசன் கதைப்பாட்டு இசைப்பாட்டு, நாடகம் ஆகிய பலவகைக் கவிகளை எழுதியிருக்கிறான். அவன் எழுதிய சாகுந்தலம் என்ற நாடகம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. அது காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்ட நாடகம். இந்திய நாடகங்

களில் இதுவே ஒப்பற்ற நாடகம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள். காளிதாசனைத் தவிர வேறுபல சிறந்த கவிகளும் குப்தர் காலத்திலிருந்தார்கள். பிற்காலத்திய நூல்களிற் காணப்படும் செயற்கைக் கட்டுப்பாடுகள் குப்தர் காலத்து இலக்கியத்தில் இல்லை. இலக்கியத் துறையைப் போலவே கலைத்துறையிலும் குப்தர்காலம் சிறந்த காலமாக இருந்தது. ஆகவே குப்தர் காலத்தை ஷேக்ஸ்பியர் காலத்திற்கும், பெரிக்கிலிஸ் காலத்திற்கும் அறிஞர்கள் ஒப்பிடுகிறார்கள்.

மேலே கூறிய நூல்களெல்லாம் உயர்ந்த ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டவை. குப்தர் காலத்திலும், அதற்குப் பின்னரும் இத்தகைய ஸம்ஸ்கிருதத்தில் தான் மதநூல்களும் இதர நூல்களும் எழுதப்பட்டன. ஸம்ஸ்கிருதம் ரிக்வேதத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் பழைய ஆரிய மொழியிலிருந்து வளர்ந்தது. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டு அல்லது நான்காம் நூற்றாண்டிலேயே இது முழு வளர்ச்சி பெற்றுவிட்டது. ஆனால் அந்தக் காலத்தில் அது கற்றறிந்த பிராமணர்களாலேயே உபயோகிக்கப்பட்டது. சாதாரணமக்கள் பேசிவந்த ஆரியமொழிக்கு பிராக்கிருதம் என்று பெயர். பழைய பௌத்த ஜைன நூல்களெல்லாம் பிராகிருதத்தில் எழுதப்பட்டவை.* அசோகருடைய ஆணைகளும், பழங்காலத்தைச் சேர்ந்த வேறு சாசனங்களும் பிராகிருத மொழியில் எழுதப்பட்டவை. நாளடைவில், முதலில் பௌத்தர்களும் பின்னர்ச் சமணர்களும் தங்களுடைய மத நூல்களை ஸம்கிருதமொழியில் எழுத ஆரம்பித்தார்கள். கி. பி. 150-ஆம் ஆண்டிலிருந்து சாசனங்களை எழுதுவதற்கும் ஸம்ஸ்கிருதமே உபயோகிக்கப்பட்டது. குப்தர்காலத்தில் எல்லா ஆசிரியர்களும் ஸம்ஸ்கிருதத்திலேயே தங்கள் நூல்களை எழுதினார்கள். அதிலிருந்து பல நூற்றாண்டுகள் வரையில் ஸம்ஸ்கிருதமே நூல் மொழியாக இருந்தது. சமீப காலத்தில் தான் பேச்சு வழக்கிலுள்ள வேறு பல மொழிகளில் நூல்கள் தோன்றின. ஸம்ஸ்கிருத நாடகங்களில் காணப்படும் ஒரு விஷயத்தை இங்குக் கூறுதல் அவசியம். ஒவ்வொரு நாடகத்திலும் ஸம்ஸ்கிருதம். பிராகிருதம் ஆகிய இரண்டு மொழிகளும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசர்களும், உயர்ந்த பதவியிலுள்ள ஆண் மக்களும் ஸம்ஸ்கிருதத்தில் பேசுகிறார்கள். பெண்களும் கல்வி

* இலங்கையில் புத்தமத நூல்களையும் கோட்பாடுகளையும் எழுதி வைப்பதற்கு உபயோகிக்கப்பட்ட மொழிக்கு "பாலி" என்று பெயர். இது பிராகிருத மொழியிலிருந்து தோன்றியது.

யறிவில்லாத ஆண்களும் பிராகிருதத்திற் பேசுகிறார்கள். தற்கால மக்களாகிய நமக்கெல்லாம் இது விந்தையாகத் தெரிகிறது.

இந்திய நாடகக்கலை வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்ததா அல்லது இந்தியாவிலே தோன்றி வளர்ந்ததா என்ற கேள்வியைப்பற்றி இங்குச் சில சொற்கள் கூறுவது பொருந்தும். ரிக்வேத காலத்திலேயே இந்திய நாடகக்கலை தோன்றியதென்றும், அதுவே பிற்காலத்தில் முழுவளர்ச்சியடைந்ததென்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். அலெக்சாண்டருடைய முன்னிலையிலும், அவனுக்குப்பின் இந்தியாவிலிருந்த கிரேக்கத் தலைவர்களின் முன்னிலையிலும் நடந்த நாடகங்களைப் பார்த்துத்தான் இந்தியர்கள் நாடகக்கலையைக் கற்றுக்கொண்டார்கள் என்று வேறு சில அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த இரண்டு முடிவுகளுக்கும் போதிய ஆதாரம் கிடையாது. இந்திய நாடகக்கலை இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்தகலை என்றும், ஒரு சில விஷயங்களை இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து கற்றிருக்கலாம் என்றும் பொதுவாகக் கூறலாம்.

கட்டிடக் கலையும் குப்தர்காலத்தில் சிறந்து விளங்கியது என்று நினைப்பதற்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன. ஆனால் அந்தக் காலத்துக் கட்டிடங்களில் மிகச்சிலவே இன்று காணப்படுகின்றன. எனவே குப்தர்காலத்துக் கட்டிடக் கலையின் தன்மைகளைப்பற்றித் தைரியமாக எழுதுவது எளிதன்று. குப்தர் காலத்துக் கட்டிடங்களிற் பெரும் பாலானவை அழிந்து போனதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கட்டிடங்கள் விரைவில் அழிந்து போவதற்கு இந்தியாவின் தட்பவெப்பநிலை ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. பழங்காலக் கட்டிடங்களைக் காப்பாற்றி வைக்கும் எண்ணம் சமீபகாலத்தில்தான் இதர நாடுகளில் போலவே இந்தியாவிலும் தோன்றியது. உபயோகத்தில் இல்லாத கட்டிடங்களை இடித்து அவற்றிலிருந்து கிடைத்த பொருள்களைக் கொண்டு வேறு கட்டிடங்களைக் கட்டிக்கொள்வது சாதாரண வழக்கமாயிருந்தது. பிற்காலத்தில் இந்தியாவின்மேற் படையெடுத்துவந்த முகமதியர்கள் பல கட்டிடங்களை இடித்துவிட்டார்கள். உருவ வழிப்பாட்டை அறவே வெறுத்தவர்கள் முகமதியர்கள். மேலும் கோயில்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சொத்துக்களைக் கொள்ளையடிக்கவேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள். ஆகவே, அவர்களுடைய மதவெறியால் எழுந்த வெறுப்பை அவர்களுடைய பேராசை அதிகப்படுத்த,

எதிர்ப்பட்ட கோயில்களை எல்லாம் அவர்கள் இடித்துத் தரை மட்டமாக்கினார்கள். வேறு மதத்தினரால் இவ்வாறு அழிந்து நாசமாக்கப்பட்ட கோயில்களை இந்துக்கள் மறுபடியும் புதிப்பிக்க விரும்புவதில்லை. அவ்வாறு புதிப்பித்தல் அவர்களுடைய மதக் கோட்பாடுகளுக்கு விரோதம். ஆகவே முகமதியர்களுடைய கண்ணுக்கும், இயற்கையின் கொடுமைக்கும், மக்களின் அறி வின்மைக்கும் தப்பிப்பிழைத்த ஒருசில கட்டிடங்கள் தாம் இன்று வரலாற்று மாணவர்களுக்குக் கிடைத்துள்ளன.

கிடைத்துள்ள சில கட்டிடங்களும் கோயில்களாகவே இருக் கின்றன. அரச மாளிகை, சாதாரணமக்கள் இல்லம்போன்ற கட்டிடங்கள் ஒன்றுகூடக் கிடைக்கவில்லை. கோயில்களைக் கட்டு வதற்குத்தான் கல்லும், சுட்ட செங்கல்லும் உபயோகப் படுத்தப் பட்டன என்றும், மற்ற கட்டிடங்களை எல்லாம் மரத்தினாலேயே கட்டினார்கள் என்றும் நிச்சயமாகத் தெரிகிறது. குப்தர் காலத் துக் கோயில்களில் அழிந்தவைபோக மீதியிருக்கும் பகுதிகளைப் பார்த்தால், ஆதியில் புத்த விகாரங்களைக் கட்டுவதற்குக் கையாண்ட தனிப்பட்ட முறைகளைப் பின்னர் இந்துக் கோயில் களைக் கட்டுவதற்கும் உபயோகித்தார்கள் என்று தெரியும். பௌத்தக் கட்டிடங்களில் கோயில் என்றும், மடம் என்றும் இரண்டு வகையுண்டு. மடம் சமசதுரமாகவோ நீண்ட சதுர மாகவோ உள்ள ஓர் இடத்தைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் தொடர்ச்சியாகக் கட்டப்பட்ட சிறிய அறைகளைக் கொண்ட கட் டிடம். கோயில் என்பது அரைவட்ட வடிவமான கூரையை யுடைய ஒரு கட்டிடம். பௌத்தக் கோயில்களில் புத்தருடைய அஸ்திகள் வைத்துப் போற்றப்பட்டன. இந்துக்களும் இத்த கைய கோயில்களைக் கட்டி அவற்றில் தங்கள் தெய்வங்களின் விக்கிரகங்களை வைத்து வழிபடத் தொடங்கினர். ஆரம்பத்தில் வெறும் அரைவட்ட வடிவமாயிருந்த கூரை நாளடைவில் அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த உயர்ந்த கம்பீரமான கோபுரமாக மாறிற்று. கோபுரத்தைச் சுற்றிலும் அழகிய மதில்களும் வாயில் களும் கட்டப்பட்டன. பௌத்த மடங்களைப் போன்ற கட்டிடங் களில் நாளடைவில் வேறுமதத்தைச் சேர்ந்த துறவிகளும் வாழ ஆரம்பித்தார்கள். மேலும் பிற்காலத்திலெழுந்த தென்னிந்தியக் கோயில்களின் பிராகாரங்கள் பௌத்த மடங்களின் நாற்கோண அமைப்பை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டவை. குப்தர் காலத்தில் தொடங்கிய இந்த மாறுதல்கள் பிற்காலத்தில் முழு வளர்ச்சி பெற்றன.

எல்லாப் புத்தக் கோயில்களும் நாம் சாதாரணமாகப் பார்க்கும் கோயில்களைப் போன்றவையல்ல. சில இடங்களில்—முக்கியமாக மேற்கு இந்தியாவில்—கோயில்களும் மடங்களும் பாறையைக் குடைந்து கட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் குகைக் கோயில்கள் இந்தியாவின் ஒப்பற்ற கலைச்செல்வங்களாக விளங்குகின்றன, இவைகளில் மிகப் பழமையானவை கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்டவை. இவற்றில் மிகச் சிறப்பு வாய்ந்தவை அஜாந்தாவிலுள்ள குகைக்கோயில்கள். கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து ஆறும் நூற்றாண்டுக்குள் கட்டப்பட்ட பல கோயில்கள் அஜாந்தாவிலிருக்கின்றன. அஜாந்தா ஐதராபாத் சமஸ்தானத்தின் வடமேற்குக் கோடியிலிருக்கிறது. அஜாந்தாவுக்கு ஐம்பது கல் தொலைவில் உள்ள எல்லோராவிலும், குவாலியருக்குத் தெற்கிலுள்ள பாக் என்ற இடத்திலும் இந்த வகையைச் சேர்ந்த கோயில்கள் இருக்கின்றன. இந்த குகைக் கோயில்களுள் முற்பட்டவை பௌத்தக் கோயில்கள்; பிற்பட்டவை இந்துக்கோயில்கள். இந்தக் கோயில்களிற் சிலவற்றின் உட்புறச் சுவர்களில் அற்புதமான அழகு வாய்ந்த ஓவியங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அவற்றுட் பலவற்றை இன்றைக்கும் பார்க்கலாம். இவற்றின் மூலமாகத்தான் நாம் இந்தியாவில் பழங்காலத்திலிருந்த ஓவியக் கலையைப்பற்றித் தெரிந்துகொள்ளுகிறோம். மேலும் இந்தக் கோயில்களின் சுவர்களும் கோபுரங்களும் மிகுந்த வேலைப்பாடு நிறைந்த சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் மூலமாகக் குப்தர் காலத்துக் கலையின் உயர்வை நாம் அறிந்து கொள்ளுகிறோம். இந்தச் சிற்பங்களின் புகழ் உலக முழுவதும் பரவியிருக்கிறது. குப்தர் காலத்துச் சிற்பக் கலையின் உயர்வைத் தெரிந்து கொள்ளுவதற்கு இன்னொரு ஆதாரமும் நமக்குக் கிடைத்திருக்கிறது. சமீப காலத்தில் புதைபொருளாராய்ச்சியாளர்கள் பல விக்கிரகங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கிய முகமதியர்களால் தூக்கி யெறியப்பட்டவைகளாக இருக்கும்.

நமக்குக் கிடைத்திருக்கும் கலைச் சின்னங்களை ஆராய்ந்தால் குப்தர் காலத்துச் சிற்பக்கலையை பௌத்தக்கலை யென்றோ இந்துக்கலையென்றோ பிரித்துக் கூறுவது பொருந்தாது என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். நாம் காண்பது இந்திய மண்ணில் தோன்றி வளர்ந்த ஒரு தனித்தன்மை வாய்ந்த இந்தியக் கலை. இந்தக் கலையைத்தான் முதலிற் கட்டப்பட்ட பௌத்த சமணக்

கட்டிடங்களிற் காண்கிறோம். இதே கலையைத்தான் பின்னர் எழுந்த இந்துக் கோயில்களிலும் காண்கிறோம். உருவங்கள் மாறுகின்றன ; ஆனால் வேலை நுணுக்கமும், முறையும் மாறுவதில்லை. நாளடைவில், இந்துமதக் கோட்பாடுகளும், புராணங்களிற் கூறப்பட்ட கதைகளும் மக்களிடையே பரவப்பரவ, சிற்பிகளும் அந்தக் கோட்பாடுகளையும் கதைகளையும் கல்லுருவிற் காட்ட ஆரம்பித்தார்கள். ஆகவே இன்று நாம் கல்லில் கதை மாத்திரமின்றிக் கவிதையையும் காண்கிறோம். இந்தச் சிற்பங்களைத்தான் நாம் இப்போது இந்துச் சிற்பங்கள் என்று பிரித்துக் கூறுகிறோம். ஆனால் குப்தர் காலத்தில் இந்துக்கலை முழுவளர்ச்சியடைந்திருந்தது. என்று கூறுவது அவ்வளவாகப் பொருந்தாது. கலைவளர்ச்சியில் குப்தர் காலத்தை ஓர் இடைக்காலம் என்று கூறலாம். பௌத்தக்கலை அப்போதுதான் இந்துக்கலையாக மாறத் தொடங்கியது. புத்தர் உருவத்தையும், அவரைப்பற்றிய கதைகளையும் கல்லிற் செதுக்குவதற்குப் பதிலாக அந்தக் காலத்துச் சிற்பிகள் இந்துத் தெய்வங்களின் உருவங்களையும், அவர்கள் பெருமைகளையும் சித்திரிக்க ஆரம்பித்தார்கள். இன்னும் பல இடங்களில் புதைபொருளாராய்ச்சி நடந்தபின்னர்த்தான் நாம் குப்தர் காலத்துச் சிற்பக்கலையைப்பற்றி முடிவான அபிப்பிராயம் கூற இயலும்.

இலக்கியமும் கலைகளும் குப்தர் காலத்தில் மிக உன்னதமான நிலைமையிலிருந்ததற்கு மேற்கே அலெக்சாண்டிரியாவோடும், கிழக்கே சீனாவோடும் இந்தியா வைத்திருந்த தொடர்புதான் காரணமென்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். இத்தகைய வெளிநாட்டுத் தொடர்பு அந்தக் காலத்தில் இருந்தது என்பதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால், முதல் குப்த அரசன் ஆட்சிக்கு வருவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே இந்தியாவிற்கும் எகிப்திற்கும் இருந்த நேரடியான வாணிபத் தொடர்பு அறுந்துபோயிற்று. மேலும் குப்தர் காலத்து இலக்கியத்திலும் கலைகளிலும் வெளிநாட்டுத் தொடர்பு இருந்தது என்று தீர்மானிப்பதற்கேற்ற சரியான சான்று இல்லை. அதுவுமின்றி, இத்தகைய தொடர்பால்தான் குப்தர் காலத்துக் கலைகளும் இலக்கியமும் உன்னத நிலையை அடைந்தன என்று நினைக்க வேண்டிய அவசியமும் இருப்பதாகத் தோன்றவில்லை. குப்த அரசர்களுள் சிலர் சிறந்த பண்பாடுடையவர்கள். சமுத்திர குப்தன் வெற்றிவீரனாக இருந்ததோடு, கவிஞனாகவும், இசைப்பயிற்சி பெற்றவனாகவும்,

மத நூல்களைக் கற்றறிந்தவனாகவும் இருந்தான். மேலும், செல்வமும், சிறந்த பண்பாடும் பெற்ற பல பிரபுக்கள் அரச சபையில் இருந்தார்கள். அவர்கள் கவிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் அளித்த ஆதரவால், அதுவரையில் ஆதரிப்பாரற்று மங்கிக்கிடந்த கலைஞர்களெல்லாம் புதிய உற்சாகத்தோடு தங்கள் வேலையில் ஈடுபட்டு, ஒப்பற்ற கலைச்செல்வங்களை நமக்குப் படைத்துத் தந்தார்கள்.

இந்தக்காலத்தை குப்தர் காலமென்று நாம் கூறுவதிலிருந்து, அப்போது இந்தியாவில் வேறு சிறந்த ராஜ்யங்கள் இல்லையென்று நினைத்துவிடக் கூடாது. அந்தக் காலத்தில் வாகாடக ராஜ்யம் என்ற ஒன்று இருந்தது என்று நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அதைச் சாம்ராஜ்யம் என்றே கூறலாம். அது இந்தியாவின் தென் பகுதியிலிருந்த ராஜ்யங்களுக்கும், வடக்கிலிருந்த குப்த ராஜ்யத்திற்கும் இடையிலிருந்தது. வாகாடக வம்சத்து அரசர்களின் பெயர்களும், அவர்களிற் சிலர் அடைந்த வெற்றிகளும் நமக்குத் தெரியும். அவர்கள் பண்பாடு குப்தர்கள் பண்பாட்டை ஒத்திருந்தது என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஆனால் அவர்களுடைய ஆட்சியில் பொதுமக்கள் நிலை எவ்வாறிருந்தது, என்பதைப் பற்றி முடிவு செய்வதற்கு இதுவரையில் எந்தவிதச் சான்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

அதிகாரம்—15

வெள்ளை ஹூணர்கள்

கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் ஹூணர்கள் யூவச்சிகளைத் தாக்க, யூவச்சிகள் பாக்திரியாவிலிருந்த சகர்களைத் தாக்கி அவர்களை அங்கிருந்து துரத்தினார்கள் என்று பத்தாம் அதிகாரத்திற் பார்த்தோம். அந்தக் காலத்திலிருந்து இந்த நாடோடிக் கூட்டத்தினர் மேற்கு நோக்கி நகர்ந்துகொண்டே யிருந்தார்கள். குப்தர்கள் வடஇந்தியாவில் ஆட்சி செய்துகொண்டிருந்த காலத்தில் ஹூணர்கள் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி ஐரோப்பாவை அடைந்துவிட்டார்கள். அங்கு அவர்கள் செய்த கொடுஞ் செயல்களால் இன்றைக்கும் ஹூணர்கள் என்ற சொல் 'கொடியவர்கள்' என்ற பொருளில் வழங்குகிறது. அதேசமயத்தில் ஆக்ஸஸ் நதிக்கரையில் வெள்ளை ஹூணர்கள் என்ற பெயர்

கொண்ட மக்கள் குடியேறியிருந்தார்கள். அவர்கள் ஒரே கூட்டத்தைச் சேர்ந்தவர்களா, அல்லது பலகூட்டங்களைச் சேர்ந்தவர்களா என்று தெரியவில்லை. ஐரோப்பாவுக்குச் சென்ற ஹூணர்களுடன் இந்த வெள்ளை ஹூணர் எவ்விதத் தொடர்புடையவர்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஸம்ஸ்கிருத நூல்களிலும், சாசனங்களிலும் இவர்கள் ஹூணர்கள் என்று அழைக்கப்படுவதிலிருந்து இவர்கள் இந்தியாவிற்கு வரும்போது ஐரோப்பாவுக்குச் சென்ற ஹூணர்களின் பெயரைத் தாங்கிக் கொண்டுதான் வந்தார்கள் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆக்ஸஸ் நதிக்கரையிலிருந்து வெள்ளை ஹூணர்கள் தெற்கு நோக்கி வழக்கமான பாதையில் ஆப்கானிஸ்தான் வழியாகவந்து கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் இடையில் இந்தியாவிற்குள் நுழைந்தார்கள். அவர்களை ஸ்கந்தகுப்தன் தோற்கடித்தான். ஒரு வெற்றிக் கம்பம் நாட்டி, அதில் இந்த வெற்றியைப்பற்றி ஸ்கந்தகுப்தன் எழுதிவைத்தான். இந்தச்சண்டை எந்த இடத்தில் நடந்தது எனறு தெரியவில்லை. ஆனால் இந்த வெற்றிக் கம்பம் காசிக்குக் கிழக்கே சிறிது தூரத்தில் இருப்பதால், வெள்ளை ஹூணர்கள் கங்கைச்சமவெளியில் காசி வரையில் வந்தார்களென்று யூகிக்கலாம்.

நமக்கு இதுவரையில் கிடைத்துள்ள ஆதாரங்களால், வெள்ளை ஹூணர்கள் கங்கைச்சமவெளியை நிரந்தரமாக வெல்லவில்லை என்று தெரிகிறது. ஆனால் கி. பி. 465—ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்களுடைய தலைவனுன தோரமானன் என்பவன் வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றிக்கொண்டான் என்பதும் ஐந்தாம் நூற்றுண்டின் இறுதிக்குள் அவனுடைய ஆட்சி பஞ்சாபில் மாத்திரமின்றித் தெற்கே மாளவத்திலும் நிலைபெற்றுவிட்டது என்பதும், அவன் இந்தியப் பட்டம் ஒன்றைத் தன் பெயருடன் சேர்த்துக்கொண்டான் என்பதும் நமக்கு நன்றுகத் தெரிந்தவை. இந்தப் பரந்த ராஜ்யத்தைத் தோரமானனுடைய மகனுன மிகிரகுலன் என்பவன் சயல்காட்டைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்தான். அந்தச்சமயத்தில் குப்தர்கள் பீகாரிலும், வடவங்காளத்திலும் ஆண்டுவந்தார்கள். இன்னும் சில பிரதேசங்களும் அவர்களுடைய ஆட்சியில் இருந்திருக்கக்கூடும். ஆனால் வட இந்தியா முழுமைக்கும் அவர்கள் சக்ரவர்த்திகள் என்ற நிலை மாறிவிட்டது. மிகிரகுலனுடைய செயல்களைப்பற்றி நாம் அறிந்து கொள்ளுவதற்கு நேரடியான சான்று ஒன்றும் கிடையாது. ஆனால் அவன் இரக்கமற்ற கொடுங்கோலன் என்று சாதாரண

மாகக் கூறப்படுகிறது. அவனைப்பற்றிக் கூறப்படும் அவ்வளவு விஷயங்களும் உண்மையாக இல்லாவிட்டாலும் அவற்றில் ஓரளவு உண்மை இருக்கத்தான் வேண்டும். அவனுடைய வீழ்ச்சியின் காரணத்தை நாம் சரியாக அறிந்துகொள்ள முடிய வில்லை. அந்தக்காலத்து வரலாற்றைப்பற்றிய பலவிஷயங்கள் நமக்குத் தெரியாது என்றும், எல்லாம் தெரியும் என்று நினைத் துக்கொள்வது பெருந்தவறு என்றும், மறுபடியும் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

சகர்கள், யூவச்சிகள், ஹூணர்கள் என்ற கூட்டத்தினருக் குப்பின் துருக்கியர் என்ற கூட்டத்தினர் மேற்கு நோக்கி மெல்லச் சென்றார்கள். கி. பி. ஆறாம் நூற்றாண்டின் இடையில் துருக்கி யர்கள் மத்திய ஆசியாவிலிருந்த வெள்ளை ஹூணர்களை முறி யடித்தார்கள். அதிலிருந்து இந்தியாவிலிருந்த வெள்ளை ஹூணர் களுக்கு வெளியிலிருந்த தங்கள் இனத்தாரின் உதவி கிடைக்க வில்லை. மிகிரகுலனைப்பற்றி யுவான்சுவாங்கு என்ற சீனயாத்திரி கர் சிலவற்றை எழுதிவைத்திருக்கிறார். வேறு எந்த நூலிலும் அவனைப்பற்றிய குறிப்புக் கிடையாது, யுவான்சுவாங்கு குறிப்பி லிருந்து பின்வரும் விஷயங்கள் தெரிகின்றன. புத்தமதத்தை அடியோடு ஒழித்துவிடும் நோக்கத்துடன், புத்தமதத்தில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த பாலாதித்ய குப்தனுடைய ராஜ்யத் தின்மீது மிகிரகுலன் படையெடுத்தான். அவனைப் பாலாதித்யன் தோற்கடிக்துச் சிறைப்பிடித்தான். பின்னர் அவன் விடுதலை யடைந்து தன் நாட்டிற்குத் திரும்பினான். ஆனால் அதற்குள் அவ னுடைய ராஜ்யத்தை வேறொருவன் ஆக்கிரமித்துக்கொள்ளவே அவன் காஷ்மீரத்தில் அடைக்கலம் புகுந்தான். சில நாளில், தனக்கு அடைக்கலமளித்த காஷ்மீர அரசனுடைய சிம்மாசனத் தைக் கைப்பற்றிக்கொண்டு, மறுபடியும் பௌத்தர்களைத் துன்-புறுத்துவதில் முனைந்தான். ஆனால் பகவானுடைய கோபத்திற் காளாகி அவன் திடீரென்று இறந்துபோனான்.

யுவான்சுவாங்கு பௌத்தமதத்தில் பெரும் பற்றுக்கொண் டவர். மேலும் மிகிரகுலன் இறந்து ஒரு நூற்றாண்டிற்குப்பின் னர் அவர் இந்தியாவுக்கு வந்து தாம் கேள்விப்பட்டவைகளை எழுதிவைத்தார். ஆகவே அவர் எழுதிவைத்த விஷயங்களை அப் படியே நம்பமுடியாது. சமீபகாலத்தில் மாளவத்தில் இரண்டு சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலம் யசோதர்மன் என்ற அரசன் சுமார் கி. பி. 530-ஆம் ஆண்டில் வெள்ளை ஹூணர்களைத் தோற்கடித்து இருகடலுக்கும் இடை

யிலுள்ள வடஇந்தியா முழுமைக்கும் சக்கரவர்த்தியானுன் என்று அறிகிறோம். இந்தச்சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மிகிரகுலனைப்பற்றி யுவான்சுவாங்கு எழுதிவைத்திருப்பதை வரலாற்று ஆசிரியர்கள் நம்புவதில்லை. வெள்ளை ஹூணர்களோடு சண்டைசெய்வதற்கு முன்னர் யசோதர்மன் எந்தப்பிரதேசத்தில் ஆட்சிசெய்துவந்தான் என்பது தெரியவில்லை. அவனைப்பற்றிய விபரம் எதுவுமே நமக்குத் தெரியவில்லை. ஆனுல், மேலே கூறிய சாசனங்களுள் ஒன்றில் காணப்படும் ஒரு சொற்றொடரின் உதவியால் யசோதர்மன் மாளவத்தைச் சேர்ந்தவன் அல்லன் என்றும், பஞ்சாபில் தானேசுவரம் என்ற இடத்தில் ஆட்சிசெய்தவன் என்னும் நினைக்க இடமிருக்கிறது. தானேசுவரம் டில்லிக்கு வடக்கில் சுமார் நூறுகல் தொலைவிலிருக்கிறது.

யுவான்சுவாங்கு எழுதிவைத்திருக்கும் குறிப்பையும் யசோதர்மனுடைய சாசனங்களிற் காணப்படும் விஷயத்தையும் ஒன்றுகச்சேர்த்து ஆராய்ந்தால் வெள்ளை ஹூணர்கள் வடமேற்கு இந்தியாவில் பிரபலமாயிருந்த சமயத்தில், அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தின் கிழக்கில் யசோதர்மன் தன் ஆட்சியை நிறுவி, அதன்பின்னர்க் கங்கைச் சமவெளியின்மீது படையெடுத்து, குப்தர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைப் பிடித்துக்கொண்டான் என்றும், அதற்குப் பிறகு தனக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசர்களின் துணையுடன் வெள்ளை ஹூணர்களைத் தாக்கி அவர்களைக் கிழக்குப் பஞ்சாபிலிருந்தும் மாளவத்திலிருந்தும் துரத்திவிட்டான் என்றும் யூகிக்கலாம். இவ்வாறு யசோதர்மன் வட இந்தியா முழுவதிலும் தன்னுடைய ஆதிக்கத்தை நிறுவினுன் என்று பொதுவாகக் கூறலாம். ஒரு நூற்றுண்டிற்குப் பின் யுவான் சுவாங்கு இந்தியாவிற்கு வந்தார். யசோதர்மன் மிகிரகுலனோடு செய்த சண்டையில் அவனுக்கடங்கிய சிற்றரசனுன பாலாதித்தியன் உதவி செய்தான் என்று சொல்லுவதற்குப் பதிலாக புத்த மதத்தைச் சேர்ந்த பாலாதித்யனே அந்த மதத்தை அழிக்க முயன்ற மிகிரகுலனைத் தோற்கடித்தான் என்று பௌத்தர்கள் அந்த நிகழ்ச்சியை யுவான்சுவாங்கிடம் திரித்துக்கூறியிருக்கலாம். தக்கசான்று ஒன்றும் இதுவரையில் கிடைக்காததால், மிகிரகுலன் காஷ்மீரத்தில் அடைக்கலம் புகுந்தான் என்று யுவான் சுவாங்கு கூறுவது உண்மையாயிருக்கலாம் என்று சொல்ல முடியுமே தவிர உறுதியாக ஒன்றும் சொல்லமுடியாது. இவைகளைப் பற்றி இதுவரையில் நமக்குத் தெரியாத ஆதாரங்கள் இனிமேல் நமது பார்வைக்கு வரலாமல்லவா? அப்படி ஏதாவது புதிய விஷ

யம் நமக்குத் தெரியவந்தால், இந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும். அதுவரையில், வெள்ளை ஹூணர்களைத் தோற்கடித்து, வட இந்தியாவில் தன்னுடைய ஆதிக்கத்தை நிறுவியதாகத யசோதர்மன் தன்னுடைய சாசனங்களின் மூலம் பெருமையடித்துக் கொள்ளுவதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். *

யசோதர்மன் நிறுவிய சாம்ராஜ்யம் விரைவில் அழிந்துவிட்டது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. ஆறும் நூற்றுண்டின் இடையில் மௌகரி என்ற பெயர்கொண்ட இரண்டு அரசவம்சங்கள் தற்காலத்தில் ஐக்கிய மாகாணம் என்று அழைக்கப்படும் பிரதேசத்தில் பிரபலமடைந்தன. அந்த வம்சங்களைச் சேர்ந்த அரசர்கள் வங்காளவிரிகுடாவரையில் இருந்த பிரதேசங்களை ஆண்டதாகத் தெரிகிறது. பின்னர்ச் சிறிதுகாலம் கழித்து, வர்த்தனர்கள் என்ற அரசர்கள் தானேசுவரத்தைத் தலைநகராகக் கொண்டு, தங்கள் ஆட்சியை இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பரப்பிக் கொண்டிருந்ததாகவும் தெரிகிறது. வர்த்தன வம்சத்தினர் யசோதர்மனுக்குச் சொந்தக்காரர்களா இல்லையா என்று இன்னும் தெரியவில்லை. ஆகவே ஆறும் நூற்றுண்டு இந்திய வரலாற்றில் இன்னும் ஓர் இருண்ட காலமாகவே இருக்கிறது என்று பொதுவாகக் கூறலாம். எனினும் தானேசுவரத்தில் ஆட்சி செய்த வர்த்தன வம்சத்தினர் தாம் பின்னர்க் கன்னோசிப் பேரரசை நிறுவினார்கள் என்பது நிச்சயமாகத் தெரிந்தவிஷயம். இதைப்பற்றி அடுத்த அதிகாரத்திற் பார்ப்போம்.

வெள்ளை ஹூணர்களை மத்திய ஆசியாவில் முறியடித்த துருக்கியர்கள் அவர்களைத் தொடர்ந்து உடனடியாக இந்தியாவுக்கு வரவில்லை. அதன்பின் ஐந்து நூற்றுண்டுகள் கழித்துத் தான் அவர்கள் இந்தியாவின்மீது படையெடுத்தார்கள். இந்த ஐந்நூற்றுண்டுக் காலத்தில் வடமேற்குக் கணவாய்களின் வழியாக எந்த நாடோடிக் கூட்டத்தினரும் இந்தியாவின்மீது படையெடுத்து வரவில்லை என்று நமக்கு இதுவரையில் கிடைத்துள்ள சான்றுகளின்மூலம் அறிகிறோம். கடைசியாகத் துருக்கியர்கள் இந்தியாவுக்கு வந்தபோது அங்கே சகர்கள், குஷாணர்கள், வெள்ளை ஹூணர்கள் என்ற தனித்தனிக் கூட்டத்தினரை அவர்

---

* சமீபகாலத்தில் வெளியிடப்பட்ட ஒருசாசனத்தை ஆராய்ச்சி செய்த சில அறிஞர்கள் பாலாதித்தியன் யசோதர்மனுக்கு அடங்கிய சிற்றரசனாகத் தான் இருந்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் அந்தச் சாசனத்தின் பொருளைப்பற்றி இன்னும் கருத்து வேறுபாடு இருக்கிறது.

கள் காணவில்லை. துருக்கியர்கள் இந்தியாவில் இந்துக்களைத் தான் கண்டார்கள். ஆகவே சகர்கள், குஷாணர்கள், ஹூணர் கள் ஆகியவர்களுடைய சந்ததியார்கள் எங்கே போனார்கள்? அவர்களுக்கு என்ன நேர்ந்தது? என்பன போன்ற கேள்விகள் எழுவது இயல்பே. இந்தக் கேள்விகளுக்கு நிச்சயமான விடை கூறுவதற்கு முடியாது. அவர்களை இந்துக்கள் பூண்டோடு அழித்துவிட்டார்கள் என்று நினைப்பதைவிட, அவர்களெல்லாரும் நாளடைவில் இந்துக்களாக மாறிவிட்டார்களென்று கருதுவது தான் சரியானது. இந்துக்களிடையில் பல சாதிகள் இருந்தன என்றும், ஒவ்வொரு சாதியிலும் பல உட்பிரிவுகள் இருந்தன என்றும் நமக்குத் தெரியும். வெளிநாட்டிலிருந்து வந்து குடி யேறிய சகர்களும், குஷாணர்களும், ஹூணர்களும், நாளடைவில் இந்து மதத்தைத் தழுவி, அந்த மதத்தில் புதிய சாதியினராகவோ, அல்லது ஏற்கெனவே இருந்த சாதிகளின் புதிய உட்பிரிவின ராகவோ மாறியிருக்கவேண்டும். அவ்வாறின்றி, அவர்களுக்கும் ஏற்கெனவே இருந்த பலசாதிகளைச் சேர்ந்த இந்துக்களுக்கும் ஏற்பட்ட கலப்பு மணங்களால் நாளடைவில் அவர்கள் அந்தச் சாதிகளில் ஐக்கியமாகி விட்டனர் என்று நினைப்பது அவ்வளவா கப் பொருந்தாது. அவர்களெல்லாரும் இந்துக்களாக மாறிவிட் டது உண்மையானால், தற்காலத்தில் காணப்படும் பல சாதிகளில் அவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்பது நியாயமானதே. இந்தக்கேள்விக்கு விடை கூறுவது எளிதன்று.

அவர்களால் உண்டாக்கப்பட்ட புதிய சாதி 'கூஜார் என்ற சாதியாகத்தான் இருக்கும் என்று நினைப்பதற்கு இடமிருக்கிறது. ஸம்ஸ்கிருத இலக்கியத்திலும், சாசனங்களிலும் கூர்ஜாரர் என்ற ஒரு கூட்டத்தினரைப் பற்றிப் படிக்கிறோம். அவர்களுக்கும் வெள்ளை ஹூணர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும் என்று நினைப்பதற்கேற்ற வகையில் இந்த ஆதாரங்கள் இருக் கின்றன. ஆகவே கூர்ஜாரர்கள் வெள்ளை ஹூணர்கள் தாம் என்று உறுதியாகச் சொல்ல முடியாவிட்டாலும், அவர்கள் வெள்ளை ஹூணர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த அதேகாலத்தில் வெளி நாட்டிலிருந்து வந்த ஒரு கூட்டத்தினர் என்பது நிச்சய மாகத் தெரிகிறது. சிறிது காலத்திற்குப் பின்னர், இந்தியாவின் மேற்கிலும், வடக்கிலும் பல கூர்ஜார ராஜ்யங்கள் தோன்றின. கூர்ஜாரர் என்ற பெயர் பொது மக்களிடையில் சாதாரணமாக கூஜார் என்றுதான் வழங்குகிறது. அந்தக் காலத்தில் கூர்ஜாரர் கள் ஆட்சிக் குட்பட்டிருந்த பிரதேசம் இன்றும் குஜராத் என்று

அழைக்கப்படுகிறது. பஞ்சாபில் ஒரு குஜராத்தும், பம்பாயில் ஒரு குஜராத்தும் இருக்கின்றன. மேலும் இந்த இரண்டு மாகாணங்களிலும் இன்றைக்கும் கூஜார் என்ற வகுப்பினர் இருக்கின்றனர். இந்த வகுப்பினர் இந்தியர்கள்தாம் என்பது தெளிவாகத் தெரிகிறது. அவர்களிற் சிலர் முகமதியர்களாக மாறிவிட்டார்கள். எனினும், மறறவர்கள் இந்துக்களாகவே இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கும் மற்றைய இந்துக் குடியானவர்களுக்கும் தெளிவான வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே ஐந்தாம் நூற்றாண்டில் வெளி நாட்டிலிருந்து இந்தியாவின்மீது படையெடுத்துவந்த ஒருகூட்டத்தினர், சிலகாலம் ஆளும்வகுப்பினராயிருந்து, நாளடைவில் தங்கள் உயர்வை இழந்து, முடிவில் இந்தியாவிலிருந்த பல சாதியினருள் ஒரு சாதியினராக மாறிவிட்டார்கள் என்று நினைக்கலாமல்லவா? ஆனால் கூர்ஜாரர்கள் வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்று நிச்சயமாக நிரூபிக்கப்படும் வரையில் இந்த அபிப்பிராயத்திற்குத் தக்க ஆதாரம் இருப்பதாக நினைக்கமுடியாது.

இந்த விஷயத்தைப் பற்றி இன்னும் வேறு பல அபிப்பிராயங்களும் ஆராய்ச்சியாளர்களால் கூறப்படுகின்றன. ஆனால் அவைகளுக்கெல்லாம் தக்க ஆதாரம் எதுவும் இல்லை. மனித உடற் பரிணும சாஸ்திரிகள் மகாராஷ்டிரர்களுடைய உடலமைப்புக்கும், சகர்களுடைய உடலமைப்புக்கும் சில ஒற்றுமைகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஆதாரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சகர்களுக்கும் இந்தியர்களுக்கும் ஏற்பட்ட இனக் கலப்பின் பயனுகத் தோன்றிய சந்ததிகள் தாம் மகாராஷ்டிரர்கள் என்று சில ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். ஆனால் இந்தக் கூற்றுப் பொதுவாக ஒத்துக்கொள்ளப் படவில்லை. மேலே கூறப்பட்ட உடலமைப்பு ஒற்றுமைகளுக்கு வேறு காரணங்கள் காட்ட முடியும்.

தற்காலத்தில் இந்தியாவில் இராஜபுத்திரர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கின்றனர். இராஜபுத்திரர்கள் என்றால், அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பது பொருள். அவர்கள் சாதாரணமாக "சத்திரிகள்" என்று அழைக்கப்படுகின்றனர்; "க்ஷத்திரியர்கள்" என்ற சொல்தான் சத்திரிகள் என்று மருவிவழங்குகிறது. க்ஷத்திரியர்கள் ஆதிகாலத்தில் இந்தியாவிலிருந்த நான்கு வருணத்தில் ஒன்றைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு நாட்டை ஆள்வதும், போர் செய்வதும் வேலை. இன்றைக்கு இந்தியாவிலிருக்கும் இராஜபுத்திரர்களெல்லாம் க்ஷத்திரிய வருணத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். புராணங்களில் சூரிய

வம்சம், சந்திரவம்சம், அக்கினிவம்சம் என்ற க்ஷத்திரிய வம்சங்கள் கூறப்படுகின்றன. இந்த வம்சங்களின் நேரடியான சந்ததியார்கள் என்று உயர் குடும்பத்தைச் சேர்ந்த தற்கால இராஜபுத்திரர்கள் சொல்லிப் பெருமை கொள்கிறார்கள். இராஜபுத்திரர்களைத் தவிர மற்றவர்கள் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ளுவதில்லை. அவர்கள் ஒரு கலப்புச் சாதியினரென்பது ஆராய்ச்சியாளர்களின் பொதுவான கருத்து. பற்பல சமயங்களில் வட இந்தியாவின் பல பகுதிகளில் ஆட்சி செய்துவந்த சில இந்திய வகுப்பினரும், சில வெளிநாட்டு மக்களும் நாளடைவில் இராஜபுத்திரர்கள் என்ற பொதுப் பெயரை வைத்துக்கொண்டார்கள். அவர்களுடைய ஆதரவில் வாழ்ந்த கவிகள் அவர்களிற் சிலரைச் சூரிய வம்சத்தினர் என்றும், சிலரைச் சந்திர வம்சத்தினர் என்றும், சிலரை அக்கினி வம்சத்தினர் என்றும் புகழ்ந்து பாடினார்கள். இது கவிகளின் கற்பனையேயன்றி உண்மையன்று. இராஜபுத்திரர்கள் ஒரு கலப்புச் சாதியினர் என்று கூறுவதற்குப் பல ஆதாரங்கள் காட்டப்படுகின்றன. அவற்றைப்பற்றி விளக்கமாக எழுதுவதற்கு இந்த நூலில் இடமில்லை. இராஜபுத்திரர்களுடைய வரலாற்றில் ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் ஏழாம் நூற்றாண்டுக்குப் பின் அவர்களுடைய வரலாற்றின் பல விவரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆகவே, வெள்ளை ஹூணர்களுடைய படையெழுச்சியைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாவிட்டாலும், அதற்குப் பின்னர்த்தான் தெளிவான இராஜபுத்திர வரலாறு தொடங்குகிறது என்றும், எனவே, அப்படையெழுச்சியால் வட இந்தியாவில் நிரந்தரமான மாறுதல்கள் ஏற்பட்டன என்றும் நிச்சயமாகக் கூறலாம்.

குப்தர்களும் வெள்ளை ஹூணர்களும் வட இந்தியாவில் ஓங்கியிருந்த மூன்று நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவின் நிலை எவ்வாறிருந்தது என்று இப்போது பார்ப்போம். அந்தக்காலத்துத் தென்னிந்திய வரலாற்றைப்பற்றி நமக்கு மிகச் சில செய்திகளே கிடைத்திருக்கின்றன. ஆகவே தென்னிந்தியாவின் நிலை எவ்வாறிருந்தது என்று பொதுவாகத்தான் கூற முடியும். அங்குப் பெரிய இராஜ்யங்கள் சில இருந்தன. அவற்றைத் தவிரப் பல வேறு சிறு கூட்டத்தினர்களும் இருந்தனர். அவ்வப்போது இவைகளிற் சில பிரபலமடைந்து, பக்கத்திலிருந்த பெரிய இராஜ்யங்களுக்குள் ஏற்பட்ட போர்களிற் கலந்துகொள்ளும். இவற்றைப் பற்றித் தென்னிந்திய வரலாற்றை எழுதும் ஆசிரியர்கள் விரிவாக

எழுதவேண்டும். ஆனால் இந்தியாவின் பொது வரலாற்றைக் கூறும் இந்த நூலில் அந்தச் சிறு இராஜ்யங்களைப்பற்றி எழுதுவதற்கு இடமில்லை. தமிழகத்தின் மூன்று இராஜ்யங்களும் எப்போதும்போல் இருந்தன. அவைகளுக்குள் அவ்வப்போது போர்கள் நிகழ்ந்தாலும், அவைகள் அழியாமலிருந்தன. தமிழகத்திற்கு வடக்கிலுள்ள பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் பல்லவர்கள் ஆட்சி செய்தார்கள். ஆனால் அவர்களுடைய தலைநகரமான காஞ்சீபுரம் தமிழகத்தின் எல்லைக்குள்ளேதான் இருந்தது. இதன் மூலம் சோழராஜ்யத்தின் வடபகுதி பல்லவர்களுடைய ஆட்சிக்குள் சென்றுவிட்டது என்பது தெரிகிறது. சோழர்களுக்கும், பல்லவர்களுக்கும் சில சமயங்களில் போர் நடந்தது என்பதற்கும் ஒரு சில சான்றுகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. பல்லவ ராஜ்யத்திற்கு வடக்கிலிருந்த கலிங்க ராஜ்யத்தைப்பற்றி நமக்கு ஒரு விவரமும் தெரியவில்லை.

ஆகவே தீபகல்ப இந்தியாவின் வட மேற்குப் பகுதியில் யார் ஆட்சி செய்து வந்தார்கள் என்பது தான் நாம் இப்போது பார்க்க வேண்டிய விஷயம். ஆந்திரர்களுடைய ஆதிக்கம் மங்கிய சமயத்தில் சகர்கள் இந்தப்பகுதியில் தங்கள் அதிகாரத்தை நிறுவினர்கள் என்று முன்னரே பார்த்தோம். அதற்குப்பின் அந்தப் பகுதியின் வரலாற்றைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. நான்காம் நூற்றுண்டில் ஆபிரர்கள் (மாட்டிடையர்கள்) என்ற ஒரு வகுப்பினர் பம்பாய்க்கருகில் ஆட்சி செய்தார்கள் என்றும், வேறு சில கூட்டத்தினர் இன்னும் சில பகுதிகளில் ஆண்டுவந்தார்கள் என்றும் கேள்விப்படுகிறோம். இத்தகைய கூட்டத்தினரில் ராஷ்டிரகூடர்கள் என்பவர்கள்தாம் மிக முக்கியமானவர்கள். ஆனல் அவர்கள் இன்னும் பிற்காலத்தில்தான் பிரபலமடைந்தார்கள். நான்காம் நூற்றுண்டிலும், ஐந்தாம் நூற்றுண்டிலும் அவர்களைப்பற்றிய வரலாறு ஒன்றும் தெரியாது. ஆறும் நூற்றுண்டின் இடையில் சாளுக்கிய வம்சத்தினர் பிரபல மடையத் தொடங்கினர்கள்; பிற்காலத்தில் மிகச் சிறப்படைந்தார்கள்.

சாளுக்கியர்களும் இராஜபுத்திரர்களே. அவர்கள் அயோத்தியை ஆண்ட அரசவம்சத்தின் சந்ததியார்கள் என்று கூறிக் கொண்டார்கள். ஆனல், அவர்களைப்பற்றி நாம் அறிந்திருக்கும் விஷயங்கள் எல்லாம் தீபகல்ப இந்தியாவைச் சேர்ந்தவைகளே. அவர்கள் கோவாவுக்கு நேரே கிழக்கிலுள்ள நிலப்பகுதியில் அப்போது ஆட்சி செய்துவந்த ராஷ்டிரகூடர்களையும், மற்றும் பல கூட்டத்தினரையும் வென்று தங்கள் ஆட்சியை நிறுவினர்கள்.

சாளுக்கியர்களில் தலைசிறந்த அரசன் இரண்டாம் புலிகேசன். அவன் கி. பி. 608-ஆம் ஆண்டில் அரசனானன். அவனுடைய இராஜ்யம் மேற்கே கொங்கணத்திலிருந்து, கிழக்கே கோதாவிரி நதியின் முகத்துவாரம் வரையில் பரவியிருந்தது. அவனுடைய படை வலிமையை வடக்கில் மாளவத்திலிருந்த மக்களும் தெற்கில் தமிழகத்திலிருந்த மக்களும் அறிந்திருந்தார்கள். கன்னோசிப் பேரரசனான ஹர்ஷன் தக்ஷிணத்திலும் தன்னுடைய இராஜ்யத்தைப் பரப்பமுடியாமற் போனதற்கு வலிமைமிக்க சாளுக்கிய ராஜ்யம் அந்தச்சமயத்தில் அங்கிருந்ததுதான் காரணம். இதைப் பற்றி அடுத்த அதிகாரத்தில் பார்ப்போம்.

மேலே கூறியவற்றிலிருந்து தென்னிந்தியாவின் அரசியல் நிலைமையைப்பற்றிப் பொதுவாக நாம் அறிந்து கொள்ளுவதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன என்பது தெரியும். ஆனால் மதத்துறையிலும் சமூகத் துறையிலும் மக்கள் வாழ்க்கை எத்தகையதாக இருந்தது என்பதைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. இந்துமதம் சிறிது சிறிதாக முன்னேறிக்கொண்டே இருந்ததென்பதைப் பிற்காலத்திய சான்றுகளால் நாம் ஒருவாறு அறியலாம்; ஆனால் அந்த மதத்தின் முன்னேற்றத்தால் பௌத்தமும் சமணமும் முழுவதும் அழிந்துபோயின என்று கூறமுடியாது. சிற்சில இடங்களில் அந்த மதங்களின் ஆதிக்கம் இருக்கத்தான் செய்தது. பல்லவர்களுடைய தலைநகரமாகிய காஞ்சீபுரம் தென்னிந்தியாவில் இந்துக்களின் முக்கிய நகரமாக இருந்தது. வேதங்களையும், வேறு ஸம்ஸ்கிருத நூல்களையும் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு தனிப்பட்ட நிலையம் கி. பி. 4-ஆம் நூற்றாண்டில் காஞ்சீபுரத்தில் இருந்தது என்று சாசனங்கள் சிலவற்றின்மூலம் அறிகிறோம். சுமார் கி. பி. 400-ஆம் ஆண்டில் காஞ்சீபுரம் சோழர்களால் கைப்பற்றப்பட்டு அவர்களுடைய ஆட்சியில் சிலகாலம் இருந்ததனால், அப்போது இந்துமதம் தமிழ்நாட்டில் எளிதாகப் பரவுவதற்கு வசதி இருந்தது என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் அரசாங்க எல்லைகள் இந்து மதத்தின் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாக இருந்திருக்கும் என்று நாம் கருத முடியாது. மேலும் இந்துமதம் எந்தெந்தக்காலத்தில் எந்தெந்தப் பகுதியில் பரவிற்று என்பதைப்பற்றி உறுதியான சான்று ஒன்றும் இல்லை. ஆகவே, அந்த மதம் சிறிது சிறிதாக இந்தியாவின்தென்பகுதியில் முன்னேறிக்கொண்டுவந்தது என்று பொதுவாகக் கூற முடியுமே யொழிய அந்த முன்னேற்றத்தைக் காலவரையறைக்குள் அடக்கமுயல்வது பயனற்றது.

அதிகாரம்—16

ஹர்ஷர்

கன்னோசிப் பேரரசைப்பற்றிய வரலாறு முழுவதும் அறிய நமக்கு ஆவல் இருப்பது இயல்பே. ஆனால் அதைப்பற்றி நமக்குத் தெரிந்தவை மிகச்சிலவே. அந்தப் பேரரசு ஓர் ஐம்பது ஆண்டுக்காலம் இருந்து மறைந்துவிட்டது என்பதைத் தவிர, நமக்கு வேறொன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை. அந்த ஐம்பது ஆண்டுக்காலத்தின் வரலாற்றை அறிந்து கொள்ளுவதற்கு இரண்டு ஆதாரங்கள் இருக்கின்றன; முதலாவதாகப் பாணர் என்ற புலவர் எழுதிய 'ஹர்ஷ சரித்திரம்' என்ற நூல் ஹர்ஷருடைய வாழ்க்கை வரலாற்றைப்பற்றிக் கூறுகிறது, ஆனால் ஹர்ஷருடைய வாழ்க்கை வரலாறு முழுவதும் அதில் இல்லை. மேலும் அது ஹர்ஷரை அதிகமாகப் புகழ்ந்து பேசுகிறது. ஆகவே அந்த நூலில் எழுதப்பட்டதை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் அதில் உண்மை நிகழ்ச்சிகள் பல கூறப்படுகின்றன. அந்த நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு புலவர் தமது கற்பனையும் அலங்காரமும் நிறைந்த வாக்கியங்களை எழுதியிருக்கிறார். இரண்டாவதாக, யுவான் சுவாங்கு என்ற சீன யாத்திரிகர் ஹர்ஷரைப்பற்றிய சில விவரங்களைத் தம்முடைய நூலில் குறித்து வைத்திருக்கிறார். அவருடைய குறிப்புக்கள் பாணருடைய நூலை விட அதிகமாக நம்பத்தகுந்தவை. யுவான்சுவாங்கு புத்தமதப் புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்கும், புத்தமத நூல்களைச்சேகரிப்பதற்கும் சீனாவிலிருந்து வந்து கி. பி. 630-முதல் 644-வரையில் இந்தியாவில் இருந்தார். பாஹியனைப்போலவே, யுவான் சுவாங்கும் தம்முடைய காரியத்திலேயே கண்ணாயிருந்தார். ஆகையால் நாம் அறிய விரும்பும் பல விஷயங்களைப்பற்றி அவர் ஒன்றுமே எழுதி வைக்கவில்லை. மேலும் அவர் எழுதிவைத்துள்ள சில செய்திகள் இந்தியாவின் எந்தெந்தப் பகுதிகளைப் பற்றியவை என்று கூறுதல் எளிதன்று. ஆனால் இந்திய வரலாற்று மாணவர்களுக்கு ஹர்ஷ சரித்திரத்தையும் யுவான்சுவாங்கின் குறிப்புக்களையும் போன்ற சான்றுகள் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. இந்த ஆதாரங்களுடன் நாணயங்களையும் சாசனங்களையும் சேர்த்து ஆராய்ந்தால், கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடஇந்திய மக்களுடைய வாழ்க்கை நிலை எத்தகையதாய் இருந்தது என்பதைப்பற்றி நாம் பொதுவாக அறிந்து கொள்ளமுடியும்.

தானேசுவரம், கன்னேசி, மாளவம் ஆகிய மூன்று இராஜ்யங்களுக்குள் ஏற்பட்டிருந்த தொடர்புதான் கன்னேசிப் பேரரசின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்தது. கிழக்குப் பஞ்சாபின் பெரும்பகுதி தானேசுவர ராஜ்யத்திற் சேர்ந்திருந்தது என்று நாம் சென்ற அதிகாரத்திற் பார்த்தோம். கன்னேசி இப்பொழுது அழிந்து பாழாகக் கிடக்கிறது. இது கங்கை நதியின் தென்கரையில் கான்பூருக்கு வடமேற்கில் சுமார் 50-கல் தொலைவில் இருக்கிறது. அந்தக் காலத்தில் கன்னேசி மௌகரி வம்சங்களின் ராஜ்யத்திற்குத் தலைநகராயிருந்தது. அந்த ராஜ்யத்தில் அயோத்தியும், வடபீகாரும், மேற்கு வங்காளமும் அடங்கியிருந்தன. மாளவம் என்பது எது என்பதைப்பற்றி இன்னும் சரியானமுடிவு ஏற்படவில்லை. அந்தக்காலத்தில் மாளவம் என்று அழைக்கப்பட்ட பிரதேசம் தற்கால மாளவத்திற்கு மேற்கில் இருக்க வேண்டும். அதில் தற்கால குஜரத்தின் ஒருபகுதியும் தற்கால இராஜபுதனத்தின் ஒரு பகுதியும் அடங்கியிருந்தன என்று கூறலாம். இந்த மூன்று இராஜ்யங்களின் எல்லைகள் யாவை என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால் அவைகள் ஒன்றையொன்று தொட்டுக்கொண்டிருந்தன என்பதை மாத்திரம் யூகிக்கலாம்.

தானேசுவர அரசனை பிரபாகரவர்த்தனன் கி. பி. 605-ஆம் ஆண்டில் இறந்தான். அவனுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தார்கள். மூத்தமகன் பெயர் இராஜ்யவர்த்தனன், இளையவன் பெயர் ஹர்ஷவர்த்தனன். பெண்ணின் பெயர் இராஜ்யஸ்ரீ என்பது. அவளுக்கு வயது பன்னிரண்டு அல்லது பதின்மூன்று இருக்கும். எனினும் அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அவளுடைய கணவன் கன்னேசி அரசன். பிரபாகரவர்த்தனன் இறந்ததும் இராஜ்யவர்த்தனன் பட்டத்திற்கு வந்தான். அதே சமயத்தில் மாளவ அரசன் கன்னேசியின்மீது படையெடுத்து, அரசனைக்கொன்று இராஜ்யஸ்ரீயைச் சிறைப்பிடித்துவிட்டான் என்ற செய்தி வந்தது. இராஜ்யவர்த்தனன் உடனே ஒரு படையுடன் கன்னேசிக்குச் சென்று, மாளவ அரசனைத் தோற்கடித்தான். ஆனல் மாளவ அரசன் அவனைச் சமாதானத்திற்கு அழைத்துச் சதிசெய்து கொன்றுவிட்டான், ஆகவே தானேசுவர ராஜ்யத்திற்கு ஹர்ஷவர்த்தனன் அரசனானன். அவனுக்கு அப்போது வயது பதினறுதான். எனினும் அவன் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு கன்னேசிக்குச் சென்றான். பாதி வழியில் இராஜ்யவர்த்தனன் அழைத்துச்சென்ற சேனைவீரர்கள் திரும்பி வருவதைக் கண்டு, அவர்கள் மூலம் தன்னுடைய தங்கை

சிறையிலிருந்து தப்பி யமுனைக்கப்பாலுள்ள காடுகளுக்கு ஓடிவிட்டாள் என்று அறிந்து, அவளைத் தேடிக்கொண்டு காட்டிற்குச் சென்றான். காட்டிற்குச் சென்ற இராஜ்யஸ்ரீ தன் கணவன் பிரிவாற்றாமல், தீயில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளத் தயாராயிருந்தாள். அந்தச் சமயத்தில் ஹர்ஷன் அவளைக் கண்டுபிடித்து அவளுக்குத் தேறுதல்கூறித் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்தான். அதிலிருந்து அவள் ஹர்ஷனுடன் வாழ்ந்துவந்தாள்.

அதன் பின் ஹர்ஷவர்த்தனன் இந்தியா முழுவதையும் ஜயிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டு அந்த வேலையில் முனைந்தான். இந்தியா முழுவதையும் அவன் ஜயிக்கவில்லை எனினும், வட இந்தியாவின் பெரும்பகுதியை ஜயித்து விட்டான். அவனுடைய வெற்றிகளைப்பற்றி நமக்குச் சரியாகத் தெரியவில்லை. எனினும் அவனுடைய சாம்ராஜ்யம் மிகப் பெரியதாக இருந்ததால் அவன் பல வெற்றிகளை அடைந்திருப்பான் என்று யூகிக்கலாம். அவனுடைய சாம்ராஜ்யத்தின் வடக்கெல்லை இமயமலை. வடமேற்கில் அது சட்லெஜ், பியாஸ் ஆகிய நதிகளைத் தொட்டது. பிரபாகரவர்த்தனன் காலத்திலேயே தானேசுவர ராஜ்யம் வடமேற்கில் அந்த நதிகள் வரையில் பரவியிருக்கக்கூடும். வடகிழக்கில் அவனுடைய சாம்ராஜ்யம் பிரமபுத்திரா நதிவரையில் பரவியிருந்தது. அதற்கடுத்தாற்போலிருந்த காமரூப (அஸ்ஸாம்) ராஜ்யத்தின் அரசன் ஹர்ஷனுடைய அதிகாரத்திற் கடங்கியவனாக இருந்தான். அதற்குத் தெற்கில் ஹர்ஷ சாம்ராஜ்யத்தின் எல்லை வங்காள விரிகுடாவைத் தொட்டது. * தென்மேற்கில் அது குஜராத் வரையிலும் பரவியிருந்தது. தெற்கில் நர்மதை நதி அதற்கு எல்லையாக இருந்தது. நர்மதையைத் தாண்டித் தென்னிந்தியாவின்மீது படையெடுக்க முயன்றபோது ஹர்ஷனைச் சாளுக்கிய அரசனான இரண்

---

* வங்காளத்தில் கவுர் என்ற ஓர் இராஜ்யம் இருந்தது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சசாங்கன் என்ற அரசன் அதை ஆண்டு வந்தான். அவன் மாளவ அரசனுடன் சேர்ந்து கன்னோசியைத் தாக்கினான். இராஜ்யவர்த்தனனைக் கொன்ற சதிகாரர்களில் அவன்தான் முக்கியமானவன் என்று நினைக்க இடமிருக்கிறது. சிறிது காலம் கழித்து, வங்காளம் தன் சுயேச்சையை இழந்தது. அப்போது சசாங்கன் உயிரோடிருந்தானா அல்லது இறந்துவிட்டானா என்பதும், வங்காளம் காமரூப அரசனுடைய ஆதிக்கத்திற் கடங்கிற்றா அல்லது ஹர்ஷனுடைய ஆதிக்கத்திற் கடங்கிற்றா என்பதும் சரியாகத் தெரியவில்லை.

டாம் புலிகேசி தோற்கடித்தான். ஹர்ஷன் அந்த முயற்சியில் மறுபடியும் ஈடுபடவில்லை என்று நம்பலாம்.

மேலே கூறியவாறு வட இந்தியா முழுவதிலும் தன் ஆட்சியை நிறுவிய பிறகு மறுபடியும் சண்டை செய்வதற்கு ஹர்ஷன் விரும்பவில்லை. அதன்பின் இராஜ்ய பரிபாலனத்தில் தன் முழுக்கவனத்தையும் செலுத்தினான். அத்துடன் மதத்தைப் பரப்புவதிலும், அறநிலயங்களை ஏற்படுத்துவதிலும், இலக்கிய முன்னேற்றத்திலும் அவன் அதிக சிரத்தையுடையவனாக இருந்தான். அவனே சில நூல்களை எழுதினான் என்றும் தெரிகிறது. கடைசியில் கி. பி. 647-ஆம் ஆண்டில் ஹர்ஷன் இறந்தான். அவனுடைய சாம்ராஜ்யமும் அவனோடு மறைந்தது.

ஹர்ஷனுடைய சாம்ராஜ்யத்தின் பல பகுதிகள் அவனுக்குக் கப்பம் கட்டிய சிற்றரசர்களால் ஆளப்பட்டவை. அந்தச் சிற்றரசர்கள் அவசியமான காலங்களில் சக்கரவர்த்தியின் சபைக்கு வருவார்கள். படை வலிமைதான் சாம்ராஜ்யத்தின் அடிப்படை. கன்னோசி ஹர்ஷனுடைய தலைநகரா யிருந்தபோதிலும், அவன் ஆண்டின் பெரும்பகுதியை சாம்ராஜ்யத்தின் சுற்றுப் பிரயாணத்திற் கழித்தான், அவன் கூடவே அதிகார வர்க்கத்தினரும் படைவீரர்களும் சென்றார்களாகையால், சக்கரவர்த்தி எந்தச் சமயத்தில் எந்த இடத்தில் இருந்தானோ அந்த இடந்தான் தலைநகரமாயிருந்தது என்று கூறலாம். அரசாங்கத்தை நடத்துவதற்குப் பல அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் பதவிகளின் பெயர்களிற் பல நமக்குத் தெரியும். ஆனால் அவர்கள் நடைமுறையில் என்னென்ன கடமைகளைச் செய்தார்கள் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆட்சிமுறை நல்ல அமைப்பையும் ஒழுங்கையும் கொண்டிருந்தது என்றும், சீனக் குடிமக்கள் அனுபவித்த உரிமைகளைவிட இந்தியக் குடிமக்கள் அதிக உரிமைகளைப் பெற்றிருந்தார்கள் என்றும் பொதுவாகக் கூறலாம். பெருங்குற்றம் செய்பவர்கள் ஹர்ஷ சாம்ராஜ்யத்தில் இல்லை என்று சொல்ல முடியாது. ஆறலை கள்வரால் யுவான் சுவாங்கே சில சமயம் தாக்கப்பட்டார். ஒரு சமயம் நதித் திருடர்கள் யுவான் சுவாங்கைத் தாக்கினார்கள். ஆனால் யுவான்சுவாங்கு எழுதி வைத்துள்ள குறிப்புக்களிலிருந்து இத்தகைய திருடர்கள் ஹர்ஷ சாம்ராஜ்யத்தின் எல்லைக்குள் அதிகமில்லை என்றும், தீபகல்ப இந்தியாவின் மேற்குப் பகுதியில்தான் அதிகமாக இருந்தார்கள் என்றும் நாம் யூகிக்கலாம். அந்தப் பகுதியிலிருந்த காடுகளில் ஆறலை கள்வர்கள் ஏராளமாக இருந்தார்கள். அவர்

களால் வழிப்போக்கர்களுக்கு அதிக அபாயம் ஏற்பட்டது. ஹர்ஷ சாம்ராஜ்யத்தில் கொலை, களவு முதலிய குற்றம் செய்பவர்கள் அதிகமாக இல்லை என்று யுவான் சுவாங்கு பொதுவாகக் கூறுகிறார். குற்றம் செய்தவர்களை விசாரிப்பதற்குக் கடினமான சோதனைகள் கையாளப்பட்டன. உதாரணமாக, பழுக்கக் காய்ச்சிய இரும்பைக் கைகளில் வைத்துக்கொண்டு குற்றம் சாட்டப்பட்டவன் தான் குற்றம் செய்யவில்லை என்று சத்தியம் செய்ய வேண்டும். அப்படிச் செய்ததால் அவனுக்குப் புண் ஏற்படாவிட்டால் அவன் நிரபராதி என்றும், புண் ஏற்பட்டால் அவன் குற்றவாளி என்றும் தீர்ப்பளிக்கப்படும். தண்டனைகள் குப்தர் காலத்திலிருந்ததைவிடக் கடுமையானவை. ஆனால் சீனாவிலிருந்ததைப்போல் அவ்வளவு கடுமையானவை அல்ல என்று யுவான் சுவாங்கு கூறுகிறார். அதுபோலவே சீனாவின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வரிச்சுமை அவ்வளவு அதிகமாக இல்லை என்றும், ஏதோ சில சமயங்களில்தான், கட்டாய வேலை வாங்கப்பட்டது என்றும் யுவான் சுவாங்கு கூறுகிறார். நிலவரி விளைவில் ஆறில் ஒரு பங்கு என்று யுவான் சுவாங்கு கூறுகிறார். ஆனால், உண்மையில் ஆறில் ஒருபங்குதான் வசூலிக்கப்பட்டதா? அல்லது அதைவிட அதிகமாக வசூலிக்கப்பட்டதா? என்று நிச்சயமாகக் கூற முடியாது. வியாபாரப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துக்கொண்டு போக வேண்டுமானால் வியாபாரிகள் அரசாங்கத்துக்கு வரி செலுத்தவேண்டும். இந்த வரியும் அவ்வளவு அதிகமானதன்று என்று யுவான் சுவாங்கு கருதினார். இதைத் தவிர வேறு வரிகளைப்பற்றி யுவான் சுவாங்கு குறிப்புக்களில் ஒன்றும் காணோம்.

சமூக நிலையைப்பற்றி யுவான் சுவாங்கு பின்வரும் விபரங்களைக் குறித்து வைத்திருக்கிறார். உயர்ந்த சாதிகளைச் சேர்ந்த மக்கள் சிக்கனமான எளிய வாழ்க்கை நடத்தினார்கள். அவர்கள் தங்களுடைய சாதிகளுக்கேற்ற சடங்குகளைச் சரிவரச் செய்து வந்தார்கள். ஆபரணங்களுக்காக அவர்கள் அதிகச் செலவு செய்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களான கசாப்புக்காரர்கள், செம்படவர்கள், தோட்டிகள், கூத்தாடிகள், தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைத் தூக்கிலிடும் வேலையில் ஈடுபட்டவர்கள் ஆகியவர்களெல்லாம் தனியாகப் பிரிந்து ஊருக்கு வெளியே வசித்தார்கள். அவர்களுக்கும் உயர் சாதி மக்களுக்கும் தொடர்பு இல்லை. நகரங்களைச் சுற்றிச் செங்கல்லால் கட்டப்பட்ட அரண்கள் இருந்தன. ஆனால் வீட்டுச் சுவர்களெல்லாம்

பெரும்பாலும் மரத்தாலும் தட்டிகளாலும் கட்டப்பட்டவை. பணக்காரர் வீட்டுக்கூரைகள் ஓட்டால் வேயப்பட்டவை. ஏழைகள் வீட்டுக் கூரைகள் வைக்கோல் முதலிய பொருள்களால் வேயப்பட்டவை. பொழுது போக்கு விஷயங்களைப்பற்றி, பௌத்த மதத்திற் பெரும்பற்றுக் கொண்ட யுவான் சுவாங்கு எழுதியிருப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனல் அந்தக் காலத்தில் எழுதப்பட்ட வேறு நூல்களின் வாயிலாக நாம் சிலவற்றை யூகிக்கலாம். அரச சபையில் பொழுது போக்குக்கான வேடிக்கைகளும் விளையாட்டுக்களும் நடந்தன. சில சமயங்களில் அந்தத் தமாஷாக்கள் ஒழுக்க வரம்பைக் கூட மீறி யிருக்கலாம். தென்னிந்தியாவைப்போலவே, வட இந்தியாவிலும் பொதுப் பெண்டிர் இத்தகைய களியாட்டுக்களில் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆனல் சாதாரண காலங்களில் அரச சபையிலிருந்த ஆண்கள் நல்ல பண்பாடுடையவர்கள் என்றும், பெண்கள் இசை, நாட்டியம், ஓவியம் முதலிய கலைகளைப் பயின்றவர்களென்றும் பொதுவாகக் கூறலாம்.

ஹர்ஷன் மதவிஷயத்தில் பரந்த மனப்பான்மை யுடையவன். அரசவம்சத்தினர் பரம்பரையாகச் சிவனை வழிபடுபவர்களாக இருந்தார்கள். ஹர்ஷன் மாத்திரம் புத்த மதத்தில் அதிகப்பற்றுக் கொண்டிருந்தான். ஆனல் அவன் பிராமணர்களுக்கும் ஆதரவளித்து வந்தான். புத்த மதத்தைப் பொறுத்த வரையில் ஹர்ஷன் முதலில் ஹீனயான மதத்திற் பற்றுக்கொண்டவனு யிருந்தான். ஆனல் யுவான் சுவாங்கின் கூட்டுறவு ஏற்பட்ட பின்னர் அவன் மஹாயான மதத்திற் பற்றுக்கொண்டான். கி.பி. 643-ஆம் ஆண்டில் ஹர்ஷன் கன்னேசியில் மத விஷயங்களைப்பற்றி ஆராய்வதற்காக ஒரு மாநாடு நடத்தினன். அந்த மாநாட்டில் யுவான் சுவாங்கே முக்கிய பங்கெடுத்துக்கொண்டார். ஆனல் ஹர்ஷன் புத்த மதத்தில் அதிகப் பற்றுடையவனுயினும் மற்ற மதங்களுக்கும் ஆதரவளித்து வந்தான் என்பது பின்வரும் நிகழ்ச்சியால் வலியுறுகிறது. கன்னேசிமாநாட்டிலிருந்து ஹர்ஷன் நேராக அலகாபாத்திற்குச் சென்று அங்கு ஒரு திருவிழா நடத்தினன். அந்தத் திருவிழாவில் தான் சேர்த்து வைத்திருந்த செல்வம் முழுவதையும், பிராமணர்கள் பௌத்தர்கள் சமணர்கள் முதலிய மதத்தினர்களுக்கும், பொதுவாக ஏழைகளுக்கும் தானமாக வழங்கிவிட்டான். இத்திருவிழாவை ஐந்தாண்டுக்கொரு முறை ஹர்ஷன் கொண்டாடுவது வழக்கம். அலகாபாத்தில் நடந்த இந்த விழாவைப்பற்றி யுவான் சுவாங்கு மிக அழகாக வர்ணிக்கி

ருர். படை வீரர்களுக்குத் தேவையான இன்றியமையாத பொருள்களைத் தவிர மற்ற செல்வம் எல்லாவற்றையும் ஹர்ஷன் தானம் செய்துவிட்டான். அதன்பின் தான் அணிந்திருந்த ஆடையாபரணங்களையும் தானம் செய்துவிட்டுத் தன் சகோதரியிடம் ஒரு பழைய உடையை இரவல் வாங்கி உடுத்துக்கொண்டு இறைவனை வழிபட்டான். ஆனால் காலியான கஜானா மறுபடியும் பத்துநாட்களுக்குள் நிறைந்துவிட்டது என்று யுவான் சுவாங்கே கூறுகிறார்.

ஹர்ஷர் எல்லா மதங்களுக்கும் ஆதரவளித்தார். எனினும் மகாயான புத்த மதத்தில் அதிகப் பற்றுடையவரா யிருந்தார் என்பது மேலே கூறியவற்றிலிருந்து விளங்குகிறது. பொது மக்களைப் பொறுத்த வரையில் இந்து மதம்தான் இந்தியாவின் முக்கியமான மதமாயிருந்தது என்று யுவான் சுவாங்கு குறிப்புக்களின் வாயிலாக அறியலாம். பஞ்சாப், கன்னோசி, பீகார், வங்காளம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய இடங்ககளில் புத்தமதம் அதிகமாகப் பரவி யிருந்தது. ஆனால் பஞ்சாப், இராஜபுதனம், அலகாபாத், மாளவம் பல்லவ ராஜ்யம், தமிழகம் ஆகிய இடங்களில் புத்தமதத்தின் ஆதிக்கம் குறைந்துகொண்டே வந்தது என்பதைக் காட்டும் அறிகுறிகள் இருந்தன. பௌத்தர்களும், இந்துக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தார்களென்று பொதுவாகக் கூறலாம். எனினும் சில இடங்களில் சில சமயங்களில் அந்த இரு திறத்தார்க்கிடையிலும் பகைமை இருந்தது என்பது நிச்சயமாகத் தெரிகிறது. மேலும் மகாயான மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும், ஹீனயான மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் சில சமயங்களில் பலமான வாக்குவாதம் ஏற்பட்டது. அதுபோலவே ஹீனயான மதத்திலிருந்த பலவேறு பிரிவினர்க்குள்ளும் பலமான தர்க்கங்கள் சில சமயங்களில் நடந்தன. புத்தமதத்திற்குத் தனிச்சலுகை காட்டினார் என்று பிராமணர்கள் ஹர்ஷரிடம் கோபம்கொண்டார்கள். இந்தப் பகைமை யுணர்ச்சியால் தூண்டப்பட்டுக் கன்னோசி மத மாநாடு நடந்த சமயத்தில் பிராமணர் சிலர் ஹர்ஷனையே கொல்வதற்குச் சதியாலோசனை செய்தார்கள். அதுபோலவே ஹீனயான மதத்தைச் சேர்ந்த பௌத்தர் சிலர் யுவான் சுவாங்கைக் கொல்லுவதற்குச் சூழ்ச்சி செய்தார்கள். ஆகவே, கன்னோசி மாநாடு நடந்தபோது மத வேற்றுமைகளால் எற்பட்ட பகைமையுணர்ச்சி அதிகமாக இருந்தது என்று தெரிகிறது.

ஹர்ஷன் மத விஷயத்தில் பரந்த மனப்பான்மை யுடையவனாக இருந்ததால், அவனுடைய சாம்ராஜ்யத்தில் மதத்தின்பேரால்

யாரும் துன்புறுத்தப்படவில்லை. ஆனால், அவனுடைய சாம்ராஜ்யத்தின் எல்லைக்கு அப்பாலிருந்த இரண்டு அரசர்கள் மதத்தின் பேரால் மக்களைத் துன்புறுத்தினார்கள். கவுர் (மேற்கு வங்காளம்) என்ற இராஜ்யத்தின் அரசனான சசாங்கன் பெரிய சிவபக்தன். அவன் புத்தமதத்தைத் தனது இராஜ்யத்திலிருந்தே ஒழித்துவிட வேண்டுமென்று எண்ணிப் புத்தக் கோயில்களையும் மடங்களையும் நாசமாக்கி, பிட்சுக்களைத் தன் நாட்டிலிருந்து துரத்திவிட்டான். ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதுரையில் ஆட்சிசெய்த பாண்டிய அரசன் ஒருவன் சமண மதத்தைத் துறந்து சைவ சமயத்திற் சேர்ந்துகொண்டான். அதன்பின் அவன் சமணர்களைப் பலவகையில் துன்புறுத்தினான். மேலும், தங்கள் மதக் கொள்கைகளைக் கைவிட்டுச் சைவசமயத்திற் சேர மறுத்த ஆயிரக்கணக்கான சமணர்களைக் கழுவிலேற்றினான் என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தக் கொடுமையைப் பல ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். வேறு இராஜ்யங்களிலும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றைப்பற்றிய குறிப்பு ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஏழாம் நூற்றாண்டில் மதக் கோட்பாடுகளுக்காக மக்கள் துன்புறுத்தப்படவில்லை என்று யுவான் சுவாங்கு குறிப்புக்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பொதுவாகக் கூறலாம். எனினும் மத வெறியர்களும் சிலர் ஏழாம் நூற்றாண்டில் இருந்தார்களென்பதை மேலே குறிப்பிட்ட இரு சம்பவங்களும் எடுத்துக்காட்டுகின்றன.

ஏழாம் நூற்றாண்டில் கற்றறிந்த சிந்தனையாளர்கள் அனுசரித்த புத்தமதத்திற்கும், சாதாரண மக்கள் பின்பற்றிய புத்த மதத்திற்கும் அதிக வேறுபாடுகள் இருந்தன என்று நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக் கொண்டு அறிகிறோம். சாதாரண மக்கள் பின்பற்றிய புத்தமதம் பாமரமக்கள் பின்பற்றிய இந்து மதத்தை ஏறக்குறைய ஒத்திருந்தது. அத்தகைய பௌத்தர்கள் மந்திர தந்திரங்களில் அதிக நம்பிக்கை யுடையவர்களாக இருந்தார்கள். ஆனால் சில பௌத்த மடங்களில் வாழ்ந்த துறவிகள் நல்ல கல்வியறிவும் சிந்தனை சக்தியும் உடையவர்களாக இருந்தார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கை முறையும், உபதேசங்களும் இந்திய மக்களின் பண்பாட்டை ஓரளவு உயர்த்தியிருக்கும் என்று நிச்சயமாகக் கூறலாம். இத்தகைய மடங்கள் பல நாலந்தாவில் இருந்தன. நாலந்தா பாட்னாவுக்குத் தெற்கில் சிறிது தூரத்திலிருக்கிறது. அங்கே ஆயிரக்கணக்கான துறவிகள்

வாழ்ந்தார்கள். அவர்கள் புத்தமதக் கோட்பாடுகளை ஆராய்வதிலும், தத்துவ விசாரணையிலும் தங்கள் காலத்தைக் கழித்தார்கள். நாலந்தா ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தது. அங்கு புத்தமத நூல்கள் மாத்திரமின்றி, வேதம், வியாகரணம், தர்க்க சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், முதலியவைகளும் ஆராய்ச்சி செய்யப்பட்டன. அந்தப் பல்கலைக்கழகத்தில் யார் வேண்டுமானாலும் சேர்ந்து படிக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு பிரவேசப் பரீட்சையில் தேர்ச்சி பெறவேண்டும். அந்தப் பிரவேசப் பரீட்சை கொஞ்சம் கடினமானதுதான். இத்தகைய ஆராய்ச்சிகளால் பல மதங்களைப் பின்பற்றிய அறிஞர்களின் கருத்துக்களும் ஓரளவு ஒற்றுமையடைவதற்கு வழியேற்பட்டிருக்கும். அதே சமயத்தில் அறிஞர்கள் பின்பற்றிய மதங்களுக்கும் பாமரமக்கள் பின்பற்றிய மதங்களுக்கும் வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே போயிருக்கும்.

இந்த அதிகாரத்தை முடிக்குமுன் ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றிக் கூறுவது அவசியம். குப்த அரசர்களைப்போலவே, ஹர்ஷனும் கல்விக்கும் கலைகளுக்கும் ஆதரவு அளித்தான் என்று கூறினோம். இதிலிருந்து ஒரு சில அரசர்கள்தாம் இப்படிச் செய்தார்களென்றும், மற்ற இந்து அரசர்கள் கல்விக்கும் கலைகளுக்கும் ஆதரவளிக்கவில்லை யென்றும் எண்ணிவிடக்கூடாது. கல்வியையும் கலைகளையும் போற்றி வளர்ப்பது இந்து அரசர்களுக்கேற்பட்ட முக்கிய கடமைகளில் ஒன்று. அற நூல்களிற் கூறியபடி குடிகளை நல்லமுறையில் ஆட்சிசெய்வது அரசர்களுடைய முக்கிய வேலை. ஆனால், போர்செய்து வேறு நாடுகளை வென்று, தங்கள் இராஜ்யங்களைப் பெருக்குவதே இராஜ்ய பரிபாலனத்தை விட முக்கியமான வேலை என்று இந்து அரசர்கள் எண்ணினர்கள் என்பதை நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். இருந்தபோதிலும், கல்வியையும் கலைகளையும் வளர்ப்பதற்கும் அவர்களுக்கு அவகாசம் இருந்தது. ஆனால் சில அரசர்கள் இந்தத் துறையில் மிக அதிகமான கவனம் செலுத்தினர்கள்; மற்றவர்கள் அவ்வளவு சிரத்தை காட்டியிருக்க மாட்டார்கள். அதுதான் வேறுபாடு. போரில் வல்லவனாகவும், ஆட்சிமுறையில் ஆற்றலும் அனுபவமும் மிகுந்தவனாகவும், தனனுடைய மதத்தில் உண்மையான நம்பிக்கையும், மற்ற மதங்களிடத்தில் பகைமையில்லாத பரந்த மனப்பான்மையும் உடைய

னுகவும், கலைகளில் தேர்ந்தவனுகவும் இருப்பவன்தான் சிறந்த அரசன் என்று அந்தக்காலத்து இந்தியர்கள் நம்பினுர்கள் என்று பொதுவாகக் கூறலாம்.

இராஜபுத்திர வம்சத்தைச் சேர்ந்தவர்களே சாதாரணமாக வட இந்தியாவில் அரசர்களாயிருந்தார்கள். ஆனுல் அவர்களைத் தவிர மற்ற வகுப்பினர் அரசர்களாக இருக்கவில்லை என்று கூற முடியாது. மந்திரிகளாக இருந்த பல பிராமணர்கள் தங்கள் யஜமானர்களைக் கொன்று, அவர்களுடைய இராஜ்யங்களை ஆக்கிரமித்துத் தங்கள் வம்சத்தினருடைய ஆட்சியை நிறுவினுர்களென்று நாம் படிக்கிருேம். ஹர்ஷனே வைசிய வருணத்தைச் சேர்ந்தவன். சூத்திரர்களுக்குள்ளும் சில அரசர்கள் இருந்தார்கள் என்று தெரிகிறது. தீபகல்ப இந்தியாவின் வடபகுதியில் ஆண்ட அரசர்கள் இராஜபுத்திரர்கள் என்று பொதுவாகக் கூறலாம். ஆனுல் தமிழகத்திலிருந்த அரசர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபட்ட வேளாண் சாதியைச் சேர்ந்தவர்கள். ஆகவே அரசுரிமை இராஜபுத்திரர்களின் தனியுரிமையன்று என்றும், அரசர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் உயர் குணங்களெல்லாம் பொருந்தியவர்களாக இருக்கவேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தார்களென்றும் பொதுவாகக் கூறலாம்.

ஹர்ஷனுடைய ஆட்சியின் கடைசிக் காலத்தைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. அவன் கி. பி. 646—அல்லது 647—ஆம் ஆண்டில் சந்ததியில்லாமல் இறந்தான். அவனுடைய மந்திரிகளில் ஒருவன் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டு, சீனுவிலிருந்து வந்திருந்த தூது கோஷ்டி ஒன்றை எக்காரணத்தாலோ தாக்கினுன். அந்தக் கோஷ்டியின் தலைவன் அந்தக்காலத்தில் பலம் பொருந்திய இராஜ்யமாக இருந்த திபேத்துக்குத் தப்பியோடி, அங்கிருந்து ஒரு சேனையை திரட்டிக்கொண்டு வந்து, பீகாரின்மேற் படையெடுத்து, தன்னைத் துரத்தியடித்த மந்திரியைத் தோற்கடித்துச் சிறைப்பிடித்துச் சீனுவுக்குக் கொண்டு போய்விட்டான். இந்த நிலையில் ஹர்ஷ சாம்ராஜ்யம் அழிந்ததில் ஆச்சரியமொன்றும் இல்லை. பீகாரின் வடபாகம் சில காலம் திபேத் அரசனுடைய ஆட்சியில் இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

அதிகாரம்—17

ஹர்ஷர்காலம் முதல் மஹ்மூது காலம்வரை

ஹர்ஷனுடைய மரணத்திற்கும் துருக்கியர் வருகைக்கும் இடையிலுள்ள முன்னூற்றைம்பது ஆண்டுகளில் இந்தியாவில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் விளக்குவதற்கு இந்த நூலில் இடம் இல்லை. அந்தக்காலத்து அரசியல் வரலாற்றைப்பற்றி நமக்குக் கிடைத்துள்ள விஷயங்கள் மிகப் பல. அவற்றை யெல்லாம் ஒரேதலைப்பில் கோவையாக எழுதுவது முடியாத காரியம். வட இந்தியாவில் பல அரசவம்சங்கள் ஏகாதிபத்தியத்திற்காகப் போட்டியிட்டு அம் முயற்சியில் தோல்வியுற்றன. தென்னிந்தியாவிலும் ஏறக்குறைய இதே கதைதான். இவ்வாறு போட்டியிட்ட அரசவம்சங்களின் வரலாற்றையும், முக்கியமான நிகழ்ச்சிகளையும் பற்றிச் சுருக்கமாகக் கூறுவதோடு அமைவதுதான் சாத்தியம்.

முதலில் சிந்து சமவெளியைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது அவசியம். சிந்து நாட்டிலும் பலுச்சிஸ்தானத்திலும் பரவியிருந்த ஒரு பெரிய இராஜ்யத்தை யுவான் சுவாங்கு கண்டார். அந்த இராஜ்யத்தை ஒரு சூத்திரன் ஆட்சிசெய்தான். ஆனால் அந்த இராஜ்யத்திற்கு அராபியர்களால் ஆபத்து வந்துகொண்டிருந்தது என்பதைப்பற்றி யுவான் சுவாங்கு குறிப்பிடவில்லை. ஒருவேளை அந்த விஷயம் அவருக்குத் தெரியாமலிருந்திருக்கலாம். முகம்மது நபியின் (569—632) பிரசாரத்தினால் இஸ்லாம் மதத்தைத் தழுவிய அராபியர்கள் வெகு விரைவில் பலநாடுகளை வென்றது உலகறிந்த விஷயம். அப்படி அவர்கள் வென்ற நாடுகளில் பலுச்சிஸ்தானமும் ஒன்று. அந்த நாட்டை அவர்கள் கி. பி. 650-ஆம் ஆண்டில் வென்றனர். பின்னர் அறுபது ஆண்டுகள் கழித்து அவர்கள் சிந்துநாட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள். அப்போது அங்கு ஆட்சி செய்தவன் ஒரு பிராமண அரசன். ஆகவே அந்த அரசன் தனக்கு முன்னிருந்த சூத்திர அரசனைக் கொன்றுவிட்டு இராஜ்யத்தை ஆக்கிரமித்துக் கொண்டான் என்று தெரிகிறது. கி. பி. 712-ஆம் ஆண்டிலிருந்து, சிந்து நாடும் பஞ்சாபின் தென்பகுதியும் முஸ்லிம் ஆட்சிக்குள் சென்றன. முதலில் அவைகள் பாக்தாது நகரில் அரசு செலுத்திய கலீபாவின் ஆட்சிக்குள்ளடங்கிய மாகாணமாக இருந்தன. பின்னர் அவைகள் இரண்டு சிறு இராஜ்யங்

களாகப் பிரிக்கப்பட்டன. அவைகள் பெயரளவில் கலீபாவின் ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்ட போதிலும், உண்மையில் சுதந்திரமாகவே இருந்தன. இந்தியாவில் அவற்றைத்தவிர வேறு இராஜ்யங்களை அராபியர்கள் ஜயிக்கவில்லை. இஸ்லாம் மதத்தின் செல்வாக்கும் அந்த இராஜ்யங்களைத்தவிர வேறு இராஜ்யங்களிற் பரவவில்லை. அராபியர்களுக்குப் பின்வந்த துருக்கியர்கள் தாம் இந்தியாவின் பலபகுதிகளிலும் இஸ்லாம் மதத்தைப் பரப்பினுர்கள்.

சிந்து சமவெளியைத் தவிர வட இந்தியாவில் மூன்று முக்கிய இராஜ்யங்கள் இருந்தன. அவைகள் காஷ்மீரம், வங்காளம், இராஜபுதனம் ஆகியவை. வங்காளத்தில் பால வம்சத்தினரும், இராஜபுதனத்தில் கூஜார் வம்சத்தினரும் ஆண்டுவந்தனர். அதே சமயத்தில் தக்காணத்தில் ராஷ்டிரகூடர்கள் ஆண்டுவந்தனர். இந்த நான்கு இராஜ்யங்களும் வட இந்தியாவின் ஏகாதிபத்தியத்திற்காகப் போட்டியிட்டன. கி. பி. எட்டாம் நூற்றுண்டில் காஷமீரம் மிகப் பிரபலமான இராஜ்யமாயிருந்தது. இராஜ தரங்கிணி என்ற நூலைப்பற்றி நாம் முன்னர் ஓர் அதிகாரத்திற் பேசினேம். அது காஷ்மீரத்தின் வரலாற்றைக் கூறும் நூல். முஸ்லிம்களின் படையெழுச்சிக்கு முற்பட்ட காலத்து வரலாறும் அந்த நூலிற் கூறப்படுகிறது. ஹர்ஷர் காலத்திலிருந்து அந்த நூலிற் கூறப்படும் விஷயங்கள் ஏறக்குறைய உண்மையான விஷயங்கள் என்று ஒத்துக்கொள்ளப்படுகின்றன. காஷ்மீரம் என்ற பெயர் ஜீலம்நதிப் பள்ளத்தாக்கின் மேற்பகுதியைத்தான் குறிக்கும். இந்தப்பகுதி உயர்ந்த மலைகளால் சூழப்பட்டிருக்கிறது. ஆனல் ஏழாம் நூற்றுண்டில் பஞ்சாப் சமவெளியின் பெரும் பகுதி காஷ்மீர அரசர்களின் ஆட்சியிலிருந்தது. எட்டாம் நூற்றுண்டில் காஷ்மீர அரசர்களின் பலம் இன்னும் அதிகரித்தது. அவர்கள் வட இந்தியாவில் தங்கள் ஏகாதிபத்தியத்தை நிறுவ முயன்றுர்கள். அந்தக்காலத்தில் காஷ்மீரத்திற்கும், சீனுவுக்கும் நெருங்கிய அரசியல் தொடர்பு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது சீனு ஒரு பெரிய சாம்ராஜ்யமாக இருந்தது. இந்தியாவிற்கு வடக்கிலிருந்த மத்திய ஆசிய நாடுகளெல்லாம் சீனுவுக்கு அடங்கியவையாக இருந்தன. சீனுவின் ஆதிக்கம் மேற்கில் ஆக்ஸஸ் நதிவரையிலும்—சில சமயம் அதற்கப்பாலும்—பரவியிருந்தது. காஷ்மீரமும் சிறிதுகாலம் சீனுவின் ஆதிக்கத்திலிருந்தது. கி. பி. 720-ஆம் ஆண்டில் காஷ்மீரத்தின் சிம்மாசன மேறிய அரசனும், அவனுக்குப்பின் 733-ஆம் ஆண்டில் பட்

டத்திற்கு வந்த அரசனும் சீன அரசனைத் தங்கள் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் இந்தநிலை அதிகநாள் நீடிக்கவில்லை. விரைவில் காஷ்மீரம் சீன ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது. சுமார் 740-ஆம் ஆண்டில் வங்காளத்தின்மீது படையெடுத்து வெற்றியோடு திரும்பிய கன்னோசி அரசனைக் காஷ்மீர அரசன் தோற்கடித்தான். அதன்பின் இன்னும் கிழக்கேயும் காஷ்மீர ஆதிக்கம் பரவியது என்று கூறப்படுகிறது. ஆனால் அதை நம்பமுடியாது. அதற்கப்புறம் வட இந்திய ஏகாதிபத்தியத்திற்காகக் காஷ்மீரம் எந்தவித முயற்சியும் செய்ததாகத் தெரியவில்லை.

கி. பி. எட்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் வங்காளமும், பீகாரும் மிகக் குழப்பமான நிலையில் இருந்தன என்றும், அவற்றின்மேல் பல அரசர்கள் பலதரம் படையெடுத்தார்களென்றும் வரலாற்று ஆசிரியர்களெல்லாம் பொதுவாக ஒத்துக்கொள்ளுகிறார்கள். கடைசியில் பாலவம்சத்து அரசர்கள் அந்தப் பிரதேசத்தில் ஒரு பலம் மிகுந்த ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். "பால" என்ற சொல்லுக்குக் " காப்பவன் " என்று பொருள். அந்த வம்சத்து அரசர்களெல்லாம் " பாலர் " என்ற பட்டத்தைத் தங்கள் பெயருடன் சேர்த்து வைத்துக்கொண்டார்கள். இந்த வம்சத்தினர் ஆட்சி எப்போது நிறுவப்பட்டது என்பதும், அதற்குமுன் அந்த வம்சத்தினர் என்ன நிலையில் இருந்தனர் என்பதும் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அந்த வம்சத்தின் முதல் அரசனான கோபாலன் சுமாராக கி. பி. 750-ஆம் ஆண்டில் வங்காளத்தில் அரசனாக இருந்தான் என்பது ஓரளவு நிச்சயமாகத் தெரிகிறது. அவன் அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டானென்று சில ஆதாரங்களின் மூலம் அறிகிறோம். ஆனால், அவனை யார் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெரியவில்லை. ஒருவேளை வங்காளத்திலிருந்த பல சிறு இராஜ்யங்களை ஆண்டுவந்த அரசர்கள் ஒன்றுகூடி அவனை அரசனாகத் தேர்ந்தெடுத்திருக்கலாம். அவன் எந்தச் சாதியைச் சேர்ந்தவன் என்பதுகூட நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், அவன் பிராமணனல்லன், க்ஷத்திரியனுமல்லன் என்று நினைக்க இடமிருக்கிறது. அவனுடைய சந்ததியார்கள் க்ஷத்திரியர்களுடன் கலப்பு மணம் செய்துகொண்டார்கள் என்பதற்கு ஆதாரமிருக்கிறது. கோபாலன் நிறுவிய பாலவம்சம் வங்காளத்தில் நான்கு நூற்றாண்டுகள் ஆட்சி செய்தது, அந்த நானூறாண்டுகாலம் வங்காளத்தின் வரலாற்றில் பொற்காலம் என்று கூறப்படுகிறது, பாலவம்சத்து அரசர்கள் நல்ல பண்பாடு உடையு

வர்கள். கல்விக்கும் கலைக்கும் சிறந்த ஆதரவளித்தார்கள். அவர்களெல்லாம் புத்தமதத்தில் மிகுந்த பற்றுடையவர்கள். பாலவம்சத்து அரசர்கள் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் சிறிதுகாலம் வடஇந்தியாவின் ஏகாதிபத்தியத் திற்காகப் போட்டியிட்டார்கள். அதற்குப்பின் அவர்கள் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை.

பாலவம்சத்தின் இரண்டாம் அரசனான தர்மபாலன் வங்காளத்திலும், பீகாரிலும் தன் ஆதிக்கத்தை நிலையாக நிறுவியபின் மேற்கிலுள்ள பிரதேசங்களை வெல்ல எண்ணினான். ஆகவே அவன் கன்னோசியின் மீது படையெடுத்து, அதை வென்று அங்கே தனக்கிஷ்டமான ஒருவனை அரசனாக்கினான். அதற்கு மேற்கே போகாவண்ணம் அவனை இராஜபுதனத்திலிருந்த கூஜார்களும் தக்காணத்திலிருந்த ராஷ்டிரகூடர்களும் தடுத்தார்கள். அதற்கப்புறம் நிகழ்ந்த சம்பவங்களின் வரலாறு நமக்குச் சரியாகத் தெரியவில்லை. ஆனால் சில ஆண்டுகளில் கன்னோசி கூஜார்களுடைய ஆட்சிக்குள் சென்றுவிட்டது என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. தர்மபாலனுக்குப் பின் அரசனான தேவபாலன் கன்னோசியை வெல்ல மறுபடியும் முயன்றான். ஆனால் அது முடியவில்லை. கி. பி. 830-ஆம் ஆண்டிற்குப்பின் கன்னோசியே வடஇந்தியாவில் தலைசிறந்த இராஜ்யமாக இருந்தது. பாலர்களுடைய ஆதிக்கம் இந்தியாவின் கிழக்குப் பகுதியோடு நின்றுவிட்டது.

கூஜார்கள் இராஜபுதனத்தின் தென்பகுதியில் ஆட்சிசெய்து வந்தவர்கள். அவர்கள் எவ்வாறு கங்கைச் சமவெளியில் தங்கள் அதிகாரத்தைப் பரப்பினார்கள் என்பது சரியாகத் தெரியாது. ஆனால், அவர்கள் கன்னோசியைக் கைப்பற்றிய பிறகு அதையே தங்களுடைய தலைநகராக்கிக் கொண்டார்கள் என்றும், மிகிர போஜன் என்ற அரசனும் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த முதலாம் மகேந்திரபாலன் என்பவனும் கன்னோசியில் 840-ஆம் ஆண்டிலிருந்து 910-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்தார்களென்றும் நாம் அறிகிறோம். அவர்கள் காலத்தில் கூஜார் அதிகாரம் வடஇந்தியாவில் ஒப்பற்று விளங்கியது. மேற்கில் சிந்து நாட்டையும், கிழக்கில் பாலராஜ்யத்தையும் தவிர வடஇந்தியாவின் மற்ற பகுதிகளெல்லாம் அவர்களுடைய ஆட்சியிலிருந்தன. அவர்கள் அடிக்கடி தங்கள் இராஜ்யத்தின் எல்லைகளிலிருந்த அரசர்களோடு சண்டை செய்து கொண்டிருந்தார்களென்பதைத் தவிர அவர்களாட்சியைப்பற்றி வேறொன்றும் நமக்குத் தெரி

யாது. பத்தாம் நூற்றுண்டில் கூஜார் ஆதிக்கம் மங்கியது. கி. பி. 916-ஆம் ஆண்டில் கன்னேசியை ராஷ்டிர கூடர்கள் கைப்பற்றிக்கொண்டனர். ஆனுல் அவர்களுக்குள்ளேயே ஏற்பட்ட சச்சரவுகளினுல் ராஷ்டிரகூடர்கள் கன்னேசியில் தங்கள் அதிகாரத்தை நிலையாக ஸ்தாபிக்க முடியவில்லை. ஆகவே மறுபடியும் சிறிதுகாலம் கன்னேசி கூஜார்களின் ஆட்சியிலிருந்தது. ஆனுல் அவர்களுடைய பலம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. அவர்களுக்கடங்கிய சிற்றரசர்கள் சிறிது சிறிதாகத் தங்கள் பலத்தை அதிகரிக்க ஆரம்பித்தார்கள். கடைசியாகச் சுமார் கி. பி. 950-ஆம் ஆண்டுக்குள் கூஜார் சாம்ராஜ்யம் அழிந்துவிட்டது. அதன்பின் வடஇந்தியா பல சிறிய இராஜ்யங்களாகப் பிரிந்து போயிற்று. பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் அவைகள் துருக்கியர் படையெழுச்சிகளுக்கு இலக்காயின.

இனி ராஷ்டிர கூடர்களின் வரலாற்றைக் கவனிப்போம். ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்தில், தீபகல்ப இந்தியாவில் சாளுக்கியர்களும், பல்லவர்களும், தமிழ் மூவேந்தர்களும் ஆட்சி புரிந்து வந்தார்களென்று பதினைந்தாம் அதிகாரத்திற் பார்த்தோம். தமிழரசர்கள் தெற்கிலும், பல்லவர் கிழக்கிலும், சாளுக்கியர்கள் வடக்கிலும் இருந்தார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் சாளுக்கிய இராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. கிழக்குச் சாளுக்கிய வம்சத்தினர் கோதாவரி நதியின் முகத்துவாரத்துக் கருகிலுள்ள பிரதேசத்தில் பதினென்றும் நூற்றுண்டு வரையில் ஆண்டு வந்தார்கள். ஆனுல் அவர்கள் அவ்வளவாகப் பிரபலமடையவில்லை. மேற்குச் சாளுக்கியர்கள் பல்லவர்களோடு அடிக்கடி சண்டை செய்து வந்தார்கள். அந்தப் பகைமை நூற்றைம்பது ஆண்டுகள் நீடித்தது. ஆனுல் அந்தக்காலத்தில் தென்னிந்தியாவில் பல்லவ ராஜ்யந்தான் தலைசிறந்த இராஜ்யமாக இருந்தது என்று பொதுவாகக் கூறலாம். சுமார் 750-ஆம் ஆண்டில் சாளுக்கியவம்சத்தின் ஆட்சியை ராஷ்டிரகூடர்கள் அழித்தார்கள்.

ராஷ்டிரகூடர்கள் சாதாரணமாக ராதார்கள்என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் சாளுக்கியர்கள் பிரபலமடைவதற்கு முன்னரே தீபகல்ப இந்தியாவின் மேற்குப் பகுதியில் ஆட்சி செய்து வந்தார்கள். பின்னர் எட்டாம் நூற்றுண்டின் இடையில் சாளுக்கியர்களுடைய ஆட்சியை ஒழித்த பிறகு அவர்கள் இரு நூற்றுண்டுகளுக்குமேல் அந்தப் பிரதேசத்தில் ஆட்சி செய்தார்கள். அவர்களும் சாளுக்கியர்களைப்போலவே பல்லவர்களோடு அடிக்கடி சண்டை செய்துவந்தார்கள். ஆனுல் அவர்கள் தென்னிந்தி

வைவிட வட இந்தியாவில் தங்களுடைய அதிகாரத்தைப் பரப்பு வதிலேயே அதிகக்கவனம் செலுத்தினர்களென்று தோன்று கிறது. ராதார் வம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர் குஜராத்தில் தங்கள் ஆட்சியை நிறுவி, அதன்பின் மாளவத்தைக் கைப்பற்றிக் கொண்டு, இராஜபுதனத்திலிருந்த கூஜார்களோடும், வங்காளத்தி லிருந்த பாலர்களோடும் சண்டை செய்தார்கள். ஒருதரம் அவர் கள் கன்னேசியையே கைப்பற்றிக்கொண்டார்கள் என்று முன் னர்ப் பார்த்தோம். ராதார்கள் கூஜார்களைத் தங்கள் பரம விரோதிகளென்று கருதினர்கள். சிந்து நாட்டில் ஆட்சி செய்த அராபியர்களும் கூஜார்களிடம் பகைமை கொண்டிருந்தார்கள். ஆகவே கூஜார்களுக்கு எதிராக ராதார்கள் அராபியர்களுடைய உதவியை நாடினர்கள். ராதார்களுடைய நாட்டுக்கு அராபிய வியாபாரிகள் வந்தார்கள். அதனுல் சீன யாத்திரிகர்கள் இந்தியா வுக்கு வருவதை நிறுத்திவிட்ட பிறகும் இந்திய வரலாற்றைப் பற்றிய சில விஷயங்களை நாம் அராபிய நூல்களின் மூலமாக அறிய முடிகிறது. ராதார்களுடன் நட்பாயிருந்த அராபிய வியாபா ரிகளும் யாத்திரிகர்களும் அவர்களைப்பற்றி மிகவும் புகழ்ச்சியாக எழுதிவைத்திருப்பது இயல்பே. ராதார் வம்சத்தை அராபியர் கள் "பல்ஹரா" வம்சம் என்று குறிப்பிடுகிருர்கள். கி. பி. ஒன்ப தாம் நூற்ருண்டில் இந்தியாவுக்கு வந்த அராபிய வியாபாரியான சுலைமான் பல்ஹரா இராஜ்யத்தைப்பற்றி மிகச் சிலாகித்துப் பேசு கிருன். பல்ஹரா இராஜ்யம் மிகச் சிறப்புவாய்ந்த ராஜ்யம் என் றும், அதை பாக்தாத், சீனு, கான்ஸ்டாண்டி நோப்பில் ஆகிய இராஜ்யங்களுக்கு அடுத்தபடியாகக் கூறலாம் என்றும் சுலைமான் கருதினுன். ஆனுல் பத்தாம் நூற்ருண்டில் ராதார்களின் சிறப்பு மங்கிற்று. 973-ஆம் ஆண்டில் தீபகல்ப இந்தியாவின் வட மேற் குப் பகுதியைப் புதியதொரு சாளுக்கிய வம்சத்தினர் கைப்பற்றிக் கொண்டனர்.

முன்னர்க் குறிப்பிட்டபடி ஏழாம் நூற்ருண்டில் பல்லவ ராஜ்யம்தான் தென்னிந்தியாவில் தலைசிறந்த இராஜ்யமாக இருந் தது. ஆனுல், மேற்கில் சாளுக்கியர்களுடனும் ராதார்களுடனும் அடிக்கடி செய்த போர்களினுலும், தெற்கில் தமிழகத்து அரசர் களோடு செய்த சண்டைகளாலும் பல்லவ ராஜ்யத்தின் வலிமை சிறிது சிறிதாகக் குறைந்தது. முடிவில் சுமார் 900-ஆம் ஆண்டில் அந்த இராஜ்யத்தைச் சோழர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்,

தமிழகத்திலிருந்த மூன்று இராஜ்யங்களுள், கேரள இராஜ் யம் ஏறக்குறையப் பத்தாம் நூற்ருண்டின் இறுதிவரையிலும்

சுயேச்சையாகவே இருந்தது. அதன்பின் அதைச் சோழர்கள் ஜயித்துக் கொண்டார்கள். பாண்டியநாடு ஏழாம் நூற்றாண்டி லிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சிறப்பாக இருந்தது. அந்தச் சமயத்தில் சோழர்களுடைய அதிகாரம் மங்கியிருந்தது. ஆனால் பாண்டியர்கள் பல்லவராஜ்யம், கேரள ராஜ்யம், இலங்கை ஆகிய நாடுகளுடன் அடிக்கடி சண்டை செய்து கொண்டிருந்தார் களென்பதைத் தவிர அவர்களைப்பற்றி நமக்கு வேறொன்றும் தெரியவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையிலிருந்து சோழர் களின் சிறப்பு ஓங்கத் தொடங்கியது. அதுதான் அந்தக் காலத் துத் தென்னிந்திய அரசியல் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம். வடக்கே பல்லவர்களுக்கும் தெற்கே பாண்டியர்களுக் கும் இடையில் அகப்பட்டுக்கொண்டு சோழர்கள் வெகு காலம் வரையில் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கி.பி. 850-ஆம் ஆண்டுக்கப்புறம் அவர்கள் பல்லவர்களையும் பாண்டியர்களை யும் எதிர்த்துத் தோற்கடித்தார்கள். அவர்களுள் இராஜராஜன் என்ற ஓர் அரசன், சேரர்கள், பாண்டியர்கள், கிழக்குச் சாளுக்கி யர்கள் ஆகிய அனைவரையும் தோற்கடித்தான். மேலும் தீப கல்ப இந்தியாவின் உள்நாட்டுப் பிரதேசங்களிலிருந்த பலவேறு கூட்டத்தினரையும் அவன் வென்றான். அதன்பின் கீழ்க் கடற் கரையிலிருந்த கலிங்கத்தை வென்று, முடிவில் கடல் கடந்த நாடாகிய இலங்கையையும் வென்றான். ஆகவே, பதினொன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஏறக்குறைய தீபகல்ப இந்தியா முழுவதையும் சோழ அரர்சகள் ஒரு குடைக்கீழ் ஆளும் நிலை ஏற்பட்டது. இதற்குமுன் இத்தகைய ஒரு சாம்ராஜ்யம் தென்னிந்தியாவில் இருந்தது என்று கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இதுவரையில் கிடைக்கவில்லை.

இதுவரையிற் கூறியவற்றிலிருந்து, பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், வடமேற்கிலிருந்து இந்தியாவின்மேல் யாரேனும் படையெடுத்து வந்தால் அவர்களை எதிர்த்து முறியடிப்பதற்கு ஏற்றபலம் பொருந்திய இராஜ்யம் ஒன்றும் இந்தியாவில் இல்லை என்பது தெரியும். சோழ இராஜ்யம் மிகச் சிறப்புவாய்ந்த இராஜ்யமாகத்தான் இருந்தது. ஆனால் அது இந்தியாவின் தென் கோடியில் இருந்தது. மேலும் சோழர்களுக்கு வடஇந்தியா விஷயங்களிற் கவலை இருந்ததாகவும் தெரியவில்லை. ஆயிரத்து முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர், பாடலிபுத்திர அரசனான சந்திரகுப்த மௌரியன் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவின்மேற் படையெடுத்த செலியூக்கஸைத் தோற்கடித்

துத் துரத்தினான். ஆனால் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் அத்தகைய பேரரசன் வடஇந்தியாவில் இல்லை. அப்போதிருந்த பல அரசர்களுக்குள் ஒற்றுமையே கிடையாது. ஆகவே அந்தச் சமயத்தில் இந்தியாவின்மீது யாரேனும் வெளிநாட்டார் படையெடுத்தால் அவர்களுக்கு நல்ல வாய்ப்புத்தான்.

இதுவரையில் ஹர்ஷனுடைய மரணத்திற்கும் துருக்கியர் வருகைக்கும் இடையிலுள்ள முன்னூற்றைம்பது வருடத்திய அரசியல் நிகழ்ச்சிகளைச் சுருக்கமாகக் கூறினோம். இந்த வரலாற்றை எழுதுவதற்கேற்ற ஆதாரங்கள் சமீபகாலத்தில்தான் நமக்குக் கிடைத்தன. அதற்குமுன் இந்திய வரலாற்றில் இந்தக் காலம் ஓர் இருட்டுக்காலமாகத்தான் இருந்தது. ஆனால் பல ஆராய்ச்சியாளர்களுடைய முயற்சியால் இந்த இருள் திரையைக் கிழித்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக ஒளிக்கதிர்கள் தோன்ற ஆரம்பித்தன. ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு சாசனங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்தச் சாசனங்களின் மூலம் அந்தக் காலத்திலிருந்த இந்திய அரச வம்சங்களைப்பற்றிய பல விஷயங்களை அறிகிறோம். அந்த வம்சங்கள் ஒன்றோடொன்று செய்த முக்கியமான போர்களைப்பற்றியும், வேறு சில நிகழ்ச்சிகளைப்பற்றியும் நாம் சிறிதளவு அறிந்துகொள்ளுகிறோம். மேலும் முக்கிய அரசியல் நிகழ்ச்சிகளின் காலத்தையும் நாம் ஒருவாறு நிர்ணயிக்க முடிகிறது. சில நிகழ்ச்சிகளின் காலம் நிச்சயமாகவும், சில நிகழ்ச்சிகளின் காலம் சுமாராகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவும் சமீபகால ஆராய்ச்சியால் ஏற்பட்ட பயன் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த ஆராய்ச்சி மிக மிகக் கடினமானது. சாசனங்களின் பொருள் எளிதில் விளங்குவதில்லை. முதலிற் கூறப்படும் பொருள் சரியானதுதானா என்று, மறுபடியும் மறுபடியும் ஆராய்ச்சியாளர்கள் துருவித் துருவிப் பார்க்க வேண்டியிருக்கிறது. தற்போது பல அறிஞர்கள் இந்த வேலையில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தவேலை இன்னும் முடிவடையவில்லை யெனினும், அந்த முன்னூற்றைம்பது ஆண்டுகளில் இந்தியாவின் முக்கிய பகுதிகளில் நிகழ்ந்த அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றி நாம் ஓரளவு நிச்சயமாக அறிவதற்கு, இந்த வேலை நமக்கு உதவி செய்திருக்கிறது. நமக்குத் தெரிந்த விஷயங்கள் எல்லாவற்றையும் எழுத இந்த நூலில் இடமில்லை. எனவே, இத்துறையில் பாடுபடும் ஆராய்ச்சியாளர்களைப் பாராட்டி, அவர்கள் முயற்சி முழுப்பயனையும் அளிக்க வேண்டும் என்று விரும்புவதோடு அமைகிறோம்.

அதிகாரம் 18

பத்தாம் நூற்றாண்டு

ஹர்ஷனுடைய மரணத்திலிருந்து பத்தாம் நூற்றாண்டின் முடிவுவரையில் இந்தியாவில் நிகழ்ந்த அரசியற் சம்பவங்களைப் பற்றிச் சென்ற அதிகாரத்திற் கூறினோம். இந்த அதிகாரத்தில் மக்களுடைய வாழ்க்கைநிலையைப்பற்றிக் கூற முயல்கிறோம். இஸ்லாம் மதமும் பண்பாடும் இந்தியாவில் நன்றாக நுழைவதற்கு முன்னர் இந்தியமக்களின் வாழ்க்கையின் பலதுறைகளிலும் எத்தகைய வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்று கூறுவது எளிதான காரியமன்று. நமக்குக் கிடைத்துள்ள நூல்களை ஆராய்ச்சிசெய்து பார்த்தால், குப்த சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கும் துருக்கியர் வருகைக்கும் இடையிலுள்ள நீண்டகாலத்தில் இந்தியர் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும் எந்தவிதமான புதிய அம்சமும் தோன்றவில்லை என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். அந்த நீண்ட காலத்தில் பல நூல்கள் எழுதப்பட்டன என்பது உண்மைதான். எனினும் அவற்றில் புதிய கருத்துக்கள் எதுவும் இல்லை. ஏற்கெனவே இருந்த கருத்துக்கள்தாம் புது மெருகுடன் காட்சியளிக்கின்றன. வாழ்க்கையின் பல துறைகளுக்கும் ஏற்ற விதிகள் புதிய ஒழுங்குடன் கூறப்படுகின்றன. அவற்றைச் சொல்லும் விதந்தான் மாறியிருக்கிறதே தவிர, அவற்றின் தன்மையும் பொருளும் மாறவில்லை. ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் அனுசரிக்கவேண்டிய விதிகள் ஏராளமாகக் கூறப்படுகின்றன. ஆனால் இந்த விதிகளெல்லாம் உண்மையில் நடைமுறையில் கையாளப்பட்டனவா, அல்லது, அத்தகைய விதிகள் இருப்பது நல்லது என்று நினைத்த ஆசிரியர்களால் எழுதிவைக்கப்பட்டவைகள் தாமா என்று கூறுவது சிரமமான காரியம். ஆகவே இந்த நூல்களிற் காணப்படும் விஷயங்களை இயன்றவரையில் வேறு ஆதாரங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது.

அரசியல் துறையில் அரசனே முக்கியமானவன். மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்த அரசனில்லாத கூட்டத்தினர் இந்திய வரலாற்றில் முக்கியமான இடம் பெறவில்லை. சாதாரணமாக அரசுரிமை பரம்பரையாக வந்தது. ஓர் அரசன் இறந்தால் அவனுடைய முதல் மகன் பட்டத்திற்கு வருவது வழக்கம். ஆனால் இந்த விதிக்கு விலக்குகள் உண்டு. அரசர்கள் சிலசமயங்களில் தங்களுக்கிஷ்டமான யாரைவேண்டுமானாலும் தங்களுடைய வாரிசாக நியமிப்பது உண்டு. மேலும், இளமையாலோ அல்லது

வேறு காரணத்தாலோ அரசபதவி வகிக்கத் தகுதியில்லாதவர்களுக்குப் பதிலாகத் தகுதியுடைய வேறு ஆட்களுக்கு அரச பதவியை வழங்குவது உண்டு என்று சில நூல்களிற் கூறப்படும் சம்பவங்களின் மூலம் அறிகிறோம். ஆகவே, அரசுரிமை பரம்பரையாகத்தான் வரவேண்டும் என்ற கண்டிப்பான விதி அந்தக்காலத்தில் நிலைபெறவில்லை என்று பொதுவாகக் கூறலாம்.

பலராஜ்யங்களை வென்று ஒருபெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்கவேண்டும்—முடிந்தால் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளவேண்டும்—என்பது அரசர்களுடைய குறிக்கோள். இந்தக் குறிக்கோளை யாரும் அடையமுடியவில்லை என்பது உண்மைதான் என்றாலும், இதுவே அரசர்கள் ஒருவரோடு ஒருவர் செய்துவந்த போர்களுக்கு முக்கிய காரணமாக இருந்தது என்று கூறலாம். திறமைவாய்ந்த பேரரசன் எவனாவது தோன்றினால் அவன் காலத்தில் நாட்டில் அமைதி நிலவும். அவனுக்குப் பின் மறுபடியும் சண்டைகள் ஏற்படும். ஆகவே நிரந்தர அமைதி நாட்டில் நிலவுவதற்கு வழியேயில்லை. மேலும் போர்செய்து இராஜ்யத்தைப் பெருக்கவேண்டுமென்று எல்லா அரசர்களும் விரும்பியதால், வேற்றரசர்களோடு சமாதானமாக வாழவேண்டுமென்ற குறிக்கோளுக்கு இடமேயில்லை. ஒவ்வோரரசனும் பக்கத்து நாட்டு அரசனைத் தன் பகைவனாகக் கருதுவதுதான் இயல்பு என்று அறநூல்களே கூறுவதால், அந்த நாட்டுக்கு அப்பாலுள்ள ராஜ்யங்களின் துணையை நாடுவது அந்த அரசனுடைய கடமையாயிற்று. ஆகவே ராஜதந்திரத்துக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஓரரசன் தன் பகைவனுக்கு எதிராக வேறு அரசர்களின் துணையைப் பெறுவதற்கு எத்தகையமுறைகளை வேண்டுமானாலும் கையாளலாம். நியாயம், அநியாயம் என்ற பிரச்சினைக்கு இராஜதந்திரத்தில் இடமே கிடையாது. நூல்களிற் கூறப்பட்டுள்ள இந்த முறைகளைத்தான் அரசர்களெல்லோரும் உண்மையில் கையாண்டார்கள் என்று கூறுவதற்குத் தக்க சான்று இல்லை.

போர் முறைகளைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்கு நமக்கு நம்பத்தகுந்த சான்றுகள் இருக்கின்றன. இந்தியர்கள் எட்டாம் நூற்றாண்டில் அராபியர்களோடு செய்த சண்டைகளைப்பற்றியும், பதினொன்றாம் நூற்றாண்டில் துருக்கியர்களோடு செய்த சண்டைகளைப்பற்றியும் குறிப்புக்கள் இருக்கின்றன. இந்திய நூல்களில் நாம் நால்வகைச் சேனைகளைப்பற்றிப் படிக்கிறோம். அவை காலாட்படை, குதிரைப்படை தேர்ப்படை, யானைப்

படை என்பவை. போர்க்களத்தில் முன்னே யானைப்படையும், அதற்குப்பின்னால் காலாட் படையும், காலாட்படைக்கு இரண்டு பக்கத்திலும் முதலில் குதிரைப்படையும், அதற்கு வெளியில் தேர்ப்படையும் நிற்கும். இதுவே வழக்கமான அணிவகுப்பு. காலாட்படை பெரும்பாலும் வில்வீரர்களாலானது. அராபியர்களை யும், துருக்கியர்களையும் எதிர்த்த இந்தியப்படைகள் இத்தகைய வைதாம். ஆனால் அவற்றில் தேர்ப்படைமாத்திரம் இல்லை. ஆரியர் கள் காலத்தில் உபயோகத்திலிருந்த தேர்ப்படை நாளடைவில் வழக்கொழிந்து போய்விட்டது. இந்தியச் சேனைகளுக்கும் மற்ற நாட்டுச் சேனைகளுக்கும் முக்கியமான வேறுபாடு யானைப்படை தான். பின்னால் நின்று சண்டை செய்யும் வில்வீரர்களுக்கு முன்னா லிருக்கும் யானைப்படை ஒரு சிறந்த கவசமாக இருந்தது. ஆனால் அவைகளில் இரண்டொன்று பயந்து ஓடத் தொடங்கிவிட்டால் ஆபத்துத்தான். அதனால் காலாட்படையில் ஏற்படும் குழப்பத்தை எதிரியின் குதிரைப்படை பயன்படுத்திக்கொள்ளும். ஆகவே, யானைப் படையில் எப்படியாவது பயத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்துவதுதான் எதிரியின் முக்கிய நோக்கமாக இருந்தது. வெடி மருந்து உபயோகத்திற்கு வந்தபின் யானைப்படை பய னற்றதாகிவிட்டது. வெற்றிக்கும் தோல்விக்கும் அரசன் அதிக பொறுப்பாளி என்று கூறலாம். சாதாரணமாக அரசனே சண் டைக்குத் தன் படையை நடத்திச்செல்வது வழக்கம். அரசன் கொல்லப்பட்டாலும் சரி, அல்லது போர்வீரர்களின் பார்வையி லிருந்து மறைந்துவிட்டாலும் சரி அவனுடைய சேனைகள் உடனே சின்னாபின்னமாகச் சிதறி ஓடிவிடும். உதாரணமாக, 712-ஆம் ஆண்டில் சிந்துநாட்டு அரசனான டாஹிர் என்பவ னுக்கும், அராபியர்களுக்கும் நடந்த சண்டையில் டாஹிர் கொல் லப்பட்டதும் இந்தியர்கள் போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டார் கள். 1008-ஆம் ஆண்டில் கஜினிமுகமதுவை எதிர்த்த ஓர் அரசன் ஏறியிருந்த யானை போர்க்களத்திலிருந்து அரசனையும் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டதால், அவனுடைய சேனைகளும் போர்க்களத் திலிருந்து ஓடிவிட்டன. அதனால் கஜினிமகமூது வெற்றியடைந் தான். எனவே, சண்டைக்குச் சென்ற ஒவ்வோர் அரசனும், பகையரசனைக் கொல்வதற்கும், அது முடியாவிட்டால் அவனைப் போர்க்களத்திலிருந்து ஓடச் செய்வதற்கும் முயல்வது வழக்கம்.

இந்து அரசர்கள் நிரந்தரமான படைகளை வைத்திருந்தார் கள். சமாதான காலத்திலும் அவைகளுக்குப் பயிற்சியும் சம்பள மும் அளிக்கப்படும், சண்டைக் காலத்தில் நிரந்தரமான படை

வீரர்களுக்கு உதவியாகக் காடுகளில் வாழ்ந்த கூட்டத்தினரையும் சேர்த்துக்கொள்ளுவது வழக்கம். அவசியமானால் சாதாரணக் குடிகளையும் படை வீரர்களாகச் சேர்த்துக் கொள்வது உண்டு. இராஜபுத்திர ராஜ்யங்களில் அரசனுடைய சாதியைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் படைவீரர்களாக இருந்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது. அவர்கள் அரசனிடத்தில் மிக விசுவாசமாக இருந்தார்கள். ஆனால் சில ராஜ்யங்களில் கூலிப்படைகளும் இருந்தன. தொடக்கத்திலிருந்தே துருக்கியர் சேனைகளில் இந்தியப் படைவீரர்கள் இருந்தார்களென்று நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. ஆகையால் போர் செய்தலே சில சாதியர்களுடைய முக்கியத்தொழில் என்பது விளங்குகிறது. இத்தகைய வகுப்பினரை முகமதிய ஆட்சிக்காலம் முழுதுவதிலும் காண்கிறோம்.

இனி ஆட்சிமுறை எவ்வாறு இருந்தது என்று பார்ப்போம். தற்காலத்திலிருப்பதைப் போன்ற சட்டங்கள் அந்தக்காலத்தில்லை. அந்தக்காலத்துச் சட்டங்கள் அரசர்களாலோ, மந்திரிகளாலோ, சட்ட சபைகளாலோ இயற்றப்பட்டவையல்ல. அவையெல்லாம் தர்ம சாஸ்திரங்களிற் கூறப்பட்டவை. அவைகளை எழுதிய ஆசிரியர்கள் இருதலைப்பட்ட நோக்கத்தோடு அவைகளை எழுதினார்கள். நடைமுறையில் அவர்கள் கண்ட பலவகைப்பட்ட பழக்க வழக்கங்களை ஒழுங்காகத் தொகுப்பது முதல் நோக்கம். அப்படித் தொகுக்கும்போதே அரசர்களுடைய அதிகாரத்திற்கும் புரோகிதர்களுடைய உயர்வுக்கும் அவைகள் எந்தவிதத்திலும் இடையூறாக இல்லாதவாறு பார்த்துக்கொள்வது இரண்டாவது நோக்கம், இந்த வேலையில் ஈடுபட்ட நூலாசிரியர்களுக்குள்ளேயே சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதுண்டு. அதற்குக் காரணம் அவரவர்கள் வாழ்ந்த சூழ்நிலைதான். இந்தச் சட்டங்கள் எல்லா இடங்களிலும் ஒரேமாதிரியாக அமுலில் இருந்தன என்று கூறமுடியாது. முக்கியமாக, தனிப்பட்ட மக்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் பொறுத்த சட்டங்கள் இடத்துக்கிடம் ஓரளவு வித்தியாசமாக இருந்தன. நாளாக நாளாக இந்தச் சட்டங்களின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டே சென்றது என்பது உண்மையெனினும், அவைகள் எந்தக்காலத்தில் பூரணமாக அமுலுக்கு வந்தன என்பதும், அவைகள் எவ்வளவு தூரம் அரசனைக் கட்டுப்படுத்தின என்பதும் நமக்குத் தெரியாது.

வட இந்தியாவிலும் சரி, தென்னிந்தியாவிலும் சரி, அரசனுடைய ஆணைகளை நிறைவேற்றுதற்கேற்ற பலதரப்பட்ட அதிகாரி

கள் இருந்தார்கள். அரசனுடைய உத்தரவுகள் தலைநகரிலிருந்த மந்திரிகளின்மூலமாக ஜில்லா அதிகாரிகளுக்கும் அவர்களின் மூலமாக டிவிஷன் அதிகாரிகளுக்கும், டிவிஷன் அதிகாரிகள், மூலமாகக் கிராம அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டன. தமிழகத்தில் கிராமச்சபைகள் நல்ல முறையில் வேலைசெய்தன என்பதற்குப் பல சாசனங்கள் நமக்கு ஆதாரமாகக் கிடைத்திருக்கின்றன. கிராமச்சபையில் கிராமத்திலிருந்த ஆண்கள் அங்கத்தினராயிருந்தார்கள். கிராமத்தின் விளை நிலங்களையும், நீர்ப்பாசன வசதிகளையும், ரஸ்தாக்களையும் கவனிப்பதற்குக் கிராமச்சபையில் பல கமிட்டிகள் அல்லது சிறு குழுக்கள் இருந்தன. போலீஸ் வேலை, நீதிவழங்கல், தண்டனைவிதித்தல் ஆகிய வேலைகளையும் கிராமச் சபையே கவனித்துக்கொண்டது. கடுமையான தண்டனை மாத்திரம் அரசனே விதித்தான் என்று தெரிகிறது. அதிகாரவர்க்கமும் கிராமச்சபைகளும் சிறந்த முறையில் ஒத்துழைத்தன என்றும், சாதாரணமாக கிராம பரிபாலன விஷயங்களில் அதிகாரவர்க்கத்தினர் அதிகமாகத் தலையிடவில்லையென்றும் நமக்குக் கிடைத்துள்ள சாசனங்களின்மூலம் அறிகிறோம். *

இத்தகைய கிராமச் சபைகள் வட இந்தியாவில் இருந்தன வென்று நினைப்பதற்குத் தக்க ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. வட இந்தியாவில் அரசாங்க அதிகாரிகள் கிராமத்தலைவர்களின் மூலமாகக் கிராம பரிபாலனத்தை நடத்தினார்கள் என்று அறிகிறோம். ஆதியில் இந்தக் கிராமத்தலைவர்கள் தலைமைப் பதவியை எவ்வாறு அடைந்தார்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. பிற்காலத்தில் கிராமத்திலிருந்த ஆண்கள் தங்களுக்குள் ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கும் வழக்கம் ஏற்பட்டது. அதுபோலவே ஆரம்பத்திலும் நடந்திருக்கும் என்று நினைக்கலாம். நாளடைவில் நடைமுறையில் கிராமத்தலைவர்கள் பதவி பரம்பரையாக வரத்தொடங்கியது. கிராமத்து விஷயங்களைக் கவனிப்பதிலும், குற்றவாளிகளைத் தண்டிக்கும் வேலையிலும் கிராமத்

* இந்த முறைதான் தென்னிந்தியாவில் பொதுவாக அனுசரிக்கப்பட்ட முறை என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் டாக்டர் அப்பாதுரை என்ற அறிஞர் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ள மறுக்கிறார். இந்த முறை தென்னிந்தியாவின் மிகச் சில பகுதிகளில்தான் இருந்தது என்றும், மற்றைய பெரும்பாலான பகுதிகளில் வட இந்தியாவிலிருந்த கிராம பரிபாலன முறைதான் அனுசரிக்கப்பட்டது என்றும் அவர் கருதுகிறார். இந்த விஷயத்தில் முடிவான அபிப்பிராயம் கூறுவதற்கு இன்னும் அதிக ஆராய்ச்சி அவசியம்.

தலைவனுக்கு எத்தகைய அதிகாரம் இருந்தது என்று நமக்குத் தெரியவில்லை. அரசனுடைய அதிகாரத்திற்குப் பாதகம் ஏற்படாதவரையில் கிராமத் தலைவனும், கிராமத்திலுள்ள மற்ற ஆண்மக்களும் சேர்ந்து கிராமத்திற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் தங்கள் இஷ்டம்போல் நடத்தினார்கள் என்று நினைக்கலாம். ஆனால் இந்த அபிப்பிராயத்திற்கும் போதுமான ஆதாரம் இன்னும் கிடைக்கவில்லை.

இந்தியாவில் பல மதங்கள் இருந்தபோதிலும், பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவிலுமிருந்த பெரும்பான்மையான மக்கள் இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். காடுகளிலும் மலைகளிலும் வாழ்ந்த மக்கள் மரங்கள் முதலிய இயற்கைப் பொருள்களை வணங்கினார்கள். இன்றைக்கும் அத்தகைய மக்கள் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தொகை மிகச்சிறியது. கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய மக்களின் தொகையும் மிகச் சிறியது. அவர்கள் இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரையில் இருந்தார்கள். முகமதிய ஆதிக்கம் சிந்துநாட்டுடன் நின்றுவிட்டது. முக்கியமான துறைமுகப் பட்டினங்களுள் ஒரு சில முகமதிய வியாபாரிகள் இருந்தார்கள். ஆனால் அவர்களுடைய தொகையும் மிகமிகச் சிறியது. பார்சிகள் மேற்குக் கடற்கரையில் வசித்தார்கள். அவர்களுக்கும் மற்றைய மக்களுக்கும் அதிகத் தொடர்பு கிடையாது. மலையாளத்தில் சில நூற்றாண்டுக் காலமாக வசித்து வந்த யூதர்களும் பார்சிகளைப் போலத்தான் இருந்தார்கள். இந்தியாவின் சில பகுதிகளில்—முக்கியமாக மத்தியப் பிரதேசத்தில்—சமணர்கள் இருந்தார்கள், பால வம்சத்தினரின் ஆட்சிக்குட்பட்ட வங்காளத்தையும் பீகாரையும் தவிர வேறு இடங்களில் பௌத்தர்கள் இல்லை என்றே கூறலாம்.

இந்து அரசர்கள் பௌத்தர்களைத் துன்புறுத்தியதால் தான் புத்தமதம் இந்தியாவில் அழிந்துபோயிற்று என்று சிலர் கூறும் கூற்றுக்கு ஆதாரம் இல்லை. சில சமயங்களில், சில இடங்களில், பௌத்தர்கள் துன்புறுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அதனால் தான் புத்தமதம் அழிந்தது என்று கூறுவது பொருந்தாது. புத்தமதம் இந்தியாவில் அழிந்துபோனதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. ஆதி புத்தமதத்தில் கடவுளுக்கும், புரோகிதர்களுக்கும் இடமில்லை. மனிதன் தன் சொந்த முயற்சியால் பிறப்பு இறப்பு என்ற சுழலிலிருந்து விடுபட்டு நிர்வாண நிலையை எய்த முடியும் என்று புத்தமதம் போதித்தது. ஆனால் நாளடைவில்

புத்தரே கடவுளாக மாறிவிட்டார். அவருக்குக் கீழ்ப்பட்ட பல தேவதைகள் தோன்றின. அவருக்கு வழிபாடு நடத்தப் பிட்சுக்கள் அல்லது புரோகிதர்கள் ஏற்பட்டார்கள். அதே சமயத்தில் இந்து மதத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. பல கடவுட் கொள்கைக்குப் பதிலாக ஏறக்குறைய ஒரு கடவுட் கொள்கை வளர்ச்சி பெற்றுவிட்டது என்று பதினுன்காம் அதிகாரத்திற் பார்த்தோம். ஆகவே சாதாரண மக்கள் சிவன், விஷ்ணு, புத்தன் என்ற மூன்று பெரிய தெய்வங்கள் இருப்பதைப் பார்த்து அவரவர்களுக் கிஷ்டமான தெய்வத்தினிடத்தில் பக்தி செலுத்த ஆரம்பித்தார்கள். சடங்குகளில் மாத்திரம் சில வேறுபாடுகள் இருந்தனவே தவிர, அடிப்படையில் இந்த மூன்று தெய்வங்களும் சாதாரண மக்கள் மனத்திற்கு ஒரே மாதிரியாகத்தான் தோன்றின. மேலும் சிற்பக்கலையும் இந்து மதத்திற்கும், பௌத்த மதத்திற்கும் இருந்த பொதுத் தன்மைகளை அதிகப்படுத்தியது. பௌத்தச் சிற்பங்களில் புத்தரைச் சூழ்ந்து பல இந்துமத தெய்வங்கள் நிற்பதைப் பார்க்கிறோம். இதைப் பார்த்த சாதாரண மக்களுக்கு இந்து மதத்தின் பல தெய்வங்களுக்கும் புத்தரின் உத்தரவுப்படி நடக்கும் பல தேவதைகளுக்கும் வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. அதுவுமன்றி, வைணவர்கள் இராமனையும் கிருஷ்ணனையும்போல் புத்தரையும் விஷ்ணுவின் ஓர் அவதாரமென்று ஒத்துக்கொண்டார்கள். இவ்வாறு புத்த மதம் இந்துமதத்திற் கலந்துவிட்டது என்று கூறலாம்.

மேலே கூறியவற்றிலிருந்து அடிப்படையில் ஒன்றையொன்று ஒத்த மூன்று மதங்கள் இந்தியாவில் ஒரே சமயத்தில் இருந்தன என்று அறிகிறோம். ஆகவே, அரசர்கள் எந்த மதத்திற்குத் தங்கள் ஆதரவை அளித்தார்களோ அந்த மதம் பொது மக்களிடையிலும் மிகுதியாகப் பரவுமென்பது வெளிப்படை. முதலில், புத்தமதத்தை வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இருந்த பல பெரிய அரசர்கள் ஆதரித்தார்கள். ஹர்ஷன் புத்தமதத்திற்களித்த ஆதரவால் பெருவாரியான புத்த பிட்சுக்கள் கன்னோசியிற் குடியேறினுர்கள் என்று நாம் அறிகிறோம். ஹர்ஷனுக்குப் பின் புத்தமதத்தைப் பெரிய அரசர்கள் யாரும் ஆதரிக்கவில்லை என்று சொல்லலாம். ஆனால் பாலவம்சத்து அரசர்கள் மாத்திரம் புத்தமதத்தில் மிகுந்த ஆர்வமுடையவர்களா யிருந்தார்கள். அதனுல் புத்தமதப் பிரசாரத்தில் ஈடுபட்ட பிட்சுக்களெல்லாம் வங்காளத்திற்கும், பீகாருக்கும் சென்றுவிட்டார்களன்றும், இந்தியாவின் மற்ற பாகங்களிலிருந்த இராஜபுத்திர அரசர்கள் அளித்த

ஆதரவால் அங்கெல்லாம் சைவமும், வைணவமும் தழைத்தோங்கின என்றும் நினைக்கலாம். அந்தக் காலத்து நூல்கள் அரசனைத் தெய்வமாகவே மதிக்கின்றன. அரசன் மனித உருவில் வந்த கடவுள். இவ்வாறு அரசனைக் கடவுள் என்று கூறுவதன் மூலம் அரச பதவிக்கிருந்த அதிகாரத்தை அந்த நூலாசிரியர்கள் மிக உயர்த்திவிட்டார்கள். அதனால், அரசன் ஆணையை மீறிய குடிகள் கடவுளுக்கே துரோகம் செய்தவர்கள் ஆவார்கள். அரசர்களுக்கு பிராமணர்களே மந்திரிகளாயிருந்தார்கள். அவர்களும் தெய்வங்களின் சந்ததிகள். ஆகவே குடிகளுக்கு அவர்களிடத்திலும் பக்தியிருப்பது அவசியம். எனவே, குடிகள் அரசனிடத்திலும் அவன் மந்திரிகளிடத்திலும் பயபக்தி விசுவாசத்துடன் நடக்கவேண்டும் என்ற கொள்கையை அந்தக் காலத்து நூல்கள் வற்புறுத்தின. இத்தகைய கொள்கைகளுக்குப் புத்தமதத்தைக் காட்டிலும் இந்து மதத்தில்தான் அதிக இடமிருந்தது. ஆகவே தங்களுடைய அதிகாரத்தை அதிகப்படுத்த விரும்பிய அரசர்களும் அவர்களுடைய பிராமண மந்திரிகளும் புத்தமதத்திற்கு ஆதரவளிக்காமல் இந்துமதத்திற்கு ஆதரவளித்தது இயல்பே.

மேலும் அந்தக்காலத்து நூல்களை ஆராய்ந்தால், துறவிகளின் கெட்ட நடத்தை புத்தமதத்தின் அழிவிற்கு ஒரு காரணமாயிருந்திருக்கும் என்ற எண்ணம் தோன்றும். தொடக்கத்திலிருந்தே பௌத்த மடங்களில் பிட்சுக்களும், பிட்சுணிகளும் வசித்தார்கள். குடும்ப பாரத்தை விரும்பாத பெண்களெல்லாம் புத்தமதத்திற் சேர்ந்து பிட்சுணிகளாக மாறித் தங்களிஷ்டம்போல் வாழ்வது எளிதாக இருந்தது. ஆகவே புத்தமதத்தால் சமூக வாழ்க்கையின் அடிப்படையே தகர்ந்துவிடக்கூடும் என்ற பயம் பொது மக்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, அந்த மதத்தில் அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்தால் அதில் ஆச்சரியமில்லை.

மேலே கூறியவற்றிலிருந்து சாதாரண மக்கள் புத்தமதத்தை விட இந்து மதத்தையே அதிகமாக விரும்புவதற்கு ஏற்ற சூழ்நிலை அந்தக்காலத்து இந்தியாவில் இருந்தது என்று தெரிகிறது. மிகத் தாழ்ந்த நிலையிலிருந்த பாமரமக்கள் புத்தமதத்தின் கொள்கைகளுக்கும் இந்துமதத்தின் கொள்கைகளுக்கும் இருந்த வேறுபாடுகளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. அவர்கள் நம்பிக்கை எல்லாம் மந்திர தந்திரங்களிலேயே லயித்துவிட்டது. அறிவாளிகளுக்கும் மத வேறுபாடுகளைப்பற்றிக் கவலையில்லை. அவர்கள் உயர்ந்த தத்துவ விசாரணையில் ஈடுபட்டார்கள். உயிர், உலகம், கடவுள் ஆகியவற்றின் தன்மைகளையும், அவற்றிற்குள்ள தொடர்

புகளையும் பற்றி அவர்கள் ஆராய்ச்சி செய்தார்கள். அவர்கள் வியக்கத்தக்க நுண்ணறிவு படைத்தவர்கள். அவர்களுடைய தர்க்கங்கள் அவர்களுடைய அசாதாரணமான அறிவைக் காட்டின. ஆனால் அவர்களுட் சிலர் வேதாந்த விசாரணையில் ஈடுபட்டபோதிலும், சாதாரண மக்கள் அன்றாட வாழ்க்கையில் அனுசரிப்பதற்கேற்ற மதக் கோட்பாடுகளைப் பற்றியும் சிந்தித்தார்கள். அத்தகைய பெரியார்களில் சங்கராசாரியார் ஒருவர். அவர் அத்வைதக் கொள்கையை நிலை நாட்டினவர். அத்துடன் அவர் இந்துக்கள் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கேற்ற மதக்கோட்பாடுகளையும் போதித்தார். இதனால் சிக்கலான தத்துவ விசாரணையில் ஈடுபட்ட சிந்தனையாளர்கள் கூட அந்தக்காலத்தில் இந்துமதத்திற்குத்தான் ஆதரவளித்தார்கள் என்பது தெரிகிறது.

ஆகவே பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் புத்தமதத்தின் ஆதிக்கம் வங்காளம், பீகார், ஆகிய நாடுகளோடு நின்றுவிட்டது என்றும் இந்தியாவின் மற்ற பகுதிகளில் இந்துமதமே ஓங்கியிருந்தது என்றும் நாம் முடிவு செய்யலாம். இந்து மதத்திலும் ஏறக்குறைய ஒரே அந்தஸ்துடைய பல தெய்வங்களுக்குப் பதிலாக ஒப்பற்ற ஒரு கடவுள் இருக்கிறார், அந்தக் கடவுளுக்கு மற்றத் தெய்வங்கள் கீழ்ப்பட்டவை என்ற கொள்கை நிலைபெற்றுவிட்டது. அந்தக் கடவுளுடன் மனிதன் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ளலாம். அந்தத் தொடர்பு பக்தியின் மூலமாகத்தான் ஏற்படும். யாரொருவன் கடவுளிடத்தில் உண்மையான பக்தியுடையவனாக இருக்கிறானோ அவனுக்குக் கடவுள் நிச்சயமாகக் கருணை புரிவார் என்ற கொள்கையை முதல் முதலாக உருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறியவர் இராமாநுஜாசாரியார். அவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் போதித்த மார்க்கத்திற்கும், கிறிஸ்துவ மதத்தின் அடிப்படைக் கொள்கைக்கும் வேறுபாடே கிடையாது. ஆகவே இராமாநுஜாசாரியார் கிறிஸ்துவர்களிடமிருந்துதான் இந்தக் கொள்கையைத் தெரிந்துகொண்டார் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அவர் தமிழ்நாட்டில் வாழ்ந்தவர். அந்தக் காலத்தில் இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் கிறிஸ்தவர்கள் இருந்தார்களென்று முன்னரே கூறினோம். ஆகவே கிறிஸ்துவ மதக்கொள்கைகளை இராமாநுஜாசாரியார் அறிந்துகொள்வதற்கு வசதியிருந்தது என்று அந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்தைப் பலர் ஒத்துக்கொள்ளுவதில்லை. பக்தி மார்க்கம் மகாபாரதத்தின் ஒரு பகுதியான பகவத்கீதையிலேயே கூறப்பட்

டிருக்கிறது. மகா பாரதம் எப்போது எழுதப்பட்டது என்று நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், அந்த நூல் குப்தர் காலத்தில் இருந்தது என்பது உறுதியாகத் தெரிந்த விஷயம். பக்தி மார்க்கம் கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்னர் எழுதப்பட்ட இந்துமத நூல்களிலேயே கூறப்பட்டிருக்கிறது என்று சில ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் ரிக்வேதத்திலேயே பக்திமார்க்கத்தின் அடிப்படைக் கருத்து இருக்கிறதென்று கூறுகிறார்கள். மேலும் இராமாநுஜாசாரியாருக்கும், கிறிஸ்தவர்களுக்கும் நேரடியான தொடர்பு இருந்தது என்று கூறுவதற்கு ஆதாரமே ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்களுடைய கொள்கைகளைப்பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கலாம் என்றும், அதனால் அவருடைய கருத்துக்கள் வளர்ச்சியடைந்திருக்கலாம் என்றும் ஒத்துக்கொண்டாலுங்கூட பக்தி மார்கத்தின் அடிப்படைக் கருத்து இந்தியாவிலேயே தோன்றியதுதான் என்று கூறலாம். பக்தி மார்க்கம் எவ்வாறு இந்தியாவிற் பரவிற்று என்பதைப் பற்றிப் பின்னர்ப் படிப்போம். இப்போது இராமாநுஜர் போதித்த பக்தி மார்க்கம் எத்தகையது என்பதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுகிறோம். கடவுள் என்பவர் ஒப்பற்ற பரம்பொருள். அவர் எல்லையற்ற ஆற்றல் படைத்தவர்; ஆனால், அவ்வாற்றலை மக்களின் நன்மைக்கே பயன்படுத்துகிறார். மக்களை அவர்கள் செய்யும் பாவங்களிலிருந்து விடுவித்து, அவர்களுடைய துன்பத்தைப் போக்கி, அவர்களுக்கு மோட்சத்தை யளிப்பதற்காக அன்பின் உருவான கடவுள் பல அவதாரங்களை எடுக்கிறார். யாராயிருந்தாலும் உண்மையான பக்தியுடையவர்களுக்கு பகவான் நிச்சயமாகக் கருணை செய்கிறார். இதுவே இராமாநுஜர் போதித்த கொள்கை. இதற்கும் கிறிஸ்துவ மதத்தின் அடிப்படைக் கொள்கைக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது? கடவுள் மனிதன்மீது வைத்த அன்பால் அவனுக்கு அருள்புரிகிறார்; மனிதன் கடவுள்மீது வைத்த அன்பால் அவரை பக்தியுடன் வழிபடுகிறான். இதுதானே கிறிஸ்துவ மதக் கொள்கையும்?

இராமாநுஜர் மகாவிஷ்ணுவே ஒப்பற்ற பரம்பொருள் என்று கூறினார். அதுபோலவே சைவர்கள் சிவனை ஒப்பற்ற பரம்பொருள் என வழிபட்டனர். ஆகையால், சைவசமயத்தின் அடிப்படைக்கொள்கைகளை இங்குச் சுருக்கமாகக் கூறுவதும் அவசியம். ஆன்மா பாசத்தாற் பிணிக்கப்பட்டிருக்கிறது. பாசம் மூன்று வகைப்படும் அவை, ஆணவம், மாயை, கர்மம் என்ற மும்மலங்கள். ஆனால், கடவுள் தம்முடைய எல்லையற்ற கருணையால் ஆன்மா பாச பந்தங்களிலிருந்து விடுபட்டுத் தம்முடன் இரண்டறக்கலந்து

பேரின்பமடைய வேண்டுமென்று விரும்புகிறார். அதற்காக அவர் ஆன்மாவிற்குப் பிறவியைக் கொடுக்கிறார். மனிதப் பிறவியின் மூலமாக ஆன்மா பேரின்ப நிலை எய்துவதற்கு வழி தேடிக்கொள்ளுகிறது. மனிதன் உலக வாழ்க்கையில் செய்கிற தீவினைகளுக்கு நல்வினைகளால் கழுவாய் தேடிக்கொண்ட பிறகு கடவுள் தம்முடைய கருணையால் ஆன்மாவைப் பிணித்துக்கொண்டிருக்கும் பாசத்தளையை அறுத்துவிடுகிறார். அதன்பின் உயிர் இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பமடைகிறது. ஹர்ஷர் காலத்திற்கும் துருக்கியர் வருகைக்கும் இடையிலுள்ள காலத்தில் இத்தகைய கொள்கைகள் இந்துமதத்தில் வளர்ந்துகொண்டு வந்தன என்று அறிகிறோம்.

ஆனால், பத்தாம் நூற்றாண்டில் பக்திமார்க்கத்தை இந்தியாவிலிருந்த எல்லா மக்களும் அறிந்திருந்தார்களென்றோ, நடைமுறையில் கடைப்பிடித்தார்களென்றோ எண்ணிவிடக்கூடாது. இந்தக் கொள்கை இந்து மதத்தில் இடம்பெற்றுவிட்டது என்பது உண்மைதான் எனினும் அது மக்களிடையே அதிகமாக அப்போது பரவவில்லை. யாகங்களால் கடவுள் கருணையைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் இன்னும் கைவிடவில்லை என்று நினைக்க இடமிருக்கிறது. பிராமணன் தன் மந்திரசக்தியால் கடவுளுடைய கருணையைச் சம்பாதித்துக் கொடுப்பான் என்ற உறுதியான நம்பிக்கை பாமரமக்களுடைய மனத்தைவிட்டு இன்னும் நீங்கவில்லை. எனினும், இந்த நம்பிக்கை மக்களுடைய மதவேட்கையைத் தணிக்காததால் அவர்கள் அதைக்கடந்து திருப்தியை நாடி ஏதோ ஓர் உயர்ந்த பொருளைத் தேடிச்சென்று கொண்டிருந்தார்களென்பது நன்றாகத் தெரிகிறது. பிற்காலத்தில் பல பெரியார்களால் நல்ல முறையில் போதிக்கப்பட்ட பக்திமார்க்கம் அவர்கள் நாடிய திருப்தியை அவர்களுக்களிக்கவிருந்தது.

இலக்கியம், கலை ஆகிய துறைகளில் புதிய கருத்துக்கள் ஒன்றும் தோன்றவில்லை. நாம் முன்னர்க் கூறியதுபோல், பழைய கருத்துக்களே புதிய ஒழுங்குடன் கையாளப்பட்டன. குப்தர் காலத்திற்குப் பின்னரும் ஸம்ஸ்கிருதத்தில் சிறந்த நூல்கள் தோன்றிக்கொண்டுதான் இருந்தன. எனினும் குப்தர் காலத்து நூல்களிலிருந்த புதுமையும் இயற்கைப் பொலிவும் இந்த நூல்களில் இல்லை. இந்தக் காலத்து நூல்களில் செயற்கைக் கட்டுப்பாடுகள் அதிகமாக இருந்தன. சம்பிரதாயங்களும், விதிகளும்

இலக்கியத்தின் அழகையும், வளர்ச்சியையும் கட்டுப்படுத்தின. குப்தர் காலத்து நூல்களில் சொற்கள் அழகாகக் கையாளப்பட்டிருக்கின்றன என்றும், அதற்குப் பிறகாலத்து நூல்களில் சொற்கள் மிகுந்த சாமர்த்தியமாகக் கையாளப்பட்டிருக்கின்றன என்றும் கூறலாம். பேச்சு வழக்கிலிருந்த மொழிகளிலும் சாதாரண மக்கள் படித்துச் சுவைக்கக்கூடிய நூல்கள் சில தோன்றின, ஆனால் அவற்றுள் வெகு சிலவே நமக்குக் கிடைத்திருப்பதால் அவற்றின் தன்மைகளைப்பற்றி நாம் ஒன்றும் கூறமுடியாது. அந்தக்காலத்து ஓவியங்களும் அதிகமாக நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ஓவியக்கலையின் தன்மையைப் பற்றியும் நாம் ஒன்றும் சொல்லமுடியாது. ஆனால் அந்தக்கலையின் வளர்ச்சி சிற்பக்கலையின் வளர்ச்சியை ஒத்ததாய் இருந்தது என்று நினைக்க இடமிருக்கிறது. முற்காலத்துச் சிற்பக்கலை செயற்கைக் கட்டுப்பாடுகளின்றி, பௌத்த சமண மதங்களின் கதையை எளிய இனிய உருக்கமான முறையில் கல்லுருவங்களிற் காட்டியது. ஆனால் குப்தர் காலத்துக்குப் பிற்பட்ட சிற்பிகள் இந்துமதத்தின் தத்துவங்களைக் கல்லிற் செதுக்க முயன்றார்கள். இந்த மாறுதலைப் பற்றி இருவகைக் கருத்துக்களிருக்கின்றன. சிலர் இது கலையின் வளர்ச்சியைக் காட்டுகிறதென்று கருதுகிறார்கள். வேறு சிலர் இந்தப் புதிய கலையில் உண்மை யழகுக்குப் பதிலாகச் செயற்கைக் கட்டுப்பாடுகளே அதிகமாக இருக்கின்றன என்றும், இந்தக் கட்டுப்பாடுகளின் பிடியில் அகப்பட்டுக்கொண்ட கலை வளரமுடியாது என்றும் கருதுகிறார்கள்.

கட்டிடக் கலையைப்பற்றி இத்தகைய கருத்து வேறுபாடு ஒன்றும் இல்லை. இன்றுவரையில் அழியாமலிருக்கும் கட்டிடங்களெல்லாம் கோயில்களாகவே இருக்கின்றன. அந்தக் காலத்து அரசர்கள் கோயில்களைக் கட்டுவதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாயிருந்தார்களென்பது தெளிவாகத் தெரிகிறது. ஆகவே பல அழகிய கோயில்கள் கட்டப்பட்டன. இந்தக் கோயில்களில் நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவ்வளவு அதிகமான சித்திர வேலைப்பாடுகள் இருப்பது கட்டிடத்தின் அடிப்படை அமைப்பின் அழகை மறைக்கிறது என்று சில மேல்நாட்டு அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆனால், இந்தக் கட்டிடங்கள் சிலவற்றில் பருமையும், நுண்மையும் ஒன்றாக இயைந்து, உள்ளத்தைக் கவரும் ஒப்பற்ற அழகாகக் காட்சியளிப்பதை எல்லோரும் வியந்து போற்றுகிறார்கள். முகமதியர்களுடைய கண்ணுக்குத் தப்பிய இத்தகைய அழகிய

கோயில்கள் இந்தியாவின் பலவேறு பாகங்களிற் காணப்படுகின்றன. வடக்கேயிருக்கும் மார்த்தாண்ட ஆலயம் எட்டாம் நூற்றுண்டில் காஷ்மீரத்தில் ஆட்சிசெய்த அரசர்களின் கலையுணர்ச்சிக்குக் அழியாத சான்றுகக் காட்சியளிக்கின்றது. கஜுராஹோ என்ற இடத்தில் இருக்கும் கோயில்கள் பண்டில்கண்டில் பத்தாம் நூற்றுண்டிலும், பதினென்ரும் நூற்றுண்டிலும் ஆட்சி செய்த சாந்தல் வம்சத்து அரசர்களின் பெருமையைக் காட்டுகின்றன. தட்சிணத்தில் ஆட்சி செய்த ராதார் வம்சத்து அரசர்களின் கீர்த்தி எல்லோரா என்ற இடத்திலுள்ள கைலாசநாதர் கோயிலின்மூலம் அழிவின்றி நிலைபெற்றுவிட்டது. காஞ்சீபுரத்திலிருக்கும் ஏகாம்ரேசுவரர் கோவிலும், தஞ்சை பிருகதீசுவரர் கோயிலும் முறையே பல்லவர்களுடைய பெருமையையும், சோழர்களுடைய பண்பாட்டையும் விளக்கும் ஒப்பற்ற சின்னங்களாக இருக்கின்றன. முகமதியர்களுடைய கொடுமையாலும், இயற்கைக் காரணங்களாலும் எவ்வளவு அழகிய கோயில்கள் அழிந்தனவோ யாருக்குத் தெரியும்? அவ்வாறு அழிந்ததுபோக எஞ்சியிருக்கும் கலைச்செல்வங்களைப் பார்க்கும்போது, அந்தக் காலத்தில் இந்துமதத்திற்குச் சிறந்த ஆதரவு இருந்தது என்பதும், அதன் உயர்வை நிலைநாட்டுவதற்காக அரசர்கள் பணத்தை வாரி இறைத்தார்களென்பதும், கலைஞர்கள் தங்கள் முழுத்திறமையையும் பயன்படுத்தினுர்கள் என்பதும் எளிதில் விளங்கும்.

அந்தக் காலத்துச் சமூக நிலைமையைப்பற்றி நாம் முழு விவரங்களையும் அறிந்துகொள்ள முடியவில்லை. எனினும், புத்த மதத்தின் சிறப்பு மங்கிக்கொண்டு வந்தது என்பதும், இந்து மதத்தின் சிறப்பு ஓங்கிக்கொண்டுவந்தது என்பதும் உறுதியாகத் தெரிந்த விஷயங்கள். புத்தமதத்தில் சாதி வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆனுல் இந்துமதத்திற்கு அதுவே அடிப்படை. ஆகையால் அந்தக்காலத்தில் சாதிவேறுபாடுகள் அதிகரித்துக்கொண்டு வந்தன என்பது நாம் ஒத்துக்கொள்ளககூடிய விஷயம். அந்தக் காலத்து மக்கள் வாழ்க்கையைப்பற்றி ஓரளவு அறிந்துகொள்ளுவதற்கு நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களில் தலைசிறந்தது "கதாசரித்சாகரம்" என்ற ஒரு நூல். இது காஷ்மீரத்தில் பதினென்ரும் நூற்றுண்டில் தொகுக்கப்பட்டது. இந்த நூலில் இருக்கும் கதைகளில் கூறப்படும் சம்பவங்கள் சிலவற்றின்மூலம் அந்தக் காலத்தில் சாதிக்கட்டுப்பாடுகள் அவ்வளவு கடுமையாக இல்லை என்பது விளங்குகிறது. பிற்காலத்தில் ஒவ்வொரு சாதியிலும் பல உட்பிரிவுகள் தோன்றின. ஓர் உட்பிரிவைச் சேர்ந்த

வர்கள் அதே உட்பிரிவில்தான் மணம் செய்துகொள்ளவேண்டும் என்ற கடுமையான கட்டுப்பாடும் ஏற்பட்டது. ஆனால் அந்தக் காலத்தில் இந்த விதி ஏற்படவில்லை என்பது கதாசரித்சாகரத்திலிருந்து தெரிகிறது. மேலும், சில சமயங்களில் மேற்சாதியைச் சேர்ந்த ஒருவன் கீழ்ச்சாதியைச் சேர்ந்த பெண்ணை மணம்செய்து கொள்ளும் பழக்கமும் இருந்தது. பிராமணர்கள் எத்தகைய தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம். திரைகடலோடித் திரவியம் தேடுவதற்கு வியாபாரிகள் தாராளமாகச் சென்றார்கள். கடல்கடந்து செல்லுதல் இந்துமதத்திற்கு விரோதமானது என்ற கொள்கை பிற்காலத்தில்தான் ஏற்பட்டது.

பெண்கள் அந்நியர் கண்ணிற் படாமல் வீட்டுக்குள்ளேயே இருக்கும் வழக்கம் அந்தக் காலத்தில் இல்லை. ஆனால் உயர் வகுப்பைச் சேர்ந்த மாதர்கள் சாதாரணமாக வெளியே வரமாட்டார்கள். மேலும் கதாசரித்சாகரத்திலிருக்கும் ஒரு கதையில் வரும் கதா பாத்திரங்களில் ஒருவன் பெண்கள் பிறர் கண்ணிற் படாமல் வீட்டுக்குள் இருக்கும் பழக்கத்தை உபயோகமற்றது என்று கண்டிக்கிறான். இதிலிருந்து அந்த வழக்கம் ஒரு சிலரிடத்தில் இருந்திருக்கும் என்று நம்பலாம். ஒருவன் பல பெண்களை மணந்துகொள்ளும் வழக்கம் அந்தக் காலத்திலிருந்தது. ஆனால் பெரும்பாலும் இந்த வழக்கம் அரச குடும்பங்களில்தானிருந்தது. சாதாரண மக்கள் பல மனைவிகளை வைத்துக் காப்பாற்ற முடியாது என்ற காரணத்தால்தான் அவர்கள் சாதாரணமாகப் பல மனைவிகளை மணந்துகொள்ளவில்லை என்று கூறப்படுகிறது. குழந்தை மணங்களும் நிகழ்ந்தன. அந்த முறையை அனுசரித்தல் நல்லது என்றும் சில சமயங்களில் கூறப்பட்டது. ஆனால் அந்தப்பழக்கம் சாதாரணமாக அனுசரிக்கப்படவில்லை என்று கதாசரித்சாகரத்தின் மூலம் அறிகிறோம். உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்தது என்றாலும், கணவனை இழந்த ஒவ்வொரு பெண்ணும் அவ்வாறுதான் செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. விதவா விவாகத்திற்கு ஆட்சேபனை கிடையாது. பெண்கள் பாட்டும் கூத்தும் பயின்றார்கள். அரச மாளிகைகளில் சித்திரசாலைகள் இருந்தன. பொதுவாகக் கூறுமிடத்து, அந்தக் கால மக்கள் பண்பட்ட வாழ்க்கை நடத்தினார்கள் என்று தெரிகிறது. கதாசரித்சாகரத்தில் விலைமாதர்கள் பலர் கதாபாத்திரங்களாக வருகிறார்கள். இந்திய நூல்கள் பலவற்றிலும் இவர்களைப்பற்றிப் படிக்கிறோம்.

வட இந்திய மக்கள் பெரும்பாலும் புலாலுண்ணுதவர்களாக இருந்தார்களெனினும், தற்காலத்தில் இருப்பதைவிட அந்தக் காலத்தில் புலால் உண்பவர்கள் அதிகமாக இருந்தார்களென்பது கதாசரித்சாகரத்தின் மூலம் நமக்குத் தெரிகிறது ஆனல் சாதாரண மக்கள் மாட்டிறைச்சியை உண்டதாகத் தெரியவில்லே. ஆனல், மதுபானம் செய்தல் சாதாரணமான பழக்கமாக இருந்தது. அரசகுலத்தைச் சேர்ந்த பெண்கள், கள்ளுண்டு களியாட்டயர்ந் தார்களென்று படிக்கிருேம். வெற்றிலே போடுதல் சாதாரணப் பழக்கமாக இருந்தது. ஆனல், கஞ்சா, அபினி முதலிய லாகிரி வஸ்துக்களே மக்கள் உபயோகிக்கவில்லே. இத்தகைய போதைப் பொருள்களே உபயோகிக்கும் பழக்கம் எப்போது இந்தியாவில் நுழைந்தது என்பதும் தெரியவில்லே. புகை பிடிக்கும் பழக்கமும் அந்தக்காலத்தில் கிடையாது. பதினரும் நூற்றண்டில் புகையிலே இந்தியாவுக்கு வந்தபின்னர்த்தான் இந்தப் பழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அந்தக்காலத்து மக்களின் பொருளாதார நிலேமையைப் பற்றியும் நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியவில்லே. பயிர்த் தொழிலே முக்கியத் தொழிலாக இருந்தது. நெல், கோதுமை, பார்லி, கேழ்வரகு, முதலிய தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு முதலிய உணவுப் பொருள்கள் பயிர் செய்யப்பட்டன. மேலும் சணல் முதலிய பயிர்களும், சாயப் பொருள்களும் பயிராக்கப்பட்டன. ஆனல் அந்தக்காலத்துக் குடியானவர்கள் தற்காலத்துக் குடியானவர்களேவிட உயர்ந்த நிலேயில் இருந்தார்களா தாழ்ந்த நிலேயில் இருந்தார்களா என்று நமக்குத் தெரியவில்லே. பருவமழை பெய்யாவிட்டால் நாட்டில் பஞ்சம் ஏற்படும். நீர்ப்பாசன வசதிகளேச் செய்துகொடுக்கும் அரசர்கள் பெரிதும் போற்றப்பட்டார்கள். விளேவின் எத்தனேயில் ஒரு பங்கைக் குடியானவர்கள் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்திஞர்களென்று நிச்சயமாகத் தெரியவில்லே. விளேவில் ஆறில் ஒருபங்குதான் அரசனுக்குச் சேரவேண்டும் என்று தர்ம சாஸ்திரங்களிற் கூறப்படுகிறது. அவசியமான காலங்களில் அதைவிட அதிகமாகவும் அரசன் எடுத்துக்கொள்ளலாம். வழக்கமான நிலவரியோடு வேறு வரிகளேயும் குடியானவர்கள்மீது விதிக்கும் பழக்கம் அந்தக்காலத்திலேயே வேரூன்றிவிட்டது. ஆறில் ஒரு பங்குக்கு அதிகமாகவே அரசன் வசூலித்தான் என்று தென்னிந்தியாவிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சாசனங்களின் மூலமாக அறிகிருேம். ஆனல், இந்த விஷயத்தில் யாவரும் ஒத்துக்

கொள்ளக்கூடிய பொதுவான தீர்மானத்திற்கு வருவதற்குப் போதுமான ஆதாரம் இன்னும் கிடைக்கவில்லை. வட இந்தியா வில் நிலைமை எவ்வாறு இருந்தது என்று அறிந்துகொள்வதற்கு ஒருவித ஆதாரமும் அகப்படவில்லை. முதலில் வந்த முகமதியர் கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்களின் மூலம் வட இந்தியக் குடியானவர்கள் விளைவில் மூன்றில் ஒரு பாகத்தையும் சிலசமயங் களில் இரண்டில் ஒரு பாகத்தையும் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தினார்கள் என்று அறியலாம். எது எப்படியாயினும் அரசர்கள் ஆறில் ஒரு பங்குக்கு அதிகமாகத்தான் வரி வசூலித் தார்கள் என்பது நிச்சயம்.

குடியானவர்கள் நிலவரியைத் தானியமாகச் செலுத்தினார் களா அல்லது பணமாகச் செலுத்தினார்களா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. பல நூற்றாண்டுகளாகவே இந்தியாவில் நாணயச் செலவாணி இருந்தது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். எனினும், நாணயங்கள் கிராமங்களில் எவ்வளவு தூரம் உபயோ கப் படுத்தப்பட்டன என்பது சரியாக விளங்கவில்லை. தென்னிந்தி யாவில் நிலவரியில் ஒரு பகுதி தானியமாகவும், ஒருபகுதி பண மாகவும் செலுத்தப்பட்டது என்று சாசனங்களின் மூலம் அறிகி றோம். ஆகவே, தென்னிந்தியாவில் நகரங்களில் மாத்திரமின்றிக் கிராமங்களிலும் பணப்பழக்கம் ஏற்பட்டுவிட்டது என்பது தெரி கிறது. வட இந்தியாவிலும் பணம் பழக்கத்திலிருந்தது. ஆனால் இதைப்பற்றி நிச்சயமான முடிவுக்கு வருவதற்கு இன்னும் அதிக மான ஆராய்ச்சி அவசியம். மேலே கூறியவற்றிலிருந்து பின் வரும் விஷயங்களை ஓரளவு நிச்சயமாகக் கூறலாம். இந்தியாவில் நாணயச் செலவாணி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. பணப்பழக்கம் சில பகுதிகளில் அதிகமாகவும், வேறு சில பகுதிகளில் குறைவாகவும் இருந்தது. பணப்பழக்கம் அதிக மாக இருந்த பகுதிகளில் வாழ்ந்த குடியானவர்கள் தங்கள் விளை வில் பெரும்பகுதியை விற்று வரிசெலுத்தவேண்டி யிருந்தது. அதனால் அறுவடைக் காலத்தில் தானியங்களின் விலை மிகக் குறைந்தது.

கிராமங்களிலிருந்த கூலியாட்களின் நிலைமையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. நகரங்களில் வீட்டுவேலை செய்வதில் ஈடுபட்ட தொழிலாளிகள் அடிமைகளாகத்தான் இருந்தார்கள். ஆனால் கிராமங்களில் பயிர்த்தொழிலில் ஈடுபட்ட கூலியாட்கள் அடிமைகளாக இருந்தார்கள் என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. அவசியமான காலங்களில் கிராமத்தில் வாழ்ந்த மக்களிடம்

அரசாங்கம் கட்டாய வேலை வாங்கும் வழக்கம் இருந்ததென்று சாசனங்களின் மூலம் அறிகிறோம். இந்தியாவின் பல வேறு பகுதிகளிலும் இந்த முறை எவ்வளவு தூரம் கையாளப்பட்டது என்பதைப்பற்றி நமக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் இமய மலைப்பிரதேசத்தில் பொருள்களைத் தூக்கிச் செல்வதற்கு இத் தகைய முறை அதிகமாகக் கையாளப்பட்டது என்று தெரிகிறது. ஏனெனில் அங்குச் சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற் குக் கொண்டுபோவதற்கு விலங்குகள் அதிகமாகப் பயன்படா. அந்த வேலையை மனிதர்கள் தான் செய்யமுடியும். கைத்தொழில் களைப்பற்றிய விஷயங்களும் நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. பருத்தி நெசவு நாட்டின் பல பாகங்களிலும் நடந்து வந்தது. அதைத் தவிர வேறு சில தொழில்களும் இருந்தன. ஆனால் அந்தத் தொழில்களில் ஈடுபட்ட மக்களின் பொருளாதார நிலை எவ்வாறிருந்தது என்று தெரியவில்லை. வியாபாரிகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் தடையின்றிச் சென்று வியாபாரம் செய்தார் கள். ஆனால், அவர்களுடைய வியாபார முறைகளும் அளவும் நமக்குச் சரியாகத் தெரியவில்லை. பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமானால் அரசாங்கத் திற்கு வரி செலுத்தவேண்டும். இதைத்தவிர வேறு வரிகளும் வியாபாரத்தின்மீது விதிக்கப்பட்டன.

கடைசியாக, புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கத்தைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது பொருத்தமாக இருக்கும். கடவுள் வழிபாட்டுக்காகத்தான் இந்த யாத்திரைகள் செய்யப்பட்டன என்பது உண்மை யெனினும், அவற்றால் சமூகப் பொருளாதாரத் துறைகளிலும் முக்கியப் பயன் கள் விளைந்திருக்கின்றன. பழங்காலத்தில் இந்துக்கள் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்யவில்லை. இந்த வழக்கம் பௌத்தர்களாலும், சமணர்களாலும்தான் ஆரம்பிக்கப்பட்டி ருக்கவேண்டும். அவர்கள் அடிக்கடி தாங்கள் மதஸ்தாபகர்களு டைய வாழ்க்கையில் சம்பந்தப்பட்டு, அதனால் புனிதமடைந்த இடங்களுக்குச் சென்று கூடுவது வழக்கம். யாத்திரைகளின் வரலாறு எப்படியிருந்தாலும், அந்தப்பழக்கத்தை நாளடைவில் இந்துக்களும் அனுசரிக்கத் தொடங்கினார்கள். காளிதாசனால் எழுதப்பட்ட நூல்களில் புண்ணிய க்ஷேத்திர யாத்திரையைப் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. கதாசரித்சாகரத்தில் இது சர்வ சாதாரணமான பழக்கம் என்று கூறப்படுகிறது. அந்த நூலில் கூறப்படும் சில இடங்கள் இன்றைக்கும் இந்துக்களுடைய

புண்ணிய க்ஷேத்திரங்களாக இருக்கின்றன. இவ்வாறு குறிக்கப்பட்ட காலங்களில் இந்தியாவின் பலவேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் சென்று புண்ணிய க்ஷேத்திரங்களிற் கூடுவார்கள். அப்போது அவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளுவார்கள். அந்தத் தொடர்பால் அவர்கள் அறிவும் அனுபவமும் விரியும். கடவுள் தரிசனத்திற்காக யாத்திரை செல்லும் இந்துக்கள் அத்துடன் மற்ற காரியங்களையும் கவனித்துக்கொள்வது வழக்கம். அந்தச்சமயத்தில் அவர்கள் பல காட்சிகளைக் கண்டு களிக்கிறார்கள். தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்கள். தங்கள் வழக்கமான வேலையிலிருந்து ஓய்வு பெறுகிறார்கள். ஆகவே புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வதின் மூலம் மக்கள் பலவகைளில் பயனடைகிறார்கள். மேலும், இந்துமதத்தின் சடங்குகளும், கொள்கைகளும், இந்தியா முழுவதிலும் ஒரே தன்மையாக இருப்பதற்கு இந்தியாவின் பலவேறு பகுதிகளிலும் வாழ்ந்த இந்துக்கள் அடிக்கடி புண்ணிய க்ஷேத்திரங்களிற் கூடியது ஒரு முக்கியமான காரணம் என்று கூறலாம்.

அதிகாரம்—19

வெளிநாட்டுத் தொடர்பு

பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இருந்த தொடர்பைப்பற்றி இந்த அதிகாரத்திற் கூறுவோம். ஆனல் இது எளிதான காரியமன்று. இந்தியா தொடர்பு வைத்துக்கொண்டிருந்த வெளி நாடுகள் மிகப் பல. மேலும் இந்தத் தொடர்புகளின் காலவரையறையைச் சரியான படி நிர்ணயிப்பது எளிதன்று. ஆகவே, சில சமயங்களில் இந்தியாவிற்கும் மற்ற நாடுகளுக்கும் பத்தாம் நூற்றுண்டிற்கு முன் இருந்த தொடர்புகளைப்பற்றியும், சில சமயங்களில் பத்தாம் நூற்றுண்டிற்குப் பின் ஏற்பட்ட தொடர்புகளைப்பற்றியும் கூற வேண்டியிருக்கும். இல்லாவிட்டால் இந்த விஷயத்தைத் தெளிவாக விளக்க முடியாது. முதலில் நாம் ஆசியாவை இரண்டாகப் பிரித்துக்கொள்வது நல்லது. ஆசியாப் படத்தில் டில்லி வழியாக —அதாவது 77-ஆம் தீர்க்க ரேகையை ஒட்டி—தெற்கு வடக்காக ஒரு கோடு கிழித்துக் கொள்ளவேண்டும். இந்தக் கோட்டிற்கு



INDIA'S
Foreign Contacts

Emery Walker Ltd. sc.

மேற்கிலுள்ள நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு பெரும்பாலும் வியாபாரத் தொடர்புதான். இந்தக் கோட்டிற்குக் கிழக்கிலுள்ள நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற் பட்டிருந்த தொடர்பு பண்பாட்டுத் தொடர்பு.

நாம் டில்லி வழியாக வரைந்துள்ள கோட்டைச் சேர்ந்தாற் போல் இந்தியாவின் வடக்கிலுள்ள பிரதேசத்தில் சீனப் பண் பாடும் முகம்மதியப் பண்பாடும் சந்தித்தன. சீனுவின் ஆதிக்கம் ஒரு காலத்தில் மேற்கில் ஆக்ஸஸ் நதிவரையிற் பரவியிருந்தது என்று நாம் முன்னேர் அதிகாரத்திற் படித்தோம். ஆனல் ஏழாம் நூற்ருண்டில் முகமதிய மதம் தோன்றியபின் சீன சாம்ராஜ்யம் சுருங்கியது. அந்த நூற்ருண்டில் அராபியர்கள் பாரசீகத்தை ஜயித்துக்கொண்டார்கள். முகமதிய மதம் வடக்கில், ருஷிய துருக் கிஸ்தானத்திலும், கிழக்கில் ஆப்கானிஸ்தானத்திலும் பரவியது. பஞ்சாபின்மீது துருக்கியர்கள் படையெடுப்பதற்கு முன்னர் இந்தியாவிற்கும், ருஷியத் துருக்கிஸ்தானத்திற்கும் தொடர்பிருந்த தாகத் தெரியவில்லை. ஆனல் ஆப்கானிஸ்தானம் அவ்வாறன்று. அந்த நாட்டின் கிழக்குப் பகுதியில் ஏறக்குறையப் பத்தாம் நூற் ருண்டின் இறுதிவரையிலும் ஓர் இந்து வம்சம் ஆட்சி செய்து வந்தது. இந்த வம்சத்தினரின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தின் மேற்கெல்லையில் அராபியர்களும் வடக்கெல்லையில் துருக்கியர் களும் ஆட்சி செய்தார்கள்.

இந்து அரசர்களின் ஆட்சிக்குட்பட்ட ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து இந்தியப் பண்பாட்டின் தன்மைகள் மேற்கிலும் வடக்கிலும் எவ்வளவு தூரம் பரவின என்று கூறுவ தற்கு நமக்கு இதுவரையில் எந்தவிதமான ஆதாரமும் கிடைக்க வில்லை. ஆனல் சிந்து நாடு கலீபாக்களின் ஆட்சியிலிருந்த காலத் தில் அந்த நாட்டிற்கும் பாக்தாதிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. கி. பி. 753-ஆம் ஆண்டு முதல் 774-ஆம் ஆண்டு வரையில் பாக்தாதில் ஆட்சி செய்த மன்சூர் என்ற கலீபாவின் காலத்திலும் அதற்குப் பிறகு 786-ஆம் ஆண்டிலிருந்து 808-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்த ஹாரூன் என்ற கலீபாவின் காலத் திலும் வானசாஸ்திரம், மருத்துவம், தத்துவம் ஆகிய விஷயங் களைப்பற்றி எழுதப்பட்டிருந்த இந்திய நூல்கள் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து அரபி மொழியில் பெயர்த்து எழுதப்பட்டன. அந்த மொழிபெயர்ப்பு நூல்களைப் படித்து அராபியர்கள் பெரிதும் பய னடைந்தார்கள் என்று தெரிகிறது. அந்த மொழிபெயர்ப்பு

வேலைக்கு உதவியாக இந்தியாவிலிருந்து சில பண்டிதர்கள் பாக்தாதிற்குச் சென்றனர் என்று அறிகிறோம். ஆனால் சிறிது காலத்திற்குப் பின்னர் அராபியர்கள் மேற்கு நோக்கி முன்னேற ஆரம்பித்தார்கள். அதிலிருந்து அரேபியாவிற்கும் இந்தியாவிற்கும் ஏற்பட்டிருந்த பண்பாட்டுத் தொடர்பு நின்றுவிட்டது. அதற்குப் பதிலாக அரேபியாவுக்கும் கிரீசுக்கும் அத்தகைய தொடர்பு ஏற்பட்டது.

இந்தியாவுக்கும் பாரசிக வளைகுடா, செங்கடல் ஆகிய இடங்களுக்கும் கப்பல் போக்குவரவு இருந்தது. ஆனால், அதன்மூலமாக எத்தகைய வியாபாரம் நடந்தது என்பதைப்பற்றி நமக்குச் சரியாகத் தெரியாது. எனினும் அந்த மார்க்கமாகத்தான் பார்சிகளும், அராபியர்களும் இந்தியாவின் மேற்குக் கடற்கரைக்கு வந்து குடியேறினார்கள் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். பார்சிகள் பழைய ஜொராஸ்டிரிய மதத்தைச் சேர்ந்தவர்கள். அராபியர்கள் பாரசீகத்தைக் கைப்பற்றிய பிறகு மதச் சுதந்திரத்தை விரும்பிய சில பார்சிகள் எட்டாம் நூற்றாண்டில் தங்கள் நாட்டைவிட்டு இந்தியாவிற்கு வந்து குடியேறினார்கள். அவர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் பம்பாய்க்கும், சூரத்துக்கும் இடையிலுள்ள பகுதியிற் குடியேறினார்கள். அங்கு அவர்கள் தங்களுடைய சொந்த மதத்தை அனுசரிப்பதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். அவர்கள் உழைப்பை அடிப்படையாகக்கொண்ட அமைதியான வாழ்க்கை நடத்தினார்கள். நவீன காலத்தில் பம்பாய்த் துறைமுகம் முன்னேற்றமடையத் தொடங்கிய பின்னர்த்தான், இந்தியப் பார்சிகளின் முன்னேற்றமும் தொடங்கியது. அவர்கள் இன்று வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் தலைசிறந்து விளங்குகிறார்கள்.

சீனாவிலிருந்து பாரசிக வளைகுடாவுக்கும், செங்கடலுக்கும் செல்லும் கடல் மார்க்கந்தான் ஆசியாவின் கடல் மார்க்கங்களில் மிக முக்கியமானது. இந்த நீண்ட வழியை மூன்று இயற்கைப் பகுதிகளாகப் பிரிக்கலாம். சீனாவிற்கும் மலாக்கா ஜல சந்திக்கும் இடையிலுள்ளது முதற்பகுதி. சுமாத்திராவிற்கும் மலையாளக் கடற்கரைக்கும் இடையிலுள்ளது இரண்டாவது பகுதி. இந்தியாவுக்கும் அரேபியாவுக்கும் இடையிலுள்ளது மூன்றாவது பகுதி. அந்தக்காலத்தில் பாய்மரக் கப்பல்கள் தாம் இருந்தன. அவை பருவக் காற்றுகளின் உதவியால் பிரயாணம் செய்தன. அரேபியாவிலிருந்து சீனாவுக்கோ, அல்லது சீனாவிலிருந்து அரேபியாவுக்கோ ஒரு கப்பல் ஒரேயடியாகப் பிரயாணம் செய்வது. அந்தக்

காலத்தில் எளிதான காரியமன்று. வழியில் பல ஆபத்துக்கள் ஏற்படலாம். ஏதாவதொரு காரணத்தால் பிரயாணத்தில் தாமதம் ஏற்படலாம். அதனால் பருவக்காற்று மாறுவதற்குள் கப்பல்கள் பிரயாணத்தை முடிக்க முடியாமல் இடையில் ஏதாவதொரு துறைமுகத்தில் தங்கி அடுத்த பருவக்காற்றை எதிர்பார்க்க நேரிடலாம். ஆகவே, நாளடைவில் கப்பல்கள் சீனுவிலிருந்து அராபியாவுக்கும், அராபியாவிலிருந்து சீனுவுக்கும் நேராகச் செல்லும் பழக்கத்தை விட்டுவிட்டன. அதற்குப் பதிலாகச் சீனுவிலிருந்து புறப்பட்ட கப்பல்கள் சுமத்திராவோடு நின்றுவிடும். அந்தக் கப்பல்களில் ஏற்றி வந்த பொருள்களை எடுத்துக்கொண்டு வேறு கப்பல்கள் சுமத்திராவிலிருந்து புறப்பட்டு இந்தியாவை அடையும். இந்தியாவிலிருந்து வேறு கப்பல்கள் புறப்பட்டு அராபியாவை அடையும். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டுக்கும் ஏழாம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கப்பல்கள் சீனுவுக்கும் அராபியாவுக்கும் நேராகச் சென்று வந்தன. அந்தக்காலத்தில் சீனக் கப்பல்களைப் பாரசீக வளைகுடாவிலும் ஏடனிலும் அடிக்கடி பார்க்கலாம். கி. பி. 650–ஆம் ஆண்டுக்குச் சமீபத்தில் சீனத் துறைமுகங்களில் அராபிய வியாபாரிகளும், அவர்களுடைய பிரதிநிதிகளும் இருந்தார்கள். ஆனல் பிற்காலத்தில் சீனக்கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களுக்கு மேற்கே போகாமல் நின்றுவிட்டன. அவை சுமந்துகொண்டு வந்த பொருள்களை இந்தியாவிலிருந்த அராபிய வியாபாரிகள் வாங்கிக்கொண்டு வேறுகப்பல்களில் அவற்றை அராபியாவிற்கு அனுப்பினுர்கள். சுமாராக 900–ஆம் ஆண்டிலிருந்து வியாபாரத்துக்காக அராபிய வியாபாரிகள் இந்தியாவின் மேற்குக் கடற்கடற்கரையில் குடியேறத் தொடங்கினுர்கள். அவர்கள் சீனுவிலிருந்து வந்த பொருள்களையும், இந்தியாவிலேயே உற்பத்தியான மிளகு முதலிய பொருள்களையும் வாங்கி அராபியாவிற்கு விற்பனைக்கு அனுப்பினுர்கள். அவர்களிடமிருந்த சில பொருள்களைச் சீன வியாபாரிகள் வாங்கித் தங்கள் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு சீனுவுக்குப் போய் அவற்றை விற்ருர்கள். வியாபாரம் செய்யும் ஒரே நோக்கத்தோடுதான் அராபிய வியாபாரிகள் இந்தியாவிற் குடியேறினுர்கள். நாட்டை ஜெயிக்கவேண்டுமென்றே, தங்கள் மதத்தைப் பரப்பவேண்டுமென்றே அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் மலையாளக் கரையில் குடியேறி அங்கிருந்த பெண்களை மணந்துகொண்டு வாழத் தொடங்கினுர்கள். அவர்களுடைய சந்ததியார்கள்தாம் இன்று மாப்பிள்ளைகள் என்று அழைக்கப்படும் வகுப்பினர்,

அராபிய வியாபாரிகள் ஆப்பிரிக்காவில் எவ்வளவு தூரம் சென்று வியாபாரம் செய்தார்கள் என்று நமக்குச் சரியாகத் தெரியவில்லை, முதலில் அவர்கள் சோமாலிலாந்துக்குத் தெற்கில் செல்லவில்லை. ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டுக்குச் சமீபத்தில் அவர்கள் ஜான்ஜிபார், மொஜாம்பிக் ஆகிய பிரதேசங்களுக்கும் சென்றார்கள் என்று தெரிகிறது. பிற்காலத்தில் இந்தியாவுக்கும் கிழக்கு ஆப்பிரிக்காவுக்கும் இருந்த வியாபாரத் தொடர்பு அராபியர்கள் ஜான்ஜிபார், மொஜாம்பிக் ஆகிய நாடுகளுக்குச் செல்லத் தொடங்கிய பொழுதே ஆரம்பித்திருக்கக்கூடும். மடகாஸ்கர் என்ற தீவில் இந்திய நாகரிகத்தின் சின்னங்கள் சில கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றின் காலத்தைச் சரியாய் நிர்ணயிக்க முடியவில்லை. மேலும் இந்தச் சின்னங்கள் ஜாவாவுக்கும் மடகாஸ்கருக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பைக் காட்டுகின்றனவே தவிர மடகாஸ்கருக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்தது என்று கூறமுடியாது என்று ;சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி முடிவான அபிப்பிராயம் கூறுவதற்கு ஆதாரமில்லை. பதினைந்தாம் நூற்றாண்டில் போர்ச்சுக்கியர்கள் இந்தியாவுக்கு வரும்வரையில் இந்தியாவுக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கும் எந்தவிதமான தொடர்பும் ஏற்படவில்லை.

இலங்கை அந்தக்காலத்தில் சோழராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இலங்கைக்குக் கிழக்கில் டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள் இருக்கின்றன. இவற்றில் இந்தியப் பண்பாட்டின் சின்னங்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்திய நாகரிகம் எப்போது எவ்வாறு இந்தத் தீவுகளிற் பரவிற்று என்பது சரியாகத் தெரியவில்லை. இந்திய நூல்களில் இந்த விஷயத்தைப்பற்றி மிகச் சில குறிப்புக்களே இருக்கின்றன. சீன நூல்களின் மூலமாகவும் இதைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. ஆனால் டச்சு அறிஞர்கள் இந்தத்துறையில் இப்போது ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அவர்கள் ஆராய்ச்சிக்கு உதவியாகப் பல பழங் காலக் கட்டிடங்களின் பகுதிகள் இந்தத்தீவுகளில் இருக்கின்றன. இத்தீவுகளில் இந்துமதமும் புத்தமதமும் பரவியிருந்தன. கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் முகமதியமதம் அங்குச்செல்லும் வரையில் இந்திய நாகரிகமே அங்கு ஓங்கியிருந்தது. சுமாத்திராவின் வடகிழக்குப் பகுதியிலும், ஜாவாவிலும், அதற்குக் கிழக்கிலுள்ள சில சிறு தீவுகளிலும். போர்னியோவிலும், செலிபிஸ் தீவிலும் இந்திய நாகரிகம் பரவியிருந்தது என்பதைக் காட்ட மறுக்கமுடியாத அறிகுறிகள் இருக்கின்றன. இன்னும் கிழக்கிலும் இந்திய

நாகரிகம் பரவியிருக்கக்கூடும் என்று நினைக்க இடமிருக்கிறது. போர்னியோவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் இந்து அரசர்களோ அல்லது இந்துமதத்தைத்தழுவிய சுதேச அரசர்களோ சுமார் கி. பி. 400-ஆம் ஆண்டில் ஆட்சி செய்தார்களென்றும், பிராமணர்கள் அங்கு யாகங்களைச் செய்தார்கள் என்றும் ஸம்ஸ்கிருதக் கல்வெட்டுக்களின் மூலம் அறிகிறோம். ஆனால் இந்த ராஜ்யம் எப்போது ஏற்பட்டது, பிராமணர்கள் இந்தியாவின் எந்தப்பகுதியிலிருந்து அங்குச் சென்றார்கள், அவர்கள் எந்த வழியாகச் சென்றார்கள், 400-ஆம் ஆண்டிற்குப் பின்னர் அந்த ராஜ்யத்தின் நிலை எவ்வாறிருந்தது என்ற விஷயங்களைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவில்லை. கி. பி. 400-ஆம் ஆண்டிலோ அதற்குப் பின்னரோ இந்துமதக் கொள்கைகள் ஜாவாவின் மேற்குப்பகுதியில் பரவியிருந்தனவென்றும், ஏழாம் நூற்றாண்டில் சுமாத்திராவின் கிழக்குப் பகுதியிலிருந்த ஸ்ரீ விஜயா என்ற நகரத்தில் புத்தமதம் ஓங்கியிருந்தது என்றும், அங்குத்தான் சீனயாத்திரிகரான இட்ஸிங் சமஸ்கிருதம் கற்றுக்கொண்டார் என்றும் அறிகிறோம். ஆனால் இந்த இடங்களில் எல்லாம் இந்திய நாகரிகமும் பண்பாடும் எவ்வாறு நுழைந்தன என்ற விஷயத்தில் நிச்சயமான முடிவு இன்னும் ஏற்படவில்லை.

எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்தப் பிரதேசத்தில் சைலேந்திர சாம்ராஜ்யம் என்ற ஒரு ராஜ்யம் தோன்றியது. அதன் ஆதிக்கம் சுமார் கி. பி. 1250-ஆம் ஆண்டுவரையில் இருந்தது. இந்த ராஜ்யத்தின் வரலாற்றைச் சரியானபடி எழுதுவதற்கு இப்போது ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். சுமாத்திராவிலிருந்த ஸ்ரீ விஜயா என்ற ராஜ்யமே நாளடைவில் சிறப்படைந்து சைலேந்திர ராஜ்யம் என்ற பெயர் பெற்றது என்று சமீபகாலம் வரையில் ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தார்கள். ஆனால் சைலேந்திர ராஜ்யம் முதலில் மலேயா தீபகல்பத்தில் தோன்றிப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அதன் ஆதிக்கம் தெற்கிலுள்ள தீவுகளிற் பரவிற்று என்று இப்போது சரித்திர ஆசிரியர்கள் நம்புகிறார்கள். சைலேந்திர வம்சத்தின் தோற்றத்தைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் சைலேந்திர அரசர்கள் இந்தியர்களாகவோ அல்லது இந்தியர்களோடு தொடர்புடையவர்களாகவோ இருந்தார்கள் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. அவர்கள் மஹாயான புத்தமதத்தை ஆதரித்தார்கள். அவர்கள் இந்தியாவோடு தொடர்பு வைத்திருந்தார்கள் என்பது இந்தியாவிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ள சாசனங்களின் மூலம்

தெரிகிறது. ஒரு சைலேந்திர அரசன் பீகாரிலுள்ள நாலந்தாவில் ஒரு புத்த மடத்தைக் கட்டினான் என்றும், அதுபோலவே பிற் காலத்தில் வந்த சைலேந்திர அரசன் ஒருவன் சோழநாட்டில் ஒரு புத்த மடத்தைக் கட்டினான் என்றும் இந்தச் சாசனங்களால் அறிகிறோம். மேலும் சைலேந்திர அரசர்கள் மத்திய ஜாவாவில் போரோ புதூர் என்ற இடத்தில் ஒரு புத்தக் கோயிலைக் கட்டினார் கள். இது வரையில் அழியாமலிருக்கும் புத்தக் கோவில்களில் இதுவே மிகவும் பெரியது. இந்துக் கோயில்களின் பகுதிகளும் மத்திய ஜாவாவிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே அங்கே புத்தமதம் மாத்திரமின்றி இந்துமதமும் பரவி யிருந்தது என்று தெரிகிறது.

பதினொன்றாம் நூற்றாண்டில் கிழக்கு ஜாவாவில் சில புதிய ராஜ்யங்கள் தோன்றின. மத்திய ஜாவாவிலும், சுமாத்திராவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கட்டிடங்களெல்லாம் சுதேசத்தன்மை களைப் பெற்றிருந்தபோதிலும் மொத்தத்தில் அவை இந்தியப் பண்பாட்டின் தன்மைகளையே கொண்டிருக்கின்றன. ஆனால் கிழக்கு ஜாவாவில் சுதேசப் பண்பாடும், இந்தியப் பண்பாடும் ஒன்றாக இணைந்து அதன் பயனாக ஒரு புதிய பண்பாடு தோன்றி யது. பதினைந்தாம் நூற்றாண்டில் முகமதிய மதம் இந்தத் தீவு களில் பரவியது. ஆனால் நல்ல வேளையாக முகமதியர்கள் இந்தி யாவிற் செய்ததைப்போல் அங்கே கோயில்களை இடிக்கவில்லை. ஆகையால் ஜாவாவிலும் சுமாத்திராவிலும் இந்தியப் பண்பாட் டைக் காட்டும் பழைய கட்டிடங்களின் பகுதிகள் இன்னும் இருக் கின்றன. ஜாவாவுக்குக் கிழக்கில் இருக்கும் பாலி என்ற சிறு தீவில் முகமதிய மதம் பரவாததால், இன்றைக்கும் அங்குள்ள மக்கள் பின்பற்றும் மதம் இந்தியத் தன்மைகளைப் பெற்றதாகவே இருக்கிறது.

தற்போது பர்மா, சயாம், கம்போடியா, அன்னம், மலேயா தீபகல்பம் என்றழைக்கப்படும் பிரதேசங்களிலும் ஆயிரம் ஆண்டு களுக்கு அதிகமாகவே இந்திய நாகரிகமும் மதமும் ஓங்கியிருந்தன என்று நிச்சயமாகத் தெரிகிறது. ஆனால் இந்தப் பிரதேசங்களில் இந்திய மதமும் பண்பாடும் எவ்வாறு பரவின என்ற விஷயத்தில் இன்னும் நிச்சயமான முடிவு ஏற்படவில்லை. சரித்திர ஆசிரியர் கள் இத்துறையில் இன்னும் ஆராய்ச்சி செய்துகொண்டு வருகி றார்கள். இந்தப் பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சாச னங்களில் மிகவும் பழமையானது ஒரு ஸம்ஸ்கிருத சாசனம். அது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததென்று சிலரும் மூன்

ரும் நூற்றுண்டைச் சேர்ந்தது என்று சிலரும் கருதுகிறார்கள். அதன்மூலம் தென் அன்னத்தில் ஓர் இந்து ராஜ்யம் இருந்தது என்று அறிகிறோம். அந்தப் பிரதேசம் முன் காலத்தில் சம்பா என்று அழைக்கப்பட்டது. பிற்காலத்திய சாசனங்களின் மூலம் சம்பா என்ற ராஜ்யம் பல நூற்றுண்டுக் காலம் சிறந்த ராஜ்யமாக இருந்தது என்று தெரிகிறது. ஆனால் அதன் வரலாறு இன்னும் சரியானபடி எழுதப்படவில்லை. இத்துறையில் பிரான்சு தேசத்து அறிஞர்கள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அந்தப் பிரதேசத்தில் தற்போது வசிக்கும் சாம் வகுப்பினர் பெரும்பாலும் முகமதியர்களாகவே இருக்கிறார்கள். அவர்களிடம் இந்தியப் பண்பாட்டின் தன்மைகள் ஒன்றுமே இல்லை என்று கூறலாம். எனினும் அவர்களில் ஒரு சிலர் இன்னும் சிவனை வழிபடுகிறார்கள்.

சம்பாவுக்குத் தெற்கிலும் மேற்கிலும், தற்போது கம்போடியா என்றழைக்கப்படும் பிரதேசத்தின் ஒரு பகுதியில், சம்பா பிரபலமா யிருந்த அதே சமயத்தில் ஓர் இந்து ராஜ்யம் இருந்தது என்று சீன நூல்களின் வாயிலாக அறிகிறோம். அந்த ராஜ்யம் முதல் நூற்றுண்டில் தோன்றியது என்றும், அந்தப் பிரதேசத்தில் ஆட்சி செய்த ஓர் அரசியை மணந்துகொண்ட ஒரு பிராமணனால் அது நிறுவப்பட்டது என்றும் அதே நூல்களின் வாயிலாக அறிகிறோம். பிற்காலத்தில் இந்தியாவிலிருந்து பலர் சென்று இந்தப் பிரதேசத்திற் குடியேறினார்கள் என்று தெரிகிறது. இந்தப் பிரதேசத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளுவதற்கு ஏராளமான சாசனங்களும் வேறு பல ஆதாரங்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இவற்றின் மூலம் கிமேர் (Khmer) என்ற சாம்ராஜ்யத்தின் பல நூற்றுண்டுக்கால வரலாறு நமக்குத் தெரிகிறது. இந்த ராஜ்யம் பலம் பொருந்திய ராஜ்யம் என்றும், இதன் அரசியல் முறைகளும், பண்பாடும் இந்தியத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும் அறிகிறோம். கம்போடியாவின் மத்திய பிரதேசத்தில் அங்கோர் (Angkor) என்ற இடத்திற் காணப்படும் கோயில்கள் இந்த இராஜ்யத்தின் பெருமையை விளக்கும் முக்கியச் சான்றுகளாக இருக்கின்றன.

சயாமில் காணப்படும் பழைய கட்டிடங்களின் ஆராய்ச்சி மும்மரமாக நடந்து வருகிறது. ஆனால் இவ்வாராய்ச்சி இன்னும் முடிவடையவில்லை. பல சிறு இராஜ்யங்கள் சேர்ந்துதான் இன்றைய சயாம் தோன்றியது. அந்தச் சிறு ராஜ்யங்களில் ஒவ்வொன்றும் இந்து இராஜ்யமாகவே இருந்தது. ஆனால் அவைகளெல்லாம் எப்போது எவ்வாறு தோன்றின என்று இன்னும் தெரிய

வில்லை. பர்மாவின் ஆரம்ப சரித்திரமும் இதுபோன்றதே. பர்மாவில் செய்யப்பட்டுள்ள சரித்திர ஆராய்ச்சியும் மிகக் குறைவு. பர்மாவில் இந்தியப் பண்பாடு ஓங்கி யிருந்தது என்பதைத் தவிர வேறொன்றும் நமக்குத் தெரியாது. மலேயா தீபகல்பத்தில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலேயே இந்திய நாகரிகம் நுழைந்துவிட்டது என்று தெரிகிறது. அதற்குப் பின் அங்குப் பிரபலமடைந்த சைலேந்திர ராஜ்யத்தைப்பற்றி நாம் ஏற்கெனவே கூறியுள்ளோம். ஆகவே, பத்தாம் நூற்றுண்டுக்குச் சமீபத்தில் தென் கிழக்கு ஆசியா முழுவதிலும் இந்திய நாகரிகம் பரவியிருந்தது என்று நாம் நிச்சயமாகக் கூறலாம்.

பிற்காலத்தில் இந்தப் பிரதேசங்களில் பலவேறு நாகரிகங்கள் வந்து கலந்தன. முகமதிய மதம் மலேயாவிலும் சம்பாவிலும் பரவியது. வடக்கிலிருந்து பல வேறு இனத்தவர் வந்து குடியேறினதால் பர்மா, சயாம், அன்னம், கம்போடியா ஆகிய பிரதேசங்களில் சீன நாகரிகம் பரவத் தொடங்கியது. பொதுவாகக் கூறுமிடத்துப் பத்தாம் நூற்றுண்டில் இந்திய நாகரிகம், மேற்கிலும் வடமேற்கிலும் முகமதிய நாகரிகத்தோடும், வடகிழக்கில் சீன நாகரிகத்தோடும் தொடர்பு கொண்டது. கிழக்கிலும் தென் கிழக்கிலும் அது எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. அடுத்த ஐந்நூறு ஆண்டுகளில் இந்திய நாகரிகம் சீன நாகரிகத்திற்கும் முகமதிய நாகரிகத்திற்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டது.* அந்தச் சமயத்தில்தான் நன்னம்பிக்கை முனையை வளைத்துக்கொண்டு போர்ச்சுக்கீசியர்கள் கீழ்நாடுகளுக்கு வந்தார்கள். அதனுல் சில புதிய தொடர்களும் புதிய மாறுதல்களும் ஏற்பட்டன. மேலும், அதிலிருந்துதான் இந்தியாவின் தற்கால வரலாறும் தொடங்கிற்று.

இந்தியாவிலிருந்து சீனுவை அடைவதற்கு இரண்டு வழிகள் பழங்காலத்திலிருந்தன. அவை இரண்டும் நீளமானவை, இரண்டும் கடினமானவை, இரண்டும் ஆபத்து மிக்கவை. இவற்றுள் கடல் வழியைப்பற்றி ஏற்கனவே கூறி யிருக்கிறேம். நில மார்க்கம் சீனுவின் மேற்கு மாகாணங்களிலிருந்து துருக்கி ஸ்தானத்தின் வழியாக ஆக்ஸஸ் நதியை யடைந்து, அங்கிருந்து தெற்கே திரும்பி இந்துகுஷ் மலையைக் கடந்து காபூல் பள்ளத்தாக்கின் மூலமாகவும் பெஷாவார் மூலமாகவும் இந்தியாவை அடைந்தது. ஆசியாவின் படத்தைப் பார்த்தால் இது மிகவும் நீளமான சுற்று

* சீன நாகரிகமும், முகமதிய நாகரிகமும் முதலில் குஷியத் துருக்கி ஸ்தானத்தில் சந்தித்தன என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும்.

வழி என்பது தெரியும். சீனுவிலிருந்து இந்தியாவிற்கு வருவதற்கு அந்தக்காலத்தில் இந்தச் சுற்று வழியை உபயோகித்ததற்குத் தக்க காரணம் இருந்தது. கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தி லிருந்தே பட்டுத்துணிகள் சீனுவிலிருந்து ரோமாபுரிக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அந்த வியாபாரத்தைச் சீன அரசர்கள் மிக முக்கியமாகக் கருதினுர்கள். ஆகவே சீனுவிலிருந்து ஆக்ஸஸ் நதி வரையில் சென்ற இந்த நீண்டவழியில் ஆங்காங்குச் சீன அரசர் களால் நல்ல காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனவே இந்தியாவுக்கு வர விரும்பிய சீன யாத்திரிகர்கள் வழியில் ஆபத்து ஏற்படும் என்ற பயம் அதிகம் இல்லாமல் ஆக்ஸஸ் நதிவரையில் வரலாம். பின்னர் அங்கிருந்து இந்துகுஷ் மலையைத் தாண்டி இந்தியாவுக்கு வருவது அவ்வளவு கடினமானதன்று. தற்காலத் தில் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் பயனுகச் சீனத்துருக்கி ஸ்தானத்தில் அந்தக்காலத்தில் இந்திய நாகரிகமும் சீன நாகரிக மும் சந்தித்தன என்று தெளிவாகத் தெரிகிறது. இந்த வழியாக கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு வரையிலும் இந்தியாவுக்கும் சீனு வுக்கும் போக்குவரவு இருந்தது. அதன்பின் இந்த வழியின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது.

ஆனுல் இந்த வழியாக இந்தியாவுக்கும் சீனுவுக்கும் அதிக வியாபாரம் நடந்ததென்று கூற முடியாது. ஆனுல் புத்தமதத் தைப்பற்றிய செய்தி இந்த வழியாகத் தான் கிறிஸ்து சகாப்தத் திற்குச் சமீபத்தில் சீனுவுக்குச் சென்றிருக்கவேண்டும். இதே வழியாகப் பிற்காலத்தில் பல சீனயாத்திரிகர்கள் புத்தமதப் புண் ணிய ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கும் புத்தமத நூல்களைச் சேகரிப்ப தற்கும் இந்தியாவுக்கு வந்தார்கள். சீனுவிலிருந்து புத்தமதம் முதலில் கொரியாவுக்கும் பின்னர் ஜப்பானுக்கும் சென்று பரவி யது. ஆகவே சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மத்திய ஆசியாவின் பாலைவனப் பிரதேசங் களின் வழியாகச் சீனுவிற்குச் சென்று விழுந்த புத்த மதத்தின் சிறு விதை இன்று கவடுகளும் கிளைகளும் விழுதுகளும் செறிந்த இவ்வளவு பெரிய மரமாக வளர்ந்திருப்பதைப் பார்க்கும்போது நமக்கு அளவற்ற ஆச்சரியமேற்படுகிறது. இந்தியாவிலிருந்து தான் திபேத்துக்கும் புத்தமதம் சென்றது. ஆனுல் புத்தமதம் ஏழாம் நூற்றுண்டுக்கு முன்னுல் திபேத்துக்குச் சென்றிருக்க முடியாதென்று கூறலாம். பிற்காலத்தில் திபேத்துக்கும் வட இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. முக்கியமாகப் பால வம்சத்தினரின் ஆட்சியிலிருந்த பிரதேசத்திற்கும் திபேத்

திற்குந்தான் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. இந்தியாவில் தோன்றிய பல ஸம்ஸ்கிருத நூல்கள் அழிந்துபோயின. ஆனால் அவற்றின் பிரதிகள் திபேத்தில் இருக்கின்றன. அவைகள் இந்தியாவுக்கும் திபேத்துக்கும் ஏற்பட்டிருந்த நெருங்கிய பண்பாட்டுத் தொடர்பைக் காட்டும் சிறந்த சின்னங்களாக விளங்குகின்றன.

இந்தியாவுக்கும் கீழ்நாடுகளுக்கும் நடந்த வியாபாரத்தைப் பற்றி நமக்கு இதுவரையில் ஒன்றும் தெரியாமலிருப்பதற்குக் காரணம் அந்த வியாபாரத்தைப்பற்றிய குறிப்புகள் இன்மையே யாகும். அதனால் அத்தகைய வியாபாரமே நடக்கவில்லையென்று நாம் நினைத்துவிடக்கூடாது. பதினாறும் நூற்றாண்டில் அத்தகைய வியாபாரம் நடந்துகொண்டிருந்தது என்று நாம் நிச்சயமாக அறிகிறோம். அப்போது இந்தியாவில் நெய்யப்பட்ட பருத்தித் துணியே மிக முக்கியமான வியாபாரப்பொருளாக இருந்தது. இந்தோச் சீனாவிலும் அதன் அருகிலுள்ள தீவுகளிலும் ஆடை கட்டிய ஒவ்வொருவரும் இந்திய ஆடைகளைத்தான் அணிந்தார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. இந்தியாவின் கீழ்க் கடற்கரையிலும் குஜராத்திலும் ஏராளமான மக்கள் துணிகளை நெய்வதிலும், சாயந் தோய்ப்பதிலும், அச்சடிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்கள் தேவைக்கேற்றவாறு பலவகைப்பட்ட துணிகளை நெய்தார்கள். அவைகளையெல்லாம் வியாபாரிகள் கப்பல்களில் ஏற்றிக்கொண்டுபோய்க் கீழ்நாடுகளில் விற்றார்கள். மொலூக்காஸ் முதலிய தீவுகளில் அந்தக்காலத்தில் நாணயங்கள் பழக்கத்தில் இல்லாததால் பொருள்களின் மதிப்பை இந்தியத் துணிகளைக்கொண்டு கணக்கிட்டார்கள். ஆகவே அந்தப் பிரதேசங்களில் உற்பத்தியான கிராம்பு முதலிய பொருள்களை வாங்குவதற்காகச் சென்ற வியாபாரிகள் முதலில் தேவையான அளவு இந்தியத் துணிகளை எடுத்துக்கொண்டு சென்றார்கள். அந்தத் துணிகளை அங்குக் கொடுத்துவிட்டு அவற்றின் மதிப்பிற்கேற்றவாறு வேறு பொருள்களை வாங்கிக்கொண்டு வந்தார்கள். பதினாறும் நூற்றாண்டில் நாம்காணும் இத்தகைய ஒழுங்கான வியாபார முறை திடீரென்று ஏற்பட்டிருக்க முடியாது. ஆகவே இந்திய நாகரிகம் கடல்கடந்து கிழக்கே செல்லத் தொடங்கிய அந்த மிகப் பழங் காலத்திலிருந்தே இந்த வியாபாரம் ஆரம்பித்திருக்க வேண்டுமென்றும், பத்தாம் நூற்றாண்டுக்குள் சிறந்த நிலையை எய்தியிருக்கவேண்டும் என்று நாம் நினைக்க இடம் இருக்கிறதல்லவா?



INDIA

In the Turkish Period

To illustrate Chapters XX to XXV

Emery Walker Ltd. sc.

அதிகாரம்—20

துருக்கியர் வருகை

பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் துருக்கியர் இந்தியாவின் மீது படையெடுக்கத் தொடங்கினார்கள். பதினொன்றும் நூற்றாண்டிலும் பனிரெண்டாம் நூற்றாண்டிலும் இந்தியாவின் வடமேற்குப் பகுதி துருக்கியர் ஆட்சியிலிருந்தது. அப்போது அவர்களுடைய தலைநகரம் ஆப்கானிஸ்தானத்திலிருந்தது. பதின்மூன்றும் நூற்றாண்டில் டில்லியைத் தலைநகராகக்கொண்டு ஒரு துருக்கிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு அதன் ஆதிக்கம் ஏறக்குறைய வட இந்தியா முழுவதும் பரவியிருந்தது. பதினான்காம் நூற்றாண்டில் அந்த இராஜ்யத்தின் ஆதிக்கம் தென்னிந்தியாவிலும் பரவியது. பதினைந்தாம் நூற்றாண்டில் வடஇந்திய அரசியலாதிக்கத்துக்காகப் போட்டி ஏற்பட்டது. அதன் பயனாக டில்லியில் ஓர் ஆப்கானிய ராஜ்யம் நிறுவப்பட்டது. பதினாறும் நூற்றாண்டில் வட இந்தியாவின்மீது முகலாயர் படையெடுத்தனர். பதினேழாம் நூற்றாண்டில் முகலாய ஆதிக்கம் ஏறக்குறைய இந்தியா முழுவதும் பரவியது. அதனுடைய வீழ்ச்சிக்குப்பின் இந்திய அரசியலாதிக்கத்திற்காக ஒரு நூற்றாண்டு போட்டி நடந்தது. முடிவில் இந்தியா கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிக்குள் வந்தது. இதுவே நாம் இப்போது படிக்கப்போகும் எண்ணூறாண்டுகளின் சுருக்கமான வரலாறு.

ஆசியாவின் மேட்டுப் பகுதியிலிருந்து ஹூணர்களுக்குப் பின் துருக்கியர் என்ற நாடோடிக் கூட்டத்தினர் மேற்கு நோக்கி நகர்ந்தனர் என்று நாம் முன்னோர் அதிகாரத்திற் படித்தோம், அப்படி வெளியேறிய துருக்கியர் ஆக்ஸஸ் நதிப்பிரதேசத்தில் தங்களுடைய ஆதிக்கத்தை ஸ்தாபித்தார்கள். பின்னர் அந்தத் துருக்கிய ராஜ்யம் பல சிறு ராஜ்யங்களாகப் பிரிந்துபோயிற்று, அத்தகைய சிறு ராஜ்யங்களில் கஜினியும் ஒன்று. கஜினி என்ற நகரம் காபூலுக்குத் தெற்கில் 80-கல் தொலைவில் இருக்கிறது. இது கி. பி. 933-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதற்குக் கிழக்கில் சாஹி வம்சத்தினரால் ஆளப்பட்ட இந்து ராஜ்யம் ஒன்று இருந்தது. சாஹி வம்சத்தினர் ஆப்கானிஸ்தானத்தின் ஒருபகுதியையும் பஞ்சாப்பின் பெரும் பகுதியையும் ஆண்டுவந்தனர். கி. பி. 973-ஆம் ஆண்டில் சாஹி அரசனான ஜெயபாலன் என்பவன் கஜினியின்மீது படையெடுத்துத் தோல்வியுற்றான். நான்காண்டு

கட்குப் பின்னர் சபக்டிஜின் என்ற ஒருசிறந்த அரசன் கஜினிச் சிம்மாசன மேறினன். அவன் தன்னுடைய ராஜ்யத்திற்கு மேற்கிலும் வடக்கிலுமிருந்த பிரதேசங்களின்மீது படையெடுத்து அவற்றை வென்று தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். ஆகவே கஜினி ஒருபெரிய ராஜ்யமாக மாறியது. மேலும் அவன் ஜெயபாலனேடு சண்டைசெய்து தன்னுடைய ராஜ்யத்திற்குச் சிந்து நதியைக் கிழக்கெல்லையாக்கினன். அவன் கி. பி. 997-ஆம் ஆண்டில் இறந்தபின் அவனுடைய மகன் மாமூது கஜினிக்கு அரசனுனன். அவனேடு இந்திய வரலாற்றில் முகமதியர் காலமும் தொடங்குகிறது.

இந்தியாவின்மீது படையெடுத்து வந்த துருக்கியர்கள் சில சமயங்களில் மிகக் கொடூரமாக நடந்தார்கள் என்பது உண்மையெனினும், அவர்கள் நாகரிகமற்ற காட்டுமிராண்டிகள் என்று நினைத்து விடக்கூடாது. அவர்கள் இஸ்லாம் மதம் மாத்திரமின்றி நாகரிகமடைந்த பாரசீகத்தின் வழியாக வந்த முகமதியப் பண்பாட்டையும் பின்பற்றினர்கள். அதனல் அவர்கள் இந்தியாவுக்கு வரும்போதே நல்ல நாகரிகமுடையவர்களாக இருந்தார்கள். அரசர்கள் அலங்காரமான அரண்மனைகளில் வசித்தார்கள். அவர்களுடைய சபைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்தன. ஆட்சிமுறை நல்ல அமைப்பைப் பெற்றிருந்தது. பாரசீக மொழி அரசியல் மொழியாக இருந்தது. அரசர்கள் நல்ல பண்பாடுடையவர்கள். அவர்கள் கல்விக்கும் கலைக்கும் ஆதரவளிப்பவர்களாகவும் அழகிய கட்டிடங்களைக் கட்டுவதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருந்தார்கள். துருக்கியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே காகிதத்தின் உபயோகத்தை அறிந்திருந்தார்கள். அவர்கள் அரசியல் நிகழ்ச்சிகளை எழுதிவைக்கும் பழக்கம் உடையவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே அவர்கள் இந்தியாவுக்கு வந்தபிறகும் அந்த முறையை அனுசரித்தார்களாதலால், அவர்கள் வருகைக்குப் பிறகு இந்திய வரலாற்று நிகழ்ச்சிகளின் காலத்தை வரையறுத்துக் கூறுவது எளிதாயிற்று. இது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம் என்பதை வரலாற்று மாணவர்கள் ஒத்துக்கொள்ளுவார்கள்.

முகமதிய மதம் இந்து மதத்தை இரண்டு விஷயங்களில் ஒத்திருக்கிறது. முகமதிய மதமும் கடவுள் வழிபாட்டு முறைகளை மாத்திரம் குறிக்காமல் அதைப் பின்பற்றிய மக்களின் வாழ்க்கை முறை முழுவதையும் குறிக்கிறது. மக்கள் வாழ்க்கையின் பல துறைகளுக்கும் ஏற்ற சட்டங்கள் இந்து மதத்தி

லிருப்பது போலவே இஸ்லாம் மதத்திலும் இருக்கின்றன. இந்தச் சட்டங்களைக் குடிகள் மாத்திரமின்றி அரசர்களும் பின்பற்ற வேண்டும். கொரான் இஸ்லாமியச் சட்டத்திற்கு அடிப்படையான ஆதாரம். இதுவே முகமதிய வேத புத்தகம். இதில் தீர்க்கதரிசியான நபிநாயகத்திற்கு இறைவன் அருளிய உபதேசங்களும், நபிநாயகத்தின் அறவுரைகளும் அடங்கியிருக்கின்றன. இவற்றையெல்லாம் முகமதியச் சட்ட நிபுணர்கள் ஒன்ருகத் திரட்டி அவற்ருேடு தங்களுடைய விளக்கங்களையும் சேர்த்துத் தொகுத்திருக்கிருர்கள். கடவுள் ஒருவரே என்பது முகமதிய மதத்தின் அடிப்படைக் கொள்கை. அந்தக் கடவுளுக்கு உருவம் கிடையாது. உருவ வழிபாடு கொடிய பாவம். உலகில் தோன்றும் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலை இருக்கிறது. அந்த வேலைக்கேற்ற நிலையை அவரவர்களுக்குக் கடவுள் அருள்கிருர். ஆகவே தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் தங்கள் நிலையில் அதிருப்தி கொள்ளுவதோ வருந்துவதோ கூடாது. அவ்வாறு செய்தல் பாவம். துன்பம் ஏற்படும் காலத்தில் அதைத் தாங்கிக் கொள்ளுவதற்கேற்ற தைரியத்தை இந்த நம்பிக்கையின் மூலம் முகமதியர்கள் பெறுகிருர்கள். ஆனுல் இதன்மூலம் அவர்கள் தங்களுடைய சொந்த முயற்சியில் நம்பிக்கை இழப்பதில்லை.

மக்கள் அனைவரும் சமம் என்ற கொள்கை இஸ்லாமிய சமூகத்தின் அடிப்படை. முகமதியர்களெல்லோரும் சகோதரர்கள். அவர்களுக்குத் தலைவர் கலீபா. மதுபானம் செய்யக் கூடாது என்பது போன்ற ஒரு சில கட்டுப்பாடுகளைத் தவிர மற்ற விஷயங்களில் முகமதியர்கள் தங்களிஷ்டம்போல் வாழ்க்கை நடத்தலாம். ஆனுல், கலீபா வேறு மதத்தினரோடு போர் செய்யப் புறப்பட்டால் முகமதியர் அனைவரும் அவருக்குத் துணையாகப் புறப்படவேண்டும் என்பது கட்டாயமான விதி, சண்டையிற் கிடைக்கும் லாபத்தில் அனைவர்க்கும் சமமான பங்கு உண்டு. தோற்றுப்போனவர்கள் முகமதிய மதத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும். இன்றேல் அவர்களுடைய உயிருக்கேனும், உரிமைக்கேனும் ஆபத்து ஏற்படும். முகமதிய மதத்திற் சேர்ந்து கொள்ளுவது மிக எளிது. அதற்காக அதிகப்படியான சடங்கு ஒன்றும் கிடையாது. போரில் வெற்றிபெற்ற முகமதியர்கள் தங்கள் மதத்திற் சேர மறுக்கும் ஆண்களைக் கொன்றுவிட்டு, பெண்களையும், குழந்தைகளையும் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்.

இஸ்லாம் மதத் தோற்றத்திற்குப் பின்னர் சுமார் முன்னூற் றைம்பது ஆண்டுகள் கழித்துத்தான் கஜினி மாமூது பட்டத் திற்கு வந்தான். இந்த நீண்ட காலத்தில் இஸ்லாமியச் சட்டங் களிற் சில முக்கிய மாறுதல்கள் தோன்றிவிட்டன. கலீபாவின் அரசியலதிகாரம் குறைந்துவிட்டது. சுயேச்சை பெற்ற பல முகமதிய ராஜ்யங்கள் தோன்றிவிட்டன. இத்தகைய இராஜ் யங்களின் அரசர்களெல்லாம் கலீபாவின் பிரதிநிதிகள்தாமென்று இஸ்லாமியச் சட்ட நிபுணர்கள் கூறினுர்கள். ஆகவே இந்த அரசர்கள் கலீபாவின் அங்கீகாரத்தைப் பெறுவது வழக்கமாக இருந்தது. ஆனுல் நடைமுறையில் அவர்கள் பூர்ண சுயேச்சை யுடன் தங்கள் இராஜ்யங்களில் ஆட்சி செய்தார்கள். இந்த நிலையில் ஒவ்வோரரசனும் தன்னுடைய ராஜ்யத்தின் காப்பைப் பற்றித்தான் அதிகக் கவலைகொண்டானே தவிர இஸ்லாமியச் சட்டப்படி அரசியல் விஷயங்களில் கலீபாவுக்கு அடங்கி நடப்ப தைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆகவே தனிப்பட்ட வாழ்க்கை முறைக்கேற்ற சட்டங்களுக்கும் அரசாங்க விஷயங் களுக்கேற்ற சட்டங்களுக்கும் வேறுபாடு இருப்பது அவசியமா யிற்று. அதன் பயனுகத் தனிப்பட்ட வாழ்க்கைக்கேற்ற சட்டங்க ளெல்லாம் சரியானபடி அனுசரிக்கப்பட்டன. ஆனுல் அரசியல் விஷயத்தில் மாத்திரம் முகமதிய அரசர்கள் தங்கள் விருப்பப்படி சுயேச்சையாக நடக்கத் தொடங்கினுர்கள். இதைப் பார்த்த இஸ்லாமியச் சட்ட நிபுணர்களுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. அரசர்களெல்லாம் கலீபாவின் பிரதிநிதிகள்தாம் என்பதை அவர்கள் விட்டுக் கொடுக்காவிட்டாலும், அந்த விதியை ஏற்றுக் கொள்ள மறுத்த அரசர்களை அவர்கள் தண்டிக்கவில்லை. அதற்குப் பதிலாக மறு உலகத்தில் அவர்களைக் கடவுள் தண்டிப்பார் என்று தங்கள் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டார்கள். இத் தகைய மறு உலக தண்டனையை ஏற்றுக்கொள்ளுவதற்கு எத் தனையோ முகமதிய அரசர்கள் தயாராக இருந்தார்கள் என்பதை நாம் பின்வரும் அதிகாரங்களிற் பார்ப்போம்.

போரில் தோற்றுப்போனவர்களை நடத்தும் விதத்திலும் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. முன்னெல்லாம் தோற் றுப்போனவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவவேண்டும், இன் றேல் இறக்கவேண்டும் என்பதுதான் மாற்றமுடியாத விதி. ஆனுல் இந்த விதிக்கு ஒரே விலக்கு உண்டு. தோற்றுப்போன வர்கள் யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ இருந்தால் அவர்கள் கொல்லப்பட மாட்டார்கள். பழைய ஏற்பாட்டை

(Old Testament) ஒத்துக்கொண்டு ஜிஸியா என்ற வரியைச் செலுத்திவிட்டு அவர்கள் முகமதிய ஆட்சியில் சகல உரிமைகளோடும் வாழலாம். முதலில் அராபியர்கள் சிந்து மாகாணத்தை வென்றபோது இந்துக்களுக்கும் இந்தச் சலுகை காட்டப்பட்டது. எட்டாம் நூற்றுண்டின் முடிவுக்குள் இந்த முறையை இஸ்லாமியச் சட்ட நிபுணர்களும் ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, தோற்றுப்போனவர்கள் விளைவில் ஒரு பங்கை அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்துவதோடு, ஜிஸியா என்ற தனிப்பட்ட வரியையும் செலுத்திவிடுவார்களானுல் அவர்கள் தங்கள் விருப்பம்போல முகமதிய ஆட்சியின்கீழ் வாழலாம்.

இந்த முறையை முகமதியர்கள் அனுசரிக்கத் தொடங்கிய பின் இந்தியாவை ஜெயிப்பது எளிதாயிற்று. பழைய முறைப்படி அவர்கள் இந்தியாவை ஜயிக்க முயன்றிருந்தால் இந்து மதத்தை அடியோடு அழித்து, தோற்றுப்போன இந்துக்களுக்குச் சொந்தமான நிலங்களை யெல்லாம் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும். ஆனுல் புதிய முறைப்படி அந்தத் தொந்தரவெல்லாம் கிடையாது. ஜயிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்த இந்துக் குடியானவர்கள் எப்போதும்போல் தொழிலில் ஈடுபட்டார்கள். விளைவில் ஒரு பகுதியை முன்னெல்லாம் இந்து அரசர்களுக்கு வரியாகச் செலுத்தினுர்கள். இப்போது அந்த வரியை முகமதிய அரசனுக்குச் செலுத்தினுர்கள். இதைத்தவிர வேறு மாறுதல் ஒன்றும் இல்லை. சில சமயங்களில் தோற்றுப்போன இந்து அரசர்கள் முகமதிய அரசர்களுக்குக் கப்பம் கட்டுவதாக ஒத்துக்கொண்டு எப்போதும்போலத் தங்கள் இராஜ்யங்களை ஆண்டு வந்தார்கள். ஆகவே ஆதியில் இந்தியாவில் ஏற்பட்ட முகமதிய ராஜ்யங்கள் முன்னர் இருந்த இந்துப் பேரரசுகளைப் பெரிதும் ஒத்திருந்தன. அதாவது முஸ்லிம் அரசர்களுக்கு அடங்கி அவர்களுக்குக் கப்பம் கட்டிவந்த பல இந்து அரசர்கள் இருந்தார்கள்.

ஆகவே, முகமதியப் படையெழுச்சியாலும் வெற்றியாலும் இந்திய அரசியல் முறைகளில் அதிக மாறுதல் ஏற்படவேண்டிய அவசியமில்லாது போயிற்று. ஆனுல் அந்தப் படையெழுச்சிகள் இந்துக்களுடைய சமூக வாழ்க்கையிலும் மதத்துறையிலும் ஆரம்பத்தில் மிகப் பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும். தன்னுடைய மதத்தில் உண்மையான நம்பிக்கையுடைய ஒவ்வொரு முகமதியனுக்கும் இந்தியாவில் வழிநெடுக இருந்த கோவில்களைப் பார்த்ததும் தாங்கமுடியாத ஆத்திரம் ஏற்பட்டி

ருக்கும். அதனால் அவன் அந்தக் கோவில்களை யெல்லாம் இடித்துத் தரைமட்டம் ஆக்குவதில் முனைந்திருப்பான். அந்தக் கொடுமையைப் பார்த்த இந்துக்களுக்கு முகமதியர்கள்மீது எவ்வளவு சீற்றமும் வெறுப்பும் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம். படையெடுத்துவந்த முகமதியர்கள் பெரும்பாலும் குதிரை வீரர்களாகவே இருந்தார்களாகையால் அவர்கள் வெகு வேகமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சென்றிருப்பார்கள். அதனால் அவர்களுக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகளைச் செய்வது எளிதன்று. ஆகவே முகமதிய வீரர்கள் வழியில் கண்ட பொருள்களையெல்லாம் கொள்ளையடித்ததோடு, ஆங்காங்கிருந்த இந்தியர்களிடமிருந்தும் உணவுப் பொருள்களைக் கட்டாயப்படுத்தி வாங்கியிருப்பார்கள். அதுவுமன்றி, படையெடுத்துவந்த துருக்கியர்கள் இறைச்சியை மிகுதியாக உண்பவர்கள். அதனால் அவர்கள் ஏராளமான கால்நடைகளை உணவுக்காகக் கொன்றிருப்பார்கள். இந்த விஷயங்களைப்பற்றிய குறிப்புக்கள் ஒன்றும் நமக்குக் கிடைக்காவிட்டாலும், இவ்வாறெல்லாம் நடந்திருக்கும் என்று நாம் நினைப்பது தவறாகாது. ஆகவே முகமதியர்கள்மீது இந்துக்களுக்குச் சொல்லமுடியாத வெறுப்பும் பகைமையும் ஏற்பட்டிருக்கும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

இதுவரையில் முகமதியப் படையெழுச்சியைப் பற்றிப் பொதுவாகக் கூறினோம். இப்போது கஜினி மாமூதைப்பற்றிய வரலாற்றைக் கவனிப்போம். அவனுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சரியான முடிவுக்கு வருவது எளிதன்று. ஏனெனில் அவன் இறந்த சில காலத்திற்குள் அவனைப்பற்றி இருவித அபிப்பிராயங்கள் வழங்கத் தொடங்கின. அவன் முகமதிய மதத்திற் பெரும்பற்றுக் கொண்டவன் என்றும், போரில் அசகாய சூரன் என்றும், தன்னுடைய மதத்தைப் பரப்புவதிற் பேரார்வம் கொண்டவன் என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். இன்னொரு சாரார் அவன் மிகுந்த பேராசை பிடித்தவன் என்றும், இரக்கமற்ற அரக்கன் என்றும் கூறுகின்றனர். இந்த விஷயத்தில் நம்பத்தகுந்த ஆதாரம் எதுவும் இல்லையாகையால், அவனிடத்தில் மேலே சொன்ன நல்ல குணங்களிற் கொஞ்சமும், தீயகுணங்களிற் கொஞ்சமும் கலந்து இருந்திருக்கும் என்று நாம் கூறுவதோடு அமையலாம். தன்னுடைய ராஜ்யத்தைப் பாரசீகத்திலும், துருக்கிஸ்தானத்திலும் பரப்பி, அங்குத் தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டுவதிலேயே கஜினிமாமூது தன்னுடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் அதிக கவனம் செலுத்தினான். இடை

யிடையே ஒழிந்தபோது கி. பி. 1000-முதல் கி. பி. 1026-வரை யில் இந்தியாவின்மீதும் படையெடுத்தான். அவன் இந்தியாவில் கிழக்கில் கன்னோசி வரையிலும், தெற்கில் கத்தியவார் வரையி லும் படையெடுத்து அகப்பட்ட பொருள்களைக் கொள்ளையடித் துக்கொண்டு போனான். பஞ்சாபை மாத்திரம் அவன் ஜயித்துத் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். மாமூதி னுடைய இந்தியமாகாணம் மேற்கே சிந்து நதியிலிருந்து கிழக்கே ஏறக்குறைய யமுனை வரையிற் பரவியிருந்தது. ஆனால் டில்லி வரையிற் பரவவில்லை. வடக்கில் அது இமயமலை முதல் தெற்கில் ஐந்து நதிகளும் முடிவாக ஒன்றாகச் சேரும் இடம் வரையிற் பரவியிருந்தது. அதில் சாஹி வம்சத்து அரசர்களுடைய இந்து ராஜ்யமும், முகமதிய ராஜ்யமாகிய மூல்தானும் சேர்ந்திருந்தன. சாஹி அரசர்களின் இராஜ்யம் கி. பி. 1021-ஆம் ஆண்டில் மாமூ தால் ஜெயிக்கப்பட்டது. மூல்தான் ராஜ்யம் சிந்து நாட்டின் வடபகுதியிலும் பரவியிருந்தது. சிந்துநாட்டின் தென்பகுதியின் மீதும் மாமூது வெற்றிகரமாகப் படையெடுத்தான். ஆனால் அதைத் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளவில்லை. தன்னுடைய இந்திய மாகாணத்தை ஆள்வதற்கு மாமூது ஓர் இராஜப்பிரதிநிதியை ஏற்படுத்தினான். அவன் லாகூரைத் தலை நகராகக்கொண்டு ஆட்சி செலுத்தினான்.

மாமூது இந்தியாவின்மீது பலதரம் படையெடுத்தான். அந் தப் படையெழுச்சிகளுள் முக்கியமான இரண்டைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது அவசியம். கி. பி. 1018-ஆம் ஆண்டில் மாமூது கஜினியிலிருந்து ஒரு லட்சம் குதிரை வீரர்களுடன் புறப் பட்டு, இந்தியாவிற்குள் நுழைந்து பஞ்சாபைத்தாண்டி, டில்லிக் குப்போகாமல் யமுனை நதிக்கரை வழியே மதுராவை அடைந்தான். அங்கிருந்த கோயில்களை அழித்து அவற்றிலிருந்த பொருள்களை எடுத்துக்கொண்டு கிழக்கே கன்னோசிக்குச் சென்றான். கன்னோசி அவனுக்குக் கீழ்ப்படிந்தது. அதற்குக் கிழக்கில் அவன் எவ்வளவு தூரம் சென்றான் என்பது சரியாகத் தெரியவில்லை, கிழக்கே ஜான்பூர் வரையிற் சென்றான் என்று சில ஆசிரியர்கள் கூறுகி றார்கள்; ஆனால் கன்னோசிக்குக் கிழக்கே மாமூது போக வில்லை என்று கூறுவது தான் சரியான அபிப்பிராயம் என்று தோன்றுகிறது. கன்னோசியிலிருந்து மேற்கே திரும்பி எதிர்த் தவர்களை யெல்லாம் தோற்கடித்துக்கொண்டே மாமூது கஜி னியை அடைந்தான். அந்தத் தடவை அவன் கொள்ளையடித் துக்கொண்டு போன பொருள்களுக்குக் கணக்கில்லை; அத்

போலவே அவன் பிடித்துக்கொண்டு போன கைதிகளுக்கும் கணக்கில்லை. அதனால் பாரசிகத்திலும் துருக்கி ஸ்தானத்திலும் ஏராளமான இந்திய அடிமைகள் இருந்தார்கள். இந்தப் படையெழுச்சியின்போது ஒரு கோட்டையிலிருந்த வீரர்கள் மாமூதை எதிர்த்துத் தோற்கடிப்பது இயலாத காரியம் என்று அறிந்ததும், தங்களுடைய மனைவி மக்களைத் தீக்கிரையாக்கிவிட்டுத் தாங்கள் மாத்திரம் வெளியே வந்து போர்செய்து மாண்டனர் என்று கேள்விப்படுகிறோம். இந்த முறையை "ஜௌஹர்" என்று கூறுகிறார்கள். இம்மாதிரிச் சம்பவங்களைப்பற்றிப் பிற்காலத்திய வரலாற்றில் அடிக்கடி படிக்கிறோம். பெண்களுடைய மானத்தைக் காப்பதே இந்தப் பழக்கத்தின் முக்கிய நோக்கம். ஹூணர்கள் முதலிய வெளி நாட்டார் இந்தியாவின்மீது படையெடுத்து வந்த பழங்காலத்திலேயே இந்த முறையை இந்தியர்கள் அனுசரித்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது. பழங்காலத்தில் சண்டை என்பது சர்வ சாதாரணமான விஷயம். ஆனால் இத்தகைய சம்பவங்களைப்பற்றிப் படிக்கும்போதுதான், அந்தக்காலத்தில் நடந்த சண்டைகளின் கொடிய விளைவுகளைப்பற்றி நாம் அறியமுடிகிறது.

ஆறுண்டுகளுக்குப் பின்னர் மாமூது சோமநாதபுரத்தின்மீது படையெடுத்தான் அந்த நகரம் கத்தியவார் தீபகல்பத்தின் கரையில் இருக்கிறது. அந்தக் காலத்தில் சோமநாதபுரத்து ஆலயம் இந்தியா முழுவதிலும் பிரசித்திபெற்ற ஆலயமாக இருந்தது. அதிலிருந்த செல்வத்திற்குக் கணக்கே கிடையாது. மாமூது எதிர்த்தவர்களை யெல்லாம் தோற்கடித்துவிட்டு குஜராத்தையடைந்தான். அங்கே சோமநாதபுரத்துக் கோயிலை இடித்து நாசமாக்கி, அங்கிருந்த பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டதோடு அந்தக் கோயிலிலிருந்த பெரிய விக்கிரகத்தையும் தூள் தூளாக உடைத்தெறிந்தான். இந்தப் படையெழுச்சியைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. இந்தப் படையெழுச்சியின் பயனாக முகமதியர்கள் என்றால் விக்கிரகங்களை உடைப்பவர்கள், கோயில்களை அழிப்பவர்கள் என்ற எண்ணமே இந்தியா முழுவதிலும் பரவியிருக்கும் என்று நினைக்கலாம்.

மாமூது கி. பி. 1030-ஆம் ஆண்டில் இறந்தான். அவனுக்குப் பின் அவனுடைய சாம்ராஜ்யமும் அழிந்தது. ஆனால் கஜினியும் பஞ்சாபும் மாத்திரம் அவனுடைய சந்ததியாரின் ஆட்சியில் நூறுண்டுகளுக்குமேல் இருந்தன. 1158-ஆம் ஆண்டில் அவர்கள் கஜினியையும் இழந்தார்கள். அதன்பின் அவர்களுடைய ஆட்சியில் பஞ்சாப் மாத்திரந்தான் இருந்தது. பஞ்சாப் கஜினி வம்சத்

தினரின் ஆட்சியிலிருந்த நூறு வருட காலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எவ்விதமான தொடர்பு இருந்தது என்று நமக்குத் தெரியாது. தெற்கில் கஜினி வம்சத்தினரது ஆட்சி இராஜபுதனத்தின் ஒரு பகுதியிலும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் கிழக்கெல்லை மாமூதின் காலத்திலிருந்தது போலவே இருந்தது. சில சமயங்களில் அந்த எல்லையில் நடந்த சண்டைகளால் சில கோட்டைகளை முகமதியர்கள் இழப்பதும் மறுபடியும் அவற்றைக் கைப்பற்றுவதுமாக இருந்தார்களே தவிரப் புதிதாக எந்தப்பிரதேசத்தையும் ஜெயித்து அவர்களுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளவில்லை கி. பி. 1033-ஆம் ஆண்டில் இந்துக்களின் தலைசிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய காசியின்மேல் முகமதியர்கள் படை யெடுத்தார்கள். மறுபடியும் 1100-ஆம் ஆண்டில் ஒருதரம் முகமதியர்கள் காசியைச் சேர்ந்த பிரதேசத்தின்மீது படையெடுத்தார்கள். அதுபோலப் பல படையெழுச்சிகள் நடந்திருக்கும் என்று நாம் நினைக்கலாம். இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்தவர்களெல்லாம் வடமேற்கிலிருந்து எந்த நிமிஷமும் முகமதியர்கள் படையெடுத்து வந்து தங்களுடைய ராஜ்யங்களுக்கும் மதத்திற்கும் ஆபத்து விளைவிக்கலாம் என்று பயந்துகொண்டே இருந்தார்களென்று பொதுவாகக் கூறலாம். இதற்குள்ளாக ஆப்கானிஸ்தானத்தில் கோரிவம்சம் என்ற துருக்கிவம்சம் பிரபலமடைந்து விட்டது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் அந்த வம்சத்தினர் இந்தியாவின்மீது படையெடுத்து, கஜினி வம்சத்தினர் ஆட்சியிலிருந்த ராஜ்யத்தை ஜயித்துக்கொண்டு வட இந்தியாவையும் ஜயிக்கத் தொடங்கினார்கள். அதைப்பற்றிப் பேசுவதற்கு முன்னால் இந்தியாவின் மற்ற பகுதிகள் என்ன நிலையிலிருந்தன என்பதைப் பற்றிக் கூறுவது அவசியம்.

சோழர்கள் தீபகல்ப இந்தியாவின் பெரும்பகுதியில் தங்களுடைய ஆட்சியை நிறுவியிருந்தார்களென்று பதினேழாம் அதிகாரத்திற் கூறினோம். அடுத்த இரண்டு நூற்றுண்டுகளில் அவர்களுடைய ஆதிக்கம் உயர்ந்த நிலையிலேயே இருந்தது. மேலும் அவர்கள், வங்காள விரிகுடாவைக் கடந்து சென்று, தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபிக்கத் தொடங்கினார்கள். சுமார் 1025-ஆம் ஆண்டில் அவர்களுடைய சேனைகள் சுமாத்திராவிலும் மலேயாவிலும் போர் செய்து கொண்டிருந்தன. * ஆனால் அவர்

* சோழர்கள் பர்மாவின் தென்பகுதியை வென்றார்கள் என்று சொல்லுவதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லையென்று பெரும்பான்மையான ஆராய்ச்சியாளர்கள் இப்போது ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

களுடைய கடல்கடந்த ஆதிக்கம் நெடுநாள் நிலைக்கவில்லை. மேலும், இலங்கையும் அவர்களுடைய ஆட்சியிலிருந்து விடு பட்டுச் சுயேச்சையடைந்தது. ராதார்களைத் தோற்கடித்துத் தீபகல்பத்தின் வடமேற்கில் தங்களுடைய ஆட்சியை நிறுவிய சாளுக்கிய அரசர்களுக்கும், சோழ அரசர்களுக்கும் அடிக்கடி நடந்த சண்டைகள்தாம் பதினொன்றும் நூற்றுண்டிலும், பன்னிரண்டாம் நூற்றுண்டிலும் தென்னிந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க விஷயங்கள். இந்த நீண்ட நாட் பகைமையில் சாளுக்கியர்கள்தாம் அதிக வெற்றிகளை அடைந்தார்கள். ஆனால் நாளடைவில் அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் புதிய ராஜ்யங்கள் தோன்ற ஆரம்பித்தன. தெற்கில் ஹொயி சாலர்கள் பிரபலமடையத் தொடங்கினார்கள். அவர்கள் முதலில் சாளுக்கியர்களுக்கடங்கி அவர்களுடைய இராஜ்யத்தின் தெற் கெல்லையைக் காப்பவர்களாயிருந்தார்கள். நாளடைவில் அவர்கள் தங்கள் பலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகப் பெருக்கித் தற் போது மைசூர் என்று வழங்கும் பிரதேசத்தில் தங்கள் ஆதிக் கத்தை ஸ்தாபித்தார்கள். அதுபோலவே வடக்கில் யாதவர் களும், கிழக்கில் காகதீயர்களும் சுயேச்சையடைந்தார்கள். கடை சியில் சாளுக்கிய ராஜ்யம் அழிந்ததும் அந்த ராஜ்யத்திலடங்கி யிருந்த பிதேசங்களிற் பெரும்பகுதியை இந்த மூன்று இராஜ்யங் களும் பங்கு போட்டுக்கொண்டன. யாதவர்களும் காகதீயர்களும் நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. விரைவில் அவர்களுடைய ராஜ் யங்களை முகமதியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆனால் ஹொயிசால இராஜ்யத்தில் இருந்த சில பிரமுகர்கள் விஜயநகரம் என்ற ஒரு பெரிய இராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். அந்த இராஜ் யம் பதினான்காம் நூற்றுண்டிலிருந்து பதினாறும் நூற்றுண்டு வரையில் இந்தியாவிலேயே சிறந்ததாக விளங்கியது. அதைத் தவிர வேறே குறிப்பிடத்தக்க பெரிய இந்து இராஜ்யம் ஒன்றும் அந்தக்காலத்தில் இந்தியாவில் இல்லை.

வங்காளத்திலும் பீகாரிலும் பாலவம்சத்தினரின் ஆட்சி பல உயர்வு தாழ்வுகளுடன் பதினொன்றும் நூற்றுண்டு முடியும் வரை யில் நிலைத்திருந்தது. ஆனால், பன்னிரண்டாம் நூற்றுண்டின் இடையில் அவர்கள் அதிகாரம் மிகவும் மங்கியது. வங்காளத் தின் பெரும்பகுதி சேன வம்சத்தினரின் ஆட்சிக்குட் சென்றது. துருக்கியர்களால் தோற்கடிக்கப்படும்வரையில் சேனர்கள் வங் காளத்தில் ஆண்டுவந்தார்கள். சேனர்கள் வங்காளத்தைக் கைப் பற்றிக்கொண்ட அதே சமயத்தில் பீகாரின் பெரும் பகுதியைக்

காசியில் ஆண்டுவந்த கஹர்வார் வம்சத்தினர் கைப்பற்றிக்கொண்டனர். சேனர்களும், கஹர்வார்களும் இந்துக்கள். ஆகவே வங்காளத்திலும் பீகாரிலும்கூடப் புத்தமதத்திற்கு ஆதரவில்லாமல் போய்விட்டது. சேனர்கள் தங்களுடைய ராஜ்யத்தில் சாதிக் கட்டுப்பாடுகளை ஒழுங்குபடுத்திஞர்கள். அவர்கள் பௌத்தர்களைத் துன்புறுத்தியதாகக் கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. எனினும் அவர்கள் காலத்தில்தான் வங்காளத்தில் இந்து மதம் அதிகமாக முன்னேறிற்று என்று கூறலாம்.

வட இந்தியாவில் பீகாருக்கு மேற்கிலுள்ள பகுதியில் பல ராஜபுத்திர ராஜ்யங்கள் இருந்தன. அவைகளிற் சிலவற்றின் அதிகாரம் திடீரென்று ஓங்கியும், அதுபோலவே திடீரென்று மங்கியும் போகும். அவற்றைப்பற்றி அதிகமாக இங்குக் கூற வேண்டிய அவசியமில்லை. ஆனால் கன்ஞேசி, பண்டில்கண்டு, மாளவம், சம்பர், ஆகிய இராஜ்யங்களைப்பற்றிச் சில சொற்கள் கூறிஞல்தான் பின்னர் ஏற்பட்ட துருக்கிய வெற்றிகளைப்பற்றி எளிதில் அறிந்துகொள்ள முடியும். கன்ஞேசியில் கூஜார் வம்சத்தினரின் ஆட்சி பத்தாம் நூற்ருண்டில் மங்கிவிட்டது என்றும், கி. பி. 1019-ஆம் ஆண்டில் கன்ஞேசியே கஜினிமாமூதுக்குக் கீழ்ப்படிந்தது என்றும் நாம் முன்னர்ப் பார்த்தோம். பின்னைய கூஜார் அரசர்கள் அவ்வளவாக முக்கியமானவர்கள் அல்லர். சுமார் 1090-ஆம் ஆண்டில் அவர்களுடைய இராஜ்யத்தைக் கஹர்வார் வம்சத்தினர் கைப்பற்றிக்கொண்டனர் கஹர்வார்கள் இராஜபுத்திரர்கள். அவர்களுடைய தலைநகரம் காசி. அவர்கள் தற்காலத்தில் ஐக்கியமாகாணங்கள் என வழங்கும் பிரதேசத்தை ஆண்டுவந்தார்கள். மேலும் அவர்கள் பாலர்களிடமிருந்து பீகாரையும் கைப்பற்றிக்கொண்டார்களென்று ஏற்கெனவே படித்தோம். இவ்வளவு பெரிய இராஜ்யத்தை அவர்கள் ஆட்சி செய்தார்கள் என்ருலும் அவர்களைப்பற்றிய வரலாறு அதிகமாக நமக்குத் தெரியவில்லை. கி. பி. 1193-ஆம் ஆண்டில் அவர்களுடைய இராஜ்யத்தைத் துருக்கியர்கள் ஜயித்துக்கொண்டார்கள்.

கஹர்வார் இராஜ்யத்திற்குத் தென்மேற்கில் சாந்தல் வம்சத்தினர் ஆண்டுவந்தனர். அவர்களுடைய இராஜ்யம் தற்காலத்தில் பண்டில்கண்டு என்று அழைக்கப்படுகிறது. அவர்கள் ஆதிக்கம் பத்தாம் நூற்ருண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்ருண்டின் இறுதிவரையில் நிலைத்திருந்தது. அவர்கள் சிறந்த கட்டிடங்களைக் கட்டிஞர்கள். காஜுராஹோவில் இருக்கும் கோயில்கள்

அவர்களது பெருமையை இன்னும் பேசுகின்றன. மேலும் அவர்கள் நீர்ப்பாசனத்திற்கான பல ஏரிகளையும், நீர்த்தேக்கங்களையும் கட்டினார்கள். அவை பயிர்த்தொழிலுக்கு இன்றும் பயன்படுகின்றன. கி. பி. 1182-ஆம் ஆண்டில் சௌஹான் வம்சத்தினர் சாந்தல்களைக் கடுமையாகத் தோற்கடித்தார்கள். முடிவில் கி. பி. 1205-ஆம் ஆண்டில் துருக்கியர்கள் சாந்தல்களுடைய முக்கியமான கோட்டையாகிய கலிஞ்சார் என்ற இடத்தைக் கைப்பற்றி, அங்கிருந்த பொருள்களைக் கொள்ளையடித்து, அங்கு வாழ்ந்து வந்த மக்களை அடிமைகளாக்கி, அங்குக் காணப்பட்ட கோயில்களை யெல்லாம் மசூதிகளாக மாற்றிக் கொடுமை செய்தார்கள். அத்துடன் சாந்தல் வம்சத்தினர் ஆட்சி அழிந்தது.

மாளவத்தில் பவார் வம்சத்தினர் பத்தாம் நூற்றாண்டிலும் பதினொன்றாம் நூற்றாண்டிலும் ஆட்சி செய்துவந்தனர். அவர்கள் மாளவத்தின் பழைய தலைநகராகிய உஜ்ஜயினியை விட்டுவிட்டு அதற்குத் தெற்கில் 50-கல் தொலைவிலிருக்கும் 'தார்' என்ற நகரத்தைத் தங்கள் தலைநகராக்கிக் கொண்டார்கள். சாந்தல்களைப்போலவே பவார் அரசர்களும் பல ஏரிகளை நிர்மாணித்து நீர்ப்பாசன வசதிகளைச் செய்தார்கள். அவர்களிற் சிலர் நல்ல கல்வி யறிவு உடையவர்களாகவும் கலைக்கு ஆதரவளிப்பவர்களாகவும் இருந்தார்கள். 1018-முதல் 1060-வரையில் ஆட்சி செய்த 'போஜன்' என்ற அரசன் இந்துக்களால் பெரிதும் பாராட்டப்படுகிறான். அவனை இந்து அரசர்களுக்கு எடுத்துக் காட்டு என்று இந்துக்கள் கூறுகிறார்கள். ஆனால், அவனை முடிவில் பல பகையரசர்கள் ஒன்றுகூடித் தோற்கடித்துவிட்டார்கள். அதற்குப் பின் பவார் வம்சமும் மங்கியது.

சௌஹான் வம்சத்தினர் இராஜபுதனத்தில் சாம்பார் என்ற இடத்தில் வெகுகாலம் ஆண்டுவந்தார்கள். ஆனால் அந்த வம்சத்தில் பிரிதிவிராஜன் என்ற ஒருவனே மிகுந்த புகழ்பெற்றான். அவனுடைய ஆண்மைக்காக இந்தியர்கள் அவனைப் போற்றுகிறார்கள். அவன் போரில் வல்லவன் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். பிரிதிவிராஜன் சாந்தல் வம்சத்தினரைத் தோற்கடித்தான் என்று ஏற்கெனவே கூறினோம். 1191-ஆம் ஆண்டில் படையெடுத்துவந்த துருக்கியர்களை அவன் படுதோல்வி அடையச் செய்து துரத்தினான். ஆனால் அடுத்த ஆண்டில் துருக்கியர்கள் திரும்பிவந்து அவனைத் தோற்கடித்துக் கொன்றனர். அந்தச் சண்டை இந்திய வரலாற்றில் மிக முக்கியமான சண்டைகளில் ஒன்று.

இதுவரையில் கூறியவற்றால் பதினொன்றும் நூற்றாண்டிலும், பன்னிரண்டாம் நூற்றாண்டிலும் வட இந்தியா என்ன நிலையிலிருந்தது என்று ஒருவாறு உணரலாம். அந்தக்காலத்தில் பல இராஜ்யங்கள் தோன்றி மறைந்தன. அந்த இராஜ்யங்களில் பல சிறந்த அரசர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் போரிட்டுக் கொண்டிருந்தார்களே தவிர, அவர்களெல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து துருக்கியர்களை எதிர்க்க நினைக்கவில்லை. ஒன்றுபட்டால் தானே வாழ்வு!

அதிகாரம்—21

டில்லியில் துருக்கியர் ஆட்சி

கோரி வம்சத்தினர்கள் துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முதலில் கஜினி வம்சத்தினர்க்கடங்கிய சிற்றரசர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்கள் முகமது கோரியின் தலைமையில் வெகு விரைவில் பல இராஜ்யங்களை வென்று ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்துவிட்டார்கள். இந்தியாவில் அவர்களடைந்த முன்னேற்றம் மிகவும் ஆச்சரியமானது. 1173–ஆம் ஆண்டில் கோரி வம்சத்தினர் கஜினியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். 1175–இல் மூல்தானை வென்றார்கள். 1186–இல் லாகூரைப் பிடித்துக்கொண்டார்கள். அத்துடன் கஜினி வம்சத்தினரின் ஆட்சி அழிந்தது. கங்கை நதிக்கும் சிந்து நதிக்கும் இடையிலுள்ள நீர்-பிரி மேட்டுக்கருகில் தராவோரி என்ற இடத்தில் பிரிதிவிராஜனும் அவன் துணைவர்களும் சேர்ந்து 1191-இல் முகமது கோரியைத் தோற்கடித்தார்கள். ஆனால் அடுத்த ஆண்டில் அதே இடத்தில் அதே பகைவர்களை எதிர்த்து முகமதுகோரி ஒரு சிறந்த வெற்றியடைந்தான். 1193–இல் டில்லி கோரி வம்சத்தினரின் இந்தியத் தலைநகரமாயிற்று. அதற்கு முன்னரே அவர்கள் டில்லிக்குக் கிழக்கில் அயோத்தி வரையிலுள்ள பிரதேசங்களைக் கைப்பற்றி விட்டார்கள். அத்துடன் பீகாரின்மீதும் படையெடுத்துக் கொள்ளை யடித்துக்கொண்டு திரும்பி யிருந்தார்கள்.

1194-இல் கோரிவம்சத்தினர் கஹார்வார் வம்சத்தினரைத் தோற்கடித்துக் காசியிற் புகுந்து கொள்ளையடித்தார்கள். 1202-இல் அவர்கள் சேனவம்சத்தினரை வங்காளத்தின் கிழக்குக் கோடிக்குத் துரத்திவிட்டார்கள். இவ்வாறு முப்பது ஆண்டுகளுக்

குள் கோரிவம்சத்தினர் மேற்கே கஜினியிலிருந்து கிழக்கே வங்காள விரிகுடா வரையிலுள்ள பரந்த பிரதேசத்தில் தங்களுடைய அதிகாரத்தை ஸ்தாபித்தார்கள். அதேகாலத்தில் அவர்கள் இன்னும் பல வெற்றிகளையும் அடைந்தார்கள். இராஜபுதனத்திலிருந்த சாம்பார் இராஜ்யத்தை அவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். குவாலியர்க் கோட்டை அவர்களுக்குக் கீழ்ப்படிந்தது. சாந்தல் வம்சத்தினருக்குச் சொந்தமான கலிஞ்சார்க்கோட்டையை அவர்கள் பிடித்துக்கொண்டு குஜராத்தின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்தார்கள். இவ்வாறு வட இந்தியாவின் பெரும் பகுதி முஸ்லிம் ஆதிக்கத்திற்குள் வந்துவிட்டது.

கோரி வம்சத்தினரின் ஆட்சி இந்தியாவில் மாத்திரமின்றி அதற்கு வெளியிலுள்ள பிரதேசங்களிலும் பரவியிருந்தது. இந்தியாவுக்கு வெளியில் கோரி முகம்மதுவுக்கு ஏற்பட்ட ஒரு தோல்வியைப் பயன்படுத்திக்கொண்டு அவனுக்கெதிராகப் பஞ்சாபில் ஒருகலகம் நடந்தது. அதை யடக்குவதற்குக் கோரி முகமதுவே நேராகப் பஞ்சாபிற்கு வந்தான். ஆனால் கலகத்தையடக்கிய பின், 1206-ஆம் ஆண்டு மார்ச்சுமாதத்தில் சிந்து நதிக்கருகில் கோரி முகமது கொலைசெய்யப்பட்டான். அத்துடன் கோரி வம்சத்தின் அதிகாரமும் அழிந்தது. கோரி முகமதுவின் இராஜப் பிரதிநிதிகள் ஆங்காங்குச் சுயேச்சையடைந்தார்கள். அவர்களில் ஒருவனான குத்புதீன் ஐபக் என்பவன் டில்லி சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டான். மூல்தானிலிருந்து வங்காளம் வரையில் ஆங்காங்கிருந்த முஸ்லிம் கவர்னர்கள் குத்புதீனைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொண்டார்கள். இவ்வாறு டில்லி சுல்தானியம் தோன்றியது. அந்த இராஜ்யத்தின் வரலாற்றைக் கூறப்புகுமுன் அதன் பொதுத்தன்மைகளைப்பற்றி ஓரளவு கூற முயல்கிறோம்.

அரசன் தன்னிஷ்டம்போல் ஆட்சி செய்பவனாக இருந்தான். அவன் விரும்பினால் இஸ்லாமியச் சட்டங்களுக்கு அடங்கி நடக்கலாம். அதைத்தவிர அரசனுக்கு வேறு கட்டுப்பாடு ஒன்றும் கிடையாது. அரசாங்க அலுவல்களைக் கவனிக்கப் பொருளாதார இலாகா, இராணுவ இலாகா என்பவை போன்ற பல இலாகாக்களிருந்தன. ஒவ்வொரு இலாகாவும் ஒரு மந்திரியின் மேற்பார்வையில் இருந்தது. வரி வசூலும் வரவு செலவும் சேர்ந்து ஓர் இலாகாவாக இருந்தது. அதற்கு முதலமைச்சன் அல்லது வஜீர் தலைவன். அரசாங்க அதிகாரம் இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்டது, அரசன் ஒரு சேனையை வைத்திருந்தான்,

அதுபோலவே மாகாண கவர்னர்களும் சேனைகளை வைத்திருந்தார்கள். துருக்கியர் சேனையில் ஆரம்பத்தில் குதிரைப்படைகளே இருந்தன. பின்னர் யானைப்படைகளும் சேர்ந்தன. காலாட்படைகளில் துருக்கியர்களுக்கு நம்பிக்கையே கிடையாது. பதின்மூன்றும் நூற்றாண்டில் சேனைகளுக்குச் சம்பளம் ரொக்கமாகக் கொடுக்கப்படவில்லை. அதற்குப்பதிலாகப் படைவீரர்கள் குறிப்பிட்ட கிராமங்களில் வரியை வசூல்செய்து அதைக் கஜானுவுக் கனுப்பாமல் அவர்களே உபயோகப்படுத்திக் கொண்டார்கள். படைவீரர்களிற் பெரும்பான்மையோர் தங்களுடைய கிராமங்களிலேயே வசித்தார்கள். அரசனுடைய உத்தரவு வந்தால் தலைநகருக்குச் செல்வார்கள். இந்த முறையினுல் படை திரட்டவேண்டிய அவசியம் எற்பட்ட காலங்களில் தவிர்க்க முடியாத தாமதம் ஏற்பட்டது. அதனுல் அரசாங்கத்துக்கே ஆபத்து வரும்போலிருந்தது. ஆகவே, பதினுன்காம் நூற்றுண்டில் இந்த முறை கைவிடப்பட்டது. அதற்குப்பதிலாக தலைநகரிலேயே நிரந்தரச் சேனையை வைத்து அதற்கு ரொக்கமாகச் சம்பளம் கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

இராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஆனுல் அந்தக்காலத்து மாகாணங்களுக்கும் தற்காலத்து மாகாணங்களுக்கும் வேறுபாடு உண்டு. தற்காலத்து மாகாணத்தின் எல்லாப்பகுதிகளிலும் அரசாங்க அதிகாரமும் சட்டங்களும் ஒரே மாதிரி அமுலிலிருக்கின்றன. ஆனுல் அந்தக்காலத்தில் அவ்வாறிருந்தது என்று கூறமுடியாது. அந்தக் காலத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு ஒரு கவர்னர் இருப்பான். அவன் அந்தப் பிரதேசத்தின் மத்தியில் ஒரு கோட்டையில் வசிப்பான். கோட்டையின் பெயராலேயே மாகாணமும் அழைக்கப்படும். கவர்னருடைய அதிகாரம் அந்தப்பிரதேசம் முழுவதும் செல்லும் என்று கூறமுடியாது. கவர்னருடைய மதிப்புச் சில இடங்களில் அதிகமாகவும் சில இடங்களிற் குறைவாகவும் இருக்கும். கலகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதும், வரிவசூலிப்பதும் கவர்னருடைய கடமைகள். அந்தக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்காக அவன் ஒரு குறிப்பிட்ட அளவில் சேனையை வைத்துக் கொள்ளலாம். மாகாண நிர்வாகத்தின்தன்மை கவர்னருடைய தனிப்பட்ட பண்புகளைப் பொறுத்தது. அவன் திறமையுடையவனுயிருந்தால் மாகாண நிர்வாகமும் வெற்றிகரமாக இருக்கும். மாகாணத்தின் ஏதாவதொரு பகுதியில் கலகம் ஏற்படும் என்று எப்போதும் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். அப்

படிக் கலகம் ஏற்பட்டால் உடனே அடக்குவதற்கு நல்லபயிற்சி பெற்ற படையும் அதைத் திறம்பட நடத்தும் சாமர்த்தியமும் கவர்னருக்கிருக்கவேண்டும். கலகங்கள் அடிக்கடி ஏற்படுவதும் ஏற்படாமலிருப்பதும் கவர்னருக்கும் மாகாணத்திலிருந்த செல்வாக்குள்ள பெரியமனிதர்களுக்கும் இடையிலிருந்த தொடர்பைப் பொறுத்தது. மாகாணத்தில் வசூலான வரியின் ஒரு பகுதியைத் தன்னுடைய சேனைகளின் சம்பளத்திற்கும் வேறு செலவுகளுக்கும் வைத்துக்கொண்டு, மீதியைக் குறிப்பிட்ட காலங்களில் கவர்னர் அரசாங்கத் தலைநகருக்கு அனுப்பவேண்டும். நடைமுறையில் கவர்னர் தன்னுடைய செலவுக்கு எடுத்துக்கொண்ட தொகை போக மீதியிருந்த எல்லாப் பணத்தையும் கஜானுவுக்கு அனுப்புவதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகையையே அனுப்புவது வழக்கமாக இருந்தது. ஆகவே அந்தக்காலத்து கவர்னர் நிரந்தர நிலவரி ஏற்பாட்டின்கீழ்த் தற்காலத்திலுள்ள ஜமீன்தாரின் நிலையில் இருந்தான்.

மேலே கூறியவற்றால், அரசாங்கத்தின் பலம் கவர்னர்களின் திறமையையும் அவர்களுடைய இராஜ விசுவாசத்தையும் பொறுத்ததாக இருந்தது என்று தீர்மானிக்கலாம். ஆனால் அந்தக் காலத்தில் கவர்னர்களெல்லோரும் அரசனிடத்தில் உண்மையான விசுவாசம் உடையவர்கள் என்று கூற முடியாது. கவர்னர் திறமையற்றவனாக இருந்தால் மாகாணத்தில் கலகங்கள் மலியும், அரசாங்கத்தின் வருவாயும் குறையும். கவர்னர் திறமையுடையவனாயிருந்தும், அரசனிடத்தில் விசுவாசமில்லாதவனாயிருந்தால் அவனால் அரசனுக்கே ஆபத்து ஏற்படலாம். ஏனெனில் அரசனைத் தொலைத்துவிட்டு அவனே சிம்மாசனத்தைக் கைப்பற்ற முயலலாம். சில சமயங்களில் யார் அதிகமான பணம் கொடுக்க ஒத்துக்கொண்டார்களோ அவர்களையே கவர்னர்களாக நியமிக்கும் வழக்கம் இருந்தது. இது மாகாண வரி வசூலை ஏலத்தில் விடுவதைப் போன்றது. ஆனால் இந்த நிலை அதிக நாள் இருக்கவில்லை. திறமையுள்ளவர்களையே அரசர்கள் சாதாரணமாக கவர்னர்களாக நியமித்தார்கள். துருக்கியர் ஆட்சியின் ஆரம்பத்தில் கவர்னர்களாக நியமிப்பதற்கேற்ற தகுதிவாய்ந்த சுயேச்சைபெற்ற பிரபுக்கள் இருந்தார்கள் என்று கூற முடியாது. ஆரம்பத்திலிருந்த கவர்னர்களெல்லாரும் அரசர்களுடைய அடிமைகளாகவே இருந்தார்கள்.

இந்தக் காலத்தில் அடிமை என்றால் மிகத் தாழ்வாக நினைக்கிறோம். ஆனால் அந்தக் காலத்தில் அவ்வாறில்லை. முஸ்லிம் சட்

டப்பிரகாரம் முகமதியர்களையே முகமதியர்கள் அடிமைகளாக் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது உண்மைதான். ஆனால் அந்தக் காலத்தில் நடைமுறையில் மற்ற மதத்தினர் மாத்திரமன்றி முகமதியர்களும் அடிமைகளாக இருந்தார்கள். சண்டையிற் பிடிபட்டவன் அரச குமாரனா யிருந்தாலும் அடிமையாகத் தான் நடத்தப்படுவான். அவனை அடிமையாக வைத்திருப்பது அவனுடைய எஜமானனான அரசனுக்கே ஆபத்தாக முடிந்தாலும் முடியலாம். ஆகவே அவனைக் கொன்றுவிடுவது நல்லது. அடிமைகள் கூட எளிதில் அரசர்களாக வரமுடியும். கஜினி அரசனான சபக்டிஜின் ஆதியில் அடிமையாக இருந்தவன்தான். டில்லி ராஜ்யத்திற்கு முதல் அரசனான குத்புதீனும் அடிமையாக இருந்தவன்தான், மேலும் அவனுக்குப் பின் நூறு வருஷகாலம் டில்லி இராஜ்யத்தை ஆண்ட அரசர்களெல்லாரும் அடிமைகளே.* ஒவ்வோர் அரசனும் ஏராளமான அடிமைகளை வைத்திருந்தான். அரசன் தன்னுடைய கவர்னர்களை இந்த அடிமைகளிலிருந்தே தேர்ந்தெடுப்பது வழக்கம். நாளடைவில் சுயேச்சை பெற்ற பிரபுக்கள் தோன்றலானார்கள். அவர்களிலும் பெரும்பான்மையோர் அடிமைகளின் வழி வந்தவர்கள்தாம்.

அந்தக்காலத்து அரண்மனை அரசியல் துறையில் பயிற்சியளிக்கும் ஒரு பள்ளிக்கூடம் போன்றது. அரண்மனையில் ஏராளமான இளைஞர்கள் இருப்பார்கள். அவர்களிற் சிலர் இந்தியர்கள். மற்றவர்கள் சாமர்க்கண்டு, பாக்தாது முதலிய தூரமான இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள். அவர்கள் அரசனுடைய நேரடியான மேற்பார்வையில் அரண்மனையில் ஊழியம் செய்பவர்கள். ஆரம்பத்தில் மிகத் தாழ்ந்த உத்தியோகங்களில் அவர்கள் இருப்பார்கள். பின்னர் ஆடையிலாக்கா குதிரையிலாக்கா முதலிய அரண்மனை யிலாக்காக்களுக்குத் தலைவர்களாக உயர்த்தப்படுவார்கள். அதன் பின்னர் அவர்களுக்குக் கவானர் பதவி அல்லது சேனாதிபதிப் பதவிபோன்ற மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகள் வழங்கப்படும். அதற்குள் அவர்களுக்கும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை யளிக்கப்படும். சில

* 1320-ஆம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய நூறு வருஷகாலம் டில்லியில் ஆட்சி செய்த துக்லக் 'வம்சத்தை ஸ்தாபித்தவன் ஓர் அடிமையின் மகன் என்று ஒரு செய்தி வழங்குகிறது. இந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால் டில்லியில் ஆண்ட துருக்கிய அரசர்கள் அனைவருமே அடிமைகளாகவோ அல்லது அடிமைகளின் சந்ததியார்களாகவோ இருந்தார்கள் என்று கூறிவிடலாம்.

விடுதலை பெருத அடிமைகளும் உயர்ந்த பதவிகளைப் பெறுவ துண்டு. அரண்மனையில் ஊழியஞ் செய்த இளைஞர்கள் கண்டிப் பான கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டும். சிறு குற்றங் களுக்கும் கடுமையான பிரம்படி கொடுக்கப்படும். ஆனால் அரண் மனையில் உத்தியோகம் பெற்ற இளைஞன் ஒவ்வொருவனுக்கும் அரசாங்கத்திலிருந்த மிக உயர்ந்த பதவிகளை அடைவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆகவே அவர்கள் எல்லோரும் தங்களுடைய முன்னேற்றத்தில் மிகுந்த சிரத்தையுடையவர்களா யிருந்தார்கள். உயர் பதவிகளைச் சிலர் தங்களுடைய திறமையால் அடைந்தார் கள்; சிலர் அரசர்களுடைய தனிப்பட்ட பிரியத்தால் அடைந்தார் கள்; இன்னும் சிலர் இந்த இரண்டுவகையாலும் அடைந்தார் கள். அரசர்கள் மனித இயல்பை நன்ருக அறிந்தவர்களாகவும், ஆசை, வெறுப்பு முதலிய குணங்களுக்கு அடிமைகளாகாதவர் களாகவும் இருந்தால் தங்களுக்குத் தேவையான திறமையும் விசு வாசமும் உடைய ஆட்களைத் தேர்ந்தெடுத்துப் பொறுப்பான பதவிகளைக் கொடுப்பதற்கு இந்தமுறை பெரிதும் பயன்படும். அந்தக்காலத்தில் இதைப்போல் பயன்தரக்கூடிய வேறு முறை இல்லையென்றே கூறலாம்.

அரண்மனை வாழ்வில் அந்தக்காலத்திற் காணப்பட்ட ஒரு குறையைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது அவசியம். இந்தியா வுக்கு வந்த துருக்கியர்கள் முகமதிய மதத்தில் தங்களுக்கு உண்மையான நம்பிக்கை இருந்தது என்று கூறிக்கொண்ட போதிலும் அவர்களிடம் பல கெட்ட பழக்கங்கள் இருந்தன. அவர்கள் விருந்துகளிலும் மற்ற சமயங்களிலும் ஏராளமாக மதுபானம் செய்தார்கள். அவர்களிற் சிலர், — முக்கியமாக உயர் பதவி பெற்றவர்கள், — ஆணையாண் புணரும் பழக்க முடையவர்களாக இருந்தார்கள். இந்தப் பழக்கத்தை இந்தக் காலத்து இந்துக்கள் வெறுப்பது போலவே அந்தக்காலத்து இந்துக்களும் வெறுத்திருப்பார்கள். அரண்மனை ஊழியத்திற் காக விலைக்கு வாங்கப்பட்ட இளைஞர்களில் சிலரேனும் அவர் களுடைய அழகுக்காகத்தான் வாங்கப்பட்டிருப்பார்கள் என்று நிச்சயமாகக் கூறலாம். இத்தகைய அடிமைகளின்மீது வைத்த தனிப்பட்ட பிரியத்தால் அரசர்கள் அவர்களுக்குத் தகுதியிருந் தாலும் இல்லாவிட்டாலும் உயர்ந்த பதவிகளை வழங்கினுர்கள். அதனுல் ஏற்பட்ட தீமைகள் பல. அதனுல் அரசாங்கத்துக்கே சில சமயங்களில் ஆபத்து ஏற்பட்டது. எனினும் அத்தகைய அடிமைகளிற் சிலர் மிகத் திறமைவாய்ந்தவர்களாக இருந்தார்க

ளென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. முதல் முதலாகத் தென்னிந்தியாவின்மீது படையெடுத்துத் தமிழகம் வரையில் வந்து வெற்றியுடன் திரும்பிச்சென்ற முகமதிய வீரன் ஓர் அலி. அவனை இயற்கைக்கு மாறான புணர்ச்சிக்காக அரசன் அதிகமான விலை கொடுத்து வாங்கித் தனிப்பிரியத்துடன் வைத்திருந்தான் என்பது சரித்திரம் காட்டும் உண்மை. மற்றும் பல திறமையுள்ள அடிமைகளும் அந்தக்காலத்தில் இருந்தார்கள். அரசன் அறிவாளியாயிருந்தால் திறமையுள்ள அடிமைகளுக்கே உயர்பதவி வழங்குவான்.

அடிமைகளுக்குப் பொறுப்புள்ள உயர்ந்த பதவிகளை வழங்கியதால் வேறொரு தீமையும் ஏற்பட்டது. உயர்பதவி யடைந்த அடிமைகள் தங்களுக்கு நன்மை செய்த தங்களுடைய எஜமானர்களான அரசர்களிடத்தில் அதிக விசுவாசமுள்ளவர்களாக இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களுடைய சந்ததியார்களிடத்திலும் அவ்வாறு விசுவாசமாக இருந்தார்களென்று கூறமுடியாது. ஆகவே ஓர் அரசன் இறந்தால் அவனுடைய மூத்தமகன்தான் பட்டத்திற்கு வருவான் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. அரசன் இறப்பதற்கு முன் தனக்குப் பின் பட்டத்திற்கு வருவதற்குத் தன்னுடைய குடும்பத்தில் ஒருவனை நியமிப்பது வழக்கம். ஆனால் அவ்வாறு நியமனமும் அங்கீகாரமும் பெற்ற புதிய அரசனை மந்திரிகளும் மற்ற பிரபுக்களும் விரும்பாமலிருக்கலாம். அதனால் புதிய அரசனுடைய நிலைமைக்கு ஆபத்து ஏற்படும். புதிய அரசன் திறமையற்றவனாக இருந்தால் அவனால் அதிகநாள் தன்னுடைய பதவியைக் காப்பாற்றிக் கொள்ளமுடியாது. பழைய அரசனுடைய 'அடிமைகளெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தங்களுக்கு விருப்பமான ஒருவனை அரசனாக்குவதற்கு முயல்வார்கள். அதனால் அரசாங்கத்தில் குழப்பம் ஏற்படும். இவ்வாறு துருக்கியர் ஆட்சிக்காலத்தில் பல குழப்பங்கள் ஏற்பட்டன.

துருக்கி அரசர்கள் தங்களுடைய இந்துக் குடிகளை எவ்வாறு நடத்தினார்கள் என்று இப்போது பார்ப்போம். நகரங்களிலிருந்த துருக்கியர் தாங்கள் ஆளும் வகுப்பினர் என்ற கர்வம் உள்ளவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்துக்களைத் துன்புறுத்துவது அவர்களுடைய சாதாரண வழக்கமாயிருந்தது என்று கூறமுடியாது. தலை நகரமாகிய டில்லியிலிருந்த பிராமணர்களிட மிருந்து வெகுநாள் வரையில் ஜிஸியா வரி வசூலிக்கப்படவில்லை. ஆனால் மற்ற இந்துக்களிடமிருந்து அந்த வரி கண்டிப்பாக வசூலிக்கப்

பட்டது. இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். சண்டைக் காலத்தில் முகமதிமர்கள் இந்துக் கோயில்களை இடித்தார்கள் என்பதும், விக்கிரகங்களை உடைத்தார்கள் என்பதும் உண்மை யெனினும், சமாதான காலங்களிலும் அவ்வாறு செய்தார்க ளென்று கூற முடியாது. இந்து வியாபாரிகளின் மூலம் அரசாங் கத்துக்கு வருவாய் கிடைத்தது என்பதை முகமதியர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆகவே சில சமயங்களில் சில இடங்களில் அவர்களைச் சில முகமதியர்கள் துன்புறுத்தினார்கள் என்றாலும், சாதாரணமாக அவர்கள் அமைதியாக வாழ்வதற்கேற்ற வசதி இருந்தது. அரச பதவிக்குப் போட்டி ஏற்பட்ட சமயங்களில் நாட்டில் அமைதி குலைவது இயல்பே. அந்தச் சமயங்களில் இந் துக்களுக்குத் துன்பம் ஏற்படுவதும் இயல்பே.

கிராமங்களின் ஆட்சியை இந்துக்களும் முகமதியர்களும் சேர்ந்தே நடத்தினார்கள் என்று கூறலாம். குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரியின் அளவை நிர்ணயிப்பதும், அதை வசூ லிப்பதும் முகமதிய கவர்னருடைய முக்கியமான கடமை. அத் துடன் நாட்டில் அமைதியை நிலைநாட்டிக் குடியானவர்களுக்குத் துன்பம் ஏற்படாமல் காப்பதும் கவர்னருடைய கடமை. "படை வீரர்களும், குடியானவர்களும் அரசாங்கத்தின் இரண்டு கைகள்" என்று துருக்கியர்கள் கருதினார்கள். ஆகவே அவர்கள் இந்துக் குடியானவர்களுக்குத் தேவையான வசதிகளை அளித்தார்கள். குடியானவர்கள் செலுத்திய வரிதான் அரசாங்கத்தின் உயிர்நாடி. அந்த வரியினால் வரும் வருவாய் அதிகமாக அதிகமாக அரசாங்கத் திற்கு நல்லது. ஆகவே புதிய நிலங்களைச் சாகுபடி செய்வதிலும், அவற்றில் அதிக வருவாய் தரக்கூடிய பயிர்களை உற்பத்தி செய்வ திலும் இந்துக் குடியானவர்களை முகமதியர்கள் ஊக்கினார்கள். சில சமயங்களில் முகமதிய அரசர்கள் இந்துக் குடியானவர்களைப் பெரிதும் துன்புறுத்தினார்களென்று படிக்கிறோம். எனினும் இரு திறத்தாரும் சௌகரியமாக வாழ்வதற்கேற்ற ஓர் எழுதாத ஒப்பந் தம் அவர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது என்று பொதுவாகக் கூற லாம். இது பழைய இஸ்லாமியச் சட்டத்திற்கு விரோதமானது என்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

ஆனால் இராஜ்யத்தின் பெரும்பாலான பகுதிகளில் முக மதிய கவர்னர்களே இந்துக் குடியானவர்களிடமிருந்து நேரடி யாக வரி வசூல் செய்யவில்லை, ஆங்காங்குச் செல்வாக்குடைய இந்துக்கள் பலர் இருந்தனர். அவர்களிற் சிலரை அரசர்களென்றே கூறலாம். வேறுசிலர் ஒரு சில கிராமங்களுக்குத் தலைவர்களாக

இருந்தார்கள். அவர்களுடன் முகமதிய கவர்னர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டு கப்பம் என்ற முறையில் குறிப்பிட்ட தொகைகளை அவர்களிடமிருந்து வசூல் செய்தார்கள். அவர்களனைவரையும் துருக்கியர்கள் " ஜமீன்தார்கள் " (பெருநிலக் கிழவர்கள்) என்ற ஒரேபெயரால் அழைத்தார்கள். ஆனால் " ஜமீன்தார் " என்ற சொல் பிற்காலத்தில் பல பொருள்களில் வழங்கி வந்திருக்கிறது. ஆகவே, அவர்களைப் பொதுவாகத் " தலைவர்கள் " என்று அழைப்பதுதான் சௌகரியமானது. அத்தகைய இந்துத் தலைவர்களால் அரசாங்கத்துக்கு ஆபத்து ஏற்படலாம் என்று துருக்கியர் அறிந்திருந்தனர். ஏனெனில் அவர்கள் சமயம் வாய்த்தபோது அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள் அல்லவா? ஆகவே அவர்களை ஒரேயடியாய் அழித்துவிட வேண்டும் என்று துருக்கியரிற் சிலர் கருதினார்கள். ஆனால் அவர்கள் செலுத்தவேண்டிய தொகையைச் சரிவரச் செலுத்திவிட்டு அரசாங்கத்திற்கு உண்மையாக நடப்பார்களானால் அவர்களுக்குட்பட்ட பிரதேசங்களில் அவர்களிஷ்டம்போல் ஆட்சி செய்வதற்கு அவர்களை அனுமதிப்பதில் தீமையில்லை என்று வேறு சிலர் கருதினார்கள். இந்த இரண்டு முரண்பட்ட கொள்கைகளும் துருக்கியர் ஆட்சிக்காலம் முழுவதும் இருந்தன. ஆனால், பெரும்பாலும் இந்துத் தலைவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய கப்பத்தைச் செலுத்திவிட்டு, தங்களுக்கடங்கிய பிரதேசங்களில் தங்களிஷ்டம்போல் ஆட்சிசெய்தார்கள் என்றும், இராஜ்யத்தின் பெரும்பகுதியில் இந்த முறைதான் வழக்கிலிருந்தது என்றும் பொதுவாகக் கூறுவதோடு அமையலாம்.

துருக்கியர்களுக்கு இந்துக்கள் அனைவரும் கீழ்ப்படிந்து விட்டார்கள் என்று கூறமுடியாது. துருக்கியர்களுக்குக் கீழ்ப்படியாதவர்களில் இராஜபுத்திரர்கள் முக்கியமானவர்கள். அவர்களிற் பலர் துருக்கியர்களால் எளிதில் அடையமுடியாத இயற்கையரணுடைய பிரதேசங்களில் புதிய இராஜ்யங்களை ஏற்படுத்தினார்கள். தற்போது இராஜபுதனத்திலும் இமாலயப் பிரதேசத்திலும் இருக்கும் இராஜ்யங்களிற் சில இவ்வாறு ஏற்பட்டவைதாம். அதுபோலவே அயோத்தியிலும், பீகாரிலும் இன்று காணப்படும் சில பெரிய ஜமீன்களும் அந்தக்காலத்தில் ஏற்பட்டவைதாம். இவ்வாறு ஏற்பட்ட புதிய இராஜ்யங்களின் நிலை எப்போதும் ஒரே மாதிரி இருக்கவில்லை. சில முகமதிய அரசர்கள் காலத்தில் அவை நடைமுறையில் பூரண சுயேச்சை பெற்றவையாக இருந்தன. வேறு சில முகமதிய அரசர்கள் காலத்தில் அவை சில

தனிப்பட்ட சலுகைபெற்ற பகுதிகளாக இருந்தன. ஆனால் அவற்றின் நிலை அடிக்கடி மாறினபோதிலும் அவைகள் இன்று வரையிலும் தனிராஜ்யங்களாகவே இருந்துவந்திருக்கின்றன.

துருக்கியர்களுடைய வெளிநாட்டுக் கொள்கை இந்து அரசர்களுடைய வெளிநாட்டுக் கொள்கையையே பெரிதும் ஒத்திருந்தது. இந்து அரசர்களைப்போலவே அவர்களும் அண்மையிலிருந்த இராஜ்யங்களை வென்று தங்களுடைய இராஜ்யத்தைப் பெருக்குவதை முக்கியமான வேலையாகக் கருதினார்கள். ஆனால் அவர்கள் இந்தத்துறையில் அதிகமான கவனம் செலுத்த முடியவில்லை. அதற்குக் காரணம் வடமேற்கு எல்லையில் அவர்களுடைய இராஜ்யத்திற்கு ஏற்பட்ட ஆபத்துத்தான். சிங்கிஸ்கான் (சுமார் 1155—1227) என்பவனுடைய தலைமையில் மங்கோலியர்களடைந்த வெற்றிகளும், அவர்கள் நிறுவிய சாம்ராஜ்யமும் உலக சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கின்றன. சிங்கிஸ்கான் இந்தியாவின்மீது படையெடுக்கவில்லை. ஆனால் சுமார் 1200-ஆம் ஆண்டிலிருந்து மங்கோலியர்கள் வடமேற்குக் கணவாய்களின் வழியாக இந்தியாவுக்குள் நுழையத் தொடங்கினார்கள். அவர்கள் சிந்துநதிப் பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கே தங்களுடைய சேனைகளை வைத்திருந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் பஞ்சாபின் சில பகுதிகளையும் கைப்பற்றி அங்கும் தங்களுடைய சேனைகளை வைத்திருந்தார்கள். ஒரு சில சமயங்களில் அவர்களால் டில்லிக்கும் ஆபத்து ஏற்படும்போலிருந்தது. இவ்வாறு அவர்கள் இந்தியாவிலிருந்த துருக்கியர்களையும் இந்தியாவுக்கு வெளியில் ஆப்கானிஸ்தானத்திற்கு அப்பாலிருந்த நாடுகளிலிருந்த அவர்களுடைய இனத்தார்களையும் பிரித்து அவர்களுக்குள் தொடர்பு ஏற்படாமல் தடுத்துவிட்டார்கள். ஆகவே, மங்கோலியர்களால் டில்லி இராஜ்யத்திற்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சிய துருக்கியர்கள் பதின்மூன்றும் நூற்றாண்டில் இந்தியாவிற் புதிய பிரதேசங்களை ஜயிப்பதற்கு பதிலாகத் தங்களுக்கு ஏற்கெனவே இருந்த இராஜ்யத்தைப் பலப்படுத்துவதிலேயே அதிகக் கவனம் செலுத்தினார்கள். ஆனால் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கியர்கள் டில்லி ராஜ்யத்தைப் பெருக்குவதில் முனைந்தார்கள். வடமேற்கு எல்லையைக் காப்பதற்கான ஏற்பாடுகள் அதிகப்படுத்தப்பட்டன. மாளவமும் குஜராத்தும் டில்லி இராஜ்யத்திற் சேர்க்கப்பட்டன. முகமதியச் சேனைகள் தெற்கில் மதுரை

வரையில் வெற்றிகரமாகப் படையெடுத்துத் திரும்பின. முகமதியர்களுடைய தென்னிந்திய வெற்றிகளிற் சில நிலைத்த பயனைத் தரவில்லை யெனினும், தட்சிணத்தில் கிருஷ்ணாநதி வரையிலும் முகமதிய அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது.

அந்தக் காலத்துப் போர் வரலாற்றைச் சரியானபடி அறிந்து கொள்ளவேண்டுமானால் டில்லியிலிருந்து தென்னிந்தியாவுக்குச் சென்ற பழைய வழிகளைப்பற்றியும், அந்த வழிகளிலிருந்த பிரதேசங்களின் தன்மைகளைப்பற்றியும் முதலில் அறிந்துகொள்ளுவது அவசியம். அரவல்லி மலைத்தொடர் இராஜபுதனத்தை இரண்டாகப் பிரிக்கிறது. அந்தத் தொடரைச் சேர்ந்த சில குன்றுகள் டில்லி வரையிலும் வியாபித்திருக்கின்றன. அரவல்லித்தொடருக்கு மேற்கிலுள்ள வளமற்ற பகுதி போர் செய்வதற்கு ஏற்றதன்று. அதன் கிழக்கிலுள்ள பகுதியில் டில்லியிலிருந்து குஜராத்துக்குச் செல்லும் மூன்று வழிகள் இருக்கின்றன. தற்காலத்தில் அந்த மூன்று வழிகளிலும் மூன்று இருப்புப்பாதைகளிருக்கின்றன. அவைகள் அஜ்மீர், ரட்லாம், ஜான்ஸி ஆகிய மூன்று நகரங்களுக்குச் செல்லுகின்றன. பழங்காலத்தில் அந்த மூன்று வழிகளிலும் அஜ்மீர், ரன்தம் பார், குவாலியர் என்ற மூன்று கோட்டைகள் இருந்தன. இந்த மூன்று கோட்டைகளும் துருக்கியர் வசமிருந்தால் அவர்கள் எளிதாக குஜராத்தின்மீதும் மாளவத்தின்மீதும் படையெடுக்க முடியும். ஆனால் அந்தக்கோட்டைகள் எதிரிகள் வசத்திலிருந்தால் டில்லியிலிருந்து மாளவத்திற்கும் குஜராத்திற்கும் செல்லும் மூன்று வழிகளில் எந்த வழியையும் துருக்கியர்கள் உபயோகிக்க முடியாது. அவ்வாறு உபயோகித்தார்களானால் அவர்களுக்கு ஆபத்து ஏற்படுவது நிச்சயம். ஆகவே துருக்கியர்கள் தெற்கிலுள்ள நாடுகளை ஜயிக்க வேண்டுமானால் முதலில் அந்த மூன்று கோட்டைகளிலிருந்த இந்துத் தலைவர்களைத் தோற்கடிக்கவேண்டும், இன்றேல் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். ஆகவே அந்த மூன்று கோட்டைகளுக்காகப் பல சண்டைகள் நடந்தன. அவைகள் அடிக்கடி கைம்மாறிக் கொண்டே இருந்தன. பலம் மிகுந்த முகமதிய அரசர்கள் காலத்தில் அந்த மூன்று கோட்டைகளில் ஒன்றோ, இரண்டோ அல்லது மூன்றுமோ முகமதியர் வசத்திலிருக்கும். திறமையற்ற முகமதிய அரசர்கள் காலத்தில் அவைகளை மறுபடியும் இந்துத் தலைவர்கள் கைப்பற்றிக்கொள்வார்கள்.

கடைசியாகத் துருக்கியர் தலைநகரமாகிய டில்லியைப் பற்றிச் சில சொற்கள் கூறுவது பொருந்தும், பாரத யுத்தம் டில்லிக்கரு

கில்தான் நடந்தது. இந்திரப்பிரஸ்தம் டில்லிக்கருகில்தான் இருந்திருக்கவேண்டும். ஆனால் கி. பி. பதினொன்றும் நூற்றூண்டு வரையில் டில்லியைப்பற்றி நமக்கு எந்தவிதமான சரித்திரச் செய்தியும் கிடைக்கவில்லே. அந்த நூற்றூண்டின் இடையில் அந்தப் பிரதேசத்தில் ஆட்சிசெய்த ஒரு ராஜபுத்திர அரசன் டில்லியில் ஒரு கோட்டையைக் கட்டினுன். துருக்கியர்கள் தொடக்கத்திலிருந்தே டில்லியைத் தங்களுடைய தலைநகராக வைத்துக் கொண்டார்கள். ஒருவர்பின் ஒருவராக வந்த பல முகமதிய அரசர்கள் டில்லியில் புதிய பகுதிகளைக் கட்டிக்கொண்டே இருந்தார்கள். பதினைரும் நூற்றூண்டின் தொடக்கத்தில் சிக்கந்தர் லோடி ஆக்ராவைத் தன்னுடைய தலைநகராக்கும்வரையில் டில்லியே முகமதியர்களின் தலைநகரமாயிருந்தது. ஷாஜஹான் காலத்தில் டில்லி நகரத்தில் இன்னுமொரு புதியபகுதி கட்டப்பட்டது. அதையே ஷாஜஹான் தன்னுடைய தலைககராக வைத்துக்கொண்டான். பெயரளவில் முகலாயச் சக்கரவர்த்தியாயிருந்த ஒருவன் 1857-ஆம் ஆண்டுவரையில் டில்லியில் வசித்துவந்தான். ஐம்பத்துநான்காண்டுகளுக்குப் பின்னர் பிரிட்டிஷார் டில்லியை இந்தியாவின் தலைநகராக்கினுர்கள். அதன்பின் அங்கு இன்னுமொரு புதிய பகுதி கட்டப்பட்டது. அதுதான் இன்று புதுடில்லி என்று வழங்குகிறது.

அதிகாரம்—22

துருக்கிய அரசர்கள்

டில்லியில் இருபத்தாறு துருக்கிய அரசர்கள் ஆட்சிசெய்தார்கள். ஆனால் அவர்களில் ஒரு சிலரே முக்கியமானவர்கள். மற்றவர்களிற் சிலர் தங்களுடைய பதவியைக் காப்பாற்றிக்கொள்ளும் திறமையற்றவர்கள். வேறு சிலர் தலைநகரிலிருந்த பல வேறு கட்சிகளின் கைப்பதுமைகள். அவர்கள் தலைநகரிலிருந்த கட்சிகளின் விருப்பு வெறுப்புக்கேற்றவாறு அரியணையில் ஏற்றவும் இறக்கவும்பட்டவர்கள். டில்லி சுல்தானியத்தின் முதல் அரசனை குத்புதீன் போலோ விளையாடும்போது ஏற்பட்ட ஒரு விபத்தினுல் கி. பி. 1210-இல் இறந்தான். ஓராண்டுக்குப் பின்னர் அவனுடைய அடிமையும் மருமகனும் ஆன இல்டுட்மிஷ் சிம்மாசனமேறினுன். அதற்குள், கிழக்கில் வங்காளமும், மேற்

கில் மூல்தானும், தெற்கில் இராஜபுதனத்தின் ஒருபகுதியும் சுயேச்சை பெற்றுவிட்டன. ஆகவே அந்தப் பகுதிகளை மறுபடியும் டில்லியின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவது இல்டுட்மிஷின் முதல் வேலையாயிற்று. அந்தவேலை பூரணமாக முடிவதற்கு இருபதாண்டுகள் ஆயின. அதன்பின் தன்னுடைய இராஜ்யத்தைப் பெருக்கும் வேலையில் இல்டுட்மிஷ் முனைந்தான். ஆனால் அந்தத்துறையில் அதிகமாக எதையும் சாதிப்பதற்கு முன் அவன் 1236-இல் இறந்துபோனான். அடுத்த பத்தாண்டுகளில் ஐந்துபேர் டில்லியில் ஆட்சிசெய்தார்கள். அவர்களில் ரஜியா என்ற அரசியும் ஒருத்தியிருந்தாள். அவளைத்தவிர இந்தியாவில் வேறெந்த முஸ்லிம் அரசியும் இருந்ததில்லை. அந்தப் பத்தாண்டுகளில் டில்லியில் அரசபதவிக்காகப் பல சூழ்ச்சிகள் நடந்தன; இராஜ்யத்தில் பல கலகங்கள் ஏற்பட்டன; மங்கோலியர்களும் சில சமயங்களில் இராஜ்யத்தின்மீது படையெடுத்தார்கள். அதன்பின் நாசிருதீன் மாமூது (கி. பி. 1246-1266) என்பவன் அரசனானான். அவன் காலத்தில் இராஜ்யம் மறுபடியும் நல்ல நிலையை அடைந்தது. அவன் கடவுள் பக்தியும், இனியதன்மையும், கல்வியறிவும் உடையவன். எனினும் திறமையற்றவன். ஆனால் அவனுடைய மந்திரியாயிருந்த பால்பன் என்ற அடிமை மிகவும் திறமை வாய்ந்தவன். அவனை முதலில் அடிமையாக விலைக்கு வாங்கியவன் இல்டுட்மிஷ். தன்னுடைய திறமையால் பால்பன் விரைவில் முன்னேற்றமடைந்தான். நாசிருதீன் காலத்தில் இராஜ்யம் நல்ல நிலைமையை அடைவதற்கு பால்பன்தான் காரணம். அவனுக்குத் தலைநகரத்தில் பல பகைவர்களிருந்தார்கள். அவர்களுடைய சூழ்ச்சியால் இரண்டாண்டுக்காலம் பால்பன் தன்னுடைய உயர்வை இழந்தான். ஆனால் அந்த இரண்டாண்டுகளைத் தவிர மீதியிருந்த பதினெட்டாண்டுகளிலும் பெயரளவில் நாசிருதீன் அரசனாயிருந்தானே தவிர, உண்மையில் அரசாங்க அதிகாரம் முழுவதும் பால்பன் கையிலேயே இருந்தது. நாசிருதீன் இறந்ததும் பால்பனே சிம்மாசனமேறி 1287-வரையில் ஆட்சிசெய்தான். ஆகவே 1246-முதல் 1287-வரையில் பால்பனுடைய அதிகாரம் இடையீடின்றி ஓங்கியிருந்தது என்று கூறலாம்.

பால்பன் மிகுந்த திறமையும் சிறந்த மனவலிமையும் பெற்றவன். அவன் முதலில் தன்னுடைய இராஜ்யத்தைப் பலப்படுத்துவதற்கும், பின்னர் தன்னுடைய வம்சத்தினரை டில்லிச் சிம்மாசனத்தில் அமர்த்துவதற்கும் தன்னுடைய முழுத்திறமையையும்

உபயோகித்துப் பாடுபட்டான். பால்பன் சிம்மாசனமேறியபின்னர்த் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் முகமதிய மதத்தின் கோட்பாடுகளை எல்லாம் சரியாகக் கடைப்பிடித்தான். ஆனால் அரசாங்கவிஷயத்தில் முகமதிய மதத்திற் சொல்லியுள்ள விதிகளின்படியே நடந்தான் என்று கூறமுடியாது. இராஜ்யத்தைச் சரியாக ஆள்வதற்கும், காப்பதற்கும் எவ்வாறு நடந்தால் நல்லதோ அவ்வாறு நடந்தான். குற்றம் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை அளித்தான். அந்தத் தண்டனைகளிற் பல இஸ்லாமியச் சட்டத்திற்குப் புறம்பானவை. பால்பனுடைய ஆட்சியில் முதற்பகுதி அவனை எதிர்த்த துருக்கியர்களை அடக்குவதிலும், இராஜ்யத்தில் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதிலும் கழிந்தது. இவ்வாறு பால்பன் இராஜ்யம் முழுவதிலும் தன்னுடைய அதிகாரத்தை நிலையாக நிறுவினான். ஆனால் அதற்கு மேல் தன்னுடைய இராஜ்யத்தைப் பெருக்கும் முயற்சியில் அவன் ஈடுபடவில்லை. ஏனெனில் வடமேற்கில் மங்கோலியர்களால் மறுபடியும் ஆபத்து ஏற்படும்போலிருந்தது. பின்னர், பால்பனுடைய முதுமையில் வங்காள கவர்னர் அவனுக்கு எதிராகக் கலகஞ்செய்தான். அந்தக்கலகத்தை அடக்குவதற்கு பால்பன் ஒன்றன்பின் ஒன்றாக இரண்டு சேனைகளை அனுப்பினான். ஆனால், அவையிரண்டும் தோற்றுப்போயின. அதனால் பால்பன் தானே ஒரு பெரியசேனையுடன் வங்காளத்துக்குச்சென்று, கலகஞ்செய்த கவர்னரைக்கொன்று, அவனுடைய படைவீரர்களையெல்லாம் சிறைப்பிடித்து, அவனுடைய குடும்பத்தினரையும், அவனுக்குத் துணையாக இருந்தவர்களையும் லக்னௌதி என்ற இடத்தில் கழுவிலேற்றினான். அதன்பின் வங்காளத்தை டில்லிக்கடங்கிய ஒரு தனி ராஜ்யமாக்கி, அதற்குத் தன்னுடைய இளைய மகனான புக்ராகான் என்பவனை அரசனாக்கிவிட்டு பால்பன் டில்லிக்குத் திரும்பினான்.

இதற்குள்ளாக வடமேற்கு எல்லையை மங்கோலியர் படையெழுச்சியிலிருந்து காக்கும் முக்கியமான வேலையைப் பால்பனுடைய மூத்த மகனான முகமது என்பவன் செய்துகொண்டிருந்தான். அவன் மூல்தானில் தன்னுடைய படைகளை நிறுத்தி மங்கோலியர்களோடு சண்டை செய்துகொண்டிருந்தான். அவன் மிகவும் உயர்ந்த குணங்களைப் படைத்தவன். அந்தக் காலத்துத் துருக்கியர்களுக்குள்ளேயே அவன் தலைசிறந்தவன் என்று வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறிகிறோம். அவன் போர் செய்வதிலும், அரசாங்க அலுவல்களிலும் வல்லவன்; நன்றாகப் படித்

தவன்; படித்தவர்களை ஆதரிப்பவன்; தூய்மையான வாழ்க்கை நடத்துபவன். 1285-இல் அவன் மங்கோலியர்களோடு செய்த ஒரு சிறு சண்டையில் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டு பால்பன் மனமுடைந்து போனான். அதே விசனத்தில் பால்பன் 1287-இல் இறந்தான். அவனுக்குப் பின் அவனுடைய பேரனும், வங்காளத்தில் அரசனாயிருந்த புக்ராகானுடைய மகனும் ஆன கைக்குபாத் (1287—1290) என்பவனைப் பால்பனுடைய மந்திரிகள் அரசனாக்கினார்கள். கைக்குபாத் பட்டத்திற்கு வந்தபோது வயது பதினெட்டுத்தானிருக்கும். அதுவரையில் அவன் பல கடுமையான கட்டுப்பாடுகளுக்கு அடங்கி வளர்ந்தவன். ஆனால் அரசனானதும் அந்தக் கட்டுப்பாடுகளெல்லாம் காற்றிற் பறந்து போயின. அவன் அரசனாயிருந்த மூன்றாண்டுகளிலும் மதுவில் மூழ்கி மாதர் வேட்கையில் தன்னை மறந்து திளைத்தான். அதனால், பாரிசவாயு என்ற நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்த படுக்கையாய் விட்டான். அந்தச் சமயத்தில் ஜலால் உதீன் கில்ஜி என்பவன் அவனுக்கு எதிராகக் கலகம் செய்து அவனையும் கொன்று சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். இவ்வாறு பால்பனுடைய வம்சத்தினரின் ஆட்சி அழிந்தது. ஆனால் வங்காளத்தில் அவன் வம்சத்தினர் இன்னுமோர் ஐம்பதாண்டு ஆட்சி செய்தனர்.

ஜலாலுதீன் (1290—1296) கில்ஜி வம்சத்தைச் சேர்ந்தவன். அந்த வம்சத்தினர் ஆப்கானிஸ்தானத்தில் நெடுநாளாக வசித்து வந்தவர்கள். அவர்கள் மற்றைய துருக்கியர்களை வெறுத்தார்கள். ஜலாலுதீன் அரசனானதும் அரசாங்கத்தின் பெரிய உத்தியோகங்களெல்லாம் அந்த வம்சத்தினருக்கே கொடுக்கப்பட்டன. ஜலாலு-தீன் வயதானவன். ஆகவே அவன் எத்தகைய முக்கியமான காரியத்தையும் சாதிக்கவில்லை. ஆனால், அவனுடைய மருமகனான அலாவுதீன் கில்ஜி தென்னிந்தியாவின் பெரும் பகுதியில் முகமதிய ஆதிக்கத்தை ஸ்தாபித்தான். டில்லியில் ஆட்சி செய்த துருக்கிய அரசர்கள் எல்லோரிலும் அவனே மிகுந்த திறமை வாய்ந்தவன். அவன் தன்னுடைய அதிகாரத்தைப் பெருக்குவதில் அளவிலா ஆசைகொண்டவன். அந்த விஷயத்தில் எத்தகைய அநியாயமான முறைகளைக் கையாளுவதற்கும் அவன் தயங்கவில்லை. அவன் மிகக் கொடியவன். நம்பிக்கைத் துரோகம் செய்வதற்குத் தயங்காதவன். துர்நடத்தை யுடையவன். இந்திய வரலாற்றிலேயே அவனைப்போல் அருவருக்கத் தக்கவனைக் காண்பது அரிது. எனினும், அவன் மிகுந்த திறமையுடையவன் என்பதை யாரும் மறுக்க

முடியாது. அவன் கி. பி. 1296-முதல் 1316-வரையில் ஆட்சி செய்தான். அந்த இருபதாண்டுகளில் அவன் கொடுங்கோன்மையைக் கண்டு அஞ்சாதவர்கள் யாருமில்லை. பால்பனைப்போலவே அவனும் அரசாங்க விஷயத்தில் தன்னிஷ்டம்போல் நடந்தானே தவிர முகமதிய மதத்தின் விதிகளின்படி நடக்கவில்லை. அவனுடைய இராஜ்யத்திற்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுவதற்கு எத்தகைய கொடிய முறைகளையும் கையாளுவதற்கு அவன் தயாராக இருந்தான். அதனால் தான் அவன் குற்றம் செய்தவர்களுக்கு மிகக் கொடுமையான தண்டனைகளை விதித்தான்.

ஜலாலுதீனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அலாவுதீனுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. ஆகவே அவன் முதலில் ஒரு மாகாணத்திற்கும், பின்னர் இரண்டு மாகாணங்களுக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். ஆனால் அவனுடைய அதிகார விருப்பமும் இனிமையற்ற இல்வாழ்க்கையும் அவனை ஓரிடத்தில் அமைதியாக இருக்கவிடவில்லை. ஆகவே அவன் அண்மையிலிருந்த இராஜ்யங்களின்மீது படையெடுப்பதில் அதிக ஆவலுடையவனாக இருந்தான். முதலில் அவன் மாளவத்தின்மீது வெற்றிகரமாகப் படையெடுத்துத் திரும்பினான். அந்த வெற்றியினால் உற்சாகமடைந்த அவன் 1294-ஆம் ஆண்டில், சுமார் 8000-குதிரை வீரர்களுடன், தன்னுடைய தலைநகருக்குத் தெற்கில் சுமார் ஐநூறுகல் தொலைவிலிருந்து யாதவர்களுடைய தலைநகரமாகிய தேவகிரியின் மீது படையெடுத்து, ஏராளமான பொருள்களைக் (தங்கம், வெள்ளி, முத்து, ரத்தினங்கள், பட்டுத்துணிகள்) கொள்ளையடித்துக்கொண்டு திரும்பினான். ஆனால் அந்தப் பொருள்களையெல்லாம் உடனே அரசாங்கக் கஜானுவுக்கனுப்பாமல் தாமதம் செய்தான். அந்த விஷயத்தில் அவனுக்கும் அரசனுக்கும் சமரசப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. அது சம்பந்தமாகப் பேசி முடிவு செய்வதற்காகக் கங்கைக்கரையில் ஜலாலுதீன் அலாவுதீனைச் சந்திப்பது என்று தீர்மானம் செய்யப்பட்டது. தன்னுடைய அந்தரங்க ஆலோசனையாளர்களுடைய பேச்சையும் மீறி ஜலாலுதீன் அலாவுதீனைச் சந்திப்பதற்குச் சென்றான். தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த அலாவுதீன் ஜலாலுதீனைக் கொன்றுவிட்டான். கொடுஞ் செயல்களைப்பற்றி அவ்வளவாகக் கவலைப்படாத அந்தக் காலத்துத் துருக்கியர்கள் கூட இந்தப் படுகொலையைக் கண்டு பேரதிர்ச்சி யடைந்தார்கள். அதன் பின் அலாவுதீன் டில்லிக்குச் சென்று தான் கொள்ளையடித்து வந்த பொருள்களைச் சன்மானமாகக் கொடுத்து முக்கியமானவர்களின்

ஆதரவைப் பெற்று. கி. பி. 1296-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சிம்மாசன மேறினன்.

தொடக்கத்தில் அவனுடைய நிலைமை அபாயம் நிறைந்ததாயிருந்தது. ஜலாலுதீனைக் கொல்லுவதில் அவனுக்குத் துணையாயிருந்த ஒரு சிலரைத் தவிர அவனை ஆதரிப்பார் யாரும் இல்லை. அவர்களையும் அவன் முழுவதும் நம்பமுடியாது. மற்றத் துருக்கியர்கள் அவனுடைய அதிகாரத்தை முழுதும் ஏற்றுக்கொள்ளவில்லை. இராஜ்யத்தின் பல பகுதிகளிலுமிருந்த தலைவர்கள் அவனுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். மங்கோலியர்கள் வடமேற்கு எல்லையில் மறுபடியும் படையெடுக்கத் தொடங்கினர்கள். அலாவுதீன் இந்த ஆபத்துக்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொண்டு இராஜ்யத்தில் தன்னுடைய ஆதிக்கத்தைப் பூரணமாக நிலை நாட்டுவதற்குக் கையாண்ட முறைகளைப்பற்றி விரிவாகக் கூறுவது அவசியம். அவ்வாறு கூறுவதின் மூலம் அந்தக் காலத்தில் வட இந்தியாவில் வாழ்ந்த மக்களுடைய நிலைமையைப்பற்றித் தெளிவுபடுத்த முடியும். துருக்கியர்களையுடைய எதிர்ப்பைத்தான் அலாவுதீன் உடனடியாக அடக்கவேண்டியிருந்தது. துருக்கியர்கள் ஆளும் வகுப்பினர். ஆகவே அவர்கள்தான் அரசாங்கத்தின் உயர்ந்த உத்தியோகங்களை யெல்லாம் வகித்தார்கள். அதற்காக அவர்களுக்கு நல்ல சம்பளம் கிடைத்தது. சம்பளம் என்ற முறையில் வருமானம் பெருதவர்களுக்கு அரசாங்கக் கஜானவிலிருந்து உதவி நிதியாகப் பெரும் பொருள் வழங்கப்பட்டது. இன்னும் சிலருக்குக் குறிப்பிட்ட கிராமங்களின் வரி மாற்றப்பட்டது. இந்த இரண்டு முறைகளையும் அலாவுதீன் ஒழித்தான். அதனல் வருமானத்தை யிழந்த துருக்கியர்கள் அலாவுதீனுடைய தயவை எப்போதும் எதிர்பார்க்க வேண்டியதாயிற்று. அவ்வாறு அவன் தயவை எதிர்பார்த்து வாழ விரும்பாதவர்களுக்கு அவனுடைய இராஜ்யத்தை விட்டுப்போய் விடுவதைத் தவிர வேறு வழியில்லை, ஆகவே துருக்கியர்கள் அலாவுதீனுக்கு விரோதமாக நடக்க முடியாத நிலைமையை அடைந்தார்கள். துருக்கியர்கள் அடிக்கடி கூட்டமாகக் கூடி விருந்து நடத்தினர்கள் என்றும், அந்தச் சமயங்களில் அவர்கள் அளவின்றி மதுபானம்செய்தார்கள் என்றும் முன்னர்க் கூறினேம். அதே சமயங்களில் தான் பிரபுக்கள் ஒன்ருகச் சேர்ந்து அரசனுக்கு எதிராகச் சதியாலோசனை செய்வது வழக்கம். யாரும் விருந்து நடத்தக்கூடாது என்றும், கூட்டமாகச் சேர்ந்து மதுபானம் செய்யக்கூடாது என்றும் அலாவுதீன் உத்தரவு போட்டான். அந்த உத்தரவை மீறியவர்கள்

கொடூரமான தண்டனைக்கு உள்ளானார்கள். அதுவுமன்றி அவன் பல உளவாளிகளை நியமித்து, துருக்கியர்களில் முக்கியமானவர்களுடைய நடத்தையை எப்போதும் கண்காணித்துக்கொண்டே இருந்தானாதலால் அவனுக்கு விரோதமாக யாரும் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை. இந்த முறைகளால் தலை நகரத்தின் உல்லாச வாழ்க்கை அறவே ஒழிந்து, அதற்குப் பதிலாக ஒருவரையொருவர் எப்போதும் சந்தேகத்துடனும் பயத்துடனும் பார்க்கும் நிலை ஏற்பட்டது. ஆகையால், அலாவுதீனுக்கு எதிராக யாரும் சூழ்ச்சி செய்ய முடியாதல்லவா ?

இந்துத் தலைவர்களை அடக்குவதற்கு அவர்களுடைய வரும்படியைக் குறைப்பதுதான் தக்கவழியென்று அலாவுதீன் தீர்மானித்தான். அவர்கள் அலாவுதீன் காலம்வரையில் எவ்வளவு வரி வசூலித்தார்கள், அதில் எவ்வளவு பாகத்தை அரசாங்கத்திற்குச் செலுத்தினார்கள் என்றவைகளைப்பற்றி முழுவிவரங்களும் நமக்குத் தெரியாது. எனினும் அவர்களுக்கு நிலையான வருமானம் இருந்தது என்றுமாத்திரம் பொதுவாகக் கூறமுடியும். அவர்களுடைய ஆட்சியில் இருந்த குடியானவர்களிடமிருந்து அரசாங்கமே நேரடியாக வரி வசூலித்திருந்தால் எவ்வளவு தொகை கிடைத்திருக்குமோ அதைவிடக் குறைவாகத்தான் அவர்கள் அரசாங்கத்திற்குக் கப்பம் கட்டினார்கள். ஆகவே, அவர்களுக்கு நல்ல லாபம் இருந்தது. மேலும், அவர்கள் தங்கள் ஆட்சியிலிருந்த குடியானவர்களிடமிருந்து வசூலித்த வரி, அரசாங்கத்தார் வழக்கமாக விதித்த வரியைவிட அதிகமானது. இந்த வழியிலும் இந்துத் தலைவர்களுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. இவ்வாறு கிடைத்த வருமானத்தையெல்லாம், இந்துத் தலைவர்கள் சமயம் வாய்த்தபோது அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம் செய்வதற்கான படைகளைத் திரட்டுவதற்குச் செலவழித்தார்களென்று அலாவுதீனும் அவனுடைய ஆலோசனையாளர்களும் நம்பினார்கள். அவர்கள் நினைத்தது முற்றிலும் தவறு என்று கூறமுடியாது. ஆகவே அத்தகைய ஆபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு அவர்களுடைய வருமானத்தைக் குறைப்பதுதான் சரியான வழி என்று அலாவுதீன் முடிவு செய்தான். மொத்த விளைவில் பாதியைக் குடியானவர்கள் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தவேண்டும். என்று அலாவுதீன் உத்தரவுபோட்டான். அதை வசூலிக்கும் வேலையை இந்துத் தலைவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்டான். நிலவரியை நிர்ணயிப்பதற்கும் வசூலிப்பதற்கும் பெருவாரியான உத்தியோகஸ்தர்களை நியமித்தான். இந்துத்

தலைவர்களுக்கு அவர்களே பயிரிட்ட நிலங்களிலிருந்து கிடைத்த வருவாயைத்தவிர வேறு வரும்படி இல்லாமற் போயிற்று. அதை விட அதிகமான வரும்படி வேண்டுமென்று நினைத்தால் அவர்கள் குடியானவர்களைத்தான் தொந்தரவு செய்யவேண்டும். ஏற்கெனவே அதிக வரியை அரசாங்கத்திற்குச் செலுத்திய குடியானவர்களிடமிருந்து அதிகமான தொகையை இந்துத் தலைவர்கள் எதிர்பார்க்க முடியாதல்லவா? அவர்கள் செலுத்திய வரியின் பளுவைப்பற்றி நமக்கு நிச்சயமாக ஒன்றும் தெரியாது. எனினும் விளைவில் பாதியை அரசாங்கத்துக்குக் கொடுத்து விட்டபின்னர், அவர்களுடைய அவசியமான செலவுக்கு வேண்டிய பொருள்களைத் தவிர அவர்களிடம் ஒன்றும் இருந்திருக்க முடியாது. ஆகையால் இந்துத் தலைவர்களிடம் வாழ்வின் சுக போகங்களை அனுபவிப்பதற்கும், அரசாங்கத்திற்கு எதிராகக் கலகம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் தேவையான செல்வம் இல்லாமற்போயிற்று. இதனால் இராஜ்யத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்த மக்களிடம் செல்வத்தை அடிப்படையாகக்கொண்ட உல்லாச வாழ்க்கைக்குப் பதிலாக வறுமையும் சோர்வும் தாண்டவமாடின. ஆனால் அலாவுதீனைப் பொறுத்தவரையில் அவன் கொள்கை வெற்றியடைந்தது என்று கூறலாம். ஏனெனில் அவனுடைய ஆட்சியின் பெரும்பகுதியில் குறிப்பிடத்தக்க கலகம் ஒன்றும் ஏற்படவில்லை.

இனி மங்கோலியரால் வடமேற்கு எல்லைப்புறத்தில் ஏற்பட்ட ஆபத்தை அலாவுதீன் எவ்வாறு சமாளித்தான் என்று பார்ப்போம். தட்சிணத்தின்மீது வெற்றிகரமாகப் படையெடுக்க வேண்டுமானால் வடமேற்கு எல்லையை முதலில் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை அலாவுதீன் நன்றாக உணர்ந்தான். மங்கோலியர் டில்லி இராஜ்யத்தின்மீது அடிக்கடி படையெடுத்தார்கள். கடைசியில் அவர்கள் இருபதினாயிரம் வீரர்களுடன் டில்லிக்கருகிலேயே வந்து அலாவுதீன் இருந்த கோட்டையை வளைத்துக்கொண்டு சுற்றுப்பக்கத்திலுள்ள கிராமங்களைக் கொள்ளையடித்தார்கள். அந்த நிலையில் அவர்கள் டில்லியையே கைப்பற்றிக்கொள்வார்கள்போலிருந்தது. ஆனால் அவர்கள் திடீரென்று திரும்பிப்போய்விட்டார்கள். அவ்வாறு அவர்கள் செய்ததற்கு என்ன காரணம் என்று நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை.

இவ்வாறு மங்கோலியர்களால் ஏற்படக்கூடிய ஆபத்தை அலாவுதீன் நன்றாக உணர்ந்தான். ஆகவே வடமேற்கு எல்லைப்

புறத்தின் காப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் அவன் முனைந்து, அங்கிருந்த படைகளுக்குத் 'துக்லக்' என்ற திறமை வாய்ந்த சேனாதிபதியை நியமித்தான். துக்லக் ஏறக்குறைய இருபத்தைந்தாண்டுகள் மங்கோலியர் டில்லியின்மீது படையெடுக்காமல் தடுத்தான். அதுவுமன்றி, அலாவுதீன் டில்லிக்கருகிலேயே ஒரு நிரந்தரமான பெரிய படையை வைத்திருந்தான். அந்தப் படை எந்தச் சமயத்திலும் போருக்குத் தயாராக இருந்தது. அந்தப்படையிலிருந்த வீரர்களுக்கு ரொக்கமாகச் சம்பளம் கொடுக்கப்பட்டது. ரொக்கமாகச் சம்பளம் கொடுத்து ஒரு பெரிய படையை வைத்திருப்பது அந்தக்காலத்தில் எளிய காரியமன்று.

டில்லியில் தங்கத்திற்கும் வெள்ளிக்கும் நல்ல கிராக்கி இருந்தது. நாணயங்கள் செய்வதற்கும், பணக்காரர்களுடைய ஆடம்பர வாழ்க்கைக்கும், அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பரிசுகள் வழங்குவதற்கும், இன்னும் பல காரியங்களுக்கும் பொன்னும் வெள்ளியும் தேவையாயிருந்தன. மேலும் அக்காலத்துச் செல்வர்கள் பொன்னையும் வெள்ளியையும் மிகுதியாகப் பதுக்கிவைப்பதற்கு விருப்பங்கொண்டவர்கள். டில்லியில் தங்கச் சுரங்கமோ, வெள்ளிச்சுரங்கமோ கிடையாது. ஆகவே அவைகளை தூரத்திலிருந்த துறைமுகப் பட்டினங்களிலிருந்துதான் கொண்டுவரவேண்டும். அந்த நகரங்கள் செலுத்திய கப்பமும், அங்கிருந்த வியாபாரிகள் செலுத்திய வரியும், பொன்னாகவும் வெள்ளியாகவும் டில்லிக்கு வந்தன. இந்தியத் துறைமுகங்களிலிருந்து ஏற்றுமதியான பொருள்கள் அங்கு இறக்குமதியான பொருள்களைவிட அதிகமாக இருந்ததால் வெளிநாடுகளிலிருந்து பொன்னும் வெள்ளியும் இந்தியாவுக்கு வந்தன என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். பதின்மூன்றும் நூற்றாண்டில் துறைமுகங்களிலிருந்து டில்லிக்கு அதிகமான பொன்னும் வெள்ளியும் வராததால் வடஇந்தியாவில் நாணயங்கள் மிகக்குறைவாகவே வழக்கிலிருந்தன. அதனால் பொருள்களின் விலை குறைவாக இருந்தது. ஆகவே டில்லியிலிருந்த போர்வீரர்களும் சாதாரண மக்களும் குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த முடிந்தது. ஆனால் தட்சிணத்திலிருந்து கொள்ளையடித்துக்கொண்டு வந்த ஏராளமான செல்வத்தை அலாவுதீன் துருக்கியர்களுக்குச் சன்மானமாக வழங்கவே டில்லியில் பணப்பழக்கம் அதிகமாகிப் பொருள்களின் விலை ஏறிற்று. அதனால் டில்லியில் நிரந்தரமான சேனையை வைத்திருப்பதற்கு அதிகச் செலவாயிற்று. அந்தச்

செலவைத் தாங்குவதற்குக் கஜானுவில் பணம் இல்லை. இந்த நிலைமையைச் சமாளிப்பதற்காக அலாவுதீன் விலைகளைக் குறைக்கத் தீர்மானித்தான். மற்ற துறைகளைப்போலவே இந்தத் துறையிலும் அவன் முழு வெற்றியடைந்தான்.

உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்பதற்கு அலாவுதீன் கையாண்ட முறைகள் அடிப்படையில் மிகவும் புத்திசாலித்தனமானவை. உணவுப் பொருள்களின் விநியோகத்தைக் கட்டுப்படுத்தினுன். அவைகளை ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குக் கொண்டுபோவதற்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டுமென்று கட்டளையிட்டான். எங்கெந்த இடங்களில் உணவுப்பொருள்கள் தேவைக்குக் குறைவாக இருந்தனவோ அங்கெல்லாம் பங்கீட்டு முறையை அமுலுக்குக் கொண்டுவந்தான். டில்லி நகரத்துக்கு எங்கெந்தப் பகுதிகளிலிருந்து உணவுப் பொருள்கள் வந்தனவோ அங்கெல்லாம் குடியானவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியைத் தானியமாகவே செலுத்த வேண்டுமென்று உத்தரவு போட்டான். அவ்வாறு செலுத்தியது போக மீதி ஏதாவது தானிய மிருந்தால் அதைக் குடியானவர்கள் அரசாங்க உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்குத் தான் விற்கவேண்டும்; அந்த வியாபாரிகள் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்குமேல் குடியானவர்களுக்குக் கொடுக்கக்கூடாது. மேலும் அவர்கள் வாங்கிய தானியத்தையெல்லாம் அரசாங்கக் களஞ்சியங்களுக்கு அனுப்பிவிடவேண்டும். அவ்வாறு களஞ்சியங்களை யடைந்த தானியத்தைச் சில்லரை வியாபாரிகள் வாங்கி, அரசாங்கத்தார் நிர்ணயித்த விலைக்கு விற்கவேண்டும். இந்த முறைகளைப்பற்றிப் படிக்கும்போது டில்லியிலிருந்த மக்களுடைய வாழ்க்கைநிலை நமக்கு நன்ருக விளங்குகிறது. வியாபாரிகளைக் கட்டுப்படுத்துவது மிகவும் எளிது. அவர்களுடைய நன்னடக்கைக்கு ஜாமீனுக அவர்களுடைய பெண்டு பிள்ளைகளை டில்லிக்கருகிலிருந்த ஓரிடத்திற்கு அனுப்பிவிடவேண்டும். அங்கே அவர்கள் ஒரு மேலதிகாரியின் பார்வையில் வாழ்ந்தார்கள். குடியானவர்களிடமிருந்து தானியங்களை வாங்குவதும் எளிதாகவே இருந்தது. ஏனெனில் வரி வசூலுக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களே அந்த வேலையைச் சரியாகச் செய்துவிட்டார்கள். ஆனுல் சில்லரை வியாபாரிகளையும், தானியங்களை அடிக்கடி வாங்கியும் விற்றும் அதனுல் லாபம் சம்பாதித்தவர்களையும் கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதில் முடியவில்லை. இந்த வேலைக்காக அலாவுதீன் ஏற்கெனவே இருந்த உளவாளிகளைத்தவிர இன்னும் பலரை

நியமித்தான். உளவாளிகளைப் பல இலாகாக்களாகப் பிரித்தான். ஒவ்வோர் இலாகாவும் மற்ற இலாக்காக்களின் செயல்களை உளவு பார்த்ததோடு, எல்லா இலாகாக்களைச் சேர்ந்த உளவாளிகளும் பொதுமக்களின் நடத்தையை உளவு பார்த்தார்கள். அதைத் தவிர அலாவுதீனே சில சமயங்களில் தன்னிடத்தில் அதிக விசுவாசமுள்ள உத்தியோகஸ்தர்களை அனுப்பிப் பொதுவாக உளவு பார்த்து வரும்படி செய்தான். கடைக்காரர்கள் பொருள்களின் எடையைக் குறைத்து விற்ருர்களாஞல் அவர்கள் எவ்வளவு எடை குறைத்து விற்ருர்களோ அவ்வளவு எடையுள்ள சதையை அவர்களுடைய உடலிலிருந்து அறுத்து எடுத்துவிடவேண்டும் என்று அலாவுதீன் உத்தரவு போட்டதால் கடைக்காரர்கள் அவ்வாறு திருட்டுத்தனம் செய்யும் வழக்கத்தை அறவே மறந்துவிட்டார்கள். இவ்வாறு பல கொடூரமான முறைகளைக் கையாண்டதால் பங்கீட்டு முறை வெற்றியடைந்தது. அதனுல் பொருள்களின் விலையும் குறைந்தது.

உணவுப்பொருள் கட்டுப்பாட்டு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போதே இராஜ்யத்தைப் பெருக்கும் வேலையிலும் அலாவுதீன் முனைந்தான். முதலில் மாளவத்தையும், குஜராத்தையும் பிடித்துக்கொண்டான். பின்னர் 1306-முதல் 1311-க்குள் தென்னிந்தியாவின்மீது முகமதியப் படைகள் மூன்றுதரம் படையெடுத்தன. அந்தப் படையெழுச்சிகளைப்பற்றி வேருேர் அதிகாரத்திற் கூறுவோம். தென்னிந்தியாவின்மீது அலாவுதீனே நேராகப் படை யெடுக்கவில்லை. அந்தப் படையெழுச்சிகளின் போது முகமதியப் படைகளை நடத்திச் சென்று பல சிறந்த வெற்றிகளை அடைந்தவன் காபூர் என்ற ஓர் அலி. அவன் குஜராத்திலிருந்து அலாவுதீன் கொள்ளையடித்துக் கொண்டுவந்த பொருள்களோடு தூக்கிக்கொண்டு வரப்பட்டவன். விரைவில் அவன் அலாவுதீனுடைய தனிப்பட்ட பிரியத்தைச் சம்பாதித்துக்கொண்டான். பின்னர் அவன் படிப்படியாக உயர்ந்து இந்திய வரலாற்றிலேயே சிறந்த சேனுதிபதிகளில் ஒருவன் என்ற பெயரை எடுத்தான்.

முதுமை வர வர அலாவுதீனுடைய திறமை குறைந்தது. அவனுடைய வரம்பற்ற கெட்ட நடத்தையால் அவன் உடல் வலி குன்றியது. அதனுல் அவனுடைய அறிவும் மங்கியது, மன வலியும் குன்றியது. அரண்மனையிலேயே அவனுக்கு எதிராகச் சூழ்ச்சிகள் தொடங்கின. இராஜ்யத்தில் ஆங்காங்குக் கலகங்கள் ஏற்பட்டன. முடிவில் காபூரே அலாவுதீனைக் கொன்றுவிட்டான் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆனுல் ஒரு மாதத்திற்குள்

காபூரும் கொல்லப்பட்டான். அதன் பின் அலாவுதீனுடைய மக்களில் ஒருவன் சிம்மாசனமேறினான். அவன் குத்புதீன் முபாரகஷா என்று அழைக்கப்பட்டான். ஆனால் அவன் ஆட்சி செய்த நான்காண்டுக்குள் துர் நடத்தையின் சிகரத்தைத் தொட்டுவிட்டான். கடைசியில் அவனுடைய அந்தரங்கக் கூட்டாளிகளில் ஒருவனே அவனைக் கொன்றுவிட்டுச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ஆனால் ஒரு மாதத்திற்குள் எல்லைப்புறத்திலிருந்த துக்லக் திரும்பி வந்து அவனைக் கொன்றுவிட்டுத் தானே சிம்மாசனமேறினான்.

துக்லக் 1320-முதல் 1325-வரை ஆட்சி செய்தான். அவன் மிகவும் விரும்பத்தக்க குணங்களைப் படைத்தவன். துருக்கிய அரசர்கள் அனைவரிலும் அவனே மிக நல்லவன். அவன் போரில் மிக வல்லவனாக இருந்ததுபோலவே ஆட்சி முறையிலும் திறமையுள்ளவனாக இருந்தான். அவனுடைய படை வீரர்களிடம் அவனுக்கு மிகுந்த பிரியம் இருந்தது. அடுத்தபடியாகக் குடியானவர்களுடைய நலன் அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவன் அரசனான சமயத்தில் இராஜ்யம் மிகச் சீர்கேடான நிலையில் இருந்தது. அலாவுதீன் ஆட்சியில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளெல்லாம் அழிந்துபோய்விட்டன. மாகாணங்களில் சுயநலமும் பேராசையும் மிகுந்தவர்கள் கவர்னர்களா யிருந்தார்கள். ஆகவே முதலில் அத்தகைய கவர்னர்களை நீக்கிவிட்டு துக்லக் நேர்மையான கவர்னர்களை நியமித்தான். குடியானவர்கள் செலுத்திய வரியின் பளுவைக் குறைத்தான். வரி வசூல் செய்த அதிகாரிகள் அநியாயமான வரிகளை வாங்குவதைத் தடுத்தான். இந்துத் தலைவர்களை அலாவுதீன் காலத்திற்கு முன்னிருந்த நிலைமைக்கு உயர்த்தினான். இத்தகைய சீர்திருத்தங்களால் மக்கள் சந்தோஷமடைந்தார்கள். அதே சமயத்தில் தலைநகருக்குத் தொலைவிலிருந்த மாகாணங்களில் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதற்கும் துக்லக் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்தான். இராஜ்யத்தின் தென்பகுதியில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்குவதற்கு துக்லக் தன்னுடைய மக்களில் ஒருவனான முகமது என்பவனை அனுப்பினான். பின்னர்ச் சில ஆண்டுகள் கழித்துத் தானே வங்காளத்திற்குச் சென்று அங்கு ஏற்பட்ட கலகத்தை அடக்கினான். ஆனால் திரும்பி வரும்போது அவன் தங்கியிருந்த கட்டிடம் இடிந்து விழுந்ததால் அவன் இறந்துபோனான். அப்போது அவனோடு அவனுடைய அன்பை அதிகமாகக் கவர்ந்த மகன் ஒருவனும் இருந்தான். கட்டிடம் விழுந்ததால் அவனும் கொல்லப்பட்டான். இது இயற்கையாக நிகழ்ந்த

விபத்து அன்றென்றும், தந்தையைக் கொன்று தானே பட்டத்திற்கு வரவேண்டும் என்று விரும்பிய முகமது செய்த சூழ்ச்சியின் விளைவு என்றும் சிலர் கூறுகிறார்கள். இந்தக் கூற்றைப் பொய் என்று சொல்ல முடியாது.

முகமது துக்லக் 1325-முதல் 1361-வரை ஆட்சி செய்தான். அவனுடைய ஆட்சியின் தன்மையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுவது இயலாது. ஏனெனில் அவனிடம் பலவகைக் குணங்கள் ஒன்றாகச் சேர்ந்து காணப்பட்டன, தற்கால ஆசிரியர்கள் சிலர் அவன் பெரிய மேதை என்று கருதுகிறார்கள். வேறு சிலர் அவன் ஒரு பைத்தியக்காரன் என்று கருதுகிறார்கள். அவன் காலத்திலேயே வாழ்ந்த மக்கள் அவனைப்பற்றி எவ்வித அபிப்பிராயமும் கூற முடியாமல் திகைத்தார்கள். அவன் புரிந்துகொள்ள முடியாத ஒரு மனிதன் என்று சொல்லி நிறுத்திக்கொள்வதுதான் எளிதான காரியம். ஆனால் அவன் செயல்களைப்பற்றிப் படிக்கும்போது அவனைப் பற்றிப் பின்வரும் அபிப்பிராயம் நமக்கு ஏற்படுகிறது. அவன் பல துறைகளில் அறிவும் திறமையும் படைத்தவன். எப்போதும் ஏதாவதொரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கும் இயல்பு வாய்ந்தவன். அவனால் சும்மா இருக்கவே முடியாது. அவன் பல மிகப் பெரிய திட்டங்களைப்பற்றி எப்போதும் கனவு கண்டுகொண்டிருந்தான். அந்தத் திட்டங்களிற் சில பைத்தியக்காரத்தனமானவை. மற்றவை அவன் ஒப்பற்ற அரசியல் அறிவு வாய்ந்தவன் என்பதைக் காட்டின. ஆனால் அவன் அடிக்கடி மாறும் இயல்புடையவனாதலால் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றக்கூடிய விடாமுயற்சி அவனிடம் இல்லை. மேலும், அவன் மிகக் கொடூரமான குணமும், முன் கோபமும் படைத்தவன். அதுவுமன்றிச் சாதாரண விஷயங்களில் நன்மை தீமைகளைப் பிரித்தறியும் ஆற்றல் அவனிடம் கிடையாது. அதனால் அவன் போட்ட திட்டங்களில் எதுவும் வெற்றிபெறவில்லை. இத்தகைய ஒருவன் தன்னுடைய இராஜ்யத்தை அதிகமாகப் பெருக்கவேண்டும் என்று எண்ணியதில் வியப்பு ஒன்றும் இல்லை. உதாரணமாக, அவன் பாரசிகத்தை வெல்லவேண்டும் என்று நினைத்தான். அதற்காக ஒரு பெரும்படையைத் திரட்டினான். ஆனால் சம்பளம் சரியாகக் கொடுக்காததால் படைவீரர்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்து சென்றுவிட்டார்கள். இமாலயப் பிரதேசத்திலிருந்த ஒரு சிறு ராஜ்யத்தை ஜயிப்பதற்காக அனுப்பப்பட்ட ஒரு படை அங்கேயே மடிந்தது. முடிவில் வேறு நாடுகளை வென்று தனது இராஜ்யத்தைப் பெருக்குவதற்

குப் பதிலாக முகமது துக்லக் தன்னுடைய இராஜ்யத்திலேயே பெரும் பகுதியை இழந்தான். வங்காளம் அவனுடைய ஆட்சியி லிருந்து விடுபட்டுச் சுயேச்சை பெற்றது. அதுபோலவே நர்ம தைக்குத் தெற்கிலிருந்த பிரதேசங்களும் சுயேச்சை பெற்றன. மேலும் வட இந்தியாவின் பல பாகங்களிலும் ஆங்காங்குக் கலகங் கள் ஏற்பட்டவண்ணமாகவே இருந்தன. உள் நாட்டு விவகாரங் களிலும் குழப்பமே மலிந்தது என்று நாம் படிக்கிறோம். நில வரி விஷயத்தில் முகமது துக்லக் ஏற்படுத்த விரும்பிய சீர்திருத்தங் களின் பயனாகச் சீர்கேடுதான் ஏற்பட்டது. அதனால் அரசாங்கத் தின் வருமானம் குறைந்தது ; குடிகளின் கஷ்டம் மிகுந்தது. நாண யத்தைச் சீர்திருத்துவதற்கு முகமது செய்த முயற்சியால் கஜானா காலியாயிற்று. தலைநகரை மாற்றுவதற்குச் செய்த முயற்சியால் விவரிக்க முடியாத குழப்பம் ஏற்பட்டது. முகமது துக்லக்கின் திட்டங்கள் எல்லாவற்றையும் விவரிப்பதற்குப் பதிலாக அவன் தலைநகரை மாற்றுவதற்குச் செய்த முயற்சியை மாத்திரம் இங்கு விவரிக்கிறோம். அதன் மூலம் அந்தக் காலத்து மக்கள் வாழ்க் கையைப்பற்றி நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

முகமது துக்லக்கின் முக்கிய திட்டங்களில் ஒன்று தன்னு டைய தலைநகரை தேவகிரிக்கு மாற்றுவது. அந்தத் திட்டம் ஒரு வகையில் புத்திசாலித்தனமானதுதான். அந்த நகரம் இராஜ்யத்தின் மத்தியிலிருந்தது. மங்கோலியர்களால் டில்லிக்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படலாம். ஆனால், தேவ கிரிக்கு அந்த ஆபத்து இல்லை. ஆகவே தலைநகரத்தை டில்லியி லிருந்து தேவகிரிக்கு மாற்றுவது நல்லதுதான். தேவகிரிக்குத் தௌலதாபாத் என்ற புதுப்பெயரை முகமது கொடுத்தான். ஆனால் தலைநகரத்தை மாற்றும் ஏற்பாடு டில்லி நகரவாசிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர்கள் கொஞ்சம் முணுமுணுத்தார் கள். அதைக்கண்டதும் முகமதுவுக்கு எல்லையற்ற சீற்றம் ஏற் பட்டது. அதனால் அவன் டில்லியிலிருந்த அத்தனை பேரும் தௌலதாபாத்துக்குச் சென்று குடியேறவேண்டும் என்று கட்டளையிட்டான். மீற முடியாத அந்த உத்தரவுக் கடங்கி டில்லி நகர வாசிகளெல்லாம் தௌலதாபாத்துக்குப் புறப்பட் டார்கள். டில்லி நகரம் காலியாயிற்று. டில்லிக்கும் தௌலதா பாத்துக்கும் 700-மைல் தூரம். இந்த நீண்ட பிரயாணத்தின் போது பல மக்கள் மாண்டனர். மீதியிலிருந்தவர்கள் தௌலதா பாத்துக்குச் சென்று குடியேறினார்கள். ஆனால் அந்த நகரத்தின் சீதோஷ்ண நிலை அவர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால்

மறுபடியும் அவர்கள் டில்லிக்கே திரும்பிவிட வேண்டுமென்று முகமது கட்டளையிட்டான். திரும்பி வரும்போது மாண்டவர்கள் போக மீதியிருந்தவர்களுக்கு டில்லியில் உணவுப்பொருள்கள் கிடைக்கவில்லை. ஆகவே அவர்கள் கன்னோசிக் கருகில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒரு நகரத்துக்குச் சென்றார்கள். கங்கையின் எதிர்கரையிலிருந்து அந்த நகரத்துக்கு உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. டில்லி நகரத்துக்கு உணவுப்பொருள்கள் வந்து சேர்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் முடியும்வரையில் அவர்கள் அந்தப் புதிய நகரத்திலேயே இருந்தார்கள்.

டில்லியில் உணவுப்பஞ்சம் ஏற்படுவதற்கு இரண்டு காரணங்களிருந்தன. பருவமழை பெய்யாததால் இராஜ்யத்தின் பல பாகங்களிலும் பொதுவாக ஏற்பட்ட பஞ்சம் முதற் காரணம். முகமது துக்லக்கின் மூடத்தனம் இரண்டாவது காரணம். கங்கை யமுனை, நதிகளுக்கிடையிலிருந்த தோவாப் அல்லது இருநதிப் பிரதேசத்திலிருந்துதான் டில்லி நகரத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் சென்றன. அங்கிருந்த குடியானவர்கள் மீது முகமது துக்லக் மிக அதிகமான நிலவரியை விதித்தான். அதே சமயத்தில் டில்லி நகரத்திலிருந்த மக்களையெல்லாம் தேவகிரிக்கு அனுப்பியதால் குடியானவர்கள் பயிர்செய்த தானியங்களை வாங்குவதற்கு ஒருவரும் இல்லாமற் போய்விட்டனர். ஆகவே, அவர்களிற் பலர் தங்களுடைய வேளாண்மையைக் குறைத்துக் கொண்டார்கள். சிலர் பயிர்த்தொழிலையே விட்டுவிட்டு வழிப்பறிசெய்து பிழைக்கத் தொடங்கினார்கள். குடியானவர்களிடம் தங்களுடைய தேவைக்கு அதிகமான தானியம் இருந்தால் அதை நெருப்பிலிட்டு அழித்தார்கள். இல்லாவிட்டால் ஏற்கெனவே குறைந்திருந்த விலை இன்னும் குறையுமல்லவா? விளைவுகுறையவே அரசாங்கத்திற்குக் கிடைத்த வரியும் குறைந்தது. அதைப் பார்த்த முகமது கோபங்கொண்டு குடியானவர்களைத் தன்னுடைய முக்கியப் பகைவர்களென்று கருதினான், அதனால் அவன் ஒரு படையுடன் சென்று, குடியானவர்களை இரக்கமின்றிக் கொன்று, அந்தச் செழிப்பான இருநதிப் பிரதேசத்தைப் பாழ்படுத்திவிட்டான். இந்த நிலையில் மழையும் மறுத்தால் அந்தப் பிரதேசத்தின் கதி என்னவாகும் என்பதை நாம் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். பின்னர் டில்லி மறுபடியும் தலைநகராக்கப்பட்டபோது அந்தப் பாழடைந்த பகுதியை மறுபடியும் செழிக்கச் செய்வதற்காக முகமது துக்லக் ஒரு பெரிய திட்டம் போட்டான். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்

பட்ட அதிகாரிகள் அரசாங்கப் பணத்தை யெல்லாம் திருடிக் கொண்டு தங்கள் வேலையைச் சரியாய்ச் செய்யவில்லை. ஆகவே அந்தத் திட்டம் உருப்படவில்லை. அடுத்த அரசன் ஆட்சியில்தான் இருநதிப்பிரதேசம் மறுபடியும் சீர்பெற்றது.

முகமது துக்லக்கின் குணதிசயங்களையும் அவனுடைய திட்டங்களின் தன்மைகளையும், அவை எவ்வாறு பயனளிக்காமற் போயின என்பதையும், அறிந்துகொள்ளுவதற்கு மேலே கூறிய ஒரே எடுத்துக் காட்டுப்போதும். மற்றபடி அவனுடைய ஆட்சிக் காலம் முழுவதிலும் பல கலகங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருந்தன. அவற்றை அடக்குவதற்கு முகமது மிகக் கொடுமையான முறைகளைக் கையாண்டான். முகமது துக்லக்கின் காலத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த இபின்பட்டூட்டா என்ற யாத்திரிகன் முகமதுவின் கொடுஞ் செயல்களைப் பார்த்து அருவருப்பு அடைந்தான். அரசனுடைய கொடுமையால் கலகம் ஏற்பட்டது. கலகத்தை யடக்க அரசன் கொடிய முறைகளைக் கையாண்டான். தன்னுடைய திட்டம் எதுவும் வெற்றியடையவில்லை என்பதைக் கொஞ்சங் கொஞ்சமாக உணர்ந்த அரசன், குடிகளிடத்தில் இன்னும் கொடுமையாக நடக்கத் தொடங்கினான். இவ்வாறு அரசனுடைய ஆட்சியில் நாளுக்கு நாள் சீர்கேடு மிகுந்து கொண்டே வந்தது. அவனுடைய ராஜ்யம் அடியோடு அழிந்து போகாததற்குக் காரணம் மங்கோலியர் படையெடுக்காததுதான என்று நினைக்கலாம். கி. பி. 1330-ஆம் ஆண்டுக்குப் பின்னர் டில்லி ராஜ்யத்தை மங்கோலியர்கள் தாக்கவில்லை. மேலும் முகமது அவர்களுக்குப் பொருள் கொடுத்து அவர்களை இந்தியாவிலேயே குடியேறி அமைதியாக வாழுமாறு தூண்டினான். அதனால் மங்கோலியர்களால் இராஜ்யத்துக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை.

1345-ஆம் ஆண்டில் தட்சிணத்தில் ஏற்பட்ட கலகத்தை யடக்குவதற்காக முகமது தெற்கே சென்றான். இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அந்த முயற்சியில் வெற்றி பெறுமலே திரும்பிக் குஜராத்தில் ஏற்பட்ட கலகத்தை யடக்கச் சென்றான். அந்த வேலை முடிந்ததும் சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட கலகத்தை யடக்குவதற்காக அங்கே சென்றான். அங்கே அவன் உடல் நலிவுற்று 1351-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இறந்தான். இவ்வாறு "அரசன் குடிகளிடமிருந்து விடுதலை பெற்றான். குடிகள் அரசனிடமிருந்து விடுதலை பெற்றனர்." என்று அவன் ஆட்சியைப்பற்றிய வரலாற்றுக் குறிப்பில் எழுதப்பட்டிருக்

கிறது. தலைவனை இழந்த சேனை முகமதுவின் சொந்தக்காரனான பிரோஸ் என்பவனை அரசனாக ஏற்றுக்கொண்டது. அவன் அந்தச் சேனையுடன் டில்லிக்கு வந்து சிம்மாசனமேறினான்.

பிரோஸ் 1351- முதல் 1488- வரையில் ஆட்சி செய்தான். சிம்மாசனம் ஏறும்போது அவன் நடுவயது அடைந்தவனாக இருந்தான். அவன் ஓரளவு புத்திசாலித்தனமும், கருணையும் உடையவன். ஆனால் அவன் சோம்பல் மிகுந்தவன்; அவ்வள வாகத் திறமையுமில்லாதவன். அவனுடைய தாயார் ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த இந்துப் பெண். அவனுடைய ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் அரசியற் காரியங்கள் நன்றாக நடை பெற்றன. அதற்குக் காரணமாயிருந்தவன் அவனுடைய மந்திரி யான மக்பூல் என்பவன். மக்பூல் இஸ்லாம் மதத்தைத் தழுவிய ஒரு பிராமணன். இருபதாண்டுகளுக்கு மேலாக மக்பூல் பிரோ ஸின் மந்திரியாக இருந்தான். அந்தக்காலத்தில் அவனேதான் உண்மையில் ஆட்சி நடத்தினான். பிரோஸ் ஆரம்பத்தில் வங்கா ளத்திலும், சிந்துவிலும் சில சிறிய போர்களை நடத்தினான். ஆனால் பத்தாண்டுகளுக்குப் பின்னர் சண்டையே செய்வதில்லை என்று தீர்மானித்து விட்டான். அந்தச் சமயத்தில் மங்கோலி யர்களும் தொந்தரவு செய்யாததால் இராஜ்யத்தில் சிறிதுகாலம் அமைதி நிலவியது. அப்போது மக்பூலின் நேர்மையும் திறமை யும் கலந்த ஆட்சியில் நாடு மறுபடியும் செழிப்படைந்தது. மக்பூல் ஏறக்குறைய துக்லக்கின் ஆட்சிமுறையையே பின்பற்றி னான். குடியானவர்களைத் துன்புறுத்திய கவர்னர்களை ஒழித்து விட்டு நேர்மையான கவர்னர்களை நியமித்தான். குடியானவர் களுக்குத் துன்பம் ஏற்படாமற் காப்பதும், அவர்களிடமிருந்து நியாயமான வரிகளை வசூலிப்பதும் கவர்னர்களுடைய முக்கிய கடமைகள். இந்த முறைகளால் முகமது துக்லக்கின் காலத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் மறைந்தன; கங்கை யமுனை இருநதிப் பிரதேசம் மறுபடியும் செழிப்படைந்தது. டில்லியிலிருந்த மக்க ளுக்கும் படைவீரர்களுக்கும் குறைந்தவிலையில் உணவுப்பொருள் கள் கிடைத்தன. அரசாங்கத்திற்கும் நல்ல வருமானம் கிடைத் தது. நாட்டில் அமைதியும் கஜானவில் பணமும் இருந்ததால் கட்டிடங்களைக் கட்டுவதில் விருப்பமுடைய பிரோஸ் புதிய நகரங் களையும், மசூதிகளையும், ஸ்தூபிகளையும், அரண்மனைகளையும, பாலங்களையும கட்டினான். மேலும் நீர்ப்பாசன வசதிக்கான பல கால்வாய்களையும் அவன் வெட்டினான். இவ்வாறு துருக் கியர் ஆட்சியில் சிறிது காலம் அமைதியும் செழிப்பும் நிலவின.

ஆனால், இருபதாண்டுகளுக்குப் பின் நிலைமை மாறியது. 1372-இல் மக்பூல் இறந்தான். இரண்டாண்டுகளுக்குப் பின் பிரோஸின் அன்பை அதிகம் கவர்ந்த அவனுடைய மகன் இறந்தான். தன்னுடைய முதுமையில் ஏற்பட்ட இந்தத் துயரத்தைத் தாங்க முடியாமல் பிரோஸ் தவித்தான். அவனுடைய அறிவு மங்கியது. அதனால் நாட்டில் மறுபடியும் குழப்பம் ஏற்பட்டது. ஆங்காங்கு ஏற்பட்ட கலகங்களை அடக்குவதற்குக் கொடிய முறைகள் கையாளப்பட்டன. மாகாணங்களில் வரி வசூல் முறைகளில் சீர்கேடு ஏற்பட்டது. தலைநகரத்தில் கட்சிகளும் சூழ்ச்சிகளும் மலிந்தன. முடிவில் பிரோஸ் இறந்தபோது நாட்டின் நிலையைச் சீர்படுத்துவதற்குத் திறமை வாய்ந்த யாரும் தோன்றவில்லை. அடுத்த பத்தாண்டுகளில் ஆறு அரசர்கள் டில்லியில் ஆட்சி செய்ததாகத் தெரிகிறது. மாகாணங்களெல்லாம் சுயேச்சை யடையத் தொடங்கின. 1398-ஆம் ஆண்டில் டில்லியின்மீது ஒரு புதிய பகைவன் படையெடுத்தான். அவனை எதிர்ப்பதற்கேற்ற திறமையுடைய யாரும் அங்கு இல்லை.

சிங்கிஸ்கானால் நிறுவப்பட்ட மங்கோலிய ராஜ்யம் நெடுநாள் நிலைத்து நிற்கவில்லை. மங்கோலியர்கள் நாளடைவில் முகமதிய மதத்தைத் தழுவினார்கள். பதினான்காம் நூற்றாண்டில் அவர்கள் பலவேறு சிறிய இராஜ்யங்களிற் பரவியிருந்தார்கள். அந்தச் சமயத்தில் மங்கோலிய இராஜ்யங்களுக்கு அண்மையிலிருந்த துருக்கிய இராஜ்யங்களில் தைமூர் என்ற அரசன் பிரபலமடைந்தான். அவன் ஆக்ஸஸ் நதிக்கருகிலிருந்த இராஜ்யத்தில் 1369-ஆம் ஆண்டில் அரசனானன். அதன்பின் அவன் உலகத்தையே ஜெயிக்க விரும்பினான். கொராசான், பாரசீகம், சீனத்துருக்கிஸ்தானம் முதலிய இராஜ்யங்களையும், ருஷியாவின் பெரும்பகுதியையும் தைமூர் விரைவில் கைப்பற்றிக்கொண்டான். அதன்பிறகு அவன் இந்தியாவின்மீது படையெடுத்தான். ஆப்கானிஸ்தானத்தின் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்து 1399-இல் டில்லியையடைந்தான். அங்கு ஒரு சண்டையில் வெற்றிபெற்ற பின்னர், டில்லி நகரில் நுழைந்து, அந்த நகரத்தைக் கொள்ளையடித்து, அங்கிருந்த மக்களிற் பலரைக் கொன்று, மீதியிருந்தவர்களை அடிமைகளாகப் பிடித்துக் கொண்டான். டில்லியிலிருந்து தைமூர் கங்கைநதி வரையிற் சென்றான். வழியில் எதிர்ப்பட்டவர்களை யெல்லாம் கொன்றான், அகப்பட்ட பொருள்களையெல்லாம் கொள்ளையடித்தான். இவ்வாறு ஆறுமாதகாலம் இந்தியாவில் கழித்த பின்னர் அவன் திரும்பிச் சென்றான். அதற்குள்

ளாக இந்தியாவிலிருந்த துருக்கிய இராஜ்யம் மிகவும் சீர்கேடுற்று விட்டது. ஆனால் அது அப்போதே அழிந்துபோகாமல் மேலு மொரு பதினைந்தாண்டுகள் இருந்தது. தைமூர் இந்தியாவின் எந்தப் பகுதியையும் தன்னுடைய இராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளவில்லை. மேற்கு ஆசியாவில் அவனுடைய இராஜ்யத் திற்கேற்பட்ட ஆபத்தைத் தவிர்ப்பதற்காக அவன் இந்தியாவி லிருந்து திரும்பிச் சென்றான். ஆறாண்டுகளுக்குப் பின்னர்ச் சீனா வுக்குச் செல்லும் வழியில் அவன் இறந்தான். இந்தியாவில் அவன் துருக்கிய ராஜ்யத்தின் அழிவிற்குக் காரணமாயிருந்தானே தவிர, அந்த இடத்தில் வேறொரு இராஜ்யத்தை ஸ்தாபிக்கவில்லை.

அதிகாரம்—23

தென்னிந்தியாவில் முகமதிய ஆதிக்கம்

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தென்னிந்திய அரசியல் வர லாற்றில் முக்கியமான மாறுதல் ஒன்றுதான் ஏற்பட்டது. சோழர்களுடைய அதிகாரம் மங்கியது ; அவர்களுக்கு அடங்கி யிருந்த பாண்டியர்களுடைய அதிகாரம் பெருகியது. அந்த நூற் றாண்டில் பாண்டியர்களுடைய அதிகாரம் தமிழக முழுவதும் பரவி விட்டது. அந்த நூற்றாண்டின் இறுதியில் யாதவர்கள், காகதீயர்கள், ஹொய்சலர்கள், பாண்டியர்கள் ஆகிய நான்கு வம்சத்தினர்தாம் தீபகல்ப இந்தியாவில் முக்கியமானவர்களா யிருந்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டே யிருந்ததால் வட இந்தியாவிலிருந்து படையெடுத்த முகமதியர்களை அவர்கள் ஒற்றுமையாக எதிர்க்க முடியவில்லை.

அலாவுதீனே முதல் முதலாகத் தட்சிணத்தின்மீது படை யெடுத்த முகமதியன். அவன் தேவகிரியின்மீது படையெடுத்து ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டுபோன தைப்பற்றிச் சென்ற அதிகாரத்திற் கூறினோம். தோல்வியுற்ற தேவகிரியரசன் தன்னுடைய இராஜ்யத்தின் ஒரு மாகாணத்தின் வரியை அலாவுதீனுக்குக் கப்பமாகச் செலுத்துவதாக ஒப்புக் கொண்டான். அந்த வாக்குறுதியின்படி அவன் கப்பங்கட்டத் தவறியதால் அலாவுதீன் கி. பி. 1306-ஆம் ஆண்டில் மாலிக்கா- பூர் என்ற தன்னுடைய சேனாதிபதியை ஒரு படையுடன் தேவ கிரிக்கு அனுப்பினான், அந்தப்படையெழுச்சியில் மாலிக்காபூர்

பூரண வெற்றிபெற்றான். ஆகவே, தேவகிரி அரசன் டில்லிக்குச் சென்று அலாவுதீனைத் தன்னுடைய சக்கரவர்த்தியாக ஏற்றுக் கொண்டு, திரும்பிவந்து அவனுக்கடங்கிய சிற்றரசனாகத் தேவ கிரியை ஆண்டான். 1308-ஆம் ஆண்டில் காகதீயர்களுடைய தலைநகரமாகிய வாரங்கல்மீது மாலிக்காபூர் படையெடுத்தான். வாரங்கல் தேவகிரிக்குத் தென்கிழக்கிலிருக்கிறது. மாலிக்காபூர் வாரங்கல்லை முற்றுகையிட்டு, அரசனைத் தோற்கடித்து, அவனி-டமிருந்து பெரும்பொருளை நஷ்டஈடாகப் பெற்றான். மேலும், காகதீய அரசன் துருக்கியருக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்ட ஒப்புக்கொண்டான்.

இவ்வாறு டில்லிக்கும் தென்னிந்தியாவுக்கும் தொடர்பு ஏற் பட்டது. தென்னிந்திய அரசர்களிடமும், அங்கிருந்த கோயில் களிலும் ஏராளமான செல்வம் இருப்பதாகக் கேள்விப்பட்ட அலாவுதீன் மாலிக்காபூர் தலைமையில் மூன்றாவது தரம் ஒருபடை யைத் தென்னிந்தியாவுக்கு அனுப்பினான். 1310-ஆம் ஆண்டில் மாலிக்காபூர் ஒரு பெரும்படையுடன் தேவகிரியிலிருந்து புறப் பட்டு, ஹொய்சலர்களுடைய தலை நகரமாகிய துவார சமுத்திரத் திற்குச்சென்று அதைக் கொள்ளையடித்துவிட்டு, அங்கிருந்து மது ரையை அடைந்தான். அந்த நகரத்தைக் கொள்ளையடித்துவிட்டு, மாலிக்காபூர் இலங்கைக்கு எதிரிலுள்ள கடற்கரையை அடைந் தான். இந்தப் படையெழுச்சியின்போது மாலிக்காபூர் ஏராள மான பொருள்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு சென்றான். அவற்றில் மிகுதியான தங்கமும் ஆபரணங்களும் இருந்தன. அலா வுதீன் தேவகிரியிலிருந்து கொண்டுபோன பொருள்களைவிட இவை மிக அதிகம். அதனால் தென்னிந்தியாவின் பொருளாதார நிலை சீர்கெட்டுப்போயிற்று என்று நினைத்தால் அது தவறாகும். ஏனெனில், முகமதியர்கள் எடுத்துக்கொண்டுபோன பொருள்க ளெல்லாம் கோயில்களிலும் அரசாங்க கஜானாக்களிலும் சேமித்து வைக்கப்பட்டவை. அவற்றால் பொதுமக்களுக்கு எவ்விதப் பயனு மில்லை. கோயிலில் இருந்த பொருள்கள் பக்தர்களால் காணிக்கை யாகச் செலுத்தப்பட்டவை. கஜானாக்களிலிருந்த பொருள்களை அரசர்கள் சாதாரணமாகப் பொதுமக்களின் நன்மைக்காகச் செலவுசெய்யவில்லை என்பதைக் காட்டச் சான்றுகள் இருக்கின் றன. ஒவ்வோர் அரசனும் தன் முன்னோர்கள் தேடிவைத்த செல்வத்தைச் செலவழிக்காமற் காப்பாற்றிவைப்பதோடு தானும் பொருள் சேர்த்துவைக்கவேண்டும் என்பது அந்தக்காலத்து வழக்கம். ஆகவே அரசாங்க கஜானாக்களிலிருந்த பொருள்களைத்

துருக்கியர் கொள்ளையடித்ததால் பொதுமக்களுக்கு அதிக நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டிருக்க முடியாது. கோயில் சொத்துக் கொள்ளை யடிக்கப்பட்டதால் கஷ்டகாலங்களில் அந்தக் கோயிலின் உதவி யைப் பெற்றுவந்த சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்த மக்களுக்கு ஓரளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆனால் கோயிலுக்கு மானிய மாக விடப்பட்ட நிலங்களிருந்ததால், அவற்றின்மூலம் அந்த மக்கள் உதவிபெற முடியும். ஆகவே மாலிக்காபூர் படையெழுச்சி யால் பெரிய மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. தென்னிந்திய மக்கள் தங்கள் பழைய அரசர்களின் ஆட்சியிலேயே இருந்தார் கள். ஆனால் தென்னிந்தியாவிலிருந்த நான்கு முக்கிய இராஜ்யங் களில் இரண்டின் அரசர்கள் ஆண்டுதோறும் டில்லிக்குக் கப்பம் கட்டவேண்டியதாயிற்று.

இந்த ஏற்பாடு நெடுநாள் நிலைக்கவில்லை. கப்பம் கட்ட ஒத் துக்கொண்ட அரசர்கள் அதைச் சரியாகக் கட்டவில்லை. அதனால், 1315-ஆம் ஆண்டில் தேவகிரியில் யாதவர்களுடைய ஆட்சி ஒழிக்கப்பட்டது. 1323-ஆம் ஆண்டில் காகதீயர்களுக்கும் அதே கதி நேர்ந்தது. அதுபோலவே மதுரையிலும் பாண்டியர்க ளுடைய ஆட்சி ஒழிக்கப்பட்டு ஒரு முஸ்லிம் கவர்னர் நியமிக்கப் பட்டான். ஆகவே, ஹோய்சலர்களைத் தவிர மற்ற மூன்று வம் சத்தினரும் தங்களுடைய ராஜ்யங்களை இழந்துவிட்டார்கள். எனினும் பாண்டியர்கள் தங்களுடைய இராஜ்யம் முழுவதையும் இழக்கவில்லையென்றும், மதுரையின் தெற்கிலிருந்த ஒரு பகு தியை அவர்கள் ஆண்டுவந்தார்களென்றும் அறிகிறோம். அதன பின் டில்லியின் ஆதிக்கத்திற்கு எதிராகத் தென்னிந்தியாவில் கலகங்கள் தோன்றின. 1334-ஆம் ஆண்டில் மதுரையிலிருந்த முஸ்லிம் கவர்னர் கலகஞ்செய்து, சுயேச்சையாக மதுரையை ஆளத் தொடங்கினான். அவனுடைய வம்சத்தினர் சுமார் ஐம்பது ஆண்டுகள் மதுரையில் அம்மாதிரி ஆண்டுவந்தனர். 1347-ஆம் ஆண்டில் தேவகிரியும் ஒரு சுயேச்சைபெற்ற முஸ்லிம் இராஜ்ய மாக மாறிற்று. வாரங்கல்லும் முகமதியர்களுடைய ஆட்சியி லிருந்து விடுபட்டுச் சிறிதுகாலம் காகதீயர்களுடைய ஆட்சியில் சுயேச்சையாக இருந்தது. இவ்வாறு பதினான்காம் நூற்றாண் டின் மத்தியில் தீபகல்ப இந்தியாவில் சுயேச்சைபெற்ற இரண்டு முஸ்லிம் இராஜ்யங்கள் இருந்தன.

நாளடைவில் தீபகல்ப இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒருபகுதி முகமதியர் ஆட்சிக்குள்ளும், இன்னொருபகுதி இந்துக் களின் ஆட்சிக்குள்ளும் சென்றன. முகமதிய ராஜ்யத்திற்கு

பஹமனி இராஜ்யம் என்றும், இந்து ராஜ்யத்திற்கு விஜயநகர ராஜ்யம் என்றும் பெயர். பஹமனி ராஜ்யம் தெற்கில் கிருஷ்ணு நதிவரையிலும் பரவியிருந்தது. விஜயநகர ராஜ்யம் வடக்கில் கிருஷ்ணுநதியின் உபநதியான துங்கபத்திரா நதிவரையிலும் பரவியிருந்தது. இந்த இரண்டு நதிகளுக்கும் இடையிலுள்ள பிரதேசம் சில சமயங்களில் பஹமனி அரசர்களின் ஆட்சியிலும், சில சமயங்களில் விஜயநகர அரசர்களின் ஆட்சியிலும் இருந்தது. 1347-ஆம் ஆண்டில் தேவகிரியில் இருந்த முஸ்லிம் கவர்னர் டில்லியின் ஆதிக்கத்தை மறுத்துச் சுயேச்சையடைந்தான் என்று முன்னர்க் கூறினோம். அந்தக் கவர்னர் அரசனுனதும் அலாவுதீன் பஹமன்ஷா என்ற பட்டத்தை வைத்துக்கொண்டான். அதனுல் தான் அவனுடைய ராஜ்யத்திற்கு பஹமனி ராஜ்யம் என்று பெயர் வந்தது. அவன் 1347-முதல் 1358-வரையிலும் ஆட்சி செய்தான். அந்தப் பதினோராண்டுகளுக்குள் அவன் கிழக்கில் வாரங்கல்லையும், மேற்கில் அரபிக்கடல் வரையிலிருந்த நாடுகளை யும் ஜயித்துத் தன்னுடைய இராஜ்யத்தோடு சேர்த்துக்கொண் டான். அவன் பஹமனி இராஜ்யத்தைப் பல மாகாணங்களாகப் பிரித்துத் தன்னுடைய தலைநகரை தேவகிரியிலிருந்து அதற் குத் தெற்கிலுள்ள குல்பர்காவுக்கு மாற்றிக்கொண்டான். அவன் இறப்பதற்குள் பஹமனி இராஜ்யம் நல்ல பலம்பொருந்தியதாக மாறிவிட்டது. டில்லியில் ஆட்சிசெய்த பிரோஸ் அந்த ராஜ்யத் தின் சுயேச்சையை ஒத்துக்கொண்டான். எகிப்து தேசத்தி லிருந்த கலீபாவும் பஹமனி இராஜ்யத்தை ஒரு சுயேச்சை பெற்ற இராஜ்யம் என்று அங்கீகரித்துக்கொண்டான்.

விஜயநகரம் துங்கபத்திரா நதியின் தென்கரையிலிருக்கிறது. அது சுமார் 1336-ஆம் ஆண்டில் ஹோய்சலர்களுடைய தலை நகரமாக ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பின் வெகுவிரைவில் ஹோய் சல வம்சம் அழிந்துவிட்டது. ஆனுல் ஹோய்சல இராஜ்யம் மாத்திரம் அழிந்துபோகாமல் இருந்தது. அதன் பலவேறு பகுதி கள் ஹோய்சல அரசர்களுடைய உத்தியோகஸ்தர்களின் ஆட்சி யில் இருந்தன. அந்த உத்தியோகஸ்தர்களில் ஒரு பிரிவினர் விஜயநகரத்தில் தங்களுடைய ஆட்சியை நிறுவி, அதன்பலத் தைப் பெருக்கினர். தொடக்கத்தில் விஜயநகர ராஜ்யம் இரண்டு முகமதிய இராஜ்யங்களுக்கு இடையில் இருந்தது. ஆனுல், சுமார் 1378-ஆம் ஆண்டில் விஜயநகர அரசன் மதுரையிலிருந்த முகமதிய ஆட்சியை ஒழித்தான். அதன்பின் துங்கபத்திரா நதியி லிருந்து கன்னியாகுமரிவரையிலிருந்த பிரதேசங்களெல்லாம்

விஜயநகரத்தின் ஆட்சியில் ஒன்றுசேர்ந்துவிட்டன. பல நூற்றாண்டுக்காலம் அழியாமலிருந்த சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களும் தங்களுடைய முக்கியத்துவத்தை இழந்தன. சோழராஜ்யம் அழிந்தே போயிற்று. பாண்டியர்கள் பதினேழாம் நூற்றாண்டு வரையில் விஜயநகர ராஜ்யத்திற்கடங்கிய சிற்றரசர்களாகவே இருந்தார்கள். சேரர்களும் விஜயநகர ராஜ்யத்திற்கடங்கிய சிற்றரசர்களாகவே இருந்தார்கள். அவர்களுடைய வரலாறு முழுவதும் நமக்குத் தெரியவில்லை. எனினும், திருவாங்கூர், கொச்சி ஆகிய இராஜ்யங்களின்மூலம் கேரள இராஜ்யம் இன்றளவும் அழியாமலிருக்கிறது என்று கூறலாம்.

பஹமனி ராஜ்யத்திற்கும் விஜயநகர ராஜ்யத்திற்கும் முதல் முதலில் 1365-ஆம் ஆண்டில் சண்டை ஏற்பட்டது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நடந்த சண்டையில் விஜயநகரம் கடுமையான தோல்வியடைந்தது. மறுபடியும் 1377-ஆம் ஆண்டிலும் 1398-ஆம் ஆண்டிலும் சண்டை ஏற்பட்டது. அந்த இரண்டுதரமும் விஜயநகரப் படை பின்னடைந்து விஜயநகரக் கோட்டைக்குள் புகுந்துகொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் பஹமனிப்படைகள் விஜயநகரக் கோட்டையைக் கைப்பற்ற முடியவில்லை. மறுபடியும் பதினாறும் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் சண்டை ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. அதைப்பற்றிப் பின்னர்க் கூறுவோம். இந்த இரண்டு பெரிய இராஜ்யங்களுக்கும் நெடுங்காலம் நடந்துவந்த இந்தச் சண்டையை முகமதிய மதத்திற்கும் இந்து மதத்திற்கும் ஏற்பட்ட சண்டை என்று தற்கால ஆசிரியர்கள் கருதுவது இயற்கைதான். ஆனால் இந்த நெடுங்காலப் பகைமைக்கு மத வேறுபாடுகள்தாம் காரணமென்று நினைப்பதற்குத் தக்க சான்றுகள் இல்லை. முகமதியர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்று இந்துக்கள் நினைத்திருக்கலாம். அது இயல்பே. ஆனால் பிற நாடுகளை வென்று தங்கள் இராஜ்யத்தைப் பெருக்கவேண்டுமென்று அந்தக்காலத்து இந்து அரசர்கள் விரும்பியது சாதாரணமான நிகழ்ச்சி. அது போலவே துருக்கியர் படையெழுச்சிக்கும் பிறநாடுகளை வென்று தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பவேண்டுமென்ற நோக்கம் மிக முக்கியமான காரணமாயிருந்தது. இந்த எண்ணங்கள் எவ்வளவு தூரம் மத வேறுபாடுகளால் வலுப்படுத்தப்பட்டன என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆனால் நாளடைவில் இந்த இரண்டு இராஜ்யங்களுக்கும் ஏற்பட்ட போர்களுக்கு மத வேறுபாடுகளைக் காட்டிலும் அரசியலதிகார விருப்பந்தான் முக்கிய

மான காரணமாயிற்று என்பது உறுதி. பதினைந்தாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் விஜயநகர அரசர்கள் மாளவத்திலும் குஜராத்திலும் ஆட்சி செய்த முகமதிய அரசர்களோடு நட்பாக இருந்தார்களென்று அறிகிறோம். அந்த நூற்றுண்டின் இடையில் பஹமனி இராஜ்யத்திற்கு எதிராகச் சண்டை செய்வதற்கு முகமதியக் கூலிப்படைகளை விஜயநகர அரசர்கள் உபயோகித்தார்கள். அதற்குப் பிற்பட்ட காலத்தில் விஜயநகர அரசர்கள்கையாண்ட ராஜதந்திர முறைகளைப் பார்த்தால் அண்மையிலிருக்கும் இராஜ்யத்தைப்பகை யரசாகக் கருதவேண்டுமென்றும், அந்த இராஜ்யத்திற்கு எதிராக அதன் எல்லைக்கு அப்பாலுள்ள ராஜ்யங்களின் துணையை நாடவேண்டும் என்றும் பழங்காலத்து இந்து அரசர்கள் வழக்கமாக எண்ணியதைப் போலவே விஜயநகர அரசர்களும் எண்ணினுர்கள் என்பது நன்றுக விளங்குகிறது.

வட இந்தியப் போர் முறைகளுக்கும் தென்னிந்தியப் போர் முறைகளுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது. நல்ல பயிற்சி பெற்ற குதிரைப் படைகளைத்தான் துருக்கியர்கள் முக்கியமாகப் போரில் உபயோகித்தார்கள். அவர்களுடைய குதிரைகள் ஆப்கானி ஸ்தானத்திலிருந்தும் அதற்கப்பாலுள்ள நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்டவை. போருக்கேற்ற குதிரைகள் தென்னிந்தியாவில் இல்லை. அவற்றை வெளி நாடுகளிலிருந்து தருவிப்பதும் லாபகரமான காரியமன்று. ஏனெனில் அந்தக் குதிரைகளுக்குத் தென்னிந்தியாவின் சீதோஷ்ண நிலை ஏற்றதாக இல்லை. மேலும் அவற்றைச் சரியான முறையில் பராமரிப்பதற்கேற்ற பயிற்சியும் தென்னிந்தியர்களுக்குக் கிடையாது. அரேபியாவிலிருந்தும் பாரசீகத்திலிருந்தும் ஆண்டுதோறும் ஏராளமான குதிரைகள் தென்னிந்தியாவுக்குத் தருவிக்கப்பட்டன. சுமார் பத்தாயிரம் குதிரைகள் இவ்வாறு ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்பட்டன என்று ஒரு குறிப்பின் மூலம் அறிகிறோம். ஆனாலும், அவற்றைக் கொண்டு துருக்கியர் வைத்திருந்த அளவு பெரிய குதிரைப் படையை விஜயநகர அரசர்கள் வைத்திருக்க முடியவில்லை. ஆகவே விஜயநகரச் சேனையில் காலாட்படைக்கே முக்கிய ஸ்தானம் கொடுக்கப்பட்டது. அதற்கு உதவியாக ஒரு யானைப்படையும் சிறிய குதிரைப்படையும் இருந்தன. உதாரணமாக, 1365-ஆம் ஆண்டில் பஹமனி இராஜ்யத்தோடு சண்டைக்குச் சென்ற விஜயநகரச் சேனையில் முப்பதாயிரம் குதிரை வீரர்களும் ஒன்பது லட்சம் காலாட்களும் இருந்தார்கள். சண்டைக்குச் செல்லும் விஜயநகரச் சேனையில் ஏறக்குறையப் பத்து லட்சம் வீரர்கள்

இருப்பது வழக்கம் என்று அந்தக்காலத்து வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறிகிறோம். ஆகவே அவ்வளவு பெரிய படையை வெகுநாள் ஒன்றாக வைத்திருப்பது இயலாத காரியம். அதனால், எதிரியுடன் ஒருதரம் போரிட்ட பின்னர் அந்தப்படைகளிற் பெரும்பகுதி கலைந்து சென்றுவிடுவது வழக்கம். ஆனால் பஹமனிச் சேனையின் பெரும்பகுதி குதிரை வீரர்களால் ஆக்கப்பட்டது. அந்தக் குதிரைப்படை விஜயநகரக் குதிரைப்படையை விட மிகச் சிறந்ததாகவும் இருந்தது. மேலும் அவர்களுடைய போர் முறைகளும் பொதுவாக விஜயநகரச் சேனைகளின் போர் முறைகளைவிடச் சிறந்தவையாக இருந்தன. விஜயநகர அணி வகுப்பில் இடைவெளி ஏற்பட்டுவிட்டாற் போதும். உடனே பஹமனிக் குதிரை வீரர்கள் விஜயநகரக் காலாட்களை ஆயிரக் கணக்கில் கொன்று குவித்து விடுவார்கள்.

சில சமயங்களில் சண்டையில் ஈடுபட்ட போர்வீரர்களைத் தவிரச் சாதாரண மக்களுக்கும் பெருந்துன்பம் ஏற்பட்டது. இந்த விஷயத்தை முகமதிய வரலாற்றுக் குறிப்புக்களின்மூலம் நாம் அறிகிறோம். சண்டையில் ஈடுபட்ட வீரர்களைத் தவிரப பொதுமக்களையும் கொல்லும் வழக்கம் இந்தியச் சம்பிரதாயத்துக்கு முற்றிலும் மாறானது. எனினும் பஹமனி இராஜ்யத்திற்கும் விஜயநகர ராஜ்யத்திற்கும் ஏற்பட்ட முதற்சண்டையின் போது, விஜயநகர வீரர்கள் பஹமனி ராஜ்யத்திற்குச் சொந்தமான ஒரு கோட்டையைக் கைப்பற்றியவுடன் அங்கிருந்த போர் வீரர்களை மாத்திரமன்றி அவர்களுடைய பெண்டுபிள்ளைகளையும் கொலை செய்தார்கள். அப்போது பஹமனி அரசனான முகமது (1358-1375) பழிக்குப் பழியாக ஒரு லட்சம் இந்துக்களைக் கொல்வதாக வஞ்சினம் கூறி, 1367-ஆம் ஆண்டில் நடந்த சண்டைக்குப் பின் எதிர்ப்பட்ட இந்துக்களையெல்லாம் கொல்லும்படி தன் படைகளுக்கு உத்தரவிட்டான். அதன்பயனாக நான்கு லட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டதாக அறிகிறோம். அதன் பின் சண்டையில் ஈடுபடாத பொதுமக்களைக் கொல்லக்கூடாது என்று இரண்டு ராஜ்யங்களும் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி விஜயநகர ராஜ்யம் நடக்கத் தவறியதற்காக 1432-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சண்டைக்குப்பின் பஹமனிப் படைவீரர்கள் லட்சக்கணக்கான இந்துக்களைக் கொடூரமாகக் கொலை செய்ததோடு, கோயில்களை இடித்தும், பசுக்களைக் கொன்றும் பழி தீர்த்துக்கொண்டார்கள். ஆகவே ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும் இத்தகைய கொடிய நிகழ்ச்சிகள் நடக்கலாம் என்று விஜய

நகரத்திலிருந்த மக்கள் எதிர்பார்த்து அதற்குத் தயாராக இருந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. மேலும், பொது மக்களைக் கொல்லக்கூடாது என்ற உடன்படிக்கையின்படி இரு திறத்தாரும் நடந்துகொண்ட சமயங்களிலும், அவர்களிற் பல ரைச் சிறைப்படுத்திக் கொண்டுபோய் அடிமைகளாக வைத்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது. ஆகவே, சண்டை என்பது போர்வீரர்களைத் தவிர மற்றவர்களைப் பாதிக்காது என்ற பழைய இந்தியச் சம்பிரதாயம் தென்னிந்தியாவில் வழக்கற்றுப் போய் விட்டது என்று நன்ருகத் தெரிகிறது.

தீபகல்ப இந்தியாவில் தோன்றிய புதிய நகரங்களைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது பொருத்தமாக இருக்கும். பஹமனி ராஜ்யத்தின் முதல் தலைநகரமாயிருந்த குல்பர்கா காகதீயர்கள் காலத்திலேயே ஓரளவு முக்கியமான நகரமாயிருந்தது. ஆனல் அங்கு இன்றுவிரையில் அழியாமலிருக்கும் மசூதியும், பஹமனி யரசர்களிற் சிலருடைய சமாதிகளும், 1350–முதல் 1430-க்குள் கட்டப்பட்டவை. அந்தக்காலத்தில்தான் குல்பர்கா பஹமனி ராஜ்யத்தின் தலைநகராயிருந்தது. பின்னர் பஹமனி ராஜ்யத்தின் தலைநகரம் பீடாருக்கு மாற்றப்படவே குல்பர்காவின் முக்கியத் துவம் குறைந்தது. ஆனல் சமீபகாலத்தில் அது மறுபடியும் சிறப்படையத் தொடங்கியிருக்கிறது. தற்போது அது ஒரு நல்ல வியாபாரஸ்தலமாகவும், ஹைதராபாத்து ஸம்ஸ்தானத்தின் அரசாங்க அலுவல்களுக்கு ஒரு முக்கிய காரியாலயமாகவும் இருக்கிறது. பீடார் குல்பர்காவுக்கு வடகிழக்கில் 60-கல் தொலைவில் இருக்கிறது, அதுவும் இந்துக்கள் காலத்திலேயே ஓரளவு முக்கிய நகரமாக இருந்தது. ஆனல் அது பஹமனி அரசர்களின் தலைநகரான பின்புதான் மிகச் சிறப்படைந்தது. அவர்களாற் கட்டப்பட்ட மாளிகைகளும், மசூதிகளும், சமாதி களும், ஒரு கலாசாலையும் இன்னும் அங்கு இருக்கின்றன. தற் காலத்தில் அது ஒரு சிறிய வியாபாரஸ்தலமாக இருக்கிறது.

ஆனல் விஜயநகரம் மாத்திரம் அழிந்தேபோயிற்று. பதி-னைந்தாம் நூற்ருண்டில் விஜயநகரம் குல்பர்காவையும், பீடாரை யும்விடப் பன்மடங்கு சிறப்புவாய்ந்ததாக இருந்திருக்கவேண்டும். இருந்தாலும் அதைப்பற்றி இந்தியர்களே எழுதிய குறிப்பு ஒன்றும் இல்லை. அந்த நகரத்தின் சிறப்பை வெளிநாட்டார்

மூலமாகத்தான் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஓர் இத்தாலிய வியாபாரியும், ஒரு பாரசீக தூதனும், ஒரு ருஷியப் பாதிரியும் விஜயநகரத்துக்கு வந்து, அதைப் பார்த்து, அதன் சிறப்பைப் பற்றி எழுதிவைத்திருக்கிறார்கள். மேலும் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட சில போர்ச்சுக்கீசியக் குறிப்புகளின் மூலமாகவும் விஜயநகரத்தைப் பற்றிய சில விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. நகரத்தைச் சுற்றி உறுதியான சுவர்கள் இருந்தன. அந்த அரண்களாற் சூழப்பட்ட நகரத்தின் பரப்பு அறுபது சதுரமைலுக்கு அதிகமாக இருந்தது. கோட்டைக்குள்ளேயே விளை நிலங்களும் தோட்டங்களுமிருந்தன. துங்கபத்திரா நதியின் தண்ணீர் கால்வாய்களின் வழியாகச் சென்று அந்த நிலங்களுக்குப் பாய்ந்தது. நகரத்தின் ஜனத்தொகை எவ்வளவு இருந்தது என்று உறுதியாகக் கூறமுடியாது. ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டின் நிலைமைக்கேற்றபடி பார்த்தால் விஜயநகரத்தில் மிகப் பெருந்தொகையான மக்கள் வசித்தார்கள் என்று கூறலாம். வீடுகளிற் பெரும்பான்மையானவை சிறியவையாகத்தான் இருந்தன. ஆனால் இடையிடையே மாளிகைகளும், கோயில்களும், பொதுக்கட்டிடங்களும் கம்பீரமாக நிமிர்ந்து நின்றன. மேலும் அகன்ற தெருக்களும், அவற்றின் இருமருங்கிலும் நிழல்தரு மரங்களும், வரிசை வரிசையான கடைகளும் அந்த நகரத்தில் இருந்தன. நகரத்தில் வியாபாரம் மிகுதியாக நடந்தது; செல்வம் கொழித்தது. நகரத்தின் முக்கிய கட்டிடங்களெல்லாம் இந்துச் சிற்ப முறைகளுக்கேற்பக் கட்டப்பட்டவை. அவற்றில் அழகிய சித்திர வேலைப்பாடுகள் இருந்தன. அந்தக் காலத்தில் விஜயநகரத்தைப் பார்த்த வெளிநாட்டார் அங்கிருந்த கட்டிடங்களின் அழகை மிக உயர்வாக வர்ணித்திருக்கிறார்கள். இன்று பாழாகக் கிடங்கும் சில பகுதிகளைக் காணும்போது அவர்கள் பொய் சொல்லவில்லை என்பது எளிதில் விளங்குகிறது. 1565-ஆம் ஆண்டில் நடந்த தலைக்கோட்டை யுத்தத்திற்குப்பின் விஜயநகரத்தை முகமதியர்கள் தரைமட்டமாக்கினார்கள். அதன் பின் அந்த நகரத்தில் யாரும் குடியேறவில்லை.

அதிகாரம்—24

பதினைந்தாம் நூற்றாண்டு

பதினைந்தாம் நூற்றாண்டில் ஏறக்குறைய இந்தியா தேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் சண்டைகளும் சச்சரவுகளும் நடந்து கொண்டே இருந்தன. ஆனால் அவற்றைப்பற்றி நாம் அதிகமாக ஒன்றும் கூறவேண்டியதில்லை. அவை இந்தியாவின் பொது வரலாற்றில் அவ்வளவு முக்கியமானவை அல்ல. விஜயநகரத்திற்கும் பஹமனி ராஜ்யத்திற்கும் நடந்த போர்கள்தாம் தென்னிந்தியாவில் முக்கியமானவை. ஓரிஸாவிலும் குஜராத்திலும் மாளவத்திலும் சில போர்கள் நிகழ்ந்தன. டில்லி இராஜ்யத்தின் அழிவால் வட இந்தியாவில் பல சுயேச்சை பெற்ற இராஜ்யங்கள் தோன்றின. அவைகள் ஒன்றோடொன்று சண்டை செய்துகொண்டே இருந்தன. டில்லியிலிருந்து தட்சிணத்திற்குச் செல்லும் வழிகளிலிருந்த பிரதேசங்கள் மறுபடியும் இந்து அரசர்களுடைய ஆட்சிக்குட் சென்றன. ஆகவே மாளவத்திற்கும் குஜராத்திற்கும் டில்லியோடிருந்த தொடர்பு அறுந்தது. அதனால் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் அவை யிரண்டும் சுயேச்சை பெற்ற முகமதிய இராஜ்யங்களாக மாறின. ஏறக்குறைய அதே சமயத்தில் கிழக்கு மாகாணம் என்று பெயர்பெற்ற ஜான்பூரும் சுயேச்சைபெற்ற முகமதிய இராஜ்யமாக மாறிற்று. டில்லிக்கும் ஜான்பூருக்கும் இடையில் எல்லை சரியாக நிர்ணயிக்கப்படாததால் அவ்விரண்டுக்கும் இடையிலிருந்த பிரதேசத்தில் கங்கையின் இரு மருங்கிலும் பல சிறு இந்து ராஜ்யங்கள் தோன்றின. டில்லியின் மேற்கில் பஞ்சாபும் சுயேச்சை பெற முயன்றுகொண்டிருந்தது. ஆகவே துருக்கியர்களுடைய பரந்த இராஜ்யம் மிகச் சுருங்கிவிட்டது. அவர்களுடைய ஆட்சியில் டில்லியும் அதைச் சுற்றி ஒரு சிறு நிலப்பகுதியும்தான் இருந்தன.

இச்சுருங்கிய பிரதேசத்தில் கி. பி. 1414-ஆம் ஆண்டு வரையில் துக்லக் வம்சத்தினர் ஆண்டு வந்தனர். ஆனால் அந்த ஆண்டில் கிஸிர்கான் என்பவன் டில்லிச் சிம்மாசனத்தைக் கைப்பற்றி* சையது வம்சத்தை ஸ்தாபித்தான். கிஸிர்கான் தைமூரின் ஆதரவில் இருந்தவன். ஆகவே அவன் தன்னைத் தைமூரின் பிரதிநிதி

---

* சையது என்ற பட்டம் நபிகள் நாயகத்தின் சந்ததியார்களைக் குறிக்கும். ஆனால் அந்தப் பரம்பரையில் வராதவர்கள் கூட அந்தப் பட்டத்தை வைத்துக்கொண்டார்கள். கிஸிர்கான் நபிகள் நாயகத்தின் சந்ததியில் வந்தவன் தான் என்று உறுதியாகக் கூற முடியாது.

என்று கூறிக்கொண்டான். ஆனால் தைமூரின் சந்ததியார்கள் பல மற்றவர்களாக இருந்ததால், பிற்பட்ட சையது அரசர்கள் தங்களை அரசர்கள் என்றே கூறிக்கொண்டார்கள். அவர்களுடைய இராஜ்யம் மிகச் சிறியது. அவர்கள் அனைவரும் திறமையற்றவர்கள். 1448-ஆம் ஆண்டோடு அவர்கள் ஆட்சி அழிந்தது.

அதன்பின் சிறிது காலத்தில் டில்லிச் சிம்மாசனத்தை லோடி வம்சத்தைச் சேர்ந்த ஆப்கானியனான பலால் என்பவன் கைப்பற்றிக்கொண்டான். அவன் சில ஆண்டுகள் பஞ்சாபில் சையது அரசர்களுக் கடங்கிய கவர்னராக இருந்தான். ஆனால் அவன் பெயரளவில் கவர்னராக இருந்தானே தவிர, உண்மையில் பூரண சுயேச்சை பெற்ற அரசனாகத்தானிருந்தான். அவன் 1451-முதல் 1489-வரையில் டில்லியின் அரசனாயிருந்தான். ஏறக்குறைய அவனுடைய ஆட்சிக்காலம் முழுவதிலும் அவன் ஜான்பூரோடு சண்டை செய்துகொண்டிருந்தான். இறுதியில் அவன் ஜான்பூரை வென்று டில்லியோடு சேர்த்துக்கொண்டான். அவன் ஆட்சிமுறையில் நல்ல திறமை வாய்ந்தவன். லோடி வம்சத்தைச் சேர்ந்த பல ஆப்கானியர்களை வரவழைத்து, அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து, அவர்களுடைய உதவியால் தன்னுடைய இராஜ்யத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டான். அவனுக்குப் பின் அவனுடைய மகனான சிக்கந்தர்ஷா (1489—1517) என்பவன் அரசனானான். அவனும் திறமை வாய்ந்தவனே. அவனுடைய ஆட்சி மேற்கில் சிந்து நதியிலிருந்து கிழக்கில் வங்காளத்தின் மேற்கெல்லை வரையில் பரவியிருந்தது. யமுனைக்கு மேற்கிலும் தெற்கிலு மிருந்த இந்து அரசர்களைத் தோற்கடித்து அவர்கள் இராஜ்யத்தை டில்லியோடு சேர்க்கும் முயற்சியிலும் அவன் ஓரளவு வெற்றி பெற்றான். அந்த முயற்சிக்குச் சௌகரியமாக இருக்குமென்றுதான் அவன் டில்லிக்குப் பதிலாக ஆக்ராவைத் தன் தலை நகராக்கினான். அப்போது ஆக்ரா அவ்வளவு முக்கியமான நகரம் அன்று. ஆனால் முகலாயர் காலத்தில் அது இந்தியாவிலேயே தலை சிறந்த நகரமாயிற்று. அவனுக்குப் பின்வந்த இப்ராஹிம் லோடி திறமையற்றவன். அவன் ஆப்கானியப் பிரபுக்களைப் பகைத்துக்கொண்டான். அதன் பயனாக முதலில் பீகாரில் ஒரு பெரிய கலகம் ஏற்பட்டது. பின்னர் லாகூர் கவர்னர் இப்ராஹீம் லோடிக்கு எதிராகக் காபூலில் ஆட்சி செய்த முகலாய அரசனான பாபருடன் தொடர்பு கொண்டான். அதன் விளைவாக 1526-ஆம் ஆண்டில் வட இந்தியாவை முகலாயர்கள் ஜயித்துக் கொண்டார்கள்.

அந்தக்காலத்து வரலாற்றுக் குறிப்புகளில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகளின்மூலம் பதினைந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் வாழ்ந்த குடியானவர்களின் நிலைமையைப்பற்றிப் பொதுவாகச் சில விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. சையது அரசர்கள் காலத்தில் வரிவசூல், ஊர்க்காப்பு, முதலிய சாதாரண அரசாங்க அலுவல்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஒன்றுமே கிடையாது. பணம் தேவையான சமயங்களில் அரசன் தன் படைகளை அனுப்பிக் குடியானவர்களிடம் பணம் வசூலித்தான். சில சமயங்களில் தானே நேரிற்சென்று வசூல் செய்தான். குடியானவர்களுடைய நிலை மிகக் கஷ்டமாயிருந்தது. அவர்கள் ஆங்காங்கிருந்த இந்து அரசர்களுக்கோ முகமதிய கவர்னர்களுக்கோ வரி செலுத்த வேண்டியிருந்தது. அதன்பின்னர் அரசனுடைய படைவீரர்கள் வந்து கேட்கும்போதும் அவர்கள் பணம் கொடுக்கவேண்டும். அரசனுடைய படைவீரர்கள் குடியானவர்களிடமிருந்து எவ்வளவு பணத்தைப் பறிக்க முடியுமோ அவ்வளவையும் பறித்தார்கள். ஆனால் அதற்குப் பதிலாக அரசாங்கம் குடியானவர்களுக்கு எந்தவிதமான காப்பு ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கவில்லை. ஆகவே கொள்ளைக் கூட்டத்தார் நாடு முழுதும் திரிந்து அகப்பட்ட பொருள்களையெல்லாம் சூறையாடிக்கொண்டு போனார்கள். உண்மையில் பகற்கொள்ளை நல்ல லாபகரமான தொழிலாக இருந்தது. அதனால் திறமையும் துணிவும் உள்ள பலர் அந்தத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினார்கள். ஆனால் பலால் லோடியின் காலத்தில் இந்தச் சீர்கேடான நிலை மாறிற்று. அவனுடைய இராஜ்யத்தில் சுமார் ஆறில் ஒரு பகுதி அவனிடத்தில் விசுவாசமுள்ள இந்துத் தலைவர்களால் ஆளப்பட்டது. மற்ற பகுதிகளில் பெரும்பாலானவை ஆப்கானியப் பிரபுக்களின் ஆட்சியிலிருந்தன. அவர்களில் ஒவ்வொருவனும் ஒரு சேனையை வைத்திருந்தான். அந்தச் சேனையிலிருந்த வீரர்களுக்கு அவனே சம்பளம் கொடுத்தான். அதன் உதவியால் அவன் தன் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஏறக்குறையப் பூரண சுயேச்சையுடன் ஆட்சி செய்தான். அவ்வாறு ஆட்சிசெய்த ஆப்கானியப் பிரபுக்கள் முட்டாள்களல்லர். குடியானவர்களுக்குத் தக்க காப்பை அளித்தாலன்றி அவர்களிடம் வசூல் பண்ணுவதற்குப் பொருளிராது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அவர்களை ஏமாற்றவோ, எதிர்க்கவோ எவரேனும் முயன்றால் அவர்களைச் சும்மா விடமாட்டார்கள். வரிகொடுக்க மறுத்த கிராமங்களின்மீது அவர்களுடைய படை

கள் பாயும். இந்துத் தலைவர்களில் யாராவது அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் செய்ய முயன்றால் அவர்கள் உடனடியாகக் கொல்லப்படுவதோடு, அவர்களுடைய பெண்டு பிள்ளைகளும் அடிமைகளாக விற்கப்படுவார்கள். தற்காலக் கண்கொண்டு பார்த்தால் அந்தக்காலத்தில் ஆப்கானியர்கள் கையாண்ட முறைகள் கொடூரமானவை என்று தோன்றும். ஆனால் சையது அரசர்கள் காலத்திலிருந்த சீர்கேட்டைவிடப் பலால் லோடியின் ஆட்சி எவ்வளவோ சிறந்தது என்று ஒத்துக்கொள்ளவேண்டும்.

இனி வட இந்தியாவின் மற்றப் பகுதிகள் என்ன நிலையிலிருந்தன என்று பார்ப்போம். பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் சண்டையும் சச்சரவும் நடந்துகொண்டே இருந்தன என்று இந்த அதிகாரத்தின் தொடக்கத்திற் கூறினோம். ஆனால் வங்காளத்தின் நிலை இதற்கு விலக்காக இருந்தது. பதினான்காம் நூற்றாண்டின் இடையிலிருந்து 1538-ஆம் ஆண்டில் அதை முகலாயர்கள் ஜயிக்கும்வரையில் அது ஒரு சுயேச்சை பெற்ற இராஜ்யமாகவே இருந்தது. கொஞ்சநாள் அது ஜான்பூர் இராஜ்யத்தின் படையெழுச்சிக்கு இலக்காக இருந்தது. ஆனால் விரைவில் அந்த ஆபத்தும் நீங்கிவிட்டது. சிம்மாசனத்திற்காக நடந்த போட்டிகளின் பயனாக ஏற்பட்ட சச்சரவுகளைத் தவிர வேறு சச்சரவுகள் அந்த இராஜ்யத்தில் ஏற்படவில்லை. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்துத் தலைவன் ஒருவன் வங்காளத்திற்கு அரசனானான் என்ற ஒரு செய்தி நமக்குத் தெரிகிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க விஷயந்தான். அவனுக்குப்பின் முகமதிய மதத்தைத் தழுவிய அவனுடைய மகன் பட்டத்திற்கு வந்தான். இந்த நிகழ்ச்சியைப் பற்றிய குறிப்புகள் தெளிவாகத் தெரியவில்லை. வங்காளம் சுயேச்சையான இராஜ்யமாக இருந்த காலத்தில் அரசபதவிக்காகப் பல போட்டிகள் நடந்தன. அதனால் அரசர்கள் திடீரென்று சிம்மாசனத்தை இழப்பதும், கொல்லப்படுவதும் சகஜமான நிகழ்ச்சிகளாக இருந்தன. வங்காளத்தில் ஆட்சிசெய்த அரசர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இத்தகைய ஆபத்து ஏற்பட்டது என்று பொதுவாகக் கூறலாம். இத்தகைய குழப்பங்களுக்கு முக்கிய காரணமாயிருந்தவர்கள் அரண்மனையிலிருந்த அடிமைகள்தானென்று தெரிகிறது. அடிமைகளின் சூழ்ச்சிகளால் டில்லி இராஜ்யத்தில் ஏற்பட்ட குழப்பங்களைப்பற்றி நாம் ஏற்கெனவே கூறியது நினைவிலிருக்கும். வங்காளத்தில் பல ஆப்பிரிக்க அடிமைகளிருந்தார்கள். ஆப்பிரிக்கர்களை அடிமை

களாக வைத்துக்கொள்ளும் பழக்கம் பதினைந்தாம் நூற்றாண்டின் இடையில் தோன்றியது. அந்த அடிமைகளிற் பலர் அரசாங்கத்தில் முக்கியமான பதவிகளை வகித்தார்கள். அரச சம்ஸ்தானத்தில் அவர்களுடைய கட்சிக்குச் சிறிதுகாலம் சிறந்த செல்வாக்கு இருந்தது. 1486-ஆம் ஆண்டில் அவர்களுடைய தலைவன் அரசனைக் கொன்றுவிட்டுத் தானே சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அடுத்த ஏழாண்டுகள் இராஜ்யாதிகாரம் ஆப்பிரிக்கர்கள் கையிலேயே இருந்தது. ஆனால் அவர்களுடைய கொடுங்கோன்மையால் அவர்களுக்கு எதிராக ஒரு கலகம் ஏற்பட்டது. அந்தக் கலகக்காரர்களுக்குத் தலைமை வகித்தவனும் ஒரு வெளி நாட்டான்தான். அவன் ஆப்பிரிக்கர்களுடைய ஆட்சியை அழித்து வங்காளத்தில் தன்னுடைய ஆட்சியை நிறுவினான். அவன் வம்சத்தினர் அங்கு 1538-ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்தனர்.

பஞ்சாப் பெயரளவில் டில்லி ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. அதற்குத் தலைநகரம் லாகூர். ஆனால் மூல்தானும் வடக்குச் சிந்தும் டில்லி ராஜ்யத்திற் சேராமல் 1438-முதல் 1528-வரையில் ஒரு தனிப்பட்ட முகமதிய வம்சத்தின் ஆட்சியில் இருந்தன. தெற்குச் சிந்து இராஜபுத்திரர்கள் ஆட்சியில் இருந்தது, ஆனால் அவர்கள் முகமதிய மதத்தில் சேர்ந்துவிட்டார்கள். டில்லி இராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப்பின் அவர்களும் சுயேச்சையாகவே ஆட்சி செய்தார்கள். அவர்களுடைய ஆட்சி ஏறக்குறையப் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரையில் இருந்தது. அதன்பின் மங்கோலியர்கள் தென் சிந்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். காஷ்மீரம் டில்லி இராஜ்யத்திற் சேராமலே இருந்தது. 1346-ஆம் ஆண்டில் ஒரு முகமதியன் அந்த இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். அவனுடைய வம்சத்தினர் பல உயர்வு தாழ்வுகளுடன் ஏறக்குறைய இரு நூறாண்டுகள் காஷ்மீரத்தில் ஆட்சி செய்தனர். டில்லிக்குத் தெற்கிலிருக்கும் கரடுமுரடான பிரதேசத்தில் இந்துத் தலைவர்கள் அதிகாரம் ஓங்கியிருந்தது. அந்தப் பிரதேசத்திற்கு அப்பால் மாளவமும், குஜராத்தும் இருந்தன.

மாளவத்திலும், குஜராத்திலும், அவற்றிற்கு அண்மையிலுள்ள பிரதேசங்களிலும் ஓயாது சண்டையும் சச்சரவும் நடந்து கொண்டே யிருந்தன. மாளவமும் குஜராத்தும் பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுயேச்சைபெற்ற முகமதிய இராஜ்யங்களாக மாறின. மாளவத்திற்குத் தெற்கில் காண்டேஷ்

என்ற இன்னொரு முகமதிய இராஜ்யம் இருந்தது. அது பஹமனி ராஜ்யத்திலிருந்து பிரிந்து சுயேச்சை பெற்றது. காண்டேஷ் ராஜ்யத்திற்குத் தெற்கில் பஹமனி ராஜ்யமும், அதற்குத் தெற்கில் விஜயநகர இராஜ்யமும் இருந்தன. பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தப் பகுதியில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றித் தெளிவாகக் கூற முடியாது. அந்தச் சிக்கலான சம்பவங்களைப்பற்றி விரிவாகக் கூற முயலாமல் விஜயநகரம் பஹமனி ராஜ்யம் ஆகிய இரண்டு இராஜ்யங்களின் வரலாற்றை மாத்திரம் கூறுவது பொருந்தும்.

பஹமனி ராஜ்யத்தில் இருந்த முகமதியர்கள் நாளடைவில் உடல்வன்மையையும், திறமையையும் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்கினார்கள். அதனால் இராஜ்யத்தைக் காப்பதற்கு வெளிநாடுகளிலிருந்து முகமதியர்களை வரவழைக்க வேண்டியதாயிற்று. அப்படி வந்த வெளிநாட்டு முகமதியர்களிற் சிலர் சம்பளத்திற்காகவும், சிலர் தங்கள் முன்னேற்றத்திற்கு இந்தியாவில் நல்ல வாய்ப்பு இருக்கும் என்று எண்ணியும் வந்தார்கள். இதுவே பதினைந்தாம் நூற்றாண்டில் பஹமனி ராஜ்யத்தின் வரலாற்றில் மிக முக்கியமான விஷயமாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து வந்த முகமதியர்கள் முக்கியமாகப் பாரசீகத்திலிருந்தும் அதற்கண்மையிலுள்ள நாடுகளிலிருந்தும் வந்தார்கள். ஏற்கெனவே பஹமனி இராஜ்யத்திலிருந்த முகமதியர்களைவிட வெளியிலிருந்து வந்தவர்கள் போரில் மிகுந்த திறமையுடையவர்களாக இருந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் இராஜ்யாதிகாரத்தையும் கைப்பற்றிக்கொண்டார்கள். அதனால் வெளிநாட்டிலிருந்து புதிதாக வந்த முகமதியர்களுக்கும் ஏற்கனவே அங்கிருந்த முகமதியர்களுக்கும் தீராத பகைமை ஏற்பட்டது. இன்னும் கொஞ்சகாலம் கழித்துப் பஹமனி அரசர்கள் ஆப்பிரிக்கர்களையும் வரவழைக்கத் தொடங்கினார்கள். அதனால் அவர்களுடைய கட்சியும் ஒன்று ஏற்பட்டது. வெளிநாட்டிலிருந்து வந்த முகமதியர்கள் அவர்களை மிகவும் தாழ்வாகக் கருதியதால் அவர்கள் பொதுவாகச் சுதேச முஸ்லிம்களோடு சேர்ந்துகொண்டார்கள். இந்தக் கட்சிகளின் இடையிலிருந்த தீராத பகைமையும், சாதாரணமாகத் துருக்கியத்தலைநகரங்களில் எதிர்பார்க்கக்கூடிய சூழ்ச்சிகளும் சேர்ந்ததால் பஹமனியரசர்களுக்குப் பல கஷ்டங்களும் ஆபத்துக்களும் ஏற்பட்டிருக்குமென்று நாம் எளிதில் உணரலாம். 1487-ஆம் ஆண்டுவரையில் ஆட்சிசெய்த பன்னிரண்டு அரசர்களில் மூன்றுபேர் கொலை

செய்யப்பட்டார்கள். இருவர் கண்கள் பிடுங்கப்பட்டுச் சிம்மாசனத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். பஹமனி அரசர்களிற் பெரும்பாலானவர்கள் குடிகாரர்கள். பலர் தங்களுடைய அந்தப்புரங்களிலேயே காலங்கழித்தார்கள். ஹுமாயூன் என்ற அரசன் கொடுங்கோன்மைக்கு எடுத்துக்காட்டாக இருந்தான்.

இவ்வளவு குறைகள் இருந்தபோதிலும் பதினைந்தாம் நூற்றாண்டில் விஜயநகரத்தோடு செய்த சண்டைகளில் பஹமனி அரசர்களே அதிக வெற்றிகளையடைந்தார்கள். அந்தக்காலத்து வரலாற்றை அறிந்துகொள்ளுவதற்கு முகமதியர்கள் எழுதி வைத்த குறிப்புக்களே முக்கியமான ஆதாரமாக இருப்பதால் அவைகளை முற்றிலும் உண்மை என்று நம்பமுடியாது. ஏனெனில் அவர்கள் முகமதியர்களுடைய வெற்றிகளை மிகைப்படுத்திக் கூறியிருக்கலாமல்லவா? 1400-ஆம் ஆண்டிலிருந்து விஜயநகர அரசர்கள் பஹமனி அரசர்களுக்குக் கப்பங்கட்டி வந்ததாகவும், அவ்விரண்டு இராஜ்யங்களுக்கும் ஏற்பட்ட சண்டைகளுக்கு முக்கிய காரணம் விஜயநகர அரசர்கள் கப்பத்தொகையைச் சரியாகச் செலுத்தத் தவறியதுதான் என்றும், அப்படிச் சண்டை ஏற்பட்ட ஒவ்வொருதரமும் விஜயநகர அரசர்கள் தோல்வியுற்றுக் கப்பத்தைச் செலுத்தியதுமன்றிப் பல தாழ்வான நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார்கள் என்றும் அந்தக் குறிப்புக்கள் கூறுகின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விஜயநகரத்திற்கும் ஒரிசாவிற்கும் சண்டை ஏற்பட்டது. அதேசமயத்தில் பஹமனியர்கள் மாளவத்தோடும் குஜராத்தோடும் சண்டை செய்துகொண்டிருந்தார்கள். அதற்குப்பின் திடீரென்று இரண்டு ராஜ்யங்களிலும் புரட்சிகள் ஏற்பட்டு அவற்றின் நிலைமையையே மாற்றிவிட்டன. அதனால் சொஞ்சகாலம் அந்த இரண்டு ராஜ்யங்களுக்கும் சண்டையில்லாமலிருந்தது.

ஒரிஸாவோடு நடந்த சண்டையின்போது நரசிம்மன் என்ற ஒரு பிரபு பிரபலமடைந்தான். அவன் சென்னைக்கருகிலுள்ள பிரதேசத்திற்கு அதிபதியாயிருந்தான். அந்தச் சமயத்தில் ஆட்சி செய்த விஜயநகர அரசன் திறமையற்றவனாக இருந்ததால் நரசிம்மன் 1478-ஆம் ஆண்டில் அரசனைத் தள்ளிவிட்டு விஜயநகர சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டான். 1507-ஆம் ஆண்டில் கிருஷ்ண தேவராயன் என்பவன் விஜயநகர அரசனானான். அவனே விஜயநகரத்தில் ஆட்சி செய்த அரசர்கள் அனைவரிலும் தலை சிறந்தவன். அதற்குள்ளாகப் பஹமனி ராஜ்யத்திலும் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. பஹமனி ராஜ்யத்தில் நான்கு

பெரிய மாகாணங்களிருந்தன. ஒவ்வொன்றிற்கும் ஒரு பலம் பொருந்திய கவர்னர் இருந்தான். அரசன் மிகத் திறமையற்ற வனுக இருந்ததால் 1490-ஆம் ஆண்டில் மூன்று மாகாணங்கள் சுயேச்சை அடைந்தன. நான்காவது மாகாணமும் விரைவில் அவற்றின் வழியைப் பின்பற்றியது. பஹமனி அரசர்களுக்கு பீடார் மாத்திரம் மிஞ்சியது. இதில் இன்னும் சிறிது காலம் அவர்களுடைய ஆட்சி இருந்தது. ஆனுல் அதன் முக்கியத்துவ மெல்லாம் போய்விட்டது. மற்ற நான்கு ராஜ்யங்கள் அஹமது நகரம், பீரார், கோல்கொண்டா, பீஜப்பூர் என்பவை. முன்னைய இரண்டும் பஹமனி இராஜ்யத்தின் வட பகுதியிலும், பின்னைய இரண்டும் தென்பகுதியிலுமிருந்தன. இவற்றுள் பீஜப்பூர் இராஜ்யம் விஜயநகர ராஜ்யத்தின் வடக்கு எல்லைக்கு அடுத்தாற் போலிருந்தது.

இவ்வாறு இரண்டு இராஜ்யங்கள் இருந்த இடத்தில் இப் போது ஆறு இராஜ்யங்கள் ஏற்பட்டன. அவற்றுக்குள் ஓயா மல் சண்டை நடந்துகொண்டிருந்தது. முகமதிய இராஜ்யங் கள் ஒன்றேடொன்று சண்டையிட்டுக்கொண்டே யிருந்ததால் அவைகள் அடிக்கடி விஜயநகரத்தின் துணையை நாடின. அந்த ஆறு இராஜ்யங்களிலும் இப்போது விஜயநகரமே மிகுந்த பலம் பொருந்திய இராஜ்யமாக இருந்தது. விஜயநகர அரசர்கள் சில சமயங்களில் பீஜப்பூருக்குத் துணையாகவும், மற்ற சமயங்களில் பீஜப்பூருடன் சண்டை செய்த மற்ற முகமதிய இராஜ்யங்களுக் குத் துணையாகவும் போர் செய்தார்கள். தங்கள் பலத்தை உணர்ந்த விஜயநகர அரசர்கள் முகமதியர்களைத் தாழ்வாக நினைக்கத் தொடங்கினுர்கள். மேலும் அவர்கள் படையெழுச்சி களின்போது மசூதிகளை இடித்தும், முகமதியப் பெண்களை அவ மானப்படுத்தியும், இன்னும் பல வழிகளிலும் கொடுமை செய்யத் தலைப்பட்டார்கள். இவற்றையெல்லாம் கண்ட முகமதியர்கள் தாங்கள் ஒன்று சேர்ந்து விஜயநகரத்தை எதிர்க்காவிட்டால் தங்களுக்கு அழிவு நேரிடுவது நிச்சயம் என்று உணர்ந்தார்கள். ஆகவே 1564-ஆண்டில் அவர்கள் ஒன்று சேர்ந்து விஜய நகரத்தை எதிர்த்தார்கள். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அவர்களுடைய சேனைகள் விஜயநகரச் சேனைகளைத் தலைக் கோட்டை என்ற இடத்தில் சந்தித்தன. முகமதியர்கள் வெற்றி யடைந்தார்கள். இந்துக்கள் படுதோல்வியடைந்தார்கள். அதன் பின் விஜயநகரமும் அதைச் சுற்றியுள்ள பிரதேசமும் முகமதியர் களின் அழிவு வேலைக்கு இலக்காயின. விஜயநகரப் பரம்பரை

யினர் அந்த ராஜ்யத்தின் தென்கிழக்குப் பகுதியில் இன்னும் சிலகாலம் ஆட்சி செய்தார்கள் என்றாலும், அவர்களால் முகமதிய ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட ஆபத்து ஒழிந்தது.

வடஇந்தியாவில் பதினைந்தாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சண்டைகளின் விளைவாகக் குடியானவர்களுக் கேற்பட்ட துன்பங்களை முன்னர்க் கூறினோம். தென்னிந்தியக் குடியானவர்களுடைய நிலைமையைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கேற்ற ஆதாரங்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கவில்லை. எனினும், சண்டையில் நேரடியாக ஈடுபடாத பொதுமக்களுக்குச் சில சமயங்களில் ஏற்பட்ட சொல்லமுடியாத துன்பங்களைப்பற்றி முன்னரே கூறினோம். மேலும், சேனைகளில் லட்சக்கணக்கான போர்வீரர்கள் இருந்ததால், சண்டை ஏற்பட்ட காலங்களிலெல்லாம் பயிர்த்தொழிலில் ஈடுபட்ட ஏராளமான குடியானவர்கள் போருக்குச் செல்லவேண்டியிருந்தது. அதனால் அடிக்கடி பயிர்த்தொழில் பாதிக்கப்பட்டிருக்கும் என்பது எளிதில் விளங்கும். அதுவுமன்றி, சண்டையினால் ஏற்பட்ட செலவுகளும், அரசர்கள் நடத்திய ஆடம்பரமான வாழ்க்கையும், குடியானவர்களுடைய வரிச்சுமையை மிகவும் அதிகரித்திருக்கும். வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு சிலர் எழுதிவைத்த குறிப்புக்களிலிருந்து, நகரங்களின் ஆடம்பரமான வாழ்க்கைக்கும் கிராமங்களின் தாங்கமுடியாத வறுமைக்கும் இருந்த மிகுந்த வேறுபாட்டை, நாம் ஓரளவு அறிந்துகொள்ளுகிறோம். ஆனால் இந்த விஷயத்தைப்பற்றி விரிவான விவரங்களை அறிந்துகொள்ளுவதற்கேற்ற ஆதாரம் ஒன்றும் நமக்குக் கிடைக்கவில்லை.

அரசர்கள் நடத்திய ஆடம்பரமான வாழ்க்கையையும் அவர்கள் செய்த ஏராளமான செலவுகளையும் காட்டும் அறிகுறிகள் இன்றும் இருக்கின்றன. விஜயநகரத்திலும், குல்பர்காவிலும், பீடாரிலும் இன்றும் காணப்படும் கட்டிடங்களைப்பற்றிச் சென்ற அதிகாரத்திற் கூறினோம். அதுபோலவே கோல்கொண்டாவிலும், பீஜப்பூரிலும், காண்டேஷ் ராஜ்யத்தின் தலைநகரான பர்ஹான்பூரிலும், மாளவத்தின் தலைநகரான மாண்டு என்ற இடத்திலும், குஜராத்தின் முக்கிய நகரமான அகமதாபாத்திலும் கட்டப்பட்ட அழகிய பெரிய கட்டிடங்கள் இன்றும் இருக்கின்றன. அவைகள் இந்து முஸ்லிம் கட்டிடக்கலையின் சிறந்த சின்னங்களாக விளங்குகின்றன. கலைஞர்களுக்கு அந்தக் காலத்தில் நல்ல ஆதரவும் வரும்படியும் இருந்தன. நகரங்களில் செல்வமும், கிராமங்களில் வறுமையும் தாண்டவமாடின என்று பொதுவாகக் கூறலாம்.

அதிகாரம்—25

துருக்கிய ஆட்சியின் பயன்கள்

பதினும் நூற்றுண்டில் இந்தியாவிற்கும் வெளிநாடுகளுக்கும் சில முக்கியமான புதிய தொடர்புகள் ஏற்பட்டன. வடமேற்கில் மொகலாயர்களோடும், கடற்கரைப் பிரதேசங்களில் போர்ச்சுகீசியர்களோடும் இந்தியர்கள் தொடர்பு கொண்டார்கள். இந்தப்புதிய தொடர்புகளைப் பற்றிக் கூறப்புகுமுன் துருக்கியர்கள் இந்தியாவில் முன்னூருண்டுகள் ஆட்சி செய்ததினுல் ஏற்பட்ட விளைவுகள் யாவை என்று பார்க்கவேண்டும். அவர்கள் ஆட்சியால் ஏற்பட்ட அரசியல் விளைவுகளைப்பற்றி முன்னைய அதிகாரங்களிற் படித்தோம். இப்போது இந்தியர் வாழ்க்கை முறையில் ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா என்று பார்க்கப் போகிறேம். குஷாணர்கள், சாகர்கள், ஹூணர்கள் போன்ற வெளிநாட்டார்கள் தனிப்பட்ட நாகரிகமும் பண்பாடும் அற்றவர்களாகையால் அவர்கள் இந்தியாவில் குடியேறிய பிறகு இந்திய நாகரிகத்தையும், பண்பாட்டையும் கைக்கொண்டு இந்தியர்களோடு இரண்டறக் கலந்துவிட்டார்கள். ஆனல் முகமதியர்களுடைய மதமும் பண்பாடும் தனிப்பட்ட தன்மைகளைப் பெற்றவை. மேலும் முகமதியர்கள் தங்களுடைய கொள்கைகளிலும் வாழ்க்கை முறைகளிலும் அதிதீவிரமான நம்பிக்கை கொண்டவர்கள். ஆகவே அவர்களுடைய பண்பாடு ஏற்கெனவே இந்தியாவில் இருந்த பண்பாட்டில் கலந்து மறைந்துவிடவில்லை. அந்த இரண்டு பண்பாடுகளும் பல சமயங்களில் சில துறைகளில் ஒன்றையொன்று சந்தித்தன என்றுலும் இரண்டும் ஒன்ருகக் கலந்துவிடவில்லை.

இந்துக்களும் துருக்கியர்களும் ஒருவரோடொருவர் கலந்து பழகுவதற்குப் பல தடைகள் இருந்தன. முதலாவதாகத் துருக்கியர்கள் இந்தியாவை ஜயிப்பதற்குக் கையாண்ட முறைகளும், அவர்களுடைய படையெழுச்சிகளின்போது நிகழ்ந்த சம்பவங்களும் இந்துக்கள் மனத்தில் துருக்கியர்கள்மீது மிகுந்த வெறுப்பை உண்டாக்கியிருக்கும். இரண்டாவதாக, துருக்கியர்கள் தங்களுடைய பெண்களை வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தார்களாதலால் அவர்களுக்கும் இந்துப் பெண்களுக்கும் தொடர்பு ஏற்பட வழியேயில்லை. மூன்ருவதாக, துருக்கியர்கள் பலர் அடிக்கடி ஒன்ருகக்கூடி விருந்துண்டு ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகினுர்களெனினும், சாதிச் சட்டங்களால் கட்டுப்

பட்ட இந்துக்கள் அவற்றில் கலந்துகொள்ள முடியாமற்போன தோடு, மாட்டிறைச்சியை விரும்பியுண்ட துருக்கியர்களை அவர்கள் மிகவும் வெறுத்தார்கள். எனினும் இந்துக்களுக்கும் துருக்கியர்களுக்கும் பல கலப்புமணங்கள் நிகழ்ந்தன என்பது நிச்சயமாகத் தெரிந்த விஷயம். இந்து ஆண்கள் துருக்கியப்பெண்களை மணந்துகொண்டதாகக் கூறுவதற்கு எத்தகைய சான்றும் கிடையாது. ஆனால் பல துருக்கியப் பிரபுக்கள் உயர்குடும்ப இந்துப் பெண்களை மணம் செய்து கொண்டார்கள் என்று அக்கால வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறிகிறோம். மேலும், இந்தியாவின்மேற் படையெடுத்துவந்த துருக்கியக் குதிரை வீரர்கள் தாங்கள் ஜயித்த பிரதேசங்களிலேயே கூட்டங் கூட்டமாகத் தங்கிவிட்டார்கள். நெடுந்தூரத்திலிருந்த தங்களுடைய சொந்த நாட்டிலிருந்து தங்கள் மனைவிகளை அவர்கள் அழைத்துக் கொண்டு வரமுடியாது. ஆகவே அவர்கள் தங்கிய இடங்களிலேயே இந்துப் பெண்களை மணம் செய்து கொண்டிருப்பார்கள் என்று நாம் நிச்சயமாக யூகிக்கலாம். அதனால், இந்தியாவிலிருந்த துருக்கியர்களுடைய இரத்தத்தில் இரண்டாந் தலைமுறையிலிருந்து இந்திய இரத்தமும் கலந்திருந்தது என்பது உறுதியான விஷயம்.

மிக உயர்ந்த துருக்கியக் குடும்பங்களிலும் இந்தக் கலப்பு ஏற்பட்டுவிட்டது. டில்லி இராஜ்யத்தையாண்ட பிரோஸ் என்ற அரசனுடைய தாயார் ஓர் இந்துப்பெண் என்று முன்னோர் அதிகாரத்திற் கூறியது நினைவிருக்கும். அதுபோலவே துக்லக் வம்சத்தை ஸ்தாபித்த துக்லக் என்ற அரசனுடைய தாயாரும் ஓர் இந்துப்பெண் என்று கர்ணபரம்பரைச் செய்தி ஒன்றின்மூலம் அறிகிறோம். பீஜப்பூர் இராஜ்யத்தின் இரண்டாவது அரசனுடைய தாயார் ஓர் இந்துப்பெண். அவனுடைய மூன்று சகோதரிகளை பீடார், பீகார், அகமதுநகர் ஆகிய ராஜ்யங்களின் அரசர்கள் மணம் செய்து கொண்டார்கள். குஜராத்தின் முதல் "துருக்கிய" அரசன் முகமதிய மதத்தைத் தழுவிய ஓர் இராஜபுத்திரனுடைய மகன். பிரார் இராஜ்யத்தை ஸ்தாபித்தவனே முகமதிய மதத்தைத் தழுவிய ஒரு பிராமணன். ஆனால் வாழ்க்கை முறையிலும் அரசியல் முறையிலும் கலப்பற்ற துருக்கிய அரசர்களுக்கும், இந்து இரத்தக்கலப்புள்ள துருக்கிய அரசர்களுக்கும் வேறுபாடு இருந்ததாகக் கூறமுடியாது.

இஸ்லாமியச் சமூகத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் "சகோதரர்கள்", அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கிடையாது

என்ற பழைய இஸ்லாமியக் கொள்கை கைவிடப்பட்டது. ஏனெனில், நடைமுறையில் இந்தியாவிலிருந்த முகமதியர்களுக்குள் செல்வத்தையும் பதவியையும் பொறுத்த பல உயர்வு தாழ்வுகள் தோன்றிவிட்டன. ஆனால் முகமதிய மதத்தைத் தழுவிய இந்துக்களுக்குத் துருக்கியர் ஆட்சியில் மிக உயர்ந்த பதவிகளையும் அடைவதற்கு ஏற்ற வாய்ப்பு இருந்தது என்றும், அவர்கள் தொடக்கத்தில் இந்துக்களாக இருந்தார்கள் என்ற காரணத்தினால் அவர்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையொன்றும் கிடையாது என்றும் அக்கால வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறிகிறோம். முகமதிய மதத்தைத் தழுவாத இந்துக்களை உயர்ந்த அரசாங்கப் பதவிகளுக்கு நியமிக்கும் வழக்கம் எவ்வளவு தூரம் கையாளப்பட்டது என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவில் ஏற்கெனவே இருந்த கிராம பரிபாலன ஏற்பாடுகளைத் துருக்கியர்கள் தாராளமாக உபயோகித்துக் கொண்டார்கள். கிராமத் தலைவர்களும், கணக்குப் பிள்ளைகளும் இந்துக்களாகவே இருந்தார்கள். அவர்களுக்கும் துருக்கியர்களுக்கும் மிகநெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கும் என்று நம்பலாம். வடஇந்தியாவில் துருக்கியர்கள் தாங்கள் ஆளும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலேயே நடந்துகொண்டார்கள். தென்னிந்தியாவிலும் முதலில் அவர்களுக்கு அந்த உயர்ந்த நிலை இருந்தது. ஆனால் பின்னர் வந்து குடியேறிய வேறு இனங்களைச் சேர்ந்த வெளிநாட்டினர் நடைமுறையில் துருக்கியர்களிடமிருந்து அந்தப் பதவியைப் பறித்துக்கொண்டார்கள்.

இந்துஸ்தானி என்ற மொழி துருக்கியர் காலத்தில்தான் தோன்றியிருக்கவேண்டும். டில்லிக்கண்மையிலுள்ள பகுதிகளில் பேசப்பட்ட இந்திமொழியை அடிப்படையாகக் கொண்டதுதான் இந்துஸ்தானி. இந்தியுடன் பாரசீக மொழியிலிருந்து எடுக்கப்பட்ட பல சொற்களும், சில மரபுகளும் சேர்ந்து இந்துஸ்தானி என்ற பெயருடன் ஒரு புதுமொழி வழங்கலாயிற்று. துருக்கியர் காலத்தில் இந்துஸ்தானி நூல்மொழியாக உபயோகப்படவில்லை. அவர்கள் காலத்தில் அது பேச்சு மொழியாகவே வளர்ந்தது. துருக்கியர்களுடைய ஆதிக்கம் இந்தியாவின் மேற்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் பரவியபோது இந்துஸ்தானியும் அந்தப் பகுதிகளிற் பரவிற்று.

மேலே கூறிய விஷயங்கள் வங்காளத்திற்கு அவ்வளவாகப் பொருந்தா. வங்காளத்தில் துருக்கியர்கள் அதிகமாகக் குடியேறி

யிருக்க முடியாது. ஆகவே, அரசியல் விஷயங்களில் சுதேசிகளுடைய உதவி இந்தியாவின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் வங்காளத்தில் துருக்கிய அரசர்களுக்கு அதிகமாகத் தேவைப்பட்டிருக்கும். வங்காளத்தில் வாழ்ந்த மக்களிற் பலர் முகமதிய மதத்தைத் தழுவினுர்கள். துருக்கியர் ஆட்சிக்குட்பட்ட மற்ற பகுதிகளைக் காட்டிலும் வங்காளத்தில் மிக அதிகமான இந்துக்கள் அரசாங்க உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டார்கள். பாரசீகமும் இந்துஸ்தானியும் மற்ற பகுதிகளிற் பரவின அளவு வங்காளத்திற் பரவவில்லை. மேலும், சில துருக்கிய அரசர்கள் வங்காளி மொழியில் எழுதப்பட்ட நூல்களுக்குத் தங்களுடைய ஆதரவை அளித்தார்களென்றும் தெரிகிறது. இவ்வாறு துருக்கியர் ஆட்சிக்குட்பட்ட மற்ற பகுதிகளின் நிலைமைக்கும் வங்காளத்தின் நிலைமைக்கும் வேறுபாடுகள் இருந்தன. வங்காளத்தில் ஆளும் வகுப்பைச் சேர்ந்த வெளிநாட்டுத் துருக்கியர்களுக்கும் சுதேசிகளாகிய மற்ற மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு எற்பட்டது. அதனுல் அங்குத் துருக்கியப் பண்பாடும் இந்தியப் பண்பாடும் ஓரளவு ஒன்ருகக் கலந்தன. இந்த நிலை இந்தியாவின் மற்ற பகுதிகளில் எற்படவில்லை.

இப்போது துருக்கியர் ஆட்சிக் காலத்தில் இந்து வாழ்க்கை முறை எவ்வாறிருந்தது என்பதைப் பார்ப்போம். இந்து அறிஞர்கள் எப்போதும்போலச் சட்டம் தத்துவசாஸ்திரம் முதலிய துறைகளில் ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருந்தார்கள். அந்தத் துறைகளில் புதிய ஆராய்ச்சி முறைகள் தோன்றின என்று கூறுவதற்குச் சான்று இல்லை. மேலும் இந்த விஷயத்தைப்பற்றி நமக்கு அதிக விவரங்களும் தெரியவில்லை. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் ஹுக்ளி நதியின் கரையிலுள்ள நதியா என்ற இடமும், கங்கை நதியின் கரையிலுள்ள காசியும் ஸம்ஸ்கிருதக் கல்விக்கு முக்கிய இடங்களாக இருந்தன. அவ்விடங்களேதான் துருக்கியர் ஆட்சிக் காலத்திலும் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி ஓங்கியிருந்த முக்கிய இடங்களாக இருந்திருக்கும் என்று யூகிக்கலாம். அங்கிருந்த கோயில்களிலும், மடங்களிலும் துருக்கியர் காலத்தில் பிராமணர்கள் ஸம்ஸ்கிருத ஆராய்ச்சி செய்து வந்தார்களென்றும், மதவெறியால் தூண்டப்பட்ட முகமதியர்கள் கோயில்களை இடித்து விக்கிரகங்களை உடைத்த சில சமயங்களைத்தவிர, மற்ற சமயங்களில் அந்தப் பிராமணர்கள் பிறருடைய தொந்தரவின்றித் தங்களிஷ்டம்போல் நூலாராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும்

பொதுவாகக் கூறலாம். ஆனால் அந்த ஆராய்ச்சிகளின் பயனாகப் புதிய கருத்துக்கள் ஒன்றும் ஸம்ஸ்கிருதத்தில் தோன்றவில்லை. பழைய கருத்துக்களே புதிய விளக்கங்களுடனும் புதிய உருவத்துடனும் திரும்பத் திரும்பத் தோன்றிக்கொண்டிருந்தன.

கற்பனையை அடிப்படையாகக் கொண்ட ஸம்ஸ்கிருத இலக்கியம் மங்கிக் கொண்டிருந்தது. பண்பாட்டிலும் செல்வத்திலும் சிறந்த இந்து அரசர்களும் பிரபுக்களும் ஸம்ஸ்கிருதக் கவிகளுக்கும் நாடகாசிரியர்களுக்கும் அளித்த ஆதரவுதான் ஸம்ஸ்கிருத இலக்கியத்தின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது என்று முன்னர்ப் படித்தோம். ஆகவே இந்து அரசர்கள் ஆட்சி அழிந்து துருக்கியர் ஆட்சி ஏற்பட்டபோது ஸம்ஸ்கிருத இலக்கியமும் ஆதரிப்பாரற்று மங்கிப்போனது இயல்பே. விஜயநகரத்தில் ஸம்ஸ்கிருத இலக்கியத்திற்கு ஆதரவு இருந்திருக்கும் என்றும், அங்குச் சிறந்த நூல்கள் தோன்றியிருக்கும் என்றும் நாம் எதிர்பார்ப்பது நியாயமே. ஆனால் அங்கு மாத்திரமின்றி, பண்டில்கண்டு, இராஜபுதனம், ஒரிஸா ஆகிய இராஜ்யங்களிலும் சிறந்த புதிய ஸம்ஸ்கிருத நூல் ஒன்றேனும் தோன்றியதாகத் தெரியவில்லை. ஸம்ஸ்கிருதத்திற் புதிய நூல்கள் தோன்றாவிட்டாலும் பேச்சு வழக்கிலிருந்த மற்ற மொழிகளிற் பல நூல்கள் தோன்றின என்பது குறிப்பிடத்தக்க விஷயம். இத்தகைய மொழிகளில் வங்காள மொழியைத் தவிர மற்றவைகள் அரசாங்க ஆதரவில்லாமலே வளர்ச்சியடைந்தன என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம். இவ்வாறு தோன்றிய நூல்களில் ஏறக்குறைய எல்லாமே மதநூல்களாக இருந்தன. இவற்றைப்பற்றிப் பின்னர்க் கூறுவோம். ஆனால் செய்யுள் நடையில் எழுதப்பட்ட சில வரலாற்று நூல்களைப்பற்றி இங்குக் கூறுவது அவசியம். துருக்கியர் வருகைக்குப்பின் இந்து அரசர்கள் சிலர் இராஜபுதனத்திலும், ஏனைய இடங்களிலும் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். அத்தகைய அரச வம்சங்களைப் பற்றிய வரலாறுகள் செய்யுள் நடையில் மிக உருக்கமான முறையில் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகள் ஆஸ்தான வித்துவான்களால் எழுதப்பட்டவை. அவைகளைத் திருவிழாக் காலங்களில் பாடுவது வழக்கம். அவைகள் இராஜபுத்திரர்களுடைய வீரச் செயல்களை அழகாக வர்ணிக்கின்றன. அவற்றைக் கேட்போர் மனத்திலும் அத்தகைய வீரச்செயல்களைப் புரிந்து புகழடைய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும்.

பழைய இந்து அரசர்களைப்போலவே விஜயநகர அரசர்களும் சங்கீதம் நாட்டியம் போன்ற பொழுதுபோக்குக் கலைகளுக்கு ஆதரவளித்தார்கள். அதனால் அந்தக்கலைகள் சிறந்த நிலையிலிருந்தன. அந்தக் கலைகளைத் துருக்கியர்களும் ரசித்தார்கள் என்று கூறுவதற்குச் சான்றுகள் இருக்கின்றன. உதாரணமாக, சங்கீதத்திலும் நாட்டியத்திலும் வல்ல 2000-பேர்களை பஹமனி ராஜ்யத்திற்கு அனுப்ப வேண்டுமென்று அந்த இராஜ்யத்து அரசன் ஒருதரம் தன்னுடன் சண்டைசெய்து தோற்றுப்போன விஜயநகர அரசன்மீது ஒரு நிபந்தனை விதித்தான் என்று அறிகிறோம். ஓவியக்கலை பல இந்து அரசர்களால் ஆதரிக்கப்பட்டதால் அழிந்து போகாமல் இருந்தது. அந்தக்கலை முகலாயர்கள் காலத்தில் மிக முன்னேற்றமடைந்தது என்பதைப் பின்னர்ப் படிப்போம். விஜயநகரத்திற் காணப்படும் சில கட்டிடங்களின் பகுதிகளும், ஒரிஸாவிலும் ஆபுமலையிலும் இன்னும் சில இடங்களிலும் கட்டப்பட்டவையும் புதுப்பிக்கப்பட்டவையும் ஆன சில கோவில்களும் இந்துச் சிற்பக்கலை அழியாமலிருந்தது என்பதைக் காட்டுகின்றன. இந்து இலக்கியமும் கலைகளும் துருக்கியப் பண்பாட்டின் தொடர்பால் புதிய வளர்ச்சியைப் பெற்றன என்று எண்ணுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று பொதுவாகச் சொல்லிவிடலாம்.

துருக்கிய அரசர்கள் முக்கியமாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் மதநூலாராய்ச்சிக்கும் தங்கள் ஆதரவை அளித்தார்கள். பாக்தாத் நகரில் அறிஞர்கள் செய்த ஆராய்ச்சிகளால் அந்த இருவகைக் கல்வியும் நல்ல முன்னேற்ற மடைந்திருந்தது. விஞ்ஞானத் துறையில் சில விஷயங்களை முதலில் இந்தியர்களிடமிருந்து அராபியர்கள் கற்றுக் கொண்டார்கள் என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். ஆனால், பிற்காலத்தில் கிரேக்கர்களிடமிருந்து அராபியர்கள் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டார்கள். ஆகவே அராபியர்களுடைய விஞ்ஞான சாஸ்திரத்தில் இந்தியத் தன்மைகளைவிட கிரேக்கத்தன்மைகள் தாம் அதிகமாக இருந்தன. இந்தியாவிலிருந்த துருக்கியர்கள் கல்வி, கலை ஆகிய துறைகளில் அதிகமாக ஈடுபடவில்லை. ஆனால் துருக்கிய அரசர்கள் பாரசீகத்திலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்தும் கற்றுணர்ந்த அறிஞர்களை வரவழைத்து, அவர்களுக்குப் பொருளுதவி செய்து, அவர்களைத் தங்களுடைய சமஸ்தானங்களில் மிகுந்த கௌரவத்துடன் வைத்திருந்தார்கள். அந்தக்காலத்தில் பாரசீக இலக்கியம் மிக உயர்ந்த

நிலையில் இருந்தது. உண்மையில் அந்தக்காலம் பாரசீக இலக்கியத்தின் பொற்காலமாக இருந்தது. ஆகவே துருக்கிய அரசர்கள் பாரசீகக் கவிகளுக்குத் தங்கள் ஆதரவை அளித்தார்கள். உலகம் போற்றும் பாரசீகக் கவிகளினுடைய பெயர்களைத் துருக்கியர் வரலாற்றுக் குறிப்புகளிற் காண்கிறோம். மூல்தானிலிருந்த பால்பனுடைய மகன் ஷேக்ஸாதி என்ற சிறந்த பாரசீகக் கவியைத் தன் ஸம்ஸ்தானத்திற்கு அழைத்தான். ஆனால் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு ஷேக்ஸாதி மிக வருந்தினான் என்று அறிகிறோம். ஹபீஸ் என்ற கவி பஹமனி ராஜ்யத்திற்குப் புறப்பட்டுவிட்டான் என்றும், ஆனால் பிரயாணத்தின்போது ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்கு அஞ்சி வராமல் நின்றுவிட்டான் என்றும், பஹமனி யரசனுடைய அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாததால் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளும் முறையில் ஓர் அழகிய பாட்டை எழுதியனுப்பினான் என்றும் அறிகிறோம். அமீர்குஸ்ரு (1253—1325) என்ற கவிஞனும், இந்தியாவிலிருந்த மற்ற கவிஞர்களும் பாரசீகக் கவிகளின் முறைகளைப் பின்பற்றியே தங்கள் கவிகளை எழுதினார்கள். வரலாற்றுக் குறிப்புகளை எழுதிய துருக்கியர்களும் தங்கள் உரைநடையின் இடையே ஆங்காங்குப் பாரசீகப் புலவர்களுடைய செய்யுட்களை மேற்கோளாக உபயோகித்தார்கள். அதனால் அவர்கள் உரைநடையும் உரம் பெற்றது. வெகு சமீப காலம் வரையில் படித்த முகமதியர்களெல்லாம் பாரசீக இலக்கியத்தைப் பெரிதும் விரும்பிவந்தார்கள்.

விக்கிரகங்களுக்கும், உருவச்சிலைகளுக்கும் இஸ்லாம் மதத்தில் இடமில்லை. ஆகவே அவர்களுடைய நுணுக்கமான சித்திர வேலைப்பாடுகளெல்லாம் கட்டிடங்களுக்கு அழகு தருவதற்காகவே செய்யப்பட்டவை. துருக்கியர்களுக்குக் கட்டிடங்களைக் கட்டுவதில் அதிக ஆர்வம் இருந்தது. அவர்கள் முக்கியமாக மசூதிகள், சமாதிகள் என்ற இருவகைக் கட்டிடங்களைக் கட்டினார்கள். அவைகள் இந்தியாவிற்குப் புதியவை. மேலும் அவர்களுக்குச் சிமிட்டி, சாந்து ஆகியவற்றின் உபயோகத்தில் சிறந்த தேர்ச்சி இருந்தது. இந்த இரண்டும் இந்தியாவில் அதற்குமுன் அதிகமாக உபயோகிக்கப்படவில்லை. இவற்றின் உதவியால் அவர்கள் உருண்டைவடிவமான டோம்களையும், வளைகளையும் மிக அழகாகக் கட்டினார்கள். டோம்கள், மினரட்டுகள், வளைவுகள் ஆகிய இம்மூன்றுந்தான் முகமதியக் கட்டிடங்களின் தனித்

தன்மைகள். ஆனால் அவர்களுடைய கட்டிடங்கள் முற்றிலும் வெளிநாட்டுத்தன்மைகளைக் கொண்டவைகளாக இல்லை. முக மதியக் கட்டிடக்கலையின் தனித்தன்மைகளோடு இந்துக் கட்டி டக்கலையின் தன்மைகளையும் சேர்த்தே துருக்கியர்கள் தங்கள் கட்டிடங்களைக் கட்டினார்கள். முக்கியமாக இந்துக் கட்டிடங் களிற் காணப்படும் பருமையும் எழிலும் முகமதியக் கட்டிடக் கலையின் தன்மைகளோடு இயைந்து துருக்கியர் கட்டிடங்களுக் குச் சிறந்த அழகைத் தருகின்றன. இந்தக் கலப்புக்கலையை "இந்தோ சாரசானியக்கலை" என்று அழைக்கிறார்கள். ஆனால் "இந்தோ இஸ்லாமியக்கலை" என்ற பெயர் மிகப் பொருத்தமாக இருக்கும். இந்தப்புதிய கலையின் சின்னங்களை முகமதியர் ஆட்சி செய்த இடங்களிலெல்லாம் இன்றும் காண்கிறோம். முகமதிய அரசர்களுடைய தலைநகரங்களில் மாத்திரமின்றிச் சிறிய நகரங் களிலும் இத்தகைய கட்டிடங்களை நாம் பார்க்கிறோம். இவை கள் அந்தந்த இடங்களின் நிலைமைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ற வாறு சில சிறு மாறுதல்களுடன் கட்டப்பட்டிருக்கின்றன. இந் தக் கட்டிடங்களிற் பெரும்பாலானவை பராமரிப்பின்றி அழிந்து போயின. புதுப்பிக்கும் முயற்சியில் சரியான முறைகளைக் கையாளாததால் சில கட்டிடங்களின் அழகும் தனித்தன்மையும் கெட்டுப்போயின. எனினும் பழைய இந்துக் கட்டிடங்கள் வேண்டுமென்றே அழிக்கப்பட்டதுபோல் முகமதியக் கட்டிடங் கள் அழிக்கப்படவில்லை. இந்தியாவின் பெரும்பகுதியிலுள்ள நகரங்களில் இன்றைக்கும் இந்தக் கட்டிடங்கள் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. மேல்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் சாதாரண யாத்திரிகர்கள் திரும்பிப் போகும்போது டோம்களும், மினாரட்டுகளும், வளைவுகளும்தாம் கோயில்களைவிட அவர்க ளுடைய நினைவில் அதிகமாக இருக்கின்றன.

இனி, துருக்கியர்களுடைய ஆட்சியால் மதத்துறையில் ஏற் பட்ட மாறுதல்களைப்பற்றிப் படிக்கப்போகிறோம். குறிப்பிடத் தக்க அளவில் துருக்கியர்கள் இந்துமதத்தைத் தழுவினார்களென் றும், துருக்கிய இனத்தைச் சேர்ந்த கூட்டங்கள் இந்துமதத்திற் கலந்து புதிய சாதிகளாக மாறிவிட்டன என்றும் சொல்லுவ தற்கு எந்தவிதமான சான்றும் இல்லை. ஆனால் பெருந்தொகையின ரான இந்துக்கள் இஸ்லாம்மதத்திற் சேர்ந்துகொண்டார்கள் என் பது உறுதியாகத் தெரிந்த செய்தி. கட்டாய மதமாறுதல் நடந் தது என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அது அவ்வளவு அதிக

மாக நடைபெறவில்லை. காஷ்மீரத்தில் 1390-முதல் 1414-வரையில் ஆட்சிசெய்த "விக்கிரகமுடைக்கும் சிக்கந்தர்" என்ற அரசன் தன்னுடைய குடிகளில் ஏற்கெனவே முகமதிய மதத்தைத் தழுவியவர்கள்போக மீதியிருந்த அனைவரையும் முகமதிய மதத்திற் சேருமாறு கட்டாயப்படுத்தினான். அவ்வாறு சேர மறுத்தவர்களைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான். ஏறக்குறைய அதேகாலத்தில் வங்காளத்திலும் முகமதியரல்லாதவர்கள் சிறிது காலம் கொடுந்துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டார்களென்று தெரிகிறது. இந்தச்செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு சில அறிஞர்கள் வங்காளத்தில் பெருவாரியான இந்துக்கள் முஸ்லிம் மதத்திற் கட்டாயத்துடன் சேர்க்கப்பட்டார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கூற்றுக்குத் தக்க ஆதாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏறக்குறைய நூறுண்டுகளுக்குப் பின்னர் டில்லியில் ஆட்சிசெய்த சிக்கந்தர் லோடி என்பவன் இந்துக்களை இஸ்லாம் மதத்திற் சேருமாறு கட்டாயப்படுத்தியதாக அறிகிறோம். இந்த மிகச் சில செய்திகளைத் தவிரக் கட்டாய மதமாற்றத்தைப் பற்றி வேறு செய்திகளை நாம் வரலாற்றுக் குறிப்புக்களில் காண்பதில்லை. இம்மாதிரி சம்பவங்கள் நடந்திருந்தால் அவற்றைப் பற்றித் துருக்கிய வரலாற்று ஆசிரியர்கள் எழுதிவைக்காமல் இருக்கமாட்டார்கள். ஆகவே இஸ்லாம் மதத்தைத் தழுவிய பெரும்பாலான இந்துக்கள் அரசாங்கக் கட்டாயத்தின்பேரில் அவ்வாறு செய்யவில்லை என்ற முடிவுக்குத்தான் நாம் வர முடியும்.

தற்போதைய ஜனத்தொகைக் கணக்கைப் பார்த்தால், இந்தியாவின் எந்தெந்தப்பகுதிகளில் இஸ்லாம் மதம் அதிகமாகப் பரவிற்று என்று எளிதில் உணர்ந்துகொள்ளலாம். காஷ்மீரம், மேற்குப் பஞ்சாப், எல்லைப்புற மாகாணம், சிந்து ஆகிய பகுதிகளிலுள்ள மக்களில் நான்கில் மூன்று பங்கினர் முகமதியர்களாக இருக்கிறார்கள். வங்காளத்தில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் முகமதியர்களாக இருக்கிறார்கள். வங்காளத்தின் வடக்கு ஜில்லாக்களிலும், கிழக்கு ஜில்லாக்களிலும் முகமதியர்கள் மிகப் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். ஆகவே இந்தியாவின் வடமேற்கிலும் வடகிழக்கிலும்தான் முகமதியமதம் அதிகமாகப் பரவிற்று என்று கூறலாம். இந்தியாவின் மற்றபகுதிகளில் முகமதியர்கள் மிகச் சிறுபான்மையினராக இருக்கின்றனர். அங்கெல்லாம் உள்ள மக்கட்டொகையில் முகமதியர்கள் நூற்றுக்குப் பத்துப்பேர் கூட இல்லை. மேலும் அவர்கள் பெரும்பாலும் நகரங்

களிலேயே வசிக்கிறார்கள். வடமேற்கில் முகமதியர்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் வெளிநாட்டிலிருந்து ஏராளமான முகமதியர்கள் அங்கு வந்து குடியேறியதும், அந்தமதத்தின் பலமும்தான். ஆனால் வங்காளத்தில் முகமதியர்கள் அதிகமாக இருப்பதற்குக் காரணம் சரியாகத் தெரியவில்லை. வங்காளத்தில் பாலவம்சத்தினர் எட்டாம் நூற்றாண்டிலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டுவரையிலும் ஆட்சிசெய்தார்களென்றும், அவர்கள் புத்தமதத்தை ஆதரித்தார்களென்றும் முன்னர்க்கூறியது நினைவிலிருக்கும். புத்தமதத்தில் சாதிவேறுபாடுகளால் ஏற்பட்ட உயர்வு தாழ்வுகளுக்கு இடமில்லை. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வங்காளத்தில் பாலர்களுடைய ஆட்சி அழிந்து சேனர்களுடைய ஆட்சி ஏற்பட்டது. அவர்கள் இந்துமதத்திற் பெறும் பற்றுக் கொண்டவர்கள். ஆகவே அவர்கள் காலத்தில் சாதிவேறுபாடுகள் மிகக் கடுமையான முறையில் வங்காளத்திற் புகுத்தப்பட்டன. அதனால் தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த மக்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளானார்கள். ஆனால் அந்தச்சாதிக் கட்டுப்பாடுகள் நன்றாக வேரூன்றுவதற்கு முன்னர் அதே நூற்றாண்டின் இறுதியில் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக்கொண்ட முகமதியமதம் வங்காளத்தில் நுழைந்தது. அதைக்கண்ட தாழ்ந்த வகுப்புக்களைச் சேர்ந்த இந்துக்களெல்லாம் பெருவாரியாக முகமதிய மதத்திற் சேர்ந்துவிட்டார்கள் என்று கூறினால் அதை எளிதில் மறுக்கமுடியாது. வங்காளத்தில் முகமதிய மதம் அதிகமாகப் பரவுவதற்கு இதைத்தவிர வேறுகாரணம் இருந்திருக்க முடியாது.

இந்தியாவின் வடமேற்குப் பகுதியையும் வடகிழக்குப் பகுதியையும் தவிர மற்ற பகுதிகளில் மதமாறுதல் சிற்சில சமயங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏற்பட்டதே தவிரப் பெருவாரியாக ஏற்படவில்லை. அவ்வாறு முகமதிய மதத்தைத் தழுவியவர்களிற் பெரும்பான்மையோர் உண்மையான நம்பிக்கையினால் தூண்டப்பட்டிருப்பார்களென்று நம்பலாம். ஆனால் சமூகப் பொருளாதாரக் காரணங்களால் தூண்டப்பட்டும் சிலர் முகமதிய மதத்தைத் தழுவினார்கள் என்பது உறுதியான விஷயம். உதாரணமாக டில்லிக்கருகில் அரசாங்க உத்தியோகங்களிலிருந்த சிலர் வெகுவிரைவில் முகமதிய மதத்திற் சேர்ந்துகொண்டார்கள் என்று அறிகிறோம். மேலும் துருக்கியர்கள் தங்கள்அரசாங்க அலுவல்களுக்கு முகமதிய மதத்தை ஏற்றுக்கொண்ட இந்துக்

களை அதிகமாக உபயோகித்தார்களென்பதும் உறுதி. அது போலவே மற்ற இடங்களிலும் இந்துக்கள் லாபத்தைக்கருதி முகமதிய மதத்திற் சேர்ந்திருக்கக்கூடும். ஆனால் அதைப்பற்றிய விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. இந்துக்கள் தனித் தனியாக இஸ்லாம் மதத்திற் சேராமல், குடும்பம் குடும்பமாகவும், ஒரே சாதியைச் சேர்ந்த பல குடும்பத் தொகுதிகளாக வுந்தான் மதம் மாறினார்கள் என்பது தெளிவாகத் தெரியும் விஷயம். அதன் விளைவாக அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றிய போதிலும், தங்கள் பழைய பழக்க வழக்கங்களையும், எண்ணங்களையுங்கூடக் கைவிடாமலிருந்தார்கள். அதனால் இஸ்லாம் மதத்தில் இந்துப் பழக்க வழக்கங்கள் இடம் பெற்றன. இஸ்லாம் மதத்தைத் தழுவிய இந்துக்களின் சந்ததியார்கள் திருமணம் முதலிய முக்கிய நிகழ்ச்சிகளைப்பற்றிய தங்கள் முன்னோர்களின் பழக்க வழக்கங்களையும், சாதிக் கட்டுப்பாடுகளையும் விடாமல் பின்பற்றினார்கள். அதனால் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட முகமதிய மதத்தில் சாதி வேறுபாடுகளும் இடம் பெற்றன. கல்வியறிவில்லாத முகமதியர்களிடையில் இன்றைக்கும் சிலவேறுபாடுகள் இருப்பதைக் காண்கிறோம். ஆகவே முகமதிய மதம் ஒரேவித அந்தஸ்துடைய பல அங்கத்தினர்களால் ஆக்கப்பட்ட சமூகம் என்ற நிலைக்கு மாறாக, பல சமூகங்களின் தொகுதி என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தியாவிலுள்ள முகமதியர்களனைவரும் ஒரேவிதமான மத நம்பிக்கையுடையவர்களாக இருப்பினும், அவர்களுக்குள் சமூக வாழ்க்கையின் துறைகளில் பல வேறுபாடுகள் இருக்கின்றன.

இந்திய முகமதியர்களிடம் அடியார்களை வழிபடும் பழக்கம் காணப்படுகிறது. இந்தியாவைத்தவிர வேறுசில முகம்மதிய நாடுகளிலும் இந்தப்பழக்கம் ஓரளவு காணப்படுகிறது என்றாலும, நபிநாயகத்தின் உபதேசங்களில் இந்தப் பழக்கத்திற்கு ஆதாரமே கிடையாது. இந்த அடியார்களை முகமதியர்கள் "பீர்கள்" என்று அழைக்கிறார்கள். அவர்களைப்பற்றிய பல வேறு கதைகள் வழங்குவதால் அவர்களுடைய உண்மை வரலாற்றைத் தெரிந்துகொள்வது இயலாது. டில்லியில் துருக்கியர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னரே சில முகமதியர்கள் தாங்கள் மதத்தைப் பரப்புவதற்காகவும், வேறு சிலர் பொருளும் கீர்த்தியும் சம்பாதிப்பதற்காகவும் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்களிற் சிலருடைய வாழ்-விலோ சாவிலோ ஏற்பட்ட சம்பவங்கள் மக்கள் மனத்தைக்

கவர்ந்ததால் அவர்கள் தெய்வத்தன்மை நிரம்பியவர்கள் என்று மக்கள் நம்பினுர்கள். அதனுல் அவர்களுடைய சமாதிகள் நாளடைவில் புண்ணிய க்ஷேத்திரங்களாக மாறின. அந்த இடங்களில் முகமதிய மதத்தைச் சேர்ந்த பாமர மக்கள் ஆண்டுதோறும் விழாக்கொண்டாடி வழிபாடு நடத்தத் தொடங்கினுர்கள். இந்த விழாக்கள் இன்றைக்கும் நடைபெறுகின்றன. பிற்காலத்தில் தங்கள் மதத்தைப் பரப்புவதில் ஆர்வத்துடன் ஈடுபட்ட முகமதியப் பெரியார்களையும் பாமரமக்கள் இவ்வாறே வழிபடுகின்றனர். அவர்களுடைய சமாதிகள் இந்தியாவின் பலவேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன. முக்கியமாக அவைகள் வங்காளத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்ருல் இந்த விழாக்களில் முகமதியர்கள் மாத்திரமின்றி இந்துக்களும் கலந்து கொள்ளுவதுதான். மேலும் இந்த விழாக்களில் நடைபெறும் சடங்குகள் பெரும்பாலும் இந்துச்சடங்குகளாகவே இருக்கின்றன. இந்தியாவிலும், வேறு நாடுகளிலும் இருக்கின்ற முகமதிய மதநூல் வல்லுநர் கடவுள் வழிபாட்டிற்கும், அடியார் வழிபாட்டிற்குமுள்ள நுணுக்கமான வேறுபாடுகளை எடுத்துக் கூறுகிருர்களென்பது உண்மையெனினும், அத்தகைய வேறுபாடுகளைப்பற்றி இந்தியாவிலுள்ள பாமர முகமதியர்களுக்கு ஒன்றுமே தெரியாது.

இவ்வாறு முகமதிய மதம் இந்தியாவுக்கு வந்ததால் சாதாரண மக்கள் பின்பற்றிய இந்துமதத்திற் புதிய தெய்வங்கள் இடம் பெற்றன என்று கூறலாம். இதைத்தவிர வேறு மாறுதல்கள் இந்து மதத்தில் ஏற்பட்டனவா என்று அறிய விரும்பினுல் இந்து மதத்தின் வளர்ச்சியைப்பற்றிய வரலாற்றை மறுபடியும் ஆராய வேண்டும். துருக்கியர் ஆட்சிக்காலத்தில் வடஇந்தியாவின் பல பகுதிகளிலும் பக்திமார்க்கம் பரவியதுதான் இந்துமத வரலாற்றில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி. பக்திமார்க்கம் இந்தியாவில் பல நூற்ருண்டுகளாக இருந்துவந்தது என்றும், ஆனுல் அதைப் புதிய முறையில் ஆர்வத்துடன் போதித்தவர் இராமாநுஜர் என்றும் முன் ஓர் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். பக்தி மார்க்கம் வட இந்தியாவில் எவ்வாறு பரவியது என்பதைப்பற்றிய விவரங்களெல்லாம் நமக்குத் தெரியாது. ஆனுல் அந்த மார்க்கம் பரவத்தொடங்கியதால் பதினைந்தாம் நூற்ருண்டில் வியக்கத்தக்க பேரளவில் பக்திச்சுவை சொட்டும் வழிபாட்டுப் பாடல்கள் எழுதப்பட்டன. அதனுல் அந்த நூற்

ருண்டு வட இந்திய வரலாற்றில் மக்கள் எண்ணங்களை உருவாக்கிய சிறந்த காலமாக விளங்குகிறது. அந்தச் சமயத்தில்தான் தற்காலப் பேச்சு வழக்கில் இருக்கும் வட இந்திய மொழிகள் நூல் மொழிகளாக வளர்ந்து நிலைபெற்றன. மேலும் அதே சமயத்தில் மக்களுடைய மத நம்பிக்கைகளில் புதிய கருத்துக்கள் விரவி அவற்றிற்குப் புத்துயிர் கொடுத்தன. இவ்வாறு தோன்றிய புதிய இயக்கத்திற் பங்கு கொண்டு அதனை உருவாக்கிய பெரியார்கள் அனைவரையும்பற்றிக் கூறுதல் இயலாத காரியம். ஆனால் இன்றைக்கு இந்தியமக்களனைவருடைய உள்ளங்களிலும் நீங்காத இடம் பெற்று நிலைத்து நிற்கும் பெரியோர்களாகிய இராமானந்தர், மீராபாய், நானக், சைதன்யர், கபீர் ஆகிய ஐவரைப்பற்றி ஒரு சில சொற்கள் கூறுவது இன்றியமையாதது.

இராமானந்தர் இராமாநுஜர் நிறுவிய சமய இயக்கத்தைச் சேர்ந்தவர். ஆனால், பின்னர் அவர் அந்த இயக்கத்தினின்று பிரிந்து வட இந்தியாவுக்குச் சென்று, காசியில் குடியேறி, பக்தி மார்க்கப் பிரசாரத்தில் ஈடுபட்டார். அவருடைய பிரசாரம் பெரு வெற்றியை அளித்தது. அதனால் அவர் புதியதொரு சமய இயக்கத்தை நிறுவினார். அந்த இயக்கத்திற் சேர்ந்த அவருடைய சீடர்கள் தங்களுடைய சமயக் கொள்கைகளைப்பற்றிய பக்தி நிரம்பிய பல இந்திப் பாடல்களைப் பாடினார்கள். மீராபாய் என்பவர் ஓர் இராஜபுத்திர இளவரசி. அவர் சித்தூரிலிருந்த தமது இல்லத்தைத் துறந்து, இராமானந்தரைப் பின்பற்றிய ஒருவரையடைந்து அவருடைய சிஷ்யையாகி, இந்தியிலும், குஜராத்தியிலும் பக்திச்சுவையும் கவியழகும் நிறைந்த பல பாடல்களைப் பாடினார். நானக் பஞ்சாபில் தம் கொள்கைகளைப் போதித்தார். அவரும் இந்தியிலும், பஞ்சாபியிலும் தாமே இயற்றிய பாடல்களின் மூலம் தமது கொள்கைகளைப் பரப்பினார். சைதன்யர் வங்காளத்தில் சமயத்தொண்டு செய்தார். அவருடைய பிரசாரத்தின் பயனாக வங்கமொழியில் ஏராளமான நூல்கள் தோன்றின. கபீரைப்பற்றிப் பல கதைகள் வழங்குவதால் அவருடைய உண்மை வரலாற்றை அறிந்துகொள்வது இயலாது. எனினும் அவர் காசியில் வாழ்ந்த ஒரு நெசவுக்காரர் என்பதும், அவர் முகமதியராக இல்லாவிட்டாலுங்கூட முகமதியர்களிடத்தில் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதும், இராமானந்தருடைய கொள்கைகள் அவருடைய உள்ளத்தை ஈர்த்தன என்பதும், பக்தி மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்து மதத்தையும் இஸ்லாம் மதத்தையும் ஒன்றாக இணைக்க அவர்

முயன்றார் என்பதும் நமக்கு நன்றாகத் தெரிந்த செய்திகள். மேலும் அவரோ அல்லது அவரைப் பின்பற்றியவர்களோ ஏராளமான பக்திப்பாடல்களை இந்திமொழியில் இயற்றினார்கள். பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்த தலைசிறந்த இந்திப் புலவரான துளசிதாஸ் என்பவரைப் பற்றியும் இந்த இடத்திற் கூறுவது பொருத்தமாக இருக்கும். அவர் பக்தி மார்க்கத்தின் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு இராமாயணத்தை இந்தியில் எழுதினார்.

ஆகவே, துருக்கியர் காலத்தில் வட இந்தியாவில் சிறந்த இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது. அதன் பயனாகத் தோன்றிய பாடல்களை அன்றுமுதல் இன்றுவரையிலும் வட இந்திய மக்கள் படித்தும், பாடியும், கேட்டும் பேரானந்தம் அடைகிறார்கள். அத்துடன் அவர்களுடைய மானசிகக் கற்பனை வாழ்க்கைக்கும் அந்தப் பாடல்களே அடிப்படையாக இருக்கின்றன. மதத் துறையிலும் துருக்கியர் காலம் முக்கியமானது. பக்தி மார்க்கத்தின் புதுக் கருத்துக்களால் சடங்குகளை அடிப்படையாகக் கொண்ட கோயில் வழிபாடு கைவிடப்படவில்லை. ஆனால், அந்த வழிபாட்டு முறைகளில் பக்தி மார்க்கக் கருத்துக்கள் கலந்து அவற்றிற்கு உருக்கத்தைத் தந்தன. பக்தி மார்க்கம் பரவுவதற்குத் துணையாகப் பதினைந்தாம் நூற்றாண்டிலும் பதினாறும் நூற்றாண்டிலும் தோன்றிய புதிய இலக்கியத்தால் வட இந்திய மக்களின் வாழ்க்கை இனிமை பெற்றது. ஆங்கில மக்களின் வாழ்க்கையில் விவிலிய நூல் எந்த ஸ்தானத்தை வகிக்கிறதோ அதே ஸ்தானத்தை பக்திமார்க்க இலக்கியம் வடஇந்திய மக்களின் வாழ்க்கையில் வகிக்கிறது என்று கூறலாம். அந்த இலக்கியத்தால் வட இந்திய மக்கள் தங்கள் வாழ்வில் ஆர்வமும், நம்பிக்கையும், ஆறுதலும் பெறுகிறார்கள். வடஇந்தியாவில் வாழும் குடியானவன் இன்றைக்கும் தன் முன்னோர்கள் செய்தது போலவே ஏதோ ஒரு குறிப்பிட்ட கடவுளைச் சடங்குகள் மூலம் சிறிதும் தவறாமல் வழிபட்டு வருகிறான் என்றாலும், அவனுடையஉள்ளத்தின் ஆழத்தில் தான் நாடோறும் வழிபட்டுவரும் தெய்வத்திற்கு மேலானதும், எங்கும் நிறைந்ததும், அன்புருவானதுமான ஓர் ஒப்பற்ற பரம்பொருள் இருக்கிறது என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. உணர்ச்சி மேலிட்ட காலத்தில் அவன் அந்தப் பரம்பொருளை நினைந்து உருகி அதனிடம் உறவு பாராட்டித் தன் விண்ணப்பத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறான். இதுதான் நாம் மேலே கூறிய புது இலக்கியத்தினால் ஏற்பட்ட சிறந்தபயன்.

சைவத்திற்கும், வைணவத்திற்கும் பக்தி மார்க்கம் பொதுவானது என்பதை முன்னோர் அதிகாரத்திற் கூறினோம். சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள் சிவபெருமான்மீதும், வைணவ சமயத்தைச்சேர்ந்தவர்கள் விஷ்ணுவின்மீதும் பக்தியுடையவர்களாக இருக்கிறார்கள். தென்னிந்தியாவில் சைவமும், வட இந்தியாவில் வைணவமும் அதிகமாகப் பரவின. விஷ்ணுவின் அவதாரங்களில் முக்கியமான கிருஷ்ணவதாரமும் இராமாவதாரமும் வட இந்திய மக்கள் மனத்தை அதிகம் கவர்ந்தன. கிருஷ்ண வழிபாட்டுக்கும் இராம வழிபாட்டுக்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. கிருஷ்ண வழிபாட்டில் நாயகி நாயக பாவம் அதிகமாக இருக்கிறது. கிருஷ்ணன் கோகுலத்தில் கோபிகளோடு செய்த லீலைகளைப் பற்றிய பாடல்கள் ஏராளம். கிருஷ்ணனை இறைவனாகவும், கோபிகளை இறைவனோடு கலந்து பேரானந்தம் பெற விரும்பும் ஆன்மாக்களாகவும் கொள்ளவேண்டுமென்று அறிந்தோர் கூறுகிறார்கள். ஆனால் மற்ற மதங்களில் ஏற்பட்டதுபோலவே கிருஷ்ண வழிபாட்டிலும் சிற்றின்ப உணர்ச்சிகளுக்கும் பேரின்ப வேட்கைக்கும் இடையிலுள்ள வரம்பு சில சமயங்களில் தாண்டப்பட்டு விடுகிறது. அதனால் ஏற்படும் தீமை அனைவரும் அறிந்ததே. ஆனால் இராம வழிபாட்டில் இத்தகைய தீமைக்கு இடமில்லை. இராமன் ஒப்பற்ற கடவுள். அவனிடம் பக்தி செலுத்தினால், அவனுடைய அருளைப் பெற்றுப் பேரானந்தம் அடையலாம் என்ற உயர்ந்த நோக்கம் அந்த வழிபாட்டால் போதிக்கப்படுகிறது. மேலும், இராமனிடம் உண்மையான பக்தியுடையவன் நேர்மையினின்றும் ஒழுக்கத்தினின்றும் சிறிதும் பிறழாதவன் என்ற கொள்கையை அந்த வழிபாடு வற்புறுத்துகிறது. மனிதன் தன்னை அறவே மறந்து இறைவனுடைய பக்தியில் மூழ்க வேண்டுமென்றும், அவனுடைய அருளைத் தவிரத் தனக்கு வேறொரு துணை இருப்பதாக உணரவே கூடாதென்றும், இராம வழிபாடும் கிருஷ்ண வழிபாடும் ஒருங்கே போதிக்கின்றன. ஆனால் வட இந்தியாவில் பரவிய பக்திமார்க்கத்தின் பயனாக மக்கள் இராமனையும் கிருஷ்ணனையுந்தான் வணங்கினார்கள் என்று நினைத்துவிடக்கூடாது. கபீருக்கு யாகங்களில் எவ்வாறு நம்பிக்கையில்லையோ, அவ்வாறே அவதாரங்களிலும் நம்பிக்கை கிடையாது. அவர் அல்லாவாகவும் இராமனாகவும் காட்சியளிக்கும் பரம்பொருள் ஒன்றேயென்றும், அந்த ஒப்பற்ற பரம்பொருளை மக்கள் உண்மையான பக்தியோடு வழிபடவேண்டும் என்றும் கூறினார். நானக் போதித்த கொள்கை

யும் அத்தகையதே. உண்மையில் கபீரின் கொள்கையே நானக்கின் போதனைக்கு வழிகாட்டியாக இருந்தது.

இவ்வாறு வட இந்தியாவில் பரவிய புதிய மத இயக்கத்தில் பல வழிபாட்டு முறைகள் இருந்தன. எனினும், அவை அடிப்படையில் ஒரே இயக்கத்தின் பல வேறு தோற்றங்கள் என்பது விளங்கும். அந்தப் புதிய இயக்கத்தின் வளர்ச்சிக்கு இஸ்லாம் மதம் எவ்வளவு தூரம் காரணமாயிருந்தது என்று உறுதியாகக் கூறமுடியாது. கபீரின் போதனையில் மாத்திரம் இஸ்லாம் மதத்தின் செல்வாக்குத் தெளிவாகத் தெரிகிறது. பொதுவாகப் பக்தி மார்க்கத்தின் வளர்ச்சிக்கு இஸ்லாம் மதம் ஓரளவு உதவி செய்திருக்கும் என்று நினைத்தால் அது தவருகாது. இஸ்லாம் மதம் அதைப் பின்பற்றிய மக்களால் அந்தரங்கத்தில் கையாளப்பட்ட மதமன்று. முகமதியர் குடியேறிய ஒவ்வோர் ஊரிலும் ஒரு மசூதியும் தோன்றிற்று. பெரும்பாலும் ஏற்கெனவே இருந்த இந்துக் கோவிலை இடித்துவிட்டு, இடிக்கப்பட்ட அப்பொருள்களை உபயோகித்து அதே இடத்தில் முகமதியர்கள் தங்கள் மசூதியைக் கட்டினூர்கள். அந்த மசூதியின் மினூரட்டிலிருந்து மவஜன் தினந்தோறும் முகமதியர்களை வழிபாட்டுக்கு அழைக்கும் போது, அந்த அழைப்பு முகமதியர் காதுகளில் மாத்திரமின்றி இந்துக்களின் காதுகளிலும் விழுந்துதானிருக்கும். வழிபாட்டுக்கு அழைக்கும்போதே மவஜன் கடவுள் ஒருவரே என்று கூவியதை இந்துக்களும் கேட்டிருப்பார்கள். இந்துக்கள் அந்தக் குரலைக் கேட்டுச் சீற்றமடைந்திருக்கலாம். ஆனல் அதைக் கேட்காமலிருக்க முடியாது. அவ்வாறு தினந்தோறும் கேட்டதால், பிராமணர்கள் போதித்த பல கடவுட் கொள்கைக்கும், சடங்கு மிகுந்த மதக் கோட்பாடுகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு புதிய கருத்து அவர்கள் மனத்திற் பதிந்திருக்கும். அந்த நிலையில் பக்திமார்க்கம் போதிக்கப்பட்டதால் அவர்கள் அதை விரைந்து ஏற்றுக்கொண்டார்கள் என்று எண்ணலாமல்லவா? பக்தி மார்க்கத்தின் வளர்ச்சிக்கு இஸ்லாம் இதைத்தவிர அதிகமான உதவி செய்திருக்குமென்று நாம் உறுதியாகக் கூறமுடியாது. இஸ்லாம் மதம்தோன்றுவதற்குப் பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே பக்திமார்க்கத்தின் அடிப்படைக் கொள்கைகள் இந்தியாவில் இருந்தன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

அதிகாரம்—26

போர்ச்சுகீசியர் வருகை

பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் சீனப் பண்பாடும் இஸ்லாமியப் பண்பாடும் இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளிற் பரவி இந்தியாவை எல்லாத் திசைகளிலும் ஏறக்குறைய இடைவெளியின்றி வளைத்துக்கொண்டன என்று பத்தொன்பதாம் அதிகாரத்திற் படித்தோம். அதற்கடுத்த அதிகாரங்களில் இஸ்லாமிய ஆதிக்கம் இந்தியாவின் பெரும்பகுதியிற் பரவிய வரலாற்றைப் படித்தோம். சீன நாகரிகமும் இஸ்லாமிய நாகரிகமும் இந்தியா தேசத்தை இடைவெளியின்றி வளைத்துக் கொள்வதற்குள் பதினைந்தாம் நூற்றுண்டின் இறுதியில் இந்திய நாகரிகத்திற்கும் ஐரோப்பிய நாகரிகத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. இந்தப் புதிய தொடர்பு இந்தியாவுக்குப் போர்ச்சுகீசியர்களால் ஏற்பட்டது.

போர்ச்சுகல் ஒரு சிறிய நாடு. அதன் ஆதிக்கம் தரை மார்க்கமாக வேறுநாடுகளில் பரவுவதற்கு வசதியில்லை. ஆனால், கடல் மார்க்கமாக முன்னேறுவதற்கு ஏற்ற வசதிகளிருந்தன. பதினைந்தாம் நூற்றுண்டில் போர்ச்சுகீசிய மாலுமிகள் ஆப்பிரிக்காவின் மேற்குக்கரை நாடுகளுடன் வியாபாரம் செய்துகொண்டே, கொஞ்சங் கொஞ்சமாக ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு கரையோரமாகவே தெற்கு நோக்கிச் செல்லத்தொடங்கினார்கள். அதுவரையில் எந்த ஐரோப்பிய நாட்டினரும் அவ்வாறு செய்ததில்லை. அவ்வாறு சென்ற போச்சுகீசிய மாலுமிகளிற் பலர் இந்தியாவுக்கு ஒரு புதிய வழி கண்டுபிடித்து, அந்தப் புதுவழியில் எகிப்து, சிரியா, துருக்கி ஆகிய நாடுகளின் வழியாக ஐரோப்பாவுக்கும் கீழ்நாடுகளுக்கும் நடந்து வந்த லாபகரமான வியாபாரத்தைத் திருப்பவேண்டுமென்று விரும்பினார்கள். இவ்வாறு லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்ததென்பது உண்மையெனினும் அவர்களுடைய முயற்சிக்கு அதைத்தவிர வேறு காரணங்களும் இருந்தன. வடமேற்கு ஆப்பிரிக்காவில் பரவியிருந்த இஸ்லாமிய ஆதிக்கத்தை அவர்கள் மிக வெறுத்தார்கள். மத்திய தரைக் கடலின் கிழக்கில் தோன்றியிருந்த முகமதிய இராஜ்யங்களால் ஐரோப்பாவுக்கும் கிறிஸ்துவ மதத்துக்கும் ஆபத்து ஏற்படுமென்று மற்ற ஐரோப்பியர்கள் நினைத்ததுபோலவே போர்ச்சுகீசியர்களும் நினைத்தார்கள். கீழ் நாடுகளுக்கும், ஐரோப்பிய



MOGUL INDIA

To illustrate Chapters XXVI to XXXII

Emery Walker Ltd. sc.

இராஜ்யங்களுக்கும் இடையில் நடந்த வியாபாரத்தால் அந்த முகமதிய இராஜ்யங்களுக்கு நல்ல வரும்படி இருந்தது. அந்த வியாபாரத்தைப் புதிய வழியில் திருப்பி, அந்த முகமதிய இராஜ்யங்களுக்குப் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்று போர்ச்சுகீசியர்கள் விரும்பினார்கள். மேலும், போர்ச்சுகீசியர்கள் கிறிஸ்துவ மதத்தில் மிகுந்த நம்பிக்கையும் அதைப் பரப்புவதில் பேரார்வமும் கொண்டவர்கள். ஆகவே அவர்கள் இண்டீஸ் முதலிய கீழ்நாடுகளில் வாழ்ந்த மக்களிடையே தங்களுடைய மதத்தைப் பரப்பி அவர்களை மீளா நரகத்தில் வீழாமல் காப்பாற்ற வேண்டுமென்று விரும்பினார்கள். ஆகவே, வியாபாரத்தில் லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணமும், முகமதிய இராஜ்யங்களின் பலத்தைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணமும், கிறிஸ்துவ மதத்தைப் பரப்பவேண்டும் என்ற எண்ணமும் ஒன்றாகச் சேர்ந்து போர்ச்சுகீசியர்களை இந்தியாவுக்குப் புதுவழி கண்டுபிடிக்கும் முயற்சியில் அதிகமாக ஊக்கின.

ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு சென்று நன்னம்பிக்கை முனையை அடைவதற்கு வெகுநாளாயிற்று. கடைசியாக 1498-ஆம் ஆண்டில் போர்ச்சுகல் அரசாங்கத்தைச் சேர்ந்த சில கப்பல்கள் வாஸ்கோடகாமாவின் தலைமையில் நன்னம்பிக்கை முனையை வளைத்துக்கொண்டு, அரபிக்கடலைக் கடந்து, மலையாளக் கரையை அடைந்தன. இந்தப் புதுவழி கண்டுபிடிக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகளை அறிந்துகொள்ள வேண்டுமானால், அரேபியா தேசத்திற்கும் சீனாவுக்குமிடையில் நடந்த வியாபாரத்தைப்பற்றி மறுபடியும் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம். சீனாவிலிருந்து அரேபியாவுக்கும், அரேபியாவிலிருந்து சீனாவுக்கும் கப்பல்கள் நேராகச் செல்லும் வழக்கம் நாளடைவில் கைவிடப்பட்டது என்றும், சீனாவிலிருந்து வந்த கப்பல்கள் மலாக்காவில் நின்றுவிட்டன என்றும், மலாக்காவிலிருந்து வேறு கப்பல்கள் புறப்பட்டு இந்தியாவை அடைந்தன என்றும், இந்தியாவிலிருந்து வேறுகப்பல்கள் புறப்பட்டு அரேபியாவை அடைந்தன என்றும் முன்னர்க் கூறியது நினைவிருக்கும். நாளடைவில் கிழக்கிந்தியத் தீவுகளில் மலாக்கா மிகவும் முக்கியமான வியாபார ஸ்தலமாயிற்று. இந்தியக் கப்பல்கள் பருத்தித் துணிகளை ஏற்றிக்கொண்டு மலாக்காவை யடைந்து, அந்தத் துணிகளை அங்கு விற்றுவிட்டுத் திரும்புகாலில் பட்டு, வாசனைப் பொருள்கள், மருந்துச் சரக்குகள் முதலிய வியாபாரப் பொருள்களை ஏற்றிக்கொண்டு இந்தியாவுக்கு வந்தன. அந்தப் பொருள்களிற்

சில இந்தியாவின் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து நாட்டின் பலவேறு பகுதிகளுக்குச் சென்றன. மீதியிற் சில மேற்குக் கடற்கரையில் குஜராத்திலிருந்த வியாபாரிகளுக்கு விற்கப்பட்டன. குஜராத்தையடைந்த பொருள்களில் ஒருபகுதி இந்தியாவில் விற்கப்பட்டது. இன்னொரு பகுதி மறுபடியும் கப்பலில் ஏற்றப்பட்டுப் பாரசீக வளைகுடாவுக்கும் செங்கடலுக்கும் அனுப்பப்பட்டது. மலாக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த பொருள்களில் பெரும்பகுதி கேரளக் கரையிலிருந்த துறைமுகங்களுக்குச் சென்றது. அவ்வாறு கேரளக்கரையை அடைந்த பொருள்களில் ஏறக்குறைய எல்லாமே அரேபியா முதலிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஆனால், அரேபியா முதலிய நாடுகளுக்கு இந்தியக் கப்பல்கள் செல்லவில்லை. அங்கிருந்து செங்கடலுக்குச் சென்ற வியாபாரப் பொருள்களெல்லாம் அரேபியக் கப்பல்களிலும், எகிப்தியக் கப்பல்களிலும்தான் எடுத்துச் செல்லப்பட்டன. இந்த ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்ட வெளிநாட்டு வியாபாரிகள் இந்தியத் துறைமுகங்களில் வசித்தார்கள். ஆனால் அவர்கள் ஆங்காங்கிருந்த இந்திய அரசர்களின் குடிகள் என்ற முறையில் வசிக்காமல், அந்த அரசர்களிடம் தனிச்சலுகை பெற்ற சுயேச்சைக் குடிகளாக வாழ்ந்தார்கள். ஏற்றுமதி வியாபாரத்தால் நல்ல லாபம் ஏற்பட்டதால் ஆங்காங்கிருந்த இந்தியத் தலைவர்களும், அரசர்களும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு, அந்த வெளிநாட்டு வியாபாரிகளைத் தங்கள் ஆதிக்கத்திலிருந்த துறைமுகங்களுக்கு அழைத்தார்கள். அதனால் அந்த வெளிநாட்டு வியாபாரிகளுக்குப் பல சௌகரியங்கள் கிடைத்தன. இந்திய அரசர்களின் சமஸ்தானங்களில் அவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. மேலும் அவர்கள் ஒன்றுகச் சேர்ந்துகொண்டால் இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிகளைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டி வைக்கலாம்.

கேரளத் துறைமுகங்கள் முக்கியமாக இருந்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவதாக, சீனவுக்கும் மத்திய தரைக்கடல் நாடுகளுக்கும் இடையிலிருந்த வியாபார மார்க்கத்தில் கேரளக் கடற்கரை முககியமான ஸ்தானத்தை வகித்தது. இரண்டாவதாக, கீழ் நாடுகளிலிருந்து இறக்குமதியான பொருள்களோடு ஏராளமான மிளகும் அங்கிருந்து மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. வடக்கு ஐரோப்பிய மக்கள் மிளகை அதிகமாக உபயோகித்தார்கள், கேரளத்திலிருந்து செங்

கடலுக்குச் சென்ற கப்பல்கள் சுமந்து சென்ற பொருள்களில் மற்ற எந்தத் தனிப்பட்ட பொருளைக்காட்டிலும் மிளகுதான் மிக அதிகமாக இருந்தது. கேரளத்தில் மேற்குத்தொடர்ச்சி மலைகளின் சரிவில் மிளகு இன்றுபோலவே அன்றும் ஏராள மாகப் பயிர்செய்யப்பட்டது. மலைத்தொடருக்கும் கடற்கரைக் கும் இடையிலுள்ள குறுகிய நிலப்பகுதியிலிருந்த மக்களுக்கு மிளகு பயிர் செய்வதுதான் முக்கிய ஜீவனோபாயமாக இருந்தது. அங்குப் பல சிறு இராஜ்யங்களிருந்தன. அவற்றின் பொருளா தார நிலை மிளகு வியாபாரத்தைப் பொறுத்ததாயிருந்தது. அரா பிய வியாபாரிகளும், எகிப்திய வியாபாரிகளும் அங்கிருந்த ஏதாவதொரு இராஜ்யத்தோடு வியாபாரம்செய்ய மறுத்தார்க ளானல் அந்த இராஜ்யத்தின் பொருளாதார நிலை சீர்கெட்டு, அந்த இராஜ்யமே அழிந்துபோனாலும் போகும். அந்த இராஜ் யங்களெல்லாம் விஜயநகரத்திற் கடங்கியவை. ஆனல் நடை முறையில் அவைகள் ஏறக்குறைய சுயேச்சையுடையவையாக இருந்தன. ஆகவே வியாபார விஷயங்களில் அவைகள் ஒன்றோ டொன்று போட்டி போட்டுக்கொண்டும், சில சமயங்களில் சண்டையிட்டுக்கொண்டும் இருந்தன.

இந்த நிலையில் போர்ச்சுகீசியர்களுடைய வரவு புதிய சச் சரவுகளைக் கிளப்பிவிட்டதில் வியப்பில்லை. அவ்வாறு ஏற்பட்ட சச்சரவை முகமதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நடந்த சச் சரவு என்று சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆனல் உண்மையில் அது இறக்குமதி வியாபாரிகளுக்கும், ஏற்றுமதி வியாபாரிகளுக்கும் நடந்த சச்சரவுதான். கீழ்நாட்டுப் பொருள் களை இறக்குமதிசெய்த இந்திய வியாபாரிகள் போர்ச்சுகீசியர் வருகையால் தங்கள் பொருள்களுக்கு நல்ல கிராக்கி ஏற்படும் என்று எண்ணி மகிழ்ந்தார்கள். அத்தகைய இறக்குமதி வியா பாரிகளிற் பெரும்பான்மையோர் முகமதியர்கள்தாம். ஆனல் ஏற்றுமதி வியாபாரத்தில் அதுவரையில் தனியுரிமையுடன் ஈடு பட்ட அராபிய வியாபாரிகளும், எகிப்திய வியாபாரிகளும் போர்ச்சுகீசியர்கள் தங்களுக்குப் போட்டியாக வந்ததை விரும்ப வில்லை. ஆகவே போர்ச்சுகீசியர்கள் வருகை சிக்கலான பல சூழ்ச்சிகளுக்குக் காரணமாயிற்று. முடிவில், மலபார்க் கடற்கரை யில் முக்கிய துறைமுகமான கள்ளிக்கோட்டை அரசனுடன் போர்ச்சுகீசுயர்கள் சச்சரவு செய்துகொண்டு, கொச்சி முதலிய வேறு துறைமுகங்களுடன் வியாபாரம் செய்யத் தொடங்கினர் கள். அங்கிருந்த ஏராளமான மிளகு ஐரோப்பாவுக்கு எடுத்துச்

செல்லப்பட்டது. சில ஆண்டுக்காலம் போர்ச்சுக்கீசியர்கள் இந்த வியாபாரத்தால் கொழுத்த இலாபம் அடைந்தார்கள்.

இவ்வாறு இந்திய வியாபாரத்தில் ஒரு பங்கு பெற்ற போர்ச்சுகீசியர்கள் அத்துடன் திருப்தியடையவில்லை. அந்த வியாபாரம் முழுவதும் தங்கள் கையிலேயே இருக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவது மிக எளிது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதற்காகப் பெரிய இராஜ்யம் எதையும் ஜெயிக்கவேண்டிய அவசியம் இல்லை. முக்கியமாக வேண்டியதெல்லாம் ஒரு நல்ல கப்பற்படைதான். அத்துடன் வியாபார மார்க்கத்திலுள்ள கேந்திரஸ்தானங்களில் சில கோட்டைகளும், இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் ஒரு கப்பற்படைத்தளமும் இருந்துவிட்டால் அவர்களிஷ்டம்போல் போட்டியின்றி வியாபாரம் செய்ய முடியும். மேலும், போர்ச்சுகீசியர்களை எதிர்ப்பவர்களும் அதிகமாக இல்லை. அதனால் மிகப் பெரிய கப்பற்படையும் தேவையில்லை. எகிப்து தேசத்தின் கப்பற்படைதான் போர்ச்சுகீசியர்களுடைய கடலாதிக்கத்தை எதிர்த்த படைகளில் முக்கியமானது அந்தப் படையையும் 1509-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடந்த ஒரு சண்டையில் போர்ச்சுகீசியர்கள் அழித்துவிட்டார்கள். அதன்பின் கீழ்க்கடல்களில் போர்ச்சுகீசிய ஆதிக்கம் போட்டியின்றி நிலைத்துவிட்டது.

போர்ச்சுகீசியக் கடலாதிக்கத்திற்கு அடிகோலியவன் 1509-முதல் 1515-வரையில் இந்தியாவில் போர்ச்சுக்கீசிய கவர்னராயிருந்த ஆல்புகர்க் என்பவன். இந்திய வரலாற்றில் இடம் பெற்றுள்ள ஐரோப்பியர்களுள் ஆல்புகர்க் ஒரு மிகச் சிறந்த ஸ்தானத்தை வகிக்கிறான். அவன் மிகுந்த திறமையும், நேர்மையும், விடாமுயற்சியும் உடையவன். போரிலும் அரசியல் முறைகளிலும் ஒருங்கு சிறந்தவன். இராஜதந்திர முறைகளிலும் கைதேர்ந்தவன். 1509-ஆம் ஆண்டில் பாரசீக வளைகுடாவின் வாயிற்படி போன்ற ஆர்மஸ் என்ற தீவுக்கோட்டையை ஆல்புகர்க் கைப்பற்றிக் கொண்டான். 1510-இல் பீஜப்பூர் இராஜ்யத்தைச் சேர்ந்த கோவா என்ற துறைமுகத்தைப் பிடித்துக் கொண்டான். அதுவே பின்னர்க் கீழ்நாடுகளில் போர்ச்சுகீசியர் தலைநகராயிற்று. 1511-இல் ஒரு கடுமையான சண்டைக்குப் பின் மலாக்காவைக் கைப்பற்றிக்கொண்டான். செங்கடலின் வாயிற்படிபோன்ற ஏடன் துறைமுகத்தையும் கைப்பற்றிக்

கொள்ளவேண்டுமென்று ஆல்புகார்க் முயன்றான். ஆனால் அம் முயற்சி பயனளிக்கவில்லை. பின்னர் இந்தியக் கடற்கரையில் சில இடங்கள் போர்ச்சுகீசியர் வசமாயின. அவற்றுள் டையூ என்பதும் ஒன்று. அது காம்பே வளைகுடாவிலிருப்பதால், அங்கிருந்து கொண்டே செங்கடலுக்குச் செல்லும் கப்பல்கள் புறப்படக்கூடிய எல்லா இந்தியத் துறைமுகங்களையும் போர்ச்சுகீசியர்கள் தங்கள் பார்வையில் வைத்துக்கொள்ள முடியும். ஆதலால், ஏடன் துறைமுகத்தைக் கைப்பற்ற முடியாததால் போர்ச்சுகீயர்களுக்கு எந்த விதமான கஷ்டமும் ஏற்படவில்லை. இவ்வாறு போர்ச்சுகீசிய ஆதிக்கம் பெருகியதால் அராபியா வியாபாரிகளின் போட்டியும் விரைவிலேயே ஒழிந்தது.

கீழ்நாட்டு வியாபாரத்தில் தங்களுடைய தனியுரிமையை ஸ்தாபிப்பதற்கு போர்ச்சுகீசியர்கள் பின்வரும் முறைகளைக் கையாண்டார்கள். சில கடல்வழிகளிற் கப்பல் செலுத்தும் உரிமையைப் போர்ச்சுகீசியர்கள் தங்கள் தனியுரிமையாக்கிக் கொண்டார்கள். அதுபோலவே சில வியாபாரப் பொருள்களை வாங்குவதையும், விற்பதையும், கடல்மார்க்கமாக எடுத்துக் கொண்டு போவதையும் தங்களுடைய தனியுரிமையாக்கிக் கொண் டார்கள். இந்திய நாட்டுக் கப்பல்களும், மற்றநாட்டுக் கப்பல் களும் போர்ச்சுகீசியர் அனுமதி பெற்றுக்கொண்டு குறிப்பிட்ட கடல் வழிகளிற் சாமான்களை ஏற்றிக்கொண்டு செல்லலாம். அவ்வாறு அனுமதி கொடுப்பதற்குப் போர்ச்சுகீசியர்கள் மிக உயர்வான அனுமதிக் கட்டணத்தை வசூல் செய்தார்கள். அனு மதி பெறாத எந்தக் கப்பலாவது கடலிற் காணப்பட்டால் உடனே போர்ச்சுகீசியச் சண்டைக் கப்பல்கள் அதன்மீது பாய்ந்து பிடித் துக்கொள்ளும். இவ்வித முறைகளால் பதினாறும் நூற்றாண்டு முழுவதும் முக்கியமான கடல் மார்க்கங்களையெல்லாம் போர்ச்சு கீசியர் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்தார்கள். ஆகவே, போர்ச்சுகீசியர்களுக்குத் தெரியாமல் எந்தவிதமான வியாபாரப் பொருளும் கீழ் நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குச் செல்லமுடி யாது. எனினும், நாளடைவில் போர்ச்சுகீசிய உத்தியோகஸ் தர்கள் லஞ்சம் வாங்கத் தொடங்கியதால், ஒரு சில வியாபாரப் பொருள்கள் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்பட்டுத் தரை மார்க்கமாக ஐரோப்பாவை அடைந்தன.

போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான இடங்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் பல இருந்தன. அவற்றில் சிலவற்றைப்

போர்ச்சுகீசியர்கள் சுதேச அரசர்களிடமிருந்து சமாதான முறையில் பெற்றார்கள். வேறு சிலவற்றை அவர்கள் சண்டை செய்து கைப்பற்றிக்கொண்டார்கள். ஆகவே அவைகளெல்லாம் போர்ச்சுகல் அரசனுக்குச் சொந்தமானவை. கோவாவிலிருந்த இராஜப்பிரதிநிதி அவற்றையெல்லாம் ஆண்டுவந்தான். வங்காளத்திலும், சோழமண்டலக் கடற்கரையிலும் போர்ச்சுகீசியர்களுடைய வியாபாரஸ்தலங்கள் பல இருந்தன. அவைகள் முதலில் ஆங்காங்கு ஆட்சிசெய்த சுதேச அரசர்களுடைய அனுமதியின் மேல் ஸ்தாபிக்கப்பட்டவை. ஆனால் நாளடைவில் போர்ச்சுகீசியர்கள் அவ்விடங்களில் கோட்டைகளைக் கட்டித் தங்கள் படைகளையும் வைத்துக்கொண்டார்கள். அதற்கு அவர்கள் சுதேச அரசர்களின் அனுமதியைப் பெறவில்லை. மேலும், அவ்விடங்களில் சுதேச அரசர்களுடைய ஆணையை ஏற்றுக்கொள்ளாமல் தங்களுடைய சுய ஆட்சியை ஸ்தாபித்துக்கொண்டார்கள். அத்தகைய வியாபார ஸ்தலங்களிற் சில கோவாவிலிருந்த போர்ச்சுக்கீசிய இராஜப்பிரதிநிதியின் ஆணையையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன. அவைகளைச் சிறு குடியரசுகள் என்று கூறினால் அது பெரும்பாலும் பொருந்தும். ஆனால், அந்தச் சிறு குடியரசுகளில் நாளடைவில் குழப்பமும், அராசகமும் தலைவிரித்தாடின. மேலும் அவற்றுட் சில கடற்கொள்ளைகாரர்களின் இருப்பிடங்களாயின. அதனால், வங்காள விரிகுடாவின் வியாபாரத்திற்குப் பெருந் தீமை விளைந்தது. இந்த நிலைமை ஏற்படுவதற்கு அப்போது இந்தியாவின் அரசியல் நிலைதான் பெரிதும் காரணமாயிருந்தது.

போர்ச்சுகீசியர் வருகையால் இந்திய வரலாற்றில் உடனடியாக ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடத்தக்கவை அல்ல. முதலில் அரசியல் துறையில் ஏற்பட்ட விளைவுகளைப் பார்ப்போம். கோவாவைக் கைப்பற்றியதால் பீஜாப்பூர் இராஜ்யத்தின் பகைமையை அவர்கள் தேடிக்கொண்டார்கள். ஆனால் விஜயநகரத்தோடு அவர்கள் நட்பாகவே இருந்தார்கள். விஜயநகரத்திற்குத் தேவையான குதிரைகளை வரவழைத்துக் கொடுப்பது நல்லவருவாய் தரக்கூடிய வியாபாரம் என்பதை அவர்கள் விரைவில் உணர்ந்தார்கள். ஆனால், தென்னாட்டின் ஆதிக்கத்திற்காக நடந்த சண்டையில் முகமதியர்களுக்கெதிராக விஜயநகர ராஜ்யத்திற்குப் போர்ச்சுகீசியர்கள் எந்தவிதமான குறிப்பிடத்தக்க உதவியும் செய்யவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் போர்ச்சுகீசியர்களுடைய வருகையால் ஏற்கெனவே இருந்த குழப்பமான

அரசியல் நிலை இன்னும் அதிகமாகக் குழப்பமடைந்தது என்று கூறலாம். போர் முறைகளில் அவர்கள் இந்தியர்களைவிடச் சிறந்தவர்களாக இருந்தார்கள். பீரங்கிகளையும் * துப்பாக்கிகளையும் உபயோகிப்பதில் அவர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார்கள். மேலும் அவர்கள் வியக்கத்தக்க தைரியமுடையவர்களாயுமிருந்ததால், அவர்களை எதிர்த்து வெல்வது இயலாத காரியம் என்று இந்தியர்கள் நம்பினார்கள். அதனால் அவர்கள் மேலும் மேலும் வெற்றியடைவது எளிதாயிற்று.

இப்போது வியாபாரத்துறையில் ஏற்பட்ட விளைவுகளைப் பார்ப்போம். இந்திய வியாபாரத்தை அராபியர்களிடமிருந்து போர்ச்சுகீசியர்கள் கைப்பற்றிக்கொண்டதன் விளைவாக அந்த வியாபாரம் குறிப்பிடத்தக்க முறையில் பெருகிவிடவில்லை. இந்தியாவிலிருந்து முன்னைவிட அதிகமான மிளகு ஐரோப்பாவை அடைந்திருக்கக்கூடும். அதைத்தவிர வேறுவகையில் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் பெருகினதாகக் கூறமுடியாது. மேற்கு ஆப்பிரிக்காவிலும், பிரஜீலிலும் இந்தியப் பருத்தித் துணிகளுக்குப் புதிய கிராக்கி ஏற்பட்டது என்பது மாத்திரம் நிச்சயமாகத் தெரிகிறது. மேலும், இந்தியாவின் இறக்குமதி வியாபாரமும் போர்ச்சுகீசியருடைய வருகையால் அதிகப்படவில்லை. அவர்கள் இந்தியாவிலிருந்து வாங்கிக்கொண்டு சென்ற பொருள்களுக்குப் பதிலாக பெரும்பாலும் தங்கத்தையும் வெள்ளியையுமே கொடுத்தார்கள். அவர்கள் இந்தியாவுக்கு விற்பனைக்குக் கொண்டுவந்த பொருள்களும் முக்கியமானவையல்ல. ஒரு சில விநோதப் பொருள்களையும், சில சுகபோகப் பொருள்களையும் தவிர வேறுபொருள்களை அவர்கள் இந்தியாவுக்கு விற்பனைக்குக் கொண்டுவரவில்லை. மலையாளக் கரையில் பல கடற்கொள்ளைக் கூட்டத்தினர் இருந்தார்கள். மலையாளத்திலிருந்து குஜராத்திற்கும், இலங்கை, சென்னை, வங்காளம்ஆகிய இடங்களுக்கும் கரையோரமாகவே அடிக்கடி சென்று வந்த சிறிய வியாபாரக் கப்பல்களை வழி மறுத்துக் கொள்ளையடித்தலே அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரின் முக்கியத்தொழில் அந்த ஆபத்தினின்று தப்பித்துக்கொள்ளுவதற்குப் போர்ச்சுகீசியர்கள் தங்கள் சண்டைக் கப்பல்களை இந்திய வியாபாரக் கப்பல்களுடன் அனுப்பி உதவி செய்தார்கள். அதனால் இந்திய வியா

* தென்னிந்தியாவில் பீரங்கிகள் எப்போது உபயோகத்திற்கு வந்தன என்று சரியாகத் தெரியவில்லை. எனினும், போர்ச்சுகீசியர் வருவதற்கு முன்னரே அவைகள் கையாளப்பட்டன என்பது உறுதி.

பாரக் கப்பல்கள் கரையோர வியாபாரத்தில் ஏறக்குறைய அச்சமின்றி ஈடுபட்டன. இதுவே போர்ச்சுகீசியர்கள் இந்திய வியாபாரத்துக்குச் செய்த முக்கியமான தொண்டு. ஆனால் போர்ச்சுகீசியர்களால் இந்திய வியாபாரத்துக்குப் பல தீமைகளும் ஏற்பட்டன. கரையோரமாகச் சென்ற இந்தியக் கப்பல்களிடமும் வெளிநாடுகளுக்குச் சென்ற இந்தியக் கப்பல்களிடமும் போர்ச்சுகீசியர்கள் கடுமையான அனுமதிக்கட்டணத்தை வசூலித்தார்கள். மேலும் அனுமதிச்சீட்டு வழங்கிய போர்ச்சுகீசிய உத்தியோகஸ்தர்கள் ஏராளமான லஞ்சமும் வாங்கினார்கள். அதுவுமன்றிப் போர்ச்சுகீசியர்கள் வருகைக்குப்பின் இந்திய வியாபாரப் பொருள்களை எல்லாம் வெளிநாடுகளுக்குச் சுமந்து செல்வதற்குப் போர்ச்சுகீசியக் கப்பல்களே உபயோகிக்கப்பட்டன. அதனால் இந்தியக் கப்பல்களுக்கு வேலையில்லாமற் போயிற்று. ஆகவே கப்பல் வியாபாரத்தில் ஈடுபட்ட இந்திய வியாபாரிகள் தங்கள் வருமானத்தை இழந்தார்கள். தங்கள் தனியுரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போர்ச்சுகீசியர்கள் ஏற்படுத்திய கடுமையான கட்டுப்பாடுகளால் இந்தியாவின் கடல் கடந்த வியாபாரம் வளர்ச்சியடைய வழியில்லாமற் போயிற்று.

போர்ச்சுகீசியர்கள் தங்கள் மதத்தில் மிகுந்த நம்பிக்கையுடையவர்கள். அவர்கள் குடியேறிய இடங்களிலெல்லாம் கிறிஸ்தவ மதமும் நிலையாக ஸ்தாபிக்கப்பட்டது. அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட இடங்களில் பெரும்பகுதி மாதா கோயில்களுக்கும் மடங்களுக்கும் மானியமாகக் கொடுக்கப்பட்டது. போர்ச்சுகல் நாட்டிலிருந்து பல பாதிரிகள் இந்தியாவுக்கும், சீனாவுக்கும், ஜப்பானுக்குங்கூட மதப்பிரசாரத்திற்காகச் சென்றார்கள். கோவாவில் கிறிஸ்தவமதத்தின் காப்புக்காக இன்குசிஷன் கோர்ட்டு நிறுவப்பட்டது. அங்கிருந்த ஆர்ச்சுபிஷப்பு மிகவும் உயர்ந்த ஸ்தானத்தை வகித்தார். இராஜப்பிரதிநிதிக்கு அடுத்தபடியாக அவரே மிக உயர்ந்த அதிகாரி. அந்தக்காலத்துப் போர்ச்சுகீசியப் பாதிரிகள் இந்தியர்களைப் பற்றிக்கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தற்கால மக்களாகிய நாம் புரிந்துகொள்வது மிகக் கடினம். முகமதியர்கள் ஆதியில் உண்மையான மதத்தைப் பின்பற்றியவர்களாக இருந்தும் பின்னர் அதை நிராகரித்த பாபிகள் என்றும், இந்துக்கள் உண்மை மதம் இன்னதென்றே அறியாது நகரத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்த மூடர்கள் என்றும் அந்தப் பாதிரிகள் நம்பினார்கள். மலையாளத்தில் ஏற்கெனவே இருந்த கிறிஸ்தவர்கள் இந்துக்களை

விடப் பரிதாபகரமான நிலையில் இருந்தார்களென்று போர்ச்சுகீசியப் பாதிரிகள் நினைத்து, அவர்களை நாளடைவில் மீட்டு மறுபடியும் போப்பாண்டவர் ஆணையை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார்கள்.

இந்தியாவுக்கு வந்த போர்ச்சுகீசியர்கள் தைரியமும், பிற நாடுகளை ஜயிப்பதில் ஆர்வமும், தாங்கள் உயர்ந்தவர்கள், தங்கள் நாடு மிகச் சிறந்தது என்ற செம்மாப்பும் உடையவர்கள். ஆனால் அவர்களிற் பெரும்பாலோர் கொடுமையும், இறுமாப்பும் படைத்தவர்கள். அவர்கள் முதலில் அடைந்த வெற்றிகள் அவர்களிடம் இயல்பாயமைந்திருந்த இறுமாப்பை அதிகப்படுத்தின. அதனால் அவர்கள் பொதுவாக ஆசியாக் கண்டத்து மக்களெல்லாம் மிகத் தாழ்ந்தவர்களென்றும், அவர்கள் நியாயமாகப் போர்ச்சுகீசியர்களுக்கு அடங்கி நடக்கவேண்டியவர்கள்தாமென்றும் நினைக்கத் தொடங்கினார்கள். போர்ச்சுகல் தேசத்திலிருந்து இந்தியாவுக்கு மிகச் சில பெண்களே வந்தார்கள். ஆல்புகர்க்கின் காலத்திலிருந்து இந்தியப் பெண்களை மணந்துகொள்ளுமாறு போர்ச்சுகீசியர்கள் தூண்டப்பட்டனர். அவ்வாறு அவர்கள் இந்தியப் பெண்களை மணந்துகொண்டு, போர்ச்சுகல் நாட்டுக்குச் சொந்தமான இடங்களிலேயே நிலையாகக் குடியேறிவிட்டால் அந்த இடங்களின் காப்புக்குத் தேவையான தரைப்படை வீரர்களும், கடற்படை வீரர்களும் அந்தந்த இடங்களிலேயே கிடைத்துவிடுவார்கள். அப்போது போர்ச்சுகல் நாட்டிலிருந்து போர்வீரர்களை வரவழைக்கவேண்டிய அவசியமில்லாது போகும். இந்த முறையைக் கையாண்டதின் பயனாகப் பதினாறும் நூற்றாண்டில் இந்தியாவில் ஒருபுதிய கலப்பு இனம் தோன்றிற்று. அந்த இனத்தினரிடம் போர்ச்சு கீசியருடைய நல்ல குணங்கள் ஒன்றுமே இல்லை. ஆனால் அவர்களுடைய கெட்ட குணங்களெல்லாம் இருந்தன. அந்தக் கலப்பு இனத்தினர் கலப்பற்ற போர்ச்சுகீசியர்களைவிடத் தைரியத்திற் குறைந்தவர்கள்; ஆனால், இறுமாப்பில் குறைந்தவர்களல்லர். மேலும் அவர்கள் பேராசை பிடித்தவர்கள். அரசாங்க அலுவல்களில் அவர்கள் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டு பணம் சம்பாதிக்கத் தொடங்கினார்கள். அதனால் வீரச்செயல்களுக்குப் பதிலாகக் கொடுஞ்செயல்களும், நம்பிக்கைத்துரோகமும் மலிந்தன. பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் அவர்களைப் பார்த்து இந்தியர்கள் அஞ்சினார்கள் என்றாலும், அவர்கள் மீது மிகுந்த அருவருப்பும் கொண்டார்கள். டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும், போர்ச்சுகீசியர்களை எதிர்க்கத் தொடங்கிய

தும் அவர்களுடைய பெருமை குன்றியது. ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் அவர்களுக்கு இந்தியாவில் செல்வாக்கே இல்லாமற் போயிற்று. கலப்பு இனத்தார் செய்த தீமைகளால் தற்கால இந்திய வரலாற்றில் போர்ச்சுகீசியர்களுக்கு மிகவும் கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மையெனினும், அவர்களுடைய ஆரம்ப வெற்றிகளையும், அப்போது அவர்கள் ஆற்றிய தீரச் செயல்களையும் நாம் மறக்கமுடியாது. சரித்திரக்காரன் ஜோஆடிபாரோஸ் என்பவனுடைய "ஏஷியா" என்னும் புத்தகத்திலும் கவிகமோயன் என்பானுடைய "லூஸியட்" என்னும் நூலிலும் அவர்களுடைய பெருமைகள் எழுதப்பட்டுள்ளன.

அதிகாரம்—27

மொகலாய ஆட்சியின் தொடக்கம்

போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவுக்கு வந்த சிறிது காலத்தில் வட இந்தியாவை மொகலாயர்கள் * ஜெயித்துக் கொண்டார்கள். பாபர் தாய்வழியில் மங்கோலிய வீரனான செங்கிஸ்கான் வம்சத்தையும், தந்தை வழியில் துருக்கிய வீரனான தைமூர் வம்சத்தையும் சேர்ந்தவன். ஆகையால் தன்னுடைய பரம்பரையைப்பற்றிப் பாபர் பெருமைகொண்டது நியாயமே. குழந்தையாயிருக்கும்போதே பாபர் துருக்கிஸ்தானத்தில் ஒரு சிறு இராஜ்யத்திற்கு அரசனானான். இளமைப்பருவத்திலேயே அவன் பல உயர்வு தாழ்வுகளைப் பார்த்துவிட்டான். அந்தக்காலத்தில் சில சமயம் அரியணையில் வீற்றிருந்தான்; சிலசமயம் அதை யிழந்து பாலைவனங்களில் சுற்றித் திரிந்தான். ஆனால், தன்னுடைய இருபத்தொன்றும் வயதில் அவன் துருக்கிஸ்தானத்திலிருந்து துரத்தப்பட்டபோது, ஆப்கானிஸ்தானத்திற்குச் சென்று, அதன் கிழக்குப் பகுதியில் முக்கிய நகரமாயிருந்த காபூலைக் கைப்பற்றி அதற்கு அரசனானான். பாபருடைய குணாதிசயங்களைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்கு அவனே தன் வாழ்க்கையைப்பற்றி எழுதிவைத்த குறிப்புக்கள் மிக உதவியாய் இருக்கின்றன. அந்

---

* மங்கோலியர், மொகலாயர் என்ற இரு பெயர்களும் ஒரே மூலத்திலிருந்து தோன்றிய சொற்கள். ஆனால் வழக்கத்தில் மங்கோலியர் என்ற பெயர் செங்கிஸ்கானைப் பின்பற்றிய எல்லோரையும் பொதுவாகக் குறிப்பதற்கும், மொகலாயர் என்ற பெயர் பாபருடைய வம்சத்தினரைக் குறிப்பதற்கும் உபயோகப்படுகின்றன.

தப் புத்தகம் உலகத்தின் பலவேறு மொழிகளிலுமுள்ள சுய சரிதைகளில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. அதைப் படிப்பவர்கள் பாபர் உலகவாழ்க்கையின் பலதுறைகளிலும் மிகுந்த ஆர்வத்தோடும் உணர்ச்சியோடும் ஈடுபட்டு அதனால் அடையக்கூடிய மகிழ்ச்சியெல்லாம் அடைந்தான் என்று எளிதில் உணர்ந்துகொள்ளுவர். இயற்கை யெழிலைச் சுவைப்பதிலும், பூந் தோட்டங்களை அமைத்து அவற்றின் அழகைக் கண்டு களிப்பதி லும், சிறந்த கட்டிடங்களைக் கட்டுவதிலும் பாபருக்கு மிக விருப்பம். கள்ளுண்டு களியாட்டயர்தலிலும், கடும்போர் மேற் சென்று எதிரியைத் தாக்குவதிலும் பாபர் யாருக்கும் பின்வாங் கினவனல்லன். சிக்கலான இராஜ தந்திர முறைகளில் பாபர் கைதேர்ந்தவன். நண்பர்களைக் கேலிசெய்து அவர்களுடன் வேடிக்கையாக விளையாடுவதில் பாபருக்கு மிகுந்த இஷ்டம். ஆனால் எடுத்த கருமத்தில் தளராத ஊக்கமும், அசைக்க முடி யாத மன உறுதியும் உடையவன்.

காபூல் மிகச் சிறிய இராஜ்யமாதலால் பாபர் அங்குத் தன் திறமை முழுவதையும் பயன்படுத்த முடியவில்லை. ஆகையால் ஒரு காலத்தில் தன்னுடைய மூதாதையான தைமூருக்குச் சொந் தமா யிருந்த பஞ்சாபை வென்று தன்னுடைய இராஜ்யத்தைப் பரப்ப முடிவு செய்தான். ஆனால் அந்த எண்ணத்தை நிறை வேற்றுவதறகுப் போதுமான படைப்பலம் பாபரிடத்தில் இல்லை. மேலும் காபூலிலேயே அவனுடைய நிலைமை அவ்வளவாகப் பல மடையவில்லை. ஆகவே தன்னுடைய திட்டத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உருவாக்கிக் கொண்டு வந்ததோடு, பலதரம் இந்தி யாவின் எல்லைப்புறத்தின்மீது படையெடுத்து அத்துறையில் தன் அனுபவத்தை அதிகப்படுத்திக்கொண்டே வந்தான். அதன் பின்னர்ப் பஞ்சாப் இராஜ்யத்தின்மீது படையெடுப்பதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அந்த நிலையில் டில்லி இராஜ்யத்தின் அரசனான இப்ராஹிம் லோடிக்கும் லாகூர் கவர்னருக்கும் ஏற்பட்ட பகைமையின் காரணமாக, லாகூர் கவர் னர் தன்னுடைய அரசனான இப்ராஹிம் லோடிக்கு எதிராகப் பாபரின் துணையை நாடினான். ஆனால், பாபரின் நோக்கத்திற்கு லாகூர் கவர்னரின் எண்ணம் இடையூறாக இருந்தது. ஏனெனில், இருவரும் பஞ்சாபைக் கைப்பற்றிக்கொள்ள விரும்பினர். அத னால் இருவருக்கும் பலநாள் பேச்சு வார்த்தை நடந்தது. சிக்க லான ராஜதந்திர முறைகள் கையாளப்பட்டன. முடிவில் பாபர் இந்தியாவின்மீது படையெடுத்து, பஞ்சாபை எளிதில் கடந்து,

கங்கைச் சமவெளியின் எல்லையை யடைந்து, 1526-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த முதல் பானிப்பட்டு யுத்தத்தில் லோடி வம்சத்தினரின் ஆதிக்கத்தை அழித்து அவர்களுடைய இராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான்.

முதல் பானிப்பட்டு யுத்தம் பலவகைகளில் முக்கியமானது. இப்ராஹிம் லோடியின் சேனையில் சுமார் ஐம்பதினாயிரம் போர் வீரர்களும், ஆயிரம் யானைகளும் இருந்தன. பாபர் படையில் எண்ணாயிரம் வீரர்கள்தாமிருந்தார்கள். ஆனால் அவன் துருக்கியிலிருந்து பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வரவழைத்திருந்தான். இப்ராஹிம் லோடிக்கு அத்தகைய போர்க்கருவிகள் இல்லை. மேலும், பாபர் தன்னுடைய சேனைகளை மிகத் திறமையாக அணிவகுத்து நடத்தினான். அதனால் லோடியின் சேனையின் இருபக்கங்களிலும் முகலாயக் குதிரைப்படையும், முன்புறம் பீரங்கிப் படையும் வளைத்துக்கொண்டன. லோடியின் படைவீரர்களிற் பெருந்தொகையினர் கொல்லப்பட்டனர். அரசனும் போர்க்களத்திலேயே உயிர் துறந்தான். எஞ்சிய வீரர்கள் சின்ன பின்னமாச் சிதறி யோடினர். பாபர் முதலில் டில்லியையும், பின்னர் ஆக்ராவையும் எதிர்ப்பின்றிக் கைப்பற்றிக்கொண்டு தான் ஜெயித்த புதிய இராஜ்யத்தை ஒழுங்குபடுத்தும் வேலையில் ஈடுபட்டான்.

அந்த வேலையில் அவன் ஆப்கானியப் பிரபுக்களின் எதிர்ப்பையும், இராஜபுத்திரத் தலைவர்களுடைய எதிர்ப்பையும் சமாளிக்க வேண்டியாதாயிருந்தது. லோடியரசர்களின் காலத்தில் ஆப்கானியப் பிரபுக்கள் அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் ஏறக்குறைய சுயேச்சையாகவே இருந்தார்கள் என்று நாம் முன்னர்ப் பார்த்தோம். பானிப்பட்டு யுத்தத்திற்குப் பின்னர், அவர்களிற் சிலர் சுயேச்சையுடன் தங்கள் பிரதேசங்களை ஆளத் தொடங்கினார்கள். வேறு சிலர் தங்களுக்குப் பிடித்த ஒருவனை டில்லிச் சிம்மாசனத்தில் ஏற்ற முடிவு செய்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் திரட்டிய படை பாபருடன் சண்டை செய்வதற்கு முன்னரே கலைந்துபோய் விட்டது. அதன்பின் ஆப்கானியப் பிரபுக்களிற் பலர் பாபருடன் சேர்ந்து கொண்டார்கள். மீதியிருந்தவர்களைப் பாபர் ஒவ்வொருவராகத் தோற்கடித்து அவர்களுடைய கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டான். அவர்களிற் பெரும்பான்மையோர் வங்காளத்திற்கு ஓடிவிட்டார்கள். அங்கிருந்த அரசன் அவர்களை வரவேற்று அவர்களுக்கு உயர்ந்த பதவிகளை வழங்கினான்.

ஆனால் கங்கைச் சமவெளி முழுவதிலும் பாபருடைய ஆட்சி ஸ்தாபிக்கப்படு முன்னரே தெற்கிலிருந்த இராஜபுத்திரர்கள் பாபரை எதிர்த்தார்கள்.

துருக்கியர்கள் வட இந்தியாவை ஜெயித்த காலத்தில் பல இராஜபுத்திரக் கூட்டத்தினர் கங்கைச் சமவெளியிலிருந்து நீங்கித் தற்போது இராஜபுதனம் என்று அழைக்கப்படும் பகுதியில் பல சிறு இராஜ்யங்களை நிறுவிக்கொண்டார்கள் என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். அந்த இராஜ்யங்களெல்லாம் சுயேச்சையாகவே இருந்தன. அவைகள் சில சமயங்களில் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டு இருந்தன. ஆனால் இப்ராஹிம் லோடியின் காலத்தில் மீவார் அரசனான சங்காராமா என்பவன் தலைமையில் லோடி வம்சத்தினரின் ஆட்சியை அடியோடு ஒழித்துவிடும் நோக்கத்துடன் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக்கொண்டன. இந்திய ராஜதந்திர முறைகளுக்கேற்ப சங்காராமா லோடி அரசனுக்கு எதிராகப் பாபரின் துணையை நாடி அவன் டில்லியின்மீது படையெடுத்தால் அவனுக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். ஆனால் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. முடிவில் பாபர் டில்லி இராஜ்யத்தைக் கைப்பற்றிய பின் இராஜபுத்திரர்கள் அவனையே எதிர்க்கத் துணிந்து வடக்கில் ஆக்ராவை நோக்கித் தங்கள் படையுடன் சென்றனர். அதைக் கண்ட பாபர் தானே நேரில் ஒரு படையுடன் சென்று ஆக்ராவுக்கு மேற்கில் சுமார் 40-கல் தொலைவிலுள்ள கானுவா என்ற இடத்தில் இராஜபுத்திரர்களை எதிர்த்தான். பாபரின் சேனையைவிட இராஜபுத்திரச் சேனை ஏழு அல்லது எட்டு மடங்கு பெரிதாக இருந்தபோதிலும் அது படுதோல்வி யடைந்தது. இந்தச் சண்டையிலும் பாபரின் பீரங்கிப் படையே அவனுடைய வெற்றிக்கு முக்கிய காரணமாயிருந்தது. இராஜபுத்திரத் தலைவர்களிற் பலர் கொல்லப்பட்டனர், சங்காராமா படுகாயமடைந்தான். இராஜபுத்திரச் சமஷ்டி அழிந்தது. அத்துடன் இராஜபுத்திரர்களால் பாபருக்கு ஏற்பட்ட ஆபத்தும் ஒழிந்தது.

அதன்பின் பாபர் தன்னுடைய இராஜ்யத்தைப் பலப்படுத்துவதிலும், அவ்வப்போது ஏற்பட்ட சில எதிர்ப்புக்களை அடக்குவதிலும் தன் வாழ்நாளில் எஞ்சியிருந்த சிறிது காலத்தைக் கழித்தான். ஆனால் விரைவில் அவன் உடல்நிலை கெட்டுவிட்டது. 1530-ஆம் ஆண்டில் தன்னுடைய நாற்பத்தேழாம் அகவையில் பாபர் இறந்தான். பாபருடைய சாவைப்பற்றி

உருக்கமான கதை ஒன்று வழங்குகிறது. அவனுடைய தலை மகனான ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டுப் பிழைப்பது அரிது என்ற நிலையில் இருந்தான். தன்னுடைய உயிரை எடுத்துக் கொண்டு தன் அருமை மகனுடைய உயிரைக் காப்பாற்றும்படி பாபர் இறைவனை மனமுருகி வேண்டினான். அதன் பயனாகச் சின்னாளில் பாபர் இறந்தான்; ஹுமாயூன் பிழைத்துக்கொண்டான். பாபருக்குப்பின் அரசனான ஹுமாயூன் நல்ல திறமைசாலியாக யிருந்ததோடு கல்வியறிவும் பண்பாடும் நிறைந்தவன். எனினும் இயற்கையிலேயே சோம்பல் நிறைந்தவனாகவும், அபினிக்கடிமையாகவும் இருந்தான். பட்டத்திற்கு வந்ததும் ஹுமாயூன் தன்னுடைய இராஜ்யத்தை ஒழுங்குபடுத்துவதிலும், பரப்புவதிலும் முனைந்தான். 1535-ஆம் ஆண்டில் அவன் மாளவத்திலும் குஜராத்திலும் வெற்றிகரமாகப் போர் நிகழ்த்தினான். ஆனால், அடுத்த ஆண்டில் பீகாரில் ஏற்பட்ட ஓர் ஆபத்தான நிலைமையைச் சமாளிப்பதற்காக ஹுமாயூன் அவசரமாக வடக்கே திரும்பிவர வேண்டியதாயிற்று. அந்த ஆபத்து ஷெர்கான் என்பவனால் ஏற்பட்டது. இந்தியாவில் ஆட்சிசெய்த அரசர்களுள் ஷெர்கான் மிகக் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தை வகிக்கிறான்.

ஷெர்கான், இப்ராஹிம் லோடியின் அதிகாரத்திற்கடங்கி யிருந்த ஓர் ஆப்கானியப் பிரபு. பானிப்பட்டு யுத்தத்திற்குப் பின்னர் அவன் பாபரோடு சேர்ந்துகொண்டான். ஆனால் விரைவில் பாபருக்கு அவன்மீது சந்தேகம் ஏற்பட்டது என்று தெரிந்ததும், ஷெர்கான் இப்ராஹிம் லோடியின் காலத்தில் தன் ஆட்சியிலிருந்த பகுதிக்கு ஓடிவிட்டான். அந்தப் பகுதி பீகாரிலிருந்தது. அங்கு மொகலாயர் ஆட்சி இன்னும் நிலையாக ஸ்தாபிக்கப்படவில்லை, அங்குச்சென்ற ஷெர்கான் தன் திறமையாலும், சூழ்ச்சிகளினாலும், சில சமயங்களில் கடும்போரினாலும், சிறிது சிறிதாகத் தன் அதிகாரத்தைப் பெருக்கி, கங்கை நதிக்கும், ஸோன் நதிக்கும்* இடையிலுள்ள கரடு முரடான பிரதேசத்தில் ஏறக்குறைய சுயேச்சைபெற்ற அரசனாக விளங்கினான். அதன்பின் அவன் வங்காளத்தை ஜெயிக்கக் கருதி அதன் தலைநகரான லக்நௌதியை முற்றுகையிட்டான். ஹுமாயூன் சிறிது காலதாமதஞ் செய்தபின் லக்நௌதிக்குத் தன் படையுடன் சென்றான். அவனை எதிர்த்துப் போர்புரியக்கூடிய நிலையிலில்லாத ஷெர்கான் லக்நௌதியில் கிடைத்த ஏராளமான செல்வத்துடன் சோட்டா நாகபுரியின்

* ஸோன் நதி கங்கையின் தெற்கிலுள்ள அதன் உபநதி.

வழியாகப் பீகாருக்குத் திரும்பிச் சென்றுவிட்டான். லக்நௌ-தியை யடைந்த ஹுமாயூன் மூன்று மாதம் அங்குத்தங்கி இளைப் பாறினுன். அப்போது அவனுடைய படைவீரர்களிற் சிலர் நோய்வாய்ப்பட்டனர்; சிலர் ஓடிப்போய்விட்டனர். அதனுல் அவனுடைய படையின் பலம் குறைந்தது. அங்கிலையில் டில்லியில் ஏற்பட்ட ஒரு கலகத்தை அடக்குவதற்காக ஹுமாயூன் அங்குச் செல்லவேண்டியதாயிற்று. ஆனுல், வழியில் அவனுடைய படைகளை ஷெர்கான் தன்னுடைய திறமையாலும், சூழ்ச்சியாலும், இரண்டு சண்டைகளில் தோற்கடித்து அழித்தான். முடிவில் ஹுமாயூன் கங்கைச் சமவெளியை விட்டு ஓடி, இராஜபுதனம், சிந்து ஆகிய பிரதேசங்களின் உதவியை நாடி, அது கிடைக்காததால் அவனுக்குத் துணையாகச் சென்ற நாற்பது பேருடன் பாரசீகத்திற்குச் சென்று அடைக்கலம் புகுந்தான். அதனுல் பஞ்சாப் முதல் வங்காளம் வரையில் பரவியுள்ள வட இந்தியா முழுமைக்கும் ஷெர்கானே அரசனுனுன். அந்த உயர்ந்த நிலையை அடைந்த ஷெர்கான் தன் பெயரை ஷெர்ஷா என்று மாற்றிக் கொண்டான்.

அரசபதவியை வகிப்பதற்கேற்ற பலவகைப் பயிற்சியையும் ஷெர்ஷா பூரணமாகப் பெற்றிருந்தான். அவன் போரில் நல்ல அனுபவமும் சிறந்த ஆற்றலும் பெற்றவன். அதனேடு தன் படைவீரர்களுக்கு நல்ல பயிற்சியளித்து அவர்களை எப்போதும் சண்டைக்குத் தயாராக வைத்திருந்தான். இராஜதந்திர முறைகளில் கை தேர்ந்தவனுக இருந்ததோடு தன்னுடைய காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவதற்கு எத்தகைய முறைகளையும் கையாளத் தயங்கமாட்டான். ஆட்சி முறையில் அனுபவமும் சலியாத உழைப்பும் நுண்ணறிவும் படைத்தவன். மற்றவர்களை அடக்கியாள விரும்பும் தலைவனிடத்தில் இருக்கவேண்டிய இன்னும் மற்ற குணங்களெல்லாம் அவனிடம் இருந்ததால் அவனுக்கு எதிர்ப்பு ஏற்பட்டாலும் அது அதிவிரைவில் அழிந்துவிடும். இத்தகைய அரசன் தன்னுடைய இராஜ்யத்தை மேலும் மேலும் பெருக்க விரும்புவது இயல்பே. ஆகவே, அவன் விரைவில் குவாலியர் என்ற கேந்திரஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டு, பின் மாளவத்தை ஜெயித்துத் தன் ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தான். மாளவத்திற்குத் தெற்கிலுள்ள பிரதேசங்களையும் வெல்ல வேண்டுமென்று ஷெர்ஷா விரும்பினுன். ஆனுல் தெற்கே செல்லுவதற்குகேற்ற சாலைகளெல்லாம் தன்வசம் வரும்வரையில் ஷெர்ஷா அந்த எண்ணத்தை நிறுத்திவைக்க வேண்டியதாயிருந்

தது. மாளவத்தை வென்றபின்னர் ரன்தம்பர், ஆஜ்மீர் ஆகிய இரண்டு கேந்திரஸ்தானங்களை ஷெர்ஷா கைப்பற்றிக்கொண்டான். ஜான்ஸிக்குக் கிழக்கில் சுமார் 120-கல் தொலைவிலிருந்த காலிஞ்சர் என்ற கேந்திர ஸ்தானம் மாத்திரம் இன்னும் ஷெர்ஷாவின் கைக்கு வராமலிருந்தது. அது அவனுக்கு விரோதமாக இருந்த ஓர் இந்துத்தலைவன் கையிலிருந்தது. அதை ஜெயித்துக் கொள்ளும் நோக்கத்துடன் ஷெர்ஷா அதை 1545-ஆம் ஆண்டில் முற்றுகையிட்டான். அங்கு எற்பட்ட ஒரு வெடி விபத்தால் அவன் இறந்தான். அவன் சரியாக ஐந்தாண்டு கூட அரசனாக இருக்கவில்லை.

ஷெர்ஷாவால் நிறுவப்பட்ட பரந்த இராஜ்யம் வெகுநாள் நிலைத்து நிற்கவில்லை. ஆனால் அவனுடைய ஆட்சிமுறையின் உயர்வால் இந்திய வரலாற்றில் அவனுக்கு ஒரு சிறந்த இடம் கிடைத்துவிட்டது. பாபரும் ஹுமாயூனும் ஆட்சி முறையில் எந்தவிதமான சீர்திருத்தமும் செய்யவில்லை. லோடிகள் காலத்திலிருந்த ஆட்கானியப் பிரபுக்களுக்குப் பதிலாகத் தங்களிடம் விசுவாசமாயிருந்த ஆட்களை நியமித்ததைத் தவிர அவர்கள் ஆட்சிமுறையில் வேறெந்த மாறுதலையும் செய்யவில்லை. ஆனால் ஷெர்ஷா தன்னுடைய நேரடியான ஆணைக்கடங்கிய பலதரப்பட்ட அரசாங்க உத்தியோகஸ்தர்களை நியமித்தான். கிராமங்களைத் தொகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு தொகுதிக்கும் வேண்டிய அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். அந்தத் தொகுதிகளுக்கு "பர்காணங்கள்" என்று பெயர். பல பர்காணங்கள் சேர்ந்தது ஒரு ஜில்லா. ஜில்லாவின் ஆட்சியைக் கவனிப்பதற்குத் தேவையான உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் நியமிக்கப்பட்டனர். குடியானவர்கள் செலுத்த வேண்டிய வரியைச் சரியானபடி நிர்ணயிப்பதும், வசூலிப்பதும் ஜில்லா அதிகாரிகளின் முக்கியமான கடமைகளில் ஒன்று. சாதாரணமாக விளைவில் மூன்றில் ஒரு பங்கைக் குடியானவர்கள் அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்த வேண்டுமென்று ஷெர்ஷா உத்தரவிட்டான். ஒவ்வொரு குடியானவனும் செலுத்த வேண்டிய வரித்தொகையை நிர்ணயிப்பதற்குத் தானியங்களை நிறுத்துப் பார்த்துப் பங்குபோடும் பழைய முறைக்குப் பதிலாகச் சிறந்த புதிய முறைகளை ஷெர்ஷா கையாண்டான். நிலவரி வசூலுக்காக ஷெர்ஷா புகுத்திய புதிய முறைகள் எவ்வளவு தூரம் பயனளித்தன என்பது நமக்குத் தெரியாது. ஆனால், அந்த முறைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு தான் அக்பர்

காலத்தில் நிலவரிச் சீர்திருத்தம் செய்யப்பட்டது என்பதை நாம் மறக்க முடியாது.

இராஜ்யத்தின் காப்புக்காக ஆங்காங்கு இருந்த முக்கியக் கோட்டைகளில் சிறந்த திறமை வாய்ந்த சேனுதிபதிகளின் தலைமையில் வேண்டிய அளவு படைகள் வைக்கப்பட்டிருந்தன. கிராமங்களில் கொலை களவு முதலிய தீத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் கிராமத் தலைவர்களுக்குத் தெரியாதவர்களாக இருக்க முடியாது என்ற கருத்தை யொட்டி, அத்தகைய குற்றங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்ளுவது கிராமத்தலைவர்களது தனிப்பட்ட பொறுப்பு என்று ஷெர்ஷா உத்தரவிட்டான். இராஜ்யத்திலிருந்த முக்கியமான சாலைகளில் அரண் செய்யப்பட்ட விடுதிகள் ஆங்காங்கு இருந்ததால் அவற்றில் வழிபோக்கர்களும், வியாபாரிகளும் அச்சமின்றித் தங்குவதற்குச் சௌகரியமாயிருந்தது. சாலையோரங்களில் நிழல்தரும் மரங்கள் பயிராக்கப்பட்டன. குடி தண்ணீர் வசதியும் ஆங்காங்கு செய்யப்பட்டிருந்தது. லோடியரசர்கள் காலத்தில் குடிகளைக் காப்பாற்றுவதும், அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுப்பதும் அந்தந்தப் பிரதேசத்தில் ஆட்சி செய்த பிரபுக்களின் வேலையாயிருந்தது. ஆனல் ஷெர்ஷாவின் ஆட்சிக்காலத்தில் அந்தக் காரியங்களைச் செய்வது அரசனுடைய நேரடியான ஆணைக்கடங்கிய பலதரப்பட்ட உத்தியோகஸ்தர்களின் கடமையாக மாறிற்று. இந்தப் புதிய முறையால் ஆங்காங்-கிருந்த சிறிய உத்தியோகஸ்தர்கள் குடிகளைத் துன்புறுத்தியிருப்பார்களென்று சிலர் நினைப்பது இயற்கையே. ஆனல் அரசன் திறமையுள்ளவனுக இருந்தால் அத்தகைய குறைகள் நேராத வண்ணம் பார்த்துக்கொள்ள முடியுமல்லவா? ஷெர்ஷா மிகவும் திறமை வாய்ந்தவன். மேலும், அவன் ஓயாத உழைப்பாளி. அவன் தன்னுடைய குடிகளின் முறையீடுகளை யெல்லாம் நேரடியாகக் கேட்டு, குற்றம் செய்தவர்களுக்குக் கடுமையான தண்டனை யளித்துச் சரியான முறையில் நீதி வழங்கினன் என்று அந்தக் கால வரலாற்றுக் குறிப்புக்களின் மூலம் அறிகிறோம். ஆகவே, உத்தியோகஸ்தர்கள் ஷெர்ஷாவின் சீற்றத்திற்கஞ்சிக் குடிகளைத் துன்புறுத்தாமல் இருந்திருப்பார்கள் என்றும், அவனுடைய ஆட்சியில் குடிகள் நன்மையடைந்திருப்பார்களென்றும் பொதுவாகக் கூறலாம். ஆனல் திறமையற்ற அரசர்கள் காலத்தில் இத்தகைய ஆட்சிமுறையால் குடிகளுக்குத் துன்பம் ஏற்படக்கூடும் என்பதை மறுக்கமுடியாது.

ஷெர்ஷாவுக்குப்பின் பட்டத்திற்குவந்த அவனுடைய சந்ததியார்கள் திறமையற்றவர்கள் தாம். அவர்களைப்பற்றி அதிகம் கூறவேண்டிய அவசியம் இல்லை. ஷெர்ஷாவுக்குப் பின் அவனுடைய பரந்த இராஜ்யம் பத்து வருஷங்கள்தான் நிலைத்திருந்தது. அதற்குப் பிறகு அதன் மேற்குப்பகுதியை ஹுமாயூன் மறுபடியும் கைப்பற்றிக்கொண்டான். வங்காளம் சுயேச்சையடைந்து ஓர் ஆப்கானிய வம்சத்தின் ஆட்சிக்குட் சென்றது. ஹுமாயூன் பாரசீகத்தில் அடைக்கலம் புகுந்தான் என்று முன்னர்க் கூறினேம். பாரசீக அரசன் ஹுமாயூனுக்கு ஒரு குதிரைப் படையை உதவினன். அதைக்கொண்டு ஹுமாயூன் காபூலைக் கைப்பற்றி இந்தியாவின்மீது படையெடுப்பதற்குத் தக்க சமயத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். சிம்மாசனத்திற்காக ஏற்பட்ட ஒரு போட்டியைப் பயன்படுத்திக்கொண்டு ஹுமாயூன் 1555-ஆம் ஆண்டில் இந்தியாவின்மீது படையெடுத்து, பஞ்சாபைத் தாண்டி, டில்லிக்கு வந்து அரச பதவிக்காக ஏற்பட்ட போட்டியில் அப்போது வெற்றி பெற்றிருந்தவனைத் தோற்கடித்து, பதினைந்தாண்டுகளுக்கு முன்னர் இழந்த தன் சிம்மாசனத்தில் மீண்டும் அமர்ந்தான். ஆனல் சில மாதங்களுக்குப் பின்னர்க் கீழே விழுந்ததின் பயனுக ஏற்பட்ட நோயால் ஹுமாயூன் இறந்து போகவே, அவனுடைய மூத்த மகனுன பதின்மூன்று வயதுடைய அக்பர் அவனுக்கு இந்தியாவில் சொந்தமாயிருந்த இராஜ்யத்திற்கு அரசனுனன். காபூலில் ஹுமாயூனின் இளைய மகனுன முகமது ஹக்கிம் என்பவன் அரசனுனன்.

அதிகாரம்—28

அக்பர் ஆட்சி

அக்பருடைய வரலாற்றைக் கூறப்புகுமுன் மொகலாய வம்சத்தைப்பற்றிப் பொதுவாகச் சில சொற்கள் முன்னுரையாகக் கூறுவது பொருந்தும். அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் ஆகிய நான்கு அரசர்கள் காலத்தில்தான் மொகலாய சாம்ராஜ்யம் மிக உன்னதமான நிலையிலிருந்தது. அக்பர் 1556-முதல் 1605-வரை ஆட்சி செய்தான். ஏறக்குறைய அதே காலத்தில் எலிஸபெத் இங்கிலாந்தில் அரசியாக இருந்தாள். ஜஹாங்கீர் 1605—முதல் 1627-வரை ஆட்சிசெய்தான். ஏறக்குறைய அதே காலத்தில் இங்கிலாந்தில் முதலாம் ஜேம்ஸ்

என்ற மன்னன் அரசனுயிருந்தான். ஷாஜஹான் 1627-முதல் 1658-வரை அரசனுயிருந்தான். அந்தக் காலத்தில் இங்கிலாந் தில் முதலில் முதலாம் சார்லஸ் என்ற மன்னனும், பின்னர் கிராம்வெல்லும் இங்கிலாந்தில் அரசாட்சி செய்து வந்தனர். அவுரங்கஸீப் 1658-முதல் 1707-வரை ஆட்சி செய்தான். அந்தச் சமயத்தில் இங்கிலாந்தில் இரண்டாம் சார்லஸ், இரண்டாம் ஜேம்ஸ், வில்லியம், ஆன் என்றவர்கள் ஒருவர்பின் ஒருவராக ஆட்சிசெய்து வந்தனர். அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் ஆகிய மூவரும் தங்களிஷ்டம்போல் எதேச்சாதிகாரம் செலுத்திஞர்கள். ஆனுல் அவுரங்கசீப் இஸ்லாமிய மதச்சட்டங்களின்படிதான் இராஜ்யத்தை ஆளவேண்டுமென்று விரும்பினுன். ஆனுல் அதன் விளைவாக மொகலாய சாம்ராஜ்யமே அழிந்தது.

ஒவ்வோர் அரசனும் தனக்குப்பின் பட்டத்திற்கு வரவேண் டியவனைத் தானே நியமிக்கும் வழக்கம் இருந்தது; அதனுல் பல குழப்பங்களும் சச்சரவுகளும் ஏற்பட்டன. அவற்றையெல் லாம் இங்கு விரிவாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அரசனுடைய பிரியத்தைச் சம்பாதித்துக்கொள்வதற்கும், அரச னுடைய பிரியத்துக்குப் பாத்திரமாயிருந்தவர்கள்மீது அரச னுக்கு வெறுப்பு ஏற்படுமாறு செய்வதற்கும் கணக்கற்ற சூழ்ச்சி கள் நடந்துகொண்டே இருந்தன. அந்தச் சூழ்ச்சிகளில் அந்தப் புரத்து மாதர்களும் கலந்து கொண்டார்கள். இத்தகைய சூழ்ச்சி களின் காரணமாக அரசனுடைய தனிப்பட்ட வாழ்க்கை எவ்வா றிருந்திருக்குமென்று நாம் ஒருவாறு யூகிக்கலாமே தவிர நிச்சய மாக ஒன்றும் கூறமுடியாது. ஆனுல் பொதுவாழ்வில் இந்தச் சூழ்ச்சிகளின் பயனுக அவ்வப்போது அரசர்களுக்கு எதிராகக் கலகங்கள் ஏற்பட்டதோடு பல கொடுமையான கொலைகளும் நிகழ்ந்தன, ஜஹாங்கீர் அக்பருக்கு எதிராகக் கலகம் செய்தான். ஷாஜஹான் ஜஹாங்கீருக்கு எதிராகக் கலகம் செய்தான். அவு-ரங்கசீப் ஷாஜஹானைச் சிறையிலடைத்து விட்டுச் சிம்மாசனத் தைக் கைப்பற்றிக் கொண்டான். அவுரங்சீப்புக்கு எதிராக அவனுடைய மகன் அக்பர் என்ற இளவரசன் கலகம் செய்தான். அபுல்பாசல் என்பவன் அக்பருக்கு உற்ற நண்பனுகவும் நம்பிக் கைக்குரிய உத்தியோகஸ்தனுகவும் இருந்தான். அக்பருக்குப் பின் தான் சிம்மாசனமேறுவதை அபுல்பாசல் விரும்பவில்லை என்று ஜஹாங்கீர் ஐயமுற்றுன். அதனுல், ஜஹாங்கீர் அபுல்பாச லுக்கு விரோதமாக ஒரு சதி செய்து அவனைக் கொலைசெய்து விட்டான். மேலும் அக்பருக்கே விஷம் வைத்துவிட்டான்

என்றும் ஜஹாங்கீரின்மீது பெருத்த சந்தேகம் இருந்தது. தன்னுடைய ஆதரவில் விடப்பட்டிருந்த தன் தம்பியாகிய குஸ்ரு என்ற இளவரசனைக் கொல்வதற்கு ஜஹாங்கீர்தான் உத்தர விட்டான் என்று நிச்சயமாகத் தெரிகிறது. அதுவுமன்றி அவன் பட்டத்திற்கு வந்ததும் அரசபதவிக்காக யார் யார் போட்டியிடக் கூடும் என்று நினைத்தானோ அவர்கள் அனைவரையும் கொலை செய்தான். அவுரங்கசீப் தன் தந்தையைச் சிறையிலிட்டுச் சிம்மாசனத்தைக் கைப்பற்றியவுடன் தன் சகோதரர்கள் இருவரைக் கொலைசெய்தான். மூன்றாவது சகோதரனுக்கும் அதே கதிதான் நேர்ந்திருக்கும். ஆனால் அவன் தப்பியோடிவிட்டான். அப்படியோடிய அவன் பர்மாவை யடைந்து அங்குப் பல துன்பங்களுக்குக்கிலக்காகி மாண்டான்.

இத்தகைய சம்பவங்கள் மொகலாய அரசர்களது காலத்தில் சர்வசாதாரணமாக நிகழ்ந்தன. அவைகள் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். ஆனால் அரசபதவிக்குப் போட்டியிடக்கூடிய பல இளவரசர்கள் அளவுக்கு மீறிய மதுபானத்தால் மாண்டு போனார்கள். பொதுவாக மொகலாயர்களெல்லோரும் மது பானத்தில் மிகுந்த விருப்பம் உடையவர்கள். துருக்கியர்கள் சாதாதாரணமாகப் பாரசீகத்திலிருந்து தருவிக்கப்பட்ட திராட்சா ரசத்தை அருந்தினார்கள். அது அவ்வளவாக மயக்கந்தரக்கூடியதன்று. ஆனால், மொகலாயர்கள் மிக மயக்கந்தரக்கூடிய சாராயத்தைக் குடித்தார்கள். மயக்கந்தரக்கூடிய மருந்துச் சரக்குகளையும் சாராயத்திற் கலந்து குடித்தார்களாதலால், அவர்கள் விரைவில் உடல்வலியிழந்ததோடு, மனவலியும் இழந்து மது பானத்திற்கு அடிமையாகிக் கடைசியில் மாண்டுபோனார்கள். நல்ல திறமையும் பண்பாடும் உடைய இளவரசர்கள்கூட இந்தக் கதியை அடைந்தார்கள் என்று அந்தக்கால வரலாற்றுக் குறிப்புகளால் அறிகிறோம்.

அரண்மனையிலிருந்த பெண்கள் கடுமையான பர்தாமுறையில் வாழ்ந்தார்கள், எனினும் அவர்கள் நல்ல பண்பாடு உடையவர்களாக இருந்தார்களென்று பொதுவாகக் கூறலாம். மேலும் அரசபதவிக்காக நடந்த சூழ்ச்சிகளில் அவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு கலந்து கொண்டார்கள். அவர்களிற் சிலர் நல்ல திறமையும் மனவலியும் படைத்தவர்களாக இருந்ததால் அவர்கள் அரசாங்கத்தின் பொதுவிஷயங்களிலும் கலந்துகொண்டார்கள் என்ற செய்தியை அந்தக்காலத்து வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் அறிகிறோம். கடுமையான பர்தாமுறை இருந்தபோதிலும்

அரண்மனைப் பெண்கள் அரண்மனைக்கு வெளியே நடந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார்கள். உதாரணமாக ஜஹாங்கிரின் மனைவி புலிவேட்டையில் நல்ல திறமையும் பயிற்சியும் பெற்றிருந்தாள். ஐரோப்பியப் பெண்கள் அணிந்த நவநாகரிகமான கையுறைகளும், குதிரைச் சவாரிக்கேற்ற தலையணிகளும், மொகலாய ஸம்ஸ்தானத்தில் விரும்பி யேற்றுக் கொள்ளக்கூடிய பரிசுகள் என்று அந்தக் காலத்து ஆங்கில வியாபாரிகள் அறிந்திருந்தார்கள். ஆனால் பர்தா மறைவில் உண்மையில் என்ன நடந்தது என்பதைப்பற்றி அந்தக்காலத்து வரலாற்றுக் குறிப்புகள் ஒன்றும் கூறவில்லை. அதனால் அரசர்களும் இளவரசர்களும் எவ்வளவு தூரம் அந்தப்புரப் பெண்களின் விருப்பு வெறுப்புக்களாலும், சூழ்ச்சிகளாலும் பாதிக்கப்பட்டார்களென்று நாம் நிச்சயமாகக் கூறமுடியாது. எனினும் அரசர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மாத்திரமின்றி அரசாங்கப் பொது விஷயங்களிலும் அந்தப்புர மாதர்களின் செல்வாக்கு இருந்தது என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம். ஆனால் அந்தச் செல்வாக்கினால் அரசாங்க விஷயங்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டன என்பது உறுதியாகத் தெரியாது.

பரம்பரையாக வந்த பிரபுக்குடும்பங்கள் மொகலாயர் காலத்தில் இல்லையென்றே கூறலாம். உயர்பதவி வகித்த ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தால் உதவிநிதியோ அல்லது வரிவசூல் உரிமையோ அளிக்கப்பட்டிருந்தது. அரசன் நினைத்தால் அந்த உரிமையை ரத்து செய்துவிடலாம். மேலும் பிரபுக்கள் சேமித்துவைத்த சொந்தச் சொத்துக்களெல்லாம் அவர்கள் இறந்தவுடன் அரசனுக்குச் சொந்தமாகிவிடும். அதனால் பிரபுக்களுக்குப் பிதுரார்ஜிதமான சொத்துக்கள் இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலைமுறையிலும் புதிதாகச் சொத்துக்களையும் பதவிகளையும் சம்பாதித்துக் கொள்ளவேண்டியதாயிருந்தது. ஆனால், நடைமுறையில் பல பிரபுக் குடும்பங்கள் பரம்பரையாக வந்தன. ஒரு பிரபு இறந்தபின் அவன் சொத்துக்களில் ஒரு பகுதி சாதாரணமாக அந்தப் பிரபுவின் குடும்பத்திற்கே வழங்கப்பட்டது. மேலும் அவனுடைய பிள்ளைகள் அரசனது பிரியத்தைச் சம்பாதித்துக்கொண்டால் வரிவசூல் உரிமைபெற்று அதனால் பொருள் சேர்த்துக்கொள்வது நிச்சயம். ஆனால், எந்த விஷயத்திலும் முன்னேற்றமும் உயர்வும் அடைவதற்கு அரசனுடைய தயவு இன்றியமையாதது. அரசனுடைய தயவு இல்லாவிட்டால் யாரும் எந்தவித உயர்வையும் அடையமுடியாது.

ஆனல் இந்துத் தலைவர்கள் விஷயத்தில் இந்தக் கூற்றுப் பொருந்தாது. அவர்கள் பரம்பரைப் பிரபுக்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள், ஒரு பிரபு இறந்ததும் அவனுடைய வாரிசுக்கு அந்தப் பதவியும் அதற்குரிய சொத்துக்களும் சேர்ந்துவிடும். அதற்கும் அரசனுடைய அனுமதி தேவையென்பது உண்மை தான். ஆனல் சாதாரணமாக எவர்க்கும் அரசனுடைய அனுமதி கிடைத்தது.

இனி, அக்பருடைய ஆட்சியைப்பற்றிப் படிப்போம். ஹுமாயூன் இறந்தபோது அக்பருக்கு வயது பதின்மூன்றுதான் என்று முன்னர்க் கூறினோம். அப்போது அக்பர் பஞ்சாபின் ஒரு பகுதிக்கு அரசனானன். ஆனல் அந்தச் சிறு பகுதியிற் கூட அந்தச் சமயத்தில் மொகலாய ஆதிக்கம் சரியானபடி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது என்று கூறமுடியாது. அக்பர் இறக்கும்போதோ வெனில் வடஇந்தியா முழுவதிலும் மொகலாய ஆட்சி நிலையாக நிறுவப்பட்டிருந்தது. மேலும் தட்சிணத்தையும் மொகலாய ஆட்சிக்குள் கொண்டுவரும் முயற்சியில் அக்பர் இறப்பதற்குள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. மொகலாய ஆதிக்கம் இவ்வாறு சிறந்த உயர்வை அடைவற்கு அக்பருடைய சொந்த முயற்சியே காரணம். அக்பருடைய பத்தொன்பதாம் ஆண்டுவரையில் பைராம்கான் ரீஜண்டாக இருந்தான். அதன் பின் அக்பரே அரசாங்க அதிகாரம் முழுவதையும் வகித்தான். அரசாங்கத் திட்டங்களை வகுப்பது, அவற்றை நிறைவேற்றுவ தற்கேற்ற உத்தியோகஸ்தர்களை நியமிப்பது, அரசாங்க அலு வல்கள் அனைத்தையும் கவனிப்பது ஆகிய எல்லா வேலைகளையும் அக்பரே செய்துவந்தான். அக்பருடைய அரசாட்சியைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்கு நமக்குப் பலவகைப்பட்ட ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றுள் "அக்பர் நாமா" என்ற வரலாற்றுக் குறிப்பு ஒன்ருகும். இது அரசாங்கத்தாலேயே தயாரிக்கப்பட்ட வரலாற்றுக் குறிப்பு. அதைத் தொகுத்தவன் அபுல்பாசல் என்பவன். அபுல்பாசல் அக்பருக்கு உற்றதுணைவனுக இருந்ததோடு அக்பரைப்பற்றி மிக உயர்ந்த அபிப்பிராயம் உடையவன். ஆகவே, அக்பர் நாமா அக்பரின் புகழை மிக அதிகமாகப் பேசுகிறது. அதில் அக்பரை அபுல்பாசல் முகஸ்துதி செய்கிருன் என்றுகூடச் சில மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கருதுகிருர்கள். அக்பர் நாமாவைத் தவிர வேறுசில வரலாற்றுக் குறிப்புக்களுமிருக்கின்றன. அவற்றில் ஒன்று அக்பருடைய மதக் கோட்பாடுகளை வெறுத்த ஒரு முஸ்லிமால் எழுதப்பட்டது. மேலும் அவன்

அக்பர் ஸம்ஸ்தானத்தில் உயர்பதவியை விரும்பி அது கிடைக்காத தால் ஏமாற்றமடைந்தவன். ஆகவே அவன் எழுதிய குறிப்புகள் அக்பருக்கு விரோதமாக இருப்பது வியப்பன்று, இவற்றைத் தவிர ஐரோப்பியர்கள் எழுதிவைத்த குறிப்புக்களும் இருக்கின் றன. அவற்றில் கோவாவிலிருந்த ஏசு சங்கப்பாதிரிகள் ஐரோப் பாவுக்கனுப்பிய அறிக்கைகள் மிக முக்கியமானவை. அவர்கள் அக்பருடைய ஸம்ஸதானத்தில் நெடுநாள் தங்கியிருந்தார்களாத லால் அக்பருடைய குணுதிசயங்களைப்பற்றி அறிந்துகொள்ளுவ தற்கு அவர்களுக்கு நல்ல வாய்ப்பு இருந்தது.

அக்பர் மிகுந்த உடல்வலிமை பெற்றிருந்ததோடு, அயர் வின்றி வேலைசெய்வதில் வியக்கத்தக்க ஆற்றல் பெற்றிருந்தான். மற்ற மொகலாய அரசர்களைப்போலவே அவனும் சில சமயங்க ளில் மிதமின்றி மதுபானம் செய்தான். ஆனல் மற்றவர்களைப் போல் அவன் மதுபானத்திற்கோ, மற்ற கெட்ட பழக்கங்க ளுக்கோ அடிமையாய்விடவில்லை. உடலுறுதிதரும் விளையாட் டுக்களில் அக்பருக்கு மிகுந்த விருப்பம். குதிரைச்சவாரிசெய்தல், வேட்டையாடுதல், வேகமாக நடத்தல் முதலிய செயல்களால் அவன் உடல் நிலையைக் காத்துக்கொண்டான். செயலில் இறங்கி விட்டால் விரைவாகவும், அச்சமின்றியும் எந்தவேலையையும் செய்வான்; ஆனல் எந்தவித ஆபத்தையும் பொருட்படுத்த மாட்டான். அரசாங்கத் திட்டங்களை வகுப்பதில் நிதானமாக ஆழ்ந்தயோசனை செய்து, அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தக்க காலத்தை எதிர்நோக்கியிருப்பான்.

இளமையில் கல்வியைவிட விளையாட்டுக்களே அக்பர் கவ னத்தை அதிகம் கவர்ந்தன. பெரியவனுன பிறகும் அக்பர் படிப் பதிலும், எழுதுவதிலும் ஒருசிறிதும் ஈடுபடவில்லை. அதற்கு அவசியமும் இல்லை என்று கூறலாம். ஏனெனில் வேண்டும்போது அவனுக்குச் சிறந்த நூல்களைப் படித்துக்காட்டுவதற்கு நல்ல படிப்பாளிகள் காத்துக்கொண்டிருந்தார்கள். அரசாங்க அலுவல் களையெல்லாம் அவன் வாய்மொழியாகவே கேட்டுத் தன் உத்தர வுகளைத் தன் காரியதரிசிக்குச் சொல்லுவான். காரியதரிசி அவற்றை எழுதிக்கொள்வான். தெளிந்த அறிவும், அபாரமான ஞாபகசக்தியும், சிக்கலான விஷயங்களை எளிதில் புரிந்துகொண்டு சரியான முடிவுக்கு விரைவில் வரக்கூடிய ஆற்றலும் அக்பருக்கு இயற்கையிலேயே அமைந்திருந்தன.

அக்பருடைய ஆட்சி வரலாற்றைப் படிக்கும் நமக்கு அவ னுடைய காரியங்களைப்பற்றி அதிகம் தெரிகிறதே தவிர அவற்

றின் காரணங்களைப்பற்றி அவ்வளவாகத் தெரியவில்லை. எந்தக் காரியத்திலும் அக்பருடைய நோக்கம் இன்னதென்று எளிதில் அறிந்துகொள்ள முடியாது. நமக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களில் அக்பருடைய செயல்களுக்கு அடிப்படையாக இருந்த நோக்கங்கள் சில சமயங்களில் கூறப்படுகின்றன. ஆனால் அவை தாம் உண்மையான நோக்கங்கள் என்றும், அவற்றைத் தவிர வேறு நோக்கங்கள் அக்பருக்கு இருந்திருக்கமுடியாது. என்றும் நாம் உறுதியாகக் கூற முடியாது. அவனுடைய ஸம்ஸ்தானத்திலிருந்த கிறிஸ்தவப் பாதிரிகள் மக்களுடைய குணதிசயங்களை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாயிருந்தபோதிலும் அக்பர்செய்த பல காரியங்களுக்கு உண்மையான நோக்கங்கள் யாவை என்று அறிந்து கொள்ள முடியாமல் திண்டாடினார்கள். அதிகாரவிருப்பமும், விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற பேராவலுந் தான் அக்பருடைய செயல்களுக்கெல்லாம் மிக முக்கியமான காரணங்கள் என்று நாம் கூறலாம். தன்னுடைய ராஜ்யத்தைப் பெருக்குவதில் அக்பர் காட்டிய அளவற்ற உற்சாகம் அவனுடைய அதிகார விருப்பத்தைத் தெளிவாக விளக்குகிறது. அக்பர் பல விஷயங்களைத் தெரிந்துகொள்வதில் அதிக ஆர்வம் உடையவன். கலை, விளையாட்டு, மதநூலறிவு, இயற்கைச் சாஸ்திரம், உலோகங்களின் தன்மைகள் முதலிய பலவேறு துறைகளிலும் அக்பருடைய கவனம் சென்றது. எந்தவிஷயத்தில் ஐயம் ஏற்பட்டாலும் அதைத் தெளிவுபடுத்துவதற்கேற்ற ஆராய்ச்சியில் அக்பர் உடனே இறங்கிவிடுவான்.

அக்பருடைய மதநம்பிக்கைகளைப்பற்றி ஒருசிறிது கூறுவது அவசியம். தன்னைமறந்த பரவசநிலையில் இறைவனோடு ஒன்றிப் பேரானந்தம் அனுபவிக்க முடியும் என்ற கொள்கையில் அக்பருக்கு மிகுந்த நம்பிக்கையிருந்தது. இஸ்லாம் மதக்கொள்கைகளைப் பின்பற்றுவதே முதலில் அக்பருக்கு ஆன்ம திருப்தியளிப்பதற்குப் போதுமானதாயிருந்தது. ஆனால், நாளடைவில் அந்நிலை மாறிவிட்டது. மதவிஷயங்களில் உண்மைகாணும் நோக்கத்துடன் அக்பர் தன்னுடைய முப்பத்துமூன்றும் வயதில் மத ஆராய்ச்சியில் இறங்கினான். அதற்காக, முதலில் இஸ்லாம் மதத்தின் பலவேறு பிரிவுகளைச் சேர்ந்த அறிஞர்களைத் தன் சபைக்கு வரவழைத்து அவர்களுடைய சொற்பொழிவுகளையும், தர்க்கங்களையும் கேட்டான். பின்னர் இந்துக்கள், சமணர்கள், பார்சிகள் ஆகியவர்களையும் வரவழைத்தான். அதன்பின்

1580-ஆம் ஆண்டில் கோவாவிலிருந்து கிறிஸ்துவப் பாதிரிகளை வரவழைத்தான். அவர்களும் அந்தத் தர்க்கங்களில் உற்சாகத்துடன் கலந்துகொண்டார்கள். அக்பருடைய ஆர்வத்தைக்கண்ட பாதிரிகள் அவன் கிறிஸ்தவமதத்தில் சேர்ந்துவிடுவான் என்று எண்ணி மகிழ்ந்தார்கள். ஆனால் தன்னுடைய பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாத எதையும் அக்பர் ஒத்துக்கொள்ளமாட்டான் என்றும், மதவிஷயங்களில் அக்பர்காட்டிய ஆர்வம் தன்னுடைய அறிவுப்பசியைத் தணித்துக்கொள்ளுவதற்காகத்தான் என்றும் நாளடைவில் உணர்ந்த பாதிரிகள் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார்கள். அதற்குள்ளாக அக்பர் இஸ்லாம் மதத்திலிருந்து விலகிக்கொண்டான் என்றாலும், அவன் கிறிஸ்தவமதத்தை ஏற்றுக்கொள்ளமாட்டான் என்பதை அறிந்த பாதிரிகள் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் அக்பர் (1582-ல்) "தீன் இலாஹி" என்ற ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தான். கடவுள் ஒருவர் உண்டு, அவரைப்பற்றிய உண்மையை அவரே மக்களுக்கு உணர்த்துகிறார் என்ற கொள்கைதான் தீன் இலாஹியின் அடிப்படைத்தத்துவம். அந்த மதத்திற்கு அக்பரே தலைவன். அதைப் பற்றிச் சரியானபடி விளக்கக்கூடிய தகுதியுள்ளவர்கள் தன்னைத் தவிர வேறுயாரும் இல்லையென்று அக்பர் கூறினான். அதைப் பார்த்த முஸ்லீம்கள் அக்பர் தன்னையே கடவுள் என்று கூறிக் கொண்டதாக நினைத்தார்கள். இவ்வாறு ஒரு புதிய மதத்தை நிறுவுவதில் அக்பருடைய நோக்கங்கள் யாவை என்று சரியாகத் தெரியவில்லை. மத விஷயங்களில் ஆன்ம திருப்தியை நாடிய அக்பர் அந்தப் புதிய மதத்தின்மூலம் அந்தத் திருப்தியை அடைய முயன்றான் என்பது உறுதியாகத் தெரிகிறது. அதே சமயத்தில் தன்னுடைய பரந்த சாம்ராஜ்யத்தில் இருந்த பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களுக்குப் பொதுவான ஒரு மதத்தை ஸ்தாபித்து அதன்மூலம் அவர்களை ஒற்றுமைப்படுத்துவதற்கும் அவன் முயன்றிருக்கலாம். அது உண்மையானால் அக்பருடைய எண்ணம் நிறைவேறவில்லை என்று உடனே கூறிவிடலாம். அரசசபையிலிருந்த சிலரைத்தவிர மற்றமக்கள் அந்த மதத்தை ஏற்றுக்கொள்ளவேயில்லை. மேலும் அக்பர் இறந்தவுடன் அந்த மதமும் இறந்துபோயிற்று. கடைசிவரையில் அக்பருக்கே அந்த மதத்தில் முழுநம்பிக்கை இருந்ததா என்பதுகூட ஐயத்திற்கிடமான விஷயம். தன்னுடைய ஆயுட்காலத்தின் கடைசிப் பத்து ஆண்டுகளில் அக்பர் கிறிஸ்தவப் பாதிரிகளுடன் நெருங்

கிய தொடர்பு கொண்டிருந்தான். எனினும், அவர்கள் அக்பருடைய உண்மையான நம்பிக்கைகளைப்பற்றி உறுதியாக அறிந்து கொள்ள முடியவேயில்லை. இறக்குந்தறுவாயில் அக்பர் எந்த விதமான கொள்கைகளையுடையவனாயிருந்தான் என்பதைப்பற்றி ஒன்றுக்கொன்று முரண்பட்ட செய்திகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், அக்பருக்குக் கலப்பற்ற இஸ்லாம் மதத்தில் நம்பிக்கையில்லை என்பதைமாத்திரம் உறுதியாகக் கூறலாம்.

இனி அக்பர் தன்னுடைய இராஜ்யத்தை எவ்வாறு பெருக்கினான் என்ற விஷயத்தைப் பார்ப்போம். ஹுமாயூன் இறந்த சமயத்தில் ஆப்கானிய வம்சத்தைச் சேர்ந்த சிலர் டில்லி ராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ள முயன்றார்கள். அவர்களில் முக்கியமானவனுக்கு ஹெமு என்ற இந்து மந்திரி ஒருவன் இருந்தான். அவன் ஹுமாயூன் இறந்த செய்தி கேட்டதும் ஒரு சேனையுடன் டில்லிக்குச் சென்று, அங்கிருந்த மொகலாயர்களைத் தோற்கடித்து, அந்நகரத்தைக் கைப்பற்றி, அதற்குத் தானே அரசன் என்று கூறிக்கொண்டான். ஆனால் மொகலாயர்கள் மறுபடியும் படைதிரட்டி 1556-ஆம் ஆண்டில் நவம்பர் மாதத்தில் பானிப்பட்டு என்ற இடத்தில் ஹெமுவை எதிர்த்தார்கள். ஹெமுவின் சேனை மொகலாயர் சேனையைவிட மிகப் பெரியதாக இருந்ததால் அவனுக்குத்தான் வெற்றி ஏற்படும்போலிருந்தது. ஆனால், போர்க்களத்தில் அவனுக்குப் படுகாயம் ஏற்பட்டதால், அவனுடைய சேனை சிதறியோடிவிட்டது. அவனும் கைதியாக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். பின்னர் ஓராண்டில் டில்லிச் சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடிய மற்ற ஆப்கானியத் தலைவர்களும் தோற்கடிக்கப்பட்டார்கள். அத்துடன் அக்பருக்கு ஆப்கானியரால் ஏற்பட்ட ஆபத்து ஒழிந்தது. அதன்பின் மொகலாய ஆதிக்கம் பெருகத் தொடங்கியது. பைராம்கான் ரீஜண்டுப் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்குள் கிழக்கில் ஜான்பூரும், தெற்கில் குவாலியரும் மொகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டன.

அதன்பின் அரசாங்க அலுவல்களையெல்லாம் அக்பரே கவனிக்கத் தொடங்கினான். அத்துடன் தன்னுடைய ராஜ்யத்தைப் பெருக்கும் வேலையிலும் ஈடுபட்டான். அந்த விஷயத்தைப்பற்றிப் பொதுவாகச் சிலவிஷயங்கள் சொல்லுவது பொருத்தமாக இருக்கும். முதலாவதாக, ஏதாவதோர் இராஜ்யத்தின்மீது படையெடுக்க வேண்டுமானால் அதற்காகத் தக்க காரணம் கிடைக்கும்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், பிறநாடுகளை வென்று தன் ராஜ்யத்தைப் பெருக்கு

வது அக்பரது அரசாட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று. ஆகவே ஏதாவதோர் இராஜ்யத்தைத் தாக்கவேண்டுமானால் அதற்காக ஒரு காரணத்தைக் கற்பித்துக்கொள்வது எளிது. இரண்டாவதாக, அக்பர் தன்னால் தோற்கடிக்கப்பட்ட இந்து அரசர்களை நடத்திய முறைக்கும் முஸ்லீம் அரசர்களை நடத்திய முறைக்கும் வேறுபாடு இருந்தது. தோற்கடிக்கப்பட்ட முஸ்லிம் அரசனுடைய இராஜ்யத்தைச் சாதாரணமாக அக்பர் தன்னுடைய நேரடியான ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்து விடுவான். ஆனால் தோற்றுப்போன இந்து அரசன் தன்னுடைய நிலையை உணர்ந்து அக்பருடைய ஆதிக்கத்தை ஒத்துக்கொண்டால், அவனுடைய ராஜ்யம் அவனுக்கே கொடுக்கப்பட்டதோடு அதில் அவன் ஏறக்குறைய சுயேச்சையாகவே ஆட்சிபுரிவதற்கும் அனுமதிக்கப்பட்டான். மூன்றாவதாக ஏதாவதோர் இராஜ்யம் அக்பருடைய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது என்றால் அதனோடு அந்தவேலை முடிந்துவிட்டது என்று கூறமுடியாது. அங்குச் சமயம் நேர்ந்தபோதெல்லாம் கலகம் ஏற்படும். அப்போதெல்லாம் அக்பருடைய படைகள் சென்று அந்தக் கலகங்களை அடக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அது அவ்வளவு எளிய காரியம் அன்று. குறிப்பாக, குஜராத்திலும் வங்காளத்திலும் தோற்கடிக்கப்பட்ட அரச வம்சத்தினர் பலதரம் இவ்வாறு கலகம் செய்தனர். இத்தகைய காரணங்களுக்குக்காகச் செய்த சண்டைகளைத் தவிர, அக்பர் செய்த போர்களைத் தெற்கில் செய்த போர்கள், கிழக்கில் செய்த போர்கள், மேற்கிலும் வடமேற்கிலும் செய்த போர்கள், மறுபடியும் தெற்கில் செய்த போர்கள் என்று நான்கு பிளவுகளாகப் பிரிக்கலாம்.

குவாலியர் கோட்டை அக்பருடைய கைவசத்தில் இருந்ததால் மாளவத்தை ஜெயிப்பது எளிதாயிற்று. அதை 1561-ஆம் ஆண்டில் அக்பர் தன்னுடைய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். அடுத்த பத்தாண்டுகளில் இராஜபுதனத்தை ஜெயிக்கும் வேலையில் அக்பர் ஈடுபட்டான். இராஜபுத்திரத் தலைவர்களில் சிலர் சண்டையில் தோற்கடிக்கப்பட்டார்கள். சிலர் சமாதான முறையில் அக்பருடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். 1569-ல் ரன்தம்பர் ஜெயிக்கப்பட்டது. பின்னர் இரண்டாண்டுகளுக்குள் இராஜபுதனம் முழுவதும் அக்பருடைய சாம்ராஜ்யத்திற் சேர்ந்துவிட்டது எனினும் ஒரு சில தலைவர்கள் அதன் பிறகும் அக்பருக்கு அடங்காமலே இருந்தார்கள். அதன்பின் 1572-ல் அக்பர் குஜராத்தை ஜெயித்துக்கொண்டான். அப்

போதுதான் அக்பர் கடலை முதல் முதலாகப் பார்த்தான். அதன் பிறகு ஜெயிக்கப்பட்ட பிரதேசங்களில் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதைத்தவிர அந்தத் திசையில் அக்பர் வேறு போர்களைச் செய்யவில்லை. அடுத்தபடியாக அக்பர் கவனம் கிழக்குத் திசையில் சென்றது. 1574-இல் அக்பரே நேரிற் சென்று பீகாரைவென்ருன். அதன்பின் வங்காளத்தை ஜெயிக்கும் வேலையை அக்பர் தன் சேனுதிபதிகளுக்கு விட்டுவிட்டான். அவர்கள் முதலில் அந்த வேலையைத் திறம்படச் செய்யவில்லை யெனினும், 1576-இல் வங்காளத்தில் ஆட்சி செய்த ஆப்கானிய அரசன் தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டான். அதன்பின் வங்காளத்தின் பெரும் பகுதி சாம்ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. எனினும் ஆப்கானியர்களுடைய எதிர்ப்பு முழுவதும் அடங்குவதற்கு இன் னும் சில ஆண்டுகள் சென்றன. மெக்ளு நதியின் கிழக்கிலுள்ள பிரதேசத்தின் ஒரு பகுதி சிறிது காலத்துக்குமுன் அரக்கான் அரசனுல் ஜெயிக்கப்பட்டு அந்த இராஜ்யத்தில் சேர்ந்திருந்தது. அது அரக்கான் ராஜ்யத்திலேயே பதினேழாம் நூற்ருண்டின் இடைப்பகுதி வரையில் இருந்தது.

அடுத்தபடியாக, அக்பர் வடமேற்குத் திசையில் தன் கவனத் தைச் செலுத்தவேண்டியதாயிற்று. ஹுமாயூன் இறந்தபோது அவனுடைய மற்ருெரு மகனை ஹக்கீம் காபூலுக்கு அரசனு ஞன் என்று சென்ற அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். ஹக்கீம் காபூலில் ஏறக்குறையாக சுயேச்சையாகவே ஆண்டுவந் தான். அவன் இந்தியாவின் செல்வத்திற்கு ஆசைப்பட்டு, பஞ்சா பின்மீது 1566-இல் படையெடுத்தான். ஆனல், விரைவில் அங் கிருந்து திரும்பி யோடிவிட்டான். அக்பர் இஸ்லாம் மதத்தினின்று நீங்கிவிட்டதைக் கண்டு 1580-இல் வங்காளத்திலும் பீகாரிலும் இருந்த அவனுடைய உத்தியோகஸ்தர்கள் அவன்மீது வெறுப் படைந்து, ஹக்கீமை இந்திய முஸ்லிம்களின் தலைவனுகக் கருதத் தொடங்கினர்கள். அக்பருடைய ஸம்ஸ்தானத்திலேயே இருந்த சில முகமதிய உத்தியோகஸ்தர்களும் அவ்வாறே கருதத் தொடங் கினர்கள். அதைக்கண்டு தனக்கு இந்தியாவில் ஆதரவு இருக்கு மென்று எதிர்பார்த்த ஹக்கீம் பஞ்சாபின்மீது இரண்டாம் முறையாக 1581-இன் தொடக்கத்தில் படையெடுத்தான். அதனல், பஞ்சாபில் அக்பருடைய ஆதிக்கத்திற்குச் சிறிது அசைவு ஏற்பட்டது. ஆனல் ஹக்கீம் திறமை வாய்ந்தவனல்லன். அவன் தைரியமும் எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலும் அற்ற வன். மேலும், மிதமின்றி மதுபானஞ் செய்பவன். ஆகவே

அக்பர் அனுப்பிய பெரும்படையைக்கண்டு அதனுடன் சண்டை செய்யாமலே புறமுதுகிட்டு ஓடிவிட்டான். அதன்பின் அக்பர் எளிதில் காபூலைக் கைப்பற்றிக்கொண்டான். எனினும் ஹக்கீமையே அதற்கு அரசனாக விட்டுவிட்டுத் தன் படையைத் திருப்பி யழைத்துக்கொண்டான். பின்னர் 1585-இல் வரம்பற்ற மதுபானத்தின் பயனாக ஹக்கீம் இறந்தவுடன் காபூல் பெயரளவில் மாத்திரமின்றி உண்மையிலும் அக்பர் சாம்ராஜ்யத்தின் பகுதியாயிற்று. 1586-இல் காஷ்மீரமும், 1591-இல் தென் சிந்தும், 1585-இல் கிழக்கு பலுச்சிஸ்தானமும் ஜெயிக்கப்பட்டன. மேலும் 1595-ஆம் ஆண்டிலேயே தெற்கு ஆப்கானிய ஸ்தானத்தின் முக்கிய கோட்டையாகிய காண்டஹாரை அங்கிருந்த பாரசீக கவர்னர் சண்டை செய்யாமலே அக்பருக்குக் கொடுத்துவிட்டான்.

வங்காளத்தில் இருந்த மொகலாய ராஜப்பிரதிநிதி 1593-இல் ஒரிஸாவையும் தன் அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்துவிட்டானகையால், அக்பர் 1595-ஆம் ஆண்டு முடிவதற்குள் வட இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆளும் பேரரசனாக விளங்கினான். அதன்பின் அவனுடைய கவனம் தெற்கே திரும்பியது. 1596-இல் பீராரும், 1600-இல் காண்டேஷும் ஜெயிக்கப்பட்டன. அகமது நகர ராஜ்யத்தின் தலைநகரமும் 1600-ஆம் ஆண்டிலேயே பிடிக்கப்பட்டது. எனினும், அந்த ராஜ்யத்தின் ஒரு பகுதிதான் அக்பர் சாம்ராஜ்யத்திற்குள் வந்தது. அத்துடன் அக்பர் திருப்தியடையவில்லை. பீஜப்பூரையும், கோல்கொண்டாவையும், அவற்றிற்கப்பாலுள்ள பிரதேசங்களையும் வென்று, போர்ச்சுகீசியர்களை இந்தியாவிலிருந்து துரத்தவேண்டுமென்று அவன் விரும்பினான். அதன்பின் அக்பர் மத்திய ஆசியாவையும் ஜெயிக்க ஆசைகொண்டான். ஆனால் அந்த எண்ணங்களில் ஒன்றும் நிறைவேறவில்லை. தன் வாழ்நாளில் எஞ்சியிருந்த சில ஆண்டுகளைத் தன்மகன் ஜஹாங்கீர் செய்த கலகத்தை அடக்குவதில் அக்பர் கழித்தான். அந்தக் கலகத்தால் அக்பர் மிகுந்த மனவருத்தம் அடைந்தான்.

இனி, இவ்வளவு பெரிய ராஜ்யத்தை அக்பர் எவ்வாறு ஒழுங்கும் பலமும் அடையுமாறு செய்தான் என்பதைப் பார்ப்போம். அதற்காக அவன் பின்பற்றிய கொள்கைகளை மாத்திரம் இங்குக் கூறி, இராஜ்ய பரிபாலனத்திற்கு அவன் ஏற்படுத்திய இலாக்காக்களையும், நியமித்த உத்தியோகஸ்தர்களையும்பற்றி அடுத்த அதிகாரத்திற் கூறுவோம். அரசாங்க அலுவல்களைத்

தானே, நேரடியாகக் கவனிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே, தான் இந்தியாவில் நிறுவ விரும்பிய சாம்ராஜ்யத்தைச் சிறு தொகையினரான மொகலாயர்களுடைய உதவியால் மாத்திரம் ஆளமுடியாது என்று அக்பர் நன்ருக உணர்ந்திருந்தான். தன்னுடைய முயற்சிகளில் வெற்றிபெற்ருல் தனக்குத் துருக்கியர்களும் ஆப்கானியர்களும் உதவி செய்யக்கூடும் என்பதையும், தோல்வியுற்ருல் உதவி செய்வதற்குப் பதிலாக அவர்கள் தன்னையே எதிர்ப்பார்கள் என்பதையும் அக்பர் உணர்ந்திருந்தான். ஆகவே இந்துக்கள் தன்னுடைய ஆட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதற்கும், இராஜபுத்திரத் தலைவர்களுடைய உதவியைப் பெறுவதற்கும் அக்பர் தொடக்கத்திலிருந்தே தீர்மானித்துக்கொண்டான். அந்த நோக்கத்தில் அவன் பூரண வெற்றி பெற்ருன்.

இராஜபுத்திரத் தலைவர்கள் தங்களுக்குள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்திக்கொண்டு பாபரை எதிர்த்தார்களென்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். அதுபோலவே அவர்கள் தன்னையும் எதிர்க்கக் கூடும் என்பதை அக்பர் உணர்ந்தான். மேலும் இராஜபுத்திரக் குதிரைவீரர்கள் இந்தியாவிலேயே ஒப்பற்ற போர் வீரர்களாக இருந்தார்கள். ஆதலால் அவர்களோடு சண்டை செய்வதற்குப் பதிலாக அவர்களுடைய துணையைச் சம்பாதித்துக் கொள்வது அக்பருடைய முக்கிய நோக்கம். தவிர்க்க முடியாத சமயங்களில் மாத்திரம் அக்பர் இராஜபுத்திரத் தலைவர்களோடு சண்டை செய்தான். பெரும்பாலும் சமாதான முறைகளிலேயே அவர்களைத் தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்வதற்கு அக்பர் பெரிதும் முயன்ருன். சண்டையே செய்யாமலோ அல்லது சண்டை செய்து தோற்றுப்போன பின்னரோ அக்பருக்குக் கீழ்ப்படிந்து தங்களுடைய சேனைகளை அவனுக்கு வேண்டும்போது உதவ ஒத்துக்கொண்ட இராஜபுத்திரத் தலைவர்களை அவன் மிகுந்த கௌரவத்துடன் நடத்தினுன். பேரரசனைப் பார்க்கப்போகும் போது வழக்கமாகக் கொண்டுபோக வேண்டிய பரிசுகளையும் காணிக்கைகளையும் தவிர வேருென்றும் அவர்கள் அக்பருக்குக் கொடுக்கவேண்டியதில்லை. கீழ்ப்படிந்த இராஜபுத்திரத் தலைவர்களை நமக்குத் தெரிந்தவரையில் அக்பர் தனக்குக் கப்பங் கட்டுமாறு வற்புறுத்தவில்லை. மேலும் அவர்களுடைய ராஜ்ய விவகாரங்களில் அக்பர் தலையிடுவான் என்று அவர்கள் அஞ்ச வேண்டியதில்லை. சில முக்கிய இராஜபுத்திரத் தலைவர்களுடைய பெண்களை அக்பரே மணஞ் செய்துகொண்டான். அத்தகைய

ஓர் இராஜபுத்திரப் பெண்ணுக்குப் பிறந்தவன்தான் அக்பருடைய மகனான ஜஹாங்கீர். அவனுக்கும் அக்பர் ஓர் இராஜபுத்திரப் பெண்ணை மணமுடித்து வைத்தான். அந்தத் திருமணம் பல இந்துச் சடங்குகளுடன் நடைபெற்றது.

இத்தகைய முறைகளால் பெரும்பான்மையான இராஜ புத்திரத் தலைவர்களுடைய நட்பையும் விசுவாசத்தையும் அக்பர் பெற்றான். அதனால் சுமார் 50,000-உயர்ந்த இராஜபுத்திரக் குதிரை வீரர்கள் அக்பர் வேண்டும்போது அவனுக்கு உதவி செய்யக் காத்துக்கொண்டிருந்தார்கள். அக்பருக்குக் கீழ்ப்படிய மறுத்த இராஜபுத்திரத் தலைவர்களில் மிகவும் முக்கியமானவன் மீவார் அரசன். அவன் பெயர் பிரதாபசிம்மன் என்பது. 1567-ஆம் ஆண்டில் அக்பர் மீவாரின் தலைநகரான சித்தூர்க் கோட்டையை முற்றுகையிட்டுப் பிடித்துக்கொண்டான். அப் போது கோட்டைக்குள்ளிருந்த பெண்களெல்லாம் தீயில்விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டனர். சண்டையில் சாகாமல் தப்பிய வீரர்கள் சித்தூரை விட்டுவிட்டு அண்மையிலிருந்த மலைகளுக்குச் சென்றுவிட்டார்கள். 1576-ஆம் ஆண்டில் அக்பர் மறுபடியும் மீவாரை ஜெயிக்க முயன்றான். ஆனால் அதிலும் அவன் வெற்றி பெறவில்லை. கடைசிவரையில் அக்பரை எதிர்த்து நின்ற பிராதபசிம்மன் 1597-இல் இறந்துபோனான். வேறு முக்கிய மான விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருந்ததால் பிராதாப சிம்மனை முடிவாகத் தோற்கடிப்பதற்கு அக்பர் முயற்சி செய்ய வில்லை.

அக்பர் இந்துக்களை அவர்களுடைய மதங் காரணமாகத் துன்புறுத்தவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை மிகுந்த நேர்மையுடனும் நீதியுடனும் நடத்தினான். புண்ணிய க்ஷேத்தி ரங்களுக்கு யாத்திரை சென்ற இந்துக்கள்மீது வரி விதிக்கும் வழக்கத்தை அக்பர் தானே அரசியல் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கியவுடன் நிறுத்திவிட்டான். ஓராண்டுக்குப் பின்னர் ஜஸியா வரியையும் நீக்கிவிட்டான். உடன்கட்டை யேறும் பழக்கம் அக்பருக்குப் பிடிக்கவில்லை. ஒரு சமயம் ஒரு பெண்ணை உடன்கட்டை ஏறுமாறு அவளுடைய சுற்றத்தார்கள் வற்புறுத் திக்கொண்டிருந்ததைக் கண்ட அக்பர் தனியாகவே சென்று, அவளை அந்தக் கொடுமையினின்று காப்பாற்றினான். ஆனால், ஒரு பெண் பிறர் வற்புறுத்தலின்றித் தானாகவே உடன்கட்டை யேற விரும்பினால், அவள் அவ்வாறு செய்வதை அக்பர் இயற்றிய

சட்டம் தடுக்கவில்லை. பசு வதையையும் அக்பர் தடுத்து, இந்துக்களின் பிரியத்தைச் சம்பாதித்துக்கொண்டார். அக்பருடைய மதக்கொள்கைகளை வெறுத்த முஸ்லீம்கள் ஹக்கீமைத் தங்கள் தலைவனாகக் கருதத் தொடங்கினார்கள் என்றும், அவன் பஞ்சாபின் மீது படையெடுத்து அக்பருடைய படையை எதிர்த்து நிற்கமுடியாமல் திரும்பியோடினான் என்றும் முன்னர்க் கூறினோம். அவனுடைய தோல்விக்குப் பின் அக்பர் இயற்றிய சட்டங்களெல்லாம் இஸ்லாம் மதத்திற்குப் பாதகமாகவும் மற்ற மதங்களுக்குச் சாதகமாகவும் இருந்தன. அக்பர் மதத்துறையில் கையாண்ட முறைகள் அவனுக்குப் பூரண வெற்றியை அளித்தன என்பது அவனுடைய சாம்ராஜ்யத்தில் நிலவிய அமைதியிலிருந்தே தெரியும். கலகங்கள் சில ஏற்பட்டன என்பது உண்மைதான். ஆனால் அவைகள் தோற்றுப்போன முகமதிய வம்சத்தினராலோ அல்லது அக்பரிடத்தில் மனஸ்தாபங்கொண்ட சில உத்தியோகஸ்தர்களாலோ ஏற்பட்டவை. அவைகளுக்குப் பொதுமக்கள் ஆதரவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகும் அக்பருடைய உயர்ந்த அரசாட்சியின் நினைவு இந்தியர் உள்ளங்களில் வேரூன்றியிருந்தது. அதன்மூலம் வட இந்தியக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் அக்பரைப்பற்றி எவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் வைத்திருந்தார்களென்று அறிந்துகொள்ளலாம்.

அக்பர் வாழ்க்கையின் பலதுறைகளிலும் தன் கவனத்தைச் செலுத்தினான். அவனுடைய சபையில் ஆடம்பரமற்ற அழகும் கம்பீரமும் கொலுவீற்றிருந்தன. பாரசீகப் புலவர்களுக்குப் பெருமதிப்பு இருந்தது. பல நாடுகளிலுமிருந்து புலவர்கள் வந்து அக்பர் சபையை அலங்கரித்தனர். அவர்களுக்கெல்லாம் அக்பர் தன் ஆதரவை அளித்தான். அக்பர் ஒரு பெரிய புத்தக நிலையத்தை ஏற்படுத்தி அதிற் பல கையெழுத்துப் பிரதிகளைச் சேகரித்து வைத்தான். அவற்றுள் மகாபாரதம்போன்ற பல ஸம்ஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்புக்களும் இருந்தன. அந்த மொழி பெயர்ப்புக்களெல்லாம் அக்பருடைய ஆணையின்மேற் செய்யப்பட்டவை. அவற்றைப் பிறர் படிக்கக் கேட்டு அக்பர் பெருமகிழ்ச்சியடைந்தான். தற்கால இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு அக்பர் ஆதரவளித்தான் என்று கூறுதற்குச் சான்று ஒன்றும் கிடையாது. ஆனால் இந்து இசைக்கலை வல்லுநர்க்கும் மற்ற கலைஞர்களுக்கும் அக்பர் தன்னுடைய சிறந்த ஆதரவை அளித்தான். ஓவியக் கலைஞர்கள் பாரசீகக் கலையைப் பின்பற்றித்

தங்கள் வேலையைச் செய்யுமாறு பணிக்கப்பட்டார்கள் என்று நினைக்க இடமிருக்கிறது. ஆனால் அவர்கள் இந்துக் கலையின் தன்மைகளையும் பரம்பரை முறைகளையும் மறந்துவிடவில்லை. அதனால் பாரசீகக் கலையின் தன்மைகளோடு ஐக்கியமாகித் தனித் தன்மைகளைப் பெற்ற ஒரு புதிய கலை தோன்றியது. அதுவே மொகலாய ஓவியக்கலை என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கலை பதினேழாம் நூற்றாண்டில் முழு வளர்ச்சிபெற்றுத் திகழ்ந்தது. அந்தக்கலையின் சின்னங்களை இன்று மேல்நாட்டு அறிஞர்கள் பெரிதும் போற்றுகின்றனர்.

அக்பர் கட்டிடக்கலையிலும் ஆர்வமுள்ளவன். அவன் பல கட்டிடங்களைக் கட்டினான். ஆனால் அவன் செலவழித்த பணத்திற்குத் தக்கவாறு அவன் கட்டிய கட்டிடங்கள் பயனுடையவைகளாக இருக்கவேண்டுமென்று விரும்பினான். ஆக்ராவிலும் அலகாபாத்திலும் அவன் கட்டிய கற்கோட்டைகள் அவன் கட்டிட வேலையில் எவ்வளவு அதிகமாக ஈடுபட்டான் என்பதை விளக்குவதற்குப் போதிய சான்றுகளாக இருக்கின்றன. ஆனால் அவன் கட்டிய கட்டிடங்களில் முக்கியமானவை பட்டிப்பூர் சீக்கிறி என்ற இடத்திற் காணப்படுகின்றன. இன்று அழிந்துகிடக்கும் அந்நகரம் ஆக்ராவுக்கு மேற்கில் சுமார் 20-கல் தொலைவில் இருக்கிறது. லோடியரசர்கள் காலத்தில் ஆக்ரா தலைநகராக்கப் பட்டது என்று முன்னர்க் கூறினோம். ஆனால் அவர்கள் ஆக்ராவில் பிரமாதமான கட்டிடம் ஒன்றையும் கட்டவில்லை. ஆக்ரா அவ்வளவாக அதிர்ஷ்டமுள்ள இடமென்று கருதாத அக்பர் 1569-இல் சீக்கிறி என்ற கிராமத்தைத் தன் தலைநகராக்கக் கருதினான். மேலும் அந்தக் கிராமத்தில் ஒரு முகமதிய அடியார் வாழ்ந்து வந்தார். அவருடைய அருளால்தான் தனக்கு இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்தன என்று அக்பர் கருதினான். ஆகவே அந்தக் கிராமத்தில் அக்பர் பல கட்டிடங்களைக் கட்டத் தொடங்கினான். அந்தவேலை பத்தாண்டுகள் நடந்தது. கட்டிடங்கள் பெரும்பாலும் சிவப்புச் சந்தனக் கற்களால் கட்டப்பட்டவை. அவைகளில் இந்துக் கட்டிடக்கலையின் தன்மைகளும், முகமதியக் கட்டிடக் கலையின் தன்மைகளும் ஒன்றாக இயைந்து காணப்படுகின்றன. அதனால், அரிய அழகும் கவர்ச்சியும் வாய்ந்த ஒரு புதிய கட்டிடக் கலை பட்டிப்பூர் சீக்கிறியில் உருவாயிற்று என்று கூறலாம்.

படிப்பூர் சீக்கிறி தலைநகரமாக இருந்தபோதிலும், அக்பர் எந்த இடத்திற் சென்று தங்கினாலும் அந்த இடந்தான் நடைமுறையில் தலைநகரமாயிருந்தது. ஏனெனில், அக்பர் சென்ற இடங்களுக்கெல்லாம் 'அரசாங்கத்தின் முக்கிய உத்தியோகஸ்தர்களும் கூடவே சென்றார்கள். 1585-இல் அக்பர் பட்டிப்பூர் சீக்கிறியைவிட்டுத் தன்னுடைய ராஜ்யத்தின் வடமேற்குப் பகுதிக்குச் சென்று பன்னிரண்டாண்டுகள் தங்கினான். திரும்பிவந்தபிறகு அக்பர் பெரும்பாலும் ஆக்ராவிலேயே வசித்ததால் அவன் உண்டாக்கிய பட்டிப்பூர் சீக்கிறி விரைவில் அழியத்தொடங்கியது. அக்பர் ஏன் பட்டிப்பூர் சீக்கிறியைப் புறக்கணித்தான் என்பதற்குக் காரணம் தெரியவில்லை. யாதேனும் ஒரு காரணத்தால் அந்த நகரத்தை அக்பர் வெறுத்திருக்கக்கூடும். இன்றேல் அந்தநகரம் ஆரோக்கியமற்றதாக இருந்திருக்கலாம் *

அரசாங்க ஆதரவில் கட்டப்பட்ட கட்டிடங்களைத் தவிர, வேறு பல கட்டிடங்களும் அக்பர் காலத்தில் கட்டப்பட்டன. அவற்றில் முக்கியமானவை இந்துக் கோயில்கள். அக்பர் இந்துக்களைத் தொந்தரவு செய்யவில்லை என்றும், அவர்களுடைய பிரியத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் முறையில் நடந்துகொண்டான் என்றும் முன்னர்க் கூறினோமல்லவா? அதனால் இந்துக்கள் தங்களுடைய மதத்தைத் தங்களிஷ்டம்போல் பின்பற்றியதுமன்றிப் பல கோயில்களையும் கட்டத்தொடங்கினார்கள். அத்தகைய கோயில்களில் மிகச் சிறந்தவை மதுராவுக்கருகில் இருக்கின்றன. பட்டிப்பூர் சீக்கிறிக் கட்டிடங்களில் காணப்படுவதைப்போலவே இந்தக் கோயில்களிலும் இந்துக் கலைத்தன்மைகளும் முகமதியக் கலைத்தன்மைகளும் ஒன்றாக இணைந்து காணப்படுகின்றன. அவைகளிலும் டோம்களும் வளைவுகளும் காணப்படுகின்றன. ஆனால் அந்த டோம்களும் வளைவுகளும் இந்துக் கலைத்தன்மைகளைப் பெற்ற அந்தக் கட்டிடங்களில் இயற்கையாகவும் அழகாகவும் அமைந்திருக்கின்றன.

---

* அந்த நகரத்தில் நல்ல தண்ணீர் இல்லாததால் அது கைவிடப்பட்டது என்று ஒரு தலைமுறைக்குப் பின் இந்தியாவுக்கு வந்த ஓர் ஆங்கிலேய வியாபாரி கேள்விப்பட்டதாக ஒரு செய்தி நமக்குக் கிடைத்திருக்கிறது.

அதிகாரம்—29

அக்பரது ஆட்சிமுறை

ஆட்சி முறையில் அக்பர் ஷெர்ஷாவைவிடக் குறைந்த திறமை வாய்ந்தவன் அல்லன். ஆனால் ஷெர்ஷா ஆட்சி முறையே இல்லாத இடத்தில் தனது திறமையால் ஒரு புதிய ஆட்சி முறையை உண்டாக்க வேண்டியதாயிருந்தது. அக்பருக்கேற் பட்ட வேலை அத்தகையதன்று. ஷெர்ஷா ஏற்படுத்திய ஆட்சி முறையை அடிப்படையாக வைத்துக்கொண்டு அக்பர் அதைத் திருத்தியும் புதுக்கியும் சமயத்திற்கேற்றவாறு மாற்றியும் ஒரு நல்ல ஆட்சி முறையை உருவாக்கினான். அவ்வாறு அக்பர் ஏற் படுத்திய திருத்தங்களும் மாறுதல்களும் மிக அதிகமானவை. அவற்றையெல்லாம் இங்கு விரிவாகக் கூற முடியாது. அதற்குப் பதிலாக அக்பருடைய ஆட்சியின் கடைசியாண்டுகளில் காணப் பட்ட ஆட்சிமுறையின் தன்மைகளை எடுத்துக் கூறுவதுதான் இப்போது நாம் செய்ய விரும்பும் காரியம். அந்த ஆட்சிமுறை யின் முக்கியத் தன்மைகளெல்லாம் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பிறகும் இந்திய அரசியலுலகில் காணப்பட்டன. இத்துறையில் நமக்குக் கிடைத்திருக்கும் செய்திகளுக்கு முக்கிய ஆதாரமாக இருப்பது ஆயினி - அக்பாரி என்ற நூல். அது அரசாங்க ஆதர வில் பதிவு செய்யப்பட்ட குறிப்புகளைக் கொண்ட அக்பர் நாமா என்ற வரலாற்று நூலின் துணை நூல். அரசாங்கத்தின் பல இலாகாக்களிலும் அக்பர் செய்த வேலைகளை விளக்கும் முக்கிய மான தஸ்தாவேஜுகளின் தொகுதிதான் ஆயினி அக்பாரி.

தகுதியுள்ள உத்தியோகஸ்தர்களை நியமித்து அவர்களிடம் வேலை வாங்குவதுதான் ஆட்சிமுறையின் முதல் நோக்கம். அக்பர் தன்னுடைய உத்தியோகஸ்தர்களைப் பலதரமாகப் பிரித் திருந்தான். அந்தப் பிரிவுகளில் அரச குலத்தைச் சேர்ந்த இள வரசர்கள் முதலாகத் தற்போது சார்ஜண்டு, கார்ப்பரல் என்று வழங்கும் உத்தியோகஸ்தர்கள் வரையில் அனைவரும் அடங்கி யிருந்தனர். அவர்களுக்கு மான்சப்தார்கள் என்று பெயர். ஒவ் வோர் உத்தியோகஸ்தனும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களுக்குத் தலைவனாக இருந்தான். 5000-குதிரை வீரர்களுக்குத் தலைவன், 1000-குதிரை வீரர்களுக்குத் தலைவன், 500-குதிரை வீரர்களுக்குத் தலைவன் என்று இத்தகைய பல தகுதிகளையுடைய உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். மிகக் கீழ்த்தரமான மான்சப்தார் 10-குதிரை வீரர்களுக்குத் தலைவனாக

இருந்தான். இவ்வாறு மான்சப்தார்களைப் பிரிப்பதன் அடிப்படைக்கருத்து செங்கிஸ்கான் காலத்திற்கு முன்னாலேயே ஏற்பட்டது. அவனுடைய படைவீரர்கள் ஆயிரம், நூறு, பத்து என்ற எண்ணிக்கைகளிற் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தலைவன் ஏற்படுத்தப்பட்டிருந்தான். ஆனால் அக்பர் காலத்திற்குள் அந்த முறையில் சிறிது மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அக்பர் காலத்தில் ஒவ்வொரு மான்சப்தாரும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள குதிரை வீரர்களுக்குத் தலைவன் என்று கூறப்பட்ட போதிலும் அவனிடமிருந்த குதிரைவீரர்கள் சாதாரணமாக அந்த எண்ணிக்கைக்குக் குறைவாகத்தானிருந்தனர்.

அக்பருடைய ஆட்சியில் சிறிது காலந்தான் மான்சப்தார்களுக்கு ரொக்கமாகச் சம்பளம் கொடுக்கப்பட்டது. அரசாங்கக் கஜானாவிலிருந்து ரொக்கமாகச் சம்பளம் பெறுவதற்குப் பதிலாக ஒவ்வொரு மான்சப்தாரும் தனக்குக் கொடுக்கப்பட்ட ஜாகீரில் வரி வசூல் செய்து அதைத் தானே உபயோகித்துக்கொள்ளும் உரிமை பெற்றிருந்தான். அந்த உரிமை அவனுக்கு அளிக்கப்படுமுன் அவன் தன்னுடைய குதிரைவீரர்களை அணிவகுத்துக் காட்டவேண்டும். சம்பளத்தை நிர்ணயிப்பது மிகச் சிக்கலான விஷயம். அதைப்பற்றிக் கூருது உயர்தர மான்சப்தார்கள் மிகத் தாராளமான சம்பளம் பெற்றார்கள் என்று மாத்திரம் கூறுவது சாலும். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு அவரவர்கள் செய்ய வேண்டிய வேலைக்கேற்ற தனிப்பட்ட பயிற்சி கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தற்காலிகமாக வேலையில்லாத உத்தியோகஸ்தர்கள் அரச சபையில் ஆஜராகவேண்டும். அவ்வப்போது ஏற்படும் வேலைகளைச் செய்யுமாறு அக்பர் அவர்களுக்கு ஆணையிடுவான். ஒவ்வொரு வேலைக்கும் தகுதியுள்ள உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதில் அக்பர் நல்ல திறமை வாய்ந்திருந்தான். ஆனால் சில சமயங்களில் அவ்விஷயத்தில் தவறு நேர்ந்துவிடுவதும் உண்டு. தகுதியற்ற ஆட்களிடம் சில முக்கியமான வேலைகள் ஒப்படைக்கப்பட்டு அதனால் பெரு நஷ்டம் அக்பருக்கு ஏற்பட்டதென்பது உண்மைதான். எனினும், அக்பர் தான் தேர்ந்தெடுத்த உத்தியோகஸ்தர்களைக்கொண்டு தான் எண்ணிய கருமங்களை வெற்றிதரும்படி முடித்துக்கொண்டான் என்று பொதுவாகக் கூறலாம்.

அரசாங்க அலுவல்கள் அரச சபையைப் பொறுத்த அலுவல்கள், சேனையைப் பொறுத்த அலுவல்கள், ஸாம்ராஜ்யத்தைப்

பொறுத்த அலுவல்கள் என்று மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஆனால் அந்தப் பிரிவுகளுக்கிடையிலிருந்த எல்லைக் கோடுகள் தாண்ட முடியாதவாறு நிர்ணயிக்கப்பட வில்லை. உதாரணமாக, அரசசபை என்ற தலைப்பில் நாணயம் அச்சடிக்கும் இலாக்கா, பீரங்கிப்படை இலாக்கா, அரண்மனைப் படை வீரர் இலாக்கா முதலிய இலாக்காக்களும் அடங்கியிருந்தன. அரச சபை என்ற தலைப்பிலடங்கிய எல்லா இலாக்காக்களும் அக்ப ருடைய நேரடியான மேற்பார்வையில் வேலை செய்தன. அந்த இலாக்காக்களின் மிக நுணுக்கமான விஷயங்களையும் கவனித்து அக்பர் தன்னுடைய உத்தரவுகளைத் தெரிவித்தான். அக்பரிடம் உலோபத்தனம் இல்லையென்றாலும், தான் செலவழித்த பணத் திற்குத் தக்கவாறு தான் செய்த வேலைகள் பயனளித்தனவா என்று அடிக்கடி கவனித்துக்கொள்ளும் வழக்கமிருந்தது.

அக்பரே பிரதம சேனாதிபதியாக இருந்தான். தானே நேரில் போர்க்களத்திற்குச் செல்ல முடியாத சமயங்களில் அவன் தகுதி யுள்ளவர்களைச் சேனாதிபதிகளாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி னான். சைனிய இலாக்காவுக்குத் தனிப்பட்ட தலைமை உத்தியோ கஸ்தன் ஒருவன் இருந்தான். போர்க்களத்திற்குச் சென்று படை களை நடத்துவது அவன் வேலையன்று. மான் சப்தார்கள் ஒவ் வொருவரும் அவரவர்கள் வைத்திருக்கவேண்டிய அளவு படை வீரர்களை வைத்திருந்தார்களா என்று பார்த்து அவரவர்களுக் குரிய சம்பளத்தைக் கணக்குப்போடுவது அவன் முக்கிய கடமை. இத்துறையில் மான்சப்தார்கள் அரசாங்கத்தை ஏமாற்றுவது பரம்பரையாக வந்த பழக்கம். உதாரணமாக ஆயிரம் குதிரை வீரர்களை வைத்திருக்கவேண்டிய மான்சப்தார் அதற்குக் குறைந்த எண்ணிக்கையுள்ள குதிரைகளை வைத்துக்கொண்டு ஆயிரம் குதிரைகளுக்குரிய ஜாகீரைப் பெற்றுக் கொள்ளுவான். அரசாங்கத்தார் சோதனைக்கு வரும்போது வேறு ஒரு மான்சப் தாரிடமிருந்து வேண்டிய அளவு குதிரைகளை இரவல் வாங்கிக் கணக்கைச் சரியாகக் காட்டிவிடுவது வழக்கம். அந்தப் பழக்கத் தால் அரசாங்கத்திற்கு நஷ்டமேற்படுமென்பதைச் சொல்லவேண் டியதில்லை. அந்தப் பழக்கத்தை ஒழிப்பதற்கு அக்பர் பலவேறு முறைகளைக் கையாண்டு அதை அறவே ஒழிக்க முடியவில்லை யெனினும் பெரும்பாலும் ஒழித்துவிட்டான். சைனியத்தில் குதிரைப்படைகள்தாம் மிக முக்கியமானவை. காலாட்படைகள் அந்தக்காலத்துச் சண்டை முறைகளில் அவ்வளவாகப் பயன்பட வில்லை. எனினும் பன்னிரண்டாயிரம் (12,000) துப்பாக்கி வீரர்

களை அக்பர் வைத்திருந்தான். அந்தச் சிறுபடை பிற்காலத்தில் ஏற்படவிருந்த மாறுதலைக் காட்டும் அறிகுறியாயிருந்தது. அக்பர் சண்டைக் காலங்களில் போர்க்களத்திற்கு அனுப்பிய படைவீரர்களின் எண்ணிக்கையை நிச்சயமாக நம்மாற் கூற முடியாது. அரண்மனைப் படைவீரர்களையும், மான்சப்தார்களும் அக்பரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சிற்றரசர்களும் அனுப்பக் கடமைப்பட்டிருந்த குதிரைவீரர்களையும் சேர்த்தால் அக்பரிடத்தில் சுமார் இரண்டரை லட்சம் குதிரை வீரர்களிருந் திருக்கலாம் என்று தோன்றுகிறது. அந்த வீரர்களனைவரும் ஒரேமாதிரிப் பயிற்சி பெற்றவர்களாக இருக்க முடியாது. சிலர் நல்ல பயிற்சியுள்ளவர்களாகவும் வேறு சிலர் அவ்வளவு பயிற்சி யில்லாதவர்களாகவுந்தான் இருந்திருக்க முடியும். சாம்ராஜ்யத் தின் எல்லைகளைக் காப்பதற்கும், நாட்டின் அமைதியைக் காப்ப தற்கும் மிக அதிகமான போர்வீரர்கள் எப்போதும் தேவையாக இருந்ததால், சண்டைக் காலங்களில் போர்க்களத்திற்குச் சென்ற சேனை இரண்டரை லட்சத்திற்கு மிகக் குறைவாகத்தான் இருந் திருக்கும்.

இனி, அக்பர் தன்னுடைய ஸாம்ராஜ்யத்தை ஆள்வதற்கு எந்தெந்த முறைகளைக் கையாண்டான் என்று பார்ப்போம். அரசாங்கத்தின் பொதுக் காரியங்களை யெல்லாம் கவனிக்கும் இலாக்காவிற்குப் பிரதம மந்திரி அல்லது “வக்கீல்” தலைவனாக இருந்தான். நிலவரி விஷயங்களைக் கவனிப்பதற்கு வக்கீலுடன் தொடர்பில்லாத ஒரு தனி இலாக்கா இருந்தது. அந்த இலாக்கா விற்கு ரெவினியூ மந்திரி அல்லது “வஜீர்” தலைவனாக இருந் தான். வஜீருடன் அக்பர் நேரடியான தொடர்பு வைத்துக் கொண்டான். இராஜ்யம் பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டி ருந்தது. மாகாணத்திற்கு “சூபா” என்று பெயர். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஓர் இராஜப்பிரதிநிதி அல்லது “சூபாதார்” நியமிக்கப்பட்டான். அவன் அக்பரால் நியமிக்கப்பட்டு, அவனிட மிருந்து நேரடியாக உத்தரவுகளைப் பெற்று மாகாணச் சுயாட் சியை நடத்தினன். ஆனல் வரிவசூல் விஷயத்தில் சூபாதாருக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. சூபாதார்களைத் தவிர இராஜ்யத்தின் பல முக்கியமான இடங்களில் “பூஜ்தார்கள்” அல்லது அல்லது “கிலாதார்கள்” நியமிக்கப்பட்டிருந்தார்கள். கலகங்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதும், ஏற்பட்டால் விரைவில் அடக்குவதும், இராஜபாட்டைகளைக் காப்பதும், பெருங்குற்றங்கள் ஏற்படாமல் தடுப்பதும் அவர்களுடைய

கடமைகள், பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் " கொத்தவால் " என்ற நகரத்தலைவன் நியமிக்கப்பட்டிருந்தான். தற்போதைய உத்தியோகஸ்தர்களாகிய மாஜிஸ்டிரேட், போலீஸ் கமிஷனர், மேயர் ஆகியவர்கள் செய்யும் வேலைகளை யெல்லாம் அக்பர் காலத்திலிருந்த கொத்தவால் ஒருவனே கவனித்து வந்தான். சிறிய நகரங்களில் " ஹக்கிம் " (கவர்னர்) என்ற உத்தியோகஸ்தன் ஒருவன் இருந்தான். வரிவசூல் விஷயங்களைக் கவனிப்பது அவனுடைய முக்கியமான கடமையாக இருந்தபோதிலும், அவன் வேறு பல பொது விஷயங்களிலும் அதிகாரமுடையவனாக இருந்தான். அரசாங்க விஷயங்களில் சாதாரணமாகப் பொதுமக்கள் அவனிடந்தான் அடிப்படையான தொடர்புடையவர்களாக இருந்தார்கள். அவனுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட பொதுமக்களுடைய விஷயங்களைச் சில சமயங்களில் அவன் வைசிராயின் கவனத்திற்குக் கொண்டுபோவதும் உண்டு.

நகரங்களில் " காஜி " என்றழைக்கப்பட்ட நீதிபதிகள் இருந்தார்கள். ஆனால் தற்போதைய நீதிபதிகளைப்போல் அவர்கள் சுயேச்சையாக நீதி செலுத்தினார்கள் என்று கூறமுடியாது. அக்பர்தான் நீதியின் ஊற்று. அந்த ஊற்று காஜிகள் ஹக்கீம்கள் என்ற பல கிளைகளில் ஓடி மக்களையடைந்தது. நீதிபதிகளும் கவர்னர்களும் அளித்த தீர்ப்புகளுக்கு எதிராக மக்கள் எப்போதும் அக்பருக்கு அப்பீல் செய்யலாம். காஜிகள் முக்கியமாக இஸ்லாமியச் சட்டத்தின்கீழ் வந்த வழக்குகளைத்தான் விசாரித்தார்கள். தனிப்பட்ட முஸ்லிம்களின் வழக்குகளில் காஜிகள் தாங்களாகவே தீர்ப்புக் கூறினார்கள். ஆனால் பொதுவான சிவில், கிரிமினல் வழக்குகளைக் காஜிகள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஹக்கீம்கள் கொத்தவால்கள், சுபாதார்கள் ஆகியவர்களுடன் சேர்ந்தே விசாரித்தார்கள். உதாரணமாக, பெரிய நகரத்தில் ஏற்பட்ட கிரிமினல் வழக்குகளை அந்த நகரத்திலிருந்த காஜியும், கொத்தவாலும் சேர்ந்து விசாரித்து, இருவரும் சேர்ந்துதான் தீர்ப்புக் கூறவேண்டும். கொத்தவாலைக் கலக்காமல் தனிப்பட்ட முறையில் தீர்ப்புக் கூறுவதற்குக் காஜிக்கு அதிகாரமில்லை.

நிலவரியை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும்தான் ரெவின்யூ இலாகாவின் முக்கியவேலை. ஆனால் சிலசமயங்களில், சுங்கவரி, உப்புவரி முதலிய வேறு பல வேலைகளையும் ரெவினியூ இலாக்காவே கவனித்தது. ஜாகீர்முறை வழக்கிலிருந்ததால் இராஜ்யத்தின் பெரும்பகுதியிலிருந்த நிலங்களின் வரிவசூல் உரிமை மான்

சப்தார்களுக்கும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இராஜ்யத்தின் சில பகுதிகளில் வசூலிக்கப்பட்ட நிலவரி நேராக அரசாங்க கஜானாவுக்குச் சென்றது. அவ்வாறு அரசாங்க கஜானாவுக்கே நேராக வரி செலுத்திய பகுதிக்கு "காலிசா" என்று பெயர். அத்தகைய பகுதிகள் ஒவ்வொரு மாகாணத்திலுமிருந்தன. ஆகவே நிலவரி வசூல் இலாகாவுக்கு இரண்டு முக்கியக் கடமைகள் இருந்தன. அவை ஜாகிர் விஷயங்களைக் கவனிப்பதும் காலிசா விஷயங்களைக் கவனிப்பதும் ஆகும். காலிசா விஷயங்களைக் கவனிப்பதற்கு ஒவ்வொரு மாகாணத்திலும் "திவான்" என்ற உத்தியோகஸ்தன் இருந்தான். அவனுக்கும் சுபாதாருக்கும் தொடர்பில்லை. அவனுடைய கடமைகளைப் பற்றிய உத்தரவுகளெல்லாம் வஜீரிடமிருந்து அவனுக்கு நேராகச் சென்றன. அவனுக்கு உதவிசெய்ய "அமில்" (கலெக்டர்) என்று அழைக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். தன்னுடைய அதிகாரத்துக்குட்பட்ட வட்டத்தில் நிலவரியை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும் அமில் செய்த முக்கியவேலை. அதே சமயத்தில் அவன் தன் வட்டத்தின் கவர்னராகவும் இருந்து அங்குச் செய்யவேண்டிய பொதுவான அரசாங்க வேலைகளையும் செய்துவந்தான். மான்சப்தார்களின் தகுதிக்கேற்ற ஜாகீர்களை நிர்ணயிப்பது இராஜ்யத்தின் தலைநகரிலிருந்த வரிவசூல் இலாக்காவின் வேலை. ஜாகீரிலிருந்த மான்சப்தாரின் நிலைமைக்கும், காலிசாவிலிருந்த அமிலின் நிலைமைக்கும் வேறுபாடு கிடையாதென்று பொதுவாகக் கூறலாம். அமில் வசூலித்த நிலவரி அரசாங்க கஜானாவுக்குச் சென்றது. மான்சப்தார் வசூலித்த நிலவரியை அவனே வைத்துக்கொண்டான். மேலும் மான்சப்தார் தன்னுடைய ஜாகீரில் தான் செய்யவேண்டிய கடமைகளைத் தன்னால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியிடம் ஒப்படைத்து விடுவது வழக்கம்.

மேலே கூறிய உத்தியோகஸ்தர்களைத் தவிரக் கிராமங்களில் "முக்கடம்" என்றழைக்கப்பட்ட தலைவர்களும் "பட்வாரி" என்றழைக்கப்பட்ட கணக்குப்பிள்ளைகளும், பர்காணங்களில் "சௌத்திரி" என்ற தலைவர்களும், "கானுங்கோ" என்ற கணக்குப்பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் என்று கூறமுடியாது. ஆனால், அவர்கள் வகித்த பதவிகளுக்கு அரசாங்க அங்கீகாரம் இருந்தது. கிராம நிர்வாகத்தில் அரசாங்கம் அவர்களுடைய உதவியை எதிர்பார்த்தது. ஆனால், சாதாரணமாக வரிவசூல் முதலிய விஷயங்களில் அவர்

கள் அரசாங்கத்திற்குச் செய்த உதவியைவிடக் குடியானவர்களுக்குத்தான் அதிக ஆதரவு காட்டினார்கள் என்று பொதுவாகக் கூறலாம்.

குடியானவர்கள் செலுத்தவேண்டிய நிலவரியை நிர்ணயிப்பது எளிதன்று. பருவந்தோறும் ஒவ்வொரு குடியானவனுடைய நிலத்திலும் விளைந்த விளைபொருள்களை அளவுபார்த்து அரசாங்கத்தின் பங்கை நிர்ணயிப்பது நடைமுறையில் இயலாத காரியம் என்பது எளிதில் விளங்கும். ஆகவே இந்துக்காலத்திலிருந்தே நிலவரியை நிர்ணயிப்பதற்கு எளிய முறைகளைக் கண்டுபிடிப்பதற்காகப் பல முயற்சிகள் நடந்துகொண்டு வந்தன. துருக்கியர் ஆட்சியின் தொடக்கத்திலிருந்து இந்தத்துறையில் இருவித முறைகள் சிபார்சு செய்யப்பட்டன. ஒவ்வொரு குடியானவனும் செலுத்தவேண்டிய வரியை நிர்ணயிப்பதற்கு எளிய முறைகளைக் கையாளவேண்டுமென்று ஒருசாரார் கூறினார்கள். ஒவ்வொரு கிராமமும் செலுத்தவேண்டிய வரியை மொத்தமாக நிர்ணயித்து வசூல்செய்துவிடவேண்டுமென்று இன்னொருசாரார் கூறினார்கள். அதன்படி கிராமத்திலுள்ள குடியானவர்களில் ஒவ்வொருவனும் எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்பதைக் குடியானவர்களே முடிவு செய்துகொள்வார்களாகையால் அரசாங்கத்தின் வேலை குறைந்துவிடும். ஆனால், அந்த முறையின்படி ஒரு கிராமத்தின்மீது வரி விதிக்கப்பட்டால், அந்தக் கிராமத்திலுள்ள வலிய குடியானவர்கள் எளிய குடியானவர்களிடம் அநீதியாக நடந்து, அவர்களை அதிக வரி செலுத்துமாறு துன்புறுத்தக் கூடும். அதனால் அக்பர் அந்தமுறையை விரும்பவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு குடியானவனும் செலுத்தவேண்டிய வரியைத் தனித்தனியாக நிர்ணயிப்பதுதான் சிறந்தமுறை என்று அக்பர் தீர்மானித்தான். அதற்காக முதலில் ஷெர்ஷா ஏற்படுத்திய நிலவரி முறையை அக்பர் கையாண்டான். ஆனால், அந்த முறையை வெற்றிகரமாகக் கையாளமுடியாது என்பதை அக்பர் விரைவில் உணர்ந்தான். அதன்பின் அந்தத்துறையில் அக்பர் ஆராய்ச்சி செய்யத்தொடங்கினான். அதன் பயனாக ஷெர்ஷாவின் முறைக்குப் பதிலாக வேறொரு முறை புகுத்தப்பட்டது. அக்பர் ஏற்படுத்திய வரிவசூல் முறை நியாயமானதாகவும் வெற்றிகரமாகக் கையாளக்கூடியதாகவும் இருந்தது. ஆனால் தற்கால நிலவரி முறையுடன் அக்பர் காலத்து நிலவரி முறையை ஒப்பிட்டுப் பார்த்தால் அக்பர் காலத்தில் குடியானவர்கள் செலுத்தின வரி

மிக அதிகமானது என்ற முடிவுக்குத்தான் வரமுடியும். அக்பர் ஏற்படுத்திய புதியமுறை ஸாம்ராஜ்யத்தில் எல்லாப் பகுதிகளிலும் அனுசரிக்கப்படவில்லை. தென் சிந்திலும், அதையடுத்த மலைநாட்டிலும், வங்காளத்திலும், நர்மதைக்குத் தெற்கிலிருந்த சூபாக்களிலும், அக்பர் பழைய நிலவரி முறைகளையே அமுலிலிருக்குமாறு விட்டுவிட்டான். புதிதாகப் புகுத்திய முறை வங்காளம் நீங்கிய வட இந்தியச் சமவெளியில் அமுலிலிருந்தது.

குடியானவர்கள் பயிரிட்ட நிலங்களின் விஸ்தீரணத்திற்கும், பயிரின் தன்மைக்கும் ஏற்றவாறு வரித்தொகை நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு குறிப்பிட்ட விஸ்தீரணமுடைய நிலப்பகுதியிலும் குடியானவர்கள் விதைத்த பயிரின் சராசரி விளைவின் சராசரி விலையில் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரி என்று நிர்ணயிக்கப்பட்டது. பருவத் தொடக்கத்தில் பயிர்செய்ய முடிவு செய்யும்போதே குடியானவன் அறுவடைக்குப் பின்தான் அரசாங்கத்துக்கு எவ்வளவு வரி செலுத்த வேண்டியிருக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியும். பயிர் வளரத் தொடங்கியதும் அமிலின் மேற்பார்வையில் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு குடியானவனும் பயிரிட்ட நிலங்களையெல்லாம் அளந்து விடுவார்கள். அதனோடு பயிர்களின் வகைகளையும் குறித்துக் கொள்ளுவார்கள். அதன்பின் அமிலின் கீழ் வேலை செய்த உத்தியோகஸ்தர் தானியங்களின் அப்போதைய விலைகளுக்கு ஏற்றவாறு கணக்குப்போட்டு ஒவ்வொரு குடியானவனும் செலுத்தவேண்டிய வரித்தொகையை நிர்ணயிப்பார்கள். பின்னர் அறுவடைக் காலத்தில் அந்தத்தொகை குடியானவனிடமிருந்து வசூலிக்கப்படும். ஏதாவதொரு பயிர் சரியாக விளையாமலிருந்தால் அதற்கேற்றவாறு வரித்தொகை குறைத்து வசூலிக்கப்படும். இந்த முறை காலிசா நிலங்களுக்கும் ஜாகீர் நிலங்களுக்கும் பொதுவானது.

இந்த முறையில் ஒரு முக்கியமான குறையிருந்தது. ஒவ்வொரு குடியானவனும் அறுவடைக்காலத்தில் அரசாங்கத்திற்கு எவ்வளவு வரி செலுத்தவேண்டியிருக்கும் என்ற விஷயத்தை விதைப்புக் காலத்திலேயே தெரிந்துகொள்ள முடியும் என்றாலும், அறுவடையானபிறகு தானியங்களின் விலை எவ்வாறிருக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியாது. தானியங்களின் விலை இடத்திற்கிடமும், காலத்திற்குக் காலமும் அதிகமாக மாறிக்

கொண்டிருந்தது. தான் விதைத்த பயிர் சரியாக விளையவில்லை யென்றால் குடியானவன் அரசாங்கத்திற்கு வரி செலுத்தவேண்டியதில்லை. ஆனால், பயிர் நன்றாக விளைந்தபின்னர் விலை குறைந்து போனாலும், மிகுதியான விளைவினால் தன் தானியத்தை விற்க முடியாமற் போனாலும் குடியானவன் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய குறிப்பிட்ட தொகையைச் செலுத்த முடியாமல் திண்டாடுவான். இந்த நிலை 1585-க்கும் 1590-க்கும் இடையில் ஏற்பட்டது. தொடர்ச்சியாக வந்த நல்ல விளைவினால் டில்லிக்கும் அலகாபாத்துக்கும் இடையிலுள்ள பகுதியில் ஏராளமான தானியங்கள் விலைக்கு வாங்குவா ரற்றுக் கிடந்தன. தங்கள் நிலங்களில் விளைந்த தானியங்களை விற்கமுடியாத குடியானவர்களிடம் அரசாங்கத்திற்கு வரி செலுத்தப் பணமில்லை. அதனால் அரசாங்கத்தார் பெருவாரியான வரித்தொகைகளை வஜா செய்ய வேண்டியதாயிற்று.

அக்பருடைய நிலவரி வசூல் முறை அக்பருக்குப்பின் வெகு நாள் நிலைத்திருக்கவில்லை. அது எவ்வாறு ஏன் கைவிடப்பட்டது என்பதைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை. ஆனால் அக்பர் இறந்தபின் ஐம்பதாண்டுகளுக்குள் அந்த முறை கைவிடப்பட்டது என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது. அதன்பின் ஒவ்வொரு கிராமமும் மொத்தமாக எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்று ஆண்டுதோறும் அரசாங்கம் நிர்ணயித்து, அதைச் செலுத்தும் பொறுப்பைக் கிராமத்தலைவன் (முக்கடம்) மீது சுமத்தியது.

அமில் நிலவரியை நிர்ணயித்து அதை வசூல் செய்ததோடு, பயிர்த்தொழிலின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுத்து நிலவரியின்மூலம் அரசாங்கத்திற்கு வந்த வரும்படியை அதிகப்படுத்தவும் கடமைப்பட்டவன். தரிசாகக் கிடந்த நிலங்களைப் பண்படுத்தி அவற்றில் பயிர் செய்யவேண்டுமென்றும், உயர்ந்த விலை மதிப்புடைய விளைபொருள்களை நிலங்களில் அதிகமாகப் பயிரிடவேண்டுமென்றும் அமிலும் திவானும் குடியானவர்களைத் தூண்டி உற்சாகப்படுத்தவேண்டும். அதற்காக நிலவரியைக் குறைக்கவும், தேவையான மூலதனத்தைக் குடியானவர்களுக்குக் கொடுக்கவும் அவர்களுக்கு அதிகாரமிருந்தது. இவ்விஷயத்தில் அமிலும் திவானும் சந்தர்ப்பங்களுக்கேற்ற காரியங்களை மேலிடத்து உத்தரவில்லாமல் தாங்களே செய்துகொள்ளலாம். அமிலும் திவானும் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டு வேலைசெய்த மற்றைய உத்தியோகஸ்தர்களும் நேர்மையும்

திறமையும் உடையவர்களாக இருந்தால் மேலே கூறிய முறைகளால் பயிர்த்தொழிலில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டு, அதன் மூலம் குடியானவர்களும் அரசாங்கமும் பெரும்பயனடைய முடியும் என்பது நிச்சயம். விவசாய முன்னேற்றத்திற்காக அக்பர் வகுத்த திட்டம் எவ்வளவு தூரம் பயனளித்தது என்பது நமக்கு உறுதியாகத் தெரியாது. ஆனால் அக்பரது ஆட்சியில் குடியானவர்கள் கிளர்ச்சியும் கலகமும் செய்யாமல் அமைதியாக இருந்த தன்மூலம் அவர்கள் சௌக்கியமாகவும் மன நிறைவுடனும் வாழ்ந்தார்களென்று தெரிகிறது. அந்தக் காலத்திய சூழ்நிலையில் குடியானவர்கள் அமைதியுடனும் திருப்தியுடனுமிருந்தார்கள் என்றால் அவர்களுடைய தொழில் முன்னேற்றமடைந்திருக்கும் என்று சாதாரணமாக நினைக்கலாம்.

இத்தகைய சிறந்த நிலவரித் திட்டத்தை ஏற்படுத்திய பெருமை அக்பருக்கு மாத்திரம் உரியதன்று. அந்தத் திட்டத்தை உருவாக்குவதில் அக்பரும் பங்கெடுத்துக்கொண்டான் என்பது உண்மைதான். ஆனால் இன்னும் பலருடைய முயற்சியால்தான் அந்தத்திட்டம் முழு வளர்ச்சி யடைந்தது. அத்தகையவர்களில் மிக முக்கியமானவன் இராஜா தோடர்மால். தோடர்மால் ஓர் இந்து வியாபாரக் குடும்பத்தைச் சேர்ந்தவன். சாதாரணக் குமாஸ்தாவாக வாழ்க்கையைத் தொடங்கிய தோடர்மால் தன்னுடைய முயற்சியாலும், திறமையாலும் நிலவரி மந்திரிப் பதவிக்கு உயர்ந்தான். சிறிது காலம் அவன் பிரதம மந்திரியாகவும் இருந்தான். தோடர்மால் பல போர்களில் அக்பருடைய சேனையை வெற்றியுடன் நடத்தியிருக்கிறான். அக்பருடைய சேனாதிபதிகளில் தோடர்மாலே மிகத் திறமைவாய்ந்தவன் என்று கூறலாம். ஆனால் சண்டை முடிந்ததும் தோடர்மால் நிலவரி இலாக்கா வேலையைக் கவனிக்கச் சென்றுவிடுவான். தோடர்மாலுடைய புகழ் நாடெங்கும் பரவியது. பிரிட்டிஷ் ஆட்சியிற்கூட அவனுடைய திறமையை அளவுகோலாக வைத்துக்கொண்டு மக்கள் நிலவரி யிலாக்கா உத்தியோகஸ்தர்களின் திறமையை மதிப்பிட்டு வந்தார்கள். எனினும் தோடர்மாலிடம் பல கெட்ட குணங்களும் இருந்தன. அவன் முன் கோபமும் பிடிவாதமும் உடையவன். தனக்கு யாராவது தீங்கு செய்ததாக நினைத்தானானால் அவர்களை எப்படியாவது பழி வாங்குவதற்குச் சமயம் பார்த்துக்கொண்டேயிருப்பான். தோடர்மாலை அக்பர் பயன்படுத்திக்கொண்ட விதத்தைப் பார்த்தால் அக்பருடைய அபாரமான நிர்வாகத்திறமை நமக்கு விளங்கும். தோடர்மாலின் திறமையையும், புத்திகூர்மை

யையும் பயன்படுத்திக்கொண்ட அக்பர் அதே சமயத்தில் அவனுடைய கெட்ட குணங்களைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாமலும் பார்த்துக்கொண்டான். அதனால், பல காரியங்களைத் தோடர்மாலிடம் தனியாக ஒப்படைக்காமல், அவன் வழி தவறி நடக்கும்போது அவனைத் திருத்தத்தக்க வேறு மந்திரிகளையும் அவனுடன் வேலை செய்யுமாறு அக்பர் ஏற்பாடு செய்தான். தோடர்மால் இந்து மதக் கோட்பாடுகளைச் சிறிதும் தவறாமல் கடைப்பிடிப்பவன். அதனால் முதுமை வந்தெய்தியபோது அவன் அரசியல் அலுவல்களிலிருந்து விடுபட்டுக் கங்கைக் கரைக்குச் சென்று கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டான். ஆனால், அக்பர் அவனை மறுபடியும் அழைத்து அரசாங்க வேலைகளில் ஈடுபடுமாறு செய்தான். இறக்கும் வரையில் தோடர்மால் அரசாங்க உத்தியோகஸ்தனாகவே இருந்தான்.

இனி, அக்பர் காலத்தில் பயிர்த்தொழிலைத் தவிர வேறு தொழில்களில் ஈடுபட்டவர்களின் நிலைமையைக் கவனிப்போம். அவர்களிற் பெரும்பான்மையான மக்கள் குடியானவர்களுக்குத் தேவையான மட்டரகமான துணிகளையும், வேறு பல பொருள்களையும் செய்யும் தொழில்களில் ஈடுபட்டவர்கள். அக்பர் காலத்தில் குடியானவர்கள் செழிப்பாக இருந்தார்களென்று யூகிக்க இடமிருக்கிறது என்று முன்னர்க் கூறினோம். அதனால் அவர்களுக்குத் தேவையான பொருள்களைச் செய்யும் கைத்தொழில்களில் ஈடுபட்ட தொழிலாளிகளும் செழிப்பாகத்தான் இருந்திருப்பார்கள் என்று நினைக்கலாம். தொழிலாளிகளில் ஒரு சிறு பகுதியினர் அரண்மனைக்கும் பிரபுக்களுக்கும் தேவையான சுக போகப் பொருள்களைச் செய்யும் வேலையில் ஈடுபட்டார்கள். அக்பர் அரசாங்கத்தின் ஆதரவில் தொழில் நிலையங்களை ஏற்படுத்தி மிகத் திறமைவாய்ந்த தொழிலாளிகளை அவற்றில் வேலைக்கு வைத்துக்கொண்டான். அங்கு அவர்களுடைய வேலைக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கொடுக்கப்பட்டதோடு தொழில் முறைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆராய்ச்சி செய்வதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இந்தத் துறையில் அக்பர் காட்டிய ஆர்வம் மிகவும் போற்றத் தக்கது. அவனுடைய ஆதரவில் தொழிலாளிகளுக்கு நல்லவருமானம் கிடைத்ததோடு அவர்களுடைய தொழில்களும் பலவழிகளில் முன்னேற்ற மடைந்தன.

ஷேர்ஷாவைப்போலவே அக்பரும் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இராஜபாட்டைகளைக் காப்

பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். மேலும், இந்துக் காலத்திலும், முன்னைய முஸ்லிம் அரசர்களின் ஆட்சிக்காலத்திலும் வியாபாரத்தின்மீது விதிக்கப்பட்டிருந்த பலவேறு தொந்தரவான வரிகளை அக்பர் நீக்கினான். அக்பர் நாணயத்தையும் சீர் திருத்தினான். அலாவுதீன் தென்னிந்தியாவிலிருந்து கொள்ளையடித்துக் கொண்டுவந்த மிகுதியான தங்கமும் வெள்ளியும் நாணயங்களின் மதிப்பைக் குறைத்துப் பொருள்களின் விலையை உயர்த்துவதற்குக் காரணமாயிருந்தன என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். ஆனால், பதினான்காம் நூற்றாண்டின் முடிவிற்குள் தங்கத்திற்கும், வெள்ளிக்கும் மறுபடியும் அதிகக் கிராக்கி ஏற்பட்டது. அதனால் பொதுவாகத் தாமிர நாணயங்களே செலாவணியிலிருந்தன. ஷெர்ஷா மறுபடியும் வெள்ளி நாணயங்களைப் பொது உபயோகத்திற்குக் கொண்டுவந்தான். அவன் அச்சடித்து வழங்கிய வெள்ளி நாணயத்திற்கு ரூபாய் என்று பெயர். அந்த ரூபாய் ஒரு சில மாறுதல்களுடன் இன்றளவும் இந்தியாவில் வழங்கி வருகிறது. அக்பர் ஷெர்ஷாவின் ரூபாயுடன் அதற்குக் குறைந்த மதிப்புள்ள வேறு பல வெள்ளி நாணயங்களையும், தாமிர நாணயங்களையும் வழக்கத்திற்குக் கொண்டுவந்தான். அக்பர் தங்க நாணயங்களையும் அச்சடித்து வழங்கினான். ஆனால் அவைகளை மக்கள் சேமித்து வைத்துக்கொண்டார்களாதலால் அவைகள் பொதுச் செலாவணியிற் பயன்படவில்லை. அக்பருடைய நாணயங்கள் மிக அழகான வேலைப்பாடுகள் உடையவைகளாக இருந்தன. ஆனால் திருட்டுத்தனமாக அவற்றின் எடையைக் குறைத்து விடுவது எளிதாக இருந்தது. மேலும் தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களினுடைய மதிப்பின் தராதரமும் அடிக்கடி மாறிக்கொண்டிருந்தது. இத்தகைய காரணங்களால் வியாபாரிகள் தங்கள் பொருள்களின் மதிப்பைக் கணக்கிட்டு அதற்கேற்றவாறு பணம் கொடுப்பதற்கு எப்போதும்போல உலோக வியாபாரிகளின் துணையையே நாடவேண்டியிருந்தது.

அக்பருடைய ஆட்சிமுறை மிக வெற்றிதருவதாக இருந்தது என்பதை நாம் ஒத்துக்கொண்டபோதிலும், அதில் சில குறைகளும் இருக்கத்தான் செய்தன என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். அரசாங்க அலுவல்களில் அவ்வப்போது தோன்றிய ஊழல்களை அக்பரே நேரிற் கவனித்துச் சீர்ப்படுத்த வேண்டியிருந்தது. ஆகையால், எதேச்சாதிகாரியான அரசனுடைய ஆட்சியின் வெற்றியும், தோல்வியும் அந்த அரசனுடைய திறமையையும், திறமையின்மையையும் பொறுத்தவையே

தவிர ஆட்சிமுறையின் அமைப்பை மாத்திரம் பொறுத்தவை அல்ல என்ற முடிவுக்குத்தான் நாம் வரமுடியும். மற்ற மொகலாய அரசர்களைப்போலவே அக்பருக்கும் சில சமயங்களில் மிகக் கடுமையான கோபம் வருவதுண்டு. அரசாங்க விஷயங்களில் சில சமயங்களில் நியாயத்தையும் அநியாயத்தையும் கவனிக்காமல் தான் எடுத்த கருமத்தில் வெற்றி பெறுவதே கருத்தாயிருப்பான். ஆனால் சாதாரணமாக அக்பர் நீதிதவருது நடப்பவன் என்று உறுதியாகக் கூறலாம். அக்பர் ஓயாத உழைப்பாளி. குடிகளின் முறையீடுகளைக் கேட்பதற்கு எந்தச் சமயத்திலும் தயாராக இருந்தான். ஆங்காங்கு நடக்கும் விஷயங்களை அவ்வப்போது கவனித்துச் சொல்லுவதற்கேற்ற உளவாளிகளும் அவனிடம் ஏராளமாக இருந்தனர். அதனால் அரசாங்க உத்தியோகஸ்தர்களெல்லாரும் பொதுவாக நியாயம் தவருமல் நடந்தார்களென்று கருதலாம். இந்தத் துறையில் அக்பர் முழுவெற்றி அடைந்தான் என்று உறுதியாகக் கூற முடியாவிட்டாலும் அவன் வெற்றியின் சிகரத்திற்கு வெகு சமீபத்திற் சென்றுவிட்டான் என்றும், அவனுக்குப் பின் வந்த அரசர்கள் அவ்வளவுதூரம் வெற்றியடைய முடியவில்லை என்றும் கூறலாம். அரசாங்கத்தின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் அக்பருடைய ஆட்சி ஒப்பற்றதாக இருந்தது என்று சொல்லமுடியும். செலவைவிட வருவாய் அதிகமாக இருந்ததால் ஒவ்வோராண்டும் கஜானுவின் செல்வம் அதிகரித்துக்கொண்டே யிருந்தது. அந்தச் செல்வத்தோடு சண்டையிற் கிடைத்த பொருள்களும் சேர்ந்ததால் அரசாங்கக் கஜானுவில் செல்வம் பெருகி வழிந்தது. ஆகவே அக்பர் உலகத்திலேயே மிகப் பணக்கார அரசனுக இருந்தான் என்று கூறப்படுகிறது.

அதிகாரம்—30

ஜஹாங்கீர்

ஜஹாங்கீர் பட்டத்திற்கு வந்தபோது அவனுக்கு வயது முப்பத்தாறு. அதனுல் அவன் உலக அனுபவமுடையவனுயிருந்தான். அக்பருக்கு விஷம் வைத்துவிட்டதாக அவனைப் பற்றிப் பெரிய சந்தேகம் இருந்தது என்று நாம் முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். ஆனுல், அதைப்பற்றிச் சரியான சான்று கிடைக்கவில்லை. எனினும் அக்பருடன் மிக நெருங்கிப் பழகிய

வர்களெல்லாம் அவனுடைய இறப்புக்கு ஜஹாங்கீர்தான் காரணமென்று நம்பினார்கள். ஜஹாங்கீரின் குணாதிசயங்களைப்பற்றி நாம் அறிந்துகொள்ளுவதற்கு நல்ல ஆதாரங்கள் இருக்கின்றன. அவனே எழுதிவைத்த சுயசரிதக் குறிப்புக்களைத் தவிர, அவனுடைய ஸம்ஸ்தானத்திற்கு வந்து சென்ற டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் அவனுடைய ஸம்ஸ்தானத்திலேயே பல ஆண்டுகள் தங்கியிருந்த ஏசு சங்கப்பாதிரிகளும் எழுதி வைத்த குறிப்புக்களும் ஜஹாங்கீரைப்பற்றி அறிந்துகொள்ளுவதற்குச் சிறந்த ஆதாரங்களாக இருக்கின்றன.

அக்பருடைய குணங்கள் பலவற்றை ஜஹாங்கீரிடமும் காண்கிறோம். ஜஹாங்கீர் அதிகார விருப்பமும் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் உடையவன். அவனுக்குச் சில சமயங்களில் கடுங்கோபம் வருவது உண்டு. ஆனால் சாதாரணமாக அவன் நியாயமாகவும், பிறருக்குத் துன்பம் உண்டாகாமலும் நடப்பவன். இராஜ்ய பரிபாலனத்தில் புத்தி சாலித்தனமும் திறமையும் உடையவன். விளையாட்டில் விருப்பமும், இயற்கைச் சாஸ்திரத்தில் ஆர்வமும் உடையவன். ஆனால் அவன் மிகுந்த சோம்பல் உடையவன். எடுத்த காரியத்தை முடிப்பதில் அக்பருக்கிருந்த தளராத ஊக்கமும் மனவலியும் ஜஹாங்கீரிடம் இல்லை. அதனால் தன்னுடைய கீர்த்தியைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை அவனுக்கிருந்தாலும் அதற்கான திட்டங்களை வகுக்கவில்லை. அதுபோலவே புதிய விஷயங்களை அறிந்துகொள்ள ஆவலிருந்தபோதிலும் அவற்றைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்யாமல் நுனிப்புல் மேய்பவனாக இருந்தான். ஒரு சமயம் மிதமின்றி மதுபானம் செய்ததனால் மிகுந்த உடல் நலிவுற்றான். அதன் தீமையை உணர்ந்தபின் மதுபானத்தை ஓரளவுக்குள் நிறுத்திக்கொண்டான். ஆனால் ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் தவறாது குடித்ததனால் ஏறக்குறைய மயக்க நிலையிலேயே அவன் படுக்கைக்குப் போவது வழக்கமாகிவிட்டது. விரைவில் இராஜ்யபரிபாலன விஷயத்தில் சலிப்புற்ற ஜஹாங்கீர் அவ்விஷயத்தைத் தன் மனைவியான நூர்ஜஹான் கையில் விட்டுவிட்டான். அவள் நல்ல திறமை வாய்ந்தவள். அவளும், அவளுடைய தந்தையும், பிரதம மந்திரியாயிருந்த அவளுடைய சகோதரனும் சேர்ந்து இராஜ்ய பரிபாலனம் முழுவதையும் நடத்தினார்கள். மதவிஷயத்தில் ஜஹாங்கீரின் கருத்துக்கள் அவனுடைய குணாதிசயங்களுக்குப் பொருத்தமாகவே இருந்தன. இஸ்லாம் மத ஸ்தாபகரான முகமது நபிக்கு எந்த வகையிலும் தான் தாழ்ந்

தவன் அல்லன் என்று அவன் கருதினான். ஏசு சங்கப்பாதிரிகளுடனும், இந்து சந்நியாசிகளுடனும் உரையாடுவதில் அவன் மிகுந்த விருப்பம் காட்டினான், ஆனால் அந்த விஷயத்தில் அவன் உண்மையில் சிரத்தையுடையவனாகத் தோன்றவில்லை. அவன் கிறிஸ்துவ மதத்தைத் தழுவுவான் என்று கிறிஸ்தவப் பாதிரிகள் நினைத்ததற்கு அவர்களுடைய ஆர்வமும், ஜஹாங்கீருடைய மரியாதையான நடத்தையும்தான் காரணமாயிருக்கவேண்டும்.

இத்தகைய அரசனுடைய ஆட்சியில் இராஜ்யம் மேலும் மேலும் பெருகாதது வியப்பன்று. அக்பர் அகமது நகரத்தை ஜெயிப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தையுங்கூட ஜஹாங்கீரின் காலத்தில் முகலாயர்கள் இழந்துவிட்டார்கள். அந்த முனையில் சண்டை அவ்வப்போது நடந்துகொண்டுதான் இருந்தது. ஆனால், அதனால் ஒரு முடிவும் ஏற்படவில்லை. மேற்கில் காண்டஹாரைப் பாரசீகர்கள் மறுபடியும் கைப்பற்றிக் கொண்டார்கள். அதைப் பாரசீகர்கள் கைப்பற்றிக் கொள்ளாமல் காப்பதற்கு ஜஹாங்கீர் ஒரு பெரிய திட்டம் வகுத்தான். ஆனால் அந்தச்சமயத்தில் அவனுடைய மகன் ஷாஜஹான் அவனுக்கு எதிராகக் கலகம் செய்யவே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் மீவார் அரசனுடன் சண்டை செய்து அவனை மொகலாய ஏகாதிபத்தியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்ததுதான் ஜஹாங்கீர் சாதித்த குறிப்பிடத்தக்க காரியம்.

அரசியல் துறையில் அக்பர் கொள்கைகளையே ஜஹாங்கீரும் பின்பற்றினான். இராஜபுத்திரர்களுடைய நட்பையும், இந்துக்களின் அன்பையும் சம்பாதித்துக்கொள்வது அவனது ஆட்சியின் முக்கிய நோக்கங்கள். ஆனால், அரசியல் அதிகாரம் நூர்ஜஹான் கைக்கு மாறின பிறகு ஆட்சி முறையின் உயர்வு குறைந்துவிட்டது. அவளும் அவளுடைய உறவினர்களும் தங்கள் கையிலேயே அரசியலதிகாரம் நிரந்தரமாக இருக்கும் என்று நினைக்க முடியாததால், தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக் கொள்வதிலும், தங்களுக்காகப் பொருளைச் சேமித்துக் கொள்ளுவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார்களே தவிர இராஜ்யம் நல்ல நிலைமையில் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. அரசாங்க உத்தியோகஸ்தர்களும் தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை. அவர்களுள் கட்சிகள் ஏற்பட்டுவிட்டன. அவர்களுள் சிலர் திடீரென்று உயர்பதவிகளைப் பெற்றார்கள். அதைப்போலவே வேறு சிலர் திடீரென்று உத்தியோ

கத்திலிருந்து நீக்கப்பட்டார்கள். அதனால் உத்தியோகஸ்தர்களெல்லாம் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளத் தொடங்கினார்கள். இராஜ்யத்தில் பெருங்குற்றங்கள் மலிந்தன. இராஜபாட்டைகளில் வழிப்போக்கர்களுக்கு ஆபத்து அதிகரித்தது. பூஜ்தார்களும், ஹக்கிம்களும் கொள்ளைக் கூட்டத்தினர்களுக்கு ஆதரவு அளித்து, அவர்கள் கொள்ளையடித்த பொருள்களிற் பங்கு வாங்கிக்கொண்டார்கள் என்று சந்தேகிக்க இடமிருக்கிறது. உல்லாச வாழ்க்கையில் விருப்பமும், ஆடம்பரத்தில் ஆர்வமும் அதிகரித்ததால் உத்தியோகஸ்தர்களெல்லாரும் எவ்வளவு செல்வத்தைச் சுரண்ட முடியுமோ அவ்வளவையும் சுரண்ட முயன்றார்கள். ஜாகீர்களைக் கொடுப்பதும், அவற்றைத் திடீரென்று பிடுங்கிக் கொள்வதும் வழக்கமாகிவிட்டதால் ஜாகீர்தார்கள் குடியானவர்களிடமிருந்து அதிக வரியை வசூலிப்பதும், மறுபடியும் ஜாகீர்களைப் பெறுவதற்காக லஞ்சம் கொடுப்பதும் சகஜமாகிவிட்டது. அதனால் குடியானவர்கள் நிலை மோசமாகிவிட்டது. அரசாங்கத்தின் பொருளாதார நிலையும் மோசமாகிவிட்டது. ஆண்டுதோறும் வரவைவிடச் செலவு அதிகரித்தது. அதனால் அக்பர் காலத்தில் நிறைந்து வழிந்த கஜானாக் கொஞ்சங் கொஞ்சமாகக் காலியாயிற்று. இவற்றையெல்லாம் ஜஹாங்கீர் உணர்ந்தானா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், அந்த ஊழல் நிறைந்த நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கு அவன் எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்பது மாத்திரம் உறுதியாகத் தெரிகிறது. வழக்கம்போல அவன் காலையில் குதிரைசவாரி செய்தான். மாலையில் பெரிய மனிதர்களுக்குப் பேட்டியளித்தான். அவனுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் வேனிற்காலத்தைக் காஷ்மீரத்திற் கழிக்கும் வழக்கத்தை அவன் மேற்கொண்டான். இவ்வாறு வாழ்வின் சுகபோகங்களை அனுபவிப்பதை அவன் கடைசிவரையில் கைவிடவில்லை. ஆனால் அரசியல் விஷயங்களைப்பற்றிய வேலையை அவன் வெகு காலத்திற்கு முன்னரே மறந்துவிட்டான்.

டச்சுக்காரர்களும், ஆங்கிலேயரும் இந்தியாவின் கடற்கரையில் வியாபாரஸ்தலங்களை ஸ்தாபிக்கத் தொடங்கியது ஜஹாங்கீர் காலத்தில்தான். ஆனால் அப்போது அந்த விஷயம் யாருடைய கவனத்தையும் அதிகமாகக் கவரவில்லை. அது இந்திய வரலாற்றை எவ்வளவுதூரம் மாற்றியது என்பதை இப்போது நாம் அறிகிறோம். அந்த வியாபாரிகள் ஏன் ஆசியாவுக்கு வந்தார்கள் என்ற காரணங்களை விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் பதினாறும் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்த மேற்கு

ஐரோப்பிய வரலாற்றின் பெரும்பகுதியைச் சுருக்கிக் கூறுதல் அவசியமாகும். ஆனால் நாம் அவ்வாறு செய்யப்போவதில்லை. 1596-ஆம் ஆண்டிலிருந்து தனிப்பட்ட டச்சு வியாபாரிகள் ஜாவாவுடனும் சுமத்திராவுடனும் சிறந்த வியாபாரம் செய்து வந்தார்கள் என்றும், பின்னர் அவர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து 1602-ஆம் ஆண்டில் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவினார்களென்றும், 1600-ஆம் ஆண்டில் எலிசபத் இராணியிடம் சாசனம் பெற்று ஆங்கிலேயர்களும் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற ஒரு வியாபாரக் கம்பெனியை ஸ்தாபித்தார்கள் என்றும் சுருக்கமாகக் கூறுவதோடு அமைகிறோம். டச்சுக் கம்பெனி அரசாங்க ஆதரவு பெற்றிருந்ததால் அதற்கு ஏராளமான மூல தனமும் வேண்டிய அதிகாரமும் இருந்தன. அதனால் முதலிலிருந்தே டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்தை அழித்து, அவர்கள் தனியுரிமையுடன் செய்து வந்த வியாபாரத்தைத் தங்கள் தனியுரிமையாக்கிக் கொள்ளும் திட்டத்துடன் வேலை செய்தார்கள். அதற்கேற்றவாறு டச்சுக்காரர்கள் எதிர்க்கத் தொடங்கியதும் போர்ச்சுக்கீசிய ஆதிக்கம் அழிந்தது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியோ என்றால் அரசாங்கத்தின் தொடர்பற்ற வெறும் வியாபார ஸ்தாபனம். ஆங்கிலேயர்கள் விரும்பியதெல்லாம் டச்சுக்காரர்கள் தனியுரிமையுடன் செய்த வியாபாரத்தில் ஒரு பங்குதான். இந்த இரு நாட்டினர்க்குள்ளும் ஏற்பட்ட போட்டி ஜஹாங்கீரின் ஆட்சியில் ஒருவாறு முடிவுபெற்றது. அதன் விளைவாக டச்சுக்காரர்கள் ஜாவாவில் தங்கள் தலைநகரை ஏற்படுத்திக்கொண்டு பட்டேவியாவுக்குக் கிழக்கில் தனியுரிமையுடன் வியாபாரம் செய்தார்கள் ; அதற்கு மேற்கில் டச்சுக்காரர்கள் மாத்திரமின்றி ஆங்கிலேயரும் வியாபாரம் செய்தனர். அந்த இருநாட்டினர்க்கிடையிலும் வியாபாரத் துறையில் பலத்த போட்டியிருந்தது.

இனி ஐரோப்பிய வியாபாரக் கம்பெனிகளின் வளர்ச்சியைப் பற்றி இங்குச் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம். தொடக்கத்தில், ஐரோப்பியர்கள் கீழ்நாடுகளில் தங்களுக்கென்று வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. அவர்கள் தங்கள் வியாபாரப் பொருள்களைக் கப்பல்களில் ஏற்றிக்கொண்டு நேராகக் கீழ்நாட்டுத் துறைமுகங்களையடைந்து, அங்குத் தாங்கள் கொண்டு வந்த பொருள்களில் எவ்வெவற்றை எவ்வளவுதூரம் விற்க முடியுமோ அவ்வளவு விற்றுவிட்டு, தங்களுக்குத் தேவையான பட்டு, வாசனைத் திரவியங்கள், மருந்துச்சரக்குகள் முதலிய

வற்றை வாங்கிக்கொண்டு, எவ்வளவு விரைவில் திரும்பிச் செல்ல முடியுமோ அவ்வளவு விரைவில் திரும்பிச் சென்றுவிடுவது வழக்கம். கீழ்நாட்டுத் துறைமுகங்களில் அதிகநாள் தங்கினால் அவர்களுக்கு வட்டி நஷ்டம் ஏற்படுவதோடு கப்பல்களும் சீர் கேடடையும். அதுவுமன்றி மாலுமிகளின் உடல் நிலையும் கெடலாம். ஐரோப்பிய வியாபாரிகள் விரைவில் திரும்பிச் செல்லவேண்டிய நிலையில் இருந்தார்கள் என்ற விஷயத்தை ஜாவாவிலும், சுமாத்திராவிலும் இருந்த வியாபாரிகள் நன்றாக அறிந்திருந்தார்களாதலால் அவர்கள் ஐரோப்பியர்களிடமிருந்து வாங்கிய பொருள்களின் விலையைக் குறைப்பதற்கும், அவர் களுக்கு விற்ற பொருள்களின் விலையை உயர்த்துவதற்கும் ஏற்ற நிலையில் இருந்தார்கள். அதனால், ஐரோப்பியர்கள் லாபகர மாக வியாபாரம் செய்யவேண்டுமானால் கீழ்நாடுகளில் தங்கள் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தி அங்குத் தங்களுடைய காரியஸ் தர்களை வைப்பது இன்றியமையாதது என்பதை உணர்ந்தார்கள். அந்தக் காரியஸ்தர்கள் ஐரோப்பியர் கொண்டுவந்த வியாபாரப் பொருள்களைச் சாவதானமாக விற்றுவிட்டு, அவர்களுக்குத் தேவையான பொருள்களைச் சாவதானமாக வாங்கி, அடுத்த தரம் கப்பல்கள் வந்து ஏற்றிக்கொண்டு போகும் வரையில் அவைகளை வியாபார ஸ்தலங்களில் வைத்திருக்க முடியும். அவ்வாறு வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்த வேண்டுமானால் ஆங்காங் கிருந்த அரசர்களை அணுகி, அவர்களுடைய அனுமதியைப் பெறுவது அவசியம். அவ்வாறு அனுமதி பெற்று முதலில் டச்சுக்காரர்களும், பின்னர் ஆங்கிலேயர்களும் பாண்டம் (ஜாவா) முதலிய இடங்களில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தினார்கள்.

வியாபார ஸ்தலத்தில் ஐரோப்பிய வியாபாரிகளின் வீடுக ளும், அலுவலகங்களும், வியாபாரப் பொருள்களை வைப்பதற்கு ஏற்ற கிடங்குகளும் இருந்தன. அந்தப் பகுதியிலிருந்த அரசன் திறமையுடையவனாக இருந்தால் அந்த வியாபார ஸ்தலத்திற்கும் அங்கிருந்த ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் எந்தவிதமான தீமை யும் ஏற்படாது. ஆனால் அரசன் திறமையற்றவனாக இருந்தால் அவன் விரும்பினாலுங்கூட வியாபார ஸ்தலத்திற்குக் காப்பு அளிக்க முடியாது. அந்நிலையில் தற்காப்புக்காக வியாபார ஸ்தலங்களிற் கோட்டைகளைக் கட்டிக்கொள்ளவும், வேறு காப்பு வசதிகளைச் செய்துகொள்ளவும் ஐரோப்பியர்கள் ஆங்காங்கிருந்த அரசர்களின் அனுமதியைப் பெற்றார்கள். அரண்பெற்ற வியா பார ஸ்தலங்களை, வெளியில் ஏற்பட்ட குழப்பங்களும், அண்மை

யிலிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பேராசையும் பாதிக்க முடியாது என்பதை விரைவில் உணர்ந்த ஐரோப்பியர்கள் மேலும் மேலும் கோட்டைகளைக் கட்டத் தொடங்கினார்கள் அதனால் நாளடைவில் இந்தியாவின் கடற்கரையில் பல கோட்டைகள் தோன்றின. ஆனால் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்தில் மொகலாயர் ஆட்சிக் குட்பட்ட பிரதேசத்தில் இத்தகைய கோட்டை ஒன்றும் கட்டப்படவில்லை. மொகலாய ஆட்சிக்கு வெளியிலிருந்த தென்னிந்தியாவில் டச்சுக்காரர்கள் ஜஹாங்கீரின் ஆட்சி முடிவதற்கு முன்னரே ஒரு கோட்டையைக் கட்டி முடித்தார்கள். அதன் அருகில் ஆங்கிலேயரும் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அதேமாதிரி டேனிஷ்காரர்களும் தென்னிந்தியாவில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். ஆனால் அவர்கள் இந்திய வரலாற்றில் முக்கிய இடம் பெறவில்லை. இவ்வாறு ஐரோப்பிய வியாபாரக் கம்பெனிகளின் வளர்ச்சியில் மூன்று படிகளைப் பார்க்கிறோம், முதலில் ஐரோப்பிய வியாபாரிகள் கீழ்நாடுகளில் வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்தாமல் வியாபார நிமித்தம் அங்கு வந்து விரைவில் திரும்பிச் சென்றுவிடுவது வழக்கமாயிருந்தது ; அடுத்தபடியாக அவர்கள் கீழ்நாடுகளில் தங்கள் சொந்த வியாபார ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள் ; கடைசியாக அவர்கள் அந்த வியாபார ஸ்தலங்களில் கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள்.

தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் முதலில் கிழக்கிந்தியத் தீவுகளுடன் வியாபாரம் செய்தார்கள். ஆனால், அங்கு ஐரோப்பியச் சரக்குகளுக்குக் கிராக்கியில்லை. மேலும் டச்சுக்காரர்கள் அங்கு வாங்கிய பொருள்களுக்குப் பதிலாக வெள்ளியைக் கொடுத்தார்கள். அதற்கும் அங்குக் கிராக்கியில்லை. ஆனால் இந்தியப் பருத்தித் துணிகளுக்கு அங்கு ஏராளமான கிராக்கியிருந்தது. ஆதலால், அந்தத் துணிகளை அவை நெய்யப்பட்ட இடமாகிய இந்தியாவிலேயே வாங்குவது லாபகரமாக இருக்கும் என்பதையும், இந்தியாவில் வெள்ளிக்கு எப்போதும் அதிகக் கிராக்கி இருந்தது என்பதையும் உணர்ந்த டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் குஜராத்துக்கு 1601-ஆம் ஆண்டிலும், சோழமண்டலக் கடற்கரைக்கு 1603-ஆம் ஆண்டிலும் வந்தார்கள். குஜராத்து வியாபாரத்தில் தொடக்கத்தில் டச்சுக்காரர்களுக்கு நஷ்டந்தான் ஏற்பட்டது. அதனால், அவர்கள் சூரத்தில் ஒரு வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்

திச் சரியானபடி வியாபாரம் தொடங்குவதற்குப் பல ஆண்டுகள் சென்றன. கி. பி. 1620-முதல் 1629-வரையில் சூரத்து வியாபார ஸ்தலத்திற்கு பீட்டர் வான்டென் புரோக் என்பவன் மானேஜராக இருந்தான். அவனுடைய திறமையால் டச்சுக்காரர்கள் மேற்கிந்திய வியாபாரத்தில் மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பான நிலையை அடைந்தார்கள். சோழமண்டலக் கடற்கரையில் தொடக்கத்திலிருந்தே டச்சுக்காரர்களின் வியாபாரம் நல்ல நிலையிலிருந்தது. கோல்கொண்டா இராஜ்யத்தின் முக்கியத் துறைமுகமான மசூலிப்பட்டினத்தில் அவர்கள் 1606-ஆம் ஆண்டில் ஒரு வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்தினார்கள். 1610-ஆம் ஆண்டில் அவர்கள் பழவேற்காடு என்னும் இடத்தில் ஒரு வியாபாரஸ்தலத்தை ஏற்படுத்தினார்கள். அது மசூலிப் பட்டணத்தை விட முக்கியமானது. அங்கிருந்த தொழிலாளிகள் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்த மக்கள் விரும்பியுடுத்த துணிகளை நெய்வதில் தனிப்பட்ட பயிற்சியும் திறமையும் பெற்றிருந்தார்கள். பழவேற்காடு சென்னைக்கு வடக்கில் இருபது கல் தொலைவிலிருக்கிறது.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் பழவேற்காட்டு வியாபார ஸ்தலத்தில் டச்சுக்காரர்கள் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். அவ்வாறு அவர்கள் செய்ததற்கு என்ன காரணம் என்பதை இங்குச் சுருக்கமாகக் கூறுகிறோம். பழவேற்காடு விஜயநகர அரசன் ஆட்சியிலிருந்த ஓர் இடம். முதலில் டச்சுக்காரர்கள் அந்த இடத்தில் ஒரு வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்துவதற்கு அனுமதி கேட்டபோது, அங்கு அவர்கள் கோட்டையையும் கட்டிக்கொள்ள விரும்பினால் அதற்கு அனுமதி தருவதாக விஜயநகர அரசன் கூறினான். ஆனால், கோட்டை கட்டுவதற்கு மிகுந்த செலவாகும் என்றஞ்சிய டச்சுக்காரர்கள் அரசனுடைய காப்பிலேயே இருக்க விரும்பினார்கள். அதற்கு அரசனும் உடன்படவே, டச்சுக்காரர்கள் பழவேற்காட்டில் தங்கள் வியாபார ஸ்தலத்தை நிறுவினார்கள். கோவாவிலிருந்த போர்ச்சுகீசிய கவர்னருக்கு அடங்காமல் ஏறக்குறைய சுயேச்சையாக இருந்த பல போர்ச்சுகீசியக் குடியேற்றங்கள் இந்தியாவின் கிழக்குக்கரையில் இருந்தன என்று முன்னோர் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். அத்தகைய இடங்களில் சேன்தோம் என்பது ஒன்று. டச்சுக்காரர்கள் பழவேற்காட்டில் வியாபாரத்தைத் தொடங்கிய சில நாட்களுள் சேன்தோமிலிருந்த போர்ச்சுகீசியர்கள் பழவேற்காட்டின்மீது படையெடுத்து, அதைத் தீயிட்டு அழித்தார்கள்.

பழவேற்காட்டுக்குக் காப்பு அளிக்கவேண்டியது தன்னுடைய கடமை என்பதை விஜயநகர அரசன் நன்குக உணர்ந்தான் எனினும், போர்ச்சுக்கீசியர்களை அடக்குவதற்கு அவனுக்கு வலிமையில்லை. அதனால் பழவேற்காட்டில் ஒரு கோட்டையைக் கட்டி, அதன் காவலுக்காக டச்சுப்படைகளையும் தன்னுடைய படைகளையும் ஒன்றுகச் சேர்த்து வைத்துக்கொள்ளுவதற்கு அவன் இணங்கி, கோட்டையைக் கட்டும் வேலையையும் உடனே தொடங்கினான். ஆனால் மறுபடியும் போர்ச்சுக்கீசியர் பழவேற்காட்டின்மீது படையெடுப்பார்கள் போலிருந்ததால் வேலை பாதியில் நின்றுவிட்டது. அதைக்கண்ட டச்சு வியாபாரஸ்தலங்களின் தலைவன் அரசனுடைய உதவியை எதிர்பாராமல் தானே கோட்டையைக் கட்டி முடித்தான். அதன்பின் அதில் டச்சுப் படைகளும் இந்தியப்படைகளும் வைக்கப்பட்டன. ஆனால் அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டதால் விஜயநகர அரசன் தன்னுடைய படைகளைக் கோட்டையிலிருந்து திருப்பி அழைத்துக்கொண்டான். அதனால் அந்தக் கோட்டைக்கு டச்சுக்காரர்களே அதிகாரிகளானார்கள். அதிலிருந்து தான் ஐரோப்பிய வியாபாரிகள் தற்காப்புக்காக இந்தியாவில் கோட்டைகளைக் கட்டிக்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. ஜஹாங்கீரின் ஆட்சி முடிவதற்குள் டச்சுக்காரர்களின் இந்திய வியாபாரம் சிறந்த நிலையை அடைந்துவிட்டது. அவர்களுக்குப் பழவேற்காட்டில் ஒரு கோட்டையும், மசூலிப்பட்டணத்திலும் சூரத்திலும் வியாபார ஸ்தலங்களும் இருந்தன. அவற்றைத் தவிர அவர்கள் வேறு பல இடங்களிலும் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால், அவைகளையெல்லாம் நிரந்தரமாக வைத்துக்கொள்ளாமல் தேவை தீர்ந்ததும் மூடிவிடுவது வழக்கம். அத்தகைய இடங்களில் முக்கியமானது மொகலாய ராஜ்யத்தின் தலைநகரான ஆக்ரா.

டச்சுக்காரர்களைப் போலவே ஆங்கிலேயர்களும் வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் இந்தியாவுக்கு வந்தார்கள். ஐரோப்பாவுக்கும் கீழ்நாடுகளுக்கும் நடந்த வியாபாரத்தில் வாசனைத் திரவியங்கள்தாம் மிக முக்கியமான வியாபாரச் சரக்குகள். அந்த வியாபாரத்தில்தான் டச்சுக்காரர்கள் மிக அதிகமாக ஈடுபட்டார்கள். ஆனால் ஆங்கிலேயர்கள் அத்துடன் வேறு பல பொருள்களிலும் வியாபாரம் செய்யக்கருதி அதற்காகப் புதிய மார்க்கட்டுகளை ஏற்படுத்தவேண்டுமென்று பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்திலேயே தீர்மானித்தார்

கள். அதற்கு ஜஹாங்கீரின் உதவியை ஆங்கிலேயர்கள் எதிர் பார்த்தார்கள். வில்லியம் ஹாக்கின்ஸ் என்ற ஆங்கிலேயன் 1608-ஆம் ஆண்டில் சூரத்திற்கு வந்து இறங்கி, அங்கிருந்து ஆக்ராவுக்குச் சென்று ஜஹாங்கீரைச் சந்தித்து அவனுடைய பிரியத்தைச் சம்பாதித்துக்கொண்டான். ஆனால் ஜஹாங்கீரின் ஸம்ஸ்தானத்திலிருந்த போர்ச்சுகீசியப் பாதிரிகள் ஆங்கிலேயருக்கு எந்த விதமான வியாபாரச் சலுகையும் கிடைக்காதபடி செய்துவிட்டார்கள். அதனால் ஹாக்கின்ஸ் ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாமல் திரும்பினான். அதற்குள்ளாக ஹாக்கின்ஸ் ஏறிவந்த ஹெக்டர் என்ற கப்பலைத்தவிர வேறு பல ஆங்கிலக் கப்பல்களும் சூரத்துக்கு வந்து சேர்ந்தன. அந்தச் சமயத்தில் மொகலாயருக்கும் போர்ச்சுகீசியருக்கும் ஒரு சச்சரவு ஏற்பட்டதால், மொகலாயர்கள் புதிதாகவந்த ஆங்கிலேயர்களை வரவேற்று, சூரத்தில் ஒரு வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு அவர்களுக்கு அனுமதி கொடுத்தார்கள். அதன் பயனாக 1612-ஆம் ஆண்டில் சூரத்தில் ஆங்கிலேயர்களுடைய வியாபாரஸ்தலம் நிறுவப்பட்டது. ஆனால் ஆங்கிலேயர்களுக்கு மொகலாயர்கள் அளித்த சலுகைகள் அவ்வளவாக லாபகரமானவையாக இல்லாமையால் முதலாம் ஜேம்ஸ் என்ற ஆங்கில அரசன் ஜஹாங்கீருடன் ஒரு சரியான உடன்படிக்கை செய்துகொள்ளும் நோக்கத்துடன், சர் தாமஸ் ரோ என்ற ஒரு தூதனை இந்தியாவுக்கு அனுப்பினான். ரோ, 1615-முதல் 1619-வரை இந்தியாவிலிருந்தான். ஆனால், இங்கிலாந்துடன் உடன்படிக்கைசெய்து கொள்ளுவதற்கு ஜஹாங்கீரை இணங்கவைக்க ரோவால் முடியவில்லை. எனினும், அவனுடைய முயற்சியால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்குச் சில முக்கியமான சலுகைகள் கிடைத்தன. அதன்பயனாகச் சூரத்தில் நிறுவப்பட்ட வியாபாரஸ்தலத்தோடு, அதன் கிளைகள் பலவற்றையும் ஆங்கிலேயர்கள் ஏற்படுத்தினார்கள். மேலும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியின் வியாபாரக் கப்பல்கள் சோழமண்டலக் கடற்கரைக்கும் சென்றன. 1616-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் மசூலிப்பட்டினத்திலும் ஒரு வியாபாரஸ்தலத்தை ஏற்படுத்தினார்கள். பத்தாண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயர்கள் பழவேற்காட்டிற்கு வடக்கில் சிறிது தூரத்தில் ஆர்மகான் என்ற இடத்தில் ஒரு வியாபாரஸ்தலத்தை நிறுவி அங்கு ஒரு கோட்டையையும் கட்டிக்கொள்வதற்கு அனுமதி பெற்றார்கள்.

டச்சுக்காரர்களுடைய வருகையையும் ஆங்கிலேயர்களுடைய வருகையையும் இந்தியர்கள் விரும்பியதற்குத் தக்க கார

ணங்கள் இருந்தன. அவர்கள் இந்தியர்கள் விரும்பிய பொருள் களைக் கொண்டுவந்து விற்றதுமன்றி, இங்கிருந்து வாங்கிக் கொண்டுபோன பொருள்களின் விலையை ரொக்கமாகக் கொடுத் தார்கள். குஜராத்தைப் பொறுத்தவரையில் மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. அங்கிருந்த மக்கள் அதுவரையில் தனி யுரிமையுடன் வியாபாரம் செய்த போர்ச்சுகீசியர்களுக்குப் போட் டியாக வேறு ஐரோப்பியர்கள் வருவதை விரும்பினார்கள். தனிப்பட்ட ஓர் ஐரோப்பிய நாட்டினர் வியாபாரம் செய்வதை விட இரண்டு மூன்று நாட்டினர் ஒருவரோடொருவர் போட்டி யிட்டுக்கொண்டு வியாபாரம் செய்தால் தங்களுடைய வருமானம் அதிகரிக்குமென்று குஜராத்திலிருந்த மொகலாய உத்தியோகஸ் தர்கள் உணர்ந்தார்கள். அதனால் டச்சுக்காரர்களுக்கும் ஆங்கி லேயர்களுக்கும் இடையில் இருந்த போட்டியை அதிகப்படுத்து வதற்கு ஏற்றமுறையில் மொகலாய உத்தியோகஸ்தர்கள் நடந்து கொண்டார்கள்.

பெருகிக்கொண்டேவந்த இந்திய வியாபாரத்தால் இந்தியர் கள் ஐரோப்பியர்கள் ஆகிய இருதிறத்தார்க்கும் இலாபம் ஏற் பட்டதால் இருதிறத்தாரும் திருப்தியடைந்தார்கள். எனினும் அவர்களுக்குள் சச்சரவுகளும் ஏற்பட்டுக் கொண்டுதானிருந்தன. ஆங்காங்கிருந்த அரசர்களின் அனுமதிபெற்று வியாபாரஸ்தலங் களை ஏற்படுத்திக்கொண்ட ஐரோப்பியர்கள் அந்த வியாபார ஸ்தலங்களின் விஷயங்களில் மறுபடியும் அரசர்கள் தலையிடுவதை விரும்பவில்லை. ஆனால் இந்திய அரசர்களின் அபிப்பிராயம் வேறுவிதமாக இருந்தது. ஒரு வியாபாரஸ்தலத்தை ஏற்படுத் திக் கொள்ளுவதற்கு அனுமதியளித்த அரசன் இறந்துவிட்டால் அவனுக்குப்பின் பட்டத்திற்கு வந்த அரசன் தனக்குமுன் னிருந்த அரசன் அளித்த வாக்குறுதிகளின்படி தானும் நடக்க வேண்டுமென்ற கட்டாயம் இருந்ததாக நினைக்கவில்லை. அதனால் அந்த வியாபாரஸ்தலத்தில் இருந்த ஐரோப்பியர்கள் புதிய அரச னிடம் சென்று மறுபடியும் தங்கள் உரிமைகளைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அவ் வாறே நடந்துகொண்டார்கள். காலியான பழைய உத்தி யோகஸ்தர்களின் பதவிகளில் நியமிக்கப்பட்ட புதிய உத்தியோ கஸ்தர்கள் ஐரோப்பிய வியாபாரிகளிடமிருந்து வருவாயை எதிர் பார்த்தார்கள். அவ்வாறு வருவாய் கிடைக்காவிட்டால் அவர்கள் தங்களுக்கு முன்னிருந்த உத்தியோகஸ்தர்கள் காலத்தில் ஐரோப்பிய வியாபாரிகளுக் களிக்கப்பட்டிருந்த உரிமைகளை

வழங்க மறுத்தார்கள். இந்த முறைகளை ஐரோப்பிய வியாபாரிகள் விரும்பவில்லை. அதனால் சிலசமயங்களில் ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் இந்தியர்களுக்கும் சண்டை யேற்பட்டது. இந்தியர்களைத் தங்கள் வழிக்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் ஐரோப்பிய வியாபாரிகள் இந்தியக்கப்பல்களைக் கைப்பற்றிக் கொள்ளுவார்கள். இல்லாவிட்டால் ஏதாவதொரு துறைமுகத்தை முற்றுகை யிடுவார்கள். இத்தகைய முயற்சிகளில் ஐரோப்பியர்கள் வெற்றிபெற்றதற்கு இந்தியர்களிடம் கப்பற்படையே இல்லாததுதான் காரணம். குஜராத்திலும் சரி, கோல்கொண்டாவிலும் சரி, துறைமுகங்களைக் காவல் செய்ய ஒரு சிறு சண்டைக் கப்பல்கூடக் கிடையாது. அதனால் இரண்டொரு சண்டைக் கப்பல்களின் உதவியைக் கொண்டே ஐரோப்பியர்கள் இந்தியர்களைத் தங்கள் வழிக்குக் கொண்டுவர முடிந்தது.

ஆனால் இத்தகைய நிகழ்ச்சிகள் அதிகமாக நடக்கவில்லை. நாளடைவில் இருதிறத்தாரும் ஒருவரையொருவர் நன்றாக அறிந்துகொண்டார்கள். தங்களுக்குத் தொந்தரவு ஏற்பட்ட சமயத்தில் ஐரோப்பிய வியாபாரிகள் சண்டைசெய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை இந்திய உத்தியோகஸ்தர்கள் உணர்ந்தார்கள். அதுபோலவே உத்தியோகஸ்தர்கள் நினைத்தால் தங்கள் வியாபாரத்திற்கு நஷ்டம் ஏற்படுத்த முடியும் என்பதை வியாபாரிகளும் உணர்ந்தார்கள். சில சமயங்களில், முக்கியமாகப் புதிய அரசன் பட்டத்திற்கு வந்தபோது, ஸம்ஸ்தானத்திற்குச்சென்று அரசனைப் பேட்டி காண்பது இன்றியமையாதது என்பதை வியாபாரிகள் அறிந்தார்கள். ஆனால், அவ்வாறு செய்வதால் சன்மானங்களுக்கும் லஞ்சம் கொடுப்பதற்கும் மிகுதியான பணம் அழிவதோடு தங்கள் அருமையான காலமும் அதிகம் செலவாகும் என்பதை அறிந்த வியாபாரிகள் ஆங்காங்கிருந்த உத்தியோகஸ்தர்களின் தயவைச் சம்பாதித்துக்கொள்ளுவதுதான் மிக நல்லது என்பதைத் தெரிந்துகொண்டார்கள். உத்தியோகஸ்தர்களும் அவ்வளவு மோசமாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் விரும்பியதெல்லாம் வியாபாரிகள் தங்களிடம் விநயமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதும், அவ்வப்போது நல்ல சன்மானம் கொடுக்க வேண்டும் என்பதும்தான். இவ்வாறு ஆங்கிலேயரும் டச்சுக்காரர்களும் இந்திய வியாபார உலகில் இடம் பெற்றார்கள்.

இந்த வியாபாரத்தால் மிக முக்கியமான பயன்கள் விளைந்தன. இந்தியர்களுக்குத் தேவையான ஐரோப்பியப் பொருள்க

ளெல்லாம் வந்து குவிந்தன. மேலும் இந்தியாவில் அதிகத் தேவையாயிருந்த வெள்ளி இடையீடின்றி இந்தியாவிற்கு வந்துகொண்டேயிருந்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பொருள்களில் அவுரி முதலில் முக்கியமாக இருந்தது. நாளடைவில் காலிக்கோவுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டதால் வட அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் அது மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. பின்னர், நூல், வெடியுப்பு, சர்க்கரை முதலிய பொருள்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏற்றுமதியான பொருள்களுக்கெல்லாம் எல்லாச் சமயத்திலும் ஒரே மாதிரியான கிராக்கியிருந்தது என்று நினைக்கமுடியாது. ஆனால் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் வந்தபிறகு இந்திய வியாபாரம் ஒரு சிறந்த அமைப்பை அடைந்தது. போர்ச்சுகீசியர் மாத்திரம் இந்தியாவோடு வியாபாரம் செய்த காலத்திலும், அதற்கு முன் தரை மார்க்கமாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரம் நடந்த காலத்திலும் இருந்த வியாபார அமைப்பைக் காட்டிலும், டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் இந்தியாவுக்கு வந்த பிறகு ஏற்பட்ட வியாபார அமைப்பு மிகச் சிறந்ததாக இருந்தது. கிழக்கிந்தியத் தீவுகளுடன் நடந்த வியாபாரத்தில் தான் டச்சுக்காரர்கள் அதிகமாக ஈடுபட்டார்கள் என்று முன்னர்க் கூறினோம். அவர்கள் அங்கிருந்த வாசனைத்திரவியங்களை வாங்கிக்கொண்டு, அவற்றிற்குப் பதிலாக இந்தியாவிலிருந்து கொண்டுபோன பொருள்களை அங்கு விற்றார்கள். ஆனால், ஆங்கிலேயர்கள் அந்த வியாபாரத்தோடு நின்றுவிடாமல் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் வேறு பலசரக்குகளிலும் வியாபாரத்தைப் பெருக்கினார்கள். அதைக்கண்ட டச்சுக்காரர்கள் அந்தப் புதிய துறைகளில் தாங்களும் ஈடுபடத் தொடங்கினார்கள். லண்டனிலும் ஆம்ஸ்டர்டாமிலும் சிறந்த வியாபாரிகள் இந்திய மக்களுக்குத் தேவையான ஐரோப்பியச் சரக்குகள் யாவை என்பதை அடிக்கடி கவனித்துத் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கினார்கள். அதுபோலவே இந்தியாவிலிருந்த அவர்களுடைய காரியஸ்தர்களும் இந்திய மார்க்கட் நிலவரங்களை அடிக்கடி ஆராய்ந்து லண்டனுக்கும் ஆம்ஸ்டர்டாமுக்கும் செய்தியனுப்பிக்கொண்டே யிருந்தார்கள். இவ்வாறு இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நல்ல லாபந்தரக்கூடிய வியாபாரம் பெருகிக்கொண்டே வந்தது.

ஐரோப்பாவிலிருந்து வந்த நவ நாகரிகமான பொருள்களுக்கும், விநோதமான பொருள்களுக்கும் இந்தியாவில் நல்ல கிராக்கியிருந்தது. ஜஹாங்கீருக்கு அத்தகைய பொருள்களில் அதிக

விருப்பம். அதுபோலவே தென்னிந்தியாவிலிருந்த இந்து அரசர்களுக்கும் முஸ்லிம் அரசர்களுக்கும் அந்தப் பொருள்களில் அதிக மோகமிருந்தது. அதனுல், இந்திய அரசர்களுடைய தயவைப் பெற விரும்பிய ஐரோப்பிய வியாபாரிகள் அத்தகைய பொருள்களை அரசர்களுக்குச் சன்மானமாக அளித்தார்கள். அவற்றின் விலை குறைவாக இருந்தாலும் அவைகள் இந்தியாவிற் கிடைக்காத அருமையான பொருள்களாக இருந்ததால் அவற்றை அரசர்கள் அதிகமாக விரும்பினுர்கள். அதனுல் இந்தியாவிலிருந்த ஸம்ஸ்தானங்களில் ஐரோப்பிய சுகபோகப் பொருள்களான கோச்சுவண்டிகள், முகம் பார்க்கும் கண்ணுடிகள், அழகிய விளக்குகள், உயர் ஜாதி நாய்கள் முதலிய பலவேறு பொருள்கள் சகஜமாகக் காணப்பட்டன. அத்தகைய பொருள்களைச் சாதாரண மக்கள் வாங்க முடியாதாகையால் அவைகள் அதிகமாக இந்தியாவில் விற்பனையாகவில்லை. எனினும் அரசர்களுடைய தயவையும் உத்தியோகஸ்தர்களுடைய தயவையும் பெறுவதற்கு அந்தப் பொருள்கள் இன்றியமையாதவை. ஐரோப்பியர்கள் அந்தப் பொருள்களைத் தேவையான அளவு கொண்டுவந்து கொடுக்க முடிந்ததால்தான் அந்தக் காலத்து இந்திய அரசர்களும் பிரபுக்களும் ஆடம்பரமான வாழ்க்கையில் அதிகப் பிரியம் காட்டினுர்கள் என்று நினைக்கலாம்.

ஏற்றுமதி வியாபாரத்தால் இந்தியாவுக்கு நேரடியான பலன் கிடைத்தது. ஆனுல் இந்திய மக்கள் அனைவரும் நன்மையடையக் கூடிய அளவிற்கு அந்த வியாபாரம் பெருகவில்லை. ஏற்றுமதிக்கான சரக்குகளைத் தயாரித்த ஒரு சில இடங்களிலிருந்த வியாபாரிகளுக்கும் காரியஸ்தர்களுக்கும் அந்த வியாபாரத்தால் நல்ல இலாபம் கிடைத்தது. அவ்வாறு கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதி வரியின் மூலம் அரசாங்கத்திற்குச் சென்றது. ஆனுல் ஏற்றுமதியான பொருள்களை உற்பத்தி செய்த தொழிலாளிகளுக்கு அந்த வியாபாரத்தால் எவ்வளவு தூரம் பயன் ஏற்பட்டது என்பது நிச்சயமாகத் தெரியாது. அப்படியேதாவது அவர்களுக்கு லாபம் ஏற்பட்டிருந்தாலும் கூட அவர்கள் மொத்த ஜனத்தொகையில் ஒரு சிறு பகுதியினராகத்தான் இருந்தார்களாதலால் தேசத்தின் பொதுவான பொருளாதார நிலை உயர்ந்தது என்று கூறுவது பொருந்தாது.

இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் ஏற்பட்ட தொடர்பு அடிப்படையில் வியாபாரத் தொடர்பு தான் எனினும், அதன் மூலம் வேறு பல தொடர்புகளும் ஏற்பட்டிருக்கவேண்டும்

முதலில் வந்த ஐரோப்பியர்களாகிய போர்ச்சுக்கீசியர்கள் இந்திய அரசியல் விஷயங்களில் அதிகமாகத் தலையிடுபவர்களாகவும், கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாகவும் இருந்தார்கள். ஆனால், பின்னர் வந்த டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் வேறுவகையானவர்கள். அவர்கள் எல்லோருமே நிதானமும், திறமையும், பிடிவாதமும் வாய்ந்த கைதேர்ந்த வியாபாரிகள். அவர்களிற் சிலர் நல்ல பண்பாடுடையவர்களாகவும் இருந்தார்கள். அவர்களோடு பழகியதன்மூலம் ஐரோப்பியர்களைப்பற்றிய பல விஷயங்களை இந்தியர்கள் அறிந்துகொண்டார்கள். ஐரோப்பியர்களும் இந்தியர் வாழ்க்கையைப் பற்றிய பல விஷயங்களை அறிந்துகொண்டார்கள். அரசர்களும் பிரபுக்களும் நடத்திய ஆடம்பரமான வாழ்க்கையையும் சாதாரண மக்களுடைய எளிய வாழ்க்கையையும் ஐரோப்பியர்கள் பார்த்தார்கள். நாட்டின் வளத்தையும் பெரும்பான்மையான மக்களின் பரிதாபகரமான வறுமையையும் அவர்கள் நேரிற் கண்டார்கள். அவர்கள் வாயிலாக ஐரோப்பாவில் இந்தியாவைப்பற்றிய செய்திகள் பரவின.

அதிகாரம்—31

ஷா ஜ ஹா ன்

ஜஹாங்கீர் இறந்ததும் அரசபதவிக்காகப் போட்டியும் சூழ்ச்சியும் சிறிது காலம் நடந்தன. முடிவில் அவனுடைய மகன் ஷாஜஹான் அதிகக்கஷ்டமின்றி அந்தப் பதவியை அடைந்தான். ஷாஜஹானுடைய குணதிசயங்கள் முழுமையும் தெரிந்துகொள்ளுவதற்கேற்ற ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அரசாங்க ஆதரவில் பதிவுசெய்து வைக்கப்பட்ட வரலாற்றுக் குறிப்பு அவனதுஆட்சியின் நிகழ்ச்சிகளை மேற் போக்காகக் காட்டுகின்றது. அதுபோலவேதான் மற்றைய வரலாற்றுக் குறிப்புகளும். மேலும், அவனுடைய ஸமஸ்தானத்திற்கு வந்த ஐரோப்பியர்களோடு அவன் நெருங்கிப் பழகாததால், அவர்கள் வாயிலாகவும் ஷாஜஹானுடைய குணதிசயங்களைச் சரியானபடி தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், ஆடம்பரத்தில் அவனுக்கு அதிக விருப்பம் என்பதை மாத்திரம் நாம் உறுதியாகக் கூற முடியும். ஆட்சியின் தொடக்கத்தில் அவன் அரசியல் அலுவல்களை மிகத் திறமை

யாக நடத்தினுன். ஜஹாங்கீர் காலத்தில் கேடடைந்திருந்த அரசாங்கப் பொருளாதார நிலையை விரைவில் சரிப்படுத்தினுன். ஆனுல் நாளடைவில் அவன் திறமையும், புத்திகூர்மையும் கொஞ்சங் கொஞ்சமாக மங்கத் தொடங்கின. அவனுடைய முடிவு பரிதாபகரமானது.

அவனுடைய தந்தையைப்போலவே அவனும் ஓர் இராஜ புத்திரப் பெண்ணுக்குப் பிறந்தவன். அதனுல் அவனுடைய உடலில் பாதிக்குமேல் இந்து ரத்தம் ஓடியது. ஆனுல் மொகலாய அரசர்களில் அவன்தான் முதல் முதலாக இஸ்லாம் மதக்கொள் கைகளைத் தவருமல் கடைப்பிடிக்க முயன்றவன். அவன் மற்ற மதத்தினரைத் துன்புறுத்தினுன் என்று கூற முடியாது எனினும், தன்னுடைய இராஜ்யத்தில் இஸ்லாம் மதத்திற்குத் தான் முதன் மையான இடமளித்தான். இந்துக்கள் புதிய கோவில்களைக் கட்டக்கூடாது என்று ஷாஜஹான் தடுத்தான். ஆக்ராவிலிருந்த கிறிஸ்தவப் பாதிரிகளைச் சிறிது காலம் அவன் மிகத் துன்பப்படுத் தினுன். அவனுடைய ஆட்சியில் முஸ்லிம்கள் ஆளும் வகுப்பி னர் என்ற தகுதியை வகித்தார்கள் என்பது வரலாற்றுக் குறிப்பு களின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

சாம்ராஜ்யத்தின் தெற்கு எல்லையில் பல காலமாக நடந்து வந்த சண்டையை வெற்றிகரமாக முடிப்பதுதான் தன்னுடைய முதல் முக்கிய வேலை என்று ஷாஜஹான் கருதினுன். அகமது நகரம் ஜெயிக்கப்பட்டு அதனுடைய பெரும்பகுதி மொகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. பின்னர் வெகு விரை வில் பீஜப்பூரும் கோல்கொண்டாவும் மொகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டன. ஆனுல், அவற்றின் அரசர்கள் அரச பதவியிலிருந்து நீக்கப்படவில்லை. 1638-ஆம் ஆண்டில் காண்டஹார் எதிர்பாராத விதத்தில் ஷாஜஹானுக்குக் கிடைத் தது. அந்தக் கோட்டையிலிருந்த பாரசீகக் கவர்னர் தன்னு டைய எஜமானனுன பாரசீகச் சக்கரவர்த்தி தன்னைக் கொல்லுவ தற்குத் தீர்மானித்துவிட்டான் என்று அஞ்சி, காண்டஹாரை மொகலாய ராஜ்யத்திற் சேர்த்துவிட்டு ஷாஜஹானிடம் அடைக் கலம் புகுந்தான். அந்த எதிர்பாராத அதிருஷ்டத்தால் மகிழ்ந்த ஷாஜஹான் அவனை மிகக் கண்ணியமாக வரவேற்றுன். ஆனுல் பதினேராண்டுகளுக்குப் பின்னர், பாரசீகர்கள் காண்டஹாரை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டார்கள். அதை மீட்பதற்கு ஷாஜ ஹான் செய்த நெடுநாளைய முயற்சி பயனளிக்கவில்லை. 1645-ஆம் ஆண்டில் மொகலாய சாம்ராஜ்யத்தை வடமேற்கில் பெருக்கும்

நோக்கத்துடன் இந்துக்குஷ்மலைக்கு வடக்கிலுள்ளதும், பண்டைக்காலத்தில் பாக்டீரியா என்று அழைக்கப்பட்டதுமான "பால்க்" என்ற இராஜ்யத்தை ஷாஜஹான் ஜெயித்தான், ஆனால் அந்த நாட்டை ஜெயிப்பது எளிதாக இருந்தபோதிலும் அதில் மொகலாய ஆதிக்கத்தை நிலையாக நிறுவுவது மிகக் கடினமாக இருந்தது. ஆதலால், சிறிது காலத்தில் அந்நாட்டை அதன் பழைய அரசனுக்கே கொடுத்துவிட்டு, அத்துடன் வடமேற்கு எல்லையில் வேறுநாடுகளை ஜெயிக்கும் எண்ணத்தையும் ஷாஜஹான் விட்டுவிட்டான். இவ்வாறு, தெற்கெல்லையில் வெற்றி பெற்ற ஷாஜஹான் வடமேற்கெல்லையில் தோல்வியுற்றான்.

ஷாஜஹானுடைய ஆட்சியில் நாட்டின் நிலை எவ்வாறிருந்தது என்பது நமக்கு முழுவதும் தெரியாது. அவனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் இராஜ்ய பரிபாலனம் திறமையாக நடத்தப்பட்டது. ஜஹாங்கீர் காலத்தில் சட்ட வரம்பை மீறி நடந்தவர்கள் ஷாஜஹான் ஆட்சி தொடங்கியதும் ஓரளவு அடங்கிவிட்டார்கள் எனினும், இராஜ்யத்தின் சில பகுதிகளில் அமைதியின்மை இருந்துகொண்டே யிருந்தது. நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்களின் மூலம் அவ்வமைதியின்மை நாளடைவில் குறைந்ததா, மிகுந்ததா என்று நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. இராஜ்யத்தின் பொருளாதார நிலையைப்பற்றியும் சரியாகத் தெரிந்து கொள்ளுவதற்கேற்ற பதிவுகள் இல்லை. எனினும், ஒரு சில விஷயங்கள் தெளிவாகத் தெரிகின்றன. காலிசா நிலங்களிலிருந்து கிடைத்த வருமானம் ஷாஜஹானுடைய ஆட்சியில் இருமடங்குக்குமேல் அதிகரித்தது என்பதும், மான்சப்தார்கள் முதலிய அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம் மிக அதிகரித்துக்கொண்டே வந்தது என்பதும் நமக்கு நன்றாகத் தெரிகின்றன. அதனால், காலிசா நிலங்களையும் ஜாகீர் நிலங்களையும் பயிரிட்ட குடியானவர்கள் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை அக்பர் காலத்திலிருந்ததைவிட ஷாஜஹான் காலத்தில் மிக அதிகமாக இருந்தது என்று உறுதியாக நம்பலாம். அதனால், ஷாஜஹான் ஆட்சி முடிந்த சிறிது காலத்திற்கெல்லாம், ஏராளமான குடியானவர்கள் தங்கள் நிலங்களை விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடிச் செல்லத் தொடங்கினார்கள். அதனால் நிலவரி இலாக்காவின் வருமானம் குறைந்தது. அந்த இலாக்காவின் உத்தியோகஸ்தர்கள் பயிர்த் தொழிலைப் பெருக்குவதற்குத் தங்களால் இயன்றவரையில் பாடுபடவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. மேலும்,

குறிப்பிட்ட அளவுக்குக் குறைந்த நிலத்தில் பயிரிட்ட குடியான வர்களுக்குச் சாட்டையடி கொடுப்பதற்கும் அந்த உத்தியோகஸ் தர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. இந்த விஷயங்களின் மூலம் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்ட ஷாஜஹான் தன்னு டைய செலவுக்காகக் குடியானவர்கள்மீது தாங்க முடியாத வரிச்சுமையை ஏற்றினுன் என்றும், அதனுல் அவர்கள் பயிர்த் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில்களை நாடினுர்களென்றும், அதன் விளைவாக இராஜ்யத்தின் பொருளாதாரநிலை சீர்கெட்டது என்றும் நாம் யூகிக்கலாம்.

நாட்டின் பொருளாதார நிலை எவ்வாறிருப்பினும் ஷாஜஹா னுடைய ஆடம்பரத்தைப்பற்றி எவ்வித ஐயமுமில்லை. ஷாஜ ஹான் ஸம்ஸ்தானத்தின் பெருமை உலக முழுவதும் பரவி யது. கலைஞர்களின் தரமறிந்து ஆதரவளிப்பதில் ஷாஜஹான் சிறந்து விளங்கினுன். இராஜ்யத்தில் தலைநகரில் மாத்திரமின்றி அதன் முக்கியக் கைத்தொழில் மையங்களிலும் பெரிய பெரிய தொழில் நிலையங்கள் இருந்தன. அவற்றில் விரிப்புகள், சால் வைகள், மஸ்லின் துணிகள் முதலிய சுகபோகப் பொருள்கள் பெருவாரியாக உற்பத்தி செய்யப்பட்டன. அவைகள் அதற்கு முன் எப்போதும் கண்டறியாத வேலைத்திறமும், தற்காலத்தில் நம்பமுடியாத மிக உயர்ந்த விலைமதிப்பும் பெற்றவை. ஷாஜஹான் அரசசபையில் அமர்வதற்குப் பதினேர் ஆசனங்கள் இருந்தன. அவைகளிலெல்லாம் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் மிக விலையுயர்ந்தது மயிலாசனம். அதைச் செய்து முடிக்கப் பத்து லட்சம் பவுன் செலவாயிற்று என்றும், அந்த வேலை ஏழாண்டுக்காலம் தொடர்ந்து நடந்தது என்றும் "பாதுஷா நாமா" என்ற அரசாங்க வரலாற்றுக் குறிப்பின் மூலம் அறிகி றோம். * இந்த ஒரே உதாரணத்தின் மூலம் ஷாஜஹானுடைய ஆடம்பர வாழ்க்கை எளிதில் விளங்கும்.

ஆனுல் மயிலாசனம் போன்ற பொருள்களெல்லாம் நிலைத்து நிற்கக் கூடியவையல்ல. அந்நியர் படையெழுச்சியின்போது அவை கொள்ளையடித்துக்கொண்டு போகக்கூடியவை. ஆனுல், ஷாஜஹான் கட்டிய கட்டிடங்கள் இன்றுவரையில் நிலைத்து நின்று அவனுடைய பெருமையை விளக்கும் சின்னங்களாகத் திகழ்கின்றன. ஆக்ராவிலுள்ள பெரிய மசூதியும், அரண்

* டாவர்னியர் என்ற பிரான்சு தேசத்து நகை வியாபாரி மயிலாசனத் தைச் செய்து முடிக்க நூற்றிருபது லட்சம் பவுன் செலவாயிற்று என்று எழுதி வைத்திருக்கிறுன்,

மனையின் பெரும்பகுதியும் ஷாஜஹானாற் கட்டப்பட்டவை. பின்னர் டில்லியைத் தன்னுடைய தலைநகராக்கக் கருதிய ஷாஜஹான் அங்கு ஷாஜஹானாபாத் என்ற நகரத்தை நிர்மாணித்தான். அங்கு யமுனை நதிக்கரையிலுள்ள கோட்டையில் அவனுடைய அரண்மனையின் பெரும்பகுதியை இன்றும் காணலாம். இராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளில் ஷாஜஹான் பல கட்டிடங்களைக் கட்டினான். ஆனால், தன் மனைவியின் கல்லறைமேல் ஷாஜஹான் கட்டிய தாஜ்மஹால் அவன் கட்டிய கட்டிடங்கள் எல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்குவதோடு, உலகமெல்லாம் போற்றக்கூடிய ஒப்பற்ற அழகோடு ஆக்ரா நகரில் யமுனைக் கரையில் கண்படைத்த பயனைக் காட்சியளிக்கிறது.

இந்தியக் கட்டிடக் கலையின் வளர்ச்சியைப்பற்றிக் கூறும் போது கலைஞர்களின் பெயர்களையும், அவர்கள் வரலாறுகளையும் நாம் கூறுமலிருப்பதற்குக் காரணம் அந்த விஷயங்கள் நமக்குத் தெரியாததால்தான் என்பதை இங்குக் கூறுதல் பொருந்தும். கட்டிடங்களில் அவற்றை நிர்மாணித்த சிற்பிகளின் பெயர்களைப் பொறித்து வைக்கும் வழக்கம் அந்தக் காலத்து இந்தியாவில் இல்லை. தாஜ்மஹாலைக் கட்டும்போது மேற்பார்வை செய்த உத்தியோகஸ்தர்களின் பெயர்களெல்லாம் நமக்குத் தெரிகின்றன. ஆனால் அதைக் கட்டிய சிற்பியின் பெயர் நமக்குத் தெரியவில்லை.

இனி நாம் தென்னிந்தியாவின் வரலாற்றைக் கவனிப்போம். தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பின் விஜயநகரம் அழிந்ததைப் பற்றி முன்னர்க் கூறினோம். அதன்பின் அந்தப் பிரதேசத்திலிருந்த முகமதிய இராஜ்யங்கள் ஒன்றோடொன்று சண்டை செய்துகொண்டே இருந்தன. அந்த இராஜ்யங்களுக்குள் மாறி மாறி ஏற்பட்ட நட்பையும், பகையையும், அவற்றில் ஆட்சி செய்த திறமையற்ற அரசர்களின் வரலாறுகளையும், அவர்களுடைய ஸம்ஸ்தானங்களிலிருந்த கட்சிகளின் சூழ்ச்சிகளையும் பற்றி இங்குக் கூறவேண்டிய அவசியமில்லை. அக்பர் தட்சிணத்தில் தன்னுடைய அதிகாரத்தைப் பரப்ப நினைத்த சமயத்தில் அகமது நகரம், கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய மூன்று முகமதிய இராஜ்யங்கள்தாம் அங்கிருந்தன. அவற்றுள் அகமது நகரம் வடகோடியிலிருந்ததால் அதுதான் முதலில் அக்பருடைய படையெழுச்சிக்கு இலக்காயிற்று. அப்போது மற்ற இரண்டு இராஜ்யங்களும் அகமது நகரத்திற்கு ஓரளவு உதவிசெய்தன. ஜஹாங்கீரின் ஆட்சி முடியும்வரையில் அகமது நகரத்தை மொகலாயர்களால் வெல்ல முடியவில்லை. அதற்கு அந்த இராஜ்

யத்தின் பிரதம மந்திரியாயிருந்த மாலிக் ஆம்பர் என்பவனுடைய திறமைதான் முக்கிய காரணம். அவன் ஓர் ஆப்பிரிக்கன். தொடக்கத்தில் அடிமையா யிருந்த ஆம்பர் நாளடைவில் தன் திறமையால் உயர்ந்து முடிவில் பிரதம மந்திரியானுன். ஆம்பர் தன்னுடைய முதுமைக் காலத்தில் கொரில்லாச் சண்டை முறையைப் பின்பற்றி மொகலாயச் சேனையின் முன்னேற்றத்தைத் தடுத்தான். அவன் ஜஹாங்கீரின் ஆட்சி முடிவதற்குச் சிறிது காலத்திற்கு முன்னர்த் தன்னுடைய எண்பதாவது வயதில் இறந்தான். அவனுக்குப்பின் அகமது நகரச் சேனைகளைத் திறமையாக நடத்தக்கூடிய் சேனதிபதி ஒருவரும் இல்லாததால் ஷாஜஹான் தைரியமடைந்து, தானே நேரில் ஒரு படையுடன் சென்று அகமது நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். அந்த இராஜ்யத்தின் பெரும்பகுதி மொகலாய ராஜ்யத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டது ; எஞ்சிய பகுதி பீஜப்பூர் இராஜ்யத்தோடு இணைக்கப்பட்டது. அதன்பின் மொகலாயர்கள் சிறிதுகாலம் தெற்கு நோக்கி முன்னேற முடியவில்லை. ஆனுல் சில ஆண்டுகளுக்குப் பின் ஷாஜஹான் மறுபடியும் ஒரு படையுடன் தட்சிணத்திற்குச் சென்று, பீஜப்பூரை முற்றுகை யிட்டான். பீஜப்பூரை ஷாஜஹானுல் கைப்பற்ற முடியவில்லை யெனினும், பீஜப்பூர் சுல்தானும், கோல்கொண்டா சுல்தானும் ஷாஜஹானைத் தங்கள் சக்கரவர்த்தி என்று ஏற்றுக்கொண்டார்கள். அதன்பின் அவர்கள் தங்கள் கவனத்தைத் தெற்கே திருப்பி முன்னர் விஜயநகர ராஜ்யத்தின் ஆதிக்கத்திலிருந்த பகுதிகளைக் கைப்பற்றித் தங்கள் ராஜ்யங்களைப் பெருக்கத் தொடங்கினுர்கள்.

தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பின்னர் ஐம்பது ஆண்டுகள் வரையில் விஜயநகர ராஜ்யம் சிதைந்து போகாமல் இருந்தது. ஆனுல் 1614-ஆம் ஆண்டில் அது வரையில் ஆண்டுவந்த அரசன் இறந்ததும் அந்த இராஜ்யத்தில் உள்நாட்டுப் போர் மூண்டது. விஜயநகர இராஜ்யத்திலிருந்த முக்கியமான பிரபுக்கள் நாயக்கர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடத் தொடங்கியதால் இராஜ்யம் பல சிறு பகுதிகளாகப் பிரிந்துபோயிற்று. பெயரளவில் ஓரரசனும் இருந்தான். தங்களுக்குச் சௌகரியமானபோது அந்த அரசனுடைய தலைமையை நாயக்கர்கள் ஓரளவு ஏற்றுக்கொண்டார்கள். இந்தக் குழப்பமான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கோல்கொண்டா, பீஜப்பூர் ஆகிய முகமதிய இராஜ்யங்கள் விஜயநகர இராஜ்யத்தின்மீது படையெடுத்துப் பல பகுதி

களைக் கைப்பற்றிக்கொண்டன. ஆனால் 1656-ஆம் ஆண்டி லிருந்து பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய இராஜ்யங்களின் அர சர்கள் தங்கள் கவனத்தைத் தென் திசையிலிருந்து வடதிசைக் குத் திருப்பத் தொடங்கினர். ஏனெனில், இளவரசன் ஔரங்க ஜீப்பின் தலைமையில் மொகலாயர்கள் தட்சிண முகமதிய இராஜ் யங்களை முடிவாக ஜெயித்துக்கொள்ளும் நோக்கத்துடன் அந்த இராஜ்யங்களின்மீது படையெடுத்தார்கள். அந்தச் சமயத்தில் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டமையால் அவுரங்கஜீப் அரசபத விக்காக ஏற்பட்ட போட்டியிற் கலந்துகொண்டான். அதனால் சிறிதுகாலம் கோல்கொண்டாவும் பீஜப்பூரும் மொகலாயப் படையெழுச்சிகளினின்றும் தப்பின.

பதினைந்தாம் நூற்றுண்டிலும், பதினாறும் நூற்றுண்டிலும் தென்னிந்திய இராஜ்யங்களில் மக்கள் நிலை எவ்வாறிருந்தது என் பதை அறிந்து கொள்ளுவதற்கேற்ற ஆதாரங்கள் இல்லை என்று முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். 1600-ஆம் ஆண்டுக்குப் பின்னர் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் எழுதிவைத்த குறிப்புக்களின்மூலம் கோல்கொண்டா இராஜ்யத் தின் அரசியல் முறையைப்பற்றி நாம் அறிந்து கொள்ளுகிறோம். அந்த முறை அந்த இராஜ்யத்தில் வெகு நாட்களாக இருந்திருக்க வேண்டுமென்று யூகிக்க இடமிருக்கிறது. அதன் தன்மை களைப் படிக்கும்போது, அதனால் மக்களுக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டிருக்கு மென்பதும், இந்தியாவிலேயே அத்தகைய மோசு மான ஆட்சிமுறை வேறெங்கும் இருந்திருக்க முடியாதென்பதும் விளங்குகின்றன. வரிவசூல் உரிமை ஏலத்தில் விடப்பட்டு யார் அதிகமாகப் பணம் கொடுக்க ஒத்துக் கொள்ளுகிறார்களோ அவர் களுக்கே அந்த உரிமை கொடுக்கப்பட்டு, அவர்கள் அந்தந்தப் பகுதிகளுக்குக் கவர்னர்களாகவும் நியமிக்கப்பட்டனர். சாதா ரணமாக வரிவசூல் உரிமை ஒரே ஆண்டுக்குத்தான் வழங்கப் பட்டது. கவர்னர் தான் செலுத்த ஒத்துக்கொண்ட வரித் தொகை முழுவதையும் எவ்வகையிலாயினும் அரசாங்கத்திற்கு செலுத்தியே தீரவேண்டும். அந்தத் தொகை முழுதும் செலுத் தத் தவறிய கவர்னரைச் சித்திரவதை செய்தேனும் அந்தத் தொகை வசூலிக்கப்படும். இத்தகைய வரிவசூல் முறையினால் கவர்னர்கள் மக்களிடமிருந்து மிகக் கொடுமையான முறைகளைக் கையாண்டு பணத்தை வசூலித்தார்கள். அவர்கள் புதிய வரி களையும், கட்டாயமான சன்மானங்களையும், கட்டாயக் கடன்களை யும், மக்களிடமிருந்து நினைத்தபோதெல்லாம் வசூல் செய்தார்

கள். கவர்னர்களுடைய கொடுங்கோன்மையால் துன்புற்ற மக்கள் மேலதிகாரிகளுக்கு முறையிட்டாலும் பயன்படாது. ஏனெனில், அரசாங்கம் பணத்தை வசூலிப்பதையே முக்கியமாகக் கருதிற்றே தவிரக் குடிகளுக்கு நீதி செலுத்துவதில் கொஞ்சமும் கவலைப்படவில்லை. இத்தகைய அரசியல் முறைதான் பீஜப்பூரிலும், நாயக்கர்களுடைய ஆட்சியிலிருந்த சில பகுதிகளிலும் அந்தக் காலத்தில் இருந்தது என்று நினைப்பதற்குச் சில ஆதாரங்களிருக்கின்றன. அந்த முறை எப்போது ஏற்பட்டது என்பதும், எவ்வாறு வளர்ந்தது என்பதும் நமக்குத் தெரியாது. ஆனால், அதனால் குடியானவர்களும், தொழிலாளிகளும், வியாபாரிகளும் மிகுந்த துன்பம் அடைந்திருப்பார்கள் என்பதைப்பற்றிச் சிறிதும் ஐயமில்லை.

ஷாஜஹானுடைய ஆட்சிக்காலத்தில் ஐரோப்பியர்களுடைய நிலைமையில் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. போர்ச்சுகீசியர்களுக்கும் இந்தியர்களுக்கும் பிறந்த கலப்பினத்தினரின் தன்மைகளைப்பற்றி முன்னோர் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். அவர்கள் தங்களைப் போர்ச்சுகீசியர்கள் என்று கூறிக்கொண்டபோதிலும் வங்காளிகள் அவர்களைப் பரங்கிகள் என்று அழைத்தனர். பரங்கிகளில் மிகக் கெட்டகுணம் படைத்தவர்களெல்லாரும் நாளடைவில் கொஞ்சங்கொஞ்சமாகப் போர்ச்சுகீசியக் கவர்னரின் ஆட்சிக்குட்பட்ட கோவா முதலிய இடங்களினின்று நீங்கி வங்காள விரிகுடாவின் கரையில் நிறுவப்பட்டிருந்த ஏறக்குறைய சுயேச்சை பெற்ற போர்ச்சுக்கீசியக் குடியேற்றங்களுக்குச் சென்றுவிட்டார்கள். அந்தக் குடியேற்றங்களில் அவர்கள் தங்களிஷ்டம்போல் சட்ட வரம்பற்ற செயல்களில் ஈடுபடுவதற்கு வசதியிருந்தது. கொலைகளவுக்கஞ்சாத மிகக் கொடிய பரங்கிகளெல்லாம் கிழக்கு வங்காளத்தின் கடற்கரையிற் சென்று குடியேறினார்கள். கிழக்கு வங்காளத்தின் ஒருபகுதி அந்தக் காலத்தில் அரக்கான் அரசன் ஆட்சியில் இருந்தது. அவன் பரங்கிகள் கொள்ளையடித்த பொருள்களில் ஒரு பங்கு பெற்றுக்கொண்டு அவர்களுக்குத் தன் ஆதரவையளித்தான். ஆகவே அரக்கானில் வாழ்ந்த மக்களும் பரங்கிகளும் கடற்கொள்ளையில் தீவிரமாக ஈடுபட்டுக் கங்கைநதியின் டெல்டாவிலும், கடற்கரையோரத்திலும் தங்கள் கண்களிற்பட்ட கப்பல்களையெல்லாம் கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள். கப்பல்களில் ஏற்றிச்செல்லப்பட்ட வியாபாரப் பொருள்களைக் கொள்ளையடித்ததோடு அவர்கள் அவற்றிலிருந்த மக்களையும் சிறைப்பிடித்து அடிமைகளாக விற்றார்கள். அதனால்,

சிட்டகாங்குத் துறைமுகத்திலிருந்து ஏராளமான இந்தியமக்கள் வேறு நாடுகளுக்கு அடிமைகளாக ஏற்றுமதி செய்யப்பட்டார்கள்.

ஹூக்லி நதியின் முகத்துவாரத்திலிருக்கும் ஹூக்லி என்ற துறைமுகத்தில் போர்ச்சுக்கீசியர் பலர் குடியேறியிருந்தனர். ஹூக்லி மொகலாய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த நகரம். அங்கிருந்த போர்ச்சுக்கீசியர்கள் அதற்குக் கிழக்கேயிருந்த கடற் கொள்ளைக்காரர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டு, பல இந்தியர்களைப் பிடித்து அடிமைகளாக விற்ருர்கள். மொகலாயக் குடிகளைப் போர்ச்சுகீசியர்கள் அடிமைகளாக விற்ருர்கள் என்ற விஷயத்தை அறிந்த ஷாஜஹான் 1632-ஆம் ஆண்டில் ஹூக்லியின்மீது படையெடுத்து அதை முற்றுகையிட்டான். போர்ச்சுகீசியர்கள் மிகத் தைரியமாகச் சண்டைசெய்தார்கள். என்ருலும் அவர்கள் முடிவில் தோல்வியடைந்தார்கள். அவர்களிற் பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்தவர்களிற் பெரும்பான்மையோர் அடிமைகளாகப் பிடிக்கப்பட்டு ஆக்ராவுக்குக் கொண்டு போகப்பட்டனர்.

ஹூக்லியின் வீழ்ச்சியால் பல முக்கிய விளைவுகள் ஏற்பட்டன. டச்சுக்காரர்களும், ஆங்கிலேயர்களும் வங்காளத்தில் வியாபாரம் செய்வதற்கு மிகுந்த ஆவலுடையவர்களாக இருந்தார்கள். ஆனுல் அங்கிருந்த முக்கியமான துறைமுகமாகிய ஹூக்லி போர்ச்சுகீசியர் கையில் இருந்ததாலும், அதன் அண்மையில் கடற்கொள்ளைக்காரர்கள் மிகுதியாக இருந்ததாலும், அவர்கள் வங்காளத்தில் வியாபாரம் செய்வதற்குத் தயங்கிக்கொண்டு இருந்தார்கள். ஹூக்லியிலிருந்த போர்ச்சுக்கீசியக் குடியேற்றம் அழிக்கப்பட்டதும் ஹூக்லி நதியின் முகத்துவாரத்தில் டச்சுக்காரர்களும் ஆங்கிலேயர்களும் தங்களுடைய வியாபாரஸ்தலங்களை நிறுவினுர்கள். பின்னர், அவர்கள் ஹூக்லி நகரத்திலேயே தங்கள் வியாபாரஸ்தலங்களை ஏற்படுத்திஞர்கள். விரைவில் வங்காளத்திற்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் சிறந்த வியாபாரம் நடக்கத்தொடங்கியது. பீகாரில் கிடைத்த வெடியுப்பும், வங்காளப்பட்டும், டாக்கா மஸ்லினும் ஐரோப்பாவுக்கு மிகுதியாக ஏற்றுமதியாயின.

சோழமண்டலக் கடற்கரையில் ஆர்மகான் என்ற இடத்தில் ஆங்கிலேயர் கட்டியிருந்த சிறிய கோட்டை அவ்வளவாக அவர்களுக்குப் பயன்படாமையால், அவர்கள் 1640-ஆம் ஆண்டில் செயிண்ட் ஜார்ஜுக் கோட்டையைக் கட்டினுர்கள். அதுவே

இன்று சென்னைப்பட்டினம் என்று அழைக்கப்படுகிறது. அந்தக் கோட்டையைக் கட்டிக்கொள்வதற்கு ஆங்கிலேயர்கள் அப்போது அந்தப் பிரதேசத்தை ஆண்டுவந்த ஒரு நாயக்க அரசனிடம் அனுமதி பெற்றார்கள். அந்தப் பிரதேசத்தில் அந்தக் காலத்தில் அடிக்கடி கலகங்களும், குழப்பங்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்ததால் வியாபாரிகளும் தொழிலாளிகளும் அமைதியை நாடிச் சென்னைப்பட்டினத்திற்கும் டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான பழவேற்காட்டிற்கும் சென்று குடியேறினார்கள். அதனால், அந்த இரண்டு நகரங்களும் விரைவில் வளரத் தொடங்கின. ஆகவே அந்த நகரங்களைச் சரியானபடி பரிபாலிப்பதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்வது அங்கிருந்த ஐரோப்பியர்களின் கடமையாயிற்று.

இதற்கிடையில் போர்ச்சுக்கீசியர்கள் தங்களுக்கு ஆசியாவின் கடற்கரைகளிற் சொந்தமாயிருந்த முக்கியமான கோட்டைகளை ஒவ்வொன்றாக இழக்கத் தொடங்கினார்கள். ஆங்கிலேயருடன் நட்பாயிருந்த பாரசீகர்கள் 1622-ஆம் ஆண்டில் ஆர்மஸ் என்ற இடத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். டச்சுக்காரர்கள் 1641-இல் மலாக்காவையும், 1656-இல் கொழும்பையும், 1658-இல் நாகப்பட்டினத்தையும், 1663-இல் கொச்சியையும் வேறு சில சிறிய கோட்டைகளையும் கைப்பற்றிக்கொண்டார்கள். அவர்கள் கோவாவைக் கைப்பற்றுவதற்கு மிக முயன்றும் முடியவில்லை. ஆனால் கோவாவைத் தவிரப் போர்ச்சுக்கீசியர்களுக்கு இந்தியாவில் வேறொன்றும் மிஞ்சவில்லை. 1635-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களும் போர்ச்சுகீசியர்களும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். போர்ச்சுகீசியர்களைத் தோற்கடித்த டச்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களையும் இந்தியாவிலிருந்து துரத்திவிட விரும்பினார்கள். 1652-இல் இங்கிலாந்துக்கும் ஹாலண்டுக்கும் ஏற்பட்ட சண்டையின் விளைவாக ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நிலைத்துவிட்டார்கள்.

ஆங்கிலேய அரசனான இரண்டாம் சார்லஸின் மனைவி காதரைன் என்பவளுக்கு பம்பாய்த்தீவு போர்ச்சுகல் அரசனால் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. ஆறாண்டுகளுக்குப் பின்னர் அதைச் சார்லஸ் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வாடகைக்குக் கொடுத்தான். இன்று இந்தியாவின் வர்த்தகத் தலைநகராக விளங்கும் பம்பாய்த் துறைமுகம் 1667-ஆம் ஆண்டில் கிழக்-இந்தியக் கம்பனிக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும் வரையில் இந்திய வரலாற்றில் எந்தவிதமான முக்கியத்துவத்தையும் பெற

வில்லை. அது ஒரு மிகப் பெரிய இயற்கைத் துறைமுகமாக இருந்தும், அந்நாள் வரையில் கொஞ்சமும் வளர்ச்சியடையாமலிருந்ததற்குக் காரணம் என்னவென்று அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். கீழ்நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு வேண்டிய பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்ற கப்பல்கள் மலையாளத் துறைமுகங்களில் தங்கித் தாங்கள் கொண்டுவந்த பொருள்களை வேறு கப்பல்களுக்கு மாற்றிவிட்டு, அங்கிருந்து வேறு பொருள்களை ஏற்றிக்கொண்டு திரும்பிச் சென்றன என்றும், அந்த நீண்ட கடல் மார்க்கத்தில் மலையாளத் துறைமுகங்கள் மத்திய ஸ்தானத்தை வகித்தன என்றும் முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். அந்தக் கடல் மார்க்கத்திலிருந்து பம்பாய் வெகுதூரம் வடக்கே விலகியிருப்பதால் அந்தக் காலத்தில் அது முக்கியமான துறைமுகமாகக் கருதப்படவில்லை. மேலும், பம்பாயை அடுத்துள்ள மலைகள் அதற்கும் அதற்குக் கிழக்கிலும் வடக்கிலுமுள்ள வளம்பொருந்திய பிரதேசங்களுக்கும் தொடர்பின்றிச் செய்துவிட்டன. அதனால், அந்தக் காலத்தில் பம்பாய் வியாபாரத் துறையில் முக்கியமடையவில்லை. ஆகவே, அது காதரைன் அரசிக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட சமயத்தில், செம்படவர்களும் ஒரு சில குடியானவர்களுந்தாம் அங்கு வசித்தார்கள்.

1630-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சம், ஷாஜஹான் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்று. பருவமழை மறுத்தபோதெல்லாம் இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் இறப்பது சகஜமான நிகழ்ச்சியென்று முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறினோம். இந்தியாவின் பல பகுதிகளில் அவ்வப்போது ஏற்பட்ட கொடிய பஞ்சங்களைப்பற்றி முஸ்லிம் சரித்திரக் குறிப்புகளிற் படிக்கிறோம். எனினும், அவைகள் எவ்வளவுதூரம் உண்மை என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கேற்ற வேறு ஆதாரங்கள் இல்லை, ஆனால் 1630-இல் ஏற்பட்ட பஞ்சத்தைப்பற்றி முஸ்லிம் வரலாற்றுக் குறிப்புகளைத்தவிர ஐரோப்பியர்கள் எழுதிவைத்துள்ள குறிப்புக்களும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. 1630-இல் குஜராத்திலும், அகமது நகரத்திலும், பீஜப்பூர், கோல்கொண்டா ஆகிய ராஜ்யங்களின் பகுதிகளிலும் பருவமழை பெய்யவில்லை. ஆகவே அந்த ஆண்டின் முடிவிற்குள் இருப்பிலிருந்த தானியமெல்லாம் செலவழிந்துவிட்டது. இந்தியாவின் வேறு பகுதிகளில் ஏராளமான தானியம் இருந்தபோதிலும், அதைப் பஞ்சத்தாற் பீடிக்கப்பட்ட

இடங்களுக்குக் கொண்டுவர முடியவில்லை. ஏனெனில், உணவுப் பொருள்களைச் சுமந்து செல்வதற்கு உபயோகிக்கப்பட்ட கால் நடைகளுக்கு வேண்டிய தீனியும், தண்ணீரும் அங்குக் கிடைக்க வில்லை. ஆகவே பஞ்சம் வந்த பகுதிகளிலிருந்த மக்கள் அங்கிருந்து உணவு தேடி வேறிடங்களுக்குச் செல்லத் தொடங்கினார்கள். அவ்வாறு வேறிடங்களுக்குச் செல்ல முடியாதவர்களெல்லாரும் பட்டினியால் மாண்டனர். சில சமயங்களில் அவர்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டனர். சில சமயங்களில் மனிதரை மனிதர் கொன்று தின்று உயிர் வாழ முயன்று, முடிவில் இறந்தனர். பெற்றோர் பிள்ளைகளைக் கொன்று தின்பதும், குற்றுயிராய்க் கிடக்கும் மனிதரை மற்றவர்கள் கொன்று தின்பதும், தெருக்களி லும் சாலைகளிலும் நடந்து சென்றவர்களை பசிப்பிணியால் வருந் தியவர்கள் வழி மடக்கிக் கொலைசெய்து அவர்கள் இறைச்சியை உண்பதும் சாதாரணமான நிகழ்ச்சிகள் என்று முஸ்லிம் சரித் திரக்காரர்களும் டச்சுக்காரர்களும் எழுதிவைத்திருக்கிறார்கள்.

அந்தப் பஞ்சத்தால் அப்போது ஏற்பட்ட பயங்கரமான நிகழ்ச்சிகளைத் தவிர, வேறு பல நிரந்தர விளைவுகளும் ஏற்பட் டன. பஞ்சத்திற்குப் பின்னர் இருபத்தைந்தாண்டுகள் வரையில் அகமது நகர ராஜ்யத்தின் பெரும்பகுதியில் மக்கள் குடியேற வில்லை. அதனால், அந்த இராஜ்யத்தின் விளை நிலங்களில் பெரும் பான்மையானவை தரிசாகக் கிடந்தன. கால் நூற்றாண்டு கழிந்த பின்னர்த்தான் மக்கள் அங்குக் கொஞ்சங் கொஞ்சமாகச் சென்று குடியேறிப் பயிர்த்தொழில் செய்யத் தொடங்கினார்கள். அது போலவே குஜராத்திலும் கால் நூற்றாண்டு வரையில் நிலங்களைப் பயிர் செய்வதற்குக் குடியானவர்கள் கிடைக்கவில்லை. மேலும், அங்கு ஓங்கியிருந்த நெசவுத்தொழில் அடியோடு அழிந்து போயின. அதனால் ஏற்பட்ட விளைவுகள் பல. 1630-ஆம் ஆண்டில் சூரத்திலிருந்து ஏராளமான காலிக்கோவும் அவுரியும் ஐரோப்பா விற்கு ஏற்றுமதியாயின. பஞ்சத்திற்குப் பின்னர்க் குஜராத்தில் நெசவாளிகள் இல்லாததால் காலிக்கோக் கிடைக்கவில்லை. ஆகவே ஐரோப்பிய வியாபாரிகள் காலிக்கோவுக்காக வேறிடங்களைத் தேடிச் சென்றார்கள். அவ்வாறு சென்றவர்கள் சோழமண்டலக் கடற்கரையில் ஏராளமான காலிக்கோக் கிடைக்குமென்பதை யுணர்ந்ததால், பதினேழாம் நூற்றாண்டின் இடையில் சூரத் திற்குப் பதிலாகச் சென்னைப்பட்டினம் காலிக்கோ வியாபாரத்தின் முக்கிய நகரமாக மாறிற்று. ஏறக்குறைய அதே சமயத்தில் மேற் கிந்தியத் தீவுகளிலிருந்து அதிகமான அவுரி ஐரோப்பாவுக்கு வந்

திறங்கியதால் இந்திய அவுரிக்குக் கிராக்கி யில்லாமற்போயிற்று. இவ்வாறு சூரத்தின் வியாபாரத்திற் பெரும்பகுதி அழிந்து போயிற்று. ஆகவே ஐரோப்பிய வியாபாரமெல்லாம் முக்கியமாகச் சென்னையிலும் வங்காளத்திலும் நடக்கத் தொடங்கியது. அதனால், அந்தப் பிரதேசங்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் அரசியலரங்கத்திலும் முதன்மை பெறத் தொடங்கின.

1630-ஆம் ஆண்டிலும், அதற்கடுத்த ஆண்டிலும் ஏற்பட்ட பஞ்சத்தைத் தவிர, வேறு பல பஞ்சங்களும் இந்தியாவில் ஏற்பட்டன என்று அறிகிறோம். அவற்றைப்பற்றிய முழு விவரங்களையும் அறிய முடியவில்லை எனினும், ஆங்காங்கு 1636, 1643, 1645, 1646, 1648, 1650, 1659-ஆகிய ஆண்டுகளிற் பஞ்சம் ஏற்பட்டதென்றும், 1661-ஆம் ஆண்டில் மிகப் பரந்த பிரதேசத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டதென்றும் அறிகிறோம். இந்தியாவிற் பஞ்சம் ஏற்படுவது ஏதோ ஓர் அசாதாரணமான நிகழ்ச்சியென்று நினைத்துவிடக்கூடாது. குடியானவர்களும் தொழிலாளிகளும் பஞ்சத்தை எப்போதும் எதிர்பார்த்துக்கொண்டேதான் இருந்தார்கள். பருவ மழை சரியாகப் பெய்துவிட்டால் பஞ்சம் வராது. ஆனால் அது மறுத்ததும் பஞ்சம் ஏற்பட்டு மக்களுடைய சமூக நிலையையும், பொருளாதார நிலையையும் சீர் குலைப்பது நிச்சயம்.

அதிகாரம்—32

அவுரங்கஜீப்

ஷாஜஹான் உடல் நலிவுற்றான் என்று கேள்விப்பட்டதும் அவனுக்குப்பின் அரச பதவியைத் தானே அடையும் நோக்கத்துடன் அவுரங்கஜீப் தட்சிணத்திலிருந்து வடக்கே சென்றான் என்று சென்ற அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். அவுரங்கஜீப்பைத் தவிர இன்னும் மூன்று இளவரசர்கள் அரச பதவிக்காகப் போட்டியிட்டார்கள். அந்த மூவரையும் அவுரங்கஜீப் விரைவில் தோற்கடித்துத் தன் தந்தையாகிய ஷாஜஹானை ஆக்ராக் கோட்டையில் சிறை வைத்துவிட்டு, 1658-ஆம் ஆண்டின் வேனிற்காலத்தில் மொகலாயச் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டான். அப்போது அவனுக்கு வயது ஏறத்தாழ நாற்பது. அவனுக்குப் போர் முறைகளிலும் அரசியல் அலுவல்களிலும் நல்ல அனுபவம் இருந்தது. சுமார் ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் அவன் இறந்தபோது மொகலாய சாம்ராஜ்யம் அழிந்து

கொண்டிருந்தது; காஜானுக் காலியாயிருந்தது; மொகலாயச் சேனை வலியிழந்து நின்றது; அரசியல் முறை சீர்கெட்டுக் கிடந்தது. இந்த நிலைக்கு அவுரங்கஜீப்பின் அரசியற் கோட்பாடுகள் முதற் காரணமாகவும், அரசாங்க அலுவல்களில் அவன் அனுசரித்த பொருந்தாத முறைகள் இரண்டாவது காரணமாக வும் இருந்தன.

அவுரங்கஜீப் பல சிறந்த குணங்களைப் பெற்றிருந்தான். அஞ்சாத நெஞ்சமும், பதட்டமற்ற உள்ளமும், ஆழ்ந்த மதப் பற்றும், ஒப்பற்ற தன்னடக்கமும் அவன் பெற்றிருந்தான். எனினும் அவனிடம் இராஜதந்திரம் சிறிதும் கிடையாது.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் அவுரங்கஜீப் இஸ்லாம் மதக் கோட்பாடுகளைத் தவருமற் பின்பற்றுபவன். அதுபோலவே இராஜ்யத்தையும் இஸ்லாமியச் சட்டங்களின் படியே ஆளவேண்டுமென்று விரும்பினுன். அவ்வாறு செய்வ தால் ஏற்படக்கூடிய விளைவுகளை அவன் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை. தன்னுடைய கொள்கைகளாலும், திட்டங்களா லும் அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டியே ஆலோசனை செய்வதன்றோ சிறந்த இராஜதந்திரம்? இந்துக்களின் ஆதரவையும், இராஜபுத்திரர்களுடைய நட்பையும் பெற்று அக்பர் மொகலாயப் பேரரசை நிலையாக நிறுவினுன். ஆனல் இஸ்லாம் மதக் கொள்கைகளைச் சிறிதும் தவருது பின் பற்ற விரும்பிய அவுரங்கஜீப் சிறந்த இராஜதந்திரியான அக்பரின் அரசியற் கொள்கைகளுக்கு நேர் எதிராக நடக்கவேண்டிய தாயிற்று. அதனல், மொகலாய சாம்ராஜ்யம் அழிந்தது; அவுரங்கஜீப்பின் ஆட்சி படுதோல்வியாக முடிந்தது.

இஸ்லாம் மதத்தின் விதிகளின்படி இராஜ்யத்தை யாள விரும்பிய அவுரங்கஜீப் அதற்காகக் கையாண்ட முறைகளை இங்குச் சுருக்கிக் கூறுகிருேம். சுங்க வரிகளை விதித்து வசூலிப் பதில் அவுரங்கஜீப் முஸ்லீம்களுக்குச் சாதகமாகவும், இந்துக் களுக்குப் பாதகமாகவும் சட்டங்களை ஏற்படுத்தினுன். முஸ்லி மல்லாத அனைவர்மீதும் ஜஸியா வரியை விதித்தான். இந்துக் கோயில்களை இடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்து அதன் படி காசி, மதுரா ஆகிய புண்ணிய க்ஷேத்திரங்களிலிருந்த இந்துக் கோயில்களை அழித்தான. உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடுப்பதற்குச் சட்டமியற்றினுன். பசுக்கொலை செய்யக்கூடா தென்று அக்பர் காலத்தில் ஏற்பட்ட சட்டம் ஷாஜஹான் காலத் திலேயே நடைமுறையில் இல்லாமற் போய்விட்டது என்று

நினைக்க இடமிருக்கிறது. அந்தத் தடையை அவுரங்ஜீப்பும் விரும்பவில்லை என்று யூகிக்கலாம். ஏனெனில் ஒரு தடவை ஓர் இந்துக் கோவிலுக்குள்ளேயே அவுரங்ஜீப் ஒரு பசுவைக் கொல்லுவதற்கு ஏற்பாடு செய்தான் என்று அறிகிறோம். அவனுடைய ஆட்சியின் தொடக்கத்தில் நிலவரி இலாக்காவில் இந்து உத்தியோகஸ்தர்கள் ஒருவருமே இல்லாமற் செய்துவிட்டான். ஆனால் நாளடைவில் அவர்களில்லாமல் அந்த இலாக்காவின் வேலை நடவாததைக் கண்டு மறுபடியும் அவர்களைச் சேர்த்துக் கொண்டான். எனினும், அவனுடைய ஆட்சியின் இரண்டாம் பகுதியில் இந்துக்களில் ஒருவர்கூட அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கவில்லை. இந்துக்களுடைய கோயில்களுக்கும் மற்றைய அறநிலையங்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்த பரம்பரையான மானியங்களெல்லாம் ரத்துச் செய்யப்பட்டன. இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களுக்கெல்லாம், பணமும், பட்டமும், பதவியும் வழங்கப்பட்டன. ஆனால் இந்துக்களின்மீது கொடிய தடைகள் விதிக்கப்பட்டன. அவர்களுடைய மதக் கூட்டங்களுக்கும், திருவிழாக்களுக்கும், விருந்துகளுக்குங்கூடத் தடையுத்தரவுகள் விதிக்கப்பட்டன.

மேலே கூறிய விதிகளும், அவைபோன்ற பிற விதிகளும் ஒரே சமயத்தில் ஏற்படவில்லை. அவைகளெல்லாம் ஒவ்வொன்றாக நாளடைவில் ஔரங்கஜீப்பால் ஏற்படுத்தப்பட்டவை. அவற்றின் விளைவாக முஸ்லிம்களின் நன்மைக்காகத்தான் அரசாங்கம் இருந்ததே தவிர, மற்றவர்களின் நன்மைக்காக அன்று என்ற எண்ணம் சிறிது சிறிதாக மக்கள் மனத்தில் வேரூன்றிற்று. அதனால் இந்துக்களுக்கு மிகுந்த அதிருப்தியும் பெருஞ்சீற்றமும் ஏற்பட்டன. வட இந்தியச் சமவெளியில் அவ்வப்போது கலகங்கள் தோன்றின. அவற்றில் அந்தந்தப் பகுதிகளிலிருந்த இந்துக்கள் எல்லோரும் சேர்ந்துகொள்ளாமல், சில குறிப்பிட்ட சாதியினர்தான் சேர்ந்து கொண்டார்களெனினும் அவற்றை அடக்குவது அவ்வளவு எளிதாக இல்லை. மத்திய இந்தியாவின் கரடுமுரடான பிரதேசத்தில் இந்துத் தலைவர்கள் அவுரங்கஜீப்புக்கு எதிராகக் கலகம் செய்வதற்குப் பொதுமக்கள் துணையை எளிதாகப் பெற்றார்கள். மேலும், அவுரங்கஜீப் இராஜபுத்திரர்களோடும் போர் தொடுத்தானகையால் அவர்களுடைய விசுவாசத்திலும் நம்பிக்கை வைக்கமுடியாமலிருந்தான். இவ்வாறு, இந்துக்களின் ஆதரவையும், இராஜபுத்திரர்களுடைய துணையையும் கொண்டு அக்பர் நிறுவிய மொகலாயப் பேரரசின்

அடிப்படையை அவுரங்கஜீப் தகர்த்தெறிந்தான். இதுவே அவுரங்கஜீப் பின்பற்றிய தவருன அரசியற் கோட்பாடுகளில் முதன்மையானது. மொகலாய சாம்ராஜ்யத்தை அவன் அளவுக்கு மீறிப் பரப்ப முயன்றது அவனுடைய தவருன கோட்பாடுகளில் இரண்டாவதாகும். அதைப்பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

இனி, அரசாங்க அலுவல்களில் அவுரங்கஜீப் அனுசரித்த பொருந்தாத முறைகளைப்பற்றிக் கூறுவோம். அவனுடைய உத்தியோகஸ்தர்களிடம் அவனுக்குக் கொஞ்சமும் நம்பிக்கை கிடையாது. அவன் யாரையும் நம்பாததால் அவனையும் யாரும் நம்பவில்லை. அதனுல் திறமைவாய்ந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பதிலாக, இச்சகம் பேசிக் காலங்கழிக்கும் திறமையற்ற உத்தியோகஸ்தர்கள் அரசாங்கத்தில் நிறைந்தார்கள். நாளாக நாளாக அவுரங்கஜீப் எல்லா அரசியல் அலுவல்களையும் தானே நேரில் கவனிக்கத் தொடங்கினுன். தூரத்திலிருந்த அவனுடைய உத்தியோகஸ்தர்களெல்லாம் அவனை ஏமாற்றிவிட்டுத் தங்கள் சுயநலத்தையே கருதிப் பொருள் சேர்க்கத் தொடங்கினுர்கள். அவனுடைய சேனுதிபதிகள் தங்கள் திட்டங்கள் முழுவதையும் அவன் ஆதரிப்பான் என்று நம்பமுடியாததால் அவனுடைய எதிரிகளுடன் அடிக்கடி சதிசெய்யத் தொடங்கினுர்கள். ஆகவே கடைசிக் காலத்தில் எண்பது வயதின் எல்லையைத் தாண்டிவிட்ட கிழவனுன அவுரங்கஜீப் நம்பிக்கையான சேனுதிபதிகள் இல்லாததால் எல்லாச் சண்டைகளையும் தானே நேரிற் சென்று நடத்த வேண்டியதாயிற்று.

அவுரங்கஜீபின் ஆட்சியில் அரசாங்கத்தின் பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடைந்துவிட்டது. பல பயனற்ற சண்டைகளால் கஜானுக் காலியாகிவிட்டது; அதனேடு கணக்கற்ற வீரர்களும் மாண்டுபோனுர்கள். பெருகிக்கொண்டே சென்ற வரிச்சுமையைத் தாங்கமாட்டாத குடியானவர்களிற் பலர் பயிர்த்தொழிலை விட்டுவிட்டு வழிப்பறிக் கள்வர்களாக மாறினுர்கள். அதனுல் வியாபாரமும் கைத்தொழில்களும் அழிந்தன. பொருளுற்பத்தி நாளுக்குநாள் குறைந்துகொண்டே வந்தது; ஆனுல் தேவைகளும் செலவுகளும் அதிகரித்துக்கொண்டே வந்தன. அவுரங்கஜீப் ஆடம்பரம் சிறிதுமில்லாத மிக எளிய வாழ்க்கையில் ஈடுபட்டதால், சுகபோகப் பொருள்களுக்கும் கிராக்கி இல்லாமற் போய்விட்டது. ஆகவே, அத்தகைய பொருள்களைச் செய்யும் நுண்ணிய தொழில்களில் ஈடுபட்ட திறமை

மிக்க தொழிளாளிகளுக்கு ஆதரவின்மையால் அவர்களுடைய தொழில்கள் நசித்தன. கலைவளர்ச்சி குன்றியது. அரச சபையில் இன்னிசைக்கு இடமேயில்லை. அரண்மனைச் சுவர்களை அழகு படுத்திக் கொண்டிருந்த உருவப்படங்கள் அழிக்கப்பட்டன. இலக்கியத்திற்கு ஆதரவு இல்லாமற் போய்விட்டது. அரசியல் நிகழ்ச்சிகளைக்கூடக் குறித்து வைக்கக்கூடாது என்று அவுரங்கஜீப் உத்தரவிட்டான். அவுரங்கஜீபும் அவனுடைய முக்கியமான உத்தியோகஸ்தர்களும் எழுதிய ஏராளமான கடிதங்களின் உதவியால்தான் நாம் அவனுடைய ஆட்சியைப்பற்றிப் பல விஷயங்களை அறிந்துகொள்ளுகிறோம்.

அவுரங்கஜீப்பின் ஆட்சியை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதியில் அவன் வட இந்தியாவிலிருந்தான். அப்போது மொகலாய சாம்ராஜ்யத்தின் தென்பகுதியைச் சேர்ந்த விஷயங்களை அவனுடைய உத்தியோகஸ்தர்கள் கவனித்தார்கள். 1681-ஆம் ஆண்டில் அவன் நர்மதையைத் தாண்டித் தெற்கே சென்று தட்சணத்தின் விஷயங்களைத் தானே நேரிற் கவனிக்கத் தொடங்கினான். அதன்பின் வட இந்தியாவின் அரசாட்சி சீர் கேடடையத் தொடங்கியது. தட்சிணத்திற்குச் செல்வதற்கு முன் அவுரங்கஜீப் வங்காளம், ஆப்கானிஸ்தானம், இராஜபுதனம ஆகிய பிரதேசங்களின்மீது தன் கவனத்தைச் செலுத்தினான்.

அவுரங்கஜீப் முதலில் அஸாமை ஜெயித்து மொகலாய சாம்ராஜ்யத்தோடு சேர்க்குமாறு வங்காள இராஜப்பிரதிநிதிக்கு உத்தரவிட்டான். அப்போது அஸாம் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த அஹோம் வம்சத்தினரின் ஆட்சியிலிருந்தது. அந்தச் சமயத்தில் வங்காளத்தில் மீர்ஜம்லா என்பவன் இராஜப்பிரதிநிதியாக இருந்தான். அவன் மிகத் திறமை வாய்ந்தவன். அவன் பாரசீக தேசத்தைச் சேர்ந்தவன். தொடக்கத்தில் வியாபாரியாக இருந்த அவன் தன் திறமையால் கோல்கொண்டா ராஜ்யத்தின் பிரதம மந்திரியானான். அவனுடைய அதிகாரமும் செல்வமும் மேலும் மேலும் வளர்வதைக் கண்டு அரசனே அஞ்சினான். அதனால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று அஞ்சிய மீர்ஜம்லா ஷாஜஹானுடன் சேர்ந்துகொண்டான். ஷாஜஹான் அவனுக்கு ஒரு மந்திரிப் பதவியை வழங்கினான். அவுரங்கஜீப் அவனை அஸாம் படையெழுச்சிக்குத் தலைவனாக்கினான். அவன் தன்னுடைய வழக்கமான திறமையோடு அஸாம் படையெழுச்சியை நடத்தினான். ஆனால், அவனுடைய படைகள் வெகு துரித

மாக முன்னேறின என்றாலும், அவன் விரைவில் பின்னடைய வேண்டியதாயிற்று. அதன்பின் 1663-ஆம் ஆண்டில் அவன் நோயுற்று இறந்தான். தன்னுடைய சேனாதிபதிகளின் விசுவாசத்தில் முழு நம்பிக்கை வைக்காத அவுரங்கஜீப் மீர்ஜம்லாவின் சாவுச் செய்தியைக்கேட்டு விசனப்படவில்லை என்று பொதுமக்கள் கருதியதாக ஒரு வதந்தி இருந்தது. அதன்பின், அஸாமை ஜெயிப்பதற்குப் பல முயற்சிகள் நடந்தன. இருபதாண்டுகளுக்குப் பின்னரும் அஸாம் சுதந்திரமாகவேயிருந்தது.

மீர்ஜம்லாவுக்குப் பின் வங்காள இராஜப் பிரதிநிதியாக இருந்தவன் சிட்டகாங்கு ராஜ்யத்தை ஜெயித்து மொகலாய சாம்ராஜ்யத்தோடு சேர்த்தான். அந்த முயற்சியில் அவனுக்குப் பரங்கிகள் உதவி செய்தார்கள். அந்தக் கொள்ளைக்காரர்கள் அரக்கான் அரசன் தங்களைச் சரியானபடி நடத்தவில்லையென்று அவனுடன் மனஸ்தாபங்கொண்டு, மொகலாய ராஜப்பிரதிநிதிக்கு உதவி செய்ததால் அவன் 1666-ஆம் ஆண்டில் சிட்டகாங்கை எளிதில் ஜெயித்துக்கொண்டான். அதன்பின் பரங்கிகள் டாக்காவின் அருகில் குடியேறினார்கள். அவர்களுடைய சந்ததியார்களிற் சிலர் இன்னும் அங்கு வாழ்கிறார்கள். சிட்டகாங்குப் பிரதேசத்தில் கடற்கொள்ளை வெகுவாக நின்றுவிட்டது.

ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட கலகம் மிகவும் முக்கியமானது. அதன் தலைநகரமான காபூல் ஒரு முக்கியமான கேந்திரஸ்தானம். இந்தியாவின்மீது படையெடுத்தவர்களெல்லாரும் காபூல் வழியாகத்தான் வந்தார்கள். ஆகவே காபூலுக்கு ஆபத்து ஏற்பட்டால் மொகலாய சாம்ராஜ்யத்திற்கு ஆபத்து ஏற்படும். காபூலுக்கும் சிந்து நதிக்கும் இடையிலுள்ள மலைப்பிரதேசத்தில் பல கூட்டத்தினர் வசித்து வந்தனர். அந்தப் பகுதி மொகலாய சாம்ராஜ்யத்திற் சேர்ந்ததுதான் எனினும் அங்கு வசித்து வந்த கூட்டத்தினர் நடைமுறையில் மொகலாய ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் பூரண சுயேச்சையுடன் இருந்தார்கள். அவர்கள் நாடு செழிப்பற்றதாக இருந்ததால் அவர்கள் கொள்ளையடித்தும், வேறு பல தீத்தொழில்கள் புரிந்தும் பிழைக்க வேண்டியதாயிற்று. அந்தப் பகுதியிலிருந்த பள்ளத்தாக்குகளைத் தவிர வேறு போக்குவரவு வசதிகள் இல்லை. அந்தப் பள்ளத்தாக்குகளில் மொகலாயக் குதிரைப்படைகள் சரியானபடி சண்டைசெய்ய முடியவில்லை. அவ்வப்போது அந்தப் பள்ளத்தாக்குகளை மலைநாட்டினர் பிடித்துக்கொண்டு மொகலாயச்சேனை

களின் போக்கு வரவைத் தடைசெய்து விடுவார்கள். அந்தச் சமயங்களில் மொகலாயர்கள் முடிந்தால் மலைநாட்டினரைத் தோற்கடித்துத் துரத்துவார்கள். முடியாவிட்டால் அவர்களுக்குப் பணம் கொடுத்துச் சமாதானம் செய்துகொள்ளுவார்கள். சாதாரணமாக அந்த மலைநாட்டினர் கூட்டங்கள் ஒன்ருேடொன்று சச்சரவிட்டுக்கொண்டே யிருந்ததால், அவர்களை யடக்குவது மொகலாயர்களுக்கு எளிதாக இருந்தது. ஆனால் யாராவது ஒரு சிறந்த தலைவன் கீழ் அவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து விட்டால் மொகலாயர்களுக்கு ஆபத்துத்தான். அத்தகைய தலைவன் ஒருவன் 1672-ஆம் ஆண்டில் தோன்றினன். உடனே சண்டையேற்பட்டது. மொகலாயர்கள் தொடக்கத்தில் பல தோல்விகளை யடைந்தார்கள். இவ்வாறு இரண்டாண்டுகள் தோல்வி மேல் தோல்வி ஏற்படவே, அவுரங்கஜீப் தானே போர்க்களத்திற்குச் சென்று, தந்திரத்தாலும் படை வலியாலும மலைநாட்டினர் சமஷ்டியை முறித்தான். ஆனால் வடமேற்கெல்லையில் மூன்ருண்டுகள் சண்டைசெய்ய நேரிட்டதால் தட்சிணத்திலிருந்த மொகலாய சேனதிபதிகளுக்குத் தேவையான படைகளையும், மற்றையப் பொருள்களையும் அனுப்ப முடியாமற் போய்விட்டது. அதனால் தட்சிணத்தில் மொகலாயர்கள் நிலை மோசமாகிவிட்டது.

ஆப்கானிஸ்தானத்தில் ஏற்பட்ட கலகத்தை அடக்கிய பின் அவுரங்கஜீப் தன்னுடைய கவனத்தை இராஜபுதனத்தின்மீது திருப்பினன். இராஜபுதனத்தில் இந்து ஆட்சியை ஒழிப்பதைத் தன்னுடைய அடிப்படைக் கொள்கையாகக் கொண்டவன் அவுரங்கஜீப். ஆகவே அவன் மொகலாயர்களுக்குச் சொந்தமான ஆஜ்மீருக்கு மேற்கிலிருந்த மார்வார் இராஜ்யத்தை முதலில் தன் ஆட்சிக்குள் கொண்டுவர நினைத்தான். அந்த இராஜ்யம் ராதார்களின் ஆட்சியில் இருந்தது. 1678-ஆம் ஆண்டில் மார்வார் மகாராஜா பிள்ளையில்லாமல் இறந்தான். உடனே அவுரங்கஜீப் மார்வாரைத் தன்னுடைய ஆட்சியிற் சேர்த்துக்கொண்டான். அதைக்கண்ட ராதார்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தார்கள். ஆனால், மகாராஜா இறக்கும்போது சூலுயிராயிருந்த அவன் மனைவி சில நாளில் ஓர் ஆண் மகவை ஈன்ருள். அதைக்கண்டு மனவெழுச்சியடைந்த ராதார்கள் குழந்தை ராணுவுக்காகப் போர்செய்யத் தலைப்பட்டு கொரில்லா முறையில் மொகலாயர்களை எதிர்த்தார்கள், சமவெளிகளிலிருந்த நகரங்களை

மொகலாயர்கள் கைப்பற்றி, அங்கிருந்த கோயில்களை யழித்து, ராதார்களை மலைகளுக்குத் துரத்திவிட்டார்கள். மார்வாரையடுத்திருந்த மீவார் இராஜயம் மார்வாரின் உதவிக்கு வந்தது. ஆனால் மொகலாயர்கள் மீவார் இரஜபுத்திரர்களையும் தோற்கடித்து, அவர்களை அரவல்லி மலைக்குத் துரத்தி அதன் இரு மருங்கிலும் சூழ்ந்துகொண்டார்கள்.

அந்தச் சமயத்தில் ஓர் எதிர்பாராத சம்பவம் ஏற்பட்டது. அவுரங்கஜீபின் மக்களில் ஒருவனான அக்பர் என்ற இளவரசன் இராஜபுத்திரர்களைத் தாக்கிய மொகலாயச் சேனையின் ஒரு பகுதிக்குச் சேனாதிபதியா யிருந்தான். அவன் திறமையின்மையால் அவுரங்கஜீபின் வெறுப்பைத் தேடிக்கொண்டான். அதனால் அவன் கோபங்கொண்டு தந்தைக்கு எதிராகக் கலகஞ்செய்து, இராஜபுத்திரர்களோடு சேர்ந்துகொண்டு தானே மொகலாயச் சக்கரவர்த்தி என்று முடிசூடிக்கொண்டான். அந்தச் சமயத்தில் அவுரங்கஜீப்பின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. ஆஜ்மீரில் இருந்த அவனிடம் போதிய அளவு படைகள் இல்லை. அந்தச் சமயத்தில் அக்பர் ஆஜ்மீரைத் தாக்கியிருந்தால் அவுரங்கஜீப் தோற்றுப்போயிருப்பான்; அக்பர் சிம்மாசனத்தை யடைந்திருப்பான். ஆனால், அக்பர் உடனே ஆஜ்மீரைத் தாக்காமல் தாமதப்படுத்திக் கொண்டிருந்தான். அதற்குள் அவுரங்கஜீப் தன்னுடைய நிலைமையை பலப்படுத்திக்கொண்டு முன்னேறத் தயாராயிருந்தான். அக்பருடைய சேனையும் அவுரங்கஜீபின் சேனையும் சந்தித்தபோது அவுரங்கஜீப் பொய்க் கையெழுத்திட்ட கடிதங்கள் முதலிய பல தந்திரமான சூழ்ச்சிகளைக் கையாண்டு, இராஜபுத்திரர்களுக்கும் அக்பருக்கும் பிளவு ஏற்படுமாறு செய்துவிட்டான். அதனால், இராஜபுத்திரர்கள் அக்பருக்கு உதவிசெய்ய மறுத்துத் திரும்பிச் சென்றுவிட்டார்கள். அக்பரின் தலைமையிலிருந்த மொகலாயச்சேனைகள் அவுரங்கஜீபுடன் சேர்ந்துகொண்டன. அக்பர் ஒரு சில துணைவர்களுடன் தப்பியோடினான். அதற்குள் அவுரங்கஜீப் தங்களை ஏமாற்றிவிட்டான் என்பதை உணர்ந்த இராஜபுத்திரர்கள் அக்பருக்கு அடைக்கலம் தந்து அவனைத் தெற்கே அழைத்துக்கொண்டுபோய் மகாராஷ்டிரர்களிடம் சேர்த்தார்கள். அவர்களுடன் சிலகாலந் தங்கியிருந்த அக்பர் பின்னர் பாரசீகத்துக்குச் சென்றான். அதன்பிறகு இந்தியாவுக்கு வரவில்லை.

இந்த நிகழ்ச்சி நடந்த சிலகாலத்தில் மீவார் அவுரங்ஜீப்புடன் சமாதானம் உடன்படிக்கை செய்துகொண்டது. ஆனால், மார்

வாரில் கொரில்லாச் சண்டை நடந்துகொண்டே யிருந்தது. அவுரங்கஜீபுக்கு அடுத்தபடியாகச் சிம்மாசனமேறிய மொகாலாய அரசன், முப்பது ஆண்டுகளுக்கு முன் தந்தை யிறந்தபின் பிறந்த குழந்தயாகிய இராணுவை மார்வார் அரசன் என்று ஏற்றுக்கொண்ட பின்னர்த்தான் அந்தச்சண்டை நின்றது. இராஜபுதனத்தில் அவுரங்கஜீப் செய்த சண்டையின் விளைவாக மொகலாய சாம்ராஜ்யத்திற்கு நஷ்டந்தான் ஏற்பட்டது, அதற்குப் பின்னரும் சில இராஜபுத்திரத்தலைவர்கள் மொகலாய சாம்ராஜ்யத்திற்கு உண்மையான சேவை செய்துகொண்டுதான் இருந்தார்கள். ஆனால் பெரும்பான்மையான தலைவர்கள் அவுரங்கஜீபுக்கு உதவி செய்வதில் சிறிதும் உற்சாகமில்லாதவர்களாவும், சிலர் அவனுக்கு நேரடியான பகைவர்களாகவும் இருந்தார்கள் அதனால் முன்போல இராஜபுத்திர வீரர்கள் மொகலாயச் சேனையில் சேர்ந்து மொகலாயச் சக்கரவர்த்திக்காகச் சண்டை செய்ய முன் வரவில்லை. அதனால் அவுரங்கஜீப் தட்சிணத்திற் செய்த போர்களுக்கு இராஜபுத்திர வீரர்களின் உதவி கிடைக்கவில்லை.

மீவாருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட சில மாதங்களுக்கெல்லாம் அவுரங்கஜீப் தட்சிணத்திற்குச் சென்றான், அங்கு மொகலாயர்களுடைய நிலை மோசமாக இருந்தது. பீஜப்பூரும் கோல்கொண்டாவும் இன்னும் கைப்பற்றப்படவில்லை. அவற்றுடன் சிவாஜி என்ற புதியதொரு பகைவனும் தோன்றியிருந்தான். அதுவுமன்றி அவுரங்கஜீபுக்கு எதிராகக் கலகம் செய்த அவன் மகனை அக்பரும் அப்போது மகாரரஷ்டிரர்களுடன் தங்கியிருந்தான். 1686-இல் அவுரங்கஜீப் பீஜப்பூரைக் கைப்பற்றிக்கொண்டான். அடுத்த ஆண்டில் கோல்கொண்டாவை வஞ்சனையால் வென்றான். அந்த இரண்டு இராஜ்யங்களும் மொகலாய சாம்ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டதால், மொகலாய சாம்ராஜ்யத்தின் எல்லை கிழக்கே வங்காள விரிகுடாவைத் தொட்டுக்கொண்டு தெற்கே சென்னையைத் தாண்டிச்சென்றது. மகாராஷ்டிரர்களின் முன்னேற்றம் இந்திய வரலாற்றில் மிக முக்கியமான இடத்தை வகிப்பதால் அதைப்பற்றி விரிவாகக் கூறுவது பொருந்தும்.

மகாராஷ்டிரர்கள் பெரும்பாலும் பம்பாய்க்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலுமுள்ள மேற்கு மலைத்தொடரைச் சேர்ந்த மேட்டு நிலங்களில் வசித்தார்கள். அவர்கள் நாடு அவ்வளவு வளமுடைய நாடன்று. அதனால், அவர்கள் வாழ்க்கை சிக்கனத்

தையும், கடுமையான உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆகவே அவர்கள் சிறந்த போர்வீரர்களாவதற்கு ஏற்ற இயல்புகளைப் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய உபயோகத்தை நன்குக அறிந்திருந்த தட்சிண அரசர்கள் அவர்களைத் தங்கள் இராஜ்யங்களில் போர் வீரர்களாக வைத்துக்கொண்டார்கள். அத்தகைய கூலிப்படைகளில் ஒன்றுக்கு ஷாஜி பான்ஸலே என்பவன் தலைவனு யிருந்தான். அவன் மிகவும் திறமை வாய்ந்தவன். அதனுல் அவன் தனக்கேற்பட்ட பல ஆபத்துக்களைச் சமாளித்தான். பதினேழாம் நூற்றுண்டின் முதற் பாதியில் அவன் முதலில் அகமது நகரத்தின் சார்பிலும், அதன்பின் மொகலாயர் சார்பிலும், கடைசியில் பீஜப்பூர் ராஜ்யத்திற்குத் துணையாகவும் போர்புரிந்தான். அவனுக்கு மகனுக 1627-ஆம் ஆண்டில் சிவாஜி பிறந்தான்.

சிவாஜியின் தலைமையில் மகாராஷ்டிரர்கள் விரைவில் முன்னேற்ற மடைந்தார்கள். அதன்பயனுக மகாராஷ்டிரம் என்ற ஒரு புதிய ராஜ்யம் தோன்றியது. இந்த விஷயத்தைப்பற்றிக் கூறும்போதும் வரலாற்று ஆசிரியர்கள் மிகுந்த எச்சரிக்கையாயிருக்கவேண்டும். ஏனெனில் நாளடைவில் மகாராஷ்டிரர்களைப் பற்றி ஒன்றுக்கொன்று மாறுபட்ட இரண்டு அபிப்பிராயங்கள் வளர்ந்திருக்கின்றன. சிவாஜி இறந்து ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர் வட இந்தியக் கிராமங்களில் மகராஷ்டிரச் சேனைகள் செய்த கொடிய செயல்களால் அங்கிருந்த மக்கள் வெகுநாள் வரையிலும் மகாராஷ்டிரர் என்ற பெயரைக் கேட்டாலும் எல்லையற்ற வெறுப்பும் கோபமும் அடைந்தார்கள். ஆனுல் மேற்கிந்திய மக்கள் இன்றைக்கும் சிவாஜியை ஓர் ஒப்பற்ற வீரனுகப் போற்றுகிறுர்கள். அவனுடைய அருஞ்செயல்களைப்பற்றிப் பல நூல்கள் தோன்றியுள்ளன, அவற்றில் சில புனைந்துரைகளாக இருக்கின்றன. மற்றவைகள் உண்மையான நிகழ்ச்சிகளை ஆதாரமாகக் கொண்டவைகளா இல்லையா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. தற்கால அறிஞர்கள் சிலர் சிவாஜியை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சின்னமாகவும் அதன் தலைவனுகவும் கருதுகிறுர்கள். வேறு சிலர் அவன் ஒரு கொள்ளைக்கூட்டத்தின் தலைவன் என்று கருதுகிறுர்கள். கொள்ளைக்காரனுக வாழ்க்கையைத் தொடங்கிய அவன் நாளடைவில் ஒரு தலை சிறந்த போர்வீரனுகவும், இராஜதந்திரியாகவும், ஒப்பற்ற திறமை வாய்ந்த அரசியல் நிர்வாகியாகவும் பரிணமித்தான் என்று வேறு சிலர் கருதுகிறுர்கள். இத்தகைய முரண்பட்ட அபிப்பிராயங்களைப்பற்றிய ஆராய்ச்சியில்

ஈடுபடுவதற்கு இந்த நூல் இடமளிக்காது. ஆகவே நாம் அவன் சாதித்த காரியங்களை மாத்திரம் இங்குக் கூற விரும்புகிறோம்.

சிவாஜி மகாராஷ்டிரர்களுடைய தலைவனாவதற்கு முன்னரே அவர்களுக்கு இந்துமதத்திற் புதிய நம்பிக்கையும், உற்சாகமும் ஏற்பட்டிருந்தன வென்றும், அந்த ஆர்வத்தை இந்துக்களின் ஆதிக்கத்தை மறுபடியும் நிறுவுவதற்குச் சிவாஜி பயன்படுத்திக் கொண்டான் என்றும் கூறப்படுகிறது. இந்தக்கருத்துக்குப் போதுமான ஆதாரம் இருப்பதாகக் கூறமுடியாது. ஆனால், சிவாஜியின் தோற்றத்திற்கு சிறிது முற்பட்ட காலத்தில் இந்துமதத்தைப் பற்றிய புதிய கருத்துக்கள் மகாராஷ்டிரத்திற் பரவியிருந்தன என்பது உண்மைதான், மேலும் ஒப்பற்ற மகாராஷ்டிரக் கவியான துக்காராம் இயற்றிய பாடல்களின் மூலம் பதினேழாம் நூற்றாண்டின் முதற்பாதியில் இந்துமதக் கருத்துக்கள் அதிகமாக மகாராஷ்டிரர்களிடையே பரவி அவர்கள் உள்ளங்களில் வேரூன்றியிருந்தன. ஆகவே, சிவாஜி தோன்றிய சமயத்தில் இந்து மறுமலர்ச்சியைப்பற்றிய எண்ணங்கள் மகாராஷ்டிரத்தில் உலவிக்கொண்டிருந்தன. சிவாஜியும் இந்துமதத்தில் ஆழ்ந்த பற்றுடையவன். ஆனால் துக்காராம் போதித்த பரிசுத்த அன்புமயமான கொள்கைகளுக்கும், சிவாஜியின் பலவகைப்பட்ட அரசியற் காரியங்களுக்கும் தொடர்பு காண்பது அவ்வளவு எளிதன்று.

சிவாஜி தன் தந்தையின் ஜாகீரிலிருந்த பூனாவில் தன் தாயாரின் அன்பான மேற்பார்வையில் வளர்ந்தான். அவனுடைய தந்தை பெரும்பாலும் வேறு இடங்களில் போர்செய்வதில் ஈடுபட்டிருந்தான். சிவாஜி தன்னுடைய இருபதாம் வயதில் தன் தந்தையின் ஜாகீரை நிர்வகிக்கத் தொடங்கினான். அதற்குள் அவன் தனக்குத் துணையாக ஒரு சிறிய படையைச் சேர்த்துக் கொண்டான். அந்தச் சிறுபடையின் துணைகொண்டு அவன் தன்னுடைய ஜாகீரைப் பெருக்கி ஒரு சுயேச்சையான இராஜ்யமாகச் செய்ய முயன்றான். முதலில் அவன் ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் தன் வேலையில் ஈடுபட்டான். ஆனால் **1655**-ஆம் ஆண்டுக்குப் பின்னர், அவன் தைரியமடைந்து தன்னுடைய வேலையில் மும்முரமாக ஈடுபட்டான். அதனால் அவன் சில சமயங்களில் பீஜப்பூர் சுல்தானுடனும், சில சமயங்களில் மொகலாயர்களுடனும் போர்புரிய நேர்ந்தது. மொகலாயர்களுக்கும் சிவாஜிக்கும் சிலகாலம் வெற்றி தோல்வி இல்லாத போர் நடந்தது. கடைசியில் 1664-ஆம் ஆண்டில் அவுரங்கசீப் தன் சேனாதிபதி

களில் மிகவும் சிறந்தவனான ஜயசிங்கு என்பவனைச் சிவாஜியை அடக்குவதற்கு அனுப்பினான். அதன் பயனாக அடுத்த ஆண்டில் சிவாஜி மொகலாயச் சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டு அவனுக்கடங்கிய ஒரு சிற்றரசனானான்.

ஆனால் இந்த நிலை நீடிக்கவில்லை. சிவாஜி ஆக்ராவுக்குச் சென்று, அவுரங்கஜீபைப் பார்க்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதன்படி ஆக்ராவுக்குச் சென்ற சிவாஜி அங்குச் சரியானபடி வரவேற்கப்படாததால் அவுரங்கஜீபின் முன்னிலையி லேயே தன் கோபத்தையும் அதிருப்தியையும் காட்டினான். ஏற்கெனவே அவன்மீது அவநம்பிக்கை கொண்டிருந்த அவுரங்க ஜீப் அவனை ஆக்ராவிலேயே சிறை வைத்துவிட்டான். ஆனால் வியக்கத்தக்க முறையில் சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பிச் சென்று தன்னுடைய ராஜ்யத்தை யடைந்தான். அதன்பின் 1670-ஆம் ஆண்டில் மொகலாயர்களுக்கும், மகாராஷ்டிரர்களுக்கும் மறுபடி யும் போர் மூண்டது. சிவாஜியின் திறமை மிக்க தலைமையில் மகாராஷ்டிரர்கள் ஒற்றுமையுடன் மொகலாயர்களை எதிர்த்தார் கள். மொகலாயச் சேனைகள் வெற்றிகரமாகப் போர் செய் வதற்கு ஏற்ற நிலைமையில் இல்லை. ஆப்கானியப் போரால் தட்சணத்திலிருந்த மொகலாயச் சேனைகளுக்குப் போதுமான அளவு போர் வீரர்களும், வேறு அவசியமான பொருள்களும் கிடைக்கவில்லை. தட்சணத்திலிருந்த மொகலாயச் சேனாதிபதி களும் அடிக்கடி ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொண் டார்கள். அவர்கள் ஒற்றுமையாக இருந்த சமயத்திலும் போரைச் சரியாக நடத்த விரும்பவில்லை. ஏனெனில், சண்டை நீடித்துக் கொண்டே போனால் தங்கள் சொந்த லாபம் அதிகரித்துக் கொண்டே போகும் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இந்த நிலையில் மூன்று ஆண்டுகள் மொகலாயர்களுக்கும் மகாராஷ்டிரர் களுக்கும் சண்டை நடந்தது. அதன் பயனாக மகாராஷ்டிர ராஜ்யத்தின் எல்லைகள் விரிந்துகொண்டே சென்றன. சிவாஜியின் புகழோவெனில் எல்லையின்றி விரிந்தது.

1674-ஆம் ஆண்டில் சிவாஜி மகாராஷ்டிர அரசன் என்று முடிசூட்டிக்கொள்ள விரும்பினான். ஆனால் அவனுடைய இராஜ் யத்திலிருந்த பிராமணர்கள் சிவாஜி க்ஷத்திரிய வம்சத்தைச் சேர்ந் தவன் அல்லன் என்றும், அதனால் அரசனாக முடிசூட்டிக்கொள்ளு வதற்கு அவனுக்குத் தகுதியில்லையென்றும் கூறிவிட்டார்கள். உடனே ஒரு நீண்ட வம்சாவளி தயாரிக்கப்பட்டது. அதன்படி

சிவாஜி மீவார் அரச பரம்பரையைச் சேர்ந்தவன் என்று நிரூபிக்கப்பட்டது. அந்த வம்சாவளியைத் தற்கால ஆராய்ச்சியாளர் சிலர் உண்மையென்று ஒத்துக்கொள்ளாவிட்டாலும் அப்போது ஒரு பெரிய பிராமண அறிஞர் ஒத்துக்கொண்டார். அதன்பின் மகுடாபிஷேக வைபவம் விமரிசையாக நடந்தேறியது. அதனுல் ஏற்பட்ட ஏராளமான செலவினுல் சிவாஜியின் கஜானுக்காலியாயிற்று. அதன்பின் சிவாஜி கடுமையான போர்களில் ஈடுபட்டான். அவற்றில் முக்கியமானது அவனுடைய கர்நாடகப்படையெழுச்சி. சிவாஜி 1677-இல் கர்நாடகத்தின்மீது பாய்ந்து அதை வென்று ஏராளமான பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போனுன். மூன்றுண்டுகளுக்குப்பின் அவன் இறந்ததும் அவனுடைய மகன் சாம்பாஜி மகாராஷ்டிர மன்னனுனுன்.

மகாராஷ்டிர இராஜ்யத்தின் எல்லைகளைச் சரியானபடி நிர்ணயித்துக் கூறுவது எளிதன்று. ஏனெனில், மகாராஷ்டிரர் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசம் அடிக்கடி பெருகிக்கொண்டும் சுருங்கிக்கொண்டும் இருந்தது. எனினும் 1670-ஆம் ஆண்டுக்குப் பக்கத்தில் சிவாஜியினுடைய இராஜ்யம் வடக்கே சூரத்திலிருந்து தெற்கே கோவா வரையில் மேற்குமலைத்தொடரின் மேட்டு நிலங்களிற் பரவியிருந்தது என்றும், இந்த அகலங்குறைந்த நீண்ட பகுதியோடு கொங்கணச் சமவெளியும் சேர்ந்திருந்தது என்றும் பொதுவாகக் கூறலாம். வடக்கில் பம்பாயையும், தெற்கில் கொங்கணத்தையும் எல்லைகளாகக் கூறலாம். இந்தப் பகுதிகளைத் தவிர, இவற்றின் தென்கிழக்கிலிருந்த பல கோட்டைகள் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தமாயிருந்தன. அதனுல் தற்கால மைசூரையும் சென்னை மாகாணத்தையும் சேர்ந்த பல பகுதிகள் மகாராஷ்டிரர்களுடைய இராணுவ ஆட்சியில் இருந்தன என்று கூறலாம்.

ஆகவே, அவுரங்கஜீப் பீஜப்பூரையும் கோல்கொண்டாவையும் வென்று தன்னுடைய ஆட்சியிற் சேர்த்தபிறகு அந்தப் பிரதேசங்களுக்கு மேற்கிலும் தெற்கிலும் மகாராஷ்டிர ஆதிக்கம் நிறுவப்பட்டிருந்ததையும், எந்தச் சமயத்திலும் மகாராஷ்டிரர்கள் தன்னுடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தாக்கக்கூடிய நிலையில் இருந்தார்கள் என்பதையும் உணர்ந்தான். அவ்வாறே மகாராஷ்டிரர்களும் அடிக்கடி அவனுடைய ராஜ்யத்தின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்தார்கள். சிவாஜியின் திறமையான நிர்வாகத்தால் மகாராஷ்டிரர்களுடைய ஏழ்மை ஓரளவ

குறைந்திருந்தது என்றாலும், அவர்களுடைய இராஜ்யத்தைக் காப்பதற்காக வைக்கப்பட்டிருந்த பெரும்படையின் செலவுகளுக்குப் போதிய வருமானம் அவர்களுடைய ராஜ்யத்திலிருந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், மொகலாயர்களுக்கு வளம் பொருந்திய வட இந்தியாவிலிருந்து ஏராளமான வரும்படி கிடைத்ததால் அவர்கள் நீண்டகாலம் தட்சிணத்தில் தங்கிச் சண்டை செய்ய முடியும். ஆகவே, சிவாஜியின் படையெழுச்சிகளிற் பெரும்பான்மையானவற்றின் நோக்கம் பணம் சேர்ப்பதே தவிர இராஜ்யத்தைப் பெருக்குவதன்று. மொகலாயர்களுடைய முக்கியத் துறைமுகமாகிய சூரத்தின்மீது சிவாஜி இரண்டுமுறை படையெடுத்துக் கொள்ளையடித்தான். அது போலவே காலியான கஜானாவை நிரப்புவதற்காகத்தான் அவன் கருநாடகத்தின்மீது படையெடுத்தான். கொள்ளைப் பொருள் மகாராஷ்டிர அரசாங்க வருமானத்தின் ஓர் இன்றியமையாத பகுதியாக இருந்தது என்று பொதுவாகக் கூறலாம். மொகலாய சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சில பகுதிகள் சிவாஜியின் படையெழுச்சிக்கு அடிக்கடி இலக்காயின. சிவாஜி அந்தப் பகுதிகளின்மீது "சௌத்து" என்ற ஒரு வரியை விதித்தான். 'சௌத்து' என்றால் நான்கில் ஒன்று என்று பொருள். அதாவது வருஷ வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை சிவாஜிக்குச் செலுத்திவிட இணங்கிய பகுதிகளின்மீது அவன் படையெடுக்க மாட்டான். அவனுடைய படையெழுச்சியால் ஏற்படக்கூடிய பொருட்சேதத்தையும், உயிர்ச் சேதத்தையும் தவிர்க்க விரும்பிய பல பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தங்கள் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கை சிவாஜிக்குச் செலுத்திவிட இணங்கினார்கள். இவ்வாறு மொகலாய சாம்ராஜ்யத்தின் பிரஜைகளிடமிருந்து சிவாஜி வசூலித்த சௌத்துவரி அவனுடைய இராஜ்யத்திலிருந்து அவனுக்குக் கிடைத்த மொத்த வரும்படியின் அளவுக்கு இருந்தது.

மேலே கூறியவற்றால் அவுரங்கஜீப் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மகாராஷ்டிரர்களோடு சண்டை செய்யாமலிருக்க முடியாது என்பது விளங்கும். சிவாஜி இறந்தபின் மகாராஷ்டிர இராஜ்யத்தின் நிலையும் அவுரங்கஜீப்புக்குச் சாதகமாகத்தான் இருந்தது. சாம்பாஜி நிர்வாகத்திறமை சிறிதும் இல்லாதவன். மங்கையர் மோகத்திலும் மதுவின் மயக்கத்திலும் அவன் எப்போதும் விழுந்து கிடந்தான். மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் ஒற்றுமை குலைந்து பிளவுகள் தோன்றின. பல மகாராஷ்டிரச் சேனாதிபதிகள் மொகலாயர்களோடு சேர்ந்து கொண்டனர்.

உத்தியோகஸ்தர்களின் பேராசையாலும், சிறிய தலைவர்களின் கொடுங்கோன்மையாலும் இராஜ்யம் சீர்கெட்டது. 1689-ஆம் ஆண்டில் தன்னுடைய சிங்கார மாளிகை யொன்றில் வரம்பற்ற திருவிளையாடல்களில் முழுகிக்கிடந்த சாம்பாஜி சிறைப்பிடிக்கப் பட்டு, மொகலாயப் பாசறைக்குக் கொண்டுபோகப்பட்டான். அங்கு அவன் பலர் முன்னிலையில் அவமானத்திற்கும், சித்திர வதைக்கும் உள்ளாக்கப்பட்டுக் கடைசியில் கொடூரமாகக் கொல்லப்பட்டான். அவனுடைய மகனான சாகு என்பவனும் அவனோடு பிடிக்கப்பட்டிருந்தான். அவனை மொகலாயர்கள் தங்களிடமே கைதியாக வைத்துக்கொண்டார்கள்.

இவ்வாறு மகாராஷ்டிரர்களின் நிலைமை மிக மோசமாகி விட்டது. அப்போது அவர்கள் தலை தூக்க முடியாமல் அழிந்து போனார்கள் என்று தோன்றியது. ஆனால், விரைவில் நிலைமை மாறியது. மொகலாயர்கள் முடிவான வெற்றி காணும்வரையில் மகாராஷ்டிரர்களோடு சண்டை செய்யவில்லை. அதனால் பல மகாராஷ்டிரத் தலைவர்கள் தனித்தனியாக மொகலாயர்களை எதிர்த்து கொரில்லாச் சண்டை முறையால் அவர்களுக்குத் தொல்லை கொடுத்தார்கள். அதே சமயத்தில் மகாராஷ்டிர ராஜ்யத்திற்குத் தென் கிழக்கில் மகாராஷ்டிரர்களுடைய ராணுவ ஆட்சியிலிருந்த பகுதிகளைச் சம்பாஜியின் தம்பியான இராஜாராம் என்பவன் தன் வசப்படுத்திக்கொண்டு, சென்னைக்குத் தென் மேற்கில் 80-கல் தொலைவில் உள்ள செஞ்சி என்ற தன்னுடைய புதிய தலைநகரிலிருந்து மொகலாயர்களை எதிர்த்தான்.

வெற்றி தோல்வியின்றிச் சில ஆண்டுகள் சண்டை நடந்தது. ஏழு வருட முற்றுகைக்குப் பின்னர் 1698-ஆம் ஆண்டில் மொகலாயர்கள் செஞ்சியைக் கைப்பற்றினார்கள். ஆனால் இராஜாராம் மகாராஷ்டிரத்திற்குத் தப்பிச் சென்றுவிட்டான். இவ்வாறு அவுரங்கஜீப் கிழக்குப் போர்முனையில் வெற்றிபெற்ற பின்னர் மகாராஷ்டிர இராஜ்யத்திலிருந்த ஏராளமான கோட்டைகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கைப்பற்றும் வேலையில் ஈடுபட்டான். இந்த வேலையில் 1699-ஆம் ஆண்டிலிருந்து 1705-ஆம் ஆண்டு வரையில் அவுரங்கஜீப் தானே நேரில் ஈடுபட்டான். என்ன முயன்றும் அவுரங்கஜீப் வெற்றிபெறவில்லை. ஒரு கோட்டையை நீண்டநாள் முற்றுகை செய்தபின் படை வலியாலோ அல்லது கோட்டைத் தலைவனுக்கு லஞ்சம் கொடுத்தோ அவுரங்கஜீப் அதைக் கைப்பற்றுவான். பின்னர் அதைவிட்டு அடுத்த கோட்

ட்டையை முற்றுகை செய்யும்போது அதை மறுபடியும் மகாராஷ்டிரர்கள் கைப்பற்றிக் கொள்ளுவார்கள். மறுபடியும் பழைய கதையே ஆரம்பமாகும். இவ்வாறு எட்டு முக்கிய கோட்டைகளையும் பல சிறிய கோட்டைகளையும் அவுரங்கஜீப் முற்றுகை செய்தான். அதற்குள் பயனற்ற இந்தக் கடும்போரினால் மொகலாயப் படை அழிந்துபோயிற்று ; சக்கரவர்த்தியின் கஜானாவும் காலியாயிற்று. ஆனால் அவுரங்கஜீப் மாத்திரம் கடைசி வரையில் தளர்ச்சியடையவில்லை. முடிவாக 1705-ஆம் ஆண்டில் நோய்வாய்ப்பட்ட, எண்பத்தெட்டு வயதான, அவுரங்கஜீப் அகமது நகரத்துக்குச் சென்று அங்கேயே இறந்துபோனான். அதற்குள்ளாக 1700-ஆம் ஆண்டில் இராஜாராம் இறந்துபோனான். அவனுக்குப் பின் அவனுடைய இளம்பிள்ளை மகாராஷ்டிர மன்னனானான். இராஜாராமின் மனைவி தாராபாய் ரீஜண்டாக இருந்தாள். சிறந்த நிர்வாகத்திறமை வாய்ந்த அவள் மஹாராஷ்டிரத் தலைவர்களுக்குள் ஓரளவு ஒற்றுமையை உண்டாக்கினாள். அவளுடைய திறமையே அவுரங்கஜீபின் தோல்விக்கு முக்கிய காரணமாயிருந்தது. அவுரங்கஜீப் இறந்தபின் மொகலாயர்களால் மகாராஷ்டிரர்களுக்கு ஏற்பட்டிருந்த ஆபத்துக் குறைந்தது. அவனுடைய மக்கள் அரசபதவிக்காக வட இந்தியாவிற் சண்டையிட்டுக் கொண்டிருந்ததால் தட்சிணத்தில் சண்டையை நடததுவதற்கு அவர்களுக்கு நேரமும விருப்பமும் இல்லை, மகாராஷ்டிரர்கள் இராஜாராமின் மகனை அரசபதவியிலிருந்து நீக்கிவிட்டு இருபதாண்டுகளுக்குமேல் மொகலாயர்களிடம் கைதியாயிருந்து திரும்பிவந்த சாகு என்பவனையே அரசனாக ஏற்றுக்கொண்டார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகள் அவுரங்கஜீப் தட்சிணத்திலேயே தங்கிவிட்டதால் வட இந்தியாவில் மொகலாய ஆட்சி சீர்கெட்டுப் போய்விட்டதென்று முன்னர்க் கூறினோம். அதைப்பற்றி விரிவாகக் கூறமுடியாதெனினும் முக்கிய விஷயங்களை மாத்திரம் கூறுவது அவசியம். மேற்பார்வையின்றி விடப்பட்ட மொகலாய உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்களாதலால், வட இந்தியாவிலிருந்த இந்துத் தலைவர்கள் சிறிது சிறிதாகத் தங்கள் சுயேச்சையை ஸ்தாபித்துக்கொண்டார்கள். இராஜபுதனத்தில் மார்வார் இராஜ்யத்தோடு நடந்த சண்டை முடிவின்றி வளர்ந்துகொண்டே சென்றது. அதே சமயத்தில் மற்ற இராஜபுத்திரத் தலைவர்கள் மாளவத்தின்மீது படையெடுத்துக்

கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். மகாராஷ்டிரர்களும் ஒருதரம் மாளவத்தின்மீது படையெடுத்துக் கொள்ளையடித்தார்கள். பஞ்சாப், ஆக்ரா, அயோத்தி, வங்காளம், பீகார், பண்டல் கண்டு ஆகிய இடங்களில் ஆங்காங்கிருந்த தலைவர்கள் சுயேச்சையடைந்துகொண்டும், சுயேச்சையடைய முயன்றுகொண்டும் இருந்தார்கள். மத்திய அரசாங்கம் வலியிழந்து விட்டது. விவசாயம் க்ஷீணதசையடைந்ததால் மான்சாப்தார்களின் ஜாகீர்களிலிருந்து கிடைத்த வருமானம் குறைந்தது. அதனால் அவர்கள் வேண்டிய அளவு போர்வீரர்களை வைத்துக்கொள்ள முடியவில்லை. மொகலாயச் சக்கரவர்த்திக்கு விசுவாசமாக இருப்பதால் லாபம் வராததைக் கண்ட உத்தியோகஸ்தர்களும் தலைவர்களும் தங்களுக்கெனச் சிறு இ ரா ஜ் ய ங் க ளை ஸ்தாபித்துக்கொள்ள முயன்றார்கள். இதுவே அவுரங்கஜீப் இறந்தபோது வட இந்தியாவின் நிலை. அவனுக்குப்பின் திறமைவாய்ந்த ஓர் அரசன் தோன்றியிருந்தால் இந்த நிலையைச் சீர்திருத்தி மொகலாய சாம்ராஜ்யத்தை அழியாமற் காத்திருக்கலாம். ஆனால், அவுரங்கஜீப்புக்குப் பின்வந்த அரசர்கள் மிகவும் திறமையற்றவர்கள். ஆதலால் சாம்ராஜ்யம் அழிந்தது.

இனி அவுரங்கஜீப் வைத்திருந்த கப்பற்படையைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது பொருந்தும். பதினைந்தாம் நூற்றாண்டில் “சீதிகள்” என்று வழங்கிய ஆப்பிரிக்கர்கள் சிலர் பம்பாய்க்குத் தெற்கில் சுமார் 50-கல் தொலைவில் உள்ள ஜஞ்சீரா என்ற சிறிய தீவிற் குடியேறி, அதற்கணமையிலேயே கடற்கரையிலுள்ள ஒரு சிறு நிலப்பகுதியையும் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். 1636-ஆம் ஆண்டில் அந்தப்பகுதி பீஜப்பூர் சுல்தானுடைய ஆட்சிக்கு வந்தது. பீஜப்பூர் சுல்தான் சீதித் தலைவனைத் தன்னுடைய அரசாங்க உத்தியோகஸ்தர்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டான். அதற்குப் பதிலாக சீதித்தலைவன் பீஜப்பூர் இராஜ்யத்தின் கடல் வியாபாரத்திற்குக் காவல் அளிப்பதாக ஒத்துக்கொண்டான். அதற்காக, அவன் சிறு கப்பற்படையை வைத்திருந்தான். சீதிகள் போரில் வல்லவர்களாக இருந்ததால் அவர்கள் கொங்கணத்தில் சிவாஜியின் ஆதிக்கத்திற்கு இடையூறாக இருந்தார்கள். அதனால் சிவாஜியும் சில கப்பல்களைக் கட்டி மலையாளக் கரையோரங்களில் கடற்கொள்ளையிலீடுபட்டிருந்தவர்களைப் பிடித்துத் தன் கடற்படையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்தான். இந்த இரண்டு படைகளுக்கும் பத்தாண்டுகள் போர் நடந்தது. இருதிறத்தாரும் வியாபாரக்

கப்பல்களை இஷ்டம்போற் கொள்ளையடித்தார்கள். ஆனால் முடிவில் மகாராஷ்டிரர்களே வெற்றிபெறும் நிலைமையில் இருந்தார்களாகையால் பீஜப்பூர் சுல்தானிடமிருந்து போதிய அளவு உதவி பெருத சீதித்தலைவன் அவுரங்கஜீபின் உதவியை நாடினன். அவுரங்கஜீப் அவனை மொகலாய சாம்ராஜ்யத்தின் கடற்படைத் தலைவன் ஆக்கினன்.

அதன்பிறகு மகாராஷ்டிரர்களுக்கும் மொகலாயர்களுக்கும் தரையில் மாத்திரமின்றிக் கடலிலும் சண்டை நடந்தது. அதனல் அவர்களுக்கும் கடற்கரையில் வியாபாரஸ்தலங்களை எற்படுத்தியிருந்த ஐரோப்பியர்களுக்கும் பல சச்சரவுகள் ஏற்பட்டன. ஆனல், இந்தியக் கப்பல்களால் ஐரோப்பியக் கப்பல்களை எதிர்க்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் ஐரோப்பியக் கடற்கொள்ளைக்காரர்கள் இந்துமகா சமுத்திரத்தில் நுழைந்து தங்கள் இஷ்டம்போற் கொள்ளையடிக்கத் தொடங்கினர்கள். ஐம்பதாண்டுகளுக்கு முன்னிருந்தே அவர்கள் எப்போதாவது இந்தியக் கடல்களுக்கு வந்து கொள்ளையடித்துப்போவது வழக்கமாயிருந்தது. ஆனல், அவுரங்ஜீப்பின் ஆட்சியில் அவர்கள் அடிக்கடி வரத்தொடங்கியதால் அவர்களுடைய தொல்லையைத் தாங்கமுடியவில்லை. ஐரோப்பியக் கப்பல்களை எதிர்த்துப் போர் புரியும் சக்தி இந்தியக் கப்பல்களுக்கு இல்லையென்று ஏற்கெனவே கூறினேமல்லவா? அந்த உண்மையை உணர்ந்த அவுரங்கஜீப் இந்தியக் கடல்களைக் கொள்ளைக்காரர் தொல்லையினின்று காக்கும் பொறுப்பை ஐரோப்பிய வியாபாரிகளிடமே விட்டுவிட முயன்றன். ஆனல் அந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. இவ்வாறு இந்திய வியாபாரம் கடற்கொள்ளைக்காரர் தாக்குதலுக்கும், மொகலாயர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் நடந்த சண்டைகளால் ஏற்பட்ட ஆபத்துக்கும் இலக்காகிப் பெருநஷ்டமடைந்தது.

இத்தகைய நிகழ்ச்சிகளால் இந்தியாவிலிருந்த ஐரோப்பிய வியாபாரிகளுக்கு அதிகமாகத் துன்பம் ஏற்படவில்லை. ஐரோப்பாவிலேயே நடந்த போர்களால்தான் அவர்களுக்குத் துன்பம் அதிகம் ஏற்பட்டது. அதைப்பற்றிக் கூறுவதற்கு இது இடமன்று. சில சமயங்களிற் போர்ச்சுக்கீசியர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் சில தகராறுகள் ஏற்பட்டன. ஆனல், அவை இந்திய வரலாற்றில் முக்கியமானவையல்ல. டச்சுக்காரர்களைப் பற்றியும் நாம் இங்குக் கவனிக்கவேண்டியதில்லை. 1664-ஆம்

ஆண்டில் பிரஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி நிறுவப்பட்டு, பிரஞ்சு வியாபாரஸ்தலங்கள் சில இந்தியாவின் இருகரையிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் அவைகள் இன்னும் முக்கியமடையவில்லை. ஆகவே, ஆங்கிலேயர்களுடைய நிலை எவ்வாறிருந்தது என்று பார்ப்பதுதான் இங்கு அவசியமாகிறது. மேற்குக் கடற்கரையில் ஆங்கிலேயர்கள் சூரத்திலிருந்த தங்கள் தலைமை ஸ்தானத்தை பம்பாய்க்கு மாற்றிக்கொண்டார்கள். அண்மையிலிருந்த இந்தியத் துறைமுகங்களுக்கு அடிக்கடி ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருந்ததால் பெருவாரியான வியாபாரிகளும் தொழிலாளிகளும் ஆங்கிலேயர் பாதுகாப்பில் தங்கள் தொழிலை நடத்த விரும்பிப் பம்பாய்க்குச் சென்று குடியேறினார்கள். அதன்பயனாக பம்பாய் மக்கள் வசிப்பதற்கேற்ற ஆரோக்கியமான நிலையில் இல்லாதபோதிலும் பதினேழாம் நூற்றாண்டின் முடிவுக்குள் அதன் ஜனத்தொகை ஐம்பதாயிரத்துக்கு மேற் பெருகிவிட்டது.

வங்காளத்தைப் பொறுத்த வரையில் ஆங்கிலேயர்களுடைய நிலையிற் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. ஆங்கிலேயர்கள் பெற்ற சலுகைகள் நிரந்தரமானவை என்று ஆங்கிலேயர்கள் வாதாடினார்கள். ஆனால், மொகலாயர்கள் அந்தச் சலுகைகள் தற்காலிகமாக அளிக்கப்பட்டவை என்று கூறி அவற்றை அடிக்கடி புதுப்பிக்க வேண்டுமென்று கூறினார்கள். அண்மையிலிருந்த மொகலாய உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி நியாயமற்ற வரிகளை வசூலிக்கத் தொடங்கினார்கள். இந்த விஷயத்தைப்பற்றி முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். இவ்வாறு பலவகையிலும் துன்பமடைந்த ஆங்கில வியாபாரிகள் தங்களைக் காத்துக் கொள்ளுவதற்காக, பம்பாயிலும், சென்னையிலும் செய்தது போலவே வங்காளத்திலும் ஒரு கோட்டையைக் கட்டிக்கொள்வது இன்றியமையாதது என்று உணர்ந்தார்கள். 1686-ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்த கிழக்கிந்தியக் கம்பனியின் நிர்வாகஸ்தர்கள் சிட்டகாங்கைத் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ளுமாறு இந்தியாவிலிருந்த ஆங்கில வியாபாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். ஆனால் அந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் மொகலாய கவர்னர் ஹூக்ளியிலிருந்த ஆங்கில வியாபார ஸ்தலத்தைத் தாக்கியதால் ஆங்கிலேயருக்கும் மொகலாயருக்கும் சண்டையேற்பட்டது. அந்நிலை 1690-ஆம் ஆண்டு வரையில் நீடித்தது. சிட்டகாங்கைப் பிடிப்பதற்கு ஆங்கிலேயரால் முடியவில்லை. கடைசியில் 1690-ஆம் ஆண்டில் மொகலாயர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சமாதானம் ஏற்பட்டது. ஆங்கிலேய வியா

பாரத்தால் வந்த லாபத்தை இழக்க மனமில்லாத மொகலாயர்கள் ஹூக்லி நதியின் கரையில் இருந்த ஒரு சிறிய கிராமத்தில் வியாபார ஸ்தலத்தை ஏற்படுத்திக்கொள்ளுவதற்கு ஆங்கிலேயர்களுக்கும் அனுமதி கொடுத்தார்கள். அந்தச் சிறு கிராமந்தான் இன்று கல்கத்தாவாக வளர்ந்திருக்கிறது. அந்தச் சமயத்தில் வங்காளத்தில் நல்ல குணமுடைய, ஆனால் திறமையற்ற, ஒருவன் மொகலாய இராஜப்பிரதிநிதியாக இருந்தான். அதனால், ஹூக்லிக்கு அண்மையிலிருந்த பல தலைவர்கள் மொகலாய ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். அவர்களிடமிருந்து ஐரோப்பிய வியாபாரிகளைக் காக்கமுடியாத வங்காள இராஜப்பிரதிநிதி 1696-ஆம் ஆண்டில் ஹூக்லி நதியின் கரையில் இருந்த தங்கள் வியாபாரஸ்தலங்களிற் கோட்டைகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று ஆங்கிலேயருக்கும், பிரஞ்சுக்காரருக்கும், டச்சுக்காரருக்கும் அனுமதியளித்தான். இரண்டாண்டுகளுக்குப்பின் தங்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்த கிராமத்தோடு இன்னும் இரண்டு கிராமங்களையும் சேர்த்து ஆங்கிலேயர்கள் வாடகைக்குப் பெற்றார்கள். முதலில், அவர்களுக்குக் கிடைத்த கிராமத்தில் ஒரு கோட்டையைக் கட்டி அதற்கு வில்லியம் கோட்டை என்று ஆங்கிலேயர் பெயரிட்டனர். மற்றைய இரண்டு கிராமங்களில் ஒன்றன் பெயர் காளிகட்டம் என்பது. அதனால் அங்குத் தோன்றி வளர்ந்த நகரம் கல்கத்தா என்று பெயர் பெற்றது.

வங்காளத்தில் ஆங்கிலேயர்கள் மூன்று கிராமங்களை வாடகைக்கு வாங்கியது ஐரோப்பியக் கம்பனிகளின் வளர்ச்சியில் நான்காவது படியைக் காட்டுகிறது. முதலில் ஐரோப்பியர்கள் தங்கள் கப்பல்களில் இந்தியாவுக்கு வந்து, தாங்கள் கொண்டுவந்த பொருள்களை அவசரமாக விற்றுவிட்டுத் தங்களுக்குத் தேவையான பொருள்களை அவசரமாகவே வாங்கிக்கொண்டு திரும்பிச் சென்றார்கள் என்றும், பின்னர் இந்தியக் கடற்கரையில் கிடங்குகளை ஏற்படுத்தி அங்குத் தங்கள் காரியஸ்தர்களை வைத்தார்கள் என்றும், அதன்பின்னர் அவற்றின் காவலுக்காகக் கோட்டைகளைக் கட்டிக்கொண்டார்கள் என்றும் முப்பதாம் அதிகாரத்திற் கூறியது நினைவிலிருக்கும். அவுரங்கஜீப்பின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் குழப்பமும் சீர்கேடும் மலிந்திருந்ததால் கோட்டைகளின் அவசியம் நாளுக்குநாள் அதிகரித்தது. ஆனால் அவற்றில் போர்வீரர்களை வைத்திருக்கவேண்டியது அவசியமாதலால் அதற்காக அதிகப் பணச்செலவு ஏற்பட்டது. அந்தச் செலவு வியாபாரத்தில் வந்த லாபத்தின் பெரும்பகுதியை விழுங்கிவிட்டது.

ஆகவே ஒவ்வொரு கோட்டைக்கும் பக்கத்தில் ஓரளவு இடமிருந்தால் அதிலிருந்து கிடைக்கக்கூடிய வாடகை, வரி, முதலியவற்றின் மூலமாக வரும்படி கிடைக்கும். அந்த வரும்படியைக் கொண்டு அங்கிருந்த கோட்டையைக் காப்பதற்கான செலவுகளை ஈடுகட்டிக்கொள்ளலாம் என்ற எண்ணம் ஐரோப்பியர்களுக்குத் தோன்றியது. பழவேற்காட்டிலிருந்த டச்சுக்காரர்கள் இந்தக் கருத்தைப் பதினேழாம் நூற்றாண்டின் இடையிலேயே நடைமுறையிற் காட்டிவிட்டார்கள். அவர்கள் உதாரணத்தை மற்ற ஐரோப்பியர்களும் பின்பற்றினார்கள். ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான கோட்டைகளில் பம்பாய்க் கோட்டைக்குப் பக்கத்தில் போதிய இடமிருந்தது. சென்னையில் ஆங்கிலேயர்கள் 1693-ஆம் ஆண்டில் மூன்று கிராமங்களைப் பெற்றார்கள். சிறிது காலத்திற்குப் பின் மறுபடியும் ஐந்து கிராமங்களைப் பெற்றார்கள். மேலே கூறியபடி கல்கத்தா மூன்று கிராமங்களோடு தொடங்கியது. இவ்வாறு ஐரோப்பிய வர்த்தகர்கள் நகராட்சி முறைகளில் மாத்திரமின்றிக் கிராம நிர்வாக முறைகளிலும் சிறிது அனுபவம் பெற்றார்கள். கோட்டைக் கண்மையிலிருந்த நிலங்களைப் பயிர் செய்த குடியானவர்களிடம் அவர்கள் வரியை நிர்ணயித்து வசூல் செய்தார்கள். ஐரோப்பியக் கோட்டைகளின் அண்மையில் அச்சமின்றி வாழமுடியும் என்ற நிலை ஏற்பட்டதால் பலவகைப்பட்ட தொழில்களில் ஈடுபட்ட மக்களும் அங்குச் சென்று குடியேறினார்கள். 1688-ஆம் ஆண்டில் ஐரோப்பியர்களையும் இந்தியர்களையும் அங்கத்தினர்களாகக் கொண்ட நகராண்மைக் கழகம் சென்னையில் ஏற்பட்டது. அதுவே இந்தியாவில் ஸ்தல சுய ஆட்சியின் ஆரம்பம்.

ஐரோப்பியர்கள் இந்தியாவில் வாடகைக்கோ சன்மானமாகவோ பெற்ற இடங்கள் ஆங்காங்கிருந்த இந்திய அரசர்களின் ஆட்சிக்குட்பட்டவைகள் என்றுதான் கருதவேண்டுமே தவிர அவை முழுச் சுயேச்சை பெற்ற ஐரோப்பியக் குடியேற்றங்கள் என்று கருத முடியாது. ஆனால், நாளடைவில் அந்தக் குடியேற்றங்கள் இந்திய அரசர்களின் ஆட்சிக்குட்படாத முழுச் சுயேச்சைபெற்ற குடியேற்றங்கள் என்ற கருத்து இங்கிலாந்தில் வளரத்தொடங்கியது. 1681-முதல் 1689-வரையில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் கவர்னராயிருந்த ஸர்ஜோஸியா சைல்டு என்பவன் இந்தியாவின் சீர்கேடான நிலையைக் கவனித்து, ஆங்கிலக் கம்பெனியின் வியாபார ஸ்தலங்களின் காவலுக்கு இந்திய அரசர்களின் உதவியை எதிர்பார்க்க முடியாதென்று உணர்ந்து, பம்

பாயிலும், சென்னையிலும் பூரண சுயேச்சையுடைய பலம் பொருந்திய ஆங்கிலக் குடியேற்றங்களை என்றென்றும் அழியாத வகையில் நிலை நிறுத்தவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டான். அந்தக் கருத்தை நடைமுறையில் நிறைவேற்றுவதற்கு அப்போது கையாண்ட முறைகள் அவ்வளவு முக்கியமானவையல்ல. ஏனெனில், அப்போது ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிலைமையே மோசமாக இருந்தது 1689-ஆம் ஆண்டிலிருந்து அதற்கும் பார்லிமெண்டுக்கும் சச்சரவு ஏற்பட்டது. மேலும் 1687-இல் ஒரு புதிய ஆங்கிலக் கம்பெனி தோன்றி அதனுடன் போட்டியிட்டது. பத்தாண்டுகளுக்குப் பின்னர்த்தான் அந்த இரு கம்பனிகளும் ஒன்ருகச் சேர்ந்து ஓர் ஐக்கியக் கம்பனி ஏற்பட்டது. ஏற்கெனவே, ஆங்கிலேயருக்குச் சொந்தமாயிருந்த பம்பாய் சைல்டு குறித்த முறையில் ஓரளவு வளரத் தொடங்கியது. ஆனால் சென்னை முதலில் கோல்கொண்டா அரசனுடைய ஆட்சியிலும் பின்னர் அவுரங்கஜீபின் ஆட்சியிலும் இருந்ததால் அங்குப் பூரண சுயேச்சைப்பெற்ற ஆங்கிலக் குடியேற்றம் அப்போது வளரவில்லை.

அதிகாரம்—33

அவுரங்கஜீப் இறந்த ஐம்பதாண்டுகளுக்குள் முகலாய சாம்ராஜ்யம் சிதைந்துபோயிற்று. அதனால், இந்திய அரசியலுலகில் பெரிய் மாறுதல்கள் ஏற்பட்டன. வெளிநாட்டார் படையெழுச்சியும், மகாராஷ்டிரர்களின் தாக்குதல்களும் சாம்சாஜ்யத்தின் சிதைவுக்குத் துணைசெய்த போதிலும் அந்தக் காரணங்களால்தான் சாம்ராஜ்யம் சிதைந்தது என்று கூறமுடியாது. மத்திய அரசாங்கம் பலமிழந்ததால் மாகாணங்கள் ஒன்றன்பின் ஒன்ருகச் சுயேச்சையடைந்தன. இதுவே முகலாய சாம்ராஜ்யத்தின் சிதைவுக்குக் காரணம் என்று பொதுவாகக் கூறலாம். பதினெட்டாம் நூற்ருண்டின் இடையில் சுயேச்சையான முகமதிய ராஜ்யங்கள் தட்சிணத்திலிருந்தன. அவைகளுக்கும் வட இந்திய முஸ்லிம் இராஜ்யங்களுக்கும் இடையில் குஜராத்திலிருந்து ஒரிஸா வரையிலுமுள்ள இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் மகாராஷ்டிரர் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. வடக்கில் அவர்களுடைய ஆதிக்கம் டில்லி, ஆக்ரா ஆகிய நகரங்களின் எல்லை வரையில் பரவியிருந்தது.



INDIA
In the Eighteenth Century
To illustrate Chapters XXXIII to XLI

Emery Walker Ltd. sc.

தென்னிந்தியாவிலிருந்த முகமதிய அரசர்களில் முக்கியமானவன் ஐதராபாத் நிஜாம். அவுரங்கஜீப் கோல்கொண்டா இராஜ்யத்தை வென்று அதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளை ஒரு தனி மாகாணமாக்கி அதற்கு ஓர் இராஜப்பிரதிநிதியை நியமித்திருந்தான். அந்த இராஜப்பிரதிநிதி பின்னர்ச் சுயேச்சை பெற்று ஐதராபாத் நிஜாம் என்று பட்டம் சூட்டிக்கொண்டான். தீபகல்ப இந்தியாவின் கிழக்குப் பகுதியாகிய கர்நாடகத்திற்கு ஆர்க்காட்டு நவாப் அதிகாரியாயிருந்தான். அவனுடைய ஆதிக்கம் தெற்கில் ஏறக்குறையத் தஞ்சாவூர் வரையிற் பரவியிருந்தது. அவன் ஐதராபாத் நிஜாமின் அதிகாரத்திற்குட்பட்டவன். கர்நாடகத்திற்கு மேற்கில் மைசூர் இராஜ்யம் ஓர் இந்து அரச வம்சத்தின் ஆட்சியிலிருந்தது, அந்த இராஜ்யத்தில் ஹைதர்ஆலி என்ற ஒரு போர்வீரன் தன்னுடைய ஆதிக்கத்தை ஸ்தாபிக்க முயன்றுகொண்டிருந்தான். பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசிக் காற்பகுதியில் ஹைதர்ஆலி தென்னிந்திய அரசியலுலகில் மிக முக்கியமான இடத்தை வகித்தான்.

வட இந்தியாவில் வங்காளமும் பீகாரும் ஒரு தனிப்பட்ட இராஜ்யமாகிவிட்டன. அந்த இராஜ்யத்தை நடைமுறையில் பூர்ண சுயேச்சையுடனிருந்த ஒரு முகமதிய நவாப் ஆண்டு வந்தான். அந்த இராஜ்யத்திற்கு மேற்கில் அவுத் இராஜ்யம் இருந்தது. தற்காலத்தில் அவுத் என்று அழைக்கப்படும் பிரதேசத்தைக் காட்டிலும் அந்தக்காலத்து அவுத் இராஜ்யம் மிகவும் பரந்தது. அதையும் ஒரு நவாப் சுயேச்சையாக ஆண்டு வந்தான். அவுத்துக்கு மேற்கில் கங்கைநதியின் வடகரையில் ரோகில்கண்டு என்ற இராஜ்யத்தை ஒரு முகமதியப் போர்வீரன் ஸ்தாபித்திருந்தான். அதுபோலவே, இன்னொரு முகமதியப் போர்வீரன் ரோகில்கண்டுக்குத் தெற்கில் கங்கைக்கும் யமுனைக்கும் இடையில் பருக்காபாத் என்ற இராஜ்யத்தை ஸ்தாபித்திருந்தான். இந்த இரண்டு இராஜ்யங்களுக்கும் மேற்கில் டில்லியின் ஆதிக்கத்திற்குட்பட்ட முகலாய ராஜ்யமிருந்தது. ஆனால் 1739-இல் பஞ்சாப், சிந்து, காபூல் ஆகிய பிரதேசங்களைப் பாரசீகர் பிடித்துக்கொண்டதால் டில்லியின் ஆதிக்கத்திற்குட்பட்ட மொகலாய ராஜ்யம் மிகச் சுருங்கிவிட்டது. டில்லியின் தென்மேற்கில் இராஜபுதனத்தில் இராஜபுத்திரத் தலைவர்கள் ஆட்சிசெய்தார்கள். ஆனால் அவர்களெல்லாம் மகாராஷ்டிரர்களுக்கு அடங்கியவர்களாகவே இருந்தார்கள்,

இவ்வாறு முகலாய சாம்ராஜ்யம் அதிகாரத்திலும் விஸ்தீர்ணத்திலும் மிகமிகச் சுருங்கிப்போயிற்று. எனினும் இந்திய அரசியலரங்கில் மொகலாயச் சக்கரவர்த்தியின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. தங்களுடைய மதமும் கலாசாரமும் அழிந்துவிடுமோ என்று அஞ்சிய இந்திய முகமதியர்கள் அவற்றைக் காப்பாற்றுவதற்கு டில்லியையே இன்னும் நம்பியிருந்தார்கள். நடைமுறையில் சுயேச்சையான இராஜ்யங்களை ஆண்டுவந்த சில முகமதிய அரசர்கள் அதே சமயத்தில் மொகலாய சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரிகளாகவுமிருந்தார்கள். ஐதராபாத் போன்ற இராஜ்யங்களில் அரசபதவிக்குப் போட்டியிட்ட சிலர் டில்லிச் சக்கரவர்த்தியின் ஆதரவை நாடியதும் உண்டு. தங்களுடைய சொந்த முயற்சியால் புதிய இராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டவர்களும், புதிய பதவிகளைக் கைப்பற்றிக் கொண்டவர்களும் பின்னர் டில்லிச் சக்கரவர்த்தியின் அனுமதியைப் பெற்று நியாயமான முறையில் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொண்டதாகப் பாசாங்கு செய்ததும் உண்டு. இத்தகைய அனுமதிகளைப் பெறுவதற்கு அவர்கள் சில சமயங்களில் சக்கரவர்த்திக்குப் பணங்கூடக் கொடுத்தார்கள்.

இதற்குள் மகாராஷ்டிரத்தின் ஆட்சி முறையில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. தனக்கு அரசியலில் உதவியாக இருப்பதற்காக சிவாஜி ஒரு மந்திரிசபையை ஏற்படுத்தியிருந்தான். சிவாஜியின் ஆட்சிமுறையில் அரசியலதிகாரம் சேனாதிபதிகளுக்கும், சிவில் நிர்வாகத்தை கவனித்துவந்த பிராமணர்கள் முதலிய படித்த மக்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தது. பிராமணர்களே பிரதமமந்திரிப் பதவியை வகித்தார்கள். நாளடைவில் பிரதமமந்திரி அரசியலதிகாரம் முழுவதையும் தானே கவர்ந்துகொண்டான். பிரதமமந்திரிக்குப் பீஷ்வா என்று பெயர். 1720-ஆம் ஆண்டிற்குள் பீஷ்வாப் பதவி பரம்பரை பாத்தியமாகிவிட்டது. சிவாஜியின் பேரனான சாஹு என்பவன் பெயரளவில் அரசனாக இருந்தானெனினும், அதிகாரம் முழுவதும் பீஷ்வா கையிலேயே இருந்தது. பீஷ்வா பூனாவைத் தலைநகராகக் கொண்டு பழைய மகாராஷ்டிர இராஜ்யத்தின் பெரும்பகுதியை ஆண்டுவந்தான். மகாராஷ்டிரச் சேனாதிபதிகள் புதிய இராஜ்யங்களை ஸ்தாபித்துக்கொண்டார்கள். அவர்கள் பொதுவாகப் பீஷ்வாவின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டாலும் அவரவர்களுடைய இராஜ்யங்களில் சுயேச்சையாகவே ஆட்சிசெய்தார்கள். இவ்வாறு முதலில் ஒரே இராஜ்யமாக இருந்த மகாராஷ்டிரம்

நாளடைவில மகாராஷ்டிர சமஷ்டியாக மாறிற்று. குஜராத்தில் கெயிக்குவார் வம்சத்தினரும், தற்போதைய மத்திய மாகாணத்தில் பான்ஸ்லே வம்சத்தினரும், மாளவத்தில் ஹோல்கார் வம்சத்தினரும், சிந்தியா வம்சத்தினரும் ஆண்டுவந்தார்கள். சிந்தியாவும் ஹோல்காரும் மகாராஷ்டிர ஆதிக்கத்தை வடக்கில் யமுனை வரையில் பரப்பினார்கள். பான்ஸ்லே மகாராஷ்டிர ஆதிக்கத்தைக் கிழக்கில் பரப்பி, வங்காளத்தின்மீது படையெடுத்து, முடிவில் ஓரிஸாவைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தான்.

இதுவரையில் முகலாய சாம்ராஜ்யத்தின் அழிவிற்குக் காரணமாயிருந்த முக்கிய இராஜ்யங்களைப்பற்றிக் கூறினோம். இவற்றைத் தவிர வேறு பல சிறு இராஜ்யங்களும் தோன்றிச் சுயேச்சை பெற்றன. இந்துத் தலைவர்கள், முகமதிய உத்தியோகஸ்தர்கள், திறமை மிகுந்த போர்வீரர்கள் ஆகிய அனைவரும் தங்களுடைய அதிகாரத்தை ஸ்தாபிப்பதிலும், பெருக்குவதிலும் முனைந்து நின்றார்கள். அவர்கள் நியாயத்தையும் அநியாயத்தையும் கவனிக்கவில்லை. அதிகார விருப்பமும், அதை ஸ்தாபிப்பதற்குத் திறமையும் உடையவர்கள் தங்களிஷ்டம்போல் காரியங்களைச் சாதித்துக்கொண்ட காலம் அது. அவர்களுடைய முயற்சிகளையும் சண்டைகளையும் பற்றிக் கூறுவதற்கு இங்கு இடமில்லை. ஆனால் அவற்றின் பயனாகப் பல அரசர்களும் பெரிய நிலச்சுவான்தார்களும் தோன்றினார்கள் என்பதை மறந்துவிட முடியாது. தற்காலத்திய சுதேச சமஸ்தானங்களிற் சிலவும், வட இந்தியாவிலுள்ள பல பெரிய ஜமீன்களும் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் ஏற்பட்ட அரசியற் குழப்பத்தின் பயனாகத் தோன்றியவைகள்தாம்.

இனி டில்லியில் மொகலாயர்களுடைய நிலைமை எவ்வாறிருந்தது என்பதைப்பற்றிப் பார்ப்போம். அவுரங்கஜீப் 1707-ஆம் ஆண்டில் இறந்தான். அதற்கடுத்த பனிரண்டாண்டுகளில் ஒருவர் பின்னொருவராக ஐந்து அரசர்கள் ஆட்சி செய்தார்கள்; மூன்று வாரிசுப் போர்கள் நிகழ்ந்தன. அதன்பின் 1719-ஆம் ஆண்டிலிருந்து 1748-ஆம் ஆண்டுவரையில் முகமதுஷா என்பவன் மொகலாயச் சக்கரவர்த்தியாக இருந்தான். அவன் காலத்தில் முகலாய சாம்ராஜ்யம் சிதைந்துகொண்டே வந்தது. ஆனால் அச்சிதைவைத் தடுத்து இராஜ்யத்தைக் காப்பாற்ற அவன் எவ்வித முயற்சியும் செய்யவில்லை. அவனுடைய சமஸ்தானத்தில் பல கட்சிகளும், அவற்றிற்கிடையே சூழ்ச்சிகளும் மலிந்திருந்தன. அந்த நிலைமையில் 1739-ஆம் ஆண்டில் பாரசீகர்கள் டில்லியின்

மீது படையெடுத்தனர். அப்படையெழுச்சி முழுதும் எதிர் பாராத ஒரு நிகழ்ச்சியென்று கூற முடியாது. இந்தியாவின் ஒரு பகுதியை ஜெயிக்கவேண்டும் என்ற எண்ணம் பாரசீகர்களுக்குப் பல நாளாக இருந்து வந்தது என்பதும், குறைந்தபட்சம் சிந்து நதிவரையிலாவது தங்கள் ராஜ்யத்தைப் பரப்பவேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள் என்பதும் பதினேழாம் நூற்றாண்டில் பல நிகழ்ச்சிகளால் வெளிப்படையாகத் தெரியவந்த விஷயங்கள். இந்தியாவிற்குள் நுழைவதற்கு ஏற்ற வழியில் இருந்தது என்ற காரணத்தால் தான் அவர்கள் காண்டஹார் என்ற கோட்டையைத் தங்கள் ஆதிக்கத்திலேயே வைத்துக்கொள்ளுவதற்கு அரும் பாடு பட்டார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் இந்தியாவின் ஒரு பகுதியை ஜெயிக்கவேண்டும் என்ற எண்ணம் நாதிர்ஷாவின் காலத்தில்தான் நிறைவேறிற்று. அவன் 1736-ஆம் ஆண்டில் பாரசீக ராஜ்யத்திற்கு அரசனானான். ஐந்து ஆண்டு களுக்குப் பின் அவன் காண்டஹாரிலிருந்து புறப்பட்டுக் காபூலை யும் லாகூரையும் பிடித்துக்கொண்டு, அதன் பின்னர் பானிப்பட் டுக்கு வடக்கில் சிறிது தூரத்திலுள்ள கர்னால் என்ற இடத்தில் மொகலாயச் சைனியங்களைத் தோற்கடித்தான். முகமது ஷா நாதிர்ஷாவுடன் சமாதானம் செய்துகொண்டான். பின்னர் நாதிர்ஷா டில்லிக்கு வந்தான். ஆனால் சில நாட்களில் டில்லியில் ஒரு குழப்பம் ஏற்பட்டு, அதன் பயனாகப் பல பாரசீகர்கள் கொல்லப்பட்டார்கள். அந்நிகழ்ச்சியால் சீற்றமடைந்த நாதிர்ஷா டில்லி நகரவாசிகளைப் படுகொலை செய்து, மொகலாயச் சக்கரவர்த்தியின் பொக்கிஷத்தைக் கைப்பற்றிக்கொண்டு, நகர மக்களிடமிருந்து ஏராளமான பொருளை நஷ்ட ஈடாக வசூல் செய்தான். அதுவு மன்றிப் பஞ்சாப், சிந்து, காபூல் ஆகிய பிரதேசங்கள் பாரசீக இராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டன. பின்னர் நாதிர்ஷா தன் கொள்ளைப் பொருள்களோடு பாரசீகத்துக்குத் திரும்பினான்.

எட்டாண்டுகளுக்குப் பின்னர் நாதிர்ஷா கொலை செய்யப்பட் டான். இந்திய வரலாற்றில் சில முக்கிய மாறுதல்களைச் செய்ய விருந்த ஒரு நிகழ்ச்சி அந்தச் சமயத்தில் ஏற்பட்டது. நாதிர்ஷா வின் சைனியத்தில் உத்தியோகஸ்தனா யிருந்த அகமதுஷா துராணி என்ற ஓர் ஆப்கானிய வீரன் ஆப்கானியத் தலைவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஆப்கானிஸ்தானத்தை ஒரு தனிப்பட்ட ராஜ்யமாக மாற்றினான். அந்த ராஜ்யத்தில் காபூலும் காண்ட ஹாரும் சேர்ந்திருந்தன. அந்த ராஜ்யம் இந்தியாவுக்குள் நுழை வதற்கு ஏற்ற தலைவாயில்களைத் தன்னுட் கொண்டதாக இருந்

தது. தன்னுடைய அதிகாரத்தை ஆப்கானிஸ்தானத்தில் நிலை நிறுத்தியவுடனே அகமது ஷா துராணி பஞ்சாபின்மீது படையெடுத்தான். ஆனால் 1748-இல் அவன் பஞ்சாபிலிருந்து துரத்தப் பட்டான்.

1748-ஆம் ஆண்டில் முகமது ஷா இறந்தான். அதற்கடுத்த பத்தாண்டுகளில் டில்லியில் சில திறமையற்ற சக்கரவர்த்திகள் அரசுபுரிந்தனர். மொகலாய சம்ஸ்தானத்தில் கட்சிகளும் சூழ்ச்சிகளும் மலிந்தன. ஒரு கட்சியினர் மகாராஷ்டிரர்களுடைய துணையை நாடினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு மகாராஷ்டிரர்கள் மொகலாய சாம்ராஜ்யத்தில் சுயேச்சை பெற்றவை போக எஞ்சியிருந்த பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதைக்கண்ட டில்லி நகரத்தின் முக்கிய முகமதியர்களும், அவுத்தையும் ரோகில்கண்டையும் ஆட்சி செய்த அரசர்களும் ஒன்று சேர்ந்து ஆப்கானியர்களுடைய உதவியை நாடினார்கள். அதன் பயனாக மற்று மொருமுறை பானிப்பட்டு என்ற இடத்தில் 1761-ஆம் ஆண்டில் ஒரு பெரிய யுத்தம் நடைபெற்றது. அந்த யுத்தத்தில் ஆப்கானியர்களும் மொகலாயர்களும் ஒன்று சேர்ந்து மகாராஷ்டிரர்களைப் படுதோல்வி யடையச் செய்தார்கள். அதன்பின் சில ஆண்டுகள் ஆப்கானிய வீரன் ஒருவன் டில்லியில் ஆட்சிபுரிந்தான். பெயரளவில் சக்கரவர்த்தியாயிருந்த ஷா ஆலம் (1759-1806) பீகாரில் தன் ஆதிக்கத்தை ஸ்தாபிக்க முயன்று அதில் வெற்றிபெருததால் அலகாபாத்தில் ஆங்கிலேயர்களின் ஆதரவில் வாழ்ந்து வந்தான். இவ்விஷயத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டுமானால் இந்தியாவின் கடற்கரையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஐரோப்பியக் கம்பனிகளின் வரலாற்றைப் படிக்கவேண்டும்.

இந்தியாவின் மேற்குக் கடற்கரையைப் பொறுத்தவரையில் அந்தக்காலத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி ஒன்றும் ஏற்படவில்லை. பம்பாயிலிருந்த ஆங்கிலேயர்கள் மகாராஷ்டிரர்களுடன் சிநேகமாக இருப்பதுதான் நல்லது என்று அறிந்து அதன்படியே நடந்துவந்தார்கள். அண்மையிலிருந்த அதிகாரிகளுடன் சில சமயங்களில் சச்சரவு ஏற்பட்டது என்பதும், கடற்கொள்ளைக்காரர்களால் அடிக்கடி தொந்தரவு ஏற்பட்டது என்பதும் உண்மைதான். எனினும், பம்பாய் ஜனத்தொகையிலும், வியாபாரத்திலும், செல்வத்திலும் முன்னேறிக்கொண்டே வந்தது. வங்காளத்திலும் ஆங்கிலேயர்களுக்கும் அண்மையிலிருந்த அதிகாரி

களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டேதான் இருந்தன. ஆயினும் கல்கத்தா முன்னேறிக் கொண்டே வந்தது. அதன் ஜனத்தொகை 1742-ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதிகமாகப் பெருகிக்கொண்டே வந்தது. அந்தச் சமயத்தில்தான் மத்திய மாகாணத்தில் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்திருந்த மகாராஷ்டிரர்கள் வங்காளத்தின்மீது படையெடுக்கத் தொடங்கினார்கள். அடிக்கடி ஏற்பட்ட இந்தப்படையெழுச்சிகளால் மிகுந்த துன்பம் ஏற்பட்டது. அண்மையிலிருந்த இராஜ்யங்களின்மீது படையெடுத்து அங்கிருந்து பொருள்களைக் கொள்ளையடித்துக்கொண்டு வருவது பதினேழாம் நூற்றாண்டில் மகாராஷ்டிரர்களுடைய வாழ்க்கைக்கும் அரசியலாதிக்கத்துக்கும் இன்றியமையாத காரியமாக இருந்தது என்று முன்னர்ப் படித்தோம். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் அந்நிலை மாறிவிட்டது. மகாராஷ்டிர சமஷ்டியைச் சேர்ந்த தலைவர்கள் வளமான பிரதேசங்களில் தங்கள் இராஜ்யங்களை ஏற்படுத்தியிருந்தார்கள். மேலும் அவுரங்கஜீப்பைப் போன்ற பலமான எதிரி ஒருவரும் பதினெட்டாம் நூற்றாண்டில் அவர்களை அழிக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. ஆகவே கொள்ளையடித்துப் பொருள் சேர்க்கும் அவசியம் பதினெட்டாம் நூற்றாண்டில் மகாராஷ்டிரர்களுக்கில்லை. எனினும், அவர்கள் கொள்ளையடிக்கும் பழக்கத்தை விடவில்லை. இப்போது கொள்ளையடிப்பதே அவர்களுடைய படையெழுச்சிகளின் முக்கிய நோக்கமாய்விட்டது. சிவாஜி யிருந்த காலத்தில் மகாராஷ்டிரப் போர்வீரர்கள் சில கடுமையான கட்டுப்பாடுகளுக்கு அடங்கி யிருந்தார்கள். மிகக் கொடூரமான சண்டைகள் செய்ய நேர்ந்த சமயங்களிற்கூடச் சிவாஜி பெண்களுக்குத் துன்பம் செய்யவில்லை. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டில் வங்காளத்தின்மீது படையெடுத்த மகாராஷ்டிரர்கள் கொலை செய்தல், தீ வைத்தல், கற்பழித்தல் முதலிய செயல்களில் தங்கள் இஷ்டம் போல் ஈடுபட்டுப் பெருந்துன்ப மிழைத்தார்கள். மகாராஷ்டிரர்கள் கர்ப்ப ஸ்திரீகளையும், குழந்தைகளையும், பிராமணர்களையும், எளியவர்களையும் கொல்பவர்கள் என்றும், கொள்ளையடிப்பதில் நிபுணர்கள் என்றும், கற்பழிப்பதில் கை தேர்ந்தவர்கள் என்றும், பழி பாவத்திற்கு அஞ்சாதவர்கள் என்றும் அப்போது எழுதப்பட்ட ஒரு நூலின் மூலம் அறிகிறோம். அவர்கள் தங்கள் கையில் அகப்பட்டவர்களுடைய மூக்கு, காது, கை முதலிய உறுப்புகளை வெட்டிக் கொடுமை செய்தார்கள் என்றும், கோயில்களுக்கும் வீடுகளுக்கும் வேண்டுமென்றே நெருப்பு வைத்தார்கள் என்றும்,

தங்களிடம் அகப்பட்ட பெண்கள் ஒவ்வொருவரையும் பலர் ஒன்றுகச் சேர்ந்து ஒருவர் பின் ஒருவராகக் கற்பழித்தார்கள் என்றும் சில ஆதாரங்களின் மூலம் அறிகிருேம். மகாராஷ்டிரர்களுடைய படையெழுச்சிகளால் வங்காள மக்கள் சொல்லமுடியாத பயமடைந்தார்கள். உயிர் தப்ப விரும்பியவர்கள் ஊரைவிட்டு ஓடவேண்டும் ; இன்றேல் ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமான கல்கத்தாக் கோட்டைக்குள் அடைக்கலம் புகவேண்டும்.

சோழமண்டலக் கடற்கரையில்தான் அந்தக் காலத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. ஆங்கிலேயர்கள் சென்னையிலும், பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியிலும் அமைதியான முறையில் லாபகரமான வியாபாரம் நடத்தி வந்தார்கள். ஆனல் ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் ஏற்பட்டதும் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஒருவரோடொருவர் சண்டை செய்யத் தொடங்கினர்கள். அந்தச் சண்டை 1746–ஆம் ஆண்டிலிருந்து 1748-ஆம் ஆண்டு வரையில் நடந்தது. பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றிக்கொண்டனர். சமாதான உடன்படிக்கையால் ஆங்கிலேயர் மீண்டும் சென்னையை அடையும் வரை அவர்கள் செயிண்டு டேவிட் கோட்டையைத் தங்கள் தலைநகராக வைத்துக்கொண்டார்கள். ஆனல் ஆஸ்திரிய வாரிசுமைப்போர் அடிப்படையில் ஐரோப்பியப் போரேயாதலால் இந்திய வரலாற்றில் அதற்கு அவ்வளவு முக்கியமான இடம் இல்லை. பிரெஞ்சுப் படையை எதிர்த்துத் தோற்கடிக்க இந்தியாவிலிருந்த வேறெந்தப் படையாலும் முடியாது என்ற உண்மை புலப்பட்டதுதான் ஆஸ்திரிய வாரிசுமைப்போரின் முக்கிய விளைவாகும். பிரெஞ்சுக்காரர்கள் சென்னையை முற்றுகையிட்டபோது ஆங்கிலேயர்கள் ஆர்க்காட்டு நவாபின் துணையை நாடினர்கள். அவனும் சென்னையைக் காப்பதற்குத் தன்னுடைய படைகளை அனுப்பினன். அவனுடைய குதிரைவீரர்கள் பிரெஞ்சுப் படையிலிருந்த துப்பாக்கி வீரர்களுக்கும் பீரங்கிகளுக்கும் முன்னர் நிற்க மாட்டாமல் சிதறியோடினர். ஆகவே இந்தியப் போர்முறைகளை விட ஐரோப்பியப் போர்முறைகள் மிகச் சிறந்தவை என்ற உண்மை தெளிவாயிற்று. மேலும் ஐரோப்பியர்கள் கடற்சண்டையிலும் இந்தியர்களைவிட மிகச் சிறந்தவர்கள் என்ற உண்மையை அனைவரும் அறிந்தனர்.

ஆனல் பிரெஞ்சுச் சைனியத்திலிருந்த போர்வீரர்கள் அனைவரும் ஐரோப்பியர் அல்லர். அந்தச் சைனியத்தில் பல இந்திய

வீரர்களும் இருந்தார்கள். அவர்கள் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களால் பயிற்சியளிக்கப்பட்ட காலாட்படை வீரர்கள். அவர்கள் சிப்பாய்கள் என்று அழைக்கப்பட்டனர். மலையாளக் கடற்கரையிலிருந்த ஒரு பிரெஞ்சுக் குடியேற்றத்தில் 1720-ஆம் ஆண்டில் முதன் முதலாக சிப்பாய்கள் பிரெஞ்சுக்காரர்களுடைய சைனியத்திற் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அந்தச் சிப்பாய்களில் ஒரு பகுதியினர் புதுச்சேரிக்குக் கொண்டு வரப்பட்டு ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின்போது ஆங்கிலேயருடன் சண்டை செய்தனர். அந்தப் போரின் இறுதியாண்டில் பிரெஞ்சுக்காரரின் உதாரணத்தை ஆங்கிலேயரும் பின்பற்றி இந்தியச் சிப்பாய்களைத் தங்கள் கட்சியில் உபயோகித்தனர். அதிலிருந்து இந்தியாவில் இருந்த ஐரோப்பியச் சைனியங்கள் எல்லாவற்றிலும் இந்தியச் சிப்பாய்கள் முக்கியமான இடத்தை வகிக்க ஆரம்பித்தனர்.

ஆஸ்திரிய வாரிசுமைப்போர் முடிந்து இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி வந்ததும் இந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. இருகட்சியினரிடமும் ஏராளமான போர்வீரர்களிருந்தார்கள். ஆனால் அவர்களைத் தங்கள் சொந்த ஊருக்கு அனுப்பவேண்டுமானால் கப்பற்பிரயாணத் தொடக்கப் பருவம் வரையில் காத்திருக்கவேண்டும். ஆகவே அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வேலையில்லாமல் வைத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலையில் சென்னை கவர்னருக்கு ஒரு யுக்தி தோன்றியது. சென்னையிலிருந்த ஆங்கிலப்படைகளைச் சுதேச அரசர்களுக்கு உதவியாக அனுப்பி, அதன்மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு போர்வீரர்களுக்குச் சம்பளம் கொடுப்பது என்று அவன் தீர்மானித்தான். அதே யுக்தி புதுச்சேரி கவர்னருக்கும் தோன்றியது. இந்தத் துறையில் ஆங்கிலேயர் செய்த முதல் முயற்சி அவ்வளவு முக்கியமானதன்று. ஆனால் அப்போது புதுச்சேரி கவர்னராயிருந்த ஜோசப் டூப்ளே கையாண்டமுறை இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய மாறுதலை உண்டுபண்ணக் கூடியதா யிருந்தது. டூப்ளே முதலில் வங்காளத்தில் இருந்தான். அதன்பின் 1742-ஆம் ஆண்டில் அவன் புதுச்சேரி கவர்னராக நியமிக்கப்பட்டான். அவன் பரந்த அறிவும் ஆழ்ந்த கருத்தும் படைத்தவன். ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் முடிவடைவதற்குள் தென்னிந்திய இராஜ்யங்களின் பலமின்மையையும், துப்பாக்கிக்

கும் பீரங்கிக்கும் முன்னால் இந்தியச் சைனியங்கள் நிற்க முடியாது என்ற உண்மையையும் நன்றாக உணர்ந்து கொண்டான். இந்த உண்மையை உணர்ந்தபின் வியாபாரத்துக்காக வந்த பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் இராஜ்யாதிகாரத்தையும் ஸ்தாபிக்க முடியும் என்று திட்டமாக நினைத்தான்.

இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நடந்து வந்த வியாபாரம் முன்போலவேதான் இருந்தது. இந்தியர்களுக்கு வெள்ளியைத் தவிர வேறு ஐரோப்பியப் பொருள்கள் தேவையில்லை. இந்தியப் பொருள்களுக்கு விலையாக அதிகமான வெள்ளி ஏற்றுமதி செய்யப்பட்டதால் பிரான்சின் பொருளாதார நிலையை அது அதிகமாகப் பாதித்தது. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்கள் ஓர் இராஜ்யத்தை ஸ்தாபித்துவிட்டால் அதன் வருவாயால் இந்திய வியாபாரத்துக்குத் தேவையான பொருள் கிடைக்குமென்றும், அப்போது பிரான்சிலிருந்து பண ஏற்றுமதியை நிறுத்திவிடலாமென்றும் டூப்ளே எண்ணினான். அதாவது அரசாங்கச் செலவு போக மீதியுள்ள பணத்துக்கு பிரெஞ்சுக்காரருக்குத் தேவையான இந்தியச் சரக்குகளை வாங்கி அனுப்பி விடலாம் என்று டூப்ளே எண்ணினான். ஆனால் அவன் இந்தத் திட்டத்திற்குப் பிரெஞ்சுக் கம்பனியின் அனுமதியைப் பெறவில்லை. அதனால் பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஏற்படக்கூடிய நன்மையைக் கண்ட கம்பனியார் அதை அங்கீகரித்து விடுவார்கள் என்று நம்பினான்.

தொடக்கத்தில் டூப்ளே இந்தியாவில் ஒரு பிரெஞ்சு இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பவில்லை. அதற்குப் பதிலாக இந்திய அரசர்கள் பிரெஞ்சு ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு பிரெஞ்சுக்காரர்கள் சொன்னபடி நடக்கும் பொம்மைகளாகச் செய்யவேண்டுமென்று அவன் விரும்பினான். இந்த நோக்கத்துடன் அவன் ஐதராபாத் விஷயத்திலும் கர்நாடாக விஷயத்திலும் தலையிட்டான். அந்த இரு இராஜ்யங்களிலும் 1749-ஆம் ஆண்டில் அரச பதவிக்காகப் போட்டியேற்பட்டது. அந்தப் போட்டியில் டூப்ளே ஒரு கட்சிக்கு உதவி செய்தான். ஐதராபாத்தில் டூப்ளேயின் கட்சிக்காரன் வெற்றிபெற்றான். அதனால் அவன் பிரெஞ்சுக்காரர் சொன்னபடி நடக்கத் தயாராயிருந்தான். டூப்ளேயின் பிரதிநிதியான சார்லஸ் டி புஸ்ஸி என்பவன் 1750-முதல் 1755-வரையில் ஐதராபாத்தில் இருந்தான். ஐதராபாத் அரசியலதிகாரம் முழுவதும் உண்மையில் அவன் கையிலேயே இருந்தது.

என்று கூறலாம். ஐதராபாத் இராஜ்யத்தின் கிழக்குக் கடற்கரை ஜில்லாக்களான வட சர்க்கார் ஜில்லாக்களைப் பிரெஞ்சுச் சைனியங்களின் செலவுக்காக நிஜாம் பிரெஞ்சுக்காரர்களுக்கு ஜாகீர் என்ற முறையில் கொடுத்தான். ஆனால் கர்நாடகத்தில் டூப்ளேயின் எண்ணம் ஈடேறவில்லை, ஐதராபாத் விஷயத்தில் பிரெஞ்சுக்காரர்களின் வெற்றியைக் கண்ட சென்னைக் கவர்னர் இந்தியாவில் ஆங்கில வியாபாரம் அழிந்து போகாமலிருக்க வேண்டுமானால் கர்நாடகத்தில் டூப்ளேயின் கட்சிக்காரனுக்கு எதிர்க் கட்சிகாரனை ஆங்கிலேயர் ஆதரிக்கவேண்டுமென்று உணர்ந்தான். ஆகவே ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் சமாதானம் நிலவியபோதிலும் கர்நாடகத்தில் 1751-முதல் 1754-வரையில் ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரரும் ஒருவரோடொருவர் சண்டை செய்துகொண்டிருந்தனர். இந்தச் சண்டையின் நிகழ்ச்சிகளைப்பற்றி நாம் அதிகமாக அறிந்துகொள்ளவேண்டியதில்லை, வெற்றி தோல்வி மாறிமாறி வந்த போதிலும் இறுதியில் ஆங்கிலேயர் கையே ஓங்கியது. அதனால் பிரெஞ்சுக்காரர் போரில் வல்லவர்கள் என்று ஏற்கெனவே அறிந்திருந்த இந்தியர்கள் ஆங்கிலேயர்கள் அவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்லர் என்ற உண்மையை உணர்ந்தார்கள். இவ்வாறு ஆங்கிலேயர்களுடைய கீர்த்தியை நிலைநாட்டிய பெருமையின் பெரும்பகுதி ராபர்ட் கிளைவ் என்ற வீரனைச் சேரும். இந்தச் சண்டையில் அடைந்த கீர்த்தி கிளைவின் பிற்கால உயர்வுக்குக் காரணமாயிற்று. சமாதானத்தை விரும்பிய பிரெஞ்சுக் கம்பனி டூப்ளேயைத் திருப்பி அழைத்துக்கொண்டதால் 1754-இல் யுத்தம் முடிவடைந்தது.

1756-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளால் இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. அவ்வாண்டில் ஏற்பட்ட ஏழாண்டுப் போரின் விளைவாகத் தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் ஏற்பட முடியாமற் போயிற்று. அதே சமயத்தில் வங்காள நவாப் கல்கத்தாவைக் கைப்பற்றினன். அதன் விளைவாக ஏற்பட்ட சண்டையால் வங்காளத்திலும் ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சிகளை அடுத்த அதிகாரத்திற் படிப்போம்.

அதிகாரம்—34

கிளைவின் சேவை

1756-ஆம் ஆண்டு ஜூன்மீ ஆங்கிலேயர் வியாபாரஸ்தலமாகிய கல்கத்தாவை சிராஜ் உத் தெளலா திடீரென்று தாக்கினான். சிராஜ் உத் தெளலா இரண்டு மாதங்களுக்கு முன்னர் தான் தன் பாட்டனுக்குப் பின் வங்காள நவாப் பதவியை அடைந்தான். அவன் கல்கத்தாவைத் தாக்கியதின் காரணம் தெரியவில்லை. அவன் மிகுந்த கெட்ட குணமுடையவனானதால், தக்க காரணம் ஒன்றும் இல்லாமல் வேண்டுமென்றே அவன் ஆங்கிலேயரைத் தாக்கினான் என்று கூறினாற்கூட அக்கூற்றைப் பொருத்தமற்றது என்று தள்ளிவிட முடியாது. ஆனால், தென்னிந்தியாவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் அவனுக்குத் தெரியுமாதலால் ஐரோப்பியர்களுடைய பலத்தை அடக்காவிட்டால் அவர்கள் கர்நாடகத்தின் ஆதிக்கத்திற்காகச் சண்டை செய்ததுபோல் வங்காளத்தின் ஆதிக்கத்திற்காகவும் சண்டை செய்யக்கூடும் என்றும், அதனால் தன்னுடைய அதிகாரத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் எண்ணி வெள்ளம் வருமுன் அணைகோலும் நோக்கத்துடன் கல்கத்தாவைத் தாக்கினான் என்று கூறினால் அது ஒருவாறு பொருந்தும் என்றே நினைக்கலாம். கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயர்கள் சிராஜ் உத் தெளலாவை எதிர்க்கக்கூடிய நிலையில் இல்லை. கோட்டை பலகாலமாகப் பழுதுபார்க்கப்படாமலிருந்தது. கோட்டைக்குள்ளே போதுமான அளவு போர்வீரர்கள் இல்லை. படைத்தலைவர்கள் திறமையற்றவர்கள். ஆகவே கவர்னரும் அவனுடைய ஆலோசனையாளர் சிலரும் கல்கத்தாவை விட்டுவிட்டுக் கடலிலிருந்த ஆங்கிலக் கப்பலுக்கு ஓடிவிட்டனர். விரைவில் சிராஜ் உத் தெளலா கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். சரணடைந்த ஆங்கிலேயர்கள் ஒரு சிறு அறையில் விட்டுப் பூட்டப்பட்டனர். இரவு முழுவதும் அந்த அறையில் இருக்க நேர்ந்த அவர்களில் பெரும்பான்மையோர் விடிவதற்குள் மாண்டுபோயினர். "இதுவே கல்கத்தா இருட்டறை" என்று வழங்கப்படுகிறது. *இந்தச் செய்தி சென்னைக்கெட்டியவுடன் கிளைவின் தலைமையில் ஓர் ஆங்கிலப்படை வங்காளத்திற்கனுப்பப்

---

*"கல்கத்தா இருட்டறை" வெறும் கற்பனை என்று தற்கால வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள்.

பட்டது. 1757-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கிளைவ் கல்கத்தாவை மீட்டு, சிராஜ் உத் தெளலாவுடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். அந்தச் சமயத்தில் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் தொடங்கிவிட்டது என்ற செய்தி இந்தியாவிற்கு வந்தது. கல்கத்தாவை இழந்ததனுல் கோபமடைந்த நவாப் ஆங்கிலேயருக்கு விரோதமாகப் பிரெஞ்சுக்காரருடைய சிநேகத்தை நாட எண்ணினுன். ஆனுல், அவன் அந்த விஷயத்தில் விரைவாக ஒரு முடிவுக்கு வராமல் காலங்கடத்தினுன். ஆங்கிலேயரும் அவனுடைய சிநேகத்தை நாடினுர்களாதலால் சில சிக்கலான பேச்சு வார்த்தைகள் நடந்தன. முடிவில் சிராஜ் உத்தெளலாவின் உத்தரவின்படி நடப்பதாகக் கூறிக்கொண்டு ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரருடைய வியாபார ஸ்தலமாகிய சந்திரநாகூரைக் கைப்பற்றிக்கொண்டு, அந்தப் பக்கத்திலிருந்து தங்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் வராதவாறு தங்கள் நிலையைப் பலப்படுத்திக்கொண்டார்கள்.

இதற்குள்ளாக சிராஜ் உத்தெளலா தன்னுடைய நடத்தையால் வங்காளத்திலிருந்த பணமும் செல்வாக்கும் மிகுந்த இந்துக்களின் பகையைத் தேடிக்கொண்டான். சிராஜ் உத்தெளலா தங்களுடைய செல்வத்தைப் பலாத்காரமாக அபகரித்துக்கொள்வான் என்று அவர்கள் அஞ்சினுர்கள். அவர்களில் மிகுந்த செல்வர்களாகிய சிலரைக் கட்டாயமாக இஸ்லாம் மதத்தைத் தழுவும்படி சிராஜ் உத்தெளலா வற்புறுத்தினுன். அதே சமயத்தில் அவனுடைய படைத்தலைவர்கள் அவன்மீது அதிருப்தியுடையவர்களாயிருந்தார்கள். இவ்வாறு சிராஜ் உத்தெளலா எல்லாராலும் வெறுக்கப்பட்டான். இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு அவனுடைய இந்துக் குடிகள் அவனுக்கு எதிராக ஒரு கலகத்தைக் கிளப்புவதற்குச் சூழ்ச்சி செய்தார்கள். அவனுடைய சைனியத்தில் ஒரு பெரிய உத்தியோகத்தை வகித்தவனும், பின்னர் அதிலிருந்து விலக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டவனுமான மீர்ஜாபர் என்பவன் கலகக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு வங்காளச் சிம்மாசனத்திற்கு வாரிசு கொண்டாடினுன். கலகக்காரர்கள் வெற்றியடைவார்கள் என்று உறுதியாக நம்பிய ஆங்கிலேயர் வெற்றிபெறக்கூடிய கட்சியில் சேர்ந்துகொள்ளத் தீர்மானித்தார்கள். மீர்ஜாபரும் ஆங்கிலேயர்களுக்குப் பல சலுகைகளை அளிப்பதாக வாக்களித்தான். ஆகவே, கிளைவ் மூவாயிரம் போர்வீரர்களுடன் சிராஜ் உத்தெளலாவுக்கு எதிராகப் போர்க்களஞ் சென்றுன். அந்தப் போர்வீரர்களிற் பெரும்பான்மையோர்

அவனோடு தென்னிந்தியாவிலிருந்து வந்த சிப்பாய்கள். 1757-ஆம் ஆண்டு ஜூன்மீ 23-ஆம் தேதியன்று பிளாசி என்ற இடத்தில் சண்டை நடந்தது. *சிராஜ் உத்தௌலா போர்க்களத்திலிருந்து ஓடிவிட்டான். சில நாட்களுக்குப் பின்னர்க் கிளைவ் மீர்ஜாபரை வங்காள நவாப்பாக்கினான். ஆனால் மீர்ஜாபர் திறமையற்றவன். மேலும் தனக்கு உதவிசெய்த இந்துக்களிடமிருந்தே அவன் அநியாயமாகப் பணம்பறிக்கத் தொடங்கினான். ஆகவே கிளைவ் அவர்களைக் காப்பது தன் கடமை என்று எண்ணினான். பின்னர் நடந்த பேச்சு வார்த்தைகளில் கிளைவ் சிறந்த அரசியல் தந்திரத்தைக் காட்டினான். அதனால், அவனுடைய செல்வாக்கு உயர்ந்தது. அடுத்த ஆண்டில் அவன் கல்கத்தா கவர்னராக நியமிக்கப்பட்டான். 1759-ஆம் ஆண்டில் அவன் டச்சுக்காரர்களுடைய எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டியதாயிற்று. இதுவரையில் டச்சுக்காரர்கள் இந்திய அரசியல் விவகாரங்களில் அதிகமாகத் தலையிடாமலிருந்தார்கள். ஆனால் வங்காளத்தில் நடந்த தங்களுடைய லாபகரமான வியாபாரத்திற்கு ஆபத்து ஏற்படும் என்று இப்போது அவர்கள் அஞ்சினார்கள். கர்நாடகத்தைப்போலவே வங்காளத்திலும் ஆங்கிலேயருடைய அரசியலாதிக்கம் அவர்களுக்கு வியாபாரத்திலும் தனியுரிமையை அளித்துவிடும் என்று டச்சுக்காரர்கள் நினைத்தார்கள். அதனால், அவர்கள் தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் பட்டேவியாவிலிருந்து ஒரு படையை வங்காளத்திற் கனுப்பினார்கள். கிளைவின் தூண்டுதலின்மேல் நவாப் டச்சுப்படை ஹூக்ளி நதிக்குள் நுழையக்கூடாது என்று உத்தரவிட்டான். டச்சுக்காரர்கள் பலாத்காரமாக நுழைய முயன்றார்கள். ஆனால் அவர்கள் தோல்வியடைந்து கேவலமான உடன்படிக்கையைச் செய்துகொள்ள நேர்ந்தது.

ஆகவே கிளைவ் 1760-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றபோது வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர்களுக்கு மற்ற ஐரோப்பியரால் ஆபத்து ஒன்றும் ஏற்படாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் நவாபைப் பொறுத்தவரையில் ஒன்றும் நிச்சயமாகக் கூற முடியாது. ஆங்கிலேயருடைய படையில் அதிகமான வீரர்கள் இல்லையென்றாலும் அந்தப்படையைச்

---

* சிராஜ் உத்தௌலாவின் சேனையில் சுமார் 50,000-வீரர்களிருந்தார்கள். ஆனால் அவர்களிற் பெரும்பான்மையோர் மீர்ஜாபருடைய தலைமையிலும், மற்ற கலகக்காரர்களின் தலைமையிலும் இருந்ததால் அவர்கள் சண்டையிற் பங்கெடுத்துக்கொள்ளவே இல்லை.

சாதாரணமாக யாரும் எதிர்க்கத் துணியமாட்டார்கள். எனினும் வங்காளத்தில் ஆங்கிலேயருக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கு கிளை வின் சொந்தத்திறமையால் ஏற்பட்டதே யன்றி அவன் விட்டுச் சென்ற வீரர்களின் திறமையால் அன்று. அவனுடைய அசாதாரணமான திறமையும், நினைத்த காரியத்தை உடனே செய்து முடிக்கும் ஆற்றலும், மற்றவர்களை அடக்கியாளும் சக்தியும் அவனுடைய செல்வாக்குக்குக் காரணமாயிருந்தன. வரலாற்றை மேலும் தொடர்வதற்கு முன்னர் இந்த மூன்று ஆண்டுகளில் அவன் செய்த காரியங்களின் நியாய அநியாயத்தைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது அவசியம்.

இந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறும்பொழுது பலவகைச் சூழ்ச்சிகளையும் நியாயமற்ற முறைகளையும் கையாள வேண்டியிருந்தது என்று கிளைவே எழுதி வைத்திருக்கிறான். ஆனால் இரண்டு விஷயங்களைப்பற்றித் தான் சரித்திர ஆசிரியர்களுக்குள் அதிகமான கருத்து வேறுபாடு காணப்படுகிறது. முதலாவது, கிளைவும் அவனுடைய சகாக்களும் மீர்ஜாபரிட மிருந்து 50-லட்சம் பவுன் வரையில் பரிசாகப்பெற்றுக்கொண்டார்கள் என்று தெரிகிறது. இந்தச் செய்தி இங்கிலாந்துக் கெட்டியதும் பல ஆங்கிலேயர்கள் கிளைவின் செய்கையை பலமாகக் கண்டித்தார்கள். கிளைவின் செயல் நியாயமற்றது என்று உண்மையாகவே சிலர் நினைத்துக் கிளைவைக் கண்டித்திருக்கலாம். ஆனால் பெரும்பான்மையோர் அவன்மீது கொண்டிருந்த பகைமையாலும், பொறாமையாலும் தூண்டப்பட்டுத் தான் அவனைக் கண்டித்தார்கள் என்று கூறினால் அது பொய்யாகாது. மேலும் அந்தக்காலத்தில் இந்தியாவிலிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதவிகளால் தங்களுக்கு ஏற்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு லஞ்சம் வாங்குவதின் மூலமாகவும் பரிசுகளை ஏற்றுக் கொள்ளுவதின் மூலமாகவும் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்வது சகஜமான விஷயம். அதனால், மீர்ஜாபர் கிளைவுக்கும் மற்றவர்களுக்கும் கொடுத்த ஏராளமான பரிசுகளைப்பற்றி இந்திய மக்கள் தவருக நினைத்தார்கள் என்று எண்ணுவதற்கு ஏற்ற ஆதாரம் ஒன்றும் இல்லை.

இரண்டாவதாக சிராஜ் உத்தௌலாவை ஒழிப்பதற்காகச் செய்த சூழ்ச்சிகளில் ஓமிச்சந்து என்பவனைக் கிளைவ் ஏமாற்றி விட்டதாகக் கூறப்படுகிறது. ஓமிச்சந்து என்பவன் சிராஜ் உத்தௌலாவுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்த இந்துத் தலைவர்

களில் ஒருவன். அதே சமயத்தில் அவன் தன் சொந்த லாபத்தைக் கருதி மீர்ஜாபருக்கு விரோதமாக சிராஜ் உத்தௌலாவுடனும் இரகசியத்தில் பேச்சு வார்த்தை நடத்தி வந்தான். இதையறிந்த கிளைவ் அவனைச் சரிப்படுத்துவதற்கும் ஒரு சூழ்ச்சி செய்தான். மீர்ஜாபருக்கும் கலகக்காரர்களுக்கும் ஏற்பட்ட உண்மையான ஒப்பந்தப் பத்திரத்திற்குப் பதிலாக, அதைப் போன்ற வேறொரு பொய்ப்பத்திரம் தயாரித்து, அதில் ஓமிச்சந்துக்குச் சாதகமாகச் சில விஷயங்களை எழுதி, அதை அவனிடம் காட்டி, அவனை மீர்ஜாபரின் பக்கத்திற்கு இழுத்துக்கொண்டான். மீர்ஜாபர் நவாபான பிறகு உண்மை வெளியாகி விட்டது. அதையறிந்த ஆங்கிலேயர் பலர் கிளைவ் முறை தவறி நடந்துகொண்டான் என்று அவனை வன்மையாகக் கண்டித்தார்கள். ஆனால் அந்தக் காலத்து இராஜ தந்திரிகள் கிளைவ் செய்தது தவறு என்று எண்ணியிருப்பார்கள் என்று நாம் நினைக்க முடியவில்லை. அரசர்கள் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவதற்கு எத்தகைய நியாயமற்ற முறையை வேண்டுமானாலும் கையாளலாம் என்று இந்துக் காலத்தின் முக்கிய அரசியல் நூலாகிய அர்த்த சாஸ்திரம் கூறுகிறது என்று முன்னோர் அதிகாரத்திற் கூறியுள்ளோம். அதே கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தான் முகமதிய அரசர்களும் தங்கள் அரசியல் விவகாரங்களை நடத்தினார்கள் என்றும் நாம் அறிகிறோம். இதற்கு இரண்டு உதாரணங்கள் தரலாம். தனக்கு விரோதமாகக் கலகஞ்செய்த இளவரசன் அக்பருக்கும் அவனை ஆதரித்தவர்களுக்கும் இடையில் பகைமையை ஏற்படுத்துவதற்கு அவுரங்கஜீப் பொய்க் கடிதங்களை உபயோகித்தான் என்று நாம் முன்னர் கூறியிருக்கிறோம். அதுபோலவே தன் விரோதிகளைச் சதி செய்து கொல்வதை ஓர் இராஜதந்திர முறையாக சிவாஜி கையாண்டான் என்று இந்து வரலாற்று ஆசிரியர்களே எழுதியிருக்கிறார்கள். அவுரங்கஜீப்பும் சிவாஜியும் வாழ்ந்த காலத்திற்கும் கிளைவின் காலத்திற்கும் இடையில் இராஜதந்திர முறைகள் மாறிவிட்டன என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. உண்மையில் கிளைவ் காலத்து இந்தியாவின் அரசியல் நிலை நேர்மையற்ற இராஜதந்திர முறைகள் பெருகுவதற்கு ஏற்றதாக இருந்தது என்று கூறலாம். ஆகவே, ஓமிச்சந்து விஷயத்திலும் கிளைவ் இந்தியப் பழக்கத்தையே கையாண்டான் என்று கூறலாம். அவ்வாறு செய்தது சரியா இல்லையாயென்பதைப் பற்றிய ஆராய்ச்சியைத் தர்க்க சாஸ்திரிகளுக்கு விட்டுவிடலாம்,

கிளைவ் கல்கத்தாவை விட்டுச் சென்றதும் ஆங்கிலேயருக்கும் மீர்ஜாபருக்கும் இடையிலிருந்த ஒற்றுமை குலையத் தொடங்கியது. மீர்ஜாபர் ஆங்கிலேயர் கைப்பதுமையாக இருக்க விரும்பவில்லை. மேலும் டச்சுப்படை ஹூக்ளி நதிக்குள் நுழைய முயன்றபோது மீர்ஜாபர் அவர்களுடன் ஆங்கிலேயருக்கு விரோதமாகப் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும் தெரியவந்தது. இதனால் ஆங்கிலேயர்கள் மீர்ஜாபரைத் தள்ளிவிட்டு மீர்காசிம் என்பவனை வங்காள நவாப்பாக்கினார்கள். மீர்காசிம் மீர்ஜாபரை விடப் பன்மடங்கு திறமை வாய்ந்தவன். மேலும் அவனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் பல முக்கியமான பிரச்சினைகளைத் தவிர்க்கவில்லை. மீர்காசிம் ஆங்கிலேயர் சொன்னபடி ஆடும் பொம்மையாக இருக்க விரும்பாமல் உண்மையிலேயே அரசியலதிகாரத்தை வகிக்க விரும்பினான். ஆகவே, அவனுக்கும் ஆங்கிலேயருக்கும் விரைவிலேயே பகைமை ஏற்பட்டது.

ஆங்கிலேய வியாபாரக் கம்பனியார் வங்காளத்தின் வழியாக எடுத்துச் சென்ற வியாபாரச் சரக்குகளுக்குச் சுங்கவரி செலுத்த வேண்டியதில்லை என்று மொகலாயச் சக்கரவர்த்தி அனுமதியளித்திருந்ததால் வெகுகாலமாக வரி செலுத்தாமலே ஆங்கிலக் கம்பனியார் வங்காளத்தில் வியாபாரம் செய்து வந்தனர். அந்தச் சலுகை தாங்கள் செய்து வந்த சொந்த வியாபாரத்திற்கும் அளிக்கப்படவேண்டுமென்று கம்பனி உத்தியோகஸ்தர்கள் கேட்டார்கள். ஆனால் அந்த உரிமையை அளிப்பதற்கு வங்காள நவாப் மாத்திரமன்றிக் கம்பனியாரும் மறுத்துவிட்டனர். எனினும், பிளாசி யுத்தத்திற்குப் பிறகு மீர்ஜாபர் இந்த உரிமையைச்சொந்த வியாபாரம் செய்த கம்பனி உத்தியோகஸ்தர்களுக்கும் அளித்தான். அவ்வாறு சொந்த வியாபாரத்தில் ஈடுபட்ட கம்பனி உத்தியோகஸ்தர்களுக்கு வரி செலுத்தாமல் சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதற்கு அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்பட்டன. விரைவில், கம்பனி உத்தியோகஸ்தர்கள் தங்கள் அனுமதிச் சீட்டுகளை இந்திய வியாபாரிகளுக்கு விற்கத் தொடங்கினார்கள். அனுமதிச் சீட்டுக் கையிலிருந்தால் வரி செலுத்த வேண்டியதில்லை யாகையால் இந்திய வியாபாரிகளிடையே அனுமதிச் சீட்டுக்கு நல்ல கிராக்கி இருந்தது. இந்த அநியாயமான முறையை மீர்காசிம் கடுமையாக எதிர்த்தான். அதனால், அவனுக்கும் ஆங்கிலேயருக்கும் பகைமை வளர்ந்தது,

பாட்னாவில் ஆங்கில வியாபாரஸ்தலம் ஒன்று இருந்தது. அந்நக ரத்தை மீர்காசிம் பிடித்துக்கொண்டான். அதனால் சண்டை ஏற் பட்டது. கல்கத்தாவிலிருந்து ஆங்கிலச் சேனைவந்து மீர்காசி மைத் தோற்கடித்துப் பாட்னாவை மீட்டது. மீர்காசிம் அவுத் நவாபின் உதவியை நாடினான். அவர்களோடு பெயரளவில் மொகலாயச் சக்கரவர்த்தியாயிருந்த ஷா ஆலமும் சேர்ந்துகொண்டான். 1764-ஆம் ஆண்டில் பக்ஸார் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் அவுத் சேனை தோல்வி யடைந்தது. நவாப் போர்க் களத்தினின்று ஓடிவிட்டான். ஷா ஆலம் ஆங்கிலேயருக்குக் கடங்கினான்.

பக்ஸார் யுத்தத்திற்கு முன்னரே ஆங்கிலேயர் மீர்ஜாபரை மறுபடியும் நவாப் பதவியில் வைத்துவிட்டனர். 1765-இல் மீர் ஜாபர் இறந்ததும் அவனுடைய மகனை ஆங்கிலேயர் நவாபாக்கி னர். ஆனால் அவனுக்கு உண்மையில் எந்தவிதமான அதிகார மும் கொடுக்கப்படவில்லை, அவனுடைய முதன் மந்திரியை ஆங்கிலேயர் நியமிக்கவேண்டுமென்றும், அவர்களுடைய உத்தர வில்லாமல் அவனை வேலையிலிருந்து நீக்கக்கூடாதென்றும் நிபந்தனைகளிலிருந்ததால் நவாப் வெறும் பொம்மையாக இருந்தான். இந்த நிலையில் கிளைவ் இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தான். அவன் 1765-முதல் 1767-வரையில் இரண்டாந்தரம் வங்காளத் தில் ஆங்கிலக் கம்பனியின் கவர்னராக இருந்தான். பக்ஸார் யுத் தத்திற்குப் பின்னர் வங்காளத்தில் ஏற்பட்ட சீர்கேடான நிலை மையைச் சரிபண்ணுவது அவனுடைய கடமையாயிற்று. அந்தச் சமயத்தில் கிளைவ் வங்காளத்தை ஆங்கில இராஜ்யத்தோடு சேர்த் திருந்தால் இந்தியர் யாரும் அதை எதிர்த்திருக்கமாட்டார்கள். ஏனெனில், ஆங்கிலேயர் வங்காள நவாபைச் சண்டையில் தோற் கடித்து விட்டார்களல்லவா? வெற்றி பெற்றவர்கள் தோற்ற அரசனுடைய இராஜ்யத்தைப் பிடித்துக்கொள்ளுவது யுத்த முறைக்குப் பொருத்தமானதுதானே? ஆனால் கிளைவ் அவ்வாறு செய்திருந்தால் அதை ஆங்கிலப் பார்லிமெண்டு அங்கீகரிப்பது சந்தேகம். மேலும் இங்கிலாந்துக்கும், பிரான்ஸ், ஹாலந்து போன்ற மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலிருந்த இராஜதந்திரத் தொடர்புக்கும் பங்கம் ஏற்படலாம். ஆகவே கிளைவ் இந்தத் தொந்தரவுகளெல்லாம் இல்லாத ஒரு முறையைக் கையாண்டான். ஷா ஆலத்திற்கு அயோத்தி இராஜ்யத்தில் ஒரு பகுதியும் அலகாபாத்தும் கொடுக்கப்பட்டன. அவற்றைப் பெற் றுக்கொண்ட ஷா ஆலம் அலகாபாத்திலேயே வாசம் செய்யத்

தொடங்கினான். அயோத்தி இராஜ்யத்தில் மீதியிருந்த பகுதி அயோத்தி நவாபுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டது. அவன் கம்பனியுடன் சிநேக உடன்படிக்கை செய்துகொண்டான். வங்காளத்திலும் பீகாரிலும் வரிவசூல் செய்யும் உரிமையை ஷா ஆலம் கம்பனிக்கு வழங்கினான். ஏற்கெனவே வங்காள நவாபுடன் செய்துகொண்ட உடன்படிக்கையால், வங்காள அரசியல் விஷயத்தில் கம்பனிக்கு அதிகமான செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. இப்போது வரி வசூல் உரிமையும் கிடைத்ததால் வங்காளத்தில் ஆங்கிலக் கம்பனி உன்னத நிலையை அடைந்துவிட்டது. ஆண்டு தோறும் மொகலாயச் சக்கரவர்த்திக்கும் வங்காள நவாபுக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதைத் தவிர மற்ற அதிகாரமெல்லாம் கம்பனியின் கைக்கே வந்துவிட்டது.

1767-ஆம் ஆண்டில் கிளைவ் கடைசியாக இங்கிலாந்துக்குத் திரும்பினான். அப்போது வங்காளம் சட்ட பூர்வமாக இல்லாவிட்டாலும் உண்மையில் ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்தது. வங்காளத்திற்கு அடுத்தபடியாக மேற்கிலிருந்த பிரதேசங்களில் ஆங்கிலேயருக்கு நண்பர்களான ஷா ஆலமும் அவுத் நவாப்பும் ஆட்சி செய்தார்கள். கிளைவ் ஏற்படுத்திய திட்டம் வெகுநாள் நிலைக்கவில்லை யெனினும், அப்போதைய நிலைமையைச் சமாளிப்பதற்கு ஏற்றதாக இருந்தது. இனி, தென்னிந்திய நிகழ்ச்சிகளைப்பற்றிக் கவனிப்பது அவசியம்.

ஏழாண்டுப் போரால் சென்னையிற் பல மாறுதல்கள் ஏற்பட்டன. அந்தப் போரின் தொடக்கத்தில் தென்னிந்தியாவில் அதிகமான சண்டை ஒன்றும் நடக்கவில்லை, பிரெஞ்சுச் சேனையின் பெரும் பகுதி ஐதராபாத்திலிருந்தது. அதுபோலவே, ஆங்கிலச் சேனையின் பெரும் பகுதி கிளைவுடன் வங்காளத்திற்குச் சென்று இருந்தது. ஆனால் 1758-ஆம் ஆண்டில் இருதிறத்தார்க்கும் ஐரோப்பாவிலிருந்து உதவி வந்து சேர்ந்ததால் அந்த ஆண்டிலிருந்து சண்டை மும்மரமாயிற்று. ஆங்கிலேயர் முதலில் கடல் ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொண்டனர். 1760-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிரெஞ்சுக்காரர்கள் வந்தவாசி என்ற இடத்தில் படுதோல்வி யடைந்தனர், அடுத்த ஆண்டில் ஆங்கிலேயர் புதுச்சேரியைப் பிடித்துக்கொண்டனர். முடிவில் ஆங்கிலேய ஆதிக்கம் கர்னாடக முழுவதும் ஸ்தாபிக்கப்பட்டதோடு ஐதராபாத்திலும் பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கம் அழிந்தது. பக்ஸார் யுத்தத்திற்குப் பின்னர்க் கிளைவ் ஷா ஆலத்துடன் செய்துக்கொண்ட உடன்படிக்கை வங்காளத்திற்கு மட்டுமின்றித் தென்னிந்தியாவுக்கும்

சேர்ந்ததா யிருந்தது. அதன்படி கர்நாடகம் ஐதராபாத்தின் ஆதிக்கத்தினின்று சட்ட பூர்வமாக விடுவிக்கப்பட்டது. கொஞ்ச நாள் பிரெஞ்சுக்காரர் கையிலிருந்த வட சர்க்கார் ஜில்லாக்கள் ஆங்கிலேயருக்கு மாற்றப்பட்டன. ஆனால், அந்த ஜில்லாக்கள் ஐதராபாத் இராஜ்யத்தோடு சேர்ந்தவைகளாகவே இருந்தன. 1766-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும் நிஜாமுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையால் வடசர்க்கார் ஜில்லாக்கள் சட்ட பூர்வமாகவே ஆங்கிலேயருக்கு வழங்கப்பட்டன. நிஜாமும் ஆங்கிலேயரும் அவசியமானபோது ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டும் என்றும் ஏற்பட்டது. மைசூரின் உயர்வால் இருதிறத்தாருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று உணர்ந்தே நிஜாமும் ஆங்கிலேயரும் இந்த உடன்படிக்கை செய்துகொண்டனர்.

ஹைதர் ஆலி என்ற அசாதாரணமான திறமை வாய்ந்த போர்வீரன் ஒருவன் இப்போது மைசூருக்கு அரசனுயிருந்தான். இந்திய அரசர்களின் பரம்பரை வழக்கப்படி ஹைதர் ஆலியும் வேறு நாடுகளை ஜெயித்துத் தன்னுடைய ராஜ்யத்தைப் பரப்புவதற்கு அதிக ஆவலுடையவனு யிருந்தான். அவனுடைய ராஜ்யத்திற்கு வடக்கில் நிஜாமும் மகாராஷ்டிரர்களு மிருந்தார்கள். கிழக்கில் கர்நாடக நவாப் இருந்தான். ஆனல், உண்மையில் அவன் ஆங்கிலேயருடைய கையாளாகத்தானிருந்தான். ஆகவே, தென்னிந்திய அரசியலரங்கில் ஹைதர் ஆலி, நிஜாம், மகாராஷ்டிரர், ஆங்கிலேயர் என்ற நான்கு தனிப்பட்ட சக்திகள் இருந்தன. அந்த நான்கில் ஒவ்வொன்றும் தனியாகவோ அல்லது இரண்டு மூன்று ஒன்று சேர்ந்தோ மற்ற சக்திகளை எதிர்க்கலாம். இந்த நிலையில் இந்திய அரசியலுலகில் அக்காலத்தில் வழக்கமான சூழ்ச்சிகளும் சிக்கலான இ ரா ஜ த ந் தி ர முறைகளும் கையாளப்பட்டன. இரண்டு சக்திகள் ஒப்பந்தம் செய்துகொள்ளுவதும், பின்னர் அந்த ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஒரு சக்தி பிரிந்து மூன்ருவது சக்தியோடு சேர்ந்து கொள்ளுவதும் அடிக்கடி நடந்த விஷயங்கள். 1767-ஆம் ஆண்டில் நிஜாமுக்கு உதவி செய்வதற்காக ஆங்கிலேயர் மைசூருடன் சண்டைக்குச் சென்றனர். ஆனல் திடீரென்று நிஜாம் மைசூருடன் உடன்படிக்கை செய்துகொண்டதால், ஆங்கிலேயர் மைசூருடன் தனியாகச் சண்டை செய்ய நேர்ந்தது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் ஆங்கிலேயர் மைசூருடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு ஹைதர் ஆலிக்கு உதவி செய்வதாக வாக்களித்தனர். இம்மாதிரி அரசியல் நிலை வெகுநாள் நீடித்திருந்தது.

அதிகாரம்—35

பதினெட்டாம் நூற்றுண்டில் இந்தியாவின் நிலை

கிளைவ் 1767-ஆம் ஆண்டில் இந்தியாவினின்று திரும்பிச் சென்றபோது ஆங்கில ஆதிக்கம் வங்காளத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. தென்னிந்தியாவிலும் அவர்களுடைய ஆதிக்கத்திற்கு விதையூன்றியாய்விட்டது. விரைவில் ஆங்கில ஆதிக்கம் இந்தியா முழுவதும் பரவ இருந்தது. அந்த வரலாற்றைப்பற்றிப் படிக்கப்புகுமுன் பதினெட்டாம் நூற்றுண்டில் இந்தியாவின் நிலைமை எவ்வாறிருந்தது என்பதைப்பற்றிப் பார்க்கலாம். இந்தியாவின் அரசியல் நிலையைப்பற்றி ஏற்கெனவே போதுமான அளவு சொல்லியிருக்கிறோம். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற கொள்கை எங்கும் தாண்டவமாடியது. அரசியல் விஷயங்களில் எத்தகைய நியாயமற்ற முறைகளையும் கையாளலாம் என்ற எண்ணம் வேரூன்றிவிட்டது. போர் முறைகளைப் பொறுத்தவரையில் ஐரோப்பிய முறையில் பயிற்சிபெற்ற இந்தியச் சிப்பாய்கள் தங்களைவிடப் பன்மடங்கு அதிகமான இந்திய வீரர்களை முறியடிக்க முடியும் என்ற உண்மை அனைவருக்கும் விளங்கிவிட்டது. அதனால் பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இந்திய அரசர்கள் பலர் தங்கள் போர்வீரர்களுக்கு ஐரோப்பிய முறையில் பயிற்சியளிக்கத் தொடங்கினார்கள். போர்செய்தலை இந்தியர்கள் தாய்நாட்டுத் தொண்டு என்று கருதாமல் கண்ணியமும் லாபமும் தரக்கூடிய ஒரு தொழிலாகக் கருதினார்கள். மகாராஷ்டிரர்கள் பலர் அவுரங்கஜீப்பின் சேனையிற் சேர்ந்து சண்டை செய்தார்கள். மகாராஷ்டிரர்களும் மொகலாயர்களும் ஐரோப்பிய வீரர்களைத் தங்கள் பீரங்கிப் படைகளில் வைத்திருந்தார்கள். ஆங்கிலக் கம்பெனியின் சேனைகளிற் சேர்ந்து போர்செய்த இந்தியச் சிப்பாய்களை யாரும் இழிவாகக் கருதவில்லை. அவர்கள் தங்கள் தொழிலைத்தாமே செய்து வந்தார்கள்.

இந்திய இராஜ்யங்களின் ஆட்சிமுறை வழக்கம்போல் அரசியல் வர்க்கத்தினர் ஆட்சிமுறையாகவே இருந்தது. அரசனாவது மந்திரியாவது அனுப்பும் உத்தரவுகள் அதிகாரவர்க்கத்தாரால் நிறைவேற்றப்பட்டன. உத்தியோகஸ்தர்கள் மக்களின் நன்மைகளையும் தேவைகளையும்பற்றிக் கவலைப்படாமல் மேலிடத்து விருப்பம்போல் அமுல் நடத்தினார்கள். ஆனால், உத்தி

யோகஸ்தர்கள் தங்கள் மேலதிகாரிகளின் தயவை இழக்காத வரையில் தங்களிஷ்டம்போல் பல விஷயங்களில் நடக்கமுடியும். உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைவிட லஞ்சம், பரிசு முதலிய வகைகளில் வரக்கூடிய வருமானம் மிக அதிகமாயிருந்தது. உத்தியோகம் எவ்வளவு நாள் நிலைத்திருக்கும் என்று நிச்சய மாகச் சொல்லமுடியாது. ஒவ்வோர் உத்தியோகஸ்தரும் மேல் பதவியை அடைவதற்காகப் பணத்தையும் காலத்தையும் செலவு செய்து பலவகையிலும் சூழ்ச்சியும் முயற்சியும் செய்தது போலவே, இருக்கிற உத்தியோகத்தைப் பிறருடைய போட்டி சூழ்ச்சி முதலியவற்றினின்று காத்துக்கொள்வதற்கும் மிகுந்த பணத்தையும் காலத்தையும் செலவு செய்யவேண்டும். ஆகவே உத்தியோகஸ்தர்கள் சாதாரணமாகப் பொது நன்மையைவிடத் தங்கள் சொந்த நன்மைக்காகவே பாடுபடுவது இயல்பாயிருந்தது. சம்பளத்திற்குப் பதிலாக ஜாகீர்களை வழங்கும் முறை பதினேமூாம் நூற்றாண்டு முழுவதிலும் வழக்கிலிருந்தது. ஆனால் அவு-ரங்கஜீப்பின் காலத்திற்குப்பின் அந்தமுறை பெரும்பாலும் வழக்கற்றுப் போயிற்று. ஏனெனில் அப்போதைய குழப்பமான நிலைமையில் ஒரு ஜாகீர்தாரனிடம் எவ்வளவுநாள் ஒரு ஜாகீர் இருக்குமென்று சொல்லமுடியாது. அடிக்கடி ஏற்பட்ட சண்டைகளாலும் குழப்பங்களாலும் ஜாகீர்கள் அடிக்கடி கைமாறிக் கொண்டேயிருந்தன. ஆகையால், அவுரங்கஜீப்புக்குப் பின் சுயேச்சை யடைந்த முகமதிய ராஜ்யங்களில் ஜாகீர் முறைக்குப் பதிலாக ரொக்கமாகச் சம்பளம் கொடுக்கும் முறையே பெரும் பாலும் கையாளப்பட்டது. ஆனால் மகாராஷ்டிரர் ஆதிக்கத் திற்குட்பட்ட பிரதேசங்களில் ஜாகீர் முறையே வழக்கிலிருந்தது.

உத்தியோகஸ்தர்கள் அரசியல் அதிகாரத்தைத் தங்களிஷ்-டம்போல் உபயோகித்து வந்தனர். குற்றம் சார்த்தப்பட்டவர்களை முன்னர்ச் சாட்டையாலடித்தபிறகுதான் அவர்களுடைய சாட்சியத்தைக் கேட்பது என்பது அரசியல் தத்துவம். குற்றங்களை விசாரிப்பதில் தற்காலத்திலிருக்கும் நியாய விசாரணை முறைகளை அனுசரிக்காமல் உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குத் தோன்றிய நியாயத்தை உடனுக்குடனே வழங்கினார்கள். தண்டனை கடுமையாக இருந்தது. காலதாமதம் செய்வதால் லாபம் வருவதாயிருந்தால் அதிகாரிகள் தங்கள் தீர்மானத்தைச் சொல்வதற்கு மிக அதிகமான காலத்தை எடுத்துக்கொள்வார்கள். மக்களை அடிப்பதும் துன்புறுத்துவதும் தண்டனைக்காக மாத்திரமின்றிக் குற்றத்தை நிரூபிப்பதற்கும் உபயோகப்பட்டன.

மேலும் தங்களிடம் அதிகாரம் இருக்கிறது என்பதைக் காட்டுவதற்கும் அதிகாரிகள் மக்களை அடித்துத் துன்புறுத்துவதுமுண்டு. இந்த முறைகளைக் கண்டிப்பதற்கான சட்டங்கள் இருந்தன என்று கூறுவதற்கு எந்தவித ஆதாரமுமில்லை. இவ்வாறு ஒவ்வோர் உத்தியோகஸ்தனும் தன் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் தன்னிஷ்டம்போல் செய்யும் கொடியோனாக இருந்தான்.

எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும் யுத்தம் ஏற்படலாமாகையாலும், சாலைகளில் வழிப்பறிக்காரர்கள் மலிந்திருந்ததாலும், ஆயுதந்தாங்கிய கொள்ளைக் கூட்டத்தினர் தாங்கள் விரும்பியபோதெல்லாம் கிராமங்களில் நுழைந்து கொள்ளையடித்ததாலும், நாட்டின் பொருளாதார நிலை சீர்கெட்டுக் கிடந்தது. மகாராஷ்டிரர் ராஜ்யத்தில் மாத்திரம் இத்தகைய கொள்ளையும் கொலையும் அவ்வளவாக நடைபெறவில்லை யென்று அறிகிறோம். ஆனால் அவர்களுடைய ஆட்சிக்குப் புறம்பான பிரதேசங்களில் அவர்களால்தான் மிகப் பெருந்துன்பம் ஏற்பட்டது. அவர்களால் வங்காள மக்களுக்கேற்பட்ட துன்பத்தை முன்னோர் அதிகாரத்தில் கூறியிருக்கிறோம். அவர்களுடைய தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய எல்லாப் பிரதேசங்களிலும் அதே வகையான துன்பங்கள் நேர்ந்தன. சுமார் 1778-ஆம் ஆண்டில் எழுதப்பட்ட ஓர் இந்திய நூலின்மூலம், மகதாஜி சிந்தியாவின் ஆட்கள் தற்கால ஐக்கியமாகாணத்தின் மேற்குப்பகுதியில் பஞ்சத்தால் வாடிய ஏழைக்குடியானவர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காக மிகக்கொடுமையான—மனிதத்தன்மைக்குப் புறம்பான—முறைகளைக் கையாண்டார்கள் என்று அறிகிறோம். "மக்கள் கூட்டங் கூட்டமாக உணவு தேடிச் செல்கிறார்கள். பஞ்சத்தாலும் பட்டினியாலும் அவர்கள் படாதபாடு பட்டிருக்கின்றனர். அவற்றுடன் மகதாஜி சிந்தியாவின் ஆட்கள் இழைக்கும் கொடுமையும் சேர்ந்து அவர்களை வதைக்கின்றது." சிந்தியாவின் ஆட்களில் ஒருவன் கிழிந்த துணிகளை மக்கள் உடம்பிற் சுற்றி, அவற்றின்மீது எண்ணெயை ஊற்றித் தீவைத்தான் என்று மேற்சொன்ன ஆதாரத்தின்மூலம் அறிகிறோம். இராஜபுதனத்திலிருந்த குடியானவர்கள் மாத்திரமின்றித் தலைவர்களும் மகாராஷ்டிரர் பேரைக் கேட்டதுமே அஞ்சினார்கள். யுத்தத்தில் பெயர்பெற்ற இராஜபுத்திரர்களுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் ஏற்பட்ட பகைமை ஆங்கிலேய இராஜ்யம் இந்தியாவில் பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாயிற்று.

பதினெட்டாம் நூற்றுண்டின் வரலாற்றை அறிந்துகொள்ளு வதற்கு உதவியாயிருக்கும் ஆதாரங்களின் மூலம் அந்தக் காலத் துக் குடியானவர்கள் அக்பர் காலத்துக் குடியானவர்களைவிட மிக மோசமான நிலையில் இருந்தார்களென்று அறிகிறோம். அதற்குமுன் எந்தக்காலத்திலிருந்த குடியானவர்களும் அவ்வளவு மோசமான நிலைமையிலிருந்ததில்லை என்றுகூடக் கூறலாம். அக்பர் காலத்தில் குடியானவர்கள் அமைதியான முறையில் தங்கள் தொழிலை நடத்தி வந்தார்கள். அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரி அதிகமாக இருந்ததெனினும், அவ்வரி நியாயமான முறையில் நிர்ணயிக்கப்பட்டும், வசூலிக்கப்பட்டும் வந்தது. பதினெட்டாம் நூற்றுண்டில் வரிச்சுமை இன்னும் அதிகமாயிற்று. நிர்ணயிக்கப்பட்ட வரி விளைவில் அரைப் பங்காக வந்துவிட்டது. ஆனல், உண்மையில் வசூலிக்கப்பட்ட வரி அதைவிட அதிகமாயிருந்தது. குடியானவர்களை மிகக் கடுமையான முறையில் தொந்தரவு செய்து அவர்களிடமிருந்து எவ்வளவு வசூலிக்கமுடியுமோ அவ்வளவும் வசூலிக்கப்பட்டது. ஓர் உத்தியோகஸ்தன் வசூலித்து விட்டுப்போன பிறகு வேருேர் உத்தியோகஸ்தன் சென்று தன்னல் எவ்வளவு முடியுமோ அவ் வளவு பணத்தைக் குடியானவர்களிடமிருந்து வசூல் செய்வதும் உண்டு. பிறர் கண்ணிற் படும்படியாகச் செல்வம் வைத்திருப்ப வனுக்கு எப்போதும் ஆபத்துத்தான். ஆகவே, திறமையுள்ள வர்கள் பயிர்த்தொழிலுக்குப் பதிலாகப் பிறரிடம் பணம் பறிப்ப தற்கேற்ற தொழிலையே விரும்பினர்கள்.

குடியானவர்களிற் பலர் போர்த்தொழிலையும் கொள்ளைத் தொழிலையும் மேற்கொண்டார்கள் எனினும், இந்திய சமுதாயத் தில் பெரும்பாலான மக்கள் இன்னும் விவசாயிகளாகவே இருந் தனர். முகமதியர் ஆட்சிக் காலத்தில் பயிர்த் தொழிலில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. மக்காச்சோளம், உருளைக்கிழங்கு, புகையிலை போன்ற ஒரு சில புதிய பயிர்கள் போர்ச்சுக்கீசியர் மூலம் இந்தியாவுக்கு வந்தன. ஆனல் பொது வாகக் கூறுமிடத்து விளைபொருள்களும் விவசாய முறைகளும் பழைய மாதிரியே இருந்தன. வரிவசூல் முறையில் மாத்திரம் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அக்பர் காலத்தில் முடிந்தவரையில் ஒவ்வொரு குடியானவனிடமிருந்தும் தனித்தனி யாக வரி வசூலிக்கப்பட்டது என்று படித்தோம். ஆனல் பதி னேழாம் நூற்றுண்டின் மத்திய காலத்திற்குள் இந்த முறை மாறிவிட்டது. அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொரு கிராம

மும் எவ்வளவு எவ்வளவு வரி செலுத்தவேண்டுமென்று அந்தந் தக் கிராமத் தலைவர்களிடம் ஒவ்வோராண்டும் பேசி முடிவுசெய்து விடுவார்கள். அதன்பின்னர்க் கிராமத்தலைவர்கள் கிராமத்திலுள்ள குடியானவர்களில் ஒவ்வொருவனும் எவ்வளவு வரி செலுத்த வேண்டும் என்று தீர்மானிப்பார்கள்.

பதினேழாம் நூற்றுண்டின் முடிவிற்குள் வரிவசூல் முறையில் இன்னுமொரு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. தனித்தனி கிராமங்களின் வரிவசூலையோ அல்லது கிராமத் தொகுதிகளின் வரிவசூலையோ பல வருஷங்களுக்கு ஒரேயடியாகக் குத்தகைக்கு விட்டுவிடும் பழக்கம் சாதாரணமாகிவிட்டது, ஆகவே, அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குப் பதிலாகக் குத்தகைக்காரர்கள் அல்லது தாலுக்தார்கள் ஒவ்வோராண்டின் ஆரம்பத்திலும் கிராமத் தலைவர்களைச் சந்தித்து ஒவ்வொரு கிராமமும் அந்த ஆண்டுக்கு எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்று முடிவு செய்தார்கள். வரிவசூலித்துக் கொடுத்த கிராமத்தலைவர்கள் தங்கள் கிராமங்களுக்கு ஆபத்து ஏற்படாமல் காப்பாற்றவேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று கூறினார்கள். அரசாங்க அதிகாரிகளால் தங்கள் கிராமங்களைக் காப்பாற்ற முடியாவிட்டால் யார் தங்கள் கிராமங்களைக் காப்பாற்ற முன் வந்தார்களோ அவர்களிடத்தில் வரியைச் செலுத்துவதற்குக் கிராமத் தலைவர்கள் தயாராயிருந்தார்கள். ஆகவே ஒரு கோட்டையும் சில போர்வீரர்களும் உடைய ஒருவன் தன் கோட்டையைச் சுற்றியுள்ள கிராமங்களின் வரிவசூலைக் குத்தகைக்குப் பெற்றுக்கொண்டு, அதனுல் வரும் லாபத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் போர்வீரர்களின் தொகையை அதிகப்படுத்திக்கொண்டு, ஆண்டுதோறும் அதிகமான கிராமங்களின் வரிவசூலைக் குத்தகைக்குப் பெற்று, நாளடைவில் தன் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டே சென்று, கடைசியில் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பகுதிப் பணத்தைச் செலுத்தாமல் சுயேச்சையுடைய தலைவனுக மாறிவிடுவான். இவ்வாறு ஒவ்வொரு தாலுக்தாரனும் தன் பலத்தை அதிகப்படுத்த முயன்றதால் தாலுக்தாரர்களுக்குள்ளேயே அடிக்கடி சச்சரவு ஏற்பட்டது.

ஏற்கெனவே சில பகுதிகளில் சிற்றரசர்கள் என்று சொல்லக்கூடிய முறையில் தலைவர்கள் இருந்தார்கள் என்று முன்னர்க் கூறியிருக்கிருேம். அவர்கள் மேலே சொன்ன வழியைப் பின்பற்றித் தங்கள் பலத்தை அதிகப்படுத்திக் கொள்ளுவது எளிதாயிற்று. அவர்கள் தங்கள் ஆதிக்கத்திலிருந்த பகுதிகளுக்கு

அடுத்த கிராமங்களின் வரிவசூலைக் குத்தகைக்கெடுத்து, அதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தை மேலும் மேலும் பெருக்கினார்கள். அதே சமயத்தில் சாதாரணத் தாலுக்தாரர்களும் பரம்பரையாக வரத்தொடங்கினார்கள். அதாவது அரசாங்கம் குறிப்பிட்ட கிராமங்களின் வரிவசூலை ஒரே குடும்பத்தார்க்குப் பரம்பரையாகக் கொடுக்கத் தொடங்கியது. அப்படிச் செய்வது அரசாங்கத்தின் வரிவசூல் வேலையை எளிதாக்கிற்று. நாளடைவில் இத்தகைய தாலுக்தாரர்களுக்கும் சிற்றரசர்கள் என்று சொல்லக்கூடிய சுயேச்சை பெற்ற தலைவர்களுக்கும் இடையிலிருந்த வேறுபாடு கொஞ்சங் கொஞ்சமாக மறையத் தொடங்கியது. சிற்றரசர்கள் தங்கள் பகுதிகளிலிருந்த குடியானவர்கள்மீது எவ்வாறு அதிகாரம் செலுத்தினார்களோ அதுபோலவேதான் தாலுக்தாரர்களும் தாங்கள் குத்தகைக்கெடுத்த கிராமங்களின் குடியானவர்கள்மீது அதிகாரம் செலுத்தினார்கள். இந்த இருதிறத்தாரும் ஆரம்பத்தில் தங்கள் அதிகாரங்களை எவ்வாறு பெற்றார்கள் என்ற விஷயத்தை மக்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இவ்வாறு பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய விவசாயிகளின் நிலைமை அடிக்கடி மாறுந்தன்மை யுடையதாயிருந்தது. நாட்டின் பல பாகங்களிலும் தாலுக்தாரர்களும் தலைவர்களும் ஏராளமாக இருந்தனர். அவரவர் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளில் அவர்கள் அரசியல் அதிகாரம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ செலுத்தி வந்தார்கள். அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட வட்டங்கள் சில சமயத்தில் சுருங்கும்; சில சமயங்களில் பெருகும்: சிலசமயம் மறைந்தேபோகும். அது அவர்களுடைய திறமையையும் அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது. அந்தப் பகுதிகள் ஆங்கிலக் கம்பனியின் ஆட்சிக்கு வந்தபின்னர் நிலையான தன்மையை அடைந்தன. ஆங்கிலேயர் அந்தப் பகுதிகளிற் சிலவற்றைத் தங்கள் ஆதிக்கத்திற்குட்பட்ட இராஜ்யங்களாகவும் சிலவற்றை ஜமீன்களாகவும் ஏற்றுக்கொண்டார்கள். இந்தத்துறையில் ஆங்கிலேயர் ஸ்திரமான கொள்கைகளை அனுசரித்ததாகத் தெரியவில்லை. ஆங்காங்குக் காணப்பட்ட நிலைமையை யொட்டிச் சிலதலைவர்களை அரசர்களாகவும், சில தலைவர்களை ஜமீன்தார்களாகவும் ஏற்றுக்கொண்டனர். அதிர்ஷ்டமுடையவர்கள் அரசர்களானார்கள் என்றும், அஃதில்லாதவர்கள் ஜமீன்தார்களானார்கள் என்றும் சொன்னாலும் பொருந்தும். அரசர்கள் கம்பனியின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு தங்கள் இராஜ்யங்களின் வரிவசூலை நிர்ணயித்து வசூல் செய்து வந்தார்

கள். ஆனால் ஜமீன்தார்கள் தங்கள் ஆதிக்கத்திலிருந்த நிலங்களுக்குக் கம்பனி விதித்த வரியைக் கம்பனிக்குக் கட்டிவிட்டு அந்த நிலங்களைப் பயிரிட்ட குடியானவர்களிடமிருந்து குத்தகையை வசூல் செய்தார்கள்.

மொகலாய சாம்ராஜ்யத்தின் சிதைவினால் ஏற்பட்ட இராஜ்யங்களில் தான் மேற்சொன்ன விஷயம் நடந்தது. மகாராஷ்டிர இராஜ்யத்திலும், தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் வரி வசூலைக் குத்தகைக்கு விடும் முறை அதிகமாகக் கையாளப்பட்டதெனினும், குடியானவர்களிடமிருந்து அரசாங்கம் நேராக வசூலிக்கும் முறை முழுமையும் மறைந்து போகவில்லை. ஆகவே பிரிட்டிஷ் ஆட்சியில் வளர்ச்சியடைந்த ஜமீன்தாரி முறையும் ரயத்துவாரி முறையும் ஏற்கெனவே இந்தியாவிற் காணப்பட்ட முறைகளை அடிப்படையாகக் கொண்டவைதாம். பொதுவாகக் கூறுமிடத்து வட இந்தியாவில் ஜமீன்தாரி முறையும் தென்னிந்தியாவில் ரயத்துவாரி முறையும் வழக்கிலிருக்கின்றன. ஜமீன்தாரி முறைப்படி ஜமீன்தார்கள் தங்கள் ஜமீன்களிலுள்ள குடியானவர்களிடமிருந்து வரிவசூல் செய்து அதில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்குச் செலுத்துகிறார்கள் ; ரயத்துவாரி முறைப்படி அரசாங்கமே குடியானவர்களிடமிருந்து நேரடியாக வரிவசூல் செய்கிறது.

இனி, பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவின் பொருளாதார நிலை மற்ற துறைகளில் எவ்வாறிருந்தது என்று பார்ப்போம். தாதுப் பொருள்களின் உற்பத்தி மிகக் குறைவாக இருந்தது. தங்கமும் வெள்ளியும் முன்காலத்தில் தோண்டியெடுக்கப்பட்டிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஆனால் அவ்வாறு அவை தோண்டியெடுக்கப்பட்டது துருக்கியர் ஆட்சிக்கு முற்பட்ட காலத்தில் தான் என்று நிச்சயமாகக் கூறலாம். பதினேழாம் நூற்றாண்டில் நல்ல லாபம் தந்த கோல்கொண்டா வைரச் சுரங்கங்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் பயனற்றுப் போயின. மற்ற இரத்தினங்களும் மிகக் குறைவாகத்தான் கிடைத்தன. தமிழகத்தில் முத்துக்குளிக்கும் தொழில் நடைபெற்றுக்கொண்டு வந்தது. இராஜபுதனத்திலும் மத்திய இந்தியாவிலும் அதிகமாகக் கிடைத்த தாமிரம் பதினேழாம் நூற்றாண்டில் குறைந்துபோயிற்று. ஆகவே இந்தியா தனக்கு வேண்டிய தாமிரம் முழுவதையும் வெளிநாடுகளிலிருந்து பெறவேண்டியதாயிற்று. நாட்டின் பல பகுதிகளில் உயர்தரமான இரும்பும் எஃகும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் நிலக்கரிச் சுரங்கங்

கள் இருப்பது தெரியாமையால் இரும்பு உற்பத்திக்கு மரக்கரியையே உபயோகிக்க வேண்டியிருந்தது. இரும்புக் கனிகளின் அண்மையிலிருந்த காடுகளையெல்லாம் அழித்து இரும்பு உற்பத்தி செய்ததால் விரைவில் அக்காடுகளில் மரங்களே இல்லாமற் போயின. அதனால் மறுபடியும் அங்கு மரங்கள் வளரும் வரையில் இரும்புச் சுரங்கங்களில் வேலை நடக்க வழியில்லை. ஆகவே இந்தியாவில் இரும்பு கிடைத்தது எனினும் அதன் விலை அதிகமாகவே இருந்தது. அதனால்தான் இந்திய விவசாயத்திலும் கைத்தொழில் முறைகளிலும் இரும்பு மிகக் குறைவாக உபயோகிக்கப்பட்டது என்று கூறலாம்.

மற்றைய தாதுப் பொருள்களில் உப்பையும் வெடியுப்பையும் பற்றிக் கூறினால் போதும். பஞ்சாபில் உப்பு நிலத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டது. மற்ற பகுதிகளில் கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்டது. உப்புக்கு வரி அதிகமாகப் போடப்பட்டது. சில இடங்களில் உப்பு உற்பத்தி அரசர்களின் தனியுரிமையாக இருந்தது. ஆனால் அதன் விநியோகம் உள்நாட்டு வியாபாரத்தில் ஒரு மிக முக்கிய பகுதியாயிருந்தது. வெடியுப்பு அந்தக்காலத்தில் வெடி மருந்து உற்பத்திக்கு மிக அவசியமான பொருளாயிருந்தது. அது வெளிநாடுகளுக்கு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. பீகாரின் தலைநகரான பாட்னாவில் பல கம்பனிகள் வெடியுப்பு ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட்டன.

வங்காளத்தின் வியாபாரத்தில் பெரும்பகுதி உள்நாட்டு நீர் நிலைகளின் வழியாகச் சென்ற படகுகளின் மூலமாக நடந்தது. மற்றப் பிரதேசங்களில் வியாபாரத்திற்கு ரஸ்தாக்களே உபயோகிக்கப்பட்டன. அந்த ரஸ்தாக்கள் கற்பாவி ஒழுங்கு படுத்தப்பட்டவையல்ல. சில இடங்களில் சாலைகளின் இருபுறங்களிலும் மரங்களும், கிணறுகளும், தங்குமிடங்களுமிருந்தன. மொகலாயர் காலத்தில் சாலைகளிலெல்லாம் போலீஸ் பந்தோபஸ்து இருந்தது என்று படித்தோம். பதினெட்டாம் நூற்றுண்டில் ஏதோ சில இடங்களில்தான் அத்தகைய பந்தோபஸ்து இருந்தது. ஆனால் வியாபாரிகளின் காவலுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்தப் போலீஸ்காரர்கள் அவர்களிடமிருந்து எவ்வளவு பணம் பறிக்கலாமோ அவ்வளவும் பறித்தார்கள். தமக்குத் தேவையான காவலை ஏற்படுத்திக்கொள்ள முடியாத வியாபாரிகள் சுங்க வரி செலுத்துவதோடு போலீஸ்காரர்களுக்கும் பணம் கொடுக்க வேண்டியதாயிருந்தது. சுங்கவரியும் இன்னாருக்குத்தான் செலுத்துவது என்ற நிர்ணயமில்லை. யார் யார் மற்றவர்மீது அதிகாரம்

செலுத்தக்கூடிய நிலைமையில் இருந்தார்களோ அவர்களெல்லாம் வியாபாரிகளிடமிருந்து வரி வசூலித்தார்கள். சில சமயங்களில் மாட்டுவண்டிகள் உபயோகிக்கப்பட்டபோதிலும், பெரும்பாலும் பொதிமாடுகளே சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு எடுத்துச் சென்றன. உள்நாட்டுத் தானிய வியாபாரம் பஞ்சாரர் என்ற வகுப்பினர் கையிலிருந்தது. அவர்கள் ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்தார்கள். அவர்களிடம் ஏராளமான மூலதனமும் சொந்தமான பொதிமாடுகளும் இருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் படைவீரர்களுக்கு உணவுப்பொருள் அனுப்புவதுதான் அவர்களது முக்கிய வேலையாக இருந்தது. அவர்களுடைய நூற்றுக்கணக்கான பொதிமாடுகள் வரிசை வரிசையாகச் செல்லும் காட்சி ஆங்கிலச் சைனியத்தின் வரலாற்றுக் குறிப்புகளில் பலவிடங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த நூற்றாண்டில் பிரிட்டிஷ் சைனியத்திற்கு இந்த வியாபாரிகள் தாம் உணவுப்பொருள்களை அனுப்பினார்கள்.

சாதாரணக் கைத்தொழில்களைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் பயிர்த்தொழில் சீர்கேடுற்றதாலும், வழிப்பறி மிகுந்திருந்ததாலும் கைத்தொழில்களும் க்ஷீணித்துப்போயிருக்கும் என்று யூகிக்கலாம். ஏற்றுமதிக்கான பொருள்களை உற்பத்தி செய்த தொழிலாளிகள் ஐரோப்பிய வியாபார ஸ்தலங்களுக்கே சென்று குடியேறத் தொடங்கினார்கள். அங்கு, அவர்களுக்குப் பாதுகாப்பும் அவர்களுடைய பொருள்களுக்குத் தேவையும் இருந்தன. ஆதலின் நாட்டின் அமைதியற்ற நிலைமையினால் உள்நாட்டு வியாபாரம் அழிந்த அளவுக்கு வெளிநாட்டு வியாபாரம் அழிந்து போகவில்லை. ஏற்றுமதியான பொருள்களில் பருத்தித் துணிகள் தாம் இன்னும் முக்கியமாக இருந்தன. ஆனால் அவைகளுக்கு ஐரோப்பிய மார்க்கட்டுகளில் இருந்த கிராக்கியில் மிகக் குறிப்பிடத்தக்க ஏற்றத்தாழ்வுகளிருந்தன. பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் ஏற்றுமதியான பருத்தித் துணிகளில் முக்கியமானது அச்சடிக்காத காலிக்கோத் துணிதான். அதை ஐரோப்பியர் தங்கள் வீடுகளில் பலவகையில் உபயோகித்தனர். ஆப்பிரிக்கரும் அமெரிக்கரும் அதை ஆடைகளுக்கு உபயோகித்தனர். ஐரோப்பியர்கள் சில அச்சடித்த துணிகளை அலங்கார வேலைகளுக்காக வாங்கினர், ஆனால், சில ஆண்டுகளுக்குப் பின்னர் மெல்லிய மஸ்லின் துணிக்கும், அச்சடித்த துணி ரகங்களுக்கும் இங்கிலாந்தில் மிகுந்த தேவை ஏற்பட்டது. ஆகவே அத்தகைய துணிகள் இந்தியாவிலிருந்து ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால் பருத்

தித் துணியில் அச்சடிக்கும் தொழில் இங்கிலாந்தில் அபிவிருத்தி யடைந்துகொண்டே வந்தது. அதனால் 1700-ஆம் ஆண்டில் அச்சடித்தவையும் சாயந் தோய்த்தவையும் ஆகிய இந்தியக் காலிக்கோவை யாரும் உபயோகப்படுத்தக் கூடாதென்று இங்கிலாந்தில் சட்டமியற்றப்பட்டது. இவ்வாறு இங்கிலாந்தில் சாயத் தொழிலுக்கும் அச்சுத் தொழிலுக்கும் காப்பு அளிக்கப்பட்டது. ஆனால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக இந்தியக் காலிக்கோவை இங்கிலாந்தில் இறக்குமதி செய்வதற்கு அனுமதி யிருந்தது. ஆகவே, ஆங்கில அரசாங்கத்தார் அனுசரித்த காப்பு முறைகளால் இந்தியப் பருத்தித்துணி ஏற்றுமதிக்கு அவ்வளவாகக் கெடுதல் ஏற்படவில்லையென்று பொதுவாகக் கூறலாம். ஆனால், இந்த நிலை நீடித்திருக்கவில்லை. இங்கிலாந்தில் யந்திரத்தறிகண்டுபிடிக்கப்பட்டதும் இந்தியக் கைத்தறி அதனுடன் போட்டி போட முடியவில்லை. அதனால், விரைவில் இந்தியர்கள் பருத்தித் துணி ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக இறக்குமதி செய்யவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டனர். பருத்தித்துணியையும், வெடியுப்பையும தவிர வங்காளத்துப் பட்டும் ஒரு முக்கிய வியாபாரச் சரக்காயிருந்தது. பட்டு நெசவுத் தொழிலையும் காப்பதற்கு இங்கிலாந்தில் சட்டமியற்றப்பட்டது. எனினும் துணி நெய்வதற்கு வேண்டிய பட்டு நூல் பெரும்பாலும் வங்காளத்திலிருந்துதான் சென்றது.

வியாபாரச் சரக்குகளை ஐரோப்பாவுக்கு எடுத்துச் செல்லுவதற்குப் பெரும்பாலும் ஆங்கிலக் கப்பல்களே உபயோகிக்கப்பட்டன. எனினும், ஆசிய நாடுகளை யடுத்த கடல்களில் இந்தியக் கப்பல்களின் போக்கு வரத்து அதிகமாயிருந்தது. இந்தியர்களுக்கே சொந்தமான கப்பல்கள் எவ்வளவு இருந்தன என்று நிச்சயமாகக் கூற முடியாது. நமக்குக் கிடைத்துள்ள ஆங்கில ஆதாரங்களில் "சுதேசக் கப்பல்கள்" என்ற தொடர் இந்தியாவிலிருந்த ஐரோப்பியர்க்கும், ஆர்மீனியர்க்கும், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் சொந்தமான எல்லாக் கப்பல்களையும் குறிப்பிடுவதற்கு உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நேரடியான கப்பல் போக்கு வரவு மறுபடியும் ஆரம்பிக்கப்பட்டதுதான் பதினெட்டாம் நூற்றாண்டில் குறிப்பிடத் தக்க விஷயம். ஆதியில் இருந்த இந்த நேரடியான போக்கு வரவு எவ்வாறு நின்றுபோயிற்று என்பதைப்பற்றி முன்னைய அதிகாரங்களிற் பார்த்தோம். பதினாறும் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியக் கப்பல்கள் இந்தியாவிலிருந்து நேராகக் காண்டன் நதியின் முகத்

துவாரத்திற்குச் சென்றன. ஆனால் இந்த வியாபாரத்தில் இந்தியர்கள் கலந்துகொள்ளுவதற்குப் போர்ச்சுக்கீசியர் அனுமதியளிக்கவில்லை. போர்ச்சுகீசியர் கடலாதிக்கம் அழிந்தபின் மறுபடியும் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நேரடியான கப்பல் போக்கு வரவு நின்று விட்டது. ஜாவா முதலிய இடங்களிலிருந்து டச்சுக் கப்பல்கள் சீனாவுக்குச் சென்று வர ஆரம்பித்தன. ஆனால் பதினே-ழாம் நூற்றாண்டின் இறுதியில் காண்டன் துறைமுகத்திற்கு ஆங்கிலக் கம்பனியின் கப்பல்கள் மாத்திரமின்றி இந்தியக் கப்பல்களும் சென்று வரத்தொடங்கின. இந்தியக் கப்பல்களில் எடுத்துச் செல்லப்பட்ட பொருள்களில் முக்கியமானது அபினி. அபினி இறக்குமதிக்குச் சீனச் சக்கரவர்த்தி தடை யுத்தரவு விதித்திருந்தான். எனினும், சீனாவில் அபினிக்கு நல்ல கிராக்கியிருந்தது.

அபினி வியாபாரத்தின் பெரும் பகுதி கல்கத்தாவில் குடி-யேறியிருந்த ஆர்மீனியர் கையிலிருந்தது. முதலில் ஆர்மீனியர்கள் வட இந்தியாவுக்கும் அதற்கு மேற்கிலுள்ள நாடுகளுக்கும் தரைமார்க்கமாக நடந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிற் சிலர் குஜராத்திலும் வேறு சிலர் கிழக்குக் கடற்கரையிலும் குடியேறினார்கள். டச்சுக்காரர் கிழக்குக் கடற்கரைக்கு வருமுன்னரே ஆர்மீனியர் அங்குக் குடியேறி வியாபாரம் செய்துகொண்டிருந்தனர். வளர்ந்துகொண்டே வந்த ஆங்கில வியாபாரஸ்தலமான கல்கத்தாவில் ஆர்மீனியர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்களுக்கு ஐரோப்பியருக்குச் சமமான அந்தஸ்து அளிக்கப்பட்டதால் கல்கத்தா வியாபாரத்தில் அவர்களுக்கு முக்கியமான பங்கு கிடைத்தது. அதுபோலவே பம்பாய் வளர்ச்சியடையத் தொடங்கியதும், குஜராத்தின் கடற்கரையில் வசித்துவந்த பார்சிகள் பம்பாயின் வியாபாரத்திற் பெரும் பங்கெடுத்துக்கொண்டனர். நாளடைவில் பம்பாயில் தோன்றிய கைத்தொழிலபிவிருத்தியிலும் பார்சிகளுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. அம்மாதிரியே மேற்குக் கடற்கரையில் குடியேறியிருந்த யூதர்களும் தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ளுவதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டது.

இந்திய வியாபாரத்தில் மேலே குறிப்பிட்ட இனத்தினரை விட இந்தியர்கள் தாம் அதிகமான பங்கெடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இந்து, முஸ்லிம் ஆகிய இருமதத்தையும் சேர்ந்தவர்கள். அவர்களுடைய கடைகள் இந்தியா முழுவதிலும் இருந்தன. அவர்கள் வியாபாரத்தின் எல்லாத் துறைகளிலும் ஈடு

பட்டு லாபமடைந்தனர். விற்றல், வாங்கல், பணத்தை வட்டிக்குக் கொடுத்தல், ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட சரக்குகளை இன்ஷியூர் செய்தல், முதலிய பல துறைகளிலும் இந்திய வியாபாரிகள் ஈடுபட்டார்கள். பதினேழாம் நூற்றாண்டில் எழுதிவைக்கப்பட்ட ஐரோப்பிய ஆதாரங்களின் மூலம் இந்திய வியாபாரிகளைப் பணப்பெருக்கத்திலும் திறமையிலும் லண்டனிலும் ஆம்ஸ்டர்டாமிலும் இருந்த பெரிய வியாபாரிகளுக்கு ஒப்பிடலாம் என்று அறிகிறோம். சூரத்திலிருந்த வீர்ஜி வோரா என்பவன் உலக முழுவதிலும் ஒப்பற்ற பணக்கார வியாபாரி என்று அந்தக்கால மக்கள் பேசிக்கொண்டார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியா இருந்த நிலைமையில் இத்தகைய வியாபாரிகளுக்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படக் கூடுமாதலால் அவற்களிற் பெரும்பான்மையோர் ஐரோப்பிய வியாபாரஸ்தலங்களிற் குடியேறித் தங்கள் வியாபாரத்தைச் செய்யத் தொடங்கினார்கள். எனினும் உள் நாட்டிலும் பல தொந்தரவுகளுக்கிடையிலும் வியாபாரம் நடந்துகொண்டுதான் இருந்தது.

பதினெட்டாம் நூற்றாண்டில்தான் அரசாங்கக் கடன் ஆரம்பமாயிற்று. முன்காலத்தில் அரசர்கள் ஏராளமான செல்வத்தைக் கஜானாவில் சேர்த்து வைத்துக்கொண்டு சண்டை முதலிய அவசரக் காரியங்களுக்கு உபயோகப்படுத்திக்கொள்வது வழக்கமாயிருந்தது. மொகலாயர் காலத்தில் சிம்மாசனத்திற்கு உரிமை கொண்டாடி அதற்காக ஏற்பட்ட போட்டியிற் கலந்துகொள்ளுவதற்குத் தேவையான பொருளை இளவரசர்கள் பாங்கர்களிடமிருந்து கட்டாயமான முறையிற் கடன் வாங்கினார்கள். ஆனால் அரசர் யாரும் அந்தமாதிரி செய்ததாகத் தெரியவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் விவசாயம் க்ஷீணித்ததால் அரசாங்கத்திற்கு வருவாய் குறைந்துபோயிற்று. அதனால் கஜானாக்களில் முன்போலப் பொருளில்லை. அரசர்கள் பிரஜைகளிடமிருந்து கடன் வாங்குவது வழக்கமாகிவிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் அவுத் நவாப் ஏராளமாகக் கடன் வாங்கியிருந்தான். சிந்தியாவுக்குக் கடன் கொடுத்திருந்தவர்கள் அதைத் திருப்பித் தருமாறு அவனைத் தொந்தரவு செய்தார்கள். அதற்குச் சிறிது காலத்திற்கு முன் ஆர்க்காட்டு நவாப் கடன் வாங்கியே தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்தான். இந்தியப் பாங்கர்களிடமிருந்து ஏராளமான பொருளை வியாபாரத்திற்காகக் கடன் வாங்குவது ஐரோப்பிய வியாபாரிகளின் வழக்க

மாயிருந்தது. ஆங்கிலக் கம்பெனியும் இவ்வாறு கடன் வாங்கியிருந்தது. தற்காலத்தில் வழக்கிலிருக்கும் அரசாங்கக் கடன் முறை ஏற்படாவிட்டாலும், பதினெட்டாம் நூற்றாண்டில் குடிகளிடமிருந்து அரசர்கள் கடன் வாங்கும் பழக்கம் ஏற்பட்டு விட்டது.

மேலே கூறியவற்றிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவின் நிலை கலைகளின் முன்னேற்றத்திற்கு ஏற்றதாக இல்லை என்று தெரியலாம். ஒரு சிலரைத் தவிர மற்ற மகாராஷ்டிர அரசர்களும் நவாபுகளும் கல்விக்கும் கலைக்கும் ஆதரவு அளித்ததாகத் தெரியவில்லை. மகாராஷ்டிரர்களுடைய தலை நகரங்களில் சில கோயில்கள் கட்டப்பட்டன. முகமதிய அரசர்களைப் பொறுத்தவரையில் லக்னோவைத் தவிர வேறிடங்களில் குறிப்பிடத்தக்க கலைச்சின்னம் ஒன்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றவில்லை. அவுத் நவாபுகளில் முற்பட்டவர்கள் கோக்ரா நதியின் கரையிலுள்ள பழைய இந்து நகரமாகிய அயோத்தியைத் தலைநகராக வைத்திருந்தார்கள். ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் லக்னோ அவுத் ராஜ்யத்தின் தலைநகராயிற்று. அந்தக் காலத்திலிருந்து லக்னோவில் அழகிய கட்டிடங்கள் கட்டப்பட்டன.

ஓவியம் முதலிய துறைகளிலும், அலங்காரப் பொருள்களைச் செய்யும் நுட்பமான தொழில்களிலும் ஈடுபட்டவர்களுக்குப் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆதரவு குறைந்தது. அக்காலத்துப் பணக்காரர்கள் ஐரோப்பியப் பொருள்களையே பெரிதும் விரும்பினார்கள். மொகலாய ஆட்சியில் கலைகளுக்கு ஆதரவளித்த செல்வர்கள் அழகிய பொருள்களை அவற்றின் கலைச் சிறப்புக்காகவே விரும்பினார்கள். அவை ஐரோப்பாவிலிருந்து வந்தவை அல்லது சீனாவிலிருந்து வந்தவை என்ற காரணத்திற்காக மாத்திரம் அவர்கள் விரும்பவில்லை. அதனால், இந்தியக் கலைஞர்கள் உற்சாகத்துடன் தங்கள் வேலையில் ஈடுபட்டார்கள். ஆனால், நாளடைவில் நிலைமை மாறிவிட்டது. மேல்நாட்டுப் பொருள்களின்மீது இந்தியர்களுக்கு மோகம் வளர்ந்தது. அவர்கள் மேல்நாட்டு ஓவியங்களையும் அலங்காரப் பொருள்களையும் மிகவும் விரும்பத் தொடங்கினார்கள். மட்டரகமாயினும் ஐரோப்பியப் பொருள்களுக்கு இந்தியாவில் உயர்ந்த மதிப்பு ஏற்பட்டது. இவ்வாறு கொஞ்சங் கொஞ்சமாக இந்தியக் கலைஞர்கள் ஆதரவிழந்தார்கள். இந்தியர்களின் கலையுணர்ச்சி மங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து வந்த எந்த

மட்டமான பொருளுக்கும் நல்ல கிராக்கி ஏற்பட்டது. ஆனால் இந்தியக்கலைஞர்கள் செய்த மிக உயர்ந்த பொருள்களுக்கும் கிராக்கியில்லாமற் போய்விட்டது.

அவுரங்கஜீப் காலத்தில் ஆதரவிழந்த ஓவியக்கலை நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாக க்ஷீணதசையடையத் தொடங்கியது. இராஜபுதனத்திலும் வேறு சில இடங்களிலும் தவிர மற்ற இடங்களில் ஓவியக்கலையின் பண்டைய முறைகளைக் கையாளுவார் இந்தியாவில் யாரும் இல்லாமற் போயினர். இலக்கியத் துறையிலும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. சம்ஸ்கிருதக் கல்வியும் ஆராய்ச்சியும் நடைபெற்றுக் கொண்டுதான் வந்தன. எனினும், குறிப்பிடத்தக்க நூல் எதுவும் எழுதப்படவில்லை. வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வழங்கும் தற்கால மொழிகளில் எழுதப்பட்ட நூல்களிற் பெரும்பாலானவை பக்திப் பாசுரங்களாகவே இருந்தன. ஆனால் பண்டைய பக்தி நூல்களின் உயர்வு இந்த நூல்களில் இல்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இலக்கியத்தைப்பற்றிக் கூறும்போது இரண்டு விஷயங்களைக் குறிப்பிடுதல் அவசியம். முதலாவது அக்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் ஏறக்குறைய எல்லாமே செய்யுள் நூல்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் உரை நடை நூல்கள் எழுதப்பட்டன. இரண்டாவது, அந்த நூல்கள் அச்சடிக்கப்படவில்லை. பதினாறும் நூற்றாண்டிலிருந்தே கிறித்தவப் பாதிரிகள் அச்சு யந்திரங்களை இந்தியாவில் உபயோகிக்கத் தொடங்கினார்கள் எனினும் அவைகள் பொது உபயோகத்துக்கு வரவில்லை. பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் நிலையாக ஸ்தாபிக்கப் பட்ட பின்னர்த்தான் அச்சுத்தொழில் இந்தியாவில் பரவத் தொடங்கியது.

வெறும்பேச்சு மொழியாக இருந்த இந்துஸ்தானி நூல்மொழியானது பதினெட்டாம் நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க விஷயம். துருக்கியர் ஆட்சிக்காலத்தில் இந்துஸ்தானி தோன்றிய விதத்தைப்பற்றி முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறியிருக்கிறோம். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐதராபாத்திலிருந்த சில எழுத்தாளர்கள் இந்துஸ்தானியில் நூல்களை எழுதத் தொடங்கினார்கள். ஒரு நூற்றாண்டுக்குள் அது நூல் மொழியாக இருப்பதற்கு வேண்டிய தகுதிகளைப்பெற்று விட்டது. பேச்சு வழக்கிலிருந்த இந்துஸ்தானியைக் காட்டிலும் எழுத்து வழக்கிலிருந்த இந்துஸ்தானியில் பாரசிகச் சொற்களும் மரபுகளும் அதிகமாக இருந்தன. எழுத்து வழக்கிலிருந்த இந்துஸ்

தானி உருது என்று வழங்கத் தொடங்கியது. பதினெட்டாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் — முக்கியமாக டில்லியிலும் லக்னோவிலும் — உருது பிரபலமடைந்தது. அக்காலத்தில் பல செய்யுள் நூல்கள் தோன்றின. அவற்றிற் சில மிக உயர்ந்த நூல்கள். ஆனால் அப்போது உரைநடை நூல் ஒன்றும் எழுதப் படவில்லை.

மதத்துறையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி எதுவும் ஏற்பட வில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில் இஸ்லாம் மதத்தில் இரு வேறு முரண்பட்ட தன்மைகள் காணப்படுகின்றன. முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியால் தங்கள் மதத்திற்கும் கலாசாரத் திற்கும் ஆபத்து ஏற்படும் என்று அஞ்சிய முஸ்லிம்கள் தங்-களுக்குள் ஒற்றுமையை வளர்க்க விரும்பினார்கள். அதே சமயத் தில் இனவேற்றுமையாலும், கோட்பாட்டு வேற்றுமையாலும் தோன்றிய துவேஷம் முஸ்லிம் இராஜ்யங்களில் வளர்ந்து கொண்டே வந்ததால் முஸ்லிம்களின் ஒற்றுமை குலையத்தொடங் கியது. இஸ்லாம் மதம் இந்தியாவில் வகித்து வந்த உன்னத நிலை போய்விட்டது. அதன் உயர்வுச் சின்னமான ஜஸியாவரி வழக் கற்றுப்போயிற்று. இஸ்லாம் மதத்தின் எதிர்கால நிலை எப்படி யிருக்குமோ என்று பக்திமான்களான முஸ்லீம்கள் அஞ்சினார்கள்.

இந்துக்களின் அரசியல் ஆதிக்கம் மறுபடியும் ஸ்தாபிக்கப் பட்டபோதிலும் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்துமதத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்தியாவின் வடக் கிலும் கிழக்கிலும் பல பகுதிகளில் தாந்திரிக மதம் மக்களிடையே அதிகமாகப் பரவத் தொடங்கியதுதான் பதினெட்டாம் நூற் றாண்டு இந்துமதத்தில் குறிப்பிடத்தக்க விஷயம். விஷ்ணுவின் அவதாரங்களில் ஏதாவதொன்றை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறையை வட இந்தியப் பொதுமக்கள் பெரும் பாலும் பின்பற்றினார்கள் என்று முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறி னோம். அத்துடன் "சக்தி" வழிபாடும் மக்களிடையே பரவத் தொடங்கியது. "சக்தியை" வழிபடு கடவுளின் மனைவியாகக் கருதத் தொடங்கினார்கள். சக்தி வழிபாட்டு முறைகளெல் லாம் "தாந்திரிகம்" என்ற பெயரால் வழங்கத் தொடங்கின. சக்தி உருவத்தில் இறைவன் மானிடர்களின் தாயாக விளங்கு கின்றான் என்ற தத்துவம் புதியதன்று. ஆனால், பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய தாந்திரிக முறைகளிற் பெரும் பாலானவை மந்திர தந்திரங்களை அடிப்படையாகக் கொண்-டவை. ஆண் பெண் புணர்ச்சியை யொட்டிய கருத்துக்கள்

சிலவும் தாந்திரிக வழிபாட்டில் இடம்பெற்றன. அதுவுமன்றி எல்லையற்ற ஆற்றலுடைய சக்தி மக்களுக்குக் கொடுமையும் துன்பமும் செய்யக்கூடிய துஷ்ட தேவதை என்ற கொள்கையும் தாந்திரிக வழிபாட்டில் இடம் பெற்றது. தாந்திரிக வழிபாட்டின் முக்கியமான நூல்கள் சில பதினெட்டாம் நூற்றுண்டில் தான் தொகுக்கப்பட்டன.

முடிவாக இந்தியாவில் வசித்துவந்த ஐரோப்பியர்களின் சமூக வாழ்க்கையைப்பற்றிச் சிறிது கூறுவது அவசியம். ஐரோப்பியர்கள் வியாபாரத்தை மாத்திரம் கவனித்துவந்த காலத்தில் சௌகரியத்தை உத்தேசித்து ஒருசில இந்திய முறைகளையும் அவர்கள் கைக்கொண்டார்கள் எனினும், தங்கள் நாட்டுமுறையி லேயே தங்கள் வாழ்க்கையை நடத்திவந்தார்கள். ஒரு சில இந்திய உணவுவகைகளை அவர்கள் உண்டார்கள் எனினும், அவர் களுடைய உணவுமுறை பெரும்பாலும் ஐரோப்பிய முறையையே தழுவியிருந்தது. வீட்டில் சௌகரியத்துக்காக இந்திய உடுப்பு முறையை அனுசரித்தாலும் வெளியே செல்லும்போது அவர்கள் ஐரோப்பிய உடைகளையே தரித்தார்கள். ஐரோப்பியப் பெண் கள் அதிகமாக இந்தியாவுக்கு வராததால் ஐரோப்பிய வியாபாரி களிற் சிலர் இந்தியப்பெண்களுடன் ஏறக்குறைய நிரந்தரமான வாழ்க்கை நடத்தத் தொடங்கிஞர்கள். சில சமயங்களில் அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களுடன் கூடி வாழத் தொடங் கிஞர்கள். அதனுல் அவர்களுடைய அன்ருட வாழ்க்கையில் இந்தியப் பழக்க வழக்கங்கள் நுழையத் தொடங்கின. மேலும் அவர்களுடைய சந்ததியார்கள் ஈரினக்கால் வழிகளாதலால் அத்-தகைய மக்களின் தன்மைகளும் அவற்ருல் வழக்கமாக ஏற்படும் பிரச்சினைகளும் இந்தியாவில் தோன்றின.

மொத்த வியாபாரத்தில் ஈடுபட்ட பெரிய இந்திய வியாபாரி களுடன் ஐரோப்பிய வியாபாரிகள் வியாபாரத்துறையில் நெருங்-கிய தொடர்புடையவர்களாயிருந்தார்கள். ஆனுல் இந்துமதத் தில் இருந்த ஜாதி வித்தியாசத்தால் இந்து வியாபாரிகளுக்கும் ஐரோப்பிய வியாபாரிகளுக்கும் சமூகத் துறையில் நெருங்கிய தொடர்பு ஏற்படவில்லை. ஐரோப்பியரோடு சமபந்தி போஜனம் செய்ய இந்துமதம் இடங்கொடுக்கவில்லை. ஆனுல் முஸ்லிம் களின் விஷயத்தில் இத்தகைய தடை ஒன்றும் இல்லை. முகமதிய வியாபாரிகளும் உத்தியோகஸ்தர்களும் ஐரோப்பியர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய விருந்துகளிலும் விளையாட்டு களிலும் கலந்து கொண்டார்கள். அதனுல் அவர்கள் சிலருக்

குள் மிக நெருங்கிய நட்பும் ஏற்பட்டது. ஆனால் முஸ்லிம் உத்தியோகஸ்தர்கள் ஐரோப்பியர்களோடு பழகும்போது பொதுவாகத் தங்கள் பதவிக்குத் தகுந்த கௌரவத்தைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்று கூறலாம்.

ஐரோப்பிய வியாபாரஸ்தலங்களில் போர்வீரர்களை வைக்கும் பழக்கம் ஏற்பட்டவுடன் சில தீமைகள் தோன்றின. வியாபாரிகள் உயர்ந்த 'குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும் ஓரளவு கல்வி யறிவுடையவர்களாகவுமிருந்தார்கள். ஆனால் ஐரோப்பியப் போர்வீரர்கள் பெரும்பாலும் சமூகத்தின் கீழ்ப்படிகளைச் சேர்ந்தவர்கள். அவர்களிடம் கட்டுப்பாடும் ஒழுங்கும் காணப்படுவது அருமை. சமாதான காலங்களில் அவர்கள் தங்களிஷ்டம்போல் காலத்தைக் கழித்தார்கள். அவர்கள் சாராயக் கடைகளிலும் விபசார விடுதிகளிலுந்தான் இந்தியர்களைச் சந்தித்தார்கள். அதனால், அவர்கள் இந்தியமக்களின் கெட்ட குணங்களைத்தான் கண்டார்கள். அதுபோலவே அவர்களோடு பழகிய இந்தியர்களும் ஐரோப்பிய மக்களின் கெட்ட குணங்களைத்தான் கண்டார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் இந்தியர்களுக்கும் ஐரோப்பிர்களுக்கும் ஏற்பட்டிருந்த சமூகத்தொடர்பில் ஒரு மாறுதல் ஏற்படவிருந்தது. ஆளும் வகுப்பினர் என்ற நிலை அந்தச் சமயத்தில் முஸ்லிம்களின் கையிலிருந்து ஆங்கிலேயர் கைக்கு மாறவிருந்தது. அந்தச் சமயத்திலிருந்து ஆங்கிலேயரின் பழக்கவழக்கங்களும் செல்வாக்கும் இரண்டு வழிகளின்மூலம் இந்தியாவிற்கு வரத்தொடங்கின. முதலாவதாக ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியின் வியாபாரிகள் அரசியல் நிர்வாகஸ்தர்களாக மாறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய உயர்ந்த நிலையை உணர்ந்திருந்ததுபோலவே தங்களுக்குச் சில முக்கிய கடமைகளும் உண்டு என்பதை உணர்ந்து இந்தியர்களோடு பழகினார்கள். இரண்டாவதாக ஆங்கிலப் போர்வீரர்களும் கம்பனியின் கீழ்த்தரச் சிப்பந்திகளும் இந்தியர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்புடையவர்களாக இருந்தார்களே தவிர, அத்தகைய தகுதியால் தங்களுக்கிருந்த கடமைகளைப் பெரும்பாலும் மறந்தே இந்தியர்களோடு பழகினார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த இரு வகுப்புக்களின் தன்மைகளும் இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்க்கும் ஏற்பட்ட சமூகத் தொடர்பில் பிரதிபலிக்கத் தொடங்கின.

அதிகாரம்—36

வாரன் ஹேஸ்டிங்ஸ்—அரசியல் நிர்வாகி

வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியின் உத்தியோகத்திற் சேர்ந்து பதினைந்து ஆண்டுகள் வங்காளத்தில் வேலைபார்த்த பின்னர் கம்பனியின் சென்னைக் கவுன்ஸிலில் அங்கத்தினனானன். அதன்பின் 1772-ஆம் ஆண்டில் அவன் வங்காளக் கவர்னராக நியமிக்கப்பட்டான். பின்னர்ப் பிரிட்டிஷ் பார்லிமெண்டால் 1773-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி அவன் கவர்னர் ஜெனரலானான். கவர்னர் ஜெனரலுக்குச் சில விஷயங்களில் சென்னை கவர்னரும் பம்பாய்க் கவர்னரும் கீழ்ப்பட்டவர்கள். வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் பதவியை 1785-ஆம் ஆண்டுவரையில் வகித்தான். கவர்னராக இருந்தபோது வாரன் ஹேஸ்டிங்ஸுக்கு அதிகமான எதிர்ப்பு ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் கவர்னர் ஜெனரலான பின்னர் அவனுக்குப் பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. கவர்னர் ஜெனரலின் கவுன்ஸிலில் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் வாரன் ஹேஸ்டிங்ஸின் பரம விரோதியான பிலிப் பிரான்ஸிஸ் என்பவனுடன் சேர்ந்துகொண்டு அவனைக் கடுமையாக எதிர்த்-தார்களாதலால் முதல் இரண்டாண்டுகளில் வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒன்றுமே செய்யமுடியாத நிலையிலிருந்தான். ஆனால் 1776-ஆம் ஆண்டுக்குப்பின்னர் நிலைமை மாறிற்று. சில சமயங்களில் கவுன்ஸிலின் பெரும்பான்மையான அங்கத்தினரின் ஆதரவு பெற்று நிர்வாகத்தை நடத்தினான். கவுன்ஸிலின் அங்கத்தினரில் ஒரு பாதிப்பேர் தன்னை எதிர்க்கவும் மற்ற பாதிப்பேர் தன்னை ஆதரிக்கவும் செய்த சமயங்களில் வாரன் ஹேஸ்டிங்ஸ் தன்னுடைய பிரத்தியேக ஓட்டை உபயோகப்படுத்தித் தன்னுடைய நிர்வாகத்திற்கு ஆதரவு தேடிக்கொண்டான்.

ஒழுங்குமுறைச் சட்டம் எவ்வாறு ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது அவசியம். பதினேழாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் அரசர்கள் அளித்த உரிமைத் திருமுகங்களால் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனிச் சட்டப்படி நடைபெற்ற ஸ்தாபனம் என்ற நிலையையும், கீழ்நாட்டு வாணிபத்தில் தனி உரிமையையும் பெற்றது. ஆனால் 1688-ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் அரசியலில் ஏற்பட்ட புரட்சியால் கிழக்கிந்தியக் கம்பனியைப் பொறுத்த அதிகாரமெல்லாம் அரசரிடமிருந்து பார்லி

மெண்டுக்கு மாறியது. அதன்பின் கம்பனியின் கீழ்நாட்டு வியாபாரத் தனியுரிமைப் பார்லிமெண்டு அவ்வப்போது இயற்றிய சட்டங்களால் நீடிக்கப்பட்டது. கிளைவின் வெற்றிகளால் கம்பனியின் வியாபாரத்திலும் அரசியலதிகாரத்திலும் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் இந்திய விவகாரங்கள் கம்பனியின் தனிப் பொறுப்பில் விடத்தக்கவையல்ல என்பதையுணர்ந்தார்கள். ஆதலால், பார்லிமெண்டு கம்பனியின் விவகாரங்களில் தலையிட்டு அவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் ஒழுங்குமுறைச் சட்டத்தை இயற்றியது. ஆனால், ஒழுங்குமுறைச் சட்டம் ஒரு தற்காலிகமான ஏற்பாடுதான். சில முக்கியமான பிரச்சினைகளில் முடிவான ஏற்பாடு செய்யப்படவில்லை. கம்பனியின் அதிகாரத்திற்குப் புறம்பான உயர்நீதி மன்றம் ஒன்று கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று ஒழுங்குமுறைச் சட்டத்திற் கூறப்பட்டிருந்தது, ஆனால், அந்த நீதிமன்றத்தின் அதிகாரம் எத்தகையது என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. அதனால் பல தொல்லைகள் ஏற்பட்டன. உதாரணமாக, இந்தியாவிலிருந்த பிரிட்டிஷ் பிரஜைகளின் வழக்குகளை விசாரணை செய்வதற்கு அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஆனல் பிரிட்டிஷ் பிரஜைகள் யார் என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. அந்த நீதிமன்றத்தின் ஆணைக்குட்பட்ட பிரதேசத்திலிருந்த இந்தியர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளா அல்லரா என்பது கூறபபடவில்லை. அதாவது கம்பனியால் ஜெயிக்கப்பட்ட பிரதேசங்களெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்கள் தாமா அல்லவா என்ற முடிவான தீர்மானத்தை ஒழுங்குமுறைச் சட்டத்தில் நாம் காண்பதில்லை. இந்த விஷயத்தில் முடிவான தீர்மானத்தைக் கூறும் பொறுப்பை பிரிட்டிஷ் பார்லிமெண்டு விரைவில் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற உண்மையை அந்த நூற்றுண்டில் கம்பனியின் விவகாரங்கள் சம்பந்தமாகப் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட எல்லாச் சட்டங்களும் தெளிவாக விளக்குகின்றன. கடைசியாக 1813-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட சட்டத்தில்தான் இந்த விஷயத்தில் முடிவான தீர்மானம் காணப்படுகிறது. அந்தச் சட்டத்தின்படி இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியால் ஜெயிக்கப்பட்ட எல்லாப் பிரதேசங்களும் பிரிட்டிஷ் அரசரின் ஆட்சிக்குட்பட்டவை என்ற தீர்மானம் தெளிவாகக் கூறப்படுகிறது. அந்த நிலையை ஒத்துக்கொண்டு அதற்கடுத்த ஆண்டில் பிரான்சும், ஹாலந்தும் இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்துகொண்டன.

வங்காளத்தில் அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்தும் வேலை வாரன் ஹேஸ்டிங்ஸ் செய்யவேண்டிய முதன்மையான வேலையா யிருந்தது. கம்பனிதான் அந்த வேலையை வாரன் ஹேஸ்டிங் ஸுக்களித்ததே தவிரப் பார்லிமெண்டன்று. அந்த வேலையில் வாரன் ஹேஸ்டிங்ஸ் தனக்கிஷ்டமான முறைகளைக் கையாள லாம் எனினும் ஒரு முக்கியமான நிபந்தனை யிருந்தது. அதாவது, அப்போது கம்பனியின் உத்தியோகத்திலிருந்த ஆட்களை வைத்துக்கொண்டே வாரன் ஹேஸ்டிங்ஸ் அரசியல் நிர்வாகத்தை அமைக்கவேண்டுமே தவிர அவர்களைத் தள்ளிவிட்டுப் புதிய உத்தியோகஸ்தர்களை நியமிக்கக்கூடாது. அப்போதிருந்த உத்தி யோகஸ்தர்கள் அரசியல் நிர்வாகத்திற்கு அவ்வளவு தகுதி யானவர்கள் என்று கூற முடியாது. கம்பனியின் ஆரம்ப நாட்க ளில் அந்தந்த வேலைக்குத் தகுதியான ஆட்களைக் கம்பனி நிர்வா கஸ்தர்கள் தேர்ந்தெடுத்து, அவர்களைக் குறிப்பிட்ட காலங் களுக்கு உத்தியோகத்தில் வைத்திருப்பது வழக்கமாயிருந்தது. குறிப்பிட்டகாலம் முடிந்ததும் அதே உத்தியோகஸ்தர்களை மறு படியும் குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் வழக்கம் விரைவில் ஏற்பட்டது. இவ்வாறு அனுபவம் பெற்ற வியாபாரிகள் பலர் கம்பனியின் உத்தியோகத்தில் இருந்தார்கள். இளமையிலேயே உத்தியோகஸ்தர்களைக் கீழ்ப்படிகளில் நிய மித்து, நாளடைவில் அவர்களுடைய அனுபவத்திற்கேற்றவாறு அவர்களைப் படிப்படியாக உயர்த்தும் வழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் கம்பனியின் உத்தியோகத்தை ஏராளமான மக்கள் விரும்பினார்களாதலால் நிர்வாகஸ்தர்கள் தங்களுக்கிஷ்டமான வர்களுக்கு உத்தியோகம் கொடுக்கும்முறை ஏற்பட்டது. அத ளுல், தகுதிக்குப்பதிலாக நிர்வாகஸ்தர்களின் விருப்பந்தான் உத்தியோக நியமனத்திற்கு அடிப்படையாயிற்று. வரவு செல வுக் கணக்கு எழுதும் முறை தெரிந்த ஒருவனுக்கு ஏதாவதொரு நிர்வாகஸ்தர் தயவிருந்தால் உத்தியோகம் கிடைத்துவிடும். மற்ற படி அவனுக்குத் தகுதியுண்டா இல்லையா என்பதைப் பற்றிக் கவலையில்லை.

கம்பனியின் உத்தியோகஸ்தர்களுக்கு மிகக் குறைந்த சம்ப ளம் கொடுக்கப்பட்டது. வேலையிலிருந்து நின்றபிறகு பென்ஷ னும் கிடையாது. இந்தியச் சூழ்நிலை ஆங்கிலேயர் வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை. இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர் பல அசௌகரியங்களுக்கிலக்கானார்கள். இந்தியாவில் அவர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களால் பலர் இறந்தார்கள். எனினும்

கம்பனியின் உத்தியோகம் மிகப் பலரால் விரும்பப்பட்டது. அதற்குக் காரணம் சொந்த வியாபாரத்தால் வெகுவிரைவில் பெரும்பொருள் தேடமுடியும் என்ற ஒரே எண்ணந்தான். வியாபாரத்திற்கு வேண்டிய மூலதனத்தை இங்கிலாந்திலிருந்த தங்கள் நண்பர்களிடமிருந்தும் இந்திய வட்டிக்கடைக்காரர்களிடமிருந்தும் கம்பனி உத்தியோகஸ்தர்கள் பெற்றார்கள். ஆரம்பத்தில் உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்வதைக் கம்பனி நிர்வாகஸ்தர்கள் தடுக்க முயன்றார்கள், அது முடியாமற் போகவே உத்தியோகஸ்தர்கள் சொந்த வியாபாரம் செய்யலாமென்று கம்பனியே அனுமதி தந்துவிட்டது. இத்தகைய சொந்த வியாபார விஷயத்தில் கம்பனி உத்தியோகஸ்தர்கள் சில நிபந்தனைகளின்படி நடக்கவேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இந்த நிபந்தனைகளைக் கம்பனி உத்தியோகஸ்தர்கள் அடிக்கடி மீறி நடந்தார்கள், ஆகவே, கம்பனி உத்தியோகஸ்தன் ஒவ்வொருவனும் கம்பனி வியாபாரத்தை நடத்தியதோடு, தன் சொந்த வியாபாரத்தையும் நடத்திவந்தான். அதனால், அடிக்கடி அவனுடைய சொந்த நலன் கம்பனியின் நலனைப் பாதித்தது.

பொருள் தேடுவதற்கு இதைத் தவிர வேறு வழிகளுமிருந்தன. வரி செலுத்தாமல் வியாபாரப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துக்கொண்டு போவதற்குக் கம்பனி உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அனுமதிச் சீட்டுகளை அவர்கள் இந்திய வியாபாரிகளுக்கு விற்றுப் பணம் சம்பாதித்தார்கள் என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். மேலும் கம்பனி உத்தியோகஸ்தர்கள் இந்தியர்களிடமிருந்து லஞ்சத்தின் மூலமாகவும், பரிசுகளின் மூலமாகவும் அதிகமான பணம் சம்பாதித்தார்கள் என்றும் கூறியிருக்கிறோம். நியாயமற்ற முறைகளில் பணம் தேடும் பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தத்தீய பழக்கம் உச்சஸ்தானத்தை அடைந்துவிட்டது. கிளைவும் அவனுடைய முக்கியமான உத்தியோகஸ்தர்களும் இந்த முறைகளால் எவ்வளவு பணம் சம்பாதித்தார்கள் என்பதும் முன்னரே கூறப்பட்டிருக்கிறது. இத்தகைய பழக்கங்களில் கைதேர்ந்த உத்தியோகஸ்தர்களை வைத்துக்கொண்டு ஒரு நல்ல அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்துவது கல்லைக் கனியவைப்பது போன்ற அசாத்தியமான காரியமாகத் தோன்றும். ஆனால் அதே உத்தியோகஸ்தர்கள் தங்கள் பழைய முறைகளைக் கைவிட்டுச் சிறந்த அரசியல் நிர்வாக உத்தியோகஸ்தர்களாக மாறியதுதான்

அந்தக்காலத்து வரலாற்றில் மிகக் குறிப்பிடத் தக்க விஷயம். விரைவில் பணக்காரர் ஆகவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் இந்தியாவுக்கு வந்த இளைஞர்கள்கூடத் தங்கள் சுய நலத்தை மறந்து பொதுநலத்துக்காகப் பாடுபட முனைந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமான விஷயம்.

ஒப்பந்த சிவில் சர்விஸ் என்று வழங்கும் உத்தியோக வர்க்கம் ஏற்படுவதற்கு வெகுநாள் ஆயிற்று. கிளைவ் இரண்டாம்தரம் வங்காளக் கவர்னராக இருந்தபோது கம்பனி உத்தியோகஸ்தர்கள் இந்தியர்களிடமிருந்து பரிசுகள் வாங்கக்கூடாதென்ற கம்பனியின் உத்தரவை அமுலுக்குக் கொண்டுவந்தான். ஆனால் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு அவன் செய்த முயற்சி பயனளிக்கவில்லை. அனுமதிச் சீட்டை விற்கும் பழக்கத்தை ஹேஸ்டிங்ஸ் நிறுத்தி, வியாபாரஸ்தாபனத்திலிருந்து வேறாகப் பிரிக்கப்பட்ட அரசியல் நிர்வாகத்திற்கு அடி கோலினான். அவனுக்குப்பின் வந்த காரன்வாலிஸ் அந்த அடிப்படையின் மீது சிவில் சர்விஸ் என்ற கட்டிடத்தைக் கட்டினான். சிவில் சர்விஸ் உத்தியோகத்திற் சேர்ந்த ஆங்கிலேயர்கள் ஆரம்பத்தில் கம்பனி நிர்வாகஸ்தர்களின் தயவால் உத்தியோகம் பெற்றார்கள் என்பது உண்மையெனினும், அவர்கள் உத்தியோகத்தை ஏற்ற பின் பொது நன்மைக்காகப் பாடுபடவேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார்கள். அவர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட்டது. அதைத் தவிர வேறு வழிகளில் அவர்கள் பொருள் சேர்க்க முடியாது. தங்கள் திறமையால் மேலும் மேலும் உத்தியோக உயர்வு அடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் அவர்கள் பாடுபட்டார்கள்.

ஹேஸ்டிங்ஸ மூன்று முக்கிய வேலைகளைக் கவனிக்கவேண்டியிருந்தது. முதலாவதாக உள்நாட்டு வியாபாரத்தின்மீது விதித்திருந்த வரிகளை நீக்குதல். இரண்டாவதாக நிலவரி வசூல் முறையைச் சீர்திருத்தல். மூன்றாவதாக நீதிமன்றங்களை நிறுவுதல். பண்டைய இந்து அரசர்கள் வியாபாரத்தின்மீதும் கைத்தொழில்களின் மீதும் பல்வகை வரிகளை விதித்து வசூலித்தார்கள் என்றும், அக்பர் அவைகளையெல்லாம் ஒரேயடியாக நீக்கினான் என்றும் படித்தோம். ஆனால், அக்பருக்குப் பின் அவ்வரிகள் மறுபடியும் வழக்கத்திற்கு வந்துவிட்டன என்பது அவுரங்கஜீப் அந்த வரிகளை மீண்டும் நீக்கினான் என்பதன் மூலம் அறிகிறோம். பதினெட்டாம் நூற்றாண்டின் குழப்பமான நிலையில் அந்தவரிகள் மறுபடியும் வழக்கத்திற்கு வந்துவிட்டன. அரசர்கள் மாத்திர

மின்றி ஆங்காங்கிருந்த தலைவர்களும் நிலச்சுவான்தார்களும் ஆங்காங்குச் சுங்கச் சாவடிகளை ஏற்படுத்திக்கொண்டு அந்த வழியாகச்சென்ற எல்லாப் பொருள்கள்மீதும் வரிவிதித்து வசூலித்தார்கள். இவ்வாறு பல இடங்களில் வரி செலுத்த வேண்டியிருந்ததால்தான் இந்திய வியாபாரிகள் பெரும் பொருள் கொடுத்து ஆங்கிலக் கம்பனி வியாபாரிகளிடமிருந்து அனுமதிச் சீட்டுகளை வாங்கினார்கள். கம்பனி நிர்வாகஸ்தர்களின் உத்தரவு பெற்று வாரன் ஹேஸ்டிங்ஸ் சிறிய சுங்கச் சாவடிகளை யெல்லாம் நீக்கிவிட்டு, முக்கியமான ஐந்திடங்களிலிருந்த சுங்கச் சாவடிகளில் மிகக் குறைந்த வரி வசூலிக்க ஏற்பாடு செய்து, வங்காளத்திலும் பீகாரிலும் உள் நாட்டு வியாபாரம் தாராளமாக நடப்பதற்கு ஏற்பாடு செய்தான்.

மக்களுக்கு நன்மை தரக்கூடிய இந்தச் சீர்திருத்தத்தை ஹேஸ்டிங்ஸ் எளிதிற் செய்து முடித்தான். ஆனால் நிலவரி முறையைச் சீர்திருத்துவது அவ்வளவு எளிய காரியமாக இல்லை. வங்காளத்தில் நிலவரியை வசூலிக்கும் உரிமை கம்பனியைச் சேர்ந்தது. ஆகவே, குடியானவர்கள் செலுத்தவேண்டிய வரியை நிர்ணயிப்பதும் வசூலிப்பதும் கம்பனி உத்தியோகஸ்தர்கள் செய்யவேண்டிய முக்கியக் கடமையாயிற்று. ஆனால் அதைப் பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. அந்த விஷயத்தில் அவர்களுக்கு அப்போது வழக்கிலிருந்த முறைகளைப்பற்றியேனும், முன்னைய முறைகளைப்பற்றியேனும் எடுத்துச் சொல்லுவதற்கு ஒருவரும் முன் வரவில்லை. ஏற்கெனவே யிருந்த வரி வசூல் அமைப்பையும் அதிகாரிகளையும் க்ளைவ் அப்படியே உபயோகப் படுத்திக்கொண்டான், அதனால், வரி வசூல் விஷயத்தை நன்றாகத் தெரிந்திருந்த இந்திய உத்தியோகஸ்தர்கள் அவ்விஷயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத ஆங்கில உத்தியோகஸ்தர்களின் கீழ் வேலைபார்க்கும் நிலை ஏற்பட்டது. அந்நிலை திருப்திகரமாக இருக்க முடியாது. இந்திய உத்தியோகஸ்தர்கள் ஆங்கில உத்தியோகஸ்தர்களை ஏமாற்றிக் குடியானவர்களிடமிருந்து ஏராளமான பணத்தை வசூலித்துத் தாங்கள் பணக்காரராவதில் முனைந்தார்கள். ஆகவே 1772-ஆம் ஆண்டில் கம்பனியே வரிவசூல் செய்வதற்கு வேண்டிய அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளுவது என்ற முடிவு செய்யப்பட்டது.

அந்தச் சமயத்தில் வங்காளத்திலிருந்த வரிவசூல் முறையைப் பின் வருமாறு சுருக்கிக் கூறலாம். முதலாவது, நிலத்தை உழுது பயிரிட்ட குடியானவர்கள் தங்கள் நிலங்களின் விளைவில்

ஒரு குறிப்பிட்ட பகுதியின் கிரயத்துக்குச்சரியான பணத்தை அரசாங்கத்திற்குச் செலுத்தினார்கள். ஆனால் அந்தத் தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பதை ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. இரண்டாவது, குடியானவர்கள் நேராக அரசாங்கத்திற்கு வரி செலுத்தவில்லை. அவர்களிடமிருந்து வசூல் செய்த தொகையில ஜமீன்தார்கள் ஒரு பகுதியை அரசாங்கக் கஜானாவுக்கு அனுப்பிவிட்டு, மீதியைத் தாங்களே வைத்துக்கொண்டார்கள். ஆனால், ஜமீன்தார்கள் குடியானவர்களிடமிருந்து எவ்வளவு பணத்தை வசூலித்தார்கள், அவர்கள் அரசாங்கத்திற்கு நியாயப்படி செலுத்தவேண்டிய தொகை எவ்வளவு, அவர்களுக்கும் குடியானவர்களுக்கும் இருந்த தொடர்பு எத்தகையது என்பன போன்ற விஷயங்கள் ஆங்கிலேயர்களுக்குத் தெரியா.

வங்காளத்தின் நிலவரி வரலாறு சிக்கலானது. சில விஷயங்களைப்பற்றிய உண்மையான விவரங்கள் இன்னும் தெரியவில்லை. எனினும், தற்போது கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டு பின்வரும் விஷயங்களை ஏறக்குறைய நிச்சயமாக அறிகிறோம். அக்பர் வங்காளத்தை ஜெயித்து மொகலாய சாம்ராஜ்யத்தோடு சேர்த்த காலத்தில் அங்குப் பல தலைவர்கள் இருந்தார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு நிலவரி என்ற முறையில் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்திவிட்டுக் குடியானவர்களிடம் தங்களிஷ்டம்போல் வசூல் செய்துவந்தார்கள். பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்தத் தலைவர்களிற் பலர் நீக்கப்பட்டார்கள். அவர்களுக்குப் பதிலாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் வரிவசூல் செய்து தாங்கள் வசூலித்த ஒவ்வொரு பைசாவுக்கும் அரசாங்க நிலவரிமந்திரிக்குக் கணக்குக் கொடுத்தார்கள். நாளடைவில் இந்த வரிவசூல் உத்தியோகஸ்தர்கள் தாங்கள் வசூலித்த ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்குக் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட்டாற் போதும் என்ற நிலை ஏற்பட்டது. மத்திய அரசாங்கம் கொஞ்சங் கொஞ்சமாகப் பலமிழந்து வரத்தொடங்கியதும், இந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொண்டு, வரிவசூல் உரிமையைப் பரம்பரை உரிமையாக்கிக் கொண்டார்கள். இவ்வாறு குடியானவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஒரு புதிய வகுப்புத் தோன்றியது. இந்த வகுப்பினரை நிலக்கிழவர்கள் என்று கூறலாம்.

அடிப்படையில் இதைப்போன்ற முறைதான் வங்காளத்தில் மாத்திரமின்றி வட இந்தியாவின் மற்ற பகுதிகளிலுமிருந்தது என்று முன்னர்க் கூறியிருக்கிறோம். ஆனால் வங்காளத்தைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான வேறுபாடு இருந்தது. வங்காளத்திலிருந்த நிலக்கிழவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி ஆண்டுக்காண்டு மாறாமல் ஒரே அளவினதாக இருந்தது. உண்மையில் ஆண்டுதோறும் "ஸெஸ்" என்ற முறையில் அரசாங்கம் நிலக்கிழவர்களிடமிருந்து பலவகைப்பட்ட தொகைகளை வசூல் செய்தது என்றாலும், நிலவரி மாத்திரம் அதிகமாகாமலும் குறையாமலும் ஆண்டுதோறும் ஒரே அளவில் வசூல்செய்யப் பட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்திலிருந்த நிலக்கிழவர்களை நீக்கிவிட்டு நிலவரி வசூலை ஐந்து வருஷகாலத்திற்குச் சேர்ந்தாற் போல் ஏலத்தில் விடும் முறையைக் கையாண்டான். நீக்கப் பட்ட நிலக்கிழவர்கட்கு ஏலம் எடுத்தவர்கள் ஓரளவு நஷ்டஈடு கொடுத்தார்கள். வாரன் ஹேஸ்டிங்ஸ் கையாண்ட முறையால் பெருந்தீமை விளைந்தது. வரி வசூலைக் குத்தகைக்கெடுத்தவர்கள் தாங்கள் எவ்வளவு லாபம் அடையமுடியுமோ அவ்வளவையும் அடையவேண்டும் என்ற எண்ணத்துடன் குடியானவர்களைத் துன்புறுத்தி ஏராளமான தொகைகளை வசூலிக்கத் தொடங்கினார்கள். வரி வசூலை ஏலத்தில் விடும் முறை இத்தகைய கெடுதல்களுக்கு இடமளிக்கும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் வங்காளத்தில் அந்தச் சமயத்திலிருந்த பொருளாதாரநிலை வரி வசூலை ஏலத்தில் விடும் முறையால் ஏற்படும் சாதாரணத் தீமைகளைப் பதின்மடங்கு பெருக்கியது. 1769-ஆம் ஆண்டில் பருவமழை மறுத்ததால் வங்காளத்தின் பெரும்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டது. அந்தக்காலத்தில் ஒரு பிரதேசத்திற் பஞ்சம் ஏற்பட்டால் அந்தப்பிரதேசத்தின் விவசாயநிலை சீர்திருந்துவதற்குச் சுமார் ஒரு தலைமுறையாகும் என்று முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறியிருப்பது நினைவிலிருக்கும். வங்காளத்தில் 1769-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் மாண்டனர் என்று தெரிகிறது. உழவுமாடுகளின் மரணவிகிதம் அதைவிட அதிகமாயிருந்திருக்கும் என்று நம்பலாம். இவ்வாறு உழவர்களும் உழவுமாடுகளும் போதிய அளவில் இல்லாததால் வழக்கமான அளவுக்குக் குறைந்த நிலந்தான் பயிரிடப்பட்டது. ஆகவே, பஞ்சத்திற்கு முன்னர் வசூல் செய்யப்பட்ட அளவு வரித்தொகை அதற்குப்

பின்னர் வசூல் பண்ணமுடியாது. மேலும் தரிசாகக் கிடந்தது போகப் பயிரிடப்பட்ட நிலங்களில் எவ்வளவு விளைபொருள்கள் விளையும் என்று யாராலும் திட்டமாகச் சொல்லமுடியாது. நிலவரியை ஏலத்திற் கெடுத்தவர்களிடமிருந்து அவர்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட தொகையை வசூலிப்பதற்கு அரசாங்கம் முயன்றது. அந்தத் தொகையை அரசாங்கத்திற்குக் கட்டின பிறகு தங்களுக்கும் லாபம் வரவேண்டுமென்று எண்ணிய ஏலதாரர்கள் பஞ்சத்தால் மாண்டவர் போக மீதியிருந்த குடியானவர்களிடம் பணம் வசூலிக்க முயன்றார்கள். அந்தக் குடியானவர்கள் அவ்வளவு அதிகமான தொகையைக் கட்டமுடியாமல் திண்டாடினார்கள். இந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. குடியானவர்கள் படாதபாடுபட்டதுதான் மிச்சம். ஆகவே, ஐந்து ஆண்டுகளுக்கப்புறம் நிலவரியை ஏலத்தில் விடும்முறை கைவிடப்பட்டது. அதன்பின் நிலவரி வசூலில் பலவகைப்பட்ட முறைகள் கையாளப்பட்டன. எந்த முறையும் சரியான பயனளிக்காததால் அரசாங்கத்துக்கும் குடியானவர்களுக்கும் இடையிலிருந்த நிலக்கிழவர்களைத் தள்ளியது தவறு என்ற எண்ணம் சிறிது சிறிதாக உரம்பெற்றது, நிலக்கிழவர்கள் எவ்வளவு தொகை அரசாங்கத்திற்குக் கொடுப்பதாக ஒத்துக்கொள்ளுகிறார்களோ அந்தத் தொகைதான் அரசாங்கம் வசூல் செய்யக்கூடிய நிலவரி என்ற கொள்கை ஒத்துக்கொள்ளப்பட்டது.

இதுவரையில் ஏற்கெனவே வங்காளத்தில் இருந்த நிலவரி வசூல் முறையைத்தான் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் கையாள முயன்றார்கள். அந்த முறையைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் இந்த விஷயமாக அவர்கள் செய்த பிரயத்தனங்களும் ஆலோசனைகளும் இந்தியாவில் அதுவரையில் இல்லாத ஒரு புதிய முறை தோன்றுவதற்குக் காரணமாயிருந்தன. நிலக்கிழவர்கள் ஆண்டுதோறும் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையைச் சாசுவதமாக நிர்ணயித்து விடுவது என்பதுதான் அந்தப் புதிய முறை. இந்த முறை 1793-ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்தது. ஆனால் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் இந்த முறையினால் ஏற்படக்கூடிய நன்மைகள் ஆலோசிக்கப்பட்டனவே ஒழிய இந்த முறை ஒத்துக்கொள்ளப் படவில்லை.

ஹேஸ்டிங்ஸ் அரசியல் நிர்வாகத்தில் செய்யவேண்டியிருந்த மூன்றாவது வேலையை இப்போது கவனிப்போம், சென்னை,

கல்கத்தா, பம்பாய் ஆகிய மூன்று நகரங்களும் பிரஸிடென்ஸி நகரங்கள் என்று வழங்கின. இந்த மூன்று நகரங்களிலும் ஆங்கிலக் குடியேற்றங்களுக்குத் தேவையான நீதிமன்றம் முதலிய அரசியல் நிர்வாக ஸ்தாபனங்கள் ஆங்கில முறையில் ஏற்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட மற்ற பகுதிகளில் அத்தகைய ஸ்தாபனங்கள் இல்லை. ஆகவே அந்தப் பகுதிகளிலிருந்த சுதேச மக்களின் வழக்குகளை விசாரிப்பதற்கேற்ற நீதி ஸ்தலங்களை ஏற்படுத்தவேண்டியிருந்தது. முகலாயர் ஆட்சிக்காலத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் இலாக்கா சம்பந்தமான வழக்குகளைத் தாங்களே விசாரித்துத் தீர்ப்பளித்தார்கள் என்றும், சில சமயங்களில் அவர்களோடு காஜிகளும் உட்கார்ந்து வழக்கு விசாரணை செய்தார்கள் என்றும் முன்னோர் அதிகாரத்திற் படித்தோம். சிவில் வழக்குகளுக்கும் கிரிமினல் வழக்குகளுக்கும் இடையில் தெளிவான வேறுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அவரவர் இலாக்காவுக்குச் சம்பந்தபட்ட வழக்குகளை அவரவர்களே விசாரிப்பது வழக்கமாயிருந்ததால் நாட்டின் அமைதியைக் குலைக்கக்கூடிய குற்றங்களை அரசாங்கத்தின் பொது நிர்வாக உத்தியோகஸ்தர்களும், நிலக்கிழவர்களையும் குடியானவர்களையும் பற்றிய வழக்குகளை நிலவரி இலாக்கா உத்தியோகஸ்தர்களும் விசாரித்தார்கள். ஹேஸ்டிங்ஸ் இந்த இரண்டுவகை வழக்குகளையும் தெளிவாகப் பிரித்துக் கிரிமினல் வழக்குகளை விசாரிப்பதற்குத் தனி நீதிஸ்தலங்களையும் சிவில் வழக்குகளை விசாரிப்பதற்குத் தனி நீதிஸ்தலங்களையும் ஏற்படுத்தினான். கிரிமினல் கோர்ட்டுகளில் ஜட்ஜுகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் வழக்குகளை விசாரித்தார்கள். திவானி அடலெட் என்று வழங்கிய சிவில் கோர்ட்டுகளிலிருந்த நீதிபதிகள் நிலவரி சம்பந்தமான வழக்குகள் மாத்திரமின்றிப் பொதுமக்களுக்குள் ஏற்பட்ட எல்லாவிதச் சிவில் வழக்குகளையும் விசாரித்தார்கள். இந்தக் கோர்ட்டுகளுக்கு மேல் அப்பீல் கோர்ட்டுகளும் ஏற்படுத்தப்பட்டன. சிவில் அப்பீல் கோர்ட்டுக்கு சாதர் திவானி அடலெட் என்று பெயர். கவர்னர் ஜெனரலும் அவனுடைய ஆலோசனையாளர்களுந்தான் இந்தக் கோர்ட்டின் நீதிபதிகள். கிரிமினல் வழக்கு அப்பீல்களில் முடிவான தீர்மானம் கூறும் அதிகாரம் வங்காள நவாபின் கையில்தானிருந்தது. அவன் பெயரளவில் நவாபாகக் கவர்னர் ஜெனரலுடைய ஆலோசனைக் கவுன்சிலின் மேற்பார்வையிலிருந்தான்.

இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் ஏற்படுத்திய நீதிபரிபாலன முறை முழுவதும் திருப்திகரமான முறையன்று எனினும், முன்னிருந்த முறையை விட மிக நல்ல முறையென்று கூறலாம். ஆனால் ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி 1774-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ஓர் உயர் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது என்று ஏற்கெனவே கூறியிருக்கிறோம். அந்த நீதிமன்றத்திற்கு ஸர் எலிஜா இம்பே என்பவன் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டான். வங்காளத்திலிருந்த ஆங்கிலேயர் வழக்குகளை மாத்திரமின்றிச் சுதேச மக்களின் வழக்குகளையும் விசாரணை செய்வதற்கு அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று இம்பே வாதித்தான். ஆனால் கவர்னர் ஜெனரலின் ஆலோசனைக் கவுன்ஸில் அங்கத்தினர் ஆங்கிலேயர்களுக்குள் ஏற்பட்ட வழக்குகளை மாத்திரம் விசாரிப்பதற்குத்தான் அந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் உண்டு என்று வாதித்தனர். இந்த வாக்கு வாதம் 1780-ஆம் ஆண்டு உச்ச நிலையை அடைந்தது. கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகிய இம்பேயை ஸாதர் திவானி அடலெட் என்ற அப்பீல் கோர்ட்டுக்கும் தலைமை நீதிபதியாக நியமித்து இந்த நெருக்கடியை ஹேஸ்டிங்ஸ் தற்காலிகமாகத் தீர்த்துவைத்தான். அடுத்த ஆண்டில் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் அதிகாரத்தையும் ஸாதர் திவானி அடலெட்டின் அதிகாரத்தையும் பார்லிமெண்டு வரையறுத்துச் சட்டமியற்றியது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் நிதிபரிபாலன முறையில் செய்த சீர்திருத்தங்கள் வழக்கறிஞர்கள் தோன்றக் காரணமாயின. இந்திய நீதிபரிபாலன முறையில் வழக்கறிஞர்களுக்கு இடமில்லை. கட்சிக்காரர்களே தங்களுடைய வழக்குகளை நீதிஸ்தலங்களில் எடுத்துக் கூறுவது இந்திய வழக்கம். சில சமயங்களில் அவர்கள் செல்வாக்குடைய பெரிய மனிதர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் தயவைச் சம்பாதித்துத் தங்களுக்காக நீதிபதிகளிடம் பரிந்து பேசுமாறு செய்வதுண்டு. இந்தியாவில் முதன் முதலாகப் பதினாறும் நூற்றாண்டில் போர்ச்சுகீசிய வழக்கறிஞர்கள் கோவாவில் வக்கீல் தொழில் நடத்தியதாகத் தெரிகிறது. அவர்களுடன் வேலை செய்வதற்கு இந்தியக் குமாஸ்தாக்கள் இருந்தார்கள். ஆனால், இந்தத் தொழில் கோவாவைத் தவிர வேறிடங்களுக்குப் பரவவில்லை. பிரசிடென்ஸி நகரங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த ஆங்கிலக் கோர்ட்டுகளில் ஆரம்பத்திலிருந்தே ஆங்கில வழக்கறிஞர்கள் வழக்குகளை நடத்தி வந்தார்கள், கல்கத்தாவில்

உயர்நீதி மன்றம் ஏற்பட்டதும் அந்த வழக்கறிஞர்களிற் பலர் அங்குச் சென்று வழக்குகளை நடத்தத் தொடங்கினார்கள். இதைக் கண்ட இந்தியர்கள் பெரிய மனிதர்களுடைய செல்வாக்காலும் லஞ்சத்தாலும் தங்கள் வழக்குகளை வெல்ல முயல்வதற்குப் பதிலாக வழக்கறிஞர்களை அமர்த்தி வழக்காடுவது நல்லது என்று உணர்ந்தனர். முதலில் வழக்கறிஞர்களெல்லாம் ஆங்கிலேயராகவே இருந்தனர். நாளடைவில் இந்தியர்களும் அந்தத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர்.

ஹேஸ்டிங்ஸ் செய்த சீர்திருத்தங்களின் பயனாக ஐரோப்பியர் ஸம்ஸ்கிருதம் முதலிய இந்திய மொழிகளைப் படிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தியர்களுடைய வழக்குகளை விசாரித்து நீதி செலுத்தவேண்டுமானால் ஸம்ஸ்கிருத மொழியிலுள்ள இந்துச் சட்டங்களைப் படிக்கவேண்டும். ஆனால் ஆரம்பத்தில் ஆங்கில நீதிபதிகளில் யாருக்கும் ஸம்ஸ்கிருதம் தெரியாதாகையால் இந்துச் சட்டங்கள் யாவை என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, அந்தச் சட்டங்களைச் சம்ஸ்கிருதத்திலிருந்து ஆங்கிலத்-துக்கு மொழி பெயர்க்கவேண்டியதாயிற்று. ஆனால் அப்போது ஸம்ஸ்கிருத நூல்களை நேரடியாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் ஆற்றல் யாருக்கும் இல்லாததால், அந்த நூல்களை முதலில் பாரசீகத்தில் மொழிபெயர்த்து, அதன்பின் பாரசீகத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவேண்டியதா யிருந்தது, ஸர் வில்லியம் ஜோன்ஸ் என்பவருடைய பன்மொழியாராய்ச்சித் திறமையைப்பற்றி இரண்டாம் அதிகாரத்திற் கூறியிருப்பது நினைவிலிருக்கும். அவரும் இன்னும் சில ஆங்கில அறிஞர்களும் சேர்ந்து ஸம்ஸ்கிருத ஆராய்ச்சியில் ஈடுபடலானார்கள். அதற்காக அவர்கள் 1784-ஆம் ஆண்டில் வங்காளத்தில் ஆசியச் சங்கம் ஒன்றை நிறுவினார்கள். அதன் பயனாகப் பல ஸம்ஸ்கிருத நூல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் கல்கத்தாவிலும் ஐரோப்பாவிலும் அச்சிடப்பட்டன.

அதே சமயத்தில் பாரசிக மொழியையும் ஆங்கிலேயர்கள் படிக்கவேண்டியது அவசியமாயிற்று. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி வியாபாரத்தை மாத்திரம் கவனித்து வந்த காலத்தில் இந்திய மொழிகளை ஆங்கிலேயர் நன்றாகப் படிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய இந்திய மொழிகளை ஓரளவு பேசக் கற்றுக்கொண்டு படிப்பதற்கும் எழுதுவதற்கும் அறை குறையாக ஆங்கிலம் தெரிந்த இந்தியத் துபாஷிகளை உபயோகித்துக் கொண்டனர். ஆனால் கம்பனி

அரசியல் விவகாரங்களையும் கவனிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டவுடன் மேற்சொன்ன முறை பயன்படவில்லை. சிக்கலான இராஜதந்திர விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு அரைகுறையாகத் தெரிந்த மொழியை உபயோகிப்பது ஆபத்தாக முடியும். ஆகவே இந்தியாவின் பெரும் பகுதியில் இராஜதந்திர மொழியாக வழங்கிய பாரசீக மொழியை ஆங்கிலேயர் நன்ருகக் கற்றுக்கொள்ளுவது அவசியமாயிற்று. ஆகவே ஹேஸ்டிங்ஸ் இந்தத் துறையிலும் தன் கவனத்தைச் செலுத்தினுன். அதன் பயனுகப் பல பாரசீக நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. இந்தியாவுக்கு வரும் ஆங்கில உத்தியோகஸ்தரின் உபயோகத்துக்காக ஒரு பாரசீகப் பாடசாலையை இங்கிலாந்தில் ஏற்படுத்தவேண்டுமென்று ஹேஸ்டிங்ஸ் விரும்பினுன். ஆனுல் அந்த எண்ணம் ஈடேறவில்லை. பின்னர் 1800-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் ஒரு கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. கம்பனியின் உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய பயிற்சியை அந்தக் கலாசாலை அளித்தது. அதன்பின்னர் 1806-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் ஹெயிலிபரி என்ற இடத்தில் "கிழக்கிந்தியக் கல்லூரி" என்ற நிலையம் ஏற்பட்டது. அதிற் பயிற்சி பெற்ற ஆங்கிலேயர்கள் இந்தியாவுக்கு வந்து கம்பனியின் நிர்வாகத்தி லமர்ந்தார்கள்.

இவ்வாறு தொடங்கிய மொழியாராய்ச்சியால் இந்தியாவில் அச்சகங்கள் ஏற்பட்டன. ஹிந்துஸ்தானிக்கும் பாரசீகத்திற்கும் பொதுவான அரபி எழுத்துக்கள் ஏற்கெனவே ஐரோப்பியர்களுக்குப் பழக்கமாயிருந்ததால் அந்த மொழிகளுக்கு வேண்டிய அச்சுக்களைச் செய்வது எளிதாயிருந்தது. ஆனுல் பதினெட்டாம் நூற்ருண்டின் கடைசியாண்டுகளில் தான் ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் அச்சடிக்கப்பட்டன. வங்கமொழியில் முதல் அச்செழுத்துக்கள் கல்கத்தாவிலிருந்த ஓர் இந்தியக் கொல்லனுல் ஆங்கிலேயர் மேற்பார்வையில் 1778-ஆம் ஆண்டில் செதுக்கப்பட்டன. இவ்வாறு ஹிந்துஸ்தானியிலும் வங்க மொழியிலும் அச்சடித்த புத்தகங்கள் வெளிவரத் தொடங்கியதும் இந்தியக் கல்வியில் ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. பத்தொன்பதாம் நூற்ருண்டு வரையிலும் அறிஞர்கள் தங்களுடைய நூல்களைச் செய்யுள் நடையிலேயே எழுதினுர்கள். காதாற் கேட்டு மனப்பாடம் செய்ய வேண்டிய நிலை இருந்தவரையிலும் செய்யுள் நடைதான் வழக்கிலிருக்க முடியும். ஆனுல் தேவையான எண்ணிக்கையில் புத்தகங்களை அச்சடிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதும் மனப்பாடம்

செய்யவேண்டிய அவசியம் இல்லாது போயிற்று. ஆகவே உரை நடை நூல்கள் தோன்றின.

மேலே கூறிய விஷயங்களெல்லாம் ஹேஸ்டிங்ஸ் செய்த நிர்வாகச் சீர்திருத்தங்களின் எதிர்பாராத விளைவுகள். அவன் செய்து முடித்த முக்கியமான வேலைகளைப் பின் வருமாறு சுருக்கமாகக் கூறலாம் :—கம்பனியின் வியாபாரத்தில் ஈடுபட்டு ஏற்றுமதிக்கு வேண்டிய பொருள்களை வாங்கி யனுப்பிய ஆங்கில வியாபாரிகளினின்றும் வேறுபட்ட அரசியல் உத்தியோகஸ்தர்கள் கொண்ட நிர்வாகத்தை ஸ்தாபித்தான். கம்பனியின் அரசியலதிகாரத்திற் குட்பட்ட பிரதேசங்களிலிருந்த மக்கள் அனைவர்க்கும் பயன்படக் கூடிய நீதி ஸ்தலங்களை ஏற்படுத்தினான். உள்நாட்டு வியாபாரத் தின்மேல் விதிக்கப்பட்டிருந்த பலவகைப்பட்ட வரிகளை நீக்கினான். ஆனால் நிலவரி வசூல் முறையில் ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய அவனால் முடியவில்லை. மற்ற இராஜ்யங்களுக்கும் கம்பனிக்கும் இருந்த அரசியல் தொடர்பு விஷயத்தில் அவன் செய்த வேலைகளைப்பற்றி அடுத்த அதிகாரத்திற் படிப்போம்.

அதிகாரம்—37

வாரன் ஹேஸ்டிங்ஸ் – இராஜதந்திரி

வாரன் ஹேஸ்டிங்ஸின் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பற்றிப் படிக்கும்போது அவன் கவர்னர் ஜெனரலாக இருந்தகாலம் முழுவதும் அவனுக்கிருந்த பணக்கஷ்டத்தை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். வங்காளத்தில் ஆங்கிலக் கம்பெனி வாங்கிய வியாபாரப் பொருள்களுக்காக ஆண்டுதோறும் இங்கிலாந்திலிருந்து பணம் வந்துகொண்டிருந்தது. அவ்வாறு பணம் அனுப்பும் வழக்கத்தை இப்போது கம்பனி நிறுத்திவிட்டபடியால் கம்பனியின் அரசியல் நிர்வாகத்திற்கு வேண்டிய பணம் மாத்திரமின்றிக் கம்பனியின் கணக்கில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியான பொருள்களின் கிரயத்திற்காகவும் வங்காளத்தில் வசூலான நிலவரிப்பணத்தையே உபயோகிக்க வேண்டியதாயிற்று. 1769-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின் விளைவாகவும், கம்பனியின் உத்தியோகஸ்தர்களின் அனுபவமின்மையாலும் வங்காளத்தில் எதிர்பார்த்த அளவு வரிவசூல் செய்ய முடியவில்லையென்று முன் அதிகாரத்திற் படித்தோம். இந்திய அரசர்கள் ஏராளமான பணத்தைக் கஜா

ஞவில் சேர்த்து வைத்துக்கொண்டு சண்டையேற்பட்ட காலங்களிலும், எதிர்பாராத செலவு ஏற்பட்ட காலங்களிலும் உபயோகப்படுத்திக்கொள்வது வழக்கம் என்று முன்னர்க் கூறியிருக்கின்ருேம். ஆனல் அத்தகைய சேமநிதி ஒன்றும் கம்பனிக்கு இல்லை. இந்தியர்களிடமிருந்து கடன் வாங்கும் முறையையும் கம்பனி நிர்வாகஸ்தர்கள் ஆதரிக்கவில்லை. ஹேஸ்டிங்ஸ் பொருளாதார விஷயங்களில் திறமையற்றவன். ஆகவே, அவன் வேறு வழியின்றிச் சில நியாயமற்ற முறைகளைக் கையாண்டு பணந்தேடினன்.

அவுத் நவாப், முகலாயச் சக்கரவர்த்தி ஆகிய இருவருடன் தான் ஹேஸ்டிங்ஸ் வங்காளக் கவர்னர் என்ற தகுதியில் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனல் ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் என்ற பதவியை வகிக்கத் தொடங்கியதும் பம்பாய், சென்னை ஆகிய அரசாங்கங்களின் வெளிநாட்டுத் தொடர்புகளையும் மேற்பார்வை செய்யவேண்டியதாயிற்று. அந்த அரசாங்கங்கள் தங்களிஷ்டம் போல் சண்டையோ சமாதானமோ செய்துகொள்ள முடியாது. ஆகவே சிக்கலான நிலைமையிலிருந்த தென்னிந்திய அரசியல் விவகாரங்களிலும், மேற்கிந்திய அரசியல் விவகாரங்களிலும் ஹேஸ்டிங்ஸ் கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. எனினும் சென்னை அரசாங்கமும் பம்பாய் அரசாங்கமும் நடைமுறையில் ஹேஸ்டிங்ஸின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்தன என்று நினைத்துவிடக்கூடாது. லண்டனிலிருந்து நேரடியான உத்தரவுகள் சென்னைக்கும் பம்பாய்க்கும் வந்துகொண்டுதானிருந்தன. கல்கத்தாவுக்கும் அவற்றுக்கும் இடையில் போக்குவரத்துத் தடைகள் ஏற்படக்கூடும். கவர்னர் ஜெனரல் தங்கள் விஷயங்களிற் குறுக்கிடுவதை விரும்பாத சென்னை அரசாங்கமும் பம்பாய் அரசாங்கமும் தங்கள் உத்தேசங்களையும் செயல்களையும் அப்போதைக்கப்போது கல்கத்தாவுக்குத் தெரியப்படுத்தவில்லை. ஆகவே ஏற்கனவே நடந்துபோன செயல்களைத் தங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் அங்கீகாரம் செய்வதுதான் கவர்னர் ஜெனரலும் அவனுடைய ஆலோசனைக் கவுன்சிலும் செய்யக்கூடிய வேலையாக இருந்தது. கம்பனியின் அதிகாரத்தின் மூலஸ்தானம் லண்டன். இந்தியாவிலிருந்து லண்டனுக்குச் சமாசாரம் போய்ச் சேர்வதற்கும், அங்கிருந்து இந்தியாவுக்கு உத்தரவு வந்து சேர்வதற்கும் நீண்டகாலம் பிடிக்குமாகையால் சென்னை பம்பாய் விஷயங்களில் உண்மையான மேற்பார்வை செய்வதற்கு

லண்டனிலிருந்த நிர்வகாஸ்தர்களால் முடியவில்லை. கல்கத்தா-விலிருந்த கவர்னர் ஜெனரலாலேயே முடியவில்லையென்றால் லண்டனிலிருந்த நிர்வாகஸ்தர்களால் அது முடியக்கூடிய காரியமா? மேலும் லண்டனிலிருந்த நிர்வாகஸ்தர்கள் சில சமயங்களில் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கும், கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கும் ஏற்றவாறு இந்திய விஷயங்களில் உத்தரவு பிறப்பித்தார்கள். அதுவுமன்றி, இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் போக்குவரவில் ஏற்பட்ட காலதாமதத்தால் லண்டனிலிருந்து உத்தரவு வருவதற்குள் இந்தியாவில் நிலைமை மாறி, அந்த உத்தரவு பயனற்றதாகப் போய்விடக்கூடும். ஆகவே, சென்னையிலும் பம்பாயிலும் நடக்கும் விஷயங்கள் ஒருமாதிரியாகவும், கவர்னர் ஜெனரலின் உத்தரவு இன்னொருமாதிரியாகவும், லண்டனிலிருந்து வந்த உத்தரவு வேறொரு மாதிரியாகவும் இருக்கக்கூடும். இதனால் ஆங்கிலேயருடைய செயல்களும் கொள்கைகளும் பல சமயங்களில் இந்திய அரசர்களுக்கு விளங்காத புதிராக இருந்தால் அதில் வியப்பில்லை.

வட இந்திய அரசியல் நிலையில் கிளைவ் திரும்பிச் சென்றதற்கும் வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலானதற்கும் இடையில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டிருந்தது. பானிபட்டு யுத்தத்தில் தோல்வியடைந்த மகாராஷ்டிரர்கள் மறுபடியும் பலம் பெற்று டில்லியைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அதன்பின் அவர்கள் ஷா ஆலத்தை டில்லிக்குத் திரும்பி வந்துவிடும்படி அழைத்தார்கள். ஆங்கிலேயரின் ஆலோசனைக்கு மாறாக ஷா ஆலம் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டான். அதனால் அவன் சாகும்வரையில் உண்மையில் தன்னுடைய தலை நகரத்தில் ஒரு கைதியைப் போலவே காலங்கழிக்க வேண்டியதாயிற்று. அதைக் கண்ட ஹேஸ்டிங்ஸ் கிளைவின் காலத்தில் ஷா ஆலத்திற்கும் கம்பனிக்கும் ஏற்பட்ட உடன்படிக்கை ரத்தாகிவிட்டதென்று கூறி அவனுக்கு ஆண்டுதோறும் அளிக்கப்பட்ட உபகாரச் சம்பளத்தை நிறுத்திவிட்டான். கிளைவ் செய்த உடன்படிக்கைப்படி அலகாபாத் ஷா ஆலத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அதை ஷா ஆலம் மகாராஷ்டிரர்களுக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். உடனே வாரன் ஹேஸ்டிங்ஸ் அலகாபாத்தை ஷா ஆலத்தினிடமிருந்து பிடுங்கி அவுத் நவாபுக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பெருந் தொகையைப் பெற்றுக்கொண்டான். முன்னேறிக் கொண்டே வந்த மகாராஷ்டிரர்கள் கம்பனிக்கு விரோதிகளாக மாறிக்கொண்டு வந்தார்கள். அவர்களுடைய ஆதிக்கத்திற்குட்

பட்ட பிரதேசங்களுக்கும் கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட வங்காளத்திற்கும் இடையில் அவுத் இடைப்படு நாடாக இருந்தது. இந்த இடைப்படு நாட்டைப் பலமுள்ளதாகவும் கம்பனியினிடம் நட்பாகவும் இருக்கும்படி வைத்துக்கொள்ளுவது ஹேஸ்டிங்ஸின் முதன்மையான கொள்கையாயிற்று.

1774-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரோகில்லா யுத்தம் இந்தக் கொள்கையின் விளைவுதான் என்று கூறலாம். அயோத்தியின் வடமேற்கிலிருந்த ரோகில்கண்டு என்ற இராஜ்யத்தில் ஓர் ஆப்கானியப் போர்வீரன் தன் ஆட்சியை நிறுவினுன் என்று முன்னைய அதிகாரம் ஒன்றிற் கூறியிருக்கிறேம். சிறிது காலத்திற்குப் பின்னர் வேறோர் ஆப்கானிய வீரன் அங்கு அதிகாரம்பெற்று அங்கிருந்த பல ஆப்கானியத் தலைவர்களுள் ஒரு சமஷ்டியை ஏற்படுத்தி அந்த இராஜ்யத்தை ஆண்டுவந்தான். 1774-ஆம் ஆண்டில் ரோகில்கண்டை மகாராஷ்டிரர்கள் கைப்பற்ற நினைத்தார்கள். அதே சமயத்தில் அவுத் நவாபும் அந்த நாட்டின்மீது கவனம் செலுத்தினுன். ரோகில்கண்டு அவுத் நவாபின் ஆட்சியிலிருப்பது தான் கம்பனிக்கு நல்லதாகையால் ஹேஸ்டிங்ஸ் பலநாள் யோசனை செய்த பிறகு அவுத் நவாபுக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். அதன் பயனுக ரோகில்லர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்களுடைய இராஜ்யத்தின் பெரும் பகுதி அவுத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

ஏறக்குறைய அதே சமயத்தில் ரோகில்கண்டுக்குத் தெற்கிலிருந்த பருக்காபாத் என்ற இராஜ்யமும் அவுத்துக்குக் கப்பம் கட்டும் சிற்றரசாக மாறியது. இவ்வாறு கம்பனியாரும் அவுத் நவாபும் சேர்ந்து கங்கைச் சமவெளியின் பெரும்பகுதியில் ஆதிக்கம் செலுத்தினர். அந்தப் பிரதேசத்திற்குத் தெற்கிலும் மேற்கிலும் அவர்களுக்கு விரோதமாயிருந்த மகாராஷ்டிரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். பம்பாயிலிருந்த ஆங்கிலேயர்கள் மேற்கிந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்த மகாராஷ்டிரர்களுடைய விரோதத்தை யடையாமலிருக்க முடியாது. மேலும் தென்னிந்தியாவின் சிக்கலான அரசியல் விவகாரங்களிலும் மகாராஷ்டிரர்கள் கலந்திருந்தார்கள். அவர்கள் தங்கள் அதிகாரத்தை மேலும் மேலும் பரப்ப விரும்பினுர்கள். ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகாரத்தைப் பெருக்க விரும்பவில்லை யெனினும், தங்களுக்கு ஏற்கெனவே யிருந்த அதிகாரத்தை இழக்க விரும்பவில்லை. ஆகவே, மகாராஷ்டிரர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் சண்டை யேற்படுவது நிச்சயமாயிற்று.

மகாராஷ்டிரர் இராஜ்யங்களெல்லாம் பீஷ்வாவின் தலைமையில் ஒரு சமஷ்டியாக இருந்தன என்று முன்பு பார்த்தோம். ஒருவர்பின் ஒருவராக வந்த திறமைவாய்ந்த பீஷ்வாக்கள் அந்தச் சமஷ்டியை 1772-ஆம் ஆண்டு வரையில் காப்பாற்றி வைத்திருந்தார்கள். அதன்பின் பீஷ்வாப் பதவிக்குப் போட்டி யேற்பட்டது. ஆளும் வயதடையாத ஒரு சிறுவன் பீஷ்வாப் பதவியிலமர்த்தப்பட்டான். அதனால் சமஷ்டியின் பலம் குறைந்தது. சமஷ்டியிற் சேர்ந்திருந்த மகாராஷ்டிர அரசர்கள் நடைமுறையில் தனித்தனி யரசர்களாகவே விளங்கித் தங்கள் சொந்த அதிகாரத்தைப் பெருக்குவதிலேயே கவனம் செலுத்தினார்கள். பெயரளவில் அவர்கள் பூனாவிலிருந்த பீஷ்வாவின் ஆதிக்கத்திற்கு அடங்கியவர்களாக இருந்தார்கள். இவ்வாறு சிதைந்துகொண்டிருந்த மகாராஷ்டிர சமஷ்டிக்கும் செயலளவில் இன்னும் ஒன்றுபடாத ஆங்கிலேயக் குடியேற்றங்களுக்கும் விரோதம் ஏற்படவே நிலைமை மிகவும் சிக்கலானதாக மாறிற்று.

சண்டை மேற்கிந்தியாவில் ஆரம்பமாயிற்று. பம்பாயிலிருந்து வடக்கு நோக்கி குஜராத்துக்குச் செல்லும் பாதை சால்செட் என்னும் தீவின் வழியாகச் சென்றது. பம்பாயின் காப்புக்கும் வியாபாரத்திற்கும் அந்தத் தீவு ஆங்கிலேயர் கையில் இருப்பது அவசியம். 1661-ஆம் ஆண்டில் போர்ச்சுகீசிய அரசன் பம்பாயை ஆங்கில அரசிக்குக் கொடுத்தான் என்றும், அதை ஆங்கில அரசன் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தான் என்றும் முன்னர்க் கூறியிருக்கிறோம். பம்பாயுடன் சால்செட்டையும் சேர்த்தே போர்ச்சுகல் அரசன் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான் என்றும், அதனால் சால்செட் ஆங்கிலேயருக்குச் சேர்ந்தது என்றும் கம்பனி வாதாடியது. போர்ச்சுகீசியர் அதை ஒத்துக் கொள்ளாமல் சால்செட்டைத் தங்கள் வசத்திலேயே வைத்திருந்தார்கள். ஆனால் 1739-ஆம் ஆண்டில் அதைப் போர்ச்சுகீசியரிடமிருந்து மகாராஷ்டிரர் பிடித்துக்கொண்டனர். மகாராஷ்டிரரிடமிருந்து அதைப் பெறுவதற்கு பம்பாய் அரசாங்கத்தார் சமாதான முறைகளிற் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப்போயின. 1773-ஆம் ஆண்டில் பீஷ்வாப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ரகுநாதராவ் மறுபடியும் அப்பதவியை அடைவதற்குப் பம்பாயிலிருந்த ஆங்கிலேயர் உதவியை நாடினான். அந்த உதவிக்குப் பதிலாக அவன் சால்செட் தீவை ஆங்கிலேயர்களுக்குக் கொடுப்பதுடன் இன்னும் சில சலுகைகளையும் ஆங்கிலேயர்களுக்குத் தருவதாக வாக்களித்தான். அதற்கிணங்கிய ஆங்கிலே

யர் அவனோடு 1775-ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்து கொண்டனர். அந்த உடன்படிக்கை சூரத் உடன்படிக்கை என வழங்கியது. பின்னர் ஆங்கிலச் சேனை மகாராஷ்டிரச் சேனையை வெற்றிகரமாகத் தாக்கியது. ஆங்கிலக் கப்பற்படை மாராஷ்டிர கப்பற் படையைத் தோற்கடித்தது. அந்தச் சமயத்தில் பம்பாய் அரசாங்கத்தின் செயல் ஒழுங்குமுறைச் சட்டத்திற்கு நேர்மாறு னது என்று கூறிக் கல்கத்தா அரசாங்கம் சண்டையை நிறுத்தும் படி பம்பாய் அரசாங்கத்திற்குக் கட்டளையிட்டது. பூனாவில் மைனராக இருந்த பீஷ்வாவுக்குப் பதிலாக அரசியலதிகாரத்தை வகித்து வந்த நானாபர்னவிஸ் என்ற தலைவனுடன் 1776-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் புரந்தர் என்ற இடத்தில் ஆங்கிலேயர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அதன்படி சூரத் உடன் படிக்கை ரத்து செய்யப்பட்டது. ரகுநாதராவுக்கு உபகாரச் சம் பளம் கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் சால் ஸெட் தீவை ஆங்கிலேயரே வைத்துக்கொள்ளுவதென்றும் தங்களுக்குக் கிடைத்த மற்ற சலுகைகளையும் அனுபவிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டது.

இந்தச் சமயத்தில் கல்கத்தா அரசாங்கத்தால் நிராகரிக்கப் பட்ட சூரத் உடன்படிக்கையை ஆமோதித்து லண்டனிலிருந்து தபால் வந்தது. அடுத்தபடி லண்டனிலிருந்து வந்த தபால் ஒரு நிபந்தனையின்பேரில் புரந்தர் உடன்படிக்கையை ஆமோதித்தது. மகாராஷ்டிரர்கள் புரந்தர் உடன்படிக்கையின்படி நடக்காவிட் டால் மறுபடியும் பம்பாய் அரசாங்கம் ரகுநாதராவுக்கு உதவி செய்யலாம் என்பதுதான் அந்த நிபந்தனை. பூனாவில் மகாராஷ் டிரர்களுள் ஓயாத சூழ்ச்சிகள் நடந்துகொண்டே யிருந்தன. அதேசமயத்தில் ஒன்றுக்கொன்று முரணான ஆங்கிலேயர் செயல் களைப் பார்த்து அவர்கள் ஆங்கிலேயர்களுடைய உண்மையான உத்தேசம் என்ன என்பதை அறிந்துகொள்ள முடியாமல் திகைத் தார்கள். ஆகவே, அவர்கள் புரந்தர் உடன்படிக்கையின் நிபந்- தனையை நிறைவேற்றுவதற்கு யாதொரு முயற்சியும் செய்ய வில்லை. அதனால் லண்டனிலிருந்து வந்த இரண்டாவது தபா லின்படி பம்பாய் அரசாங்கம் 1778-ஆம் ஆண்டில் ரகுநாத ராவு டன் மறுபடியும் உடன்படிக்கை செய்துகொண்டது.

பம்பாய் அரசாங்கத்திலிருந்த பலமற்ற ஆங்கிலச் சேனைகள் அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பூனாவின்மீது படையெடுத்தன. சண்டையைச் சரியானபடி நடத்தும் திறமையற்ற ஆங்கிலப் படைத்தலைவன் மகாராஷ்டிரர்களுடன் அவர்கள் சொன்ன நிபந்

தனைகளுக்குக் கட்டுப்பட்டுச் சமாதானம் செய்துகொண்டான். ஆனால் அந்தச் சமாதானத்தை பம்பாய், கல்கத்தா ஆகிய இரண்டு அரசாங்கங்களும் நிராகரித்துவிட்டன. இதற்குள் வாரன் ஹேஸ்டிங்ஸ் யமுனை நதிக்கரையிலிருந்து ஒரு சேனையை கோடார்டு என்பவன் தலைமையில் பம்பாய்க்கு உதவியாக அனுப்பியிருந்தான். அது சூரத் நகரத்தை யடைந்து, மகாராஷ்டிரர்களுடன் சண்டையைத் தொடரத் தயாராயிருந்தது. 1779-ஆம் ஆண்டின் பெரும்பகுதி மகாரஷ்டிரர்களுடன் உடன்படிக்கைக்கான பேச்சுவார்த்தைகளிற் கழிந்தது. ஆனால் அந்த ஆண்டின் இறுதியில் மகாராஷ்டிரர்கள் ஐதராபாத்துடனும் மைசூருடனும் உடன்படிக்கை செய்துகொண்டதாகவும், மூவரும் சேர்ந்து இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்த ஆங்கிலேயர்களை ஒரேசமயத்தில் தாக்க உத்தேசித்திருப்பதாகவும் கோடார்டு அறிந்தான். இந்த முக்கூட்டு உடன்படிக்கையை விளக்குவதற்குத் தென்னிந்திய நிகழ்ச்சிகளைபபற்றிக் கூறுவது அவசியம்.

சென்னையிலிருந்த கவுன்ஸில் கல்கத்தாக் கவுன்ஸிலைப்போல அரசியல் நிர்வாக ஸ்தாபனமாக இன்னும் மாறவில்லை. சட்டப்படி அந்தக் கவுன்ஸில் வியாபாரத்தை நடத்தும் ஸ்தாபனமாகவே இருந்தது. சென்னையிலிருந்த ஆங்கிலேயர்கள் தங்கள் சொந்த லாபத்தைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். பிரிடிஷ் பாதுகாப்பிலிருந்த ஆர்க்காட்டு நவாப் கர்நாடகத்தில் மிகக் கேவலமாக ஆட்சி செய்து வந்தான். ஆனால் அவனைத் தள்ளிவிட்டு வேறொருவனை நவாபாக நியமிப்பதற்கு ஆங்கிலேயர் விரும்பவில்லை. ஏனெனில், நவாப் அவர்களிடமிருந்து ஏராளமாகக் கடன் வாங்கியிருந்தான். அவனை நவாப் பதவியிலிருந்து நீக்கினால் அவர்களுக்குப் பெரு நஷ்டம் ஏற்படும். தன்னைத் தள்ளிவிட ஆங்கிலேயர்கள் விரும்பமாட்டார்கள் என்பதை உணர்ந்த நவாப் ஆட்சியைச் சீர்திருத்தாமலிருந்ததோடு ஆங்கிலேயர் உதவியைப் பெற்றுத் தன்னுடைய இராஜ்யத்தையும் பெருக்கினான். அதே சமயத்தில் அவன் ஆங்கிலேயருக்குத் தெரியாமல் பக்கத்து இராஜ்யங்களுடனும் சூழ்ச்சி செய்து வந்தான்.

இதற்குள்ளாக மைசூரும் ஐதராபாத்தும் ஆங்கிலேயரிடம் பகைமை பாராட்டத் தொடங்கின. சென்னைக் கவுன்ஸிலின் திறமையற்ற இராஜதந்திர முறைகளும், அவ்வப்போது லண்டனிலிருந்து வந்த பொருத்தமற்ற உத்தரவுகளுந்தாம் இந்தப் பகைமைக்குக் காரணம். ஆகவே 1778-ஆம் ஆண்டிற்குள்

தென்னிந்தியாவில் ஆங்கிலேயருக்கு நண்பர்கள் யாருமே இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் இங்கிலாந்துக்கும், அமெரிக்கா, பிரான்ஸ், ஹாலந்து ஆகிய நாடுகளுக்கும் இடையில் போர் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொண்டு பிரெஞ்சு இராஜதந்திரிகளும், சொந்த முன்னேற்றத்தைக் கருதி இந்தியாவுக்கு வந்த சில பிரெஞ்சுப் போர் வீரர்களும் இந்திய இராஜ்யங்களில் ஆங்கிலேயருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார்கள். ஆகவே, பூனுவுக்கும், ஐதராபாத்துக்கும், மைசூருக்கும் இடையில் ஏற்பட்ட முக்கூட்டு ஒப்பந்தம் வெற்றி பெறக்கூடும் என்ற நிலையில் இருந்தது. ஆனுல், ஒப்பந்தத்திற் சேர்ந்துகொண்ட மூன்று இராஜ்யங்களும் உண்மையான ஒற்றுமை யடையாமல் தத்தம் லாபத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தன. அதனுல் சண்டை யேற்பட்ட சமயத்தில் ஐதராபாத் முக்கியமான காரியம் எதையும் செய்யவில்லை. மகாராஷ்டிரத் தலைவர்களிற் சிலர் ஆங்கிலேயரோடு சேர்ந்துகொண்டனர். மைசூர் மாத்திரம் உறுதியுடன் ஆங்கிலேயருடன் சண்டை தொடுத்தது.

நாகபுரியில் ஆட்சி செய்த மகாராஷ்டிர அரசனுன பான்ஸ்லேக்கு ஆங்கிலேயருடன் சண்டை செய்வதில் அவ்வளவு உற்சாகமில்லை யாதையால் ஹேஸ்டிங்ஸ் அவனை எளிதில் தன்பக்கம் திருப்பிக்கொண்டான். குஜராத்தில் ஆட்சிசெய்த கெயிக்குவார் வம்சத்தில் அரச பதவிக்காகப் போட்டி யேற்பட்டது. 1780-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கோடார்டு போட்டியிட்டவர்களில் ஒருவன் பக்கம் சேர்ந்துகொண்டு அவன் அரசனுவதற்கு உதவி செய்தான். கோடார்டு அவ்வாறு செய்ததை ஹோல்காரும் சிந்தியாவும் எதிர்த்தார்கள். அவ்விருவரில் மகதாஜி சிந்தியாதான் முக்கியமானவன். அவன் போரிலும் ராஜதந்திரத்திலும் கைதேர்ந்தவன். பூனுவிலிருந்த பீஷ்வாவுக்கு அவன் பெயரளவில் கீழ்ப்படிந்தானே யொழிய உண்மையில் சுதந்திரம் பெற்றவனுகவும், தன் சொந்த முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவனுகவு மிருந்தான். அவன் அதிகாரம் மாளவத்தில் அசைக்க முடியாதபடி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. சரித்திரப் பிரசித்திபெற்ற உஜ்ஜயினி அவனுடைய தலைநகரமாயிருந்தது. ஆக்ராவுக்கும் டில்லிக்கும் செல்லும் பாதையிலிருந்த பலம் பொருந்திய குவாலியர்க் கோட்டை அவனுடைய மிக முக்கியமான நகரமாயிருந்தது. பம்பாயிலிருந்த ஆங்கிலப் படை எதிரிகளுடைய முழுத்தாக்குதலையும் தாங்கும் நிலையில் இல்லை என்

பதை உணர்ந்த ஹேஸ்டிங்ஸ் எதிரிகளின் கவனத்தை வேறு பக்கம் திரும்பும் எண்ணத்துடன் குவாலியர்க் கோட்டையைத் தாக்க ஒரு படையை அனுப்பினான். குவாலியர்க் கோட்டையை யாரும் பிடிக்க முடியாத அவ்வளவு பலம் பொருந்திய கோட்டையென்று அதுவரையில் இந்தியர் கருதி யிருந்தனர். ஆனால் ஓரிரவுத் தாக்குதலில் ஆங்கிலப் படை அந்தக் கோட்டையைப் பிடித்துக் கொண்டது—(ஆகஸ்ட், 1780). இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் சிந்தியா வடக்கு நோக்கி விரைந்தான். அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆங்கிலேயர் அவனைத் தோற்கடித்தனர். அவர்களுடன் சமாதானமா யிருப்பதுதான் தனக்கு நல்லது என்று உணர்ந்த சிந்தியா ஆங்கிலேயருடன் தனிப்பட்ட முறையில் 1781-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான். அதன்பின்னர் அவனே முன்னின்று ஆங்கிலேயருக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் 1782-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஸால்பை என்ற இடத்தில் உடன்படிக்கை செய்து வைத்தான்.

இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் எதிரியின் கவனத்தை வேறுதிசையில் திருப்பியது எதிர்பார்த்தபடி நல்ல பலனைத் தந்தது. மகாராஷ்டிரர்களுடன் சமாதானம் செய்துகொள்வது ஆங்கிலேயருக்கு மிக விரும்பத்தக்க விஷயமாக இருந்தது. ஏனெனில் அந்தச் சமயத்தில் ஆங்கிலேயருடைய நிலை திருப்திகரமாக இல்லை. சிந்தியா வடக்கு நோக்கிச் சென்றுவிட்டான் எனினும், கோடார்டை எதிர்ப்பதற்கு பூனாச் சேனையும் ஹோல்கார் சேனையும் இருந்தன. நிலைமையைச் சமாளிப்பது கோடார்டுக்கு வெகு கஷ்டமாக இருந்தது. அதே சமயத்தில் சென்னையிலிருந்த ஆங்கிலேயர் நிலையும் மோசமாக இருந்தது. மைசூர் அரசனான ஹைதர் அலியின் பலத்தை எதிர்க்க முடியாமல் சென்னைக் கவர்னர் திண்டாடிக் கொண்டிருந்தான். சென்னையிலிருந்த ஆங்கிலத் தலைவர்கள் தியமையற்றவர்களாக இருந்தார்கள். 1780-ஆம் ஆண்டில் ஹைதர் அலி கர்நாடகத்தின்மீது எதிர்ப்பின்றிப் படையெடுத்தான். அதன்பின் ஹைதர் அலியோடு செய்த சண்டையில் ஆங்கிலேயர் மிகவும் திறமைக் குறைவாக நடந்துகொண்டார்கள். ஆகவே, சென்னை கல்கத்தாவின் உதவியை நாடியது. ஹேஸ்டிங்ஸ் உடனே உதவி யனுப்பினான். சண்டை இரண்டாண்டு தொடர்ந்து நடந்தும் முடிவொன்றும் ஏற்படவில்லை. 1782-ஆம் ஆண்டின் இறுதியில் ஹைதர் அலி இறந்தான். அவனுடைய மகனான திப்பு சுல்தான் சண்டையைத்

தொடர்ந்து நடத்தினன். அவனுக்கு உதவியாக ஒரு பெரிய பிரெஞ்சுப் படையும் கடல் மார்க்கமாக வந்து சேர்ந்தது. ஆங்கிலேயப் படைத்தலைவர்கள் திறமையற்றவர்களாகவே இருந்தார்கள். நல்ல வேளையாக இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டதென்று 1783-ஆம் ஆண்டு ஜூன்மாதத்தில் இந்தியாவுக்குச் செய்தி வந்தது. எனினும், திப்புசுல்தான் மாத்திரம் ஆங்கிலேயருடன் சண்டையை நடத்திக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் ஹேஸ்டிங்ஸுக்கும் சென்னைக் கவர்னருக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் ஆங்கிலேயர் நிலைமை இன்னும் மோசமாயிற்று. எனினும் சென்னைக் கவர்னர் திப்பு சுல்தானுடன் இருதிறத்தாருக்கும் நியாயமான ஒரு சமாதான உடன்படிக்கையை நிறைவேற்றினன். அந்த உடன்படிக்கையின் ஷரத்துக்களை ஹேஸ்டிங்ஸ் கண்டித்தான் எனினும் அவற்றை நிராகரிக்கவில்லை. 1785-ஆம் ஆண்டில் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரல் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றான். அதற்குள் 1779-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட முக்கூட்டு ஒப்பந்தம் தோல்வியடைந்துவிட்டது.

வாரன் ஹேஸ்டிங்ஸ் பணம் சம்பாதிப்பதற்காகக் கையாண்ட சில முறைகளைக் கூறி அவனுடைய வரலாற்றை முடித்துவிடலாம். அவற்றுள் அயோத்தி நவாபிடமும், காசி அரசனிடமும் பணம் பறிக்கக் கையாண்ட முறைகள் மிக அருவருக்கத்தக்கவை. வாரன் ஹேஸ்டிங்ஸ் கையாண்ட முறைகள் அவனுடைய குணதிசயங்களை அறிந்துகொள்ளுவதற்கு அனுகூலமாயிருக்கின்றன. அம்முறைகள் கொடுமையானவையாகவும், நேர்மையற்றவையாகவும் இருந்தன. அவன் பணம் சம்பாதிக்கக் கையாண்ட முறைகளும், பொதுவாக அவனுடைய அரசியல் நிர்வாகமும் அவன்மீது பார்லிமெண்டில் துரோகக் குற்றம் சார்த்தப்பட்டபோது பரிசீலனை செய்யப்பட்டன. அந்த வழக்கு 1786-ஆம் ஆண்டிலிருந்து 1795-ஆம் ஆண்டுவரையில் நடந்தது. முடிவில் அவன் குற்றமற்றவன் என்று தீர்ப்புக் கூறப்பட்டது. இங்கிலாந்திலிருந்த நல்லெண்ணமுள்ள பெரிய மனிதர்களெல்லாம் இந்திய நிர்வாகம் நேர்மையுடனும் நீதியுடனும் நடக்கவேண்டுமென்று விரும்பினர்கள் என்ற உண்மையை வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது தொடரப்பட்ட வழக்கு நிரூபிக்கிறது.

இந்திய அரசர்களிடமிருந்த படைகளில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களுடைய மேற்பார்வையில் நவீனப் போர்முறைகள்

புகுத்தப்பட்ட விஷயத்தைப்பற்றிக் கூறி இந்த அதிகாரத்தை முடிக்கலாம். இந்தத் துறையில் முதல் முதலில் சிரத்தை காட்டிய இராஜ்யம் திருவிதாங்கூர். பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் திருவிதாங்கூர்ப் போர்வீரர்களுக்கு ஐரோப்பிய உத்தியோகஸ்தன் ஒருவன் பயிற்சியளித்தான். பின்னர், ஹைதர் அலி திருவிதாங்கூரின்மீது படையெடுத்தபோது அந்த இராஜ்யத்தின் சேனைகள் அவனை வெற்றிகரமாக எதிர்த்தன என்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் அந்த நூற்றாண்டின் கடைசிக் கால்பாகத்தில் தான் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களைக்கொண்டு போர்வீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறை இந்தியாவில் அதிகமாகப் பரவியது. சிந்தியா, ஹோல்கார், நிஜாம் ஆகிய அரசர்களுடைய படைகளெல்லாம் ஐரோப்பிய முறைகளில் — பெரும்பாலும் பிரெஞ்சு வீரர்களால் — பயிற்சி யளிக்கப்பட்டவை. ஆகவே கிளைவ் காலத்தில் ஆங்கிலேயரை எதிர்த்த இந்தியப் படைகளுக்கும், ஹேஸ்டிங்ஸ் காலத்தில் அவர்களை எதிர்த்த படைகளுக்கும் அதிக வேறுபாடு இருந்தது. வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஆங்கிலேயரை எதிர்த்த இந்தியப்படைகள் ஐரோப்பிய முறைகளிற் பயிற்சி பெற்றிருந்ததோடு பெரும்பாலும் ஐரோப்பியச் சேனாதிபதிகளின் தலைமையிற் சண்டை செய்தன. கிளைவ் காலத்தில் ஆங்கிலேயரை எதிர்த்த இந்தியப் படைகளோவெனில் தொன்றுதொட்டு வந்த இந்தியப்போர் முறைகளிற் பயிற்சி பெற்றவை. அத்தகைய படைகளை நவீனப் போர்முறைகளைக் கையாண்ட ஆங்கிலப்படைகள் அதிகக் கஷ்டமின்றித் தோற்கடித்தன.

அதிகாரம்—38

காரன் வாலிஸ் முதல் வெல்லெஸ்லி வரை

ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலாக இருந்த காலத்தின் பிற்பகுதியில் இங்கிலாந்திலிருந்த அரசியற் கட்சிகளுக்குள் இந்திய விவகாரங்களைப்பற்றி மிகுந்த கருத்து வேறுபாடு இருந்தது. அதன் பயனாக 1784-ஆம் ஆண்டில் பிட் இந்தியச் சட்டம் என்ற சட்டத்தைப் பார்லிமெண்டு நிறைவேற்றியது. 1786-ஆம் ஆண்டில் இன்னும் சில சட்டங்களைப் பார்லிமெண்டு இயற்றியது. 1784-ஆம் ஆண்டிலும் 1786-ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட சட்டங்களின் பயனாக நிறுவப்பட்ட இந்திய அரசியல் திட்டத்

தின் அடிப்படை அம்சங்கள் 1858-ஆம் ஆண்டுவரையில் நிலைத்திருந்தன. அந்தத் திட்டத்தின்படி கம்பெனி விவகாரங்களைக் கவனிப்பதற்கு மேற்பார்வை போர்டு (Board of control) ஏற்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்க மந்திரிகளில் ஒருவன் அதன் தலைவனாக இருக்கவேண்டுமென்று ஏற்பட்டது. நாளடைவில் அந்தப் போர்டின் அதிகாரம் முழுவதையும் அதன் தலைவனே வகிக்கும் நிலைமை ஏற்பட்டது. இவ்வாறு பிரிட்டிஷ் மந்திரிசபை இந்திய விவகாரங்களைப் பொறுத்தவரையில் எல்லா அதிகாரத்தையும் நிர்வகிக்கும் நிலைமை ஏற்பட்டது. ஆனால் நடைமுறையில் முக்கியமான விஷயங்களையெல்லாம் தலைவனும் கம்பெனி நிர்வாகதஸ்தர்களும் கலந்து ஆலோசித்து முடிவு செய்வது வழக்கமாயிருந்தது. அந்தக் காலம்முதல் கம்பனியின் உத்தியோகஸ்தர்களில் ஒருவரைக் கவர்னர் ஜெனரலாக நியமிக்கும் பழக்கம் பெரும்பாலும் கைவிடப்பட்டது. அவசியமான சமயங்களில் கவர்னர் ஜெனரல் தன்னுடைய ஆலோசனைக் கவுன்சிலின் தீர்மானங்களை நிராகரித்துக் காரியங்களைச் செய்யலாம். சென்னைக் கவர்னரும் பம்பாய்க் கவர்னரும் அவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். தேவையானால் கவர்னர் ஜெனரலே பிரதம சேனாதிபதிப் பதவியையும் வகிக்கலாம். இவ்வாறு கவர்னர் ஜெனரல் பதவிக்கு உண்மையிலேயே சகல அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. பிரிடிஷ் மந்திரிசபையின் ஆதரவிருக்கும்வரையில் கவர்னர் ஜெனரல் இந்தியாவில் கம்பனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட எல்லாப் பிரதேசங்களிலும் தனக்குச் சரியென்று தோன்றிய முறையில் ஆட்சி புரியலாம்.

இத்தகைய அதிகாரங்களோடு கவர்னர்ஜெனரல் பதவியை முதன் முதலில் வகித்தவன் லார்டு காரன்வாலிஸ் (1786-1793). அரசியல் நிர்வாகத்தை ஒழுங்காக அமைப்பதுதான் இந்தியாவில் அவன் செய்யவேண்டியிருந்த முக்கிய வேலை. எனினும் அவனால் சண்டையை முழுவதும் தவிர்க்க முடியவில்லை. ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையில் அந்தச் சமயத்தில் சமாதானம் நிலவியது. எனினும், பிரெஞ்சு அரசியல் வாதிகள் எப்படியாவது மறுபடியும் இந்தியாவில் பிரான்சின் அதிகாரத்தை ஸ்தாபிக்க முடியும் என்ற நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஹாலந்தின்மீது பிரான்சுக்கு இருந்த செல்வாக்கையும், பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட சிந்தியாவின் சேனைகளையும், நிஜாமின் சேனைகளையும், திப்புசுல்தான் ஆங்கிலேயர்மீது கொண்டிருந்த பகைமையையும், ஆங்கிலேயருக்கு விரோதமாக உபயோ

கித்துத் தங்கள் எண்ணத்தை முடித்துக்கொள்ளலாமென்று பிரெஞ்சுக்காரர்கள் நம்பினூர்கள். ஆகவே, அந்தச் சமயத்தில் ஆங்கிலேயர்களுக்கும் இந்திய அரசர்களுக்கும் இருந்த தொடர்பு சமாதானத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் காரன் வாலிஸ் ஐரோப்பிய விவகாரங்களையும் இந்திய விவகாரங்களையும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியிருந்தது.

வங்காள அரசியல் நிர்வாகத்தில் காரன்வாலிஸ் செய்த வேலைகளை முதலில் கவனிக்கலாம். நடைமுறையில் பயன்படக் கூடிய சரியான நிர்வாகத் திட்டத்தை வாரன்ஹேஸ்டிங்ஸ் தயாரிக்க முடியவில்லை. எனினும், அவனுடைய ஆட்சிக்காலத்தில் கம்பனி உத்தியோகஸ்தர்கள் சரியான நிர்வாக முறைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டேயிருந்தார்கள். அதன் பயனுக அவர்கள் காரன்வாலிஸ் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே ஒரு திட்டத்தை வெளியிட்டார்கள். அந்தத் திட்டத்தையும் கம்பனி நிர்வாகஸ்தர்கள் தனக்குக் கூறியனுப்பிய ஆலோசனை களையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு காரன்வாலிஸ் ஒரு புதிய திட்டத்தைத் தயாரித்தான். அந்தத் திட்டம் பத்தொன்ப தாம் நூற்ருண்டு முழுவதும் வழக்கிலிருந்தது. முதலில் வங்காளத்தில் தொடங்கி, அது கொஞ்சங் கொஞ்சமாக இந்தி யாவின் பெரும்பகுதியிற் பரவியது. அரசாங்க உத்தியோகஸ் தர்கள் கீழ்ப்படிதலும் நேர்மையும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று காரன்வாலிஸ் வற்புறுத்தினுன். தன்னுடைய மேலதிகாரிகளிடத்தில் தான் பூரண விசுவாசத்துடன் நடந்து கொண்டது போலவே எல்லா உத்தியோகஸ்தர்களும் தங்கள் மேலதிகாரிகளிடம் நடந்துகொள்ளவேண்டுமென்று காரன் வாலிஸ் விரும்பினுன். உத்தியோகஸ்தர்கள் அனுசரிக்கவேண்டிய விதிகளையெல்லாம் தொகுத்து 1793-ஆம் ஆண்டில் காரன் வாலிஸ் வெளியிட்டான். உத்தியோகஸ்தர்கள் அந்த விதிகளின் படி தங்கள் காரியங்களை நடத்தவேண்டுமேயன்றித் தங்க ளிஷ்டம்போல் எதையும் செய்யக்கூடாது.

கம்பனியின் வியாபாரமும், அரசியல் நிர்வாகமும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்ட விஷயம் ஏற்கெனவே சொல்லப்பட் டிருக்கிறது. காரன்வாலிஸ் இந்தியாவுக்கு வந்தபோது கம் பனியின் வியாபாரத்தைக் கவனிப்பதற்கு ஏற்படுத்தப்பட் டிருந்த வியாபார போர்டு அதன்கீழ் வேலைசெய்த உத்தியோகஸ் தர்களையே ஏற்றுமதிக்கு வேண்டிய சரக்குகளை வாங்கும் கண்டி ராக்டர்களாக நியமிக்கும் பழக்கம் இருந்தது. அந்தக் கண்டிராக்

டர்கள் தங்களுடைய சொந்த லாபத்தைக் கருதிக் கம்பனியை ஏமாற்றி வந்தார்கள். மேலும், அவர்கள் இந்தியர்களைத் துன்-புறுத்தியும் கட்டாயப்படுத்தியும் சரக்குகளைக் குறைந்த விலைக்கு வாங்கினார்கள். காரன்வாலிஸ் வியாபார போர்டின் உத்தியோகஸ்தர்களைக் கண்டிராக்டர்களாக நியமிக்கும் பழக்கத்தை நிறுத்தினான். இந்தச் சீர்திருத்தம் சிறந்த பயனைத் தந்தது. ஆனால் நாளடைவில் வியாபார விஷயங்களில் கம்பனியின் சிரத்தை குறைந்துகொண்டே வந்தது என்பதை இவ்விடத்தில் சொல்லுவது பொருந்தும். 1813-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பட்டயச் சட்டத்தின்படி கம்பெனிக்கு இந்திய வியாபாரத்திலிருந்த தனியுரிமை ரத்துச்செய்யப்பட்டது. ஆனால் சீன வியாபாரத்தின் தனியுரிமை மேலும் இருபதாண்டுகள் இருந்தது. முடிவாக 1833-ஆம் ஆண்டில் கம்பனிக்கும் வியாபாரத்திற்கும் சம்பந்தமில்லாமலே போயிற்று.

அரசியல் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதில் காரன்வாலிஸ் சில கஷ்டமான பிரசினைகளைத் தீர்க்கவேண்டியிருந்தது. இந்த விஷயத்தில் சிறிது சிறிதாகச் சீர்திருத்தம் செய்து முடிவில் 1793-ஆம் ஆண்டில் அரசியல் அமைப்புக்கு வேண்டிய விதிகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டான். அந்த அமைப்பைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். கவர்னர் ஜெனரல் இந்திய அரசியலின் தலைவன். கவர்னர் ஜெனரலுக்கு ஆலோசனை கூற ஒரு கவுன்சில் இருக்கவேண்டும். கவர்னர் ஜெனரலுக்கு நிர்வாக விஷயத்தில் உதவி செய்வதற்குத் தேவையான குமாஸ்தாக்கள் முதலிய அதிகாரிகள் இருக்கவேண்டும். வரி வசூல் விஷயங்களை ரெவின்யூ போர்டும், வியாபார விஷயங்களை வியாபார போர்டும் கவனிக்கவேண்டும். மாகாணங்கள் ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு ஜில்லாவிலும் அமைதியைக் காக்கவும், நீதி வழங்கவும், வரி வசூலிக்கவும் உத்தியோகஸ்தர்கள் இருக்கவேண்டும். மொகலாயர்காலத்தில் அமைதியைக் காப்பதற்கும் வரி வசூலிப்பதற்கும் தனித்தனி உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். நியாயப்படி பார்த்தால் அமைதியைப் பாதுகாப்பதற்கு மாஜிஸ்-டிரேட்டும், வரி வசூலிக்கக் கலெக்டரும், நீதி வழங்க ஜட்ஜும், ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கவேண்டும். ஆனால், அரசியல் நிர்வாக அமைப்புச் சிக்கனமாகவும், சுருக்கமாகவும் இருக்க வேண்டுமென்று காரன்வாலிஸுக்குக் கம்பனி நிர்வாகஸ்தர்கள் சொல்லியிருந்தார்கள். ஆகையால், ஆரம்பத்தில் இந்த மூன்று முக்கிய வேலைகளையும் ஒரே உத்தியோகஸ்தன் செய்யவேண்டும்

என்று காரன்வாலிஸ் ஏற்பாடு செய்தான். ஆனால் வரி வசூல், அமைதியைக் காத்தல் ஆகிய இரு வேலைகளையும் மாஜிஸ்டிரேட்-கலெக்டர் செய்யவேண்டும் என்றும், ஜட்ஜு நீதி வழங்கவேண்-டும் என்றும் காரன்வாலிஸ் முடிவாக ஏற்பாடு செய்தான். இந்த ஏற்பாடு எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்படவில்லை. கொஞ்ச காலம் அமைதியைக் காத்தல், நீதிவழங்கல் ஆகிய இருவேலைகளும் ஒரே உத்தியோகஸ்தனுக்கு (ஜட்ஜு - மாஜிஸ்டிரேட்) க் கொடுக்கப்பட்டன. ஆனால், நாளடைவில் காரன்வாலிஸ் செய்த ஏற்பாடே பொதுவாக எல்லா ஜில்லாக்களிலும் அமுலுக்கு வந்தது.

தற்காலப் போலீஸ் இலாக்காவுக்கும் காரன்வாலிஸ்தான் அடிகோலினான். முகமதியர் ஆட்சிக்காலத்தில் திட்டமான போலீஸ் இலாக்கா இருந்ததென்று கூற முடியாது. ஒவ்வொரு கிராமத்திலும், கிராமக் காவலாளிகள் இருந்தனர். அவர்கள் பரம்பரையாக அதே தொழிலைச் செய்தார்கள். அவர்கள் சாதாரணமாகக் கிரிமினல் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். பெருங்குற்றங்களைத் தடுப்பதற்கு இராஜப்பிரதிநிதிகள் தங்களிடமிருந்த போர்வீரர்களை உபயோகித்தனர். ஆங்காங்கிருந்த கவர்னர்கள் தங்களிடமிருந்த பரிவாரங்களை உபயோகப்படுத்திக் குற்றங்களைத் தடுத்து அமைதியைக் காத்தனர். இவ்வாறு முன்னர்க் கவர்னர்கள் செய்து வந்த வேலையை இப்போது வங்காளத்தில் நிலச்சுவான்தாரர்கள் செய்துவந்தார்கள். அவர்கள் பரிவாரங்களை வைத்துக்கொள்ளக் கூடாதென்று காரன்வாலிஸ் உத்தரவிட்டு ஒவ்வொரு ஜில்லாவிலும் போலீஸ் உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி, மாஜிஸ்டிரேட்டின் அதிகாரத்திற் கடங்கி அவர்கள் அமைதியைக் காக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்தான்.

இவ்வாறு காரன்வாலிஸ் ஏற்படுத்திய அரசியல் நிர்வாக அமைப்பின் பயனாகப் பெருவாரியான ஆங்கிலேயர்கள் இந்திய அரசாங்கத்தின் உத்தியோகத்தில் அமர்ந்தது குறிப்பிடத்தக்கது. வாரன்ஹேஸ்டிங்ஸ் சில முக்கியமான பதவிகளில் இந்தியர்களை நியமித்திருந்தான். முக்கியமாகக் கிரிமினல் நீதி பரிபாலனத்தில் இந்தியர்கள் பலர் உத்தியோகம் வகித்தனர். ஆனால் காரன்வாலிஸ் முக்கியமான பதவிகளிலெல்லாம் ஆங்கிலேயரை அமர்த்திக் கீழ்த்தரமான உத்தியோகங்களை மாத்திரம் இந்தியர்களுக்குக் கொடுத்தான், அரசாங்க அலுவல்களெல்லாம் நேர்மையாக நடைபெற வேண்டுமென்று காரன்வாலிஸ் விரும்பியதாலும், அந்தச்

சமயத்தில் இந்திய உத்தியோகஸ்தர்களிடம் பூர்ண நேர்மையை எதிர்பார்க்க முடியாதென்று அவன் நினைத்ததாலும் உயர்ந்த பதவிகளுக்கு ஆங்கிலேயரை நியமித்தான். பிற்காலத்தில் இந்திய உத்தியோகஸ்தர்கள் நேர்மையாக நடந்துகொண்டார்கள் என்றாலும் காரன்வாலிஸ் அனுசரித்த முறையையே அவனுக்குப் பின்வந்த கவர்னர் ஜெனரல்களும் அனுசரித்தனர்.

காரன்வாலிஸ் ஏற்படுத்திய அரசியல் நிர்வாகமுறை இந்தியாவில் "சட்டத்தின் ஆட்சியை" ஆரம்பித்து வைத்தது என்று சொல்லலாம். ஆனால் சட்ட வரம்பிற்குட்பட்ட ஆட்சி முறை எவ்வாறு நடக்கவேண்டும் என்பதற்குரிய விதிகளைக் காரன்வாலிஸ் ஏற்படுத்தினான் எனினும் நல்லாட்சிக்கு அடிப்படையான சட்டங்களைக் காரன்வாலிஸ் ஏற்படுத்தவில்லை. ஆங்காங்கிருந்த கோர்ட்டுகள் ஏற்கெனவே யிருந்த இந்து முகமதியச் சட்டங்களின்படி தீர்ப்புக் கூறின. ஆனால் அந்தச் சட்டங்களின் மூலநூல்களை ஆங்கில நீதிபதிகள் படிக்க முடியாதாகையால், அவற்றைப்பற்றிய விஷயங்களை அதற்கென்றே நியமிக்கப்பட்ட நிபுணர்களின் மூலமாக அறிந்துகொள்ளவேண்டியதாயிருந்தது. இது திருப்திகரமான நிலையன்று. நாளடைவில் அந்நூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. ஆகவே, நீதிபதிகள் அவற்றைப் படித்துச் சட்டங்களை யறிந்துகொண்டார்கள். 1794-ஆம் ஆண்டில் ஸர்-வில்லியம் ஜோன்ஸின் மனுதர்ம சாஸ்திர மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டது. அதன்பிறகு ஆங்கில முறையில் இந்துச் சட்டம் வியாக்கியானம் செய்யப்பட்டுத் தெளிவும் அதிகாரமும் பெற்றது.

இவ்வாறு இந்துச் சட்டத்தில் ஏற்பட்ட மாறுதல் முழுதும் நன்மை பயந்தது என்று கூறமுடியாது, இந்துச் சமூக அமைப்பு அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்களுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு மாற்றியமைக்குந்தன்மை வாய்ந்தது. பண்டிதர்கள் பழைய நூல்களைப் புதியமுறையில் வியாக்கியானம் செய்து சமயத்திற்கு ஏற்றவாறு பொருள்கூறிப் புதிய பழக்க வழக்கங்கள் சமூகத்திற் பரவுவதற்கு இடமளித்து வந்தார்கள். ஆனால் அந்நூல்களின் மொழி பெயர்ப்புக்களை வைத்துக்கொண்டு நீதி பரிபாலனம் நடத்திய ஆங்கிலேயர் ஆங்கிலச் சொல்லாட்சிகளையும், அவற்றிற்கு அவர்களுக்கு முன்னிருந்த ஆங்கிலேய நீதிபதிகள் செய்த வியாக்கியானங்களையும் சிறிதும் பிறழாமற் பின்பற்றினார்களாகையால் சமயத்திற் கேற்றவாறு தீர்ப்புக் கூறிப் புதிய பழக்க வழக்கங்கள் ஏற்படுவதற்கு இடமளிக்க முடியவில்லை. மேலும்,

இந்தச் சட்டம் மதத்தை அடிப்படையாகக் கொண்டதாகையால் அந்தத் துறையில் நுழைந்து புதிய கருத்துக்களை வெளியிடுவதற்கு ஆங்கிலேயர் தயங்கினர். இவ்வாறு இந்து சமுதாயத்தில் மாறுதல்கள் ஏற்படுவதற்கு வழியில்லாமற் போயிற்று. அதனால் எளிதில் சமூகச் சீர்திருத்தம் ஏற்படக்கூடாத நிலையுண்டாகியது.

நிலவரி வசூல் முறையில் காரன்வாலிஸ் ஒரு முக்கியமான சீர்திருத்தம் செய்தான். நிலச்சுவான்தாரர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தொகையைச் சாசுவதமாக நிர்ணயித்துவிடவேண்டுமென்று கம்பனி நிர்வாகஸ்தர்கள் விரும்பினார்கள். அதனால் நிலச்சுவான்தாரர்கள் ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையை நிர்ணயித்து, அதே தொகையை அவர்கள் அடுத்த பத்து ஆண்டுகளுக்குச் செலுத்தும்படி முதலில் ஏற்பாடு செய்யும்படி கம்பனிக் காரன்வாலிஸுக்கு உத்தரவிட்டது. அதன்படி நிலவரியை நிர்ணயிக்கும் வேலையைக் காரன்வாலிஸ் ஆரம்பித்தான். அவ்வேலை 1790-ஆம் ஆண்டில் முடிவுபெற்றது. ஒவ்வொரு நிலச்சுவான்தாரரும் அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் எவ்வளவு தொகையை வரியாகச் செலுத்தவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்த ஏற்பாட்டைப் பத்தாண்டுக்குப் பின்னர்ப் பரிசீலனைசெய்து அவசியமானால் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டிய தொகையை ஏற்றியோ, குறைத்தோ மாற்றியமைக்கவேண்டும் என்று காரன்வாலிஸின் ஆலோசனையாளர்கள் கூறினார்கள். ஆனால் காரன்வாலிஸ் அவ்வாறு செய்வது அவசியம் இல்லை என்றும், அப்போது நிர்ணயிக்கப்பட்ட தொகைகளையே சாசுவதமாக நிர்ணயித்து விடவேண்டும் என்றும் கூறினான். கம்பனியதிகாரிகள் காரன்வாலிஸின் யோசனையை அங்கீகரித்தார்கள். அதனால் 1793-ஆம் ஆண்டில் வங்காளத்தில் சாசுவத நிலவரித்திட்டம் சட்ட பூர்வமாக அமுலுக்கு வந்தது.

காரன்வாலிஸும் கம்பனியும் இந்தச் சாசுவத நிலவரித் திட்டத்தை ஆதரிப்பதற்கு இரண்டு காரணங்களிருந்தன. முதலாவது, சாசுவத நிலவரித் திட்டத்தினால் அரசாங்கத்தின் வேலை குறைவதோடு ஒவ்வோராண்டும் அரசாங்கத்திற்கு எவ்வளவு பணம் நிலவரியின்மூலம் வசூலாகும் என்பது திண்ணமாகத் தெரிந்துவிடும். அவ்வப்போது நிலவரியை நிர்ணயிப்பது கஷ்டமான காரியம். மேலும் பொருளாதார நிலையும் அதனால் பாதிக்கப்படும். காரன்வாலிஸ் இந்தத் தொந்தரவான வேலையிலிருந்து தன் உத்தியோகஸ்கர்களை விடுவித்து, அவர்களை வேறு

அலுவல்களைக் கவனிக்குமாறு ஏற்பாடு செய்யவிரும்பினான். இரண்டாவது, நிலச்சுவான்தார்கள் ஒரு குறிப்பிட்ட தொகையைத் தவிர அதிகமாக அரசாங்கத்திற்கு வரி செலுத்தவேண்டியதில்லை யென்ற உறுதி யேற்பட்டுவிட்டால், அவர்கள் தங்கள் நிலங்களை அபிவிருத்தி செய்து பயிர்த்தொழிலை முன்னேற்றித் தங்கள் செல்வத்தைப் பெருக்குவதன் மூலம் நாட்டின் செல்வத்தையும் பெருக்குவார்கள் என்று காரன்வாலிஸ் எதிர்பார்த்தான். ஆனால் அதற்குப் பதிலாக நிலச்சுவான்தார்கள் குடியானவர்களிடமிருந்து எவ்வளவு வசூலிக்க முடியுமோ அவ்வளவும் வசூலிக்க முயன்றார்கள். ஜனத்தொகை பெருகப்பெருக விவசாயத்தை ஜீவனோபாயமாகக்கொண்ட மக்களும் அதிகரித்தார்கள். ஆகவே அவர்களுக்குள் போட்டியை ஏற்படுத்தி யார் அதிகத் தொகை கொடுக்க ஒத்துக்கொண்டார்களோ அவர்களுக்கு நிலத்தைக் கொடுத்துவிட்டு மற்றவர்களைத் தங்கள் நிலங்களிலிருந்து நிலச்சுவான்தார்கள் துரத்தினார்கள். இதனால் குடியானவர்களுக்குப் பெருந்துன்பம் ஏற்பட்டது.

சாசுவத நிலவரித் திட்டத்தினால் இன்னொரு தீமையும் ஏற்பட்டது. குறித்த காலத்தில் நிலவரியை அரசாங்கத்திற்குச் செலுத்தத் தவறிய நிலச்சுவான்தார்களின் உரிமை ஏலத்தில் விடப்பட்டது. அதனால் பல பழைய நிலச்சுவான்தார்கள் தங்கள் உரிமைகளை இழந்தார்கள். பணம் தேடுவதையே கருத்தாகக்கொண்ட புதிய ஆட்கள் நிலச்சுவான்தார்களானார்கள். அவர்களுக்கும் அவர்கள் நிலங்களைப் பயிரிட்ட குடியானவர்களுக்கும் எந்தவிதமான அன்பும் தொடர்பும் இல்லை. குடியானவர்களிடம் எவ்வளவு பணம் வசூலிக்கமுடியுமோ அவ்வளவையும் வசூலிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு நல்ல நோக்கம் எதுவும் இருக்கமுடியாது.

இனி, காரன்வாலிஸ் காலத்திய இந்திய அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றிப் படிப்போம். காரன்வாலிஸ் காலத்தில் ஆங்கிலேயருக்கும் திப்பு சுல்தானுக்கும் சண்டையேற்பட்டது. 1784-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையைத் திப்புசுல்தான் வெறுத்தான். மேலும், தன்னுடைய அதிகாரத்தைப் பெருக்கவேண்டுமென்று அவன் பெரிதும் விரும்பினான். அதற்காக அவன் முதலில் மகாராஷ்டிரர்களையும் நிஜாமையும் ஒழித்துவிட்டு, அதன்பின்னர் ஆங்கிலேயரைத் தென்னிந்தியாவிலிருந்து துரத்திவிட வேண்டுமென்று திட்டமிட்டான். ஆகவே, 1786-ஆம் ஆண்டில் அவன் மகாராஷ்டிரர்களுடனும்

நிஜாமுடனும் சண்டை தொடுத்தான். ஆனால் அவர்களுடைய அதிகாரத்தை அழிக்க அவனால் முடியவில்லை. அதன்பின் அவன் ஆங்கிலேயருக்கு எதிராக உதவி செய்யும்படி பிரெஞ்சு அரசாங்கத்துக்குத் தூது அனுப்பினான். பிரெஞ்சு அரசாங்கம் அவனுடைய எண்ணத்திற்கு ஊக்கமளித்ததே தவிர உதவியனுப்புவதாக வாக்களிக்கவில்லை. 1789-ஆம் ஆண்டில் திப்புசுல்தான் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டிருந்த திருவிதாங்கூரைத் தாக்கினான். அதனால் காரன்வாலிஸ் அவ்விஷயத்தில் தலையிடவேண்டியதாயிற்று. ஆகவே, அவன் மகாராஷ்டிரர்களுடனும் நிஜாமுடனும் உடன்படிக்கை செய்துகொண்டு, மைசூரின்மீது போர் தொடங்கினான். 1790-இல் நடந்த சண்டையில் ஆங்கிலேயர் வெற்றி பெருததால், காரன்வாலிஸே சேனைத் தலைமைபூண்டு யுத்தம் நடத்தி, 1792-ம்ஆண்டின் தொடக்கத்தில் திப்புவின் தலைநகரமான சீரங்கபட்டினத்தை முற்றுகையிட்டான். உடனே திப்புசுல்தான் சமாதானம் செய்துகொண்டான். அதன்படி ஏறத்தாழ அவனுடைய இராஜ்யத்தில் பாதியைக் கொடுத்துவிட அவன் ஒப்புக்கொண்டான். அவ்வாறு கிடைத்த பிரதேசத்தின் பெரும் பகுதியைக் காரன்வாலிஸ் நிஜாமுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் பங்குபோட்டுக் கொடுத்துவிட்டான். ஆனால், அத்துடன் மைசூர் விவகாரங்கள் முடிந்துவிடவில்லை. சில ஆண்டுகளில் இன்னும் ஒரு மைசூர் யுத்தம் ஏற்படவிருந்தது.

கம்பனியின் செல்வாக்குக் குட்பட்ட அவுத் கர்நாடகம் ஆகிய இரண்டு ராஜ்யங்களிலும் மிகவும் மோசமான ஆட்சி நடந்துகொண்டிருந்தது. எனினும், காரன்வாலிஸ் காலத்தில் இந்த இராஜ்யங்களின் நிலையில் முக்கியமான மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. மகதாஜி சிந்தியா தன்னுடைய இராஜ்யத்தைப் பெருக்குவதிலும், பலப்படுத்துவதிலும் முனைந்திருந்தான். முதலில் அவன் திட்டம் வெற்றிபெறவில்லை. பிரெஞ்சு உத்தியோகஸ்தர்களால் பயிற்சியளிக்கப்பட்ட அவனுடைய சேனைக்கு அதிகச் செலவாயிற்று. அதனால் அவனுக்குப் பணநஷ்டம் ஏற்பட்டது. இராஜபுத்திரர்களிடம் அவன் தோல்வியடைந்தான். 1788-ஆம் ஆண்டில் ஆப்கானியப் போர்வீரன் ஒருவன் டில்லியைக் கைப்பற்றி, அரண்மனையைக் கொள்ளையடித்து, ஷாஆலத்தின் கண்களையும் பிடுங்கிவிட்டான். ஆனால், அடுத்த ஆண்டிலிருந்து சிந்தியாவுக்கு நல்ல காலம் திரும்பியது. சிந்தியா டில்லியை மீட்டு, பெயரளவில் சக்கரவர்த்தியாய் இருந்த ஷா

ஆலத்தை மறுபடியும் சிம்மாசனம் ஏற்றி, அவனுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தில் தன்னுடைய அதிகாரத்தை மறுபடியும் நிலைநாட்டினுன். அதன்பின் அவன் இராஜபுத்திரர்களைத் தோற்கடித்தான். 1793-ஆம்ஆண்டில் அவன் ஹோல்காரைத் தோற்கடித்தான். அதுவரையில் ஹோல்கார் சிந்தியாவுக்கு விரோதமாகப் பூனுவிலிருந்த மந்திரிகளுடன் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தான். பூனு மந்திரிகள் சிந்தியா மற்ற மகாராஷ்டிரத் தலைவர்களைவிட மிக அதிகமான பலம்பெறுவதை விரும்பவில்லை. ஆனுல் 1793-ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிந்தியா மிகுந்த பலம் பெற்றுவிட்டான். அதன்பின் அவன் பூனுவிலும் தன் அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்கத்துடன் அங்குச் சென்ருன்.

இந்தியாவின் அரசியல்நிலை இவ்வாறிருந்த சமயத்தில் 1793-ஆம் ஆண்டு காரன்வாலிஸ் கவர்னர்ஜெனரல் பதவியிலிருந்து விலகினுன். பின்னர் ஸர்ஜான் ஷோர் என்பவன் கவர்னர் ஜெனரலானுன். ஷோர் சுமார் இருபத்தைந்தாண்டுகள் கம்பனியின் உத்தியோகத்திலிருந்து சிறிது சிறிதாக உயர்ந்து இறுதியில் ரெவின்யு போர்டின் தலைமைப்பதவியை வகித்தவன். கம்பனியின் உத்தியோகத்தில் விசுவாசத்துடன் உழைத்துவந்த ஷோர் காரன்வாலிஸ் தொடங்கிய அரசியல் நிர்வாக அமைப்புக்கு முழு வளர்ச்சியையும் அளித்தான். கம்பனியின் ஆதிக்கத்திற்குப் புறம்பான பிறதேசங்களின் விஷயத்தில் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினுன். ஆனுல் அப்போது இருந்த நிலையில் இந்தியாவின் அரசியல் விஷயங்களில் தலையிடுங் கொள்கையை ஷோர் கையாண்டிருந்தால் அது இங்கிலாந்துக்கு மாத்திரமின்றி இந்தியாவுக்கும் நன்மையை அளித்திருக்கும். ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் சில முக்கியமான நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக விரைவாக ஏற்பட்டன, ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது. அப்போர் கொஞ்சம் கொஞ்சம் இடைவிட்டு 1815-ஆம் ஆண்டுவரையில் நடந்தது. இந்தியாவில் பல முக்கியமான மனிதர்கள் குறுகிய காலத்தில் ஒருவர்பின் ஒருவராக இறந்தார்கள். எப்போதுமே அரசியல் அமைப்பைவிட அரசர்கள்தாம் இந்திய இராஜ்யங்களில் முக்கியமாக இருந்திருக்கின்றனர். ஆகவே, அவர்களிற் பலர் மாண்டுபோனது இந்திய அரசியல் விவகாரங்களில் பெரிய மாறுதல்களை உண்டாக்கிற்று. 1794-ஆம் ஆண்டில் மகதாஜி சிந்தியா திடீரென்று இறந்துபோனுன். அவனுக்குப்பின் அவனுடைய சுற்றத்தான்

தௌலத்துராவ் அரசனானன். அவன் இளவயதினன். மாளவத்தின் அமைதிக்கும் செழிப்புக்கும் காரணமாயிருந்த ஹோல்கார் ராணியான அஹல்யாபாய் 1795-இல் இறந்தாள். அவளுக்குப் பின்வந்த ஹோல்கார் அரசனும் சிறிதுகாலத்தில் இறந்து போகவே மாளவத்தில் குழப்பம் ஏற்பட்டது. 1795-ஆம் ஆண்டில் பீஷ்வா தற்கொலை செய்துகொண்டதால் பூனாவிலும் அதிகாரத்திற்காகப் பல சூழ்ச்சிகள் நடந்தன. அதே ஆண்டில் ஆர்க்காட்டு நவாப் இறந்தான். 1797-ஆம் ஆண்டில் அவுத் நவாப் இறந்தான். இவ்வாறு இந்திய அரசியல் விவகாரங்கள் குழப்பமான நிலையிலிருந்த சமயத்தில் வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலானான்.

இதற்குள் நெப்போலியன் ஆசியாவிலும் தன் அதிகாரத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று கொண்டிருந்த எண்ணம் அனைவருக்கும் தெரிந்துவிட்டது. பிரெஞ்சுச் சேனைகள் ஏற்கனவே எகிப்தில் வந்து இறங்கிவிட்டன. வெல்லெஸ்லி 1798-முதல் 1805-வரையில் கவர்னர் ஜெனரலாயிருந்தான். ஐரோப்பாவில் பிரான்சுக்கும் இந்தியாவுக்கும் நடந்துவந்த யுத்தத்தில் வெல்லெஸ்லி அதிகக் கவனம் செலுத்தினான். பிரெஞ்சுக்காரர்கள் எண்ணங்களைத் தோற்கடிப்பதற்கு இந்தியாவில் என்னென்ன செய்ய முடியுமோ அதனையெல்லாம் செய்யவேண்டுமென்பது வெல்லெஸ்லியின் முக்கிய நோக்கம். ஆகவே வெல்லெஸ்லி தன் கவனத்தை முதலில் தென்னிந்தியாவின்மீது திருப்பினான். ஐதராபாத்துச்சேனைகள் பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்டவை. அவைகள் எந்தச் சமயத்திலும் ஆங்கிலேயரைத் தாக்கக்கூடும். திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரருடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு முயன்றுகொண்டிருந்தான். உண்மையில் ஒரு சிறிய பிரெஞ்சுப்படை மரீஷியஸிலிருந்து திப்புசுல்தானுக்கு உதவியாக ஏற்கெனவே வந்திருந்தது. முதலில் வெல்லெஸ்லி நிஜாமுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு ஐதராபாத்தின் வழியாக ஆங்கிலேயருக்கு ஆபத்து ஏற்படாதவாறு செய்துகொண்டான். அதன்பின் பிரெஞ்சுக்காரருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை ரத்துச்செய்துவிடும்படி திப்புசுல்தானுக்குக் கூறினான். அதற்காக வெல்லெஸ்லி விதித்த நிபந்தனைகளை ஒத்துக்கொள்ளத் திப்பு மறுத்ததால் 1799-ஆம் ஆண்டில் வெல்லெஸ்லி மைசூரின்மீது போர் தொடுத்தான். விரைவில் சீரங்கபட்டினம் முற்றுகையிடப்பட்டது. அந்த ஆண்டு மேமாதத்தில்

அந்நகரம் கைப்பற்றப்பட்டது. திப்பு போரில் மாண்டான். மைசூர் ஆங்கிலேயர் கைக்கு வந்தது.

திப்புசுல்தான் இறந்ததால் மைசூர் இராஜ்யத்திலிருந்த இந்துக்குடிகளுக்கு விசனம் ஏற்பட்டது என்று சொல்லமுடியாது. ஏனெனில், அவன் இந்துக்களை மதத்தின் காரணமாகத் துன்புறுத்திக்கொண்டிருந்தான். அவனுடைய இராஜ்யம் இப்போது துண்டுதுண்டாகப் பிரிக்கப்பட்டது. அந்த இராஜ்யத்தின் மேற்கிலும், தெற்கிலும், தென்கிழக்கிலும் இருந்த ஜில்லாக்கள் சென்னை இராஜதானியோடு சேர்க்கப்பட்டன. மீதியிருந்த மத்தியபாகம் பழைய இந்து அரச வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு வழங்கப்பட்டது. அவன் ஏற்றுக்கொண்ட நிபந்தனைகளால் மைசூர் ராஜ்யத்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அரசனுடைய செல்வாக்கைவிட அதிகமாயிற்று. மைசூர் ராஜ்யத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்த கொள்ளைக் கூட்டத்தினரையெல்லாம் ஆர்தர் வெல்லெஸ்லி அழித்து, அங்கு அமைதியை நிலைநாட்டினான். அவனே, பிற்காலத்தில் வெல்லிங்டன் கோமகன் என்று இங்கிலாந்தில் பெருமைபெற்றவன்.

அடுத்தபடியாக வெல்லெஸ்லி கர்நாடகத்தின்மீது தன் கவனத்தைத் திருப்பினான். சீரங்கபட்டினத்தில் கைப்பற்றப்பட்ட சில தஸ்தாவேஜிகளின் மூலம் ஆர்க்காட்டு நவாப் திப்பு சுல்தானுடன் இரகசியமாகத் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தான் என்பது தெரிந்தது. அவ்வாறு செய்தது கம்பனியுடன் செய்துகொண்டிருந்த உடன்படிக்கைக்கு மாறுனதாகையால் வெல்லெஸ்லி கர்நாடகத்தை ஆங்கில ஆட்சியில் சேர்த்துவிடத் தீர்மானித்தான். அந்தச்சமயத்தில் நவாப் இறந்துபோகவே அவனுடைய மகன் பட்டத்திற்கு வந்தான். கர்நாடகத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப்பதிலாக நவாப் என்ற பதவியையும், அந்தத் தகுதிக்கேற்ற வருமானத்தையும் பெற்றுக்கொள்ளும்படி அவனுக்கு வெல்லெஸ்லி கூறினான். அதை அவன் மறுத்தான். ஆனால் சிம்மாசனத்திற்குப் போட்டியிட்ட வேறொருவன் அந்த நிபந்தனைகளை ஒத்துக்கொள்ளவே வெல்லெஸ்லி அவனுக்குப் பதவியும் பணமும் கொடுத்துவிட்டுக் கர்நாடகத்தைச் சென்னை மாகாணத்தோடு சேர்த்துக்கொண்டான்.

கர்நாடகத்திற்குத்தெற்கிலிருந்த தஞ்சாவூர் அரசனேடும் மேற்கூறியவாறு ஓர் ஏற்பாட்டை வெல்லெஸ்லி செய்துகொண்டான். ஐதராபாத்துக்கு உதவியாக அந்த ராஜ்யத்தில் ஓர் ஆங்கிலப்படை

வைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக நிஜாம் மைசூர் இராஜ்யத்திலிருந்து தன் பங்குக்குக் கிடைத்த ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான். இவ்வாறு 1800-ஆம் ஆண்டுக்குள் தற்போதைய சென்னை மாகாணம் உருப்பெற்றுவிட்டது. தட்சிண பீட பூமியின் முக்கோண வடிவமான தென்னிந்தியா முழுவதும் ஆங்கில ஆட்சிக்குட் சேர்ந்துவிட்டது. மைசூர் திருவிதாங்கூர் ஆகிய இராஜ்யங்களும், இன்னும் சில சிறிய இராஜ்யங்களும் மாத்திரம் அதிற் சேரவில்லை. ஆனால் அவைகளெல்லாம் ஆங்கிலேயருடைய பாதுகாப்பிலிருந்த இராஜ்யங்கள். இந்தப் பகுதிக்கு வடக்கில் நிஜாமும், வடமேற்கில் மகாராஷ்டிரர்களும் இருந்தார்கள். ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்ட வட சர்க்கார் ஜில்லாக்கள் என்ற பகுதி கீழ்க் கடற்கரையோரமாக வடக்கே ஒரிஸா வரையிலும் நீண்டிருந்தது. இவ்வாறு ஆங்கில ஆதிக்கம் பரவியிருந்த இந்தப் பெரும் பகுதியில் பிரெஞ்சுக்காரர்களாலோ அல்லது அவர்களுடைய நண்பர்களான டச்சுக்காரர்களாலோ இனிமேல் எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்பது உறுதியாயிற்று. ஏனெனில் அந்த இரு நாடுகளுக்கும் இந்தியாவில் சொந்தமாயிருந்த பிரதேசங்களையெல்லாம் ஆங்கிலேயர் கைப்பற்றிக்கொண்டனர். வாட்டர்லூச் சண்டைக்குப்பின் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி புதுச்சேரியும் இன்னும் சில பிரதேசங்களும் பிரெஞ்சுக்காரர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஆனால் டச்சுக்காரர் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து அடியோடு மறைந்துவிட்டது. டென்மார்க்கு தேசம் பிரெஞ்சு ஆதிக்கத்திற்குட் சென்றபோது தரங்கம்பாடியை ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். யுத்தம் முடிந்தபின் தரங்கம்பாடி டென்மார்க்குக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. ஆனால் அதையும் டென்மார்க்குச் சொந்தமாக இந்தியாவில் இருந்த மற்ற இடங்களையும் ஆங்கிலேயர் 1845-ஆம் ஆண்டில் விலைக்கு வாங்கிக்கொண்டனர்.

தென்னிந்தியப் பிரச்சினைகளைத் தீர்த்தபின்னர் வெல்லெஸ்லி தன் கவனத்தை வட இந்தியாவின்மீது திருப்பினான். அவுத்தில் ஒரு சிக்கலான நிலைமை ஏற்பட்டிருந்தது. அங்குப் பிரெஞ்சுக்காரரால் ஆபத்து ஏற்பட வழியில்லை. ஏனெனில் பெரும்பாலும் ஆங்கிலச் சேனைகள்தாம் அவுத்துக்குக் காவலாக இருந்தன. அந்தக் காப்புக்குக் கைம்மாறாக அவுத் நவாப் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கம்பனிக்குச் செலுத்திவந்தான். தன்னுடைய இராஜ்யத்தின் காப்பை ஆங்கிலேயர் கையில் விட்டுவிட்ட நவாப் தன்னிஷ்டம்போல் அரசாட்சி செய்துவந்தான்.

அவனுடைய அரசியல் நிர்வாகம் மிக மோசமாக இருந்தது. கம்பனிக்கு ஆண்டுதோறும் செலுத்தவேண்டிய தொகையில் பாக்கி ஏற்பட்டுக்கொண்டே வந்தது. தலைநகரில் அயோக்கியர்களான ஆங்கிலேயர்கள் பலர் சூழ்ந்துகொண்டு நவாபின் கேவலமான நடத்தைகளுக்கு உடந்தையாக இருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஆப்கானிய அரசன் அவுத்தின் மீது படையெடுப்பான் போலிருந்தது. *அதனால் நவாப் ஆங்கிலேயரைத் தனக்கு உதவிபுரியும்படி தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அதன்பயனாக 1801-ஆம் ஆண்டில் கம்பனிக்கும் நவாபுக்கும் ஓர் உடன்படிக்கை நடந்தது. அதன்படி ஆங்கிலேயர் தனக்களித்த காப்புக்குப் பதிலாக நவாப் தன்னுடைய இராஜ்யத்தின் கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும், இருந்த பகுதிகளைக் கம்பனிக்குக்கொடுத்துவிட்டான். எஞ்சியிருந்த தன்னுடைய இராஜ்யத்தில் ஒழுங்கான நிர்வாகத்தை ஏற்படுத்துவதாக வாக்களித்தான். இந்தச் சிறு பகுதி மூன்று பக்கங்களிலும் பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட ஜில்லாக்களால் சூழப்பட்டிருந்ததால் அதற்கும் இந்தியாவின் மற்றைய இராஜ்யங்களுக்கும் தொடர்பில்லாமற் போய்விட்டது. இவ்வாறு வங்காள மாகாணம் விஸ்தீரணத்திற் பெருகியது. அதன் தெற்கு எல்லை மகாராஷ்டிரர்களுடைய ஆதிக்கத்திலிருந்த பிரதேசத்தைத் தொட்டது. இவ்வாறு அவுத் இதுவரையில் வகித்துவந்த இடைப்படு நாடு என்ற நிலையை இழந்தது.

1800-ஆம் ஆண்டில் நானா பர்னவிஸ் இறந்தான். அவன் சுமார் ஐம்பதாண்டுகள் பீஷ்வாவைத் தன் கைப்பதுமையாக வைத்துக்கொண்டு, மந்திரியாகிய தன்னிடம் முழு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு பூனாவில் ஆட்சி புரிந்துவந்தான். அவன் இறந்ததும் மகாராஷ்டிரத் தலைவர்களுக்குள் சதாகாலமும் புகைந்துகொண்டிருந்த பகைமை கொழுந்துவிட்டு எரியும் பெரு நெருப்பாக மாறியது. பெயரளவில் பீஷ்வாவாக இருந்த பாஜிராவ் தன் அதிகாரத்தை உண்மையிலேயே நிலைநாட்ட முயன்றான். சிந்தியா அவனுக்கு உதவியாக இருந்தான். ஆனால் ஹோர்கார் அவர்களுக்கு எதிராகப் போர்செய்து அவர்களைத் தோற்கடித்தான். 1803-ஆம் ஆண்டில் பாஜிராவ் பேஸியன் என்ற இடத்தில் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி அவன் கம்பனியின் ஏகாதிபத்தியத்தை

---

* பஞ்சாப் பெயரளவில் ஆப்கானிய ஆட்சிக்குட்பட்ட பிரதேசமாகவே இருந்ததால் அங்கிருந்து ஆப்கானிய அரசன் மிக எளிதாக அவுத்தின்மீது படை யெடுக்க முடியும்.

ஒத்துக்கொண்டு ஆங்கிலேயர் உதவியால் பூனுவில் பீஷ்வாப் பதவியில் அமர்ந்தான். இந்தச்செயல் பொதுவாக மகாராஷ்டிரர் அனைவருக்கும் கோபத்தை மூட்டியது. சிந்தியாவும் பான்ஸ்லேயும் தங்கள் சேனைகளைத் தெற்கே பூனுவை நோக்கி நடத்தினர். அதைக்கண்ட வெல்லெஸ்லி அவர்கள் திரும்பிப் போகவேண்டுமென்று வற்புறுத்தினுன். அவர்கள் மறுக்கவே வெல்லெஸ்லி அவர்களுடன் போர்தொடுத்தான். சண்டையில் ஆங்கிலேயர்களுக்குப் பெருமிதமான வெற்றி கிடைத்தது. தெற்கில் ஆர்தர் வெல்லெஸ்லி மகாராஷ்டிரர் படைகளை 1803-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அஸ்ஸே என்ற இடத்தில் தோற்கடித்தான். டிசம்பர் மாதத்தில் பான்ஸ்லே கம்பெனியின் ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்டு தனக்கு ஒரிஸாவில் சொந்தமாயிருந்த பிரதேசங்களைக் கொடுத்தான். வடக்கே லார்டு லேக்கு என்ற தளகர்த்தன் யமுனைக்கு வடக்கிலும் கிழக்கிலும் சிந்தியாவுக்குச் சொந்தமாயிருந்த பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு, அவனுடைய படைகளில் மீதியிருந்தவற்றை லாஸ்வாரி என்ற இடத்தில் தோற்கடித்தான். சிந்தியாவும் கம்பனியின் ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்டான்.

ஹோல்காரும் கெயிக்குவாரும் இந்தச் சண்டையிற் கலந்துகொள்ளவில்லை. கெயிக்குவார் வம்சம் ஏற்கெனவே பிரிடிஷ் காப்பிலிருந்தது, ஆனுல் ஹோல்கார் மாத்திரம் இன்னும் சுதந்திரமாகவே இருந்தான். அவன் பிரிட்டிஷாருடன் உடன்படிக்கை செய்துகொள்ள மறுத்தான். ஆகவே 1804-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் வெல்லெஸ்லி ஹோல்கார்மீது போர் தொடுத்தான். கர்னல் மான்ஸன் என்ற சேனுதிபதியின் தலைமையில் அனுப்பப்பட்ட ஓர் ஆங்கிலப்படை படுதோல்வியடைந்தது. அதுவரையில் ஆங்கிலேயர் பக்கமிருந்த சிலர் ஹோல்காரின் இந்த வெற்றியைக் கண்டு அவனுடன் சேர்ந்துகொண்டனர். ஆனுல் 1804-ஆம் ஆண்டின் கடைசி மாதங்களில் ஹோல்கார் இரண்டு இடங்களில் தோல்வியடைந்தான். அந்தச் சமயத்தில் வெல்லெஸ்லியின் தீவிரமான நடவடிக்கைகளை விரும்பாத ஆங்கில அதிகாரிகள் அவனைக் கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து நீக்க முடிவுசெய்து, அவனுக்குப் பதிலாக மறுபடியும் காரன்வாலிஸை இந்தியாவுக்கு அனுப்பினுர்கள். ஆனுல் காரன்வாலிஸ் இந்தியாவுக்கு வந்த சில நாட்களில் இறந்துபோனதால் ஸர் ஜார்ஜ் பார்லோ என்பவன் இரண்டாண்டுகள் கவர்னர் ஜெனரல் பதவியை வகித்தான். அவன் மகாராஷ்டிரர்களுடன்

செய்துகொண்ட உடன்படிக்கையால் அவர்கள் இழந்துவிட்ட பிரதேசங்களில் பெரும்பாலானவை அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஆனால் அந்த உடன்படிக்கையால் நிரந்தர மான பயன் ஏற்படவில்லை. இராஜபுத்திரத் தலைவர்கள் ஆங்கி லேயருடைய உதவியை எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் சர் ஜார்ஜ் பார்லோ செய்த உடன்படிக்கையால் இராஜபுத்திரர் களுக்கு ஆங்கிலேயர் காப்பு இல்லாமற் போயிற்று. ஆகவே கிழக்கு இராஜபுதனத்தை ஹோல்காரும் சிந்தியாவும் தங்கள் இஷ்டப்படி தாக்கிக் கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள்.

மேற்கூறிய உடன்படிக்கைகளின்படி யமுனைக்குக் கிழக்கி லும் வடக்கிலும் மகாரஷ்டிரர்களுக்குச் சொந்தமாயிருந்த பிர தேசங்கள் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. யமுனைக்கும் கங்கைக்கும் மத்தியில் மகாராஷ்டிரர்களுக்குச் சொந்தமாயிருந்த ஜில்லாக்களும், டில்லியும் அதற்கு மேற்கிலிருந்த ஒரு சிறு பிர தேசமும் பிரிடிஷ் ஆட்சிக்கு வந்தன. அவற்றுடன் அயோத்தி நவாபால் ஆங்கிலேயருக்குச் சமீபத்தில் கொடுக்கப்பட்ட காசியும், வேறு சில ஜில்லாக்களும் சேர்க்கப்பட்டு ஒரு தனி மாகாணமாக் கப்பட்டன. இந்தமாகாணம் கிழக்கே பீகார் முதல் மேற்கே டில்லி வரையிற் பரவியிருந்தது. இந்த மாகாணத்துடன் பின் னர் ஆங்கிலேயருக்குக் கிடைத்த சில பகுதிகளையும் சேர்த்து **1835**-ஆம் ஆண்டில் வடமேற்கு மாகாணம் என்ற ஒரு புதிய மாகாணத்தை ஏற்படுத்தினர். அந்த மாகாணத்திலிருந்து டில்லி யும் இன்னும் சிலபகுதிகளும் பிரிக்கப்பட்டு எஞ்சியிருந்த பிரதே சங்கள் தற்காலத்து ஐக்கிய மாகாணத்தோடு சேர்க்கப்பட்டன. இவ்வாறு வெல்லெஸ்லியின் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகா ணம் ஏறக்குறைய தற்காலத்து உருவைப் பெற்றது; வங்காள மாகாணம் மேற்கே பஞ்சாப் வரையிற் பரவியது; ஆனால் பம் பாய் மாகாணம் இன்னும் உருப்பெறவில்லை.

இந்த மூன்று இராஜதானிகளையும், சிந்து பஞ்சாப் ஆகிய நாடுகளையும் தவிர மற்ற இந்திய ராஜ்யங்களோடு வெல்லெஸ்லி வைத்திருந்த தொடர்பைப்பற்றி இனிக் கூறுவோம். அந்த இராஜ்யங்களுடன் வெல்லெஸ்லி செய்துகொண்ட உடன்படிக் கைகளின்படி அவைகளெல்லாம் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்டன. மற்ற சில்லறை விஷயங்களில் வேறுபட் டாலும் அந்த உடன்படிக்கைகளெல்லாம் இந்த அடிப்படை யான விஷயத்தில் ஒரேமாதிரியாக இருந்தன. இவ்வாறு இந்தி யாவின் ஐந்தில் இரண்டுபகுதி ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒத்

துக்கொண்ட சுதேச ஸம்ஸ்தானங்களாக மாறின. உள்நாட்டு விவகாரங்களில் சுதேச அரசர்கள் தங்கள் இஷ்டப்படி ஆட்சி புரியலாம் என்றும், வெளிநாட்டு விவகாரங்களிலெல்லாம் கம்பனியின் உத்தரவுப்படிதான் நடக்கவேண்டும் என்றும் இந்த உடன்படிக்கைகளால் ஏற்பாடாயிற்று. இவ்வாறு வெல்லெஸ்லியின் காலத்தில் இந்தியாவின் ஒருபகுதி ஆங்கிலேயருடைய நேரடியான ஆட்சியிலும், மற்றப் பிரதேசங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்ட சிற்றரசர்களுடைய ஆட்சியிலுமிருந்தன. அடிப்படையில் இதே நிலைமைதான் மௌரிய, குப்த சக்கரவர்த்திகளின் காலத்திலும் இருந்தது.

அதிகாரம்—39

வெல்லெஸ்லி முதல் பெண்டிங்கு வரை

லார்டு மிண்டோ 1807-முதல் 1813-வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தான். வெல்லெஸ்லி காலத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நடந்த யுத்தம் மிண்டோ காலத்திலும் தொடர்ந்து நடந்தது. வெல்லெஸ்லியால் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்ட வேலைகளால் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் செல்வாக்கு ஏற்படுவதற்கு வழியில்லாமற் போயிற்று. ஆனால் ஆசியாவின் பகுதிகளை ஜெயிக்க வேண்டுமென்று கொண்டிருந்த திட்டங்களை நெப்போலியன் இன்னும் கைவிடவில்லையாகையால், பிரெஞ்சுக்காரர்கள் எங்தெந்த வழியாக இந்தியாவுக்கு வரக்கூடுமோ அந்த வழிகளை எல்லாம் அடைத்துவிடுவது அவசியம். டச்சுக்காரர்களுக்குச் சொந்தமாய் இருந்த நன்னம்பிக்கை முனைப்பிரதேசங்களை ஆங்கிலேயர் 1805-ம் ஆண்டிற் கைப்பற்றிக்கொண்டனர். அதுபோலவே இலங்கையையும் ஆங்கிலேயர் 1796-ம் ஆண்டிலேயே கைப்பற்றிக்கொண்டனர். ஆகவே இந்தியாவுக்கு வரக்கூடிய கடல்மார்க்கத்தின் முக்கியமான இடங்களெல்லாம் ஆங்கிலேயர் வசத்திலிருந்தன. ஆனால், தனிப்பட்ட பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமானவையும், பிரான்சு தேசத்தின் விரோதிகளோடு சண்டை யிடுவதற்குப் பிரெஞ்சு அரசாங்கத்தின் அனுமதி பெற்றவையும் ஆகிய பிரெஞ்சுக் கப்பல்கள் ஆசியக் கடல்களில் வியாபாரக் கப்பல்களைக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தன. மரீஷியஸ், பூர்பான், பட்டேவியா, ஆகிய இடங்கள் அந்தக் கப்பல்களின் தளங்களாக இருந்தன. ஆங்கிலேயர்கள் 1810-ஆம் ஆண்டில்

மரீஷியஸ், பூர்பான் ஆகிய இடங்களையும், அடுத்த ஆண்டில் பட்டேவியாவையும் கைப்பற்றிக்கொள்ளவே பிரெஞ்சுக் கப்பல்களால் கிழக்குக் கடல்களில் ஏற்பட்ட ஆபத்து ஒழிந்தது.

தரை மார்க்கமாக பிரெஞ்சுப் படைகள் இந்தியாவுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக மிண்டோ வடமேற்கு இந்தியாவிலிருந்த அரசர்களோடு உடன்படிக்கைகள் செய்துகொண்டான். நாதிர்ஷா பஞ்சாப், சிந்து, காஷ்மீரம் ஆகிய நாடுகளைப் பாரசீக இராஜ்யத்துடன் சேர்த்தான் என்றும், பின்னர் அந்நாடுகள் ஆப்கானிய ஆட்சிக்குட் சென்றன என்றும் முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். பிஷாவர் ஆப்கானிய ஆட்சியிலேயே இருந்தது. ஆனால் பஞ்சாப் நடைமுறையில் சீக்கியர் அதிகாரத்திற்குள் வந்துவிட்டது. 1789-ஆம் ஆண்டில் சிந்து சுயேச்சை பெற்ற இராஜ்யமாகி விட்டது. இன்னும் சிலநாட்களில் ரஞ்சித்சிங்கு பஞ்சாபில் தன்னுடைய ஆட்சியை ஸ்தாபித்து, அதன்பின் காஷ்மீரத்தையும் கைப்பற்றிக்கொண்டான்.

பதினைந்தாம் நூற்றூண்டில் தொடங்கிய மத இயக்கத்திலிருந்து சீக்கிய ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்தது. சீக்கிய மத இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராகிய குரு நானக்கு பஞ்சாபில் தம்முடைய கொள்கைகளைப் போதித்தார் என்று முன்னர்ப் படித்தோம். பல மக்கள் அவருடைய கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினுர்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் விவசாயம், வியாபாரம் ஆகிய தொழில்களில் ஈடுபடும் ஜாதிகளைச் சேர்ந்தவர்களா யிருந்தார்கள். நானக்கின் கொள்கைகளை அவருக்குப் பின்வந்த திறமைவாய்ந்த குருக்கள் மக்களிடையே பரப்பினுர்கள். அவர்களைப் பின்பற்றியவர்கள் சீக்கியர்கள் (சீடர்கள்) என்று அழைக்கப்பட்டனர். சீக்கியர்கள் ஒரு தனிப்பட்ட ஜாதியினராக இருக்கவில்லை. மற்ற ஜாதிகளிலிருந்து சீக்கிய மதத்தைத் தழுவ இசைந்தவர்களை எல்லாம் அந்த மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள். சீக்கிய மத குருக்கள் நானக்கின் கொள்கைகள் பரவிய இடங்களிலெல்லாம் உப குருக்களை நியமித்து அவர்கள் மூலமாகக் காணிக்கைகள் என்ற முறையில் பணத்தை வசூல் செய்தார்கள். அதனுல் சீக்கிய மதஸ்தாபனம் நாளடைவில் செல்வம் மிகுந்த ஒரு ஸ்தாபனமாயிற்று. பதினேழாம் நூற்றூண்டில் சீக்கிய மதஸ்தாபனம் அரசியல் விஷயங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியது. அவுரங்கஜீப்பின் ஆட்சியில் சீக்கியர்கள் பலவாறு துன்பமுற்றனர். அதனுல் அந்த மதமே அழிந்துபோகும்போல் இருந்தது. ஆனுல் அவ்வாறு ஏற்பட்ட

துன்பமே அவர்களுக்குப் போர்ப் பயிற்சியை அளிப்பதற்கும் காரணமாயிருந்தது. 1708-ஆம் ஆண்டில் சீக்கியப் போர்வீரர்கள் டில்லிக்கும் லாகூருக்கும் இடையேயுள்ள பிரதேசத்தில் கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள். அந்த நூற்றாண்டின் முற்பகுதியில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் போரில் திறமையும் பயிற்சியும் பெற்று அரசியல் துறையில் தங்கள் ஆதிக்கத்தை ஸ்தாபிப்பதற்குத் தயார் செய்துகொண்டார்கள். அந்த நூற்றாண்டின் இறுதியில் ஆப்கானிய அரசன் ரஞ்சித்சிங்கை லாகூர் கவர்னராக அங்கீகரித்தான். வெகு விரைவில் ரஞ்சித்சிங்கு சுயேச்சை பெற்றுப் பஞ்சாபைத் தனி இராஜ்யமாக மாற்றிவிட்டான்.

டில்லியையும் அதைச் சேர்ந்த பிரதேசத்தையும் ஆங்கிலக் கம்பனியின் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவந்த பிறகு ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்ட பிரதேசம், யமுனைநதி வரை பரவியது. அதே சமயத்தில் ரஞ்சித்சிங்கு தன்னுடைய இராஜ்யத்தை ஸட்லெஜ் நதியிலிருந்து தெற்கே பரப்புவதற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருந்தான். இந்த இருநதிகளுக்குமிடையேயுள்ள பிரதேசத்தில் பல தலைவர்கள் ஏறக்குறைய சுயேச்சையுடன் ஆட்சி செய்து வந்தார்கள். அவர்கள் ஒருவரோடு ஒருவர் பகைமை பூண்டு இருந்தார்கள். 1809-ஆம் ஆண்டில் ஆங்கிலேயருக்கும் ரஞ்சித்சிங்குக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையால் ரஞ்சித்சிங்கு யமுனை நதிக்கும் ஸட்லெஜ்நதிக்கும் இடையிலுள்ள பகுதியில் தன் ஆட்சியை ஸ்தாபிக்கும் எண்ணத்தை விட்டுவிட்டு மற்ற திசைகளில் தன் கவனத்தைச் செலுத்தினான். கொஞ்சம் கொஞ்சமாக ரஞ்சித்சிங்கின் ஆட்சி பஞ்சாபில் நிலையாக நிறுவப்பட்டு, மூல்தான், பெஷாவர் ஆகிய நகரங்கள் வரையில் பரவியது. யமுனை நதிக்கும் ஸட்லெஜ் நதிக்கும் இடையிலிருந்த தலைவர்களெல்லாம் பிரிடிஷ் காப்பின்கீழ் வந்தார்கள். ஆப்கானியர்களோடு சினேகத் தொடர்பு வைத்துக்கொள்ளுவதற்கு ஆங்கிலேயர் செய்த முயற்சி பயன் அளிக்கவில்லை. ஆனால் இங்கிலாந்துக்கும் பாரசீகத்துக்கும் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையால் ஐரோப்பாவிலிருந்து தரை மார்க்கமாக யாரும் இந்தியாவின்மேல் படையெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் பஞ்சாபில் ஆட்சி செய்த சீக்கியர்களும் ஆங்கிலேயர்களுடன் நட்பாக இருந்ததால் இந்தியாவின் மீது வெளிநாட்டார் படையெடுப்பார்கள் என்ற அச்சம் சில ஆண்டுகளுக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்தியாவின் மற்ற பகுதிகளில் மிண்டோபிரபு தலையிடாக் கொள்கையைக் கையாண்டான். மிண்டோவுக்குப்பின்

மாயிராப்பிரபு 1813-முதல் 1823-வரை கவர்னர் ஜெனரலாக இருந்தான். அவன் காலத்தில் ஏற்பட்ட சில புதிய நிகழ்ச்சிகளின் பயனாகத் தலையிடாக் கொள்கையைக் கைவிடவேண்டியதாயிற்று. மஹாராஷ்டிரர்களுடன் 1805-ஆம் ஆண்டில் செய்துகொண்ட உடன்படிக்கை நிலையான சமாதானத்தை ஏற்படுத்தவில்லை. நிலையான அமைதியையும் ஒழுங்கான அரசியல் நிர்வாகத்தையும் குறிக்கோளாகக் கொண்ட கம்பனியின் கொள்கைக்கும், போரின் மூலமாகவோ ராஜதந்திரத்தின் மூலமாகவோ இராஜ்யத்தை மேலும் மேலும் பரப்பவேண்டும் என்று தொன்று தொட்டுவந்த இந்திய அரசியல் கொள்கைக்கும் முரண்பாடாக இருந்தது. ஆகவே விரைவிலோ சிலகாலம் கழிந்தோ கம்பனிக்கும் மஹாராஷ்டிரர் போன்ற மற்ற இந்திய அரசர்களுக்கும் சண்டை ஏற்படுவது நிச்சயம். பிரிடிஷார் தலையிடாக் கொள்கையைக் கையாண்ட ஆண்டுகளில் இந்தியாவின் மத்தியப்பிரதேசத்தின் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மோசமாகிக்கொண்டே வந்தது. அந்தப் பகுதியில் இருந்த அரசர்கள் கொடுங்கோலர்களாக இருந்தார்கள். வாள்முனையில் வரிவசூல் செய்யப்பட்டது. பிண்டாரிகள் என்ற கொள்ளைக்கூட்டத்தினர் மக்களுக்குப் பல தீங்குகளை இழைத்தனர். பிண்டாரிகள் ஒரு தனிப்பட்ட ஜாதியினரோ இனத்தினரோ அல்லர். மஹாராஷ்டிரச் சேனைகளில் அவ்வப்போது சேர்ந்து சண்டை செய்துவந்த பலர் ஒன்றாகச்சேர்ந்து கொள்ளையடிப்பதையே நோக்கமாகக்கொண்ட ஒரு சுயேச்சைபெற்ற கூட்டமாகத் தங்களைச் செய்துகொண்டனர். முதலில் ஒரு சிறிய பிரதேசத்தில் கொள்ளையடிக்க ஆரம்பித்த அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மத்திய இந்தியாவின் பல பகுதிகளில் கொள்ளை அடித்தார்கள். கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் அவர்கள் தலையிடாமலிருந்த வரையில் கம்பனியும் தலையிடாக் கொள்கையையே அனுசரித்தது. ஆனால் 1812-ம் ஆண்டில் பிண்டாரிகள் பீஹாரில் நுழைந்து கொள்ளையடித்தார்கள். 1816-ஆம் ஆண்டில் வடசர்க்கார் ஜில்லாக்களில் அவர்கள் கொள்ளையடிக்கத் தொடங்கினார்கள். ஆகவே, இங்கிலாந்திலிருந்த அதிகாரிகள் பிண்டாரிகளை ஒழித்துவிடும்படி கவர்னர் ஜெனரலுக்கு உத்தரவிட்டார்கள்.

இந்த நோக்கத்துடன் மாயிராப்பிரபு மஹாராஷ்டிரர்களுடைய ஒத்துழைப்பைப்பெற முயற்சி செய்தான். அதன் பயனாகச் சில உடன்படிக்கைகளும் ஏற்பட்டன. ஆனால் பிண்டாரிகள் சில சமயங்களில் தங்களுக்கு உதவியாக இருக்கமுடியும் என்

பதை மஹாராஷ்டிரத் தலைவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆதலால் மஹாராஷ்டிரத் தலைவர்களுடன் பிண்டாரிகளுக்கு எதிராக மாயிரரப்பிரபு செய்துகொண்ட உடன்படிக்கைகள் பயனற்றுப் போயின. பிண்டாரிகளை அழிப்பது எளிதான காரியம் அன்று என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் 1817-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட போர்வீரர்களடங்கிய பெரும்படையைப் பிண்டாரிகளுக்கெதிராக அனுப்பினார்கள். இந்தப்படைகள் வெகு குறுகிய காலத்தில் வெற்றி அடைந்தன. பிண்டாரிகள் அடியோடு அழிந்தனர். ஆனால் மாயிராப்பிரபு பிண்டாரிகளை அழித்தபின் தங்களையும் தாக்குவான் என்று எண்ணிய மஹாராஷ்டிரத் தலைவர்கள் ஆங்கிலப்படைகள் பிண்டாரிகளை அழிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த அதே சமயத்தில் ஆங்கிலேயர்களைத் தாக்கினார்கள். பூனாவிலும், நாகபுரியிலும் இருந்த ஆங்கிலப் பிரதிநிதிகள் ஏறக்குறைய ஒரே சமயத்தில் தாக்கப்பட்டனர். ஹோல்காரும் ஸிந்தியாவும் ஆங்கிலேயர்களுக்கு விரோதமாகக் கிளம்பினர். கெயிக்குவார் மாத்திரம் ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி சமாதானத்தை அனுசரித்தான்.

இவ்வாறு தொடங்கிய கடைசி மஹாராஷ்டிரப் போர் விரைவில் முடிந்துவிட்டது. பலதரம் தோல்வியடைந்த பீஷ்வா 1818-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆங்கிலேயரிடம் சரணாகதி அடைந்தான். அதன்பின் பீஷ்வாப் பதவி அழிக்கப்பட்டது. பீஷ்வா கம்பெனியாரிடம் உபகாரச் சம்பளம் பெற்றுக் கான்பூருக்கருகில் வாசம் செய்யத் தொடங்கினான். பான்ஸ்லே அரசன் தோல்வி அடைந்து தன்னுடைய இராஜ்யத்தை விட்டு ஓடி, முடிவில் இறந்தான். ஹோல்காரின் படைகளும் சண்டையில் தோல்வி அடைந்தன. ஸிந்தியா சண்டை செய்யாமலே ஆங்கிலேயருக்கு அடங்கிப்போனான். இந்தப் போரினால் பின் வரும் விளைவுகள் ஏற்பட்டன. மாளவத்தில் ஹோல்கார், ஸிந்தியா, ஆகிய அரசர்களும் இன்னும் சில மஹாராஷ்டிரத் தலைவர்களும் அவரவர்கள் ஆட்சியில் இருந்த பிரதேசங்களை மறுபடியும் அவர்களே ஆள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். பான்ஸ்லே வம்சத்தின் ஆட்சியில் இருந்த பகுதிகளில் பெரும்பான்மையானவற்றை ஆள்வதற்கு அந்த வம்சத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் நியமிக்கப்பட்டான். குஜராத்தில் கெயிக்குவார் வம்சத்தினரின் ஆட்சியிலிருந்த பகுதியின் எல்லைகள் திட்டமாக நிர்ணயிக்கப்பட்டன. சிவாஜியின் வம்சத்தில் வந்த சதாரா

அரசனுடைய ஆட்சியில் ஒரு சிறு பகுதி விடப்பட்டது. மஹாராஷ்டிர ஆட்சியின் கீழிருந்த மற்றப்பகுதிகளை எல்லாம் ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டனர். அவற்றில் பெரும்பான்மையானவை பம்பாய் இராஜதானியோடு சேர்க்கப்பட்டன. இந்த ஏற்பாடுகளை எல்லாம் மஹாராஷ்டிரர்கள் முடிவான ஏற்பாடுகளாக ஒத்துக்கொண்டனர். அதேசமயத்தில் இராஜபுதனத்திலிருந்த தலைவர்களோடும் கம்பனி உடன்படிக்கை செய்துகொண்டது. இராஜபுதனத் தலைவர்களெல்லாம் ஒன்ருகச் சேர்ந்து ஆங்கிலேயரோடு எப்போதும் போர் செய்ததே கிடையாது. மஹாராஷ்டிரர்களுடைய படையெழுச்சிகளால் பல காலமாகத் துன்பப்பட்டுக் கொண்டிருந்த இராஜபுத்திரர்கள் ஆங்கிலேயரோடு உடன்படிக்கை செய்துகொள்ளுவதை மிகவும் விரும்பினூர்கள். இந்தப் பிரதேசத்தில் ஆஜ்மீர் ஜில்லா ஒன்றை மாத்திரம் ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியில் சேர்த்துக்கொண்டனர். இந்த ஜில்லா முதலில் முகலாய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்து, பின்னர் ஸிந்தியாவின் ஆட்சிக்குள் வந்தது. அதை இப்பொழுது ஸிந்தியா ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டான்.

இவ்வாறு மத்திய இந்தியாவில் அமைதி நிலைநாட்டப்பட்டது. வடக்கில் நேபாள ராஜ்யத்துடன் மாயிராப் பிரபு ஏற்கெனவே சண்டை தொடுத்திருந்தான். பதினெட்டாம் நூற்ருண்டில் கூர்க்கர்கள் நேபாளத்தில் ஒரு பரந்த இராஜ்யத்தை ஸ்தாபித்திருந்தார்கள். அந்த இராஜ்யம் இமயமலையின் தெற்கில் மேற்கே காஷ்மீரம் முதல் கிழக்கே அஸாம் வரையில் பரவியிருந்தது. கூர்க்கர்கள் தங்கள் ராஜ்யத்தின் தெற்கிலிருந்த சமவெளிகளின்மீது அடிக்கடி படையெடுத்துக் கொள்ளையடித்தார்கள். அவர்களுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்வதற்குக் கம்பனி செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆகவே 1814–ஆம் ஆண்டில் மோயிராப்பிரபு கூர்க்கர்களுடன் போர்தொடுத்தான். சண்டை மிகவும் கடுமையாக இருந்தது. முதலில் கூர்க்கர்களைத் தோற்கடிக்க முடியவில்லை. ஆனுல் முடிவில் ஆங்கிலப் படைத்தலைவர்களின் திறமையால் கூர்க்கர்களுடைய நிலைமை மோசமாயிற்று. ஆகவே, அவர்கள் ஆங்கிலேயருடன் சமாதானம் செய்துகொள்ள முன் வந்தனர். அவர்களுடைய இராஜ்யத்தின் மேற்குப்பகுதி ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. அதனுடைய கிழக்கு எல்லையும் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு நேபாளம் இப்போது இந்தியாப் படத்தில் காணப்படும் உருவைப் பெற்றது. இவ்வாறு ஏற்பட்ட நேபாள

இராஜ்யத்தின் வடக்கில் இமயமலையும், மற்ற மூன்று பக்கங்களி லும் பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களும் இருக்கின்றன. இந்த இராஜ்யம் கிழக்கு மேற்காக நீண்டும் தெற்கு வடக்காகக் குறுகியும் இருக்கின்றது. சிறிதுகாலம் நேபாளம் கம்பனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஓர் இராஜ்யமாக இருந்தது. ஆனல் பின்னர் அதை ஒரு சுயேச்சையான இராஜ்யமாக ஆங்கிலேயர் அங்கீகரித்துக் கொண்டனர்.

1823-ஆம் ஆண்டில் மாயிராப்பிரபு கவர்னர் ஜெனரல் பதவியிலிருந்து நீங்கி இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ருன். அப்பொழுது பஞ்சாப், சிந்து, காஷ்மீரம், அஸாம் ஆகிய பகுதி களைத் தவிர இந்தியாவின் மற்ற பகுதிகளில் எல்லாம் கம்பனியின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. மேற்கூறிய பகுதிகள் இன்னும் சிலகாலம் சுயேச்சையாகவே இருந்தன. 1823-முதல் 1828-வரை கவர்னர் ஜெனரலாக இருந்த ஆம்ஹர்ஸ்டு பிரபு காலத்தில் அஸாம் பிரிடிஷ் ஆட்சிக்குள் வந்தது. அஸாமை அவுரங்கஜீப் ஜெயிப்பதற்குச் செய்த முயற்சிகள் பயன்படவில்லை என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். அந்நாடு சுயேச்சையான தனிப்பட்ட இராஜ்யமாகவே 1816-ஆம் ஆண்டு வரையிலிருந்தது. அந்த ஆண்டில் அதைப் பர்மியர் ஜெயித்துக்கொண்டனர். எட்டு ஆண்டுகள் பர்மியருடைய கொடுங்கோல் ஆட்சியில் அஸாம் மிகுந்த துன்பம் அடைந்தது. அந்தக்காலத்தில் அந்நாட்டின் ஜனத்தொகை பாதியாகிவிட்டது என்று கூறப்படுகிறது. கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயர்களைத் தங்களுக்கு உதவிசெய்யுமாறு அஸாம் மக்கள் வேண்டினர். ஆனல் ஆங்கிலேயர்கள் அவ்வாறு உதவி செய்ய மறுத்துவிட்டார்கள். அஸாமைப் பிடித்ததோடு பர்மிய அரசன் திருப்தி அடையவில்லை. ஒரு காலத்தில் அரக்கான் இராஜ்யத்தோடு சேர்ந்திருந்தவையும், இப்பொழுது வங்காள இராஜதானியில் சேர்ந்திருந்தவையும் ஆகிய ஜில்லாக்களைத் தனக் குக் கொடுத்துவிடவேண்டும் என்று பர்மிய அரசன் 1818-இல் ஆங்கிலேயர்களிடம் கேட்டான். ஆங்கிலேயர்கள் மறுக்கவே 1823-ஆம் ஆண்டில் பர்மியத் துருப்புகள் வங்காளத்தின்மீது படையெடுத்தன. பர்மியர்கள் ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியாவின்மீது படையெடுக்கத் துணிந்தார்கள் என்ற விஷயத் தைப் படிக்கும் தற்கால மக்களாகிய நமக்கு ஆச்சரியம் ஏற்படு வது இயற்கையே. ஆனல், அந்தக் காலத்துப் பர்மியர்கள் தங்க ளுடைய பலத்தில் அதிக நம்பிக்கையுடையவர்களாக இருந்த தோடு மற்றவர்கள் எல்லாம் பலம் அற்றவர்கள் என்றும் நினைத்

துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு முதல் பர்மியப் போர் ஏற்பட்டது. அதில் பர்மியர் தோல்வியடைந்தனர். 1826-ஆம் ஆண்டில் கம்பனிக்கும் பர்மியருக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையால் அஸாமும் பர்மாவின் சில பகுதிகளும் கம்பனிக்குக் கொடுக்கப்பட்டன. அஸாமின் ஒரு பகுதி வங்காளத்தோடு இணைக்கப்பட்டது. மீதியிருந்த பகுதியில் சில சிறு இராஜ்யங்கள் ஏற்படுத்தப்பட்டன, அவைகள் கம்பனியின் ஆதிக்கத்தைக் ஏற்றுக் கொண்டன.

ஆம்ஹர்ஸ்டுக்குப் பிறகு வில்லியம் பெண்டிங்கு பிரபு 1828-முதல் 1835-வரை கவர்னர் ஜெனரலாக இருந்தான். அப்பொழுது இருந்த நிலையில் பெண்டிங்கு கம்பனியின் ஆதிக்கத்திற்குப் புறம்பாக இருந்த பிரதேசங்களின் விஷயங்களில் தலையிடாக் கொள்கையை அனுசரிப்பது எளிதாக இருந்தது. இந்த அமைதியான நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் நிர்வாகத்தில் நல்ல அனுபவம் பெற்றிருந்த பெண்டிங்கு பிரபு சமூகத் துறையிலும் நிர்வாகத் துறையிலும் பல சீர்திருத்தங்களைச் செய்தான். அவற்றைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் படிப்போம். அவனும், அவனுக்குப்பின் ஓர் ஆண்டு கவர்னர்ஜெனரல் பதவியை வகித்த ஸர்சார்லஸ் மெட்காப் என்பவனும் நிர்வாகத் துறையில் காட்டிய தாராள மனப்பான்மையினால் படித்த இந்தியர்களுடைய அன்பைப் பெற்றார்கள். அவர்களுடைய ஆட்சிக்குப்பின் இருபது ஆண்டுகள் பிரிட்டிஷார் மறுபடியும் கம்பனியின் ஆதிக்கத்திற்குப் புறம்பான பிரதேசங்களின் விஷயங்களில் தலையிட நேர்ந்தது. அதன் பயனாகப் பல போர்கள் ஏற்பட்டன. முடிவில் கம்பனியின் ஆட்சிக்குப் பதிலாக இந்தியாவில் பிரிடிஷ் அரசாங்கத்தின் நேரடியான ஆட்சி ஏற்பட்டது. அதைப்பற்றிக் கூறப்புகு முன் காரன்வாலிஸ் காலத்திலிருந்து பெண்டிங்கு காலவரையில் இந்தியாவின் உள்நாட்டு விஷயங்களில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றிக் கூறுவது பொருந்தும்.

அதிகாரம்—40

அரசியல் நிர்வாகத்தில் மாறுதல்கள் 1793 - 1835

கம்பெனியின் ஆதிக்கத்திற்குட்பட்ட பிரதேசங்களின் அரசியல் நிர்வாகம் எவ்வாறு பார்லிமெண்டின் மேற்பார்வைக்கு வந்தது என்பதையும், எவ்வாறு சிறிது காலம் அந்த விஷயம் இங்கிலாந்தின் அரசியற் கட்சிகளுக்குள் மிகுந்த கருத்து வேறுபாட்டுக்குக் காரணமாயிருந்தது என்பதையும் முன்னர்ப் படித்தோம். வாரன்ஹேஸ்டிங்ஸின் மீது தொடுக்கப்பட்ட வழக்கு முடிவடைந்த பின்னர் அரசியற் கட்சிகளுக்குள் இந்தியாவைப் பொறுத்தவரையில் அதிகமான கருத்து வேறுபாடு ஏற்படவில்லை. அடுத்த ஐம்பதாண்டுக் காலத்தில் இந்திய விஷயத்தில் பார்லிமெண்டு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளெல்லாம் பெரும்பாலான ஆங்கில மக்களின் அபிப்பிராயத்தைப் பிரதிபலித்தன வென்றும், ஏதோ ஒரு கட்சியின் கொள்கைகளை மாத்திரம் பிரதிபலிக்கவில்லை யென்றும் கூறலாம். இருபதாண்டுக்கொரு முறை கம்பனியின் சாசனம் புதிப்பிக்கப்பட வேண்டியிருந்தது. கம்பனியின் இந்திய நிர்வாகத்தைப்பற்றிப் பார்லிமெண்டு சிரத்தையோடு விசாரணைசெய்து, நீண்ட ஆலோசனை செய்த பின்னரே ஒவ்வொரு சாசனச் சட்டத்தையும் நிறைவேற்றிற்று. அந்தச் சட்டங்களிற் கூறப்பட்ட சீர்திருத்தங்களும், முன்னேற்றத்திற்கான புதிய ஏற்பாடுகளும் அந்த விசாரணைகளினுல் ஏற்பட்ட முறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. சாசனச் சட்டங்களைத் தவிர வேறு சட்டங்களையும் பார்லிமெண்டு அவ்வப்போது நிறைவேற்றி, அதிகார வர்க்கத்தினர் தங்கள் கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவதற்கவசியமான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது.

மேலும் ஹெயிலிபரியில் ஏற்படுத்தப்பட்டிருந்த கல்லூரியில் உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி கம்பனியின் அரசியல் நிர்வாகம் செம்மையாக இருப்பதற்குப் பெரிதும் உதவிற்று. அந்தக் கல்லூரியில் பயிற்சிபெற்ற உத்தியோகஸ்தர்கள் நேர்மையான நடத்தையும், இந்தியாவில் தாங்கள் செய்யப்போகும் மகத்தான வேலையைப்பற்றிய பொறுப்புணர்ச்சியும், இங்கிலாந்துக்கு மாத்திரமின்றி இந்தியாவுக்கும் உண்மையான விசுவாசத்தோடு உழைக்கவேண்டும் என்ற சேவையுணர்ச்சியும்

உடையவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கமாட்டார்கள். அங்குப் பயிற்சி பெற்றவர்களிற் சிலர் இந்த உயர்ந்த குணங்களில்லாதவர்களாக இருந்தாலும் உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் உயர்ந்த நோக்கம் உள்ளவர்களாக இருந்தார்கள் என்றும், அதனுல் கம்பனியின் நிர்வாகம் நல்ல நிலையில் இருந்தது என்றும் பொதுவாகக் கூறலாம். பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த உத்தியோகஸ்தர்கள்—அவர்கள் ஆங்கிலேயராயினும் சரி, இந்தியராயினும் சரி—ஹெயிலிபரியிற் பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்களைப்போல் உயர்ந்த நோக்கத்தோடு அரசியல் நிர்வாகத்தை நடத்தினுர்களென்று கூற முடியாது.

இவ்வாறு படிப்படியாக ஏற்பட்ட அரசியல் நிர்வாக அமைப்பைப்பற்றிப் படிக்கப் புகுமுன்னர், பின்வரும் விஷயங்களை நினைவில் வைத்துக்கொள்ளுவது அவசியம். அந்தக்காலத்து அரசியல் நிர்வாகம் வாழ்வின் பல துறைகளிலும் பொதுமக்கள் முன்னேறுவதற்கான திட்டங்களை அடிப்படையாகக் கொண்டதன்று. கல்வி, சுகாதாரம், பொருளாதாரநிலை முதலியவற்றில் முன்னேற்றத்தை உண்டுபண்ணுவதற்கு வேண்டிய தனிப்பட்ட அரசாங்க இலாக்காக்கள் அப்போது இல்லை. கம்பனியின் உத்தியோகஸ்தர்களுக்காக மாத்திரம் வைத்தியர்களும், மதபோதகர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். பொதுமக்களின் நலனுக்காக அவர்கள் நியமிக்கப்படவில்லை. கம்பனியின் அலுவலகங்களுக்கு வேண்டிய கட்டிடங்களை மாத்திரம் கட்டுவதும் பழுது பார்ப்பதும் மராமத்து இலாக்காவின் வேலை. எப்போதாவது இரண்டொரு ரஸ்தாக்களை அமைப்பதும் மராமத்து இலாக்காவின் வேலையாக இருந்தது. ஒரு சில நீர்ப்பாசன வசதிகள் இராணுவ இஞ்சினியர்களால் செய்யப்பட்டன. சிவில் நிர்வாகம் என்பது அமைதியைக் காத்தல், நீதி வழங்கல், வரிவசூலித்தல் ஆகிய கடமைகளை மாத்திரம் குறித்தது. ஆகவே மாஜிஸ்ரேட், கலெக்டர், ஜட்ஜு ஆகியவர்கள்தாம் சிவில் உத்தியோகஸ்தர்கள் என்று கூறலாம்.

சென்னையும் பம்பாயும் பல விஷயங்களில் இன்னும் சுயேச்சைபெற்ற இராஜதானிகளாகவே இருந்தன. அவற்றின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களின் நிர்வாகமுறை பொதுவாகக் காரன்வாலிஸ் நிர்ணயித்த அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், ஆங்காங்குக் காணப்பட்ட சூழ்நிலைக்கேற்றவாறு நிர்வாக முறையின் சிறப்பு அம்சங்களில் மாறுதல்கள்

இருந்தன. ஆனால் அந்த இரண்டு இராஜதானிகளும் வங்காளத்தைப் போலவே பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு, ஜில்லாவின் அரசியல் நிர்வாகம் மாஜிஸ்ரேட்—கலெக்டர் கையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. வங்காளத்தி லிருந்ததைப்போலவே மற்ற இரண்டு இராஜதானிகளிலும் ஜில்லாவின் நீதி பரிபாலனம் ஜட்ஜின் கையில் விடப்பட்டிருந்தது. ஒவ்வொரு இராஜதானிக்கும் தனித்தனி ராணுவம் இருந்தது என்பதையும் இந்த மூன்று ராணுவங்களையும் சரிவர இணைப்பதற்கேற்ற ஸ்தாபனம் இல்லையென்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

சிவில் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நிலவரிவசூல் முறையில்தான் இந்த மூன்று இராஜதானிகளுக்கிடையில் மிகுந்த வேறுபாடு இருந்தது. வட இந்தியாவில் சிலகாலம் சாசுவத நிலவரித் திட்டத்திற்குத்தான் அதிக ஆதரவு இருந்தது. வங்காளம், பீகார், காசி ஆகிய பிரதேசங்களில் ஏற்கெனவே இந்தத் திட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. மகாராஷ்டிரர்களோடு ஸர் ஜார்ஜ் பார்லோ செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி பீகாருக்கு மேற்கில் டில்லி வரையிலுள்ள பிரதேசங்கள் ஆங்கில ஆட்சிக்கு வந்தன என்று முப்பத்தெட்டாம் அதிகாரத்திற் படித்தோம். அந்தப் பிரதேசங்களிலும் சாசுவத நிலவரித் திட்டத்தையே ஏற்படுத்த வேண்டுமென்று ஆங்கிலேயர் விரும்பினர். ஆனால் இந்தப் பிரதேசங்களின் நிலைமை சாசுவத நிலவரித் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்றதாக இல்லை. ஏனெனில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு அந்தப்பிரதேசங்கள் வருவதற்கு முன்னர் அங்குக் குழப்பமும் அராஜகமும் அதிகமாக இருந்தன. அதனால் அங்குப் பெரும்பாலான இடங்களில் நிலச்சுவான்தார்களும் இல்லை, குடியானவர்களும் இல்லை. டில்லிக்குக் கிழக்கிலும் தென் கிழக்கிலும் உள்ள பிரதேசங்களில் அந்தக் காலத்திலிருந்த நிலைமை மிக மிக மோசமாயிருந்ததென்று அப்போது எழுதிவைக்கப்பட்ட ஆதாரங்களின்மூலம் அறிகிறோம். அக்பர் காலத்திலும் தற்காலத்திலும் பயிர்த்தொழில் செழித்திருந்த பிரதேசங்கள் அந்தக்காலத்தில் பெரும்பாலும் தரிசாகக் கிடந்தன. ஊரைவிட்டு ஓடிப்போகாமலிருந்த மிகச் சிறு தொகையினரான குடியானவர்கள் தங்கள் கிராமங்களைச் சுற்றியிருந்த சில நிலங்களில் மாத்திரம பயிர்செய்தார்கள். மேலும் அவர்கள் நிலத்துக்குப் போகும்போது கலப்பைகளோடு போர்க் கருவிகளையும் கொண்டுபோனார்கள். இந்நிலையில் சாசுவத நிலவரித் திட்டத்தை ஏற்பாடு செய்வது முடியாத காரியம் என்பதை ஆங்கி

லேயர் அறிந்தனர். ஆகவே கிடைத்தவரையில் வரிவசூல் செய்தால் போதுமென்ற நிலை ஏற்பட்டது. அந்தச் சொற்பத் தொகையையும் யாரிடமிருந்து வசூல் செய்வது என்பது பெரிய பிரச்சினையாயிற்று. நிலங்களுக்கு உரிமைபெற்ற நிலச்சுவான் தார்கள் யார் என்பதை நிர்ணயிப்பது மிகக் கஷ்டமான காரியமாயிருந்தது. மிகுந்த குழப்பத்துக்கும் கஷ்டத்துக்கும் இடையில் இந்த வேலை நடந்தது. கடைசியில் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஓர் "உரிமைப் பத்திரம்" தயார் செய்யப்பட்டது.

ஒவ்வொரு கிராமத்திலுமிருந்த நிலங்களை எந்தெந்தக் குடியானவர்கள் பயிர் செய்தார்கள், அந்த நிலங்களை அவர்கள் எத்தகைய நிபந்தனைகளின்பேரில் பயிர் செய்தார்கள், அவற்றைப் பயிர் செய்வதற்காக அவர்கள் யாருக்கு என்ன தொகை கொடுத்தார்கள், என்பவை போன்ற பல விஷயங்கள் அந்தப் பத்திரத்திற் குறிக்கப்பட்டன. அதன்பின் ஒவ்வொரு கிராமத்திலுமிருந்த நிலத்துக்குச் சொந்தக்காரரான நிலச்சுவான்தார்கள் யார் என்ற விஷயம் முடிவு செய்யப்பட்டு அவர்கள் அரசாங்கத்திற்கு எவ்வளவு வரி செலுத்தவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதன் பயனுகப் பலவகைப்பட்ட நிலச்சுவான்தார்கள் தோன்றினுர்கள். அவர்களிற் சிலர் குடியானவர்களிடமிருந்து வாடகை மாத்திரம் பெறும் தலைவர்களாகவும் ஜமீன்தார்களாகவு மிருந்தார்கள். வேறு சில இடங்களில் குடியானவர்களே நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று ஏற்பட்டதால் அவர்களெல்லோரும் ஒன்றுகச் சேர்ந்து தங்கள் கிராமத்தின் வரித்தொகையை மொத்தமாக அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டும் என்று ஏற்பட்டது.

சென்னையில் வேறுவகையான நிலவரித்திட்டம் ஏற்பட்டது. 1798-ஆம் ஆண்டில் வெல்லெஸ்லி வங்காளத் திட்டமாகிய சாசுவத நிலவரித் திட்டத்தையே சென்னை இராஜதானியிலும் புகுத்துமாறு உத்தரவிட்டான் அந்த முறை சில இடங்களில் ஏற்படுத்தப்பட்டது. ஆனுல் சென்னை இராஜதானியின் பெரும்பாலான பகுதிகளில் வங்காளத்திலிருந்த ஜமீன்தாரர்களைப் போன்ற நிலச்சுவான்தார்கள் இல்லை. அத்தகைய ஜமீன்தார்களைப் புதிதாக ஏற்படுத்துவதற்குச் செய்த முயற்சியும் பலனளிக்கவில்லை. ஆகவே தனித்தனிக் குடியானவர்கள் எவ்வளவு வரியை அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டும் என்று நிர்ணயிப்பதுதான் பொருத்தமான முறை என்பதை உத்தியோகஸ்தர்கள்

உணர்ந்தார்கள். இந்த முறைக்கு "ரயத்துவாரி முறை" என்று பெயர். 1812-ஆம் ஆண்டில் இந்த முறை பார்லிமெண்டின் அங்கீகாரத்தைப் பெற்றது. அதன்பின் சென்னை இராஜதானியில் ஒரு சில பகுதிகளில் ஜமீன்தாரி முறை அமுலிலிருந்ததாலும் ரயத்துவாரி முறையே பெரும்பாலும் அமுலுக்கு வந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் ரயத்துவாரி முறை பம்பாய் இராஜதானியிலும் அமுலுக்கு வந்தது. இவ்வாறு தென்னிந்தியாவில் ரயத்துவாரி முறையும் வட இந்தியாவில் ஜமீன்தாரி முறையும் நிலைபெற்றன.

இனி வரித்தொகை எவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது என்பதைப் பார்ப்போம். ரயத்துவாரி முறையின்படி குடியானவர்கள் மொத்த விளைவில் பாதியையும், ஜமீன்தாரி முறையின்படி நிலச்சுவான்தார்கள் குடியானவர்களிடமிருந்து எதிர்பார்த்த தொகையில் பத்தில் ஒன்பது பங்கையும் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முறைப்படி வரி வசூலித்தால் குடியானவர்களுக்கு அதிக லாபம் இராதென்றும், அதனால் பெருவாரியான குடியானவர்கள் பயிர்த்தொழிலில் ஈடுபடமாட்டார்கள் என்றும் அனுபவத்தில் தெரிய வந்தது. ஆகவே பயிர்த்தொழிலில் ஏற்படக்கூடிய நியாயமான செலவுபோக மீதி வருமானத்தில் பாதியை அரசாங்கத்திற்கு வரியாகச் செலுத்தவேண்டும் என்ற முறை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமுலுக்கு வந்தது. இந்தத் தொகையை இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கொருமுறை நிர்ணயிப்பது என்று ஏற்பட்டது. இந்தத்தொகை ஒருதரம் நிர்ணயித்த பிறகு அடுத்ததரம் நிர்ணயிக்கும்வரையில் விளைவிலும் விலைவாசிகளிலும் உயர்வு ஏற்பட்டால் அதை வரி செலுத்தியவர்களே அனுபவிக்க வேண்டியது. வரித்தொகையை சாசுவதமாக நிர்ணயிப்பது நல்லது என்ற கொள்கைக்குப் பல வருஷங்கள் வரையில் ஆதரவு இருந்தது. ஆனால் 1883-ஆம் ஆண்டிலிருந்து அந்தக்கொள்கை அறவே கைவிடப்பட்டது.

தேசத்தின் அரசாட்சிக்கு அடிப்படையான நிரந்தரமான சட்டங்களின் தொகுதி இன்னும் ஏற்படாமலே இருந்தது. மூன்று இராஜதானிகளிலுமிருந்த கவுன்ஸில்கள் அப்போதைக்கப்போது அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கேற்ற சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. 1833-ஆம் ஆண்டில் பார்லிமெண்டில் நிறைவேறிய சாசனச் சட்டம் ஒரு புதிய முறையை ஏற்படுத்தி

யது. அதன்படி சென்னைக் கவுன்ஸிலும், பம்பாய்க் கவுன்ஸிலும் சட்டமியற்றும் அதிகாரத்தை இழந்தன. இந்தியாவில் பிரிடிஷ் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களுக்கெல்லாம் சட்டமியற்றும் அதிகாரம் கல்கத்தா கவுன்ஸிலுக்கு வழங்கப்பட்டது. அந்த விஷயத்தில் கவர்னர் ஜெனரலுக்கு உதவி செய்வதற்காகக் கவுன்ஸிலில் ஒருவன் சட்ட அங்கத்தினனாக நியமிக்கப்பட்டான். இவ்வாறு முதல் முதல் நியமிக்கப்பட்ட சட்ட அங்கத்தினன் மெக்காலே என்பவன். நிரந்தரமான சட்டத் தொகுதியை ஏற்படுத்துவதற்கு மெக்காலே மிகுந்த ஊக்கத்துடன் வேலைசெய்தான். ஆனால் அவன் இந்தியாவை விட்டுச் சென்றபிறகு இத்துறையில் ஊக்கம் குன்றியது.

இவ்வாறு நிரந்தரமான சட்டத்தொகுதி ஏற்படவில்லையெனினும் நாட்டில் படிப்படியாக அமைதியும் ஒழுங்கும் ஏற்படாமல் இருக்கவில்லை. அமைதியைக் குலைத்த மக்கள் கொஞ்சங் கொஞ்சமாக அடக்கப்பட்டனர். குடிகளுக்குள் ஏற்பட்ட வழக்குகளைத் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுத் தீர்த்துக்கொள்ளுவதற்குப் பதிலாகக் கோர்ட்டில் பிராது கொடுக்கும் முறை சிறிது சிறிதாக வழக்கத்துக்கு வந்தது. தனி மனிதர்களாகிய அரசியல் வர்க்கத்தினருக்கு அடங்கி நடப்பதற்குப் பதிலாக அவர்களுக்கு மேற்பட்ட அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு மக்கள் அனைவரும் அடங்கி நடக்கவேண்டும் என்ற உணர்ச்சி நாளடைவில் மக்கள் மனத்தில் வேரூன்றலாயிற்று. இவ்வாறு சட்டத்தின் ஆட்சி தோன்றியது.

நாட்டில் அமைதியை ஏற்படுத்துவது சிறிது சிறிதாக நடைபெற்ற காரியம். நாட்டின் பல பாகங்களிலும் மக்களைத் துன்புறுத்திவந்த கொள்ளைக்கூட்டத்தினர் பலர் இருந்தனர். இந்தக் கூட்டங்களை ஒவ்வொன்றாக அழிக்கவேண்டியிருந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் குழப்பமான நிலையில் இந்தக் கூட்டத்தினர்க்கு நல்ல வேட்டை கிடைத்தது. இத்தகைய கூட்டங்களில் ஒரு பெரிய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தாம் பிண்டாரிகள். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கொஞ்சங் கொஞ்சமாக அனுபவமும் திறமையும் பெற்று ஒவ்வொரு கூட்டத்தையும் அடக்கினார்கள். தக்குகள் என்ற ஒரு கூட்டத்தினரை அடக்கியது தனிப்பட்ட முறையில் குறிப்பிடத்தக்கது. வழிப்பறிக்காகக் கொலைசெய்வதைத் தக்குகள் ஒரு தனிப்பட்ட கலையாகப் பயின்றார்கள். ஒவ்வொரு பிரயாணியையும் கொலை செய்யும்போது அவர்கள் தங்கள் குலதெய்வத்துக்கு ஒரு விருப்பமான பலி கொடுத்ததாக

எண்ணினார்கள். 1836-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டத்தின் படி தக்குகள் பலர் ஆயுள் பரியந்தம் சிறையிலிடப்பட்டனர். அதன்பின் அந்தக் கூட்டம் அழிந்தது.

உடன்கட்டையேறும் பழக்கத்தை நிறுத்துவதற்கு இயற்றப்பட்ட சட்டத்தைப்பற்றிக் கூறுவது இங்குப் பொருத்தமாக இருக்கும். இந்தியாவில் தொன்றுதொட்டு வந்த பழக்க வழக்கங்களில் கம்பனி தலையிட்டது இதுதான் முதல்தடவை. ஆங்கில உத்தியோகஸ்தர்களும், இந்தியாவுக்கு வந்த செல்வாக்கு மிகுந்த பாதிரிகளும் இந்தப் பழக்கத்தை ஏற்கெனவே கண்டித்திருக்கிறார்கள். இந்தியாவில் இராஜாராம் மோன்ராய் என்ற ஓர் இந்துத் தலைவர் இந்தப் பழக்கத்தைக் கண்டித்தது குறிப்பிடத்தக்கது. 1828-ஆம் ஆண்டில் இந்தப் பிரச்சினையைக் கவனிக்கும்படி பெண்டிங்குப் பிரபுக்குக் கம்பெனி உத்தரவிட்டது. அதன்பின் இரண்டாண்டுக்குள் ஏற்பட்ட சட்டத்தால் இந்தப்பழக்கம் மூன்று இராஜதானிகளிலும் நிறுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தை எதிர்த்துச் சில செல்வாக்குள்ள இந்துக்கள் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்தார்கள். ஆனால் அந்த அப்பீல் தள்ளப்பட்டது. அடிமைகளை வைத்திருக்கும் பழக்கம், பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் பழக்கம் முதலிய தீய பழக்கங்களையும் மக்கள் கண்டிக்கத் தொடங்கினார்கள். இந்த விஷயங்களைப்பற்றிக் கம்பனி சிறிதுகாலம் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுத்தது. ஆனால் அடிமைகளை வைத்துக்கொள்ளும் பழக்கத்தை நிறுத்துவதற்கு இயற்றிய சட்டத்தைப்பற்றி இப்போதே சொல்லிவிடுவது பொருத்தமாக இருக்கும்.

அடிமைகளை வைத்துக்கொள்ளுவதற்கு இந்துச் சட்டமும் இஸ்லாமியச் சட்டமும் இடங் கொடுக்கின்றன. வீட்டு வேலைக்காக அடிமைகளை வைத்துக்கொள்ளுவது இந்தியாவில் சர்வ சாதாரணமான பழக்கமாயிருந்தது. சில இடங்களில் பயிர்த் தொழில் செய்வதற்கும் அடிமைகள் உபயோகப்படுத்தப்பட்டனர். ஆனால் கைத்தொழில் நிலையங்களில் அடிமைகள் இல்லை. சாதாரணமாக அடிமைகள் நன்றாகவே நடத்தப்பட்டார்கள். சில விஷயங்களில் அவர்கள் சுதந்திர மக்களைவிட நல்லநிலையில் இருந்தார்கள் என்றுகூடக் கூறலாம். ஏனெனில் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் சாதாரண மக்கள் பட்டினியால் சாவது சகஜமாயிருந்தது. ஆனால் அடிமைகள் இறந்தால் தங்களுக்கு நஷ்டம் ஏற்படுமென்று எஜமானர்கள் அவர்களுக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றினார்கள். எனினும், ஆங்கிலேயர்

கள் அடிமைகளை வைத்திருக்கும் பழக்கத்தை மிகவும் வெறுத்தார்கள். அதனால் 1833-ஆம் ஆண்டில் நிறைவேறிய சாசனச் சட்டத்தின் மூலம் பார்லிமெண்டு எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அந்தப் பழக்கத்தை நிறுத்திவிடவேண்டுமென்று கம்பனிக்கு உத்தரவிட்டது. அதனால் இந்தப் பழக்கத்தைப்பற்றி தீவிரமான விசாரணை நடந்தது. அதன் பயனாக 1843-ஆம் ஆண்டில் நிறைவேறிய சட்டத்தின்படி அடிமைகளை வைத்துக்கொள்ளும் உரிமையைக் கோர்ட்டுகள் அங்கீகரிக்ககூடாது என்று ஏற்பட்டது. ஆகவே அடிமைகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் சட்டத்திற்குப் புறம்பாயிற்று. சட்டத்தின் ஆதரவு போய்விட்டதால் அந்தப் பழக்கமும் நாளடைவில் மறைந்துபோயிற்று. 1860-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தால் அடிமைகளை வைத்திருப்பது சட்டப்படி தண்டிக்கக்கூடிய குற்றமாயிற்று.

உடன்கட்டையேறும் பழக்கத்தை நிறுத்துவதற்கு ஏற்பட்ட சட்டத்தின் உதாரணத்தைக்கொண்டு பார்க்கும்போது இந்தியா முழுவதும் ஆங்கில ஆட்சிக்குள் வந்துவிட்டதாகக் கம்பனியார் கருதி, அதற்கேற்பத் தங்கள் காரியங்களை நடத்தத் தொடங்கினார்கள் என்பது தெரியும். ஆகவே இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஒரேவிதமான ஆட்சி யிருக்கவேண்டுமென்று தீர்மானித்து அதற்கேற்ற சட்டதிட்டங்களை ஆங்கிலேயர் ஏற்படுத்தினர். இந்த எண்ணத்தையும் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டதுதான் நாணய விஷயத்தில் ஏற்பட்ட சீர்திருத்தமும். 1834-ஆம் ஆண்டுவரையில் மதிப்பில் ஏற்றத் தாழ்வுள்ள ரூபாய் நாணயங்கள் பல இடங்களில் அச்சடிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அவைகளில் முகலாயச் சக்கரவர்த்தியின் ஆணையும் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் 1835-ஆம் ஆண்டில் 180-கிரெயின் எடையுள்ள ஒரேவிதமான ரூபாய் நாணயங்கள் மூன்று இராஜதானிகளிலும் செலவாணிக்கு வந்தன. மேலும் அவற்றில் ஆங்கில அரசனின் உருவமும் பொறிக்கப்பட்டது. இதன்மூலம் இந்திய அரசியலதிகாரம் ஆங்கிலேயர் கைக்குச் சென்றுவிட்டது என்பதை ஆங்கிலேயர் சொல்லிக் காட்டாமலே இந்தியர்கள் உணர்ந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது.

இதுவரையில் 1793-ஆம் ஆண்டு முதல் 1835-ஆம் ஆண்டு வரையில் அரசியல் நிர்வாகத்தில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களைப்பற்றிக் கூறினோம். இனி இந்திய மக்களின் வாழ்க்கையில்

இந்த மாறுதல்கள் எத்தகைய பயன்களை விளைவித்தன என்று பார்ப்போம். முதலில் பொருளாதாரத் துறையை எடுத்துக் கொள்வோம். நாட்டில் அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டதால் விவசாயம் மறுபடியும் செழிக்கத் தொடங்கியது. தரிசாகக் கிடந்த நிலங்கள் மறுபடியும் பயிர் செய்யப்பட்டன. ஆனால் இதற்கு முன்னால் நாட்டிலிருந்த குழப்பத்தால் விவசாயம் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்ததால் பயிர்த்தொழிலுக்குப் பயன் படக்கூடிய எல்லா நிலங்களையும் குடியானவர்கள் பயிர் செய்யக் கூடிய நிலை ஏற்படுவதற்கு வெகுகாலம் சென்றது. கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் பருத்திநூல் நெசவுத்தொழில் க்ஷீண தசை யடைந்ததுதான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் குறிப்பிடத்தக்க விஷயமாயிருந்தது. பல நூற்றாண்டுக் காலம் தென் ஆசிய மக்கள் இந்தியத் துணிகளையே வாங்கினார்கள் என்றும், பின்னர் ஐரோப்பியர் வந்தபிறகு இந்தியத் துணிகள் மேற்கு ஆப்பிரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டன என்றும், பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்துக்கு இந்தியத் துணி ஏற்றுமதி நின்றுவிட்டது என்றாலும், மற்றைய மார்க்கட்டுகளுக்கு இந்திய ஜவுளி ஏற்றுமதியாகிக் கொண்டுதான் இருந்ததென்றும் முன்னைய அதிகாரங்களிற் படித்தோம். ஆனால் இங்கிலாந்தில் பதினெட்டாம் நூற்றாண்டில் நெசவுத் தொழிலிற் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. விரைவில் நூற்கவும் நெய்யவும் கூடிய புதிய பொறிகளும் நீராவி யந்திரங்களும் கண்டுபிடிக்கப் பட்டதால் அவற்றின் உதவியால் நெய்யப்பட்ட துணிகளோடு இந்தியக் கைத்தறிகள் போட்டியிட முடியவில்லை. ஆகவே பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய ஜவுளியின் ஏற்றுமதி நின்றது மாத்திரமின்றி, இந்தியாவுக்கே ஆங்கில ஜவுளி வரத் தொடங்கியது. அதனால் கைத்தறிக்காரர்கள் தங்கள் தொழிலை நடத்த முடியவில்லை. அதனால் ஏற்பட்ட வறுமையும் துன்பமும் தாங்கமுடியாத நெசவாளிகள் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கினார்கள். அதைத் தவிர அவர்களுக்குப் பிழைக்கும் வழி வேறு இல்லாது போயிற்று.

இந்த நெருக்கடியான நிலைமையில் நெசவாளிகளைக் காப்பதற்கு அரசாங்கம் எந்தவித முயற்சியும் செய்யவில்லை. அப்போதிருந்த சந்தர்ப்பங்களைப் பார்க்கும்போது வேலையற்ற நெசவாளிகள் பயிர்த்தொழிலில் ஈடுபடுவதற்கு வேண்டிய சௌகர்யங்களைச் செய்துகொடுப்பதைத் தவிர வேறு எந்தவிதமான உதவி

யும் அரசாங்கம் செய்திருக்க முடியாது என்று கூறலாம். ஜவுளி ஏற்றுமதி வியாபாரத்தில் ஆங்கிலேயர்களோடு போட்டியிட வேண்டுமானால் அவர்கள் அனுசரித்த யந்திரமுறைகளை இந்தியர்களும் அனுசரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் அந்த யந்திர முறைகளை அனுசரிப்பதற்குக் குறைந்த விலையில் நிலக்கரி கிடைக்கவேண்டும். வங்காளத்தில் நிலக்கரி தோண்டி எடுக்கும் தொழில் தொடங்கப்பட்டது எனினும், அங்கிருந்து நிலக்கரியை வேறிடங்களுக்கு எடுத்துச் செல்வதற்குச் செலவு அதிகமாயிற்று. ஆதலால் கல்கத்தாவுக்கருகில் ஒரு சில நெசவாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பாகத்தில் இருப்புப்பாதைகள் போடப்பட்டு அவைகள் நிலக்கரியை எடுத்துச் செல்வதற்கு உதவி செய்யும் வரையில் மில் நெசவுத் தொழில் ஓங்கவில்லை.

இந்தியக் கைத்தறி நெசவின் அழிவிற்குக் காரணமாயிருந்த புதிய யந்திர முறைகள் இந்தியச் சணல் உற்பத்திக்குப் பெரிதும் உதவியாயிருந்தன. அதனால் வங்காளத்தின் பெரும்பகுதியின் பொருளாதார நிலை சமீபகாலத்தில் உயர்வடைந்தது. அங்கு நீண்ட காலமாகச் சணல் பயிர் செய்யப்பட்டு வந்தது. அது கோணிப்பைகள் நெய்வதறகுப் பயன்பட்டு வந்தது. ஆனால் அத்தொழில் அதிகமாக வளர்ந்து பரவவில்லை. சணல் நூற்புக்கும் நெசவுக்கும் நவீன யந்திர முறைகளை உபயோகிப்பது எளிதான காரியமாகத் தோன்றவில்லை. எனினும் 1832-ஆம் ஆண்டில் டண்டியில் செய்யப்பட்ட சில முயற்சிகள் வெற்றிபெற்றதால் சணல் ஏற்றுமதி விரைவில் பெருகியது. ஆனால் நிலக்கரியை இருப்புபபாதைகளின் மூலம் எடுத்துக்கொண்டு வருவதற்குச் சௌகரியம் ஏற்படும் வரையில் சணல் ஆலைகளை இந்தியாவில் நிறுவ முடியவில்லை. தற்காலத்தில் வடகிழக்கு இந்தியாவில் தேயிலை மிகுதியாகப் பயிர் செய்யப்படுகிறது. ஆனால் பெண்டிங்கு இந்தியாவைவிட்டுச் செல்லும் தறுவாயில்தான் இந்தியாவில் தேயிலை பயிரிடுவதைப்பற்றித் தீவிரமாக யோசனை செய்யப்பட்டது.

இனிப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட சமூக, கலாசார மாறுதல்களைப்பற்றிக் கவனிப்போம். அந்தக்காலத்தில் ஆங்கிலேயரோடு நேரடியான தொடர்புகொண்ட இந்தியர்கள் அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கைப்பற்றத் தொடங்கினார்கள். அந்தக்காலத்தில் அவர்கள் ஆங்கிலப் பழக்க வழக்கங்களைச் சரியா தப்பா என்று ஆராயவுமில்லை, அவற்றை

எதிர்க்கவுமில்லை. பம்பாயில் நல்ல செல்வாக்குடையவர்களா யிருந்த பார்சிகள் ஆங்கிலப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதில் முனைந்து நின்றார்கள். அவர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்பட்டது. ஆனால், சென்னையில் ஆங்கிலேயரோடு பழகிய இந்தியர்களில் முக்கியமானவர்கள் இந்துக்களாயிருந்தார்கள். அவர்களுடைய ஜாதிக் கட்டுப்பாடுகள் ஆங்கிலேயர்களோடு அவர்கள் நெருங்கிய சமூகத் தொடர்பு கொள்ளுவதற்கு இடைஞ்சலாயிருந்தன. ஆனால் சென்னை இராஜதானியில் ஆங்கிலம் வெகு விரைவில் பரவி அங்கு அது பொதுமொழி என்ற நிலையையடைந்தது. வட இந்தியாவிலிருந்த முஸ்லிம்கள் ஆங்கிலேயரோடு நெருங்கிப் பழகாமல், தங்களுடைய தனிப்பட்ட கலாசாரத்தையே பின்பற்றினார்கள். ஆங்கிலேயரோடு நெருங்கிப் பழகிய ஒரு சில முஸ்லிம்கள் அவர்களிடமிருந்த கெட்ட குணங்களைக் கற்றுக்கொண்டார்களே யன்றி அவர்களுடைய நல்ல குணங்களைப் பின்பற்றவில்லை. கல்கத்தாவிலும் அந்நகரையடுத்த பகுதிகளிலுந்தான் மிக முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றை விளக்குவதற்குப் பள்ளிக்கூடங்களின் ஸ்தாபனம், கிறிஸ்தவப் பாதிரிகளின் மதபோதனை, சமாசாரப் பத்திரிகைகளின் வளர்ச்சி ஆகிய மூன்று .விஷயங்களைப்பற்றி முதலிற் கூறுவது அவசியம்.

இந்து ஆட்சிக் காலத்திலும் முஸ்லிம் ஆட்சிக் காலததிலும் இந்தியாவில் கல்வி எவ்வளவு தூரம் பரவியிருந்தது என்பது நமக்குச் சரியாகத் தெரியாது எனினும் நமக்குத் தெரிந்தவரையில் கல்வி வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படை என்ற கொள்கை அந்தக் காலத்தில் நிலைபெறவில்லை என்று கூறலாம். சங்கீதம் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் ஒரு சிலரே இருந்ததைப் போலக் கல்வியை நன்றாகக் கற்றவர்களும் ஒரு சிலரே இருந்தனர். இன்னும் சிலர் சில குறிப்பிட்ட தொழில்களில் ஈடுபடுவதற்காகக் கல்விகற்றார்கள். முக்கியமாக, புரோகிதர்களும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களும் அரசியல் உத்தியோகத்தை விரும்பியவர்களும் அவ்வத்துறைக்கேற்ற கல்வி கற்றார்கள். புரோகிதர்கள் விரிவான சமஸ்கிருதக் கல்வியைக் கற்க வேண்டுமென்று சாஸ்திரங்கள் விதித்தன. தொழிலை உத்தேசித்து எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள விரும்பிய மற்ற வகுப்பினர் தத்தம் வீட்டிலேயே அந்தக் கல்வியைக் கற்றுக்கொண்டனர். இன்றேல், அவர்கள் ஆங்காங்கிருந்த சிறிய பாடசாலைகளுக்குச் சென்று படித்தார்கள். அந்தப் பாடசாலைகள் அர

சாங்க ஆதரவு பெற்றவையல்ல. உயர்தரக் கல்வி மதஸ்தாபனங்களில்தான் கற்றுக் கொடுக்கப்பட்டது. புத்தமதம் ஓங்கியிருந்த காலத்தில் மிகச் சிறந்த கல்வி நிலையங்களிருந்தன என்று முன்னர்ப் படித்தோம். அத்தகைய நிலையங்கள் பிற்காலத்தில் இல்லை. எனினும் காசி, நத்தியா போன்ற சில இடங்களில் கற்றறிந்த பிராமணர்கள் ஸம்ஸ்கிருத நூல்களைத் தங்களை நாடிவந்த சீடர்களுக்குக் கற்பித்து வந்தார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு அரசர்களும் தனவந்தர்களும் பொருளுதவி செய்தார்கள். அது போலவே, முக்கியமான மசூதிகளிலும் இஸ்லாமிய நூல்களில் வல்லுநரான முகமதியர்கள் தங்களை நாடிவந்த மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார்கள். குருவுக்கும் சிஷ்யனுக்கும் அந்தக்காலத்தில் நெருங்கிய தொடர்பு இருந்தது.

ஆங்கிலக் கம்பனி ஒரு வியாபார ஸ்தாபனமாகையால் அது கல்வி விஷயங்களைக் கவனிக்கவில்லை. ஆனல் கம்பனியில் வேலை செய்த கிறிஸ்தவ உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளுக்காகச் சென்னையில் சில பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருந்தன. பின்னர் அரசியல் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டபோதும் கம்பனி கல்வி விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. ஆனல் அரசாங்க உத்தியோகத்தையே தங்கள் ஜீவனோபாயமாகக் கொண்ட வகுப்பினர் ஆங்கிலக் கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு அதிக ஆவலுள்ளவர்களாயிருந்தார்கள். அதே மாதிரியாகத்தான் அவர்கள் சில நூற்றுண்டுகளுக்கு முன்னர்ப் பாரசீக மொழியைக் கற்றுக் கொண்டார்கள். இப்போது ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ளாவிட்டால் தங்கள் பிழைப்பை நடத்தமுடியாது என்று அவர்கள் உணர்ந்தார்கள். ஆகவே ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்கேற்ற பள்ளிக்கூடங்கள் தோன்றலாயின. முதலில் அவை அரசாங்கத்தின் ஆதரவின்றித் தனிப்பட்ட நபர்களாலும் ஸ்தாபனங்களாலும் ஆரம்பிக்கப்பட்டன. அந்தத் துறையில் கிறிஸ்தவப் பாதிரிகள் அதிகமான பங்கு எடுத்துக்கொண்டார்கள்.

கம்பனி ஒரு வியாபாரஸ்தாபன மாகையால் பாதிரிகளுடைய நடவடிக்கைகளால் வியாபாரத்திற்கு ஏதாவது இடையூறு ஏற்படுமென்று முதலில் நினைத்தது இயற்கைதான். பழங்காலத்தில் நிறுவப்பட்ட சில ரோமன் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் இன்னும் இருந்தன. சென்னையில் ஒரு சில பிராடஸ்டண்டுகள் இருந்தார்கள். ஆனல் கல்கத்தாவில் கிறிஸ்தவப் பாதிரிகளை மக்கள் விரும்பவில்லை. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் கல்கத்தாவுக்கு வந்த

சில பாதிரிகள் அங்கு மக்கள் தங்கள் வருகையை விரும்பவில்லை யென்றுணர்ந்து அண்மையிலிருந்த டேனிஷ் நகரமான ஸெராம்பூர் என்ற இடத்திற்குச் சென்று தங்கினர். அங்கே அவர்கள் சில பள்ளிக்கூடங்களையும், ஓர் அச்சகத்தையும் ஏற்படுத்தி மக்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டார்கள். சிறிது காலத்தில் கல்கத்தாவிலும் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கிருந்த எதிர்ப்புக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. ஆகவே, அங்கும் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தோன்றின. 1820-ஆம் ஆண்டிற்குள் கல்கத்தாவில் இரண்டு கல்லூரிகள் தோன்றிவிட்டன. அதுபோலவே சென்னை, ஆக்ரா, பம்பாய் ஆகிய இடங்களிலும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஏற்பட்டன. அவைகளில் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டது.

ஸெராம்பூரிலிருந்த பாதிரிகள்தாம் இந்தியாவில் பத்திரிகைத் தொழில் தோன்றி வளர்வதற்குக் காரணமாயிருந்தார்கள். முதலில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகைகளெல்லாம் கல்கத்தாவிலிருந்த ஆங்கிலேயர்கள் படிப்பதற்காக ஏற்பட்டவை. ஆதலால், அவைகளில் பெரும்பாலும் தனிப்பட்ட மனிதர்களைப் பற்றிய செய்திகள்தாம் இருந்தன. அந்தச் செய்திகளும் சில சமயங்களில் மட்டரகமான சொற்களில், குறிப்பிட்ட நபர்களைக் கண்டிக்கும் முறையில் எழுதப்பட்டன. அந்தப் பத்திரிகைகளில் ஒன்றும் அதிக நாள் நிலைத்திருக்கவில்லை. வெல்லெஸ்லி தன்னை யாரும் கண்டிப்பதைப் பொறுக்கமாட்டான். ஆதலால் அத்தகைய செய்திகள் வெளிவராமலிருப்பதற்காகக் கடுமையான பத்திரிகைத் தணிக்கை விதிகளை ஏற்படுத்தினுன். அந்த விதிகள் அமுலிலிருக்கும் வரையில் பத்திரிகைத் தொழில் வளர முடியாதென்பது திண்ணம். அவைகள் மாயிராப் பிரபுவினுல் ரத்து செய்யப்பட்டவுடன் பத்திரிகைத் தொழிலில் ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது. 1816-ஆம் ஆண்டில் ஓர் இந்திய ஆசிரியனுல் ஒரு பத்திரிகை வெளியிடப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆனுல் விரைவில் அதன் பிரசுரம் கைவிடப்பட்டிருக்கவேண்டும். இரண்டாண்டுகளுக்குப் பின்னர்ப் பாதிரிகள் ஒரு வங்காளி வாரப் பத்திரிகையையும், வங்காளி, ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப்பட்ட கட்டுரைகளைக்கொண்ட ஒரு மாதப் பத்திரிகையையும் தொடங்கினுர்கள். இந்த உதாரணத்தைப் பின்பற்றி இந்தியர்களும் பத்திரிகைத் தொழிலில் சிரத்தையுடன் நுழைந்தார்கள். 1823-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டத்தின்படி பத்திரிகைப் பிரசுரத்திற்கு அரசாங்க அனுமதி

(லைசென்ஸ்) பெறவேண்டுமென்று விதிக்கப்பட்டதால் சிறிது காலம் பத்திரிகைத் தொழிலின் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. ஆனால் 1835-ஆம் ஆண்டில் பத்திரிகைகள்மீது விதிக்கப்பட்ட தடைகள் நீக்கப்பட்டன. இந்தியாவின் மற்ற பகுதிகளில் பத்திரிகைத் தொழிலின் இளமைப்பருவ வரலாற்றைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியாது எனினும், பம்பாயில் சுதேச பாஷையில் 1822-ஆம் ஆண்டிலிருந்து ஒரு பத்திரிகை பிரசுரிக்கப்பட்டது என்பது நமக்கு நிச்சயமாகத் தெரிகிறது.

மேலே கூறியவற்றிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவில்—சிறப்பாக வங்காளத்தில்—அறிவுத் துறையில் ஒரு புதிய நிலை தோன்றியது என்பதை அறியலாம். இந்தப் புதிய நிலை தோன்றுவதற்கு ஆங்கிலக் கல்வி பரவியதும், பத்திரிகைகள் தோன்றியதும், பாதிரிகளுடைய மதபோதனை வேலையும் காரணமாயிருந்தன. மேற்கூறிய புதிய சூழ்நிலை இந்திய மக்களின் வாழ்க்கையில் எத்தகைய மாறுதல்களை ஏற்படுத்தியது என்பதை இராஜாராம் மோகன்ராய் என்பவருடைய வரலாற்றின் மூலம் விளக்கலாம். பிராமண ஜாதியில் தோன்றிய அவர் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர்ச் சைதன்யர் போதித்த பக்தி மார்க்கச் சூழ்நிலையில் வளர்ந்தவர். பின்னர் அவர் இஸ்லாம் கிறிஸ்தவம், பௌத்தம் ஆகிய மதங்களின் நூல்களைப் படித்தார். ஆங்கிலக் கம்பனியின் உத்தியோகத்தில் பத்தாண்டுகள் இருந்தபின்னர் 1814-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் நிலையாக வாசம் செய்யத் தொடங்கினார். அதன்பின் தம்முடைய அறிவை மேலும் பெருக்குவதிலும், தாம் கண்ட முடிவுகளைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதிலும் ஈடுபட்டார். அவர் இந்துமத நூல்களில் விக்கிரக வழிபாட்டால் களங்கமடைந்த ஒரு தூய கடவுட் கொள்கையைக் கண்டார். அதே கடவுட் கொள்கை பொருத்தமற்ற பல விஷயங்களில் புதையுண்டு கிடப்பதைப் புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்களிலும் கண்டார். அந்தப் புனிதமான கடவுட்கொள்கையை இந்துக்களுக்கு எடுத்துக் காட்டி, அதற்குப் புறம்பான வழிபாட்டு முறைகளையும் சமூகப் பழக்க வழக்கங்களையும் களைந்தெறிய விரும்பினார். ஆனால் ஸெராம்பூரிலிருந்த அவர்களுடைய நண்பர்களான கிறிஸ்தவப்பாதிரிகள் அவர் விவிலிய வேதத்தைத் தப்பர்த்தம் செய்கிறார் என்று அவரை எதிர்த்தார்கள். அதுபோலவே இந்து மதக் கோட்பாடுகளை முறை தவறாமல் அநுசரித்த இந்துக்களும் அவரை எதிர்த்தார்கள். எனினும் இராஜாராம் மோகன்ராய்

தம் கொள்கையைக் கைவிடவில்லை. 1828-ஆம் ஆண்டில் அவர் "ஆதியந்த மில்லாததும், தேடிக் கண்டுபிடிக்க முடியாததும், மாறுதலில்லாததும், அண்ட சராசரங்களை ஆக்கி அழிப்பதும் ஆகிய ஒப்பற்ற பரம்பொருளின் வழிபாட்டுக்காக" பிரம்ம சமாஜம் என்ற சங்கத்தை நிறுவினர். அந்த வழிபாட்டில் விக்கிரகங்களுக்கும், படங்களுக்கும், வேள்விகளுக்கும் இட மில்லை. சமூகச் சீர்திருத்தத் துறையில் அவர் ஆங்கிலக் கல்வி யைப் பரப்புவதற்கும், இந்துக் குடும்ப வாழ்க்கையைச் சீர்திருத் துவதற்கும், ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணம் செய்து கொள்ளும் பழக்கத்தை ஒழிப்பதற்கும், உடன்கட்டையேறும் பழக்கத்தை நிறுத்துவதற்கும் விரும்பினர். சாதிப் பிரிவுகளை வெறுத்தாரெனினும் அவற்றை அழித்துவிட விரும்பவில்லை.

தம்முடைய கொள்கைகளைப் பரப்புவதற்கு ஆங்கிலேயரு டைய செல்வாக்கை உபயோகப்படுத்த இராம்மோகன் விரும்பி ஞர். அதற்காக அவர் 1830-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்றார். அந்தக் காலத்தில் ஓர் இந்தியர் இங்கிலாந்துக்குச் செல்வதென்றால் அது ஒரு பிரமாதமான காரியம். அவருடைய இங்கிலாந்து விஜயம் இந்தியாவில் தோன்றியிருந்த புதிய சூழ் நிலையை ஆங்கிலேயருக்கு விளக்கிக் காட்டுவதற்குப் பெரிதும் உதவி செய்தது. ஆனல் அவர் 1833-ஆம் ஆண்டில் இறந்து போனர். அதனல் சிறிது காலத்திற்கு அவரது கொள்கைகள் வலிவிழந்தன. ஆனல் விரைவில் புதிய தலைவர்கள் தோன்றி அவருடைய கொள்கைகளுக்குப் புத்துயிரளித்தார்கள். பிரம்ம சமாஜம் இன்றும் இந்திய வாழ்க்கை முறையில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றது. அதிற் சேர்ந்துள்ள மக்களின் தொகை சிறிதுதான் எனினும் இந்துமதம் ஓர் உயிருள்ள மதம் என்பதையும், அதில் மாறுதலுக்கும் வளர்ச்சிக்கும் எப்போதும் இடம் உண்டு என்பதையும் பிரம்ம சமாஜம் எடுத்துக் காட்டு கின்றது.

ஆதியில் கம்பனி கல்வித் துறையில் கவனம் செலுத்தவில்லை என்பதைப்பற்றி ஏற்கெனவே கூறினேம். ஆனல் இந்திய அரசர்கள் கல்விக்கு ஆதரவளித்து வந்ததுபோலவே கம்பனியும் ஆதரவளிக்க வேண்டும் என்ற எண்ணம் அதிகாரிகளுக்கு இருக் கத்தான் செய்தது. ஆகவே, வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்கத்தாவில் இஸ்லாமிய நூல்களைக் கற்பதற்கேற்ற ஒரு "மதரஸா" அல்லது பாடசாலையை நிறுவதற்கு உதவி செய்தான். அதுபோலவே காசியில் ஒரு ஸம்ஸ்கிருதக் கலாசாலைக்கு அரசாங்கப் பொருளுதவி

கொடுக்கப்பட்டது. மேலும் பூனு, நத்தியா முதலிய இடங்களி லிருந்த பண்டிதர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டது. இத்துறையில் இன்னும் அதிகமான உதவி செய்யவேண்டு மென்று 1811-இல் மிண்டோ வற்புறுத்தினன். ஆனால் இங்கி லாந்திலிருந்த வில்பர்போர்ஸ் போன்ற தலைவர்கள் பயன்படக் கூடிய கல்வியை இந்தியாவில் பரப்பவேண்டுமென்று வற்புத்தி னார்கள். இந்த இரண்டு கொள்கைளும் 1813-ஆம் வருஷத்திய சாசனச் சட்டத்தில் இடம்பெற்றன. அதன்படி கல்வியில் சிறந்த இந்தியர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கும், நவீன விஞ் ஞான சாஸ்திரக் கல்வியைப் பரப்புவதற்கும் கம்பனி பொருட் செலவு செய்யலாம் என்று அனுமதிக்கப்பட்டது. ஆனால் கொஞ்சகாலம் இந்தத் துறையில் எதுவும் நடைபெறவில்லை. 1823-ஆம் ஆண்டில் ஆண்டுதோறும் அளிக்கவேண்டிய உதவி நிதியை விநியோகப்படுத்துவதற்குப் பொதுக் கல்விக் கமிட்டி என்ற ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. ஸம்ஸ்கிருதம் போன்ற பண்டைய மொழிகளின் ஆராய்ச்சிக்கு உதவியளிப்பது என்று முதலில் அந்தக் கமிட்டி தீர்மானித்தது. ஆனால் ஆங்கிலக் கல்வியில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டினார்களாகையால் கமிட்டியின் ஒரு பகுதியினர் ஆங்கிலக் கல்வியைப் பரப்புவதற் குத்தான் உதவி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். மற் றொரு பகுதியினர் பண்டைய மொழிகளின் ஆராய்ச்சிக்கு உதவி செய்ய வேண்டுமென்று கூறினார்கள். அதனால் முடிவு ஏற்ப டாத நெருக்கடியான நிலை ஏற்பட்டது. இந்நிலை 1834-வரை யில் நீடித்தது. அவ்வாண்டில் புதிய சட்ட அங்கத்தினனான மெக்காலே அந்தக் கமிட்டியின் தலைவனாக நியமிக்கப்பட்டான். 1835-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மெக்காலே தன்னுடைய பிரசித்தி பெற்ற முடிவைத் தெரிவித்தான். அதன்படி ஆங்கில மொழியின் மூலம் உயர்தரக் கல்வியை இந்தியர்களுக்குக் கற்பிக்கவேண்டும் என்ற கொள்கை ஒத்துக்கொள்ளப்பட்டது.

அதிகாரம்—41

வடமேற்கு எல்லையும் பஞ்சாபும் 1836 - 1856

ஆக்லண்டு பிரபு 1836-முதல் 1842-வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். எல்லன்பரோ பிரபு 1842-முதல் 1844-வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அந்த இருவர் காலத்திலும் ருஷியர்கள் இந்தியாவின்மீது படையெடுக்கக்கூடும் என்ற அச்சம் அதிகமாக இருந்தது. 1793-முதல் 1815-வரையில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நடந்த சண்டையின் பிற்பகுதியில் துருக்கியின் மூலமாகப் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியா-வின்மீது படையெடுக்காதபடி பாரசீகம் இடையில் இருந்தது என்று முன்னர்ப் பார்த்தோம். ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. 1828-ஆம் ஆண்டில் ருஷியர்களுக்கும் பாரசீகர்களுக்கும் நடந்த போரில் பாரசீகர்கள் படுதோல்வி யடைந்தார்கள். அதன்பின்னர் ருஷியப்படைகள் காஸ்பியன் கடலுக்குக் கிழக்கிலுள்ள பிரதேசத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் தெற்கு நோக்கி நகர்ந்தன. ஆக்லண்டுபிரபு கவர்னர் ஜெனரலாக இந்தி-யாவுக்கு வந்த சமயத்தில் ருஷியர்களும் பாரசீகர்களும் ஒன்று சேர்ந்து ஆப்கானிஸ்தானத்தின்மீது படையெடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ஆப்கானிஸ் தானத்தின் நிலை குழப்பமாக இருந்தது. காபூலில் தோஸ்து முகமது அரசனுயிருந்தான். ஆனால், ஆப்கானிஸ்தானம் முழுவதிலும் அவனுடைய ஆட்சி நிலையாக நிறுவப்பட்டிருந்தது என்று கூறமுடியாது. ஆப்கானிஸ்தானத்தின் மேற்கு வாயிலாகிய ஹீரட்டைக் கைப்பற்றுவதற்குப் பாரசீகர்கள் முயன்று கொண்டிருந்தனர். முன்னர் ஆப்கானிய அரசனுயிருந்து சிம்மாசனத்தையிழந்த ஷாஷுஜா மறுபடியும் ஆப்கானிய அரச பதவியை அடைவதற்காக இந்தியாவின் உதவியை நாடிக்கொண்டிருந்தான். பஞ்சாபிலிருந்த ரஞ்சித்சிங்கும் ஆப்கானிஸ்தானத்தின்மீது கண்வைத்திருந்தான். ஆதலால் ஆங்கிலேயர் தோஸ்து முகமதுவுடன் உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பியபோது அவன் அவர்களுடைய நல்லெண்ணத்தில் ஐயங்கொண்டதற்குக் காரணம் இல்லாமலில்லை.

இங்கிலாந்திலிருந்து வந்த உத்தரவின்படி ஆக்லண்டு பிரபு தோஸ்து முகமதுவுடன் பேச்சு வார்த்தை தொடங்கினுன். அதே

சமயத்தில் காபூலில் ஒரு ருஷியத் தூதனும் தோஸ்து முகமது வுடன் ருஷியாவின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்தி வந்தான். ஆங்கில ராஜதந்திர முறைகள் பயனளிக்காததால் ஆங்கிலத் தூதன் 1838-ஆம் ஆண்டில் காபூலிலிருந்து திரும்பிவிட்டான். ஆகவே ருஷியத்தூதனுடைய முயற்சிகளுக்கு எதிராக வேலை செய்வதற்குக் காபூலில் வேறொருவரும் இல்லை என்ற நிலை ஏற்பட்டது. அது தோஸ்து முகமதுவுக்கும் சங்கடமான நிலைமை யாகத்தானிருந்தது. ஏனெனில் தோஸ்து முகமது ருஷியருடன் சேருவதா அல்லது ஆங்கிலேயருடன் சேருவதா என்ற முடிவுக்கு இன்னும் வரவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆக்லண்டு பிரபு ரஞ்சித்சிங்குடனும் ஷாஷுஜாவுடனும் ஒரு முக்கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டான். அதன்படி ஷாஷுஜாவை மறுபடியும் ஆப்கானிய அரசனாக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இதன் விளைவாக ஏற்பட்ட யுத்தத்தில் தோஸ்து முகம்மது தோல்வியடைந்தான். 1839-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஷாஷுஜா மறுபடியும் காபூலுக்கு அரசனானான். ஆனால் அவன் திறமையற்றவனாக இருந்தான். ஆப்கானியருடைய ஆதரவைப் பெறுவதற்கு அவனால் முடியவில்லை. ஆகவே அவன் மறுபடி யும் சிம்மாசனத்தை இழக்காமலிருப்பதற்கு ஆங்கிலச் சேனை களின் உதவி இன்றியமையாததாயிற்று. ஷாஷுஜா திரும்பவும் அரச பதவியை அடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே ரஞ்சித்சிங்கு இறந்துபோனான். ஆகவே முக்கூட்டு உடன் படிக்கையை நிறைவேற்றும் பொறுப்பு முழுவதும் ஆங்கிலேயர் தலையிலேயே விழுந்தது. அவன் உயிருடன் இருக்கும்வரையில் அவனுடைய ஆதரவு ஆங்கிலேயர்களுக்கு ஓரளவு உதவியாயிருந் தது. அவன் இறந்தபின் அரசபதவிக்குப் போட்டி ஏற்பட்டதால் சீக்கியர்களுக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டது. அதனால் அவர்க ளால் ஆங்கிலேயருக்கு எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும் 1840-ஆம் ஆண்டு முழுவதும் ஆங்கிலேயர் களால் ஷாஷுஜாவை அரசபதவியில் வைத்திருக்க முடிந்தது. அவ்வாண்டின் இறுதியில் தோஸ்து முகமது சரணாகதியடைந் தான். ஆனால் 1841-ஆம் ஆண்டில் நிலைமை மோசமாகிவிட்டது. ஷாஷுஜாவை ஆப்கானியர்கள் மேலும் மேலும் வெறுத்தார் களேயன்றி விரும்பவில்லை. அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் காபூலிலேயே ஷாஷுஜாவுக்கு விரோதமாக ஒரு கலகம் ஏற் பட்டது. அப்போது காபூலிலிருந்த ஆங்கில அதிகாரிகள் உடனடியான நடவடிக்கைகள் எடுக்காததால் அந்தக் கலகம்

விரைவில் பரவிற்று. டிசம்பர் மாதத்தில் ஆங்கிலேயர் ஆப்கானிஸ்தானத்திலிருந்து திரும்பி விடுவதற்கும் தோஸ்து முகமது மறுபடியும் ஆப்கானிஸ்தானத்திற்குப் போவதற்கும் ஒத்துக் கொண்டார்கள். காபூலிலிருந்து திரும்பிய ஆங்கிலப்படை வழியில் அழிந்தது. வழியெல்லாம் உறைபனியால் மூடப்பட்டிருந்தது. ஆப்கானியக் குதிரை வீரர்கள் முதலில் பின்னுலிருந்து தாக்கினுர்கள். அதன்பின் இருபுறங்களிலுமிருந்து தாக்கினுர்கள். ஆகவே 16,000-பேர் கொண்ட ஆங்கிலப்படையில் ஒரே ஒருவன் தப்பிப் பிழைத்து ஜலாலாபாத்துக்குச் செய்தி கொண்டு வந்தான்.

1842-ஆம் ஆண்டு பிப்ரவரியில் எல்லன்பரோ பிரபு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். ஷாஷுஜாவை அரசனுக்குவதற்குச் செய்த முயற்சி பயனற்றது என்பதையும், அந்த முயற்சியின் விளைவாக ஆப்கானியர் அனைவரும் ஒன்றுபட்டு ஆங்கிலேயரை எதிர்த்தார்கள் என்பதையும், மறுபடியும் ஆப்கானிஸ்தானத்தைக் கைப்பற்றுவது பயன்படாது என்பதையும் எல்லன்பரோ நன்ருக உணர்ந்தான். எனினும் மறுபடியும் ஒருதரம் ஆப்கானியப் படைகளைத் தோற்கடித்துவிட்டு, அதன்பின்னர்த் தாங்களாகவே ஆப்கானிஸ்தானத்திலிருந்து திரும்பி வந்தால்தான் ஆங்கிலேயருடைய செல்வாக்குக்குக் குறைவு ஏற்படாதென்று எல்லன்பரோ நினைத்தான். காபூலில் பெயரளவில் அரசனுயிருந்த ஷாஷுஜா ஏப்ரில் மாதத்திற் கொலை செய்யப்படவே, அந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எல்லன்பரோ ஆப்கானிஸ்தானத்தின்மீது ஆங்கிலப் படைகளை அனுப்பினுன். ஜுன் மாதத்தில் ஜலாலாபாத்திலிருந்த ஆங்கிலப்படைகள் ஆப்கானிஸ்தானத்தை நோக்கிப் புறப்பட்டு, செப்டம்பரில் காபூலைக் கைப்பற்றின. அதே சமயத்தில் காண்டஹாரிலிருந்து ஓர் ஆங்கிலப்படை காபூலை அடைந்தது. அக்டோபரில் ஷாஷுஜாவின் மகன் ஒருவனைச் சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டு ஆங்கிலேயர் அங்கிருந்து திரும்பிவிட்டனர். ஆனுல், அவனையும் ஆப்கானியர் ஆதரிக்காததால் தோஸ்து முகமது மறுபடியும் அரசனுனுன். ஆப்கானிய விஷயத்தில் ஆக்லண்டு தொடங்கிய முயற்சி இவ்வாறு முடிவடைந்தது.

ஆப்கானிய யுத்தத்தின் விளைவாகச் சிந்துநாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு வந்தது. பெயரளவில் சிந்து இன்னும் ஆப்கானிஸ்தானத்திற்கு அடங்கிய ஒரு ராஜ்யமாக இருந்தது. ஆனுல் நடைமுறையில் அது சுதந்திர ராஜ்யமாகத்தான் இருந்தது.

1783-ஆம் ஆண்டிலிருந்து பலூச்சிஸ்தானத்தைச் சேர்ந்த ஒரு வம்சத்தினர் சிந்துநாட்டை ஆண்டு வந்தனர். அந்த வம்சத்தின் தலைவர்கள் பொதுவாக அமீர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் சிந்து இராஜ்யத்தைத் தங்களுக்குள் பங்கிட்டு ஆட்சி செய்து வந்தனர். அவர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களின் வழியாகத்தான் ஆங்கிலேயர் காண்டஹாருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதனால் 1838-ஆம் ஆண்டில் அவர்கள் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். அதன்படி அவர்கள் கம்பனியின் படைகள் தங்கள் நாட்டின் வழியாகச் செல்வதற்கு அனுமதி கொடுத்ததோடு சில கேந்திரஸ்தானங்களையும் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டனர். இந்த உடன்படிக்கையை நிறைவேற்றும் விஷயத்தில் அடிக்கடி கஷ்டம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயரின் நிலைமை மிக மோசமாக இருந்த சமயத்தில் இத்தகைய கஷ்டங்கள் அதிகமாயின. ஆகவே, 1842-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் எல்லன்பரோ பிரபு அமீர்களை ஒரு புதிய உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினன். ஆனல் அமீர்கள் காலதாமதம் செய்ததோடு படைகளையும் திரட்டத் தொடங்கினர்கள். ஆகவே 1843-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் அவர்களை மியானி என்ற இடத்தில் ஆங்கிலேயர் தோற்கடித்தனர். சிந்து ராஜ்யம் பம்பாய் ராஜதானியுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

அடுத்த ஆண்டில் எல்லன்பரோவுக்குப் பதிலாக ஸர்-ஹென்றி ஹார்டிஞ்சு என்பவன் கவர்னர் ஜெனரலானன். அவன் 1844-முதல் 1848-வரையில் அந்தப்பதவியை வகித்தான். அப்போது பஞ்சாபின் நிலை குழப்பமாக இருந்தது. ரஞ்சித்சிங்கு இறந்தபின் அரச பதவிக்காக ஏற்பட்ட போட்டி 1845-வரையில் நீடித்தது. அப்போது பஞ்சாபில் சீக்கியப்படைதான் உண்மையில் பலமும் அதிகாரமும் உடையதாக இருந்தது. படைவீரர்கள் சண்டை செய்வதற்கு ஆவலாயிருந்தார்கள். அதே சமயத்தில் அவர்கள் ஆங்கிலேயர்கள் பஞ்சாபைக் கைப்பற்ற எண்ணியிருந்ததாகச் சந்தேகம் கொண்டிருந்தார்கள். மேலும் சீக்கியப் படையின் அதிகாரத்தைக் கண்டு பொறுமையுற்ற சில முக்கியமான தலைவர்கள் அதற்கும் ஆங்கிலேயருக்கும் சண்டையை மூட்டி அதைத் தோல்வியடையச் செய்யவேண்டும் என்றும் சூழ்ச்சி செய்தார்கள். அதன் பயனுக 1845-ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் சீக்கியப்படை சட்லெஜ் நதியைக் கடந்து

கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தைத் 'தாக்கியது. உடனே ஹார்டிஞ்சு சீக்கியர்மீது போர் தொடுத்தான். போர் கடுமையாகத்தான் இருந்தது. கடைசியில் 1846-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சோப்ரான் என்ற இடத்தில் சீக்கியர் முடிவாகத் தோல்வியடைந்தார்கள். ஹார்டிஞ்சு சொன்னபடி சீக்கியர்கள் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி பஞ்சாபிலிருந்து காஷ்மீரம் பிரிக்கப்பட்டுப் பிரிட்டிஷ் பாதுகாப்புக்குட்பட்ட ஒரு தனி ராஜ்யமாகச் செய்யப்பட்டது. பஞ்சாபின் கிழக்கில் ஒரு சிறு பகுதி கம்பனியின் ஆட்சியிற் சேர்க்கப்பட்டது. பஞ்சாபின் மீதிப் பகுதிகளெல்லாம் அரச வம்சத்தைச் சேர்ந்த ஓர் இளைஞன் ஆட்சியில் விடப்பட்டான. அவனுக்கு உதவியாக ஒரு பிரிட்டிஷ் படை வைக்கப்பட்டது.

இளம் பருவத்தினுன அரசனுக்குப் பதிலாக ஆட்சிசெய்த ரீஜண்டுச் சபையால் பிரிட்டிஷ் உதவியில்லாமற் பஞ்சாபை ஆள முடியவில்லை. அதனுல் மந்திரிகள் ஆங்கிலேயருடன் புதியதோர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அதன்படி பஞ்சாபின் அரசியலதிகாரம் முழுவதும் பிரிட்டிஷ் ரெஸிடெண்டு கைக்கு வந்துவிட்டது. இந்த ஏற்பாட்டைச் சீக்கியக் குடிமக்கள் வெறுத்தார்கள். 1848-ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக ஏற்பட்ட கலகங்கள் சீக்கியர்கள் மறுபடியும் ஆங்கிலேயருடன் போர் செய்ய முடிவு செய்துவிட்டார்கள் என்பதைக் காட்டின. ஹார்டிஞ்சுக்குப் பின் கவர்னர் ஜெனரலான டல்ஹௌஸி சீக்கியர்மீது போர் தொடுத்தான். சண்டை கடுமையாகவே யிருந்தது. கடைசியில் 1849-ஆம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த குஜராத்து சண்டையில் சீக்கியர்கள் முடிவாகத் தோற்கடிக்கப்பட்டனர். அதன் பின் பஞ்சாப் பிரிட்டிஷ் ஆட்சியிற் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இவ்வாறு பிரிட்டிஷ் ஆட்சிக்கு வந்த பஞ்சாபில் அமைதியை நிலைநாட்டுவது அவசியமாயிற்று. அந்த வேலை மிகத் திறம்படச் செய்யப்பட்டது. உண்மையில் அந்த வேலை பிரிட்டிஷாருடைய இந்திய அரசியல் நிர்வாகத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கிறது. நான்கு ஆண்டுகள் வரையில் ஓர் அரசியல் நிர்வாக போர்டு பஞ்சாபை ஆட்சிச் செய்தது. அந்த போர்டின் முக்கிய அங்கத்தினர்கள் ஹென்றி லாரன்ஸ், ஜான் லாரன்ஸ் என்ற இரு சகோதரர்கள். அவர்களுக்கு உதவியாக மிகத் திறமை வாய்ந்த உத்தியோகஸ்தர்களிருந்தார்கள். 1853-ஆம் ஆண்டில் நிர்வாக போர்டுக்குப் பதிலாக ஜான் லாரன்ஸ் தலைமைக் கமிஷனராக நியமிக்கப்பட்டான். அதன்பின் அவனே பஞ்சாபின்

ஆட்சியை நடத்தினன். மக்களிடமிருந்த ஆயுதங்கள் பறி முதல் செய்யப்பட்டன. அதன்பின் அவர்கள் விவசாயத்திலும் வியாபாரத்திலும் ஈடுபட்டார்கள். சட்டத்திற்குட்பட்ட ஆட்சி நாட்டில் நிலைபெற்றது. எல்லைப்புறங்களுக்கு ஏற்ற காப்பு ஏற்படுத்தப்பட்டது. உள்நாட்டில் ரஸ்தாக்கள் போடப் பட்டன. நிலங்களுக்குச் சொந்தக்காரரர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்காக ஓர் உரிமைப் பத்திரம் தயார் செய்யப்பட்டது. ஆங்காங்குக் காணப்பட்ட குடியானவர் தொகுதிகளிடமிருந்து நிலவரியை வசூல் செய்வது என்ற முறை ஏற்பட்டது. நிலவரி யும் அதற்கு முன்னுல் சீக்கியர் ஆட்சியிலிருந்ததைவிட மிகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டது. பஞ்சாபில் சீக்கியர் ஆட்சி ஏற்பட்டு அதிக காலம் ஆகவில்லையென்பதையும், ஆளும் வகுப்-பினராயிருந்த சீக்கியர்கள் ஜனத்தொகையிற் சிறிய பகுதியின ராகத்தான் இருந்தார்கள் என்பதையும், பெரும்பான்மையான மக்கள் இந்துக்களாகவும் முஸ்லிம்களாகவும் இருந்தார்களென் பதையும், சீக்கியர்களுக்குள்ளேயே ஒற்றுமையில்லை யென்பதை யும், சீக்கியத் தலைவர்களிற் சிலர் சீக்கியப்படையின் ஆட்சிக்குட் பட்டிருப்பதைவிடக் கம்பனியின் ஆட்சியிலிருப்பதே நல்லது என்று நினைத்தார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொண்டோமானுல் மிகக் குறுகிய காலத்தில் பூரணமான அமைதி பஞ்சாபில் ஏற்பட்டதைப்பற்றி நாம் ஆச்சரியப்பட இடமில்லை. சீக்கியப் படை அழிந்ததும் ஆங்கிலேயரை எதிர்க் கப் பஞ்சாபில் யாரும் இல்லை. ஆகவே, அவர்கள் அமைதியை நிலைநாட்டும் வேலையை விரைவாகச செய்து முடித்தார்கள்.

இதற்கிடையில் 1844-ஆம் ஆண்டில் ருஷியாவுக்கும் இங்கி-லாந்துக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையால் இந்தியா வின்மீது ருஷியர் படையெடுக்கக்கூடும் என்ற அச்சம் சிறிது காலம் இல்லாமலிருந்தது. பாரசீகர்கள் மாத்திரம் ஆப்கானி ஸ்தானத்தின்மீது ஒரு கண் வைத்துக்கொண்டே யிருந்தார்கள். அதனுல் அவர்கள் மறுபடியும் ஹீரட்டின்மீது மறுபடியும் படையெடுத்துக்கொண்டே யிருந்தார்கள். ஆகவே 1855-ஆம் ஆண்டில் தோஸ்து முகமது கம்பனியுடன் சிநேகத் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டான். அதிலிருந்து அவன் 1863-ஆம் ஆண் டில் இறந்துபோகும் வரையில் வடமேற்கு எல்லையில் அமைதி நிலவிற்று. இந்தியாவின் வடகிழக்கு எல்லையில் டல்ஹௌஸி காலத்தில் இரண்டாம் பர்மிய யுத்தம் நடந்தது. 1852-ஆம் ஆண்டில் நடந்த அந்த யுத்தத்தின் பயனுக வட பர்மாவைத்

தவிர மற்ற பகுதிகள் பிரிட்டிஷ் ஆட்சியிற் சேர்க்கப்பட்டன. ஆகவே கம்பனியின் ஆட்சி அஸாமிலிருந்து அரக்கான், பெகு ஆகிய பகுதிகளின் வழியாகத் தெனுசரிம் வரையிற் பரவியது. சுதந்திரமாக இருந்த வடபர்மாவுக்கும் கடலுக்கும் தொடர்பற்றுப் போய்விட்டது. அடுத்த அதிகாரத்தில் டல்ஹௌஸியின் ஆட்சியைப்பற்றிப் படிப்போம்.

அதிகாரம்—42

டல்ஹௌஸியின் ஆட்சி 1848 - 1856

டல்ஹௌஸி பஞ்சாபை பிரிட்டிஷ் ஆட்சிக்குட் கொண்டு வந்த விஷயத்தைச் சென்ற அதிகாரத்திற் படித்தோம். சுதேச சமஸ்தானங்களின் விஷயத்தில் டல்ஹௌஸி கையாண்ட முறைகளால்தான் அவனுடைய ஆட்சி இந்திய வரலாற்றில் மிக முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. மேலும், பொருளாதாரத் துறையில் டல்ஹௌஸியின் ஆட்சி இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியது. சுதேச ஸம்ஸ்தான விஷயங்களில் டல்ஹௌஸி அவகாசியிலிக் கொள்கை, ஏகாதிபத்தியக் கொள்கை என்ற இரு கொள்கைகளைக் கையாண்டான். இந்தக் கொள்கைகளை டல்ஹௌஸி எவ்வாறு கையாண்டான் என்று பார்ப்பதற்குமுன் டல்ஹௌஸி பொதுமக்களின் நன்மையை முக்கியமாகக் கருதினனேயன்றி அவர்களை ஆண்ட அரசர்களைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை என்பதை மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பொதுமக்கள் சுதேச அரசர்களின் ஆட்சியிலிருந்ததைவிடக் கம்பனியின் ஆட்சியில்தான் அதிக செளகரியமாக இருந்தார்கள் என்று டல்ஹௌஸி திண்ணமாக நம்பினன். ஆகவே சுதேச ஸம்ஸ்தானங்களின் விஷயங்களில் தலையிட நேர்ந்தபோதெல்லாம் அவர்கள் ஆட்சியில் இருந்த மக்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகளை அளிக்கவேண்டும் என்ற விருப்பம் அவன் மனத்தில் இருந்துகொண்டேதான் இருந்தது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒத்துக்கொண்ட சுதேச அரசன் யாரேனும் சந்ததியில்லாமல் இறந்துபோனல் அவனுடைய ராஜ்யம் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்துக்கொள்ளப்படும் என்பதும், அந்த அரசன் தன் வம்சத்தின் ஆட்சி அழியாமலிருப்பதற்காக வேறு யாரையேனும் சுவீகாரமாக எடுத்துக்கொள்ள விரும்பினல் அதற்குப் பிரிட்டிஷாரின் அனுமதியை முன் கூட்



MODERN INDIA

To illustrate Chapters XLII to LVI

SIND and ORISSA were constituted separate provinces in April, 1936.

டியே பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் அவகாசியிலிக் கொள்கையின் அம்சங்கள். இத்தகைய கொள்கை இந்தியாவில் வழக்கத்தில் இருந்தது என்பதற்குத் தக்க சான்று இருக்கிறது. சந்ததியில்லாமல் ஒரு சிற்றரசன் இறந்துவிட்டால் அவனுடைய ராஜ்யத்தைப் பேரரசன் தன்னுடைய நேரடியான ஆட்சியில் சேர்த்துக் கொள்வதற்குப் பதிலாக, தனக்கிஷ்டமான ஒருவனைச் சிற்றரசனாக நியமித்து அவன்மீது முன்னிருந்ததை விட அதிகமான நிபந்தனைகளை விதிப்பது இந்திய வழக்கம். ஆனால் டல்ஹௌஸி சந்தர்ப்பம் ஏற்பட்டபோதெல்லாம் அவகாசியிலிக் கொள்கையைப் பிரயோகித்துச் சுதேச ராஜ்யங்களை பிரிட்டிஷ் ஆட்சியிற் சேர்த்துக்கொண்டான். அதன்படி சதாரா, ஜான்ஸி, நாகபுரி ஆகிய மூன்று மகாராஷ்டிர ராஜ்யங்களையும், இன்னும் சில சிறிய ராஜ்யங்களையும் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்துக்கொண்டான். பிற்காலத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இவ்வாறு சுதேச ராஜ்யங்களைச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் சுதேச அரசர்கள் தங்கள் இஷ்டம்போல் சுவீகாரம் செய்துகொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டனர்.

இனி ஏகாதிபத்தியக் கொள்கை என்ன என்பதைப் பார்ப்போம். சுதேச ராஜ்யங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற் குட்பட்டவை. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இந்திய ஸம்ஸ்தானங்களுக்கும் இடையில் ஏற்பட்ட இவ்வேகாதிபத்தியத் தொடர்பு உடன்படிக்கைகளாலும், சன்னதுகளாலும், நடைமுறையில் ஏற்பட்ட வழக்கங்களாலும், இந்திய அரசாங்கமும் இந்தியக் காரியதரிசியும் அவ்வப்போது சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு செய்த முடிவுகளாலும் தோன்றியது. இந்தத் தொடர்பினால் சுதேச ஸம்ஸ்தானங்களின் உள்நாட்டு விவகாரங்கள் சீர்கேடான நிலையிலிருந்தால் அவற்றைச் சீர்திருத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு உரிமையுண்டு என்ற கொள்கை நிலைபெற்றது. சுதேச ஸம்ஸ்தானங்களின் உள்நாட்டு நிலை சீர்கேடாயிருக்கிறதா இல்லையா என்ற விஷயத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. ஏற்கெனவே பலதரம் கம்பனி இந்த அதிகாரத்தை உபயோகித்திருக்கிறது. மைசூரில் சரியான அரசியல் நிர்வாகம் நடைபெறாததால் அங்கிருந்த மக்கள் கலகம் செய்தார்கள். அதனால் 1831-ஆம் ஆண்டில் அந்த ராஜ்யத்தின் உள்நாட்டு அரசியல் நிர்வாகத்தைக் கம்பனியே எடுத்துக்கொண்டது. பின்னர் 1881-ஆம் ஆண்டில்

தான் அது மறுபடியும் மைசூர் அரசன் கையில் விடப்பட்டது. அஸாமிலும், சென்னை ராஜதானியிலும் இருந்த பல சிறிய ராஜ்யங்கள் கம்பனியின் ஆட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இன்னும் சில ராஜ்யங்களில் சரியானபடி அரசியல் நிர்வாகத்தை நடத்தும்படி அரசர்களுக்குக் கம்பனி எச்சரிக்கை செய்திருந்தது. இத்தகைய ராஜ்யங்களில் மிக முக்கியமானது அயோத்தி. அங்கு அரசியல் நிர்வாகம் எப்போதும் மோசமாகவே இருந்தது. இரண்டாண்டுகளில் நிர்வாகம் சீர்திருந்தாவிட்டால் அந்த ராஜ்யம் பிரிட்டிஷ் ஆட்சியிற் சேர்த்துக்கொள்ளப்படும் என்று 1847-ஆம் ஆண்டில் ஹார்டிஞ்சு பிரபு எச்சரிக்கை செய்திருந்தான். அந்த இரண்டாண்டுகளுக்குப் பின்னர் அரசியல் நிர்வாகம் திருந்தியிருந்ததா என்று சோதனைசெய்து பார்த்தபோது நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக்கொண்டே போவது தெரிந்தது. ஆகவே 1856-ஆம் ஆண்டில் அயோத்தி பிரிட்டிஷ் ஆட்சியிற் சேர்க்கப்பட்டது.

இந்த மாறுதல்களின் பயனாக இந்தியாவின் அரசியல் படம் ஏறக்குறைய இன்றிருக்கும் நிலைமையடைந்தது. 1853-ஆம் ஆண்டில் நிறைவேறிய சாசனச் சட்டத்தின் பயனாக வங்காள ராஜதானியில் கவர்னர் ஜெனரலின் நேரடியான ஆட்சி முடிவடைந்தது. அந்த ராஜதானி ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. வங்காளமும், வடமேற்கு எல்லைப்புற மாகாணமும் லெப்டினண்டு கவர்னர்களின் ஆட்சியில் விடப்பட்டன. பஞ்சாபிலும், அயோத்தியிலும், மத்திய மாகாணத்திலும் தலைமைக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டார்கள். நாகபுரியில் ஆட்சிசெய்த பான்ஸலே அரசர்களின் அதிகாரத்திலிருந்த பகுதிகள்தாம் மத்திய மாகாணம் என்று தொகுக்கப்பட்டன. பர்மாவும், அஸாமும் முறையே 1862-ஆம் ஆண்டிலும், 1874-ஆம் ஆண்டிலும் வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டு அந்த இரண்டு பகுதிகளுக்கும் தலைமைக் கமிஷனர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால் பீகாரும் ஒரிஸாவும் சோட்டா நாகபுரியும் இன்னும் வங்காள மாகாணத்திலேயே சேர்ந்திருந்தன. சென்னை ராஜதானி பிரிக்கப்படாமல் இருந்தபடியே விட்டு விடப்பட்டது. சிந்து பம்பாய் ராஜதானியிலேயே இருந்தது. அதற்கு ஒரு கமிஷனர் நியமிக்கப்பட்டு, அவனுக்குச் சில தனிப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட பல வேறு மாகாணங்களின் எல்லைகள் வரலாற்று நிகழ்ச்சிகளையும், அரசியல் நிர்வாகச் சௌகர்யங்களையும், அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்

பட்டன. ஆகவே அவைகள் பொருளாதாரக் காரணங்களையோ இனவேறுபாட்டுத் தன்மைகளையோ அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படவில்லை. அதனால் நாளடைவில் சில கஷ்டங்கள் ஏற்பட்டன.

டல்ஹௌஸி இன்னொரு முக்கியமான பிரதேச மாறுதலையும் செய்தான். ஐதராபாத்தின் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த சேனையின் செலவை நிஜாம் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை ஐதராபாத்துக்கும் கம்பனிக்கும் நடந்த உடன்படிக்கையால் ஏற்பட்டது. ஆனால் அந்தச் செலவுத்தொகையில் பாக்கி விழுந்ததால் அவ்வாறு ஆண்டுதோறும் பணம் கட்டுவதற்குப் பதிலாக இப்போது பீரார் என்று அழைக்கப்படுவதும் அப்போது ஐதராபாத்திற்குச் சேர்ந்ததுமான ஒரு பகுதியைக் கம்பெனிக்கே கொடுத்துவிட வேண்டுமென்று டல்ஹௌஸி ஏற்பாடு செய்தான். அடுத்த அரை நூற்றுண்டுக்காலம் அந்தப் பகுதி ஒரு தனி நிர்வாகப் பிரிவாக இருந்தது.

இவ்வாறு டல்ஹௌஸி செய்துமுடித்த வேலைகளின் விளைவு என்ன என்று இப்போது பார்ப்போம். வட இந்தியாவில் கங்கைச் சமவெளியும் சிந்துசமவெளியும் பெரும்பாலும் கம்-பனியின் ஆட்சியில் இருந்தன. அந்தச் சமவெளிகளில் ஒரு சில சிறிய சுதேச ராஜ்யங்களுமிருந்தன. கரடுமுரடான மத்திய இந்தியாவில் பெரும்பாலும் சுதேச ஸம்ஸ்தானங்களும் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட ஒரு சில பகுதிகளும் இருந்தன. தென்னிந்தியாவில் ஐதராபாத்தையும் மைசூரையும் தவிர மற்ற பகுதிகளில் மிகப் பெரும்பாலானவை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தன. மத்திய இந்தியாவின் பெரும்பகுதி அரசியல் நிர்வாகச் சௌகரியத்திற்காக இரண்டு ஏஜன்ஸிகளாகப் பிரிக்கப்பட்டது. மேற்கு ஏஜன்ஸியில் பெரும்பாலும் இராஜபுத்திர ராஜ்யங்களேயிருந்தன. அவற்றின் விஷயங்களைக் கவனிப்பதற்கு ஆஜ்மீரில் கவர்னர் ஜெனரலின் ஏஜண்டு ஒருவன் நியமிக்கப்பட்டான். 1832-ஆம் ஆண்டில் அங்கு முதல் ஏஜண்டு நியமிக்கப்பட்டான். கிழக்கு ஏஜன்ஸி மத்திய இந்தியா ஏஜன்ஸி என்று அழைக்கப்பட்டது. இந்தப் பகுதியில் மாளவத்திலிருந்த மகாராஷ்டிர ராஜ்யங்களும், பண்டில் கண்டிலிருந்த இராஜபுத்திர ராஜ்யங்களும் சேர்ந்திருந்தன. இவற்றின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக டல்ஹௌஸி 1854-ஆம் ஆண்டில் இந்தூரில் ஓர் ஏஜண்டை நியமித்தான். இந்த ஏஜண்டுகளும், மற்ற ராஜ்யங்களிலிருந்த ரெஸிடெண்டுகளும் “அரசாங்கக் கடமைகளைச்”

செய்தார்கள். அவர்கள் ஒருவகையில் இராஜதந்திரிகளாகவும் மற்றொருவகையில் ஏகாதிபத்தியத்தின் உத்தரவுகளைச் சுதேச ஸம்ஸ்தானங்களுக்குத் தெரிவிக்கும் உத்தியோகஸ்தர்களாகவும் இருந்தார்கள்.

இவ்வாறு பிரிக்கப்பட்ட சுதேச ஸம்ஸ்தானங்களிலிருந்த மக்களுக்கும் பிரிட்டிஷ் மாகாணங்களிலிருந்த மக்களுக்குமிடையில் ஒற்றுமையுணர்ச்சி இருந்தது என்று கூறுவது கஷ்டம். போக்குவரவுச் சாதனங்களை அதிகப்படுத்தியதுதான் டல்ஹௌஸி பொருளாதாரத் துறையிற் கையாண்ட முறைகளில் முக்கியமானது. அதன்பயனாக இந்தியாவின் பலவேறு பாகங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டன. அதனால் பரந்த இந்த உபகண்டம் ஒரே தேசந்தான் என்ற உணர்ச்சி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வளரத் தொடங்கியது. இந்தியாவில் ஏற்பட்ட போக்குவரவுச் சாதனங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கு முன்னர், இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிருந்த போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப்பற்றி அறிந்துகொள்ளுவது பொருந்தும். இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் நிலமார்க்கமாகச் செல்லும் வழி 1832-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. அதனால் பம்பாயிலிருந்து லண்டனுக்கு ஆறுவாரத்திற் செல்ல முடிந்தது. அந்த வழியாக டல்ஹௌஸியின் காலத்தில் மாதத்திற்கு ஒருமுறை தபால் அனுப்பப்பட்டது. 1857-ஆம் ஆண்டிலிருந்து அது வாரத் தபாலாக மாறிற்று. ஆனால் எகிப்தைக் கடந்து நிலமார்க்கமாகச் செல்வதற்கு அதிகச் செலவாயிற்றாகையால், வியாபாரச் சரக்குகளை அந்த வழியாகக் கொண்டுபோக முடியவில்லை. அதனால் வியாபாரப் பொருள்களை வழக்கமான நன்னம்பிக்கை முனை வழியாக எடுத்துச் செல்லுவதற்கு மாதக்கணக்கில் பிடித்தது. இன்னும் இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் தந்திப் போக்குவரவு ஏற்படவில்லை. 1865-ஆம் ஆண்டில்தான் ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் முதல் தந்திப் போக்குவரவு தொடங்கியது.

இனி உள்நாட்டுப் போக்குவரவுச் சாதனங்களைப் பற்றிப் படிப்போம். முகலாய ஆட்சிக் காலத்தில் நாளொன்றுக்கு இருநூறு மைல் வேகத்தில் கடிதங்களை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு எடுத்துச் செல்லத்தக்க ஏற்பாடுகள் இருந்தன. ஆனால் அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட கடிதங்களெல்லாம் அரசாங்கக் கடிதங்களே. தனிப்பட்ட மனிதர்கள் தங்கள் கடிதங்களைக் கூலியாட்கள் மூலமாக அனுப்பினார்கள். அந்த ஆட்கள்

நாளொன்றுக்கு முப்பது மைலுக்குமேல் செல்ல முடியாது. கம்பனியின் ஆட்சியிலும் தபால் மார்க்கங்கள் அரசாங்கச் சௌகரியத்துக்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டன, ஆனால் சிறிது காலத்தில் பணங்கட்டிய தனி மனிதர்களுக்கும் அந்தச் சௌகரியம் வழங்கப்பட்டது. 1837-ஆம் ஆண்டில் முதல் தபால் நிலையம் தொடங்கப்பட்டது. அது நல்ல முறையில் நடைபெற்றதால் 1854-ம் ஆண்டில் ஒரு சட்டத்தின்மூலம் இந்தியத் தபால் இலாக்கா ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் இந்தியா முழுவதும் ஒரே விதமான குறைந்த கட்டணத்திற்குக் கடிதங்கள் எடுத்துச் செல்லப்பட்டன. கட்டணத்திற்குப் பதிலாக முன்கூட்டியே தபால் தலைகளை வாங்கிக் கடிதங்களுக்கு ஒட்டும் பழக்கம் அப்போதே ஏற்பட்டது. 1837-ஆம் ஆண்டில் பம்பாயிலிருந்து கல்கத்தாவிற்கு ஒரு கடிதம் போய்ச் சேரவேண்டுமானால் சுமார் இரண்டு ரூபாய் செலவாகும். ஆனால் இந்தியத் தபால் இலாக்கா ஏற்பட்ட பிறகு அந்தக் கடிதத்திற்கு ஓர் அணச் செலவு செய்தால் போதும். அதுவுமன்றி சமாசாரப் பத்திரிகைகளைத் தபால்மூலம் அனுப்புவதும் சாத்தியமாயிற்று. 1855-ஆம் ஆண்டில் தந்திக் கம்பிகளும் போடப்பட்டன. அதனால் கல்கத்தா, சென்னை, பம்பாய், ஆக்ரா, பிஷாவர் ஆகிய இடங்கள் ஒன்றுக்கொன்று தந்திமூலம் சமாசாரம் அனுப்ப முடிந்தது.

முகலாயர் காலத்திலிருந்த ராஜபாட்டைகள் மண்ணாலானவையே தவிரக் கற்பாவப்பட்டவை அல்ல. முதலில் போர்ப் படைகள் இடம்விட்டு விடம் நகர்வதற்காகத்தான் கம்பனி நல்ல ரஸ்தாக்களை அமைப்பதில் கவனம் செலுத்தியது. அதனால் வண்டிகள் செல்லுவதற்கேற்ற கெட்டியான ரஸ்தாக்களை அமைக்க வேண்டியதாயிற்று. இந்த வேலை முதல் ராணுவ போர்டுகளிடம் விடப்பட்டது. பல காரணங்களால் அந்த போர்டுகள் .சரியானபடி வேலை செய்ய முடியவில்லை. 1848-ஆம் ஆண்டில் பஞ்சாப் பிரிட்டிஷ் ஆட்சிக்கு வந்தபோது ரஸ்தாக்களை அமைக்கும் வேலையைக் கவனிப்பதற்காக ஒரு பொது மராமத்து இலாக்கா ஏற்பட்டது. 1854-ம் ஆண்டுக்குள் எல்லா மாகாணங்களிலும் மராமத்து இலாக்காக்கள் ஏற்பட்டுவிட்டன. ரஸ்தாக்களை அமைப்பதும், பழுதுபார்ப்பதும் அந்த இலாக்காக்களின் வேலையாயிற்று. கல்கத்தாவிலிருந்து டில்லி வரையிற் செல்லும் "கிராண்டு டிரங்கு ரோட்" என்ற பாதையை அமைத்ததுதான் இராணுவ போர்டுகள் செய்து முடித்த முக்கியமான வேலை. இன்னும் சில இடங்களிலும் அவைகள் சில முக்கிய வேலைகளைச்

செய்தன. குறிப்பாக, 1830-ஆம் ஆண்டில் பம்பாய்க்கும் பூனு வுக்கும் இடையில் ஒரு நல்ல ரஸ்தா அமைக்கப்பட்டது.

இந்தியாவில் இருப்புப் பாதைகளை அமைத்ததுதான் டல்ஹௌஸி செய்த வேலைகளில் மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. 1843-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருப்புப்பாதைகளை அமைப்பதற்கான திட்டங்களை லண்டனிலிருந்த சில கம்பனிகள் டல்ஹௌஸிக்குச் சமர்ப்பித்தன. அந்தத் திட்டங்களைப்பற்றிக் கருத்து வேறுபாடு அதிகமாக இருந்தது. சில ஆங்கிலேயர்கள் இந்தியாவில் நிரந்தரமான இருப்புப்பாதைகளை ஏற்படுத்திப் பராமரிப்பது இயலாத காரியம் என்று உறுதியாக நம்பினார்கள். ஒருவேளை அது முடியக்கூடிய காரியமாயிருந்தாலும், இந்தியாவின் ஜனத்தொகையிற் பெரும்பான்மையினரான இந்துக்கள் சாதிக்கட்டுப்பாடுகளுக்கு அடங்கியவர்களாகையால் ரயில்வண்டிகளிற் பிரயாணம் செய்யமாட்டார்கள் என்றும், அதனால் இருப்புப் பாதைகளால் நஷ்டந்தான் ஏற்படும் என்றும் நம்பினார்கள். ஆனால் அவர்கள் நினைத்தது முற்றிலும் தவறு என்பது வெகு சீக்கிரம் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இஞ்சினியர்கள் முதலில் சில தவறுகள் செய்தார்கள் எனினும், விரைவில் இந்தியாவில் எத்தகைய இருப்புப்பாதைகளை அமைக்கவேண்டும் என்பதை உணர்ந்துகொண்டார்கள். இந்துக்களும் தங்கள் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொண்டு ரயிலில் சாதாரணமாகப் பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள். ஆகவே, இருப்புப்பாதைகள் அமைப்பதைத் தாமதப்படுத்தியதுதான் அந்தத் திட்டத்திற்கிருந்த எதிர்ப்பினால் ஏற்பட்ட பயன். இதைப்பற்றிய விஷயங்களையெல்லாம் டல்ஹௌசி மேலதிகாரிகளுக்கனுப்பிய தபால்களில் தெளிவாக விளக்கினான். இருப்புப்பாதைகளை அமைத்து நடத்தும் வேலையைத் தனிப்பட்ட கம்பனிகளுக்கு விட்டுவிட்டாலும் அவற்றின் மேற்பார்வை விஷயத்தில் அரசாங்கத்திற்குப் போதுமான அதிகாரம் இருக்கவேண்டுமென்றும், தேசம் முழுவதற்கும் வேண்டிய இருப்புப்பாதைகளைப்பற்றிச் சரியான திட்டம் வகுத்து வேலை தொடங்க வேண்டுமேயன்றி இங்கிலாந்தில் நடந்ததுபோல் இருப்புப்பாதைகளைத் திட்டமின்றி வளரவிடக்கூடாது என்றும் டல்ஹௌஸி வற்புறுத்திக் கூறினான். இந்தக் கொள்கைகள் தற்காலத்தில் சாதாரணமாக எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டாலும் அந்தக்காலத்தில் அவை ஓரளவு புதுமையும் புரட்சிகரமும் பொருந்தியவையாக இருந்தன. டல்ஹௌஸியின் காலத்திலேயே பல ஆங்கிலக் கம்பனிகள் இந்தியாவில்

இருப்புப்பாதை அமைக்கும் வேலையை ஏற்றுக்கொண்டு அவன் இந்தியாவை விட்டுப் போவதற்குள் வேலையையும் தொடங்கின.

இனிப் போக்கு வரவுக்கான கால்வாய்களைப்பற்றிப் படிப்போம். இந்தியாவிலிருந்த கால்வாய்களெல்லாம் நீர்ப்பாசன வசதிக்காகவே வெட்டப்பட்டவை. அவற்றுள் ஒரு சில கால்வாய்கள் வியாபாரப் பொருள்களை இடம்விட்டு இடம் எடுத்துச் செல்வதற்குப் பயன்பட்டனவெனினும், இந்த இரண்டு காரியங்களையும் உத்தேசித்து இந்தியாவில் கால்வாய்கள் வெட்டப்படவில்லை. நீர்ப்பாசன வசதிகள் இந்தியாவில் பழங்காலத்திலிருந்தே செய்யப்பட்டன. இந்து அரசர்கள் காலத்தில் பல நீர்த்தேக்கங்கள் கட்டப்பட்டன என்று முன் ஓர் அதிகாரத்திற் படித்தது நினைவிலிருக்கும். ஆனால் இந்த முறைகளைக்கொண்டு வட இந்தியாவின் பெரிய நதிகளின் பிரவாகத்தைத் தடுக்க முடியாது. அந்த நதிகளின் கரைகளை இணைக்கும் முறையில் கால்வாய்களைத் தோண்டி, அவற்றின்மூலம் பிரவாக காலங்களில் வெள்ளத்தின் ஒரு பகுதியைத் திருப்பி விடுவதைத் தவிர வேறு முறைகள் அந்தக் காலத்தில் தெரியா. ஆனால், தென்னிந்தியாவில் சில முன்னேற்றமான முறைகள் கையாளப்பட்டன. அங்கிருந்த இந்து அரசர்கள் ஆறுகளின் குறுக்கே கற்கட்டிடங்களைக் கட்டி, அந்த அணைகளால் வெள்ளத்தைத் தேக்கி, அந்தத் தேக்கங்களிலிருந்து கால்வாய்களுக்குத் தண்ணீர் போகும்படி செய்தார்கள். அதனால், பிரவாக காலத்தில் மாத்திரமின்றி ஆண்டு முழுவதும் அந்தக் கால்வாய்களில் தண்ணீர் செல்ல வசதியேற்பட்டது. இத்தகைய வற்றாத கால்வாய்களை ஏற்படுத்துவதற்கு வட இந்தியாவில்—குறிப்பாக யமுனையாற்றில்—முகமதியர் ஆட்சிக்காலத்தில் சில முயற்சிகள் நடந்தன. ஆனால் அத்தகைய கால்வாய்கள் தக்கபடி மராமத்துச் செய்யப்படாமையால் ஆங்கில ஆட்சி ஏற்படுவதற்குள் அழிந்துபோய்விட்டன. தென்னிந்தியாவிலிருந்த கால்வாய்களும் ஏறக்குறைய இதே நிலையில்தானிருந்தன.

நாட்டில் அடிக்கடி பஞ்சம் ஏற்பட்டதால் அதைத் தடுப்பதற்கான முறைகளைப்பற்றிக் கம்பனியதிகாரிகள் ஆலோசிக்கத் தொடங்கினர். அப்போது அழிந்து கிடந்த இந்தக் கால்வாய்களின்மீது அவர்கள் கவனம் சென்றது. ஆகவே 1830-ஆம் ஆண்டுக்குள் யமுனை நதியிலிருந்து நீரைப் பெற்ற கால்வாய்களெல்லாம் பழுதுபார்க்கப்பட்டுவிட்டன. இந்த வேலையைச் செய்த ஆங்கில இஞ்சினியர்கள் இங்கிலாந்தில் அப்போது வழக்

கத்திலில்லாத சில முறைகளை அறிந்துகொண்டனர். இவ்வாறு கற்றுக்கொண்ட முறைகளைப் பின்னர்க் கங்கைக் கால்வாயைத் தோண்டுவதற்கு வெற்றிகரமாகக் கையாண்டனர். கங்கைக் கால்வாயைத் தோண்டும் வேலை 1842-ஆம் ஆண்டில் தொடங்கியது. பலவேறு காரணங்களால் வேலையில் தாமதம் ஏற்பட்டதால் 1854-ஆம் ஆண்டில்தான் அது முடிவுபெற்றது. இந்தக் கால்வாய் போகப் போகப் பல பிரிவுகளாகப் பிரிந்து கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள பிரதேசத்தின் பெரும்பான்மையான பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளித்தது.

தென்னிந்தியாவிலும் இதேமாதிரியான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தஞ்சாவூருக்கருகில்—காவேரியாற்றின் டெல்டாவில்—சோழர் காலத்தில் தோண்டப்பட்ட பழைய கால்வாய்களெல்லாம் 1836-ஆம் ஆண்டிலிருந்து பழுதுபார்க்கப்பட்டன. 1849-ஆம் ஆண்டில் கோதாவரி டெல்டாவிலும், 1854-ஆம் ஆண்டில் கிருஷ்ணா டெல்டாவிலும் இத்தகைய கால்வாய்கள் புதிதாக வெட்டப்பட்டன. இந்தக் காலத்திலிருந்துதான் நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதில் நவீன முறைகள் தோன்றின. இந்தியாவில் ஆங்கிலேயர் கையாண்ட இந்த முறைகள் உலகமெங்கும் இன்று பரவிவிட்டன.

இந்தக் கால்வாய்களைத் தோண்டுவதற்காகச் செலவுசெய்த பணத்திற்கு நல்ல லாபம் வந்துவிட்டது. ஆனால் லாபத்தைக் கருதி அந்த வேலை செய்யப்படவில்லை யென்பதையும் அடிக்கடி வரும் பஞ்சங்களைத் தடுப்பதற்காக அது தொடங்கப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்தச் சமயத்தில் நாம் முப்பத்தொன்றும் அதிகாரத்தின் முடிவிற் கூறியுள்ள விஷயங்களை நினைவுபடுத்திக்கொள்ளுவது பொருந்தும். 1838-ஆம் ஆண்டுவரையிலும் இந்தியாவின் ஏதாவது ஒரு பகுதியில் ஆண்டுதோறும் பஞ்சம் வந்துகொண்டேயிருந்தது. இத்தகைய பஞ்சங்களிற் சில மிகக் கடுமையாக இருந்தன. வேறு சில அவ்வளவு கடுமையாக இல்லை. அடுத்த பதினைந்தாண்டுகள் பருவமழை சரியாகப் பெய்ததால் தேசத்தின் எந்தப் பகுதியிலும் பஞ்சம் வராமலிருந்தது. பஞ்சம் ஏற்பட்டபோதெல்லாம் கம்பனி அதிகாரிகள் தற்காலிகமான தடுப்பு முறைகளைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு கையாண்டார்கள். பஞ்சம் ஏற்பட்டால் அதிலிருந்து மக்களைக் காப்பதற்கு இன்னின்ன முறைகளைத்தான் அனுசரிக்க வேண்டுமென்ற திட்டமான கொள்கை எதையும் கம்பனியதிகாரிகள் இன்னும் வரையறுக்கவில்லை, உண்மையில்

அத்தகைய திட்டமான கொள்கையை உருப்படுத்துவதற்கேற்ற சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை. உணவுப் பொருளே இல்லாத பரந்த பகுதிகளில் வாழ்ந்த மக்களுடைய துன்பத்தை ஓரளவு தான் குறைக்க முடியும். ஆனால் இருப்புப்பாதைகள் ஏற்பட்ட பின் உணவுப்பொருள் இல்லாத பகுதிகளுக்கு வேறு இடங்களி லிருந்து தேவையான அளவு கொண்டுபோக முடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதன் பிறகு பஞ்ச நிவாரண முறைகளில் திட்ட மான கொள்கையை அரசாங்கம் கையாள முடிந்தது. பஞ்சம் என்ற சொல்லுக்கு இருப்புப்பாதைகள் ஏற்பட்ட ஐம்பதாண் டுக்குள் புதிய பொருள் ஏற்பட்டது. அதற்கு முன்னெல்லாம் பஞ்சம் என்றால் லட்சக்கணக்கான மக்கள் உணவின்றி இறப் பது என்பது பொருள். ஆனால் இருப்புப்பாதை ஏற்பட்ட பிறகு பஞ்சம் என்றால் தற்காலிகமான வேலையில்லாத் திண்டாட் டம் என்று கூறக்கூடிய நிலை தோன்றிவிட்டது. ஏனெனில் உணவுப்பொருளை இருக்கும் இடத்திலிருந்து அது இல்லாத இடத்திற்கு விரைவில் எடுத்துச் செல்ல முடியும். பணம் மாத்தி ரம் இருந்தால் பட்டினியிருக்க வேண்டியதில்லை. ஆகவே, வேலை யில்லாதவர்களுக்கு வேலைகொடுப்பதுதான் தற்காலப் பஞ்ச நிவாரணத் திட்டங்களின் அடிப்படையான கொள்கை.

டல்ஹௌஸி கவர்னர் ஜெனரலாக யிருந்த காலத்தில் கல் வித் துறையில் ஒழுங்கான திட்டம் வகுக்கப்பட்டது. ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று 1835-ஆம் ஆண்டிற் செய்த தீர்மானத்தின்படி ஒவ்வொரு மாகாணமும் வேலைசெய்யத் தொடங்கிற்று. ஆனால் எல்லா மாகாணங்களி லும் ஒரே மாதிரியான முறை கையாளப்படவில்லை. . சில இடங் களில் ஆரம்பக் கல்வியை மக்களின் தாய்மொழியில் கற்பிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. அரசாங்க உத்தியோகத்திற்கு ஆங்கிலக் கல்வி அவசியமாயிருந்ததால் மக்கள் ஆங்கிலக் கல்வி யைத்தான் அதிகமாக விரும்பினார்கள். ஆனால் 1850-ஆம் ஆண்டுக்குள் சில இடங்களில் ஆங்கிலங்கற்று அரசாங்க உத்தி யோகத்தை நாடியவர்களின் தொகை கம்பனியின் தேவைக்கு மேற் போய்விட்டது. அதனால் டல்ஹௌஸி ஒரு திட்டத்தை வகுத்து மேலதிகாரிகளுக்கு அனுப்பினான். அதைப் பார்லி மெண்டு பரிசீலனை செய்தது. அதன் விளைவாக 1854-ஆம் ஆண் டில் இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுவான கல்வித் திட்டம் வகுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாகா ணத்திலும் ஒரு கல்வியிலாக்கா ஏற்பட்டது. மக்களுடைய

சொந்த மொழியில் ஆரம்பக் கல்வியைக் கற்பிப்பதற்கும், ஆங்கில மொழியில் உயர்தரக் கல்வியைக் கற்பிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது அந்த இலாகாவின் வேலை. அதற்காக, முழுதும் அரசாங்கச் செலவிலோ அல்லது அரசாங்க உதவி பெற்றோ நடக்கும் பள்ளிக்கூடங்களையும், கலாசாலைகளையும் ஏற்படுத்தி அவற்றின் முடிவில் நடக்கவேண்டிய பரீட்சைகளுக்கும் ஏற்பாடு செய்யவேண்டியது கல்வி இலாக்காவின் வேலையாயிற்று. மேலும் புதிய திட்டத்தின்படி ஆண்பிள்ளைகளைப் போலவே பெண் பிள்ளைகளும் கல்வி கற்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது அவசியம் என்று வற்புறுத்தப்பட்டது. இந்தியர்களின் பழக்க வழக்கங்களுக்கு எதிராக ஒன்றும் செய்யக் கூடாது என்ற எண்ணத்தால் இதுவரையில் இந்தத் துறையில் கம்பனி தலையிடாமலிருந்தது. தொழிற் கல்விக்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று அந்தத் திட்டத்தில் சொல்லப்பட்டிருந்தது. அதன்படி சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. மேலும் இஞ்சினியர் பயிற்சிக்காக இரண்டு கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தத் திட்டந்தான் அடுத்த அரை நூற்றாண்டுக்காலம் அமுலிலிருந்தது.

இந்தப் பரந்த உபகண்டமாகிய இந்தியாவிலிருந்த மக்களுள் எல்லோரும் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒற்றுமையுணர்ச்சி இருந்ததாகக் கூறமுடியாது என்று ஏற்கெனவே கூறியிருக்கிறோம். அதுபோலவே, கம்பனியின் ஆட்சியை இந்தியாவின் பலவேறு பகுதிகளிலுமிருந்த மக்கள் பொதுவாக வெறுத்தார்கள் என்று கூறுவதற்கும் தக்க சான்றுகள் இல்லை. ஆனால், சில இடங்களில் மக்கள் அதிருப்தியடைந்திருந்தார்கள் என்பது உண்மை. ஆங்காங்குக் காணப்பட்ட அதிருப்தியையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் அது குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது என்று கூறலாம். மகாராஷ்டிர ராஜ்யங்களைக் கம்பனியிற் சேர்த்துக் கொண்டதால் பொதுமக்களினிடையே அதிருப்தியும் கோபமும் வெளிப்படையாகத் தோன்றாவிட்டாலும் அதனால் நஷ்டமடைந்த சில வகுப்பினர் ஆங்கிலேயரின் விரோதிகளானார்கள். ராஜ்யங்களை இழந்த அரசர்களும், பதவியையிழந்த மந்திரிகளும், வேலை இழந்த போர்வீரர்களும், பொதுவாக அரச ஸம்ஸ்தானங்களில் வரும்படி பெற்றுவந்த மக்களும் ஆங்கிலேயர்மீது வெறுப்பும், சீற்றமும் கொண்டதில் வியப்பில்லை. இதே நிலை அயோத்தியிலும் ஏற்பட்டது. மேலும்

அந்த ராஜ்யத்தைக் கம்பனியின் ஆட்சியில் சேர்த்துக்கொள்ளு வதற்கு முன்னர் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் கையாண்ட சில முறைகளால் பொதுமக்களும் பலர் ஆங்கில ஆட்சிக்கு எதிரிக ளாயினர். அயோத்தி ராஜ்யத்திலிருந்த நிலங்களிற் பெரும் பான்மையானவை ஜமீன்தார்களின் வசத்திலிருந்தன. அந்த ஜமீன்தார்கள் பலவகைப்பட்டவர்கள். சிலர் சமீப காலத்தில் ஜமீன்தார்களாகிக் குடியானவர்கள்மீது ஆதிக்கம் செலுத்திவந் தார்கள். ஆனால் மற்றவர்கள் ஐந்தாறு நூற்றாண்டுகளாக ஜமீன் தார்களாயிருந்தவர்கள். ஆதியில் ஏற்பட்ட முகமதியப் படை யெழுச்சிகளை எதிர்க்க முடியாமற் பின் வாங்கிய இராஜபுத்திரத் தலைவர்கள் அயோத்தி ராஜ்யத்தில் ஆங்காங்குத் தங்கள் ஆதிக் கத்தை ஸ்தாபித்திருந்தார்கள். அவர்களுடைய சந்ததியார்கள் பரம்பரையாக ஜமீன்தார்களாயிருந்தார்கள். அயோத்தி ராஜ்யம் ஆங்கில ஆட்சிக்கு வந்தபின் இந்த ஜமீன்தார்களிற் பெரும் பாலானவர்கள் பதவியை யிழந்தார்கள். அவர்களுடைய நிலங் களெல்லாம் குடியானவர்களுக்கு வழங்கப்பட்டன. அதனால் ஜமீன்தார்கள் கோபமடைந்தார்கள். அதுவுமின்றி அந்த ஜமீன் தார்களையே தங்கள் தலைவர்கள் என்று அவர்களிடம் இன்னும் விசுவாசம் பாராட்டிவந்த இராஜபுத்திர வீரர்களும் ஆங்கிலேயர் மீது பகைமை கொண்டனர். அதுபோலவே இன்னும் கீழ்ப் பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய பழமையான தலைவர்களிடம் நீங்காத விசுவாசம் கொண்டவர்களாக இருந்தார் கள். ஆகையால் அவர்களும் ஆங்கில ஆட்சியின்மீது பகைமை கொண்டார்கள். ஆகவே, 1856-ஆம் ஆண்டில் கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களுளெல்லாம் அயோத்தியில் தான் ஆபத்து அதிகமாகப் புகைந்து கொண்டிருந்தது. கம்பனியின் ஆட்சி ஏற்பட்டதால் உயர்ந்த உத்தியோகங்களை இழந்தவர் களும், இன்னும் வேறுவகைகளில் நஷ்டமடைந்தவர்களும்— அல்லது நஷ்டமடைந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருந்தவர் களும்—மற்றைப் பகுதிகளிலும் பலர் இருந்தார்கள். அவர்களிற் பலர் மிக உயர்ந்த அந்தஸ்துடையவர்கள். அவர்களெல்லாம் இந்தியாவில் சமீபகாலத்தில் தோன்றி மறைந்த ராஜ்யங்களைப் போலக் கம்பனியின் ஆட்சியும் தாற்காலிகமானதுதான் என்று நம்பினார்களாதலால் கூடிய சீக்கிரம் கம்பனியின் ஆட்சி அழிந்து விடும் என்று எதிர்பார்த்துக்கொண்டும், அழிந்துபோக வேண்டு மென்று விரும்பிக்கொண்டும் இருந்தார்கள்.

இனிப் பொதுமக்கள் ஆங்கில ஆட்சியைப்பற்றி என்ன நினைத்தார்கள் என்று பார்ப்போம். வட இந்திய முஸ்லிம்கள் ஆங்கில ஆட்சியை விரும்பவில்லையென்று பொதுவாகக் கூறலாம். இஸ்லாம் மதக் கொள்கையின்படி மதமும் அரசியலும் ஒன்ருே டொன்று இணைந்ததாக இருக்கவேண்டும். மதம் வேறு அரசியல் வேறு என்ற பிரிவினை முஸ்லிம்களுக்கு வெறுப்பைத் தருவது. சிறிது காலத்திற்கு முன்னர் இந்தியாவின் பெரும் பகுதி ஒரே முஸ்லிம் ராஜ்யத்திற்குள் அடங்கியிருந்தது என்பதை முஸ்லிம்கள் மறந்துவிட முடியவில்லை. ஆகவே, அயோத்தி ராஜ்யம் கம்பனியாட்சிக்குட் சென்றதும் வட இந்தியாவிலிருந்த கடைசிப் பெரிய முஸ்லிம் ராஜ்யமும் மறைந்தது. இன்னும் இந்தியாவில் மிஞ்சியிருந்த பெரிய முஸ்லிம் ராஜ்யம் ஐதராபாத் ஒன்றுதான். ஆனல் அது வட இந்தியாவிலிருந்து வெகுதூரத்திலிருந்தது. மேலும் கிறிஸ்தவ மதத்திற் கூறப்பட்டிருக்கும் உண்மைகளுக்குப் பதிலாக அவற்றைவிட உயர்ந்தவையும் புதியவையும் ஆன உண்மைகளைக் கடவுள் நபிநாயகத்திற்குத் தோற்றுவித்தார் என்று முகமதியர்கள் நம்பினுர்களாதலால் கிறிஸ்தவர்களாகிய ஆங்கிலேயர்கள் தங்களை ஆள்வதைத் தங்கள் மதத்தில் உண்மையான நம்பிக்கையுள்ள முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்வது இயலாத காரியம். நபிநாயகத்தின் உண்மையான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாக நம்பிய வஹாபி என்ற கூட்டத்தைச் சேர்ந்த முகமதியர்களின் தலைவர்கள் ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போர்புரிவது முகமதியர்களுடைய தவிர்க்க முடியாத கடமை என்று டல்ஹௌஸியின் காலத்திற் பிரசாரம் செய்தார்கள். இவர்கள் தீவிரவாதிகள். மிதவாதிகளான முகமதியர்கள்கூடக் கிறிஸ்தவப் பாதிரிகளின் வேலைகளால் அதிருப்தி அடைந்தார்கள். ஏனெனில், தங்களுடைய மதத்தின் உயர்வைப் பற்றித் தீவிரத்துடனும் உற்சாகத்துடனும் பேச நேர்ந்தபோது கிறிஸ்தவப் பாதிரிகள் சில சமயங்களில் முகமதிய மதத்தைப் பற்றித் தாழ்வாகப் பேசினுர்கள். பாரசீக மொழிக்குப் பதிலாகக் கம்பனி ஆங்கில மொழியை அரசாங்க மொழியாக்கியது முகமதியர்களுக்கு நஷ்டத்தையும் மன வருத்தத்தையும் தந்தது. கோர்ட்டுகளில் பராசீகத்திற்குப் பதிலாக மக்களுடைய தாய் மொழி உபயோகிக்கப்பட்டது. அரசாங்க அலுவல்களில் ஆங்கில மொழி உபயோகிக்கப்பட்டது. முகமதியர்கள் கம்பனியின் ஆட்சியில் இந்தியர்களுக்களிக்கப்பட்ட புதிய கல்வியைக் கற்க விரும்பவில்லை. நாட்டில் அமைதியை நிலைநாட்டியது ஒன்றுதான் கம்பனி

யாட்சியில் முகமதியர்கள் விரும்பக்கூடிய அம்சமாக இருந்தது. மற்றைய அம்சங்களெல்லாம் வெறுக்கத் தக்கவையாகத் தோன்றின. மேலும் அமைதியான நிலைமைகூட முழுவதும் விரும்பத் தக்க அம்சமாகத் தோன்றிற்று என்று சொல்லமுடியாது. ஏனெனில் குழப்பமான நிலையில் ஆள்பலமும் புத்திகூர்மையும் உள்ளவர்கள் தங்களுடைய செல்வத்தையும் செல்வாக்கையும் அதிகப்படுத்திக் கொள்ளுவதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் அந்த வாய்ப்பு நாட்டில் பலம் பொருந்திய அரசாங்கமும் அமைதியான நிலைமையும் இருந்தால் கிடையாதல்லவா? ஆகவே கம்பனி ஆட்சியில் முகமதியர்களுடைய நட்பையும் விசுவாசத்தையும் ஈர்க்கக்கூடிய அம்சங்கள் இல்லை.

இந்துக்கள் ஆங்கிலக் கல்வியை விரும்பிக் கற்கத் தொடங்கினார்கள். அவர்களிற் பலர் கம்பனியின் உத்தியோகத்தில் அமர்ந்தார்கள். ஆனால் படித்த இந்துக்களில் சிலருக்கு அந்த மாதிரியான உத்தியோகம் கிடைக்கவில்லை. அவர்கள் கம்பனியின் தயவிற் பிழைக்காததாலும், கல்வியறிவுடையவர்களாக இருந்தாலும் கம்பனியின் ஆட்சி முறையைக் கவனித்து அதிலுள்ள குறைகளை எடுத்துக் கூறத் தொடங்கினார்கள். இத்தகையவர்கள் வங்காளத்தில் அதிகமாக இருந்தார்கள். அதுபோலவே இந்தியச் சமாசாரப் பத்திரிகைகளும் கம்பனியின் ஆட்சியைக் குறைகூறத் தொடங்கின. செய்திகளைப் பரப்புவதை முக்கியமாகக்கொண்டு தொடங்கப்பட்ட சமாசாரப் பத்திரிகைகளுக்குப் பதிலாக இப்போது கம்பனியின் ஆட்சியை வேகமான நடையில் விமர்சனம் செய்யும் பத்திரிகைகள் தோன்றின. இந்த விமர்சனம் சில சமயங்களில் ஆங்கிலேயருக்கு விரோதமாக இருந்தது. இவ்வாறு அரசாங்கத்திற்கு எதிர்க்கட்சி ஒன்று மெதுவாகத் தோன்றத் தொடங்கிற்று.

மதப் பழக்க வழக்கங்களில் அதிக நம்பிக்கை வைத்திருந்த இந்துக்கள் ஆங்கில ஆட்சியில் விரும்பத்தகாத பல அம்சங்களைக் கண்டார்கள். அந்தப் பழக்க வழக்கங்களை இந்துக்களிடையிலேயே தோன்றிய சீர்திருத்தவாதிகள் ஒருபுறமும் கிறிஸ்தவப் பாதிரிகள் ஒருபுறமும் தாக்கத் தொடங்கினார்கள். உடன்கட்டையேறுதலை நிறுத்தியதிலிருந்து தங்களுடைய பழக்க வழக்கங்களிலெல்லாம் அரசாங்கம் தலையிடுமென்று இந்துக்கள் அஞ்சினார்கள். இருப்புப்பாதை போன்ற புதிய விஷயங்களின் தன்மைகளையும் உபயோகங்களையும் நன்ருக உணர்ந்துகொள்ளும் வரையில் அவைகளால் தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு ஆபத்து ஏற்

படலாம் என்று இந்துக்கள் அஞ்சக்கூடும். இந்துக்களையெல்லாம் கிறிஸ்துவ மதத்திற்கு மாற்றுவதற்கான திட்டத்தைக் கம்பனி அதிகாரிகள் தயார் செய்வதாகச் சில இடங்களில் இந்துக்கள் நினைத்து அஞ்சினார்கள். அந்த மாதிரி நினைப்பதற்குச் சிறிதும் ஆதாரம் இல்லை என்றாலும் அந்த அச்சம் இந்துக்களிடையில் சில இடங்களில் இருந்தது என்பதை மறுக்கமுடியாது. இந்துக்களிடையே ஏற்பட்ட இந்தக் கிளர்ச்சிகளெல்லாம் டல்ஹௌஸியின் காலத்தில் வெளிப்படையாகத் தெரியவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்துமதம் புதிய சக்தியோடு தோன்றத் தொடங்கியது. ஆனால் டல்ஹௌஸியின் காலத்திலேயே சில தலைவர்கள் இந்துப் பழக்க வழக்கங்கள் அழிந்துபோகாமற் காக்கவும், அவற்றை எதிர்த்தவர்களுடைய கொள்கையைக் கண்டிக்கவும் தொடங்கினார்கள். இவ்வாறு சிறிது சிறிதாக ஏற்பட்ட மாறுதல்களின் தன்மையைச் சுருக்கமாகக் கூறுவது கடினமான காரியம். ஆனால் விஷயங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வமும், அவ்வாறு தாங்கள் தெரிந்துகொண்ட விஷயங்களை எடுத்துக் கூறுவதில் இவ்வளவு நாள் இல்லாத ஒரு புதுத் தைரியமும் மக்கள் உள்ளங்களில் வளரத் தொடங்கின என்று கூறலாம்.

சட்டத்தின் ஆட்சி ஏற்பட்டுவிட்டதென்றும், யாராயிருந்தாலும் சட்டத்திற்கு அடங்கி நடக்கவேண்டும் என்றும் கிராமத்தில் வாழ்ந்துவந்த பொதுமக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் சமீப காலத்தில் கம்பனியின் ஆட்சிக்குள் வந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள் புதிதாக ஏற்பட்ட சட்டத்தின் ஆட்சி நெடுநாள் நிலைத்து நிற்குமென்று நம்பவில்லை. இந்தியாவில் நெடுநாள் எந்த ஆட்சியும் நிலைத்து நிற்கவில்லை என்பதைக் கிராம மக்கள் நன்றாக உணர்ந்திருந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்னிருந்த குழப்பமான நிலையும், பின்னைய முகலாயர்களின் கொடுங்கோலாட்சியும், அக்பருடைய உன்னதமான ஆட்சியும், அதற்கும் முற்பட்ட காலங்களின் நிலையும் மக்கள் நினைவிலிருந்தன. இவ்வாறு ஒருவர்பின் ஒருவராகப் பல அரசர்களும், ஒன்றன்பின் ஒன்றாகப் பல அரச வம்சங்களும் தோன்றிச் சிலகாலமிருந்து பிறகு மறைந்துபோன விஷயம் மக்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த அரசர்களுடைய வீழ்ச்சிக்கும், அந்த வம்சங்களின் அழிவுக்கும் பொதுமக்கள் காரணமாக இருக்கவில்லை என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். பொதுமக்களுடைய சக்திக்கும் செயலுக்கும் புறம்பான ஏதோ

காரணங்களால் அந்த மாறுதல்கள் நிகழ்ந்தன. அதுபோலவே பிரிட்டிஷ் ஆட்சியும் தோன்றியிருந்தது. அதுவும் நெடுநாள் நிலைத்திருக்காமல் அழிந்துபோகும் என்று பொதுமக்கள் நம்பினால் அதில் ஆச்சரியமில்லை. நிலவரி குறைக்கப்பட்டிருந்த போதிலும், சில இடங்களில் அது குடியானவர்கள்மீது பெரிய சுமையாகவேதான் இருந்தது. புதிதாக ஏற்பட்ட நியாயஸ்தலங்களைப் பலர் வரவேற்றார்களென்றாலும் அவைகள் பொதுமக்கள் எல்லாருடைய ஆதரவையும் பெற்றிருந்தன என்று கூறமுடியாது. ஏனெனில் கோர்ட்டுக்குப் போனால் ஒரு கட்சிதான் ஜெயிக்க முடியும். ஆகவே தோற்றுப்போன கட்சி கோர்ட்டை வெறுத்தது. பொதுவாகப் பேசுமிடத்து, ஆங்கில ஆட்சிக்கு மக்கள் அடங்கியிருந்தாலும் அதற்குத் தங்கள் உற்சாகமான ஆதரவை அளிக்கவில்லை.

டல்ஹௌஸி இந்தியாவை விட்டுச் சென்றபோது இந்தியாவில் அமைதி நிலவியது. வெளிநாட்டார் யாரும் இந்தியாவின் மீது படையெடுக்கக்கூடும் என்ற பயமும் இல்லை. எனினும் அமைதியைக் குலைக்கக்கூடிய அம்சங்களின் அறிகுறிகள் இருந்தன என்பது டல்ஹௌஸிக்குத் தெரியும். ஆகவே அப்போதிருந்த அமைதி நெடுநாள் நிலைத்திருக்குமென்று கூறுவதற்கு அவனுக்குத் தைரியம் இல்லை. வரப்போகும் ஆபத்தின் சின்னங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்றோ எந்த வழியில் திரும்பும் என்றோ கம்பனியின் அதிகாரிகளுக்குத் தெரிய வழியில்லை. ஏனெனில், இந்தியாவிலிருந்த ஆங்கிலேயருக்கும் மற்ற மக்களுக்கும் சமூகத் தொடர்பு கொஞ்சமும் இல்லாமற் போய்விட்டது. மேற்போக்காகப் பார்ப்பவர்களுக்கு இந்தியாவிலிருந்த பலவேறு ஜாதியினரைப்போல ஆங்கிலேயரும் ஒரு தனிப்பட்ட ஜாதியினர் தான் என்ற கருத்துத் தோன்றக் கூடிய அளவுக்கு ஆங்கிலேயர்கள் பிரிந்து நின்றனர். இந்தச் சமூகப் பிளவு பல கஷ்டங்களுக்குக் காரணமாயிற்று. ஆனால் அப்போதைய சூழ்நிலையில் இந்தப் பிளவு ஏற்படுவதைத் தடுத்திருக்க முடியாது.

கல்வியும் கலையறிவும் பெற்றவர்களும், மதம், அரசியற் கொள்கைகள், கலை, பொழுதுபோக்கு முதலிய வாழ்க்கைத் துறைகளில் ஒத்த மனப்பான்மை யுடையவர்களும் ஆகிய ஆண்களும் பெண்களும் ஒன்றாகச் சேர்ந்து, அடிக்கடி சந்தித்து அளவளாவுதற்குச் "சமூக வாழ்க்கை" (Society Life) என்று கூறுவது இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளின் பண்பு. அந்த

கைய சமூகவாழ்க்கை பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் இல்லை. முகமதியர்களுக்குள் இத்தகைய சமூகவாழ்க்கை இருந்தது எனினும் அந்தச் சமூகத்தில் பல பிளவுகள் இருந்தன. வங்காள முஸ்லிம்களை ஆப்கானிய முஸ்லிம்கள் எவ்வளவு தாழ்வாக நினைத்தார்களோ அவ்வளவு தாழ்வாக ஆப்கானியர்களைப் பாரசீக முஸ்லிம்கள் கருதினார்கள். இந்துக்களுக்குள் ஜாதிவேறுபாடுகள் அதிகமாக இருந்ததால் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து உண்ணவோ பருகவோ முடியாது. ஒன்றாகச் சேர்ந்து விருந்துண்ணலும், குடித்து மகிழ்தலும் சமூகவாழ்க்கையின் அடிப்படையான அம்சம். ஆரம்ப நாட்களில் சில ஐரோப்பியர்கள் முஸ்லிம் சமூகத்தில் வரவேற்கப்பட்டார்கள் என்று கூறினோம். ஆனால், அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மிகச் சில விஷயங்களில்தான் தொடர்பு ஏற்பட்டது. ஆதலால் ஐரோப்பியப் பண்புகளும் முகமதியப் பண்புகளும் ஒன்றோடொன்று கலந்து போவதற்கு வழியில்லை. ஐரோப்பியர் முஸ்லிம்களில் ஆண்களோடு பழகமுடியுமேயொழியப் பெண்களோடு பழக முடியாது. ஆகவே ஐரோப்பியர்க்கும் முகமதியர்களுக்கும் ஏற்பட்ட சமூகத்தொடர்பு பூரணமானதன்று.

மேல் நாடுகளிலிருந்தது போன்ற சமூகவாழ்வு இந்தியாவில் இல்லையெனினும், இந்துக்களினிடையிலிருந்த பல சாதியினரும் ஒருவரோடொருவர் சிநேக முறையிற் பழகினார்கள். அது போலவே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சினேக முறையில் தொடர்பு இருந்தது. இந்து ஆண்கள் முஸ்லிம் ஆண்களோடும், இந்துப் பெண்கள் முஸ்லிம் பெண்களோடும் பழகினார்கள். அவர்கள் ஒன்றாக உண்ணவோ பருகவோ முடியாதெனினும் விசேஷ காலங்களிலும் மற்ற சமயங்களிலும் ஒருவரோடொருவர் பழகி இறதிறத்தாருக்கும் பொதுவான விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். ஆகவே செல்வமும் செல்வாக்கும் உடைய இந்தியர்கள் முற்றிலும் தொடர்பற்ற தனித்தனிப் பிரிவினராக இருந்தார்கள் என்று நினைப்பது தவறாகும். அவர்கள் ஒருவரோடொருவர் எல்லா வகையிலும் நெருங்கிப் பழக முடியாவிட்டாலும், ஓரளவு தொடர்புடையவர்களாயிருந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தியாவில் எங்கெல்லாம் முகம்மதிய ஆட்சி இருந்ததோ அங்கெல்லாம் முகமதியர்கள் ஆளும் வகுப்பினர் என்ற உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வந்தார்கள். அதனால் அவர்கள் இந்துக்களைவிட உயர்ந்தவர்கள் என்றும், இந்துக்கள் அவர்களுக்கு

மரியாதை செலுத்தவேண்டும் என்றும் எதிர்பார்த்தார்கள். அவர்கள் உயர்ந்த நிலையிலிருந்த இராஜபுத்திரர்களுடனும் செல்வம் மிகுந்த இந்து வியாபாரிகளுடனும் சிநேக முறையிற் பழகினுர்கள் என்பதும், உயர்ந்த உத்தியோகங்களை வகித்த இந்துக்களுடன் தங்கள் அரசியலதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டார்கள் என்பதும் உண்மையாக இருந்தபோதிலும் பொதுவாகப் பேசுமிடத்து அவர்கள் சமூகத்தில் தங்கள் பிரஜைகளாகிய இந்துக்களைவிட உயர்ந்த நிலையை வகித்தார்கள். அரசியலதிகாரம் கம்பனியின் கைக்கு வந்தபோது கம்பனியின் ஆங்கில உத்தியோகஸ்தர்கள் முகமமதியர்கள் வகித்து வந்த ஆளும் வகுப்பினர் என்ற ஸ்தானத்தை வகிக்கத் தொடங்கினுர்கள். ஆகவே, அந்தத் தகுதிக்குரிய மதிப்பையும் மரியாதையையும் இந்தியர்கள் அவர்களுக்குச் செலுத்தவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். இவ்வாறு இந்தியர்கள் ஆங்கிலேயரிடம் காட்டிய மரியாதையின் வெளித்தோற்றத்தைக் கண்ட ஆங்கிலேயர்கள் தாங்கள் மிக உயர்ந்த பிறவிகள் என்றும், இந்தியர்கள் மிகத் தாழ்ந்த அடிமைகளைப் போன்றவர்கள் என்றும் நினைத்து இறுமாப்படைந்தார்கள். ஆங்கில உத்தியோகஸ்தர்கள் மாத்திரமின்றிச் சாதாரண ஆங்கிலேயரும் இந்தியர்களிடமிருந்து அதேவிதமான மரியாதையை எதிர்பார்த்தார்கள். ஆகவே இந்தியாவிலிருந்த எல்லா ஆங்கிலேயர்களும்—உத்தியோகஸ்தர்களும் சாதாரண மக்களும்-தங்களை ஆண்டைகள் என்றும், இந்தியர்களை அடிமைகளென்றும் நினைக்கத் தொடங்கினுர்கள்.

ஆகவே இந்தியாவிலிருந்த ஆங்கிலேயரின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகவே ஆங்கிலேயர்கள் இந்தியர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ளாது தனியாகப் பிரிந்து போனது இயற்கையே. அதுபோலவே இந்தியர்களும் தங்களுடைய பழக்க வழக்கங்களுக்கு முற்றிலும் மாறுபட்ட பழக்க வழக்கங்களையுடைய ஆங்கிலேயர்களுடைய சமூகத் தொடர்பை விரும்பாததும் இயற்கையே. இவ்வாறு ஆங்கிலேயர்கள் சமூகத்துறையில் இந்தியர்களோடு சிறிதும் தொடர்பின்றி வாழ்வதற்குச் சாதகமாக இந்தியாவுக்குப் பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் பெருந்தொகையான ஆங்கிலப் பெண்கள் வந்து சேர்ந்தார்கள். ஆங்கிலப் பெண்களின் தொகை வட இந்தியாவில் அதிகமாக அதிகமாக இந்தியச் சமுதாயத்திற்கும் ஆங்கிலச் சமுதாயத்திற்கும். இடையிற் காணப்பட்ட வேறுபாடுகள் மிகவும் தெளிவாகத் தெரியத் தொடங்கின. ஆங்கிலப் பெண்கள் இஷ்டமானபோது இஷ்ட

மான இடத்திற்குத் தாராளமாகச் சென்றுவந்தார்கள். ஆனால் இந்தியப் பெண்கள் வெளியே தலைகாட்டுவதே கிடையாது. அந்தக் காலத்தில் இந்தியாவில் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பே இந்த நிலையை நன்றாக விளக்கிக் காட்டும். ஆங்கிலேயர் குடியிருந்த பங்களாவின் ஒவ்வோர் அறையும் தெருவை நோக்கியிருந்தது. இந்தியர்களின் வீடுகளின் முற்பகுதி தெருவை நோக்கியிருந்தாலும், பெண்கள் வசித்துவந்த உள்ளறைகள் வீட்டின் உட்புறத்திலிருந்த ஒரு முற்றத்தை நோக்கி யிருக்கும். அந்த முற்றத்திற்கு வீட்டுச் சொந்தக்காரரைத் தவிரப் பிறர் செல்ல முடியாது. ஆங்கிலப் பெண்களின் தொகை பெருகியதால் ஆங்கிலேயர்கள் இந்தியப் பெண்களை வைப்பாட்டிகளாக வைத்துக்கொள்ளும் பழக்கம் குறைந்தது. அவ்வாறு ஏற்பட்ட மாறுதல் நல்லது தான் எனினும் இந்தியர்களின் வாழ்க்கை முறைகளை நேரடியாக அறிந்துகொள்வதற்கு ஆங்கிலேயருக்கிருந்த சந்தர்ப்பங்களும் குறைந்தன. அதனால் ஆங்கிலேயருக்கும் இந்தியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சமூகப் பிளவு இன்னும் அதிகமாயிற்று.

இங்கிலாந்தில் இந்தியர்களைப்பற்றி மிகத் தாழ்வான அபிப்பிராயம் வளர்ந்துவிட்டது. ஆதலால் இந்தியாவின் நாகரிகம் இன்னதென்று அறியாத ஆங்கில இளைஞர்கள் ஏதோ ஓர் அநாகரிகமான நாட்டுக்கு வருவதாக நினைத்துக்கொண்டு இந்தியாவுக்கு வந்தார்கள். இத்தகைய அபிப்பிராயம் இங்கிலாந்தில் வேரூன்றுவதற்குப் பாதிரிகளும், பரோபகாரிகளும் ஓரளவு காரணமாயிருந்தார்கள். அவர்கள் இந்தியர்களைச் சீர்திருத்த வேண்டுமென்று தங்கள் மனத்திற் கொண்டிருந்த ஆர்வத்தில் இந்தியர்களுடைய வாழ்க்கை முறைகளிற் காணப்பட்ட குறைபாடுகளைப் பன்மடங்கு பெருக்கிப் பிரசாரம் செய்தார்கள். 1830-ஆம் ஆண்டு வரையில் உடன்கட்டையேறும் முறை வழக்கிலிருந்தது. 1842-ஆம் ஆண்டுவரையில் அடிமைகளை வைத்துக்கொள்ளும் பழக்கம் சட்ட பூர்வமானதாயிருந்தது. கம்பனி தலையிட்டு நிறுத்தும் வரையில் ஒரு சில இடங்களில் நரபலியிடும் வழக்கம் இருந்தது. பெண் குழந்தைகளைக் கொன்றுவிடும் பழக்கம் சில கூட்டத்தினரிடையே காணப்பட்டது. தக்குகள் என்ற கொலைகாரர்களும், தீவட்டிக் கொள்ளைக்காரர்களும் நாட்டின் பல பாகங்களில் இருந்தார்கள். இவையும் இவைபோன்ற வேறு சில அம்சங்களும் இந்திய நாகரிகத்தின் களங்கங்களாக இருந்தன. ஆனால் அவற்றைப்பற்றி அளவுக்கு மீறிப்பேசியது இந்திய வாழ்க்கை முறையைப்பற்றி இங்கிலாந்தில் மிகத் தப்-

பான அபிப்பிராயத்தை உண்டுபண்ணியது. அதனால், பாதிரிகள் சித்திரித்துக் காட்டிய "இந்தியனை" ஆங்கிலேயர்களிற் சிலர் மிகத் தாழ்வாக நினைத்தார்கள். வேறு சிலர் அவன்மீது பரிதாபப் பட்டார்கள். இன்னும் சிலர் அவனைக் கிறிஸ்துவமதத்திற் சேர்த்துச் சீர்திருத்த வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் ஒருவரும் அவனுடைய உண்மையான தன்மைகளை அறிந்து அவனுடைய நல்ல குணங்களுக்காக அவனைப் போற்ற முன்வர வில்லை.

மேலே கூறப்பட்ட பலவேறு காரணங்களால் நவீன இந்தியா உருவாகிக்கொண்டு வந்த காலத்தில் இந்தியர்களுக்கும் இந்தியா விலிருந்த ஆங்கிலேயர்களுக்கும் ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற அரசியல் தொடர்பைத் தவிரச் சமூகத்துறையில் எந்த விதமான தொடர்பும் ஏற்படவில்லை. ஆங்கிலேயரும் இந்தியரும் ஒருவரோடொருவர் பொதுப்படையான விஷயங்களைப் பேசி அளவளாவுவது அந்தக் காலத்தில் அருமையிலும் அருமையாக இருந்தது.

குறிப்புகள்.

1. பஞ்சங்கள்:— 1943-ஆம் ஆண்டில் வங்காளத்தி லும் மற்ற இடங்களிலும் தோன்றிய பஞ்சத்திற்குத் தனிப் பட்ட காரணங்களிருந்தன. அவற்றைப் பற்றிப் பின்னைய அதிகாரம் ஒன்றில் பேசுவோம். ஆகவே இந்த அதிகாரத் தில் பஞ்சங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கும் பொது வான கூற்றை மாற்றவேண்டிய அவசியம் இல்லை.

2. கல்வித் திட்டங்கள்:— ஆரம்பக் கல்வியிலும் பெண்கல்வியிலும் வெகுநாள் வரையில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பது பின்னைய அதிகா-ரங்களிற் கூறப்படும். இந்தக் குறைகளால் இந்திய சமூகத் திற்கு ஏற்பட்ட தீமைகளை நிவிர்த்தி செய்வதற்குத் தற் காலத்தில்தான் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

அதிகாரம்—43

சிப்பாய்க் கலகமும் அதன் விளைவுகளும்

டல்ஹௌசிக்குப் பிறகு கானிங்கு பிரபு 1856-ஆம் ஆண்டு முதல் 1862-ஆம் ஆண்டு வரையில் கவர்னர் ஜெனரலாக இருந்தான். அந்தக்காலத்தில் சிப்பாய்க் கலகம் ஏற்பட்டது. அதன் பயனாக இந்திய அரசியல் நிர்வாகம் மாற்றியமைக்கப்பட்டதோடு பல முக்கியமான சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. அவற்றைப்பற்றிப் பின்னைய அதிகாரங்களில் படிப்போம். வங்காளப் படையிலிருந்த இந்தியப் போர்வீரர்களைத் தவிர மற்ற யாரும் கலகத்தில் கலந்துகொள்ளவில்லை என்று பொதுவாகக் கூறலாம். சென்னையில் கலகமே ஏற்படவில்லை. பம்பாயில் கலகம் மிகச் சிறிய அளவில் தோன்றி மறைந்தது. தொடக்கத்தில் கலகக் காரர்கள் அடைந்த வெற்றிகளைக் கண்ட சில முக்கியமான பெரிய மனிதர்கள் கலகக்காரர்களுக்கு ஆதரவு அளித்தார்கள். அவர்களெல்லாரும் பற்பல காரணங்களால் ஆங்கிலேயர்மீது கோபங்கொண்டிருந்தார்கள். ஆனால் சுதேச அரசர்களில் முக்ய மானவர்கள் யாரும் கலகக்காரர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. இந்தக் கலகம் ஆங்கிலேயருக்கு எதிராக ஏற்பட்ட ஒரு தேசிய இயக்கம் என்று கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. கலகக்காரர்களில் சிலர் மொகலாயச் சக்கரவர்த்தியை மறுபடியும் இந்தியாவின் சக்கரவர்த்தி என்ற பதவிக்கு உயர்த்தினர். வேறு சிலர் மகாராஷ்டிரத்தில் ஒரு புதிய பீஷ்வாவை ஏற்படுத்தினர். ஆகவே கலகக்காரர்கள் ஒரே நோக்கத்தோடு கலகஞ் செய்ய வில்லை என்பதை உணர்ந்துகொள்ளலாம். கம்பனியின் ஆட்சியை ஒழித்து, அவ்வாட்சி ஏற்படுவதற்கு முன் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியா எந்த நிலைமையிலிருந்ததோ அதே நிலைமையை மறுபடியும் ஏற்படுத்துவதே கலகக்காரர்களின் நோக்கம் என்று பொதுவாகக் கூறலாம். வெளிநாடுகளில் எதுவும் கலகக்காரர்களுக்கு உதவி செய்யவில்லை. ஆப்கானிஸ்தானம் கம்பனியுடன் சிநேகமாகவே இருந்தது. நேபாளம் திறமையும் பலமும் பொருந்திய ஒரு படையைக் கம்பனிக்கு உதவி செய்வதற்காக அயோத்திக்கு அனுப்பியது.

சிப்பாய்க் கலகத்தைப்பற்றிக் கூறும்பொழுது அப்போதைய சந்தர்ப்பங்கள் கலகம் ஏற்படுவதற்கு எவ்வாறு சாதகமாக இருந்தன என்பதைத் தனியாகவும், கலகத்தின் காரணங்களைத் தனியாகவும் அறிந்துகொள்வது அவசியம். இந்தியக்

கூலிப்படை வீரர்கள் தங்களுக்குச் சம்பளம் கொடுத்துவைத்திருந்த எஜமானர்களிடம் மிகுந்த விசுவாசத்துடன் இருந்தார்கள் என்பது உண்மை எனினும், அவர்கள் சில சமயங்களில் தங்கள் எஜமானர்களுக்கு விரோதமாகக் கலகமுஞ்செய்தார்கள் என்பதும் உண்மைதான். போர்க்களத்தில் அவர்கள் மிகுந்த திறமையுடனும் கட்டுப்பாட்டுடனும் சண்டை செய்தார்கள். ஆனால் சண்டை இல்லாத காலத்தில் அவர்கள் உல்லாசமற்ற சோம்பேறி வாழ்க்கை நடத்த வேண்டியிருந்ததால் அந்தச் சமயத்தில் தங்களுக்குள்ள குறைகளைப்பற்றி எண்ணி அவளைத் தீர்த்து வைக்குமாறு தங்கள் எஜமானர்களிடம் கேட்பதும், தங்கள் எஜமானர்களின் க்ஷேமத்திற்குத் தாங்கள் இன்றியமையாத துணையென நினைப்பதும் இயல்புதான். ஆகவே சிப்பாய்களைக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியிருக்குமாறு செய்வது அவசியமாக இருந்ததைப் போலவே கஷ்டமாகவும் இருந்தது. வங்காளத்திலிருந்த போர் வீரர்கள் வங்காளத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களல்லர். அவர்கள் வங்காளத்திற்கு மேற்கிலிருந்த பிரதேசங்களில் இருந்து வந்து கம்பனியின் படையில் சேர்ந்தவர்கள். பஞ்சாபை ஜெயித்ததற்குப் பிறகு அவர்களுக்கு முக்கியமான வேலை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. அந்தக் காலத்திலேயே அவர்களிடையே பல வேறு காரணங்களால் கட்டுப்பாடும் ஒழுங்கும் குறைந்து இருந்தன. இப்பொழுது நிலைமை இன்னும் மோசமாக இருந்தது. சிப்பாய்கள் சாதாரணமாகக் கல்வியற்றவர்களாக இருந்தார்கள். அதனால் அவர்கள் சில மூட நம்பிக்கைகளையும், காரணமற்ற விருப்பு வெறுப்புக்களையும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குள் ஒரு சிலர் ஆபீஸர் பதவிகளுக்கு உயர்த்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் உண்மையில் பொறுப்பு வாய்ந்த எந்த உயர்ந்த பதவிகளுக்கும் நியமிக்கப்படமாட்டார்கள் என்பது அவர்களுக்கே நன்றாய்த் தெரியும். மேலும் அவர்கள் சாதாரணச் சிப்பாய்களைப் போலவே மூடநம்பிக்கைகளையும் காரணமற்ற விருப்பு வெறுப்புக்களையும் உடையவர்களாக இருந்தார்கள். ஆங்கில ஆபீஸர்கள் எல்லோருமே தங்களிடம் ஒப்பிக்கப்பட்டிருந்த சிப்பாய்களின் விசுவாசத்தில் குருட்டுத்தனமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். தங்களைத் தவிர வேறு யாரும் தங்களுடைய போர் வீரர்களின் விஷயத்தில் தலையிடுவதை அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். சாதாரண சிப்பாய்களிடையில் மாத்திரமின்றி ஆபீஸர்களிடையிலும் கட்டுப்பாடு மிகமிகக் குறைவாக இருந்தது என்று டல்ஹௌசி அறிந்திருந்தான். ஆனால் அவ

ஞற்கூட அந்தத்துறையில் எந்தவிதமான சீர்திருத்தமும் செய்ய முடியவில்லை. இந்தக் கட்டுப்பாடற்ற நிலைதான் சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கு சாதகமாயிருந்தது.

இனி, கலகத்தின் காரணங்களைப் பார்ப்போம். பெரும்பாலான சிப்பாய்கள் சம்பளமும் மற்ற சௌகரியங்களும் மிகக் குறைவாக இருந்தன என்று எண்ணி அதிருப்தியுடன் இருந்தார்கள். இது சிப்பாய்களிடையில் சாதாரணமாகக் காணப்பட்ட அதிருப்திதான். இவ்வாறு அதிருப்தியடைந்திருந்த சிப்பாய்கள் தங்களுடைய மதத்திற்கும் ஜாதிக்கட்டுப்பாட்டிற்கும் ஆபத்து ஏற்படும் என்று அஞ்சினார்கள். சிப்பாய்களிற் பெரும்பாலார் பிராமணர்களாகவும் இராஜபுத்திரர்களாகவும் இருந்தார்கள். அவர்களில் மிகப் பெரும்பாலோர் அயோத்தியிலிருந்து வந்தவர்கள். அந்த ராஜ்யம் கம்பனியின் ஆட்சிக்குள் வந்தபிறகு அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் அந்த ராஜ்யத்து மக்கள் கம்பனியினிடத்தில் மிகுந்த அதிருப்தி அடைந்திருந்தார்கள் என்று ஏற்கெனவே படித்தோம். அயோத்தியிலிருந்து வந்து வங்காளப் படையில் சேர்ந்திருந்த போர்வீரர்களும் கம்பனியினிடத்தில் அதிருப்தியுடையவர்களாகவே இருந்தார்கள். பர்மாவில் ஒரு காவற்சேனை வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டபொழுது இந்தியாவில் மாத்திரமின்றி இந்தியாவிற்கு வெளியிலும் சென்று இராணுவச்சேவை செய்வதற்கு இணங்கியவர்களைத்தான் இனிமேல் சிப்பாய்களாகச் சேர்க்கவேண்டும் என்று டல்ஹௌசி உத்தரவிட்டான். கம்பனியின்மீது பகைமை கொண்டிருந்தவர்கள் ஏற்கெனவே கம்பனியின் இராணுவத்தில் இருந்த சிப்பாய்கள் கடல்கடந்த நாடுகளுக்கு அனுப்பப்படுவார்கள் என்று டல்ஹௌசியின் உத்தரவைத் திரித்துக் கூறினார்கள். அந்தக் காலத்தில் கடல் கடந்து சென்ற இந்துக்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்படுவார்கள். ஆதலால், இந்த உத்தரவு சிப்பாய்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிருப்தியை உண்டாக்கியது. அதுபோலவே தங்கள் மதத்தின் உயர்வை எடுத்துக் கூறி, அதில் அனைவரும் சேர்ந்துகொள்ளவேண்டும் என்று கிறிஸ்தவப் பாதிரிகள் விடுத்த அறிக்கையை அரசாங்கத்தின் அறிக்கை என்று கம்பனியின் விரோதிகள் திரித்துக் கூறினார்கள். சிப்பாய்களைக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பதற்கு இங்கிலாந்திலிருந்த அதிகாரிகளிடமிருந்து கானிங்பிரபு உத்தரவு பெற்றுக்கொண்டு இந்தியாவிற்கு வந்திருந்தான் என்று ஒரு வதந்தி ஏற்பட்டது. ஆகவே 1856-ஆம் ஆண்டின் இறுதியில் சிப்பாய்கள் மிகுந்த அதிருப்தியும் அச்சமும்

அடைந்திருந்தார்கள் என்றும், ஏதாவது மறைமுகமான வழியில் கம்பனி அதிகாரிகள் தங்களுடைய மதத்திற்கு எந்தச் சமயத்திலும் ஆபத்தை உண்டாக்குவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் என்றும் பொதுவாகக் கூறலாம்.

இந்தச் சமயத்தில் கம்பனி அதிகாரிகள் மிக முட்டாள்தனமான ஒரு காரியத்தைச் செய்தார்கள். தோட்டாக்களைத் துப்பாக்கிகளில் போடுவதற்கு முன்னர் அவற்றின் முனைகளை வாயில் கடிப்பது அந்தக் காலத்துப் பழக்கமாக இருந்தது. சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்ட தோட்டாக்களில் சிலவற்றின்மீது மாட்டுக் கொழுப்பும் பன்றிக் கொழுப்பும் தடவப்பட்டிருந்தது. தெய்வத்தன்மை பொருந்திய பசுவின் கொழுப்பையும், அசுத்தமான பன்றியின் கொழுப்பையும் பூசிய தோட்டாக்களை வாயில் வைத்துக் கடிப்பது தங்களுடைய மதக் கோட்பாடுகளுக்கு அறவே முரண்பட்டது என்று சிப்பாய்கள் அஞ்சினார்கள். இதையே தங்களுடைய மதத்திற்கு ஏற்பட்ட மறைமுகமான தாக்குதல் என்று எண்ணிய சிப்பாய்கள் கம்பனியின்மீது கட்டுக்கடங்காத சீற்றமும் வெறுப்பும் கொண்டார்கள். அவர்களில் ஒரு சிலர் இது கம்பனியார் செய்த முட்டாள்தனமான காரியம் என்று உணர்ந்தார்கள் எனினும், பெரும்பான்மையாருடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. இவ்வாறு சிப்பாய்களின் மனத்தில் ஏற்கெனவே தோன்றியிருந்த அச்சம் கம்பனியின்மீது கடுமையான வெறுப்பாக மாறிற்று.

கலகத்தின் நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறவேண்டிய அவசியம் இல்லை. அயோத்தியும் வேறு சில சிறு பகுதிகளும் சிறிது காலம் கம்பனிக்கு விரோதமான பிரதேசங்களாக மாறின. கங்கைச் சமவெளியில் பாட்னாவுக்கு மேற்கிலிருந்த பகுதிகளில் குழப்பமும் அராஜகமும் மலிந்தன. டில்லி, கான்பூர் லக்னோ ஆகிய மூன்று நகரங்களும் சிப்பாய்க் கலகத்தின் வரலாற்றில் முக்கிய ஸ்தானத்தை வகிக்கின்றன. அந்த இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறப்புகுமுன் சில பொதுவிஷயங்களை முன்னுரையாகக் கூறுவது அவசியம். முதலாவது, சிப்பாய்க்கலகம் தேசத்தின் பல பாகங்களிலிருந்த தலைவர்கள் ஒன்றாகச் சேர்ந்து செய்த சதியாலோசனையின் விளைவு என்று எண்ணுவதற்குத் தக்க ஆதாரம் இல்லை. கலகம் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் நாட்டின் பல பகுதிகளில் பரவியது. மேலும் தொடக்கத்தில் கலகக்காரர்கள் அடைந்த வெற்றிகள் கலகம் மேலும் மேலும் பரவுவதற்குக் காரணமாயிருந்தன. இரண்டாவதாக, ஆரம்பத்தில் கம்பனி

அதிகாரிகள் கலகத்தை அடக்குவதற்குச் செய்த முயற்சிகள் திறமையும் ஆலோசனையும் அற்றவையாக இருந்தன. பஞ்சாபில் தலைமைக் கமிஷனராக இருந்த ஜான் லாரன்ஸும் அவனுடைய திறமை வாய்ந்த உத்யோகஸ்தர்களும் தொடக்கத்திலேயே தக்க நடவடிக்கைகளை எடுத்தார்களாதலால் அங்குக் கலகம் எளிதாக அடக்கப்பட்டது. கலகம் செய்த சிப்பாய்களிடமிருந்து ஆயுதங்கள் விரைவில் பிடுங்கிக்கொள்ளப்பட்டன. மேலும் அங்கிருந்து புதிய போர்வீரர்களைச் சேர்த்து டில்லிக்கும் உதவியாக அனுப்ப முடிந்தது. ஆனால் மற்ற இடங்களில் கம்பனி அதிகாரிகள் உடனடியான நடவடிக்கைகள் எடுக்காததால் கலகம் செய்த சிப்பாய்கள் தங்களிடமிருந்த ஆயுதங்களைக் கம்பனிக்கு விரோதமாக உபயோகப்படுத்தினார்கள். மூன்றாவதாக, இருதிறத்தாரும் சண்டையில் மிகக் கொடூரமான முறைகளை அனுசரித்தார்கள். கலகக்காரர்கள் கஜானாக்களைக் கொள்ளையடித்தும், சிறைச்சாலைகளைத் திறந்துவிட்டும், எதிர்ப்பட்ட ஆங்கிலேயரை எல்லாம் கொன்றும் கொடுமை செய்தார்கள். சில இடங்களில் ஆங்கிலப் பெண்களையும் குழந்தைகளையும் கூட இரக்கமின்றிக் கொன்றார்கள். அதுபோலவே கம்பனியின் படைவீரர்களும் கொடுமையான முறைகளையே கையாண்டார்கள். தனிப்பட்ட சில ஆங்கிலேயரும் இந்தியரும் ஒருவரோடொருவர் நட்பாகவும் ஒருவர்க்கொருவர் உதவியாகவும் இருந்தார்கள் எனினும், கலகம் தொடங்கிய சிறிதுகாலம் கம்பனிப் போர்வீரர்களுக்கும் கலகக்காரர்களுக்குமிடையில் கண்மூடித்தனமான வெறுப்பு இருந்ததென்றும், அதனால் பல கொடுமைகள் இழைக்கப்பட்டன என்றும் கூறுவது அவசியம். கடைசியாக, கலகக்காரர்களுக்குச் சிறந்த தலைவர்கள் இல்லை என்பதையும் கம்பனியின் துருப்புகளை நடத்துவதற்குச் சிறந்த தலைவர்கள் சீக்கிரமாகத் தோன்றினார்களென்பதையும் கூறவேண்டும்.

இனி, டில்லியில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கூறுவோம். 1857-ஆம் ஆண்டு மே மாதத்தில் டில்லிக்கு வடகிழக்கில் 40-மைல் தொலைவில் இருக்கும் மீரட்டு என்ற இடத்திலிருந்த சிப்பாய்கள் கலகத்தைத் தொடங்கினார்கள். அங்கிருந்து அவர்கள் டில்லியைநோக்கிச் சென்றார்கள். அங்குக் கம்பனியின் உபகாரச் சம்பளம்பெற்றுப் பெயரளவில் முகலாயச் சக்ரவர்த்தியாக இருந்த பஹதர் ஷாவின் சிப்பந்திகளும் நகரத்திலிருந்த முஸ்லீம்களும் கலகக்காரர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். இவ்வாறு டில்லியில் கம்பனியின் ஆட்சிக் குப் பதிலாக முகலாயச் சக்கரவர்த்

தியின் ஆட்சி ஏற்பட்டது. கம்பனியினிடம் பகைமைகொண்டிருந் தவர்கள் அனைவரும் இந்தப் புதிய அரசாங்கத்துடன் சேர்ந்து கம்பனியை எதிர்க்க முடியும். இந்த நிலையையும் இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் உணர்ந்த ஜான் லாரென்ஸ் எடுத்த தீவிர மான நடவடிக்கைகளால் வடமேற்கிலிருந்த ஆங்கிலத் துருப்புகள் மீரட்டில் கலகம் தொடங்கிய ஒரு மாதத்திற்குள் டில்லிக்கு உதவி யாக வந்து சேர்ந்தன. ஆனால் டில்லிக் கோட்டையை உடனே கைப்பற்றுவதற்கோ அல்லது அதை முற்றுகையிடுவதற்கோ வேண்டிய அளவு துருப்புக்கள் ஆங்கிலேயரிடம் இல்லையாதலால் நகருக்கு வெளியில் ஓர் உயர்ந்த இடத்தில் ஆங்கிலத் துருப்புகள் நிறுத்தப்பட்டன. இந்தத் துருப்புக்களுக்கும் கலகக்காரர்களுக்கும் சண்டை நடந்துகொண்டிருக்கும்பொழுதே பஞ்சாபி லிருந்து ஆங்கிலேயர்க்கும், வேறு பல இடங்களிலிருந்து கலகக் காரர்களுக்கும் உதவிப்படைகள் வந்துகொண்டே இருந்தன. செப்டம்பர் மாதத்தில் ஆங்கிலேயர்க்கு உதவியாகப் பெரிய பீரங்கி கள் வந்துசேர்ந்தன. விரைவில் அவர்கள் டில்லியைக் கைப்பற்றி முகலாயச் சக்கரவர்த்தியையும் கைதியாக்கினார்கள். அடுத்த ஆண்டு அவன் கலகம் செய்ததற்காகச் சட்டப்படித் தண்டிக்கப் பட்டுக் கைதியாக பர்மாவுக்கு அனுப்பப்பட்டான். அத்தோடு முகலாயச் சக்கரவர்த்தி என்ற பதவியும் அழிந்தது.

கங்கைச் சமவெளியில் இருந்த வரிசையான இராணுவதளங் களில் கான்பூர் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகித்தது. மேலும் அது கங்கையைக் கடந்து லக்னோவுக்குச் செல்லும் வழியில் இருந் தது. அங்குத்தான் கடைசி மஹாராஷ்டிரப் போருக்குப் பின் தன்னுடைய பதவியை இழந்த பீஷ்வா வசித்து வந்தான். அவன் கம்பனியின் உபகாரச் சம்பளம் பெற்று 1853-ஆம் ஆண்டு வரை-யில் அமைதியான வாழ்க்கை நடத்திவிட்டு இறந்துபோனான். அவன் இறந்தபின் அவனுடைய தத்துப் புத்திரனாகிய நானாசாகி புக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்குக் கம்பனி மறுத்துவிட் டது. அதனால் நானாசாயபு ஆங்கிலேயருடைய கொடிய பகைவ னானான். 1857-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் கான்பூரிலிருந்த சிப்பாய்கள் கலகம் செய்யத் தொடங்கியதும் அங்கிருந்த ஆங்கி லப் படைத்தலைவன் தன்னிடமிருந்த ஒரு சில ஆங்கிலப் போர் வீரர்களையும் பெண்களையும் குழந்தைகளையும் ஒரு காப்பான இடத்தில் வைத்தான். கலகக்காரர்கள் நானாசாகிபைப் பீஷ்வா என்று பிரகடனம் செய்து, அவனுடைய தலைமையில் ஆங்கிலே யரைத் தாக்கினார்கள், சில நாட்களுக்குப் பின் ஆங்கிலேயப்

படைத்தலைவன் தன்னிடமிருந்த ஆங்கிலேயர்களை அழைத்துக் கொண்டு அலகாபாத்துக்குப் போய்விடலாமென்று நானுசாகிப் அனுமதி அளித்தான். ஆகவே, அவர்களெல்லாம் கூரை வேய்ந்த படகுகளில் ஏறி, கங்கை நதியில் தங்கள் பயணத்தைத் தொடங்கினார்கள். உடனே கரையிலிருந்த கலகக்காரர்கள் அந்தப் படகுகளின்மீது குண்டுமாரி பொழிந்ததோடு, அவற்றிற்கு நெருப்பும் வைத்தார்கள். ஆகவே, அந்தப் படகுகளில் இருந்தவர்களில் ஏறக்குறைய எல்லா ஆண்மக்களும் கொல்லப்பட்டார்கள். பெண்களும் குழந்தைகளும் பதினைந்து நாள் சிறை வைக்கப்பட்டு முடிவில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இனி, லக்னோவில் நடந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்போம். 1857-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஸர் ஹென்றிலாரன்ஸ் அயோத்திக்குத் தலைமைக் கமிஷனராக நியமிக்கப்பட்டு லக்னோவுக்குச் சென்றான். அயோத்தியில் நிலச்சுவான்தார்களும் மற்றவர்களும் ஆங்கிலேயர்மீது அதிக வெறுப்பும் கோபமும் கொண்டிருந்தார்கள் என்பதை முன்னர்ப் படித்தோம். அந்த அதிருப்தியை மாற்றுவதற்கு லாரன்ஸ் இயன்றவரையில் முயன்றான். எனினும் குறுகிய காலத்தில் அந்த அதிருப்தியை முழுவதும் போக்குவதற்கு முடியாது என்பதை லாரன்ஸ் உணர்ந்தான். ஆகவே கலகக்காரர்களிடமிருந்து ஆங்கிலேயரைக் காப்பாற்றுவதற்காக அவர்களை எல்லாம் முன்னர் ஆங்கில ரெஸிடெண்டு வசித்து வந்த பகுதியில் வைத்து ஓரளவு பாதுகாப்பு ஏற்படுத்தினான். ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் அயோத்தியிலிருந்த சிப்பாய்களில் பெரும்பான்மையோர் கலகம் செய்தனர். அதனால் கம்பனியின் ஆட்சி மறைந்தது. பல இடங்களில் நிலச்சுவான்தார்கள் தாங்கள் இழந்த நிலங்களை மறுபடியும் கைப்பற்றிக்கொண்டார்கள். சுமார் ஆயிரம் ஆங்கில வீரர்களும், கம்பனியிடம் விசுவாசமாக இருந்த சுமார் எழுநூறு சிப்பாய்களும், போர் வீரரல்லாத ஒரு சில ஆங்கிலேயரும்தான் ரெஸிடென்ஸியிலிருந்தார்கள். அவர்களைப் பெருந் தொகையினரான கலகக்காரர்கள் முற்றுகையிட்டார்கள். அவர்களோடு நிலச்சுவான்தார்களுடைய ஆயுதபாணிகளான பரிவாரங்களும் சேர்ந்துகொண்டன. சண்டையில் ஏற்பட்ட காயங்களால் ஜூலை மாதத்தில் லாரன்ஸ் இறந்தான். ஸர் ஹென்றி ஹாவ்லக், ஸர் ஜேம்ஸ் அவுட்ரம் ஆகியவர்களுடைய தலைமையில் ஓர் ஆங்கிலப்படை செப்டம்பர் மாதத்தில் லக்னோவுக்கு வந்து சேர்ந்தது. ஆனால், அவர்களால் முற்றுகையை விடுவிக்க முடியவில்லை,

நவம்பரில் தலைமைச் சேனாதிபதி ஸர் காலின் காம்பல் என்பவன் தலைமையில் இன்னுமோர் உதவிப்படை வந்து சேர்ந்தது.

நானா சாகிபின் சேனைகளைத் தோற்கடித்தபின் கங்கைக்கும் யமுனைக்குமிடையிலுள்ள ஜில்லாக்கள் எல்லாம் காம்பலுக்கு அடங்கிவிட்டன. ஆனால், தெற்கிலிருந்து கலகக்காரர்கள் வந்து லக்னோவைத் தாக்கக்கூடும் என்ற அச்சம் இருந்தது. 1858-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பம்பாயிலிருந்தும் சென்னையிலிருந்தும் வந்த துருப்புக்கள் மத்திய இந்தியாவிலும் பண்டல் கண்டிலும் இருந்த கலகக்காரர்களைத் தோற்கடித்துத் துரத்தின. அதற்குள் காம்பல் லக்னோவிலிருந்த கலகக்காரர்களைத் துரத்தியடித்துவிட்டான். ஆனால் கலகக்காரர்கள் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து, அயோத்தியின் பல பாகங்களில் பரவிக் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களை அழிக்கவேண்டியது காம்பலின் வேலையாகிவிட்டது. அது மிகக் கடினமான வேலையாக இருந்தது. எனினும், 1858-ஆம் ஆண்டு முடிவதற்குள் அவர்களில் பெரும்பான்மையார் அழிக்கப்பட்டனர். மீதியிருந்தவர்கள் இன்னும் ஓர் ஆண்டுக்குள் அழிக்கப்பட்டனர். இதற்குள்ளாக அயோத்தி ராஜ்யத்தின் ஸிவில் நிர்வாகமும் திருத்தியமைக்கப்பட்டது. குடியானவர்களிடமிருந்து நேராக வரி வசூல் செய்யும் முறை கைவிடப்பட்டு, மறுபடியும் நிலச்சுவான்தாரர்களுக்கு அவர்கள் உரிமைகொண்டாடின நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

சிப்பாய்க் கலகத்தால் இங்கிலாந்தில் கவலையும் பரபரப்பும் ஏற்பட்டன. இந்திய அரசியல் நிர்வாகத்தை இனிமேல் கம்பனியின் கையில் விடக்கூடாது என்ற முடிவுக்கு ஏறக்குறைய எல்லா மக்களும் வந்துவிட்டார்கள். 1858-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பார்லிமெண்டில் நிறைவேறிய சட்டத்தின்படி இந்திய அரசியல் நிர்வாகத்தின் பொறுப்புக் கம்பனியிடமிருந்து ஆங்கில மந்திரி சபைக்கு மாற்றப்பட்டது. இந்திய விஷயங்களைக் கவனிப்பதற்கு ஒரு தனி மந்திரி நியமிக்கப்பட்டான். இவ்வாறு இந்திய அரசியலில் ஏற்பட்ட மாறுதலைத் தெரிவிக்கும் முறையில் தயார் செய்யப்பட்ட விக்டோரியா மஹாராணியின் பேரறிக்கையைக் கானிங்கு பிரபு இந்திய மக்களுக்கு 1858-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தெரிவித்தான். இந்த அறிக்கையே புதிய இந்திய அரசியல் திட்டத்திற்கு அடிப்படையாயிற்று. கவர்னர் ஜனரல் ராஜப்பிரதிநிதி என்ற பட்டத்தைப் பெற்றான்.

1856-ஆம் ஆண்டு நிறைவேறிய இந்திய அரசியல் சட்டத்தினாலும், அடுத்த சில ஆண்டுகளில் நிறைவேறிய சட்டங்களா

லும் சைனியம், நீதிபரிபாலனம், சட்ட சபைகள், மத்திய அரசாங்கத்தின் நிர்வாக சபை ஆகியவற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இந்தியாவில் சென்னை, பம்பாய் கல்கத்தா ஆகிய மூன்று இடங்களில் மூன்று தனிப்பட்ட சேனைகள் இருந்தன. அவைகளில் ஆங்கிலப் போர்வீரர்களும் இந்தியப் போர்வீரர்களும் இருந்தார்கள். புதிய அரசியல் திட்டத்தின்படி இந்திய சைனியத்திற்காக இங்கிலாந்தில் ஆள் திரட்டக்கூடாது என்று ஏற்பட்டது. அதற்குப் பதிலாக இந்தியச் சேனையில் இரண்டு பகுதிகள் ஏற்பட்டன. ஒரு பகுதியில் நிரந்தரமாக இந்தியாவில் சேவைசெய்த பிரிட்டிஷ் ஆபீஸர்களுக்கு அடங்கிய இந்தியக் குதிரைப் படையும், காலாட்படையும் இருந்தன. இன்னொரு பகுதியில் பிரிட்டிஷ் சேனையைச் சேர்ந்த பீரங்கிப்படை, குதிரைப் படை, காலாட்படை ஆகியவையும் இருந்தன. அவைகள் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்து ஒரு குறிப்பிட்ட காலம் சேவை செய்தபின் திரும்பிப் போய்விடும். அவற்றிற்குப் பதிலாக இங்கிலாந்திலிருந்து வேறுபடைகள் வரும். இந்தியாவில் மூன்று தனிப்பட்ட சைனியங்களை வைத்து நிர்வகிப்பது அரசாங்கத்தின் வேலையை அதிகப்படுத்திய போதிலும் 19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரையில் அவைகள் எல்லாம் ஒரே தலைமையின் கீழ்க் கொண்டுவரப்படவில்லை.

1861-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தின்படி பம்பாய் கல்கத்தா, சென்னை ஆகிய மூன்று ராஜதானிகளிலும் மூன்று உயர்நீதி மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளுக்கு ஸிவில் வழக்குகளையும் கிரிமினல் வழக்குகளையும் விசாரிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. ஐந்து ஆண்டுகட்குப்பின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் ஓர் உயர் நீதி மன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. பொது மக்கள் மாத்திரமன்றி அரசாங்க அதிகாரிகளும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்வதும், கீழ்க் கோர்ட்டுகளில் சரியானபடி நியாயம் வழங்கப்படுகிறதா என்று பார்த்துக்கொள்வதும் இந்த உயர்நீதி மன்றங்களின் முக்கிய வேலை. ஆகவே சட்டத்தின் ஆட்சிக்கு இந்த உயர்நீதி மன்றங்களே அடிப்படையாயின.

1853-ஆம் ஆண்டுவரையில் கவர்னர் ஜெனரலும் அவருடைய நிர்வாக சபையும் சேர்ந்து அரசாட்சிக்கு வேண்டிய சட்டங்களை இயற்றிவந்தார்கள். அந்த ஆண்டில் நிறைவேறிய சாசனச் சட்டத்தின்படி பன்னிரண்டு அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சேர்ந்த ஒரு சட்டசபை யமைக்கப்பட்டது. 1869-ஆம் ஆண்

டில் உத்தியோகஸ்தர்களல்லாத மற்றவர்களையும் அந்தச் சட்ட சபையின் அங்கத்தினர்களாக நியமிக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, சட்டசபையில் கவர்னர் ஜெனரலின் நிர்வாகசபை அங்கத்தினர்களும் அவர்களைத் தவிர வேறு அங்கத்தினர்களும் இருந்தார்கள். பின்னையவர்களில் குறைந்த பட்சம் பாதிப்பேராவது உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களாக இருக்கவேண்டும். ஆனால் அந்தச் சட்டசபைக்கு மசோதாக்களை விவாதிப்பதைத் தவிரக் கேள்வி கேட்பதற்கும், தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கும் அதிகாரம் அளிக்கப்படவில்லை. இது போன்ற சட்டசபைகள் சென்னையிலும், பம்பாயிலும், வங்காள மாகாணத்திலும் ஏற்பட்டன. 1886-ஆம் ஆண்டில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், 1898-ஆம் ஆண்டில் பஞ்சாபிலும் இத்தகைய சட்டசபைகள் நிறுவப்பட்டன.

கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையிலும் கானிங்பிரபு சில சீர்திருத்தங்களைச் செய்தான். அரசாங்க வேலைகள் பல இலாக்களாகப் பிரிக்கப்பட்டன. நிர்வாக சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவர்க்கும் ஓர் இலாக்காவோ ஒன்றுக்கு மேற்பட்ட இலாக்காக்களோ கொடுக்கப்பட்டன. அவரவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலாக்காக்களைப் பொறுத்த விஷயங்களில் அவரவர்களே அரசாங்கத்தின் பெயரால் உத்தரவுகளைப் போடலாம். இந்த இலாக்காக்களுக்குள் சச்சரவு ஏற்பட்ட காலத்திலும், முக்கிய அரசியற் கோட்பாடுகளைப்பற்றித் தீர்மானஞ்செய்ய வேண்டிய சமயங்களிலும் நிர்வாக சபை அங்கத்தினர் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசித்தனர். கானிங் ஏற்படுத்திய இந்த முறை 1861-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டது. மேலும் அந்தச்சட்டத்தின்படி நிர்வாகசபை அங்கத்தினரின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அத்துடன் அரசாங்க உத்தியோகத்தில் இல்லாதவர்களைக் கூடப் பொருளாதாரத் துறையிலோ, வேறு துறையிலோ அவர்கள் நிபுணர்கள் என்ற காரணத்திற்காக நிர்வாக சபையின் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் ஏற்பட்டது. இந்தப் புதிய அமைப்பின்படி நிர்வாக சபையில் கவர்னர் ஜெனரலைத்தவிரச் சட்ட அங்கத்தினரும், இராணுவ அங்கத்தினரும் இன்னும் மூன்று அங்கத்தினரும் இருந்தார்கள். சுதேச ஸம்ஸ்தானங்களின் விஷயங்களைக் கவனித்த "அரசியல் இலாக்கா" கவர்னர் ஜெனரலிடம் ஒப்புவிக்கப்பட்டது. சட்ட அங்கத்தினர் பதவிக்கு ஓர் ஆங்கில பாரிஸ்டரை நியமிக்கலாம் என்றும், இராணுவ அங்கத்

தினர் பதவிக்குச் சைனியத்திலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் ஏற்பட்டது. மீதியிருந்த மூன்று அங்கத்தினர்களில் இருவர் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும், ஒருவர் ஏதாவது ஒரு துறையில் நிபுணராகவும் இருக்கலாம். அல்லது மூவரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாவே இருக்கலாம். அரசியல் இலாக்கா, சட்ட இலாக்கா, இராணுவ இலாக்கா ஆகியவற்றைத் தவிர மற்ற இலாக்காக்கள் எல்லாம் இந்த மூன்று அங்கத்தினர்களிடம் பிரித்துக் கொடுக்கப்பட்டன. தலைமைச் சேனாதிபதி நிர்வாக சபையின் அங்கத்தினனாக இருந்தாலும், அவனிடம் எந்த இலாக்காவும் ஒப்புவிக்கப்படவில்லை. அத்தியாவசியமான சமயங்களில் நிர்வாக சபையின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையாருடைய முடிவை நிராகரிப்பதற்கு கவர்னர் ஜெனரலுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால், அந்த அதிகாரம் வெகு அருமையாகத்தான் உபயோகிக்கப்பட்டது.

மேலே கூறிய மாறுதல்களெல்லாம் அவசியமானவைதாம். இந்திய அரசியல் கம்பனி அதிகாரிகளின் கையிலிருந்த பொழுது பார்லிமெண்டு அவ்வப்போது இந்திய விவகாரங்களைப்பற்றி விசாரணை செய்து அவசியமான ஆலோசனைகளைக் கூறிவந்ததால் இந்திய அரசியலை நடத்திய உத்தியோகஸ்தர்கள் தங்கள் வேலையில் சுறுசுறுப்பும், உற்சாகமும் உடையவர்களாக இருந்தார்கள். இப்பொழுதோ வெனில் இந்திய அரசியல் நிர்வாகம் இந்திய மந்திரியின் கையில் ஒப்படைக்கப்பட்டதால் அவ்வப்போது இந்திய விவகாரங்களில் ஆலோசனைகளைக் கூறி அதிகாரிகளை ஊக்குவிப்பதற்கு வழியில்லாமல் போய்விட்டது. இந்தியா மந்திரி பல மந்திரிகளில் ஒருவனாக இருந்தான். ஆகவே பார்லிமெண்டின் கவனமும் ஆங்கில மக்களின் கவனமும் தனிப்பட்ட முறையில் இந்திய விவகாரங்களின்மீது திரும்புவதற்கு வழியில்லாமல் போய்விட்டது. எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தைத் தாக்குவதற்கு மற்ற விஷயங்களைப்போல் இந்திய அரசியல் விஷயத்தையும் ஒரு கருவியாக வைத்துக் கொண்டார்களே ஒழிய உண்மையில் அதைப்பற்றி அதிக அக்கரை காட்டவில்லை. அரசாங்கத்தை ஆதரித்தவர்கள் இந்திய விவகாரங்களைப் பற்றிப் பேசாமலே இருந்து விடுவார்கள். இந்தியாவின் விஷயத்தில் உண்மையான அக்கரையுடையவர்கள் ஒரு சிலர் பார்லிமெண்டில் இருந்தார்கள் எனினும், அவர்களுக்கு அதிக செல்வாக்கு இல்லை. இவ்வாறு இந்திய அரசியலை நடத்திவந்த அதிகாரவர்க்கத்தினரைத் தவிர மற்ற ஆங்கிலப் பொதுமக்கள் இந்திய

விவகாரத்தில் கவனத்தைச் செலுத்தவில்லை. இது மேலே கூறிய மாறுதல்களால் ஏற்பட்ட எதிர்பாராத விளைவு.

இந்த நிலையில் அரசியல் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் பொறுப்பை வகித்த இந்தியா மந்திரி இந்தியாவுக்கு வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வதில் ஆர்வம் உடையவனாக இருப்பானென்று எதிர்பார்க்க முடியாது. அவனுக்கு ஆலோசனைகளைக் கூறுவதற்காக ஏற்பட்ட இந்தியாக் கவுன்ஸிலும் அவனுடைய ஆர்வத்தை அதிகரிப்பதற்கு பதிலாகக் குறைக்கக் கூடிய நிலைமையிலேயே இருந்தது. அந்தக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களிற் பெரும்பான்மையானவர்கள் இந்தியாவிலிருந்து அனுபவம் பெற்றவர்களாக இருந்தார்கள். எனினும், அவர்கள் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக அங்கத்தினர் பதவி வகித்தார்களாதலால் அவ்வப்போது இந்தியாவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவாறு ஆலோசனைகளைக் கூறுவதற்கு அவர்களால் முடியாது. இந்திய அரசாங்கத்தின் செலவுகளைப்பற்றிய விஷயங்களிலும் அந்தக் கவுன்ஸிலுக்கு மிகுந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த அதிகாரத்தை அங்கத்தினர்கள் உபயோகித்த விதத்தால் அவசியமான பெரிய திட்டங்களும் சீர்திருத்தங்களும் விரைவில் ஏற்படுவதற்குப் பதிலாக எந்த விஷயத்திலும் காலதாமதமே ஏற்பட்டது.

இந்தியாவிலும் பொதுஜன அபிப்பிராயம் 1880-ஆம் ஆண்டுக்குப் பின்னர்த்தான் கொஞ்சம் கொஞ்சமாக உருப்பெற ஆரம்பித்தது. இந்தியப் பத்திரிகைகளிலும் அரசியலைப்பற்றி உருப்படியான ஆலோசனைகள் இடம்பெறவில்லை. அதற்குப் பதிலாக அவைகள் அரசாங்கத்தை ஒரேயடியாகக் கண்டித்ததோடு சில சமயங்களில் கேவலான முறையில் தாக்கிப் பேசின. அதனால் ஆங்கில வாசகர்களில் பெரும்பான்மையோர் இந்தியப் பத்திரிகைகளைப் படிக்கவில்லை. இராஜப்பிரதிநிதி ஒருவன் மாத்திரம் விருப்பு வெறுப்பு அற்ற முறையில் இந்திய அரசியல் நிர்வாகத்தைக் கவனித்துத் தகுந்த ஆலோசனைகளைக் கூறும் நிலைமையிலிருந்தான். அரசியல் நிர்வாகத்தைக் கூர்ந்து கவனித்து, உத்தியோகஸ்தர்கள் ஒவ்வாத முறைகளைக் கையாளும்போது அவற்றில் தலையிட்டு, தகுந்த முறைகளைக் கையாளும்படி ராஜப்பிரதிநிதி செய்ய முடியும் என்ற விஷயத்தை டபரின் பிரபுவின் செயல்களால் அறியலாம். ஆனால், மற்ற ராஜப்பிரதிநிதிகள் அவ்

வாறு நடக்கவில்லை. ஆடம்பர வாழ்க்கையிலும், அதிகார வர்க்கத்தினரின் பரம்பரை முறைகளிலும் அவர்கள் மூழ்கிக் கிடந்தார்கள். மேலும் சூழ்நிலையும் ராஜப்பிரதிநிதிகள் இந்திய மக்களின் உண்மை நிலையையும், அபிப்பிராயங்களையும், அறிந்து கொள்வதற்கு ஏற்றதாக இல்லை. 1864-ஆம் ஆண்டிலிருந்து சிம்லா இந்திய அரசாங்கத்தின் கோடைகாலத் தலைநகராயிற்று. அப்போது ராஜப்பிரதிநிதி உத்தியோகஸ்தர்களைத் தவிர மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வழியில்லை. குளிர் காலத் தலைநகராகிய கல்கத்தாவிலும் ராஜப்பிரதிநிதிக்கு இந்தியர்களைவிட ஆங்கிலேயர்களிடந்தான் அதிகத் தொடர்பு ஏற்பட்டது. ராஜப்பிரதிநிதி அவ்வப்போது செய்த சுற்றுப் பிரயாணங்களில்தான் இந்திய மக்களின் வாழ்க்கை முறைகளையும் அபிப்பிராயங்களையும் ஓரளவு நேரடியாகத் தெரிந்துகொள்ள முடியும். மேலே கூறிய விஷயங்களை நன்றாக மனத்தில் பதிய வைத்துக் கொண்டால்தான் அடுத்த அரை நூற்றாண்டு வரலாற்றைச் சரியாக உணர்ந்துகொள்ள முடியும். அந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் இந்திய அரசியல் நிர்வாகத்தை நடத்திய ஆங்கில உத்தியோகஸ்தர்கள் மிகுந்த திறமையும் உயர்ந்த நோக்கமும் கொண்டவர்கள். இந்திய மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்பி அவர்கள் செய்த காரியங்களில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றார்கள் எனினும், இந்திய அரசியலை இந்தியர்களே நடத்தவேண்டும் என்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவில் வளர்ந்துகொண்டு வந்தது என்ற விஷயத்தை ஆங்கில உத்தியோகஸ்தர்கள் விரைவில் உணர்ந்துகொள்ளவில்லை.

அதிகாரம்—44

பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாறுதல்கள் 1860 - 1880

இராஜப்பிரதிநிதிகள்	கானிங்கு பிரபு	1856—1862
	எல்ஜின் பிரபு	1862—1863
	ஸர் ஜான் லாரன்ஸ்	1864—1869
	மேயோ பிரபு	1869—1872
	நார்த்து புருக்கு பிரபு	1872—1876
	லிட்டன் பிரபு	1876—1880

சிப்பாய்க் கலகத்திற்குப் பின் 20-ஆண்டுக் காலத்தில் பொருளாதாரத் துறையிலும் கலாசாரத் துறையிலும் பல மாறுதல்களேற்பட்டன. அந்த மாறுதல்களின் பயனாக நவீன இந்தியா உருவாயிற்று. ஆகவே, அந்த இருபது ஆண்டுக் காலத்தைத் தற்கால இந்தியா சிறிது சிறிதாக உருப்பெற்ற காலம் என்று கூறலாம். அந்தக் காலத்தில் ஏற்பட்ட மாறுதல்கள் முதலில் பிரிட்டிஷ் மாகாணங்களில் தோன்றி மெதுவாக சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் பரவின. அந்தக் காலத்தில் சுதேச சமஸ்தானங்களில் இந்தியாவின் மற்ற பகுதிகளிலிருந்த மக்கள் பின்பற்றக் கூடிய முறையில் எந்த விதமான நிகழ்ச்சியும் ஏற்படவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும் வரையிலும் சுதேச ஸம்ஸ்தானங்கள் பிரிட்டிஷ் மாகாணங்களில் ஏற்பட்ட மாறுதல்களை மிக மெதுவாகப் பின்பற்றிக் கொண்டு வந்தன என்பதைத் தவிர அவற்றைப்பற்றி வேறொன்றும் கூறமுடியாது. இந்த அதிகாரத்தில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றி மாத்திரம் நாம் கூறப்போகிறோம். முதலில் இந்திய மார்க்கட்டுகளின் விஷயத்தில் ஏற்பட்ட மாறுதலைப் பார்ப்போம்.

1869-ஆம் ஆண்டில் சூயஸ் கால்வாய் செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைத்தது. அதனால் லண்டனுக்கும் பம்பாய்க்குமிடையில் சுமார் இருபத்தைந்து நாட்களில் வியாபாரக் கப்பல்கள் பிரயாணம் செய்வதற்கு வசதி ஏற்பட்டது. அதற்கு முன் அந்தப் பிரயாணத்திற்கு மூன்று மாதத்திற்குமேல் பிடித்தது. அதனால் இந்தியாவில் விளைந்த விவசாயப் பொருள்களைப் பெருவாரியான அளவில் ஐரோப்பாவுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கு வசதி ஏற்பட்டது. இந்தியத் துறைமுகங்கள் இங்கி

லாந்து, பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் மார்க்கட்டுகளோடு இணைக்கப்பட்டன. மேலும் இந்தியாவில் இருப்புப்பாதைகளும், தந்தித் தபால் ஆகிய சாதனங்களும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிக்கொண்டே வந்ததால் இந்தியாவில் ஆங்காங்கிருந்த பலவேறு மார்க்கட்டுகளுக்குப் பதிலாக இந்தியா முழுவதும் ஒரே மார்க்கட்டாக மாறியது. டல்ஹௌஸியின் காலத்தில் இந்தியாவின் ஒரு மூலையில் உணவுப்பொருள் உண்பாரற்றுக் கெட்டுப்போய்க் கொண்டிருந்த சமயத்தில் இன்னொரு மூலையில் உணவின்றி மக்கள் இறந்துகொண்டிருந்தார்கள் என்ற விஷயம் உண்மையாயிருந்தது. ஆனால் நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இருப்புப் பாதைகளின் வழியாக இந்தியாவின் பலவேறு பகுதிகளுக்கும் அவற்றின் தேவைக்கேற்றவாறு உணவுப் பொருள்கள் சாதாரண வியாபார முறையில் போய்ச் சேர்ந்தன. ஆகவே ரயில் பாதைகள் ஏற்படாத ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களில் முன்காலத்தில் ஏற்பட்டவற்றைப் போன்ற கொடிய பஞ்சங்கள் ஏற்பட முடியாது. இந்தியாவில் போதிய உணவுப் பொருள்கள் விளையாத காலத்திற்கூடப் பர்மா முதலிய தேசங்களிலிருந்து தேவையான உணவுப்பொருளை இந்தியாவுக்குக் கொண்டுவர முடியும்.

இந்தியாவில் நகரங்களில் வசித்த மக்கள் கிராமங்களில் வாழ்ந்த மக்களைவிடப் பொருளாதார நிலையில் உயர்ந்திருந்தார்கள் என்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். விவசாயப் பொருள்களைப் பெருவாரியான அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யமுடியும் என்ற நிலை ஏற்பட்டதும், நகர மக்களுக்கும் கிராம மக்களுக்கும் பொருளாதாரத் துறையிலிருந்த ஏற்றத் தாழ்வு குறையத் தொடங்கியது. ஆதியில் இந்தியாவுக்கு வந்த ஐரோப்பிய யாத்திரிகர்கள் இந்தியாவில் உணவுப்பொருளின் விலை மிகமிகக் குறைவாக இருந்தது என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அக்காலத்திய வரிவசூல் முறைதான் என்று கூறலாம். விளைவில் ஏறக்குறையப் பாதியை அறுவடையான சில வாரங்களில் விற்க முடிந்தால் தான் குடியானவர்கள் அரசாங்கத்திற்கு நிலவரியைச் செலுத்த முடியும். ஆகவே எல்லாக் குடியானவர்களும் உணவுப் பொருள்களை ஒரே சமயத்தில் விற்பதற்கு அவசரப்பட்டார்களாதலால் அவற்றின் விலை குறைவாக இருந்ததில் வியப்பு இல்லை. ஆனால் உணவுப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய நிலை ஏற்பட்டதும் ஏற்றுமதி வியாபாரிகள் அறுவடைக்

காலத்தில் ஏராளமான தானியங்களைக் குடியானவர்களிடமிருந்து வாங்க ஆரம்பித்தார்கள். ஆகவே தானியங்களின் விலை அதிக மாகக் குறைய முடியாது. அதனுல் உணவுப் பொருள்களின் விலையும் மற்றப் பொருள்களின் விலையும் உயர்ந்தன. நகரங்களில் குறிப்பிட்ட தொகைகளைச் சம்பளத்தின் மூலமாகவோ வேறு வகையிலோ வரும்படியாகப் பெற்றுவந்த மக்கள் விலைவாசி களின் உயர்வால் கஷ்டமடைந்தார்கள். ஆனுல் இந்த உயர்வு பிற்காலத்தில் விவசாயத்துறையில் ஏற்படவிருந்த துன்பங்களைச் சமாளிப்பதற்குப் பேருதவியாக இருந்தது என்பதை நாம் பின் னர்ப் பார்ப்போம். மேலும் பருவமழை மறுத்து விளைவு குறைந்த சமயங்களில் நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படாமல் தடுப்பதற் குப் புதிதாகத் தோன்றிய ஏற்றுமதி வியாபாரம் உதவி செய்தது. இந்திய மக்களின் தேவைக்கு அதிகமான உணவுப்பொருள் இந்தியாவில் உற்பத்தியானதால் அதில் ஒரு பகுதி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனுல் விளைவு குறைந்தகாலத்தில் உள்-நாட்டிலேயே உணவுப்பொருளுக்கு அதிகக் கிராக்கி ஏற்படுமாகை யால், அந்தச் சமயத்தில் உணவுப் பொருள்களின் உள்நாட்டு விலையும் உயரும். ஆகவே உணவுப் பொருள்கள் வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்குப் பதிலாக உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உபயோகப்படும். இந்திய வியாபாரிகளும் வட்டிக் கடைக்காரர்களும் புதிதாக ஏற்பட்ட போக்கு வரவு சாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் தொழிலைப் பெருக்கினுர்கள். தொழில் பெருகிற்றே யொழிய அதன் தன்மை மாறவில்லை. இதற்குள்ளாகப் பல ஆங்கிலேயர் கள் இந்தியாவில் புதிய வியாபார ஸ்தாபனங்களையும் பாங்கிகளை யும் ஏற்படுத்திவிட்டார்கள். ஆதியில் ராஜதானி நகரங்களில் இருந்த ஐரோப்பிய வியாபார ஸ்தாபனங்களெல்லாம் வட்டி வியா பாரத்தையும் மற்ற வியாபாரங்களையும் ஒருங்கே செய்பவை களாக இருந்தன. சூதாட்டத்தை ஒத்த துணிச்சல் வாணிப முறைகளால் அடிக்கடி பாங்கிகள் முறிந்து ஆங்கில உத்தியோ கஸ்தர்கள் பலருக்குப் பெரு நஷ்டம் ஏற்பட்டது. எனினும் நாட் டின் பொதுவான பொருளாதார நிலை இவற்ருல் பாதிக்கப்பட வில்லை. நாளடைவில் பாங்கிகள் தனியாகவும் வியாபார ஸ்தாப னங்கள் தனியாகவும் பிரிந்தன. மூன்று ராஜதானிகளிலும் ராஜதானிப் பாங்கிகள் நிறுவப்பட்டன. அவைகள் 1860-ஆம் ஆண்டுக்குள் நல்ல நிலையை அடைந்துவிட்டன. பம்பாய் ராஜ தானி பாங்கியின் மூலதனத்தில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியைப்

பார்ஸிகள் போட்டார்கள். மற்ற இரண்டு ராஜதானி பாங்கி களின் மூலதனம் முழுவதும் ஏறக்குறைய ஆங்கிலேயர்களா லேயே போடப்பட்டது. அவற்றின் நிர்வாகம் ஆங்கில முறையி லேயே இருந்ததோடு, நிர்வாகிகளும் ஆங்கிலேயராகவே இருந் தார்கள். அந்தப் பாங்கிகளின் கொடுக்கல் வாங்கல்கள் ராஜ தானி நகரங்களோடு நின்றுவிட்டன. மற்ற பகுதிகளிலிருந்த மக்கள் அவற்றுடன் வரவு செலவு செய்யவில்லை. மிக முக்கிய மான இந்திய வியாபாரிகள் மாத்திரம் தங்கள் உண்டிகளை அந்தப் பாங்கிகளுக்கு அனுப்பினார்கள். இந்தப் பாங்கிகளுக்கும் இந் திய முறையிலேயே நடந்த பழைய பாங்கிகளுக்கும் இந்த ஒரு தொடர்பைத் தவிர வேறு தொடர்பு ஏற்படவில்லை. 1860-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சட்டத்தின்படி வரையறுத்த பொறுப்புக் கொள்கை அங்கீகரிக்கப்பட்டது. அதனால் பாங்கி களின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தொடங்கியது. ஆனால், வெகுவிரைவில் பாங்கித் தொழிலுக்குப் பேராபத்து ஏற்பட்டது. அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்த சமயத் தில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏராளமான பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டதனால் பம்பாயிலிருந்த வியாபாரிகள் மிக அதிகமாக லாபமடைந்தார்கள். அப்பொழுது துணிச்சல் வாணிபம் தலைவிரித்தாடியது. பல புதிய பாங்கிகள் தோன் றின .ஆனால் 1865-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வியாபார மந்தத்தால் அவைகளெல்லாம் முறிந்துபோயின. அதன்பின்னர் இந்தியர் கள் சிறிது காலம் பாங்கித் தொழிலில் ஈடுபடவில்லை. ஆங் கிலேயர்கள்தாம் ஒரு சில புதிய பாங்கிகளை நிறுவினார்கள்.

சூயஸ் கால்வாய் வெட்டப்பட்ட பிறகு இந்தியாவில் ஐரோப்பியர்கள் செய்த வியாபாரம் மிக அதிகமாகப் பெருகிற்று. எனினும் குடியானவர்கள் தங்கள் தானியத்திற்கு மார்க்கட்டு நில வரப்படி சரியான விலைகளைப் பெற முடியவில்லை. அவர்கள் உணவுப் பொருள்களை விரைவில் விற்கவேண்டியதாக இருந்தது. அவற்றை வாங்கிய வியாபாரிகள் மார்க்கட்டு நிலவரத்திற்கு மிகக் குறைவான விலையைக் குடியானவர்களுக்குக் கொடுத்தார் கள். ஆகவே தானியங்களை வாங்கிய வியாபாரிகள் அவற்றின் விலையுயர்ந்த காலத்தில் அந்த உயர்வின் பெரும் பகுதியைத் தாங் களே அனுபவித்துக் கொண்டார்கள். அதனால், மார்க்கட்டு நில- வரம் உயர்ந்தாலும் குறைந்தாலும் குடியானவர்களுக்குக் குறைந்த விலைதான் கொடுக்கப்பட்டது. இருப்புப் பாதைகள் ஏற்பட்டவுடன் இந்த நிலை மாறிற்று. இந்தியாவின் பல பகுதி

களுக்கும் ஐரோப்பிய வியாபாரிகள் சென்று மார்க்கட்டு நிலவரப் படி நியாயமான விலைக்குத் தானியங்களை வாங்கினார்கள். மேலும் வாங்கின தானியங்களுக்கு அவர்கள் ரொக்கமாகப் பணம் கொடுத்ததோடு சரியான எடைகளையும் உபயோகித்தார் கள். இத்தகைய நேர்மையான புதிய முறைகளால் குடியான வர்களூ நல்ல லாபம் அடைந்தார்கள் உள்நாட்டு வியாபாரிகளி-டம் கடன்வாங்கியிருந்த குடியானவர்கள் மாத்திரம் அந்த வியா பாரிகளுக்கே தங்கள் தானியங்களை விற்கவேண்டியிருந்ததால் அதிக மாக லாபம் அடையவில்லை எனினும், அறுவடைக் காலத்தில் தானியங்களின் விலைவாசிகள் முன்போல மிகக் குறைவாக இல் லாமல் கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்துகொண்டு வந்ததால் நாடு முழுவதும் இருந்த குடியானவர்கள் ஓரளவு லாபம் அடைந்தார் கள் என்று பொதுவாகக் கூறலாம்.

இனி, கைத்தொழிலில் ஏற்பட்ட மாறுதல்களைப்பற்றிப் படிப்போம். தொழிற்சாலைகள் பெருகியபோதிலும் தனித்தனி யாகத் தங்கள் தொழில்களில் ஈடுபட்ட நெசவாளிகளும் மற்றத் தொழிலாளிகளும் கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். இறக்குமதியான பொருள்களின்மீது விதிக்கப்பட்ட வரி நூற்-றுக்கு ஐந்து முதல் பத்து விகிதம் வரையில்தான் இருந்தது. இந்தக் குறைந்த வரியினால் தொழிலாளிகளுக்கு உண்மையான காப்பு ஏற்படவில்லை. ஐரோப்பியத் தொழிற்சாலைகளில் செய்யப்பட்ட பொருள்களோடு இந்தியத் தொழிலாளிகள் செய்த பொருள்கள் போட்டியிட முடியவில்லை. மேலே கூறிய குறைந்த இறக்குமதி வரியும் 1880-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரத்து செய்யப்பட்டது. அலங்காரப் பொருள்களைச் செய்யும் நுணுக்கமான வேலைகளில் ஈடுபட்ட தொழிலாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இந்தியர்கள் வெளிநாட்டுப் பொருள் களையே விரும்பினார்களே யன்றி உள் நாட்டில் உற்பத்தியான மிக நல்ல பொருள்களையும் விரும்பவில்லை. இவ்வாறு இந்தியர் களின் ரசிகத்தன்மை மிகக் கேவலமான நிலைமையை அடைந்து விட்டது. ஆங்கில உத்யோகஸ்தர்களில் ஒரு சிலர் காட்டிய ஆர்வத்தால்தான் சில இந்தியத் தொழில்கள் உயிரோடு இருந்தன.

சிப்பாய்க் கலகம் ஏற்படுவதற்கு முன்னரே வங்காளத்தி லிருந்த நிலக்கரிச் சுரங்கங்கள் இருப்புப்பாதைகளால் இணைக் கப்பட்டுவிட்டன. அதனால் சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர் நிலக்கரிச் சுரங்கங்களும் தொழிற்சாலைகளும் பெருகின,

1854-ஆம் ஆண்டில் கல்கத்தாவுக்கருகில் முதல் சணல் மில் நிறுவப்பட்டது. அதன்பின் பல சணல் மில்கள் விரைவில் தோன்றின. பம்பாயில் 1861-ஆம் ஆண்டில் பத்து நூல் மில்கள் இருந்தன. ஆனால் 1880-ஆம் ஆண்டுகளுக்குள் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல் மில்கள் அங்குத் தோன்றிவிட்டன. மேலும் அஹமதாபாத்திலும் (1861) கான்பூரிலும் (1869) சென்னையிலும் (1874) நாகபுரியிலும் (1877) நூல் மில்கள் ஏற்பட்டன. இந்த இடங்களிலும் வேறு பல இடங்களிலும் தோல், காகிதம், கம்பளி ஆடைகள் முதலிய பல பொருள்களைச் செய்யும் தொழிற்சாலைகளும் ஏற்பட்டன. ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் ஆரம்பத்தில் ஐரோப்பியர்களே ஈடுபட்டனர். ஆனால் அவர்கள் அடைந்த லாபத்தைக் கண்ட இந்தியர்களும் நாளடைவில் அந்தத் தொழில்களைச் செய்யத் தொடங்கினார்கள். இவ்வாறு தோன்றிய தொழிற்சாலைகளின் நிர்வாகம் வெகுநாள் வரையில் ஆங்கிலேயர் கையிலேயே இருந்தது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளின் மூலதனத்தின் பங்குகளை இந்தியர்கள் வாங்கும் பழக்கம் கொஞ்சங் கொஞ்சமாக வளர்ந்ததால் பல தொழிற்சாலைகள் இந்தியர்களுக்குச் சொந்தமாயின. பம்பாயில் ஏற்பட்ட நூல் மில்களில் பெரும்பாலானவை சிறிது காலம் பார்ஸிகளுக்கே சொந்தமாயிருந்தன. அவற்றின் நிர்வாகமும் அவர்கள் கையிலேயே இருந்தது. அதுபோலவே அஹமதாபாத்தில் ஏற்பட்ட பஞ்சாலைகள் இந்துக்களுடைய முயற்சியால் ஏற்பட்டவை. 1861-ஆம் ஆண்டில் ஏற்பட்ட தொழிற்சாலைச் சட்டத்தால் ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளைத் தொழிற்சாலையில் வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், இயந்திரங்களுக்கு வேலிபோட வேண்டுமென்றும் ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜனத்தொகை அதிகரித்துக் கொண்டே போனதால் விவசாயத்தையே தங்கள் தொழிலாகக் கொண்டிருந்த மக்களின் தொகையும் அதிகரித்தது. அவ்வளவு பேருக்கும் விவசாயத் துறையில் வேலை கிடைப்பது கடினம் என்ற நிலை ஏற்பட்ட சமயத்தில் இருப்புப் பாதைகளிலும் சுரங்கங்களிலும் தொழிற்சாலைகளிலும் பல மக்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது வரவேற்கத்தக்கதா யிருந்தது. முதல் ஜனத் தொகைக் கணக்கு 1881-ம் ஆண்டில்தான் எடுக்கப்பட்டதாகையால் அதற்கு முன்னால் ஜனத்தொகையைப் பற்றிய சரியான விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பிறப்பு விகிதம் உயர்வாக இருந்தது என்பதும், அதனால் ஜனத்தொகை

விரைவில் அதிகரித்துக் கொண்டே வந்தது என்பதும் நமக்கு நன்ருகத் தெரிந்த விஷயங்கள். பஞ்சமும், பிணியும், போரும் ஜனத்தொகையின் பெருக்கத்தை ஓரளவு தடை செய்தன. முன்னைய அதிகாரங்களில் போர்களையும் பஞ்சங்களையும் பற்றி வேண்டிய அளவு கூறியிருக்கிறோம். மலேரியாவும், காலராவும், வைசூரியும் பல நூற்ருண்டுகளாக இந்தியாவில் இருந்து வந்தன. அவற்ருேடு பிளேக்கும் அவ்வப்போது தோன்றி ஏராளமான மக்களின் சாவுக்குக் காரணமாகிப் பின்னர் மறைந்து போயிற்று. இந்த நோய்களின் தோற்றத்திற்குக் காரணங்களைப்பற்றிச் சென்ற அரை நூற்ருண்டுக் காலத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியின் பயனுக அளவுக்கு மிஞ்சிய ஜனநெருக்கந்தான் அவைகள் அதிகமாகப் பரவுவதற்குக் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மனிதனுல் ஏற்படும் போரும், இயற்கையால் ஏற்படும் பஞ்சமும், ஜனப் பெருக்கத்தாலேயே ஏற்படும் பிணியும் ஜனப் பெருக்கத்தைக் குறைக்கும் மூன்று காரணங்களாக இருக்கின்றன.

1860-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் உள்நாட்டுச் சண்டை ஏற்பட வழியில்லை. கொடிய நோய்களாலும் சமீப காலத்தில் அதிக மக்கள் சாகவில்லை. நாம் முன்னரே கூறியபடி சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் பஞ்சமும் ஏற்படவில்லை. அதனுல் ஜனத்தொகை மிக விரைவில் பெருகியிருக்கும். 1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்குமிடையில் வட இந்தியாவில் நிலவிய அமைதியால் பல மக்கள் பக்கத்து நாடுகளிலிருந்து அங்கு வந்து குடியேறினுர்கள். அதே சமயத்தில் தென் இந்தியாவிலிருந்து பல மக்கள் அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறினுர்கள். இந்தியாவிலிருந்து நெடுங்காலமாகவே பல மக்கள் இலங்கைக்குச் சென்று குடியேறுவது பழக்கமாயிருந்தது. 1852-ஆம் ஆண்டில் தென்பர்மா பிரிட்டிஷ் ஆட்சிக்குள் வந்ததும் அங்கும் இந்தியத் தொழிலாளிகள் சென்று குடியேறத் தொடங்கினுர்கள். இந்த இரண்டு நாடுகளுக்கும் சென்றவர்களைத் தவிர மற்றநாடுகளுக்குச் சென்றவர்கள் தாங்களாகவே செல்லவில்லை. அவர்கள் அடிமைகளாக விற்கப்பட்டவர்கள். இந்த அடிமை வியாபாரம் பதினுரும் நூற்ருண்டிலிருந்து நடந்துவந்தது என்பது நமக்கு நன்ருகத் தெரிகிறது. அதற்கு முன்னுலும் அந்த வியாபாரம் நடந்திருக்கக் கூடும். அடிமைகள் இந்திய வியாபாரிகளால் கடற்கரைக்குக் கொண்டு வரப்பட்டதும், அங்கிருந்து அவர்கள் கப்பல்களில் ஏற்றப்பட்டுப் பல வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனர். வெளிநாடு

களுக்குத் தேவையான அளவு அடிமைகள் அனுப்பப்பட்டார்க ளென்றும் அடிக்கடி ஏற்பட்ட பஞ்சங்கள் ஒவ்வொன்றிற்கும் பின்னர்ச் சில ஆண்டுகள் அடிமை வியாபாரம் ஏறக்குறைய நின்று விடுவது வழக்கம் என்றும் டச்சுக்காரர்கள் எழுதி வைத்திருக்கும் குறிப்புக்கள் மூலம் அறிகிறோம். கம்பனியின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து அடிமைகளை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று 1789-ஆம் ஆண்டில் காரன்வாலிஸ் உத்தரவிட்டான். எனினும் பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான துறைமுகங்களின் வழி யாக இன்னும் சிறிதுகாலம் அடிமை வியாபாரம் நடந்துகொண்டு வந்தது. முடிவில் அடிமை வியாபாரம் மறைந்து அதற்குப் பதிலாக ஒப்பந்த வெளியேற்றம் வழக்கத்திற்கு வந்தது.

இவ்வாறு அடிமை வியாபாரம் கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியதும் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற் பகுதியில் சுதந்திரத் தொழிலாளிகளுக்கு உலகத்தின் பலவேறு பாகங்களிலும் தேவை ஏற்பட்டது; அந்த நாடுகளெல்லாம் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்தியாவை எதிர்பார்த்தன. இந்தியாவிலும் பல கண்காணிகள் தோன்றிக் கூலி ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் வேலையில் ஈடுபட்ட னர். வெளிநாடுகளுக்குச் செல்ல இசைந்தவர்களுக்கு அங்குப் போய்ச் சேர்வதற்கு வேண்டிய செலவுக்குப் பணம் கொடுக்கப் பட்டது. அதற்குப் பதிலாக அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற் குத் தங்களுக்குப் பணம் கொடுத்த முதலாளிகள் கீழ் வேலை செய்ய உடன்பட்டார்கள். ஒப்பந்த காலத்தின் முடிவில் அவர் கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வருவதற்கு வேண்டிய வசதியும் இன்னும் சில சௌகரியங்களும் பெற்றுர்கள். இவ்வாறு ஏராளமான இந்திய மக்கள் மரீஷியஸ், நேட்டால், பிரிட்டிஷ் கயானு, டிரினிடாட் முதலிய தீவுகளுக்குச் சென்றுர்கள். இந்த ஒப்பந்த வெளியேற்ற முறையால் பல தீமைகளும் ஒரு சில நன் மைகளும் ஏற்பட்டன. ஒப்பந்த வெளியேற்ற முறைக்கும் அடிமை வியாபாரத்திற்கும் அதிக வேறுபாடு இல்லை. தங்களால் சேர்க்கப்பட்ட கூலி ஆட்களின் தொகைக்குத் தக்கவாறு அதிக மாகவோ குறைவாகவோ லாபம் அடைந்த கண்காணிகள் அதிக மான மக்களை ஒப்பந்தம் செய்வதற்குப் பலவகையிலும் முயன் றுர்கள். கண்காணிகள் கல்வியறிவற்ற ஆண்களுக்கும், பெண் களுக்கும், பலவாறு ஆசை வார்த்தை கூறி, அவர்களுக்குக் கடன் கொடுத்துத் தமக்குக் கட்டுப்படும்படி செய்து, அவர்களைத் துறை முகங்களுக்கு விரைவாக அழைத்துச் செல்வார்கள். அங்குக் காத்

துக்கொண்டிருந்த ஏற்றுமதி ஏஜண்டுகள் தங்களுடைய லாபத்தி லேயே கண்ணும் கருத்துமா யிருந்தார்களாதலால் கூலி ஆட்க ளுக்கு மறுபடியும் யோசிப்பதற்கு அவகாசம் கொடுக்காமல் அவர் களைத் துரிதமாகக் கப்பலில் ஏற்றி அயல் நாடுகளுக்கு அனுப்பி விடுவார்கள். எனினும் இந்த முறையால் அளவுக்கு மிஞ்சி அதி கரித்த ஜனத்தொகையில் ஒரு பகுதியினர் வெளி நாடுகளுக்குச் சென்று பிழைப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவ்வாறு வெளி நாடுகளுக்குச் சென்றவர்களில் பலர் பொருளாதாரத் துறையில் உயர்வடைந்தார்கள். உள்ளூரிலேயே இருந்திருந்தால் அவர்கள் அவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்க முடியாது. இந்த முறையால் ஏற்படக்கூடிய தீமைகளைத் தடுப்பதற்கு இந்திய அர சாங்கம் முயன்றது. பத்தொன்பதாம் நூற்றுண்டு முழுவதும் இந்த முறை வழக்கிலிருந்தது. அடிமை வியாபாரத்தை விட இது நல்ல முறைதான் என்றுலும் இதனுல் ஏற்பட்ட விளைவுகள் முழுவதும் திருப்திகரமானவை என்று சொல்லமுடியாது.

எது எப்படியாயினும், குடியேற்றமும் குடியிறக்கமும் இந்தி யாவின் ஜனத்தொகையை அதிகமாகப் பெருக்குவதற்கும் குறைப் பதற்கும் ஏற்ற அளவில் நடைபெறவில்லை. ஆகவே இயற்கை யாகப் பெருகிக்கொண்டே சென்ற மக்கள் அனைவருக்கும் பயிர்த் தொழிலே முக்கியமான பிழைக்கும் வழியாக இருந்தது. மேலும் வெளி நாட்டுச் சரக்குகளின் போட்டியால் வேலையை இழந்த நெசவாளிகளும் மற்றத் தொழிலாளிகளும் நிலத்தையே நம்பி வாழவேண்டியதாயிற்று. அதுவுமன்றி வேலையிலிருந்து நீக்கப் பட்ட போர்வீரர்களும், சட்டத்தின் ஆட்சி நிலையாக ஏற்பட்ட தால் கொள்ளையடித்தல் முதலிய தீத்தொழில்களில் ஈடுபட முடி யாத மக்களும் விவசாயத்தையே நம்பி வாழவேண்டியதாயிற்று. அதனுல் பயிர் செய்யக்கூடிய நிலங்களுக்கு மிகுந்த கிராக்கி ஏற் பட்டது. குடியானவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டுக் கொண்டு அதிகமான குத்தகை கொடுப்பதாக நிலச்சுவான்தார் களுக்குச் சொன்னுர்கள். அதிக லாபமடைய விரும்பிய நிலச்-சுவான்தார்களும் தங்கள் நிலங்களில் ஏற்கெனவே பயிர் செய்து வந்த குடியானவர்களை வெளியேற்றிவிட்டு உயர்ந்த குத்தகை கொடுப்பதாக ஒப்புக்கொண்ட குடியானவர்களுக்குத் தங்கள் நிலங்களைக் கொடுத்தார்கள். பின்னர் வாக்களித்தபடி உயர்ந்த குத்தகை கொடுப்பதற்கு முடியாமல் குடியானவர்கள் திண்டாடி னுர்கள். ஆகவே நிலச்சுவான்தார்கள் அவர்களை வெளியேற்றி விட்டு வேறு குடியானவர்களுக்குத் தங்கள் நிலங்களைக் கொடுத்

தார்கள். இந்த நிலை ஆண்டுதோறும் மாறி மாறி வந்துகொண்டேயிருந்ததால் விவசாயத்துறையில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. இந்த ஆபத்து முதலில் வங்காளத்தில் தோன்றி, பின்னர்க் கொஞ்சம் கொஞ்சமாக வட இந்தியாவில் ஜமீன்தாரி முறை வழக்கிலிருந்த பகுதிகளுக்கெல்லாம் பரவியது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் முயற்சி 1859-ல் செய்யப்பட்டது. அந்த ஆண்டில் நிறைவேறிய சட்டத்தின்படி ஜமீன்தார்கள் தங்கள் நிலங்களில் பயிர்செய்த குடியானவர்களைத் தங்கள் இஷ்டம்போல் வெளியேற்றக்கூடாதென்றும், தக்க காரணமில்லாமல் குத்தகையை உயர்த்தக்கூடாதென்றும் ஏற்பட்டது.

மேலே கூறிய பொதுவான சட்டத்தைத் தவிர அந்தந்த மாகாணத்திற்கேற்றவாறு தனித்தனிச் சட்டங்களும் ஏற்பட்டன. அவற்றில் பல சிக்கலான அம்சங்கள் இருந்ததால் அவற்றை எல்லாம் அமுல் நடத்துவது அரசாங்க அதிகாரிகளுக்கு மிகுந்த கஷ்டமாக இருந்தது. அவற்றின் பயனாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையிலும் விலை வாசிகளின் உயர்வைவிடக் குத்தகையின் உயர்வு குறைவாகவே இருந்தது என்று பொதுவாகக் கூறலாம். அதனால் குடியானவர்கள் ஓரளவு லாபம் அடைந்தார்கள். இவ்வாறு அதிகப்படியாகக் கிடைத்த வருமானத்தைக் குடியானவர்கள் எவ்வாறு பயன்படுத்திக்கொண்டார்கள் என்று கூறுவது எளிதான காரியமன்று. சிலர் தங்கள் நிலங்களை அபிவிருத்தி செய்தார்கள். சிலர் தங்கள் வாழ்க்கைத் தரத்தைச் சிறிது உயர்த்திக்கொண்டார்கள். சிலர் மிகுதியா யிருந்த பணத்தைப் புதைத்து வைத்தார்கள். சிலர் ஆடம்பரமான கலியாணங்களுக்கும் கருமாதிகளுக்கும் தங்கள் பணத்தைச் செலவிட்டார்கள். சிலர் உழைப்பைக் குறைத்து ஓய்வை அதிகப்படுத்திக்கொண்டார்கள். குடியானவர்கள் தங்கள் பணத்தை எவ்வாறு செலவழித்தாலும், அவர்களிடம் செலவழிப்பதற்குப் பணம் இருந்தது என்பதுதான் இங்குக் குறிப்பிடத்தக்க விஷயம். இந்த நிலைக்கு முக்கிய காரணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உணவுப் பொருள்களின் விலையில் ஏற்பட்ட உயர்வுதான் காரணம் என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

சில குடியானவர்கள் உழைப்பைக் குறைத்து ஓய்வை அதிகப்படுத்திக்கொண்டார்கள் என்று முன்னர்க் கூறியதைப் பற்றிச் சில சொற்கள் எழுதுவது அவசியம். அத்தகைய குடியானவர்கள் தாங்கள் பயிர்செய்வதற்காக நிலச்சுவான்தார்களிடமிருந்து பெற்ற நிலங்களின் ஒரு பகுதியை வேறு குடியானவர்களுக்கு

உயர்ந்த குத்தகைக்கு விட்டார்கள். அதே நிலங்களுக்காக நிலச்சுவான்தார்களுக்குக் கொடுத்த குத்தகை அவர்கள் குடியானவர்களிடமிருந்து வசூலித்த குத்தகையைவிட மிகக் குறைவாக இருந்தது. இவ்வாறு அவர்கள் அடைந்த லாபத்தை வைத்துக்கொண்டு உழைக்காமல் வாழ்க்கையை நடத்தத் தொடங்கினார்கள். முன்னர் நிலச்சுவான்தார்கள் குடியானவர்களிடமிருந்து அநியாயமான குத்தகையை வசூலித்தார்கள். இப்பொழுதோவெனில் குடியானவர்களில் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினரிடமிருந்து அநியாயக் குத்தகையை வசூலித்தார்கள். ஆகவே, பழைய தீமைகள் புதிய உருவிற் தோன்றின. நிலச்சுவான்தார்கள் கொடுமைகளினின்று குடியானவர்களைக் காப்பாற்றுவதற்காகச் சட்டம் இயற்றிய அரசாங்கத்தினர் இப்பொழுது பெரிய குடியானவர்களிடமிருந்து சிறிய குடியானவர்களைக் காப்பாற்றுவதற்குச் சட்டம் இயற்றவேண்டியதாயிற்று. இவ்வாறு இயற்றப்பட்ட சில சட்டங்கள் நிலச்சுவான்தார்களிடமிருந்து பயிர் செய்வதற்காகப் பெற்ற நிலங்களைக் குடியானவர்களுக்குக் குத்தகைக்கு விடுவதைத் தடுத்தன. இன்னும் சில சட்டங்கள் சிறிய குடியானவர்களிடமிருந்து பெரிய குடியானவர்கள் அநியாயமான குத்தகை வசூலிப்பதைத் தடுத்தன.

இதுவரையில் ஜமீன்தார்களுக்குக் குத்தகை கொடுத்து வந்த குடியானவர்களைப்பற்றிக் கூறினோம். தென் இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் ரயத்துவாரி முறை அமுலில் இருந்ததால் குடியானவர்கள் அரசாங்கத்திற்கு நேரடியாக வரி செலுத்துபவர்களாக இருந்தார்கள். வரிச்சுமை அவ்வளவு கடுமையாக இல்லாததாலும், உணவுப் பொருள்களின் விலை உயர்ந்துகொண்டே சென்றதாலும் குடியானவர்களுடைய வருமானம் அதிகரித்தது. அதனால் பெருவாரியான குடியானவர்கள் தங்கள் நிலங்களை நிலம் இல்லாதவர்களுக்குக் குத்தகைக்கு விட்டு விட்டு அதனால் வந்த வருமானத்தில் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரியை செலுத்திய பிறகு எஞ்சி நின்ற பணத்தை வைத்துக்கொண்டு உழைக்காமல் வாழத் தொடங்கினார்கள். ஆகவே இவர்களும் ஓரளவு ஜமீன்தார்களின் நிலையை அடைந்தார்கள்.

தென் இந்திய விவசாயிகள் அதிகமாகக் கடன் வாங்கி இருந்தார்கள். அவர்களுக்குக் கடன் கொடுத்திருந்தவர்கள் சாதாரணமாக வட்டிக் கடைத்தொழிலோடு தானிய வியாபாரமும் செய்பவர்களாக இருந்தார்கள். இத்தகைய வட்டிக் கடைக்காரர்களின்

நிலே மொகலாய ஆட்சிக்காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதைப்பற்றி நமக்கு நிச்சயமாகத் தெரியாது. அந்தக் காலத்தில் நிலவரி மிக அதிகமாக இருந்ததால் நிலங்களின்மீது கடன் கொடுப்பது அவ்வளவாக லாபகரமான தொழிலாக இருந்திருக்க முடியாது. மேலும், அந்தக்காலத்தில் நியாய பரிபாலனம் செய்த உத்தியோகஸ்தர்கள் சாதாரணமாகக் குடியானவர்களுக்குச் சாதகமாகவும் அவர்களுக்குக் கடன் கொடுத்திருந்தவர்களுக்குப் பாதகமாகவும் தீர்ப்புக் கூறுவது வழக்கம். ஆதலால், அந்தக் காலத்தில் குடியானவர்கள் தங்கள் நிலங்களை அடமானமாக வைத்து அதிகமாகக் கடன் வாங்கியிருக்க முடியாது. ஆனால் விவசாயத் துறையில் பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட மாறுதல்களால் நிலத்தின்மீது கடன் கொடுப்பது லாபகரமான தொழிலாயிற்று. புதிய நீதி ஸ்தலங்களும் பாரபட்சமின்றிச் சட்டப்படி நீதி வழங்கின. வட இந்தியாவில் சில பகுதிகளில் ஒவ்வொரு கிராமத்திலிருந்த குடியானவர்களும் ஒன்ருகச் சேர்ந்து அரசாங்கத்திற்கு நேரடியாக நிலவரி செலுத்திஞர்களென்றும், தென் இந்தியாவின் பெரும் பகுதிகளில் ஒவ்வொரு குடியானவனும் தனித்தனியாக அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்திஞனென்றும் கூறினேம். இவ்வாறு நேரடியாக வரி செலுத்திய குடியானவர்கள் தங்கள் நிலங்களை விற்கவும் அடகுவைக்கவும் உரிமை பெற்றிருந்தார்கள். ஆனல் அவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருந்ததால் அவர்களுக்குக் கடன் கொடுத்தவர்கள் அவர்களைப் பெரிதும் ஏமாற்றிஞர்கள். கடன் கொடுத்தவர்கள் தயாரித்த பத்திரங்கள் எத்தகைய அநியாயமான ஷரத்துக்களையுடையவைகளாக இருந்தாலும், அவை சட்டப்படி செல்லத்தக்கவையாக இருந்தபடியால் நீதி ஸ்தலங்களில் குடியானவர்களுக்குப் பாதகமாகவே தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதனுல் கடனில் மூழ்கிய குடியானவர்கள் தங்கள் நிலங்களை இழந்து துன்பமடைந்தார்கள். சில பகுதிகளில் இந்தத் தொல்லைகளைத் தாங்க முடியாத குடியானவர்கள் கலகம் செய்யத்தொடங்கிஞர்கள். பம்பாயின் சில பகுதிகளில் நிலைமை மிக மோசமாகி விட்டது. அதனுல் அந்தத் தீமைகளை ஓரளவு குறைக்கும் வகையில் சில சட்டங்கள் இயற்றப்பட்டன. எனினும் குடியானவர்களுடைய கடன் தொல்லையை நீக்குவதற்கான பொதுவான ஏற்பாடுகள் இருபதாம் நூற்ருண்டில்தான் செய்யப்பட்டன.

குடியானவர்கள் மாத்திரமின்றி நிலச்சுவான்தார்களும் கடன் வாங்கத் தொடங்கிஞர்கள். அவ்வாறு வாங்கிய கடன்களைத் தங்களுடைய நிலங்களை யபிவிருத்தி செய்வதற்குப் பயன்படுத்தாமல்

தங்களுடைய சொந்தச் செலவுக்கு உபயோகப்படுத்தினார்கள். பல தலைவர்களும், போர்வீரர்களும் பிரிட்டிஷ் ஆட்சியில் நிலச்சுவான்தார்களாக மாறினார்களாதலால் அத்தகையவர்கள் தங்களுடைய நிலங்களை அபிவிருத்தி செய்வதிலும், தங்களுடைய குடியானவர்களுக்கு நன்மை புரிவதிலும், விளைவு குறைந்த காலத்தில் உபயோகிப்பதற்குப் பொருள் சேர்த்து வைப்பதிலும் கவனஞ் செலுத்தமாட்டார்கள். மிதமின்றிச் செலவு செய்தல் அவர்களிடையே சாதாரணமாகக் காணப்பட்ட விஷயம். ஆதலால், அவர்கள் கடனில் ஆழ்ந்தார்கள். முடிவில் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாததால் அவர்களுடைய நிலங்களெல்லாம் வட்டிக் கடைக்காரர்களுக்குச் சொந்தமாயின. வட்டிக் கடைக்காரர்களும் பயிர்த்தொழிலில் அக்கரையும் பயிற்சியும் அற்றவர்களாகையால் அவர்கள் கைக்கு வந்த நிலங்கள் அபிவிருத்தியடையவில்லை. மேலும் அவற்றில் வேலைசெய்த குடியானவர்களுக்கும் நன்மையேற்படவில்லை. ஆகவே, இந்த நிலையைச் சீர்திருத்துவது அதிகாரிகளின் கடமையாயிற்று. வரவுக்கு மிஞ்சிய செலவினால் கடனில் ஆழ்ந்த நிலச்சுவான்தாரர்களுடைய சொத்துக்களை நிர்வகிக்கும் பொறுப்பு வார்டு நிர்வாக சபைக்கு விடப்பட்டது. வார்டு நிர்வாக சபையின் மேற்பார்வையில் பல நிலச்சுவான்தார்களின் கடன்கள் கட்டப்பட்டு அவர்களின் சொத்தும் காப்பாற்றப்பட்டது. இப்பொழுது இந்தியாவிலிருக்கும் பெரிய நிலச்சுவான்தார்களில் பலருடைய சொத்து வார்டு நிர்வாக சபையின் மேற் பார்வையில்லாவிட்டால் எப்பொழுதோ அழிந்து போயிருக்கும்,

குடியானவர்களுடைய நிலங்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் பல பாகங்களாகப் பிரிக்கப்பட்டுக்கொண்டே சென்றன. இந்துச் சட்டப்படியும் முஸ்லிம் சட்டப்படியும் ஒரு குடியானவன் இறந்தால் அவனுடைய வாரிசுகள் அவனுடைய நிலத்தைப் பங்கு போட்டுக்கொள்வது பழக்கம். மொகலாயர் ஆட்சிக் காலத்தில் பயிர் செய்வதற்குத் தகுதியான நில்ங்கள் அதிகமாக இருந்ததால் குடியானவர்கள் ஓரிடத்தை விட்டு இன்னோரிடத்துக்குச் சென்று பயிர் செய்ய முடியும். ஆதலால், ஏற்கெனவேயிருந்த நிலங்களைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கவேண்டிய அவசியம் அப்பொழுது இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டிலோவெனில் ஜனத்தொகைப் பெருக்கத்தால் பயிர் செய்யக்கூடிய எல்லா நிலங்களும் ஏற்கெனவே பயிர் செய்யப்பட்டு வந்ததால் புதிய நிலங்களுக்குச் சென்று குடியானவர்கள் பயிர்செய்ய முடிய

வில்லை. ஆதலால் இருந்த நிலத்தையே பலமக்கள் பங்கு போட்டுக்கொண்டு பயிர் செய்யவேண்டியதாயிற்று. இவ்வாறு குடியானவர்களுடைய நிலங்கள் மிகச் சிறுசிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டன. அதனால் அவற்றில் வேலைசெய்த மக்களுக்கு வேண்டிய அளவு வருவாய் கிடைக்கவில்லை. ஆகவே அவர்கள் கடன் வாங்கத் தொடங்கி, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல் தங்கள் நிலங்களையும் இழந்தார்கள். பின்னர் அவர்கள் கூலிக்காரர்களாகவோ திருடர்களாகவோ மாறினார்கள். நிலத்தை நம்பியே எல்லா மக்களும் வாழ முடியாதென்ற நிலை ஏற்பட்டதும் அவர்கள் வேறு தொழில்களைச் செய்வதற்கு வசதியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். ஆனால் அத்தகைய வசதி ஒன்றும் அப்பொழுது ஏற்படவில்லை. இருந்த நிலத்திலேயே அதிகப்படியான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தியிருந்தாலும் நன்றாயிருந்திருக்கும். ஆனால் அந்தக்காலத்தில் அந்த முறைகள் பேச்சளவில் நின்றுவிட்டனவே யொழியச் செயலில் வரவில்லை. ஆகவே பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரையில் உணவுப்பொருள்களின் விலையில் ஏற்பட்ட உயர்வு ஒன்றுதான் குடியானவர்களுக்குச் சாதகமாயிருந்த விஷயம். வரி கட்டுவதற்காகவோ குத்தகை செலுத்துவதற்காகவோ குடியானவர்கள் விளைவில் ஒரு சிறு பகுதியை விற்றால் போதுமென்ற நிலை விலைவாசிகளின் உயர்வால் ஏற்பட்டது.

இனி, தேயிலைத் தோட்டக்காரர்களையும், காப்பித் தோட்டக்காரர்களையும் பற்றிய விஷயங்களைக் கவனிப்போம். 1850-ஆம் ஆண்டில் முதல் முதலாக அஸாம் மாகாணத்தில் தேயிலைத் தோட்டங்கள் தோன்றின. பின்னர் மற்ற இடங்களிலும் பல தேயிலைத் தோட்டங்கள் ஏற்பட்டன. 1860-ஆம் ஆண்டில் இந்தியாவில் அறுபதுக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டங்களிருந்தன. 1880-க்குள் தேயிலை இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்களில் ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கத் தொடங்கியது. இன்றைக்கும் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரத்தில் தேயிலை முக்கியமானதாகவே யிருக்கிறது. எல்லாத் தோட்டங்களும் ஆங்கிலேயருடைய முயற்சியாலும் மூலதனத்தினாலுந்தான் ஏற்பட்டவை. அவற்றின் நிர்வாகமும் ஆங்கிலேயர் கையிலேயே யிருந்தது. அவற்றில் வேலை செய்வதற்குப் பெருவாரியான கூலியாட்கள் தேவையாயிருந்ததால் இந்தியாவின் பொருளாதார நிலையில் ஏற்பட்டிருந்த கஷ்டங்களை ஓரளவு குறைப்பதற்கு அவற்றின் தோற்றம் பயன்

பட்டது. தென்னிந்தியாவில் நெடுங்காலமாகச் சிறிய அளவில் காப்பி பயிர் செய்யப்பட்டு வந்தது. ஆனுல் பெரிய காப்பித் தோட்டங்கள் ஏறத்தாழ 1860-ஆம் ஆண்டில்தான் ஏற்பட்டன. ஆரம்பத்தில் தேயிலையைப்போலவே காப்பியும் பெருவாரியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனுல் மற்ற நாடுகளின் போட்டியால் நாளடைவில் காப்பி ஏற்றுமதி குறைந்தது. தேயிலைத் தோட்டங்களுக்கும் காப்பித் தோட்டங்களுக்கும் அடுத்தபடியாக அவுரித் தோட்டங்களைக் கூறலாம். சுமார் 1660-ஆம் ஆண்டிலிருந்து ஐரோப்பியர்கள் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து அவுரியை இறக்குமதி செய்யத் தொடங்கிஞர்களாகையால் இந்திய அவுரி ஏற்றுமதி நின்றுவிட்டது என்று முன்னர்ப் படித்தோம். ஆனுல் ஒரு நூற்றுண்டுக்குப்பின் மேற்கிந்தியத் தீவுகள் அவுரியை அதிகமாகப் பயிர் செய்வதை நிறுத்திவிட்டதால் இந்தியாவிலிருந்து மறுபடியும் ஐரோப்பாவிற்கு அவுரி ஏற்றுமதி செய்யப்பட்டது. அதன் பயனுக முதலில் வங்காளத்திலும் பின்னர் அதற்கு மேற்கிலும் அவுரித் தோட்டங்கள் விரைவாகத் தோன்றின. ஆரம்பத்தில் அவுரி ஏற்றுமதி முழுமையும் ஆங்கிலேயர் கையிலேயே இருந்தது. ஆனுல், அவுரித் தோட்டங்களுக்கும் தேயிலை காப்பித் தோட்டங்களுக்கும் வேறுபாடிருந்தது. காப்பி தேயிலைத் தோட்டங்களில் கூலியாட்களை வைத்து ஐரோப்பியர்களே சொந்தமாகப் பயிரிட்டார்கள். ஆனுல், அவுரி விஷயத்தில் அவர்கள் கையாண்ட முறை வேருக இருந்தது. அவுரி பயிர் செய்த குடியானவர்களுக்கு அவர்கள் முன்பணங் கொடுத்து, பயிர் விளைந்ததும் அதை விலைக்கு வாங்கி ஏற்றுமதிசெய்தார்கள்.

மேலே கூறிய முறை பதினேழாம் நூற்றுண்டில் கம்பனி அவுரி வியாபாரத்தில் ஈடுபடத் தொடங்கியபொழுதே இந்தியாவில் வழக்கிலிருந்தது. முன்பணம் வாங்கிக்கொண்ட குடியானவன் தன்னுடைய நிலத்தின் ஒரு பகுதியில் அவுரியைப் பயிரிட்டு அது விளைந்ததும் தனக்குப் பணங்கொடுத்திருந்த வியாபாரிக்கு விற்க ஒத்துக்கொண்டான். ஆனுல் அந்த வியாபாரி கொடுத்த விலை மார்க்கட்டு விலைக்குக் குறைவாகவேயிருப்பது வழக்கம். இந்த முறையினுல் பல தீமைகள் ஏற்பட்டன. குடியானவன் முன் பணங்கொடுத்த வியாபாரிக்கு ஏறக்குறைய அடிமையாஞன். அறுவடைக்காலத்தில் ஏற்கெனவே வியாபாரியிடம் வாங்கியிருந்த முன்பணம் முழுவதையும் கட்ட முடியாமல் குடியானவன் அடுத்த ஆண்டில் வியாபாரிக்குத் தேவையான அளவு அவுரியைப் பயிர்செய்ததோடு அவன் எவ்வளவு குறைந்த

விலை கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளவேண்டிய நிலையி லிருந்தான். சில சமயங்களில் வியாபாரிகள் இத்தகைய நிலையை வேண்டுமென்றே ஏற்படுத்தினார்கள். அவ்வாறு செய்வதன் மூலம் தங்களுக்கு அடங்கிய குடியானவர்களிடமிருந்து தேவை யான அவுரியைக் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த முறையைப் பெரும்பாலான ஐரோப்பியத் தோட்டக்காரர் கள் வங்காளத்தில் கையாண்டார்களாகையால் குடியானவர்கள் அதிக லாபந் தரக்கூடிய வேறு பயிர்களைத் தங்கள் நிலங்களில் விளைவிக்க முடியாமல் போயிற்று. அதனால் 1860-ஆம் ஆண்டில் பல கலகங்கள் ஏற்பட்டன. இந்தியப் பத்திரிகைகளும் ஆங்கி லேயர்களைக் கண்டித்து எழுதத் தொடங்கின. சிறிது காலத்திற் குப் பின்னர்ப் பீகாரிலும் காசியிலுங்கூட அத்தகைய கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அங்கிருந்த தோட்டக்காரர்களெல்லாம் பெரும் பாலும் ஐரோப்பியர்களாகவே இருந்தனர். டில்லிக்கருகிலுள்ள பிரதேசத்திலும் அத்தகைய கிளர்ச்சிகள் ஏற்பட்டன. ஆனால் அங்கிருந்த தோட்டக்காரர்கள் பெரும்பாலும் இந்தியர்களாகவே இருந்தார்கள். முடிவில் நிலக்கரியிலிருந்து சாயம் உற்பத்தி செய் யும் முறை கண்டுபிடிக்கப்பட்டதும் அவுரிக்குக் கிராக்கி இல் லாதபடி போய்விட்டதால் குடியானவர்களுடைய கிளர்ச்சிகளும் நின்றுவிட்டன.

கூலிக்காரர்களுடைய நிலைமையை இனிக் கவனிப்போம். மொகலாயர்கள் காலத்தில் நகரங்களிலும் துறைமுகங்களிலும் வேலை செய்த கூலிக்காரர்களுக்கு ரொக்கமாகவே கூலி கொடுக் கப்பட்டது. ஆனால் அந்தக் கூலி மிகக் குறைவாக இருந்ததால் உணவுப் பொருள்களின் விலை அதிகமாக உயர்ந்த சமயங்களி லெல்லாம் கூலியையும் தற்காலிகமாக உயர்த்த வேண்டியிருந் தது. இருப்புப்பாதைகளும், சுரங்கங்களும், தொழிற்சாலைகளும் ஏற்பட்டவுடன் கூலியாட்களின் நிலைமையிலும் மாறுதல் ஏற் பட்டது. முதலாளிகளிடையே ஏற்பட்ட போட்டியால் நகரங் களில் வேலை செய்த கூலிக்காரர்களுக்குக் கிராக்கி அதிகமாயிற்று. அதனால் வழக்கமான கூலியைவிட உயர்ந்த கூலியை அவர்கள் பெற முடிந்தது. கிராமங்களின் நிலை வேறாக இருந்தது. அங்கி ருந்த கூலிக்காரர்கள் ஏறக்குறைய அடிமைகளாக இருந்தார் கள். ஒவ்வொரு கூலிக்காரனும் குறிப்பிட்ட முதலாளியினிடம் வேலை செய்பவனாக இருந்தான். வேறு முதலாளியிடம் சென்று வேலை செய்வதற்கு அவனுக்கு உரிமையில்லை. கூலியும் ரொக்க மாகக் கொடுக்கப்படாமல் தானியமாகக் கொடுக்கப்பட்டது.

அத்துடன் குறிப்பிட்ட காலங்களில் முதலாளிகளிடமிருந்து அவர்கள் சில இனும்களையும் பெற்றனர்கள். இவ்வாறு கூலிக்காரன் பலவகையிலும் பெற்ற வருமானம் அவனும் அவன் குடும்பத்தினரும் உயிரோடிருப்பதற்குத்தான் போதியதாக இருந்ததே ஒழிய வேறு எந்தவிதமான சௌகரியத்திற்கும் பற்றவில்லை. இந்தச் சூழ்நிலையில் தொழிற்சாலைகள் தோன்றியவுடன் கிராமத்திலிருந்த கூலிக்காரர்கள் நகரங்களுக்குச் செல்லவில்லை. ஆனால் இருப்புப்பாதைகளும் சுரங்கங்களும் தோன்றியவுடனே கிராமத்திலிருந்த கூலிக்காரர்கள் அங்குச் சென்று வேலை செய்யத் தொடங்கினர்கள். நாளடைவில் கிராமங்களிலிருந்து ஏராளமான கூலிக்காரர்கள் சேய்மையிலிருந்த தொழிற்சாலைகளுக்கும், சுரங்கங்களுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் சென்று வேலை செய்யத் தொடங்கினர்கள். அங்கெல்லாம் அவர்கள் கிராமத்தில் பெற்ற கூலியைவிட அதிகக் கூலியைப் பெற்றனர்கள். கிராமங்களின் நிலைமை கொஞ்சங் கொஞ்சமாகத்தான் மாறிற்று. நிலச்சுவான்தார்களும் குடியானவர்களும் தங்களிடம் வேலை செய்த கூலியாட்கள் வேறிடங்களுக்குச் செல்வதைப் பார்த்து மிகுந்த கோபமடைந்தார்கள். வழக்கமான கூலியையே அவர்கள் எவ்வளவு காலத்திற்கு முடியுமோ அவ்வளவு காலத்திற்குக் கொடுத்து வந்தார்கள். ஆனல் சிற்சில இடங்களில் கொஞ்சங் கொஞ்சமாகக் கூலி உயரத் தொடங்கவே எல்லாக் கிராமங்களிலும் நாளடைவில் கூலி உயர்ந்தது.

இனி அரசாங்க உத்தியோகத்தைத் தவிர வேறு தொழில்களில் ஈடுபட்ட ஒரு புதிய மத்தியதர வகுப்பும், ஒரு புதிய உயர்தர வகுப்பும் தோன்றிய விதத்தைப் பற்றிக் கூறுவோம். மொகலாயராட்சிக் காலத்தில் உயர்வகுப்பைச் சேர்ந்தவர்களெல்லாம் அரசாங்கத்தின் உதவிநிதி பெற்றோ ஜாகீர்களின் வரும்படியாலோ வாழ்ந்து வந்தார்கள். அந்த உதவிநிதியும் ஜாகீரும் எந்தச் சமயத்தில் வேண்டுமானாலும் ரத்து செய்யப்படலாம். புரோகிதர்களையும் வியாபாரிகளையும் வட்டிக் கடைக்காரர்களையும் தவிர மற்றபடி மத்தியதர வகுப்பினர் யாரும் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் கிடையாது. கம்பனியின் ஆட்சியில் பெரிய நிலச்சுவான்தார்களெல்லாம் உயர் வகுப்பினராக மாறினர்கள். சிறிய நிலச்சுவான்தார்கள் மத்தியதர வகுப்பினரோடு சேர்ந்தார்கள். வியாபாரப் பெருக்கமும், தொழிற்சாலைகளின் தோற்றமும், சட்டம், மருத்துவம், இஞ்சினியரிங்கு முதலிய தொழில்

களின் வளர்ச்சியும் மத்தியதர வகுப்பினரின் எண்ணிக்கையை இன்னும் அதிகமாக்கிற்று.

வங்காளத்தில் நிலவரி சாசுவதமாக நிர்ணயிக்கப்பட்டதென்றும், அதனால் விலைவாசிகளின் உயர்வால் வரக்கூடிய லாபம் முழுவதையும் நிலச்சுவான்தார்களே அனுபவிக்கும் உரிமை பெற்றார்களென்றும் முன்னர்ப் படித்தோம். அவர்களில் பலர் தங்களுடைய நிலங்களில் சில பகுதிகளை மற்றவர்களுக்கு நிரந்தரமாகக் குத்தகைக்கு விட்டு விட்டார்கள். அப்படி விடும்போது அந்த நிலங்களுக்கு அவர்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வரியைவிட மிக அதிகமான குத்தகையைத் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள். வங்காளத்திலிருந்த பல வியாபாரிகள் வியாபாரத்தைவிட்டு நிலச்சுவான்தார்களிடம் நிரந்தரமான குத்தகைக்கு நிலங்களைப் பெற்று அவற்றிலிருந்து வந்த வருவாயால் உழைப்பில்லாத உல்லாச வாழ்க்கையை மேற்கொண்டார்கள். நாளடைவில் அவர்கள் குடும்பங்கள் பெருகியதாலும், விலைவாசிகள் உயர்ந்ததாலும் அவர்கள் குத்தகைக்கெடுத்த நிலங்களிலிருந்து வந்த வருமானம் அவர்களுடைய உல்லாச வாழ்க்கைக்குப் பற்றவில்லை. அதனால் அத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்கள் வேறு வேலைகளைத் தேடத் தொடங்கினார்கள். அதன் பயனாக வங்காளத்தில் மத்தியதர வகுப்பினரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிற்று.

ஆசிரியத் தொழிலையும் வக்கீல் தொழிலையும் தவிர மற்ற உயர் தொழில்களெல்லாம் மெதுவாகத்தான் வளர்ச்சியடைந்தன. டாக்டர்களாகவும் இஞ்சினியர்களாகவும் பயிற்சி பெற்றவர்களெல்லாம் சாதாரணமாக அரசாங்க உத்தியோகத்தில் சேர்ந்துகொண்டார்கள். மிகப் பெரிய நகரங்களில் தவிர மற்ற இடங்களில் தனிப்பட்ட முறைகளில் தொழிலில் ஈடுபட்ட டாக்டர்களையும் இஞ்சினியர்களையும் பார்ப்பது அருமையிலும் அருமையாக இருந்தது. ஆனால் கல்வி பரவியதால் ஏராளமான ஆசிரியர்களுக்குத் தேவை ஏற்பட்டது. அதுபோலவே கோர்ட்டு ஏற்பட்ட இடங்களிலெல்லாம் வக்கீல்களின் தொகையும் மிக விரைவில் பெருகிற்று. முப்பத்தாறும் அதிகாரத்தில் கூறியபடி ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்த வக்கீல்களெல்லாம் ஐரோப்பியர்களாகவே யிருந்தார்கள். வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஏற்பட்ட கோர்ட்டுகளில் இந்தியர்களும் வக்கீல் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுக்குச் சட்டங்களைப்பற்றியும் வழக்குகளை

நடத்தும் முறைகளைப்பற்றியும் அதிகமாகத் தெரியாது. யார் அவர்களுக்குப் பணங்கொடுக்க இசைந்தார்களோ அவர்கள் சார் பில் அவர்கள் வழக்குகளை நடத்திஞர்கள். சட்டமும் வழக்கை நடத்தும் முறையும் சரியாகத் தெரியாத அவர்கள் செய்த வேலை யில் பல குறைகள் இருந்ததில் வியப்பில்லை. அதனுல் 1793-ஆம் ஆண்டில் வங்காளத்திலும் சென்னையிலும், பின்னர் பம்பாயிலும் ஏற்பட்ட சட்டங்களால் தகுதியுடைய இந்தியர் களைப் 'பிளீடர்களாக' நியமிக்கும் அதிகாரம் அந்த இடங்களி லிருந்த கோர்ட்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது. இதுதான் வக்கீல் தொழிலின் ஆரம்பம். நாளடைவில் சிறந்த அறிஞர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டார்கள்.

வக்கீல் தொழில் விரைவில் வளர்ச்சியடைவதற்கு மூன்று முக்கிய காரணங்களிருந்தன. இந்தியர்களில் பலர் வழக்காடு வதில் மிகுந்த ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். ஆதலால் நல்ல வக்கீல்களுக்கு உயர்ந்த வருமானம் கிடைத்தது. கோர்ட்டு களின் பெருக்கமும், சட்டங்களின் பெருக்கமும், அவற்றின் சிக்கலான தன்மையும், வியாபாரம் கைத்தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட விரிவும், நாட்டின் பொதுவான வளர்ச்சியும் சேர்ந்து அதிக வழக்குகள் தோன்றுவதற்குக் காரணமாயின. இரண்டா வதாக, நுணுக்கமான தத்துவ சாஸ்திரங்கள் தோன்றிய இந்தியா விலிருந்த அறிஞர்கள் விஞ்ஞான சாஸ்திரங்களின் விஷயத்திலும், வியாபாரம் கைத்தொழில் ஆகிய துறைகளிலும் ஈடுபடுவதற்கு பதிலாகச் சொல்லாட்சியின் நுணுக்கமான வேறுபாடுகளினுல் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கும் துறையில் ஈடுபடுவதற்கு அதிகமாக விரும்பியது இயல்பே. மூன்ருவதாக, படித்த மக்க ளுக்கு வேறு துறைகளில் லாபகரமான உத்தியோகங்கள் அதிக மாகக் கிடைக்கவில்லை. ஆசிரியர்களுக்கும் பத்திரியாசிரியர்க ளுக்கும் ஊதியம் மிகக் குறைவாயிருந்தது. தனிப்பட்ட முறை யில் தொழிலில் ஈடுபட்ட டாக்டர்களுக்கும் வரும்படி மிகக் குறைவாக இருந்தது. இந்திய இஞ்சினியர்களுக்கும், கட்டிடக் கலை வல்லுநர்களுக்கும் தேவை மிகக் குறைவாக இருந்தது. புதிதாகத் தோன்றிய கைத்தொழில்களெல்லாம் ஆங்கிலேயர் கையிலேயே இருந்தன. வியாபாரமும் சில குறிப்பிட்ட வகுப் பினர் கையிலேயே இருந்தது. தரைப் படையிலும் கப்பற் படையிலும் உயர்பதவிகள் இந்தியர்களுக்குக் கொடுபடவில்லை. ஆகவே அரசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்களைப் பெறுவதற்கு வேண்டிய செல்வாக்கும், பெரிய மனிதர்களின் தயவும் இல்லாத

இளைஞர்களும், புதிய துறைகளில் ஈடுபடுவதற்கேற்ற மிகச் சிறந்த அறிவு இல்லாத இளைஞர்களும் குறைந்த சம்பளத்தில் குமாஸ்தாக்களாகச் சேரவேண்டும், இன்றேல் வக்கீல் தொழிலில் ஈடுபடவேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. வக்கீல் தொழிலின் வளர்ச்சிக்கு எத்தகைய காரணங்கள் இருந்தபோதிலும் அவ் வளர்ச்சியாலேற்பட்ட விளைவுகள் மிக முக்கியமானவை. பிரிட்டிஷ் மாகாணங்கள் எல்லாவற்றிலும் பேச்சு வன்மையும் எழுத்து வன்மையுமுடைய சிறந்த அறிஞர்கள் வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்கள். இங்கிலாந்திலிருந்த வக்கீல்களிடம் காணப்பட்ட சுதந்திர உணர்ச்சி இந்திய வக்கீல்களிடையும் காணப்பட்டது. அவர்கள் பிற்காலத்தில் இந்திய அரசியல் விஷயங்களில் நுழைந்து இந்திய வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்று வதற்குக் காரணமாயிருந்தார்கள்.

அதிகாரம்—45

கலாசார முன்னேற்றம்—1860—1880

1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடையி லுள்ள காலத்தில் இந்தியாவில் ஏற்பட்ட கலாசார முன்னேற் றத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் படிப்போம். மேலே கூறிய காலத்தில் கலாசாரத்துறையிலேற்பட்ட முக்கியமான மாறுதல் கள் இந்தியருக்கு ளேற்பட்ட ஒற்றுமையுணர்ச்சியாகும். டல்ஹெளசியின் காலத்தில் இந்தியாவின் பலவேறு பகுதிகளிலும் வாழ்ந்த மக்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சி இருந்ததாகக் கூற முடியாதென்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். ஆனல் 1880-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் பலவேறு பகுதிகளிலு மிருந்த படித்த மக்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. இந்த உணர்ச்சி பெரும்பாலும் பிரிட்டிஷ் அரசியல் நிர்வாகத்தின் எதிர்பாராத விளைவு என்று கூறலாம். இருப்புப்பாதைகளும் தந்தி தபாலாகிய சாதனங்களும் இந்தியர்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி யேற்படுவதற்கு அடிப்படைக் காரணமாயிருந்தன. பிரிட்டிஷ் நிர்வாகிகள் இந்தியா முழுவதற்கும் ஏற்ற சட்டங்களை நிறைவேற்றினர்கள். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே தன்மையான ஆட்சியை நிறுவுவது அவர்களுடைய கோட்பாடாயிருந்தது. ஆங்கிலக் கல்வி பரவியது ஒற்றுமையுணர்ச்சியின் வளர்ச்சிக்கு முக்கியமான உரம் தந்தது. இந்தச் சமயத்தில் நாம் முதல் அதிகாரத்தில் கூறியதை நினைவுபடுத்திக் கொள்வது அவசியம்,

பரந்த உபகண்டமாகிய இந்தியாவின் பலவேறு பகுதிகளி லும் வாழ்ந்த மக்கள் தனிப்பட்ட தன்மைகளையுடையவர்களாக இருந்தபோதிலும் அவர்கள் எல்லாம் ஒரே நாட்டைச் சேர்ந்த வர்களென்ற அடிப்படையான உணர்ச்சியும் தொன்று தொட்டே இந்தியாவில் இருந்தது என்று சரித்திர மாணவர்கள் அனைவரும் உணர்வர். பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிரிட் டிஷ் நிர்வாகிகள் இந்தியா முழுவதிலும் ஒரே தன்மையான ஆட் சியை நிறுவ முயன்றதுபோல் ஐரோப்பாக் கண்டத்தில் யாரே னும் முயன்றிருந்தால் ஐரோப்பாவின் பலவேறு நாடுகளும் ஒன்றுபடுவதற்கு பதிலாக அவற்றினிடையே பிரிவினை யுணர்ச் சியே மிகுந்திருக்கும். ஆனால், இந்தியாவில் ஏற்கெனவே அடிப் படையான ஒற்றுமையுணர்ச்சியிருந்ததால் ஒரே தன்மையான ஆட்சியை யேற்படுத்துவதற்கு பிரிட்டிஷ் நிர்வாகிகள் செய்த முயற்சி அவ்வுணர்ச்சியை வளர்த்தது. ஆகவே இந்தியரனைவரும் ஒரே நாட்டினர் என்ற விஷயம் மக்களுடைய மனத்தில் நிலை பெற்று வெளிப்படையாகப் பேசவும்பட்டது. பிரிவினை யுணர்ச்சி முழுவதும் மறைந்து போகாவிட்டாலும் மக்கள் மனத்தில் ஒற்- றுமை யுணர்ச்சியைப்போல் அது முக்கியமான இடம் பெறவில்லை.

1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடையி லுள்ள காலத்தில் பல முக்கியமான சட்டங்கள் நிறைவேற்றினர். மெக்காலேயும் அவனுடைய சகாக்களும் செய்த முயற்சிகளின் பலன் இந்தக் காலத்தில் ஏற்பட்டது. சிவில் ப்ரோசீஜர் கோடு, கிரிமினல் புரோசீஜர் கோடு, சாட்சியத்தைப் பற்றிய சட்டங்கள், இந்தியன் பீனல்கோடு முதலிய சட்டங்கள் எல்லாம் இந்தக் காலத்தில்தான் நிறைவேற்றப்பட்டன. உலகத்தின் முக்கிய மான சட்டங்களில் இந்தியன் பீனல்கோடும் ஒன்றுகக் கருதப் படுகிறது. இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் இருந்த ஜட்ஜு களும் மாஜிஸ்ரேட்டுகளும் ஒரே தன்மையான சட்டங்களின்படி தங்களுடைய தீர்ப்புக்களைக் கூறினர்கள். வக்கீல்களும் அது போலவே ஒரே தன்மையான சட்டங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு வாதாடினர்கள். அத்தகைய சட்டங்களுக்குக் கல்கத்தா, பம்பாய், சென்னை, அலகாபாத் ஆகிய நகரங்களி லிருந்த உயர்நீதி மன்றங்கள் எத்தகைய வியாக்யானங்கள் அளித் தன என்பதை இந்தியாவிலிருந்த எல்லா வக்கீல்களும் அறிந்து கொள்ளுவது அவசியமாயிற்று. அந்தப் பலவகை வியாக்கியானங் களுக்கும் பிரைவிக் கவுன்சிலின் முடிவான தீர்ப்புகள் அளிக்கப் பட்டன. இவ்வாறு இந்திய மக்கள் நாடு முழுவதிலும் ஒரே

தன்மையான சட்டத்தின் ஆட்சி நடக்கிறதென்பதை யுணர்ந்தார் கள். அரசியல் துறையில் பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்கள் செய்த வேலைகளும் இந்தியர்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சியை வளர்க்கக் காரணமாயிருந்தன. பலவேறு மாகாணங்களிலும் உத்தியோ கஸ்தர்கள் கையாண்ட ஆட்சிமுறைகளை யெல்லாம் மத்திய அர சாங்கத்தில் உத்தியோகம் வகித்த திறமை வாய்ந்த நிர்வாகிகள் சீர்தூக்கிப் பார்த்து எவை நல்ல முறைகளாக இருந்தனவோ அவைகளை எல்லா மாகாணங்களிலும் கையாளவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இதுவே நாளடைவில் இந்திய அரசாங்கத் தின் கோட்பாடாக மாறிற்று. ஒரே தன்மையான அரசியல் முறைகள் அனுசரிக்கப்படவேண்டும் என்ற கோட்பாடே பல மாகாணங்களில் நிர்வாகத்துறையில் ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஒரு காரணமாகவுமிருந்தது. இந்தக் கோட்பாடு மத்திய அரசாங் கத்தின் அதிகாரத்தை மிகவும் பெருக்கிற்று. அதனால் பிற்காலத் தில் பல தீமைகள் ஏற்பட்டன. எனினும் அந்தச் சமயத்தில் இந்தியாவின் பல பகுதிகளிலுமிருந்த உத்தியோகஸ்தர்களும் குமாஸ்தாக்களும் ஒரே தன்மையான சட்டங்களை நடைமுறை யில் கையாண்டார்களாகையால் இந்தியர்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி வளர்ந்தது. நிர்வாகத்திற்கு அடிப்படையான சட்டங் களையும் தஸ்தாவேஜுகளையும் பற்றிய விஷயங்களை சமாச்சாரப் பத்திரிகைகளும் உபயோகித்துக் கொண்டதனால் அந்த விஷயங் களை எல்லாம் பத்திரிகை படித்த அனைவரும் உணரத் தொடங் கினர். இவ்வாறு படித்த மக்களனைவருடைய உள்ளங்களிலும் ஒற்றுமையுணர்ச்சி வளர்ந்தது. வியாபாரத்தில் ஈடுபட்ட மக்க ளுக்குள் மாத்திரம் இன்னும் இந்த உணர்ச்சி ஏற்படவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் பத்திரிகைகளை அதிகமாகப். படிக் காததுதான்.

1854-ஆம் ஆண்டிலேற்பட்ட கல்வித்திட்டத்தின்படி பள்-ளிக்கூடங்களும் கல்லூரிகளும் பெருகின. பல்கலைக் கழகத்தின் பாடதிட்டத்திற்கு ஏற்றாற்போலப் பள்ளிக்கூடங்களிலும் கல் லூரிகளிலும் ஆங்கிலக் கல்வி கற்பிக்கவேண்டியிருந்ததால் எல் லாப் பாடசாலைகளும் கல்லூரிகளும் ஒரே விதமான கல்வியையே கற்பிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனாலும் இந்தியா வில் ஒற்றுமையுணர்ச்சி வளர்ந்தது. வட இந்தியா முழுவதும் கல்-கத்தா சர்வ கலாசாலையின் பாட திட்டத்தை பின்பற்றியது. தட் சிணமும் தென்னிந்தியாவும் சென்னை பம்பாய் ஆகிய இடங் களிலிருந்த சர்வகலாசாலைகளைப் பின்பற்றின. இந்த மூன்று

சர்வகலாசாலைகளின் பாடதிட்டங்களிலும் தேர்வு முறைகளிலும் அதிக வேறுபாடு கிடையாது. இந்தியாவில் அப்பொழுது கற்பிக்கப்பட்ட கல்வி பெரும்பாலும் இலக்கியத் துறையைச் சேர்ந்ததாகவே இருந்தது. விஞ்ஞானத் துறையில் அப்பொழுது அதிகக் கவனம் செலுத்தப்படவில்லை. 1860-ஆம் ஆண்டுக்கும் 1870-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இங்கிலாந்திலிருந்த பாடசாலைகளிலேயே விஞ்ஞானக் கல்வி அதிகமாகப் பரவவில்லை என்றால் இந்தியாவில் அது பரவாததைப் பற்றி நமக்கு வியப்பு ஏற்படாது. விஞ்ஞானத் துறையையொட்டிய பாடதிட்டங்கள் அவசியம் என்றுணர்ந்த பிறகும் அந்தத் துறையில் கல்வி கற்பிப்பதற்குத் தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு மிகுந்த செலவு ஏற்பட்டதால் பல கல்லூரிகள் அந்தத் துறையில் சரியான பயிற்சியையளிக்க முடியவில்லை. மேலும் அந்தச் சமயத்தில் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்ற இந்தியர்களுக்குக் கைத்தொழில் துறையில் கிராக்கியில்லை. எலிஜிபத் ராணிக்கும் விக்டோரியா ராணிக்கும் இடைப்பட்ட காலத்து ஆங்கில வரலாறும், ஷேக்ஸ்பியர், மில்டன் ஆகியவர்களின் காலத்துக்கும், வொர்ட்ஸ் வொர்த், டெனிசன் ஆகியவர்கள் காலத்துக்குமிடையில் இங்கிலாந்தில் தோன்றிய இலக்கிய நூல்களும் இந்திய மாணவர்கள் அனைவராலும் கற்கப்பட்டன. அதுவும் இந்திய ஒற்றுமை யுணர்ச்சியை வளர்த்தது. அந்த நூல்களை ஆரம்பத்தில் கற்பித்த ஆங்கில ஆசிரியர்கள் விக்டோரியா ராணியின் காலத்தில் ஆங்கில மக்களிடையே காணப்பட்ட சிறந்த நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் உடையவர்களாக இருந்தார்கள். அந்த உணர்ச்சிகள் அவர்களுடைய மாணவர்களின் உள்ளங்களிலும் தோன்றின. இந்தப் புதிய சூழ்நிலையில் இந்திய மாணவர்கள் வளர்ந்தார்கள். சர்வகலாசாலைகளுக்கு வருமானந் தரக்கூடிய சொத்துக்கள் இல்லாமையாலும் தேர்வுக் கட்டணங்களைத் தவிர அவைகளுக்கு வேறு வருமானம் இல்லாமையாலும் அவைகள் கல்வியின் தன்மையை உயர்த்துவதற்குப் பதிலாகக் கற்பவர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதிலேயே கருத்துடையவைகளாக இருந்தன. சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்களுக்கு நல்லவேலை கிடைத்தது. ஆனால் பட்டங்களின் தன்மைகளையும் வேறுபாடுகளையும் பற்றி அந்தக் காலத்தில் கவலையில்லை. ஆதலால் சாதாரண பி. ஏ. பட்டம் பெறுவதற்கே பெரும்பான்மையோர் விரும்பினார்களேதவிர 'ஆனர்ஸ்' பட்டத்தையும் எம். ஏ. பட்டத்தையும் டாக்டர் பட்டத்தையும்

பெறுவதற்கு விரும்பவில்லை. இன்னும் ஒரு தலைமுறைக்குப் பின்பு தான் சர்வ கலாசாலைகள் உயர் கல்வித்துறையில் கவனம் செலுத்தத் தொடங்கின. எனினும் சாதாரணப் பட்டதாரிகள் கூட நாட்டின் நிலையை உயர்த்துவதற்கேற்ற தகுதியுடையவர்களாக இருந்தார்கள். ஒருசில இந்திய மாணவர் சட்டம், மருத்துவம் முதலிய துறைகளில் பயிற்சி பெறவும், இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகத்தில் சேர்வதற்கேற்ற தேர்ச்சி பெறவும் இங்கிலாந்துக்குச் சென்றார்கள். அவர்களுக்குப் பல கஷ்டங்களிருந்தன. இங்கிலாந்துக்குச் சென்று கல்வி கற்பதற்கு மிகுந்த செலவு ஏற்பட்டது. கடல் கடந்து செல்வது இந்து மதக் கோட்பாடுகளுக்கு முரணாகக் கருதப்பட்டதால் திரும்பிவந்த பிறகு இந்து மாணவர்கள் அந்தப் பாபத்திற்குக் கழுவாய் தேடும் வகையில் பல மதச் சடங்குகளைச் செய்ய வேண்டியதாயிருந்தது. அந்தச் சடங்குகளிற் சில வெறுக்கத்தக்கவையாக இருந்ததோடு அவற்றிற்காக அதிகச் செலவும் ஏற்பட்டது. இந்தச் சமூகக் கட்டுப்பாடு எவ்வாறு ஏற்பட்டதென்று தெரியவில்லை. இந்தோசீனு, ஜாவா முதலிய நாடுகளில் பண்டைக் காலத்தில் இந்து மதம் பரவியிருந்தது. அதனால் பழங்காலத்தில் கடல் கடந்து செல்வதற்கு இந்து மதத்தில் தடையிருந்ததாகக் கூறமுடியாது. பதினொன்றும் நூற்றாண்டில் எழுதப்பட்ட கற்பனை நூல்களின் மூலம் கடற் பிரயாணம் உயர் வகுப்பைச் சேர்ந்த இந்துக்களின் வாழ்க்கையில் சாதாரணமாகக் காணப்பட்ட நிகழ்ச்சியென்றறிகிறோம். ஆனால் பதினேழாம் நூற்றாண்டில் கடல் கடந்து செல்லும் இந்துக்களைக் காண்பது அருமையாயிற்று. 1800-ஆம் ஆண்டுக்குள் இந்துக்கள் கடல் கடந்து செல்லக்கூடாதென்ற தடை நிலை பெற்றுவிட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவுவரையில் இந்தக் கட்டுப்பாடு வழக்கிலிருந்தது. நாம் படிக்கும் காலத்தில் அந்தக் கட்டுப்பாட்டின் பயனாகப் பலர் இங்கிலாந்துக்குச் செல்லமுடியாமற் போய்விட்டது. ஆகவே சிறந்த திறமையும் அதிக மனோபலமும் உடைய ஒரு சிலர் தான் மேற்படிப்புக்காக அந்தக்காலத்தில் இங்கிலாந்துக்குச் சென்றார்கள். அத்தகைய மாணவர்கள் பொதுவாக இங்கிலாந்தில் வரவேற்கப்பட்டார்கள். ஆனால் முதலில் ஆக்ஸ்பர்ட், கேம்பிரிட்ஜ் ஆகிய சர்வகலாசாலைகளிலும் இன்ஸ்-ஆப்-கோர்ட் (Inns of court) என்ற ஸ்தாபனத்திலும் இந்திய மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. அதற்குக் காரணம் அந்த ஸ்தாபனங்களில் சேர்வதற்கு ஆங்கிலிகன் மதத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அந்தக் காலத்தில் உரிமையிருந்

தது. ஆகவே இந்திய மாணவர்கள் லண்டனிலும், ஸ்காட்லாந்தி லிருந்த சர்வகலாசாலைகளிலுந்தான் சேர்ந்து படித்தார்கள். ஆனால் 1850-க்கும் 1860-க்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற் பட்ட சட்டங்களால் அதற்குப்பின் இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய மாணவர்கள் எல்லாச் சர்வகலாசாலைகளிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இங்கிலாந்துக்குச் சென்ற இந்திய மாண வர்களின் தொகை சிறியதாக இருந்தாலும் அவர்களில் பெரும் பான்மையோர் திறமையுடையவர்களாக இருந்ததால் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வந்த பிறகு இந்தியப் பொது வாழ்வின் வளர்ச்சிக்கு முக்கியமான காரணர்களாயிருந்தார்கள்.

1854-ஆம் ஆண்டு ஏற்பட்ட கல்வித் திட்டத்தின்படி சுதேச மொழிகளில் ஆரம்பக் கல்வியும் ஆங்கிலத்தில் உயர்தரக் கல்வியும் மக்களுக்கு அளிக்கப்பட்டன. கல்விக்காகச் செல வழிக்கப் போதிய அளவு பணம் இல்லாவிட்டாலும் நகரங்களில் நிறுவப்பட்ட பாடசாலைகளின் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் கல்வி பரவிற்று. ஆனால் கிராமங்களில் பணமின்மையாலும் குடியானவர்களிடையில் ஊக்கமின்மையாலும் கல்வி அதிகமா கப் பரவவில்லை. பல குடியானவர்கள் புதிய கல்வித் திட்டத்தை விரும்பவில்லை. ஆகவே நாம் படிக்கும் காலத்தில் இருந்த தலை முறையைச் சேர்ந்த குடியானவர்களில் பெரும்பான்மையோர் கல்வி யறிவற்றவர்களாகவே யிருந்தார்கள். கிராமங்களில் புதிய கல்வி அப்போது அதிகமாகப் பரவாமலிருந்ததும் ஓரளவு நல்ல தாகவே யிருந்தது. கிராமக் குடியானவர்களுக்கு ஏற்ற ஆரம் பக் கல்வியைக் கற்பிப்பிதற்குத் தகுதியான பாடதிட்டம் அப் பொழுது ஏற்படவில்லை. நகரங்களில் கற்பிக்கப்பட்ட கல்வியே கிராமங்களிலும் கற்பிக்கப்பட்டதால் கிராமத்தில் வாழ்ந்த சிறுவர்களில் மிகக் கெட்டிக்காரர்களாயிருந்தவர்கள் நகரங்களுக் குச் சென்று உயர்தரக் கல்வியை நாடினார்கள். ஆனால் அந்தக் கல்வி கற்று முடிந்தபின் அவர்கள் குமாஸ்தா வேலையில்தான் சேர்ந்தார்கள். அந்த வேலையை அவர்கள் திருப்திகரமாகச் செய்ய வில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் கிராமங்களிலேயே இருந் திருந்தார்களானால் பயிர்த் தொழிலை மிகத் திறமையுடன் நடத்தி யிருக்கக் கூடும்.

நகரங்களில் கல்வி பரவப் பரவச் சுதேச மொழிகளில் பல உரை நடை நூல்கள் தோன்றின. இந்தப்புதிய நூல்கள் சாதா ரணப் பொதுமக்கள் படிப்பதற்கு ஏற்றவையாக இருந்தன. அந்த

நூற்றுண்டின் தொடக்கத்தில் எழுதப்பட்ட உரை நடை நூல் களேவெனில் பெரும்பாலான பொதுமக்கள் புரிந்துகொள்ள முடியாத நடையில் எழுதப்பட்டவை. அவற்றில் உருது மொழி யில் எழுதப்பட்ட நூல்களில் அரபி மொழியிலிருந்தும் பாரசிக மொழியிலிருந்தும் பல சொற்ளும் மரபுகளும் அப்படியே எடுத்-துக் கையாளப்பட்டிருந்தன. மற்ற மொழிகளில் எழுதப்பட்ட நூல்களில் ஸம்ஸ்கிருதச் சொற்களும் மரபுகளும் ஏராளமாக உப யோகப்பட்டிருந்தன. ஆகவே அந்த நூல்கள் சாதாரண மக்களுக் குப் புரியாத முறையில் இருந்ததில் வியப்பில்லே. ஆனல் நாளடை வில் சுதேச மொழிகளில் எழுதப்பட்ட நூல்களில் எளிய நடை வழக்குக்கு வந்தது. புதிய உரைநடை நூல்களே எழுதிய ஆசிரியர் கள் மிகப் பெரும்பாலோர் ஆங்கிலங் கற்றவர்கள். பல்லாற்ருலும் வளம்பொருந்திய ஆங்கில மொழிப் பயிற்சி அந்த ஆசிரியர்களு டைய தாய்மொழி நடைக்கும் எளிமையையும் வளத்தையும் அளித்தது. மேலும் நவீனக் கருத்துக்களேச் சரியான முறையில் சொல்லுவதற்கு ஆங்கிலமொழிப்பயிற்சி பெரிதும் உதவியது. அதுவுமன்றிச் சுதேச மொழிகளில் எழுந்த உரைநடை நூல்கள் ஆங்கில நூல்களே மாதிரியாகக் கொண்டிருந்தன. குறிப்பாக நாவல்களே யெழுதிய இந்திய ஆசிரியர்கள் ஆங்கில நாவல் ஆசிரியர்களின் முறைகளேயே கையாண்டார்கள். இவ்வாறு ஆங்கிலக் கல்வி பரவியது சுதேச மொழிகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது. இந்த வளர்ச்சியின் பயனுக அவைகளெல் லாம் நவீனக் கல்வியைக் கற்பிப்பதற்கு ஏற்ற கருவிகளாக விளங்குகின்றன.

அந்தக்காலத்தில் எழுதிய நூல்கள் பலவகைப்பட்ட தன் மையை யுடையவையாயிருந்தன. அவற்றில் பெரும்பான்மை யானவை மிகக் கீழ்த்தரமாக இருந்தன. சிறந்த நூல்கள் அதிக மாகத் தோன்றவில்லே. எனினும், பல நூல்கள் சிறந்த முறை யில் எழுதப்பட்டன். பத்தொன்பதாம் நூற்றுண்டில் புதிதாகத் தோன்றிய உணர்ச்சிகள் அவைகளில் இடம்பெற்றன. அதனுல் அவ்வுணர்ச்சிகள் மேலும் மேலும் வளர்ந்தன. மற்ற கலேகளேப் பற்றி இவ்வாறு கூறமுடியாது. ஓவியக்கலே ஆதரவிழந்தது. பழைய முறைகளேப் பின்பற்றிய ஒருசில கலேஞர்கள் எங்கோ சில மூலேகளில் இருந்தார்கள். இந்தியச் சிற்பக் கலேயும் உயிருட னிருந்ததெனினும் உருவச் சிலேகளும் மற்றைய நினேவுச் சின்னங் களும் இங்கிலாந்திலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டன. கம்ப-னியின் ஆட்சிக் காலத்திலும் இப்போது நாம் படிக்கும் காலத்தி

லும் கட்டப்பட்ட கட்டிடங்களில் பெரும்பான்மையானவை உபயோகத்திற்காகக் கட்டப்பட்டவையேயன்றி அழகுக்காகக் கட்டப்பட்டவையல்ல. அவைகளைக் கட்டியவர்கள் இஞ்சினியர்களே யன்றிச் சிற்பிகளல்லர். ஆங்கிலேயர் கட்டிய கட்டிடங்களில் முக்கியமான சில ஐரோப்பிய முறையில் கட்டப்பட்டவை. அவற்றுள் சில கம்பீரமாகவும் இந்திய சீதோஷ்ண நிலைக்கு ஏற்றவையாகவும் இருந்தன. ஆங்கிலேயர் கட்டிய கட்டிடங்கள் எல்லாமே இந்தியக் கட்டிடக் கலையோடு தொடர்பற்றவையாகவே இருந்தன. அத்தகைய கட்டிடங்களைச் சில சுதேச அரசர்களும் கட்டினார்கள். எனினும் பின்னர் ஆங்கிலக் கட்டிடக் கலைஞர்கள் இந்திய முறைகளையும் மற்ற கீழ்நாட்டு முறைகளையும் பார்த்து அவற்றின் தன்மைகளைக் கொண்ட புதிய கட்டிடங்களைக் கட்டத் தொடங்கினார்கள். அந்த முயற்சியின் பயனைச் சமீபகாலத்தில் இந்தியாவில் கட்டப்பட்ட பல கட்டிடங்களின் மூலம் நாம் காண்கிறோம். இந்தக் காலத்தில்தான் பூர்விகச் சின்னங்களைக் காப்பாற்றி வைக்கும் முயற்சி தீவிரமாக எடுக்கப்பட்டது. அழகிய கட்டிடங்களை அழித்துவிடும் கெட்டகுணம் இந்தியாவில் அதிகமாக இருந்தது. இந்துக்களாயினும் சரி முஸ்லிம்களாயினும் சரி, புதிய கட்டிடங்களைக் கட்டுவதே சிறந்த காரியமெனக் கருதினார்களே ஒழியப் பழைய கட்டிடங்களைக் காப்பது அவசியமென்று நினைக்கவில்லை. அழகிய புதிய கட்டிடங்கள் தோன்றிக்கொண்டே யிருந்தன. அதே சமயத்தில் அழகிய பழைய கட்டிடங்கள் அழிந்துகொண்டே யிருந்தன. அவற்றின் அண்மையிலிருந்த மக்கள் அவற்றின் கற்களை எடுத்துத் தங்கள் வீடுகளைக் கட்ட உபயோகித்தார்கள். கம்பனியின் ஆட்சிக் காலத்திலும் அழகிய பல கட்டிடங்கள் அழிந்தன. உயர்ந்த ஓவியம் நிறைந்த சுவர்களுக்கு வெள்ளையடித்து அழகிய கட்டிடங்கள் பிரயாணிகள் தங்குமிடங்களாக மாற்றப்பட்டன. மிண்டோ பிரபுவின் காலத்திலிருந்து பழைய கட்டிடங்களைக்காப்பதற்கு அவ்வப்போது ஓரளவு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் 1861-ஆம் ஆண்டில்தான் தொல் பொருட் கலைஞன் ஒருவன் நியமிக்கப்பட்டான். பத்தாண்டுகளுக்குப் பின்னர் தொல்பொருட் கலையாராய்ச்சி யிலாக்கா சட்டப்படி ஏற்பட்டது. அதன்பிறகு பழைய சாசனங்களையும் சின்னங்களையும் கண்டுபிடித்துக் காக்கும் வேலை சரியாக நடைபெறத் தொடங்கியது.

இவ்வாறு பல துறைகளிலும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பயனாக இந்தியர்களுக்குள் ஒற்றுமை யுணர்ச்சி அதிகரித்துக் கொண்டு வந்தது எனினும் பிரிவினை யுணர்ச்சி முழுவதும் மறைந்துவிடவில்லை. இந்தியர்களிடையில் ஒருமை யுணர்ச்சியா-லேற்பட்ட தாய் நாட்டுப்பற்று வளர்ந்ததெனினும் இந்தியாவின் பலவேறு பகுதிகளில் வாழ்ந்த மக்கள் அவரவர்கள் வாழ்ந்த பகுதிகளின்மீது தனிப்பட்ட பற்றுடையவர்களாக இருந்தார்கள். ஆகவே தேசபக்தியோடு பிரதேச பக்தியும் வளர்ந்தது. உதாரண மாக வங்காளிகள் வங்காளத்தின்மீது பற்றுடையவர்களாகவும், மகாராஷ்டிரர்கள் மகாராஷ்டிரத்தின்மீது பற்றுடையவர்களாக வும் இருந்தார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்களிடையில் இந் தியர்கள் என்ற வகையில் பொதுவான தேசபக்தியுமிருந்தது. இந் தப் பொதுவான தேசபக்திக்கும் அதைவிட ஓரளவு குறுகிய பிர தேச பக்திக்கும் இடையில் முரண்பாடிருந்ததுபோல் மேற்பார் வைக்குத் தோன்றியது. ஆனால் இந்த நிலை பத்தொன்பதாம் நூற் றாண்டின் முடிவில்தான் தெளிவாகத் தோன்றியது. 1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்து சமுதாயத்திலும் முஸ்லிம் சமுதாயத்திலும் சில குறிப்-பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டன. முஸ்லிம் சமுதாயத்தில் ஸர் சையத் அகமத்கான் என்ற ஒரு சிறந்த தலைவன் தோன்றி னான். அவன் சில ஆண்டுகள் ஜட்ஜாக உத்தியோகம் செய்த பின்னர் சமூக சேவையில் ஈடுபட்டான். முஸ்லிம் சமுதாயத்தில் மதக் கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும், மேல்நாட்டுக் கல்வியை முஸ்லிம்கள் விரும்பிக் கற்கவேண்டு மென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் முஸ்லிம்கள் புதிய இந்தியாவில் சிறந்த நிலையை வகிக்க முடியா தென்றும் சையத் அகமத்கான் வற்புறுத்திக் கூறினான். பல முஸ்லிம்கள் அவனைக் கடுமையாக எதிர்த்தனர். எனினும், சையத் அகமத்கான் தளராத முயற்சியுடன் பாடுபட்டதன் பயனாக முஸ்லிம் சமுதாயத்தில் ஒரு புதிய நிலை ஏற்பட்டது. 1875-ஆம் ஆண்டில் அலிகார் என்ற நகரில் சையத் அகமத்கான் நிறுவிய கல்லூரி அவனுடைய நினைவுச் சின்னமாக விளங்கு-கிறது. பிற்காலத்தில் அக்கல்லூரி ஒரு சர்வகலாசாலையாக வளர்ந்தது. அலிகாரில் ஏற்பட்ட கல்லூரியில் மதத்தை அடிப் படையாகக் கொண்ட சன்மார்க்க போதனை முக்கிய இடத்தை வகித்தது. இந்த வகையில் அது அப்போது இந்தியாவிலிருந்த மற்ற கல்லூரிகளினின்றும் வேறுபட்டது. 1890-ஆம் ஆண்டுக்

குள் அந்தக் கல்லூரியில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் இந்தியா வில் அரசாங்க உத்தியோகத்தில் நுழைந்து நல்ல பெயர் எடுத் தார்கள். அவர்களுடைய புத்தி கூர்மையைவிட அவர்களுடைய நேர்மையும் செயலாற்றும் திறமையும் அவர்களுக்கு நல்ல பெயரை வாங்கித் தந்தன.

இந்து சமுதாயத்திலும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. கேசவசந்திரஸென் என்பவன் 1860-ஆம் ஆண்டில் பிரம்மசமா-ஜத்தில் சேர்ந்து அதை இந்தியாவின் பலவேறு பாகங்களிலும் பரப்ப முயற்சிசெய்தான். சமூகச் சீர்திருத்தத்தோடு மதச் சீர்-திருத்தமும் செய்யவேண்டுமென்று கேசவசந்திரஸென் விரும்பி ணுன். அவன் பரப்ப விரும்பிய மதக்கோட்பாடுகளில் சைதன்ய-ருடைய போதனையின் இயல்பும், கிறிஸ்தவமதத்தின் தன்மையும் ஓரளவு காணப்படுகின்றன. பிரம்மசமாஜத்தில் பெருவாரியான மக்கள் சேரவில்லை. அதனால் அதன் கோட்பாடுகள் இந்திய வாழ்க்கைமுறையை நேரடியாக மாற்றவில்லை. வழக்கமான இந்து மதத்தின் சடங்குகளில் நம்பிக்கையில்லாத மக்கள் அந்தச்சடங்கு-களைச் செய்யாமல் விட்டுவிட்டார்கள். ஆனால் அவற்றிற்குப் பதி லாக வேறு எந்த முறைகளையும் அவர்கள் அனுசரிக்கவில்லை. இவ்வாறு பிரம்மஸமாஜத்தினால் இந்து மதத்தில் எதிர்மறைப் பயன்கள் ஏற்பட்டனவே ஒழிய உடன்பாட்டுப் பயன் எதுவும் ஏற்படவில்லை. மேலும் கடவுட் கொள்கையிலும், மதச் சடங்கு களிலும் நம்பிக்கையில்லாத பலர் படித்த மக்களிடையே—குறிப் பாகக் கல்கத்தாவில்—தோன்றினர்.

அதேசமயத்தில் பரம்பரை இந்து மதத்தில் நம்பிக்கை கொண்டவர்களும் அந்த மதத்தின் உயர்வுக்காகப் பாடுபடத் தொடங்கினார்கள். அதன் பயனாகச் சில புதிய இயக்கங்கள் தோன்றின. அவற்றுள் சில பரம்பரை இந்துமதத்தின் எல்லாக்-கொள்கைகளையும் சடங்குகளையும் ஆதரிப்பவையாக இருந்தன. வேறு சில இந்துமதத்தின் கோட்பாடுகளில் ஒரு சிலவற்றை ஒத்-துக்கொண்டு மற்றவற்றைப் பொருத்தமற்றவையென்று தள்ளி விட்டன. முதற் பிரிவைச்சேர்ந்த தலைவர்களில் மிகவும் முக்கிய மானவர் இராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் 1870-க்கும் 1880-க் கும் இடையில் தம்முடைய கொள்கைகளைப் பரப்பினார். எல்லா மதங்களிலும் உண்மையிருக்கிறது என்றும், அவற்றைப் பின்பற் றுவதால் நன்மை யேற்படும் என்றும், ஆனால் ஒவ்வொரு மதத் தைச் சேர்ந்தவர்களும் அவரவர்களுடைய மதங்களையே பின் பற்றவேண்டுமென்றும், ஆகவே, இந்துக்கள் பின்பற்றுவதற்கு

இந்துமதந்தான் சிறந்ததென்றும் அவர் கூறினர். அவருடைய போதனையின் பயனாக இந்துக்களுக்கு மறுபடியும் சுயமதிப்பும் தங்களுடைய மதத்தில் பெருமையும் ஏற்பட்டன. அவுரங்கஜீப்-பின் காலத்தில் இந்துக்கள் துன்புறுத்தப்பட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் குழப்பமான நிலையில் இந்துமதம் ஏறக்குறைய உயிரற்றுக்கிடந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது கிறிஸ்தவப்பாதிரிகளின் தாக்குதல்களுக்கு இலக்காயிற்று. ஆனால் இராமகிருஷ்ணரின் போதனையின் பயனாக இந்துமதம் புத்துயிர் பெற்றது. அது உலகத்தின் பெரிய மதங்களில் ஒன்று என்ற நிலையை யடைந்தது. அடிப்படையில் ஒரு கடவுட்கொள்கையை-யுடைய இந்துமதத்தில் காணப்படும் பல வேறு சடங்குகளும் விக்கிரக ஆராதனையும் சாதாரண மக்களுடைய தெய்வ வழிபாட்டுக்கு அவசியமானவை என்ற கொள்கை வலுப்பெற்றது.

இரண்டாம் பிரிவைச்சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர் தயானந்தர். அவர் ஆரியசமாஜம் என்ற சங்கத்தை ஸ்தாபித்தார். பல ஆண்டுகள் துறவியாக வாழ்ந்த அவர் 1868-ஆம் ஆண்டில் தம்முடைய கொள்கைகளைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். வேதங்களில்தான் உண்மையான இந்துமதக்கொள்கைள் காணப் படுகின்றன என்று அவர் கூறினர். ஆனால், அவர் வேதங்களை வியாக்கியானம் செய்த முறையை இந்துக்கள் மாத்திரமன்றி மேல் நாட்டு அறிஞர்களும் கடுமையாகக் கண்டித்தார்கள். பரம்-பரை இந்துமதத்தின் சில கோட்பாடுகளை அவர் ஏற்றுக்கொண்டார். ஒரு கடவுட்கொள்கையையும் கர்மத்தைப்பற்றிய கோட்-பாட்டையும் அவர் ஒத்துக்கொண்டார். ஆனல் பிராமணர்களு-டைய உயர்வையும் தற்காலத்தில் காணப்படும் சாதி வேறுபாடுகளையும் அவர் ஒத்துக்கொள்ளவில்லை. அதேசமயத்தில் சமூகச் சீர்திருத்தத்தையும், அதிகமான மக்கள் உயர்தரக்கல்வி கற்க வேண்டும் என்ற கொள்கையும் அவர் வற்புறுத்தினர். மேலும் பெண்களுக்குக் குடும்பத்தில் நியாயமான கௌரவத்தை அளிக்க வேண்டுமென்று அவர் விரும்பினர். அத்துடன் அவருடைய கொள்கைகள் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டவை. அவரை எதிர்த்தவர்கள் யாராயிருந்தாலும் அவருடைய தாக்குத-லுக்கு இலக்காயினர். அவரை எதிர்த்த இந்துக்களும், சீக்கியர்களும், ஜைனர்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் அவருடைய கடுமையான தாக்குதலுக்கு இலக்கானதால் அவர்களும் அவரைத் தாக்கினர்கள். ஆரிய சமாஜம் 1875-ஆம் ஆண்டில் பம்பாயில் நிறுவப்பட்டது. ஆனல், தொடக்கத்தில் பஞ்சாபில்

தான் பெருவாரியான மக்கள் அதில் சேர்ந்துகொண்டார்கள். ஆகவே விரைவில் லாகூர் அதன் தலைநகராயிற்று. தயானந்தர் இறந்தபிறகும் அந்த இயக்கத்தின் வேலை தொடர்ந்து நடந்தது.

ஆகவே 1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் இருவேறு முரண்பட்ட தன்மைகளைக் காண்கிறோம். படித்த மக்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சி வளர்ந்துகொண்டே சென்றது. அதேசமயத்தில் பல வேறு வகுப்பினரும் தத்தம் வகுப்பின் முன்னேற்றத்தில் புதிய ஊக்கம் காட்டியதால் அவற்றுக்குள் சச்சரவு ஏற்படக்கூடிய நிலையும் தோன்றியது. இந்த வேறுபாடு முக்கியமாக மதத்துறையில் காணப்பட்டது. அடுத்தபடியாக அரசாங்க உத்தியோகத்தைப் பற்றிக் கவனிப்போம். ஆரம்பத்தில் உத்தியோகஸ்தர்கள் சம்பளம் முதலிய விஷயங்களில் தங்களுடைய நிலையை உயர்த்திக் கொள்ள விரும்பினார்களாதலால் இந்தியா முழுவதிலும் உத்தியோகத்திலிருந்த படித்த மக்களுக்குள் ஒற்றுமையுணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அரசாங்க உத்தியோகத்தில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கொள்கையால் படித்த மக்களுக்குள் பிரிவினையுணர்ச்சி ஏற்பட்டது. மொகலாயராட்சிக்காலத்தில் படித்த மக்களிற் பெரும்பான்மையோர் அரசாங்க உத்தியோகத்தையே நம்பி வாழ்ந்தார்கள். உயர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் நல்ல பதவிகளை அடைவதைத் தவிர வேறு வகையான வேலை ஒன்றும் இல்லை. அந்த உயர் பதவிகளால் அவர்கள் அதிகமான வருமானம் பெற்றார்கள். அந்தப் பதவிகளை வகித்தவர் சிவில் துறையில் மாத்திரமன்றி ராணுவத்துறையிலும் வேலைசெய்தார்கள். அந்த இரண்டு துறைகளும் அந்தக் காலத்தில் தனியாகப் பிரிக்கப்படவில்லை. கம்பனியின் ஆட்சியில் படித்த இந்தியர்கள் கீழ்த்தர உத்தியோகங்களில் சேர்ந்தார்கள். காரன்வாலிஸ் காலந்தொட்டு இந்திய அரசியலில் உயர்பதவிகளெல்லாம் ஆங்கிலேயருக்கே வழங்கப்பட்டன. சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு உயர்பதவிகளில் தங்களுக்கும் பங்குவேண்டுமென்று இந்தியர்கள் வாதாடினார்கள்.

கம்பனியின் ஆட்சியில் ராணுவ நிர்வாகமும் சிவில் நிர்வாகமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் படித்த இந்தியர்கள் ராணுவத்துறையில் இருந்த உயர்பதவிகளில் பங்கு கேட்கவில்லை. இருபதாம் நூற்றாண்டில்தான் தேசியச்சேனை ஒன்று இருக்கவேண்டுமென்ற

எண்ணம் இந்தியர்களுக்கு ஏற்பட்டது. முதலில் இந்தியர்கள் இந்தியன் சிவில் சர்விஸில் பங்குபெற விரும்பினர். சிவில் சர்விஸில் சேர்ந்தவர்கள்தாம் இந்திய அரசாங்கத்தின் எல்லா உயர் பதவிகளையும் வகிக்கும் தனியுரிமை பெற்றிருந்தார்கள். இந்த நிலை 1793-ஆம் ஆண்டிலிருந்து வழக்கிலிருந்தது. கம்பனியின் ஆட்சிக்காலத்தில் கம்பனி நிர்வாகஸ்தர்களின் தயவைப் பெற்றவர்கள்தாம் இந்த சர்விஸுக்கு நியமிக்கப் பட்டார்களென்று ஏற்கெனவே கூறியிருக்கிறோம். 1833-ஆம் ஆண்டில் நிறைவேறிய சாசனச் சட்டத்தின்படி போட்டிப் பரிட்சையின்மூலம் இந்த உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஓரளவு முயற்சி செய்யப்பட்டது. ஆனால், கம்பனி நிர்வாகஸ்தர்களின் எதிர்ப்பால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இந்தியர் யாரும் கம்பனி உத்தியோகத்தில் எந்த விதமான பதவியையும் வகிப்பதற்குத் தடை யிருக்கக்கூடாது என்று அந்தச் சாசனச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தபோதிலும் சிவில்சர்விஸில் இந்தியர்கள் சேருவதற்கு வேண்டிய வசதியை அந்தச்சட்டம் அளிக்கவில்லை. ஆகையால் இந்தியர்கள் அப்பொழுது எந்த உயர் பதவிக்கும் நியமிக்கப்படவில்லை. நாளடைவில் நீதிமன்றங்களின் வேலை அதிகரிக்கவே ஆங்கில ஜட்ஜுகளும், மாஜிஸ்டிரேட்டுகளும் அவ்வேலை முழுவதையும் கவனிக்க முடியவில்லை. அதற்காக இன்னும் அதிகமான ஆங்கில உத்தியோகஸ்தர்களை நியமித்தால் செலவு அதிகமாகுமென்றஞ்சிய கம்பனி அதிகாரிகள் இந்தியர்களை ஜட்ஜுகளாகவும் மாஜிஸ்டிரேட்டுகளாகவும் நியமிக்கத் தொடங்கினர்கள். எனினும் நீதி பரிபாலனத்துறையில் இந்தியர்களுக்களிக்கப்பட்ட பதவிகளெல்லாம் கீழ்த்தரப்பதவிகளாகவே இருந்தன.

1853-ஆம் ஆண்டில் நிறைவேறிய சாசனச் சட்டத்தின்படி சிவில் சர்விஸுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்காகப் போட்டித் தேர்வு ஏற்பட்டது. அந்தப் பரிட்சை லண்டனில் நடந்தது. ஹெயிலிபிரியில் இருந்த பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டது. போட்டிப் பரிட்சையில் தேர்ச்சிபெற்றவர்கள் ஓராண்டு ஏதாவது ஓர் ஆங்கிலச் சர்வகலாசாலையில் பயிற்சி பெறவேண்டுமென்று ஏற்பட்டது. 1858-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட விக்டோரியா மகாராணியின் அறிக்கைப்படி தகுதியுள்ள இந்தியர்களுக்கு உயர்பதவிகளை வழங்குவதற்கு எந்தவிதமான தடையுமிருக்கக்கூடாதென்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டதால் இந்தியர்களும் சிவில் சர்விஸ் பரிட்சை எழுதுவதற்கு வழியேற்

பட்டது. ஆனால் அந்தப் பரிட்சையின் பாடதிட்டங்கள் அப்போது ஆங்கிலக் கலாசாலைகளில் இருந்த பாடதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், அந்தப் பரிட்சைக்குப் போக விரும்பிய இந்தியர்களெல்லாம் இங்கிலாந்துக்குச் சென்று படிப்பது அவசியமாயிற்று. ஆகவே, மிகுந்த திறமையுடைய ஒருசில இந்தியர் மாத்திரம் இங்கிலாந்துக்குச் சென்று படித்துத் தேர்ச்சிபெற்றனர்கள். ஆனால் 1878-ஆம் ஆண்டிலிருந்து அந்தப் பரிட்சைக்கு இந்தியர் செல்வது மிகக் கஷ்டமாயிற்று. ஏனெனில் அந்த ஆண்டில் பத்தொன்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் அந்தப் பரிட்சைக்குச் செல்லக்கூடாது என்று சட்டம் ஏற்பட்டது. அதற்கு முன்னெல்லாம் இருபத்திரண்டு வயதுக்கு மேற்படாதவர்கள் அந்தப் பரிட்சை எழுதலாமென்ற விதியிருந்தது. இந்த முறை 1892-ஆம் ஆண்டுவரையில் அமுலிலிருந்தது. ஆகவே, கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்குப் பதிலாக உயர்தரப் பாடசாலைகளில் படித்தவர்கள்தாம் அந்தப் பரீட்சைக்குச் செல்லமுடியும். அதனால் இந்தியர்களுக்கு அந்தப் பரிட்சை எழுதுவது மிகவும் கஷ்டமாயிற்று. சிவில் சர்விஸின் கதவு திறந்திருந்தாலும் இந்தியர்களால் அதன் வாயிற்படியையடைய முடியவில்லை.

இதற்குள்ளாக இந்தியா மந்திரி இந்தியர்களுக்குச் சிவில் சர்விஸில் நுழைவதற்கு வேறொரு கதவைத் திறக்க ஏற்பாடு செய்தார். அதன்பயனாக 1870-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேறியது. அதன்படி உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் நல்ல திறமையும் கல்வியறிவும் உடையவர்களும் ஆகிய இந்திய இளைஞர்களுக்குப் போட்டிப் பரீட்சையில்லாமல் இந்திய சிவில் சர்விஸில் சில பதவிகளை அளிக்கலாம் என்ற விதி ஏற்பட்டது, ஆனால் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற திறமைசாலிகளான மற்ற உத்தியோகஸ்தர்களோடு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய உத்தியோகஸ்தர்கள் நிர்வாக வேலையில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாததால் அவர்களில் பலர் சிவில் சர்விஸில் மிக உயர்ந்த பதவிகளை அடையவில்லை.

இனி, மருத்துவம் முதலிய துறைகளில் உயர்பதவிகள் எவ்வாறு வழங்கப்பட்டன என்பதைப் பார்ப்போம். வைத்திய இலாக்காவின் உயர்ந்த பதவிகளுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்காக இங்கிலாந்தில் பரீட்சை நடந்தது. ஒருசில இந்தியர்

களும் அந்தப் பரீட்சையில் தேறி வைத்தியத் துறையின் உயர் பதவிகள் சிலவற்றை வகித்தார்கள். இந்தியாவிலிருந்த இஞ்சினியரிங் கல்லூரிகளில் படித்துப் பட்டம் பெற்றவர்களில் ஒரு சிலர் பொது மராமத்து இலாகாவின் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். ஆனால் கல்வி இலாக்கா, காட்டு இலாக்கா, போலீஸ் இலாக்கா ஆகிய துறைகளின் உயர்பதவிகளெல்லாம் ஆங்கிலேயருக்கே கொடுக்கப்பட்டன. 1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடைபட்ட காலத்தில் இந்தியர்கள் சிவில் சர்விஸ் முதலிய நிர்வாகத் துறைகளில் உயர்பதவிகளை யடைவதில் அதிக ஆர்வம் காட்டினார்களேயொழிய மராமத்து இலாக்கா, கல்வி இலாக்கா போன்ற துறைகளில் உத்தியோகம் பெறுவதைப்பற்றி அதிகக் கவலைகொள்ளவில்லை. உத்தியோகத்தால் வரும் ஊதியத்தையும் பெருமையையும் மாத்திரம் இந்தியர்கள் விரும்பினார்கள் என்று நினைப்பது தவறு. நிர்வாகத் துறையில் உத்தியோகம் பெற்று நாட்டுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்ற தேசபக்தியாலும் இந்தியர்கள் தூண்டப்பட்டார்கள். இந்த உண்மையை இங்கிலாந்திலுள்ள பொதுமக்களும் இந்தியாவிலிருந்த ஆங்கில அதிகாரிகளும் சரியாக உணரவில்லை. ஆகவே இந்தியர்களுக்கு நிர்வாகத்துறையில் உயர்பதவிகளை யளிப்பதற்கு ஆங்கிலேயர் காலதாமதம் செய்தனர். அதைக் கண்ட இந்தியர்கள் ஆங்கிலேயர் கொடுத்த வாக்கை நிறைவேற்ற விரும்பவில்லையென்று நினைத்து அவர்கள்மீது சீற்றமும் வெறுப்பும் கொண்டனர்.

அந்தக் காலத்தில் சம்பளமில்லாத வேலைகளின்மூலம் நாட்டுக்குத் தொண்டு செய்வதற்கு அதிகச் சந்தர்ப்பம் கிடையாது. பிரசிடென்சி நகரங்களில் மாத்திரம் கார்ப்பரேஷனும் கௌரவ மாஜிஸ்டிரேட்டுக் கோர்ட்டுகளும் இருந்தன. பொதுமக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஆர்வம் மிகுந்த மக்கள் அவற்றிற் சேர்ந்து வேலை செய்வதற்குச் சௌகர்யமிருந்தது. மற்ற நகரங்களில் ஸ்தல சுயஆட்சி ஆரம்ப நிலையிலிருந்தது. கிராமங்களிலோ வெனில் ஸ்தல சுயஆட்சி அப்பொழுதுதான் தோன்றிக்கொண் டிருந்தது. மேலும் ஸ்தலஸ்தாபனங்களுக் களிக்கப்பட்டிருந்த அதிகாரமும் மிகக் குறைவாக இருந்ததோடு அவற்றின் வருமானமும் குறைவாகவே இருந்தது. ஆகவே திறமையும் ஊக்கமுமுடைய இந்தியர்கள் ஸ்தல சுயஆட்சியில் தங்கள் திறமையைக் காட்டமுடியவில்லை. பொதுவாகக் கூறு

மிடத்து அந்தக் காலத்தில் தேசசேவை செய்ய விரும்பியவர்களுக்கு அதிக வாய்ப்பு இல்லை.

நாம் குறிப்பிடுங் காலத்தில் இந்தியர்களிடையே விக்டோரியா மகாராணியினிடத்தில் அதிக விசுவாசம் ஏற்பட்டதென்பதை இந்த அதிகாரத்தில் நாம் கூறுவது பொருந்தும். ராஜபக்தி இந்தியர்களுக்குள் பரம்பரையாக வந்த பண்பு. ஆகவே கம்பனியின் ஆட்சி ஒழிந்து அரசியின் ஆட்சி ஏற்பட்டதும் இந்தியர்களுடைய ராஜபக்தியும் வெளிப்படையாகத் தெரிந்தது. 1875-ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்த போதும், 1877-ஆம் ஆண்டில் விக்டோரியா மகாராணியை இந்தியச் சக்கரவர்த்தினி என்று விளம்பரப்படுத்தியபோதும் இந்தியர்களுடைய இராஜ விசுவாசத்தின் அறிகுறிகள் நன்குகத் தெரிந்தன. விக்டோரியா மகாராணி இந்தியாவுக்கு வந்ததே கிடையாது. எனினும் இந்தியர்களின் விஷயத்தில் மிகுந்த அக்கறை அந்த அம்மையாருக்கு இருந்ததென்பது அவருடைய பல கடிதங்களின்மூலம் நன்குகத் தெரிகிறது. அவருடைய காருண்யத்தைப் பற்றிக் கிராமாந்தரங்களில் பல செய்திகள் பரவின. அதனுல் கிராமவாசிகள் அவரைப் பெரிதும் போற்றினுர்கள். அதுபோலவே சுதேச அரசர்களும் விக்டோரியா மகாராணியினிடத்தில் அதிக விசுவாசமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய உள்நாட்டு விவகாரங்களில் அடிக்கடி சீர்கேடான நிலைமையேற்பட்டதால் இந்திய அரசாங்கம் அவ்விஷயத்தில் அடிக்கடி தலையிடவேண்டியிருந்தது. அதனுல் சுதேச அரசர்களுக்கு இந்திய அரசாங்கத்தின்மீது வெறுப்பு ஏற்பட்டபோதிலும் அவர்களுக்கு மகாராணியினிடத்திலிருந்த விசுவாசம் மாத்திரம் குறைவதற்குப் பதிலாக வளர்ந்துகொண்டே சென்றது.

அதிகாரம்—46

எல்லைப்புற விஷயங்களும், அரசாங்கப் பொருளாதார நிலைமையும். 1860—1880

இந்த அதிகாரத்தில் இந்தியாவின் வெளிநாட்டுத் தொடர்புகளையும் அரசாங்க வரவு செலவு விஷயங்களையும் பற்றிப் படிப்போம். இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் தந்தித் தொடர்பு ஏற்பட்டதனால் இந்திய அரசாங்கத்தின் பல துறைகளிலும் முக்கியமான மாறுதல்கள் ஏற்பட்டன. குறிப்பாக வெளிநாட்டுத் தொடர்புகளின் விஷயத்தில்தான் மிக முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. தந்தித் தொடர்பு ஏற்படுவதற்கு முன் கவர்னர் ஜெனரலும் அவருடைய ஆலோசனைக் கவுன்ஸில் அங்கத்தினர்களும் அவசர காலங்களில் இங்கிலாந்திலிருந்து உத்தரவை எதிர்பார்க்காமல் தங்கள் இஷ்டம்போல் காரியங்களைச் செய்தனர். ஆகவே, சில சமயங்களில் நடந்துபோன விஷயங்களைத் தங்களுக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் கம்பனி நிர்வாகஸ்தர்கள் அங்கீகரிக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் தந்தித் தொடர்பு ஏற்பட்டபின் அவ்வப்போது வேண்டிய உத்தரவுகளை லண்டனிலிருந்து இந்திய அரசாங்கம் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே, வெளிநாட்டுத் தொடர்புகளைப் பொறுத்த வரையில் இந்திய அரசாங்கம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற விஷயம் அவ்வப்போது லண்டனிலேயே தீர்மானிக்கப்பட்டது. அந்தத் தீர்மானங்கள் இங்கிலாந்துக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையில் இருந்த அரசியல் தொடர்பைப் பொறுத்தவைகளாகவே இருந்தன.

இந்தியாவின் கிழக்கெல்லையைப் பொறுத்தவரையில் பர்மாவுடன் இந்திய அரசாங்கம் நட்பாகவே இருந்தது. ஆனால் தீபா என்ற அரசன் பட்டத்திற்கு வந்ததும் இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிருந்த தொடர்பில் மாறுதல் ஏற்பட்டது. அவன் ஆங்கிலேயரிடம் பகைமை பாராட்டினன். அதனால் 1879-ஆம் ஆண்டில் அவனுடைய ஸம்ஸ்தானத்திலிருந்த ஆங்கில ரெஸிடெண்டைத் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆறுண்டுகளுக்குப் பின்னர்த் தீபாவுக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டையேற்பட்டது. இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையில்

வியாபாரம் நடத்திவந்த ஒரு கம்பனியைச் சேர்ந்த ஆங்கிலேயர் களைத் தீபா மிகத் துன்புறுத்தினுன். அவர்களைச் சரியாக நடத்தாவிட்டால் பர்மாவின்மேல் படையெடுக்க நேரிடுமென்று ஆங்கிலேயரனுப்பிய செய்தியை அவன் மதிக்கவில்லை. அதனுல் ஓர் ஆங்கிலச்சேனை பர்மாவின்மீது படையெடுத்துத் தலைநகரைக் கைப்பற்றிக்கொண்டது. தீபா நிபந்தனையின்றிச் சரணடைந்-தான். அவனுடைய ராஜ்யம் இந்தியாவோடிணைத்துக் கொள்ளப்பட்டது. பர்மா இந்திய சாம்ராஜ்யத்தில் ஒரு மாகாணமாயிற்று.

மேற்கில் பலூசிஸ்தானம் இந்திய சாம்ராஜ்யத்தில் சேர்க்கப் பட்டது. இந்த நாட்டில் பல தலைவர்களிருந்தார்கள். அவர் களில் சிலருடன் 1854-ஆம் ஆண்டுமுதல் ஆங்கிலேயர் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தனர். ஆனுல் அந்தத் தலைவர்களுக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்பட்டுக் கொண்டிருந்ததால் ஆங்கிலேயர் கள் அந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் 1875-ஆம் ஆண்டில் ஒருடன்படிக்கை செய்து கொண்டார்கள். அவ்வுடன்படிக்கை நிறைவேறுவதற்கு முக்கிய காரணமாயிருந் தவன் மேஜர் சாண்டிமான் என்பவன். அதன்படி பலூஸ்சிஸ் தானத்தில் அமைதியைக் காக்கும் பொறுப்பை இந்திய அரசாங்-கம் ஏற்றுக்கொண்டது. 1877-ஆம் ஆண்டில் சாண்டிமான் பலூசிஸ்தானத்தில் கவர்னர் ஜெனரலின் ஏஜண்டாக நியமிக்கப் பட்டான். பதினைந்தாண்டுகள் கழிந்து இறக்கும் வரையில் அவன் அந்த உத்தியோகத்தை வகித்தான். அவனுடைய அசாதாரணமான திறமையாலும், புத்திகூர்மையாலும் பலூசிஸ் தானத்தில் அமைதி நிலைத்து நாடு செழித்தது.

பலூசிஸ்தானம் இந்தியாவின் வடமேற்கெல்லையில் ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. வடமேற்கிலிருந்து இந்தி-யாவுக்கு வரும் இரண்டு வழிகளில் ஒன்று காண்டஹார், குவெட்டா ஆகிய நகரங்களைத் தாண்டிப் பலூசிஸ்தானத்தின் வடகிழக்குப் பகுதியின் வழியாக இந்தியாவுக்கு வருகிறது. 1879-ஆம் ஆண்டு வரையில் குவெட்டாவுக்கு வடக்கிலும் கிழக் கிலுமிருந்த பகுதிகள் ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சியில் இருந்-தன. ஆனுல் அந்த ஆண்டில் ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தி-யாவுக்கும் ஏற்பட்ட காண்டமாக்கு உடன்படிக்கையின்படி அந்தப் பகுதிகள் ஆங்கிலேயர்களுக்குக் கொடுக்கப்பட்டன. ஆப்கானிய யுத்தத்தின் முடிவில் அந்தப் பகுதிகள் கவர்னர்

ஜெனரலினுடைய ஏஜண்டின் நேரடியான ஆட்சிக்குள் வந்தன. 1879-ஆம் ஆண்டுக்கும் 1892-ஆம் ஆண்டுக்கும் இடையில் அமைக்கப்பட்ட இருப்புப்பாதை ஆப்கானிய எல்லை வரையில் சென்றது. அதன்பிறகு காண்டஹார் வழியாக வடமேற்கிலிருந்து யாரும் இந்தியாவின்மேல் படையெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இனி, ஆப்கானிஸ்தானத்தின் விஷயத்தைக் கவனிப்போம். அந்த நாட்டின் அரசனுன தோஸ்து முகமது அவனுடைய ஆட்சியின் பிற்பகுதியில் ஆங்கிலேயருடன் நட்பாகவே யிருந்தான். அவன் 1863-ஆம் ஆண்டில் இறந்ததும் அவனுடைய பல சந்ததியார்கள் ஒருவரோடொருவர் அரச பதவிக்காகச் சண்டையிட்டார்கள். சிறிது காலம் இந்திய அரசாங்கம் அவ்விஷயத்தில் தலையிடவில்லை. ஆனல், பின்னர் தோஸ்து முகமதுவே தனக்குப்பின்னுல் அரசனுக வேண்டுமென்று நியமித்திருந்த ஷேர்-ஆலிக்கு ஆங்கிலேயர் உதவி செய்தனர். அதன்பயனுக ஷேர்-ஆலி தன் எதிரிகளையெல்லாம் தோற்கடித்துச் சிம்மாசனமேறினுன். ஆங்கிலேயர்கள் இவ்வாறு ஆப்கானியர் விஷயங்களில் தலையிட்டதற்குக் காரணம் ருஷியாவால் இந்தியாவுக்கு ஆபத்து வரக்கூடும் என்ற அச்சம்தான். சமீப காலத்தில் ருஷியா காஸ்பியன் கடலுக்குக் கிழக்கிலிருந்த பல சுயேச்சையான ராஜ்யங்களில் தன்னுடைய ஆதிக்கத்தை நிறுவி, 1867-ஆம் ஆண்டில் அங்கு ராணுவ ஆட்சியை ஏற்படுத்தியது. இவ்வாறு ருஷிய ஆதிக்கத்திற்குள் வந்த பிரதேசத்திற்கு ருஷியத் துருக்கிஸ்தானம் என்ற பெயர் ஏற்பட்டது. ருஷியத் துருக்கிஸ்தானம் ஆப்கானிஸ்தானத்தின் வடக்கு எல்லைவரையில் பரவியிருந்தது. துருக்கிஸ்தானத்தில் நாகரிகத்தைப் பரப்பி, அங்கு வாழ்ந்த மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் ருஷியர்கள் துருக்கிஸ்தானத்தில் தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியதாக அந்தச் சமயத்தில் கூறினுர்கள். ஆனுல் இந்திய விஷயங்களில் ருஷியர்கள் எந்தச் சமயத்திலும் தலையிடக் கூடுமென்ற அச்சத்தை ஆங்கிலேயர்களுக்குண்டாக்கி, அதன் மூலம் இங்கிலாந்துக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலிருந்த அரசியல் தொடர்பை மாற்றித் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதுதான் ருஷியர்களுடைய உண்மையான நோக்கம்.

இந்த நிலைமையில் ஆப்கானிஸ்தானத்தில் ஆங்கிலேயர்களுக்கு நண்பனும் பலமுள்ளவனுமாகிய ஓரரசனிருப்பது இன்றியமையாததாயிருந்தது. ஆனால் ஷேர்ஆலியினுடைய நிலைமை கஷ்டமானதாக இருந்தது. ஆகவே ருஷியர்களுக்கெதிராக உதவி செய்வதாக வாக்களிக்குமாறு ஆங்கிலேயர்களை 1873-ஆம் ஆண்டில் ஷேர்ஆலி வேண்டினான். அப்பொழுது வைசிராயாக இருந்த நார்த்து புருக்கு பிரபு அவ்வாறு உறுதி கொடுப்பதற்குத் தயாராக இருந்தார். ஆனால் லண்டனிலிருந்த அதிகாரிகள் நார்த்து புருக்கின் முடிவை அங்கீகரிக்கவில்லை. ஆகையால் ஷேர்-ஆலி ருஷ்யர்களுடன் சிநேகத்தொடர்பு வைத்துக்கொண்டான். அதன்பின் இங்கிலாந்தில் டிஸ்ரேலி பிரதம மந்திரியானான். அவன் தலைமையில் இங்கிலாந்தின் வெளிநாட்டுத் தொடர்பு-களில் புதிய முறைகள் கையாளப்பட்டன. இந்தியாவுக்கு ருஷி-யர்களால் ஆபத்து ஏற்படுமென்பதை நன்றாக உணர்ந்த ஆங்கில அரசாங்கம் ருஷியாவை ஆப்கானிஸ்தானத்துடன் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாதென்று கேட்டுக் கொண்டது. ஆனால் அம்முயற்சி வெற்றி பெறாததால் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் வடமேற்கு எல்லைப் புறத்தில் தங்களுடைய படைகளை அதிகப் படுத்தினார்கள். அதன்பின் தன்னுடைய ராஜ்யத்தில் பிரிட்டிஷ் ஏஜண்டுகளை வைத்துக்கொள்ளுமாறு ஆங்கிலேயர்கள் ஷேர்-ஆலியிடம் கேட்டுக் கொள்ளுவதென்று தீர்மானித்தார்கள். இந்த முடிவின் பயனாக நார்த்துபுருக்கு பிரபு ராஜப்பிரதிநிதிப் பதவியினின்றும் நீங்கினான். அதற்குப் பதிலாக லிட்டன் பிரபு ராஜப்பிரதிநிதியானான். லிட்டன் இந்தியாவுக்கு வந்ததும், ஆங்கில ஏஜண்டுகளை ஏற்றுக்கொள்ளுமாறு ஷேர் ஆலியிடம் கூறினான். ஆனால் ஷேர்ஆலி அதற்கிணங்கவில்லை.

1877-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் லிட்டன் செய்த மேற் கூறிய முயற்சி தோல்வியுற்றது. அந்தச் சமயத்தில் ஐரோப்பாவில் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் சண்டை ஏற்படுவது ஏறக்குறைய நிச்சயமாகத் தெரிந்தது. ஆனால், அடுத்த ஆண்டில் ஏற்பட்ட பெர்லின் உடன்படிக்கையால் அந்த ஆபத்து நீங்கியது. அந்த உடன்படிக்கைக்கு வேண்டிய பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த சமயத்தில் காபூலுக்கு ஒரு ருஷிய ஏஜண்டு வந்து சேர்ந்தான். ஓராங்கில ஏஜண்டையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று லிட்டன் ஷேர் ஆலியை வற்புறுத்தினான். ஆனால் ஷேர் ஆலி ஒத்துக் கொள்ளவில்லை. அதனால், ஷேர் ஆலி ஆங்கில ஏஜண்டை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஏற்றுக்கொள்ளாவிட்

டால் பிரிட்டிஷ் படைகள் ஆப்கானிஸ்தானத்தின்மீது சண்டை தொடுக்குமென்று செய்தியனுப்புமாறு இந்திய அரசாங்கத்துக்கு பிரிட்டிஷ் மந்திரி சபை உத்தரவனுப்பியது. ஷேர் ஆலி பிரிட்டிஷ் ஏஜண்டை ஏற்றுக்கொள்ளக் குறிப்பிட்ட காலத்திற்குள் இணங்காததால் பிரிட்டிஷ் படைகள் ஆப்கானிஸ்தானத்தோடு சண்டை தொடுத்தன. ஷேர் ஆலி தன்னுடைய ராஜ்யத்தை விட்டுவிட்டு ருஷியர்களுடைய ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்துக்குச் சென்றுவிட்டான். பின்னர் அவன் அங்கு இறந்துபோனன். அவனுடைய மகனுன யாகூப்கான் 1879-ஆம் ஆண்டு மே மாதத்தில் காண்டமாக்கு உடன்படிக்கையை ஆங்கிலேயருடன் செய்துகொண்டான். அதன்படி அவன் காபூலில் ஒரு பிரிட்டிஷ் ஏஜண்டை வைத்துக்கொள்ளவும், இந்திய ராஜப்பிரதிநிதியின் ஆலோசனையின்படி தன்னுடைய வெளிநாட்டுத் தொடர்புகளை வைத்துக்கொள்ளவும் ஒத்துக்கொண்டான்.

ஆனல் யாகூப்கான் ஆப்கானிஸ்தானத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை ஸ்தாபிக்க முடியவில்லை. செப்டம்பர் மாதத்தில் காபூலிலிருந்த பிரிட்டிஷ் ஏஜண்டு கொலை செய்யப்பட்டான். அடுத்த மாதத்தில் சர் பிரடரிக் ராபர்ட்ஸ் காபூலைக் கைப்பற்றிக்கொண்டான். பின்னர் அடுத்தபடியாக என்ன செய்வதென் பதைப்பற்றி ஆங்கில அதிகாரிகள் யோசனை செய்தார்கள். யாகூப்கானுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டு ஆப்கானிஸ்தானத்தின் எதிர்காலத்தைப்பற்றி ஆங்கிலேயர்கள் ஒரு திட்டம் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அப்துல் ரஹமான் என்ற ஒருவன் ஆப்கானிய அரசுக்கு உரிமை கொண்டாடினன். அவன் ஷேர் ஆலியின் சொந்தக்காரன். சில ஆண்டுகள் அவன் ருஷியர்களுடைய காப்பிலிருந்தவன். லிட்டன் பிரபு அவனுடன் பேச்சுவார்த்தை தொடங்கினன். அதன் பயனுக ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அப்துர் ரஹமானுக்குக் கொடுப்பதென்றும், அதற்கு பதிலாகப் வெளிநாட்டு விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின் உத்தரவுப்படி அப்துர் ரஹமான் நடக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த சமயத்தில் ஷேர் ஆலியின் மக்களில் ஒருவனுன அயூப்கான் மேற்கு ஆப்கானிஸ்தானத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு காண்டஹாரிலிருந்த ஆங்கிலச் சேனையைத் தாக்கி மைவாண்டு என்ற இடத்தில் அதைக்கடுமையாகத் தோற்கடித்தான். புதிய அமீராகிய அப்துர் ரஹமான் உத்தரவின்மேல் ராபர்ட்ஸ் காபூலிலிருந்து ஒரு

சேனையைக் காண்டஹாருக்கு நடத்திச் சென்று அயூப்கானைத் தோற்கடித்தான். இவ்வாறு ஆப்கானிஸ்தானத்தில் அப்துர் ரஹமானுடைய ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டது. அவன் தோஸ்து முகமதுவைப்போலவே நல்லதிறமையும் மனவலியும் படைத்தவன். நன்றாக யோசனை செய்த பிறகே அவன் ருஷியாவுக்கு விரோதமாக ஆங்கிலேயருடைய கட்சியில் சேர்ந்தான். ஆதலால், ஆப்கானிஸ்தானம் ஆங்கிலேயர்களுக்கு நட்பாகவும் அதே சமயத்தில் பலம் பொருந்திய ஒரு ராஜ்யமாகவும் இருக்குமென்று எதிர்பார்ப்பதற்குத் தக்க காரணங்கள் இருந்தன.

வடமேற்கு எல்லைப்புறத்தின் காப்புக்கும் இந்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலைமைக்கும் அதிகத் தொடர்பு இருக்கிறது. அந்த எல்லையைக் காப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும் படைகளுக்காக இந்திய அரசாங்கத்துக்கு அதிகச் செலவு ஏற்படுகிறது. கம்பனியின் ஆட்சியில் ஒரு சரியான அரசாங்க வரவு செலவுத் திட்டம் ஏற்படவில்லை. கம்பனி யாட்சி ஏற்படுவதற்கு முன் இந்தியாவின் வழக்கிலிருந்த வரிகளையே சந்தர்ப்பத்திற்கேற்ற மாறுதல்களோடு கம்பனியதிகாரிகளும் வசூல்செய்து வந்தார்கள். வரவு செலவுக் கணக்குகளும் வியாபார முறையில் வைக்கப்பட்டிருந்தனவே ஒழிய ஓர் அரசாங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் எந்த முறையில் வைக்கப்பட வேண்டுமோ அந்த முறையில் வைக்கப்படவில்லை. அரசாங்கச் செலவுகளுக்காகக் கடன்வாங்கும் பழக்கத்தை வாரன்ஹேஸ்டிங்ஸ் நிறுத்தினானென்று முன் ஓர் அதிகாரத்திற் கூறினோம். ஆனால் அவனுக்குப் பின்வந்த கவர்னர் ஜெனரல்கள் அவனுடைய கொள்கையைப் பின் பற்றவில்லை, சண்டை ஏற்பட்ட காலங்களில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஏராளமாகக் கடன் வாங்கியே கம்பனி செலவுசெய்து வந்தது. சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகு கம்பனியாட்சி முடிந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆட்சி இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டபொழுது இந்திய அரசாங்கத்திற்குச் சுமார் பத்துக்கோடி பவுன் கடனிருந்தது. 1859-ஆம் ஆண்டில் பொருளாதாரத் துறையில் நிபுணன் ஒருவனை ராஜப்பிரதிநிதியின் கவுன்ஸிலில் அங்கத்தினனாக நியமிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பயனாக அரசாங்க வரவு செலவுத் துறையில் சீர்திருத்தமேற்பட்டது. 1864-ஆம் ஆண்டில் வரவுக்கும் செலவுக்கும் சமநிலை யேற்பட்டது. அதன்பிறகு சாதாரண காலங்களில் கடன் வாங்காமல் அரசாங்கத்தை நடத்த முடிந்தது. சண்டையும் பஞ்சமும் ஏற்பட்ட காலங்களில் கடன்வாங்கிச்

செலவு செய்யப்பட்டது. அதுபோலவே எதிர்காலத்தில் வருமானம் தரக்கூடிய இருப்புப்பாதைகளை யமைப்பதற்கும் கால்வாய்களை வெட்டுவதற்கும் கடன் வாங்கிச் செலவு செய்யப்பட்டது.

தொடக்கத்தில் எல்லா வரிகளும் மத்திய அரசாங்கத்தாலேயே வசூலிக்கப்பட்டன. அவ்வாறு வசூலான தொகையில் குறிப்பிட்ட பகுதிகளை மத்திய அரசாங்கம் மாகாணங்களுக்குக் கொடுத்தது. 1870-க்கும் 1880-க்கும் இடைப்பட்ட காலத்தில் சிலவரிகளை வசூலிக்கும் உரிமை மாகாணங்களுக்கே கொடுக்கப்பட்டது. அதனால், அந்த வரிகளின் மூலம் வசூலாகக் கூடிய தொகையை அதிகப்படுத்துவதில் மாகாணங்களுக்கு அக்கரையேற்பட்டது. மேலும் அந்தக்காலத்திலிருந்து இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலிருந்து வேறுபட்ட மாகாண வரவு செலவுத் திட்டங்களும் ஏற்பட்டன. 1880-ஆம் ஆண்டுக்குப் பக்கத்தில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் சேர்ந்து ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஐம்பது கோடி ரூபாய் வருமானம் வந்தது. அதில் நிலவரி மூலமாக வசூலான தொகை இருபத்திரண்டு கோடி ரூபாய். மற்றவரிகளின் மூலமாக வசூலான தொகை பதினேழு கோடிரூபாய். இதர வழிகளில் வசூலான தொகை பத்துக்கோடி ரூபாய்.

வரிகளில் மிக முக்கியமானது உப்புவரி. இது கம்பனியாட்சி ஏற்படுவதற்கு முன்னரே இந்தியாவில் வசூலிக்கப்பட்டு வந்தது. இந்த வரியின் விகிதமும் இதை வசூலித்த வகைகளும் இடத்துக்கிடம் மாறுபட்டன. கம்பனியாட்சியிலும் இதே நிலைதானிருந்தது. ஆகவே வரி குறைவான இடங்களிலிருந்து வரி அதிகமாக இருந்த இடங்களுக்குத் திருட்டுத்தனமாக உப்பு மூட்டைகளை கொண்டு போகும் பழக்கம் இருந்தது. அதைத் தடுப்பதற்காக 1770-ஆம் ஆண்டுக்குப் பின்னரும் நீளமான முள் வேலி ஆங்காங்கு போடப்பட்டிருந்தது. ஆனால் 1880-ஆம் ஆண்டுக்குள் இந்தியா முழுவதும் ஒரே விகிதத்தில் உப்புவரி விதிக்கும் வழக்கம் ஏற்பட்டுவிட்டது. அப்படி விதிக்கப்பட்ட வரி மிகக் குறைவாகத் தானிருந்தது. உப்புவரிதான் இந்தியாவிலிருந்த மக்களுக்குள் ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செலுத்திய வரி. கலால்வரி, இறக்குமதி வரி, ஸ்டாம்பு வரி முதலிய மற்ற வரிகள் சில குறிப்பிட்ட பகுதியினரால் தான் செலுத்தப்பட்டன. பணம் சேர்க்கவேண்டும் என்னும் நோக்கத்தைக் காட்டிலும் மதுபானத்தையும் இதர லாகிரி வஸ்துக்களையு முபயோகிக்கும் பழக்கத்தைக் குறைப்பதுதான் கலால் வரியை விதிப்பதில்

அரசாங்கம் கொண்டிருந்த முக்கிய நோக்கமாக இருந்தது. ஆனால் இந்த இரண்டு நோக்கங்களில் எதையும் சரியானபடி நிறைவேற்றக்கூடிய முறைகள் இன்னும் கையாளப்படவில்லை. இறக்குமதி வரி நூற்றுக்குப் பத்து விகிதத்தில் வசூலிக்கப்பட்டது. 1875-ஆம் ஆண்டில் அது பாதியாகக் குறைக்கப்பட்டது. 1882-ஆண்டில் அது முழுவதும் நீக்கப்பட்டது. இதற்குக் காரணம் அந்தக்காலத்தில் அனைவராலும் ஆதரிக்கப்பட்டு வந்த தடையற்ற வியாபாரக் கொள்கைதான். ஆகவே, நிலவரியை நீக்கிவிட்டு மற்ற வரிகளை மாத்திரம் பார்க்கும்பொழுது அந்தக் காலத்தில் வரிச்சுமை மிகக் குறைவாகத் தானிருந்தது என்பது புலனாகும். நிரந்தரமான வருமான வரி இன்னும் ஏற்படவில்லை. தற்காலிகமான செலவுக்காக வருமானவரி சில சமயங்களில் வசூலிக்கப்பட்ட போதிலும் நிரந்தரமான வரி இன்னும் ஏற்படவில்லை.

இனி, வரிகளைத் தவிர மற்ற வகைகளில் அரசாங்கத்துக்குக் கிடைத்த வருமானத்தைப்பற்றிப் படிப்போம். இருப்புப்பாதைகளின் மூலமாக வந்த வருமானம் அவைகளுக்குச் செலவிடப்பட்ட மூலதனத்திற்காகச் செலுத்தவேண்டியிருந்த வட்டிக்குக் கூடக் கட்டவில்லை. நீர்ப்பாசன வசதிகளுக்காக ஏற்பட்டிருந்த கால்வாய்களின் மூலமாக அவற்றிற்கான செலவுகளைக் கழிப்பதற்குப் போதுமான வருமானம் வந்தபோதிலும் அந்தத் துறையில் அரசாங்கத்தின் பொது வருமானம் அதிகமாக உயர்ந்தது என்று கூற முடியாது. 1860-க்கும் 1870-க்கும் இடையில் காடுகளைக் காப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றின் பயனாகக் காடுகள் அபிவிருத்தியடையத் தொடங்கின. காடுகளில் அபினி செய்வதற்கு வேண்டிய மூலப்பயிர் அதிகமாக விளைந்தது. லைசென்ஸ் பெற்ற குடியானவர்கள் அந்தப் பயிரை விளைவித்து அதை அரசாங்கத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பினார்கள். அது அங்குப் பக்குவம் செய்யப்பட்டுச் சீனா முதலிய கீழ் நாடுகளுக்கு விற்பனைக்கனுப்பப்பட்டது. அபினி வியாபாரம் கம்பனியின் தனியுரிமையாக இருந்தது. அந்த வியாபாரத்தின் மூலம் வந்த வருமானம் மொத்த நிலவரியில் ஏறக்குறையப் பாதியாகவும் உப்புவரியால் வந்த வருமானத்திற்குச் சமமாகவும், சில சமயங்களில் அதைவிட அதிகமாகவும் கூட இருந்தது.

கடைசியாக நிலவரியைப் பற்றிப் படிப்போம். கம்பனியாட்சி ஏற்படுவதற்கு முன்னால் நிலவரி மொத்த விளைவில் மூன்

றில் ஒரு பகுதியிலிருந்து இரண்டிலொரு பகுதிவரையிலும் வசூலிக்கப்பட்டு வந்தது. கம்பனியாட்சி ஏற்பட்டபிறகு அவ்வளவு வரி வசூலிக்க முடியாதென்று புலனாயிற்று. ஆகவே குடியானவர்களுக் கேற்பட்ட செலவுபோக மீதி வருமானத்தில் ஏறக்குறைய ஒரு பாதிதான் வரியாக நிர்ணயிக்கப்பட்டது. சாதாரண காலங்களில் இந்தத் தொகை எளிதாகவும் காலந்தவறுமலும் வசூலிக்க முடிந்தது. ஆனால் மழை மறுத்த காலத்தில் நில வரி வருமானம் மிகக் குறைந்துவிடும். அதுமாத்திரமின்றி, பஞ்ச நிவாரணத்திற்காகவும் அரசாங்கம் பெருந்தொகை செலவிடவேண்டி யேற்படும். ஆகவே, நிலவரியின் மூலமாக எதிர்பார்த்த தொகை எப்பொழுதுமே வசூலாகுமென்று நினைக்க முடியாது.

இதுவரையில் அரசாங்க வரவைப்பற்றிப் படித்தோம். இனிச் செலவைப் பற்றிப் படிப்போம். ராணுவத்திற்காக ஆண்டுதோறும் பதினாறு முதல் பதினெட்டுக் கோடி ரூபாய் வரையில் செலவாயிற்று. செலவு வகைகளில் இதுவே மிகப் பெரிய இனமாகும். அரசாங்கக் கடன் வகையில் ஆண்டுதோறும் ஐந்துமுதல் ஆறுகோடி ரூபாய் செலவாயிற்று. மீதியிருந்த வருமானம் சிவில் நிர்வாகத்திற்காகச் செலவழிக்கப் பட்டது. பஞ்சம் ஏற்படாத காலங்களில் ரஸ்தா முதலிய பொது வேலைகளுக்கு ஏராளமான பணம் இருந்தது. தற்காலத்தில் முக்கியமாகக் கருதப்படும் ஆக்கத் துறைகளுக்கு அந்தக்காலத்தில் அதிகப் பணம் செலவு செய்யப்படவில்லை. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் கல்வி, மருத்துவ உதவி, சுகாதார வசதி முதலியவை மிகச் சிறிய இனங்களாக இருந்தன. விவசாய இலாக்காவும் கைத்தொழில் இலாக்காவும் இன்னும் ஏற்படவேயில்லை. சிவில் நிர்வாகத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகையின் பெரும் பகுதி நீதி ஸ்தலங்களுக்காகவும், போலீஸ் இலாகாவிற்காகவும், வரிவசூல் இலாகாவிற்காகவும் செலவழிக்கப்பட்டது.

1860-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கு மிடையில் சண்டைகளால் அரசாங்க வரவு செலவுத்திட்டம் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால் பஞ்சத்தினால் வரவு செலவுத் திட்டம் அதிகமாக பாதிக்கப்பட்டதென்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். 1860-ஆம் ஆண்டில் வட மேற்கு மாகாணத்தில் பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் இருப்புப்பாதைகளின் வழியாக வேண்டிய அளவு உணவுப்பொருள்கள் அங்குப் போய்ச் சேர்ந்தன. இதுவே தற்காலப் பஞ்சங்களில் முதன்மையானது

பழையகாலத்தில் பஞ்சமேற்பட்டால் உணவின்றிப் பல மக்கள் மடிய நேரிடுமென்று நாம் ஏற்கெனவே படித்தோம். ஆனால் இருப்புப் பாதைகள் ஏற்பட்டபிறகு மக்கள் உணவின்றி இறக்க வேண்டிய நிலை ஏற்பட முடியாது. ஆகவே தற்காலப் பஞ்ச மென்பது வேலையில்லாப் பஞ்சமே ஒழிய உணவில்லாப் பஞ்ச மன்று. 1866-ஆம் ஆண்டில் ஒரிஸாவிலும் அதை ஒட்டிய கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்திலும் பஞ்சமேற்பட்டது, இது பழைய பஞ்சங்களின் வகையைச் சேர்ந்தது. ஏனெனில் அங்கு இருப்புப்பாதைகள் இன்னுமேற்படவில்லை. ஆகவே அரசாங்கம் பெருந்தொகை செலவுசெய்ததெனினும் உதவி போய்ச் சேர்வதற்குள் மக்கள் பெருவாரியாக மடிந்துவிட்டனர். 1868-ஆம் ஆண்டில் ராஜபுதனத்தில் பஞ்சமேற்பட்டது. அங்கும் இருப்புப்பாதைகள் இல்லாததால் அதிகமான ஜனங்கள் இறந்தனர். 1873-ஆம் ஆண்டில் பீகாரில் பஞ்சமேற்பட்டது. ஆனால் தேவைக்கு அதிகமான அளவில் அரசாங்கம் பஞ்ச நிவாரண வேலையைச் செய்து மக்களைக் காப்பாற்றியது. 1878-ஆம் ஆண்டில் ஏறக்குறையத் தென்னிந்தியா முழுவதிலும் வட இந்தியாவின் பல பகுதிகளிலும் கொடிய பஞ்சமேற்பட்டது. அதன் பயனாக மிகப்பல மக்கள் மடிந்தனர். அதன்பின்னர்ச் சுமார் இரு பதாண்டுகள் பஞ்சமில்லாமலே யிருந்தது. மேலே கூறின பஞ்சங்களைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒரு பஞ்சக் கமிஷன் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிஷனின் அறிக்கை 1880-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை இந்தியாவின் பொருளாதார வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. பஞ்சமேற்பட்டால் அதை நிவிர்த்தி செய்வதற்கான வழிவகைகளைக் கூறுவதோடு அந்த அறிக்கை நின்று விடவில்லை. மக்களுடைய பொருளாதார நிலையை யுயர்த்துவதற்கு அரசாங்கம் இடைவிடாது உழைக்கவேண்டுமென்றும், அப்படிச் செய்தால் பருவமழை மறுத்தகாலத்திலும் பஞ்சத்தைச் சமாளிக்கக் கூடியநிலை ஏற்படுமென்றும் கூறியதோடு அதற்கு வேண்டிய முறைகளையும் அந்த அறிக்கை எடுத்துக் கூறியது.

அரசாங்க வரவுசெலவுத் திட்டம் சண்டைகளால் அதிகம் பாதிக்கப்படவில்லை யென்று சற்று முன்னர் நாம் கூறியபோதிலும் ஆப்கானிய யுத்தங்களால் அதிகச் செலவாயிற்று என்றும், அதனால் அரசாங்க வரவுசெலவுத் திட்டம் பாதிக்கப்பட்டதென்றும் இங்குக் குறிப்பிடுவது அவசியம். ஆப்கானிய யுத்தத்தாலும் பஞ்சங்களாலும் ஏற்பட்ட செலவினால் அரசாங்கக் கடன்

ஏறக்குறைய நூற்றுக்கு ஐம்பது விகிதம் உயர்ந்தது. இந்த இருவகையாலும் ஏற்பட்ட கடனுல் அரசாங்கத்திற்குச் செலவே யொழிய வருமானம் கிடையாது. வருமானம் தரக்கூடிய வகை யிலும் அரசாங்கக் கடன் இருந்தது என்பதை நாம் அறிவோம். இருப்புப்பாதைகள் அமைப்பதற்கும் நீர்ப்பாசன வசதிகள் ஏற் படுத்துவதற்கும் வேண்டிய மூலதனத்திற்காக வாங்கப்பட்ட கடன்கள் இந்தவகையைச் சேர்ந்தவை. கால்வாய்களெல்லாம் அரசாங்கத்தாலேயே வெட்டப்பட்டன. ஆனுல், இருப்புப் பாதைகளை எல்லாம் அரசாங்கமே அமைக்கவில்லை. முதலில் ஏற்பட்ட இருப்புப்பாதைகள் எல்லாம் லண்டனில் இருந்த கம் பனிகளால் அமைக்கப்பட்டவை. அந்தக் கம்பனிகள் போட்ட மூலதனத்தின் மீது நூற்றுக்கு ஐந்து விகிதத்துக்குக் குறையாத வட்டி கிடைக்குமென்று அரசாங்கம் உத்தரவாதம் கொடுத்தது. அதற்குமேல் வரக்கூடிய லாபத்தில் ஒரு பகுதி அரசாங்கத்திற் குச் சேரவேண்டும் என்றும், குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு கம்பனிகளால் போடப்பட்ட மூலதனத்தைக் கொடுத்துவிட்டு அரசாங்கமே அவ்விருப்புப் பாதைகளை எடுத்துக்கொள்ள உரிமையுண்டென்றும் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது. இந்த முறை அவ்வளவாக நல்ல முறையாகத் தோன்றவில்லை. கம்பனிகள் போட்ட முதலுக்கு நூற்றுக்கு ஐந்து விகிதம் வட்டி கிடைப்பது உறுதியாகையால் அவைகள் செலவைக் குறைக்க முயற்சி செய்யவில்லை. ஆகவே 1869-ஆம் ஆண்டில் அரசாங் கமே இருப்புப்பாதைகளை ஏற்படுத்துவதென்றும், அதற்கு வேண்டிய மூலதனத்தைப் பொதுமக்களிடமிருந்து கடன் வாங் கிக் கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த முறை 1880-ஆம் ஆண்டுவரையில் வழக்கிலிருந்தது. ஆனுல் இருப்புப் பாதைகளை யமைக்கும் வேலை துரிதமாக முன்னேறவில்லை. 1880-ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்த மொத்த இருப்புப் பாதையின் நீளம் ஒன்பதாயிரம் மைல்தான். பஞ்சமேற்பட்ட இடங்களில் மக்களுக்கு உணவு போய்ச் சேரவேண்டுமானுல் இன்னும் ஐயாயிரம் மைல் நீளமுள்ள இருப்புப்பாதையாவது ஏற்படவேண்டுமென்று பஞ்சக் கமிஷன் அறிக்கையின் மூலம் புலனுயிற்று. ஆகவே மறுபடியும் இருப்புப்பாதைகளை யமைக் கும் வேலையில் ஒரு பகுதியைக் கம்பனிகளுக்கே கொடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டது.

அரசாங்கத்தால் வேகமாக இருப்புப்பாதைகளை அமைப்ப தற்கு முடியாமற் போனதற்கு முக்கிய காரணம் அதற்கு வேண்

டிய அளவு தொகையைப் பொதுமக்களிடமிருந்து கடன்வாங்க முடியாததுதான். அரசாங்கப் பத்திரங்களில் பணம் போட்டு வைக்கும் பழக்கம் கொஞ்சங் கொஞ்சமாக இந்தியாவில் பரவத் தொடங்கியது. ஒவ்வோராண்டும் சிறு தொகைகளை அரசாங்கம் பொது மக்களிடமிருந்து கடனாக வாங்க முடியும். இவ்வாறு அரசாங்கத்திற்குக் கடன் கொடுத்த மக்களிற் பெரும்பான்மை யோர் பிரசிடென்சி நகரங்களில் வசிப்பவர்களாக இருந்தார்கள். ஆனால் இந்த வகையில், வசூலாகக்கூடிய தொகை மிகச் சிறிய தாகவே யிருந்ததால் அதற்குமேல் தேவையான தொகைகளை லண்டன் மார்க்கட்டில்தான் கடன்வாங்க முடியும். ஆனால் லண்டனில் கடன் வாங்குவது இந்திய அரசாங்கத்திற்கு நஷ்டத்தை விளைவிப்பதாக இருந்தது. அதற்குக் காரணம் ஆங்கில நாணயமாகிய ஸ்டர்லிங்குக்கும் இந்திய நாணயமாகிய ரூபாய்க் கும் இடையில் இருந்த நாணயமாற்று விகிதத்தில் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டே இருந்த மாறுதல்தான். ரூபாயின் மதிப்பு 1875-ஆம் ஆண்டிலிருந்து குறைந்துகொண்டே வந்தது. விடுமுறை பெற்று இங்கிலாந்தில் தாற்காலிகமாகத் தங்கியிருந்த ஆங்கில உத்தியோகஸ்தர்களுடைய சம்பளத்திற்காகவும், அவர்கள் வேலையிலிருந்து நீங்கியபிறகு அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்த பென்ஷனுக்காகவும், ஐரோப்பாவிலிருந்து விலைக்கு வாங்கிக்கொண்டு வந்த யுத்த தளவாடங்கள் இருப்புப் பாதைச் சாமான்கள் ஆகியவற்றிற்காகவும், இங்கிலாந்தில் வாங்கி யிருந்த ஸ்டர்லிங் கடனுக்காகச் செலுத்தவேண்டி யிருந்த வட்டிக்காகவும் இந்திய அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் அதிகமான ஸ்டர்லிங்கு தேவையாக இருந்தது. மேலும் பழைய இருப்புப் பாதைக் கம்பனிகளுக்குக் கொடுத்திருந்த உத்தரவாதத்தின்படி அவைகளுக் கனுப்பவேண்டியிருந்த தொகைகளுக்காகவும் ஸ்டர்லிங்கு தேவையாக யிருந்தது. ரூபாயின் மதிப்புக் குறைந்து கொண்டே வந்ததால் ஸ்டர்லிங்கு வாங்குவதற்காக அனுப்ப வேண்டியிருந்த ரூபாய்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே சென்றது. ஸ்டர்லிங்குக்கும் ரூபாய்க் கும் இடையிலிருந்த நாணயமாற்று விகிதம் ஒரே நிலையிலிருந் தால் லண்டனில் கடன் வாங்குவதற்கு எவ்விதத் தடையும் இருக்கமுடியாது. ஆனால் ரூபாயின் மதிப்புக் குறையத் தொடங் கியதும் அது எவ்வளவு குறையுமென்று சொல்லக்கூடாத நிலை மையில் ஸ்டர்லிங்குக் கடனை அதிகப்படுத்திக்கொண்டு போவது அதிக ஆபத்தாக முடியும்.

ரூபாயின் மதிப்பு எவ்வாறு குறைந்தது என்பதைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறோம். இங்கிலாந்தில் சவரன் என்ற தங்க நாணயம் அந்தக் காலத்தில் உபயோகத்திலிருந்தது. யார் வேண்டுமானாலும் ஒரு குறிப்பிட்ட எடையுள்ள தங்கத்தைக் கொடுத்து, அதற்குப் பதிலாக அரசாங்கத்தினிடமிருந்து ஒரு சவரனைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தியாவிலும் குறிப்பிட்ட எடையுள்ள வெள்ளியைக் கொடுத்துவிட்டு அதற்குப் பதிலாக யார் வேண்டுமானாலும் அரசாங்கத்தினரிடமிருந்து ஒரு ரூபாய் நாணயத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலை அப்பொழுதிருந்தது. ஆகவே, ஒரு சவரன் வாங்குவதற்கு எவ்வளவு ரூபாய் தேவையாக இருக்கும் என்ற விஷயம் தங்கத்தின் மார்க்கட்டு விலையையும் வெள்ளியின் மார்க்கட்டு விலையையும் பொறுத்ததாக இருந்தது. இந்த இரு உலோகங்களின் விலைகளும் அவற்றின் உற்பத்தியையும் தேவையையும் பொறுத்தவையாக இருந்தன. கம்பனியின் ஆட்சிக் காலத்தில் இந்த இரு உலோகங்களின் விலைகளிலும் அதிகமான மாறுதல் ஏற்படவில்லை. அந்தக் காலத்தில் ஒரு சவரன் பத்து ரூபாய் மதிப்புடையதாக இருந்தது. இந்த விகிதத்தில் அவ்வப்போது ஏற்பட்ட மாறுதல்கள் மிகச் சிறியவையாக இருந்தன. ஆனால் 1860-ஆம் ஆண்டுக்கும் 1870-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பொதுவாகத் தங்கத்தின்விலை உயர்ந்துகொண்டே சென்றது. வெள்ளியின் விலை அவ்வளவாக உயரவில்லை. எனினும் வெள்ளியின் விலைக்கும் தங்கத்தின் விலைக்கும் இருந்த விகிதத்தில் சிறிதுகாலம் அதிக மாறுதல் ஏற்படவில்லை. ஏனெனில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்த முக்கியமான நாணய உற்பத்தி நிலையங்கள் வெள்ளியை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாகத் தங்க நாணயங்களைக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. ஆனால் அந்த நாடுகள் தேவைக் கதிகமான வெள்ளி தங்களுடைய நாணய உற்பத்தி நிலையங்களில் வந்து சேருவதைக் கண்டு 1873-ஆம் ஆண்டிலும் 1874-ஆம் ஆண்டிலும் வெள்ளியை ஏற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக நாணயங்களைக் கொடுக்கும் பழக்கத்தை நிறுத்திவிட்டன. அதனால், வெள்ளிக்கிருந்த தேவை குறைந்தது. ஆகவே, வெள்ளியின் விலை குறைந்தது. வெள்ளியை ஏற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக ரூபாய்களைக் கொடுக்கும் பழக்கம் இந்தியாவில் இன்னும் இருந்தபடியால் ரூபாயின் மதிப்புக் குறைந்தது. 1878-ஆம் ஆண்டில் இந்தியாவிலும் தங்கத்தை யடிப்படையாகக் கொண்ட ஒரு நாணய முறையை ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய அரசாங-

கும் யோசனை செய்தது. ஆனால், அந்த யோசனையை இங்கிலாந்திலிருந்த அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்நிய நாடுகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு அதன்மூலம் ரூபாயின் மதிப்பை ஸ்திரப்படுத்தலாமென்ற எண்ணத்துடன் அடுத்த பத்தாண்டுகளில் முயற்சி செய்யப்பட்டது. அம்முயற்சி பயனளிக்கவில்லை. ஆகவே ரூபாயின் எதிர்கால நிலை எவ்வாறு இருக்குமென்று 1880-ஆம் ஆண்டில் யாராலும் கூறமுடியவில்லை. அப்பொழுது ஒரு ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங்கு ஒன்பது பென்சாக இருந்தது. ஆனால், அத்தோடு நிற்காமல் அந்த மதிப்பு இன்னும் குறைந்து கொண்டே சென்றதால் ஓராண்டிற்குப் பிறகு அதன் மதிப்பு எவ்வளவு இருக்குமென்று யாராலும் சொல்லமுடியவில்லை. இந்த நிச்சயமற்ற நிலைமையினால் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டது. இருப்புப் பாதைகளை யமைப்பதற்கும், நீர்ப்பாசன வசதிகளைச் செய்வதற்கும் தேவையான மூலதனம் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை. இந்த நிலை ஏறக்குறையப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையிலும் இருந்தது.

இந்த அதிகாரத்திற்கூறிய அரசியல் வரவு செலவு விஷயங்கள் எல்லாம் ஆங்கில நிர்வாகத்திலிருந்த இந்தியாவுக்குப் பொருந்துமே ஒழியச் சுதேச ஸம்ஸ்தானங்களுக்குப் பொருந்தா. அங்கெல்லாம் அரசாங்க வரவுச் செலவுத் துறையில் இன்னும் எந்த விதமான சீர்திருத்தமும் ஏற்படவில்லை. பழைய முறைகளே இன்னும் அங்குப் பின்பற்றப்பட்டன. எவ்வளவு அதிகமாக மக்களிடமிருந்து வசூலிக்க முடியுமோ அவ்வளவு அதிகமான வரி வசூலிக்கப்பட்டது. செலவைக் குறைப்பதற்கு எந்த விதமான முயற்சியும் செய்யப்படவில்லை. சில ஸம்ஸ்தானங்களில் பெருந்தொகைகள் கஜானாவில் தூங்கிக் கொண்டிருந்தன. அவற்றை அரசர்கள் நாட்டின் நன்மைக்குபயோகப்படுத்தாமல் தங்களுக்கு விருப்பமான துறையில் செலவழித்துக் கொண்டிருந்தார்கள்.

அதிகாரம்—47

பொது வரலாறு 1880–1905

இராஜப் பிரதிநிதிகள் :—

ரிப்பன் பிரபு	...	1880—1884
டபரின் பிரபு	...	1884—1888
லான்ஸ்டவுன் பிரபு	...	1888—1894
எல்ஜின் பிரபு	...	1894—1899
கர்ஸான் பிரபு	...	1899—1905

சென்ற மூன்றதிகாரங்களில் பொருளாதாரத் துறையிலும், கலாசாரத் துறையிலும், வெளிநாட்டுக் கொள்கைகளிலும், அரசாங்க வரவுசெலவு திட்டத்திலும் தோன்றிய புதிய முன்னேற்றங்களையும் மாறுதல்களையும்பற்றிப் படித்தோம். அந்தத் துறைகளில் 1880-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளைப் பற்றி இனிமேல் கூறுவோம். குறிப்பாக, தேசீய உணர்ச்சி, பிரதேச உணர்ச்சி, வகுப்பு உணர்ச்சி ஆகிய பொது உணர்ச்சிகள் மக்களுடைய மனத்தில் வேரூன்றி வளர்ச்சிபெற்ற விதத்தைப் பற்றிப் படிப்போம். இந்த இயக்கங்களைப்பற்றிக் கூறுவதற்கு முன்னுல் இந்தக் காலத்தியப் பொது வரலாற்றை இந்த அதிகாரத்தில் சுருக்கிக் கூற முயல்வோம்.

எல்லைப்புறத்தில் ருஷியர்களுடைய நடவடிக்கைகள் இந்திய அரசாங்கத்திற்குக் கவலையைத் தருவனவாகவே யிருந்தன. சமீப காலத்தில் ருஷியர்களுடைய ஆட்சிக்குள் வந்த மெருநதிக்குத் தெற்கிலுள்ள பிரதேசத்திற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையில் எல்லையை நிர்ணயிப்பதற்காக 1885-ஆம் ஆண்டில் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த பொழுது ருஷியப் படைகள் திடீரென்று ஆப்கானிஸ்தானத்தின் எல்லைக்குள் பிரவேசித்தன. ஆனுல் சண்டை ஏற்படவில்லை. அடுத்த ஆண்டில் இருநாடுகளுக்கும் இடையிலுள்ள எல்லை நிர்ணயிக்கப்பட்டது. 1891-ஆம் ஆண்டிலிருந்து ஆப்கானிஸ்தானத்தினுடைய வட கிழக்கு மூலையில் ருஷியர்கள் தீவிரமாக நடவடிக்கைகளைத் தொடங்கினுர்கள். ஆனுல் 1895-ஆம் ஆண்டில் இந்தப் பகுதியிலும் எல்லை நிர்ணயிக்கப்பட்டது. ஏழாண்டுகளுக்குப் பின் ருஷியா திபேத்தைப் பிடித்துக்கொள்ள முயல்வதாக இந்திய அரசாங்கம் நினைத்தது. நேபாளத்தின் இரு மருங்கிலும் திபேத்

தின் எல்லை இந்தியாவின் எல்லையைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. உண்மையில் ருஷியர்கள் திபேத்தில் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்று கூறமுடியாது. ஏனெனில் அந்தக் காலத்தில் இந்தியாவிற்கும் திபேத்துக்கும் இடையில் இருந்த எல்லையைத் தாண்டிச் செல்வதற்குத் திபேத்து அரசாங்கம் யாருக்கும் அனுமதியளிக்கவில்லை. முடிவில் ஒரு தூது கோஷ்டியைத் திபேத்துக்கனுப்புவது என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்தது. வழியில் ஓரளவு சண்டை செய்த பின்னர் இந்தத் தூது கோஷ்டி 1904-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் திபேத்தின் தலைநகரையடைந்து, அங்கிருந்த அதிகாரிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டது. இதற்குள்ளாக ஐரோப்பாக் கண்டத்தில் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் இடையில் நட்பு வளர்ந்துகொண்டு வந்ததால் திபேத்து விஷயம் முக்கியத்துவத்தை இழந்தது. 1907-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்படிக்கைப்படி திபேத்திற்கும் இந்தியாவுக்கும் புதிய உறவு தோன்றியது. அதன் பின்னர்த் திபேத்தின் மூலமாக இந்தியாவுக்கு ருஷியர்களால் ஆபத்து ஏற்படுமென்ற அச்சம் நீங்கிற்று.

ஆப்கானிஸ்தானத்தில் அப்துர் ரஹமானே ஆட்சிசெய்து வந்தான். அவன் 1901-ஆம் ஆண்டில் இறந்தபின் அவனுடைய மகன் ஹபீபுல்லா பட்டத்திற்கு வந்தான். அப்துர் ரஹமான் ஏற்கெனவே செய்திருந்த உடன்படிக்கைப்படி ஆப்கானிஸ்தானத்தின் வெளிநாட்டுத் தொடர்புகளெல்லாம் இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் தான் நடைபெறவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டதென்பதை முன்னரே கூறியிருக்கிறோம். இந்த நிலையை அப்துர் ரஹமானும் விரும்பவில்லை. ஹபீபுல்லாவும் விரும்பவில்லை. லண்டனிலிருந்த அதிகாரிகளோடு நேரடியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு அவ்விருவரும் செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள பிரதேசத்தில் பல தலைவர்கள் இருந்தார்களென்று முப்பத்திரண்டாம் அதிகாரத்தில் கூறியிருக்கிறோம். அவுரங்கஜீபின் காலத்தில் அவர்களுடைய நடவடிக்கைகளைப்பற்றி அதே அதிகாரத்தில் கூறியிருக்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட பின்னரும் அவர்களுடைய பழக்க வழக்கங்களிலும் குணதிசயங்களிலும் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. பழையபடியே அவர்கள் இந்திய எல்லைக்குள் அடிக்கடி படையெடுத்துக் கொள்ளையடித்தார்கள். அதனால் அவ்வப்போது போக்கு வரவில் தடையேற்பட்டது. இம்முரட்டுக்

கூட்டத்தினரின் படையெழுச்சிகளைத் தடுப்பதற்காகவும் அவர்களைத் தண்டிப்பதற்காகவும் ஆங்கிலப் படைகள் அக்கூட்டத்தினர் வாழ்ந்த பிரதேசத்தின்மீது அடிக்கடி அனுப்பப்பட்டன. மேலும், கேந்திரஸ்தானங்களில் சில கோட்டைகளும் கட்டப்பட்டன. இந்திய அரசாங்கம் கையாண்ட இந்த "முன்னேற்றக் கொள்கை" யால் அந்தக் கூட்டத்தினரின் சுதந்திரம் பறிக்கப்படலாம் என்ற அச்சம் தோன்றியது. 1890-ஆம் ஆண்டுக்கும் 1900-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இக்கூட்டத்தினர் வாழ்ந்த பகுதியில் ஆங்கிலேயருக்கெதிராகக் கிளர்ச்சிகள் அடிக்கடி தோன்றின. இதனால் ஏற்பட்ட நெருக்கடி ஆப்கானிய அரசன் செய்த சூழ்ச்சிகளால் அதிகமாயிற்று. இந்திய அரசாங்கத்தின் முன்னேற்றக் கொள்கையால் ஆப்கானிஸ்தானத்திற்கும் ஆபத்து ஏற்படக்கூடுமென்று அவன் அஞ்சினான். இதனாலும் இந்திய அரசாங்கத்திற்கும் ஆப்கானிய அரசனுக்கும் கருத்து வேறுபாடு வளர்ந்தது. 1893-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கூட்டத்தினர் வாழ்ந்த பிரதேசத்தின் ஒரு பகுதி ஆப்கானிஸ்தானத்தின் மேற்பார்வையிலும், இன்னொரு பகுதி இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் இருக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தால் உடனடியாகப் பெரும்பயன் ஒன்றும் ஏற்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலிருந்த கூட்டத்தினர் ஆப்கானிஸ்தானத்தின் உதவியையும் ஆதரவையும் எதிர்பார்த்தார்கள். 1897-ஆம் ஆண்டில் மிக நெருக்கடியான நிலை ஏற்பட்டது. சுதந்திர வேட்கையும், கண்மூடித்தனமான மதப்பற்றும் மிகுந்த அக்கூட்டத்தினர் இந்தியாவின் எல்லையில் ஆங்காங்குக் கலகஞ் செய்யத் தொடங்கினார்கள். அதனால், இந்திய அரசாங்கம் அதிகமான படைகளை யனுப்பிக் கலகங்களை அடக்கவேண்டியிருந்தது. மேலும் இந்திய எல்லைக்கு அப்பாலிருந்த இன்னும் பல கேந்திரஸ்தானங்களில் பிரிட்டிஷ் படைகள் வைக்கப்பட்டன.

கர்ஸான் பிரபுவின் காலத்தில் எல்லைப்புறக் கொள்கையில் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்பட்டது. இந்திய எல்லைக்கு அப்பால் தூரத்திலிருந்த கேந்திரஸ்தானங்களில் வைக்கப்பட்டிருந்த படைகள் திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டன. மீதியிருந்த கேந்திரஸ்தானங்கள் பலப்படுத்தப்பட்டு அவற்றிற்கிடையே போக்குவரத்து வசதிகளும் அதிகப்படுத்தப்பட்டன. இந்திய எல்லைக்கு அப்பாலிருந்த பிரதேசத்தின் அமைதியைக் காப்பதற்கு எல்லைப்புறவாசிகளினிடையிலிருந்தே பொறுக்கி எடுத்த போர்

வீரர்கள் நியமிக்கப்பட்டனர். வேண்டும்போது அவர்களுக்கு இந்திய அரசாங்கமும் உதவி செய்யும். 1904-ஆம் ஆண்டுக்குள் வடமேற்கு எல்லையின் வட பகுதியில் இந்த முறை அமுலுக்கு வந்துவிட்டது. அதன் பயனாக அந்தப் பகுதியில் எல்லைப்புற வாசிகளால் ஏற்பட்ட தொல்லை குறைந்தது. ஆனால் எல்லைப் புறத்தின் மத்தியப் பகுதியாகிய வாஜிரிஸ்தானத்தில் இந்த முறை இன்னும் இருபதாண்டுகள் கழிந்த பின்னரே புகுத்தப்பட்டது. அந்த இருபதாண்டுக் காலத்தில் வாஜிரிஸ்தானத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் ஆபத்து ஏற்படக்கூடுமென்று இந்திய அரசாங்கம் பயந்துகொண்டே இருந்தது. எல்லைப்புறக் கொள்கையில் ஏற்பட்ட இந்தச் சீர்திருத்தத்திற்கு அநுகூலமாக இருக்கும் என்ற எண்ணத்துடன் கர்ஸான் பிரபு 1909-ஆம் ஆண்டில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தை ஏற்படுத்தினான். அதுவரையில் பஞ்சாப் மாகாணத்தோடு சேர்ந்திருந்தவையும் சிந்து நதிக்கு மேற்கிலிருந்தவையும் ஆகிய ஐந்து ஜில்லாக்களும், எல்லைப்புறத்தில் இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலிருந்த பகுதியும் சேர்ந்துதான் இந்தப் புதிய மாகாணம் உருவாயிற்று. இந்த மாகாணத்தின் ஆட்சியை நடத்துவதற்கு ஒரு தலைமைக் கமிஷனர் நியமிக்கப்பட்டான். அந்த மாகாணத்தில் அடங்கியிருந்த ஐந்து ஜில்லாக்களின் ஆட்சியைக் கவனிப்பதோடு எல்லைப்புறத்தில் அமைதி குலையாமல் பார்த்துக்கொள்ளுவதும், பிரிட்டிஷாரின் மேற்பார்வையிலிருந்த எல்லைப்புறவாசிகளோடு ஏற்பட்டிருந்த அரசியல் தொடர்புகளைச் சரியான முறையில் நடத்துவதும் அந்தத் தலைமைக் கமிஷனரின் வேலைகள்.

இந்திய அரசாங்கத்தின் எல்லைப்புறக் கொள்கை அதிகாரிகளுக்குள் அதிகமான கருத்து வேறுபாட்டிற்குக் காரணமாயிருந்திருக்கிறது. எல்லைப் பிரதேசத்தின் வளமற்ற தன்மையும் மக்களுடைய ஏழ்மை நிலையுந்தான் அவர்களுடைய படையெழுச்சிகளுக்குக் காரணமாயிருந்தன. இந்த நிலையை மாற்றுவதற்கு இந்திய அரசாங்கம் கையாண்ட முன்னேற்றக் கொள்கை பயனளிக்காது. அதுபோலவே அவர்கள் வெளியே வரமுடியாமல் எல்லையைப் பூரணமாக அடைத்துவிடுவதும் அவர்களுடைய நிலையை அபிவிருத்தி செய்யாது. சாண்டிமான் பலூச்சிஸ்தானத்தில் கையாண்ட முறைகள்தாம் எல்லைப்புறவாசிகளின் நிலையையுயர்த்தி எல்லைப்புறத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஏற்றவை. அந்த முறைகளால் மக்களுடைய வருமானம் பலவழிகளிலும் உயரக்கூடும். ரஸ்தாக்களை அமைத்தல், பழத் தோட்டம்

போன்ற விவசாய முறைகளை அபிவிருத்தி செய்தல், எல்லைப்புறப் படையிலும் இந்தியச் சைனியத்திலும் எல்லைப்புற வாசிகளுக்கு வேலை கொடுத்தல் முதலிய முறைகளால் எல்லைப்புற வாசிகளின் வருமானம் சமீபகாலத்தில் மிக உயர்ந்திருக்கிறது. எதிர் காலத்திலும் அரசியல் மாறுதல்களைக் காட்டிலும் பொருளாதார உயர்வு தான் எல்லைப்புறப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏற்றதாக இருக்கும்.

அடுத்தபடியாக அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தைப் பற்றிக் கவனிப்போம். 1880-ஆம் ஆண்டுக்கும் 1890-ஆம் ஆண்டுக்கும் இடையில் ரூபாயின் மதிப்புக் குறைந்துகொண்டே வந்தது. 1890-ஆம் ஆண்டில் ஒரு ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங் நாலு பென்ஸுதான். மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ரூபாயின் மதிப்பைக் காப்பாற்றுவதற்குச் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன. 1892-ஆம் ஆண்டில் வெள்ளியை ஏற்றுக்கொண்டு அதற்குப் பதிலாக ரூபாயைக் கொடுக்கும் முறை கைவிடப்பட்டது. இவ்வாறு ரூபாய்க்கும் வெள்ளியின் மார்க்கட் நிலவரத்துக்கும் இருந்த தொடர்பு நீங்கியது. இன்னும் சில ஆண்டுகள் ரூபாயின் மதிப்புக் குறைந்து கொண்டே வந்தது. ஆனல் மறுபடியும் ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங் நாலு பென்ஸாக உயர்ந்தது. அந்த மதிப்பு நிரந்தரமாக ஸ்திரப்படுத்தப்பட்டது. அந்தக் காலத்திலிருந்து ரூபாயின் மதிப்புக்கும் வெள்ளியின் மார்க்கட் விலைக்கும் தொடர்பற்றுப் போய்விட்டது. ஒரு ரூபாய் ஒரு ஸ்டர்லிங்கின் பதினைந்தில் ஒரு பங்கின் மதிப்பைக் காட்டும் சின்னமாக மாறியது. முதல் உலக யுத்தத்துக்குப் பின்னர் நாணய நெருக்கடி ஏற்பட்ட காலம் வரையில் ரூபாயின் மதிப்பு ஒரு ஷில்லிங் நாலு பென்ஸாகவே இருந்தது.

ஆகவே 1880-ஆம் ஆண்டுக்கும் 1900-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அரசாங்கத்தின் பொருளாதார நிலை கஷ்டமானதாகவே யிருந்தது. அதனல் அரசாங்கம் பல துறைகளில் செலவைக் குறைக்கவேண்டி யிருந்தது. இருப்புப்பாதைகள் நீர்ப்பாசன வசதிகள் முதலிய காரியங்களுக்குச் செலவு செய்யப் பணமில்லாமல் போய்விட்டது. வரிகளையும் அடிக்கடி உயர்த்த வேண்டியதாயிற்று. உப்பு வரி உயர்ந்தது. 1886-ஆம் ஆண்டில் வருமான வரி நிரந்தரமாக விதிக்கப்பட்டது. 1894-ஆம் ஆண்டில் இருந்து இறக்குமதி வரிகள் மறுபடியும் விதிக்கப்பட்டன. அதே சமயத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான துணிகளு

டன் போட்டியிட்ட இந்திய மில் துணிகள்மீதும் உற்பத்தி வரி விதிக்கப்பட்டது. அதனால் இந்தியர்கள் ஆங்கிலேயர்மீது பெருஞ்சீற்றங் கொண்டார்கள். மற்ற இந்தியக் கைத்தொழில்களின்மீது இத்தகைய வரி விதிக்கப்படவில்லை. இந்திய மில் துணிகளின்மீது விதிக்கப்பட்ட வரியினால் உண்டான கோபம் அந்த வரியைக் கடைசியாக நீக்கிய பிறகும் தணியவில்லை. இந்தியக் கைத்தொழில்களை மேலோங்க விடாமல் நசுக்குவதே ஆங்கிலேயர் நோக்கம் என்ற எண்ணம் இந்தியர் மனத்தில் வேரூன்றிவிட்டது.

இந்தியாவில் இறக்குமதியான வெளிநாட்டுச் சர்க்கரையின் மீதும் வரி விதிக்கப்பட்டது. ஆனால், இந்த வரியால் இந்திய மக்களுக்கு நன்மையே தவிரத் தீமை ஏற்படவில்லை. பல ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான சர்க்கரை உற்பத்தியாயிற்று. அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புபவர்களுக்கு அந்த நாடுகள் உதவி நிதியளித்தன. அவ்வாறு உதவி நிதிபெற்று இந்தியாவில் இறக்குமதியான சர்க்கரையின் விலை மிகக் குறைவாக இருந்ததில் வியப்பில்லை. ஆகவே அந்தச் சர்க்கரையோடு பழைய முறைகளில் உற்பத்தியான இந்தியச் சர்க்கரை போட்டியிட முடியவில்லை. அதனால் இந்தியாவில் சர்க்கரை உற்பத்தி குறைந்தது. அதன் பயனாகக் கரும்புப் பயிர்த்தொழிலும் க்ஷீணதசை யடைந்தது. வட இந்தியாவில் பெருந்தொகையான குடியானவர்கள் கரும்புப் பயிரையே நம்பி வாழ்ந்தார்கள். அவர்களைக் காக்கும் நோக்கத்துடன் 1899-ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சர்க்கரையின் மீது வரி விதிக்கப்பட்டது. அதன்பயனாக வெளிநாட்டுச் சர்க்கரையின் இறக்குமதி நின்றுவிட்டது. வெளிநாட்டுப் போட்டியினின்றும் காப்பாற்றப்பட்ட இந்தியச் சர்க்கரை உற்பத்தித் தொழில் உயர்ந்த காப்புவரிகளாலும், உற்பத்தி ஆராய்ச்சி முறைகளாலும் கொஞ்சங் கொஞ்சமாக முன்னேறத் தொடங்கியது.

1899-ஆம் ஆண்டில் ரூபாயின் மதிப்பு ஸ்திரப்படுத்தப் பட்டதென்று முன்னர்க் கூறினோம். அந்த ஆண்டிலிருந்து 1914-ஆம் ஆண்டுவரையிலும் இந்திய அரசாங்கப் பொருளாதாரம் மிக நல்ல நிலையிலிருந்தது. வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் ஏற்பட்ட முன்னேற்றத்தால் வரிகளால் வந்த வருமானம் உயர்ந்தது. இருப்புப்பாதைகளாலும் நீர்ப்பாசன வசதிகளாலும் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் வந்தது. லாபகரமான வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய மூலதனம் மக்களிடமிருந்து

கடன் வாங்கப்பட்டது. லாபம் தராத அரசாங்கக் கடன் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு முடிவில் அது ஏறக்குறைய மறைந்தே போயிற்று. இவ்வாறு அரசாங்க வருமானம் மிக உயர்ந்ததால் அபினி வியாபாரத்தின் தனி உரிமையால் வந்த லாபத்தை இழக்க நோர்ந்தபோதும் அரசாங்கத்துக்கு அதிகக் கஷ்டம் ஏற்படவில்லை. 1905-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ச் சீனுவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி அபினி ஏற்றுமதி கொஞ்சங் கொஞ்சமாக நிறுத்தப்படவேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்பட்டது. அதனுல் அபினியால் அரசாங்கத்திற்குக் கிடைத்த ஏராளமான வருமானம் நின்றுவிட்டது. 1890-க்கும் 1900-க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலை கஷ்டமாயிருந்ததென்று கூறினேம். அந்தக் காலத்திலேற்பட்ட பஞ்சங்களால் அந்தக் கஷ்டம் இன்னும் அதிகமாயிற்று. 1897-ஆம் ஆண்டில் வட இந்தியாவின் பெரும்பகுதியில் கடுமையான பஞ்சம் ஏற்பட்டது. 1900-ஆம் ஆண்டில் மத்திய இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் பஞ்சமேற்பட்டது. 1880-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பஞ்சக் கமிஷன் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்ட முறைகள் இப்போது கையாளப்பட்டன. இந்த முறைகளையும் அவற்ருலேற்பட்ட பயன்களையும் பரிசீலனை செய்வதற்காக ஏற்பட்ட கமிஷன்கள் 1898-ஆம் ஆண்டிலும் 1901-ஆம் ஆண்டிலும் அறிக்கைகளை வெளியிட்டன. அவற்றின் பயனுகப் பின்வரும் விஷயங்கள் தெளிவாயின. முதலாவதாக, பஞ்சமேற்பட்ட பகுதியிலிருந்து வேறிடங்களுக்குச் சென்று மக்கள் குடியேற வேண்டியதில்லை என்றும், இருந்த இடத்திலேயே அவர்களுக்கு உதவி செய்ய முடியுமென்றும், யாரும் பட்டினியால் மாளாதவாறு காக்க முடியுமென்றும் தெரிந்தது. இரண்டாவதாக, பஞ்சத்திற்குப் பின்னர் மக்களின் மரணவிகிதம் அதிகரிக்கும் என்பதும் தெரிந்தது. குறிப்பாக, குழந்தைகளும் வயோதிகர்களும் பஞ்சத்திற்குப் பின்னர் அதிகமாக இறப்பார்கள். பஞ்சகாலத்தில் குடிதண்ணீர் குறைவாகவும் அசுத்தமாகவும் இருக்கும். அதனுல் பல நோய்கள் தோன்றும். பஞ்சத்தால் வாடிய மக்களின் உடல்வன்மை குறைந்திருக்குமாகையால் நோய்கள் விரைவிலும் எளிதிலும் பரவும். இந்தக் காரணங்களால் பஞ்சத்திற்குப் பின்னர் மரண விகிதம் அதிகரிக்கும். மூன்ருவதாக, பஞ்சகாலத்தில் அழிந்துபோன பயிர்த்தொழிலை மறுபடியும் மழை வந்தவுடனே தொடங்க முடியுமென்பதும், முன்போல ஒரு தலைமுறை வரை

யில் பயிர்த்தொழில் அழிந்துகிடக்க வேண்டிய நிலைமை ஏற்படா தென்பதும் தெளிவாயின. நான்காவதாக, ரஸ்தாக்களை யமைத்தல் முதலிய மராமத்து இலாக்கா வேலைகளால் பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு வருமானம் ஏற்படுத்துவது பஞ்ச நிவாரணத் திட்டத்தில் முதன்மையான இடம் வகித்தபோதிலும், அத்துடன் பஞ்சம் தொடங்கினதுமே மக்களுக்குப் பொருளுதவி செய்வதன் மூலம் நல்லகாலம் வரும்வரையில் அவர்கள் தங்கள் தொழில்களை விடாமல் செய்வதற்கு வசதியளிக்க முடியுமென்பதும், நிலவரியில் ஒரு பகுதி தள்ளப்படுமென்று ஆரம்பத்திலேயே அறிவிப்பதின் மூலமாகப் பஞ்சத்தை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய ஊக்கத்தை மக்களுக்கு அளிக்கக் கூடுமென்பதும் புலனாயின. கடைசியாக, பஞ்ச நிவாரணவேலை சரியாக நடைபெற வேண்டுமானால் அரசாங்க நிர்வாகம் திறமையாக நடக்கவேண்டுமென்பது புலனாயிற்று. அதிகாரிகள் சரியான திட்டங்களைப் போட்டு, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான காரியங்களைக் காலதாமதமின்றிச் செய்து, அந்தக் காரியங்களெல்லாம் எதிர்பார்த்த பயனை அளிக்கின்றனவா என்று இடைவிடாத மேற்பார்வை செய்வது அவசியம். 1908-ஆம் ஆண்டில் ஐக்கிய மாகாணத்தில் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தின்போது மேலே கூறிய உண்மைகள் எல்லாம் சரியானவை என்று நிரூபிக்கப்பட்டன.

பஞ்சம் வந்தாலும் தாங்கிக்கொள்ளக்கூடிய பொருளாதார நிலையைக் குடியானவர்கள் அடையுமாறு செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் சாதாரண காலங்களிலேயே செய்ய வேண்டுமென்று மூன்று பஞ்சக் கமிஷன்களும் வற்புறுத்தியிருந்தன. 1900-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நல்ல நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு கர்ஸான் பிரபு பஞ்சக் கமிஷன்களின் சிபார்சுகளை நடைமுறையில் கையாளத் தொடங்கினான். 1903-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நீர்ப்பாசனக் கமிஷனின் அறிக்கை பல புதிய திட்டங்களைச் சிபார்சு செய்தது. அதன் பயனாகப் பல புதிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்பட்டன. பருவமழை மறுத்தாலும் பயிர்கள் சேதமடையாமல் இருக்கக்கூடிய நிலை கொஞ்சங் கொஞ்சமாகப் பல இடங்களிலும் ஏற்பட்டது.

அடுத்தபடியாக விவசாய முறைகளைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன. மேயோப் பிரபுவின் காலத்திலேயே ஒரு விவசாய இலாக்கா ஏற்பட்டிருந்தது. ஆனால், அர

சாங்கச் செலவைக் குறைக்கும் நோக்கத்துடன் அந்த இலாக்கா பின்னர் அழிக்கப்பட்டது. முதல் பஞ்சக் கமிஷனின் ஆலோசனைப்படி அந்த இலாக்கா மறுபடியும் ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் பயிர்த்தொழில் விஷயங்களைப்பற்றிய செய்திகளைச் சேகரம் செய்வதே அந்த இலாக்காவின் முக்கிய வேலையாக இருந்தது. ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலும் இந்தவேலை வெற்றிகரமாகவே செய்து முடிக்கப்பட்டது. ஆனால் பணமும், பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்களும், உபகரணங்களும் இன்மையால் பயிர்த்தொழில் துறையில் ஆராய்ச்சி நடத்துவதற்கும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளைப் புரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கும் முடியவில்லை. 1905-ஆம் ஆண்டில் பயிற்சி பெற்ற உத்தியோகஸ்தர்களை நியமிப்பதற்கும், கல்லூரிகளையும், ஆராய்ச்சிக் கூடங்களையும் நிறுவுவதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்திய விவசாயத்தில் பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. குடியானவர்களெல்லாம் பெரும்பாலும் ஏழைகள். பயிர்த் தொழிலுக்கு வேண்டிய பணத்தைக் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்குவதற்கு வேண்டிய வசதிகள் குடியானவர்களுக்கு இருக்கவேண்டும். அதுமாத்திரமின்றிக் கடன் வாங்கிய பணத்தைப் பயனற்ற வழிகளில் குடியானவர்கள் செலவு செய்யாமலும் இருக்கவேண்டும். இந்த இரண்டு நன்மைகளையும் தரக்கூடிய வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் ஜெர்மனியிலும் இத்தாலியிலும் சில அறிஞர்கள் முயற்சி செய்தார்கள். ஐக்கிய நாணயச் சங்கங்களைக் குடியானவர்களிடையே ஏற்படுத்துவது நல்ல பலனைத் தருமென்று அவர்கள் கண்டுபிடித்தார்கள். அந்தச் சங்கங்களின் மூலமாகக் குறைந்த வட்டியில் குடியானவர்களுக்குக் கடன் கொடுக்கலாம். அந்தக் கடன்கள் குடியானவர்களுடைய தனிப்பொறுப்பில் கொடுக்கப்படாமல் ஐக்கிய நாணயச் சங்கத்தின் அங்கத்தினரின் கூட்டுப் பொறுப்பில் கொடுக்கப்பட்டதால் அவைகளைக் குடியானவர்கள் அநாவசியமான வழிகளில் செலவு செய்யமாட்டார்கள் என்பதும் உறுதியாயிற்று. 1890-ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த முறை இந்தியாவிலும் அறிஞர்கள் கவனத்தைக் கவர்ந்தது. இந்த முறையைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. அதன் பயனாக 1904-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேறியது. அதன்படி ஐக்கிய நாணயச் சங்கங்கள் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றன.

இதற்குள்ளாகக் கைத்தொழிலில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் பல பிரச்சினைகள் தோன்றிவிட்டன. தொழிற்சாலை விதிகள் சில ஏற்கெனவே அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டனவென்று முன்னர் ஓர் அதிகாரத்தில் கூறினோம். 1905-ஆம் ஆண்டில் இராஜப்பிரதிநிதியின் கவுன்ஸிலிலிருந்த அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகமாக்கப்பட்டது. வியாபாரத்தையும் கைத்தொழிலையும் பற்றிய விஷயங்களை எல்லாம் கவனிப்பதற்கு ஒரு தனிப்பட்ட அங்கத்தினன் நியமிக்கப்பட்டான்.

பயிர்த்தொழிலுக்கும் கைத்தொழிலுக்கும் அரசாங்கம் நல்ல சமயத்தில்தான் உதவி செய்ய முன்வந்தது. ஏனெனில் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வந்ததால் நிலத்தை நம்பியே வாழ்ந்த மக்களின் தொகை விரைவில் பெருகியது. சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும், இருப்புப்பாதைகளிலும் பல மக்களுக்கு வேலை கிடைத்தபோதிலும் ஜனத்தொகை மிக விரைவாகப் பெருகிக்கொண்டு வந்ததால் அதிகமான மக்கள் பயிர்த்தொழிலை நம்பி வாழவேண்டியதாயிற்று. 1877-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பஞ்சத்தால் ஜனத்தொகை ஓரளவு குறைந்தது. எனினும் 1881-ஆம் ஆண்டிலிருந்து 1891-ஆம் ஆண்டுக்குள் ஜனத்தொகை நூற்றுக்குப் பத்து விகிதம் அதிகரித்துவிட்டது. 1891-ஆம் ஆண்டுக்கும் 1900-ஆம் ஆண்டுக்கும் இடையிலேற்பட்ட பஞ்சங்களாலும், பிளேக் என்ற கொடிய நோயினாலும் பல மக்கள் மடிந்தார்களெனினும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஏற்பட்ட சுபிட்சமான நிலைமையினால் ஜனத்தொகை விரைவில் பெருகியது. சுமார் ஐம்பது ஆண்டுக்காலம் இந்தியாவில் பிளேக் இல்லாமல் இருந்தது. ஆனால் 1896-ஆம் ஆண்டில் அந்நோய் பம்பாயில் தோன்றி விரைவில் நாட்டின் பல பகுதிகளிலும் பரவி, பத்தாண்டுக்குள் இருபது லட்சத்துக்கு மேற்பட்ட மக்களின் சாவுக்குக் காரணமாயிற்று. கர்ஸான் பிரபுவின் ஆட்சியில் ஆரம்பித்த சுகாதார முன்னேற்ற வேலைகளின் அவசியம் பிளேக் நோய் தோன்றியதன் காரணமாக இன்னும் அதிகமாயிற்று.

ஏறக்குறையப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரையிலும் இந்தியாவிலிருந்த சுகாதார இலாகா அதிகாரிகள் எல்லாம் நோய்களின் மூலங்களைக் கண்டுபிடிக்காமலே நோய்கள் பரவாமல் தடுக்க முயன்றார்கள். இதே நிலைதான் மற்ற நாடுகளிலும் இருந்தது. வைசூரியைப் பொறுத்தவரையிலும் அம்மை குத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது என்பது உண்மை

தான். அம்முறை கையாளப்பட்டதன் பயனாக வைசூரியினு லேற்படக்கூடிய மரண விகிதம் பாதியாகக் குறைந்தது. காலராக் கிருமி 1883-ஆம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டதெனினும் அந்தக் கிருமியினால்தான் நோய் உண்டாகிறது என்ற உண்மை பல ஆண்டுகள் வரையிலும் எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட வில்லை. பிளேக் கிருமி 1894-ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கிருமிகளைப் பரப்பும் பூச்சிகளின் தன்மைகளை அறிந்துகொள்ளுவதற்கு இன்னும் பத்தாண்டுகள் சென்றன. 1897-ஆம ஆண்டில் மலேரியா நோய் பரவுவதற்குக் காரணமா யிருக்கும் கொசுக் கூட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகவே இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நோய்களை விஞ்ஞான முறையில் தடுப்பதற்கேற்ற முறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் இம்முறைகளை எல்லாம் அறிஞர்கள் நன்றாக உணர்ந்திருந் தார்களாயினும் இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் கல்வி யறிவில்லாதவர்களா யிருந்ததால் நவீன முறைகளில் நோய்களைத் தடுப்பதற்கு ஆரம்பத்தில் அதிகக் கஷ்டமாயிருந்தது.

நாம் இதுவரையில் குறிப்பிட்ட நிர்வாக மாறுதல்களின் பய னாக அதிகாரவர்க்கத்தினரின் எண்ணிக்கை அதிகரித்தது. அவர் கள் எல்லோரும் தத்தம் இலாகாக்களில் திறமையுடன் வேலை செய்ய முயன்றார்கள். மூன்று இராஜதானிகளிலும் தனித்தனி யாக இருந்த சைனியங்களுக்குப் பதிலாக 1903-ஆம் ஆண்டில் தலைமைச் சேனாதிபதியின் அதிகாரத்திற்குட்பட்ட ஒரே இந்தியச்-சேனை ஏற்பட்டது. 1905-ஆம் ஆண்டில் தலைமைச் சேனாதிபதி யாக இருந்த கிச்சனர் பிரபு சைனியத்தின் அமைப்பைச் சீர் திருத்தி, எல்லைப்புறத்தைக் காக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற் பட்டால் சிறிதேனும் காலதாமதமின்றி அணிவகுத்து நடத்தக் கூடிய ஏற்பாடுகளைச்செய்தார். சைனியத்தைச் சீர்திருத்தும் வேலை யில் கிச்சனர் பிரபுவுக்கும் இராஜப்பிரதிநிதிக்கும் கருத்து வேறு பாடு ஏற்பட்டது. தலைமைச் சேனாதிபதியைத் தவிர இராஜப் பிரதிநிதியின் கவுன்ஸிலில் ஓர் இராணுவ அங்கத்தினர் இருந்தார் என்று முன்னர் ஓர் அதிகாரத்திற் கூறியிருக்கின்றோம். இவ்வாறு ராணுவ விஷயங்களைக் கவனிப்பதற்கு இரண்டு உத்தியோகஸ்தர் கள் இருப்பது நெருக்கடியான சமயங்களில் காலதாமதத்திற்குக் காரணமாகுமென்றும், அதனால் தலைமைச் சேனாதிபதியே இரா-ஜப்பிரதிநிதியின் கவுன்ஸிலில் இராணுவ அங்கத்தினராகவும் இருக்கவேண்டுமென்றும் கிச்சனர் வாதித்தான். கர்ஸானும் மற்ற அங்கத்தினர்களும் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால்,

லண்டனிலிருந்த அதிகாரிகள் கிச்சனருடைய யோசனையை ஆத்ரித்தார்கள். அதனால் கோபமடைந்த கர்ஸான் இராஜப்பிரதிநிதிப் பதவியை இராஜிநாமா செய்துவிட்டான். அதிலிருந்து இராஜப்பிரதிநிதியின் கவுன்ஸிலில் இராணுவ அங்கத்தினரை நியமிக்கும் பழக்கம் கைவிடப்பட்டது.

சிறந்த வீரர்களையே படையில் சேர்க்கவேண்டுமென்ற கொள்கையால் பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் முறையிலும் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. சென்னை இராஜதானியிலிருந்தும், ஐக்கிய மாகாணத்திலிருந்தும் மிகச் சிறு தொகையினரே பட்டாளத்தில் சேர்க்கப்பட்டனர். பஞ்சாபிலிருந்தும், நேபாளத்திலிருந்தும், வடமேற்கு எல்லைப்புறத்திலிருந்தும் அதிகமான ஆட்கள் போர்வீரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேசீயப்படை என்ற ஒன்று இருக்கவேண்டுமென்ற எண்ணம் இன்னும் உருவாகவில்லை. இந்தியாவின் காப்புப் பரம்பரையாகப் போர்த்தொழிலில் ஈடுபட்டுவந்த இனத்தினர் கையிலேயேயிருந்தது. இதனால் பொருளாதாரத் துறையிலும் சமூகத்துறையிலும் சில முக்கிய விளைவுகள் ஏற்பட்டன. போர்வீரர்கள் ஏறக்குறைய எல்லாருமே குடியானவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் சம்பளத்தில் பெரும் பகுதியைத் தங்கள் குடும்பத்திற்கு அனுப்புவது வழக்கமாயிருந்தது. இவ்வாறு அவ்வப்போது கிடைத்த பணத்தின் உதவியால் மிக ஏழ்மை நிலையிலிருந்த குடியானவர்கள் ஓரளவு சௌகரியமாக வாழ்வதற்கு வசதி ஏற்பட்டது. முன்பெல்லாம் பஞ்சாபைத் தவிர மற்ற பகுதிகளிலிருந்தும் மக்கள் போர்வீரர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்களாதலால் அந்தப் பகுதிகளுக்குப் போர் வீரர்களனுப்பிய பணம் போய்ச் சேர்ந்தது. அந்தப்பகுதிகளில் ஜன நெருக்கம் அதிகமாக இருந்தபடியால் அங்கு விவசாயத்தையே நம்பி வாழ்ந்த ஏழைமக்களுக்கு இவ்வாறு கிடைத்த பணம் பேருதவியாயிருந்தது. ஆனால் இப்பொழுதோவெனில் அந்தப் பணமெல்லாம் பஞ்சாபுக்குப் போய்ச் சேர்ந்தது. அதனால் பஞ்சாபிலிருந்த மக்கள் மற்றப்பகுதிகளில் வாழ்ந்த மக்களைக் காட்டிலும் பொருளாதார நிலையில் உயர்ந்தவர்களானார்கள். மேலும் பட்டாளத்தில் சேர்ந்த ஆட்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட்டதாலும், அவர்கள் பட்டாளத்தில் சேவை செய்த காலத்தில் ஓரளவு பரந்த மனப்பான்மையும் அனுபவமும் பெற்றார்களாதலாலும் அவர்கள் தங்கள் ஊருக்குத் திரும்பி வந்த பிறகு ஊரைவிட்டு வெளியே போகாத குடியானவர்களைவிட அறிவிலும் திறமையிலும் மிகுந்த

வர்களா யிருந்தார்கள். இந்தக் காரணங்களால் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் பஞ்சாப் மாகாணத்திலிருந்த கிராம மக்கள் இந்தியாவின் மற்ற பகுதிகளில் வாழ்ந்த கிராம மக்களைக் காட்டிலும் விரைவாகப் புதிய துறைகளில் சுயேச்சையாகவும் தைரியமாகவும் நுழையும் ஆற்றல் உடையவர்களாயுமிருந்தார்கள்.

சாம்ராஜ்ய சேவைத் துருப்புகள் என்ற பகுதி தோன்றியது 1880-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இராணுவத் துறையில் ஏற்பட்ட ஒரு முக்கிய மாறுதல் ஆகும். சுதேச அரசர்களிடத்தில் அவர்களுக்குச் சொந்தமான சேனைகள் இருந்தன. சுதேச ராஜ்யங்களின் காப்பு இந்திய அரசாங்கத்தின் பொறுப்பான பிறகு சுதேச ஸம்ஸ்தானங்களில் சேனைகளுக்குத் தேவையில்லை. அவைகள் அரசர்களின் ஆடம்பரத்தைக் காட்டும் அறிகுறிகளாகத்தான் இருந்தன. 1885-ஆம் ஆண்டில் ஏற்பட்ட நெருக்கடியின்போது ருஷியாவுக் கெதிராகத் தங்கள் சேனைகளை அனுப்புவதற்குப் பல சுதேச அரசர்கள் முன் வந்தார்கள். நான்காண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு சுதேச அரசனும் குறிப்பிட்ட தொகையில் போர்வீரர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்குப் பிரிட்டிஷ் அதிகாரிகளால் பயிற்சியளிக்கப்படவேண்டுமென்றும், அவசியமானபோது அவர்களை ஸாம்ராஜ்ய சேவைக்கு அனுப்பவேண்டுமென்றும், அப்படி ஸாம்ராஜ்ய சேவைக்குச் செல்லும்போது அவர்கள் தலைமைச் சேனுதிபதியின் உத்தரவுக்கு அடங்கி நடக்கவேண்டுமென்றும் ஒரு புதிய ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த ஏற்பாடு செய்யப்படுவதற்கு முன்னுல் சுதேச ஸம்ஸ்தானங்களிலிருந்த படைகள் ஒரு சமயம் பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கிளம்பக்கூடும் என்ற அச்சமிருந்ததால் இந்தியச்சேனையின் பிரிவுகள் ஆங்காங்கு சுதேச ஸம்ஸ்தானங்களுக்கு அருகில் உள்ள இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. இப்பொழுதோவெனில் சுதேச ஸம்ஸ்தானங்களிலிருந்த படைகளே ஆங்கிலேயருக்கு உதவி செய்யத் தயாரா யிருந்ததால் இந்தியச் சேனையின் பெரும் பகுதி ஆபத்து வரக்கூடிய வழியாகிய வடமேற்கு எல்லையிலேயே இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டது.

இனி, சம்பளம் வரக்கூடிய அரசாங்க உத்தியோகங்களின் மூலமாகவும், கவுரவப் பதவிகளின் மூலமாகவும் நாட்டுக்குத் தொண்டு புரிவதற்கு இந்திய மக்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றிக் கூறுவோம்.

1886-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பப்ளிக் செர்விஸ் கமிஷன் அறிக்கை இந்திய உத்தியோக வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தை வகிக்கிறது. அந்த அறிக்கையிற் கூறப்பட்ட ஆலோசனையின்படி உயர்தர உத்தியோகஸ்தர்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டார்கள். முதல் பிரிவு மத்திய அரசாங்கப் பிரிவு. இரண்டாம் பிரிவு மாகாண அரசாங்கப் பிரிவு. மத்திய அரசாங்கப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மாகாண அரசாங்கப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சாதாரணமாக அந்தந்த மாகாணங்களிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மேலும் இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களில் ஒரு பகுதியினர் மாகாணங்களுக்கும் அனுப்பப்பட்டனர். இந்த ஏற்பாட்டினுல் மாகாணங்களில் திறமையுள்ள உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகமாயிற்று. ஆனுல், சில துறைகளில், குறிப்பாக நிர்வாகத் துறையில், மாகாணங்களுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட உயர்ந்த பதவிகள் மிகக் குறைவாக இருந்ததால் கீழ்ப்படிகளிலிருந்து உயர் பதவிகளை யடைவதற்கு அதிகச் சந்தர்ப்பம் இல்லை. அதனுல் இந்தியர்களுக்கு உயர்பதவிகள் அதிகமாக வழங்கப்பட வேண்டும் என்றெண்ணிய மக்கள் அதிருப்தி யடைந்தனர். மேலும் மாகாண அரசாங்க உத்தியோகஸ்தர்கள் மத்திய அரசாங்க உத்யோகஸ்தர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள் என்ற அபிப்பிராயமும் கொஞ்சங் கொஞ்சமாக வளர ஆரம்பித்தது. மாகாண உத்தியோகஸ்தர்களுடைய நிலையை உயர்த்துவதைவிட மத்திய அரசாங்க உத்தியோகத்தில் சேர்வதற்கு எல்லாருக்கும் ஒரே விதமான வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று இந்தியப் பொது மக்கள் அபிப்பிராயப்பட்டனர். அதன் பயனுக மத்திய அரசாங்கப் பிரிவின் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இங்கிலாந்தில் பரீட்சை நடந்ததுபோலவே இந்தியாவிலும பரீட்சை நடத்த வேண்டுமென்று இந்தியர்கள் விரும்பினுர்கள். ஒரே சமயத்தில் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பரீட்சை நடத்தப்பட வேண்டுமென்று 1893-ஆம் ஆண்டில் பார்லிமெண்டிலும் ஒரு தீர்மானம் நிறைவேறியது. ஆனுல் அந்தத் தீர்மானத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் நடை முறையில் கொண்டுவரவில்லை. முதல் உலக யுத்தம் முடிந்த பின்னர்த்தான் இந்தியர்களுடைய இந்த விருப்பம் நிறைவேறியது.

இனிச் சம்பளம் இல்லாத கவுரவப் பதவிகளை வகிப்பதன் மூலம் தேசத்தொண்டு செய்வதற்கு இந்தியர்களுக்களிக்கப்பட்ட

வாய்ப்பைப்பற்றிக் கூறுவோம். ரிப்பன் பிரபுதான் இந்தத் துறையில் முதலில் கவனம் செலுத்திய இராஜப்பிரதிநிதி. சட்ட சபைகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அங்கத்தினர்கள் இருப்பது நல்லதென்று ரிப்பன் முதலில் எண்ணினுன். ஆனால் தேர்தல் முறையை ஸ்தல சுய ஆட்சி ஸ்தாபனங்களில் புகுத்தினால் போதுமென்று பின்னர்த் தீர்மானித்தான். ஆகவே அதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. படித்த இந்தியர்கள் அந்தச் சட்டத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்ருர்கள். அதுவரையில் ராஜதானி நகரங்களில்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்ட நகராண்மைக் கழகங்கள் இருந்தன. மற்ற நகரங்களில் அத்தகைய கழகங்கள் கிடையா. முகலாய ராட்சிக் காலத்தில் நகரங்களில் இருந்த கவர்னர்கள் தங்கள் இஷ்டம்போலச் செய்வதற்கேற்ற பலவகை யதிகாரங்களையும் உடையவர்களாக இருந்தார்கள். ஆங்கில ஆட்சியில் இருந்த, மாஜிஸ்டிரேட் – கலெக்டர்களும் தொடக்கத்தில் மொகலாயர் காலத்து கவர்னர்களைப்போலத்தான் இருந்தார்கள். ஆனால் கூடிய சீக்ரத்தில் மாஜிஸ்டிரேட் - கலெக்டர்கள் அவ்வப்போது நகரத்தின் பெரிய மனிதர்களின் கூட்டுறவைப் பெற்றுத் தங்கள் காரியங்கள் சிலவற்றை நடத்தும் வழக்கத்தைப் பின்பற்றினுர்கள். ஒரு சில இடங்களில் தேர்தல் மூலமாகவும் சில பெரிய மனிதர்களைத் தங்களுக்கு உதவி செய்ய ஏற்படுத்திக் கொண்டார்கள். ஆனால் ரிப்பன் பிரபு நிறைவேற்றிய சட்டத்தின்படி ஏற்பட்ட நகராண்மைக் கழகங்களின் அங்கத்தினர்களில் பாதியிலிருந்து முக்கால் பங்கு வரையிலும் தேர்ந்தெடுத்த அங்கத்தினர்கள் இருந்தார்கள். பல நகராண்மைக் கழகங்களின் தலைவர்கள் அங்கத்தினர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். இவ்வாறு ஏற்பட்ட நகராண்மைக் கழகங்களால் நன்மையே ஏற்பட்டதென்று பொதுவாகக் கூறமுடியாது. சில கழகங்கள் நன்ருக வேலை செய்தன. சில மோசமாக வேலை செய்தன. எனவே சில கழகங்கள் அவ்வப்போது கலைக்கப்பட்டன. ஆனால் இந்தப் புதிய நகராண்மைக் கழகங்கள் ஏற்பட்டதால் பொதுத் தொண்டில் ஈடுபட விரும்பியவர்களுக்கு வாய்ப்பும் பயிற்சியும் கிடைத்தன என்பது மறுக்க முடியாத உண்மை. அதே சட்டத்தாலேற்பட்ட ஜில்லா போர்டுகளின் அமைப்புச் சரியாக இல்லாததாலும், அவற்றின் அதிகாரமும் வருமானமும் மிகக் குறைவாக இருந்ததாலும் அவைகள் பொதுத் தொண்டில் ஈடுபட விரும்பியவர்களுக்கு அதிக வாய்ப்பை அளிக்கவில்லை. மக்களை ஓட்டுக்

கொடுக்கச் செய்வதும், தகுதியுள்ளவர்களைத் தேர்தலுக்கு நிற்கு மாறு தூண்டுவதும் சிரமமான காரியமாயிருந்தது. இவ்வளவு கஷ்டத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் கூட்டத் திற்குச் சரியாகச் செல்வது அருமை.

சட்டசபைகளின் அங்கத்தினர்களின் தொகையைப் பெருக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களையும் அவற்றில் சேர்க்க வேண்டுமென்ற விஷயத்தில் டபரின் பிரபு அதிகச் சிரத்தை காட்டினான். இந்த விஷயத்தில் இந்தியர்கள் அதிக ஆர்வமுடையவர் களாய் இருந்தார்கள் என்பதையும், சட்ட சபைகளில் அங்கத்தி னர்களா யிருப்பதற்குப் பலவகையாலும் தகுதி வாய்ந்த மக்கள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வந்தார்கள் என்பதையும் டபரின் நன்றாக உணர்ந்தான். ஆகவே 1888-ஆம் ஆண்டில் இதற்காக ஒரு திட்டத்தை வகுத்து இங்கிலாந்துக்கு அனுப்பினான். தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களுக்குக் கேள்வி கேட்பதற்கும், மாகாண வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி விவாதிப்பதற்கும் அதிகாரம் அளிக்கப்படவேண்டும் என்று ஒரு முக்கியமான ஆலோசனையையும் அந்தத் திட்டத்தில் டபரின் கூறியிருந்தான். இங்கிலாந்திலிருந்த அதிகாரிகள் தேர்தல்முறை புகுத்தப்படுவதை விரும்பவில்லை. ஆகவே 1892-ஆம் ஆண்டில் பார்லிமெண்டில் நிறைவேறிய சட்டத்தின்படி உத்தியோகஸ்தர் அல்லாத அங்கத் தினர்களைச் சட்ட சபைகளுக்கு நியமிக்கும் முறைகளைப் பற்றித் தீர்மானம் செய்யும் பொறுப்பு இந்திய அரசாங்கத்திற்கே விடப் பட்டது.

மேற்கூறிய சட்டத்தின்படி பின்வரும் முறையில் சட்டசபை அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள். நகராண்மைக் கழகங்கள், ஜில்லா போர்டுகள், சர்வகலாசாலைகள், வியாபாரச் சங்கங்கள், மிராசுதார்களின் சங்கங்கள் என்ற ஏறக்குறையப் பிரதிநிதித் துவம் பொருந்திய பல ஸ்தாபனங்கள் தங்களுக்கிஷ்டமான சில நபர்களை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தன. அவ்வாறு சிபா ரிசு செய்யப்பட்ட அங்கத்தினர்களை அரசாங்கம் சட்டசபை அங் கத்தினர்களாக நியமித்தது. மேற்கூறிய ஸ்தாபனங்கள் சிபாரிசு செய்த அங்கத்தினர்களைச் சாதாரணமாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டதால் தேர்தல் முறை சட்டப்படி இல்லாவிட்டாலும் நடை முறையில் கையாளப்பட்டது என்று கூறலாம். இந்த முறையின்படி சட்டசபைக்குச் சென்ற அங்கத்தினர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். நகராண்மைக் கழகங்களாலும், ஜில்லா

போர்டுகளாலும் சிபாரிசு செய்யப்பட்ட அங்கத்தினர்களைப் பொது மக்களின் பிரதிநிதிகள் என்று கூறலாம். சர்வகலாசாலைகள், வியாபாரச் சங்கங்கள் முதலிய ஸ்தாபனங்களால் சிபாரிசு செய்யப்பட்ட அங்கத்தினர்களைத் தனிப்பட்ட துறைகளின் பிரதிநிதிகள் என்று கூறலாம். ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொள்ளாத சில குறிப்பிட்ட வகுப்புக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அரசாங்கமும் சில அங்கத்தினர்களை நியமித்தது. இவ்வாறு சட்ட சபைகளில் பலவகைப்பட்ட அங்கத்தினர்கள் இருந்தார்கள். இவ்வகையில் அமைக்கப்பட்ட சட்டசபைகள் 1909-ஆம் ஆண்டு வரையில் இருந்தன. அவற்றின் அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் இன்னும் உத்தியோகஸ்தர்களாகவே இருந்தார்கள். உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமென்று இந்திய மக்கள் விரும்பினார்கள்.

அதிகாரம்—48

அரசியல் உணர்ச்சியின் தொடக்கம்

மொகலாயர் ஆட்சிக் காலத்திலும் அதற்கு முன்னரும் இந்தியாவில் அரசியல் கட்சிகள் கிடையா. அரசாங்கக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் சுயேச்சையாகவும் வெளிப்படையாகவும் வாதிப்பதற்கும், அதற்காகக் கட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும் அந்தக் காலத்தில் வசதி கிடையாது. அந்தக் காலத்தில் அரசன் அவனுடைய மந்திரிகளோடும், ஆலோசனையாளர்களோடும் சேர்ந்து இரகசியத்தில் அரசியல் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் தீர்மானித்துக் கொள்ளுவான். அதன் பின் அந்த நடவடிக்கைகள் அரசாங்க அதிகாரிகளால் எடுக்கப்படும். அந்தக் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் வெளிப்படையாக யாரும் எதிர்க்கமுடியாது. அப்படி எதிர்ப்பது ராஜத் துரோகக் குற்றமாகும். பொதுமக்கள் சாதாரணமாக அரசியல் கொள்கைகளைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள். அதற்குப் பதிலாக அரசனும், மந்திரிகளும், இராஜப்பிரதிநிதி முதலிய உத்தியோகஸ்தர்களும் மக்களுக்குத் தீமை செய்யாதவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவர்களுடைய கவலையாக இருந்தது. அரசப் பதவிக்கோ, மந்திரிப் பதவிக்கோ, மற்ற பெரிய பதவிகளுக்கோ போட்டி ஏற்படும் காலத்தில் மக்கள் வெளிப்படையாக

யாரையும் ஆதரிக்கமுடியாது. ஏனெனில் தோற்றுப்போனவனை ஆதரித்த மக்களை வெற்றிபெற்றவன் துன்புறுத்தக்கூடும். ஆகவே இரகசியச் சூழ்ச்சிகளைத்தாம் அந்தக்காலத்து அரசிய லுணர்ச்சியென்று கூறலாம்.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் அரசியல் விஷயங் களை வெளிப்படையாக வாதிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. 1836-ஆம் ஆண்டிலிருந்து இந்தியப் பத்திரிகைகளுக்கு எந்தவித மான தடையும் விதிக்கப்படவில்லையென்று பொதுவாகக் கூற லாம். சிப்பாய்க் கலகத்தின்போது கானிங்கு பிரபு பத்திரிகை களின்மீது விதித்த தடை ஓராண்டில் நீக்கப்பட்டது. 1878-ஆம் ஆண்டில் லிட்டன்பிரபு நிறைவேற்றிய சட்டத்தால் சுதேச மொழிகளில் நடந்த பத்திரிகைகளுக்குச் சில தடைகள் விதிக்கப் பட்டன. ஆனால் நான்காண்டுகளுக்குப் பிறகு அந்தச் சட்டமும் ரத்து செய்யப்பட்டது. இது தவிர மற்ற காலங்களிலெல் லாம் பத்திரிகைகளுக்கு எந்தவிதமான தடையும் விதிக்கப்பட வில்லை. இந்தியாவில் ஆங்கிலேயருக்காகப் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள் இங்கிலாந்திலிருந்த பத்திரிகைகளைப் போலவே அரசியல் விஷயங்களைத் தீவிரமாக வாதித்து அரசாங்கத்தின் செயல்களை அவசியமானபோது கண்டித்து வந்தன. இந்தியப் பத்திரிகாசிரியர்களும் அந்த உதாரணத்தைப் பின்பற்றி அரசியல் விஷயங்களைத் தாராளமாக விவாதிக்கத் தொடங்கினார்கள். கல்கத்தாவில் 1870-ஆம் ஆண்டுக்கும் 1880-ஆம் ஆண்டுக்கும் இடைபட்ட காலத்தில் முதல் முதலாக அரசியல் இயக்கம் தோன்றியது. இங்கிலாந்தில் கல்வி கற்ற சுரேந்திரநாத் பானர்-ஜியும், மற்றும் சில இந்தியர்களும் அந்த இயக்கத்தைத் தோற்று வித்தார்கள். அதன் பயனாக 1885-ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் கூடிற்று. இந்திய வரலாற்றில் இந்த ஆண்டு மிக முக் கியமான ஆண்டு. காங்கிரஸ் மகாசபையின் நோக்கங்களைப் பொறுத்த வரையில் அதை ஒரு தேசியஸ்தாபனம் என்று கூற-லாம். ஆனால் அதன் அங்கத்தினர்கள் படித்த மக்களின் பிரதி நிதிகளாகவே இருந்தார்கள். வாழ்க்கையின் மற்றத் துறைகளில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகள் அதில் யாரும் இல்லை. ஆகவே அதன் அமைப்பைப் பொறுத்தவரையில் அதை ஒரு தேசிய ஸ்தாபனம் என்று கூறமுடியாது.

தொடக்கத்தில் அரசியல் விஷயங்களில் தீவிரக் கொள்கை களையுடைய படித்தவர்கள் மட்டுமே காங்கிரஸ் அங்கத்தினர் களாயிருந்தார்கள். அவர்கள் பெரும்பாலும் நகரவாசிகளாகவே

இருந்தார்கள். குடியானவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும், கிராமங்களில் வாழ்ந்த வியாபாரிகளுக்கும் காங்கிரஸ் மகாசபையோடு தொடர்பு இல்லை. மிராசுதார்கள் அதில் சேரவில்லை. ஆண்டுதோறும் நடந்த காங்கிரஸ் கூட்டங்களில் கலந்துகொண்டவர்களில் பெரும்பான்மையோர் இந்துக்களாகயிருந்தார்கள். அவர்களோடு ஒருசில பார்சிகளும் முஸ்லிம்களும் கலந்து கொண்டார்கள். வட இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் சர் சையத் அஹமத் என்ற தலைவரைப் பின்பற்றுபவர்களாயிருந்தார்கள். காங்கிரஸ் மகாசபையால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படுமென்று சர் சையத் எண்ணினார். ஆகையால், அதில் யாரும் சேரக்கூடாதென்று அவர் வற்புறுத்தினார். தொடக்கத்தில் காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்ற ஸ்தாபனங்கள் ஆங்காங்கு அமைக்கப்படவில்லை. ஆகவே அந்தக் கூட்டங்களுக்குச் சென்ற பிரதிநிதிகள் தங்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள் என்று கூறலாம். காங்கிரஸ் கூட்டங்களுக்குச் சென்ற பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மையோர் வக்கீல்களாகவும், ஆசிரியர்களாகவும், பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே பிரிட்டிஷ் ஆட்சியில் தோன்றி வளர்ந்த மூன்று புதிய தொழில்களைச் சேர்ந்தவர்கள்தாம் காங்கிரஸ் மகாசபையில் அக்கரை காட்டினார்கள் என்று கூறலாம். தொடக்கத்தில் ஒரு சில ஆங்கிலேயரும் ஸ்காட்லாந்தியரும் காங்கிரசிற்கு அதிக உதவியாயிருந்தார்கள். சட்டவரம்பிற்குட்பட்டு அரசியல் விஷயங்களை விவாதித்து அரசாங்கக் கோட்பாடுகளை மாற்ற முயன்றதுதான் ஆரம்பத்தில் காங்கிரஸ் செய்த வேலை.

சட்டசபைகளில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதும், சிவில் சர்விஸ் பரீட்சையை இந்தியாவிலும் இங்கிலாந்திலும் ஒரே சமயத்தில் நடத்தவேண்டுமென்பதும் தொடக்கத்தில் காங்கிரஸ் மகாசபையின் முக்கியமான கோரிக்கைகளாயிருந்தன. ஆனால், நாளடைவில் வேறு பல நோக்கங்களுக்காகவும் காங்கிரஸ் பாடுபடத் தொடங்கியது. ஆரம்பத்தில் அரசியல் விஷயங்களில் மாத்திரமின்றிச் சமூகச் சீர்திருத்தத்திலும் காங்கிரஸ் கவனம் செலுத்தியது. ஆனால் சமூகச் சீர்திருத்த விஷயத்தில் பிரதிநிதிகளுக்குள் கடுமையான கருத்து வேறுபாடு தோன்றியதால் காங்கிரஸ் அரசியல் விஷயங்களிலேயே கவனம் செலுத்தத் தொடங்கியது. தங்கள் கோரிக்கைகளை அரசாங்கத்தாரிடம் ஒற்றுமையாகச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற எண்ணந்தான் இதற்கு

முக்கிய காரணம். ஆனால் காங்கிரஸ் கூடிய சமயத்திலேயே ஒரு சமூக மாநாட்டையும் கூட்டும் பழக்கம் ஏற்பட்டது. அந்த மகா நாட்டில் கலந்துகொண்டவர்களில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் கூட்டத்திற்குச் சென்றவர்களாகவே இருந்தார்கள். அவர்களோடு அரசாங்க உத்தியோகஸ்தர்களும் சமூக மகாநாட்டில் கலந்துகொண்டு சமூகச் சீர்திருத்தப் பிரச்சினைகளைப்பற்றி ஆலோசித்தார்கள். அந்த உத்தியோகஸ்தர்கள் அரசியல் விஷயங்களை விவாதித்த காங்கிரஸ் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாது. இன்னும் சில காலத்திற்குப் பின்னர்ப் பொருளாதாரப் பிரச்சினைகளைப்பற்றி ஆலோசிப்பதற்குச் சமூக மகாநாட்டைப் போலவே ஒரு கைத்தொழில் மகாநாட்டையும் கூட்டும் பழக்கம் ஏற்பட்டது. ஆனால் இந்த மூன்று மகாநாடுகளும் ஒரே சமயத்தில் ஒரே நகரில் கூடியதால் அரசியல் வாதிகளும் சமூகச் சீர்திருத்தக்காரர்களும் பொருள் நூல் வல்லுநரும் ஒருவரை யொருவர் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. அதன் பயனாகக் காங்கிரஸ் கூட்டத்தின் நடவடிக்கைகளை உருவாக்குவதற்குச் சமூகப் பிரச்சினைகளும் பொருளாதாரப் பிரச்சினைகளும் ஓரளவு உதவியா யிருந்திருக்குமென்றும், அதுபோலவே மற்ற இரண்டு மகாநாடுகளின் நடவடிக்கைகளை உருவாக்குவதற்கு அரசியல் பிரச்சினைகள் ஓரளவு உதவியாயிருந்திருக்குமென்றும் நம்பலாம்.

காங்கிரஸ் பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகளை அரசாங்கத்தாரிடம் ஒற்றுமையாகவே சமர்ப்பிக்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஆரம்பத்தில் அரசியல் விஷயங்களில் அவர்களிடையே எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் 1895-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவர்களிடையே பிளவு ஏற்பட்டது. ஒரு சாரார் சட்டவரம்புக்குட்பட்டுத் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள விரும்பினர். மற்றொரு சாரார் தீவிர வாதிகள். அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை அடியோடு ஒழித்துவிடவேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் சில ஆண்டுகள் வரையில் இந்தப்பிளவு வெளிப்படையாகத் தெரியவில்லை. விஷயாலோசனைக் கமிட்டியில் இருகட்சியினரும் தங்கள் கருத்தைத் தெரிவித்து வாதித்த பின்னர் எல்லோரும் ஏகமனதாக ஒத்துக்கொண்ட தீர்மானங்களே காங்கிரஸ் பொதுக் கூட்டத்திற்குக் கொண்டுவரப்படும்.

1906-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு சுயராஜ்யம் வாங்கித்தருவதே காங்கிரசின் நோக்கமென்று விளம்பரப்படுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியை அறவே ஒழிப்பதுதான் சுயராஜ்யம் என்று தீவிரவாதிகள் கூறினார்கள். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இருந்து பொறுப்பாட்சியை அனுபவிப்பதுதான் சுயராஜ்யம் என்று மற்றக் காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள். இந்தக் கருத்து வேறுபாட்டின் பயனாக அடுத்த ஆண்டில் சூரத்தில் காங்கிரஸ் கூடியபோது தீவிரவாதிகள் காங்கிரசிலிருந்து விலகிக் கொண்டார்கள். இந்திய அரசியல் கிளர்ச்சி நாடகத்தில் முதல் அங்கம் இத்துடன் முடிந்தது.

காங்கிரஸ் மகாசபை தோன்றி இதுவரையில் இருபதாண்டுகள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில் ஆங்கிலம் படித்த மக்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வந்தது. அதுபோலவே இந்தியப் பத்திரிகைகளின் செல்வாக்கும் மிகுந்து கொண்டே வந்தது. ஆனால் செய்திகளைப் பொறுத்த வரையில் இந்தியப் பத்திரிகைகள் அதிக முன்னேற்றம் அடையவில்லை. இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் நிகழ்ந்த செய்திகள் எல்லாவற்றையும் தெரிந்துகொள்ள விரும்பிய மக்கள் ஆங்கிலேயருக்காக இந்தியாவில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளைத்தான் படிக்க வேண்டியிருந்தது. படித்த மக்கள் இந்திய விஷயங்களில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் வெளிநாட்டுச் செய்திகளையும் தெரிந்துகொள்வதற்கு அதிக ஆவலுள்ளவர்களாக இருந்தார்கள். எல்லைப்புறத்தில் ஆபத்து ஏற்படக்கூடும் என்று இந்தியர்கள் ஓரளவு அறிந்திருந்தார்களாகையால் அரசியல் விஷயங்களை விவாதிக்கும்போது அரசாங்கத்தை அதிகமாகத் தாக்காமலிருந்தார்கள். ஆனால் 1899-ஆம் ஆண்டிலிருந்து 1902-ஆம் ஆண்டு வரையில் நடந்த போயர் யுத்தத்தில் ஆங்கிலேயர் முதலில் அடைந்த தோல்விகளைக் கண்ட இந்தியர்களில் சிலர் இங்கிலாந்து தாங்கள் எண்ணியிருந்த அளவு பலமுடையதுதானா என்று சந்தேகிக்கத் தொடங்கினார்கள். 1905-ஆம் ஆண்டு ஜப்பான் ருஷியாவைத் தோற்கடித்துவிட்டது என்ற செய்தியால் இந்தியாவில் தேசீய உணர்ச்சி அதிகரித்தது. ஜப்பானின் வெற்றி ஐரோப்பாவிற்கெதிராக ஆசியா அடைந்த வெற்றி என்று இந்தியர் எண்ணிப் பெருமை கொண்டனர். இவ்வாறு இந்தியர்களிடத்தில் தன் மதிப்பும் சுய நம்பிக்கையும் வளர்ந்தன. மற்ற நாட்டினருக்கு இந்தியர் தாழ்ந்தவரல்லர் என்ற எண்ணம் வலுத்தது. அயல் நாடுகளுக்குச் சென்று குடியேறியிருந்த இந்தியர்கள் தாழ்வாக நடத்தப்படுவதை இந்நாட்டு மக்கள் எதிர்த்தனர்.

ஆங்கிலேயருக்கு விரோதமாக இந்தியாவில் இனஉணர்ச்சி வளரத் தொடங்கியது. அரசாங்கத்தின் செயல்களைக் கண்டிக்க நேர்ந்தபொழுதெல்லாம் இந்திய மக்கள் ஆங்கில உத்தியோகஸ்தர்களையே கண்டித்தார்கள். ஆங்கில உத்தியோகஸ்தரோ, முதலாளியோ ஒழுங்கு தவறி நடந்துவிட்டால் அந்தச் செய்தி இந்தியப் பத்திரிகைகளில் பிரமாதமாக விளம்பரப்படுத்தப்படும். அதே மாதிரி யாராவது இந்தியர் நடந்துகொண்டால் இந்தியப் பத்திரிகைகள் பொருட்படுத்தமாட்டா. இந்தியாவின் கஷ்டங்களுக்கெல்லாம் ஆங்கிலேயரே காரணம் என்று மக்கள் பொதுவாக நினைக்கத் தொடங்கினார்கள். பெரும்பான்மையான மக்களுக்கு இந்திய வரலாறு சரியாகத் தெரியாது. பாடசாலைகளில் உபயோகத்திலிருந்த சரித்திரப் புத்தகங்களிலும் சரியான சரித்திரம் எழுதப்படவில்லை. சரித்திர ஆராய்ச்சியில் அதிக முன்னேற்றம் ஏற்படாததுதான் அதற்குக் காரணம். ஆகவே ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் இந்தியா மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்றும் மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி யிருந்தார்களென்றும் ஆங்கில ஆட்சியின் பயனாக இந்தியாவுக்கு வந்த மேல்நாட்டு நாகரிகம்தான் இந்திய மக்களின் கஷ்டங்களுக்கெல்லாம் காரணம் என்றும் அவ்வப்போது கூறப்பட்ட விஷயங்களை இந்திய மக்கள் அப்படியே நம்பிவிட்டார்கள். ஆங்கில ஆட்சியால் சில தீமைகள் ஏற்பட்டபோதிலும் பல நன்மைகளும் ஏற்பட்டிருந்தன என்ற உண்மையை உணர்ந்த சில பெரிய மனிதர்கள் ஆங்கிலேயரை ஒரேயடியாகக் கண்டிக்கும் வழக்கத்தை எதிர்த்தார்கள் என்பது உண்மைதான். எனினும், அவர்கள் செய்த முயற்சி பாய்ந்துவரும் வெள்ளத்தில் எதிர் நீச்சம் அடிப்பது போன்றதா யிருந்தது. சென்ற அதிகாரத்தில், இந்தியாவில் உற்பத்தியான மில் துணிகளுக்கு உற்பத்தி வரி விதிக்கப்பட்டதெனக் கூறியது நினைவிலிருக்கும். அதுபோன்ற விஷயங்களால் இந்திய மக்களுக்கு ஆங்கிலேயர் மீதிருந்த அதிருப்தி அதிகமாயிற்று. இவ்வாறு ஆங்கிலேயருக்கெதிராக இந்தியாவில் இன உணர்ச்சி நாளுக்குநாள் பெருகிக் கொண்டே சென்றது.

இந்தியாவிலிருந்த ஆங்கிலேயரனைவரையும் இந்தியர்கள் வெறுத்தார்கள் என்று நினைப்பது தவறு. இந்திய மக்களின் மனத்தில் தோன்றியிருந்த புதிய எழுச்சிகளையுணர்ந்து அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற முயன்ற ஆங்கிலேயர்களை இந்தியர்கள் மிகவும் விரும்பிப் போற்றினார்கள். இப்பொழுது நாம் 1880-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட

காலத்தின் வரலாற்றைப் படிக்கிறோம். இந்தக் காலத்தில் முதலில் இருந்த இராஜப்பிரதிநிதி ரிப்பன்பிரபு. கடைசியி லிருந்த இராஜப்பிரதிநிதி கர்ஸான்பிரபு. ரிப்பன்பிரபு பிரமாத மான திறமைவாய்ந்த நிர்வாகியன்று. ஆனால், அவன் சுதேச மொழிகளில் நடந்த பத்திரிகைகளின்மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியதாலும், இல்பர்ட்டுச் சட்டத்தை ரத்துச் செய்த தாலும், இந்தியர்களுடைய கோரிக்கைகளின் நியாயமான தன்மையை உணர்ந்ததாலும் அவனை இந்தியர்கள் மிகமிகப் பாராட்டினார்கள். கர்ஸான்பிரபு மிகத் திறமைவாய்ந்த நிர்வாகி. இந்தியாவின் முன்னேற்றத்திற்காக மிகவும் உழைத்தவன். ஆனால் அவன் செய்த சில செயல்களாலும், இந்தியர்களுடைய தேசீய உணர்ச்சிகளையும் கோரிக்கைகளையும் மதிக்காமல் மிகக் கேவலமாகப் பேசியதாலும் அவனை இந்தியர்கள் மிக அதிகமாக வெறுத்தார்கள்.

காங்கிரஸ் மகாசபையிற் சேர்ந்து அரசியல் விஷயங்களை விவாதித்த அங்கத்தினர்களை அரசியற் பரிபாஷையில் இடது சாரிகள் என்று கூறலாம். அவர்களில் தீவிரவாதிகளும் மிதவாதிகளும் இருந்தார்கள் என்றும், 1907-ஆம் ஆண்டில் சூரத் நகரத்தில் காங்கிரஸ் கூட்டம் நடந்தபோது தீவிரவாதிகள் காங்கிரஸ் மகா சபையினின்று விலகிக் கொண்டார்களென்றும் முன்னர்க் கூறினோம். இடதுசாரிகள்தான் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் விஷயங்களை விவாதித்தார்கள். மிராசுதார்கள் போன்ற வலதுசாரிகளுக்கு ஸ்தாபனமும் இல்லை, அவர்கள் அரசியல் விஷயங்களில் தலையிட்டு அவற்றை விவாதிக்கவும் இல்லை என்று கூறலாம். இடதுசாரிகளில் பல கிளர்ச்சிக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் கல்வியறிவற்ற மக்களிடையில் தங்கள் பிரசாரத்தை நடத்தினார்கள். அந்தக் கிளர்ச்சிக்காரர்களெல்லாம் ஒற்றுமையாகத் தங்கள் காரியங்களைச் செய்யவில்லை. அவர்களுள் பலவகைப்பட்ட மக்கள் இருந்தார்கள். சிலர் ஆங்கில ஆட்சியால் இந்தியாவுக்குத் தீமையேற்பட்டதால் அதை ஒழிப்பது தங்கள் கடமையென்று மனமார நம்பினார்கள். சிலர் ஆங்கிலேயரால் தங்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டதென்று எண்ணியவர்கள். அவ்வாறு அவர்கள் நினைத்தது உண்மையாகவும் இருக்கலாம், கற்பனையாகவும் இருக்கலாம். சிலர் பத்திரிகைக்காரர்கள். அவர்கள் மக்கள் கவனத்தைக் கவரும் முறையில் செய்திகளைப் பிரசுரித்து, அதன்மூலம் தங்கள் பத்திரிகைகளின் விற்பனையைப் பெருக்க முயன்றார்கள். சிலர்

குற்றஞ் செய்வதற்கு அஞ்சாதவர். நாட்டில் குழப்பத்தை யுண்டு பண்ணி அதன்மூலம் லாபமடைவதுதான் அவர்கள் நோக்கம். இவ்வாறு கிளர்ச்சிக்காரர்களிற் பலவகைப்பட்டவர்கள் இருந்தார்களென்பதும் அவர்களுடைய நோக்கங்களும் பலவகைப் பட்டவையாக இருந்தனவென்பதும் உண்மைதான் எனினும், அவர்களுடைய நடவடிக்கைகளின் பயன் ஒன்றுகத்தான் இருந்தது. அந்த நடவடிக்கைகளின் பயனுகச் சில சமயங்களில் இந்தியர்களுக்குள்ளேயே வகுப்புத் துவேஷம் ஏற்பட்டது மாத்திரமின்றி, எல்லா வகுப்பினரும் சேர்ந்து ஆங்கிலேயரை வெறுக்கத் தொடங்கினர். வகுப்புத் துவேஷம் வளர்ந்தது என்பதை விளக்குவதற்கு ஏற்ற உதாரணங்கள் பின்னர்த் தரப்படும். இங்கு அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகளுக்கு மாத்திரம் இரண்டு உதாரணங்கள் தருவோம்.

இந்தியாவில் குழந்தை மணம் மிகுதியாகப் பழக்கத்திலிருந்ததால் சிலசமயம் வயது வராத பெண்களை அவர்களுடைய கணவர்கள் கட்டாயப்படுத்திப் புணர்ந்தார்கள். அதனுல் அந்தப் பெண்களுக்குப் பெருந் தீங்கு நேர்ந்தது. எந்தப் பெண்ணையும் ஓர் ஆடவன் பலவந்தமாய்ப் புணர்வது சட்டப்படி குற்றமாகும். ஆனுல் வயதுவராத பெண்களைப் புணர்ந்த கணவர்கள் அந்தப் பெண்களின் சம்மதத்தின் மீதே புணர்ந்ததாக வாதாடினுர்கள். இளம்பெண்களைக் காப்பதற்காக இந்தியன் பீனல்கோடு சட்டத்தில் பத்து வயது பெண்களின் "சம்மத வயது" என்று வரையறுக்கப்பட்டது. அதாவது பத்து வயதுக்குக் குறைந்த பெண்களைப் புணர்ந்த கணவர்கள் அந்தப் பெண்களின் சம்மதத்தைப் பெற்றுப் புணர்ந்ததாகச் சட்டப்படி வாதாட முடியாது. அவ்வாறு செய்தவர்கள் பலவந்தப் புணர்ச்சி செய்த குற்றத்திற்காகச் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள். இங்கிலேயில் ஒரு கணவனுடைய பலவந்தப் புணர்ச்சியால் ஓர் இளம்பெண் இறந்துபோனுள். இதைக் கண்ட அரசாங்கம் பனிரண்டு வயதுதான் பெண்களின் "சம்மத வயது" என்று 1891-ஆம் ஆண்டில் சட்டமியற்றியது மேல்நாட்டுப் பழக்கப்படி பார்த்தால் இதுகூட மிகக் குறைந்த வயதுதான். இந்தச் சட்டத்தை முன்னேற்ற நோக்கமுடைய இந்துக்கள் ஆதரித்தார்கள். ஆனுல் கல்கத்தாவிலும் பூனுவிலும் இந்தச் சட்டத்திற்கு விரோதமாகக் கடுமையான கிளர்ச்சிகள் தோன்றின. ஆங்கில அரசாங்கம் இந்துமதத்தை அழிக்க முயல்வதாகக் கிளர்ச்சிக்காரர்கள் கூறினுர்கள், பூனுவில் கிளர்ச்

சிக்காரர்கள் ஆங்கிலேயரை மாத்திரமின்றி முஸ்லிம்களையும் தூற்றத் தொடங்கினார்கள். கல்கத்தாவிலும் பூனாவிலும் தோன்றிய கிளர்ச்சி வெளிப்படையாக இருந்தது. ஆனால் அவற்றிற்கு வெகு தொலைவிலிருந்த சில இடங்களில் மறைமுக மான கிளர்ச்சி வலுத்தது. இந்து மதத்திற்கு ஆபத்து வந்து விட்டது என்ற செய்தி பாமர மக்களிடையே பரவிற்று. கிளர்ச்சிக்குக் காரணம் இன்னது என்று தெரிந்துகொள்ளாமலே இந்துக்கள் தங்கள் பரம்பரைப் பழக்க வழக்கங்களுக்கும் மதக் கோட்பாடுகளுக்கும் ஆங்கில ஆட்சியால் அழிவு ஏற்படும் என்று அஞ்சினார்கள்.

பூனாவில் கிளர்ச்சி செய்தவர்களில் பாலகங்காதர திலகர் முக்கியமானவர். கல்வித்துறையிலும் பத்திரிகைத் துறையிலும் சிறந்த திறமை வாய்ந்தவர். விரைவில் காங்கிரஸ் மகாசபையி லிருந்த தீவிர வாதிகளுக்குத் திலகர் தலைவரானார். 1897-ஆம் ஆண்டில் தொடங்கிய பிளேக்குக் கிளர்ச்சியிலும் திலகர் அதிக மான பங்கெடுத்துக்கொண்டார். பல ஆண்டுகளாகப் பிளேக்கு நோய் இந்தியாவில் தலைகாட்டாதிருந்தலால் இந்தியர்களுக்கு அந்த நோயைப் பற்றிய நினைவு தெளிவாக இல்லை. காலராவும், வைசூரியும் அடிக்கடி வந்ததால் அவற்றின் தன்மைகளையும் கொடுமையையும் பற்றி இந்தியர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் பிளேக்கு ஒரு புதிய ஆபத்து. அதைப்பற்றி யார் என்ன சொன்னாலும் இந்தியர்கள் நம்பத் தயாராயிருந்தார்கள். அந்தக் காலத்தில் நோயாளிகளை மற்றவர்களிடமிருந்து பிரிப்பதைத் தவிரப் பிளேக்கை எதிர்ப்பதற்கு வேறு முறை ஒன்றும் தெரி யாது. வீடு விடாகச் சென்று, நோயாளிகளைக் கண்டு பிடித்து அவர்களைப் பிரித்துவைக்கும் முயற்சியில் இந்தியர்கள் அரசாங் கத்திற்கு உதவிசெய்ய முன்வராததால், அந்த வேலையைச் செய்வ தற்கு ஆங்கிலப் போர்வீரர்களை அரசாங்கம் நியமித்தது. இந்த வேலையில் பூனா நகரில் ஈடுபட்ட ஆங்கிலப் போர்வீரர்களின் நடத் தையைக் கண்டிக்கத் தொடங்கிய திலகர், தம்முடைய பத்திரிகை யில் அரசாங்கத்தையே கடுமையாகத் தாக்கினார். அதனால், அவர் மீது இராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு, தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்த விஷயத்திலும் பூனாவில் ஏற்பட்ட கிளர்ச்சி வெளிப்படையாகவே நடந்தது. ஆனால் மற்ற இடங் களில் மறைமுகமான கிளர்ச்சி நடக்கத் தொடங்கியது. பிளேக்கு நாட்டின் பல பாகங்களிலும் பரவப் பரவ மக்களுக்கு இனமறி யாத ஒரு பயம் தோன்றியது. அந்த நிலையை மறைமுகமான

கிளர்ச்சிக்காரர்கள் பயன்படுத்திக்கொண்டு அரசாங்கத்திற்கு விரோதமாக மக்களைத் தூண்டினார்கள். பத்திரிகைகளில் அடிக்கடி "பிளேக்குக் கலங்களை"ப் பற்றிய செய்திகள் வெளிவந்தன. மக்களுடைய எதிர்ப்பால் அந்தக் கொடிய நோயை எதிர்த்துப் போராடுவதற்கு அதிகாரிகள் செய்த முயற்சிகள் வீணாயின.

இதுவரையில் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கிளர்ச்சிகளையும் கட்சிகளையும்பற்றிப் படித்தோம். இனிப் பிரதேச பக்தியையும் வகுப்பு முன்னேற்றத்தையும் அடிப்படையாகக்கொண்ட அரசியல் கிளர்ச்சிகளையும் கட்சிகளையும்பற்றிப் படிப்போம். இந்த இருவகை அரசியல் உணர்ச்சிகளும் அவற்றின் விளைவான கிளர்ச்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமலிருந்தன என்று எண்ணினால் அது தவறாகும். தேசிய உணர்ச்சியும் வகுப்புணர்ச்சியும் சில சமயங்களில் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாக இருந்தன. மேலும் தேசிய உணர்ச்சியின் விளைவுகள் வகுப்புணர்ச்சியையும் பிரதேச உணர்ச்சியையும் பாதித்தன. அதுபோலவே வகுப்புணர்ச்சியின் விளைவுகளும் பிரதேச உணர்ச்சியின் விளைவுகளும் தேசிய உணர்ச்சியைப் பாதித்தன. இதனால் இந்திய அரசியல் உலகில் காரியமற்ற குழப்பம் இருப்பதுபோல் வெளிப்பார்வைக்குத் தோன்றும். இந்நிலைக்குக் காரணம் பின் வருமாறு:— இந்திய மக்களுக்குள் புதிதாகத் தோன்றிய தன்மதிப்பும் முன்னேற்ற விருப்பமும் சிலசமயங்களில் வகுப்பு முன்னேற்ற விருப்பமாகவும் பிரதேச முன்னேற்ற விருப்பமாகவும், சில சமயங்களில் தேச முன்னேற்ற விருப்பமாகவும் பரிணமித்தன. புதிய சக்தியுடன் தோன்றிக்கொண்டிருந்த புதிய இந்தியாவில் வாழ்ந்த ஒவ்வொரு வகுப்பினரும் அந்தப் புதிய தகுதியில் தங்களுக்கும் சிறந்த இடம் இருக்கவேண்டுமென்று விரும்பினர். அதுபோலவே உலகத்தின் சிறந்த நாடுகளில் இந்தியாவுக்கும் ஒரு தகுதியான இடம் இருக்கவேண்டுமென்று பொதுவாக இந்திய மக்கள் விரும்பினர்.

பிரதேச பக்தியை அடிப்படையாகக்கொண்ட இயக்கங்களில் மகாராஷ்டிர இயக்கத்தையும் வங்காள இயக்கத்தையும் சுருக்கமாகக் குறிப்பிடலாம். 1890-ஆம் ஆண்டுக்கும் 1900-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மகாராஷ்டிரத்தில் சிவாஜி பக்தி பெருகிற்று. பாலகங்காதர திலகரின் தீவிர முயற்சிதான் இந்த இயக்கத்திற்கு முக்கிய காரணம். சிவாஜி இந்தியாவில்

தோன்றிய தலைவர்களில் மிகச் சிறந்த தலைவன் என்று மகாராஷ்டிரர்கள் கருதினார்கள். ஏறக்குறைய அவனை ஒரு கடவுளாகவே மக்கள் கருதத் தொடங்கினார்கள். சிவாஜியின் நினைவு விழாக்களால் மகாராஷ்டிரத்தில் எல்லையற்ற உற்சாகம் பொங்கி வழிந்தோடியது. சிவாஜி முகமதிய முன்னேற்றத்தை வெற்றிகரமாக எதிர்த்தவன். ஆதலால், அவன் பெருமையில் ஈடுபட்ட மக்கள் முஸ்லிம்களை ஓரளவு வெறுக்கத் தொடங்கினார்கள். அது போலவே சிவாஜியின் ஆட்சியில் மக்கள் செழிப்பாக வாழ்ந்தார்கள் என்று கூறப்பட்டதால் ஆங்கில ஆட்சியின் பயனாகத்தான் இந்தியர்கள் பல கஷ்டங்களுக்குள்ளானார்கள் என்ற எண்ணம் மக்கள் மனத்தில் இடம் பெற்றது. இதுவும் இந்தியர்கள் ஆங்கில இனத்தை வெறுப்பதற்கு ஒரு காரணமாயிற்று.

பூகோள சாஸ்திர ரீதியாக வங்காளம் இந்தியாவிலிருந்து ஏறக்குறைய வேறுபட்ட ஒரு தனி நிலப்பகுதியாக இருப்பதால் அதன் சென்றகால வரலாறு இந்தியாவின் பொது வரலாற்றிலிருந்து ஓரளவு தனிப்பட்டதாக இருந்தது என்று முன்னர்க் கூறினோம். முகமதியர் ஆட்சிக்காலத்தில் வங்காளம் ஏறக்குறைய ஒரு தனிப்பட்ட ராஜ்யமாக இருந்தது. கம்பனியின் ஆட்சி ஏற்பட்டபின் இந்திய வாழ்க்கைத் துறைகளில் ஏற்பட்ட மாறுதல்கள் முதல் முதலில் வங்காளத்தில்தான் வெளிப்படையாகத் தெரிந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் வங்காளம் சில தனிப்பட்ட இயல்புகளைக்கொண்டதாகவே யிருந்தது. நிர்வாக சௌகரியத்திற்காக வங்காளம், பீகார், ஒரிஸா, சோட்டா நாகபுரி ஆகிய பகுதிகளெல்லாம் ஒரே மாகாணத்திற் சேர்க்கப்பட்டிருந்தன. ஆனால், நாளடைவில் அவ்வளவு பெரிய மாகாணத்தைச் சரியாக நிர்வகிக்க முடியாததால் கர்ஸான் அந்த மாகாணத்தை இரண்டாகப் பிரித்தான். கிழக்கு வங்காளமும் அஸாமும் ஒரு தனி மாகாணமாகவும், மேற்கு வங்காளமும், பீகாரும், சோட்டா நாகபுரியும் ஒரு தனி மாகாணமாகவும் பிரிக்கப்பட்டன. இவ்வாறு 1905-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வங்காளப் பிரிவினையை அங்கிருந்த இந்துக்கள் மிகக் கடுமையாக எதிர்த்தனர். இத்தகைய எதிர்ப்பை அரசாங்கம் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இந்தியாவின் மற்றபகுதிகளிலிருந்த அரசியல் வாதிகளும் வங்காளப் பிரிவினை எதிர்ப்புக்கு ஆதரவளித்தார்கள் என்பது உண்மைதான் எனினும் பிரிவினை எதிர்ப்புப் பெரும்பாலும் வங்காளிகளின் எதிர்ப்பாகவே இருந்தது. கொடுமையாகத் துண்டிக்கப்பட்ட "தாய்நாடு" வங்காளமே தவிர இந்தியா

வன்று. ஆகவே அதன் பயனாக ஏற்பட்ட கிளர்ச்சி பிரதேச பக்தியை அடிப்படையாகக் கொண்டதேயன்றி தேசபக்தியை அடிப்படையாகக் கொண்டதன்று. ஆகவே, அதுவரையில் வெளிப்படையாகத் தெரியாதிருந்த பிரதேச உணர்ச்சி தக்க சந்தர்ப்பம் கிடைத்ததும் தலைகாட்டிற்று என்ற விஷயத்தை நாம் மனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். மேலும் வங்காளப் பிரிவினை எதிர்ப்புப் பிற்காலத்தில் வங்காளத்தில் தோன்றிய பலாத்கார முறைகளுக்கு வித்தாகவு மிருந்தது. அதைப்பற்றி அடுத்த அதிகாரத்திற் படிப்போம்.

1880-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் பொதுவாக ஐரோப்பியர்களுக்கு எதிராகவும், சிறப்பாக ஆங்கிலேயருக்கு எதிராகவும் இனத் துவேஷம் அதிகமாக வளர்ந்தது. 1883-ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்ட இல்பர்ட்டு மசோதா என்ற சட்டம் இந்த இனத் துவேஷத்தை வளர்ப்பதற்கு முக்கிய காரணமாயிருந்தது. ராஜப் பிரதிநிதியின் நிர்வாகசபையில் சட்ட அங்கத்தினராக இருந்த இல்பர்ட்டு என்பவனுடைய பெயரால் இந்த மசோதா இல்பர்ட்டு மசோதா என்று வழங்கியது. தொடக்கத்தில் ஆங்கில மாஜிஸ் டிரேட்டுகளுக்கு உதவி செய்வதற்காகவே இந்திய மாஜிஸ்டிரேட் டுகள் நியமிக்கப்பட்டார்களென்றும், அவர்கள் அவ்வளவாக முக்கியமில்லாத வழக்குகளை விசாரித்தார்கள் என்றும் முன்னர்க் கூறினோம். ஆங்கிலேயருடைய வழக்குகளை விசாரிப்பதற்கு அந்த இந்திய மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அவசியமும் அதிகாரமும் இல்லை. ஆங்கிலேயருடைய வழக்குகள் எல்லாம் அதற்காகத் தனிப்பட்ட அதிகாரம் பெற்ற ஆங்கில மாஜிஸ்டிரேட்டுகளாலேயே விசாரிக் கப்பட்டன. ஆனால் சிவில் சர்விஸ் பதவிகளில் அமர்ந்த இந்தி யர்கள் 1880-ஆம் ஆண்டுக்குள் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளாக நியமிக்கப்படுவதற்கு ஏற்ற தகுதியும் அனுபவமும் பெற்று விட் டார்கள். ஆகவே ஜில்லா மாஜிஸ்டிரேட்டுப் பதவி வகித்த இந்தி யர்களே அவரவர்களுடைய ஜில்லாக்களில் ஏற்பட்ட ஆங்கி லேயர்களுடைய வழக்குகளை விசாரிப்பதற்கு அதிகாரம் பெறு வது முறையென்று இல்பர்ட்டு எண்ணினான். இந்தியருக்குள் அத்தகைய வழக்குகள் ஏற்பட்டால் அவற்றை ஜில்லா மாஜிஸ் டிரேட்டுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களே விசாரணை செய் யலாம். அத்தகைய வழக்குகள் ஆங்கிலேயருக்குள் ஏற்படும் பொழுது ஜில்லாவின் பிரதம அதிகாரியான ஜில்லா மாஜிஸ் டிரேட்டு விசாரிப்பதற்கு அதிகாரமில்லையென்றால் அது பொருத்த

மற்றதாக இருக்கும். இந்த நிலையைச் சீர்திருத்தும் நோக்கத்துடன்தான் இல்பர்ட் மசோதா தோன்றியது. ஆனால் வங்காளத்திலும், பீகாரிலும் இருந்த உத்தியோகஸ்தர்கள் அல்லாத ஆங்கிலேயர்கள் அந்த மசோதாவை மிகக் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் தலைநகரத்துக்கு வெகு தொலைவிலிருந்த தேயிலைத் தோட்டங்களிலும் அவுரித் தோட்டங்களிலும் வசித்து வந்தவர்கள். தங்கள் வழக்குகளை இந்தியர்கள் விசாரிப்பதை அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. வங்காளத்திலும் பீகாரிலுமிருந்த பல ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய எதிர்ப்பு நியாயமானதென்று கருதினார்கள். வங்காளத்தின் லெப்டனண்டு கவர்னரே அவர்களை ஆதரித்தான். இனச் செருக்கே அவர்களுடைய எதிர்ப்புக்குக் காரணம். ஆங்கிலப் பத்திரிகைகளில் இல்பர்ட் மசோதாவைத் தாக்கி மிகக் கடுமையான கட்டுரைகள் வரம்பு மீறிய வாசகத்தில் எழுதப்பட்டன. அதைக் கண்ட இந்தியப் பத்திரிகைகளில் சில அவைகளுக்கு மறுப்பு எழுதின. இதனால், இனவேற்றுமையை அடிப்படையாகக்கொண்ட ஒரு பெரிய வாதம் தொடங்கியது. முடிவாக இல்பர்ட் மசோதா இருபான்மையினரையும் ஓரளவு திருப்தி செய்யக்கூடிய முறையில் மாற்றி அமைக்கப்பட்டது. ஆனால் அதற்குள்ளாக இந்தியாவில் ஆங்கிலேயருக் கெதிராக இனத் துவேஷம் பரவிவிட்டது.

திருத்தி வெளியிடப்பட்ட இல்பர்ட் மசோதாப்படி குற்றம் சாட்டப்பட்ட ஐரோப்பியர்கள் ஜூரர்களில் குறைந்த பட்சம் பாதிப் பேராவது தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதற்கு உரிமை யளிக்கப்பட்டது. ஒரு சில இடங்களைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் ஜூரர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்த ஐரோப்பியர்கள் அதிகமாக இல்லை. உயர்ந்த நிலையிலிருந்த ஐரோப்பியர்களில் பெரும்பாலோர் ஜூரர்களாக இருக்கவேண்டிய அவசியத்தினின்று பல காரணங்களுக்காக விடுவிக்கப் பட்டிருந்தார்கள். இருப்புப்பாதைகளிலும், கடைகளிலும், தொழிற்சாலைகளிலும் கீழ்த்தர உத்தியோகங்களை வகித்த ஐரோப்பியர்களின் எண்ணிக்கையும் ஆங்கிலோ இந்தியரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வந்தன. ஆங்கிலேயர்களுடைய வழக்குகளில் அவர்கள் ஜூரர்களாக நியமிக்கப்பட்டார்கள். அந்தச் சமயங்களில் அவர்கள் நியாயப்படி தீர்ப்புக் கூறுவதற்கு பதிலாக ஐரோப்பிய இனத்தின் உயர்வைக் காப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள்

என்ற தப்பான எண்ணத்தில் அவர்கள் தீர்ப்புக் கூறினார்கள். அதனால், அவர்கள் கூறிய சில தீர்ப்புக்கள் நியாயத்திற்கு விரோதமாக இருந்தன. அதைக் கண்ட இந்தியர்கள் பெருஞ் சீற்றமடைந்தார்கள். ஐரோப்பியர் வழக்கு விசாரிக்கப்பட்ட சமயத்தையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு அந்த வழக்குகளில் எல்லாம் ஐரோப்பியருக்குச் சாதகமாகவும் நியாயத்திற்கு விரோதமாகவும் தீர்ப்புக் கூறப்பட்டதாகவே இந்தியர்கள் எண்ணிப் பத்திரிகைகளின் மூலமாகவும் மற்ற வழிகளிலும் தங்கள் இனத்துவேஷத்தை வெளியிட்டார்கள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இனத்துவேஷம் சமூகவாழ்க்கையிலும் தலைகாட்டிற்று. முக்கியமான நகரங்களிலெல்லாம் வாழ்ந்து வந்த ஆங்கில உத்தியோகஸ்கர்களும் உத்தியோகஸ்தர் அல்லாத மற்ற ஐரோப்பியர்களும் சேர்ந்து மேல்நாட்டு முறையில் "சமூக வாழ்க்கை" நடத்தினார்கள் என்று முன்னர் ஓர் அதிகாரத்தில் கூறியது நினைவிலிருக்கும். சாதாரணமாக ஒவ்வொரு நகரத்திலும் ஐரோப்பியர்களுக்கென்று ஒரு "கிளப்" அல்லது சங்கம் இருந்தது. அந்தச் சங்கத்தில் அங்கத்தினராகி ஐரோப்பியர்களோடு சமமாகப் பழக வேண்டுமென்று இந்தியர்களிற் சிலர் விரும்பினார்கள். ஆங்கில உத்தியோகஸ்தர்களில் ஒரு குறிப்பிட்ட தகுதியையுடையவர்களெல்லாரும் அந்தச் சங்கத்தில் அங்கத்தினராவதற்கு உரிமை பெற்றிருந்தார்கள். மற்றவர்களுக்கு அந்த உரிமையில்லை. அவர்களைச் சங்கத்தில் சேர்க்கவேண்டுமானால் திருவுளச்சீட்டுப் போட்டுத் தேர்ந்தெடுப்பது வழக்கம். இந்த முறையைக் கையாண்டதால் சில கெடுதல்கள் ஏற்பட்டன. ஒரு சில இந்தியர்கள் சங்கத்தில் சேர முடியாமல் போய்விட்டது. சில சமயங்களில் அவர்களுடைய பெயர்களையே சேர்க்காமல் திருவுளச்சீட்டுப் போடப்பட்டது. இதனால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் வம்புப் பேச்சினால் பெரிதாக்கப்பட்டு இனத்துவேஷத்தை வளர்ப்பதற்குக் காரணமாயின. இவ்வாறு சிறுமைப்படுத்தப்பட்ட இந்தியரின் எண்ணிக்கை மிகச் சிறியது தான். ஆனால், பல ஐரோப்பியர்கள் இந்தியர்களை மிக அவமரியாதையாக நடத்தினார்கள். அவர்களில் பெரும்பாலோர் கீழ்த்தரமான பதவிகளை வகித்தவர்கள்தாம் எனினும், அவர்கள் உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டு தங்களைவிட உயர்ந்த நிலையிலிருந்த இந்தியர்களைக்கூட அவமரியாதையாக நடத்தினார்கள். இதனால் சுயமதிப்பை யிழந்த இந்தியர்களின் இரத்தம் கொதித்தது. பல ஆங்கில உத்தியோகஸ்தர்கள்

பல இந்தியர்களோடு நட்பு முறையில் நெருங்கிப் பழகியதும், அவர்களில் பலரை இந்தியர்கள் விரும்பிப் போற்றியதும் உண்மை தானெனினும், பொதுவாக ஆங்கிலேயர்கள் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்களென்றும், அவர்கள் இந்தியர்களைத் தாழ்வாகக்கருதி ஞர்கள் என்றும், எப்போதுமே இந்தியர்களைத் தாழ்ந்த நிலையி லேயே வைத்திருப்பது அவர்களுடைய நோக்கமென்றும் இந்தி யப் பொதுமக்கள் எண்ணிஞர்கள். அதனுல், இனத்துவேஷம் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே சென்றது.

இனி வகுப்புணர்ச்சியைப்பற்றிப் படிப்போம். குறிப்பிட்ட மதங்களையோ, மதங்களின் பிரிவுகளையோ சேர்ந்தவர்கள் நாட் டின் பொது வாழ்வில் தங்களுக்கு உரியதென்று அவர்கள் நினைக் கும் பங்கைக் கேட்பதுதான் இந்திய அரசியல் உலகில் வகுப்பு வாதம் என்று வழங்குகிறது. பார்சிகளும், கிறிஸ்தவர்களும் இத் தகைய வகுப்பு வாதத்தில் ஈடுபடவில்லை. சீக்கியர்கள் பஞ்சாப் மாகாணத்தின் பொது வாழ்வில் மாத்திரம் தங்களுக்குரிய பங்குக் காக வாதாடுபவர்கள். ஆங்கிலோ இந்தியர்களும், இந்தியாவி லேயே நிலைத்துவிட்ட ஐரோப்பியர்களும் வகுப்புவாதிகள்தாம் எனினும் அவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைவானது. ஆகவே முஸ்லிம்களுடைய வகுப்புணர்ச்சியையும், இந்துக்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வகுப்புணர்ச்சியையும் பற்றித்தான் இப்பொழுது கூறப்போகிருேம்.

நகரங்களிலும் கிராமங்களிலும் இந்துக்களும் முஸ்லிம்களும் சாதாரணமாக ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிருர்கள். ஆனல் எந்தச் சமயத்திலும் இந்த ஒற்றுமை குலைந்து பகைமை மூண்டு கொடூரமான வகுப்புச் சண்டைகள் நடக்கக்கூடும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இவ்வாறு ஒற்றுமை குலைவதற்குப் பசுக் கொலையும் ஊர்வலங்களும் தாம் முக்கியமான காரணங்கள். இந் துக்கள் பசுவைத் தெய்வமாகப் போற்றுகிருர்கள். ஆனல் முஸ் லிம்களில் சிலர் மாட்டிறைச்சி உண்பதோடு மதக்கோட்பாடு களின்படியும் பசுவைக் கொலை செய்கிருர்கள். இந்துக்களும் முஸ் லிம்களும் குறிப்பிட்ட காலங்களில் திருவிழாக் கொண்டாடுகிருர் கள். அப்பொழுது மிகுந்த சப்தம் செய்யும் வாத்தியங்களோடு ஊர்வலங்கள் நடக்கும். அதனுல், அடிக்கடி இருதிறத்தாருக்கும் சச்சரவு ஏற்படும். இந்தக் காரணங்களாலும் மற்றக் காரணங்க ளாலும் முகமதியர் ஆட்சிக்காலத்தில் அடிக்கடி சச்சரவு ஏற்பட் டதா இல்லையா என்பதைப்பற்றி நமக்கு நிச்சயமாகத் தெரியாது.

அத்தகைய சச்சரவுகள் ஏற்பட்டன என்பது மாத்திரம் தெரியும். பிரிட்டிஷ் ஆட்சியில் இத்தகைய சச்சரவுகள் அடிக்கடி ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை ஆங்காங்கிருந்த உத்தியோகஸ்தர்களுடைய முயற்சியாலும் பெரிய மனிதர்களுடைய முயற்சியாலும் சமாதான முறையில் தீர்த்துவைக்கப்பட்டன. சில சமயங்களில் இந்தச் சச்சரவுகளால் கடுமையான வகுப்புச் சண்டைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் இரு வகுப்பினரிடையும் இருந்த கிளர்ச்சிக்காரர்கள்தாம்.

1880-க்கும் 1890-க்கும இடைப்பட்ட காலத்தில் ஆரியசமாஜத்தின் ஸ்தாபகரான தயானந்தர் பசுக்கொலையை நிறுத்துவதற்காக ஓர் இயக்கத்தைத் தொடங்கினார். அந்த இயக்கம் இந்தியாவின் பல பகுதிகளில் பரவியது. அதன் பயனாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் வகுப்புத்துவேஷம் வளர்ந்தது. பல இடங்களில் கலகங்களும் கொலைகளும் நடந்தன. 1890-க்கும் 1895-க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த வகுப்புத்துவேஷம் அதிகமாகக் காணப்பட்டது. தயானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் நாளடைவில் வலியிழந்தது எனினும் அதற்குள்ளாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட பகைமை நிலைத்துவிட்டது. சில முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்தில் இந்துப் பழக்க வழக்கங்கள் புகுந்து அதன் தூய்மையைக் கெடுத்துவிட்டன என்று கருதினார்கள். மறுபடியும் இஸ்லாம் மதத்தின் புனிதத் தன்மையை ஸ்தாபிக்கும் நோக்கத்தோடு அவர்கள் ஓர் இயக்கத்தைத் தொடங்கினார்கள். ஆதியில் இந்துக்களாக இருந்து பின்னர் இஸ்லாம் மதத்தையும் கிறிஸ்தவ மதத்தையும் தழுவியவர்களை மறுபடியும் இந்து மதத்தில் சேர்ப்பதற்கு இந்துக்களில் சிலர் முயன்றார்கள். இந்த இருசாராருடைய பிரசாரமும் இந்து முஸ்லிம் வேற்றுமையை அதிகப்படுத்தியது. இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவர்மீது ஒருவர் பகைமை பாராட்டினார்கள் என்று பொதுவாகக் கூற முடியாதெனினும், இரு சாராரிடையிலும் இருந்த தொடர்பில் ஓரளவு நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டுவிட்டது என்றும், அதனால் சிறிய காரணங்களுக்கும் பெரிய சச்சரவுகள் ஏற்படுவதற்கு அநுகூலமான நிலை ஏற்பட்டதென்றும், அந்த நிலையைக் கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் பயன்படுத்திக் கொண்டார்களென்றும் கூறுவது பொருத்தமாக இருக்கும். மேலும் ஏதாவதோரிடத்தில் ஏற்பட்ட சச்சரவைப் பத்திரிகைகள் பிரமாதப்படுத்தி எழுதிய

தால் 'அதன் பயனாக மற்ற இடங்களில் இந்துமுஸ்லிம் வகுப்புக் கலவரங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

இந்து மதத்தின் உயர்வையும் இந்துக்களின் சுயமதிப்பையும் காப்பதில் பரம்பரை இந்து மதத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருந்த மக்கள் மாத்திரமின்றிச் சீர்திருத்த நோக்கமுடைய ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த இந்துக்களும் முனைந்து நின்றார்கள். பரம்பரை இந்துமதத்தைப் பின்பற்றியவர்கள் அந்தமதம் மிக உயர்ந்தமதம் என்றும், மேல்நாட்டு நாகரிகம் தீமையே பயக்கக் கூடியதென்றும், அதனால் மேல்நாட்டு நாகரிகமாகிய நஞ்சு இந்திய வாழ்க்கையில் கலவாமல் பார்த்துக்கொள்ளுவது ஒவ்வோர் இந்துவின் கடமையாகுமென்றும் கூறினார்கள். இந்தப் பிரசாரம் தேசீய இயக்கத்தைப் பலப்படுத்திய அதே சமயத்தில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான இனத்துவேஷத்தையும் வளர்க்கக் காரணமாயிற்று. ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களும் ஏறக்குறைய இதே கொள்கையை வற்புறுத்தினார்கள். இந்து மதத்தில் அவர்கள் ஏற்றுக்கொண்ட கோட்பாடுகள் மிக உயர்ந்த கோட்பாடுகளென்றும், அவற்றைக் காப்பது இந்துக்களுடைய கடமை என்றும் அவர்கள் கூறினார்கள். ஆனால் பசுக்கொலை கூடாதென்று அவர்கள் செய்த பிரசாரத்தால் முஸ்லிம்களும் ஐரோப்பியர்களும் அவர்களை வெறுத்தார்கள்.

முஸ்லிம்கள் காபிரிகளின் ஆட்சியில் இருக்க நேர்ந்தால் அவர்கள் கலகம் செய்து தங்கள் ஆட்சியை ஸ்தாபித்துக்கொள்ளலாமென்ற பழைய இஸ்லாமியக் கொள்கை கைவிடப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் அவர்கள் பிரஜைகளாக வாழ்வது முஸ்லிம் சட்டத்திற்கு எதிரானது அன்று என்று இப்பொழுது பொதுவாக ஒத்துக்கொள்ளப்பட்டது. ஸர் சையது அகமதுவின் ஆலோசனைப்படி முஸ்லிம்கள் ஆங்கிலக் கல்வியை ஏற்றுக்கொண்டார்கள். அதன் பயனாக அரசியல் விஷயங்களில் பங்கெடுத்துக்கொள்வதற்கு அவர்களுக்குப் புதிய உற்சாகம் ஏற்பட்டது. ஆனால் இரண்டு முரண்பாடான எண்ணங்கள் இந்திய முஸ்லிம்களுக்கிடையில் தோன்றின. இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களெல்லாம் இந்தியர்களாகையால் இந்திய தேசீயக் கொள்கைளில் இந்துக்களைப்போலவே அவர்களுக்கும் விருப்பம் இருந்தது. ஆனால், அவர்கள் இந்தியாவில் வாழ்ந்தாலும் இன வேற்றுமைகளுக்கும் பூகோள சாஸ்திர எல்லைகளுக்கும் அப்பாற்பட்ட சகோதரத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட இஸ்லாம் மதத்திலும் அதிக நம்பிக்கை யுடையவர்களாக இருந்தார்கள்.

ஆகவே, அவர்கள் அடிப்படையில் இந்திய முஸ்லிம்களா, முஸ்லிம் இந்தியர்களா என்ற கேள்வி எழுந்தது. கிறிஸ்தவப் பாதிரிகளின் தாக்குதல்களிலிருந்தும் ஆரிய சமாஜத்தினரின் தாக்குதல்களிலிருந்தும் தங்கள் மதத்தைக் காத்துக் கொள்ளுவதற்காக 1880-ஆம் ஆண்டுக்கும் 1905-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்கள் பெரிதும் முயன்றனர். இஸ்லாம் மதத்தில் இடைக்காலத்தில் புகுந்த ஒவ்வாத பழக்க வழக்கங்களைத் தள்ளிவிட்டுத் தங்களுடைய மதத்தின் புனிதத் தன்மையை மீண்டும் நிலைநிறுத்தி அந்த மதத்தைப் பின்பற்றியவர்களுடைய தனிப்பட்ட இயல்புகளைக் காக்கவேண்டுமென்று முஸ்லிம்கள் பாடுபட்டார்கள். உலகத்தில் அல்லாவின் பிரதிநிதியாகிய கலீபா முஸ்லிம்களுக்கெல்லாம் தலைவர் என்று இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களும் நம்பினுர்கள். துருக்கி சுல்தானே அந்தச் சமயத்தில் கலீபாவாகவும் இருந்ததால் துருக்கி அரசியல் உலகத்தில் அடிக்கடி ஏற்பட்ட மாறுதல்களை இந்திய முஸ்லிம்கள் கவலையோடு கவனித்துக் கொண்டிருந்தார்கள். 1905-ஆம் ஆண்டுக்குப் பின்னர் முஸ்லிம்களில் பலர் முதலில் தம்மை முஸ்லிம்களாகவும் பின்னர் இந்தியர்களாகவும் தங்களைக் கருதினுர்கள்.

ஹிந்து சமுதாயத்தின் ஒரு பகுதியினராகிய தாழ்த்தப்பட்ட மக்கள் புதிய உணர்ச்சி பெற்றுத் தங்களுடைய உரிமைகளைப் பற்றி நினைத்துத் தங்களுடைய நிலைமையை உயர்த்திக்கொள்ளுவதற்குப் பாடுபடத் தொடங்கினுர்கள். பொருளாதாரத் துறையிலும் சமூகத் துறையிலும் அவர்களுக்குள்ள தாழ்ந்த நிலைமையையும் கஷ்டங்களையும்பற்றி அவர்கள் இதுவரையில் எண்ணிப் பார்த்ததில்லை. தாழ்ந்த நிலைமையிலிருப்பதே தங்களுடைய இயற்கையான நிலையென்று அவர்கள் இதுவரையில் எண்ணிக் கொண்டிருந்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ளுவதற்குத் தொடங்கிய புதிய இயக்கத்திற்குப் பாதிரிகளுடைய வேலைகள் முக்கிய காரணமாயிருந்திருந்தன. தொடக்கத்தில் இந்தியாவுக்கு வந்த பிராடஸ்டண்டு பாதிரிகள் தங்களுடைய கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதில் மிகுந்த கவனம் செலுத்தினுர்களே ஒழிய மத மாற்றத்தில் அவ்வளவாகக் கவனம் செலுத்தவில்லை. பிராடஸ்டண்டு மதக் கொள்கைளை உண்மையான நம்பிக்கைகொண்டு அம்மதத்தில் சேர விரும்பியவர்களை அவர்கள் வரவேற்ருர்கள். ஆனுல் மதக் கொள்கைகளை எடுத்துக் கூறுவதும் கல்வியைப் பரப்புவதுமே அவர்களுடைய முக்கிய வேலையாக இருந்தது,

சுமார் 1880-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்கப் பாதிரிகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் தங்கள் ஸ்தாபனங்களை ஏற்படுத்திக்கொண்டு பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்களிடையே தங்களுடைய பிரசாரத்தைத் தொடங்கினார்கள். அந்த ஸ்தாபனங்களில் சில மத மாற்றத்தில் அதிகக் கவனம் செலுத்தின. அதனால் பலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள். அவர்களுடைய பிரசாரத்தின் பயனாக இந்தியாவின் பலவேறு பகுதிகளிலும் வாழ்ந்த தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுடைய நிலையை எண்ணிப்பார்க்கத் தொடங்கினார்கள். அவர்கள் எல்லாரும் கிறிஸ்தவ மதத்தில் சேரவில்லை யெனினும் தங்களுடைய நிலையையுயர்த்திக்கொள்ளுவதற்குத் தங்களுக்கு உரிமையுண்டு என்று உறுதியாக நம்பத் தொடங்கினார்கள். "சால்வேஷன் ஆர்மி" என்ற ஸ்தாபனத்தின் பிரசாரமும் இதே பயனைத் தந்தது. ஆகவே இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தீண்டாதவர்களுடைய பிரச்சினை ஒரு மிக முக்கியமான பிரச்சினையாயிற்று. தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக ஏற்பட்ட இயக்கம் உயர்வகுப்பு இந்துக்களிடையில் இரண்டு முரண்பட்ட கருத்துக்களைத் தோற்றுவித்தது. பரம்பரை இந்துமதத்தில் பூரண நம்பிக்கை கொண்டவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையில் மாறுதல் ஏற்படுவதை விரும்பவில்லை. ஆனால், முன்னேற்றக் கருத்துடைய இந்துக்களெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவது அவசியமென்பதை உணர்ந்ததோடு இந்துக்களே செய்யவேண்டிய அந்த வேலையை வெளிநாட்டார் வந்து செய்ய நேர்ந்ததே என்று வெட்கப்பட்டார்கள். இந்தக் கருத்தின் பயனாகச் சமூகத்தொண்டுக்கு ஏற்ற இயக்கங்கள் தோன்றத் தொடங்கின. பாதிரிகள் செய்த வேலையை இந்துக்களும் செய்யத் தொடங்கினார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையை உயர்த்தி அவர்களை இந்து மதத்தைவிட்டு வெளியேறாமல் பார்த்துக்கொள்ளும் நோக்கத்துடன் பல சமூக சேவைச்சங்கங்கள் தோன்றின.

அரசியல் உலகில் தோன்றிய புதிய உணர்ச்சிகள் கலாச்சார உலகிலும் தோன்றின. இலக்கியத்திலும், இசையிலும், நாடகத்திலும் மற்ற கலைகளிலும் புதிய கருத்துக்கள் இடம் பெற்றன. மேலும் இந்தியர்கள் விஞ்ஞான சாஸ்திரத்தை விரும்பிக் கற்கத் தொடங்கினார்கள். அதுமாத்திரமன்றி, கேளிக்கைகளிலும் விளையாட்டுகளிலும்கூடப் புதிய முறைகள் தோன்றின. இந்தத் துறைகளில் எல்லாம் ஆங்கிலேயர் செய்த காரியங்களை இந்தியர்களும் செய்யத் துணிந்தார்கள். முடிந்தால் இத்துறைகளில்

ஆங்கிலேயர் ஆற்றிய செயல்களைவிடச் சிறந்த செயல்களைச் செய்ய வேண்டுமென்று இந்தியர்கள் விரும்பினார்கள். இலக்கியப் பத்திரிகைகள் தோன்றின. நாடகக் கோஷ்டிகள் பல இடங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்தன. இசை வல்லுநர் கச்சேரி செய்தனர். இத்துறைகளில் எல்லாம் இந்தியர்கள் ஆங்கிலேயரைப் பின்பற்றினார்களெனினும் இந்தியக் கருத்துக்களும் இடம்பெற்றன. கல்கத்தாவிலும் பம்பாயிலும் ஓவியக்கலையில் புதிய முறைகள் கையாளப்பட்டன. தொடக்கத்தில் ஐரோப்பிய முறைகள் பின்பற்றப்பட்டபோதிலும் நாளடைவில் இந்தியக் கருத்துக்களும் அவற்றுடன் கலந்ததால் இந்தியாவிற்கே இயல்பான பரம்பரை அழகு விரவிய புதிய கலைகள் உருப்பெற்றன.

கர்ஸானுடைய ஆட்சியில் கல்வித்துறையில் செய்யப்பட்ட மாறுதல்கள் பயன் அளிப்பதற்கு இன்னும் கொஞ்சகாலம் செல்ல வேண்டியிருந்ததால் உயர்தர விஞ்ஞானக் கல்வியைக் கற்பதற்காகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு முடியும் வரையில் இந்தியர்கள் இங்கிலாந்துக்கே செல்லவேண்டி யிருந்தது. கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் உயர் கல்விகற்ற இந்தியர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. இங்கிலாந்திலிருந்த அறிஞர் சபைகளில் இந்தியர்களும் அங்கத்தினர்களாகி உயர் கல்வித்துறை யாராச்சியில் பங்கெடுத்துக் கொண்டார்கள். விஞ்ஞான ஆராய்ச்சி இந்தியர் வாழ்க்கைத் துறையில் ஓர் அம்சமாயிற்று.

விஞ்ஞானக் கல்வி கற்பதற்கு மாத்திரமன்றி மற்றத் துறைகளிலும் பயிற்சி பெறுவதற்காகவும் இந்திய மாணவர்கள் இங்கிலாந்துக்குச் சென்றார்கள். 1887-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் நூற்றறுபது இந்திய மாணவர்கள்தாம் இருந்தார்கள். ஆனால், இருபதாண்டுகளுக்குப் பின்னர் எழுநூறு இந்திய மாணவர்கள் இங்கிலாந்திலிருந்தார்கள். இவ்வாறு இந்திய மாணவர்களின் தொகை அதிகரித்ததால் மிகத் திறமைவாய்ந்த மாணவர்களின் விகிதம் குறைந்தது இயல்பே. ஆதலால், பரீட்சையில் தோற்றவர்களின் விகிதம் உயர்ந்தது. இந்திய மாணவர்களின் தொகை பெருகியதால் ஆங்காங்கு அவர்களுக்குள் சிறிய சங்கங்கள் தோன்றின. ஆதலால் முன்போல அவர்கள் ஆங்கில மாணவர்களோடு தாராளமாகப் பழகுவதற்கு வசதி குறைந்தது. பரீட்சையில் தோற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் இந்திய மாணவர்களின் திறமையைப்பற்றி ஆங்கிலேயர்கள் முன்பு கொண்டிருந்த உயர்ந்த

அபிப்பிராயம் குறையத் தொடங்கியது. அதன் பயனாக இந்திய மாணவர்களுக்கும் ஆங்கில மாணவர்களுக்கும் இடையில் இருந்த சமூகத் தொடர்புக்கும் பாதகம் ஏற்பட்டது.

விளையாட்டுத்துறையில் ஆங்கிலேயருக்கும் இந்தியருக்கும் இடையில் சமூகத்தொடர்பு அதிகரித்தது. மத்திய ஆசியாவில் பழங்காலத்தில் வாழ்ந்து வந்த நாடோடிமக்கள் போலோ விளையாட்டை விரும்பிப் பயின்றனர். மொகலாயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலும் அந்த விளையாட்டு இடம் பெற்றது. ஆனால் நாளடைவில் அது இந்தியாவிலிருந்து பெரும்பாலும் மறைந்துவிட்டது. இமயமலைப் பிரதேசத்தின் சில பகுதிகளில்தான் அது வழக்கிலிருந்தது. ஆங்கில உத்தியோகஸ்தர்கள் அதை மறுபடியும் சமவெளிகளிலும் பழக்கத்திற்குக் கொண்டுவந்தார்கள். இந்தியர் பலர் அதை விரும்பி விளையாடத் தொடங்கினர். குறிப்பாக இராஜபுதனத்திலிருந்த சுதேச ஸம்ஸ்தானங்களில் அந்த விளையாட்டில் ஆங்கிலேயரும் இந்தியரும் ஒற்றுமையாகவும் சமமாகவும் கலந்துகொண்டதால் அந்த இருசாராருக்கும் இடையில் ஏற்பட்ட உறவு மேலும் மேலும் வளர்ந்தது. ஆங்கிலக் கல்வியின் பெருக்கத்தால் இந்தியப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஆங்கிலேயருக்கே உரியவையான கிரிக்கெட்டும், உதை பந்தும் ஹாக்கியும், டென்னிஸும் இந்தியாவில் பரவின. ஆகவே, மற்ற துறைகளில் இனத்துவேஷத்தால் பாதிக்கப்பட்ட இந்தியர்களும் ஆங்கிலேயர்களும் விளையாட்டு மைதானங்களில் ஒற்றுமையாகவும் சமமாகவும் பழகினார்கள். கிரிக்கெட்டு விளையாட்டில் ஒப்பற்ற திறமைவாய்ந்த ரஞ்சிட்சிங்குஜியின் விளையாட்டு இந்தியர்கள் எத்துறையிலும் வல்லவர்களாக முடியும் என்ற உண்மையை அனைவருக்கும் எடுத்துக் காட்டியது.

அதிகாரம்—49

கிளர்ச்சியும் சீர்திருத்தமும் 1906 - 1914

இராஜப் பிரதிநிதிகள் :

மிண்டோபிரபு, 1905—1910
ஹார்டிஞ்சு பிரபு, 1910—1916

கர்ஸான் பிரபு இந்தியாவைவிட்டுச் சென்றதற்கும் முதல் யுத்தத்தின் ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் முக்கியமான அரசியல் மாறுதல்கள் ஏற்பட்டன. அதே சமயத்தில் பல கிளர்ச்சிகளும் சதியாலோசனைகளும் நடந்தன. அவற்றைப்பற்றிக் கூறப்புகுமுன்னர் அந்தக் காலத்திய பொது வரலாற்றைச் சுருக்கிக் கூறுவோம். 1911-ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தி இந்தியாவுக்கு விஜயம் செய்தார். அவருக்கும் பொதுமக்களாலும், சுதேச அரசர்களாலும் அளிக்கப்பட்ட வரவேற்பு இந்தியமக்கள் தங்கள் சக்கரவர்த்தியினிடத்தில் மிகுந்த விசுவாசமுடையவர்களாய் இருந்தார்கள் என்பதை ஐயமறக் காட்டிற்று. சக்கரவர்த்தி விஜயம் செய்த சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு முக்கிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் ஒன்றின்படி இந்தியாவின் தலைநகரம் கல்கத்தாவிலிருந்து டில்லிக்கு மாற்றப்பட்டது. மற்றொன்றின்படி வங்காளம் தனி மாகாணமாக்கப்பட்டது. வங்காள மாகாணத்தின் பகுதிகளாயிருந்த அஸாம் ஒரு தனி மாகாணமாவும், பீகார், ஒரிஸா, சோட்டா நாகபுரி ஆகியவைகள் ஒரு தனி மாகாணமாகவும் பிரிக்கப்பட்டன.

சக்கரவர்த்தியினிடத்தில் இந்தியமக்கள் விசுவாசமுடையவர்களாயிருந்தார்கள் என்பது உண்மை யெனினும், இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருப்பதை இந்தியரனைவரும் விரும்பினார்கள் என்று கூற முடியாது. படித்த இந்தியர்களிற் பெரும்பான்மையோர் இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருப்பது விரும்பத்தக்கதா இல்லையா என்பதைப் பற்றித் தீர்மான முடிவுக்கு வராவிட்டாலும், அது தவிர்க்க முடியாதது என்று எண்ணினார்கள். ஆனால், சிலர் இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கக்கூடாது என்று கூறினார்கள். அவர்கள் சிறுபான்மையினராயிருந்தாலும், அவர்களுக்குப் பிரசார வசதியும் பலமும் இருந்தன. அவர்களுடைய கட்சிக்கு வலிமைதரும் வகையில் வெளிநாடுகளில் சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. பிரிட்டிஷ்

ஸாம்ராஜ்யத்தின் பகுதிகளாயிருந்த சில குடியேற்ற நாடுகளில் வாழ்ந்துவந்த இந்தியர்கள் பலவிதத் துன்பங்களுக்குள்ளாயினர். அதனால், இந்தியாவில் அக் குடியேற்ற நாடுகளின்மீதும், இங்கிலாந்தின்மீதும் மிகுந்த கோபமும் வெறுப்பும் தோன்றின. தென் ஆப்பிரிக்காவில்தான் இந்தியர்களுடைய நிலை மிக மோசமாயிருந்தது. நேட்டால் மகாணத்தில் பெருந் தொகையினரான இந்தியர்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் ஒப்பந்தக் கூலிகளாயிருந்தனர். மற்றவர்களுடைய ஒப்பந்தக் காலம் முடிந்திருந்தாலும் அவர்கள் பூரண சுயேச்சையுடன் வாழ்ந்தார்கள் என்று கூறமுடியாது. ஏனெனில் அவர்கள்மீது வெள்ளையர்கள்மீது விதிக்கப்படாத தனிப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. வேறு பல அசௌகரியங்களையும் அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்தது. அதனால், அவர்கள் வெள்ளையர்களை விட மிகத் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்த மக்கள் என்ற நிலை ஏற்பட்டது. டிரான்ஸ்வால் மாகாணத்திலும் இந்தியர்கள் பல துன்பங்களுக்கு உள்ளாயினர். முதலில் டிரான்ஸ்வால் மாகாணம் சுயேச்சையாக இருந்தது. அப்போது அங்கு இந்தியர்கள் சரியானபடி நடத்தப்படவில்லை என்ற காரணத்திற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் டிரான்ஸ்வால் அரசாங்கத்திற்குத் தன்னுடைய கண்டனத்தைத் தெரிவித்திருந்தது. ஆனால், டிரான்ஸ்வால் மாகாணம் தென் ஆப்பிரிக்காவோடு சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்திற்கு வந்தபிறகு அங்கு வசித்த இந்தியர்களின் நிலை மேலும் மோசமாயிற்றே தவிர அபிவிருத்தியடையவில்லை. அதனால் தென் ஆப்பிரிக்க இந்தியரின் நிலையை உயர்த்துவதற்காகத் தென் ஆப்பிரிக்காவில் சிறிதுகாலம் கிளர்ச்சி நடந்தது. இந்தியாவிலும் தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தைக் கண்டித்துக் கடுமையான கிளர்ச்சி நடந்தது. அவற்றின் பயனாக இனிமேல் இந்தியர்கள் தென்ஆப்பிரிக்காவிற் சென்று குடியேறக்கூடாது என்று 1911-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. மேலும் ஒப்பந்தக்கூலி முறைக்கு இந்தியாவில் ஏற்பட்ட எதிர்ப்பு நாளுக்குநாள் அதிகரித்தது. அம்முறை இந்தியாவின் சுயமதிப்புக்குப் பங்கம் விளைவித்தது என்று இந்தியமக்கள் கருதினார்கள். அதனால் ஒப்பந்தக்கூலி முறையை நிறுத்திவிடுவது என்று 1915-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் முடிவு செய்தது.

இனி, வடமேற்கு எல்லைப்புற விஷயங்களைக் கவனிப்போம். ஆப்கானிய அமீராகிய ஹபீபுல்லா லண்டன் அரசாங்கத்தோடு நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள முயற்சி செய்து

கொண்டேயிருந்தான். இந்திய அரசாங்கத்திற்கும் ஆப்கானிய அரசாங்கத்திற்கும் அதிக நட்பு இல்லையெனினும் பகைமை ஏற்படவில்லை. இருநாடுகளுக்கும் இடையிலிருந்த கூட்டத்தினர்கள் முன்போல அவ்வளவு அதிகமாகத் தொல்லை கொடுக்கவில்லை. ஆனல், அந்தப் பகுதியில் ஒரு புதிய மிக ஆபத்தான நிலை தோன்றியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றுண்டில் எல்லைப் புறவாசிகள் மேல் நாடுகளில் உற்பத்தியான நவீனப் போர்க் கருவிகளை வாங்கி உபயோகிக்க முடியவில்லை. ஆனல் அந்நூற்றுண்டின் இறுதியில் அத்தகைய போர்க்கருவிகளை அவர்கள் வாங்கி வைத்துக்கொள்ளுவதற்கு வசதியேற்பட்டது. சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட நவீனத் துப்பாக்கிகளும், அவற்றிற்கு வேண்டிய குண்டுகளும் பாரசீக வளைகுடாவின் வழியாக எல்லைப் புறவாசிகளுக்கு ஏராளமாய்ப் போய்ச் சேர்ந்தன. இந்தத் திருட்டு வியாபாரம் முதலில் பலூச்சிஸ்தானத்தின் வழியாகவும் பின்னர்க் கிழக்குப் பாரசீகத்தின் வழியாகவும் நடைபெற்றது. 1906-ஆம் ஆண்டுக்குச் சமீபத்தில் இந்த வியாபாரம் மிக அதிகமான அளவுக்கு வளர்ந்தது. நான்காண்டுகளுக்குப் பின்னர் பாரசீகவளைகுடாப் பிரதேசத்தில் ஏற்படுத்திய கடுமையான காவலினுல் இந்த வியாபாரம் தடைப்பட்டது. ஆனல் அதற்குள்ளாக எல்லைப்புறவாசிகளுக்கு வேண்டிய அளவு துப்பாக்கிகளும் குண்டுகளும் போய்ச் சேர்ந்துவிட்டன. ஆதலால், எந்தச் சமயத்திலும் எல்லைப்புறத்தில் ஆபத்து ஏற்படக்கூடும் என்ற நிலை உண்டாயிற்று.

இந்தியாவின் ஜனத்தொகை பெருக்கிக்கொண்டே சென்றது. பிளேக்கு நோயால் ஏற்பட்ட மரண விகிதம் சிறிது குறைந்தது. நகரங்களில் காலரா முதலிய மற்ற நோய்களும் ஓரளவு குறையத் தொடங்கின. இருப்புப்பாதைகளின் நீளமும், கால்வாய்களின் நீளமும் அதிகரித்துக்கொண்டே சென்றன. வியாபாரம் செழித்தது. நாட்டின் சில பகுதிகளில் விவசாய இலாக்காவும், ஐக்கிய நாணயச் சங்கங்களும் நல்ல வேலைசெய்யத் தொடங்கின. இந்தியாவின் கைத்தொழில்கள் விரைவில் முன்னேறவேண்டும் என்று மக்கள் காட்டிய ஆர்வந்தான் பொருளாதாரத்துறையில் 1905-ஆம் ஆண்டிற்கும் 1916-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மிகக் குறிப்பிடத்தக்க விஷயம். வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான பல பொருள்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய முடியுமென்றும், அவ்வாறு செய்யாமல் அவற்றிற்கெல்லாம் வெளி நாடுகளை எதிர்பார்ப்பது இந்தியாவின் பெருமைக்குக்

குறைவு என்றும் படித்த மக்கள் எண்ணினார்கள். இந்தியாவுக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதுதான் முறை என்ற கொள்கை இந்திய அரசியற் கட்சிகளின் குறிக்கோளாயிற்று. சில இடங்களில் வெளிநாட்டுப் பொருள்கள் பகிஷ்கரிக்கப்பட்டன. இவ்வாறு, பொருளாதாரக் காரணங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் மக்களின் விருப்பு வெறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கைத்தொழில் முன்னேற்ற இயக்கம் தொடக்கத்தில் நடைமுறையில் அவ்வளவாகப் பயன் அளிக்காதது வியப்பைத் தராது. ஆனால் நாளடைவில் பொருளாதாரக் காரணங்களும் சேர்ந்ததால் அந்த இயக்கம் வலுவடைந்தது. படித்த மக்கள் பலருக்கு வேலை கிடைக்கவில்லை. ஆண்டுதோறும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஏராளமான மாணவர்கள் படித்துத் தேர்ச்சி பெற்றார்கள். அவர்களில் ஒரு சிலருக்குத்தான் அரசாங்க உத்தியோகம் கிடைத்தது. வக்கீல் தொழில் முதலிய தொழில்களில் ஏற்கெனவே ஏராளமான மக்கள் ஈடுபட்டிருந்ததால் அந்தத் தொழில்களில் நுழைவது லாபகரமாயில்லை. ஆகவே, படித்த மக்களுக்கு வேலை கிடைக்கவேண்டுமானால் கைத்தொழில்கள் வளர்வது அவசியம். இந்த நிலையைப் பரிசீலனை செய்ததன் பயனாக, கல்லூரிகளில் விஞ்ஞானப் பாடங்களுக்கு அதிக இடமளிக்கவேண்டும் என்றும், கைத்தொழிற் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் இன்னும் அதிகமான வசதிகளை ஏற்படுத்தவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

சோட்டா நாகபுரியில் இரும்பும் எஃகும் உற்பத்திசெய்ய ஒரு சிறந்த தொழிற்சாலை ஏற்பட்டதுதான் நாம் படிக்கும் காலத்தில் கைத்தொழில் முன்னேற்றத்தில் ஏற்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க விஷயம். நிலக்கரியும், இரும்புத்தாது மண்ணும், சுண்ணும்புக் கல்லும். இரும்பு உற்பத்திக்கு இன்றியமையாத மூலப் பொருள்கள். எளிதாக இம்மூன்று பொருள்களையும் ஒரே இடத்திற் சேர்ப்பதற்குச் சோட்டா நாகபுரியில் வசதி யிருந்தது. இத்தொழிற்சாலைதான் இந்தியாவில் முதல் முதலாகத் தோன்றிய பெரிய கைத்தொழில் திட்டம். ஆதியில் இந்தியாவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியவர்களெல்லாம் சிறிய அளவில் தொடங்கிப் பின்னர் நாளடைவில் தங்கள் தொழிற்சாலைகளை வளர்த்தார்கள். ஆனால் சோட்டா நாகபுரியில் ஏற்பட்ட தொழிற்சாலை தொடக்கத்திலேயே மிகப் பெரிய திட்டமாக இருந்தது. அதுவரையில் அவ்வளவு பெரிய தொழில் திட்டம் இந்தியாவில் தோன்றியதே கிடையாது. மேலும், அத்தொழிற்சாலை மேல்நாடுகளிற் கையா

ளப்பட்ட மிக நவீன முறைகளுடனும் பொறிகளுடனும் தொடங்கியது. ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் வரவழைக்கப்பட்ட தொழில் நிபுணர்கள் ஆழ்ந்த பரிசீலனைகள் செய்த பின்னர் அந்தத் தொழிற்சாலைத் திட்டம் தயாரிக்கப் பட்டது. அந்தத் திட்டம் வெற்றிபெற வேண்டுமானால் சிறிது காலத்திற்காவது வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாகும் இரும்பின்மீதும் எஃகின்மீதும் காப்புவரி விதிப்பது இன்றியமையாதது என்று அந்தத் திட்டத்தைத் தயாரித்த முதலாளிகள் கருதினார்கள். ஆனால், தடையில்லா வியாபாரம் ஆங்கில அரசாங்கத்தின் கொள்கையாக இருந்ததால் இந்தியாவில் காப்புவரி விதிப்பதற்கு அப்போது இந்தியா மந்திரியாய் இருந்த * மார்லியின் அனுமதி கிடைக்காது என்பது திண்ணமாகத் தெரிந்தது. ஆனால் இந்திய இருப்புப்பாதைகளுக்குத் தேவையான தண்டவாளங்களில் ஒரு பகுதியை அந்தத் தொழிற்சாலையிலேயே வாங்குவதாக இந்திய அரசாங்கம் உறுதி கூறியதோடு, இன்னும் சில சலுகைகளையும் காட்டியது. அதன் பின்னர் விரைவில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதலாளிகளில் முக்கியமானவர் ஜாம்ஷெட்ஜி டாட்டா என்பவர். வெகு விரைவில் சோட்டா நாகபுரியின் காடுகளில் ஜாம்ஷெட்பூர், டாட்டா நகர் ஆகிய புதிய நகரங்கள் தோன்றின. தொழிற்சாலையைப்போலவே அந்த நகரங்களும் நவீன முறையிற் கட்டப்பட்டவை.

நாளடைவில் கைத்தொழில் முன்னேற்றத்தில் இந்திய மக்களுக்கு அதிகச் சிரத்தை ஏற்பட்டது. அரசியல் விஷயங்களுக்கு அடுத்தபடியாகப் பொருளாதார விஷயங்கள்தாம் படித்த மக்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தன. பொது மக்களுடைய ஏழ்மை நிலையும், பயிர்த்தொழிலில் சீர்திருத்த முறைகளைப் புகுத்தவேண்டிய அவசியமும், இந்தியாவின் பூர்விகக் கைத்தொழில்களை மறுபடியும் நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்ற பிரச்சினையும், தடையில்லா வியாபாரக் கொள்கையின் நன்மை தீமைகளும், தொழிற்சாலைகளில் வேலைசெய்த தொழிலாளிகளின் வாழ்க்கை நிலையும், இவைபோன்ற இன்னும் பல விஷயங்களும் முன்னணிக்கு வந்தன. இவற்றைப்பற்றி விவாதிப்பதற்குத் தேவையான பொருள் நூல் அறிவு அந்தக் காலத்தில் அதிகமாகப் பரவவில்லை. ஆகவே சர்வகலாசாலைகளில் பொருள் நூல் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

---

* ஜான் மார்லி (பின்னர் மார்லி பிரபு என்னும் பட்டம் பெற்றார்) 1905—ஆம் ஆண்டில் இந்தியா மந்திரியானார்.

இது கல்வித்துறையில் ஏற்பட்ட ஒரு முக்கிய மாறுதலாகும். அதைத் தவிர இன்னும் பல முக்கிய மாறுதல்களும் அத்துறையில் ஏற்பட்டன. 1904-ஆம் ஆண்டு கர்ஸானுடைய முயற்சியால் சர்வகலாசாலைச் சட்டம் நிறைவேறியது. அதுவரையில் சர்வகலாசாலைகள் பெரும்பாலும் பரீட்சை நடத்தும் ஸ்தாபனங்களாகவே இருந்தன. ஆனால் புதிய சட்டத்தின்படி சர்வகலாசாலை அதிகாரிகள் அவற்றோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளின்மீது மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு அதிகாரம் பெற்றனர். மேலும் போஸ்ட் கிராஜுவேட்டுப் படிப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் சர்வகலாசாலைகள் அதிகாரம் பெற்றன. ஆனால் சர்வகலாசாலை விஷயங்களை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைச் சர்வகலாசாலைகள் விரும்பாததால் அந்தச் சட்டத்தால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தியாவதற்குக் கால தாமதம் ஏற்பட்டது. கைத்தொழிற் கல்விக்கு ஓரளவு ஆதரவளிக்கப்பட்டது. ஆரம்பப் பாடசாலைகளுக்கும் உயர்தரப் பாடசாலைகளுக்கும் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட உதவிநிதி அதிகரிக்கப்பட்டது. இந்தத் துறையில் அரசாங்கம் செய்த வேலைக்குப் படித்த மக்களின் ஆதரவு இருந்தது. இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி கற்பிக்கவேண்டும் என்று படித்த மக்கள் விரும்பினார்கள். அந்த எண்ணத்துடன் 1911-ஆம் ஆண்டில் கோபால கிருஷ்ண கோகலே சட்ட சபையில் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். ஆரம்பக் கல்வி இந்தியாவில் உள்ள அனைவருக்கும் அளிக்கப்படவேண்டும் என்பது அம்மசோதாவின் நோக்கம். உயர்தரக் கல்வி கற்ற சிறுபான்மையினரான இந்தியருக்கும் கல்வியறிவற்ற மிகப் பெரும்பான்மையான பொது மக்களுக்கும் இடையில் நல்ல தொடர்பு ஏற்படவேண்டுமானால் எல்லா மக்களுக்கும் ஆரம்பக் கல்வியாவது அளித்தல் இன்றியமையாதது என்று கோகலேயும் அவரது நண்பர்களும் உணர்ந்தார்கள்.

சமூகச் சீர்திருத்த விஷயங்களும் படித்த மக்களின் கவனத்தை அதிகமாகக் கவரத்தொடங்கின. கிராமப் புனருத்தாரண விஷயம் சமூகச் சீர்திருத்தத் துறையில் மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தபோதிலும் அது இன்னும் மக்களுடைய கருத்தை அதிகமாகக் கவரவில்லை. ஆனால் தீண்டாதவர்களுடைய நிலையை உயர்த்துவதற்குத் தீவிரமாக முயற்சி செய்யப்பட்டது. மற்ற நாடுகளுடன் சமமான அந்தஸ்தை வகிக்க விரும்பிய இந்தியர்கள் தங்களுக்குள்ளேயே சமத்துவத்தை நிலைநாட்டுவது

அடிப்படையானது என்று கோகலேயும அவருடைய நண்பர்களும் உயர் ஜாதி மக்களுக்கு இடித்துக் கூறினார்கள். உயர் வகுப்பினரையும் மத்தியதர வகுப்பினரையும் பொறுத்த வரையில் சாதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதும், பெண்கள் நிலையில் முன்னேற்றத்தை யுண்டாக்குவதும் சமூகச் சீர்திருத்தக்காரரின் நோக்கமாயிருந்தது. பெண்களுக்குக் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்றும், இளம் வயதில் திருமணம் செய்யக்கூடாதென்றும், வீட்டுக்குள்ளேயே அவர்களை அடைத்து வைக்கக் கூடாதென்றும், நாட்டின் பொது வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்றும் சீர்திருத்தக்காரர்கள் கூறினார்கள். இந்தத்துறையில் முன்னேற்றத்தைப்பற்றி அதிகமாகப் பிரசாரம் நடந்ததே யொழிய நடைமுறையில் அதிகமாக ஒன்றும் சாதிக்கப்படவில்லை. பெரும்பான்மையோர் பழமையை விடாது பின்பற்றினர். ஆனால் இங்கும் அங்கும் ஒரு சிலர் தாங்கள் பேசியபடி செயலும் ஆற்றினர். ஆகவே நாளடைவில் கொஞ்சங் கொஞ்சமாகப் புதுமைக்கு ஆதரவு கிடைத்தது. அதன் பயனாகச் சமூகத்தின் நிலையில் பிற்காலத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன.

இனி நாம் படிக்கும் காலத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனிப்போம். நிர்வாகத்தின் மற்றத் துறைகளில் எல்லாம் சீர்திருத்தத்தைப் புகுத்திய கர்ஸான் பிரபு சட்டசபைகளில் மாத்திரம் எந்தவிதமான சீர்திருத்தமும் செய்யவில்லை. ஆனால் காங்கிரஸ் மகாசபை அரசியல் சீர்திருத்தத்தின் அவசியத்தை அடிக்கடி வற்புறுத்திக்கொண்டே வந்தது. முடிவாக மற்றக் குடியேற்ற நாடுகளுக்கு அளிக்கப்பட்டிருந்த பொறுப்பாட்சி இந்தியாவுக்கும் வழங்கப்படவேண்டும் என்று காங்கிரஸ் மகாசபை வற்புறுத்தியது. இந்தக் கோரிக்கையை இராஜப் பிரதிநிதியாகிய மிண்டோவும், இந்தியா மந்திரியாகிய மார்லியும் ஒத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாகச் சட்டசபைகளின் அங்கத்தினர்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும், அவற்றின் அதிகாரத்தை அதிகப்படுத்துவதற்கும் இருவரும் சேர்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அதுதான் 1909-ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்த மிண்டோ மார்லி திட்டம் எனப்படும். இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வழங்கும் எண்ணம் ஆங்கில அரசாங்கத்துக்கு இல்லையென்பது மிண்டோ மார்லி திட்டத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டது.

சட்ட சபைகளின் அங்கத்தினர் தொகை அதிகரிக்கப்பட்டதால் சர்வகலாசாலைகள், வியாபாரச் சங்கங்கள், மிராசுதார்களின் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களுக்கு அதிகமான பிரதிநிதித்துவம் கொடுப்பது சாத்தியமாயிற்று. நகராண்மைக் கழகங்களும் ஜில்லா போர்டுகளும் சட்டசபைகளுக்கு அங்கத்தினர்களை அனுப்புவதற்குத் தேர்தல் முறை கையாளப்பட வேண்டும் என்ற விஷயம் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டது. வியாபாரச் சங்கங்களைப் போன்ற ஸ்தாபனங்கள் சட்டசபைகளில் நியமிப்பதற்கு அங்கத்தினர்களை அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்வதற்குப் பதிலாக அத்தகைய அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் முறை வழக்கத்திற்கு வந்தது. முஸ்லிம்களுக்குத் தனிப்பட்ட பிரதிநிதித்துவம் மிண்டோ மார்லி திட்டத்தால் கொடுக்கப்பட்டது. இது அந்தத் திட்டத்தினுல் ஏற்பட்ட மிகக் குறிப்பிடத்தக்க மாறுதல். தேர்தல் பிரிவுகளில் இருந்த ஓட்டுரிமையாளர்கள் பெரும்பாலும் இந்துக்களாய் இருந்ததால் தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம்கள் வெற்றியடைய முடியாதென்றும், அதனுல் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் அரசியல் வாதிகள் விரும்பினுர்கள். மேலும் ஜனத்தொகையைப் பொறுத்து முஸ்லிம் அங்கத்தினர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கக்கூடாதென்றும், அந்த வகுப்பினரின் முக்கியத்துவத்தைப் பொறுத்தே அவ்வெண்ணிக்கை நிர்ணயிக்கப்படவேண்டும் என்றும் முஸ்லிம் அரசியல் வாதிகள் விரும்பினுர்கள். இந்துக்கள் அதைப் பலமாக ஆட்சேபித்தார்களெனினும் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஆகவே, அரசியல் திட்டத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இடம் பெற்றது.

புதிய திட்டப்படி ஏற்பட்ட சட்டசபைகளில் உத்தியோகஸ்தர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள், நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் என்று மூன்றுவகை அங்கத்தினர்கள் இருந்தார்கள். மாகாணச் சட்டசபைகளில் உத்தியோகஸ்தர்கள் சிறுபான்மையினராக இருந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும், நியமன அங்கத்தினர்களும் ஒன்ருகச் சேர்ந்துகொண்டால் அரசாங்க மசோதாக்களைத் தோற்கடிக்க முடியும். ஆனுல் மத்திய சட்டசபையில் உத்தியோகஸ்தர்களே இன்னும் பெரும்பான்மையினராக இருந்தார்கள். அரசாங்கத் திட்டங்களைப் பற்றி விவாதிப்பதற்கும் புதிய திட்டங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கும் சட்ட சபைகளுக்கு அதிகாரம் அளிக்

கப்பட்டது. உத்தியோகஸ்தர் அல்லாத அங்கத்தினர்களின் செல்வாக்கு விரைவில் உயர்ந்தது. சட்டப்படி அவர்கள் அதிகமாக எதையும் சாதித்துவிட முடியாது என்பது உண்மையெனினும் தங்களுடைய அபிப்பிராயங்களை வற்புறுத்திக் கூறிப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு உதவி செய்யக்கூடும். பார்லிமெண்டு முறையை இந்தியாவில் புகுத்துவது தங்களுடைய நோக்கம் அன்று என்று மிண்டோவும் மார்லியும் கூறியபோதிலும் அவர்களுடைய திட்டத்தின் விளைவாக இந்தியாவில் பார்லிமெண்டு முறை நுழைந்துவிட்டது. நிர்வாகத்தை நடத்தும் மந்திரிகள் தங்கள் தங்கள் செயல்களுக்குப் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாளிகள் என்ற கொள்கை பார்லிமெண்டு முறையின் முக்கியமான அம்சம். அந்த ஓர் அம்சத்தைத் தவிரப் பார்லிமெண்டு முறையின் மற்ற அம்சங்களெல்லாம் மிண்டோ மார்லி திட்டத்தின் விளைவாக இந்தியாவில் ஏற்பட்டுவிட்டன. இந்திய அரசியல் நிர்வாகத்தின் முடிவான அதிகாரம் இங்கிலாந்திலிருந்த இந்தியா மந்திரியின் கையில் இருந்தது. அந்த மந்திரி ஆங்கிலப் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாளியாக இருந்தான். ஆகவே, இந்தியச் சட்ட சபைகளில் அரசியல் திட்டங்கள் வாதிக்கப்பட்ட போதிலும் அந்தச் சட்ட சபைகளுக்கு மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் பொறுப்பாளிகள் அல்ல. இந்திய சட்டசபைகளில் எத்தகைய கொள்கைகள் வாதிக்கப்பட்டாலும் நிர்வாகத் திட்டங்கள் எல்லாம் இங்கிலாந்திலிருந்தே வந்தன. ஆனால், இந்தியர்கள் நடைமுறையில் சாதிக்க முடியாத பல ஆலோசனைகளையும், திட்டங்களையும் சட்ட சபைகளில் கொண்டுவந்து அவற்றைப்பற்றி விவாதித்தார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு அவர்களுக்குக் கிடையாது. ஆகவே, பொறுப்பற்ற தன்மையில் அரசாங்கத்தைக் கண்டிப்பதற்கும், முன்னேற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கும் இந்திய அங்கத்தினர்களுக்குச் சௌகரியமிருந்தது. சட்டசபைகளில் ஏற்பட்ட மாறுதல்களைப் போலவே நிர்வாகத் துறையிலும் ஒரு சில மாறுதல்கள் ஏற்பட்டன. 1909-ஆம் ஆண்டில் ஒரு திறமைவாய்ந்த வழக்கறிஞர் இராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார். ஏறக்குறைய அதே சமயத்தில் இங்கிலாந்திலிருந்த இந்தியா மந்திரியின் கவுன்ஸிலுக்கும் இரண்டு இந்தியர்கள் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

இனி, நாம் படிக்கும் காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஏற்பட்ட சதியாலோசனைகளையும், பயங்கர இயக்கங்களையும் பற்றிக் கூறுவோம். அந்தப் பயங்கர இயக்கங்களிற் கலந்துகொண்டு அரசாங்கத்திற்கு எதிராகச் சதி செய்தவர்களிற் பெரும்பான்மையோர் மாணவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளால் நாட்டின் அமைதிக்குப் பேராபத்து ஏற்படும்போலிருந்தது. ஆனால், பயங்கர இயக்கத்திற் சேர்ந்திருந்த மாணவர்களின் தொகை மிகச் சிறியது. மாணவர்களில் மிகப் பெரும்பான்மையோர் பயங்கர இயக்கத்தினரின் நடவடிக்கைகளை விரும்பவில்லை. பாலகங்காதர திலகர்தான் இந்தத்துறையில் மாணவர்களை நுழைத்தார். அவர் அரசாங்கத்திற்கு எதிராகச் செய்த கிளர்ச்சிகளைப்பற்றிச் சென்ற அதிகாரத்திற் கூறியிருக்கிறோம். அவ்வாறு அவர் கிளர்ச்சிசெய்த காலத்தில் மாணவர்களையும் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டினார். அந்த நோக்கத்துடன் பல மாணவர் சங்கங்கள் பூனாவில் அமைக்கப்பட்டன. மேற்பார்வைக்கு அச்சங்கங்கள் உடற்பயிற்சிச் சங்கங்களாக இருந்தன. ஆனால் பயங்கர முறைகளில் அரசியல் கிளர்ச்சியை நடத்துவதுதான் அந்தச் சங்கங்களின் உண்மையான நோக்கம். அந்தச் சங்கங்களில் ஒன்றின் அங்கத்தினர்கள்தான் 1897-ஆம் ஆண்டில் நடந்த "அரசியற் கொலைகளுக்குக்" காரணமாயிருந்தனர். அரசாங்கத்தைக் கடுமையாகத் தாக்கித் தம்முடைய பத்திரிகையில் எழுதிய குற்றத்திற்காகத் திலகர் தண்டிக்கப்பட்டார் என்று சென்ற அதிகாரத்திற் கூறியிருக்கிறோம். அந்தத் தண்டனைக்குப் பிறகு சிறிதுகாலம் திலகர் அரசியற் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடாதிருந்தார். ஆனால், அவருடைய கொள்கைகளில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை, 1907-ஆம் ஆண்டில் அவர்செய்த பிரசாரத்தால் மாணவர்கள் மாத்திரமின்றி நகரங்களில் தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளிகளும், கிராமங்களில் வாழ்ந்த குடியானவர்களும் அரசியற் கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கினார்கள். 1908-ஆம் ஆண்டில் திலகர் இம்சை முறையையும் அரசியற் கொலைகளையும் ஆதரித்தும், அரசியற் கிளர்ச்சிகளில் வெடிகுண்டுகளின் உபயோகத்தை வரவேற்றும் பல கட்டுரைகள் எழுதினார். அதனால் அவருக்கு ஆறுண்டு சிறைவாசத் தண்டனை கொடுக்கப்பட்டது. அந்த ஆறுண்டுக் காலத்தில் மேற்கிந்தியாவில் பயங்கர இயக்கத்தின் நடவடிக்கைகள் நின்றிருந்தன.

ஆனால் நாம் படிக்கும் காலத்தில் வங்காளத்தில்தான் பயங்கர இயக்கம் அதிகமாகப் பரவியது. வங்காளப் பிரிவினைக்கு ஏற்பட்ட எதிர்ப்பும், மத்தியதர வகுப்பினரிடையே பரவிய வேலையில்லாத் திண்டாட்டமும் வங்காளிகள் திலகர் காட்டிய பயங்கர வழியைப் பின்பற்றக் காரணமாயிருந்தன. மேலும் வங்காளப் பாடசாலைகளின் அமைப்பும் பயங்கர முறை பரவுவதற்கு உதவியாயிருந்தது. இந்தியாவின் மற்றப் பகுதிகளில் இருந்த பாடசாலைகளிற் பெரும்பான்மையானவை அரசாங்க உதவி பெற்று நடந்தவை. ஆதலால், அந்தப் பாடசாலைகளை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஓரளவு அதிகாரமிருந்தது. ஆனால் வங்காளத்தில் அரசாங்கத்தின் பொருளுதவிபெறாத தனிப் பாடசாலைகள் பல இருந்தன. அந்தப் பாடசாலைகளின் அமைப்பிலும் வேலையிலும் அரசாங்கத்திற்கு எவ்வித அதிகாரமும் இல்லை. அந்தப் பாடசாலைகளின் போதனை முறைகளும் மாணவர்களுக்குச் சிறந்த பயிற்சி யளிக்கும்வகையில் இல்லை. குறுகிய காலத்தில் குறைந்த செலவில் அதிகமான விஷயங்களை மாணவர்களின் மனத்தில் திணிக்க முயலுவதுதான் அந்தப் பாடசாலைகளின் நோக்கம். ஆகவே அங்குப் படித்த மாணவர்கள் கல்வித்துறையில் நல்ல பயிற்சியை அடையவில்லை. மேலும் பாடசாலையை விட்டபிறகு அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இல்லை. ஆனால், அவர்கள் மிகுந்த தேசபக்தி யுடையவர்களாய் இருந்தார்கள். ஆகவே அவர்கள் தலைவர்கள் சொன்ன விஷயங்களையும், தீவிரப் பத்திரிகைகளில் எழுதப்பட்ட விஷயங்களையும் ஆராய்ந்து பாராமல் அப்படியே நம்பினார்கள். அதன் பயனாக அவர்கள் பயங்கர இயக்கங்களிற் சேர்ந்து, அரசியற் கொலைகளிலும், கூட்டக் கொள்ளையிலும் ஈடுபட்டார்கள். வெளிநாட்டுப் பொருள்களின் பகிஷ்காரத்திலும் அவர்கள் இம்சை முறைகளைக் கையாண்டார்கள்.

அரசியற் கொலைகளால் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் மனத்தில் திகிலை உண்டாக்கி, அதன் மூலம் அரசாங்கம் நடைபெற முடியாமற் செய்வது அவர்களுடைய நோக்கம். ஆகவே, வங்காளக் கவர்னர் முதல் மற்றைய உயர்தர ஆங்கில உத்தியோகஸ்தர்களையும், தங்கள் கடமையைச் செய்த இந்தியப் போலீஸ் அதிகாரிகளையும், அவர்களுக்கு உளவாளிகளாக இருந்த இந்தியர்களையும் கொலை செய்வதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. அதனால், சில உத்தியோகஸ்தர்கள் உயிரிழந்தார்கள். சதிகாரர்கள் கைத் துப்பாக்கிகளையும், வெடிகுண்டுகளையும் உபயோகித்தனர்.

புகைவண்டிகளைக் கவிழ்ப்பதற்கும் முயற்சிகள் செய்யப்பட்டன. தங்களுடைய இயக்கத்திற்கு வேண்டிய பணத்தைச் சேர்ப்பதற்காகச் சதிகாரர்கள் கூட்டமாகச்சென்று ஆங்காங்குக் கொள்ளையடித்தனர். வெளிநாட்டுப் பொருள்களை வாங்கக்கூடாதென்று இம்சை முறையைக் கையாண்டு மக்களை வற்புறுத்தினர். இவ்வாறு சதிகாரர்கள் சட்டத்தின் ஆட்சியின் அடிப்படையைத் தகர்த்து நாட்டிற் குழப்பத்தை ஏற்படுத்த முயன்றனர். பயங்கர இயக்கத்தை இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் பரப்புவதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அம்முயற்சி பெரும்பாலும் தோல்வியடைந்தது. பஞ்சாபில் மாத்திரம் அம்முயற்சி ஓரளவு வெற்றிபெற்றது. அங்கிருந்த மக்கள் சில காரணங்களுக்காக அரசாங்கத்தை வெறுத்தார்கள். ஆகவே, அவர்களிற் சிலர் பயங்கர இயக்கத்திற் சேர்ந்து சதி செய்யத் தொடங்கினார்கள். அதே சமயத்தில் லண்டனிலும் பயங்கர இயக்கத்தின் கிளை ஒன்று ஏற்பட்டது. அங்கு ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தபோது ஓர் ஆங்கில உத்தியோகஸ்தரும் ஓர் இந்திய கனவானும் கொலை செய்யப்பட்டனர். அதுபோலவே இந்தியாவில் புரட்சி செய்வதற்கு வேண்டிய பலத்தைத் தேடிக்கொள்ளுவதற்காக அமெரிக்காவிலும் பயங்கர இயக்கத்தின் கிளை ஒன்று ஏற்பட்டது.

இந்த நிலையைச் சமாளிப்பதற்குப் பொதுவாக அரசாங்கத்திற்கு ஏற்கெனவே யிருந்த சட்டங்களால் அளிக்கப்பட்ட அதிகாரம் போதியதா யிருந்தது. ஆனால், பத்திரிகைகளின் விஷயத்தில் மாத்திரம் புதிய அதிகாரம் தேவையாயிருந்தது. திலகர் உதாரணத்தைப் பின்பற்றிச் சில பத்திரிகைகள் சட்டத்தை மீறி நடக்குமாறு மக்களை வெளிப்படையாகத் தூண்டின. இத்தகைய பத்திரிகைகளை ஒழிப்பதற்கு 1908- ஆம் ஆண்டில் நிறைவேறிய ஒரு புதிய சட்டத்தால் அரசாங்கம் அதிகாரம் பெற்றது. இரண்டாண்டுகளுக்குப் பின்னர் நிறைவேறிய பத்திரிகைச் சட்டத்தால் பத்திரிகைகளை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கம் அதிகாரம் பெற்றது. அதனால், சட்டத்தை மீறி அரசியற் குற்றங்களில் ஈடுபடுமாறு பத்திரிகைகள் மக்களைத் தூண்ட முடியவில்லை. வங்காளத்தில் மாத்திரம் பயங்கர இயக்கத்தின் வேலைகள் தொடர்ந்து நடந்தன. 1911-ஆம் ஆண்டில் வங்காளம் ஒரு தனி மாகாணமாக்கப்பட்ட பின்னரும் சதிகள் நடந்துகொண்டு தானிருந்தன. மத்தியதர வகுப்பினரின் பொருளதார நிலையில் இருந்த குறைபாடுள்தாம் பயங்கர இயக்கம் வங்காளத்திற் பரவுவதற்கு முக்கிய காரணமாயிருந்தன என்று முன்னரே கூறி

யிருக்கிறேமல்லவா? இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் சிற் சில சமயங்களில் சதிகள் நடந்தன. உதாரணமாக, 1912-ஆம் ஆண்டில் இராஜப்பிரதிநிதியைக் கொல்வதற்காக டில்லியில் ஒரு முயற்சி செய்யப்பட்டது.

அரசியல் கிளர்ச்சியில் பயங்கர முறைகளைக் கையாளு வதைப் பொதுமக்களில் மூன்று பிரிவினர் வெளிப்படையாகக் கண்டித்தனர். இந்தியர்களுள் முக்கியமானவர்கள் ஏறக்குறைய எல்லோருமே அந்தரங்கத்தில் அந்த முறைகளைக் கண்டித்தார் கள் என்று கூறலாம். இதுவரையில் பிரிட்டிஷ் மாகாணங்களில் நடந்த விஷயங்களைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாதிருந்த சுதேச அரசர்கள் தீவிரப் பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளின் செல்வாக்கைக் கண்டு அஞ்சினார்கள். ஆகவே பத்திரிகைகளின் விஷயத்தில் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொள்ளு வதற்கு இராஜப்பிரதிநிதி விரும்பியபோது, அவர்கள் எல்லோரும் தீவிரப் பத்திரிகைகளை அழித்துவிடவேண்டும் என்று பதிலளித் தார்கள். இடதுசாரிகளில் மிதவாதிகளாயிருந்த கோக்கலேயும் மற்ற இந்துத் தலைவர்களும் பயங்கர இயக்கத்தை வன்மையாகக் கண்டித்தார்கள். இடதுசாரிகள், வலதுசாரிகள், இடைநிலை யினர் ஆகிய எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த அரசியல் வாதிகளைக் கொண்ட முஸ்லிம் லீகும் பயங்கர முறையைக கண்டித்து பிரிட்-டிஷ் அரசாங்கத்தினிடம் விசுவாசம் தெரிவித்தது. முஸ்லிம்லீக் 1908-ஆம் ஆண்டில் பிறந்தது. பத்தாண்டுகளுக்கு முன்னர் ஸர். ஸையது அஹமது இறந்ததற்கப்புறம், முஸ்லிம்களுக்குள் தலைவரே யாரும் இல்லை என்ற நிலை யேற்பட்டுவிட்டது. ஆனால் அரசியல் துறையில் மாறுதல்கள் ஏற்படப்போவதை யுணர்ந்த முஸ்லிம்கள் தங்களுக்கென்று ஓர் அரசியற் கட்சி இருப்பது அவசியம் என்பதை அறிந்தார்கள். அதன் பயனாக அவர்களுக் குள் புதிய தலைவர்கள் தோன்றி முஸ்லிம் லீகை ஏற்படுத்தி னார்கள்.

பொதுவாகக் கூறுமிடத்து 1905 - ஆம் ஆண்டுக்கும் 1914-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தேசீய உணர்ச் சியைவிட வகுப்புணர்ச்சிகள்தாம் அதிகமாக வளர்ந்தன என்று கூறலாம். முஸ்லிம்கள் தனித் தொகுதிகளின் மூலம் அரசியல் திட்டத்தில் ஒரு தனிப்பட்ட இடத்தை அடைய முயன்றார்கள். அதைப் பொதுவாக இந்துக்கள் எல்லோரும் எதிர்த்தார்கள். ஆனால் இந்துக்களுக்குள்ளேயே தீவிரவாதிகளுக்கும், மிதவாதி களுக்கும் அரசியல் துறையில் மாத்திரமின்றிச் சமூகத்துறையிலும்

பிளவு தோன்றியது. முஸ்லிம்களின் உதாரணத்தைப் பின்பற்றி வேறு சில வகுப்பினரும் அரசியல் துறையில் தனி உரிமைகளைக் கொண்டாடினார்கள். ஆனால் அதே சமயத்தில் பொதுவான தேசீய உணர்ச்சியும் வளர்ந்துகொண்டே சென்றது. இதுவரையில் அரசியல் விஷயங்களில் இடதுசாரிகள் மாத்திரம் அதிக சிரத்தை காட்டினர். ஆனால் இப்பொழுது இதுவரையில் பேசாமலிருந்த வலது சாரிகளும் அரசியல் துறையில் சிரத்தை காட்டிப் பங்கெடுத்துக்கொள்ளத் தொடங்கினார்கள். வலது சாரிகள் என்று சொல்லக்கூடிய மிராசுதார்களிலும், வியாபாரிகளிலும் சில இளைஞர்கள் அரசியல் வாதிகளோடு தொடர்பு கொள்ளத் தொடங்கினார்கள். அதுபோலவே சுதேச ஸம்ஸ்தானங்கள் சில இந்தியாவின் முன்னேற்றத்தில்தான் தங்களுடைய முன்னேற்றமும் இருக்கிறது என்பதை உணரத் தொடங்கின.

இந்தக் காலத்தில்தான் சுதேச ஸம்ஸ்தானங்களின் உள்நாட்டு விஷயங்களில் ஏற்பட்டிருந்த மாறுதல்களின் விளைவுகள் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கின. சில ஸம்ஸ்தானங்கள் பிரிட்டிஷ் மாகாணங்களை விடப் பிற்போக்கான நிலையிலேயே இருந்தன. ஆனால் வேறு சில ஸம்ஸ்தானங்கள் பிரிட்டிஷ் மாகாணங்களைப் போலவே முன்னேறியிருந்தன. ஒரு சில துறைகளில் சுதேச ஸம்ஸ்தானங்களில் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் பிரிட்டிஷ் மாகாணங்களில் ஏற்பட்டிருந்த முன்னேற்றத்தைவிட அதிகமாக இருந்தது. அரசாங்கப் பொருளாதாரத் துறையில் சில ஸம்ஸ்தானங்களில் நல்ல சீர்திருத்தம் ஏற்பட்டிருந்தது. அரசாங்க வரவு செலவுத் திட்டங்களிலும் செலவுகளிலும் ஒழுங்கான முறைகள் கையாளப்பட்டன. பிரிட்டிஷ் மாகாணங்களிலிருந்து இரவலாகச் சென்ற உத்தியோகஸ்தரின் உதவியால் பல சுதேச ஸம்ஸ்தானங்களில் நிலவரியை நிர்ணயிப்பதிலும், வசூலிப்பதிலும், ஒழுங்கான முறைகள் புகுத்தப்பட்டன. செலவு போக மீதியிருந்த பணம் லாபகரமான பொது வேலைகளுக்கு உபயோகிக்கப்பட்டது. கஜானாவில் பணத்தைச் சேர்த்துவைத்து அரசர்கள் வேண்டும்போது எடுத்து உபயோகப்படுத்தும் வழக்கம் கைவிடப்பட்டு அரசாங்க வரவு செலவில் நவீன முறைகள் கையாளப்பட்டன. கல்வியைப் பரப்புவதிலும், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதிலும், மற்றைய நிர்வாகத் துறைகளிலும், பிரிட்டிஷ் மாகாணங்களின் உதாரணத்தைச் சுதேச ஸம்ஸ்தானங்கள் பின்பற்றின. இத்துறைகளில் சில ஸம்ஸ்தானங்கள் பிரிட்-

டிஷ் இந்தியாவைவிட அதிகமாக முன்னேறின. தெற்கில் மைசூரும் வடக்கில் குவாலியரும் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான சிறந்த திட்டங்களில் கவனம் செலுத்தின. ஐதராபாத் ஸம்ஸ்தானத்தில் உருது இலக்கியத்திலும், கலாசாரத்திலும் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. பரோடாவில் ஆரம்பக் கல்வியில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டது. சமூகச் சீர்திருத்தத் துறையிலும் பரோடா இந்தியாவின் முன்னணியில் நின்றது. திருவி-தாங்கூரிலும், கொச்சியிலும் இந்தியாவின் மற்றைப் பகுதிகளைக் காட்டிலும் படித்த மக்களின் விகிதம் மிக உயர்வாக இருந்தது. சுதேச ஸம்ஸ்தானங்களுக்குள் மேற்கூறிய ஸம்ஸ்தானங்கள் முன்னணியில் நின்றன. ஆனால் மற்ற ஸம்ஸ்தானங்களிலும் முன்னேற்றம் ஏற்படவில்லையென்று கூறமுடியாது. பல ஸம்ஸ்தானங்களில் மந்திரிகளாயிருந்தவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து சென்ற உத்தியோகஸ்தர்கள். அவர்கள் பிரிட்டிஷ் இந்தியாவில் கையாளப்பட்ட முறைகளை அந்த ஸம்ஸ்தானங்களிலும் நுழைத்து அவற்றின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டனர். எல்லா ஸம்ஸ்தானங்களிலும் ஒரே தன்மையான முன்னேற்றம் ஏற்படவில்லையென்பதும், சில ராஜபுத்திர அரசர்கள் பரம்பரையாக வந்த பழைய முறைகளையே பின்பற்றி-னார்கள் என்பதும் உண்மைதான் எனினும், பொதுவாக சுதேச ஸம்ஸ்தானங்களின் வாழ்க்கை பிரிட்டிஷ் இந்தியாவின் வாழ்க்கையோடு ஒன்றுபட்டுக் கொண்டிருந்தது என்று கூறலாம்.

அதிகாரம்—50

முதல் உலக யுத்தத்தின் விளைவுகள்

இராஜப்பிரதிநிதிகள் :

ஹார்டிஞ்சு பிரபு, 1916 வரை
செம்ஸ்போர்டு பிரபு, 1916—1921

முதல் உலக யுத்தத்தின் பயனாகப் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தில் இந்தியாவுக்கு ஒரு தனிப்பட்ட தகுதியும் ஓரளவு பொறுப்பாட்சியும் கிடைத்தன. அத்துடன் குடியேற்ற நாட்டு அந்தஸ்தும் எதிர்காலத்தில் இந்தியாவுக்குக் கிடைக்கும் என்ற திட்டமான நம்பிக்கையும் ஏற்பட்டது. இந்த மாறுதல்கள் வெளி நாடுகளின் வற்புறுத்தலால் ஏற்பட்டவை அல்ல. யுத்தத்தின்போது பிரிட்

டிஷ் சாம்ராஜ்யத்துக்கேற்பட்ட மிக நெருக்கடியான நிலைமையில் இங்கிலாந்துக்கு இந்தியாவில் கிடைத்த சிறந்த உதவியும், அப்போதைய நிலைமைக்கு ஏற்றவாறு அரசியல் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஆங்கிலேயருக்கு ஏற்பட்ட உணர்ச்சியும்தான் இந்த மாறுதல்களுக்கு முக்கிய காரணங்கள்.

1914-ஆம் ஆண்டின் யுத்தம் ஏற்பட்டபோது வெளியிலிருந்து இந்தியாவிற்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட முடியாத நிலையிருந்தது. யுத்தத்தின் தொடக்கத்தில் ஒரு ஜெர்மன் சண்டைக் கப்பல் வங்காளக்குடாக் கடலுக்கு வந்து இந்தியர்களைச் சிறிது அச்சுறுத்த முயன்றது எனினும், அதன் பின்னர் ஆங்கிலக் கப்பற்படையின் வலிமையால், இந்தியக் கடல்களில் எதிரிக் கப்பல்கள் வர முடியாமல் போய்விட்டது. நேபாளமும் திபெத்தும் ஆங்கிலேயர்க்கு உதவி செய்தன. ஆப்கானிஸ்தானத்தில் ஜெர்மன் உளவாளிகளின் நடவடிக்கைகளால் அதிக குழப்பமேற்பட்டபோதிலும் ஆப்கானிய அமீர் இங்கிலாந்துடன் நட்பாகவே இருந்தான். 1917-ஆம் ஆண்டில் ருஷியா தோல்வியடைந்தது. பாரசீகமும் பலமற்ற நிலைமையிலிருந்ததால் துருக்கியின் வழியாகக் காபூலுக்கு வருவதற்கு ஜெர்மானியார்களுக்கு வசதி ஏற்பட்டது. அந்த நிலையைப் பயன்படுத்திக் கொள்ளுவதற்காக ஜெர்மானிய உளவாளிகள் ஆப்கானிஸ்தானத்தின் மேற்கில் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கினார்கள், ஆனால் மற்ற அரசாங்கங்களில் யுத்தத்தில் ஏற்பட்ட மாறுதல்களின் பயனாக எதிரிகள் ஆப்கானிஸ்தானத்தின்மேல் படையெடுக்க முடியவில்லை. அதனால், அந்த வழியாக இந்தியாவுக்கு ஆபத்து ஒன்றும் ஏற்படவில்லை.

சண்டை தொடங்கியதும் இந்தியாவில் அதிகப் பரபரப்பு ஏற்பட்டது. அதன்பின்னர்ச் சண்டையைப் பற்றிய விஷயங்களில் இந்தியர்கள் சிரத்தையற்றவர்கள் ஆனார்கள். ஆனால் ருஷியாவின் வீழ்ச்சியால் இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்ற உணர்ச்சி ஏற்பட்டதும் இந்தியர்கள் யுத்த வேலைகளில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார்கள். சண்டை ஏற்பட்ட உடனே சுதேச அரசர்களெல்லாம் இங்கிலாந்துக்கு எல்லா வகையாலும் உதவிசெய்ய முன் வந்தார்கள். அதுபோலவே போரையே தொழிலாகக்கொண்ட வகுப்பினரும் உற்சாகத்துடன் யுத்தசேவையில் ஈடுபட முன்வந்தார்கள். இவைகள் எல்லாம் எதிர்பார்த்த விளைவுகளே. எதிர்பாராத ஒரு விளைவும்ஏற்பட்டதுதான் இங்குக் குறிப்பிடத்தக்க விஷயம். போரைத் தங்கள் தொழிலாகக் கொள்ளாத மற்ற வகுப்பினரும் யுத்த சேவை

யில் ஈடுபட விரும்பினார்கள். அவர்களில் படித்த மக்களும் இருந்தார்கள், படியாத மக்களுமிருந்தார்கள். ஆகவே பிரான்சுக்கு இந்தியப் போர்வீரர்களை அனுப்புவதற்கு அரசாங்கம் செய்த முடிவைப் பொதுமக்கள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றார்கள். தேசத்தின் பெருமையையும் உயர்வையும் காட்டுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பமென்று பொதுமக்கள் நினைத்ததுதான் இந்த நிலைக்கு முக்கிய காரணமாகும். அந்தச் சமயத்தில் அரசியல் வாதிகள் தங்களுக்குள் இருந்த வேறுபாடுகளை எல்லாம் மறந்துவிட்டார்கள்.

சண்டை தொடர்ந்து நடக்கவே முதலில் ஏற்பட்ட பரபரப்புக் குறைந்தது. அரசியல் உணர்ச்சிகள் மறுபடியும் தலைகாட்டத் தொடங்கின. 1915-ஆம் ஆண்டின் இறுதியில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்கு ஸர். எஸ். பி. சின்ஹா தலைமை வகித்தார்.* தம்முடைய தலைமை உரையில் அவர் இந்தியர்களின் அரசியல் அபிலாஷைகளைத் தெளிவாக எடுத்துக் கூறினார். மிண்டோ மார்லித் திட்டத்தால் எந்தவிதமான அரசியல் முன்னேற்றமும் ஏற்படாதென்றும், அந்த விஷயத்தில் ஆங்கிலேயர்களுடைய கருத்து என்ன என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறவேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினார். இந்தக் கோரிக்கையை செம்ஸ்போர்டு பிரபுவும் ஆதரித்தார். இராஜப் பிரதிநிதியாவதற்கு முன்னர் அவர் இந்தியாவில் சிறிதுகாலம் போர்ச்சேவை செய்தவர். ஆகவே, அவருக்கு இந்தியர்களுடைய எண்ணங்களும் கோரிக்கைகளும் நன்றாகத் தெரிந்திருந்தன. அதனால், இராஜப்பிரதிநிதிப் பதவியை ஏற்றுக்கொண்ட சிறிது காலத்திற்கெல்லாம் இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வழங்கி அதைப் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக வைத்திருப்பதுதான் ஆங்கில அரசாங்கத்தின் நோக்கம் என்று அவர் எடுத்துக் கூறினார். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற தாற்காலிகமான ஆலோசனைகளையும் அவர் ஆங்கில அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தார்.

இந்த ஆலோசனைகளை ஆங்கில அரசாங்கத்தார் பரிசீலனை செய்துகொண்டிருந்த சமயத்தில் இந்திய அரசியல் வாதிகளுக்

* இராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபைக்கு நியமிக்கப்பட்ட முதல் இந்திய அங்கத்தினர் அவரே. சிறிது காலத்திற்குப் பின்னர் அவர் சின்ஹா பிரபு என்ற பட்டமும் பெற்றார். இந்தியாவில் முதல் முதலாக மாகாணக் கவர்னர்ப் பதவி வகித்த இந்தியரும் அவரே.

குள் ஒற்றுமை உண்டாக்குவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன. 1916-ஆம் ஆண்டில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் இடதுசாரிகளில் தீவிரவாதிகளா யிருந்தவர்களும் கலந்துகொண்டார்கள். அவர்கள் 1907-ஆம் ஆண்டில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தின்போது மிதவாதிகளுடன் சச்சரவிட்டுக் கொண்டு வெளியேறி விட்டார்களென்று முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். தீவிரவாதிகள் காங்கிரஸ் மகாசபையில் மறுபடியும் சேர்ந்துகொண்ட அதே சமயத்தில் இந்து அங்கத்தினர்களை மிகப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த காங்கிரஸ் மகாசபைக்கும் முஸ்லிம் லீகுக்கும் லக்னோ ஒப்பந்தம் என்ற ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதிகள் அளிப்பதையும், சட்டசபைகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஸ்தானங்களை அவர்களுக்கு வழங்குவதையும் காங்கிரஸ் ஒத்துக்கொண்டது. ஆகவே அந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையிலிருந்த சச்சரவு தீர்ந்தது. அதன்பின் இந்தியாவுக்கு ஏற்ற அரசியல் திட்டத்தைப்பற்றி ஆராய்வதில் இந்திய அரசியல் வாதிகள் முனைப்புடன் ஈடுபட்டனர். 1917-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு என்பவர் செம்ஸ்போர்டு பிரபுவின் ஆலோசனைகளைப்பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவைத் தெரிவித்தார். அதன்படி இந்திய அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்குப் படிப்படியாக அதிகமான பங்கு அளிக்கப்படவேண்டுமென்பதும், இந்தியாவில் படிப்படியாகப் பொறுப்பாட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சுய ஆட்சி ஸ்தாபனங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக வளர்க்கவேண்டும் என்பதும், அவ்வாறு முடிவில் பொறுப்பாட்சி பெற்ற இந்தியா பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்தின் பிரிக்க முடியாத பகுதியாக இருக்கவேண்டுமென்பதும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை என்று கூறப்பட்டது. பொறுப்பாட்சி சிறிது சிறிதாகத்தான் வளரவேண்டுமென்றும், அந்த வளர்ச்சியின் ஒவ்வொரு படியையும் பற்றித் தீர்மானிக்கும் உரிமை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கே இருக்கவேண்டுமென்றும், அந்த வளர்ச்சி விரைவாக ஏற்படுவதும் மெதுவாக ஏற்படுவதும் இந்தியர்களுடைய ஒத்துழைப்பையும் பொறுப்புணர்ச்சியையும் பொறுத்தது என்றும் மாண்டேகுவின் அறிக்கை வற்புறுத்திக் கூறியது.

இந்த அறிக்கையால் இங்கிலாந்தில் ஓரளவு வியப்பு ஏற்பட்டதெனினும் எதிர்ப்பு ஏற்படவில்லை. 1914-ஆம் ஆண்டு வரையிலும் பெரும்பான்மையான ஆங்கிலேயர்கள் இந்தியாவின் எதிர்

காலத்தைப்பற்றி அதிகமாக நினைத்ததே கிடையாது என்று கூறுவது பொய்யாகாது. இந்தியா ஆங்கில ஆட்சிக்குட்பட்ட தூரத்தில் இருந்த ஒரு நாடு என்பதும், அங்குச் சில பொறுப்பற்ற அரசியல்வாதிகளும் கிளர்ச்சிக்காரர்களும் ஓரளவு தொல்லை கொடுத்துக்கொண்டு வந்தார்கள் என்பதும், ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியில் அந்நாடு முன்னேறிக்கொண்டு வந்தது என்பதும் மாத்திரம் ஆங்கிலப் பொதுமக்களுக்கு இந்தியாவைப்பற்றித் தெரிந்த விஷயங்கள். அதற்குமேல் இந்திய விஷயங்களில் ஆங்கிலேயர்களுக்குச் சிரத்தை கிடையாது. ஆனால், முதல் உலக யுத்தத்தின் பயனாக இந்திய விஷயங்கள் அவர்களுடைய கவனத்தை அதிகமாகக் கவரத் தொடங்கின. பிரான்சிலும், இன்னும் பல போர்முனைகளிலும் இந்தியப் போர்வீரர்கள் ஸாம்ராஜ்யத்திற்கு உதவியாகச் சண்டை செய்தனர். மேலும், ஆடம்பரமான கூட்டங்களிலும் விழாக்களிலும் இந்தியப் பிரதிநிதிகள் ஸாம்ராஜ்யத்தின் மற்றப் பிரதிநிதிகளுடன் கலந்து கொண்டதனால் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி வழங்குவது நியாயமும், இயற்கையுமான விஷயம் என்று ஆங்கிலப் பொதுமக்கள் எண்ணத்தொடங்கினார்கள். 1917-ஆம் ஆண்டிலும் 1918-ஆம் ஆண்டிலும் கூடிய ஸாம்ராஜ்ய மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகளும் இடம் பெற்றார்கள். ஸாம்ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேற விரும்பிய மக்கள் விஷயத்தில் கனடா, ஆஸ்திரேலியா முதலிய டொமினியன்களுக்கு எத்தகைய அதிகாரம் இருந்ததோ அத்தகைய அதிகாரம் இந்தியாவுக்கும் இருக்கவேண்டுமென்று 1916-ஆம் ஆண்டில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தால் கனடாவிலும் ஆஸ்திரேலியாவிலும் குடியேறி இருந்த இந்தியர்களின் நிலையைப்பற்றி அந்நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருந்த பிரச்சினைகள் தீர்ந்தன. இதற்கு அனுசரணையாக 1921-ஆம் ஆண்டில் கூடிய ஸாம்ராஜ்ய மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதன்படி டொமினியன்களில் சட்டப்படி குடியேறியிருந்த இந்தியர்களுக்கு அந்த நாடுகளில் வழங்கிய சாதாரணப் பிரஜா உரிமைகள் அளிக்கப்பட்டன. தென்னாப்பிரிக்கா மாத்திரம் இந்தத் தீர்மானத்தை ஒத்துக்கொள்ளவில்லை. அந்நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையில் இருந்த தொடர்பில் ஓரளவு திருப்திகரமான நிலை ஏற்படுவதற்கு இன்னும் ஆறு ஆண்டுகள் சென்றன.

இந்தியாவின் அரசியல் துறையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் இன்னது என்று முடிவு செய்யப்பட்டதும்

இந்தியா மந்திரியாகிய மாண்டேகு இந்தியாவுக்கு வந்து அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முதலில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதைப்பற்றி இராஜப்பிரதிநிதியுடன் கலந்து ஆலோசனை செய்தார். முக்கியமான பிரச்சினைகள் மாகாண அரசாங்கங்களுடனும் முக்கிய இந்திய அரசியல்வாதிகளுடனும் கலந்து ஆலோசிக்கப்பட்டன. முடிவில் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை 1918-ஆம் ஆண்டின் கோடைகாலத்தில் வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட மசோதா ஒன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டது. பின்னர்ப் பல மாறுதல்களுடன் அது சட்டமாயிற்று. அதுவே 1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் என்று பெயர் பெற்றது. அந்தச் சட்டத்தின் அம்சங்களைப் பற்றிக் கூறப்புகுமுன் இந்திய அரசியல் உலகில் மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையால் ஏற்பட்ட மாறுதல்களைப் பற்றித் தெரிந்கொள்ள வேண்டும்.

அந்த அறிக்கை வெளியிடப்பட்டவுடனே இந்தியர்கள் மிகுந்த மகிழ்ச்சியும் ஓரளவு வியப்பும் அடைந்தார்கள். ஏனெனில் அதனால் தேசியவாதிகளின் கோரிக்கைகள் எல்லாம் பூர்த்தியாகும்போல் தோன்றிற்று. ஆனால், அந்த அறிக்கையை ஆழ்ந்து படித்த பின்னர் அரசியல் வாதிகளுக்குள் கருத்து வேறுபாடு அதிகரிக்கத் தொடங்கியது. வலதுசாரிகள் தங்களுடைய எதிர்காலத்தைப்பற்றிக் கவலைகொள்ளத் தொடங்கினார்கள். இடதுசாரிகளில் தீவிர வாதிகளாயிருந்தவர்கள் மறுபடியும் கிளர்ச்சி செய்வதற்கு அந்த அறிக்கை ஒரு சந்தர்ப்பத்தை யளித்ததாக எண்ணினார்கள். வகுப்புவாதம் மறுபடியும் தலை தூக்கியது. பல வேறு வகுப்பினரும் புதிய அரசியல் திட்டத்தில் தங்கள் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ளுவதற்கு விரும்பினார்கள். கோகலே இறந்ததால் இடது சாரிகளில் மிதவாதிகளாய் இருந்தவர்கள் பலமிழந்தார்கள். 1915-ஆம் ஆண்டில் அவர்கள் காங்கிரஸ் மகா சபையில் இருந்து வெளியேறினார்கள். அதனால் காங்கிரஸ் மகாசபையில் தீவிர இடது சாரிகளே இருந்தார்கள். மேலும் காங்கிரஸ் முஸ்லிம்லீகின் ஆதரவையும் இழந்தது. காலத்தின் நிலையும் அரசியல் விஷயங்களைப் பொறுமையுடன் வாதிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஆசியாவில் எதிரிகளால் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுப்பதற்காக 1918-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் மும்மரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பருவ மழை மறுத்ததால் நாட்டின் சில பகுதி

களில் பஞ்சம் ஏற்பட்டது. அந்த ஆண்டின் இறுதியில் உலக முழுவதும் பரவிய இன்புளுவென்ஸா எனும் சுர நோயால் இந்தியாவின் மரணவிகிதம் இரண்டுமடங்காக உயர்ந்தது. ஆகவே அந்தக்காலம் துன்பமும், துயரமும், கவலையும் நிறைந்ததாக இருந்தது.

ஆனால் துன்பம் நிறைந்த 1918-ஆம் ஆண்டு வரையிலும் இந்தியாவில் எந்தவிதமான கிளர்ச்சியும் கஷ்டமும் ஏற்படவில்லை என்று நினைத்துக்கொண்டால் அது தவறாகும். வங்காளத்தில் பயங்கர இயக்கமும் அதனால் ஏற்பட்ட சதிகளும் நடந்து கொண்டே இருந்தன. அதன் பயனாகப் பல தொல்லைகள் ஏற்பட்டன. சதிகாரர்கள் ஜெர்மன் உளவாளிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். அந்த உளவாளிகள் திருட்டுத் தனமாகப் போர்க்கருவிகளை இந்தியாவுக்குள் கொண்டு வருவதற்கும், சயாம் வழியாக பர்மாவைத் தாக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கும் முயன்றார்கள். இந்தியாவில் புரட்சி செய்வதற்கு அமெரிக்காவிலும் பயங்கர இயக்கத்தினரின் கிளை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது என்று சென்ற அதிகாரத்திற் கூறினோம். பிரிட்டிஷ் கொலம்பியாவில் குடியேறியிருந்த சீக்கியர்களின் மூலமாகச் சதியாலோசனைகள் நடத்தப்பட்டு அவற்றின் பயனாகப் பஞ்சாபில் ஒரு புரட்சி இயக்கம் தோன்றியது. அதனால், பல கொலைகளும் வேறு பல குற்றங்களும் பஞ்சாபில் நிகழ்ந்தன. அவற்றை அடக்குவதற்கு இந்திய அரசாங்கம் சில தனிப்பட்ட முறைகளைக் கையாண்டது. கிலாபத்தின் தலைமை இடமாகிய துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்து சண்டை செய்ததால் அந்நாடு இந்தியாவின் விரோதியாயிற்று. அதனால் வட இந்தியாவில் இருந்த முஸ்லிம்களில் பலர் கவலை கொண்டார்கள். முஸ்லிம் இளைஞர்கள் பலர் இந்தியாவின் எல்லையைக் கடந்து எல்லைப் புறவாசிகளாகிய முஸ்லிம்களோடு சேர்ந்துகொண்டு ஜெர்மானியருதவியால் இந்தியாவில் மறுபடியும் முஸ்லிம் ஆட்சியை ஸ்தாபிப்பதற்குப் பயித்தியக்காரத்தனமான சதியாலோசனை செய்தனர். பொதுவாக இந்தியர்கள் அரசாங்கத்தினிடம் விசுவாசமாக இருந்தார்கள் எனினும் ஆங்காங்குச் சிலர் அரசாங்கத்திற் கெதிராகச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. சூழ்ச்சிக்காரர்கள் சிறு தொகையினரா யிருந்தாலும் அவர்கள் மிகத் தீவிரமாக வேலை செய்தார்களாதலால் அவர்களால் அரசாங்கத்திற்கு எந்தச் சமயத்திலும் ஆபத்து ஏற்படக் கூடும் என்ற நிலை இருந்தது. இந்த நிலையைப் பரிசீலனை செய்

வதற்காக ரௌலட் என்பவருடைய தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட கஷ்டங்களும் அரசாங்கத்திற்கு எதிராகச் சூழ்ச்சிகளையும் சதிகளையும் அதிகப்படுத்துவதற்குக் காரணமாயிருந்தன. யுத்தத்தினால் தாற்காலிகமாக இந்தியாவுக்கு லாபம் ஏற்பட்டது. இந்தியாவில் உற்பத்தியான மூலப்பொருள்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டதால் அவற்றின் விலை உயர்ந்துகொண்டே சென்றது. யுத்த தடவாளங்களை உற்பத்தி செய்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள் இந்தியாவின் கைத்தொழில்கள் வேகமாக முன்னேற உதவி செய்தன. அவ்வாறு வளர்ந்த கைத்தொழில்களிற் சில சண்டை முடிந்ததும் அழிந்து போகாமல் நிலைத்து நின்றன. தொழிலாளிகளின் கூலி உயர்ந்தது. லாபகரமான வியாபாரம் பெருகிற்று. சதிகளில் ஈடுபட்ட சூழ்ச்சிக்காரர்கள் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாறுதல்களால் லாபம் அடையவில்லை. ஆனால் ஏற்றுமதி வியாபாரம் அதிகரித்ததின் பயனாக உள்நாட்டு விலைவாசிகளில் ஏற்பட்ட உயர்வு அவர்களைப் பெரிதும் பாதித்தது. குறிப்பிட்ட தொகைகளைச் சம்பளமாகப் பெற்று வாழ்க்கை நடத்திய மக்களின் நிலை மிகக் கஷ்டமானதாயிருந்தது. ஆகவே மத்தியதர வகுப்பினர் தாங்க முடியாத கஷ்டத்திற்குள்ளானார்கள். அரசாங்கத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தவர்களெல்லாம் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட தாங்க முடியாத துன்பம் ஒன்றே அவர்களைச் சட்ட வரம்பை மீறிய செயல்களைச் செய்யத் தூண்டுவதற்குப் போதிய காரணமாயிருந்தது.

யுத்தத்தினால் அரசாங்கத்தின் வரவைவிடச் செலவு மிகுந்தது. கைத்தொழில் முன்னேற்றத்தாலும் வியாபாரப் பெருக்கத்தாலும் வரிகளின் மூலம் அரசாங்கத்திற்கு வந்த வருமானம் உயர்ந்தது. பழைய வரிகள் பல உயர்த்தப்பட்டன. புதிய வரிகள் சில விதிக்கப்பட்டன. எனினும் சண்டையினால் ஏற்பட்ட செலவுகளுக்கு அரசாங்கத்தின் வருமானம் போதவில்லை. ஆகவே 1914-ஆம் ஆண்டில் ஏறக்குறைய மறைந்தேபோயிருந்த வருமானந் தராத பொதுக்கடன் மறுபடியும் அதிகரித்தது. இந்திய நாணயத்திட்டம் முறிந்துபோனதுதான் யுத்தத்தினால் அரசாங்கப் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட முக்கியமான விளைவு. ரூபாயின் மதிப்புப் பவுனில் பதினைந்தில் ஒன்று என்று நிர்ணயிக்கப்பட்டது என முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். ஆனால் சண்

டைக்காலத்தில் ஸ்டெர்லிங்குப் பவுனின் மதிப்பும் குறைந்தது. அதனால் ரூபாயின் மதிப்பு உயர்ந்தது. அதாவது ஒரு ஸ்டெர் லிங்கு வாங்குவதற்கு முன்போலப் பதினைந்து ரூபாய் கொடுக்க வேண்டியதில்லை. பதினைந்துக்கும் குறைந்த ரூபாய்களைக் கொண்டே இப்போது ஒரு ஸ்டெர்லிங்கு வாங்க முடியும். அத னால் ரூபாயின் மதிப்பு அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டிருந்த ஒரு ஷில்லிங்கு நான்கு பென்ஸைவிட உயர்ந்தது. சண்டை முடிந்த பிறகும் ரூபாயின் மதிப்பு உயர்ந்துகொண்டே சென்றது. பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைப்படி ரூபாயின் மதிப்பு இரண்டு ஷில்லிங்கு என்று நிர்ணயிக்கப்பட்டது. அதனால் குழப் பம் இன்னும் அதிகமாயிற்று. ஆகையால் இந்த விஷயத்தில் சில ஆண்டுகள் அரசாங்கம் தலை இடவில்லை. தேவைக்கும் சப்ளைக் கும் ஏற்றவாறு ரூபாயின் மதிப்புத் தானாகவே உயர்ந்து கொண் டும் குறைந்து கொண்டும் இருந்தது. முடிவில் 1926-ஆம் ஆண் டில் ரூபாயின் மார்க்கட்டு நிலவரம் ஒரு ஷில்லிங்கு ஆறு பென் ஸாக இருந்தது. அதே மதிப்பை அரசாங்கம் அங்கீகரித்துச் சட்டமியற்றியது.

மாண்டேகு செம்ஸ்போர்ட் திட்டத்தை நிறைவேற்றுவதற் காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இனிச் சுருக்கிக் கூறுவோம். இந்தியர்களுக்கு நிர்வாகத் துறையில் படிப்படியாக உயர்த்த உத்தி யோகங்களை வழங்கும் விஷயத்தைப்பற்றியும், இந்தியாவின் எதிர் கால அரசாங்கத் திட்டத்தைப்பற்றியும் மாண்டேகு செம்ஸ் போர்டு அறிக்கை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளை விளக்கிற்று. உயர்தர உத்தியோகங்களைப் பொறுத்தவரையில் முன்னர் ஸாம்ராஜ்ய சர்விஸ் என்றும் இப்பொழுது அகில இந்திய சர்விஸ் என்றும் வழங்கப்பட்ட பதவிகளுக்கு இந்தியா விலும் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அவற்றில் சில பதவிகளுக்கு இங்கிலாந் தில் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் பழக்கம் கைவிடப் பட்டது. அந்தப் பதவிகளில் ஏற்கெனவே இருந்த ஆங்கில உத்தி யோகஸ்தர்கள் வேலையினின்றும் விடுதலை பெற்ற பிறகு அவர் களுக்குப் பதிலாக இந்தியர்களை நியமிக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. மற்ற பதவிகளுக்கு, குறிப்பாகச் சிவில் செர்விஸ் பதவிகளுக்கு, இங்கிலாந்தில் மாத்திரமன்றி இந்தியாவிலும் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், கொஞ் சம் கொஞ்சமாக இந்திய உத்தியோகஸ்தர்களின் விகிதத்தை உயர்த்தக்கூடிய முறை கையாளப்படவேண்டும் என்றும் முடிவு

செய்யப்பட்டது. இந்த ஏற்பாடுகளால் அரசியல் கிளர்ச்சியில் உத்தியோக சம்பந்தமான விஷயங்களுக்கிருந்த முக்கியத்துவம் குறைந்தது. இருந்தபோதிலும் ஒவ்வொரு வகுப்பினரும் உயர் தர உத்தியோகங்களில் தங்களுக்கும் சரியான பங்கு வேண்டுமென்று உரிமை கொண்டாடினார்களாதலால் உத்தியோகஸ்தர்களை நியமிப்பது எளிதான காரியமாக இல்லை. மேலும், ஐரோப் உத்தியோகஸ்தர்களின் விகிதத்தையும், உயர்தர உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில் இந்தியா மந்திரிக்கிருந்த அதிகாரத்தையும் இன்னும் குறைக்கவேண்டும் என்றும் இந்தியர்கள் வற்புறுத்தினார்கள்.

அரசியலமைப்பைப் பொறுத்தவரையில் இந்தியா மந்திரிக்கிருந்த அதிகாரம் சட்டப்படி குறைக்கப்படவில்லை எனினும், இந்திய அரசாங்கமும் மத்தியச் சட்டசபையும் அரசாங்க வரவு செலவு விஷயங்களில் ஒரேவிதமான முடிவுக்கு வந்தால் அந்தத் துறையில் இந்தியா மந்திரி சாதாரணமாகத் தலை இடக்கூடாது என்ற சம்பிரதாயம் ஒத்துக்கொள்ளப்பட்டது. மேலும் மாகாணங்களில் மந்திரிகளுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களிலும் அதிகாரங்களிலும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு தலையிடக்கூடாது என்ற கொள்கையும் ஒத்துக்கொள்ளப்பட்டது. இதுவரையில் இந்தியா மந்திரி இந்திய அரசாங்கத்தின் மேலதிகாரியாக இருந்தது மாத்திரமன்றி அதனுடைய ஏஜண்டாகவும் இருந்தார். இந்திய அரசாங்கத்தின் சம்பந்தமான உத்தரவுகளையிட்டது மாத்திரமன்றி அந்த அரசாங்கத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கும் வியாபார ஏஜண்டாகவும் இந்தியா மந்திரி இதுவரையில் இருந்தார். ஆனல் 1920-ஆம் ஆண்டில் லண்டனில் ஒரு ஹைகமிஷனர் நியமிக்கப்பட்டு வியாபார சம்பந்தமான ஏஜண்டு வேலை அவருக்குக் கொடுக்கப்பட்டது. அந்த விஷயத்தில் அவர் இந்திய அரசாங்கத்துக்குப் பொறுப்பாளியே ஒழிய இந்தியா மந்திரிக்குப் பொறுப்பாளியன்று. இந்திய அரசாங்கத்தை மேற்பார்வைசெய்யும் அதிகாரம் மாத்திரம் இந்தியா மந்திரிக்குக் கொடுக்கப்பட்டது. இராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபையில் மொத்தம் ஏழு அங்கத்தினர்கள் இருந்தார்கள். இப்பொழுது அவர்களில் மூவர் இந்தியர்களாக இருந்தார்கள். இராஜப்பிரதிநிதிக்கும் அவருடைய நிர்வாக சபைக்கும் இதுவரையில் இருந்த அதிகாரம் இரண்டு வழிகளில் ஓரளவு குறைந்தது. முதலாவதாக, மாகாணங்களில் மந்திரிகளுக்கு மாற்றப்பட்ட இலாக்காக்களின் விஷயங்களில் மத்திய அரசாங்கம் இனிமேல்

தலையிட முடியாது. இரண்டாவதாக மத்திய அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டமும் மாகாண அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டமும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதால் மாகாண வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அரசாங்கத்திற்கிருந்த அதிகாரம் குறைந்தது. மத்தியச் சட்டசபையில் இரு பிரிவுகள் ஏற்பட்டன. ஒன்றுக்கு அசெம்பிளி என்றும் இன்னொன்றுக்கு (Council of State) அரசாங்க சபை என்றும் பெயர் கொடுக்கப்பட்டது. இராஜாங்க சபையைவிட அசெம்பிளி பெரிது. இவ்விரண்டின் அமைப்பிலும் ஒரே முறை கையாளப்படாமல் பலவகைப்பட்ட முறைகள் கையாளப்பட்டன. அசெம்பிளியின் அங்கத்தினர்களில் மூன்றில் இருபகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்களில் பாதிப்பேர் ஓட்டுரிமைபெற்ற பொதுமக்களாலும், மற்ற பாதிப்பேர் தனிப்பட்ட வகுப்பினராலும், வியாபாரச் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மீதியிருந்த அங்கத்தினர்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்களில் சிலர் உத்தியோகஸ்தர்களாக இருந்தார்கள். உத்தியோகஸ்தர்கள் அல்லாத அங்கத்தினர்களில் பெரும்பான்மையோர் ஒன்றுசேர்ந்து ஏதாவதொரு அரசாங்கத் திட்டத்தை எதிர்த்தால் அரசாங்கத்தை ஆதரிக்கும் அங்கத்தினர்கள் சிறுபான்மைக் கட்சியினர் ஆகிவிடுவார்கள். ஆனால் முக்கியமான விஷயங்களில் எல்லாம் இராஜாங்க சபையின் ஆதரவைப் பெற்று அசெம்பிளியின் முடிவை நிராகரித்துவிட்டுச் சட்டம் இயற்றுவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரமிருந்தது. இராஜாங்க சபையின் அமைப்பும் இவ்விஷயத்தில் அரசாங்கத்திற்கு உதவி செய்யக்கூடிய வகையிலேயே இருந்தது. அந்தச் சபையின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தாலும், அவர்களைத் தேர்ந்தெடுக்க உரிமை பெற்ற ஓட்டர்களின் தொகை மிகச் சிறியதாக இருந்தது. ஆதலால் அந்த அங்கத்தினர்கள் அரசியல் துறையில் வலது சாரிகளாகவும், இடைநிலையினராகவும் இருந்தார்களேயன்றி இடது சாரிகளாக இருக்கவில்லை. மீதி இருந்த அங்கத்தினர்களில் பெருந்தொகையினர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள். ஆகவே அசெம்பிளியின் உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தினர்களுக்கு விவாதத்திலும் கமிட்டிகளிலும் அதிகச் செல்வாக்கு இருந்தாலும் முக்கியமான விஷயங்களிலெல்லாம் அரசாங்கத்தின் திட்டங்களை மாற்றுவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை.

மேற்கூறிய இரண்டு சபைகளைத் தவிரச் சுதேச அரசர்கள் சபையொன்றும் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்திய அரசாங்கம் ஒவ்வொரு சுதேச ஸம்ஸ்தானத்துடனும் தனிப்பட்ட முறையில் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. சுதேச அரசர்கள் ஒருவரோடொருவர் நேரடியான தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

ஆனால் நாளடைவில் சுதேச அரசர்களுடைய பொதுப்படையான அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதற்கு ஏதாவதொரு ஏற்பாடு செய்வது அவசியமாயிற்று. முதல் உலக யுத்தத்தின் போது சில சமயங்களில் சுதேச அரசர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்யும் பழக்கம் ஏற்பட்டது. புதிய அரசியல் திட்டத்தின்படி இந்தப் பழக்கம் சட்டப்படி ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் இவ்வாறு ஏற்பட்ட சுதேச அரசர்களின் சபை அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் சபையாக இருந்ததே ஒழிய நிர்வாகத்துறையில் அதற்கு எந்தவிதமான அதிகாரமும் கிடையாது. மேலும், சிறிய ஸம்ஸ்தானங்களில் சிலவும் பெரிய ஸம்ஸ்தானங்களில் பலவும் அந்தச் சபையில் சேரவில்லை.

மாகாண அரசியலில்தான் புதிய திட்டப்படி முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. சட்டசபையின் ஆதரவுபெற்ற பொறுப்புள்ள மந்திரிசபை அமைக்கப்படவேண்டுமென்ற கொள்கை ஒத்துக்கொள்ளப்பட்டாலும், மாகாண அரசியலின் எல்லா அதிகாரங்களையும் அத்தகைய மந்திரிசபைக்கே அளிப்பதற்கு இன்னும் சிறிதுகாலம் செல்லவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆகவே மாகாண அரசியலில் இரட்டையாட்சி என்று வழங்கப்பட்ட முறை புகுத்தப்பட்டது. பெரிய மாகாணங்களில் ஒவ்வொன்றுக்கும் ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார், அவருக்கு உதவிசெய்ய ஒரு மந்திரி சபையும் ஒரு நிர்வாக சபையும் ஏற்பட்டன. நிர்வாகசபையில் ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் அங்கத்தினர்களாக இருந்தார்கள். மந்திரி சபையின் அங்கத்தினர்கள் அனைவரும் இந்தியரே. அரசாங்க இலாக்காக்கள் ஒதுக்கப்பட்ட இலாக்கக்கள் என்றும் மாற்றப்பட்ட இலாக்காக்கள் என்றும் பிரிக்கப்பட்டன. ஒதுக்கப்பட்ட இலாக்காக்களின் நிர்வாகம் கவர்னரையும் நிர்வாக சபையையும் சேர்ந்தது. அந்த விஷயத்தில் கவர்னர் முடிவாகப் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாளி. மாற்றப்பட்ட இலாக்காக்களை கவர்னர்களும் மந்திரிகளும் சேர்ந்து நிர்வகித்தார்கள். மாகாணச் சட்டசபையின் அங்கத்

தினர்கள்தாம் மந்திரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சட்டசபையின் ஆதரவை இழந்தால் மந்திரிகள் பதவி வகிக்க முடியாது. ஆகவே, மாற்றப்பட்ட இலாக்காக்களின் நிர்வாகத்திற்கு மந்திரிகள் சட்டசபைக்குப் பொறுப்பாளிகளாக இருந்தார்கள்.

இலாக்காக்களைப் பிரிக்கும் விஷயத்தில் மாகாணங்களுக்கிடையில் சில சிறு வேறுபாடுகள் இருந்தன. ஆனால், அமைதியைக் காத்தல், வரிவசூல், அரசாங்க வரவு செலவு ஆகிய இலாக்காக்கள் ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள் என்று பொதுவாகக் கூறலாம். ஸ்தல சுய ஆட்சி, கல்வி, சுகாதாரம், பொருளாதார முன்னேற்றம் ஆகிய இலாக்காக்கள் மற்றப்பட்ட இலாக்காக்கள். ஆகவே, மந்திரிகளுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பு அதிகமாக இருந்தது. இந்த இரட்டையாட்சி முறையை நடத்துவதில் பல கஷ்டங்கள் ஏற்படுமென்பது தெளிவான விஷயம். ஆகையால், அவசிய மேற்பட்டபோது உபயோகப்படுத்துவதற்கு கவர்னருக்குத் தனிப்பட்ட முறையில் சில அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்தத் திட்டம் நடைமுறையில் வெற்றிபெற வேண்டுமானல் நிர்வாக சபைக்கும் மந்திரி சபைக்கும் இடையில் ஒத்துழைப்பும், சட்டசபை அங்கத்தினர்களுடைய ஆதரவும் அவசியம். ஆகவே அந்தத் திட்டத்தின் வெற்றியும் தோல்வியும் அதை நடத்துபவர்களின் மனப்பான்மையைப் பொறுத்தது என்று கூறலாம்.

மத்திய சட்டசபையில் இரு பிரிவுகள் இருந்தன என்று கூறினேம். ஆனால் மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே சட்டசபைதான் இருந்தது. மாகாணச் சட்டசபைகளின் அமைப்பிலும் மத்திய சட்டசபைகளின் அமைப்பில் கையாளப்பட்டவை போன்ற பலவகைப்பட்ட முறைகள் கையாளப்பட்டன. இந்த முறைகளில் மாகாணத்திற்கு மாகாணம் வேறுபாடிருந்தது. ஆனால் சிறிய வேறுபாடுகளைப்பபறி நாம் கவலைப்படவேண்டுவதில்லை. மாகாணச் சட்டசபைகளின் அமைப்பில் பின்வரும் முறைகள் கையாளப்பட்டன என்று பொதுவாகக் கூறலாம். அங்கத்தினர்களில் மிகப் பெரும்பான்மையோர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களாகிய உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் மிகச் சிலரே. தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மூன்று வகைப்பட்டவர்களாக இருந்தார்கள். சாதாரணப் பிரதேசப் பிரிவுகளால் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்

கப்பட்டார்கள். அந்த முறையில் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. தனிப்பட்ட வகுப்பினரால் ஒரு பகுதியினர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அந்த முறையினால் முஸ்லிம்கள், சீக்கியர்கள், ஐரோப்பியர்கள் முதலியவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. மூன்றாவது பகுதியினர் சர்வகலாசாலைகள், மிராசுதார்கள், வியாபாரிகள், தோட்டக்காரர்கள் முதலியவர்களில் பிரதிநிதிகளாக இருந்தார்கள். நேரடியான தேர்தல்முறைதான் கையாளப்பட்டது. ஓட்டுரிமை பெற்றவர்கள் மொத்த ஜனத்தொகையில் ஒரு சிறு பகுதியினராகவே இருந்தார்கள் எனினும், அத்தொகை இதற்கு முன்னர் ஓட்டுரிமை பெற்றிருந்தவர்களின் தொகையைவிட மிகப் பெரியது. புதிய திட்டத்தால் ஓட்டுரிமை பெற்றவர்கள் பெரும்பாலும் கல்வியற்றவர்களாயிருந்ததோடு அரசியல் விஷயங்களில் சிறிதும் அனுபவமில்லாதவர்கள். அத்தகைய ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களோவெனில் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும், முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து நடத்தவேண்டிய மந்திரிகளின் எஜமானர்களாக இருந்தார்கள். ஓட்டர்கள் தங்கள் பொறுப்பைச் சரியாக உணர்வார்களா என்பதும், மந்திரிகள் திறமையுடனும் நேர்மையுடனும் தங்கள் கடமைகளைச் செய்வார்களா என்பதும் முன் கூட்டியே தீர்மானிக்க முடியாத விஷயங்கள். ஆகவே புதிய திட்டம் நன்றாக நடக்கும் என்ற நம்பிக்கையைத் தவிர அந்தத் திட்டம் மாகாணங்களிற் புகுத்தப்படுவதற்கு வேறெந்த ஆதாரமும் அப்போது இல்லை. அந்தத் திட்டத்தால் பழமையுடனிருந்த தொடர்பு அறுந்தது என்பது மாத்திரம் உறுதியாகக் கூறக் கூடிய விஷயம்.

அதிகாரம்—51

யுத்தத்திற்குப்பின் இந்தியா, 1919–1943

வெளிநாட்டுத் தொடர்புகள்

இராஜப் பிரதிநிதிகள் :—

செம்ஸ்போர்டு பிரபு,	*1916—1921.*
ரீடிங்கு பிரபு,	*1921—1926.*
இர்வின் பிரபு,	*1926—1931.*
வில்லிங்டன் பிரபு,	*1931—1936.*
லின்லித்கோ பிரபு,	*1936—1943.*
வேவல் பிரபு,	*1943—1947.*

1919-ஆம் ஆண்டு அரசியல் திட்டம் அமுலுக்கு வந்ததும் இந்தியாவின் வரலாறு தற்கால வரலாற்றுடன் கலந்தது. 1935-ஆம் ஆண்டில் பார்லிமெண்டில் நிறைவேறிய இந்திய அரசியல் சட்டத்தின்படி இந்தியா முழுவதற்கும் ஏற்ற ஒரு சமஷ்டி அரசியல் திட்டம் தயாரிக்கப்பட்டது. 1937-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் அந்தத் திட்டத்தின் ஒரு பகுதி அமுலுக்கு வந்தது. புதிய திட்டம் முழுவதும் அமுலுக்கு வருமுன் 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இரண்டாம் உலகயுத்தம் தொடங்கியது.

1919-ஆம் ஆண்டுக்கும் 1943-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களையும் சமூக மாறுதல்களையும் பற்றிக் கூறப் புகுமுன்னர் இந்தியாவின் வெளிநாட்டுத் தொடர்புகளின் வரலாற்றைச் சுருக்கிக் கூறுவது பொருந்தும். முதலில் ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவிற்கும் இருந்த தொடர்பைப்பற்றிக் கூறுவோம்.

அமீர் ஹபீபுல்லா 1919-ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டான். அவனுக்குப் பின் அவனுடைய மகனுன அமனுல்லா பட்டத்திற்கு வந்தான். பஞ்சாபில் ஏற்பட்ட கடுமையான அரசியற் கிளர்ச்சிகளின் பயனுக இந்தியாவில் அப்போது நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்தக் கிளர்ச்சிகளைப் பற்றி அடுத்த அதிகாரத்தில் கூறுவோம். அந்த நெருக்கடியான

நிலையைப் பயன்படுத்திக்கொண்டு அனுபவமில்லாத இளைஞனாகிய அமனுல்லா இந்தியாவின் வடமேற்கெல்லையின்மீது படையெடுத்தான். ஆனால், அவன் விரைவில் தோல்வி அடைந்து திரும்பினான். நீண்டநாள் பேச்சு வார்த்தைகளுக்குப்பின் 1921-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி ஆப்கானிஸ்தானத்திற்கும் மற்ற நாடுகளுக்கும் நேரடியான அரசியல் தொடர்பு ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானத்தின் வெளிநாட்டுத் தொடர்பு இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலிருக்கவேண்டும் என்ற ஏற்பாடு கைவிடப்பட்டது. 1926-ஆம் ஆண்டில் அமனுல்லா அமீர் என்ற பட்டத்திற்குப் பதிலாக ஆப்கானிஸ்தானத்தின் அரசன் என்ற பட்டம் சூட்டிக்கொண்டான். அதன்பின் அவன் நிர்வாகத் துறையிலும், சமூகத் துறையிலும் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தினான். ஆனால் அந்தச் சீர்திருத்தங்களை ஆப்கானிய மக்கள் மிகப் புரட்சிகரமானவை என்று கருதினார்கள். ஆதலால், பல உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டன. அதனால் அமனுல்லா அரசபதவியை இழந்தான். 1929-ஆம் ஆண்டில் நாதிர்ஷா ஆப்கானிய அரசனானான். அவன் மறுபடியும் இந்திய அரசாங்கத்துடனும், பிரிட்டிஷ் அரசாங்கத்துடனும் சிநேக முறையில் தொடர்பு வைத்துக்கொண்டான். ஆப்கானிஸ்தானத்தில் உள்நாட்டுக் கலகங்கள் நடந்த காலத்தில் காபூலிலிருந்த ஆங்கில ரெஸிடெண்டும், அங்கேயே குடியேறியிருந்த இந்தியர்களும் பேராபத்திற்குள்ளாயினர். ஆனால் அவர்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுமுன் பிரிட்டிஷ் விமானப் படையால் காப்பாற்றப்பட்டனர். விமானப்படை அப்போது சாதித்த காரியம் ஆகாய விமானங்களின் ஆரம்ப வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயம். 1933-ஆம் ஆண்டில் நாதிர்ஷாவும் கொலை செய்யப்பட்டான். அதன்பின் அவனுடைய மகனான ஜாஹிர்ஷா பட்டத்திற்கு வந்தான். அவன் மாமன் ஹாஷிம்கான் அவனுக்கு முதல் மந்திரியாக விளங்கினான்.

ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள பிரதேசத்தின் ஒருபகுதி இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வையிலும், இன்னொரு பகுதி ஆப்கானிய அரசாங்கத்தின் மேற்பார்வையிலும் இருந்தன என்றும், இந்தியாவின் செல்வாக்குக் குட்பட்ட பகுதியின் விஷயத்தில் எத்தகைய கொள்கையை அனுசரிப்பது என்பதைப்பற்றி இந்திய அரசாங்கம் திட்டமான முடிவிற்கு வர இயலவில்லை என்றும் 47-ஆம் அதி

காரத்திற் கூறினோம். எல்லைப்புறப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னேற்றக் கொள்கையும் பயன்படாது, எல்லை அடைப்புக் கொள்கையும் பயன்படாது என்று பார்த்தோம். அவற்றிற்கு பதிலாக, எல்லைப்புற வாசிகளின் பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்களுக்குப் பிழைக்கும் வழி காட்டினுல்தான் அவர்கள் படையெழுச்சியைத் தடுக்கமுடியும் என்றும் கூறினோம். இந்தக் கொள்கையைக் கையாளத் தொடங்கிய பிறகுதான் இந்திய அரசாங்கம் எல்லைப்புறப் பிரச்சனையில் வெற்றிகாணத் தொடங்கியது. முதல் உலக யுத்தம் முடிந்த சிறிது காலத்திற்கெல்லாம் எல்லைப்புறத்தின் மத்திய பகுதியாகிய வாஜிரிஸ்தானத்தில் கடுமையான கலகங்கள் ஏற்பட்டன. 1923-ஆம் ஆண்டிலும் அதை அடுத்த ஆண்டுகளிலும் வாஜிரிஸ்தானத்தில் நிரந்தரமான இராணுவ தளங்கள் ஏற்படுத்தப்பட்டன. போக்குவரவு வசதிகள் அதிகப்படுத்தப்பட்டன. அதனுல் வாஜிரிஸ்தானத்தின் எல்லாப் பகுதிகளையும் எளிதில் அடையக்கூடிய நிலை ஏற்பட்டது. கூட்டத்தினருடன் திருப்திகரமான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஏதோ சில சமயங்களில் ஏற்பட்ட கலகங்களைத் தவிர மற்றபடி வாஜிரிஸ்தானத்தில் அமைதி ஏற்பட்டது. எனினும் இந்திய அரசாங்கம் எப்போதும் விழிப்பாகவே இருப்பது அவசியமாயிருந்தது. எல்லைப்புறத்தின் மற்றப் பகுதிகளில் கடைசி ஆப்கானிய யுத்தத்திற்குப் பின்னர் பொதுவாக அமைதியே நிலவியது.

மத்தியக் கிழக்கு நாடுகளில் இஸ்லாம் மதமே மக்களின் மதமாக இருப்பதால் அந்நாடுகளில் அவ்வப்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகளை இந்திய முஸ்லிம்கள் அக்கரையுடன் கவனித்து வந்தார்கள். அதுபோலவே அந்நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களை அரசியல் துறையில் கவனம் செலுத்திய இந்தியர்களெல்லாம் சிரத்தையுடன் கவனித்து வந்தார்கள். அதனுல், அரேபியாவில் இபன்ஸாத் அரசபதவி அடைந்ததும், பாரசீகத்தில் காஜார் வம்சத்தின் வீழ்ச்சிக்குப் பின் அரசியல் நிர்ணய சபையால் ரெஜாஷாபஹ்லவி அமைப்புக்குட்பட்ட அரசனுகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் இந்தியர்களுட் பலருடைய கவனத்தைக் கவர்ந்தன. முதல் உலக யுத்தத்தின்போது ஈராக்கின் வியாபாரத்திலும் அரசாங்க உத்தியோகத்திலும் இந்தியர்கள் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஆனுல் யுத்தத்திற்குப் பின்னர்ச் சிறிதுகாலத்தில் இந்தச் சந்தர்ப்பங்கள் மிகக் குறைக்கப்பட்டன. அதனுல் இந்தியர்களுக்கு ஓரளவு அதிருப்தி

ஏற்பட்டது. இங்கிலாந்துக்கும், எகிப்துக்கும் இடையில் 1920-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் இந்திய அரசியல் வாதிகளிடையில் மிகுந்த பரபரப்பை உண்டாக்கின. பாலஸ்தீனத்தில் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலேற்பட்ட சச்சரவுகள் இந்தியாவின் பலவேறு சமூகத்தினரிடையில் தோன்றிய சச்சரவுகளை ஓரளவு ஒத்திருந்தமையால் பாலஸ்தீனத்தை மாண்டேட்டு என்ற முறையில் ஆண்டுவந்த இங்கிலாந்தின் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் இந்திய அரசியல் வாதிகள் மிகுந்த அக்கரையுடன் கவனிக்கத் தொடங்கினார்கள்.

சிறிது காலத்திற்கு இந்தியர்களுடைய கவனத்தை, குறிப்பாக முஸ்லிம்களுடைய கவனத்தை, துருக்கியில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் முக்கியமாகக் கவர்ந்தன. 1920-ஆம் ஆண்டில் முஸ்தாபா கமால்பாஷா துருக்கியின் சர்வாதிகாரியானார். அதன்பின் துருக்கிக்கும் கிரீஸுக்கும் சண்டை ஏற்பட்டது. இந்த விஷயங்களில் இந்திய முஸ்லிம்கள் அதிகச் சிரத்தை காட்டினார்கள். அகதிகளாகிய துருக்கியர்களுக்கும், சண்டையில் காயமடைந்தவர்களுக்கும் செம்பிறைச் சங்கத்தின் மூலமாக இந்திய முஸ்லிம்கள் உதவி அனுப்பினார்கள். அந்தச் சமயத்தில் துருக்கியின் விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் காட்டிய சிநேகமற்ற மனப்பான்மையால் இந்தியாவிலிருந்த முஸ்லிம்களும் இந்துக்களில் பலரும் மிகுந்த சீற்றமடைந்தனர். முஸ்லிம்களில் சிலர் துருக்கி சுல்தானை கலீபா பதவிக்கு மறுபடியும் உயர்த்தும் நோக்கத்துடன் கிலாபத் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். கிலாபத் இயக்கத்தில் பெருவாரியான முஸ்லிம்கள் சேர்ந்துகொண்டார்கள். சிறிது காலம் கிலாபத் கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்தன. அதைப்பற்றிப் பின்னர் ஓர் அதிகாரத்தில் அதிகமாகக் கூறுவோம். ஆனால், சுல்தான் துருக்கியை விட்டு விரைவில் வெளியேறினார். 1923-ஆம் ஆண்டில் லாசேன் உடன்படிக்கை ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிகளால் துருக்கியர்கள் தங்களுடைய குடியரசின் முன்னேற்றத்தைப்பற்றித்தான் மிகுந்த சிரத்தை காட்டினார்களே ஒழிய, இஸ்லாம் மதத்தின் முன்னேற்றத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பது தெளிவாக விளங்கியது. ஆதலால், இஸ்லாம் மதத்தின் உயர்வை அடிபபடையாகக் கொண்ட கிலாபத் இயக்கம் அழிந்தது. எனினும் துருக்கியக் குடியரசின் சீர்திருத்தத்திலும் அதன் அயல்நாட்டுக் கொள்கைகளிலும் இந்தியர்களுடைய அக்கரை குறையவில்லை.

வடக்கு எல்லையைப் பொறுத்தவரையில் திபேத்து இந்தியாவுடன் நட்பாகவே இருந்தது. நேபாளத்திற்கும் இந்தியாவிற்கும் இடையிலிருந்த நட்பு 1923-ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்படிக்கையால் பலப்பட்டது. அதன்படி நேபாளம் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நேரடியான அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ள முடிந்தது. மேலும், இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையில் கலாசாரத்திலும், வியாபாரத்திலும் ஏற்பட்ட தொடர்புகள் வளர்ந்துகொண்டே சென்றன.

நேபாளத்திற்கப்பால் சீனு இருக்கிறது. இது ஒரு மிகப் பெரியதேசம். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றுண்டுகளில் இந்தியாவுக்கும் சீனுவுக்கும் பலவகையில் தொடர்பு இருந்தது. நவீன காலத்தில் அபினி ஏற்றுமதியால் இங்கிலாந்துக்கும் சீனுவுக்கும் நேரடியான தொடர்பு ஏற்பட்டது. இதைப்பற்றி நாற்பத்தாறும் அதிகாரத்திலும் நாற்பத்தேழாம் அதிகாரத்திலும் கூறியிருக்கிறேம். அபினி வியாபாரத்தால் இந்தியாவின் வெளிநாட்டுத்தொடர்புக்கு அதிக பாதகம் ஏற்பட்டது. அதனுல், இருபதாம் நூற்றுண்டின் ஆரம்ப ஆண்டுகளில் அந்த வியாபாரத்தைப் படிப்படியாக நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசாங்கம் எடுத்தது. முதல் உலக யுத்தத்திற்குச் சிறிது காலத்திற்கு முன்னர் இருந்தே அபினி ஏற்றுமதி நின்றுவிட்டது. இப்பொழுது இந்தியாவிலிருந்து சீனுவுக்கு அபினி ஏற்றுமதி செய்தல் சட்டவிரோதமான காரியமாயிருக்கிறது. சென்ற ஐம்பது ஆண்டுகளாகச் சீனுவுக்கு ஏராளமான இந்தியத்துணி ஏற்றுமதியாகிறது. சீனுவின் கடற்கரைப் பிரதேசத்தில் பல இந்திய வியாபாரிகள் குடியேறினூர்கள். அந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் இந்தியர்களின் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தன. 1931-ஆம் ஆண்டில் ஜப்பானுக்கும் சீனுவுக்கும் சண்டை ஏற்பட்டபொழுது இந்தியர்களுடைய அநுதாபம் எல்லாம் சீனுவின் சார்பிலேயே இருந்தது. இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியபின் இந்தியாவுக்கும் சீனுவுக்கும் இடையில் கலாசாரத் துறையிலும் இராணுவத் துறையிலும் அதிகத் தொடர்பு ஏற்பட்டது.

ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் கலாசாரத்துறையில் அதிகத் தொடர்பு இருந்ததென்று கூற முடியாது. எனினும் இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ருஷியாவை எதிர்த்து ஜப்பானியர்கள் அடைந்த வெற்றியும், ஜப்பானில் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் மிக விரைவாக ஏற்பட்ட முன்னேற்றமும் இந்தியர்களுடைய உள்ளங்களில் ஆழமாகப் பதிந்தன. முதல் உலக

யுத்தத்திற்கு முன்னரும் அந்த யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்திலும் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் வியாபாரம் பெருகிற்று. இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏராளமான பருத்தி ஏற்றுமதி ஆயிற்று. ஜவுளி வகைகளும் தினசரி வாழ்க்கைக்கேற்ற மற்றைய பொருள்களும் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு வந்தன. யுத்தத்திற்குப் பின்னர் இந்த வியாபாரம் இன்னும் அதிகமாகப் பெருகிற்று. 1934-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு வியாபார உடன்படிக்கை ஏற்பட்டது. இந்தியர் சிலர் கைத்தொழில் பயிற்சி பெறுவதற்காக ஜப்பானுக்குச் சென்றார்கள். ஆனால், அவர்களால் இந்தியாவின் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. சீனமீது ஜப்பான் போர்தொடுத்த பின்னர் இந்தியர் அனைவரும் ஜப்பானியர்களுடைய கொள்கைகளையும், அவர்கள் வெளிநாட்டு அரசியல் துறைகளில் கையாண்ட முறைகளையும் வன்மையாகக் கண்டிக்கத் தொடங்கினார்கள். மேலும், ஜப்பானியர்களுடைய சமீப கால நடவடிக்கைகளால் சீனாவின் கடற்கரைப் பிரதேசத்திலும், மலேயாவிலும், பர்மாவிலும் குடியேறியிருந்த இந்தியர்களுக்கு மிகுந்த துன்பமும் நஷ்டமும் ஏற்பட்டன.

பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் பர்மா ஜெயிக்கப்பட்டதும் அது இந்திய சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாக இணைக்கப்பட்டது. நீதி பரிபாலனத்திலும், அரசியல் நிர்வாகத்திலும் இந்திய முறைகள் பர்மாவிலும் புகுத்தப்பட்டன. அதிக முன்னேற்றமடையாத நாடாகிய பர்மாவில் ஏற்பட்ட சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவிலிருந்து ஏராளமான வியாபாரிகளும், விவசாயிகளும், மருத்துவம், ஆசிரியத் தொழில் முதலிய தொழில்களில் ஈடுபட்டவர்களும் அங்குச் சென்று குடியேறி நிலையாக வசிக்கத் தொடங்கினர். அதுவுமன்றிப் பர்மாவின் துறைமுகங்களிலும், தொழிற்சாலைகளிலும் பெருவாரியான இந்தியர்கள் சென்று வேலைசெய்யத் தொடங்கினார்கள். அவர்கள் எல்லாம் இந்தியாவின், கீழ்க்கடற்கரைப் பிரதேசத்திலிருந்து சென்று, சில பல ஆண்டுகள் தங்கிப் பொருள் சேர்த்துக்கொண்டு திரும்பினார்கள். ஆனால் பர்மாவில் தேசீய உணர்ச்சி தோன்றத் தொடங்கியதும் இந்தியர்கள் பர்மாவில் சென்று குடியேறும் பழக்கத்தைப் பர்மியர்கள் வெறுக்கத் தொடங்கினார்கள். பர்மாவில் குடியேறிய இந்தியர்களால் பர்மியர்களுடைய செல்வம் சுரண்டப்படுகிறது என்றும், இந்திய அர

சர்க்கம் பர்மாவுக்குத் தக்கபடி பொருளுதவி செய்யவில்லை என்றும் பர்மியர்கள் எண்ணினார்கள். ஆனால் பர்மாவுடன் செய்த சண்டையால் ஏற்பட்ட செலவுக்கும், பர்மாவில் அமைதியை நிலை நாட்டி நல்ல அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான செலவுக்கும் இந்தியப் பணமே பயன்படுத்தப்பட்டது என்றும், அதற்குப் பதிலாக பர்மாவின் மூலம் இந்தியாவுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்றும் இந்தியர்கள் கூறினார்கள். இத்தகைய முரண்பட்ட உணர்ச்சிகளால் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையில் இருந்த தொடர்பில் அதிருப்தி வளர்ந்தது. 1935-ஆம் ஆண்டில் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்து விடுவது என்று முடிவு செய்யப்பட்டது. அதனால் பர்மாவுக்கும் இங்கிலாந்துக்கும் நேரடியான தொடர்பேற்பட்டது. அதன் பின்னர் இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இடையில் வியாபாரத் துறையிலும் வரவுசெலவுத் துறையிலும் புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. ஆனால், அவற்றின் பயனாக இந்தியர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையிலிருந்த பகைமை உணர்ச்சி குறையவில்லை. பர்மாவில் இந்தியர்களுக்கு எதிராகக் கலகங்களும் கிளர்ச்சிகளும் ஏற்பட்டன. அதனால், இந்தியர்களுடைய கோபம் இன்னும் அதிகமாயிற்று. 1942-ஆம் ஆண்டில் ஜப்பானியர்கள் பர்மாவின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அதனால் ஏற்பட்ட விளைவுகளைப்பற்றிப் பின்னர் ஓர் அதிகாரத்தில் கூறுவோம்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து வெளிநாடுகளிற் சென்று குடியேறியிருந்த இந்தியர்களின் தாழ்ந்த நிலைமையைப் (பார்த்த) படித்த இந்திய மக்கள் கவலைகொள்ளத் தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவின் ஜனநெருக்கமான பகுதியிலிருந்து ஒப்பந்தக் கூலிகள் ஏராளமாக வெளிநாடுகளுக்குச் சென்று குறைந்த கூலியில் வேலை செய்தார்கள் என்றும், 1915-ஆம் ஆண்டில் ஒப்பந்தக் கூலி முறையை ஒழிப்பதற்காக இந்திய அரசாங்கம் சட்டம் இயற்றியது என்றும் நாற்பத்து நான்காம் அதிகாரத்திலும் நாற்பத்து ஒன்பதாம் அதிகாரத்திலும் கூறியிருக்கிறோம். சாதாரணத் தொழிலாளிகள் கூலிவேலைக்காக இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் விஷயத்தில் தக்க முறைகளைக் கையாளுவதற்கும், கூலியாட்கள் மோசமாக நடத்தப்பட்ட நாடுகளுக்கு இந்தியர்கள் போவதைத் தடுப்பதற்கும் 1922-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இந்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்டது. பர்மாவைத் தவிர இலங்கையிலும்

மலேயாவிலும் தான் மிகப் பெருந்தொகையினரான இந்தியத் தொழிலாளிகள் காணப்படுகிருர்கள். இந்நாடுகளில் இந்தியத் தொழிலாளிகளுடைய கூலி, பிரஜா உரிமைகள் முதலியவற்றைக் கவனித்துக் கொள்வதற்காக இந்திய ஏஜெண்டுகள் நியமிக்கப் பட்டிருக்கிருர்கள். இத்துறைகளில் ஏற்பட்ட கருத்து வேறு பாடுகள் சாதாரணமாகச் சமாதான முறையிலேயே தீர்க்கப் பட்டிருக்கின்றன.

தென்னுப்பிரிக்காவிற்கு ஆரம்ப நாட்களிற் சென்ற ஒப்பந்தக் கூலிகளைத் தவிரச் சமீப காலத்திலும் சிறு தொகையினரான இந்திய வியாபாரிகளும், தொழிலாளிகளும் மருத்துவம் முதலிய தொழில்களில் ஈடுபட்டவர்களும் தென்னுப்பிரிக்காவுக்கு மாத்திர மின்றிக் கிழக்காப்பிரிக்காவுக்கும் சென்று குடியேறினுர்கள். தென்னுப்பிரிக்காவில் இந்தியர்கள் மோசமாக நடத்தப்பட்டதால் இந்தியாவுக்கும் தென் ஆப்பிரிக்காவுக்கும் நீண்டநாளாகக் கடுமை யான கருத்து வேறுபாடு இருந்ததென்று ஏற்கெனவே கூறியிருக் கிறேம். முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர்க் கென்யாவிலும் இந்தியர்களுடைய நிலை மிக மோசமாயிற்று. மேலும், ஆஸ்தி ரேலியா, நியூசீலந்து, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று குடி யேறின சிறு தொகையினரான வியாபாரிகளுக்கும், தொழிலாளி களுக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து சென்று அந்நாடுகளிற் குடியேறிய மக்களுக்கு அளிக்கப்பட்ட பிரஜா உரிமைகள் அளிக்கப்படவில்லை.

இந்த விஷயம் சாம்ராஜ்ய மகாநாடுகளில் விவாதிக்கப்பட்ட தென்று நாம் சென்ற அதிகாரத்தில் கூறியிருக்கிறேம். 1918-ஆம் ஆண்டில் சாம்ராஜ்ய மகாநாட்டில் நிறைவேறிய ஒரு தீர்மானத் தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சேர்ந்த பொறுப்பாட்சி பெற்ற ஒவ்வொரு நாடும் வெளி நாடுகளிலிருந்து குடியேற எண்ணுப வர்களின் எண்ணிக்கையைத் தனக்கு இஷ்டமான முறை யில் குறைப்பதற்கும் பெருக்குவதற்கும் அதிகாரம் பெற்றது. 1921-ஆம் ஆண்டில் நிறைவேறிய ஒரு தீர்மானத்தால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மற்ற பகுதிகளில் குடியேறியிருந்த இந்தியர் களுக்கு அந்நாடுகளின் பிரஜா உரிமை அளிக்கப்படவேண்டு மென்ற கொள்கை ஒத்துக்கொள்ளப்பட்டது. ஆனுல், இந்தத் தீர்மானத்தைத் தென்னுப்பிரிக்கா ஒத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு இந்தியத் தலைவர்களுள் ஒருவரான திரு. சீனிவாச சாஸ்திரி தூது சென்றதாலும், அதற்கப்புறம் நடந்த பேச்சுவார்த்தைகளாலும் ஆஸ்திரேலியாவிலும், நியூசீலந்திலும்,

கனடாவிலும் குடியேறியிருந்த இந்தியர்களுடைய குறைகளில் பெரும்பான்மையானவை நீங்கிவிட்டன. ஆனால், இந்தியர்கள் இனிமேல் அந்நாடுகளுக்குச் சென்று குடியேறுவதற்கு உரிமை கிடையாது. இப்பொழுது இந்தியா அந்த நாடுகளுடன் மிகுந்த நட்பாக இருக்கிறது. 1943-ஆம் ஆண்டில் பஞ்சமேற்பட்ட பொழுது கனடாவும் ஆஸ்திரேலியாவும் இந்தியாவிற்கு அதிக உதவி செய்தன. அதை இந்தியர்கள் பெரிதும் போற்றினார்கள். அந்நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரம் பெருகிக்கொண்டு வருகிறது. இந்தியாவிலிருந்து ஒரு ஹைகமிஷனர் ஆஸ்திரேலியா விற்குச் சென்றிருக்கிறார். அதேமாதிரியாக ஆஸ்திரேலியாவி லிருந்து ஒரு ஹைகமிஷனர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

கென்யாவில் குடியேறி இருக்கும் இந்தியர்களுடைய நிலையில் 1924-ஆம் ஆண்டில் ஓரளவு முன்னேற்ற மேற்பட்டது. ஆனால், இந்தியர்கள் கென்யாவின் மேட்டு நிலங்களில் குடியேறக்கூடாது என்ற தடை இன்னும் நீங்கவில்லை. அந்நாட்டில் வாழும் இந்தி யர்களுடைய நிலை அடிக்கடி கருத்து வேறுபாட்டுக்குக் காரண மாயிருக்கிறது.

இந்த விஷயத்தில் தென்னாப்பிரிக்காவுக்கும் இந்தியாவிற்குந் தான் அதிகக் கருத்து வேறுபாடு இருக்கிறது. தென்னாப்பிரிக் காவில் சுமார் இரண்டு லட்சம் இந்தியர்களிருக்கிறார்கள். இப் பொழுது அங்கு வசிக்கும் இந்தியர்களில் எண்பது சத விகிதத் திற்கு மேற்பட்டவர்கள் தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்தவர் கள். தென்னாப்பிரிக்க இந்தியர்களுடைய நிலை நீண்டகாலமாக மோசமாகவே இருந்துவருகிறது. அவ்வப்போது தென்னாப்பிரிக்க அரசாங்கம் இயற்றும் சட்டங்கள் இந்தியர்களுடைய நிலையை இன்னும் மோசமாக்கிக்கொண்டே வருகின்றன. 1921-ஆம் ஆண் டில் நடந்த சாம்ராஜ்ய மகாநாட்டுக் கூட்டத்திற்குப் பிறகு நீண்ட பேச்சு வார்த்தைகள் நடந்தன. இந்தியாவிலிருந்து தென்னாப்பி ரிக்காவுக்குத் தூது கோஷ்டிகள் சென்றன. அங்கிருந்து இந்தியா வுக்குத் தூது கோஷ்டிகள் வந்தன. முடிவாக 1927-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கேப்டவுன் ஒப்பந்தத்தின்படி தென்னாப்பிரிக்காவில் நிலையாக வாழும் இந்தியர்கள் மேல்நாட்டு வாழ்க்கை முறைகளை அனுசரிக்க விரும்பினால் அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு வசதியளிக்கவேண்டுமென்று ஒத்துக்கொள்ளப்பட்டது. மேலும் தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வர விரும்பியவர்களுக்கு அதற்கான உதவியளிக்கப்பட வேண்டுமென்றும் ஒத்துக்கொள் ளப்பட்டது. இன்னும் பல முக்கியமான பிரச்சினைகளும் அந்த

ஒப்பந்தத்தால் தீர்க்கப்பட்டன. அதுவுமன்றி இந்திய ஏஜண்டு ஒருவரும் (இப்பொழுது ஹைகமிஷனர்.) தென்னுப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். அந்த ஒப்பந்தம் 1932-ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டது. அதன் பின்னர்ச் சில்லரை விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் 1943-ஆம் ஆண்டு வரையிலும் இரு நாடுகளும் சிநேகமாகவே இருந்தன. ஆனால் அந்த ஆண்டில் ஏற்பட்ட ஒரு சட்டத்தால் டர்பன் நகரத்திலும், நேட்டால் மாகாணத்திலும் இந்தியர்கள் நிலம் வாங்கும் உரிமை குறைக்கப்பட்டது. அதனால் இந்தியாவுக்கும் தென்னுப்பிரிக்காவுக்கு மிருந்த சினேகத் தொடர்பு முறிந்தது.

முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர்ப் பிரிட்டிஷ் பொது நல ஐக்கியத்தில் இந்தியாவின் தகுதி கொஞ்சங் கொஞ்சமாக உயர்ந்து கொண்டே சென்றது. 1917-ஆம் ஆண்டிலும் 1918-ஆம் ஆண்டிலும் நடந்த யுத்த மகாநாடுகளுக்கு இந்தியப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் இந்தியாவின் கொள்கைகளை அங்குத் தெளிவாக விளக்கிக் கூறினார்கள். எதிர் காலத்தில் நடக்கும் சாம்ராஜ்ய மகாநாடுகள் எல்லாவற்றிற்கும் இந்தியாவின் பிரதிநிதிகள் அழைக்கப்பட வேண்டுமென்று 1917-ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அத்தகைய மகாநாடுகளிலெல்லாம் இந்தியப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு அவற்றின் நடவடிக்கைகளில் சிறந்த பங்கு எடுத்துக்கொண்டார்கள். இந்தியர்களில் ஒருவரான சின்ஹா பிரபு சிறிது காலம் பிரிட்டிஷ் மந்திரிகளில் ஒருவராக இருந்தார். சாம்ராஜ்யப் பொருளாதார விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பல கமிட்டிகளில் இந்தியப் பிரதிநிதிகள் டொமினியன்களின் பிரதிநிதிகளோடு சரி சமானமான தகுதி வகித்து அவற்றில் கலந்துகொண்டார்கள்.

1930-ஆம் ஆண்டில் நடந்த கப்பற்படை மகாநாட்டிற்குப் பிறகு ஏற்பட்ட கப்பற்படை உடன்படிக்கையால் இந்தியாவும் பிரிட்டிஷ் பொதுநல ஐக்கியத்தின் ஒரு முக்கியமான உறுப்பு என்ற நிலை அங்கீகரிக்கப்பட்டது. 1932-ஆம் ஆண்டில் ஒட்டாவாவில் நடைபெற்ற சாம்ராஜ்யப் பொருளாதார மகாநாட்டிலும், அதன் பிறகு நடந்த மகாநாடுகளிலும் இந்தியப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு முக்கியமான பிரச்சினைகளைப்பற்றிச் சுயேச்சையாகவும் திறமையாகவும் வாதித்தார்கள். மேலும் இரண்டாம் உலக யுத்தத்தின்போது டொமினியன்களின் பிரதிநிதிகளைப் போலவே இந்தியப் பிரதிநிதிகளும் பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை

யிற் கலந்துகொண்டு முக்கிய விஷயங்களில் ஆலோசனை கூறினார்கள்.

அயல் நாடுகளுடன் ஏற்பட்டிருந்த தொடர்பிலும் முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர் இந்தியாவின் மதிப்பு மிக அதிகமாக உயர்ந்தது. யுத்தத்தின்போது நேசக் கட்சியினர் சார்பில் இந்தியா செய்த அருந்தொண்டு பலராலும் போற்றப்பட்டது. அதன்பயனாக இந்தியப்பிரதிநிதிகள் சமாதானப்பேச்சு வார்த்தைகளில் மற்ற நாட்டுப் பிரதிநிதிகளுடன் சமமாகக் கலந்து கொள்ளும் உரிமை பெற்றனர். வெர்சேல்ஸ் உடன்படிக்கைகளிலும், அகில தேச சங்கத்தின் ஒப்பந்தத்திலும் இந்தியப் பிரதிநிதிகள் மற்ற நாடுகளின் பிரதிநிதிகளைப்போலவே இந்தியாவின் சார்பில் கையெழுத்திட்டார்கள். தொடக்கத்திலிருந்தே இந்தியப் பிரதிநிதிகள் அகில தேச சங்கத்தின் நடவடிக்கைகளில் முக்கியமான பங்கு எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அந்தச் சங்கத்தின் கவுன்ஸிலில் இந்தியாவுக்கு இடமளிக்கப்படாததால் தேசீய உணர்ச்சி நிறைந்த இந்தியர்கள் சிறிது மனக்குறை அடைந்தார்கள். அகில தேச சங்கத்தின் அசம்பிளியிலும் அவ்வப்போது நியமிக்கப்பட்ட கமிஷன்களிலும் இந்தியப் பிரதிநிதிகள் இடம்பெற்று அருந்தொண்டு செய்தார்கள். 1929-ஆம் ஆண்டிலிருந்து அசம்பிளிக்கு இந்தியப் பிரதிநிதிகளாகச் சென்ற அங்கத்தினர்களுக்கு இந்தியரே தலைவராக இருக்கவேண்டுமென்ற கொள்கை அங்கீகரிக்கப்பட்டது. 1937-ஆம் ஆண்டில் நடந்த அசம்பிளிக் கூட்டத்திற்கு இந்தியப் பிரதிநிதியான ஆகாகான் தலைமை வகித்தார்.

அகில தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் இந்தியா இன்னும் அதிக முக்கியமான இடத்தைப் பெற்றது. இந்தியாவில் தொழிலாளர் பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்ததால் அகில தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் இந்தியாவுக்கு முக்கியமான பங்கு கொடுக்கவேண்டுமென்று மற்ற நாட்டினர் உணர்ந்தனர். இந்தியாவிலிருந்து அரசாங்கத்தின் சார்பிலும் முதலாளிகளின் சார்பிலும் தொழிலாளிகளின் சார்பிலும் பிரதிநிதிகள் ஜினீவாவுக்குச்சென்று அகில தேசத்தொழிலாளர் ஸ்தாபனத்தின் மகாநாடுகளிலும், கமிட்டிகளிலும் சிறந்த முறையில் பங்கெடுத்துக் கொண்டார்கள். 1927-ஆம் ஆண்டில் நடைபெற்ற வருஷாந்திர மகாநாட்டிற்கு ஓர் இந்தியர் தலைமை வகித்தார். உலகத்தின் முக்கியமான கைத்தொழில் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அகில தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தின் நிர்வாக சபையில் ஒரு நிரந்தரமான இடம் இந்தியா

வுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளும் தீர்மானங்களும் இந்தியாவில் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கும், சட்ட சபைகளில் தொழிலாளர்களின் நன்மைக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் முக்கிய காரணமா யிருந்தன.

பொருளாதாரப் பிரச்சினைகளையும் போக்குவரவு சாதனங்களையும்பற்றி ஆலோசிப்பதற்காகக் கூட்டப்பட்ட மகாநாடுகளில் மற்ற தேசங்களைப்போலவே இந்தியாவுக்கும் இடமளிக்கப்பட்டது. அதுபோலவே 1921-ஆம் ஆண்டில் வாஷிங்டனில் நடந்த கப்பற்படை மகாநாட்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யப் பிரதிநிதிகளோடு ஓர் இந்தியப் பிரதிநிதியும் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 1930-ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெற்ற கப்பற்படை மகாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியும் சென்றிருந்தார். அதுபோலவே ஜினீவாவில் நடந்த ஆயுதப் பரிகரண மகாநாட்டிலும் இந்தியாவுக்குத் தக்க பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது.

கலாசாரத் துறையிலும் இந்தியாவில் முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. லண்டனிலும் மற்றைய ஐரோப்பியத் தலை நகரங்களிலும் நவீன இந்திய ஓவியக் கண் காட்சிகள் பல நடந்தன. சிந்து சமவெளி நாகரிகத்தின் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டபின் இந்தியாவின் பழங்காலச் சின்னங்களில் உலக மக்கள் அதிக சிரத்தை காட்டத் தொடங்கினார்கள். கீழ்நாட்டு இலக்கியக் கலாசார மகாநாடுகளில் இந்திய அறிஞர்கள் கலந்துகொண்டு நல்ல தொண்டாற்றி இருக்கிறார்கள். கல்கத்தாவில் நடந்த ஒரு விஞ்ஞான அறிஞர்கள் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதிநிதிகளும் கலந்துகொண்டார்கள். 1943-ஆம் ஆண்டில் லண்டன் ராயல் சொஸைடியின் கூட்டமொன்று இந்தியாவில் நடைபெற்றது. தாகூர், இக்பால் போன்ற கவிஞர்கள் உலகமெல்லாம் போற்றும் புகழ்பெற்றனர்.

பல தேச மகாநாடுகளிலும் உலக மகாநாடுகளிலும் இந்தியா பங்கு பெற்றதால் அந்த மகாநாடுகளிற் கலந்துகொண்ட பிரதிநிதிகள் மாத்திர மன்றிப் பொதுமக்களும் வெளி நாட்டு விஷயங்களில் அறிவும், அனுபவமும் பெற்றார்கள். வெளி நாடுகளைப்பற்றி இந்தியர்களுக்கிருந்த அறியாமையும், தப்பபிப்பிராயங்களும் மறையத் தொடங்கின. அதுபோலவே இந்தியப் பிரச்சினைகளும், இந்தியக் கலாசாரமும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மக்களுடைய கவனத்தைக் கவரத் தொடங்கின. இவ்வாறு வெளியுலகத்திற்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.



INDIA
Provinces and States


INDIA
Principal Railways
and
Important Industrial Centres
English Miles
0 100 200 300 400
Lesser railway lines not shown
Peshawar
Srinagar
Lahore
Amritsar
Lyallpur
Quetta
Simla
Delhi
Lucknow
Darjeeling
Agra
Jodhpur
Ajmer
Cawnpore
Gwalior
Patna
Karachi
Allahabad
Benares
To Dibrugarh
Ahmadabad
Dhanbad
Dacca
Port Okha
Indore
Baroda
Calcutta
Tatanagar (Jamshedpur)
Chittagong
Surat
Nagpur
Cuttack
Bombay
Poona
Sholapur
Hyderabad
Vizagapatam
Mormugao
Kolar
Madras
Mangalore
Bangalore
Mysore
Coimbatore
Madura
Cochin
Tuticorin
Colombo

அதிகாரம்—52

அரசியலமைப்புப் பிரச்சினைகள்-முதற்பகுதி

முதல் உலக யுத்தத்திற்கும் இரண்டாம் உலக யுத்தத்திற்கும் இடையில் இந்தியாவின் வெளிநாட்டுத் தொடர்புகளில் ஏற்பட்ட பெரிய முன்னேற்றத்தைப்பற்றிச் சென்ற அதிகாரத்திற் கூறினோம். இந்தத் துறையில் இந்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் அதிகமாவதற்கு 1919-ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்திய அரசாங்கச்சட்டம் எந்தவகையிலும் காரணமன்று என்பதை நாம் நன்ருக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். அந்தச் சட்டம் நிறைவேறிய பிறகும் கவர்னர் ஜெனரல் இந்தியச் சட்ட சபைக்கு எவ்விதத்திலும் பொறுப்பாளியாக இல்லையென்றும், இந்தியா மந்திரியின் மூலமாகப் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குத் தான் பொறுப்பாளியாக இருந்தான் என்றும் நாம் அறிவோம். எனினும், நடைமுறையில் இந்திய அரசாங்கம் உள்நாட்டு நிர்வாகத்திலும் வெளிநாட்டுத் தொடர்பிலும் ஓரளவு சுயேச்சையாகக் காரியங்களைச்செய்ய அனுமதிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட காரியங்கள் பிரிட்டிஷாரின் முக்கியமான கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் முரண்பாடாக இருக்கக்கூடாது. இந்திய அரசாங்கமும் பிரிட்டிஷ் அரசாங்கமும் சேர்ந்தே சாம்ராஜ்ய மகாநாடுகளுக்கும் மற்றைய பல நாட்டுக் கூட்டங்களுக்கும் இந்தியப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஆலோசனை கூறி அனுப்பவேண்டும் என்ற முறை பழக்கத்திற்கு வந்தது. வேறு சில விஷயங்களில் இந்திய அரசாங்கத்தின்மீது இந்தியா மந்திரிக்கிருந்த பிடி இன்னும் அதிகமாகத் தளர்ந்தது. உதாரணமாக, டொமினியன்களுடன் - குறிப்பாகத் தென் ஆப்பிரிக்காவுடன - இந்திய அரசாங்கம் நேரடியான தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. வரி விஷயத்தில் ஏற்பட்ட ஒரு பழக்கம் இன்னும் முக்கியமானது. ஏற்றுமதி இறக்குமதி வரிகளைப் பொறுத்த விஷயத்தில் இந்திய அரசாங்கமும் சட்ட சபையும் ஒற்றுமையான முடிவுக்கு வந்தால் இந்தியா மந்திரியும் பிரிட்டிஷ் பார்லிமெண்டும் அந்த விஷயத்தில் தலையிடுவதில்லையென்ற பழக்கம் ஏற்பட்டது. இந்தப் பழக்கத்திற்கு "வரிச் சம்பிரதாயம்" என்று பெயர் வழங்கியது. வெளிநாட்டுப் பொருள்களின்மீது இறக்குமதி வரிவிதிக்கப்பட்டபோது லங்காஷயர் மில் முதலாளிகளின் வற்புறுத்தலின் காரணமாக இந்திய மில் துணிகளின்மீது விற்பனைவரி விதிக்கப்பட்டது என்று 47-ஆம் அதிகாரத்திற்

கூறினோம். இந்த "சரிக்கட்டும் வரியால்" இந்தியர்கள் மிகுந்த அதிருப்தியடைந்தார்கள் என்றும் கூறினோம். ஆனால் மேலே கூறிய வரிச் சம்பிரதாயத்தால் கிடைத்த அதிகாரத்தைப் பயன் படுத்திக்கொண்டு இந்திய அரசாங்கம் சரிக்கட்டும் வரிகளை அழித்ததோடு, தகுதியுடைய கைத்தொழில்களுக்கும் காப்பளிக்கும் வகையில் இறக்குமதி வரிகளையும் விதிக்க முடிந்தது. மேலும் 1932-இல் ஒட்டாவா ஒப்பந்தமும், 1934-ஆம் ஆண்டில் ஜப்பானுடன் வியாபார உடன்படிக்கையும் செய்துகொள்ளுவதற்கு மேற்கூறிய சம்பிரதாயமே இந்திய அரசாங்கத்திற்கு உதவியாயிருந்தது. இந்த விஷயங்களெல்லாம் பின்னர் விளக்கப்படும்.

1919-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி ஏற்பட்ட அரசியல் திட்டம் எவ்வாறு நடைபெற்றது என்ற விஷயத்தை இந்த அதிகாரத்திற் படிப்போம். 1918-ஆம் ஆண்டின் முடிவில் இந்திய மக்களின் பொருளாதார நிலை மிக மோசமாயிருந்தது என்றும், அதனால் மக்கள் பல துன்பங்களுக்குள்ளானார்கள் என்றும் முன்னரே கூறியிருக்கிறோம். பருவமழை மறுத்ததால் இந்தியாவின் பல பகுதிகளில் பஞ்சம் ஏற்படும் என்று மக்கள் அஞ்சினார்கள். ஆனால் முன்னர் ஏற்பட்ட பஞ்சங்களின்போது அரசாங்கம் பெற்றிருந்த அனுபவம் பஞ்ச நிவாரண முறைகளைச் சரியான காலத்தில் கையாளுவதற்கு உதவியாயிருந்தது. அதனால் பஞ்சம் எதிர்பார்த்த அளவு கடுமையாக இல்லை. விலைவாசிகள் மிக உயர்வாக இருந்ததால் மாதச் சம்பளத்தையே நம்பி வாழ்ந்த மக்களின் நிலை மிகக் கஷ்டமாயிற்று. மேலும் நகரங்களில் வேலைசெய்த மக்களுடைய கூலியும் விலைவாசிகள் உயர்ந்த அளவு உயராததால் அவர்களும் துன்பமடைந்தார்கள். இவ்வாறு யுத்தத்திற்குப்பின் சாதாரணமாக ஏற்படக்கூடிய கஷ்டம் இந்தியர்களில் எல்லா வகுப்பினரையும் பற்றிக்கொண்டது.

1919-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தத்தில் போதுமான முன்னேற்றம் இல்லை என்று அரசியல் வாதிகளிற் பலர் கருதினார்கள். காங்கிரஸ் மகாசபையில் தீவிர இடதுசாரிகள் ஆதிக்கம் பெற்றனர். மோகன்தாஸ் கரம்சந்து காந்தி காங்கிரஸ்காரர்களின் தலைவரானார். அவர் குஜராத்தைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர். அவர் பல ஆண்டுகள் தென் ஆப்பிரிக்காவில் வசித்து வந்தவர். அங்கு வசித்த காலத்தில் அங்கிருந்த இந்தியர்களின் நிலையை உயர்த்துவதற்காக அரும்பாடு பட்டார். முதல் உலக யுத்தத்தின்போது இந்தியர்கள் நேசக்கட்சியினருக்கு உதவி செய்யவேண்டுமென்று வற்புறுத்தினார். யுத்தம் முடிந்த தருணத்

தில் காந்தி இந்தியாவுக்கு வந்தார். அவருடைய ஒப்பற்ற நாட்டுப் பற்றும், பொதுத் தொண்டில் அவர் காட்டிய உண்மையான ஆர்வமும் அவருடைய எளிய வாழ்க்கையும் இந்தியமக்கள் அனைவருடைய உள்ளங்களையும் கவர்ந்துவிட்டன. காங்கிரஸ்காரர்களோவெனில் அவரைத் தங்கள் தனித் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.

இந்தச் சூழ்நிலையில் ரௌலட் கமிட்டியின் ஆலோசனைகளை நிறைவேற்றுவதற்கான மசோதாக்கள் 1919-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீர்திருந்தாத பழைய சட்டசபையில் கொண்டு வரப்பட்டன. அந்த மசோதாக்கள் மக்களுடைய உரிமைகளைப் பெரிதும் பாதிக்கும் என்றும், முன்னேற்றமான அரசியல் சீர் திருத்தத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ள அந்தச் சமயத்தில் அந்த மசோதாக்களைக் கொண்டுவருவது பொருத்தமற்றது என்றும் எல்லா அரசியல் வாதிகளும் கூறினார்கள். இதற்குள் காந்திஜி அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட ஒத்துழையா இயக்கத்தின் தத்துவத்தை மக்களுக்கு விளக்கிக் கூறியிருந்தார். ரௌலட் மசோதாக்கள் சட்டமாக்கப் பட்டு அமுலுக்கு வந்தால் அவற்றைச் சாத்வீக முறையில் எதிர்க்க வேண்டுமென்று காந்திஜியும் அவருடைய சகாக்களும் நாடெங்கும் பிரசாரம் செய்தார்கள். ரௌலட் சட்டம் 1919-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நிறைவேறியது. ஆனால் அந்தச் சட்டம் அமுலுக்கு வருமுன்னரே முதலில் டில்லியிலும், பின்னர்ப் பஞ்சாபிலும் வேறு சில இடங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. அதே சமயத்தில் சென்ற அதிகாரத்திற் கூறப்பட்ட ஆப்கானியப் படையெழுச்சியால் எல்லைப்புறத்தில் தொல்லை யேற்பட்டது. பஞ்சாபின் சில ஜில்லாக்களில் சிவில் நிர்வாகம் அழிந்ததால் அதற்குப் பதிலாக இராணுவ ஆட்சி ஏற்பட்டது. இராணுவ ஆட்சியின் நடவடிக்கைகளால் மக்கள் மிகுந்த அதிருப்தி யடைந்தார்கள். அமிர்தசரஸ் நகருக்கருகில் ஜலியன்வாலா என்ற இடத்திற் கூடியிருந்த மக்கள் சுட்டு வீழ்த்தப்பட்டபோது இந்தியர்களின் இரத்தம் கொதித்தது. நாளடைவில் பஞ்சாபில் ராணுவ ஆட்சிக்குப்பதிலாக ஸிவில் நிர்வாகம் ஏற்பட்டது. இராணுவ ஆட்சியின் நடவடிக்கைகளை விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு கமிட்டி அவ்வாட்சியின் நடவடிக்கைகளிற் சிலவற்றைக் கண்டித்தது. ஆனால் "பஞ்சாப் படுகொலை"யை மக்கள் மறக்கவே யில்லை.

மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டத்தைப்பற்றி இந்திய அரசியல் வாதிகளுக்குள்ளிருந்த கருத்து வேறுபாடு நாளடைவில் அதிகமாயிற்று. 1919-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் இந்திய அரசியல் சீர்திருத்த மசோதா பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டது. டிசம்பர் மாதத்தில் அது சட்டமாயிற்று. அதற்குள்ளாக இந்திய இடதுசாரிக் கட்சியினருள் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த பிளவு அதிகமாயிற்று. அவர்களுள் தீவிரவாதிகளைத் தவிர மற்றவர்கள் மிதவாதிகள் என்று பெயர் பெற்றார்கள். பிற்காலத்தில் அவர்கள் லிபரல் கட்சியினரென்றழைக்கப்பட்டனர். அந்தக் கட்சியிலிருந்த அங்கத்தினர்களில் மிகப் பெரும்பான்மையோர் அதற்கு முன் முப்பதாண்டுக் காலத்தில் இந்திய அரசியல் துறையிலும் சட்ட சபைகளிலும் அனுபவம் பெற்றவர்கள்.

மிதவாதிகள் இந்தியா சுயராஜ்யமடைய வேண்டுமென்று விரும்பினார்கள். தீவிர வாதிகளும் அதே நோக்கத்தைத்தான் கொண்டிருந்தார்கள். எனினும், மிதவாதிகள் பிரிட்டிஷ் பொது நல ஐக்கியத்திலிருந்து இந்தியா பிரிந்து விடுவதை விரும்பவில்லை. 1919-ஆம் ஆண்டில் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதன்மூலம் மற்ற டொமினியன்களின் நிலையை இந்தியாவும் விரைவில் அடையுமாறு செய்யவேண்டுமென்று மிதவாதிகள் விரும்பினார்கள். காங்கிரஸ் மகாசபையிலிருந்த அங்கத்தினர்களெல்லாம் தீவிரவாதிகள், அவர்கள் அஹிம்சையை அடிப்படையாகக்கொண்ட ஒத்துழையா இயக்கத்தால் ஒரு வருஷத்தில் இந்தியாவுக்குப் பூரண சுயராஜ்யம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். அவர்கள் புதிய சட்ட சபைகளைப் பகிஷ்கரித்தார்கள். அதனால் 1921-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய சட்ட சபைகளில் மிகப் பெரும்பான்மையோர் மிதவாதிகளாகவே யிருந்தார்கள். அவர்களுள் இந்துக்கள் மாத்திரமன்றி முஸ்லிம்களும் இருந்தார்கள்.

இந்த நெருக்கடியான சமயத்தில் துருக்கியில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இந்திய முஸ்லிம்களின். கவனத்தை அதிகமாகக் கவரத் தொடங்கின. முதல் உலக யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின் அம்சங்கள் சில துருக்கிக்குப் பாதகமாக இருந்தன. அதனால், அதிருப்தியும் சீற்றமும் அடைந்த இந்திய முஸ்லிம்களிற் பலர் துருக்கிக்கு உதவி செய்யத் துணிந்தனர். வட இந்தியாவில் பல முஸ்லிம்கள் இந்தியாவைவிட்டு ஆப்கானிஸ்தானத்திற்குச் செல்வதற்காக ஓர் இயக்கத்தைத் தொடங்கினார்கள். அப்படிச் சென்றவர்கள் பல துன்பங்களுக்கு

இலக்காயினர். முடிவில் மாண்டவர் போக மீதியிருந்தவர்கள் இந்தியாவுக்கு மீண்டார்கள். பஞ்சாபில் சீக்கியர்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அதே சமயத்தில் ஆர்வமுடைய முஸ்லிம்கள் காந்திஜியுடனும் காங்கிரஸ் கட்சியுடனும் சேர்ந்து அரசாங்கத்தை எதிர்த்தார்கள். காங்கிரஸ் கட்சியும் கிலாபத் கட்சியும் ஒன்றாகச்சேர்ந்து சாத்துவீகச் சட்ட மறுப்பியக்கத்தைத் தொடங்கின. காந்திஜியின் பிரசாரத்திற்குச் செவி சாய்த்த பொது மக்கள் சாத்வீகச் சட்ட மறுப்பிற்கேற்ற பயிற்சியும் கட்டுப்பாடும் இன்மையால் ஆங்காங்கு ஹிம்சை முறையில் இறங்கினார்கள். மலையாளக் கடற்கரையில் வாழ்ந்த மாப்பிள்ளைகள் என்னும் தீவிர முஸ்லிம்கள் 1921-ஆம் ஆண்டில் பகிரங்கமாகப் புரட்சி செய்து, அண்மையிலிருந்த இந்துக்களைத் துன்புறுத்தினார்கள். முடிவில் தீவிர இந்துக்களுக்கும் தீவிர முஸ்லிம்களுக்கும் இடையில் நிலையான ஒற்றுமை இருக்க முடியாதென்று இந்துக்களில் பெரும்பான்மையோர் எண்ணினர். மேலும் துருக்கியர்கள் தங்கள் நாட்டின் முன்னேற்றத்திலேயே கருத்துடையவர்களாயிருந்தார்களேயன்றி இஸ்லாம் மதத்தின் உயர்வைப் பற்றிக் கவலைப்படவில்லையென்பதை இந்திய முஸ்லிம்கள் உணர்ந்தார்கள். இந்த நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருந்த சமயத்தில் இந்திய அரசாங்கமும் சட்டசபையும் நாட்டில் அமைதியை ஏற்படுத்திச் சட்டத்தின் ஆட்சியைக் காப்பதில் ஒரேவிதமான கருத்துடையனவாயிருந்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரஸ் கட்சிக்கும் தீவிர முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருந்த கூட்டுறவு மறைந்தது. ஆகவே, 1921-ஆம் ஆண்டில் ஆரம்பித்த ஒத்துழையா இயக்கம் அழிந்தது. 1922-ஆம் ஆண்டின் வசந்தகாலத்தில் காந்திஜி தண்டிக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். ஆனால் அதை எதிர்க்கும் வகையில் எந்தவிதமான கலகமும் நாட்டில் ஏற்படவில்லை. ஓராண்டுக்குப் பின்னர் உடல் நலக் குறைவு காரணமாக காந்திஜி விடுதலை அடைந்தார்.

இதற்குள்ளாகப் புதிய சட்ட சபைகள் வேலை தொடங்கிவிட்டன. 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி அவைகளுக்குப் புதிய அதிகாரங்களும், புதிய பொறுப்பும் கொடுக்கப்பட்டிருந்தன. மத்திய சட்ட சபையும் மாகாணச் சட்ட சபைகளும் தங்களுடைய கடமைகளை ஒழுங்காகவும் கண்ணியமாகவும் செய்தன. மத்தியச் சட்டசபையில் உத்தியோகஸ்தர்களும்மற்ற அங்கத்தினர்களும் பல முக்கிய சீர்திருத்தங்களைச் செய்வதில் மிகவும் ஒத்துழைத்தார்கள். 1908-ஆம் ஆண்டிலும், 1910-ஆம் ஆண்டிலும்

ஏற்பட்டிருந்த பத்திரிகைச் சட்டங்களில் அதிக மாறுதல்கள் செய்யப்பட்டன. 1880-க்கும் 1890-க்கும் இடையில் இல்பர்ட் மசோதாவிற்கு எதிராக ஏற்பட்ட பெருங்கிளர்ச்சிக்குக் காரணமாயிருந்த இன வேறுபாட்டுக் கொள்கையைப்பற்றி ஒரு திருப்திகரமானமுடிவு ஏற்பட்டது. புதியதொரு தொழிற் சட்டத்தால் தொழிலாளிகளின் நிலையில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. மேலும் வெளி நாடுகளில் குடியேறி யிருந்த இந்தியர்களுடைய விஷயத்தையும் சட்டசபை கவனித்தது. இராணுவத்தின் கமிஷன் பதவிகளை இந்தியர்களுக்கு வழங்கும் பழக்கம் ஆரம்பமாயிற்று. வரிக்கமிஷன் ஒன்றின் ஆலோசனைப்படி தகுதியுள்ள கைத்தொழிலுக்குக் காப்பளிக்க வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. அரசாங்க வரவு செலவுத் திட்டத்தை மத்திய சட்டசபை அங்கத்தினர்கள் மிகுந்த சிரத்தையுடன் பரிசீலனை செய்யத் தொடங்கினார்கள்.

இரண்டு விஷயங்களில் அரசாங்கத்திற்கும் சட்ட சபைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அயர்லாந்திலும் மத்தியக் கிழக்கு நாடுகளிலும் ஏற்பட்ட அரசியல் முன்னேற்றத்தை உத்தியோகஸ்தரல்லாத சட்டசபை அங்கத்தினர்கள் அக்கரையுடன் கவனித்து வந்தார்கள். இடதுசாரிகளின் ஆதரவை அடைய விரும்பிய அந்த அங்கத்தினர்கள் இந்திய அரசியல் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள். ஆனால், அந்த விஷயத்தில் அரசாங்கம் தீவிரமாக இருந்ததாகத் தெரியவில்லை. புதியவரிகளை விதிக்கும் விஷயத்தில் அரசாங்கத்திற்கும் சட்டசபைக்கும் மிகுந்த கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் வரவைவிடச் செலவு அதிகரித்துக்கொண்டே சென்றது. அதன் காரணத்தைப் பின்னர் ஓர் அதிகாரத்தில் விளக்குவோம். வரவையும் செலவையும் சரிக்கட்டும் நோக்கத்துடன் அரசாங்கம் சில புதிய திட்டங்களைக் கொண்டுவந்தது. அவற்றுள் உப்பு வரியை இருமடங்காக உயர்த்துவதும் ஒன்று. உப்பு வரியின் வரலாறு மிக நீண்டது. விவசாயிகளுக்கும் அவர்களுடைய கால் நடைகளுக்கும் உப்பு மிக இன்றியமையாத பொருள் என்ற காரணத்தால் உப்பு வரியை உயர்த்துவதற்கு 1922-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் கொண்டு வந்த பிரரேபணையை அரசாங்கம் வாபஸ் வாங்கிக்கொண்டது. ஆனால் அடுத்த ஆண்டு மறுபடியும் அதே பிரரேபணையை அரசாங்கம் கொண்டுவந்தபோது அசம்பிளியின் மிகப் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் அதை எதிர்த்தார்கள், ஆனால் ராஜப்

பிரதிநிதி தம்முடைய தனிப்பட்ட அதிகாரத்தை உபயோகப் படுத்தி அதைச் சட்டமாக்கிவிட்டார்.

மாகாணங்களில் மாற்றப்பட்ட இலாகாக்களை நிர்வகிப்பதற்காகக் கவர்னர்கள் மந்திரிகளை நியமித்தார்கள். மந்திரிகள் சட்ட சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள். ஒதுக்கப் பட்ட இலாக்காக்களை நிர்வகிப்பதற்காக நிர்வாகசபை அமைக் கப்பட்டது. அதன் அங்கத்தினர்களில் சிலர் உத்தியோகஸ்தர் அல்லாத இந்தியர்களாக இருந்தார்கள். அவர்கள் மிராசுதார்க ளாகவும், வழக்கறிஞர்களாகவும், தைத்தொழில் தலைவர்களாக வும் இருந்தார்கள். அரசியல் துறையில் அவர்கள் வலதுசாரிகள். மாகாணச் சட்டசபைகளில் பல முக்கியமான சட்டங்கள் நிறை வேறின. கல்கத்தா முனிசிபல் சட்டம் (வங்காளம்) ஸ்தல ஸதா பனச் சட்டம் (பம்பாய்), கைத்தொழிலுக்கு அரசாங்க உதவிச் சட்டம் (சென்னை), அயோத்தி நில உரிமைச் சட்டம் முதலிய வையும், கிராம நிர்வாகத்திற்காகவும் ஆரம்பக் கல்விக்காகவும் ஏற்பட்ட சில சட்டங்களும் குறிப்பிடத்தக்கவை.

நிர்வாகத்திற்கான சாதாரணச் செலவுகள்போக அதிகப்பணம் மிஞ்சாததால் மாகாண அரசாங்கங்களின் பொருளாதார நிலையில் கஷ்டம் ஏற்பட்டது. அதனால், மக்களின் முன்னேற்றத்திற்கான மாற்றப்பட்ட இலாக்காக்களின் செலவுக்குத் தேவையான பணம் கிடைக்கவில்லை. வரவு செலவு இலாக்கா ஒதுக்கப்பட்ட இலாக் காவாக இருந்தபோதிலும் தேவையான பணத்தைச் சேர்ப்பதற்கு ஏற்ற முறையில் வரிகளை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை மந்திரிகள் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற விரும்பவில்லை. மந்தி ரிகள் பெரும்பாலும் மிதவாதிகளாக இருந்தார்கள். வரி உயர் வைப்பற்றி அவர்கள் ஆலோசனை கூறினால் சட்டசபைகளுக்கு வெளியிலிருந்த தீவிர வாதிகளுக்குச் சாதகமான நிலை ஏற்பட்டு விடுமென்று அவர்கள் அஞ்சினார்கள். சென்னையில் பிராமணரல் லாதவர்கள் "நீதிக்கட்சி" என்ற ஒரு தனிக்கட்சியை ஏற்படுத்தி யிருந்தார்கள். அந்தக் கட்சியினரே சட்டசபையில் பெரும்பான் மைக் கட்சியினராக இருந்தார்கள். சென்னையில் அப்போது கவர் னராயிருந்த வில்லிங்டன் பிரபு அந்தக் கட்சியினரையே மந்திரிக ளாக நியமித்தார். அதனால், சென்னையில் கட்சி யரசாங்கம் ஏற் பட்டது. அதாவது, சட்ட சபையிலிருந்த ஒரு கட்சியினர் அர சாங்கத்தை நடத்துபவர்களாகவும், இன்னொரு கட்சியினர் அதை எதிர்ப்பவர்களாகவும் இருந்தார்கள். மற்ற மாகாணங்களில் இந்த

நிலை இல்லை. ஆகவே மந்திரிகள் அடிக்கடி உத்தியோகஸ்தரான அங்கத்தினர்களின் உதவியை நாடவேண்டியதாயிற்று.

இந்தச் சமயத்தில் காங்கிரஸ் மகாசபையின் சில முக்கிய தலைவர்களுடைய மனப்பான்மையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. நாட்டின் முன்னேற்றத்திற்கான வேலையில் ஈடுபட்ட சட்ட சபைகளை அறவே பகிஷ்கரிப்பதால் படித்த மக்களுடைய அனுதாபத்தைக் காங்கிரஸ் நாளடைவில் இழந்துவிடும் என்று அவர்கள் எண்ணினார்கள். ஆகவே சட்ட சபைகளில் நுழைந்து புதிய அரசியல் திட்டத்தை அழித்துவிடும் நோக்கத்துடன் அவர்கள் 1923-ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலிற் கலந்துகொள்ள முடிவு செய்தார்கள். உப்பு வரியைக் குறைப்பதற்கும், அரசியல் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கும் செய்த முயற்சிகளில் அசம்பிளி அங்கத்தினர்கள் அடைந்த தோல்விகளை மக்களுக்கு எடுத்துக்கூறிக் காங்கிரஸ்காரர்கள் தேர்தல் பிரசாரம் செய்தார்கள். மேலும் கல்வியைப் பரப்புதல், சுகாதார வசதிகளைச் செய்தல், மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்தல் ஆகிய ஆக்கவேலைகளில் மாகாண மந்திரிகளுக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரம் மிகக் குறைவானது என்றும் அவர்கள் நாடெங்கும் பிரசாரம் செய்தார்கள். அதுவுமன்றித் தேர்தலுக்கு நின்ற காங்கிரஸ்காரர்களிற் சிலர் சிறைக்குச் சென்றும் வேறுவகையிலும் தேசபக்தி காரணமாகத் தியாகம் செய்திருந்தார்களாதலால் ஓட்டர்களுடைய அனுதாபத்தைப் பெற்றார்கள். இவ்வாறு பொது மக்களின் ஆதரவுபெற்றுப் பல காங்கிரஸ்காரர்கள் சட்டசபை அங்கத்தினரானார்கள். 1926-ஆம் ஆண்டில் நடந்த தேர்தலுக்குப் பின்னர் அவர்களுடைய தொகை இன்னும் அதிகமாயிற்று.

அரசாங்கத்தை எதிர்ப்பதன் மூலம் 1919-ஆம் ஆண்டின் அரசியல் திட்டத்தை அழிக்கும் நோக்கத்துடன் காங்கிரஸ்காரர்கள் சட்ட சபைகளில் நுழைந்தார்களெனினும், எல்லா மாகாணங்களிலும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. இரண்டு மாகாணங்களைத் தவிர மற்ற மாகாணங்களில் எல்லாம் பழைய முறையிலேயே சட்டசபை வேலைகள் நடந்தன. வங்காளத்திலும் மத்திய மாகாணத்திலும் சில சமயங்களில் மந்திரிகள் சட்டசபைகளின் ஆதரவை இழந்தார்களாதலால் அவர்கள் தங்கள் பதவிகளிலிருந்து விலக நேரிட்டது. அதனால், கவர்னர்கள் நிர்வாகத்தை எடுத்து நடத்தவேண்டியதாயிற்று. மத்திய சட்டசபையிலும் மாகாணச் சட்டசபைகளிலும் முன்னேற்றத்திற்கான சட்டங்கள்

செய்யப்பட்டன. அந்தச் சட்டங்களிற் பலவற்றைக் காங்கிரஸ் காரர்களும் ஆதரித்தார்கள். ஆனால் மத்திய சட்டசபையின் ஒரு பிரிவாகிய அசெம்பிளியில் முன்னர் இருந்த ஒத்துழைப்பும் சிநேக மனப்பான்மையும் மறைந்துபோய்விட்டன. காங்கிரஸ் அங்கத்தினர்கள் நுழைந்தபிறகு, அரசியல் திட்டத்தில் அதிகமான சீர்திருத்தங்களை உடனடியாகச் செய்யவேண்டும் என்ற விஷயத்தை விவாதிப்பதிலேயே அசெம்பிளியின் பெரும்பான்மையான காலம் செலவழிந்தது. ஆனால் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தியாவுக்குக் கட்டாயமாக டொமினியன் அந்தஸ்து அளிக்கவேண்டுமென்று 1917-ஆம் ஆண்டின் அறிக்கை கூறவில்லையென்றும், 1919-ஆம் ஆண்டுச் சீர்திருத்தச் சட்டப்படி பத்தாண்டுகள் கழித்து ராயல் கமிஷன் விசாரணை செய்து அறிக்கை வெளியிடும் வரையில் அரசியல் திட்டத்தில் எந்தவிதமான புதிய மாறுதலும் செய்ய முடியாது என்றும் அரசாங்கம் வாதித்தது.

இந்தக்காலத்தில் நாட்டில் நடந்த கிளர்ச்சி எல்லாப் பகுதிகளிலும் நடக்காமல் சில குறிப்பிட்ட இடங்களில்தான் நடந்தது என்று கூறலாம். வங்காளத்தில் பயங்கர இயக்கத்தின் வாயிலாய்ச் சதியாலோசனைகள் நடந்துகொண்டேயிருந்தன. பஞ்சாபிலும் சீக்கியர்கள் கலகம் செய்துகொண்டுதான் இருந்தார்கள். பம்பாயிலும் மற்ற இடங்களிலும் இருந்த தொழிற்சாலைகளில் வேலை செய்த தொழிலாளிகளும் இப்போது அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள். ஆனால் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் வளர்ந்துகொண்டே சென்ற பகைமைதான் அரசாங்கத்திற்கு அதிகக் கவலையை உண்டுபண்ணியது. அந்தப் பகைமையின் காரணமாக நாட்டின் பலவேறு பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. ஆனால் அடிக்கடி தோன்றிய இந்த வகுப்புக் கலகங்களை இருவகுப்பிலுமிருந்த பொதுமக்கள் ஆதரித்தார்கள் என்று கூற முடியாது. ஆங்காங்குத் தோன்றிய சிறிய மனஸ்தாபங்கள் கிளர்ச்சிக்காரர்களாலும் மதவெறியர்களாலும் பெரிதாக்கப்பட்டுக் கலகத்திற்குக் காரணமாயின என்றும், அந்தக் கலகங்களுக்காக இருவகுப்பினரிடையிலுமிருந்த நல்ல மனிதர்கள் மிக வருந்தினார்களென்றும் கூறலாம். சட்டசபைகளில் இந்துக்களும் முஸ்லிம்களும் பல சமயங்களில் ஒற்றுமையாக உழைத்தார்கள் என்பதும், அரசியல் துறையில் இன்னும் அதிகமான முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்ற விஷயத்தில் இருவகுப்பினரும் ஒரேவித அபிப்பிராயம் உடையவர்களாக

இருந்தார்கள் என்பதும் உறுதியாகக் கூறக்கூடிய விஷயம். ஆனால், இந்தியா முழுப் பொறுப்பாட்சி பெறுவதற்கு வெகுநாள் ஆகாது என்று இருவகுப்பினரும் உணர்ந்தார்களாதலால் அத்தகைய புதிய அரசியல் திட்டத்தில் தங்கள் தங்கள் பங்கைப் பெறுவதற்கு மிகவும் விழிப்பாக இருக்கவேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். இந்தச் சமயத்தில் ஸிவில் ஸர்விஸின் உயர்பதவிகளுக்கு அளிக்கப்பட்ட சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்றும் அந்தப் பதவிகள் பலவற்றிற்கு நாளுக்கு நாள் அதிகமான இந்தியர்களை நியமிக்கவேண்டுமென்றும் அரசாங்கம் முடிவுசெய்தது. கல்வி, பொது மராமத்து ஆகிய இலாக்காக்களுக்குச் சாதாரணமாக இந்தியர்களையே உத்தியோகஸ்தர்களாக நியமிக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. முஸ்லிம்களும் வேறு சில சிறுபான்மை வகுப்பினரும் தங்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதத்தில் தங்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்று வாதாடினார்கள். அந்தக் கொள்கைப்படி உத்தியோகங்களைப் பங்குபோட்டுக் கொடுப்பது எளிதான காரியமாக இல்லை. அதனால் வகுப்பு வாதம் இன்னும் பலம் பெற்றது.

1924-ஆம் ஆண்டில் முஸ்லிம் லீகு மறுபடியும் வேலை செய்யத் தொடங்கியது. முஸ்லிம் லீகின் கொள்கைகள் பின்வருமாறு: இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். பார்லிமெண்டு ஆட்சி முறை நிறுவப்படவேண்டும். மாகாணங்களுக்குப் பூரணமான சுய ஆட்சி அளிக்கப்படவேண்டும். இந்தியா முழுவதற்கும் பொதுவான விஷயங்களை மாத்திரம் மத்திய அரசாங்கம் கவனிக்கவேண்டும். முஸ்லிம்களுக்குத் தனித்தொகுதிகள் வேண்டும். மாகாணங்களுக்கு முழுச் சுய ஆட்சி அளிக்கப்பட்டால் தாங்கள் பெரும்பான்மையாக உள்ள பஞ்சாப் மாகாணத்திலும், வங்காள மாகாணத்திலும் முஸ்லிம்கள் தங்களுக்கிஷ்டமான திட்டங்களைக் கொண்டுவர முடியும் என்று எண்ணினார்கள். இந்து முஸ்லிம் ஒற்றுமையை ஒரு முக்கியமான கொள்கையாகக் கொண்டிருந்த காங்கிரஸ் மகாசபை முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக இந்துக்களின் உரிமைகள் சிலவற்றை விட்டுக் கொடுக்கக்கூடும் என்று அஞ்சிய இந்துக்களிற் சிலர் இந்து மகாசபையை ஸ்தாபித்தார்கள்.

இவ்வாறு அரசியலுணர்ச்சியும் கட்சிகளும் அதிகரித்துக் கொண்டுவந்த சமயத்தில், பிரிட்டிஷ்காரர்கள் மாத்திரம் இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதில் சிரத்தை

காட்டியதாகத் தெரியவில்லை. அதனால் 1928-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பலவேறு கட்சிகளின் தலைவர்களும் ஒன்று கூடி ஆலோசித்து எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் திட்டத்தைத் தயார் செய்வதற்கு ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அவ்வாறு தயார் செய்யப்பட்ட திட்டத்தை அந்த ஆண்டின் இலையுதிர் காலத்திற் கூடிய சர்வ கட்சி மகாநாடு சில மாறுதல்களுடன் ஏற்றுக்கொண்டது. பின்னர் அந்தத் திட்டத்திற்கு அங்கீகாரம் பெறுவதற்காக "சர்வகட்சிச் சபைக் கூட்டம்" ஒன்று கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் முடிவில் அந்தத் திட்டத்தின் அம்சங்களை முஸ்லிம் லீகும் ஒத்துக்கொள்ளவில்லை; காங்கிரஸும் ஒத்துக்கொள்ளவில்லை. ஆகவே சர்வ கட்சிச் சபைக்கூட்டம் கூடவில்லை. பின்னர் ஏற்பட்ட முக்கிய நிகழ்ச்சிகள் மக்கள் மனத்தை அதிகம் கவர்ந்ததால் அந்தத் திட்டத்தைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை.

1919-ஆம் ஆண்டின் சீர்திருத்தச்சட்டம் இந்தியப் பொறுப்பாட்சிப் பாதையில் முதல்படி என்றும், அடுத்தபடியைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகப் பத்தாண்டு சென்றபின் ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்படவேண்டுமென்று அதே சட்டத்திற் கூறப்பட்டிருந்தது என்றும் முன்னர்க் கூறியது நினைவிலிருக்கும். இங்கிலாந்தில் அதிகாரத்திலிருந்த கான்ஸர்வேட்டிவ் கட்சியினர் 1927-ஆம் ஆண்டிலேயே ராயல் கமிஷனை நியமித்தார்கள். அந்தக் கமிஷன் அங்கத்தினர்கள் அனைவரும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு அங்கத்தினர்களாயிருந்தனர். அதற்கு ஸர். ஜான் சைமன் தலைவராக நியமிக்கப்பட்டார். ஓர் இந்திய அங்கத்தினர் கூட அந்தக் கமிஷனுக்கு நியமிக்கப்படாததைக் கண்டு தேசிய உணர்ச்சியுடைய இந்தியர்களெல்லாம் சீற்றங்கொண்டனர். 1928-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் மறுபடியும் அந்த ஆண்டின் இறுதியிலும் சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தது. முதலில், இந்தியர்கள் சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்தார்கள். ஆனால் பின்னர்ப் பொதுமக்களிற் சில பிரிவினர் அதற்கு ஆதரவளித்தார்கள். 1930-ஆம் ஆண்டு மேமாதத்தில் சைமன் கமிஷன் அறிக்கை வெளிவந்தது. ஆனால் அதற்குள்ளாக இந்திய அரசியலுலகில் இரண்டு மிகமுக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிட்டன.

1929-ஆம் ஆண்டு வேனிற்காலத்தில் தொழிற்கட்சியினர் இங்கிலாந்தில் அரசியலதிகாரம் பெற்றனர். அப்போது

இந்திய ராஜப்பிரதிநிதியாயிருந்த இர்வின்பிரபு இங்கிலாந்துக்குச் சென்று, இந்திய விஷயங்களைப்பற்றித் தொழிற்கட்சி மந்திரிகளுடன் ஆலோசித்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். வந்ததும் அவர் இரண்டு முக்கிய விளம்பரங்களைச் செய்தார். முதலாவது விளம்பரம் பின்வருமாறு :— “ 1919-ஆம் ஆண்டில் நிறைவேறிய சீர்திருத்தச் சட்டத்தின் மூலம் பிரிட்டிஷார் உண்மையில் இந்தியாவுக்குப் பொறுப்பாட்சி வழங்க விரும்புகிறார்களா இல்லையா என்பதைப்பற்றி இந்தியாவில் மாத்திரமின்றி இங்கிலாந்திலும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதால், இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவான நோக்கம் என்பது 1919-ஆம் ஆண்டில் விளம்பரப்படுத்தப்பட்ட மாண்டேகு அறிக்கையிலேயே காணக்கிடக்கிறது என்று மாட்சிமை தாங்கிய மன்னர்பிரானது அரசாங்கத்தின் சார்பாக ஐயத்திற் கிடமின்றித் தெளிவாக எடுத்துக் கூறுவதற்கு எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.”

சைமன் கமிஷன் அறிக்கையைப் பரிசீலனைசெய்து இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தைப்பற்றி முடிவு செய்வதற்கு முன்னர் லண்டனில் ஒரு மகாநாடு கூட்டி, அதற்குச் சுதேச மன்னர்கள் உட்பட இந்திய மக்களுட் காணப்பட்ட எல்லாப் பிரிவுகளின் பிரதிநிதிகளையும் அழைக்கப் பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக இராஜப்பிரதிநிதியின் இரண்டாவது விளம்பரம் கூறிற்று.

இந்த மகாநாட்டுக்குச் சுதேச அரசர்களின் பிரதிநிதிகளையும் அழைக்க முடிவு செய்ததைப்பற்றிச் சில சொற்கள் கூறுவது பொருந்தும். 1921-ஆம் ஆண்டில் சுதேச அரசர்களின் சபை டில்லியில் நிறுவப்பட்டது என்றும், அதில் பல சிறிய ஸம்ஸ்தானங்களும், சில பெரிய ஸம்ஸ்தானங்களும் சேர்ந்துகொண்டன என்றும், முன்னரே கூறியிருக்கிறோம். ஆலோசனை கூறுவதற்கு மாத்திரம் அந்தச் சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதேயன்றி நிர்வாக விஷயத்தில் எவ்வித அதிகாரமும் அதற்கு வழங்கப்படவில்லையென்று கூறியிருப்பதும் நினைவிலிருக்கும். அந்தச் சபையின் கூட்டங்களுக்கு இராஜப்பிரதிநிதி தலைமைவகித்தார். பிரிட்டிஷ் இந்தியாவுக்கும், சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் பொதுவான விஷயங்களைப்பற்றி ஆலோசிக்கும்போது உதவி செய்வதற்காக மத்திய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அந்தக் கூட்டங்களிற் கலந்துகொண்டார்கள். ஆனால், அந்தச் சபைக்கும்

மத்திய சட்டசபைக்கும் சட்ட ரீதியில் எவ்விதத் தொடர்பும் கிடையாது. எனினும் பொருளாதாரத் துறையிலும் கலாசாரத் துறையிலும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருப்பதால், பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்படும் மாறுதல்கள் சுதேச ஸம்ஸ்தானங்களையும் பாதிக்குமென்பது திண்ணம். ஆகவே, பிரிட்டிஷ் இந்தியாவின் அரசியற் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஒரு நீண்ட காலத்திட்டத்தைத் தயார் செய்யவேண்டுமானால், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பைப்பற்றி நன்முக ஆலோசனை செய்யவேண்டியது அவசியம்.

சைமன் கமிஷன் அறிக்கையின் அம்சங்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். மாகாணங்களில் ஏற்கெனவே இருந்த இரட்டையாட்சி பூரணப் பொறுப்பாட்சியாக வளரவேண்டும். அமைதியைக் காப்பதற்கும் சிறுபான்மை வகுப்பினரின் உரிமைகளைக் காப்பதற்கும் கவர்னருக்குச் சில தனிப்பட்ட அதிகாரங்களிருக்கவேண்டும். ஓட்டர்களின் தொகையை யதிகப்படுத்தி, சட்டசபை அங்கத்தினர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சட்டசபையின் இரு பிரிவுகளுக்கும் வேண்டிய அங்கத்தினர்களை மாகாணச் சட்டசபை அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கவேண்டும். அவ்வாறு செய்வதால் முடிவில் மத்திய அரசாங்கம் எல்லா மாகாணங்களும் சேர்ந்த ஒரு சமஷ்டி அரசாங்கமாக மாறுவதற்கு வசதி ஏற்படும். மத்திய அரசாங்கத்தின் நிர்வாக சபையில் எந்தவிதமான மாறுதலும் தேவை இல்லை. மாகாணங்கள் மாத்திரமின்றி சுதேச ஸம்ஸ்தானங்களும் சேர்ந்த அகில இந்திய சமஷ்டி அரசியலை ஏற்படுத்துவது பிரிட்டிஷாரின் முடிவான நோக்கமெனினும், அது உடனடியாக நடக்கக்கூடிய காரியமன்று. இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் என்ற விஷயம் அறிக்கையில் கூறப்படவில்லை. பார்லிமெண்டு அரசாட்சி முறை இந்தியாவுக்கு அவ்வளவாக ஏற்றது அன்று என்று கமிஷன் கருதிற்று.

சைமன் கமிஷன் அறிக்கை வெளியாவதற்குப் பல மாதங்களுக்கு முன்னரே இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் என்றும், அதைப்பற்றி ஆலோசிப்பதற்கு லண்டனில் ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டப்படும் என்றும் இராஜப்பிரதிநிதி அறிவித்துவிட்டபடியால் கமிஷன் அறிக்கையைப்பற்றி இந்திய அரசியல்

வாதிகள் யாரும் கவலைப்படவில்லை. மிதவாதிகளான இந்துக்களும், முஸ்லிம்களும் இராஜப்பிரதிநிதியின் விளம்பரத்தை வரவேற்றார்கள். மேலும் இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை உடனடியாக வழங்குவதற்கேற்ற அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதுதான் வட்டமேஜை மகாநாட்டின் வேலையாக இருக்குமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். தீவிரவாதிகளான இடதுசாரிகளின் அபிப்பிராயப்படி காங்கிரஸ் குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஏற்றுக்கொள்ள மறுத்து, பூரண சுயராஜ்யம் வேண்டுமெண்று கூறியது. வட்டமேஜை மகாநாட்டிற்குப் பிரதிநிதிகளை அனுப்பவும் காங்கிரஸ் மறுத்துவிட்டது. 1930-ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் புதியதொரு சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் தொடங்கிற்று. அரசாங்கச் சட்டத்தை மீறி, கடற்கரைக்குச் சென்று உப்புக் காய்ச்சுவதுதான் இந்த இயக்கத்தின் முக்கிய அம்சமாக இருந்தது. அதனால் இதற்கு உப்பு சத்தியாக்கிரகம் என்ற பெயர் ஏற்பட்டது. காந்திஜீயின் தலைமையில் பல தொண்டர்கள் தண்டிக்கு நடந்து சென்று உப்புக் காய்ச்ச முயன்றார்கள். சத்தியாக்கிரகிகள் அஹிம்சை முறையைப் பின்பற்றவேண்டுமென்று காந்திஜீ வற்புறுத்திக் கூறியிருந்தபோதிலும் இந்தச் சட்ட மறுப்பியக்கத்தால் நாடெங்கும் கலகங்களும் குழப்பமும் ஏற்பட்டன. 1621-ஆம் ஆண்டில் நடந்த சட்ட மறுப்பியக்கமும் இவ்வாறுதான் முடிந்ததென்று ஏற்கெனவே கூறியிருக்கின்றோம். ஆனால் 1930-ஆம் ஆண்டில் நடந்த சட்ட மறுப்பியக்கத்தில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளவில்லை. அரசாங்கம் வழக்கமான அடக்குமுறையைக் கையாண்டு காந்தியையும் மற்றத் தலைவர்களையும் சிறையில் அடைத்தது. அந்த ஆண்டின் இறுதிவரையிலும் நாட்டின் நிலை குழப்பமாகவே இருந்தது. அதற்குள் நவம்பர் டிசம்பர் மாதங்களில் வட்டமேஜை மகாநாட்டின் முதல் கூட்டம் லண்டனில் நடைபெற்றது.

வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்ற பிரதிநிதிகளில் பல சுதேச மன்னர்களும் சில முக்கிய ஸம்ஸ்தான மந்திரிகளும் இருந்தார்கள். காங்கிரஸ் பிரதிநிதிகள் யாரும் செல்லவில்லை. ஆனால் மிதவாதிகள், முஸ்லிம்கள், இந்து மகாசபையினர், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், சீக்கியர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியவர்களுடைய பிரதிநிதிகள் வட்டமேஜை மகாநாட்டிற்குச் சென்றார்கள். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்த மூன்று கட்சியினருடைய பிரதிநிதிகளும் மகா

நாட்டில் கலந்து கொண்டார்கள். ஒரு மிதவாதியின் ஆலோசனை யின்மீது சுதேச மன்னர்களின் சார்பில் பிகானீர் மகாராஜா இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படவேண்டு மென்றும், அகில இந்தியாவிற்கும் ஒரு சமஷ்டி அரசியல் நிறுவப்படவேண்டு மென்றும், தங்களுடைய உரிமைகள் பாதிக்கபடாமலிருந்தால் சுதேச மன்னர்கள் எல்லாம் தாமாகவே இந்திய சமஷ்டியில் சேர்ந்துகொள்வார்களென்றும் பேசினார். மேலும் சமஷ்டி அரசாங்கம் சமஷ்டிச் சட்டசபைக்குப் பொறுப்பாளியாக இருக்கவேண்டுமென்றும் சுதேச மன்னர்கள் கூறினார்கள். அதன்பின் சட்டசபையின் அமைப்பையும், நிர்வாக சபையின் அமைப்பு, பொறுப்பு ஆகியவற்றைப்பற்றியும் ஒரு கமிட்டி ஆலோசனை செய்து ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தது. மற்றைய கமிட்டிகள் மாகாண சுய ஆட்சி, ஓட்டுரிமை, ராணுவம், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முதலிய விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்து ஏக மனதான அபிப்பிராயங்களைத் தெரிவித்தன. முஸ்லிம்களுக்குத் தேர்தலில் தனித்தொகுதிகள் வழங்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், இந்த உரிமை முஸ்லிம்களைத் தவிர மற்றைய சிறுபான்மை வகுப்பினருக்கும் கொடுக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றியும், இந்த உரிமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ரத்துச் செய்யப்பட வேண்டுமா இல்லையா என்பதைப்பற்றியும் ஒற்றுமையான அபிப்பிராயம் ஏற்படவில்லை. மகாநாட்டின் முதற் கூட்டத்தின் முடிவில் அகில இந்திய அரசாங்கம் சமஷ்டி அரசாங்கமா யிருக்கவேண்டுமென்றும், மாகாணங்களுக்குப் பூரணப் பொறுப்பாட்சி வழங்கவேண்டுமென்றும், மத்திய அரசாங்கம் இரட்டையாட்சியின் சில அம்சங்களைக் கொண்ட பொறுப்பாட்சியாக இருக்கவேண்டுமென்றும் மகாநாடு கூறிய ஆலோசனையை பிரிட்டிஷ்அரசாங்கம் ஏற்றுக்கொண்டதென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகிய மாக்டொனல்டு கூறினார். மேலும் யாதேனும் சில காப்பு அதிகாரங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் வைத்துக்கொள்ள வேண்டிய நிலையேற்பட்டால்; அந்த அதிகாரங்களால் இந்தியாவில் பூரணப் பொறுப்பாட்சியின் வளர்ச்சிக்கு எந்தவிதமான தடையும் ஏற்படாமல் கவனித்துக்கொள்ளப்படும் என்றும் மாக்டொனல்டு கூறினார். இந்த அறிக்கையைப்பற்றி ஆலோசிப்பதற்குக் காங்கிரஸ் மகா சபைக்குச் சௌகர்யம் அளிப்பதற்காகக் காந்திஜீயும் சிறை சென்ற மற்ற காங்கிரஸ் தலைவர்களும் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டார்கள். அதன்பின் இராஜப்பிரதி

நிதிக்கும் காந்திஜீயிக்கும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பயனுக 1931-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதற்கு காந்தி இர்வின் ஒப்பந்தம் என்று பெயர். அதன் பயனுகச் சட்ட மறுப்பு இயக்கம் கைவிடப்பட்டது. விரைவில் நாட்டில் அமைதி ஏற்பட்டது.

வட்டமேஜை மகாநாட்டின் இரண்டாவது கூட்டம் 1931-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் நடந்தது. காந்திஜீ ஒருவரே காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியாகச் சென்ருர். மற்றபடி இரண்டாங் கூட்டத்தின் அமைப்பும் முதற் கூட்டத்தின் அமைப்பையே பெரும்பாலும் ஒத்திருந்தது. ஆனுல் இங்கிலாந்தில் தொழிற்கட்சி ஆட்சிக்குப் பதிலாகத் தேசீயக்கட்சியின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. ஆகவே, தொழிற கட்சியின் பிரதிநிதிகளுக்குப் பதிலாகத் தேசீய அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். சமஷ்டி அரசியலில் இரட்டையாட்சியின் தன்மைகளைப் புகுத்துவதைப்பற்றியும், சிறுபான்மை வகுப்பினரின் பிரதிநிதித்துவத்தைப் பற்றியுமே விவாதம் அதிகமாக நடந்தது. மத்திய அரசாங்கத்தில் இரட்டையாட்சி முறையை ஏற்படுத்துவதற்குக் காந்தீஜீ இணங்கவில்லை. வகுப்புப் பிரச்சினையில் ஒற்றுமையான முடிவை ஏற்படுத்துவதற்குக் காந்தீஜீ செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. சிறுபான்மை வகுப்பினருக்குத் தனித் தொகுதிகள் வேண்டுமென்று ஒருமுகமாகக் கூறிவிட்டார்கள். கடைசியாக மூன்று ஆங்கிலக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட பிரிட்டிஷ் தேசீய அரசாங்கம் மகாநாட்டின் முதற் கூட்டத்தின் இறுதியில் மாக்டொனுல்டு விடுத்த அறிக்கையையே ஆமோதித்து இரண்டாங் கூட்டத்தையும் முடிவுசெய்தது.

இதற்குள் இந்தியாவில் மறுபடியும் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கியது. காந்தி இர்வின் ஒப்பந்தப்படி அரசாங்கம் நடக்கவில்லையென்று காங்கிரஸ்காரர்கள் கூறினுர்கள். பூரண சுயராஜ்யத்தைத் தவிர வேறெதையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்று அவர்கள் மறுபடியும் வற்புறுத்திக் கூறினுர்கள்.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக விவசாயப் பொருள்களின் விலை மிகவும் குறைந்தது. அதனுல் இந்திய விவசாயிகள் அதிகத் துன்பமடைந்தார்கள். அந்தச் சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் பல மாகாணங்களில் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினுர்கள். அதேசமயத்தில் வடமேற்கு

எல்லைப்புற மாகாணத்திலும் கலகங்கள் ஏற்பட்டன. வங்காளத்தில் பயங்கர இயக்கம் மறுபடியும் தலைதூக்கிற்று. அப்பொழுது வில்லிங்டன் பிரபு இராஜப்பிரதிநிதியாக இருந்தார். அரசாங்கம் வழக்கமான அடக்குமுறையைக் கையாண்டது. லண்டனிலிருந்து திரும்பிய காந்தீஜீ காங்கிரஸ்காரர்களின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டாராகையால் அவரையும் மற்ற காங்கிரஸ் தலைவர்களையும் அரசாங்கம் சிறையிலிட்டது. இவ்வாறு வட்ட மேஜை மகாநாட்டின் வேலையில் காங்கிரஸ் அளித்த ஒத்துழைப்பு முடிவு பெற்றது.

வட்டமேஜை மகாநாட்டின் மூன்றும் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர்ப் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டியினர் ஓட்டுரிமை, அரசாங்க வரவு செலவு ஆகிய விஷயங்களைப் பற்றியும், சுதேச ஸம்ஸ்தானங்கள் சேமஷ்டியில் ருவதைப்பற்றியும் பரிசீலனை செய்வதற்காக இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்தனர். வகுப்புப் பிரச்சினைபற்றி இந்தியத் தலைவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படாததால், பிரதமர் மாக்டொனல்டு அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் திட்டத்தைத் தெரிவித்தார். அந்தத் திட்டத்திற்கு "வகுப்புத் தீர்மானம்" என்று பெயர். அந்தத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் பின் வருமாறு: எல்லாச் சிறுபான்மை வகுப்பினருக்கும் தனித்தொகுதிகள் வழங்கப்படும். வங்காளத்திலும் பஞ்சாபிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மை வகுப்பினராக இருந்தபோதிலும் அவர்களுக்கும் தனித்தொகுதிகள் வழங்கப்படும். தாழ்த்தப்பட்ட மக்களும் சிறுபான்மைக் கட்சியினராக மதிக்கப்பட்டு அவர்களுக்கும் தனித்தொகுதிகள் அளிக்கப்படும். பஞ்சாபிலிருந்த சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும், மற்ற மாகாணங்களில் சிறுபான்மை வகுப்பினர்களாயிருந்த முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய ஜனத்தொகை விகிதத்திற்கு அதிகமான பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இந்த வகுப்புத் தீர்மானத்தை காந்திஜீ மிகவும் வெறுத்தார். அந்தத் தீர்மானத்தால் இந்துக்களையும், இந்துக்களில் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்களையும் பிரிட்டிஷ் அரசாங்கம் பிரிக்க முயல்வதாக அவர் கூறினர். இந்தப் பேராபத்தைத் தவிர்ப்பதற்காக காந்திஜீ உண்ணாவிரதம் பூண்டார். அதனுல் உயர்ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் பூனு ஒப்பந்தம் என்ற ஒரு திட்டத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்தத் திட்டத்தின்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிக அதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கப்

பட்டது. சட்டசபைகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகப் பின் வரும் முறையை அனுசரிக்க வேண்டுமென்று பூனு ஒப்பந்தம் நிர்ணயித்தது. முதலில் தாழ்த்தப்பட்ட மக்கள் மாத்திரம் தங்கள் ஓட்டுரிமையைப் பயன் படுத்தித் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு ஜாபிதாத் தயார் செய்யவேண்டும். பின்னர் அந்த ஜாபிதாவிலிருந்தவர்கள் தேர்தலுக்கு நிற்கவேண்டும். அவர்களை உயர்ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் சேர்ந்த பொது வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துச் சட்டசபைகளுக்கு அனுப்பவேண்டும். இதுவே பூனு ஒப்பந்தம். ஆனால், இந்த ஒப்பந்தத்தால் யாரும் திருப்தியடைந்ததாகக் கூறமுடியாது. தங்களுடைய பிரதிநிதித்துவத்தை மிக அதிகமாகக் குறைத்துவிட்டதென்று உயர்ஜாதி இந்துக்கள் அதை வெறுத்தார்கள். தங்களுடைய பிரதிநிதித்துவத்தில் உயர் ஜாதி இந்துக்கள் தலையிடுவதை விரும்பாத தாழ்த்தப்பட்ட மக்களும் அதை வெறுத்தார்கள்.

வட்டமேஜை மகாநாட்டின் மூன்றுவது கூட்டம் 1932-ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்தில் நடந்தது. சமஷ்டி சட்டசபைகளுக்கு எத்தகைய தேர்தல் முறைகளை அனுஷ்டிப்பது என்பதைப்பற்றியும், வரவு செலவுத் துறையிலும் மற்றத் துறைகளிலும் எத்தகைய காப்பு அதிகாரங்களை பிரிட்டிஷ் அரசாங்கம் வைத்துக்கொள்ளவேண்டும் என்பதைப்பற்றியும் முக்கியமாக விவாதம் நடந்தது. மகாநாடு முடிந்த பிறகு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தீர்மானங்களைப் பார்லிமெண்ட்டுக் கூட்டுக் கமிட்டியொன்று பரிசீலனை செய்தது. அந்த வேலையில் உதவிசெய்வதற்காகப் பல இந்தியத் தலைவர்களும் அழைக்கப்பட்டார்கள். முடிவாக 1935-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டம் பார்லிமெண்டில் நிறைவேறியது. அடுத்த அதிகாரத்தில் அதைப்பற்றிக் கூறுவோம்,

அதிகாரம்—53

அரசியலமைப்புப் பிரச்சினைகள் - இரண்டாம் பகுதி

1935-ம் ஆண்டில் நிறைவேறிய இந்திய அரசியல் சட்டத்தின்படி மாகாணங்களுக்குப் பூரண சுயஆட்சி வழங்கப்பட வேண்டும் என்றும், மத்திய அரசாங்கத்தில் இரட்டை ஆட்சிமுறை புகுத்தப்பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஆனால் மத்திய அரசியலிலும் மாகாண அரசியலிலும் முறையே கவர்னர் ஜெனரலுக்கும், கவர்னர்களுக்கும் அவசியமான சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்துவற்குத் தனிப்பட்ட அதிகாரங்கள் இருக்க வேண்டும். அந்த அதிகாரங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் என்றும் பெயர். ஸம்ஸ்தானக் குடிகளில் குறைந்தபட்சம் பாதிப் பேரையாவது கொண்ட சுதேச ஸம்ஸ்தானங்கள் மத்திய அரசாங்கத்தில் சேர விரும்பினால்தான் அந்த அரசாங்கம் சமஷ்டி அரசாங்கமாக மாற்றப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக சுதேச ஸம்ஸ்தானங்களுடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் அதற்குள் இரண்டாம் உலக யுத்தம் ஏற்பட்டதால் அந்தப் பேச்சுவார்த்தைகள் நிறுத்திவைக்கப்பட்டன.

பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் ஏற்பட்ட தொடர்புகளின் முன்னைய வரலாற்றைப்பற்றி முன் அதிகாரங்களில் கூறியிருக்கிறோம். டல்ஹௌஸியின் காலத்தில் இந்தத் தொடர்பில் * அவகாசியிலிக் கொள்கை, ஏகாதிபத்தியக் கொள்கை என்ற இருகொள்கைகள் கையாளப்பட்டன என்று படித்தோம். பின்னர் அவகாசிலிக் கொள்கை கைவிடப்பட்டதென்றும், ஏகாதிபத்தியக் கொள்கை மாத்திரம் அமுலிலிருந்தது என்றும் கூறியிருக்கிறோம். 1860-ஆம் ஆண்டில் கானிங்கு பிரபு ஏகாதிபத்தியக் கொள்கையின் இரு தன்மைகளை **விளக்கிக்** கூறினார். அவை பின்வருமாறு :—

முதலாவது மன்னர்களின் ஆட்சி தொடர்ந்து நடக்குமாறு செய்வதன்மூலம் சுதேச ராஜ்யங்கள் அழிந்து போகாமல் காக்க வேண்டும். இரண்டாவது, சுதேச ராஜ்யங்களின் ஆட்சி மோசமாக இருக்கும்போது அவற்றின் விஷயங்களில் தலையிட்டு ஒழுங்கான ஆட்சி ஏற்படுத்துவதற்கு உதவி செய்யவேண்டும். இந்தக் கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு பல சுதேச ராஜ்யங்

---

* **'அவகாசியிலிக் கொள்கை' :- அதிகாரம் 42, பக்கம் 458, 459-இல் பார்க்கவும்.**

களின் ஆட்சி மிக மோசமாக இருந்த சமயங்களில் பிரிட்டிஷ் அரசாங்கம் அவற்றின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு ஒழுங்கான ஆட்சியை நிறுவியது. “மன்னர் பிரானுக்கும் சுதேச அரசர்களுக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பு அவ்வப்போது நிறைவேறிய உடன்படிக்கைகளை மாத்திரம் பொறுத்ததன்று. சுதேச ராஜ்யங்களின் வெளிநாட்டுத் தொடர்புகளை மேற்பார்வை செய்வதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குள்ள அதிகாரத்தைத் தவிர இந்தியா முழுவதிலும் அமைதியையும் ஒழுங்கான ஆட்சியையும் பாதுகாப்பதும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குள்ள உரிமையும் கடமையும் ஆகும்.” இவ்வாறு ராஜப்பிரதிநிதியாகிய ரீடிங்கு பிரபு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்று 1926-ஆம் ஆண்டில் ஏகாதிபத்தியக் கொள்கையின் கருத்தை விளக்கிக் கூறினர்.

சுதேச ராஜ்யங்களின் பரப்பு இந்தியாவின் மொத்த விஸ்தீர்ணத்தில் ஐந்தில் இரண்டுபங்கு. அவற்றில் வாழும் குடிகளின் தொகை இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறைய நான்கில் ஒருபங்கு. சுதேச ராஜ்யங்களின் தொகை ஐந்நூற்றுக்கு மேற்பட்டது. ஆனல், அவற்றுள் சுமார் நூற்றிருபது ஸம்ஸ்தானங்கள்தாம் பெரியவை. அவற்றின் அரசர்கள் சுதேச மன்னர்களின் சபையில் நேரடியான பிரதிநிதித்துவம் பெற்ற அங்கத்தினர்கள். மற்ற ஸம்ஸ்தானங்கள் மிகச் சிறியவை. விஸ்தீரணத்தில் வேறுபட்டதுபோலவே, அரசியல் நிலையிலும், பொருளாதார நிலையிலும், கலாசாரத்துறையிலும் ஸம்ஸ்தானங்களுக்குள் பல வேறுபாடுகள் இருந்தன. விஸ்தீரணத்தில் காஷ்மீரந்தான் மிகப் பெரியது. அதன் பரப்பு 86,000-சதுர மைல். ஜனத்தொகையைப் பொறுத்தவரையில் ஐதராபாத்து மிகப் பெரியது. அதன் ஜனத்தொகை நூற்றறுபது லட்சம். சிறிய ராஜ்யங்களின் தொகை முந்நூறுக்கு மேற்பட்டது. ஆனல் அவற்றின் மொத்த விஸ்தீர்ணம் சுமார் 6000-சதுர மைல். அவற்றின் மொத்த ஜனத்தொகை பத்துலட்சம். ஸம்ஸ்தானக் குடிகளில் மிகப் பெரும்பான்மையோர் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சுதேச ராஜ்யங்களின் விஷயத்தில் மன்னர்பிரானுக்கிருந்த ஏகாதிபத்திய அதிகாரத்தை 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டம் நிறைவேறும் வரையில் மத்திய அரசாங்கமே நிர்வகித்து வந்தது. அப்போது மத்திய அரசாங்கம் என்பது கவர்னர் ஜெனரலையும் அவருடைய நிர்வாக சபையையும் குறித்தது. 1919-ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தச் சட்டம்

அமுலுக்கு வந்தபின், பிரிட்டிஷ் இந்தியாவுக்கு நாளடைவில் முழுப் பொறுப்பாட்சி வழங்கப்பட்டால் தங்களுடைய நிலை என்னவாகும் என்பதைப்பற்றிச் சுதேச அரசர்கள் கவலைப்படத் தொடங்கினார்கள். மேலும் இறக்குமதிச் சுங்கவரிகளின் மூலம் பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கிடைத்த வருமானத்தில் ஒரு பங்கு வேண்டுமென்று சில சமஸ்தானங்கள் கேட்டன. இந்த விஷயத்திலும் இன்னும் பல பொருளாதார விஷயங்களிலும், பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சுதேச ஸம்ஸ்தானங்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும், சுதேச ராஜ்யங்களுக்கும் இடையிலுள்ள தொடர்பைப்பற்றியும், பொருளாதாரத் துறையிலும் வரவு செலவுத் துறையிலும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் சுதேச ராஜ்யங்களுக்கும் இடையிலுள்ள தொடர்புகளைப்பற்றியும் பரிசீலனை செய்வதற்காக பட்லர் என்பவர் தலைமையில் 1927-ஆம் ஆண்டில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. முதல் பிரச்சினையைப்பற்றி ரீடிங்குபிரபு கூறிய அபிப்பிராயத்தையே பட்லர் கமிட்டியும் ஒத்துக்கொண்டது. அந்த விஷயம் 42-ஆம் அதிகாரத்தில் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இரண்டாம் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நுணுக்கமான சிபாரிசுகளைச் செய்யாமல் பட்லர் கமிட்டி சில பொதுவான ஆலோசனைகளை மாத்திரம் கூறிற்று. ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் பார்லிமெண்டு முறையை அடிப்படையாகக்கொண்ட பொறுப்பாட்சி ஏற்பட்டால், அந்தப் புதிய அரசாங்கத்திற்கு சுதேச அரசர்களின் சம்மதத்தைப் பெறாமல் அவர்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இடையிலிருந்த ஏகாதிபத்தியத் தொடர்பைப் பொறுத்த அதிகாரத்தை அளித்து விடக்கூடாது என்ற ஒரு மிக முக்கியமான விஷயத்தையும் பட்லர் கமிட்டி வற்புறுத்தியது. அதனால்தான் வட்டமேஜை மகாநாட்டுக்கு ஸம்ஸ்தானப் பிரதிநிதிகள் என்ற முறையில் சில அரசர்களும் மந்திரிகளும் அழைக்கப்பட்டார்கள். அந்த மகாநாட்டில் மன்னர்கள் கூறிய கருத்துக்களையும், 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் இடம்பெற்ற சமஷ்டித் திட்டத்தின் தோற்றத்தையும்பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறோம்.

1935-ஆம் ஆண்டின் சட்டத்தின்படி சமஷ்டிச் சட்டசபை இரு பிரிவுகளையுடையதாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. மேற்சபையில் ஐந்தில் இரண்டுபங்கு அங்கத்தினர்களும், கீழ்ச் சபையில் மூன்றில் ஒரு பங்கு அங்கத்தினர்

களும் சுதேச அரசர்களால் நியமிக்கப்படவேண்டும். மேற் சபையில் ஆறு அங்கத்தினர்கள் ராஜப்பிரதிநிதியால் நியமிக்கப் படவேண்டும். மற்றவர்கள் மாகாணங்களில் பிரதேச வாரியாகப் பிரிக்கப்பட்ட தேர்தல் தொகுதிகளில் தனித்தொகுதி முறையால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். கீழ்ச் சபையின் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் மாகாணச் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

எந்தெந்த விஷயங்களைப்பற்றிச் சமஷ்டிச் சட்டசபைகள் சட்டமியற்றலாம் என்றும், எந்தெந்த விஷயங்களைப்பற்றிச் மாகாணச் சட்டசபைகள் சட்டமியற்றலாம் என்றும் தீர்மானிக் கப்பட்டது. சில விஷயங்களில் மத்தியச் சட்டசபையும், மாகா ணச் சட்டசபைகளும் சட்டம் இயற்றலாம் என்று தீர்மானிக் கப்பட்டது. எஞ்சிய விஷயங்களைப்பற்றிச் சட்டமியற்றும் உரிமை மாகாணங்களைச் சேர்ந்ததா, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்ததா என்று சந்தர்ப்பம் நேர்ந்தபோது தீர்மானிக்கும் அதிகாரம் கவர்னர்ஜெனரலுக்கு அளிக்கப்பட்டது.

மத்திய அரசியல் நிர்வாகம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும். பாதுகாப்பு இலாக்காவும், வெளிநாட்டு இலாக்காவும் ஒதுக்கப்பட்ட இலாக்காக்கள். அவற்றை நிர்வகிப்பதற்கு ஆலோசனையாளர்களை ஏற்படுத்தவேண்டும். அவர்கள் கவர்னர் ஜெனரலுக்குப் பொறுப்பாளிகளே தவிரச் சட்டசபைக்குப் பொறுப்பாளிகளல்லர். சட்ட சபைக்கு அந்த இலாக்காக்களின் தேவைகளைப்பற்றி விவாதிக்க உரிமை இருந்தபோதிலும் அவற் றைப்பற்றி முடிவு கூறும் உரிமை இல்லை. ஆலோசனையாளர் களைத் தவிரக் கவர்னர் ஜெனரலுக்கு உதவிசெய்ய மந்திரிகளும் நியமிக்கப்படவேண்டும். அவர்கள் சட்டசபையின் அங்கத்தினர் களாக இருக்கவேண்டும். அவர்களுடைய இலாக்காக்களின் நிர்வாகத்திற்கு அவர்கள் சட்டசபைக்குப் பொறுப்பாளிகள். நாணயங்களையும், கரன்ஸி நோட்டுக்களையும் பொறுத்த விஷயங் களைப்பற்றிச் சட்டசபையில் மசோதாக்களைக் கொண்டுவர வேண்டுமானால் கவர்னர் ஜெனரலின் அநுமதியை முன் கூட்டியே பெறவேண்டும். மேலும் சமஷ்டியின் பொருளாதார நிலை சரியானபடி இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளுவதற்கு கவர்னர் ஜெனரலுக்குத் தனிப்பொறுப்பு இருக்கவேண்டும். அதைத்தவிர மாகாணக் கவர்னர்களுக்கு இருந்ததைப் போலவே கவர்னர் ஜெனரலுக்கும் வேறு சில தனிப் பொறுப்புக்கள் அளிக் கப்பட்டன. அவற்றைப்பற்றிப் பின்னர்க் கூறுவோம்,

சமஷ்டியில் சேரவிரும்பிய சுதேச அரசர்கள் இன்னின்ன அதிகாரங்களைத் தான் சமஷ்டி அரசாங்கத்திற்குக் கொடுக்கலாம் என்று தீர்மானிக்கும் உரிமை அவர்களுக்கே இருந்தது. மற்ற உள்நாட்டு விவகாரங்களில் எல்லாம் அரசர்கள் தங்கள் இஷ்டம் போல் ஆட்சி செய்யலாம். இதுவரையில் இந்திய அரசாங்கம் நிர்வகித்து வந்த ஏகாதிபத்திய அதிகாரம் அதற்கென்றே நியமிக்கப்பட்ட மன்னர்பிரான் பிரதிநிதியால் இனிமேல் நிர்வகிக்கப்பட வேண்டும். கவர்னர் ஜெனரலாக இருப்பவரே மன்னர்பிரான் பிரதிநிதியாவும் இருக்கலாம். அவ்வாறுதான் சமீபகாலம்வரையில் இருந்தது.

1935-ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தின் ஒரு பகுதிதான் அமுலுக்கு வந்ததென்று முன்னரே கூறினோம். அந்தச் சட்டத்தில் கூறப்பட்ட சமஷ்டித் திட்டம் அமுலுக்கு வரவில்லை. ஆகவே 1919-ஆம் ஆண்டுத் திட்டப்படியே மத்திய அரசாங்கம் நடைபெற்றது. இந்தியா மந்திரியே இந்திய அரசாங்கத்தின் மேற்பார்வை அதிகாரியாக இருந்தார். அவர் முன்போலவே இந்திய அரசியல் விஷயத்தில் பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்குப் பொறுப்பாளியாக இருந்தார். மத்தியச் சட்டசபையிலும் மாறுதல் ஏற்படவில்லை.

இனி மாகாண அரசியலைப்பற்றிக் கவனிப்போம். பர்மா இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு இங்கிலாந்துடன் நேரடியான தொடர்பு கொண்டது. இந்தியாவில் புதிய மாகாணங்கள் ஏற்பட்டன. பம்பாயிலிருந்து சிந்து பிரிக்கப்பட்டது. பீகாரிலும் சென்னையிலுமிருந்த சில பகுதிகளைச் சேர்த்து ஒரிஸா உண்டாக்கப்பட்டது. ஆகவே, இந்திய மாகாணங்களின் எண்ணிக்கை பதினொன்றாயிற்று. சிந்து மாகாணத்திலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் முஸ்லிம்களே பெரும்பான்மை வகுப்பினர். பஞ்சாபில் முஸ்லிம்கள் நூற்றுக்கு ஐம்பத்தேழு பேராக இருந்தார்கள். மற்றவர்கள் இந்துக்களும் சீக்கியருமாக இருந்தார்கள். வங்காளத்தில் நூற்றுக்கு ஐம்பத்தைந்துபேர் முஸ்லிம்களாகவும், மற்றவர்கள் இந்துக்களாகவும் இருந்தார்கள். மற்ற ஏழு மாகாணங்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்துக்கள். பிரிட்டிஷ் இந்தியா முழுவதையும் எடுத்துக்கொண்டால் தாழ்த்தப்பட்ட மக்கள் உட்பட இந்துக்கள் ஜனத்தொகையில் நூற்றுக்கு அறுபத்தைந்து விகிதம் இருந்தார்கள். முஸ்லிம்கள் நூற்றுக்கு இருபத்தேழு விகிதம் இருந்தார்கள். மற்ற வகுப்பினர் எல்லாரும் சேர்ந்து நூற்றுக்கு எட்டுவிகிதம் இருந்தார்கள்.

1935-ஆம் ஆண்டின் சட்டத்தின்படி மாகாணங்களுக்குப் பூரண சுய ஆட்சி அளிக்கப்பட்டது. ஆறு மாகாணங்களின் சட்டசபைகள் இரண்டு பிரிவினை யுடையனவாக இருந்தன. கீழ்ச்சபைக்கு அசெம்பிளி என்று பெயர். அசெம்பிளியின் அங்கத்தினர்கள் தொகை அதிகமாக்கப்பட்டது. ஓட்டர்களின் தொகையும் அதிகமாக்கப்பட்டது. ஓட்டுரிமை பெரும்பாலும் குறிப்பிட்ட அளவு சொத்துடையவர்களுக்கே அளிக்கப்பட்டது. முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள், ஐரோப்பியர்கள் ஆகியவர்களுக்குத் தனித்தொகுதி கள் வழங்கப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் சென்ற அதிகாரத்திற் கூறிய முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட் டார்கள். மிராசுதார்களுக்கும், தொழிலாளிகளுக்கும், விவசா யச் சங்கங்களுக்கும், தொழிலுக்கும் தனிப்பட்ட பிரதிநிதித் துவம் அளிக்கப்பட்டது. சிறு தொகையினரான பெண்களையும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுடைய பிரதிநிதித்துவம் மதத்தை அடிப்படையாகக் கொண்டது. அசெம்பிளியில் உத்தியோகஸ்தர்களுக்கு இட மில்லை. கவர்னரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளும் அசம்பிளி யில் இல்லை.

மேற் சபைக்குக் கவுன்சில் என்று பெயர். கவுன்ஸிலின் அங்கத்தினர்களில் ஒருசிலர் கவர்னரால் நியமிக்கப்பட்டவர்கள். வங்காளத்திலும் பீகாரிலும் மேற்சபை அங்கத்தினர்களில் பலர் கீழ்ச்சபையினரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். சிறு-பான்மை வகுப்பினர்கள் தங்களுடைய ஜனத்தொகை விகிதத் திற்கு அதிகமான அங்கத்தினர்களை இருசபைகளுக்கும் தேர்ந் தெடுக்கும் உரிமை பெற்றுர்கள். ஆனுல் வங்காளத்திலிருந்த இந்துக்களுக்கு இந்த உரிமையில்லை.

மாகாண நிர்வாகம் மந்திரிசபைக்கு ஒப்படைக்கப்பட்டது. மந்திரிகள் கவர்னரால் நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் சட்ட சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாக இருக்க வேண்டும். அரசியல் நிர்வாகத்தில் அவர்கள் சட்டசபைக்குப் பொறுப்பாளிகள். மாகாண வரிகளும் மத்திய அரசாங்கத்தின் வரிகளும் வேருகப் பிரிக்கப்பட்டன. 1919-ஆம் ஆண்டின் சட் டத்தின்படி மாகாண இலாக்காக்களில் சில ஒதுக்கப்பட்ட இலாக் காக்களாக இருந்தன என்று முன்னர்ப் படித்தோம். 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி எல்லா இலாக்காக்களும் மந்திரி சபைக்கே அளிக்கப்பட்டன. மத்திய அரசாங்கத்திற்கும், மத்தி

யச் சட்டசபைக்கும் மாகாண இலாக்காக்களின்மீது சாதாரண மாக எந்தவித அதிகாரமும் கிடையாது. ஆனால் இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களும், இந்தியப் போலீஸ் உத்தியோகஸ் தர்களும், இந்திய மருத்துவ உத்தியோகஸ்தர்களும் மாகாணங் களில் வேலை செய்தாலும் இந்தியா மந்திரியால் தேர்ந்தெடுக்கப் பட்டு அவரால் இயற்றப்பட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். கவர்னர் மன்னர்பிரானால் நியமிக்கப்பட்டவர். அவர் கவர்னர் ஜெனரல் மூலமாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குப் பொறுப்பாளி. அவருக்குச் சில தனிப் பொறுப்புகள் இருந்தன. மாகாணத்தின் அமைதிக்கு ஆபத்து வராமல் காப்பதும், அகில இந்திய சர்விஸ் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பதும், சிறுபான்மை வகுப்பினரின் நியாயமான உரிமைகளைக் காப்பதும், பிரிட்டிஷா ரின் வியாபார உரிமைகளுக்கு எதிராகப் பாரபட்சமான நடவடிக்கைகள் எடுக்காமல் பார்த்துக்கொள்ளுவதும் அந்தத் தனிப்பொறுப்புகளிற் சில. கவர்னர் ஜெனரலுக்கும் சமஷ்டி அர சாங்கத்தின் விஷயத்தில் இதேமாதிரியான தனிப் பொறுப்புகள் உண்டு. ஆனால் சமஷ்டி அரசாங்கம் ஏற்படாததால் கவர்னர் ஜெனரல் அந்த அதிகாரங்களை உபயோகப்படுத்தவில்லை.

இந்தியாவில் வாழ்ந்த ஆங்கிலேயர்களுடைய உரிமைகளுக் கும், இந்தியாவில் தொழில் நடத்திய ஆங்கிலக் கம்பெனிகளின் உரிமைகளுக்கும் எதிராகப் பாரபட்சமான முறையில் மாகாண அரசாங்கங்களும் சமஷ்டி அரசாங்கமும் நடந்துகொள்ளாதவாறு தடுப்பதற்கு ஏற்ற காப்புக்களை விளக்குவதற்கே 1935-ஆம் ஆண்டின் சட்டத்தில் ஒரு தனி அத்தியாயம் இருக்கிறது.

மாகாண அரசியல் திட்டம் ஏதாவது காரணத்தால் முறிந்து போனால் கவர்னரே நிர்வாகம், சட்டமியற்றல் ஆகிய எல்லா அதி காரங்களையும் வகிக்கலாமென்று 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் ஒரு முக்கியப் பகுதியில் கூறப்பட்டது. அவ்வாறு நேர்ந்தால் மாகாணக் கவர்னர், கவர்னர் ஜெனரலுக்குப் பொறுப்பாளியாக இருக்கவேண்டுமே தவிர இந்திய அரசாங்கத்திற்குப் பொறுப் பாளியாக இருக்கவேண்டியதில்லை. இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுவதற்குச் சற்று முன்னர் அவசியமானால் உபயோகப்படுத் துவதற்குக் கவர்னர் ஜெனரலுக்குச் சில அவசர அதிகாரங்கள் பார்லிமெண்டில் நிறைவேறிய ஒரு தனிப்பட்ட சட்டத்தால் வழங் கப்பட்டன.

இதுவரையில் மிகச் சிக்கலான பல அம்சங்களைக் கொண்ட இந்திய அரசியற் சட்டத்தைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் கூற முயன்றோம். பாதுகாப்பு இலாக்காவும், வெளி நாட்டு இலாகாவும் இராஜப்பிரதிநிதியின் தனிப் பொறுப்பில் விடப்பட்டதாலும், கவர்னர் ஜெனரலுக்கும், கவர்னர்களுக்கும் பலவிதத் தனியதிகாரங்கள் வழங்கப்பட்டதாலும், சிறுபான்மை வகுப்பினர்களின் விஷயங்களை மாத்திரமன்றி ஐரோப்பியர்களுடைய உரிமைகளையும் கவனித்துக்கொள்ளப் பலவிதக் காப்புகள் அளிக்கப்பட்டதாலும், சிவில் சர்விஸின் உயர்தர உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் அதிகாரம் இந்தியா மந்திரியின் கையிலேயே விடப்பட்டதாலும் 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தை இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கிய சட்டம் என்று கூற முடியாது. உண்மையில் டொமினியன் அந்தஸ்துக்கும் அந்தச் சட்டத்திற்கும் அதிக தூரம்.

இனி இந்தச் சட்டத்தை இந்தியர்கள் எவ்வாறு வரவேற்றார்கள், என்று பார்ப்போம். லிபரல் கட்சியினர் அந்தச் சட்டத்திற் கூறப்பட்ட காப்புக்களை வெறுத்தார்களெனினும் அதிற் கூறப்பட்ட அரசியல் திட்டத்தை மாகாணங்களிலும், மத்திய அரசாங்கத்திலும் நடத்திப் பார்க்க விரும்பினார்கள். முஸ்லீம்கள் மத்திய சமஷ்டியை விரும்பவில்லை. ஆனால், மாகாண சுய ஆட்சியை நடத்திப் பார்க்க விரும்பினார்கள். இந்துக்களைப் பெரும்பான்மையாக உடைய சுதேச ராஜ்யங்களும் மத்திய சமஷ்டியில் சேருமாகையால் சமஷ்டி அரசியலை முஸ்லீம்கள் விரும்பவில்லை. அதற்கு பதிலாகப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மாத்திரம் பூரணப் பொறுப்பாட்சி பெற்ற மத்திய அரசாங்கம் இருந்தால் நல்லதென்று அவர்கள் எண்ணினார்கள். இந்தச் சட்டம் காங்கிரஸ்காரர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. மத்திய அரசாங்கத்தில் இரட்டையாட்சி முறை புகுத்தப்படுவதையும், சமஷ்டிச் சட்டசபையில் அரசர்களால் நியமிக்கப்பட்ட — மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத — ஸம்ஸ்தானப் பிரதிநிதிகள் மாத்திரம் இடம் பெறுவதையும், காங்கிரஸ்காரர்கள் அறவே வெறுத்தார்கள். அதுபோலவே, சுயாட்சியைப் பொய்யாக்கிய காப்புக்களால் மாகாண அரசியல் திட்டத்தையும் காங்கிரஸ்காரர்கள் வெறுத்தார்கள். மத்திய சமஷ்டியை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இந்திய அரசாங்கம் சுதேச மன்னர்களோடு பேச்சு வார்த்தைகளைத் தொடங்கியது. அவைகள் நடந்துகொண்டிருக்கும்போதே புதுத்திட்டம் மாகாணங்களில் அமுலுக்கு வந்தது.

1937-ஆம் ஆண்டில் புதிய திட்டப்படி மாகாணச் சட்ட சபைகளுக்குத் தேர்தல் நடந்தது. காங்கிரசும் முஸ்லிம் லீகும் தேர்தலில் மும்முரமாகக் கலந்துகொண்டன. சட்டசபைகளுக்குச் சென்றபின் புதிய அரசியல் திட்டத்தை முறிப்பதுதான் காங்கிரஸ் மகாசபையின் நோக்கம் என்று மறுபடியும் காங்கிரஸ் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். பொது மக்களின் நன்மைக்கான பல முன்னேற்றமான திட்டங்கள் காங்கிரஸ் மகாசபையின் தேர்தல் பிரகடனத்தில் இடம் பெற்றன. மேலும், பிரதமர் மெக்டொனால்டு வழங்கிய வகுப்புத் தீர்மானம் அந்தப் பிரகடனத்தில் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. சிறுபான்மை வகுப்பினரான முஸ்லிம்களுக்குத் தகுந்த காப்பு இருக்க வேண்டுமென்று முஸ்லிம் லீக் கட்சியின் தேர்தல் பிரகடனம் வற்புறுத்தியது. அதிலும் சமூக முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் இடம் பெற்றன. முடிவில் ஆறு இந்து மாகாணங்களிலும், வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் காங்கிரஸ் பெருமிதமான வெற்றிபெற்றது. பஞ்சாபிலும், வங்காளத்திலும் முஸ்லிம்களே பெரும்பான்மைக் கட்சியினராக இருந்தனர். அஸாமிலும், சிந்து மாகாணத்திலும், பல கட்சிகள் இருந்ததால், எந்தக் கட்சியும் மற்ற கட்சிகளைக் காட்டிலும் பெரும்பான்மைக் கட்சி என்று கூறக்கூடிய நிலையில் இல்லை.

அஸாமிலும் சிந்து மாகணத்திலும் கூட்டு மந்திரி சபைகள் (coalition cabinets) ஏற்பட்டன. பஞ்சாபிலும் வங்காளத்திலும் முறைப்படி மந்திரி சபைகள் அமைக்கப்பட்டன. கவர்னர்கள் தங்கள் தனிப்பட்ட அதிகாரங்களை உபயோகப்படுத்துவதில்லை என்று உறுதி கூறினாலொழிய மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகளுக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி உத்தரவிட்டது. சட்டப்படி கவர்னர்கள் அத்தகைய உறுதிமொழியைக் கொடுக்க முடியாத நிலையில் இருந்தார்களாதலால், சட்ட சபைகளிலிருந்த காங்கிரஸ் கட்சியினரல்லாத அங்கத்தினர்களை இடைக்கால மந்திரிகளாக நியமித்து மற்ற ஏழு மாகாணங்களின் அரசாங்கத்தைக் கவர்னர்கள் நடத்தினார்கள். இங்கிலையில் அப்போது இராஜப்பிரதிநிதியாயிருந்த லின்லித்கோ பிரபு கவர்னர்கள் தங்கள் தனிப்பட்ட அதிகாரங்களை உபயோகிப்பதன் மூலம் மந்திரிகளுக்கும் அவர்களுக்குமிருந்த தொடர்பில் நெருக்கடியையும் கருத்து வேறுபாட்டையும் உண்டுபண்ணமலிருப்பதற்கு உண்மையாக முயல்வார்களென்றும், அவ்வாறு ஏதாவது கருத்து வேறுபாடும்

நெருக்கடியும் ஏற்பட்டால் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார்கள் என்றும் எடுத்துக் கூறினார். ஆனால் சில குறிப்பிட்ட விஷயங்களுக்குக் காப்பு இருப்பது அவசியம் என்றும் அவர் கூறினார். மேலும், இந்தியாவில் பூரணப் பொறுப்பாட்சியை நிறுவுவதற் குத் தம்மாலான முயற்சியைச் செய்ய உறுதி பூண்டிருப்பதாக வும் அவர் கூறினார். அதன்பின் காங்கிரஸ்காரர்கள் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ளலாமென்று காரியக் கமிட்டி அறிவித் தது. அதன்பயனாக ஏழு மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிச் சபைகள் ஏற்பட்டன.

இனி மாகாண மந்திரி சபைகள் எவ்வாறு வேலைசெய்தன என்று பார்ப்போம். பஞ்சாபில் ஸர் ஸிக்கந்தர் ஹயத்கான் பிரதம மந்திரியானார். அவர் திறமையும் அனுபவமும் வாய்ந்தவர். முஸ்லிம்கள் மாத்திரமின்றி இந்துக்களையும் சீக்கியர்களையும் அவர் தமது மந்திரி சபையில் சேர்த்துக்கொண்டார். இவ்வாறு பஞ்சாபில் கலப்பு மந்திரிசபை (Composite cabinet) ஏற்பட் டது. 1942-ஆம் ஆண்டில் ஸர் ஸிகந்தர் ஹயத்கான் இறந்தார். அவர் தொடங்கிய முறையையே அவருக்குப் பின் வந்த பிரதம மந்திரியும் கையாண்டார். வங்காளத்தில் முதல் பிரதம மந்திரி 1943-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் வரையில் பதவி வகித்தார். ஆனால் வங்காளத்திலிருந்த அரசியல் கட்சிகளுக்குள் அடிக்கடி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளால் மந்திரி சபையின் அமைப்பி லும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. முடிவாக முஸ்லிம் லீக் அங்கத்தினர்களே பெரும்பான்மையாக இருந்த மந்திரி சபை ஏற் பட்டது. அஸாமிலும், சிந்து மாகாணத்திலும் எந்தக் கட்சியும் பெரும்பான்மைக் கட்சி என்ற நிலையில் இல்லாததால் அங்கு எந்த மந்திரி சபையும் நெடுநாள் நிலைத்து நிற்கவில்லை. காங்கிரஸ் வெற்றிபெற்ற ஆறு இந்து மாகாணங்களில் இந்துக்களும் காங்கி ரஸ் கொள்கைகளை ஒத்துக்கொண்ட முஸ்லிம்களும் சேர்ந்த மந்திரி சபைகள் ஏற்பட்டன. இந்து மாகாணங்களிலும் வட மேற்கு எல்லைப்புற மாகாணத்திலும் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கும்வரையில் மந்திரிசபைகள் நிலையாக இருந்தன. ஆனால் அதன்பிறகு அந்த ஏழு மாகாணங்களிலுமிருந்த மந்திரி கள் ராஜிநாமாச் செய்தார்கள். அதன் காரணங்கள் பின்னர்க் கூறப்படும். ஆகவே, அந்த மாகாணங்களில் புதிய அரசியல் திட் டம் முறிந்தது. சட்டப்படி கவர்னர்களே ஆலோசனையாளர் களின் உதவியால் அந்த மாகாணங்களின் அரசாட்சியை நடத்தி

ஞர்கள். 1941-ஆம் ஆண்டில் ஒரிஸாவில் ஒரு காங்கிரஸ் சம்பந்தப்படாத கூட்டு மந்திரிசபை ஏற்பட்டது. 1943-ஆம் ஆண்டில் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் முஸ்லிம் லீக் மந்திரி சபை ஏற்பட்டது. மற்றைய ஐந்து மாகாணங்களில் கவர்னர்களின் ஆட்சியே நடந்தது.

எல்லா மாகாணங்களிலும் மந்திரிசபைகள் ஏறக்குறைய நன்ருகவே வேலைசெய்தன. 1939-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் லின்லித்கோ பிரபு மாகாண மந்திரி சபைகள் எல்லாம் தங்களுடைய வேலையை மிக வெற்றிகரமாக நடத்தின என்று கூறினுர். பெரும்பான்மையான மாகாணங்களில் சமூக முன்னேற்றத்திற்கான பல சட்டங்கள் நிறைவேறின. ஆனுல் வங்காளத்தில் முஸ்லிம் அல்லாத வகுப்பினருடைய நலத்தைப் பாதிக்கும் முறையில் அரசாங்கம் நடந்துகொண்டதென்று பெரும்புகார் ஏற்பட்டது. பஞ்சாபிலும் இதேமாதிரியான புகார் ஓரளவு ஏற்பட்டது. முஸ்லிம்களோ வெனில் ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் தங்களுடைய நலனை அரசாங்கம் கவனிக்கவில்லை என்றும், அதற்குப் பதிலாகத் தாங்கள் பல வகையில் மிகத் துன்புறுத்தப்பட்டதாகவும் புகார் செய்தார்கள். பாடசாலைகளில் ஹிந்தி கட்டாய பாடமாக நுழைக்கப்பட்டதைச் சென்னை மாகாணவாசிகள் கடுமையாக எதிர்த்தார்கள். அது போலவே மத்திய மாகாணத்தில் கல்வித்துறையில் ஏற்பட்ட சில மாறுதல்களை அந்த மாகாணத்தில் இருந்த முஸ்லிம்கள் மாத்திரமன்றி வெளியிலிருந்த முஸ்லிம்களும் மிக வன்மையாகக் கண்டித்தார்கள்.

இந்த விஷயங்களிலெல்லாம் கவர்னர்கள் தலையிட்டுத் தங்களுடைய தனி அதிகாரங்களை உபயோகப்படுத்தவில்லை. அது அவசியமில்லை என்று அவர்கள் கருதினுர்கள். எனினும், இவற்ருலும் வேறு கரணங்களாலும் ஏற்பட்ட அதிருப்தி முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலிருந்த பிளவை அதிகப்படுத்தியது. நாடெங்கும் காங்கிரஸ்காரர்கள் சென்று தங்களுடைய கட்சியின் கொள்கைகளையும் அவற்ருல் மக்களுக் கேற்படக்கூடிய நன்மைகளையும் விளக்கிக் கூறினுர்கள். முஸ்லிம் லீக் அங்கத்தினர்களும் அதேமாதிரி தங்களுடைய கட்சியைப் பற்றித் தீவிரமாகப் பிரசாரம் செய்தார்கள். இந்துமகாசபை வழக்கம்போலக் காங்கிரஸ் இந்துக்களின் நலத்தைப் புறக்கணிப்பதாகக் குற்றம் சாட்டியதோடு இந்துக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய பலத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று

பிரசாரம் செய்தது. முஸ்லிம் லீக் ஒன்றுதான் உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த முஸ்லிம்களின் ஸ்தாபனமென்று அதைச் சேர்ந்தவர்கள் கூறத் தொடங்கினார்கள். அதை ஒரு சில முஸ்லிம்களும் மற்ற கட்சிகளிற் சிலவும் ஒத்துக்கொள்ள வில்லை. மேலும் இந்திய அரசியல் திட்டத்தைப்பற்றி முஸ்லிம் லீகின் கொள்கைகளும் நாளடைவில் மாறின. சுதேச அரசர் களால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களால் மத்தியச் சட்டசபை யில் இந்துக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிவிடுமென்று அஞ்சிச் சமஷ்டி அரசியல் கூடாதென்று முதலில் முஸ்லிம் லீக் கூறிற்று. ஆனால் பெரும்பான்மைக் கட்சியின் ஆதரவுமாத்தி ரம் பெற்ற மந்திரிசபை இந்தியாவுக்கு உதவாதென்றும், பெரும் பான்மைக் கட்சியோடு மற்ற கட்சிகளும் சேர்ந்து மந்திரி சபையை அமைக்க முடியுமானால் அத்தகைய பார்லிமெண்டு அர சாட்சிமுறை இந்தியாவுக்குப் பொருத்தமா யிருக்குமென்றும் முஸ்லிம் லீக் கட்சியினர் நாளடைவில் கூறத் தொடங்கினார்கள். கடைசியாக 1940-ஆம் ஆண்டில் வசந்தகாலத்தில் லாகூரில் நடந்த முஸ்லிம் லீக் கூட்டத்தில் பாகிஸ்தானைத் தனியாகப் பிரித்துவிடவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. பாகிஸ்தான் என்ற சொல்லுக்குப் புனிதநாடு என்று பொருள். இந்தியாவின் வடமேற்கிலும் வடகிழக்கிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கிறார்கள். இத்தகைய பிரதேசங்களைத் தனியாகப் பிரித்து, பூரண சுயஆட்சி பெற்ற இராஜ்யங்களாக மாற்றியமைக்கவேண்டும் என்றும், அவ்வாறு செய்வதற்கு ஒத் துக்கொள்ளாத எத்தகைய அரசியல் திட்டத்தையும் முஸ்லிம் லீக் ஏற்றுக்கொள்ளாது என்றும் லாகூர்த் தீர்மானம் கூறியது.

இதற்குள்ளாகச் சுதேச மன்னர்களும் சமஷ்டியில் சேரும் எண்ணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிடத் தொடங்கி னார்கள். அரசர்களால் நியமிக்கப்பட்ட - மக்களால் தேர்ந்தெ டுக்கப்படாத - அங்கத்தினர்கள் நிறைந்த சட்டசபையைக் காங் கிரஸ் ஏற்றுக்கொள்ள மறுத்தது என்றும், சுதேச இராஜ்யங்க ளில் வாழ்ந்த மக்கள் மிகப் பெரும்பாலும் இந்துக்களாகவே இருந்ததால் அத்தகைய இராஜ்யங்களிலிருந்து வரக்கூடிய பிரதி நிதிகளைக்கொண்ட சட்ட சபையில் இந்துக்களே பெரும்பான் மைக் கட்சியினராக இருப்பார்கள் என்ற காரணத்தால் முஸ்லிம் லீகும் சமஷ்டியை வெறுத்ததென்றும் ஏற்கெனவே கூறியிருக்கி றோம். இதையெல்லாம் சுதேச அரசர்கள் கவனித்துக்கொண்டி ருந்தார்கள். சுதேச இராஜ்யங்களில் அரசியல் சீர்திருத்தம்

ஏற்படவேண்டுமென்று காங்கிரஸ் விரும்பியது. பிரிட்டிஷ் இந்தியாவில் நடந்த கிளர்ச்சிகளைப் பார்த்து ஸம்ஸ்தானக் குடிகளும் அரசியல் சீர்திருத்தத்தை விரும்பி ஸம்ஸ்தானங்களில் கிளர்ச்சி செய்யத் தொடங்கினுர்கள். இத்தகைய கிளர்ச்சி வட்டமேஜை மகாநாடு கூடுவதற்கு முன்னரே தொடங்கிவிட்டது. அரசியல் சீர்திருத்தம் செய்ய விரும்பிய சுதேச அரசர்களைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தடை செய்யாது. ஆனுல் அரசியல் சீர்திருத்தம் செய்யுமாறு எந்த அரசர்களையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வற்புறுத்த முடியாது. முதலில் காங்கிரஸ் ஸம்ஸ்தானங்களில் வேலை செய்வதில்லையென்றும், தங்களுடைய முன்னேற்றத்திற்காகச் ஸம்ஸ்தானக் குடிகளே பாடுபடவேண்டுமென்றும் கூறியது. ஆனுல் நாளடைவில் ஸம்ஸ்தானங்களிலும் வேலை செய்வதற்குத் தயாராயிருப்பதாகக் காங்கிரஸ் கூறிற்று. அதன் பயனுக அகில இந்திய ஸம்ஸ்தானக் குடிகளின் மகாநாட்டுக் கூட்டங்களில் காங்கிரஸ் தலைவர்கள் பலர் முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார்கள். பல பெரிய ஸம்ஸ்தானங்களிலும் கலகங்கள் ஏற்பட்டன. அவைகள் எளிதில் அடக்கப்பட்டபோதிலும் அவற்றின் பயனுகச் சமஷ்டியில் சேரும் விஷயத்தில் சுதேச அரசர்களுக்கிருந்த விருப்பமின்மை அதிகரித்தது. ஆகவே, அந்த விஷயத்தைப்பற்றி மன்னர்பிரான் பிரதிநிதிக்கும் சுதேச அரசர்களுக்கும் நடந்த பேச்சு வார்த்தைகள் அதிகப் பயன் அளிக்கவில்லை. இரண்டாம் உலக யுத்தம் ஏற்பட்ட பிறகு அந்தப் பேச்சு வார்த்தைகள் அடியோடு நிறுத்தப்பட்டன.

மேலே கூறியவற்றுல் ஸம்ஸ்தானங்களில் அரசியல் சீர்திருத்தம் ஏற்படவே இல்லையென்று நினைத்துவிடக்கூடாது. பெரிய ஸம்ஸ்தானங்களில் மைசூர் இந்தத் துறையில் மிக முன்னேற்றமடைந்தது. அங்கு இரு பிரிவுகளுடைய சட்டசபை ஸ்தாபிக்கப்பட்டது. வரவு செலவுத் திட்டம் உள்பட எல்லாச் சட்டங்களையும்பற்றி விவாதிப்பதற்குச் சட்ட சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அமைச்சர்கள் ஐவரில் இருவர் சட்டசபையில் உத்தியோகஸ்தரல்லாத அங்கத்தினர்கள் கொச்சியில் இரட்டையாட்சி முறை ஏற்பட்டது. ஐதராபாத்திலும் சட்டசபை ஏற்படுத்தப்பட்டு அதன் அங்கத்தினர்களில் சுமார் பாதிப்பேர் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென்ற அரசியல் சீர்திருத்தம் ஏற்பட்டது. அந்தச் சட்டசபைக்கு மசோதாக்களையும் வரவு செலவுத்திட்டத்தையும் விவாதிப்பதற்கு ஓரளவு அதிகாரம் அளிக்கப்பட்டது. காஷ்மீரத்திலும், ராம்பூரிலும் இத்தகைய

அரசியல் திட்டங்கள் அமுலுக்கு வந்தன. மைசூர் சட்டசபை களைப்போன்ற சட்டசபைகள் குவாலியரிலும், இந்தூரிலும், பரோடாவிலும் ஏற்பட்டன. ஆனால், அந்தச் சட்டசபைகளின் அதிகாரம் மைசூர் சட்டசபையின் அதிகாரத்தை விட ஓரளவு குறைந்தது. இராஜ புதன ஸம்ஸ்தானங்களில் ஒன்றாகிய ஜெய்ப் பூரில் அதிக முன்னேற்றமான ஓர் அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது. சிறிய ஸம்ஸ்தானங்கள் சிலவற்றில் சட்டசபைகளும் சிலவற்றில் ஆலோசனைக் கவுன்சில்களும் ஏற்பட்டன.

நீதி பரிபாலனத் துறையிலும் ஸம்ஸ்தானங்களில் மிக முக்கியமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. பெரிய ஸம்ஸ்-தானங்களில் சிறந்த தகுதியுடையவர்களையே நீதிபதிகளாக நியமிக்கும் பழக்கம் ஏற்பட்டது. பல ஸம்ஸ்தானங்களில் நீதித் துறையும் நிர்வாகத் துறையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. பெரிய ஸம்ஸ்தானங்களிலெல்லாம் உயர்நீதிமன்றங்கள் அமைக் கப்பட்டன. நீதிபரிபாலனத் துறையிலும் போலீஸ் இலாகா விலும் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும் விஷயத் தில் ஒன்றையொன்று அடுத்தடுத்துள்ள சிறிய ஸம்ஸ்தானங்கள் பல ஒன்றாகச் சேர்ந்து கூட்டு ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்தன.

நூற்றுக்கணக்கான சிறிய சுதேச இராஜ்யங்கள் மேற்கிந்தி யாவில் இருந்தன. அவைகளின் வருவாய் மிகக் குறைவாயிருந்த தால் நவீன முறையில் அரசியலை நடத்துவதற்கு அவைகளால் முடியவில்லை. சுதேச மன்னர்களின் சபையில் அவைகளுக்குப் பிரதிநிதித்துவமில்லை. ஆகவே, அத்தகைய சிறிய இராஜ்யங்களை அண்மையிலிருந்த பெரிய இராஜ்யங்களோடு இணைத்துவிட்டால் அவைகள் சமூகத் துறையிலும், நிர்வாகத் துறையிலும் முன் னேற்றமடைய முடியும் என்று கருதப்பட்டது. அதனால் சிறிய இராஜயங்களைப் பெரிய இராஜ்யங்களோடு இணைத்து விடுவ தற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்து விட்டதென்று லின்லித்கோ பிரபு தெரிவித்தார்.

1939-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுக்கும் ஜெர்மனிக்கும் சண்டை ஏற்பட்டுவிட்ட தென்று இராஜப்பிரதிநிதி அறிவித்தார். காங்கிரஸ் மகாசபை நாசிக் கொள்கையையும் பாசிசக் கொள்கையையும் கண்டித்தது. எனினும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் அனுமதியைக் கேட்காமல் சண்டையிலிறங்கியது சரியன்றென்றும் இந்தியா

வுக்குச் சுயராஜ்யம் அளித்து, அந்தத் தகுதிக்கேற்ற அதிகாரத்தை உடனடியாகக் கூடுமான அளவு அளிப்பதற்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒத்துக்கொண்டாலொழியக் காங்கிரஸ் கட்சி யுத்த நடவடிக்கைகளில் பங்கெடுத்துக்கொள்ள முடியாதென்றும் தீர்மானித்தது. முஸ்லீம் லீகைக் கேட்காமலும், அதன் அனுமதி பெறாமலும் எந்தவிதமான அரசியல் சீர்திருத்தமும் செய்வ தில்லை என்று பிரிட்டிஷ் அரசாங்கம் வாக்குறுதி கொடுத்தா லொழியச் சண்டை நடவடிக்கைகளில் முஸ்லீம் லீக் கலந்து கொள்ள முடியாதென்று கூறிற்று. மற்றக் கட்சிகள் சண்டை நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு முழு மனதுடன் உதவி செய்ய முன்வந்தன. ஆனால் அவைகளும் ஓரளவு அரசி யல் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கத் தைக் கேட்டன. இந்தியாவுக்கும் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்குவதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முடிவான நோக்க மென்றும், சண்டை முடிந்த பின்னர் இந்தியர்களுடைய இஷ்டப் படி 1935-ஆம் ஆண்டுத் திட்டம் மாற்றப்படும் என்றும் இராஜப்பிரதிநிதி கூறினார். காங்கிரஸ் அந்தப் பதிலை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே மாகாணங்களிலிருந்த காங்கிரஸ் மந்திரிகள் எல்லாம் இராஜிநாமாச் செய்தனர். அந்த மாகாணங் களின் ஆட்சியைக் கவர்னர்களே ஏற்று நடத்தத் தொடங்கி னார்கள்.

1940-ஆம் ஆண்டு மே மாதத்தில் இங்கிலாந்தில் வின்ஸ்டன் சர்ச்சில் பிரதம மந்திரியானார். அவருடைய மந்திரி சபையில் அமரி யென்பவர் இந்தியா மந்திரிப்பதவியை வகித்தார். அந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் இராஜப்பிரதிநிதி ஒரு விளம்பரம் செய்தார். அந்த விளம்பரத் தின் பயனாக இந்திய அரசியல் சீர்திருத்த விஷயத்தில் ஒரு புதிய நிலை ஏற்பட்டது. இந்தியாவின் அரசியல் முன்னேற்றப் பாதை யின் ஒவ்வொரு படியையும் நிர்ணயிப்பதும், அதை நிர்ணயித்த பிறகு அதற்கேற்ற திட்டத்தைத் தயாரிப்பதும் இதுவரையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்பாயிருந்தது. ஆனால் இனி மேல் புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் பொறுப்பு அடிப்படையில் இந்தியர்களையே சேர்ந்தது என்றும், அந்தப் பொறுப்பை இந்தியர்கள் நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும் முறையில் சண்டை முடிந்ததும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஓர் அரசியல் நிர்ணயசபை கூட்டப்படும் என்றும் இராஜப்பிரதிநிதி கூறிவிட்டார். அந்தச் சபையால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை

இந்தியாவின் பல வேறு வகுப்பினரும் அரசியல் கட்சிகளும் ஒத்துக்கொள்ளவேண்டும். அதை எந்த முக்கியமான கட்சியும் ஏற்றுக்கொள்ள மறுக்கவில்லை என்று தெரிந்தால் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அரசியலதிகாரத்தை மாற்றிவிடும். ஆனால் அரசியல் நிர்ணய சபையால் தயாரிக்கப்பட்ட திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு எந்தக் கட்சியையும் பிரிட்டிஷ் அரசாங்கம் வற்புறுத்தாது. இதற்கிடையில் எல்லாக் கட்சிகளும் வகுப்புகளும் யுத்தத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உதவி செய்யவேண்டுமென்று இராஜப்பிரதிநிதி கேட்டுக்கொண்டார்.

இந்த "ஆகஸ்டு" அறிக்கை லிபரல் கட்சிக்கும் இந்துமகா சபைக்கும் திருப்தி யளித்தது. முஸ்லீம் லீகும் அதை ஏற்றுக் கொண்டது. ஆனால் அரசாங்கத்தில் முஸ்லீம்களுக்கு இந்துக்களுக்குச் சமமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று முஸ்லீம் லீக் கேட்டது. சண்டை முடியும் வரையில் காத்திருப்பதற்குக் காங்கிரஸ் விரும்பவில்லை. ஆகவே இந்தியர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் முறையில் "தனிப்பட்ட நபர்களின் சத்தியாக்கிரகத்தை" காங்கிரஸ் தொடங்கியது. அதன் பயனாகப் பல தலைவர்களும் மற்ற காங்கிரஸ்காரர்களும் சிறையிலடைக்கப் பட்டார்கள்.

ஓராண்டுக்குப் பின் இராஜப்பிரதிநிதியின் நிர்வாக சபை பெரிதாக்கப்பட்டது. அதன் அங்கத்தினர்களில் மிகப் பெரும் பான்மையோர் இந்தியர்களாயிருந்தார்கள். அதே சமயத்தில் முப்பது அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு தேசீயப் பாதுகாப்புச் சபையும் அமைக்கப்பட்டது. அவ்வங்கத்தினர்கள் சுதேச ராஜ்யங்களுட்பட இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நியமிக்கப்பட்டார்கள். அந்தச் சபை அவ்வப்போது கூடி யுத்த நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசித்தது.

காங்கிரசும் முஸ்லிம் லீகும் யுத்த சேவையில் கலந்து கொள்ளாவிட்டாலும் இந்தியாவின் முஸ்தீப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. 1941-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஜப்பானும் யுத்தத்திலிறங்கியது. அடுத்த ஆண்டின் ஆரம்ப மாதங்களில் இந்தியாவுக்குக் கிழக்கிலுள்ள நாடுகளிலும் கடல்களிலும் ஜப்பான் அமோகமான வெற்றிகளை அடைந்தது. ஜப்பானியர் சிங்கப்பூரையும், மலேயாவையும், அண்மையிலிருக்கும் தீவுக் கூட்டத்தையும் கைப்பற்றிக்கொண்டு, பர்மாவின் மீது படையெடுத்தனர். இவ்வாறு யுத்தம் இந்தியாவின் கிழக்

கெல்லைக்கு வந்துவிட்டது. அதனால் இந்தியாவுக்கும் ஆபத்து நேரலாம் என்ற நிலை ஏற்பட்டது.

ஆகவே 1942-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சர்ச்சில் இந்தியாவுக்கு மிகுந்த ஆபத்தான நிலை ஏற்பட்டுவிட்டதென்றும் ஜப்பானியரிடமிருந்து இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு இந்தியரனைவரையும் ஒன்று சேர்ப்பது இன்றியமையாததென்றும் கூறினார். அதற்காகப் பிரிட்டிஷ் யுத்த மந்திரிசபையின் அங்கத்தினரான ஸர் ஸ்டாபர்டு கிரிப்ஸ் என்பவர் இந்தியாவுக்குத் தூது வந்தார். அவர் மூன்று வாரம் டில்லியில் தங்கி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சம்மதத்துடன் அவர் கொண்டுவந்த திட்டத்தைப்பற்றி எல்லாக் கட்சிகளின் தலைவர்களுடனும் சுதேச அரசர்களின் பிரதிநிதிகளுடனும் கலந்து ஆலோசனை செய்தார்.

மன்னர்பிரான் தலைமையில் பிரிட்டனும் மற்ற டொமினியன்களும் உள்நாட்டு விஷயங்களிலும் வெளிநாட்டு விஷயங்களிலும் அனுபவித்த எல்லா உரிமைகளையும் இந்தியாவுக்கு அளித்து, அதை மற்ற டொமினியன்களுக்கு எவ்விதத்திலும் தாழ்வில்லாத, எல்லாத் துறைகளிலும் சமானமான, அந்தஸ்துடைய ஒரு புதிய ஐக்கியமாக மாற்றுவதுதான் கிரிப்ஸ் திட்டத்தின் லட்சியம். இந்த லட்சியத்தை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் :—

1. சண்டை முடிந்தபின் சுதேச அரசர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களையும் மாகாண சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களையும் கொண்ட ஓர் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படவேண்டும்.

2. இந்த ஐக்கியத்தில் சேர விரும்பாத மாகாணமோ, மாகாணங்களோ இருந்தால் அவைகள் ஒரு தனிப்பட்ட ஐக்கியத்தையோ ஐக்கியங்களையோ ஏற்படுத்திக் கொள்ளுவதற்கு உரிமையுண்டு.

3. இனத்தையும் மதத்தையும் அடிப்படையாகக் கொண்ட சிறுபான்மை வகுப்பினர்களின் நலத்தைக் காப்பதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இருந்த பொறுப்பைப்பற்றிய விஷயத்தில் அரசியல் நிர்ணயசபைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் உடன்படிக்கை ஏற்படவேண்டும்.

4. புதிய அரசியல் திட்டம் உருவாகும வரையில் இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்புப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கையி

லேயே இருக்கவேண்டும். எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் எல்லா வகுப்பினரின் ஒத்துழைப்பையும் பெற்ற ஓர் இந்திய மந்திரிசபை அமைக்கப்படவேண்டும். இவ்வாறு அமைக்கப் பட்ட இந்திய அரசாங்கம் இந்தியாவின் பாதுகாப்பு விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு உதவி செய்யவேண்டும்.

இந்தத் திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் இரண்டு முக்கிய காரணங்களுக்காக ஒத்துக்கொள்ளவில்லை. முதலாவது, அரசர் களால் நியமிக்கப்பட்ட — மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத — பிரதிநிதிகள் ஸம்ஸ்தானங்களின் சார்பாக அரசியல் நிர்ணயசபை யில் இடம் பெறுவதைக் காங்கிரஸ்காரர்கள் விரும்பவில்லை. இரண்டாவதாக, மாகாணங்களும், ஸம்ஸ்தானங்களும் இந்திய ஐக்கியத்தில் சேர மறுப்பதற்கு உரிமை இருந்தால் அதன் மூலம் இந்தியாவின் ஒற்றுமை குலையக்கூடும் என்று காங்கிரஸ் அஞ்சி யது. இவ்வாறு கிரிப்ஸ் திட்டத்தின் நீண்டகால அம்சங்களைக் காங்கிரஸ் ஒத்துக்கொள்ள மறுத்தாலும், அதன் குறுகிய கால அம்சத்தை ஒத்துக்கொள்ளத் தயாராயிருந்தது. ஆனால் அதன் படி அமைக்கப்படும் தேசீய அரசாங்கத்திற்கு உடனடியாக உண்மையான பொறுப்பும் அதிகாரமும் வழங்கப்படவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தியது.

கிரிப்ஸ் திட்டத்தை முஸ்லிம் லீகும் ஒத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் ஒரே இந்திய ஐக்கியத்தை ஏற்படுத்துவதுதான் அத் திட்டத்தின் அடிப்படையான நோக்கம் என்றும், அத்திட்டத் தின் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட ஐக்கியங்கள் ஏற்படுவது அவ் வளவாக நடைமுறையில் நிகழக்கூடாத காரியமென்றும் ஜின்னா வும் மற்ற முஸ்லிம் லீக் தலைவர்களும் கருதினார்கள். அதனால் கிரிப்ஸ் திட்டம் ஜின்னாவின் பாகிஸ்தான் திட்டத்திற்குப் போதிய அளவு ஆதரவு அளிக்கவில்லையென்று முஸ்லிம் லீக் குறை கூறிற்று. இந்திய ஐக்கியத்திலிருந்து பஞ்சாப் வேறாகப் பிரிக்கப் படலாமென்று அஞ்சிய சீக்கியர்கள் கிரிப்ஸ் திட்டத்தை எதிர்த் தார்கள். ஸம்ஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் பட்டிருந்த உடன்படிக்கைகள் காப்பாற்றப்படும் என்று உறுதி கூறினாலொழிய சுதேச அரசர்கள் அரசியல் நிர்ணய சபையில் சேர முடியாதென்று கூறிவிட்டார்கள்.

தம்முடைய திட்டத்தின் அடிப்படைக் கொள்கையை இந்தி யர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்றும், சண்டை முடியும் வரை யில் நிலைத்திருக்கக்கூடிய ஒரு தேசீய அரசாங்கத்தை ஸ்தாபிக்க

முடியுமென்றும் கிரிப்ஸ் நம்பினர். தேசீய அரசாங்கம் ஏற்பட்டால் இராஜப்பிரதிநிதி தம்முடைய அதிகாரத்தை உபயோகப்படுத்தி மந்திரிசபையின் தீர்மானங்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் நிராகரிக்கமாட்டாரென்று உறுதி கூறினால்தான் காங்கிரஸ் ஒத்துழைக்க முடியுமென்று கூறிவிட்டது. ஆனால் ஏற்கெனவே யிருந்த அரசியல் திட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தாலொழிய இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தகைய திருத்தம் செய்வதற்கு ஏற்ற சட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சண்டை நடந்து கொண்டிருந்த அந்தச் சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் தயாராக இல்லை. இத்தகைய காரணங்களால் கிரிப்ஸ் தூது வெற்றி பெறவில்லை. ஆகவே கிரிப்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். கிரிப்ஸ்திட்டம் கைவிடப்பட்டதெனினும் அதன் அடிப்படைக் கொள்கைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் கைவிடவில்லையென்று இந்தியா மந்திரி பார்லிமெண்டில் அறிவித்தார்.

கிரிப்ஸ் திட்டம் தோல்வியடைந்தபின் இந்தியாவில் கவலைக்கிடமான நிலைமை ஏற்பட்டது. ஜூலை மாதத்தில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி இந்தியாவில் ஆங்கில ஆட்சி உடனடியாக அழியவேண்டுமென்றும், பிரிட்டிஷார் தாமாகவே இந்தியாவை விட்டுச் செல்லாவிட்டால் காந்திஜீயின் தலைமையில் அஹிம்சை முறையில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப்பதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தால் மற்ற அரசியல் கட்சியினர் மிகவும் கலவரமடைந்தனர். அதனால், அவர்கள் அதை வன்மையாகக் கண்டித்தார்கள். ஆனால், ஆகஸ்ட் மாதம் எட்டாம் தேதியன்று பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களுள் மிகச் சிலரைத் தவிர மற்றவர்களெல்லாம் அந்தத் தீர்மானத்தை யாதரித்ததால் அது காங்கிரஸ் மகாசபையால் அங்கீகரிக்கப்பட்டது. இதுவே “ வெள்ளையனே வெளியே போ ” என வழங்கிய தீர்மானம். அடுத்த நாள் காங்கிரஸ் சட்டவிரோதமான ஸ்தாபனமென்று அரசாங்கம் விளம்பரப்படுத்தி, காந்திஜீயையும், பல காங்கிரஸ்காரர்களையும் சிறையிலடைத்தது. அதன் பயனாக நாடெங்கும் கலகங்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. அந்த ஆண்டின் முடிவிற்குள் வழக்கமான அடக்கு முறையைக் கையாண்டு அரசாங்கம் நிலைமையை ஒருவாறு சமாளித்தது.

அதிகாரம்—54

பாதுகாப்பும் அரசாங்க வரவு செலவும்.

முதல் உலக யுத்தத்தின்போது இந்தியாவின் பாதுகாப்புக் காகப் பலவிதப் போர்க் கருவிகள் வேண்டி யிருந்தனவெனினும், போர்வீரர்கள்தான் அதைவிட அதிகமாக வேண்டியிருந்தார்கள். ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின்போது சிக்கலான போர்க் கருவிகளும், அவற்றைக் கையாளுவதற்கேற்ற பயிற்சியுடைய ஆட்களும் மிகவும் அதிகமாகத் தேவையாயிற்று. இந்த யுத்தத் தின்போது முதலில் மேற்கிலிருந்து இந்தியாவுக்கு ஆபத்து ஏற் படும்போலிருந்தது. பின்னர்க் கிழக்கிலிருந்து ஜப்பானியர்கள் படையெடுக்கக்கூடும் என்ற நிலை ஏற்பட்டதால் கிழக்கெல்லை யைப் பாதுகாப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவசியமான தோடு, பர்மாவிற்கனுப்புவதற்கும் போர்வீரர்களையும், படைக் கலங்களையும் தயார் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டது. முதல் உலக யுத்தத்தின்போது இந்தியாவின் கடற்கரையைக் காப் பது பிரிட்டிஷ் கப்பற்படையின் தனிப் பொறுப்பாயிருந்தது. ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின்போது அந்த வேலையில் இந்தியாவும் பங்கெடுத்துக்கொண்டது. இந்த இரண்டு யுத்தங் களுக்கும் இடைப்பட்ட காலத்தில் பாதுகாப்புத் துறையில் இந்தி யாவில் ஏற்பட்ட வளர்ச்சியைப்பற்றி இப்பொழுது கூறுவோம்.

சிப்பாய்க் கலகத்திற்குப் பிறகும், இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்திலும், இந்தியாவின் பாதுகாப்பு இலாகாவில் ஏற் பட்ட மாறுதல்களைப்பற்றி நாற்பத்து மூன்றும் அதிகாரத்திலும் நாற்பத்து ஏழாம் அதிகாரத்திலும் கூறி யிருக்கிறோம். முதல் உலக யுத்தத்திற்குப் பிறகு இந்திய சைனியத்தின் மூன்றில் ஒரு பகுதி ஆங்கிலப் போர் வீரர்களால் ஆக்கப்பட்டது. அந்தப் போர் வீரர்களும் அவர்களுடைய ஆபீஸர்களும், இங்கிலாந்தி லிருந்து இந்தியாவிற்கு வந்து ஒரு குறிப்பிட்ட காலம் சேவை செய்த பின் திரும்பிப் போய்விடுவார்கள். அவர்களுக்குப் பதி லாக இங்கிலாந்திலிருந்து வேறு போர்வீரர்களும் ஆபீஸர்களும் வருவார்கள். அவர்களைத் தவிர இந்தியச் சைனியத்தில் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் காலாட் படையினராகவும், குதிரைப் படையினராகவும் இருந் தார்கள். அவர்களுடைய ஆபீஸர்கள் மிகப் பெரும்பாலும் ஆங்கி லேயர்களாகவே யிருந்தார்கள். பீரங்கிப் படையிலும், ஆகாய

விமானப் படையிலும் இந்தியர் யாரும் கிடையாது. போர் வீரர் கள் ஏறக்குறைய இந்தியாவின் வடக்குப் பகுதியிலிருந்தே தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். போர்வீரர்களை ஓரிடத்திலிருந்து இன்னொ ரிடத்திற்குக் கொண்டுபோவதும், துறைமுகங்களை மேற்பார்வை செய்வதுமே இந்தியக் கப்பற்படையின் கடமைகள். பிரிட்டிஷ் கப்பற்படைக்கு ஆண்டுதோறும் இந்தியா ஒரு லட்சம் பவுன் உதவிநிதியாக அளித்தது. மேலும் உலக யுத்தத்தின் செலவுக் காக இந்தியா பத்துக்கோடி பவுன் பிரிட்டனுக்குக் கொடுத்தது. 1922-ஆம் ஆண்டில் பாதுகாப்புக்காக இந்தியா அறுபத்தெட்டுக் கோடி ரூபாய் செலவு செய்தது. அடுத்த ஆண்டு அது அறுபத்தி ரண்டு கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

பொது மக்களும், சட்டசபை அங்கத்தினர்களும், இந்தியப் பாதுகாப்பிலாகா அமைப்பைப்பற்றி அடிக்கடி குறைகூறத் தொடங்கினார்கள். மத்திய அரசாங்கத்தின் வருமானத்தையும், மாகாண அரசாங்கங்களின் வருமானத்தையும் ஒன்றாகச் சேர்த் தால் அதில் நூற்றுக்கு முப்பது பங்கு பாதுகாப்புக்காகவே செலவு செய்யப்பட்டது. அதனால் மக்களுடைய முன்னேற்றத் திற்கான திட்டங்களுக்குச் செலவு செய்யப் போதுமான பணம் கிடைக்கவில்லை. மேலும் இந்தியர்களுக்கும் ஆபீசர் பதவிகள் கொடுக்கலாம் என்று சட்டம் இருந்தாலும் மிகச் சில இந்தியர் களே அப்பதவிகளுக்கு நியமிக்கப்பட்டார்கள். இவ்வாறு பாது காப்பிலாக்காவின் குறைகளை எடுத்துக் கூறியதுமன்றி, இந்தியத் தலைவர்கள் ஒரு தேசிய சைனியத்தை ஏற்படுத்த வேண்டுமென் றும் அதற்கு வேண்டிய போர்வீரர்களை இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்த எல்லா வகுப்புகளைச் சேர்ந்த மக்களி டையிலிருந்தும் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி னார்கள்.

மேலே கூறிய குறைகளை நிவிர்த்திப்பதற்கான நடவடிக்கை களை அரசாங்கம் எடுக்கத் தொடங்கியது. போர் வீரர்களின் எண் ணிக்கை குறைக்கப்பட்டது. சிக்கனமான முறைகள் கையாளப் பட்டதால் பாதுகாப்பு இலாகாவின் செலவு 1935-ஆம் ஆண்டில் நாற்பத்து நான்கு கோடி ரூபாயாகக் குறைந்தது. இந்தியாவில் நிறுத்திவைக்கப்பட்ட ஆங்கிலத் துருப்புகளின் செலவுக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் ஆண்டுதோறும் பதினைந்து லட்சம் பவுன் கொடுத்தது. சாண்டு ஹர்ஸடுப் பயிற்சிச்சாலையில் இந்திய இளை ஞர்களுக்கு இராணுவப்பயிற்சி கொடுக்கப்பட்டு ஆபீசர் பதவி களுக்கு நியமிக்கப்பட்டார்கள். அதுபோலவே இந்திய பீரங்கிப்

படையும், இந்திய விமானப்படையும் ஏற்பட்ட பிறகு இந்திய இளைஞர்களுக்கு உல்விச்சிலும், கிரான்வெல்லிலும் பயிற்சியளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்தியாவிலும் ஓரிராணுவக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்று இந்தியர் விரும்பினர். இந்தக் கோரிக்கை வட்டமேஜை மகாநாட்டுக்குப் பின் நிறைவேறத் தொடங்கியது. இளைஞர்களுக்கு இராணுவப்பயிற்சி அளிப்ப தற்காகப் பயிற்சிச்சாலைகள் இந்தியாவில் ஏற்பட்டன. இந்திய ஆபீஸர்களின் எண்ணிக்கை சிறிது சிறிதாக உயர்ந்தது. இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்தபின் அவர்களுடைய எண்ணிக்கை இன்னும் அதிகரித்தது. எல்லா மாகாணங்களிலிருந்தும் எல்லா வகுப்பினர்களிடையிலிருந்தும் பட்டாளத்திற்கு ஆள் சேர்க்கும் முறை வழக்கத்திற்கு வந்தது. வடமேற்குப் பிரதேசங்களிலிருந்து மாத்திரம் போர்வீரர்களைத் தேர்ந்தெடுக்கும் பழக்கம் இருந்த வரையில் இந்தியச் சைனியத்தில் முஸ்லிம்கள் நூற்றுக்கு முப்பது விகிதத்திற்கு மேல் இருந்தார்கள். ஆனால் மற்ற மாகாணங்களைச் சேர்ந்த ஜாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் சைனியத்தில் சேரத் தொடங்கியதும் முஸ்லீம்களின் விகிதம் குறைந்தது.

பாதுகாப்பிலாகாவின் செலவு குறைக்கப்பட்டாலும், சைனியத்தில் நவீன முறைகளைப் புகுத்துவதன் அவசியத்தை இந்திய அரசாங்கம் மறந்துவிடவில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடிப்பதற்குள் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. அதனால் நவீன யுத்ததளவாடங்களுக்கு மிகுந்த தேவை ஏற்பட்டது. அவற்றை உற்பத்தி செய்வதற்காக இந்தியாவில் புதிய தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகளில் வேலை செய்வதற்கேற்ற பயிற்சியும் தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டது.

இந்தியக் கப்பற்படையிலும் மாறுதல்கள் ஏற்பட்டன. கப்பற்படையின் இஞ்சினியர்ப் பகுதிக்கு மாத்திரமின்றி நிர்வாகப் பதவிகளுக்கும் இந்தியர்கள் நியமிக்கப்பட்டார்கள். அரை டஜன் சிறிய கப்பல்களோடு தொடங்கிய இந்தியக் கப்பற்படை நாளடைவில் வளர்ந்தது. இந்தியாவின் பலவேறு பகுதிகளிலிருந்து வீரர்கள்சென்று கடற்படையிற் சேர்ந்தார்கள். இரண்டாம் உலக யுத்தத்தின்போது இந்தியாவிலும் கப்பல்கள் கட்டப்பட்டன. இந்திய விமானப்படையும் கொஞ்சங் கொஞ்சமாக வளரத் தொடங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது இந்திய விமானப்படையும் இந்தியக் கப்பற்படையும் நல்ல தொண்டு செய்து சிறந்த புகழ்பெற்றன.

யுத்தம் தொடங்குவதற்குமுன் இந்தியாவைக் காப்பாற்றும் நோக்கத்துடன் இந்தியாவின் எல்லைக்கு அப்பாலுள்ள இடங்களிலும் முன்னேற்பாடான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்திய அரசாங்கம் உணர்ந்தது. அதனால் வடமேற்கு எல்லையில் வழக்கமாக வைப்பதுபோல் துருப்புகளை வைத்ததோடு மலேயாவுக்கும், ஏடனுக்கும், சோமாலிலாந்துக்கும், இந்தியத் துருப்புகள் அனுப்பப்பட்டன. தரைப்படையை அதிகமாகப் பெருக்கவேண்டுமென்று முதலில் இந்திய அரசாங்கம் நினைக்கவில்லை. ஆனால் 1940-ஆம் ஆண்டின் வேனிற்காலத்தில் இத்தாலியும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டதாலும், பிரான்ஸ் தோற்றுப்போனதாலும், மத்திய தரைக்கடலில் நேசக்கட்சியினரின் நிலைமை மோசமாகிவிட்டது. அதனால் இந்தியாவைக் காப்பதற்குக் கடல் மார்க்கமாக விரைவில் துருப்புகள் வந்து சேர முடியாதென்ற நிலை ஏற்பட்டது. ஆகவே இந்தியத் தரைப்படையைப் பெருக்குவது இன்றியமையாததாயிற்று. பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கத் தொடங்கியதும் ஏராளமான மக்கள் இராணுவத்திற் சேர முன்வந்தனர். ஆனால் போதுமான அளவு கப்பல்கள் இல்லாததாலும், கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருந்ததாலும், வழியில் ஏற்பட்ட ஆபத்துக்களாலும், மற்றைய போர்முனைகளின் தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டியிருந்ததாலும், இந்தியாவுக்கு வேண்டிய நவீன யுத்த தளவாடங்களைப் போதிய அளவில் இந்தியாவுக்குக் கொண்டுவர முடியவில்லை. மேலும் ஏராளமான வீரர்கள் தினம் தினம் பட்டாளத்தில் சேர்ந்துகொண்டிருந்தார்களாதலால் அவர்களுக்குத் தேவையான ஆபீசர்களுக்குப் பயிற்சி அளிப்பதுவும் கஷ்டமாயிருந்தது. ஆனால் நிலைமை கொஞ்சங் கொஞ்சமாக அபிவிருத்தியடைந்தது. அதன் பயனாக 1943-ஆம் ஆண்டின் இறுதியில் இந்திய சைனியத்தில் சுமார் இருபது லட்சம் வீரர்கள் இருந்தார்கள். அந்தத் துருப்புகளுடன் சுதேச மன்னர்கள் அனுப்பிய துருப்புகளும் சேர்ந்து இந்தியாவிலும் வெளியிலும் போர்ச் சேவைக்குத் தயாராயிருந்தனர். நேபாள அரசாங்கமும் போர் வீரர்களை உதவியும் வேறு பலவகைகளிலும் நேசக் கட்சியினருக்கு உதவியளித்தது.

போர் வீரர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டுவந்த சமயத்தில் யுத்தத்திற்குத் தேவையான வேறு பொருள்களை உற்பத்தி செய்யும் துறையிலும் இந்தியா முன்னேறியது. பல பொருள்கள் இந்தியாவின் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்

டன. அதனால் அவற்றில் ஒருபகுதி வேறு போர்முனைகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

மத்தியக் கிழக்குப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட இந்தியத் துருப்புகள் பெரும் புகழ்பெற்றன. ஈரானிலும், சிரியாவிலும், ஈராக்கிலும், இந்தியப் போர்வீரர்களுடைய வீரச் செயல்கள் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தன. இந்தியத் துருப்புகளுக்குப் பல அரங்கங்களில் தலைமை தாங்கிய வேவல் பிரபு மத்தியக் கிழக்குப் பிரதேசத்தில் நேசக்கட்சியினர் அடைந்த வெற்றிகளுக்கு இந்தியாவிலிருந்து சென்ற வீரர்களும் யுத்தப் பொருள்களும் முக்கிய காரணமென்றும் அந்தப் பேருதவியை எந்நாளும் மறக்க முடியாதென்றும் கூறினார்.

ஆனால் தூரக்கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத் துருப்புகள் அநியாயமாக அழிந்தன. ஜப்பான் திடீரென்று சண்டையில் இறங்கிய பின் ஹாங்காங்கு, மலேயா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலிருந்த துருப்புகள் ஜப்பானியரை எதிர்த்து நிற்பதற்குப் போதிய அளவில் இல்லை. அதனால் அந்தத் துருப்புகளிற் பெரும்பான்மையானவை அழிந்தன. மீதியிருந்த போர் வீரர்கள் ஜப்பானியரால் கைதியாக்கப்பட்டனர். அவர்களுள் இந்தியர் மாத்திரமின்றி, பிரிட்டிஷ் வீரர்களும், ஆஸ்திரேலிய வீரர்களும் இருந்தார்கள். பர்மாவில் நடந்த சண்டையில் ஜப்பானியரை எதிர்த்து நிற்கமுடியாத பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் மிகுந்த கஷ்டத்துடன் அஸாம் வழியாகத் திரும்பி இந்தியாவுக்கு வந்தன. அதே சமயத்தில் ஜப்பானியர் வசத்திலிருந்த பர்மாவிலிருந்து ஏராளமான சாதாரண மக்களையும் இந்தியாவிற்கு அனுப்ப வேண்டியிருந்ததால் அரசாங்கத்தின் பொறுப்பு மிகவும் அதிகமாயிற்று. இந்தியாவுக்குவந்து சேர்வதற்குள் ஏற்பட்ட கஷ்டங்களால் பல மக்கள் வழியிலேயே மாண்டனர். உயிர் தப்பி இந்தியாவுக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் முதலிய வசதிகளைச்செய்து கொடுப்பது சாதாரணமான காரியமாக இல்லை.

பர்மாவின்மீது படையெடுத்து ஜப்பானியரை அங்கிருந்து துரத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் நேசக் கட்சியினர் முனைப்புடன் ஈடுபட்டனர். அதன் பயனாக, இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும், புதிய தொடர்புகள் ஏற்பட்டன. அமெரிக்கத் துருப்புகளில் ஒரு பகுதிக்கு இந்தியா முக்கிய தளமாயிற்று. அமெரிக்காவிலிருந்து

ஏராளமான தளவாடங்களும், மற்ற யுத்தப் பொருள்களும் இந்தியாவுக்கு வந்தன. அமெரிக்காவுக்கு ஓர் இந்தியத் தூது கோஷ்டி சென்றது. சீனப் போர்வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுக்கப்பட்டது. சீனுவுக்கும் இந்தியாவுக்கும், இடையில் தரையிலும், வானிலும் போக்குவரவு வசதிகள் முன்னேற்றமடைந்தன.

இவ்வாறு இரண்டாம் உலக யுத்தத்தினுல் இந்திய அரசாங்கத்தின் செலவு அதிகமாயிற்று. ஆகவே, இந்திய அரசாங்கத்தின் வரவு செலவு விஷயங்களைப்பற்றி இனிக் கவனிப்போம்.

1919-ஆம் ஆண்டிலும், 1935-ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்களால் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் இடையிலிருந்த பொருளாதாரத் தொடர்பில் முக்கிய மாறுதல்கள் உண்டாயின. குறிப்பிட்ட வரிகளைக் குறிப்பிட்ட காலங்களுக்கு வசூலித்து உபயோகித்துக் கொள்ளும் உரிமையை மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களுக்கு வழங்கும் பழக்கம் 1870-ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஏற்பட்டது. அத்தோடு சில சமயங்களில் மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கம் ரொக்கமாகவும் பொருள் கொடுத்து உதவுவது உண்டு. இந்த முறை 1912-ஆம் ஆண்டில் நிரந்தரமாக்கப் பெற்றது. மாண்டேகு செம்ஸ்பர்டு சீர்திருத்தத்தால் மாகாணங்களுக்கு ஓரளவு பொறுப்பாட்சி வழங்கப்பட்டது என்று படித்தோம். அதன்பிறகு சில வரிகளை விதித்து வசூலிக்கும் உரிமை பூரணமாக மாகாணங்களுக்கே வழங்கப்பட்டது. அந்த வரிகளை மாகாணங்கள் தங்கள் இஷ்டம்போல் உயர்த்துவதற்கும், குறைப்பதற்கும் அதிகாரம் பெற்றன. இறக்குமதி வரிகள், வருமான வரி, இருப்புப்பாதைகள் ஆகியவற்றின் மூலம் வந்த வருமானம் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்தது. நிலவரி, உற்பத்தி வரி முதலியவைகள் மாகாணங்களைச் சேர்ந்தவை. இந்தப் பிரிவால் மத்திய அரசாங்கத்தின் வரவு அதிகமாகக் குறையும் என்பது உறுதி. அதனுல் மத்திய அரசாங்கத்தின் வரவைவிடச் செலவே அதிகமாகும். ஆகவே நீண்டநாளைய விவாதத்திற்குப் பிறகு ஒவ்வொரு மாகாணமும் ஒரு குறிப்பிட்ட தொகையை மத்திய அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டால் மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்குச் செலவு செய்வதற்குப் போதிய பணம் இல்லையென்று மாகாணங்கள் முறையிட்டன. வங்காளத்தில் சாசுவத நிலவரித்திட்டம் அமுலில் இருந்ததால் அந்த மாகாணத்தின் வருமானம் அதிகமாக உயர்வதற்கு வழி

யில்லை. ஆகவே மற்ற மாகாணங்களைவிட வங்காளத்தில்தான் புதிய ஏற்பாட்டால் அதிகக் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கத்தின் பொருளாதாரநிலை நாளடைவில் அபிவிருத்தி யடைந்ததால் மாகாணங்கள் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய தொகை கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டது. முடிவாக 1928-ஆம் ஆண்டில் அந்த முறை அறவே ஒழிக்கப் பட்டது. இருந்தபோதிலும் மாகாணங்களின் வருமானம் அவற் றின் செலவுக்குப் பற்றாததாகவே யிருந்தது. 1929-ஆம் ஆண் டிற்குப் பின் ஏற்பட்ட உலக வியாபார மந்தத்தால் மாகாணங் களின் கஷ்டம் அதிகரித்தது. ஆகவே, கஷ்டத்திலிருந்த சில மாகாண அரசாங்கங்களுக்கு மத்திய அரசாங்கம் பொருளுதவி செய்ய வேண்டியதாயிற்று. 1935-ஆம் ஆண்டின் அரசியற் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு அரசாங்கங்களின் பொருளாதார நிலையில் மறுபடியும் மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றைப் பற்றிப் பின்னர்க் கூறுவோம்.

இனி மத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலையைப் பார்ப்போம். சிறிதுகாலம் மத்திய அரசாங்கத்தின் பொருளா தார நிலை மிக மோசமாயிருந்தது. 1919-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கம் கைக்கொண்ட நாணயத் திட்டத்தால் அதிக நஷ்டம் ஏற்பட்டதென்று முன்னர்ப் பார்த்தோம். ரூபாயின் மதிப்பை இரண்டு ஷில்லிங்காக உயர்த்துவதற்குச் செய்த முயற்சி பயன ளிக்கவில்லையென்றும் அது முடிவில் கைவிடப்பட்டதென்றும் பார்த்தோம். கடைசியாக, ரூபாயின் மதிப்பு 1-ஷில்லிங்கு 6-பென்சுக்கு வந்து நின்றது. வேறு சில காரணங்களாலும் மத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலை மோசமாயிற்று. முதல் உலக யுத்தத்தின் பயனாக வருமானம் தராத தேசீயக் கடன் அதிகரித்தது. வட்டி வகைகளில் அரசாங்கம் ஆண்டு தோறும் செலுத்தவேண்டிய தொகை பெருகிற்று. 1919-ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆப்கானிய யுத்தத்தாலும், இந்தியாவின் கடன் சுமை அதிகமாயிற்று. முதல் உலக யுத்தத்தின்போது இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் பெருகியது என்று கூறி னோம், ஆனால் சண்டை முடிந்தபின் ஒரு கடுமையான வியாபார மந்தம் ஏற்பட்டது. இந்தியாவின் பொருள்களை வாங்கிய நாடு களின் பொருளாதார நிலை மிக மெதுவாகத்தான் உயர்ந்தது. அதனால் இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரம் பாதிக்கப்பட்டது. இறக்குமதிச் சுங்க வரிகளால் வந்த வருமானம் குறைந்தது. பொருள்கள் விலை மிக உயர்வாக இருந்தது. தொழிலாளி

களுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட சச்சரவுகளால் பொருள் உற்பத்தியும் போக்குவரவும் பாதிக்கப்பட்டன. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும், மற்றைய தொழிலாளிகளுக்கும் சம்பளத்தை அதிகமாக உயர்த்தவேண்டிய நிலை ஏற்பட்டது. 1921-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலும், 1922-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்திலும், வரியினங்களைவிடச் செலவினங்களே மிக அதிகமாயிருந்தன. வரவை அதிகப்படுத்து வதற்கு வரிகள் உயர்த்தப்பட்டன. ஆனால் அப்படியும் வரவை விடச் செலவே அதிகமாயிருந்தது. முன்னைய அதிகாரம் ஒன் றில் கூறிய உப்புவரித் தகராறும், பாதுகாப்பு இலாகாவின் செல வைக் குறைக்க வேண்டுமென்று சட்டசபை அங்கத்தினர்கள் தெரிவித்த விருப்பமும் மேற்கூறிய காரணங்களால் நிகழ்ந்தவை என்பது இப்போது தெளிவாக விளங்கும்.

1925-ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்திய அரசாங்கத்திற்கு இந்த விஷயத்தில் ஓரளவு நல்ல காலம் பிறந்தது. வெளிநாட்டு வியாபாரமும் உள்நாட்டு வியாபாரமும் பெருகின. இறக்குமதிச் சுங்க வரிகளாலும், வருமான வரியாலும், இருப்புப்பாதைகளா லும், மத்திய அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் அதிகமாக உயர்ந்தது. அதன் பயனாகப் போக்குவரவு வசதிகளை அதிகப் படுத்துவதற்கும் மற்றைய ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கும் மத்திய அரசாங்கத்தின் பொருள் நிலை அனுகூலமாயிருந்தது.

1929-ஆம் ஆண்டில் உலக முழுவதிலும் ஏற்பட்ட வியாபார மந்தம் இந்தியாவையும் பாதித்தது. அதனால் சுமார் மூன்று ஆண்டுக்காலம் இந்தியாவின் பொருளாதார நிலை சீர்கேடாக இருந்தது. அதே சமயத்தில் அரசியல் துறையில் கிளர்ச்சிகளும் தொழில் துறையில் சச்சரவுகளும் ஏற்பட்டன. ஏற்றுமதிப் பொருள்களின் விலை மிகக் குறைந்தது. இந்தியாவில் இறக்கு மதியான பொருள்களின் விலையும் குறைந்தது. எனினும், ஏற்று மதிப் பொருள்களின் விலை குறைந்த அளவு குறையவில்லை. அர சியற் கிளர்ச்சிகளின் பயனாக உள்நாட்டு வியாபாரம் பாதிக்கப் பட்டது. குடியானவர்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளானார்கள். சில மாகாணங்களில், குறிப்பாக மத்திய மாகாணத்தில், நிலவரி குறைக்கப்பட்டது. 1931-ஆம் ஆண்டில் ஸ்டெர்லிங்குக்கும் தங் கத்துக்கும் தொடர்பில்லாமற் போய்விட்டது. ஸ்டெர்லிங்கோடு இணைக்கப்பட்டிருந்த ரூபாய்க்கும் அதேகதி ஏற்பட்டது. கடுமை யான சிக்கன முறைகளைக் கையாண்டும், கடன் வாங்கியும், வரி

களை - குறிப்பாக வருமான வரியையும், இறக்குமதிச் சுங்க வரிகளையும் - உயர்த்தியும் அரசாங்கம் நிலைமையை ஒருவாறு சமாளித்தது.

1931-ஆம் ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து ஏராளமான தங்கம் ஏற்றுமதியாகத் தொடங்கியது. இதுவும் இந்தியாவின் பொருளாதார நிலையைச் சமாளிப்பதற்கு உதவிற்று. இந்தியாவிலிருந்து பண்டைக்காலம் தொட்டு ஏற்றுமதியான பொருள்களுக்குப் பதிலாகத் தங்கமும் வெள்ளியும் இங்கு வந்து சேர்ந்தன என்று முன்னைய அதிகாரங்களிற் கூறியிருக்கிறோம். இந்தியா வாங்கிய பொருள்களைவிட விற்ற பொருள்கள் மிகுதியாயிருந்ததால் இரண்டிற்கு மிகுந்த வேறுபாட்டைச் சரிக்கட்டுவதற்காக ரொக்கமாகத் தங்கமும், வெள்ளியும் இந்நாட்டிற்கு வந்து குவிந்தன. அவ்வாறு வந்து சேர்ந்த தங்கத்தையும் வெள்ளியையும் மக்கள் சேர்த்து வைத்தார்கள். 19-ஆம் நூற்றாண்டில் இந்திய வியாபாரத்தில் ஏற்பட்ட மாறுதல்களுக்குப் பின்னரும் ஓரளவு தங்கமும் வெள்ளியும் இங்குவந்து சேர்ந்துகொண்டுதான் இருந்தன. 1924 - 25-இல், அதற்கு முன் எப்போதும் கண்டிராத அளவில், இந்தியாவிற்குத் தங்கம் வந்து சேர்ந்தது. 1929-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வியாபார மந்தத்தால் விவசாயிகளின் வருமானம் மிகவும் குறைந்தது. அப்போது செலவுக்குப் பணம் இல்லாத விவசாயிகளிற் பலர் தாங்கள் சேர்த்துவைத்திருந்த தங்க நாணயங்களையும் நகைகளையும் எடுத்து விற்கத் தொடங்கினார்கள். அதே சமயத்தில் ரூபாயின் மதிப்பும் குறைந்துகொண்டே வந்ததால், தங்கத்தின் விலை உயர்ந்துகொண்டே சென்றது. அதனால் தங்கத்தின் ஏற்றுமதி யின்னும் அதிகமாயிற்று.

மக்களிடையே சேமிப்புப் பழக்கம் கொஞ்சங் கொஞ்சமாக வளரத் தொடங்கியது. முதல் உலக யுத்தத்தின்போதும், இரண்டாம் உலக யுத்தத்தின்போதும் அரசாங்கம் பலவகைப்பட்ட பாதுகாப்புக் கடன்களின் மூலமாகவும், சிறு சேமிப்புத் திட்டங்களின் மூலமாகவும் சேமிப்புப் பழக்கம் மக்களிடையிற் பரவ உதவி செய்தது. அதனால், மூலதனம் பயனற்ற நிலையில் பதுங்கிக் கிடப்பதற்கு பதிலாகத் தேவையான இடங்களுக்குச் சென்று அவசியமான வேலைகளுக்குப் பயன்பட்டது. இந்த மாறுதல் ஏற்படுவதற்குக் கூட்டுறவு இயக்கமும் உதவியாக இருந்தது. ஒரு சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஒழுங்காக வேலை செய்யவில்லை. எனினும், இந்தியாவின் பலபகுதிகளில் அவ்வியக்கம் பரவி நல்ல பயனைத் தந்திருக்கிறது.

இனி இந்தியாவில் நவீன பாங்கித் தொழில் வளர்ந்த விதத்தைப்பற்றிப் படிப்போம். 1860-ஆம் ஆண்டுக்கும் 1870-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பல பாங்கிகள் முறிந்தன என்றும், அதன் பயனுக இந்தியர்கள் பாங்கித் தொழிலில் ஈடுபடுவதற்கு அஞ்சினுர்களென்றும், அதனுல் இந்தியாவில் இருந்த பாங்கிகள் ஏறக்குறைய எல்லாமே ஐரோப்பியர் கைகளிலேயே இருந்தன என்றும், முன்னேய அதிகாரமொன்றிற் கூறி யிருக்கிறோம். முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர், சிறிய ஆங்கிலப் பாங்கிகள் சில முறிந்தன. சரியான மேற்பார்வை யின்மையும், நாணயமற்ற முறையும்தான் அதற்குக் காரணம். பாங்கித் தொழிலில் ஈடுபடும் விஷயத்தில் ஏற்கெனவே இந்தியருக்கிருந்த அச்சம் அந்த பாங்கிகளின் முறிவால் இன்னும் அதிகமாயிற்று. ஆனுல் 1905-ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக்களிடையே ஏற்பட்ட தேசீய உணர்ச்சி பல இந்தியப் பாங்கிகள் தோன்றுவதற்குக் காரணமாயிற்று. அவற்றிற் சில முதல் உலக யுத்தத்தின்போது முறிந்துபோயின. ஒரு சில யுத்தத்திற்குப் பின்னரும் வேலே செய்து கொண்டிருந்தன. யுத்தத்திற்குப் பிறகு புதிய இந்தியப் பாங்கிகள் பல தோன்றின. அவைகள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. மூன்று ராஜதானியிலுமிருந்த இராஜதானிப் பாங்கிகள் ஒன்ருக இணேக்கப்பட்டதின் பயனுக இம்பீரியல் பாங்கி தோன்றியது. மத்திய பாங்கி செய்யவேண்டிய சில வேலேகளே இம்பீரியல் பாங்கி செய்துவந்தது. மேலும் வியாபாரம் அதிகமாக நடைபெறும் இடங்களில் இம்பீரியல் பாங்கியின் கிளேகள் ஸ்தாபிக்கப்பட்டன. 1934-ஆம் ஆண்டில் ரிசர்வு பாங்கி ஸ்தாபிக்கப்பட்டது. அதுவே மத்திய பாங்கி என்று உண்மையாகச் சொல்லக்கூடிய ஸ்தாபனம். அரசாங்கத்தின் வரவு செலவு விஷயங்களிலும், நாணயச் செலாவணி விஷயத்திலும், ரிசர்வு பாங்கி இந்திய அரசாங்கத்திற்குப் பலவகைகளிலும் உதவியாக இருக்கிறது.

பாங்கித் தொழிலேப்போலவே, இன்ஷியூரன்ஸ் தொழிலும் முதலில் ஐரோப்பியர் கைகளிலேயே இருந்தது. ஆனுல் முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர் இந்தியர்களும் அந்தத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினுர்கள். முதலில் இந்தியர்கள், தொடங்கிய சில இன்ஷியூரன்ஸ் கம்பனிகள் மோசமான நிலேயிலிருந்தன. ஆனுல் இன்ஷியூர் செய்து கொண்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், கம்பனிகளே மேற்பார்வை செய்வதற்கும், அரசாங்கத்துக்கு அதிகாரம் அளிப்பதற்கு ஏற்ற சட்டங்கள் இயற்றப்

பெற்றதால் இன்ஷியூரன்ஸ் தொழில் முறைகளில் சீர்திருத்தம் ஏற்பட்டது.

மத்திய அரசாங்கத்திற்கும், மாகாணங்களுக்கும் பண விஷயத்தில் இருந்த தொடர்பில் 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தால் சில முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன. மாகாணங்களின் வரவு செலவு விஷயங்களில் மத்திய அரசாங்கத்திற்கு எவ்வித அதிகாரமும் இல்லாமற் போயிற்று. வசூலாகும் வருமான வரியிற் பாதியை மாகாணங்களுக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதனால் மாகாணங்களுக்கு ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டு செல்லக்கூடிய ஒரு வருமானத்துறை கிடைத்தது. மேலும், ஐந்து மாகாணங்கள் மத்திய அரசாங்கத்தினிடம் வாங்கியிருந்த கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. மீதியிருந்த நான்கு மாகாணங்கள் வாங்கியிருந்த கடனைத் திருப்பிக் கொடுக்கும் விஷயத்தில் பல சலுகைகள் காட்டப்பட்டன. அதுவுமின்றி வருமானம் குறைவாகவுடைய அஸாம், ஒரிஸா, சிந்து, வடமேற்கு எல்லைப்புறம் ஆகிய மாகாணங்களுக்கு மத்திய அரசாங்கம் பொருளுதவி செய்யவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு மத்திய அரசாங்கம் எவ்வளவு ஆண்டுகளுக்குப் பொருளுதவி செய்யவேண்டு மென்று வரையறுக்கப்படவில்லை. அவசியம் இருக்கும்வரையில் அந்த உதவி யளிக்கப்படும். ஐக்கிய மாகாணத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு மாத்திரம் மத்திய அரசாங்கம் பொருளுதவி செய்யவேண்டுமென்று வரையறுத்துக் கூறப்பட்டது.

இவ்வாறு மாகாணங்கள் பெற்ற சுதந்திரத்தையும், அதிக வருவாயையும் மாகாண அரசாங்கங்கள் நிலவரியைக் குறைப்பதற்குப் பயன்படுத்தின. சில மாகாணங்களில் மதுவிலக்குத் திட்டமும் அமுலுக்கு வந்தது. அதனால் வருமானம் குறைந்தது. ஆனால் மாகாணங்களில் சில புதிய வரிகளும் விதிக்கப்பட்டதால் மாகாண வருமானம் பொதுவாக நல்ல நிலைமையிலேயே இருந்தது. அதனால், கல்வி முன்னேற்றம், விவசாய முன்னேற்றம், சுகாதார வசதிகள் ஆகிய மக்கள் முன்னேற்றத்துக்கான துறைகளில் மாகாணங்கள் அதிகமாகச் செலவுசெய்ய முடிந்தது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பயனாக மத்திய அரசாங்கத்தின் செலவு மிகவும் அதிகரித்தது. பாதுகாப்புச் செலவைப் பொறுத்த விஷயத்தில் இந்திய அரசாங்கம் பிரிட்டிஷ் அரசாங்

கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. சண்டைக்கு முன்னுல் பாதுகாப்பிலாக்காவுக்காக இந்திய அரசாங்கம் சாதாரணமாக எவ்வளவு தொகை செலவு செய்ததோ அதைத்தவிர இந்திய அரசாங்கத்தால் இந்தியாவின் பாதுகாப்பிற்கென்றே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான செலவையும் தானே ஏற்றுக்கொள்வதாக இந்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டது. மேலும், வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்ட இந்தியத்துருப்புகளின் செலவுக்காக ஆண்டுதோறும் ஒருகோடி ரூபாய் கொடுப்பதாகவும் இந்திய அரசாங்கம் ஒத்துக்கொண்டது. நடைமுறையில் பெரும்பாலான யுத்த நடவடிக்கைகள் இந்தியாவின் பாதுகாப்புக்கும் இங்கிலாந்தின் பாதுகாப்பிற்கும் பொதுவாக அவசியமா யிருந்ததால் அவற்றின் செலவுகளை இரண்டு அரசாங்கங்களும் குறிப்பிட்ட விகிதத்தில் பங்கு போட்டுக்கொள்ளுவதென்று ஒத்துக்கொண்டன.

1939-40-க்கும், 1943-44-க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டுக் காலத்தில் மத்திய அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஆயிரம் கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாயிருந்தது. அதில் பாதுகாப்பிலாக்காவின் செலவு மாத்திரம் 795-கோடி ரூபாய். சண்டையில்லாவிட்டால் பாதுகாப்பிலாக்காவிற்காக 225-கோடி ரூபாய் தான் செலவாகியிருக்கும். ஆகவே, சண்டைக்காக மாத்திரம் இந்திய அரசாங்கம் அந்த ஐந்தாண்டுகளில் 570-கோடி ரூபாய் செலவு செய்ததென்று ஏற்படுகிறது.

சண்டையினுல் இந்தியாவின் செலவு அதிகமாகிக்கொண்டே சென்றது. அதே சமயத்தில் இந்தியாவில் உற்பத்தியான யுத்தத்திற்கு அவசியமான பொருள்களை வாங்கிப் பலவேறு போர் அரங்கங்களுக்கு அனுப்புவதற்கும், பர்மாவின்மீது படையெடுப்பதற்காக இந்தியாவை ஒரு முக்கிய தளமாக அமைத்துக்கொள்வதற்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் ஏராளமான பணத்தைச் செலவு செய்தது. இந்தச் செலவுக்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் ரிசர்வு பாங்கியின் கணக்கில் ஸ்டர்லிங்கைக் கட்டியது. இந்த ஸ்டர்லிங்கை அடிப்படையாக வைத்துக்கொண்டு ரிசர்வு பாங்கி ரூபாய் நோட்டுகளை இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் வாங்கிய பொருள்களுக்கு விலையாகக் கொடுத்தது. பிரிட்டிஷ் அரசாங்கத்தைப்போலவே அமெரிக்க அரசாங்கமும் செய்ததால் இந்தியாவின் கணக்கில் ஏராளமான ஸ்டர்லிங்கு நிதி சேர்ந்தது. அதனுல் இந்திய அரசாங்கம் பிரிட்டனிடம் வாங்கியிருந்த ஸ்டெர்லிங்குக் கடன் அடைக்கப்பட்டது அதுமாத்திர

யின்றி இந்திய இருப்புப்பாதைக் கம்பனிகளில் பிரிட்டிஷார் இன்னும் வைத்திருந்த பங்குகளையும் இந்திய அரசாங்கம் வாங்கிக்கொள்ள முடிந்தது. அப்படியிருந்தும் இந்தியாவின் கணக்கில் இங்கிலாந்தில் சேர்ந்திருந்த ஸ்டெர்லிங்கு நிதி முழுவதும் தீர்ந்துவிடவில்லை. ஆகவே, பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டிய ஸ்டெர்லிங்குக் கடன் இன்னும் பெரிதாகவே யிருந்தது.

மேலே சொன்ன காரணங்களால் இந்தியாவில் அதிகமான ரூபாய் நோட்டுகள் உபயோகத்திற்கு வந்தன. அதாவது, மக்களிடம் அதிகப் பணம் இருந்தது. அதனால் பொருள்களின் விலை உயர்ந்தது. 1942-ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கிய இந்தப் பணவீக்கத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவில்லை. வரிகளை உயர்த்தல், மக்களிடையே சேமிப்புத் திட்டங்களைப் பரப்புதல், விலைகளைக் கட்டுப்படுத்தல், பொருள்களின் விநியோகத்தில் பங்கீட்டு முறையைக் கையாளுதல், மக்களின் தேவைக்கான பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தல் ஆகிய முறைகளை உடனடியாகக் கையாண்டிருந்தால் பண வீக்கத்தைக் குறைத்திருக்க முடியும். அத்தகைய முறைகளை 1942-ஆம் ஆண்டிலேயே கையாண்டிருந்தால் சில மக்கள் அவற்றை விரும்பியிருக்க மாட்டார்கள் என்று அரசாங்கம் நினைத்திருக்கக்கூடும். மேலும் சாமான்களை ஏற்றிக்கொண்டு வருவதற்குப் போதிய அளவு கப்பல்கள் கிடைக்காமையாலும், அரசியற் கிளர்ச்சிகளால் நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலையாலும், பண வீக்கத்தைக் குறைப்பதற்கேற்ற நடவடிக்கைகளைத் தக்க காலத்தில் இந்திய அரசாங்கம் எடுக்கவில்லை. அதனால் மக்களுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன. அவற்றுள் 1943-ஆம் ஆண்டில் நாட்டின் சில பகுதிகளில் ஏற்பட்ட பஞ்சமும் ஒன்று.

1943-ஆம் ஆண்டிலிருந்து பணவீக்கத்தைக் குறைப்பதற்கேற்ற நடவடிக்கைகள் சில எடுக்கப்பட்டன. வரிகள் உயர்த்தப்பட்டன. சேமிப்புத் திட்டத்தைப் பற்றி மிகுந்த பிரசாரம் செய்யப்பட்டது. அதன் பயனாக 1943-ஆம் ஆண்டில் பாதுகாப்புக் கடன்களின் மூலம் 279-கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது. நகரங்களிற் பங்கீட்டு முறை ஏற்படுத்தப்பட்டது. உயர்ந்துகொண்டே சென்ற விலைகள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டன.

அதிகாரம் 55

பொருளாதார முன்னேற்றம்

சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியமக்களின் வாழ்க்கையின் பல துறைகளிலும் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. முதலில் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைப்பற்றிப் படிப்போம். இத்துறையில் ஏற்பட்ட விரைவான முன்னேற்றத்திற்குப் போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்ட மாறுதல்கள் முக்கிய காரணமாயிருந்தன. முதலில் துறைமுகங்களைக் கவனிப்போம். முன்காலத்தில் கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றவையாயிருந்த கழிகளும், சிறு துறைமுகங்களும் நவீன முறையில் கட்டப்பட்ட பெரிய கப்பல்கள் தங்குவதற்கு உபயோகப்படவில்லை. ஆகவே இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் இந்தியாவின் கடற்கரையில் பயன்படக்கூடிய துறைமுகங்கள் ஐந்தே இருந்தன. அவை பம்பாய், சென்னை, கல்கத்தா, சிட்டகாங்கு, கராச்சி ஆகியவை. இப்போது விசாகப்பட்டினம், தூத்துக்குடி, கொச்சி ஆகிய புதிய துறைமுகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றால் கடல்மார்க்கமான வியாபாரத்திற்கு நல்ல உதவி ஏற்பட்டிருக்கிறது. மேலும் சுதேச ஸம்ஸ்தானங்களும் இத் துறையில் சிறிது வேலை செய்திருக்கின்றன. அதன்பயனாகக் கத்தியவாரிலும் குஜாராத்திலும் சில சிறு துறைமுகங்கள் ஏற்பட்டன. கப்பல்கட்டும் தொழிலும் ஓரளவு முன்னேற்றமடைந்தது. பதினெட்டாம் நூற்றாண்டுவரையிலும் ஆசியக்கடல்களில் இந்தியக்கப்பல்கள் அதிகமாய்ப் பிரயாணம் செய்தன. அதற்குப் பின்னரும் கிழக்கிந்தியக் கம்பனியின் மரக்கப்பல்களிற் பல இந்தியாவிலேயே கட்டப்பட்டவையாக இருந்தன. ஆனால் நீராவிக்கப்பல்கள் வந்தபிறகு இந்தியாவில் கப்பல் கட்டும் தொழில் அழிந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்திய வியாபாரத்தில் உபயோகப்பட்ட கப்பல்களெல்லாம் வெளிநாடுகளிற் கட்டப்பட்டவையாகவே இருந்தன. பம்பாய், அஸாம், வங்காளம் ஆகிய மாகாணங்களைச் சேர்ந்த ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட மாலுமிகள் அந்தக் கப்பல்களில் வேலை செய்தார்களெனினும் அவைகளில் இந்தியாவில் கட்டப்பட்ட கப்பல் ஒன்றேனும் இல்லை. சண்டைக்காலத்திலும் சமாதான காலத்திலும் இந்த மாலுமிகள் தங்களுடைய உழைப்பாலும், தைரியத்தாலும், கட்டுப்பாட்டாலும் சிறந்த புகழ்பெற்றார்கள். **1920-ஆம் ஆண்டுக்குப்பின் இந்திய வியாபாரக் கப்பல்களைக்**

கட்டி, அவைகளுக்கு வேண்டிய மாலுமிகளையும் உண்டாக்க வேண்டுமென்று மத்தியச் சட்டசபை அதிகச் சிரத்தை காட்டியது, ஆனால் அந்த முயற்சியின் பயனாக மாலுமிகள் பயிற்சிப் பாடசாலை ஒன்றுதான் ஏற்பட்டது. இரண்டாம் உலகயுத்தம் தொடங்கிய பிறகு இந்தத்துறையில் வேகமான முன்னேற்றம் ஏற்பட்டது. இந்தியாவில் வியாபாரக் கப்பல்கள்மாத்திரமன்றிச் சண்டைக் கப்பல்களையும் கட்டுவதற்கும் பழுதுபார்ப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

முதல் உலகயுத்தத்திற்குப்பின்னர் இருப்புப்பாதைகளிலும் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின்போது மத்தியக் கிழக்குப்பிரதேசத்தில் நடந்த போர்களுக்கு இந்திய இருப்புப்பாதைகள் அதிக உதவிசெய்தன. ஸ்டர்லிங்கு நிதியின் பெருக்கத்தால் ஒரே ஒரு பாதையைத் தவிர முக்கிய இருப்புப்பாதைகளெல்லாம் இந்திய அரசாங்கத்தின் சொந்தமாயின. இனிமேல் முக்கியப் பாதைகள் அதிகமாய் அமைப்பதற்கு வசதியில்லை. கிளைப்பாதைகள் பலவற்றை அமைப்பது தான் அரசாங்கத்தின் கடமையாக இருக்கும். இதற்கிடையில் மோட்டார்ப் போக்குவரவு மிக வேகமாகப் பெருகியது. அதனால் கிராமங்கள் ஒன்றோடொன்றும் நகரங்களுடனும் இணைக்கப்பட்டன. ஆனால் மோட்டார்ப் போக்குவரவு முன்னேற்றத்திற்கேற்றவாறு ரஸ்தாக்கள் முன்னேறவில்லை. மத்திய அரசாங்கம் ரஸ்தாக்களின் அபிவிருத்திக்காக மாகாண அரசாங்கங்களுக்கு உதவிநிதி அளித்தது. எனினும் ரஸ்தாக்கள் விரைவாக முன்னேறவில்லை. குறிப்பாக, வங்காளத்தில் நல்ல ரஸ்தாக்கள் அதிகமாக இல்லை. அதற்கு அந்த மாகாணத்தின் இயற்கையமைப்பும் ஒரு காரணமாகும். அங்குள்ள நதிகளின் மூலம் போக்குவரவை அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. புதிய ரஸ்தாக்களை அமைப்பதும், பழைய ரஸ்தாக்களைச் சீர்திருத்துவதும், இருப்புப்பாதைகள் ரஸ்தாக்கள் நதிகள் ஆகிய போக்குவரவு சாதனங்களை ஒன்றாகச் சேர்த்துப் பயன்படுத்துவதற்கு ஏற்ற நல்ல திட்டங்களைக் கையாளுவதும் உடனடியாகச் செய்யவேண்டிய வேலைகள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையிலிருந்து தபால் தந்தி இலாக்கா நல்ல வேலை செய்யத்தொடங்கியது. முதல் உலக யுத்தத்திற்குப் பின்னர் பல நகரங்கள் டெலிபோன் மூலம் இணைக்கப்பட்டன. அதன் பயனாக உள்நாட்டு வியாபாரம் பெருகியது. 1926-ம் ஆண்டில் ஏற்கெனவே யிருந்த கேபில்களோடு

கம்பியில்லாத் தந்தியும் ஏற்பட்டது. அதனால் வெளிநாட்டு வியாபாரம் பெருகியது கீழ் நாடுகளுக்கும் மேல் நாடுகளுக்கும் இடையில் சென்று வரும் ஆகாய விமான மார்க்கத்தில் இந்தியா ஒரு மத்திய ஸ்தானத்தை வகிக்கிறது. பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் ஆகாய விமானங்கள் முதன் முதலில் 1927-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்தன. இரண்டாண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் விமானத் தபால் முறை ஏற்பட்டது. இந்திய ஆகாய விமானக் கம்பனிகள் தோன்றி இந்தியாவின் பல முக்கிய நகரங்களுக்கு விமானப் போக்கு வரவு வசதி செய்து கொடுத்தன. இரண்டாம் உலக யுத்தம் தொடங்கும் முன்னரே, இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுக்கு மூன்றே நாளில் பிரயாணம் செய்யக்கூடிய வசதி ஏற்பட்டது. இந்தியாவில் விமானப் போக்கு வரவு மிகவும் பெருகுவதற்கு ஏற்ற வசதிகளெல்லாம் இருக்கின்றன.

போக்கு வரவுச் சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் விவசாயத்துறையிலும் உற்பத்தி பெருகியதோடு, உற்பத்தியான பொருள்களை மார்க்கட்டுக்கு எடுத்துச் செல்வதற்கும் சிறந்த வசதிகள் ஏற்பட்டன. கர்ஸான் பிரபு இந்த நூற்றாண்டில் முதலில் ஆரம்பித்த விவசாய இலாக்காத் திட்டங்கள் இப்போது பலனளிக்கத் தொடங்கின. விவசாய இலாக்கா உத்தியோகஸ்தர்கள் ஏற்கெனவே இந்தியாவில் உற்பத்தியான பயிர்களின் தன்மையையும் விளைவையும் உயர்த்துவதுதான் தாங்கள் உடனடியாகச் செய்யவேண்டிய கடமை என்பதை உணர்ந்து உற்சாகமாக வேலை செய்தார்கள். இந்தத் துறையில் சிறந்த ஆராய்ச்சி முறைகள் இப்போது தோன்றியுள்ளன. அவ்வாராய்ச்சிகளின் வளர்சசிக்கு இந்திய விஞ்ஞானிகளும் அதிகமாக உதவியிருக்கிறார்கள். 1927-ம் ஆண்டில் லின்லித்கோ பிரபுவின் தலைமையில் ஒரு ராயல் கமிஷன் இந்தியாவுக்கு வந்து இந்திய விவசாயத்தின் முன்னேற்றத்திற்கான யோசனைகளைக் கூறியது. அதன் பயனாக இம்பீரியல் விவசாய ஆராய்ச்சிக் கவுன்சில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. விவசாயத் துறையிலும், கால் நடைகளை அபிவிருத்தி செய்யும் துறையிலும், விவசாயப் பொருள்களை மார்க்கட்டுக்கு அனுப்புவதற்கு வசதி செய்யும் துறையிலும் செய்யவேண்டிய ஆராய்ச்சிகளையெல்லாம் ஒன்றுபடுத்தி, அவற்றின் வளர்ச்சிக்கு உதவி செய்வதுதான் அந்தக் கவுன்சிலின் வேலை. மாகாணங்களும் சுதேச ஸம்ஸ்தானங்களும் இந்த வேலையில் அதிக ஊக்கம் காட்டின. கவுன்சிலுக்கு வேண்டிய பொருளுதவி தாராளமாகச்

செய்யப்பட்டது. கவுன்சிலின் வேலையால் நல்ல பயன் விளைந்திருக்கிறது. அதிக பலனைத் தரக்கூடிய புதிய இயல்புகளையுடைய கோதுமை வகைகள் நாட்டின் பல பகுதிகளில் இப்போது பயிரிடப்படுகின்றன. முன்னர்க் குறுகிய முரட்டு இழைகளையுடைய பருத்தி பயிராக்கப்பட்ட நிலங்களில் இப்போது நீண்ட மெல்லிய இழைகளையுடைய பருத்தி பயிராக்கப்படுகிறது. புதிய கரும்பு வகைகள் கண்டு பிடிக்கப்பட்டதால் கரும்புப் பயிர்த் தொழிலில் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. அவற்றின் பயனாக நவீன சர்க்கரை உற்பத்தித் தொழில் இந்தியாவில் வளர்ந்தது. இந்தியாவுக்குத் தேவையான சர்க்கரை முழுவதையும் இப்போது இந்தியாவிலேயே உற்பத்தி செய்ய முடியும். பயிர்களுக்கு ஏற்படும் நோய்களைத் தடுப்பதற்கும், நவீன உரங்களைக் குடியானவர்கள் உபயோகப்படுத்துமாறு செய்வதற்கும் ஏற்ற முக்கியமான வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. கால்நடைகளை அபிவிர்த்தி செய்வதற்கும், விவசாயப் பொருள்களை மார்க்கட்டுக்கு எடுத்துச் சென்று விற்பதற்கும் ஏற்ற காரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

புதிதாக ஏற்பட்ட பல முக்கியமான கால்வாய்களும் நீர்த் தேக்கங்களும் விவசாய முன்னேற்றத்திற்கும் பெரிதும் துணை செய்தன. சிந்து மாகாணத்தில் கட்டப்பட்ட லாயிட் நீர்த் தேக்கத்தின் பயனாகச் சிந்து நதியின் தண்ணீர் முன்னர்ப் பாலைவனமாயிருந்த பல பகுதிகள் வளமடைவதற்கு உதவியாயிருக்கிறது. பஞ்சாபில் வெட்டப்பட்ட பல புதிய கால்வாய்களின் பயனாக அந்த மாகாணத்தின் வளமும், அண்மையிலிருந்த சில சுதேச ராஜ்யங்களின் வளமும் பெருகின. மேட்டூர் அணையாலும், காவிரியின் கால்வாய்களாலும் சென்னை மாகாணத்தின் விவசாயம் பெருகியது. அதுபோலவே ஐக்கிய மாகாணத்தில் சர்தா கால்வாய் வெட்டப்பட்டு, அந்த மாகாணத்தில் விவசாய முன்னேற்றத்திற்குக் காரணமாயிற்று.

குடியானவர்களுடைய நன்மைக்கான வேறு பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. நிலவரி சாசுவதமாக நிர்ணயிக்கப்படாத மாகாணங்களில், 1919-ம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில், குறிப்பிட்ட காலம் முடிந்ததும் நிலவரியை மறுபடியும் நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்ட சமயங்களில், அதை நிர்ணயிப்பதற்கும் வசூலிப்பதற்கும் ஏற்ற கொள்கைகளையும் முறைகளையும் அரசாங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களே மாற்றிக்கொள்வதற்கு அதிகாரம் பெற்றிருந்தார்கள். ஆனல் 1919-ஆம் ஆண்

டின் அரசியல் சீர்திருத்தத்தின் பயனாக அந்த அதிகாரம் மாகாணச் சட்டசபைகளுக்கு அளிக்கப்பட்டது. பெரும்பாலான மாகாணங்களில் நிலவரி குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு பசலிக்கும் அடுத்த பசலிக்கும் இடையிலுள்ள காலமும் நீடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மிராசுதார்களுக்கும் குடியானவர்களுக்கும் நன்மை ஏற்பட்டது. இந்தத் துறையில் ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் காங்கிரஸ் மந்திரி சபைகளால் இயற்றப்பட்ட சட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

தங்கள் நிலங்களை அடகுவைத்து உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்குவதும், பின்னர் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுக்க முடியாமல் நிலத்தை இழப்பதும் இந்தியக் குடியானவர்களிடம் தொன்று தொட்டு வந்த பழக்கம் என்று நாம் ஏற்கெனவே கூறியிருக்கிறோம். குடியானவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பதால் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளை அவர்கள் எளிதில் உணர்வதில்லை. சில மாகாணங்களில் குடியானவர்கள் தங்கள் நிலங்களைப் பயிர்த்தொழிலில் ஈடுபடாத வகுப்பினருக்கு விற்கக்கூடாது என்று சட்டம் இயற்றப்பட்டது. வேறு சில மாகாணங்களில் குடியானவர்கள் வாங்கிய கடன்களின் சுமையைக் குறைப்பதற்கான சட்டம் இயற்றப்பட்டது. இத்தகைய முறைகளால் குடியானவர்களுக்கு ஓரளவு நன்மை ஏற்பட்டது.

இவ்வாறு விவசாயத்தின் முன்னேற்றத்திற்கான பலகாரியங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், இந்திய விவசாயத்தின் நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்று நினைத்துக்கொள்ளக் கூடாது. புதிய முறைகளை அனுசரிப்பதால் நன்மை ஏற்படும் என்பதை இந்திய விவசாயிகள் உணர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். எனினும் குடியானவர்களுடைய நிலங்கள் துண்டு துண்டாகப் பிரிக்கப்பட்டுச் சிதறிக் கிடப்பதால் நவீன யந்திர முறைகளை இந்திய விவசாயத்திற் புகுத்த முடியாது. அதிகச் சத்துள்ள உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் பல இன்னும் செய்யப்படவில்லை. ஜனத்தொகை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருவதால் ஏதாவது எதிர்பாராத காரணங்களால் நாட்டில் எந்தச் சமயத்திலும் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடும். இந்த நிலைக்கு 1943-ஆம் ஆண்டில் வங்காளத்திலும் வேறு சில இடங்களிலும் ஏற்பட்ட பஞ்சத்தை உதாரணமாகக் கூறலாம்,

பயிர்த்தொழிலேயே நம்பி வாழும் மக்கள் இந்தியாவில் அதிகமாக இருக்கின்றனர். அவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. அவ்வளவு பேருக்கும் வேலை செய்ய வாய்ப்பையும் வாழ்க்கைக்கு வேண்டிய வருவாயையும் அளிப்பதற்கு இருக்கிற பயிர் நிலங்கள் போதா. ஆகவே, அவர்களில் ஒரு பகுதியினரை வேறு தொழில்களில் நுழையச் செய்வது அவசியம். அவ்வாறு செய்தால் குடியானவர்களின் தொகை குறையும். அதனால், குடியானவர்களுடைய வாழ்க்கை நிலை உயரும் என்று ஒரு காலத்தில் அறிஞர்கள் நினைத்தார்கள். சென்ற சில ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் தொழில் முன்னேற்றத்தின் பயனாகத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் மக்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் ஜனத்தொகையும் பெருவாரியாக உயர்ந்திருப்பதால் குடியானவர்களின் தொகை முன்னைவிட இப்போது அதிகமாகவே இருக்கிறது. உண்மையில் தொழிலாளியின் விகிதம் குறைந்தும் விவசாயிகளின் விகிதம் உயர்ந்தும் இருக்கின்றன. ஆகவே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதும், அதிகச் சத்துள்ள உணவுப் பொருள்களைப் பயிரிடுவதும் ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் எவ்வளவு அவசியமாக இருந்தனவோ அவ்வளவு அவசியமாகவே இன்னும் இருக்கின்றன.

கிராமவாசிகள் இன்றும் கிராமத் தொழிலாளிகளின் பொருள்களையே பெரிதும் உபயோகிக்கிறார்கள். அதனால்தான் இந்தியாவின் குடிசைத் தொழில்கள் இன்றும் அழியாமல் இருக்கின்றன. குறிப்பாக, கைத்தறி நெசவுத் தொழிலுக்கு மாகாண அரசாங்கத்தினரும் தேசிய உணர்ச்சி மிக்கவர்களும் அதிக ஆதரவு அளிக்கின்றனர். அதே சமயத்தில் தொழிற்சாலைகளிலும் அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படும் பலபொருள்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றுள் சர்க்கரை, தீக்குச்சி, சிகரெட்டு, கண்ணாடி, சிமிட்டி முதலிய பொருள்களைக் கூறலாம். இப்பொருள்கள் கிராமங்களைவிட நகரங்களில்தான் அதிகமாக உபயோகப்படுகின்றன. பம்பாயில் தொடங்கிய பருத்தி நூல் நெசவு மில்களின் வெற்றியைக் கண்ட மக்கள் அந்தத் தொழிலில் மாத்திரமின்றி வேறு பல தொழில்களிலும் ஈடுபட ஆரம்பித்தார்கள். அதற்கு மக்களிடையில் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திற் பரவிய தேசிய உணர்ச்சியும் ஒரு காரணமாயிருந்தது. இரும்பு எஃகுத் தொழிலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும்பற்றி ஏற்கெனவே கூறியிருக்கிறோம். முதல் உலக யுத்தத்தின்போது,

அந்தத் தொழிலால் இந்தியாவுக்கு மிகுந்த நன்மை ஏற்பட்டது. வெளி நாடுகளிலிருந்து வந்த பல பொருள்களை இந்திய மக்கள் உபயோகித்துப் பழகிவிட்டார்கள். யுத்தத்தின்போது அவைகள் வராமற் போகவே மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. மேலும் யுத்தத்திற்கு வேண்டிய பல பொருள்கள் இந்தியாவுக்கு வராமற் போய்விட்டன. இந்நிலையைப் பரிசீலனை செய்வதற்காக ஸர் தாமஸ் ஹாலண்டு என்பவர் தலைமையில் இந்திய அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்தது. அந்தக் கமிஷன் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்காகப் பல முக்கியமான யோசனைகளைக் கூறிற்று. சண்டைக் காலத்தில் நியமிக்கப்பட்ட இந்திய யுத்த தளவாட போர்டும் இந்தியத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு உதவியாயிருந்தது. சண்டைக் காலத்தில் பஞ்சாலைத் தொழிலும், எஃகுத் தொழிலும் அதிக லாபமடைந்தன. ஆனால் சண்டைக்குப் பின் ஏற்பட்ட வியாபார மந்தத்தால் சில ஆண்டுக்காலம் அத்தொழில்கள் லாபகரமாக நடக்கவில்லை.

சண்டை முடிந்தபின் இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் அதிக உதவி செய்யுமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1919-ஆம் ஆண்டின் அரசியற் சீர்திருத்தச் சட்டத்தால் தொழில் முன்னேற்றத்திற்கான வேலைகளைச் செய்யும் பொறுப்பு மாகாண அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட்டது. அத்தகைய வேலைகளில் ஈடுபடுவதற்கேற்ற வசதியும், பயிற்சி பெற்ற ஆட்களும் மாகாண அரசாங்கங்களுக்கு இல்லாததால் தொழில் முன்னேற்றம் தடைப்பட்டது. சண்டை முடிந்தபின் சில ஆண்டுக்காலம் மத்திய அரசாங்கத்தின் பொருளாதார நிலையும் மோசமாயிருந்ததால் அதனாலும் இத்துறையில் அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஆகவே தொழில் முன்னேற்றத்திற்கும், தொழிற்கல்வியின் பெருக்கத்திற்கும் ஹாலண்டு கமிஷன் கூறிய யோசனைகள் காகிதத் திட்டங்களாகவே யிருந்தன. எனினும் இருதுறைகளில் இந்திய அரசாங்கம் தொழில் முன்னேற்றத்திற்கு உதவி செய்தது. பாதுகாப்பு இலாக்காவுக்கும், இருப்புப் பாதைகளுக்கும் வேண்டிய பொருள்களையெல்லாம் இந்திய அரசாங்கமே வாங்கவேண்டிய நிலைமையிலிருந்தால், கூடுமான வரையில் அந்த இலாக்காக்களுக்கு இந்தியாவில் உற்பத்தியான பொருள்களையே அரசாங்கம் வாங்கத் தொடங்கியது. அதன் பயனாகப் பல தொழில்கள் அபிவிருத்தியடைந்தன. மேலும், இறக்குமதிச் சுங்கவரிகளை விதிப்பதில் இந்திய அரசாங்கத்திற்குப் புதிய அரசியல்திட்டத்தால் அளிக்கப்பட்ட சுதந்திரத்தைப் பயன்

படுத்திக்கொண்டு அவ்வரசாங்கம் தகுதியுள்ள தொழில்களுக்குப் பாதுகாப்பு அளித்தது. அதன் பயனாக இந்தியாவிலேயே கிடைத்த மூலப்பொருள்களையும், இந்தியாவிலேயே பயிற்சி பெற்ற தொழிலாளிகளையும் வைத்துக்கொண்டு முன்னேற்ற மடையக்கூடிய தொழில்கள் வளர்ந்தன. ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பாதுகாப்பில்லாமலே நடைபெறக் கூடிய தொழில்களுக்குத்தான் ஆரம்பத்தில் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற கொள்கை பின்பற்றப்பட்டது. இவ்வாறு பல இந்தியத் தொழில்கள் பாதுகாப்புப் பெற்றன. அவற்றுள், இரும்பு எஃகுத் தொழில், சர்க்கரைத் தொழில், காகித உற்பத்தித் தொழில், பருத்தி நெசவுத் தொழில், பட்டு நெசவுத் தொழில் முதலியவற்றைக் கூறலாம்.

தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களுக்கு வெகு தூரத்திலிருந்து நிலக்கரியை எடுத்துச் செல்லவேண்டி யிருப்பதால் தொழில்கள் வேகமாக முன்னேற முடியவில்லை. ஆனால், இந்தக் குறையை நிவிர்த்திசெய்வதற்காகத் தற்போது மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் நடைபெறுகின்றன.

இரண்டாம் உலகயுத்தத்தின் பயனாக இந்தியத் தொழில்களிலும் வியாபாரத்திலும் ஏற்பட்ட மாறுதல்கள் மிக அதிகம். அவற்றைப்பற்றி இங்குக் கூறவில்லை. கைத்தொழில் முன்னேற்றத்திற்கான நல்ல திட்டங்களை வகுப்பதும், ஆராய்ச்சிகளை நடத்துவதும் இன்றியமையாத காரியங்கள்.

தொழில் முன்னேற்றமும் வியாபாரமும் ஒன்றோடொன்று அதிகத் தொடர்புடையவைகளாக இருக்கின்றன. இந்தியத் துணி நெசவு அதிகமானதால் இங்கிலாந்திலிருந்து ஜவுளி இறக்குமதி குறைந்தது. "வரிச் சம்பிரதாயத்தால்" கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியத் துணிகளின்மீது விதிக்கப்பட்ட "சரிக்கட்டும் வரிகளை" இந்திய அரசாங்கம் ரத்து செய்தது. அதனால் அந்த வரிகளை அவை முதலில் விதிக்கப்பட்ட காலத்திலிருந்து எதிர்த்த அரசியல்வாதிகளும் மற்ற இந்திய மக்களும் திருப்தியடைந்தார்கள். ஆனால் "ஏகாதிபத்தியச் சலுகை"யைப்பற்றிக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இந்தப் பிரச்சினை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுந்தபோது கர்ஸான்பிரபு இறக்குமதி வரித்திட்டம் இந்தியாவின் தேவைகளுக்கு ஏற்றவாறுதான் இருக்கவேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

இந்தப்பிரச்சினை மறுபடியும் 1932-ஆம் ஆண்டில் எழுந்தது. அப்போது சாம்ராஜ்ய நாடுகளுக்கிடையில் ஏகாதிபத்தியச் சலுகை அனுசரிக்கப்படவேண்டுமென்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறிற்று. இந்தக் கொள்கையை இந்தியா ஒத்துக்கொள்ளாவிட்டால், மற்ற சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து இங்கிலாந்தில் இறக்குமதியான பொருள்களுக்கு இறக்குமதி வரி விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் சலுகை காட்டத் தீர்மானித்துவிட்டதால் அத்தகைய பொருள்களோடு இந்திய பொருள்கள் போட்டியிட முடியாதென்றும், அதனுல் இந்திய ஏற்றுமதி வியாபாரத்திற்கு நஷ்டம் ஏற்படும் என்றும் பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்துக் கூறியது. இந்தியாவின் பொருள்கள் மற்ற நாடுகளைவிட இங்கிலாந்துக்கே அதிகமாக ஏற்றுமதியாயின. அந்த வியாபாரத்துக்கு ஆபத்து ஏற்பட்டால் இந்தியாவுக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படும். ஆகவே இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற பொருள்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் சலுகை காட்டினுல் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு வந்த சில பொருள்களுக்கு இந்திய அரசாங்கம் சலுகை காட்டுமென்று ஓட்டாவா மகாநாட்டில் இந்தியப்பிரதிநிதிகள் ஒத்துக்கொண்டார்கள். இந்த முடிவை இந்தியச் சட்டசபை அங்கீகரித்தது. அதன்பின் 1934-ம் ஆண்டில் இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் ஒரு வியாபார உடன்படிக்கை ஏற்பட்டது. அந்தக்காலத்தில் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியான மட்டரகமான பருத்திக்கு ஜப்பான் முக்கிய மார்க்கட்டாக இருந்தது. இரண்டாம் உலகயுத்தத்தின் பயனுக அந்த உடன்படிக்கை ரத்தாகிவிட்டது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியான பொருள்களிலும், வெளியிலிருந்து இந்தியாவில் இறக்குமதியான பொருள்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. சணலும் தேயிலையும் இப்பொழுதும் அதிகமாக ஏற்றுமதியாகின்றன. ஆனுல் முன்னைவிட இப்பொழுது அதிகமான ஜவுளி ஏற்றுமதியாகிறது. அதனுல் பருத்தி ஏற்றுமதி குறைந்துபோயிற்று. முன்னைவிட இப்பொழுது முடிந்த பொருள்கள் அதிகமாக ஏற்றுமதியாகின்றன என்று பொதுவாகக் கூறலாம். இந்தியத் தொழில்களின் முன்னேற்றத்தால் மக்களின் அன்றுட வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களின் வகைகளும் தொகையும் முன்னைவிட இப்போது குறைவாக இந்தியாவில் இறக்குமதியாகின்றன. ஆனுல் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு அவசியமான யந்திரங்களும் வாகனங்களும் இப்போது அதிகமாக இறக்குமதியாகின்றன.

தொழில் முன்னேற்றத்தால் தொழிலாளிகளின் பிரச்சினைகள் பல எழுந்தன. தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்காக ஏராளமான மக்கள் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குச் சென்றார்கள். அங்கு அவர்கள் சுகாதார வசதிகள் கொஞ்சமும் இல்லாத குடிசைகளில் வசித்துப் பலவகைத் துன்பங்களுக்கு ஆளானார்கள். தொழிலாளிகளுக்குச் சௌகரியம் செய்துகொடுக்கவேண்டுமென்ற எண்ணம் முதலில் அரசாங்கத்துக்கும் ஏற்படவில்லை, படித்தவர்களுக்கும் ஏற்படவில்லை. கிராமங்களிலிருந்து வந்த தொழிலாளிகள் நகரங்களில் நிலையாக வாசம்செய்ய விரும்பவில்லை. கிராமங்களுக்கு அவர்கள் அடிக்கடி சென்றுவந்தார்கள். மேலும் வேலையிலிருந்து நின்றபிறகு அவர்கள் கிராமங்களுக்கே திரும்பிச்சென்று நிலையாக வாழ விரும்பினார்கள். சாதாரணமாக அவர்கள் தங்கள் குடும்பங்களை அழைத்துவராமல் தனியாகவே வருவது வழக்கமாயிருந்தது. தொழிற்சாலைகளில் கிடைத்த கூலிதான் அவர்கள் பல கஷ்டங்களையும் அனுபவித்துக்கொண்டு சிலகாலம் நகரத்தில் தங்குவதற்குக் காரணமாயிருந்தது. தொழிற்சாலைகளில் வேலை செய்யவந்த மக்கள் பலவேறு பகுதிகளிலிருந்து வந்தார்கள். அவர்கள் பலவேறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். சில சமயங்களில் அவர்கள் பலவேறு மொழிகளைப் பேசுபவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, அவர்கள் ஒற்றுமையாக எந்தக்காரியத்தையும் செய்வது எளிதாயில்லை.

முதல் உலகயுத்தம் முடியும் வரையில் தொழிலாளிகள் தங்கள் நன்மைக்கான எந்தவிதமான சங்கத்தையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. சண்டைக் காலத்தில் பொருள்களின் விலை மிக உயர்ந்தது. ஆனால், தொழிலாளிகளின் கூலி அவ்வளவாக உயரவில்லை. அதனால் அவர்கள் மிகுந்த கஷ்டமடைந்தார்கள். ஆகவே, அவர்கள் அடிக்கடிவேலை நிறுத்தம் செய்தார்கள். நாளடைவில் கூலி கொஞ்சம் கொஞ்சமாய் உயர்ந்தது. விரைவில் பெருகிக்கொண்டே வந்த தொழிலாளர் சங்கங்களின் வேலை கூலி உயர்வுக்கு ஒரு காரணமாயிருந்தது. ஆரம்பத்தில் தொழிலாளர் சங்கங்களின் வேலையில் ஈடுபட்ட தலைவர்களிற் பலர் சுயநலம் மிகுந்தவர்களாயும், குறிப்பிட்ட அரசியல் கட்சிகளுக்குத் தொழிலாளர்களின் சங்கங்களின் மூலம் பலந்தேட முயன்றவர்களாயும் இருந்தார்கள். தொழிலாளர்களுக்குள்ளும் கட்டுப்பாடு இல்லை. எனினும் நாளடைவில் தொழிலாளர் சங்கங்களின் அவசியத்தையும் பலத்தையும் மக்கள் நன்றாக உணரத்தொடங்கினார்கள். அதனால் தொழிலாளர்களின் நன்மைக்கே வேலை செய்யக்கூடிய சுய

நலமற்ற பல தலைவர்கள் தோன்றினார்கள். தொழிலாளர் இயக்கத்தின் பயனாகத் தொழிலாளிகள் பல நன்மைகளை அடைந்தார்கள். முதல் உலக யுத்தத்திற்குப் பின் நிறைவேறிய சில தொழிற் சட்டங்களுக்குத் தொழிலாளர் இயக்கத்தின் கிளர்ச்சியும் ஒரு காரணமாக இருந்தது.

அகில தேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் இந்தியாவும் ஓர் அங்கமாயிற்று. அப்போது மற்ற நாடுகளிலிருந்த தொழிலாளர்களின் நிலைமையைவிட இந்தியத் தொழிலாளர்களின் நிலை மோசமாயிருந்தது என்பது தெரிந்தது. அதே சமயத்தில் மாண்டேகு செம்ஸ்பர்ட் அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி தொழிலாளிகளின் வீட்டு வசதிகளைப்பற்றித் தேவையான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மாகாண அரசாங்கங்களுக்கு அளிக்கப்பட்டது. மற்ற விஷயங்களில் எல்லாம் அவசியமான சட்டங்களை இயற்றும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. இந்தவிஷயங்களிலும், மாகாண அரசாங்கங்கள் சட்டமியற்றலாம். ஆனால், அத்தகைய சட்டங்களை நிராகரிக்கவும், மாற்றவும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருந்தது. சுரங்கத் தொழிலாளிகளைப்பற்றிய சட்டங்களை இயற்றும் அதிகாரம் முழுவதும் மத்திய அரசாங்கத்திற்கே கொடுக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் இயற்றிய தொழிற் சட்டங்களையும் மாகாண அரசாங்கம் இயற்றிய தொழிற் சட்டங்களையும் அமுல் நடத்தும் அதிகாரம் மாகாண அரசாங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தத் துறையிலும் மத்திய அரசாங்கத்திற்கு மேற்பார்வை அதிகாரம் இருந்தது. மாகாண அரசாங்கங்களுக்குத் தேவையான பொருள் இல்லாததால் தொழிற் சட்டங்கள் சரியானபடி அமுலிலிருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்ளுவதற்கேற்ற உத்தியோகஸ்தர்களைப் போதுமான அளவு நியமிக்க முடியவில்லை.

தொழிற் சட்டங்களை நிறைவேற்றுவதில் மத்திய அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டது. சட்டசபை அந்த விஷயத்தில் அரசாங்கத்திற்குப் பூரணமான ஒத்துழைப்பை அளித்தது. முதலாளிகளும் தேவையான அளவு ஆதரவளித்தார்கள். ஆகவே முற்றிலும் புதியதொரு தொழிற் சட்டத்தொகுதி ஏற்பட்டது. தொழிற்சாலைகள், சுரங்கங்கள் ஆகியவைகள் எத்தகைய விதிகளின்படி வேலை செய்யவேண்டுமென்பதைப்பற்றியும் சட்டங்கள் நிறைவேறின. தொழிலாளர் சங்கங்கள் சட்டரீதியாக அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றன. முதலாளிகளுக்கும் தொழி

லாளிகளுக்கும் ஏற்படக்கூடிய சச்சரவுகள் எவ்வாறு தீர்க்கப் படவேண்டு மென்பதைப் பற்றியும் சட்டமியற்றப்பட்டது. விட்லி என்பவரின் தலைமையில் நியமிக்கப்பட்ட ராயல் கமிஷ னின் அறிக்கை 1931-ஆம் ஆண்டில் வெளியாயிற்று. அதிற் கூறப்பட்ட ஆலோசனைகளின்படி தொழிலாளிகளின் நன் மைக்கான புதிய சட்டங்கள் நிறைவேறின. அஸாம் மாகா ணத்திலிருந்த தேயிலைத் தோட்டங்களின் விதிகள் மாற்றியமைக் கப்பட்டன.

1935-ம் ஆண்டின் அரசியற் சட்டத்தினுல் தொழில் விஷ யத்தில் மத்திய அரசாங்கத்திற்கிருந்த அதிகாரங்களில் இன் னும் சில மாறுதல்கள் ஏற்பட்டன. சுரங்கத் தொழிலைப் பொறுத்த வரையில் முழு அதிகாரமும் மத்திய அரசாங்கத் திற்கே அளிக்கப்பட்டது. ஆனுல் மத்திய அரசாங்கத்தால் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருமாறு மாகாணங்களை வற்புறுத்தவேண்டுமானுல் மாகாணங் களுக்கு மத்திய அரசாங்கம் தக்க பொருளுதவி செய்யவேண்டு மென்று ஏற்பட்டது. ஆகவே மத்திய அரசாங்கம் நிறைவேற் றிய தொழிற் சட்டங்கள் மாகாணங்களில் அமுலுக்கு வரு வதும் வராமலிருப்பதும் மாகாண அரசாங்கங்களின் இஷ்டத் தைப் பொறுத்தது. வற்புறுத்தினுல் பொருளுதவி செய்ய வேண்டுமாகையால் மத்திய அரசாங்கம் அவ்வாறு செய்ய வில்லை. மத்திய அரசாங்கத்தின் சட்டங்களை மாதிரியாக வைத் துக்கொண்டு மாகாண அரசாங்கங்கள் வேறு சட்டங்களை வேண் டுமானுலும் ஏற்படுத்திக்கொள்ளலாம்; அல்லது மத்திய அர சாங்கத்தின் சட்டங்களையே அமுலுக்குக் கொண்டு வரலாம். அது மாகாணங்களின் இஷ்டத்தைப் பொறுத்தது.

இந்தியாவில் தொழிலாளிகளின் நிலைமையில் அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று பொதுவாகக் கூறமுடி யும் எனினும், இன்னும் பல முக்கிய வேலைகள் செய்யப்பட வேண்டி யிருக்கின்றன. தொழிலாளிகளுக்குத் தேவையான வீட்டு வசதிகள் இன்னும் செய்யப்படவில்லை. தொழிலாளி கள் நோய்வாய்ப்பட்ட சமயத்திலும், முதுமை எய்திய காலத் திலும், வேலை கிடைக்காத காலத்திலும் மிகவும் கஷ்டப்படுகி ருர்கள். அத்தகைய சமயங்களில் அவர்களுக்கு உதவியளிப் பது அவசியம். அதற்கேற்ற சட்டங்கள் இன்னும் செய்யப்பட வில்லை.

அதிகாரம் 56

சமூக முன்னேற்றம்

சரியான ஜனத்தொகைக் கணக்கு முதல் முதலாக 1891-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. அந்தக் கணக்கின்படி இந்தியாவின் ஜனத்தொகை 28-கோடி. 1941-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்குப்படி இந்தியாவின் ஜனத்தொகை 38-கோடியே 90-லட்சம். ஆகவே 50-ஆண்டுகளில் சுமார் 11-கோடி மக்கள் அதிகமாகிவிட்டார்கள். முதல் முப்பதாண்டுகளில் ஜனத்தொகை மிக அதிகமாகப் பெருகவில்லை. முன்னைய அதிகாரங்களில் விவரிக்கப்பட்ட பஞ்சங்களாலும், பிளேக், இன்புளுவென்ஸா என்னும் நோய்களாலும் பெருவாரியான மக்கள் இறந்ததுதான் அதற்குக் காரணம். 1921-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அத்தகைய ஜனத்தொகைப் பெருக்கத் தடைகள் அதிகமாக இல்லாததால் ஜனத்தொகை விரைவாகப் பெருகியது. 1921-ம் ஆண்டுக்கும் 1931-ஆம் ஆண்டுக்கும் இடையில் நூற்றுக்குப் பத்து விகிதத்திலும், 1931-ஆம் ஆண்டுக்கும், 1941-ம் ஆண்டுக்கும் இடையில் நூற்றுக்குப் பதினைந்து விகிதத்திலும் ஜனத்தொகை பெருகியது. வாழ்க்கைத் தரம் உயர்வாக உள்ள நாடுகளில் ஜனத்தொகை மேலேயுள்ள விகிதங்களில் பெருகி யிருந்தால் அதனால் தீமை ஏற்பட்டிருக்காது. ஆனால், இந்தியாவில் பலகோடி மக்கள் உண்ணப் போதுமான உணவும், உடுக்கத் தகுதியான உடையும், குடியிருக்கச் சரியான வீடும் இல்லாமல் கஷ்டப்படுவதால், ஜனத்தொகை விரைவாகப் பெருகுவதால் தாங்க முடியாத கஷ்டங்களும் சமாளிக்க முடியாத பிரச்சினைகளும் ஏற்படுவது இயற்கையே. தொழிலும், வியாபாரமும் பெருகினாலும் அவற்றால் வளர்ந்துகொண்டேவரும் ஜனத்தொகையில் ஒரு சிறு பகுதிக்குத்தான் வேலை கொடுக்க முடியும் என்று முன்னரே பார்த்தோம். இப்போதிருக்கும் குறைந்த வாழ்க்கைத்தரம் இன்னும் குறையாமலிருக்க வேண்டுமானால் விவசாயப் பொருள்களின் உற்பத்தியை மிகவும் அதிகமாகப் பெருக்க வேண்டும். இன்றேல் இப்பொழுது வளர்ந்துகொண்டு வரும் விகிதத்தில் ஜனத்தொகை இன்னும் வளர்ந்துகொண்டே சென்றால் பல மக்கள் பட்டினி கிடந்து சாக நேரிடும். இன்னும் சாகுபடியாகாத நிலங்களில் பெரும்பாலானவை காடுகளுக்கும் கால்நடைகள் மேய்வதற்கும் தேவையாக இருப்பதால் சாகுபடி செய்வதற்கு அதிகமான நிலங்கள் கிடையா. வங்காளம் போன்ற

மாகாணத்தின் நிலைமை மிகக் கடினமானதாக இருக்கிறது. அங்கு ஒரு பத்தாண்டுக் காலத்தில் ஜனத்தொகை 5-கோடியி லிருந்து 6-கோடியாக உயர்ந்துவிட்டது. நிலத்தின் உற்பத்தி யைப் பெருக்கும் துறையில் ஊக்கம் காட்டினால் விளைவு வெகு வாகப் பெருகும் என்பது உண்மைதான். எனினும் அந்த வேலைக்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன என்பது முன் னைய அதிகாரம் ஒன்றிற் கூறியது நினைவிலிருக்கும். வைத்திய உதவியும் சுகாதார வசதியும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருவதால் ஜனத் தொகைப் பெருக்கத்தின் தடைகளாக இருந்த நோய்களால் ஏற்படும் சாவு விகிதம் குறைந்துகொண்டு வரு கிறது. ஆகவே இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமானால் விவசாயத் துறையிலும் தொழில் துறையிலும் சிறந்த முன்னேற்றம் ஏற்படுவதோடு, பிறப்பு விகிதத்தை குறைக்கத்தக்க முறையில் மக்களின் பழக்க வழக் கங்களும் மாறவேண்டியது அவசியம்.

இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 22-முதல் 25-வரையில் இருக் கிறது. பிறப்பு ஆயிரத்துக்குச் சுமார் முப்பத்தைந்தாக இருக் கிறது. பலமக்கள் விரைவில் இறந்து விடுவதால் இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் ஏறக்குறையப் பாதிப்பேர் இருபது வயதுக் குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். காலராவும் வைசூரியும் முன்போல் கடுமையாக இல்லை. ஆனால், மலேரியாவால் மடியும் மக்களின் தொகை இன்னும் அதிகமாகவே இருக்கிறது. திருவிழாக்களும், புண்ணிய க்ஷேத்திர யாத்திரைகளும் தொத்து நோய்கள் பரவப் பெரும் காரணங்களாக இருக்கின்றன. சரியான திட்டமில்லாமல் நகரங்கள் வளர்கின்றன. அங்குத் திறந்த வெளிகளைக் காண்பது அருமை. ஆகவே, க்ஷயரோகம் அதிக மாகப் பரவுகிறது. போக்கு வரவு சாதனங்களின் முன்னேற்றத் தால் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் அதிகத் தொடர்பு ஏற் பட்டுவிட்டது. அதனால் ஏதாவது தொத்துநோய் ஏற்பட்டால் அது நகரங்களில் மாத்திரமின்றிக் கிராமங்களிலும் எளிதாகப் பரவுகிறது. மதக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட சுகாதாரப் பழக்க வழக்கங்கள் தொத்து நோய்களைத் தடுக்கப் போதியவைகளாக இல்லை. ஆகவே, நோய்கள் வராமல் தடுப்ப தற்கும், வந்தால் வைத்தியம் செய்து போக்கடிப்பதற்கும் சுகா தார வசதிகள் இன்னும் அதிகமாக வேண்டியிருப்பதோடு, சுகாதார முறைகளை அனுசரிப்பதற்கு மக்களுக்குப் பயிற்சியும் அளிக்க வேண்டியது இன்றியமையாதது.

மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் இந்த நிலையை நன்றாக உணர்ந்திருக்கின்றனர். 1919-ஆம் ஆண்டிலிருந்து சுகாதார இலாகா மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது. இந்தத் துறையில் மாகாண மந்திரிகள் மிகுந்த சிரத்தையுடன் வேலை செய்திருக்கிறார்கள். ஆனால் சமீப காலத்தில் மாகாணங்களின் பொருளாதார நிலை ஓரளவு உயர்ந்தபின்னர்த்தான் முக்கியமான சுகாதாரத் திட்டங்களை வகுக்க முடிந்தது.

சுகாதார உணர்ச்சியையும் அறிவையும் மக்களிடையே பரப்புவதற்கு அரசாங்கம் வேலை செய்வதோடு, மருத்துவ உதவியையும் அதிகப்படுத்துவதற்கு வேண்டிய வேலையும் நடந்து கொண்டு வருகிறது. பல மக்கள் இன்னும் சுதேச வைத்திய முறைகளில் நம்பிக்கை உடையவர்களாயிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் அந்த முறைகளில் நவீனத் தன்மைகளைப் புகுத்துவதற்கேற்ற வேலையையும் செய்து வருகிறது. மேல்நாட்டு மருத்துவ முறைகள் சென்ற நூற்றாண்டுக் காலத்தில் அதிகமாகப் பரவியிருக்கின்றன. நகரங்களில் நல்ல பயிற்சி பெற்ற டாக்டர்கள் இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களில் அத்தகைய டாக்டர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாயிருக்கிறது. இப்போது பரவிக்கொண்டு வரும் சுகாதார வசதிகளாலும் வைத்திய உதவிகளாலும் மக்களின் உடல்நலம் உயர்ந்து, அதன் பயனாக அவர்களுடைய தொழில் திறமையும் ஆயுளும் பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

போக்கு வரவுச் சாதனங்களின் முன்னேற்றத்தால் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் தொடர்பு அதிகரித்தது என்று கூறினோம். அதுபோலவே, தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கு நகரங்களுக்குச் சென்று சிறிதுகாலம் இருந்துவிட்டு மறுபடியும் கிராமங்களுக்குத் திரும்பிவிடும் பழக்கம் மக்களிடையிருப்பதாலும் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள தொடர்பு அதிகரித்துக்கொண்டே போகிறது. கிராமவாசிகளின் மனப்பான்மையில் அதிக மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணங்கள் பல கூறலாம். அவற்றுள் கூட்டுறவு இயக்கமும் ஒன்று. பல கிராமங்களில் அவ்வியக்கம் சிறந்த வேலை செய்கிறது. போர்ச்சேவைக்காக வெளிநாடுகளுக்குச் சென்று முதல் உலக யுத்தத்திற்குப் பின் திரும்பி வந்த போர் வீரர்கள் தங்கள் கிராமங்களிலிருந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மிகவும் முயன்றார்கள். இந்தத் துறையில் பஞ்சாபிப் போர்வீரர்கள் குறிப்பிடத்தக்க தொண்

டாற்றினார்கள். அவர்கள் போரின்போது பிரான்சு தேசத்துக் குடியானவர்களுடைய வாழ்க்கை முறைகளையும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தின் உயர்வையும் நன்றாக அறிந்திருந்தார்கள். தங்கள் நாட்டுக் குடியானவர்களுடைய நிலையையும் அவ்வாறு உயர்த்தவேண்டும் என்று அவர்கள் பெரிதும் முயன்றார்கள். 1920-ஆம் ஆண்டிலிருந்து வளர்ந்துகொண்டே சென்ற அரசியலுணர்ச்சியும், கிளர்ச்சிகளும், அரசியற் கட்சிகளின் பிரசாரமும் கிராம மக்களின் மனப்பான்மையில் மாறுதலை உண்டுபண்ணின. கிராமங்களிலும் கல்வியறிவு பரவி வருவதால் கிராம வாசிகளின் மனப்பான்மை மாறுவதோடு, புதிய எண்ணங்களையும் முறைகளையும் ஏற்றுக் கொள்ளுவதற்கும் அவர்கள் சிறிது சிறிதாகத் தயாராகிறார்கள். ஒரு தலைமுறைக்கு முன்னர்ப் படித்த மக்களுக்கும் கிராமவாசிகளுக்கும் தொடர்பில்லாமலிருந்தது. அதற்குப்பதிலாக அவர்களுக்கிடையில் பிளவு அதிகரித்துக்கொண்டு சென்றது. ஆனால், அந்தப் பிளவு இப்போது குறைந்து கொண்டே வருகிறது.

நகரங்கள் எண்ணிக்கையிலும், விஸ்தீரணத்திலும் விரைவாக வளர்ந்துகொண்டு வருகின்றன. இந்திய மக்களில் நூற்றுக்குப் பதின்மூன்று பேர்களுக்கு மேல் நகர வாசிகளாக இருக்கிறார்கள். பம்பாய் மாகாணத்தைப் பொறுத்த வரையில் அங்கு நூற்றுக்கு இருபத்தைந்து பேர்களுக்குமேல் நகர வாசிகளாயிருக்கிறார்கள். தொழிலும் வியாபாரத்திலும் ஏற்பட்ட வளர்ச்சிதான் இதற்குக் காரணம். சில நகரங்கள் எதிர்பாராத முறையில் மிகவும் விரைவாக வளர்ந்துவிட்டன. 1931-ஆம் ஆண்டுக்கும் 1941-ஆம் ஆண்டுக்கும் இடையில் சில நகரங்களின் ஜனத்தொகை நூற்றுக்கு ஐம்பது விகிதத்திற்கு மேல் பெருகிவிட்டது. அதனால், நகரங்களில் வாழும் மக்களில் பலருக்குச் சரியான வீட்டு வசதிகள் இல்லை. நகரங்களின் சுகாதார வசதிகளைப் பெருக்குவதற்கும், வீடுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் ஏற்ற நீண்டகாலத் திட்டங்கள் அவசியம். இன்றேல் நகரங்களில் ஏற்படும் நோய்கள் கிராமங்களையும் பற்றிக் கொள்ளும். மேலும், ஏற்கெனவே இருக்கும் நகரங்களில் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக வேறு இடங்களில் அவைகளை ஏற்படுத்தித் தொழிலைப் பெருக்க முயல்வது தான் அறிவுடைமையாகும்.

கல்வியின் பெருக்கம் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் உள்ள தொடர்பை அதிகப்படுத்துகிறது. முன்பெல்லாம் நகரங்

களில் வாழ்ந்த மத்தியதர வகுப்பினர்தாம் படித்தவர்களாயிருந்தார்கள். ஆனால் இப்போது நகரங்களிலுள்ள கீழ்த்தர வகுப்பினரும் கிராமங்களிலுள்ள மக்களும் கல்வி கற்க ஆரம்பித்துவிட்டனர். 1919-ஆம் ஆண்டின் அரசியல் சீர்திருத்தத்திற்குப் பிறகு மாகாணங்கள் கல்வியைப் பரப்பும் விஷயத்தில் அதிகச் சிரத்தை காட்டி வருகின்றன. இத்துறையில் பம்பாய், வங்காளம், சென்னை, பஞ்சாப் ஆகிய மாகாணங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பீகார், ஐக்கிய மாகாணம் போன்ற மாகாணங்களில் அவ்வளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. திருவிதாங்கூர், கொச்சி, பரோடா ஆகிய ஸம்ஸ்தானங்கள் ஆரம்பக் கல்வியில் இந்தியாவின் மற்ற பகுதிகளைக் காட்டிலும் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. பெண்கல்வியும் இப்போது வேகமாகப் பரவுகிறது. இந்தியா முழுவதிலுமுள்ள ஆண்களில் ஏறக்குறைய நூற்றுக்கு இருபது பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். பெண்களில் நூற்றுக்கு ஐந்து பேர்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இப்போது பெண்கல்வி வேகமாகப் பரவுவதால் கூடிய சீக்கிரம் படித்த ஆண்களின் விகிதத்திற்கும் படித்த பெண்களின் விகிதத்திற்கும் இருக்கும் வேறுபாடு குறையும் என்று எதிர்பார்க்கலாம். பெண்கல்வியின் பெருக்கம் சமூக முன்னேற்றத்திற்கு மிகுந்த உதவியாக இருக்கும். ஆரம்பக் கல்வியின் முன்னேற்றத்திற்குப் பணமின்மையும், வேண்டிய அளவு ஆசிரியர்களின்மையும்தான் முக்கியத் தடைகளாக இருக்கின்றன. ஆனால் இப்போது அரசாங்கங்கள் கல்விக்காக மிகுந்த பொருள் செலவு செய்ய முன்வந்திருக்கின்றன. மேலும் அதிகமான பெண்கள் படிக்கிறார்களாகையால் அவர்களில் பலர் ஆசிரியைகளாக வரமுடியும். இப்போது கிராமவாசிகளும் முன்போல் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப மறுப்பதில்லை. கிராமவாசிகளின் தேவைகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற கல்வியை அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும் என்ற உணர்ச்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்தத் துறையிலும் முக்கிய ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

உயர்தரக் கல்வியிலும் சீர்திருத்தம் அவசியமாக இருக்கிறது. உயர்தரப் பாடசாலைகளில் படித்துத் தேர்ச்சி பெற்ற எல்லா மாணவ மாணவிகளும் கல்லூரிகளிற் சேர்ந்து படித்துக் பட்டம் பெற விரும்பினால் அது நடக்கக் கூடாத காரியம். மேலும் பட்டதாரிகளுக்கெல்லாம் அரசாங்க உத்தியோகம் கிடைப்பதும்

இயலாத காரியம். கைத்தொழில்களுக்கும் விவசாயத்திற்கும் ஏற்ற தொழிற் கல்வியைப் பெருக்குவது இன்றியமையாதது. இந்தத் துறையிலும் இப்போது மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் அதிகக் கவனம் செலுத்துகின்றன. இரண்டாம் உலகயுத்தத்தின்போது பல இளைஞர்கள் போருக்கு வேண்டிய ஆயுதங்களையும் வேறு பொருள்களையும் செய்யும் தொழிற்சாலை களில் வேலை செய்து அத்துறையில் நல்ல பயிற்சி பெற்றனர். அவர்கள் தொழில்களின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பார்கள் என்று நம்பலாம். மேலும் சில இளைஞர்கள் சண்டையின் போது பெவின் திட்டப்படி இங்கிலாந்துக்கும் சென்று தொழிற் பயிற்சி பெற்றனர். இவர்கள் தொழிற் கல்வியில் புதிய முறை கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருப்பார்களென்று நம்பலாம் இஞ்சினியர்கள் பயிற்சியிலும், மற்றைய உயர்தரத் தொழிற் கல்விப் பயிற்சியிலும் இப்போது சிறந்த முன்னேற்றம் ஏற்பட் டிருக்கிறது. அரசாங்கம் திறமை வாய்ந்த பல மாணவர்களை உயர்தரத் தொழிற் கல்விக்காக இங்கிலாந்துக்கும் அமெரிக்கா வுக்கும் ஆண்டுதோறும் அனுப்புகிறது.

சர்வகலாசாலைகளிலும் சென்ற இருபத்தைந்தாண்டுக் காலத் தில் அதிகச் சீர்திருத்தம் ஏற்பட்டிருக்கிறது. முதல் உலக யுத்தத் தின்போது ஸர் மைக்கல் ஸாட்லர் என்பவர் தலைமையில் நியமிக் கப்பட்ட ஒரு கமிஷன் உயர்தரக் கல்வி முறைகளைப் பரிசீலனை செய்து சிறந்த யோசனைகளைத் தெரிவித்தது. அவற்றின் பயனு கப் பழைய சர்வகலாசாலைகளில் புதிய முறைகள் புகுத்தப்பட்ட தோடு பல புதிய சர்வகலாசாலைகளும் ஏற்பட்டன. இப்போது இந்திய சர்வ கலாசாலைகள் வெறும் பரிட்சைநடத்தும் ஸ்தா பனங்களாக இல்லை. ஒரு சில சர்வகலாசாலைகளைத் தவிர மற்ற வைகளெல்லாம் கல்விகற்பிக்கும் நிலையங்களாகவும், ஆராய்ச்சி மையங்களாகவும் விளங்குகின்றன. விஞ்ஞான சாஸ்திரங்களி லும், பொருளாதார சாஸ்திரங்களிலும், வரலாற்றுத்துறையி லும், மொழியாராய்ச்சியிலும், சர்வகலாசாலைகள் முக்கியமான வேலை செய்திருக்கின்றன. இந்திய அறிஞர்கள் உலகமெல்லாம் போற்றப்படுகிருர்கள். இந்தியப் பொருளாதார நிலையைப் பற் றிச் சர்வகலாசாலைகள் ஆராய்ச்சி செய்து வருவதால் கிராம வாசிகளின் வறுமையைப் போக்குவதற்கேற்ற திட்டங்களை வகுத்து நடத்துவதுதான் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படை என்ற உண்மை நன்ருக விளங்கிவிட்டது. ஆகவே படித்த

இளைஞர்களில் பலர் (ஆண்களும் பெண்களும்) கிராமப் புனருத் தாரண வேலையில் தீவிரமான சிரத்தை காட்டுகிறார்கள்.

முன்பெல்லாம் பட்டதாரிகளில் பெரும்பான்மையானவர்கள் சட்டக்கல்லூரிகளில் சேர்ந்து படித்தார்கள். ஆனால், இப்போது இஞ்சினியரிங் கல்லூரிகளும், மருத்துவக் கல்லூரிகளும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. மற்றைய உயர்தொழில்களைக் கற்பிக்கும் கல்லூரிகளும் ஆங்காங்குத் தோன்றிக்கொண்டிருக்கின்றன.

உயர்தரப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் எந்த மொழியின் மூலம் பாடங்களைக் கற்பிக்கவேண்டும் என்ற பிரச்சினை ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கிறது. சமீபகாலம் வரையில் கல்லூரிகளில் மாத்திரமின்றி உயர்நிலைப் பள்ளிகளிலும் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தின் மூலம் கற்பிக்கப்பட்டன. அதன் பயனாக இந்தியா முழுவதிலும் இருந்த படித்த மக்களுக்குள் அதிகத் தொடர்பு ஏற்படுவது எளிதாக இருந்ததென்பது உண்மைதான். எனினும், அன்னிய மொழியின் மூலம் பாடங்களைப் படிப்பது மாணவர்களுடைய சிந்தனா சக்தியையும், கற்பனா சக்தியையும் அதிகமாக வளரவிடாது என்பது உறுதி. ஆகவே உயர்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி கற்பிக்கப்பட்ட போதிலும் தாய்மொழியிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பிக்கவேண்டும் என்ற கொள்கை நம் நாட்டில் வேரூன்றி இப்போது நடைமுறையில் கையாளப்படுகிறது. சுதேச மொழிகள் நவீனக் கல்வியைக் கற்பிப்பதற்கு ஏற்றவைகளாக இல்லை என்ற காரணத்தால் தான் மெக்காலேயும், பெண்டிங்கும் ஆங்கிலக் கல்வியை இந்நாட்டிற் புகுத்தினார்கள். ஆங்கிலக் கல்வி பரவியதன் பயனாக இந்தியாவிற்கும் மேல் நாடுகளுக்கும் ஏற்பட்ட தொடர்பு சுதேச மொழிகளின் வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. இப்போது பல சுதேச மொழிகள் சிறந்த முன்னேற்ற மடைந்திருக்கின்றன. அதன் பயனாகப் பல சிறந்த செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் இப்போது தோன்றியிருக்கின்றன. மேலும் சுதேச மொழிகளில் வரலாற்று நூல்களும் விஞ்ஞான நூல்களும் இப்போது வெளிவருகின்றன.

அதுபோலவே செய்தித் தாள்களிலும், வார, மாதச் சஞ்சிகைகளிலும் இப்போது பெரு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தியா முழுவதும் உலாவிவரும் ஆங்கிலப் பத்திரிகைகள் இப்போதும் இருக்கின்றன. ஆனால் மாகாண மொழிகளிற்

பிரசுரமாகும் பல பத்திரிகைகள் அந்தந்த மாகாண மக்களும், முக்கியமாகக் கிராமவாசிகளும், படித்துப் பயன் பெறுவதற்கு உதவி செய்கின்றன. இத்தகைய பத்திரிகைகளில் சில மிக உயர்தரமானவையாக இருக்கின்றன.

பத்திரிகைகளுக்குக் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் எழுதுபவர்களில் பலர் பெண்களாயிருக்கிறார்கள். இப்பொழுது பெண்கள் பெருவாரியாக உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படித்து ஆண்களுடன் போட்டியிட்டு வெற்றி பெறுகிறார்கள். கல்வியின் பல துறைகளிலும் பெண்கள் கலந்து கொண்டு நாட்டின் கலாசார முன்னேற்றத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் சிறந்த தொண்டு செய்கிறார்கள். ஓவியம், இசை, நாடகம், நாட்டியம் முதலிய கலைகள் புத்துயிர் பெற்றுப் பிரகாசிக்கின்றன. இத்துறைகளில் பல பெண்கள் ஈடுபட்டு அந்தக் கலைகளை அலங்கரிக்கின்றார்கள்.

பெண்கல்வி முன்னேற்றத்தால் சமூகத்தின் பழக்க வழக்கங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. பர்தா முறை கொஞ்சங் கொஞ்சமாக மறைகிறது. வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைத்தகாலம் மலை ஏறிவிட்டது என்று கூறலாம். இன்னும் சில ஆண்டுகளில் இந்தியாவில் பர்தாமுறை இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோவது உறுதி. திருமண வயதும் உயர்ந்துகொண்டு வருகிறது. பதினெட்டு வயதுக்கு முன்னால் ஆண்களுக்கும், பதினான்கு வயதுக்கு முன்னால் பெண்களுக்கும் திருமணம் செய்யக்கூடாது என்ற சட்டமும் ஏற்பட்டுவிட்டது. விதவா விவாகம் இப்போது அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஒருவன் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்துகொள்ளும் பழக்கம் குறைந்து வருகிறது. அந்தப்பழக்கத்தை ஒழிக்கும் முயற்சியில் பெண்கள் தீவிரமாக ஈடுபடுகின்றனர்.

பெண்களின் நிலையை உயர்த்துவதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளில் பெண்களே அதிகப் பங்கு கொண்டிருக்கிறார்கள். இந்தமாறுதல் இப்போது மத்தியதர வகுப்பைச்சேர்ந்த பெண்களிடையே தான் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. எனினும், கூடிய சீக்கிரத்தில் அது கிராமங்களிலுள்ள தாழ்ந்த வகுப்புகளிடையிலும் பரவாமலிருக்காது. பெண்கள் நிலையில் ஏற்படும் மாறுதல் சமூகத்தின் முன்னேற்றத்திற்குச் சிறந்த உதவியாக இருக்கும். அதனால் பிறப்பு விகிதம் குறையும் என்றும், ஜனத்தொகை முன்போல அவ்வளவு அதிகமாகப் பெருகாது என்றும்

எதிர்பார்க்கலாம். திருமணவயது உயர்ந்துகொண்டே செல்வதாலும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொண்டே போகவேண்டும் என்று அனைவரும் விரும்புவதாலும், ஜனத்தொகைப் பெருக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கலாம்.

சமூகத்தின் மற்ற துறைகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஜாதிக்கட்டுப்பாடுகள் தளர்கின்றன. இந்துக்களில் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களும் எந்தத் தொழிலை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலை இப்போது ஏற்பட்டு விட்டது. அதுபோலவே உண்ணல், உடுத்தல், பருகல் முதலிய பழக்கங்களிலும் பழைய முறைகளும் கட்டுப்பாடுகளும் மறைந்து கொண்டு வருகின்றன. பலஜாதி மக்களும் ஒருவரோடொருவர் இப்போது நெருங்கிப் பழகுகிறார்கள். இந்து மதத்தில் பலவேறு ஜாதிகளுக்குள்ளும் கலப்புமணம் சட்டத்தால் ஒப்புக்கொள்ளப் படுகிறது. "எல்லாருமோர் குலம், எல்லாருமோரினம், எல்லாருமிந்நாட்டு மக்கள்" என்ற கனவு நனவாகும் காலம் அண்மையிலேயே இருக்கிறது என்று நம்பலாம்.